BALAKANDAM

OR THE

FIRST DIVISION

OF

CAMBAN'S RAMÂYANA,

EDITED WITH AN AMPLE COMMENTARY

BY

S. KRISHNASAWMY MOODELIAR,
OF THE ZILLAH SCHOOL AT SALEM;

ASSISTED BY

C. SABABATHEE MOODELIAR,

AND

C. RAJAGOPAULA PILLAY,

A PUNDIT IN THE GOVERNMENT NORMAL SCHOOL, MADRAS.

Madras.
PRINTED BY GANTZ BROTHERS, AT THE ADELPHI PRESS,
21, RUNDALL'S ROAD, VEPERY.
1861.

TO

A. J. ARBUTHNOT, Esq

DIRECTOR OF PUBLIC INSTRUCTION.

THIS VOLUME

IS INSCRIBED IN GRATEFUL REMEMBRANCE

OF HIS KIND ENCOURAGEMENT

OF VERNACULAR LITERATURE,

BY HIS HUMBLE SERVANT,

S. KRISHNASAWMY MOODELIAR,

EDITOR.

PREFACE.

Manifold have been the claims which made it imperative that I should print this work in spite of my inclinations. The diffusion of knowledge in general, the impetus given to education by the influence and authority of Government, and the consequent encouragement held out to vernacular studies, by the direction and sanction of such as are entrusted with the responsibility of imparting to my countrymen the elements of sound and useful learning, have long left a doubt in my mind, whether I should not in furtherance of the beneficent views of others, print and publish works of common utility and importance. Hence, and in accordance with what I consider my duty, this work has been put forth in public, to supply a vacuum felt and found to be existing as an impediment to the spreading of vernacular knowledge. The difficulty then as respects Tamil arises mainly from the nature of its literature. Vast stores of learning embedded in the regions of poesy, pure sentiments of the heart treasured up within the recesses of versification, and lofty thoughts of the mind interwoven with the language of passions, have, as in every other oriental language of polish and precision, rendered the study of Tamil literature an obstacle of overwhelming interruption to the ordinary and the unlettered. In order therefore to obviate this humiliating hindrance, the prosaic tendency of the present age, chiming in unison with the march of intellect and the wide spread of education, made it a necessity, that whatever is rendered mysterious by the perversions of genius should be made clear, and placed within the grasp of the commonest intellect. Wherefore individuals of deep erudition have come forward to unite their efforts in uplifting the veil of poetry, and thus to let in the untutored thousands, who while admiring at the machinery may yet gather nourishment for their intellects. Various methods converging to the same end, have therefore been pursued by those who have taken the lead in this universal enlightenment. Among these however, there was one which as it suited the present capacity of the generality of the people, was entered into with much willingness and more caution. This method then was to lay open the hidden beauties of the poetry,—let them have been in matter, style, or sentiment,—in appropriate prosy commentaries, and in brief expositions; each link in the chain of the argument conveyed in trite and impressive style, tastefully intermingled with proper

allusions to remove indistinctness, and with fitting references to promote harmony.

My long experience derived from engagements of private and public instruction, and the consequent inferences that I have been enabled on various occasions to draw therefrom, having induced me to adopt this mode of disseminating the seeds of general education, I took upon myself to edit the Balakandam of Camban's Ramayana with a concise analytical commentary. The principal design of this attempt is to meet the immediate wants of young men whose mental culture and education is superintended by Government. Although Vernacular literature is undergoing the changes consequent upon the fates of empires and the revolutions of nations, and although Vernacular Language has long lost its pristine substantiality and splendour, yet as a flickering flame loving to linger still in the wick, it is fostered under the patronage of power: and is thereby smattered over in the different Schools and Colleges of this Presidency. Accordingly, among the various authors adopted for text books in Government schools, the book upon which I have commentated occupies a conspicuous place, in that it has been approved and sanctioned by authority as a means to test the proficiency, in Tamil knowledge, of candidates for the degree of Bachelor of Arts. Much as there is cause for regret that the present arrangements of Educational Institutions are ill-adapted to any real efficiency in Vernacular language and literature, much good it is hoped may yet be done by explanatory commentaries on those books which the educational department has admitted into its sphere. Hence the necessity for publishing a novel edition of Balakandam, or the first part of Camban's Ramâyana.

Camban, the grandest of all Tamil poets, has perpetuated in immortal verse, after his Sanskrit models, the history of Rama; although it will be seen from a careful comparison, that there is not the slightest resemblance between him and his prototypes,* in points of style and diction. If the sublime simplicity of the Sanskrit cannot be found in the Tamil author, yet the consummate art and the high wrought poetry of the latter finds no place whatever in the former. There is in Camban, as in Homer,† a striking unity in the execution of the Poem, an unswerving regard to the grand purposes of the author;—and a beginning, a middle, and an end. His numbers are of the full, and the free, lead-

* Brahma, Valmiki, Bhodhayana.

† Aristotle Poetic. cs. vii. viii.

ing convincement by the hand, to the truthfulness of the pictures drawn, and of the images portrayed, and of the sentiments divulged in the poem. His measures assume an entire sway over the feelings. Emotions rise and fall, the heart beats quick and slow, with the cadence of his measures. Imagination soars higher than thoughts, sorrow forces into the mind, with the gentle or doleful notes that his verses propound. Joy thrills through the soul, and horror dims the eyes, with his pleasant or dire descriptions. The fire of his genius is at times overmatched by the gravity of his style, and the tenor of his sentiments. On occasions where the nature or the arrangement of the poem leads to divine or moral themes, his piety assumes a deeper tone than that of Homer, and aspires to an equal fervor with Milton. His narratives shine in their simple grace and attractive beauty, combining the flowing ease and the native purity of Terence. His episodes afford more instruction and refreshment, than those of Tasso in his Jerusalem. The long-winded nature and the prolixity of the conversational parts of the poem show infinitely better refinement than Virgil, being illumined by the superior energy of his poetic skill. His characteristical parts are treated with more attention than any poet, perhaps with the single exception of Shakspeare. If in his civic parts he is easy and homely as Homer is in his Odyssey, yet he possesses a happy freedom from the defects which indicate the decline of vigorousness of thought in the latter poem. His epic properties would bear no similarity nor comparison with those of the Persian Poet Ferdusi. He appears to be peculiarly gifted in elevating the tenderest feelings of the mind to the regions untrod and unexplored by any comprehensive genius.

The Poem of Camban is divided into seven grand divisions or Kandams, each containing in itself a unity of plan and a compactness of method. There is besides, an intimate connection of facts and events between each of these divisions, so that the subject which terminates one of them must necessarily form the beginning of another. The last division however does evidently possess strong marks of another mind having been at work in its composition; and therefore in that part alone the intrinsic merits of the great poem seem to have their counterparts.

I do now leave the work in the hands of my readers, in the full assurance, that it will meet with the approval of the learned, and the encouragement of the learning. I shall rest satisfied, from its reception, that the puny efforts of my humble talents may again be called forth into exercise, in the shape of commentaries on books of popular advantage.

ஸ்ரீ

இராமஜயம்

கவிச்சக்கரவர்த்தியாகிய

கம்பநாட்டாழ்வான்

அருளிச்செய்த

ஸ்ரீமத்கம்பராமாயணபாலகாண்டத்துக்கு

உரைபாடம்.

கற்றோருமற்றோருங்கேட்டுக்கொண்டபடி
சென்னைத்துரைத்தனக் கல்விச்சங்க விசாரணைத்தலைவராகிய
ம-ள-ள-ஸ்ரீ,

எ-ஜே-ஆர்பத்துநட்டு

துரையவர்களனுமதிபெற்று,
சேலம்ஜில்லாத் துரைத்தனப்பாடசாலைத்
தமிழ்த்தலைமைப்புலமைநடாத்துகின்ற
மாடம்பாக்கம்

சு-கிருஷ்ணசாமிமுதலியா
ரவர்களால்

வித்வான்

கா-சபாபதிமுதலியாரவர்கள்

நார்மல்கலீஜ் தமிழ்ப்பண்டிதர்

கோ-இராசகோபாலபிள்ளையவர்கள்

ஆகிய இருவர்களுடையவுதவியைக்கொண்டியற்றி
முத்தமிழ்விளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இது-சேலம்-நா-முத்துச்சாமிசெட்டியாரவர்களால்
நிறைவேறியது.

ரௌத்திரி௵ மார்கழி௴ க்குச் சரியான
௧௮௬௧௵ — ஜனவரி௴

Registered Copyrigt.

ஸ்ரீ

உரைச்சிறப்புப்பாயிரம்.

சென்னைத் துரைத்தனக்கல்விச்சங்கத்தில் தமிழ்த்தலைமைப்புலமைநடாத்தும்
இயற்றமிழாசிரியராகிய
தி-விசாகப்பெருமாளையரவர்கள் இயற்றியது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

அற்புதங்கமழும் பொற்பமைநறுமலர் ... ... *
ஒப்புயர்வில்லா வொளிகெழுமாமணி... ... ... *
திருவிகாரமா திருமலக்கொழுந்து ... ... *
துருவிச்சான்றோர் சுவைதருமுக்கனி... ... ... *
சச்சிதானந்தந் தழைத்தவான்றரு .. .. *
மெச்சுந்துரியா தீதவிழுநிதி ... ... *
ஒன்றாய்ப்பலவா யன்றாயுருவாய்.. ... ... *
நான்மறைமுடிமே லடநவிமலாஞ்சுடர் .. .. *
பான்மையிற்பஃறலைப் பாந்தண்மேற்கிடந்த .. ... *
பாரும்விசும்பும் பல்லுயிர்த்தொகையும்... ... ... *
ஆரும்பரிசிற் படைத்தளித்தழிப்பான் .. .. *
எக்குணமுந்தனக் கில்லாதிருந்தும்... ... ... *
முக்குணத்தன்மா லக்கணியவனென... ... ... *
முப்பரம்பொருளாஞ் செப்பருந்தனிமுதல் ... ... *
மானிடனாகத் தானவதரித்தே .. .. *
தறுகணரக்கர் தங்கிளைகளைஇ... ... ... *
உறுகண்டவிர்த்தே யும்பர்ப்புரந்து... ... ... *
சுருதிக்கிணங்கத் தருமமோர்சிறிதும் ... ... *
வழுவாதஞ்ஞான் றொழுகுபுகழ்முறைத் ... ... *
திரட்டிமுனிக்குழாஞ் சிரமேற்கரங்குவித் ... ... *
தருத்திமீதூர வகங்கனிந்திறைஞ்சு ... ... *
ஞானவான்மீகியா மோனமாதவனுயர் ... ... *
சைவஞ்சுமார்த்த மெய்வைணவமுதல் ... ... *
எம்மதத்தவருஞ் சம்மதித்திடுவான் ... ... *
வடமொழிதன்னிற் றிடமுறவுரைத்தாங் ... ... *
கருந்தமிழ்யாப்பிற் பொருந்தவுரைக்கென ... ... *
வீறுசேரும்பர்வீ டேறுநீள்படியெனக் ... ... *
குலவுபற்பலமணிக் கோபுரநிலையும் ... ... *
கலைமதியகடுரிஞ் சலகில்பொற்கோயிலும் ... ... *

விண்டலையேந்திய மண்டபநிரையும் ... ... *
குண்டுநீர்க்கிடங்கரின் மொண்டுசூற்புயல்பொழி ... *
கொடியணிவரைபுரை கடிகொண்மாமதிலும் ... *
முடப்பலவீன்ற குடக்கனியிழிபூந் ... ... *
தேறல்போய்ச்செந்நெலி ஞாறுவளர்க்கும் ... ... *
பள்ளவெள்ளப் பழனமுங்கள்ளவிழ் ... ... *
நாண்மலர்ச்சுரும்பர் பாண்முரல்பொதும்பரும் ... *
பாரதிபோல்வெண் பதுமத்தோதிமம் ... ... *
சார்புனற்றடமுஞ் சீரிதிற்பொலியும் ... ... *
வெண்ணெய்நல்லூர் நண்ணுவேளாளன் ... ...*
ஆழிநேர்பாலி வாழிநன்னதியான் ... ... *
கொடைமிகுவள்ளற் சடையனியம்ப ... ... *
அதிரூர்பெருமா னழுந்தூர்க்கிறைவன் ... ...*
மறுவில்பாமகள் வரப்பிரசாதன் ... ... *
கும்பமுனிகொலென் றிம்பர்வியக்கும் ... ... *
கம்பனென்போன் கலைவலோர்யாரும் ... ... *
பராவுவானியற்று மிராமகாதைக்குப் ... ... *
பொருள்விரித்திசைபெறப் புலப்படுத்துகவெனூஉத் ... *
தெருளுறுமவர்சொலச் சில்லோர்துணைசெயப் ... ...*
பதவுரைபொழிப்புரை யிதமிகுகருத்துரை ... ... *
சிறுவருமெளிதிற் றெளியும்பொருட்டு ... ...*
முறையுறவெழுதி நிறைபெறச்சிட்டனன் ... ... *
நிலவயஞ்சூழ் சேலநகரிற் ... ... *
பரசுறவிளங்கும் பாடசாலையில் ... ... *
உரைசெறிபிரதம வுபாத்தியாயன் ....*
குருயிர்குடித்தச் சுரர்பதிகாத்த ... ...*
கூர்வேற்குமரன் குரைகழற்பணிவோன் ... ...*
முதிருமிலக்கண விலக்கியமுறைதேர் ... . *
சதுரனுங்கிருஷ்ண சாமிசற்குணனே ... ...*

உரைச்சிறப்புப்பாயிரம்.

ஷை கல்விச்சங்கத்தில் தமிழ்ப்புலவராகிய
புரசப்பாக்கம்,
பொன்னம்பலமுதலியார் இயற்றியது.

(நேரிசைவெண்பா.)

கம்பராமாயணத்தின்கண்ணார்முதற்காண்டக் ... *
கிம்பர்வியப்பவியற்றியுரை - நம்பரருள் ... ... *
வாய்ந்துளமாடம்பாக்கைவாழ்கிருஷ்ணசாமிவே... *
ளாய்ந்துபதிப்பித்தனனாலச்சு ... ... *

தில்லையம்பூர்ச்
சந்திரசேகரகவிராஜபண்டிதர்இயற்றியது.

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

அம்புவிதனில்வளர் மன்பதையின்புற வருள்பெறு தயரதனார் ... ... *
அருமகனெனவரு மவன துசரிதையை யழகிய வின்றமிழால் ... *
உம்பர்வியந்திடு கம்பனெனும்பெய ருற்றகவிப் பெருமான் ... ... *
ஒளிரும்விருத்த மெனுஞ்செயுளாலுல குய்ய வளித்தனனால். ..... *
இம்பருறைந்திடு வோரதனுண்பொரு ளெளிதுணர் தற்கரிதாம்... ... *
இயல்பையறிந்து வெளிப்படையாயுரை யிளைஞர்களுங் கொளவே *
விம்புநிறைந்திடு மதிதோய்மாடம் மிளிர்மாடம் பாக்கை ... ... *
மேவுகிருட்டின சாமியெனுந்தமிழ் வேந்த னியற்றினனே. ... *

ம-ா-ா-ஸ்ரீ-கா-பச்சையப்பமுதலியாரது
சென்னைக்கல்விச்சாலையில் தமிழ்த்தலைமைப் புலமைநடாத்தும் வித்வான்
ஆ-சுப்பராயபிள்ளையவர்கள் இயற்றியது.

(எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

பெருந்தமிழ்மாக்கடலின்முழுமதியமென்னப்... ... ... *
பிறங்கியசீர்க்கம்பராமாயணத்திற் ... ... *
பொருந்துமுதற்காண்டமதற்குரைசெய்தீந்தான் ... *
பொருவராவிருப்பாயவிழுசெந்தேறல் ... ... *
திருந்துவயல்வாழீஇச்செந்நெற்கவினமல்குஞ் ... ... *
செழுமாடம்பாக்கமுறைகலைவலாளன் ... ... *
இருந்தரணிபுகழ்கங்கைகுலத்துவந்த ... ... *
வெறிற்கிருஷ்ணசாமிவள்ளலெங்கோமானே .. ... *

ம-௱-௱-ஸ்ரீ-கா- பச்சையப்பமுதலியாரது ஷ கல்விச்சாலையில்
தமிழ்ப்புலமை நடாத்தும்
வித்வான் - ௬ - அண்ணுசாமிமுதலியார் இயற்றியது.

(கட்டளைக்கலித்துறை.)

வரைசெய்தடம்புயன்வைதேகிகாந்தன்மலிபுகழை .. .. *
உரைசெய்திடுங்கம்பராமாயணத்திற்குரைசெய்தனன்... ... ...*
திரைசெய்புவிக்குட்சிறுவர்க்குமையந்திரிபறவே ... ... *
விரைசெயலங்கற்கிருட்டினசாமிநல்விற்பனனே... ... ...*

வ - ஆதிமூலமுதலியார் இயற்றியது.

(எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

உம்பர்தொழுந்திருவழுந்தூர்தன்னில்வாழ்வோ ... ... *
னுயர்புலவர்பெருமானுங்கம்பநாடன் ... ... *
அம்புவியோர்க்கமுதளித்தாலெனவியற்று ... ... *
மணிகொளிராகவன்சரிதைக்களிகள்பாடும் ... ...*
வம்பவிழ்பூஞ்சோலைதிகழ்மாடம்பாக்கம் ... ... *
வாழ்கிருஷ்ணசாமியெனுமதிவலாளன் ... ... *
கொம்பினெழுகுறுதேன்பாலளாவியதொப்பக் .. ... *
குறித்தபொருள்விரித்தெழுதிக்கொடுத்தான்மன்னே ... *

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

உரைச்சிறப்புப்பாயிரம்.

சென்னைத்துரைத்தனக்கல்விச்சங்கத்தில்
தமிழ்ப்புலவராகிய-அஷ்டாவதானம்

வீராசாமிசெட்டியாரவர்களியற்றியது.

(நேரிசையாசிரியப்பா.)

பூமலி மலர்ப் பொருட்டுள் வீற்றிருக்கும்
பாமகள் கொழுநன் படைத்த வெழுவகைத்
தோற்றத் துள்ளு மேற்ற மிக்குயர்ந்த
மக்கட் பிறப்பிற் றுய்க்கத் தகுபயன்
எத்தன்மைய துமற் றெத்துணைத் தாயதென்
றாய்த்துணர்ந்த தற்பி னுறுமா மறதுவெனு
உள்ளியாய்ந்த தனைத் தெள்ளித் தெளிவுறுஉ
கருவியா தெனிற் சுருதியாவதிங்
கொன்றெ னெளிதினி லுணர்தற் பான்மைய
தன்றே யன்றியு மந்தணராதிய
சிற்சிலர்க் குரிமை திகழ்வதாகி
நச்சுநர்க் கெல்லா நுகர்ப்பெறண்மையின்
எட்டிணைப் பருகச்செயு மிலர்த வெள்ளென்னைக்
கிட்டிகை கொளஉக் கிடக்குஞ் சலிபோல்
அருமறை முழக்க முரணத் தொடுத்த
புன்மையி னின்று மப்பனுவலைத் தொகுதி
துன்னியவாழ்நாள் தொன்மைகழிய
ஒழுக்கப் பிழைப்ப விதிவிலக் கொரீஇ
வீழ்ப்பயனடைய விழைப்பது கருதி
முதனடு விறுதி யெதுவுமின்றிச்
சித்தசித் தீசனுந் தத்துவ மூன்றாய்
அருவாயுருவா யருவுருவாகிய
திருவார் பரஞ்சுடர் தடாதன் சேயாய்
அறம்பொ ருளின்பம்வீ டென்றநாற் பொருளும்
திறம்பட விளக்கிய திப்பியசரிதமாய்ப்
பொருவில வேதத்தோ டொருதன்மைத்தாய்
இருமையும் பயக்கு மிதிகாசத்தலைத்
அன்றுநான்முக னுலகிலைப்புலன்
வென்றமாதவர் விண்ணவர் சூழ்மி
உண்ணெகிழ்ந் துருகக் கண்ணீர் மல்க
மெய்புளக ரும்ப மொய்ம்மயிர் பொடிப்ப
வளம்பட வினிது விளம்பக் கேளாத்
தெய்வத்திவவியாழ்த் தைவருமுனிவன்

இன்பரிற் போந்து வன்பெரும்புற்றிடை... ... ... *
விரிப்ப ரண்டிருந்த வருட்கடலதனைப்... ... ... *
பாதநான்கிற் படர்தருஞ் செய்யுளின் ... ... *
ஓதவாரமுழுதுங் கைப்படவெண்சுவைபெற... ... ... *
அருளின்றியற்றி யருளியதோர்ந்து ... ... *
பொன்னிசூழ்புனனாடென்னுங் கன்னிதன் ... ... *
நன்னுதற் பொட்டென மன்னிப்பொலிந்த ... ... *
திருவழுந்தூரிற் பொருவிறந்தமர்ந்தோன்... ... ... *
புவிச்சக்கரவர்த்திகள் போற்றிப்பழிச்சும் ... ... *
கவிச்சக்கரவர்த்தியாங் கம்பநாட்டாழ்வான் ... ... *
வாணிவரத்தா லேனுறு தமிழில் ... ... *
அகத்தியந் தொல்காப் பியமவிநய முதல் ... ... *
மகத்துவந்திகழ் மிலக்கணவழியே ... ... *
ஐந்துசங்கத் தியாப்புமிக்கட்க ... ... *
ஆய்ந்துசம்பிர தாயமளாஇ... ... ... *
அற்புதமருவு கற்பனைகொழிப்ப... ... ... *
முறையுறக்கொண்ட நெறிதனிவிராஅய்த் ... ... *
திருத்தகுசொற்சுவை பொருட்சுவைசெறிய ... ... *
ஓசைபெற்றுழ்முடைத்தாயாசிகந் ... ... *
தழுகுறப்பல்வகைச் சந்தங்கெழீஇய ... ... *
யாப்பிற்புனைந்துரை யிராமாயணப்பெருங்... ... *
காப்பியந்தனக்குக் கருத்துட்பதப்பொருள் ... ... *
தெள்வுறச்செய்கெனச் சிற்சிலரியம்ப... ... ... *
அளிகூர்ந்தரிடனை யதன்மீதிவர்ந்து ... ... *
செங்கோனடாத்து பெங்கோமாட்டி... ... ... *
ஆணவித்தோரியா ளாணைமேற்கொளீஇ... ... ... *
கலைமிலாவில் விந்துந்தசத்திற் .. .. *
பற்பல்கல்வியும் பாலனப்புரிவோன் ... ... *
சற்சனர்புகழுஞ் சாந்தகுணத்தோன்... ... ... *
இட்டனுமார்பத் நட்டெனுந்தலைவன்... ... ... *
இங்கிதந்தெரிந்துவந் தங்கிரிட்டக் .. .. *
களிவண்டிமிர்பொழிற் காஞ்சிநகர்க்கிறை... ... ... *
ஒளிகொள்வெண்ணனீ றுருத்திராக்கப்புனை ... .. *
தக்கோர்புகழுஞ் சைவசிகாமணி ... ... *
மிக்கோர்வியக்கும் வியன்றமிழறிஞன்... ... ... *
சதுரானன சபாபதிவேளும்... ... ... *
மதுரவாசகன் வைணவசீலன் ... ... *
மாமதிலுயர்த்த கோமளபுரத்தோன்... ... ... *
இயற்றமிழ்வல்ல நயத்தகுபுலவன்... ... ... *
தராதரமுணர்ந்த விராசகோபாலனும்... ... ... *

தாத்துக்கொருவர் தமிழ்க்கிருவோரெனப் ... ... ✻
புவிக்குநல்லழகக்கோர் புகலும்பரிசில் ... ... ✻
துணைசெயவான்றோர் சென்னிதுளக்க ... ... ✻
அண்ணொளிலக்கண மாங்காங்கொட்டடா ... ... ✻
தாழியினகத்து நாடுதலமைப்பத் ... ... ✻
தானைவிசேட ணவிசேடியமாணப் ... ... ✻
புலப்படநயத்தொடு பொருள்விரித்தெழுதுபு ... ... ✻
பலர்க்குப்பயன்பட வச்சிற்பதித்தனன் ... ... ✻
எண்டபுசிறப்பமை தொண்டைநாட்டில் ... ... ✻
ஒளிகொழுமுறுவலிற் றளமமைப்ப .. .. ✻
ஒல்குமருங்குல்போல் வல்லிநுடங்க ... ... ✻
வளர்முலைபெனச்செவ் விளநீர்துயல்வரத் ... ... ✻
தீங்குரலேய்ப்ப மாங்குயிலிலங்கத் ... ... ✻
தெள்ளுமொழிவிளூஉக் கிள்ளைமுழறச் .. .. ✻
சாயல்கண்ணுற் றாய்மயிலுணத் .. .. ✻
தொடிக்கைமாதர்பந் தடிக்குஞ்சோலையும் ... .. ✻
களறிசோதுவெள் வளைகள்புலப்ப ... ... ✻
அயில்விழிபுரையக் கயலினம்பிறழ ... ... ✻
மதிமுகமியையப் பதுமமலர ... ... ✻
அலவன்முழந்தாட் கஞ்சியளைபுக ... ... ✻
அலர்புறவடிகண் டாமைதலைசுரிப்ப ... ... ✻
பிணிர்க்கணைக்கால்வெரீஇ யிளவராலொளிப்பச் ... ... ✻
செஞ்சிலம்பொலிகேட் டஞ்சந்தொடரக் ... ... ✻
கனிபிதழ் மடவார் புனல்குடைபொய்கையும் ... ... ✻
செந்நெற்பழனமு நண்ணிப்புடைசூழ் ... ... ✻
மாடம்பாக்க மாநகருறைதரோன் ... ... ✻
தோடுண்குவளைத் தொடைகமழ்மார்பன் ... ... ✻
தண்பாற்கடலிற் பிறந்தவான்சசிபோல் ... ... ✻
நண்பாற்றலவு நதிகுலத்துதித்தோன் ... ... ✻
விப்பிரர்தாம்தொழுஞ் சுப்பராயமால் ... ... ✻
அருந்தவப்பேறாய் வருங்கருணாநிதி .. .. ✻
கல்விக்குறையு ணல்விற்பன்னன் ... ... ✻
தகவறிந்துதவுந் தகுமிகுவள்ளல் ... . ✻
நிதியுடையவர்கள் வதியுஞ்சலமாம் ... . ✻
பதிவருகலாத்தனப் பாடசாலையில் ... ... ✻
தவாத்திறஞ்சேர்முத லுவாத்தியாயன் ... ... ✻
நகைகிளர்வதனனெஞ் ஞான்றும் .. .. ✻
தகைகிளர்கிருஷ்ண சாமிநாவலனே ... ... ✻

ஸ்ரீ

சீராமஜயம்.

அவையடக்கம்.

(நிலைமண்டிலவாசிரியப்பா.)

சீர்கெழுகீர்த்தித்தெண்டிரை வளாஇயநிலமகள் ... ... *
அலர்விழிவாண்முகமார்திருவழுந்தூர் ... ... *
தொன்றுதொடுமரபிற் றோமரசூற்றிய ... ... *
நன்றுசெய்தவனெலா நவையிறுதனியுருக் ... ... *
கொண்டவணவந்திற் குலப்புரியுயர்பிறப் ... ... *
பெண்டருவாய்மை நன் கியலொழுக்கொட்பமோர் ... ... *
பூண்மணிச்சூட்டரா வணைமிசைத்துயிலமர் ... ... *
பழமறைதுணிபுதற் பரஞ்சுடரடிக்கட் ... ... *
பத்திமைமுதலிய பாற்படப்பெறூஉநம் ... ... *
புத்தியிலெவர்க்கொரு புலமைகூர்புலவரோ ... ... *
துப்பர்நாட்டாரு முவாசெறிபுகழ்மைசால் ... ... *
கம்பநாட்டாழ்வான் சூழ்திராமாயணப் ... ... *
படிகோமலாச்சும் பஞ்சவன்வளர்த்த ... ... *
வடிதமிழ்க்குணாகடல வாயமுதென்கோ ... ... *
மறைக்கிழவோன்றவ மாணநாட்டொவியு .. .. *
நறைக்கமழ்முடிபுனை நறுமலரென்கோ ... ... *
தொல்லியல்கத்திபந் தொலகாப்பியமெனுஞ் ... ... *
சொல்லியலேந்திவ் றுகளில்காட்டென்கோ ... ... *
ஆய்தொறுமிறப்பூ தணவவிழுச்சுவை ... ... *
மாய்வின்றுதவலின் வான்மருந்தென்கோ ... ... *
திராவிடமிறப்புச் செப்பப்பெறுமா ... ... *
நரர்விடக்கூர்வா யரமிசைதென்கோ ... ... *
வெப்பவலேலியரீஇ விரசையங்கணாயின் ... . *
உம்பர்வீடுபெற்கு மொருபுணையென்கோ ... ... *
எனவற்றுங்கணைநா விருந்தவிச்செல்வர் ... ... *
மனமுறக்கிளக்கு மாண்பிற்றெனநவி ... . *
ஒராவிழிடலக் குரியர்சிற்சிலர் ... ... *
சாரர்த்தெதடுள் தாமிசைபடச்செல .. .. *
திழிவுளகாமுது மீப்பாலருப்பயன் ... ... *
கழுபச்சாலாக் கசடுறுசிறுநூல் .. .. *
பயிலுர்உளாழ்நாள் பட்டநாளாக்கி .. .. *
மயர்வுறைர்நிற்க மன்னிபவரமுதற் .. .. *
பாருபாடுணர்த்தும் பண்புடைத்தாகி .. .. *
வாகினின்றேசை மரீஇப்பல்வணட்புச் ... ... *
செறிந்துகில்லெழுத்திற் றிட்பநுட்பங்கள் ... ... *

நிறைந்திண்ணதமிழி நெறிப்படவொழுகுப் ... ... *
பேரியல்பெருங்காப் பியமிதினாங்கு... ... ... *
சீருறவுளதெனச் செப்பவல்லுநர்முயற் ... ... *
கோடுதன்னாசிக் குடர்வான்பூக்கண் ... ... *
கூடுறக்காட்டுங் கொள்கையரம்மா ... ... *
ஆழமுடைமையிற் சூழ்கடல்வையங் ... ...*
கம்பருத்திர மம்பரத்தவர்க்கும் ... . *
தெரிதலரிதென்று செப்புநெடுமொழி ... . *
பொருளெண்மதியாப் புனாநிரம்பறிவினேன் ... *
இத்தகைப்பனுவ லியற்றுறப்பேழின்முன் ... ... *
வைத்தவுறப்பிற்கு வகுத்துணாசெடவுளம் ... .. *
எழலும்பெருநகை யெனக்கேயெழுமால் ... ... *
இழிதகவில்லா விருமர்காட்சியர்க் ... ... *
கெற்றேபிஃதா மெனச்சிறிதுட்காப் ... ... *
பெற்றியேனுனையும் பெறுவிளைவறியாக் ... ... *
கொன்னைச்சிறுவர்வாய் குழறியவழுமலி ... ... *
மென்மழலைச்சொலின்வேட்குதல்கடனே ... ... *

இங்ஙனம்.

விதேயன்-

மாட்டம்பாக்கம்-சு-கிருஷ்ணசாமிமுதலியார்.

மேற்படி செட்டியாரவர்கள்செய்த சிறப்புப்பாயிரத்தில்

௧௫ - வது - வரியில்

பிழை.	திருத்தம்.
கௌஉக்கிடக்கும்.	கௌவுஉக்கிடக்கும்.

படலஅகராதி.

பக்கம்		படலம்	பாட்டு
௱௭௨	௰-வ-து	அகலிகைப்படலம்	௮௬
௮௫	௫-வ-து	அரசியற்படலம்	௰௨
௰௩	௨-வ-து	ஆற்றுப்படலம்	௨௰
௩௩௫	௰௮-வ-து	உண்டாட்டுப்படலம்	௬௭
௩௬௪	௨௰-வ-து	உலாவியற்படலம்	௫௪
௩௫௪	௰௯-வ-து	எதிர்கோட்படலம்	௩௪
௨௬௬	௰௪-வ-து	எழுச்சிப்படலம்	௮௨
௩௯௩	௨௨-வ-து	கடிமணப்படலம்	௱௪
௨௪௭	௰௩-வ-து	கார்முகப்படலம்	௬௬
௨௩௯	௰௨-வ-து	குலமுறைகிளத்துப்படலம்	௨௯
௱௩௰	௭-வ-து	கையடைப்படலம்	௨௪
௩௭௯	௨௧-வ-து	கோலங்காண்படலம்	௪௩
௱௩௭	௮-வ-து	தாடகைவதைப்படலம்	௭௭
௬௰	௬-வ-து	திருவவதாரப்படலம்	௱௩௧
௫௨	௪-வ-து	நகரப்படலம்	௭௫
௨௪	௩-வ-து	நாட்டுப்படலம்	௬௧
௩௨௬	௰௭-வ-து	நீர்விளையாட்டுப்படலம்	௩௩
	௨௩-வ-து	பரசுராமப்படலம்	௫௰
௧	௧-வ-து	பாயிரம்-அவையடக்கம்	௰௮
௩௱௰௩	௰௬-வ-து	பூக்கொய்படலம்	௩௯
௱௯௫	௰௧-வ-து	மிதிலைக்காட்சிப்படலம்	௱௫௧
௨௮௯	௰௫-வ-து	வரைக்காட்சிப்படலம்	௭௭
௱௫௭	௯-வ-து	வேள்விப்படலம்	௫௬

ஆ படலம் ௨௩ இ திருவிருத்தங்கள் ௲௪௱௪

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பாண்டிநாட்டிலும் சேரநாட்டிலு மிகச்சிறப்புற்றோங்கியபிரமாலய தேவாலயங்களும் சித்திரவிசித்திரமான மாடமாளிகை கூடகோபுரங்களும் நெருங்கிய வளப்பமிகுந்த காவேரிசூழ்ந்த சோழநாட்டில் பகிமைவிளங்கும் மாயனுவந்தருளிய திவ்வியதேசமென்னும் திருவழுந்தூரில்பிறந்தகம்பனென்பேன் சிறுவனாயிருக்கையில் தந்தை இறந்துபோனபடியால், எளியவளாகியதாய் திருவெண்ணெய்நல்லூர் சடையப்பமுதலியார்வீட்டில் குற்றேவல்செய்ய, இந்தப்பிள்ளை மாடுமேய்க்கிற பிள்ளைகளுடனே கூடிக்கொண்டு விளையாடுகிறதுகண்டு, அவள் முதலியார்வீட்டுப்பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகும்பொழுது இவன் அவர்களுடைய சுவடிசுகட்டுகளை எடுத்துக்கொண்டு கூடப்போகவும் அவர்கள்வரும்பொழுது கூடவரவும் திட்டப்பண்ணினாள். அந்தப்படியே சிலநாள் நடந்துவந்தான் இவனுக்கு எட்டொன்பது வயதாமளவில் அப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் வெயிரபுரமென்னும் கிராமத்தில் உள்ள கம்பும் தினையும் விதைத்த தமது கொல்லைக்குக் காவல்காப்பதற்காகத் தம்மிடத்தில் கல்விபயிலும் பிள்ளைகளில் தினம் ஒவ்வொருபிள்ளையை அனுப்புவிக்கு முறைப்படி ஒருநாளிந்தக் கம்பனென்னும்பிள்ளையை அனுப்ப, அன்றுகாலையி லிவன்போய்க் காவல்காக்கும்பொழுது பதினைந்துநாழிகையில் இவனுக்கு நித்திரைவர, இவன்கொல்லை அருகிலிருந்த காளிகோயிலிற்போய்ப் படுத்துத் தூங்குகையில் தினையைக் குதிரைமேய்வதாகக் கனாக்கண்டெழுந்து கொல்லையைப்பார்க்க, அதில் கதிர்விட்டு மணிமுற்றியிருந்த தினைப்பயிரை அவ்வூராள்வோனாகிய காளிங்கராயனென்பவனுடைய குதிரை மேய்ந்துகொண்டிருக்க, அதை இவன் அதட்டி ஓட்டித்துரத்தியும் அதுபோகாததுகண்டு பயந்து ஐயோ உபாத்தியாயருக்கு நானென்ன உத்தரஞ்சொல்வேன் அவரடிப்பாரேயென்று நடுங்கிக் காளிகோயிலுக்குளெதிரேபோய் அழுதுகொண்டிருக்க, தேவி திருவுளமிரங்கி அவனுக்குப்பிரசன்னமாகி அடாகுழந்தாய் நீ அழவேண்டாம் உன் நாவை நீட்டென்றுசொல்ல நீட்டினவுடனே பீஜாட்சரத்தைப் பதித்து அனுக்கிரகித்துப் பயப்படாமற்போவென்றாள்.— அங்கிருந்து அவன் பின்னும் கொல்லைவந்துபார்த்தான் குதிரை தினைப்பயிர் முழுதும் சங்கரித்து விட்டதனால் கோபங்கொண்டு இது ஓட்டினாலும் அதட்டினாலும் போகவில்லையே இதை என்னசெய்கிறதென்று யோசிக்கையில், காளிகாதேவி அனுக்கிரகத்தால் சாரதையின் வரப்பிரசாதமுண்டாகி வாக்குவந்தமையால் (வாய்த்தவயிரபுர மாகாளியம்மே கேள் - காய்த்ததினைப்புனத்திற் காலைவைத்துச் - சாய்த்துக் - கதிரைமாளத் தின்றகாளிங்கராயன்-குதிரைமாளக்கொண்டுபோ) என்று ஒருபாடலைப்பாடினான். அக்கணமே அது தொட்டென்றுவிழுந்து பொட்டென்று செத்தது. உபாத்தியாயரறிந்து ஓடிவந்து அது அதிகாரிகுதிரையாகையால் எப்படிப்போய் எப்படிவருமோவென்று சித்தங்கலங்கித் துக்கிக்கக்கண்டு இவன் முன்பாடினபாட்டையே மறுபடிபாடி, நான்காமடியைமாத்திரம் (குதிரைமீளக்கொண்டுவா; என்று திருப்பிச்சொல்லச் செத்தகுதிரை உயிர்பெற்றுத் துள்ளித்துடித்தெழுந்தது. பின்பு குதிரைதினையைமேய்ந்ததும், அதை இவன் ஓட்டினதும், அதுபோகாததும், இவன்பாட்டுப்பாடினதும், குதிரை செத்ததும்

உபாத்தியாயர்வந்து விசனப்பட்டதும், அதனை உயிர்ப்பித்ததும் ஆதியந்தமாக ஊராள்வோனுக்கு அங்கே பார்த்திருந்தவர்கள்போய்ச்சொல்ல, அவன் அச்செய்தியை அக்காலத்தில் அரசாண்ட துங்கனென்னும் சோழராசனுக்கு அறிவிக்க, நடந்தவர்த்தமானமெல்லாம் சோழன்விசாரித்தறிந்து அட்டடிப்பட்டசிறுவனைத் தான்பார்க்கவேண்டுமென்று வரவழைக்க, அவன்கொல்லையிற்கிளியோட்டும் கோலுடனேவந்து தன்சமுகத்தில்நிற்க, அதிகாரியை நோக்கிக் கையிலே கோலேந்தி நிற்கும் சிறுவனைச்சுட்டி இக்கம்பன் அப்படிச்செய்தவனென்றான். அதற்கவனு மென்றான். (கோலைக்கம்பெனபது தென்தேசத்து வழக்கம்) இந்தக்காரணத்தினாலும் கம்பங்கொல்லை காத்ததனாலும் இப்பிள்ளைக்குக் கம்பனென்றுபெயருண்டாயிற்று. இதைக்குறித்து மற்றுஞ்சிலகாரணமுஞ்சொல்வார்கள். அரசன் கம்பனை எதிரிட்டு நீயிருப்பது எந்தவூரென்றுகேட்க, அவன் திருவெண்ணெய்நல்லூரென்ன, அது எப்படிப்பட்டது யாருடையசுவாதீனத்திலிருப்பதென, அதற்கு உத்தரமாக (மோட்டெருமை வாவிபுகமுட்டவரால்கன்றென்று வீட்டளவும்பால்சொரியும்வெண்ணெயே-நாட்டம்-அடையாநெடுங்கதவுமஞ்சமென்றசொல்லும்-உடையான்சடையன்றனூர்) என்று ஒருபாடல்சொல்லக்கேட்டுத் துங்கன் சந்தோஷப்பட்டான் சடையப்பமுதலியாருக்கு இந்தச்சமாசாரந் தெரியவந்தசமயத்தில் அவர்வேந்தனிடத்திற்குவந்து சிறுவனுடைய பூர்வோத்தரத்தை விவரித்துக்காட்டி அவனை அழைத்துப்போய்த் தமதுகிருகத்தில்வைத்துக்கொண்டு முன்னிலும்பதின்மடங்கு விசேஷமாக அபிமானித்து அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரித்துத் தக்கவயதுவந்தபொழுது விவாகமும் செய்வித்தார். பையாவென்றழைத்தவர்களெல்லாம் ஐயாவென்றழைக்கும்படி கம்பர்கம்பரெனச் செகப்பிரசித்தமாகப் பிரபலவித்வானாயிருக்கையில், துங்கனைப்பார்க்கிலும் அவன்மகனாகிய குலோத்துங்கன் கம்பனை அதிகதயையாய்ச் சன்மானித்ததனால் அவர் அந்தராஜசமுகத்துக்கு நாடோறும்போய் அங்குள்ள ஒட்டக்கூத்தன் முதலானவர்களும்வியக்கச் சமயோசிதமாகவும் சாமர்த்தியமாகவும் பலவிதவிசளும்பாடிப்பிரசங்கிக்கத் தலைப்பட்டதுகண்டு அவரால்சடையப்பமுதலியார் சமஸ்கிருதபாஷையிலிருக்கும் ஸ்ரீமத்ராமாயணகாவியத்தைத்தமிழிலே செய்வித்தால் லோகோபகாரமாயிருக்குமென்றெண்ணி அவருக்குத்தாம் சொன்னதன்றிச் சோழராசனையுங்கொண்டுசொல்விக்க, கம்பர்நவரசாலங்காரமாகவும் கற்பனைக்கிருப்பிடமாகவும் பதினாயிரம் செய்யுளிற்பாடித் தில்லைமூவாயிரவர் கையொப்ப முதலானவையும்பெற்றுத் திருவரங்கத்திலே ஸ்ரீமந்நாதமுனிகள் திருவோலக்கத்தில் அரங்கேற்றினார். இதன்விவரமெல்லாம் சென்னைத்துரைத்தன வித்தியாசங்கத் தமிழ்ப்புலவராகிய அஷ்டாவதானம்-வீராசாமிசெட்டியார், தினவர்த்தமானிப்பத்திரிகையில் எழுதிய கம்பர் இராமாயணப்பாடி அரங்கேற்றிய சரித்திரத்தில்காண்க.

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

பாயிரம்.

காப்புகள்.

ஹநுமான் துதி.

அஞ்சிலேயொன்றுபெற்றானஞ்சிலேயொன்றைத்தாவி ... *
அஞ்சிலேயொன்றாறாகவாரியர்க்காகவேகி ... ... *
அஞ்சிலேயொன்றுபெற்றவணங்கைக்கண்டயலாரூரில் ... *
அஞ்சிலேயொன்றைவைத்தானவனன்மையளித்துக்காப்பான் *

(இதன்பதப்பொருள்.)

அஞ்சிலே ஒன்று - பஞ்சபூதங்களி லொன்றாகிய வாயுவினால்—பெற்றான்- பெறப்பட்டவரும்—அஞ்சிலேஒன்றை- பஞ்சபூதங்களி லொன்றாகிய அப்புவென்னும் சமுத்திரத்தை—தாவி-தாண்டி—அஞ்சிலே ஒன்று-பஞ்சபூதங்களி லொன்றாகிய ஆகாயம்—ஆறுஆக -மார்க்கமாக—ஆரியர்க்காக ஸ்ரீராமமூர்த்திக்காக—ஏகி-சென்று—அஞ்சிலேஒன்று - பஞ்சபூதங்களி லொன்றாகிய பிருதிவியென்னும் பூமியினால்—பெற்ற - பெறப்பட்ட—அணங்கை சீதாபிராட்டியை—கண்டு - பார்த்து—அயலார் - பகைவருடைய—ஊரில்- ஊராகிய இலங்கைப்பதியில்— அஞ்சிலேஒன்று- பஞ்சபூதங்களிலொன்றாகிய தேயுவென்னும் அக்கினியை—வைத்தானவன் -வைத்தவருமாகிய ஆஞ்சநேயமூர்த்தியானவர்—நன்மை- நன்மையினை—அளித்து - கிருபைசெய்து—காப்பான் - இரக்ஷிப்பார்-என்றவாறு. *

வைத்தானவன்-எழுவாய். காப்பான்- பயனிலை. நன்மை-செயப்படுபொருள். சுக்கிரீவனுடைய படைத்தலைவர் பதினொன்மரு ளிவருமொருவராயினும் அக்காலத்தில் ஸ்ரீராமமூர்த்திக்குப் பேருதவிசெய்தவரும் தெய்வத்தன்மை யுள்ளவருமாதலின் இந்நூன்முகத்து இவர்க்குவணக்கங்கூறப்பட்டது,-இந்திரனலடிபட்ட கதுப்பினையுடையவராதலால் ஹநுமானென்றும் அஞ்சநாதேவி புத்திரராகையால் ஆஞ்சநேயரென்றும்,வாயுதேவனுடைய புத்திரரான காரணத்தினால் மாருதியென்றும், பெயர்பெற்றனர்· இவர்பிதா கேசரியென்பவர்· அன்றியும், இவர் சூரியதேவனிடத்தில் நவவியாகரணமும் வாசித்தவர்,

(நாமகள் துதி.)

புத்தகம்படிகமாலைகுண்டிகைபொருள்சேர்ஞான ... ... *
வித்தகந்தரித்தசெங்கைவிமலையையமலைதன்னை ... ... *
மொய்த்தங்கொந்தளகபாரமுகிழ்முலைத்தவளமேனி ... ... *
மைத்தகுகருங்கட்செவ்வாயணங்கினைவணங்கல்செய்வாம் ... *

(இ-ள்.) புத்தகம்- புத்தகத்தையும்—படிகமாலை - படிகமாலையினையும்—குண்டிகை- கமண்டலத்தையும்—பொருள்சேர்- நற்பொருள்சேர்ந்த—ஞானவித்தகம் சின்முத்திரையினையும்—தரித்த- தாங்கிக்கொண்டிருக்கும்—செங்கை- செங்கைகளையுடைய—விமலையை - விமலமாயிருப்பவளை— அமலைதன்னை-அமலமாயிருப்பவளை—மொய்த்த-நெருங்கிய—கொந்து- பூங்கொத்துகளாலாகிய மாலைகளையணிந்த—அளகபாரம்- அளகபாரத்தையும்-முகிழ்- தாமரைஅரும்பையொத்த—முலை-தனங்களையும்—தவளம்-வெண்மைநிறமுள்ள—மேனி திருமேனியையும்—மை-மையானது—தகு - பொருந்திய—கருங்கண்- கருமைநிறமுள்ளகண்களையும்—செவ்வாய்- சிவந்தவாயினையுமுடைய—அணங்கினை - நாமகளை— வணங்கல்செய்வாம்- யாம்பணிவோமென்றவாறு.[யாம்-தோன்றா எழுவாய். வணங்கல்செய்வாம்-பயனிலை. அணங்கினை செயப்படுபொருள்] *

விமலையை அமலையை அணங்கினை வணங்கல் செய்வாமெனக்கூட்டுக. புத்தகமுதலியவை தாங்கிய கைகளுக்குவிவரம்.—இடப்பாற் கீழ்க்கரத்தில்புத்தகம். வலப்பாற் கீழ்க்கரத்தில்படிகமாலை. இடப்பான் மேற்கரத்தில் -குண்டிகை, வலப்பான் மேற்கரத்தில் - சின்முத்திரை யெனக்கண்டுகொள்க.—சின்முத்திரையாவது . அங்குஷ்டவிரல்நுனியும் தர்ச்சனிவிரல்நுனியுஞ்சேர்த்து மற்றை மூன்றுவிரலையும் நேர்நிற்கவைத்திருப்பது. விமலை. அமலை.என்பனவற்றிற்கு மலரகிதமா யிருப்பவளென்பது பொருளாம். அணங்கு-தெய்வப்பெண் பொதுப்பெயர்.

பயன்.

நாடியபொருள்கைகூடுஞானமும்புகழுமுண்டாம்... ... ...*
வீடியல்வழியதாக்கும்வேரியங்கமலைநோக்கு ... ... *
நீடியவரக்கர்சேனைநீறுபட்டழியவாகை... ... ... *
சூடியசிலையிராமன்றோள்வலிகூறுவோர்க்கே... ... ...*

(இ-ள்.) நாடிய- பெரியோர்களால்கருதப்பட்ட—பொருள்- அறம்பொருள் இன்பமென்னுமுப்பொருளும்—கைகூடும் -சித்திக்கும்—ஞானமும்- மெய்ஞ்ஞானமும்—புகழும்- பெருமையும்—உண்டாம்- உண்டாகும்—வீடு-மோக்ஷத்துக்கு—இயல்-பொருந்திய—வழியது-மார்க்கத்தை—ஆக்கும் உண்டாக்காநின்ற—வேரி-தேனிறைந்த—அம்-அழகிய—கமலை-தாமரையில் வீற்றிருக்கும் திருமகளது—நோக்கும்- கடைக்கண் பார்வையுமுண்டாகும் —நீடிய-மிகுந்த—அரக்கர்-இராக்ஷதர்களுடைய—சேனை-தானையானது— நீறுபட்டு-பொடியாகி-ஒழிய-தொலையும்படி—வாகை-வெற்றிமாலையினை— சூடிய -அணிந்துகொண்ட-சிலை- கோதண்டத்தையுடைய—இராமன் -ஸ்ரீரா

மருத்திரியின்—தோள்-புஜங்களின்—வலி-பராக்கிரமத்தை—கூறுவோர்க்கு புகழ்ந்து சொல்லுவோர்க்கு ஏ-று. ஏகாரம் - ஈற்றசை. [பொருள்-எழுவாய். ஈகைகூடும் பயனிலை. ஞானமும்புகழும்-எழுவாய். உண்டாம்- பயனிலை. நோக்கு-எழுவாய் உண்டாகும்-பயனிலை.] (க)

நோக்குமென்றவிடத்து உண்டாமென ஒருசொல் வருவித்துரைக்கப்பட்டது. ஆக்குமென்பது-பெயரெச்சம். இருந்த இடந்தோன்றாமல் ஒழிந்துபோயதென்னுங்குறிப்புத்தோன்ற நீறுபட்டென்றார்.

கோதண்டமென்பது-இராமன் கைவில்லுக்கு ஓர்சிறப்புப்பெயர்.

மக்களுயிர்க்குறுதிப்பொருள் அறம்பொருளின்பம் வீடு என்று பெரியோர்களால் கூறப்படுதலின் ஈண்டுக்கூறியபொருள் அறம்பொருளின்பமெனக்கொள்க.

அறமாவது-மநுவிக்கியானேஸ்வரசாஸ்திரங்களில் இன்னவைசெய்யத்தகுமெனவிதிக்கப்பட்டவைகளைச்செய்தலும் இன்னவை செய்யத்தகாவென விலக்கப்பட்டவைகளைச் செய்யாதொழிதலுமாம் அறம்-ஒழுக்கம்-ஆசாரம்-என்பன ஒருபொருட்கிளவி-பொருளாவது-முற்கூறிய அறமும் பிற்கூறிய இன்பமும் நிகழ்தற்கேதுவாகிய திரவியமாம்.

இன்பமாவது- அறஞ்செய்வதற்கேதுவான கற்புள்ளமனைவியுடன் கூடிவாழ்தல்.

ஞானமானது அவவில்லறத்தில் வழுவாமல் நடந்து அறிவு விளங்கினபின்பு உண்டாவதாதலின் தனித்துக்கூறினார். ஞானிகளுக்குப் புகழ் அறமுதலியவற்றில் வழுவாதுநடந்து ஞானமெய்தியவிடத்து இயல்பாக வெய்துவதேயன்றி விரும்பியடைவதன்று. துறந்தார் பெருமையென்னும் திருக்குறளினுலுணர்க அறத்திற்கும், இன்பத்திற்கும்,பொருள் துணையென்பதனை "அறனீனுமின்பமுமீனுந்திறனறிந்து தீதின்றிவந்தபொருள்,, என்பதனானும் "நடுவணதெய்தாதானெய்துமுலைப்பெய்,தடுவதுபோலுந்துயர்,என்பதனானுமுணர்க.

மனைவி அறஞ்செய்தற்குத்துணை என்பதனை "மனைமாட்சியில்லாள்க ணில்லாயின்வாழ்க்கை,யெனைமாட்சித்தாயினுமில்,,என்பதனானும், மாதராரதற்பினின்றன. அறங்களென இந்நூலாசிரியர் கூறியிருப்பதனானுமுணர்க. இவற்றைவடநூலார் தர்மார்த்தகாமமோக்ஷமென்றும் இவற்றிற்குப்பொதுப்படப்புருஷார்த்தமென்றுங்கூறுவர். அர்த்தமென்பது-பொருள்-அறம்பொருளின்பமென்னு மூன்றனையும் பொதுப்படப்பொருளென்றமையால் தனித்தனி அறப்பொருள்-பொருட்பொருள்-இன்பப்பொருள் எனக்கூறத்தக்கது.

ஆசாரியர் கடாக்ஷத்தினால் திருமகளுடைய அருள்பெற்று அவ்வருளால்பரமபதமடையவேண்டுமென்பதுமுறைமையாதலின்'வீடியல்வழியதாக்கும்வேரியங்கமலநோக்குமென்றார்.

செய்யவளைக்குருவினருளாலேயென்பதனானுமுணர்க. நாடியபொருள் கல்விப்பொருள்செல்வப்பொருள் என்னு மிரண்டுபொருளுங்கைகூடும். ஞானமும் புகழுமுண்டாம் கல்வியினால் ஞானமும், செல்வத்தினால்புகழும் உண்டாகும். வீடியல்வழியதாகும் ஞானத்தினால் பரமபதத்துக் கின்றவழியுண்டாகும். வேரியங்கமலநோக்கும் புகழினால் திருமகள் கடாக்ஷமுண்டாதும் எனப்பொருள்கூறுதலுமொன்று இவ்வாறு கூறுங்கால் -வீடியல்வழியதாகுமெனப்பாடமோதுக செல்வத்தினால் அறனியற்றிப் புகழெய்துவாரிடத்துத்திருமகள்குடிகொள்வாளென்னுங் கருத்துப்பற்றி புகழினால் திருமகள்நோக்கமுண்டாகுமெனக் கூறினர்.

நன்மையுஞ்செல்வமுநாளுநல்குமே .. .. *
தின்மையும்பாவமுஞ்சிதைந்தழிதயுமே. ... ...*
சென்மமுமரணமுமின்றித்தீருமே... ... ... *
இம்மையேயிராமவென்றெழுத்திரண்டினால் .. ..*

(இ-ள்.) இராமவென்ற - ராமவென்று சொல்லப்படுகிற—எழுத்திரண்டினால்-இரண்டெழுத்தினால்—இம்மையே-இப்பிறப்பின்கண்ணே—நன்மையு

ம்-நலமும்—செல்வமும்- ஐசுவரியமும்—நாளும் - நாள்தோறும்—நல்கும்-உண்டாகும்—தின்மையும்-தீவினையும்—பாவமும்-பாவமும்—சிதைந்து-அழிந்து—தேயும்-தேய்ந்துவிடும்—சென்மமும்-பிறப்பும்—மரணமும் இறப்பும்—இன்றி-இனிஇல்லாமல்—தீரும்-ஒழிந்துவிடும்-எ-று. ஏகாரமூன்றும இசை. [நன்மையும் -செல்வமும்- எழுவாய் நல்கும்-பயனிலை தின்மையும்-பாவமும்-எழுவாய். தேயும் -பயனிலை சென்மமுமரணமும்-எழுவாய்-தீரும்-பயனிலை.] (உ)

என்றுஎன்பது-வினைபகையென்றிரண்டி னெச்சமென்பதுபோல ஈண்டு-இசைச்சொல் ஸ்ரீராமஎன்பது தாரகமந்திரமாதலால்-மேற்கூறியவை சித்தியாமென்னுந்துணிவுபறறிஇம்மையேஎனத்தேற்றேகாரமிட்டுக்கூறினர். ஆகவே இந்நூல்முழுதிலும் அவவிரண்டு அக்கரமே நிறைந்திருப்பதனாலே-இதனை யெழுதுகின்றவர்களுக்கும், படிப்பவர்களுக்கும், பிறருக்கோதுகின்றவர்களுக்கும்,கேட்பவர்களுக்கும்,மேற்கூறியவையாவும்,சித்தியாமென்று கூறுதேயமைந்துநின்றது. தீமையென்பது-தின்மையென்மருவியது.

இச்செய்யுளில்-இம்மை இனவெதுகையாய்வந்தது.

வடகலைதென்கலைவடுகுகன்னடம்... ... ... *
இடமுளபாடையாதொன்றிறுயினும் ... ... *
திடமுளரகுகுலத்திராமன்றன்கதை .. .. *
அடைவுடன்கேட்பவரமரராவரோ... ... . *

(இ-ள்.) வடகலை-சமஸ்கிருதபாஷை—தென்கலை- தமிழ்ப்பாஷை—வடுகு தெலுகு—கன்னடம்-கன்னடம்—இடமுள- என்னுமிவை முதலிய தேசங்களில்வழங்குகின்ற—பாடை-பாஷைகளாகிய இவற்றினுள்—யாதொன்றுயினும்- யாதொருபாஷையிலாவது—திடமுள -பலமுள்ள—ரகுகுலத்து-ரகுகுலத்தில் திருவவதாரஞ்செய்த—இராமன்தன்கதை -இராமமூர்த்தியின்சரித்திரத்தை—அடைவுடன்- முறையுடன்—கேட்பவர்-கேட்கும்பாகவதர்கள்—அமரர் ஆவர் -தேவர்கள் ஆவார்கள்-எ-று. ஏகாரம்-ஈற்றசை. [கேட்பவர்-எழுவாய் ஆவர்-பயனிலை.] (ரு)

சூரியகுலத்தரசர்களில்ரகுஎன்பவனும்ஒருஅரசன்அவ்வரசன்சிறந்தவனாயிருந்தமையால்சூரியகுலம்,ரகுகுலமெனஒருபெயர் பெற்றது அடைவுடன்கேட்பவர்என்றதனால்இடையில்விடாமல்ஒழுக்கத்துடனிருந்துகேட்கவேண்டுமென்பதுகருத்து.அமரர்என்பது-மரித்தலில்லாதவர்.

இறுவரம்பிலிராமவென்றோரும்பர்... ... ... *
நிறுவரென்பதுநிச்சயமாதலான்... ... ... *
மறுவின்மாக்கதைகேட்பவர்வைகுந்தம்... ... ... *
பெறுவரென்பதுபேசவும்வேண்டுமோ ... ...*

(இ-ள்.) இறுவரம்பில்- சரமதசையில்—இராமவென்றோர்- ராமாவென்று ஒருதரஞ்சொன்னவர்கள்—உம்பர் - பரமபதத்தில்—நிறுவர்என்பது-நிலைபெற்றிருப்பார்களென்பது—நிச்சயம்ஆதலால்-உண்மைஆதலினால்—மறு ஏற்றமானது—இல்-இல்லாத—மா-பெருமைபொருந்திய—கதை -ஸ்ரீராமமூர்த்தியினுடைய சரித்திரத்தை—கேட்பவர் - கேட்கும்பாகவதர்கள்—வை

குந்தம்-பரமபதத்தை—பெறுவரென்பது-அடைவார்களென்பதை—பேசவும்வேண்டுமோ சொல்லவும்வேண்டுமோ—எ-று [பேசுதல்-எழுவாய் வேண்டுமோ-பயனிலை.] (௪)

ஓ-என்பது எதிர்மறைக்கணின்று பேசவேண்டுவதில்லையென்னும், பொருள்தந்தது நிறுவுவர் எனற்பாலது நிறுவரொனவிகாரமாயிற்று. சரமதசைஎன்பது மரணகாலம்.

எண்ணியசகாத்தமெண்ணூற்றேழின்மேற்சடையன்வாழ்வு... *
நண்ணியவெண்ணெய்நல்லூர்தன்னிலேகம்பநாடன் ... ... *
பண்ணியவிராமகாதைபங்குனியத்தநாளிற் ... ... *
கண்ணியவரங்கர்முன்னேகவியரங்கேற்றினானே ... ... *

(இ-ள்.) சடையன்- சடையப்பமுதலியாருடைய—வாழ்வு - வாழ்க்கையானது—நண்ணிய - நிலைபெற்ற—வெண்ணெய்நல்லூர்தன்னில் - திருவெண்ணெய்நல்லூரிலிருந்து—கம்பநாடன் - கம்பநாடனென்னும் மகாகவியானவர்—பண்ணிய- தாம்தமிழில்இயற்றிய—இராமகாதை-இராமசரித்திரம் அடங்கிய இந்தக்காவியத்தை—எண்ணிய- கருதிய—சகாத்தம்- சாலிவாகனசகாத்தம்—எண்ணூற்றேழின்மேல்-எண்ணூற்றேழுக்குமேல்செல்லுகின்றவருஷத்தில்—பங்குனி- பங்குனிமாதம்—அஸ்தம் - அஸ்தநக்ஷத்திரத்தில்—கண்ணிய-தேவர்களெல்லாருந்தியானிக்குப்படியாகிய—அரங்கர்முன் - ஸ்ரீரங்கநாதர்சந்நிதானத்தில்—கவியரங்கேற்றினான் - கவியரங்கேற்றினார்—எ-று. [கம்பன்-எழுவாய். அரங்கேற்றினான்-பயனிலை.] (௫)

காவியத்தை-செயப்படுபொருள்-இராமகாதையென்பது காரியவாகுபெயர்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

பாயிரம்

முதற்கடவுள்வணக்கம்.

உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்... .. .. *
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா... ... ... *
வலகிலாவிளையாட்டுடையாரவர்... ... ... *
தலைவரன்னவர்க்கேசரணாங்களே... ... ... *

(இ-ள்.) உலகம்யாவையும்- உலகங்களெல்லாம்—உள -உள்ளவைகளாக—தாம்-தாமே—ஆக்கலும்-படைத்தலும்—நிலைபெறுத்தலும் -காத்தலும்—நீ

க்கலும்-அழித்தலு மாகிய முத்தொழில்களையும்—அலகிலா-அளவில்லாத—நீங்கலா-ஒழிபாத—விளையாட்டு-திருவிளையாட்டாக—உடையார்-உடையவர் எவரோ—அவர்-அவரே—தலைவர்-எல்லாவுயிர்களுக்குந் தலைவராவர்—அன்னவர்க்கே-அம்முதல்வர்க்கே—நாங்கள் - யாங்கள்—சரண்-அடைக்கலப்பொருள் எ-று [நாங்கள்-எழுவாய். சரண்-பயனிலை.] (௧)

எல்லாருமங்கலமொழிமுதல் வகுத்துக்கூறவேண்டுதலின்-உலகமென்றார். உலகமென்பது அண்டங்களையும், அவற்றினுள்ள சராசரங்களையுங்குறித்துநின்றது-பெறுவித்தலென்பது பெறுத்தலெனக்குறைந்துநின்றது அவரென்னும், சுட்டுப்பெயர். வந்தமையின் எவர் என்னும்வினாப்பெயர் வருவிக்கப்பட்டது. இவ்வாறுதொழில்நடத்துமிடத்து-எளிதாக நடத்துவதொன்பதுதோன்றவிளையாட்டென்றார். அத்தொழில்கள்-இவ்வளவுகாலம், இவ்வளவுதொகையென்னும், வரையறையின்றிநிகழ்கின்றனவாதலின் நீங்கலா அலகிலாவெனனும், அடைமொழிகொடுத்துக்கூறினர். இவ்வுலகங்களைநோக்குமிடத்து இவைகளைப்படைத்தளித்தழிக்குங் காரணகர்த்தா ஒருவருண்டென்பதுதோன்ற முத்தொழிலையு நடத்துகின்ற ஒருவனே முதல்வனெனக்காட்டிக் கடவுளது உண்மைகூறினர்.

ஆதிபகவன்முதற்றேயுலகு-என்னுங் குறள்வாக்கியத்துக்குப் பரிமேலழகர் செய்திருக்கு முரையானுமுணர்க.

முதற்கடவுளைத்தொழுகின்றவர்களே மேலானபயன்பெறுவார்களென்றலின் அவர்க்கே யெனத்தேற்றேகாரங்கொடுத்துக்கூறினர்.

உலகம்யாவையுந்தாமுளவாக்கலு மென்பதிலிருக்கும் தாமென்பதை இடைச்சொல்லாக்கி உலகம்யாவையு முளவாக்கலுமென திருத்திப்பொருள்கூறினுமமையும்.

நாங்களென்பது-உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. அன்னவர்க்கேசரணாங்களென்பதற்கு இவ்வுலகத்துயிர்கள் அவரால் படைக்கப்பட்டவைகளாகையால் அவைகள் அவர்க்கே அடைக்கலப்பொருளாமெனப் பொருள்கூறுதலுமொன்று இவ்வாறுகூறுங்கால் சரணாங்களென்பதனை நீட்டல்விகாரமாகக்கொள்க.

சிற்றுணர்த்தர்தெரிவருநன்னிலை... ... ...*
எற்றுணர்த்தரிதெண்ணிலமூன்றனுள் ... ...*
முற்றுணர்த்தவரேமுதலோரவர்... ... ...*
நற்றுணைக்கடலாதனன்றரோ ... ... *

(இ-ள்) சிற்றுணர்த்தர் - ஞானகுணத்தை யுடையவர்களும்—தெரிவு அருமை - தெரிதல் அருமையாகிய—நன்னிலை - அம்முதற்கடவுளுடைய நல்லநிலைமையை—உணர்த்து உணர்த்துதல்—எற்று எனக்கு—அரிது-அருமையாயினும்—எண்ணில் நூல்களாலெண்ணப்பட்ட—மூன்றனுள்-சாத்துவிக ராசத தாமதங்களென்னு முக்குணங்களுள்—முற்றுணர்த்தவரே-முன்னையதாகிய சாத்துவிக குணத்தையுடையவரே—முதலோர்-தலைவர்—அவர்-அத்தலைவருடைய—நற்றுணை-கவிபாண துணையாகிய—கடல்-கடலினிடத்து—ஆதல்-ஆவது—நன்று-எனக்குநன்மை-எ-று. அரோ-ஈற்றசை. [ஆதல்-எழுவாய். நன்று-பயனிலை] (௨)

சிற்றுணர்த்தரென்பதில் சிறப்புழ்மை விகாரத்தால்தொக்கது தெரிவுதொழிற்பெயர்.

உணர்த்து என்பது-விகுதிகுன்றியதொழிற்பெயர். உணர்த்தரிதென்பது-உணர்த்த அரிதெனத்தொகுத்தல்விகாரமாக்கி உணர்த்த அரிதெனக்கூறினுமமையும்.

முதற்கடவுளுடைய குணம் அளந்தறியப்படாதென்றற்கு — எண்குணத்தான் அறிவதற்கரியவனென் கடல் என உருவகஞ் செய்தார் அவ்வாறு உருவகஞ்செய்தமைக்கேற்ப ஆடுதல் என்றார்.

ஆடுதல் என்பது-கேட்டல்-சிந்தித்தல்-தெளிதல்-சொல்லுதல்- என்னும் நிலைகளை இடைவிடாது பயிலுதல். இடைவிடாதுபயிலுதல் பரமபதத்துக்கேதுவாதலின் அதனை நன்றென்றார்.

இதன்கருத்துப் பொருள்.

முதற்கடவுளுடைய நல்லறிவுநிலைமையானது ஞானகுணத்தை யுடையவராலும் அறிதற் கரியதாதலின் சிற்றறிவுடைய என்னால் உணரப்படுமோ படாது ஆதலால் இனியேனும் அதனை உணர்தற்கேதுவாகிய குணக்கடலில் ஆடவேண்டுமென உட்கொண்டு அதனை நன்றென்றார்.

தலைவருடைய குணக்கடலிலாடினால் அவர்நிலைமை புலப்படும் விளங்குமென்பது கருத்து.

பாடபேதம்.

"நற்குணத்தில் தேர்வாரன்றிலை, யெனப்பாடமாயின் மேற்சொல்லப்பட்ட முதற்கடவுளுடைய ஞானமாகிய குணத்தினது தெரிதற்கரிய நல்லநிலைமையென்பொருள் கூறுக. சிற்குணத்தில் எனப்பாடங்கூறி ஞானகுணத்திலும்,அறிதற்கரிய நிலைமையெனப்பொருள் கூறுவாருமுளர்.

நற்குணத்தவரோ முதலோர் அவர் நற்குணக்கடல் ஆடுதல்நன்று-சாத்துவிக குணத்தை யுடையவரோ முதலோர் அவர் நற்குணக்கடலாடுதல் நன்றென ஒருவாறு எனச்சொல்லுணர்ந்து கொண்டதன்றி அவருடைய நல்லநிலைமையைப் பிறருக்கு உணர்த்துதல் எனக்கரிதெனப்பொருள் கூறுதலுமொன்று இவ்வாறுபொருள்சொல்லுமிடத்துக் கூறுதல் எழுவாய். அரிது-பயனிலை.

ஆதியந்தமரியென்யாவையும்... ... ... ❋
ஓதினாரல்லிலவுள்ளன... ... ... ❋
வேதமெய்ப்படனமெய்ந்நெறிநன்மையன்... ... ❋
பாதமல்லதுபற்றலர்பற்றிலார்... ... ... ❋

(இ-ள்.) ஆதி-முதலினும்—அந்தம் - முடிவினும்—அரியென-அரியென்மெய்ந்நெறித்துக் கூறி—யாவையும்-எல்லா நூல்களையும்—ஓதினார்-ஓதியுணர்ந்தவர்கள்—அல்லது இல்லன- அளவிறந்தனவைகளும்—உள்ளன-நித்தியமானவைகளுமாகிய—வேதமென்டன-வேதங்களென்று சொல்லப்பட்ட—மெய்ந்நெறி - உண்மைநெறிகளை வகுத்த—நன்மையன் - நன்மையை யுடையவனாகிய முதற்கடவுளது—பாதமல்லது-திருவடியல்லாது மற்றைநீக்கட்டவைப்பாசத்தை—பற்றலர்- தங்களுக்குத்தஞ்சமாகப் பற்றாதவர்கள்—பற்றிலார்-அவர்களே இருவகைப்பற்றுமில்லாதவர்களாவார்கள்—எ-று. [ஓதினார்-எழுவாய். பற்றிலார்-பயனிலை.] (௯)

மெய்ந்நெறிவகுத்த கடவுளென்பதனை "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க மென்னும்,, குறளில்-பொய்தீரொழுக்கநெறி என்பதற்குக் கடவுளால்சொல்லப்பட்ட வேதமார்க்கம் என்னும் உரையாலுணர்க.

ஈண்டு-தன்னால் படைக்கப்படும் உயிர்கள் -நன்மை தீமை-அறிந்து தன்னை வணங்கி உய்வதற்கேதுவான ஒழுக்கத்தை வேதங்களால் காட்டினைமையினதலின் நன்மையனென்றார்.

பாதமல்லது என்பது-அறமல்லது-என்பதுபோலநின்றது.

முதற்கடவுளது திருவடிகளைப்பற்றினவராக்கியத்தால் ஞானவைராக்கியஞானம்விளங்கி அகப்பற்றுபுறப்பற்று -என்னுமிருவகைப்பற்றும் இல்லாதவர்களாவார்கள் அப்பற்றில்லாதவராகவே பரமபதமடைவார்கள் என்னுங் கருத்துத்தோன்ற நன்மையன் பாதமல்லது பற்றலர்பற்றிலாரெனக்கூறினார்.

அ

பாயிரம்.

"ஆதிபந்தமரியனயாவையுமோதினர்,, எனப்பாடமாயின் அரியனவாகிய நூல்களெல்லாவற்றையும் ஆதிபந்தமாக ஓதினவர்கள் எனப்பொருள்கூறுக.

"வேதமென்பன மெய்ந்நெறிநன்மையன்,, என்பதற்கு வேதமாகிய உண்மைவழியாலேநன்மையன பாதம்பற்றுவாரெனப்பொருள்கூறுவாருமுளர்.

நூல்களை ஓதியுணர்வார் முன்பின் மலைவற ஆராயவேண்டுதலின் ஆதியந்தம் ஓதினரென்றார். "ஆதிபந்தம் அரியெனயாவையும்- ஓதினர்,, என்பதற்கு ஆதியும் அந்தமும் நாராயணமூர்த்தியேயென்று ஓதியுணர்ந்தவர்கள் எனப்பொருள்கூறுதலுமொன்று. ஆதியிலும் அந்தத்திலும் இருப்பவர் அவரே ஆதலின் அவ்வாறுகூறலாயிற்று.

முன்னைய இரண்டுசெய்யுளினும் விளையாட்டுடையார் அவர்தலைவர் அன்னவர்முற்றுணர்ந்தவர் முதலோரவர் என்றுரைத்தது தொழிற்பன்மைபற்றி.

முதற்கடவுள் தொழில்நடத்துங்கால் -பிரமன்-உருத்திரன்-என்பவரோடு தானும் ஒருவனாய் மூவரெனத் தொகைப்படநிற்பானாயினும் உண்மையைநோக்குமிடத்துப்பரமபதம்அருளுகின்றவன் அம்முதற்கடவுளாதலால் இச்செய்யுளில் யாவையும் ஓதியுணர்ந்தோரால் உணரப்படும் நன்மையனென விசேஷண அடைமொழிகொடுத்து ஒருமையாற்கூறினர்.

ஈண்டுமுதற்செய்யுளாற் கடவுள் ஒருவருண்டென்பது தெரிவித்து இரண்டாவதுசெய்யுளாலுமூன்றாவது செய்யுளாலும் அக்கடவுளைநினைத்தும் வாழ்த்தியும் அவனதுநெறியில்நிற்பவர்கள் பரமபதமடைவார்களெனக்கூறினர், ஆதலாலிம்மூன்றுசெய்யுளும் ஒருதொடர்,

கடவுள்வாழ்த்து-முற்றியது.

ஓசைபெற்றுயர்பாற்கடலுற்றொரு ... ... *
பூசைமுற்றவுநக்குபுபுக்கென ... ... *
ஆசைபற்றியறையலுற்றேன்மற்றக் ... ... *
காசில்கொற்றத்திராமன்கதையரோ... ... ... *

(இ-ள்) ஓசைபெற்று- ஓசையைப்பெற்று—உயர்- அலையுயர்ந்துவரும்படியான—பாற்கடல்-பாற்கடலை—உற்று- அஞ்சாதுபொருந்தி—ஒருபூசை- சிறியபூனையானது—முற்றவும்- அக்கடலிலுள்ள பால்முழுவதையும்—நக்குபு-நக்க ஆசைகொண்டு—புக்கென உப்புநீர்க்கடலைக் கடந்துசெல்லநினைப்பதுபோல—காசுஇல்-குற்றமில்லாத—கொற்றத்து-வெற்றியையுடைய—இராமன்- இராமமூர்த்தியின்—கதை - சரிதத்தை—ஆசைபற்றி- விருப்பங்கொண்டு—அறையலுற்றேன்-சொல்லுதலையான்பொருந்தினேன்—என்று. அரோ-ஈற்றசை.[யான்-தோன்றா எழுவாய். உற்றேன்- பயனிலை சரிதத்தை செயப்படுபொருள்.] (க)

நக்குபு என்பது-செய்பு என்னும் வாய்பாட்டுவினையெச்சம். அது ஈண்டு நக்கியெனப் பொருள்கொள்ளுதலின்றிச் செயவென்வாய்பாடுகொண்டு - சொற்றிரியினும் பொருடிரியா வினைக்குறையென்னும்விதிபற்றி.நக்கவெனப்பொருளுணர்த்தநின்றது. எனவேநக்கப்புக்கெனக்கொள்க. மற்று அசைநிலை.

நக்குபு-என்றவிடத்து ஆசைகொண்டென ஒருசொல்வருவித் துரைக்கப்பட்டது.

கடலினிடத்து அலையானது ஓசைபெற்றுயர்ந்துவருதல்பற்றி ஓசைபெற்றுயரென்றும், அந்த அலையானது ஆரவாரித்து உயர்ந்துவருங்கால் அதனை அணுகிறதற்கு யாவர்க்கும் அச்சந்தோன்றுமாதலால் அஃறிணையினுஞ்சிறிதாகிய இப்பூனை அக்கடலினிடத்துஅஞ்சாதுபொருந்துதல் அரியதென்பதுதோன்ற உற்றென்றும்- எழுவகைமேகங்களும் ஒன்றாய்க்கூடிக்குடிக்கினும்அக்கடல்முழுவதையு முண்ணக்கூடாமை திண்ணமாதலால் இச்சிறிய செந்துவால்எவ்வாறுமுற்றுமென்பார் அதன்சிறுமைதோன்றஒருபூசையென்றுங்கூறினார்.

இதன்தாற்பரியம்.

பூனையானதுபால்குடித்தல் இயல்பாதலால் பாற்கடலைக்கூறி இந்த உவமையினால் இராமன்கதை பாற்கடலை யொப்பதென்றும், பூசை அக்கடலைநக்கப் பேதைமைத்தன்மையால் ஆசையுற்றதுபோல யான் என பேதைமைத்தன்மையால் அளவுகடந்தஇராமன்கதைசொல்ல ஆசைகொண்டு தொடங்கினேனென்பதாம்.

நொய்தினொய்யசொனூற்கலுற்றேனெனை ... ... *
வைதவவ்வின்மராமரமேழ்துளை... ... ... *
எய்தவெய்தவற்கெய்தியமாக்கதை ... ... *
செய்தசெய்தவன்சொன்னின்றதேயத்தே... ... *

(இ-ள்.) வைத- பெரியோர்கள்சபித்த—வைவில் - சாபத்தைப்போல—மராமரம்ஏழ் - ஏழ்மராமரங்களும் — துளையெய்த - துளைபொருந்தும்படி எய்தவற்கு—அப்பெய்த - இராமமூர்த்திக்கு—எய்திய- பொருந்திய—மாக்கதை - பெரியசரித்திரத்தை—செய்த-வடநூலில்செய்த—செய்தவன்-செவ்விதானதவத்தையுடைய வான்மீகமுனிவரது—சொல்- காவியமானது—நின்ற-நிலைபெற்றுள்ள—தேயத்து-தேசத்தில்—நொய்தின்நொய்ய- அற்பத்

திலும்-அற்பத்தன்மையுடைய—சொல்-என்னுடையசொற்களால்— நூற்க லுற்றேன்-யான் இக்காவியஞ்சொல்லத்தொடங்கினேன்—எனை - இவ்வாறு சொல்வதினால் எனக்குப்பயன்யாது—எ-று. ஏகாரம்-ஈற்றசை. [பயன்-எழு வாய். யாது-பயனிலை.] (உ)

சொல்லென்பது, கருவி ஆகுபெயராய்க் காவியத்தையுணர்த்திற்று.

மராமரமேழையுந் துளைத்ததற்கெய்த அவ்வொருபாணம் தப்பாது உருவிச்சென்ற மையின் முனிவர்சாபத்தை எடுத்து உவமையாகக்கூறினர். ஏழ்-என்பதில்முற்றும்மைதொக் கது. செய்தவனென்பது-செவ்வையாகிய தவனெனத் தொடர்மொழிபோலிருப்பினும் அதை யொருமொழியாகக்கொள்க. இவ்வாறு கூறுவது நச்சினார்க்கினியார் முதலாகிய தொல்லா சிரியர்சம்மதம்.

நூற்கலுற்றேன் என்பதினால் நூல் என்பதுதோன்றிற்று.

"பஞ்சிதன் சொல்லாப்பனுவலிழையாக,, என்னும் சூத்திரத்தினுமுணர்க. என்னை என் பது எனை என இடைக்குறையாய்நின்றது. இது-எவன் என்னும் வினைப்பொருளைத் தருகிறவி னைக்குறிப்புமுற்றுச்சொல். என்னை எனமருவியீண்டின்மைகுறித்துநின்றது.

இந்தேயந்து வான்மீகமுனிவரது சொல்லானது வழங்குகின்றது தெரிந்தும் நொய்தி னெய்யசொல் நூற்கலுற்றேன், இது - என்னை எனத் தம்மைத்தாமே வெறுத்துக்கொண்ட தாகவும்பொருள்படுதலின் இதுவும் அவையடக்கத்தின்பாற்படும்.

பாடபேதம்.

நொய்தினெய்யசொ னூற்கலுற்றெனெனை வைதவைக எனப்பாடமோதி என்னுடைய மிகவும் நொய்யசொல்லால் யானுஞ்செய்கின்றேன் என்னை வையப்பட்ட உயிர்கள் வைக வெனப்பொருள்கூறுவதுமன்றி.

எனை-வைதவைவின் நொய்தினெய்யசொ னூற்கலுற்றெனெனப் பாடமோதி என்னை வைதுகொள்ளும் வகைபோல நொய்தினெய்ய சொல்லால் நூற்கலுற்றென் எனப்பொருள் கூறுவாருமுளர்.

வையமென்னையிகழவுமாசெனக் ... ... *
கெய்தவும்மிதியம்புவதியாதெனிற் ... ...*
பொய்யில்கேள்விப்புலமையினோர்புகல்... ... *
தெய்வமாக்கதைமாட்சிதெரிக்கவே ... ...*

(இ-ள்) சான்றோரே-வையம்—உலகம்-என்னை—இகழவும்-என்னை இகழ்ந் துசொல்லவும்—(அதனால்) மாசு-குற்றமானது—எனக்கு எய்தவும்- எனக்கு ப்பொருந்தவும்—இது- இக்காவியத்தை—இயம்புவது-தமிழாற் சொல்வத ற்குக்காரணம்—யாதெனில்-யாதோவெனநீவிர்வினவுவீராகில்—பொய்இல் -பொய்மையில்லாத—கேள்வி -கேள்விகளைப்பொருந்திய—புலமையினோ ர்-ஞானத்தினையுடையவராகிய வான்மீகமுனிவரால்—புகல்-சொல்லப்பட்ட —தெய்வம்-தெய்வத்தன்மையுள்ள—மாக்கதை - பெரியகதையினுடைய— மாட்சி- பெருமையை—தெரிக்க-தமிழ்நாட்டவர்க்குத்தெரிவிப்பதற்கென அறிந்துகொள்வீராக—எ-று. ஏகாரம்-ஈற்றசை [சான்றீர்- அறிந்துகொள் வீராகஎன்னும்எழுவாயும் பயனிலையும் எஞ்சிநின்றன.]

தெரிவிக்க என்பது தெரிக்க எனக்குறைந்துநின்றது.

தான்கூறுங்காவியத்தைப் பெரியோர்கள்நோக்குமிடத்து அதனில்சொற்குற்றம்-பொ ருட்குற்றம்-காணப்படும், அவ்வாறுகாணப்படினும் தெய்வமாக்கதை மாட்சியைத்தெரிவிக்

கப்புருந்தமையின் இகழார் என்பதுதோன்றவையமென்னை இகழவு மாசெனக்கெய்தவுமெ ன்றார்.

தேவபாடையினிக்கதைசெய்தவர் ... ... *
மூவரானவர்தம்முளுமுந்திய ... ... *
நாவினுருரையின்படிநான்றமிழ்ப் ... ... *
பாவினுணர்த்தியபண்பமே ரா... .... *

(இ-ள்.) தேவபாடையின்- வடமொழியில்—இக்கதை - இந்தஇராமகதை யை—செய்தவர்- சொல்லியோர்—மூவரானவர் தம்முளும்-மூவராயினோர் தம்முளும்—முந்திய- முதன்மையாகிய—நாவினார்- வாக்கினையுடையவான் மீகமுனிவரது—உரையின்படி-வாக்கியமாகிய ஆதிகாவியத்தின்படியே— நான்தமிழ்ப்பாவினால் - யான்தமிழ்க்கவிதைகளால்—இது-இக்காவியத்தை —உணர்த்திய- செய்கின்ற—பண்பு - முறைமை—எ-று. நானுணர்த்தியப ண்பு-நாவினுருரையின்படியாம் எனக்கூட்டுக. அரோ-ஈற்றசை. [உணர்த்தி யபண்பு-எழுவாய். உரையின்படியாம்-பயனிலை] (௯)

ஆமென்னுமொருசொல் வருவிக்கப்பட்டது.
உள்ளும்என்பது-விகாரத்தால் உளுமென நின்றது.

பாடபேதம்.

தம்முளுமுன்னிய நாவினன் உரையின்படி எனப் பாடமோதி அம்மூவருடைய உள்ளங்க ளையுமறிந்த நாயகனது உரையின்படி-நானுணர்த்திய பண்பெனப் பொருள் கூறுவாருமுளர்.

மூவராவார்-பிரமன்-வான்மீகி-போதாயனன் என்னுமிவர்கள்.

துறையடுத்தவிருத்தத்தொகைக்கவிக் ... ...*
குறையடுத்தசெவிகளுக்கோதில்யாழ்... ... *
நறையடுத்தவசுணநன்மாச்செவிப்... ... ...*
பறையடுத்ததுபோலுமென்பாவரோ... ... ... *

(இ-ள்.) துறையடுத்த- துறைபொருந்திய—விருத்தத்தொகைக்கவிக்கு- விருத்தத்தொகையால் வான்மீகர்செய்தகதைக்கு—உறை- இடமாக— அடுத் த-பொருந்திய—செவிகளுக்கு- பெரியோருடையகாதுகளுக்கு—என்பா -என்னால்செய்யப்பட்ட இத்தமிழ்ப்பாக்களை—ஓதினால் - சொல்லப்புகின் —யாழ்-யாழிசையாகிய—நறை-தேனை—அடுத்த-பொருந்திய—அசுணம்- அசுணமாகிய—நன்மா- நல்லபுட்களினுடைய—செவி- காதினிடத்து—ப றை-பறையோசையானது—அடுத்ததுபோலும்-அடுத்ததுபோலுமாம்.— எ-று. [பா-எழுவாய். போலும்-பயனிலை] (௰)

அசுணப்புட்களுடைய செவிகளைப்பெரியோருடைய செவிகளுக்கு உவமையாகவும், அ ப்புட்களினுடைய செவிகளுக்கு இனிதாயிருக்கும் யாழினதோசையைத் துறையடுத்த விரு த்தந்தொகைக்கதைக்கு உவமையாகவும், அச்செவிகளுக்கு வெறுப்பாயிருக்கும் பறையின் ஓசையை தமிழ்ப்பாவுக்கு உவமையாகவுங்கூறினார். ஏனையபுட்கள்போலாது அசுணமானது யாழினோசையைக்கேட் டின்புறுவதாதலின் அசுண நன்மாவென விசேடஅடைகொடுத்துக் கூறினார்.- வான்மீகரால் சொல்லப்படுங் கவியைக்கேட்டு இன்பமுறும்பெரியோருடையசெ விகளுக்கு என்பாஅருவருப்பைக்கொடுக்குமென்பதிதன்கருத்து.

மக்களுமாக்களுஞ்சென்று நீருண்ணுந் துறைபோல் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதற்கு இடமாமாதலின் துறையடுத்தவிருத்தமெனக்கூறினர்.

வசந்தகாலப் பர்வதினத்தில் பூரணசந்திரோதயமா யிருக்கும்போது ஒருதடாகத்தின் கரையிலிருக்கும் நந்தனவனத்திலிருந்துகொண்டு யாழ்வாசித்தால் அசுணப்புட்கள் அவ்விடத்திலிறங்கி யாழ்நாதத்தைக் கேட்டுக்கொண்டு இன்பமுற்றிருக்குமென்றும், அப்போதொருடறத்தில் பறையடித்தால் அவ்வோசையைக்கேட்டவளவில் அப்புட்கள்மூர்ச்சிக்குமென்றும் முன்னோர்களாற்சொல்லப்படுகின்றது.

முத்தமிழ்த் துறையின்முறைபோகிய ... ... *
வுத்தமக்கவிகட்கொன்றுணர்த்துவன்... ... ... *
பித்தர்சொன்னவும்பேதையர்சொன்னவும் ... ... *
பத்தர்சொன்னவும்பன்னப்பெறுபவோ ... ...*

(இ-ள்.) முத்தமிழ்த்துறையில்- இயலிசைநாடகமென்னு முத்தமிழினிடத்தில்—முறைபோகிய - முறையாக அறிவைச்செலுத்திக் கற்றுவல்ல— உத்தமம்- நன்மையினையுடைய—கவிகட்கு - புலவர்கட்கு—ஒன்று உணர்த்துவன் ஒன்றுசொல்லுகின்றேன்—(அதுயாதெனில்) பித்தர்சொன்னவும்- பித்தர்களாற் சொல்லப்படுவனவும்— பேதையர்சொன்னவும் - பேதைமைத் தன்மையுடையோராற்சொல்லப்படுவனவும்—பத்தர்சொன்னவும்- பத்தர்களாற் சொல்லப்படுவனவும்—பன்னப்பெறுபவோ - சொற்குற்றப்பொருட்குற்றமுள்ளனவென்று—இலக்கணவகையால் - ஆராய்ச்சிசெய்யப்படுமெனவோ— எ-று. [சொற்கள்-எழுவாய். பன்னப்பெறுபவோ-பயனிலை] (௬)

பன்னப்பெறுபவோ என்பதின் ஈற்றிலிருக்கும் ஒகாரம் பன்னப்படுவன வல்லவென எதிர்மறையைக்காட்டி நின்றது. புலனெறிவழக்கினையுணர்ந்தோர்-இம்மை-மறுமை-வழுவாமல் செம்மைநெறியால் துறைபோவர் என்றார் நச்சினார்க்கினியார். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரச்சூத்திரவுரையிற்காண்க.

முத்தமிழ்த்துறையின் முறையோதிய எனப்பாடமோதுவாருமுளர். முத்தமிழ்த் துறையின்முறையுணர்ந்து அதற்குத்தக்கநல்லொழுக்கத்தினிற்பவராதலின் உத்தமக்கவிகளென்றார்.

அறையுமாடரங்கும்மடப்பிள்ளைக... ... ... *
டறையிற்கீறிடிற்றச்சருங்காய்வரோ...... ... *
இறையுஞானமிலாதவென்புன்கவி... ... ... *
முறையினூலுணர்ந்தாருமுனிவரோ... ... ... *

(இ-ள்.) மடப்பிள்ளைகள் - சிறுபெண்கள்—தறையில் - நிலத்தின்கண்—அறையும்-அறைகளும்—அரங்கும் -நாடகசாலைகளும்போல—கீறிடில்-கிழித்துவிளையாடினால்—தச்சரும் சிற்பரும்(அவற்றிற்குள்ள இலக்கணமின்மையைநோக்கிக்காய்வரோ, கோபிப்பார்களோ—(அதுபோல)இறையும்-சிறிதும்—ஞானமிலாத - அறிவில்லாத— என்புன்கவி - என்புன்கவியினது குற்றத்தைநோக்கி—முறையின்- முறைமையினால்— நூலுணர்ந்தாரும்- வேதமுதலாய நூற்பொருளை யுணர்ந்த பெரியோரும்—முனிவரோ-சீறுவார்களோ—எ-று ஓகாரம்இரண்டும்கோபியார் என்னும் எதிர்மறைக்கண்வந்தன [நூலுணர்ந்தோர்-எழுவாய். முனியார்-பயனிலை. (௭)

தரையென்பது-தறையென மருவிநின்றது. உம்மைகளிரண்டும் எச்சவும்மை.

முறையினாலுணர்தல் ஆசிரியனை வழிபடுமுறைமையறிந்து வழிபட்டுணர்தல் ஆதலால் இவர்கள்குணங்களைப் பாராட்டுவாரல்லது குற்றங்களைநாடாரென்பதுகருத்து.

நடையினின்றுயர்நாயகன் றோற்றத்தி ... ... *
னிடைநிகழ்ந்தவிராமாவதாரப்பேர்த் ... ... *
தொடைநிரம்பியதோமறுமாக்கதை ... ... *
சடையன்வெண்ணெய்நல்லூர்வயிற்றந்ததே. ... *

(இ-ள்.) நடையில்நின்று ஒழுக்கத்தினின்றும்—உயர்-உயர்ந்த—நாயகன்-காத்தற்றொழிற் றலைவனது—தோற்றத்தின் - திருவவதாரங்களுள்—இடைநிகழ்ந்த- இடையிலேநடந்ததாகிய—இராமாவதாரம்-இராமஅவதாரத்தினுடைய—பெயர்த்தொடை-பெயர்களாகியமாலையானது—நிரம்பிய-நிறைந்த—தோம்அறு-குற்றம்நீங்கிய—மா-பெருமைதங்கிய—கதை-கதையானது—சடையன்- சடையப்பமுதலியாருடைய—வெண்ணெய் நல்லூர்வயின் திருவெண்ணெய்நல்லூரிடத்திலிருந்து—தந்தது-செய்யப்பட்டது—எ-று ஏகாரம்-ஈற்றசை. [கதை-எழுவாய். தந்தது-பயனிலை.] (௮)

இராசத தாமதகுணத்தால் செய்யப்படும் -படைத்தல்- அழித்தலாகிய இரண்டொழுக்கத்தினும்சாத்துவிககுணத்தால்செய்யும்காத்தலாகிய ஒழுக்கம் உயர்ந்ததென்பார்நடையினின்றுயரென்றார்.

பரசிராமன் - தசரதராமன்- பலபத்திரராமன் -என்னு மூவகை இராமாவதாரத்துள் இவ்வவதாரம் இடைநிகழ்ந்ததாதலின் இடைநிகழ்ந்த இராமாவதாரமென் றுரைப்பினுமமையும். நாயகன்தோற்றத்தினிடைநிகழ்ந்த நடையினின்றுயர் இராமாவதாரப் பேர்த்தொடை எனப்பதங்கூட்டி ஒழுக்கத்தினின்றுயர்ந்த இராமாவதாரப் பெயர்த்தொடை எனப் பொருள்கூறினு மமையும். இராமப்பெயரிந்நூன்முழுவதும் விரவிவருதலின் பெயர்த்தொடையென்றார்.

இக்காப்பியம் நின்றுவிளங்குவதுபோலச் சடையப்பமுதலியார் பெயரும்நின்றுவிளங்க வேண்டுமென்னுங்கருத்தால் சடையன்வெண்ணெய்நல்லூர்வயிற்றந்ததென்றார். எனவே காலமுமிடமுங்கூறியதாயிற்று.

அவையடக்கம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜயம்.

ஆற்றுப்படலம்.

யாட்டிடைத்தலைவன தநாடும் நகரமுங் காப்பியத்தின் மூதற்கட் கூறவேண்டுதலின் அந்நாட்டுவளப்பத்திற் கேதுவாகிய ஆற்றினெழுக்கங் கூறுகின்றார்.

ஆசலம்புரியைம்பொறிவாளியுங்... ... ... *
காசலம்புமுலையவர்கண்ணெனும் ... ... *
பூசலம்புநெறியின்புறஞ்செலாக்... ... ... *
கோசலம்புனையாற்றணிகூறுவாம்... ... ... *

(இ-ள்) ஆசு-குற்றங்களின்—அலம்புரி - அமைவினைச்செய்கின்ற—ஐம்பொறி-ஐந்தென்னும் அடையாளத்தையுடைய—வாளியும் - மன்மதபாணங்களையும்—காசு-மணிவடம்—அலம்பும்-அசைகின்ற—முலையவர்- தனங்களையுடைய குலமாதர்களின்—கண்ணெனும்-கண்களாகிய—பூசல்- போர்க்குரிய—அம்பும்-பாணங்களையும்—நெறியின் - தமக்குரியவழியின்—புறஞ்செலா-புறத்திற்செல்லவொட்டாத—(நீதியுள்ள) கோசலம்-கோசலநாட்டினை—புனை-சூழ்ந்த—ஆற்றின்அணி -நதிவருவாயின் அழகினை—கூறுவாம்- யாம் சொல்வாம்—எ-று [யாம்-தோன்றா எழுவாய். சொல்வாம்-பயனிலை. ஆற்றணியை-செய்ப்படுபொருள்] (க)

ஐம்பொறிவாளியும் ஐம்பொறிகளின்மேற் செலுத்தத்தக்க வாளியெனக்கூறினுமமையும்.

ஐம்பொறியாவன-மெய்-வாய்-கண்-மூக்கு-செவி-என்பவை. ஐந்துபாணமாவன, தாமரைமலர்- அசோகமலர்- மாமலர்- முல்லைமலர்- குவளைமலர்- என்பவை.

ஐந்தென்னு மடையாளமுள்ள வாளியென்றதினால் மன்மதபாணமெனக்கொள்ளப்பட்டது. மற்றையர்பாணங்களுக்கு இந்தனையென்னுந்தொகை இன்று-மன்மதபாணம் குலமுதலியனவற்றொலாத்த ஆடவர்க்கும், மாதர்க்கும், ஆசையையுண்டாக்குவதன்றிமுறைமாறியுண்டாக்குவதில்லை. ஆதலால்,மாதர்கண்கள் தத்தமக்குரிய கணவர்களிடத்தன்றிப் பிறரிடத்திற் செல்வனவன்று இவற்றிற்குக்காரணம் ராசநீதி.

ஆறு-அணி-என்பது ஒற்றிரட்டித்து ஆற்றணியெனநின்றது வேற்றுமைச் சந்தியாதலின் நெடிலோடுயிர்த்தொடர் குற்றுகரங்களுட் டறவொற்றிரட்டும் வேற்றுமைமிகவே என்னுஞ் சூத்திரத்தானுணர்க.

நீறணிந்தகடவுணிறத்தவான்... ... ... *
ஆறணிந்துசென்றார்கலிமேய்ந்தகிற் ... *
சேறணிந்தமுலைத்திருமங்கைதன்... ... ...*
வீறணிந்தவன்மேனியின்மீண்டவே... ... *

(இ-ள்.) நீறு-விபூதியினை—அணிந்த- திருமேனிமுழுவதுந்தரித்த—கடவுள்-கடவுள்போல்—நிறத்த- வெண்மைநிறமுள்ள—வான் - மேகங்கள்—ஆறு-ஆகாயமார்க்கத்தை—அணிந்து-பொருந்தி—சென்று-போய்—ஆர்கலி சமுத்திரநீரை—மேய்ந்து-உண்டு—அகிற்சேறு- அகிற்குழம்பினை—அணிந்த-பூசிய—முலை-தனமுள்ள—திருமங்கைதன் - திருமகளது—வீறு - இன்பத்

தை—அணிந்தவன் - பொருந்தினதிருமாலுடைய—மேனியின்-திருமேனி போலநீலநிறங்கொண்டு—மீண்ட- திருப்பிவந்தன—எ-று.ஏகாரம்-ஈற்றசை [வான்-எழுவாய். மீண்ட-பயனிலை.] (௨)

அகிற்சேறு சந்தனமுதலிய கலவைச்சேறெனக்கொள்க.

மேகங்கள் மீண்டனவெனக்கூட்டுக. மின்னலுடனும், காற்றுடனும், இடியுடனும், கூடிநிற்றலின் மேகங்களெனப் பன்மையாகக் கூறினர். ரத கஜ துரக பதாதிகள் கூடிய கூட்டத்தைச் சேனையென்பதுபோல- ஒரோர்கால மேகமென ஒருமையாகக்கூறவும்படும். திருமங்கைதன்வீறணிந்தவன்-என்பதற்கு திருமகளைத் தனக்கு மேன்மையாக மார்பில் அணிந்தவன் எனக் கூறினுமமையும்.

பம்பிமேகம்பரந்ததுபானுவால்... ... ...*
நம்பன்மாதுலன்வெம்மையைநண்ணினன்...*
அம்பினாட்டுதுமென்றகன்குன்றின்மேல்... *
இம்பர்வாரியெழுந்ததுபோன்றதே... ... *

(இ-ள்.) மேகம்-மேற்கூறியமேகங்கள்—பம்பி- இமயமலையினிடத்திலேசூழ்திருகிறவனைக்கும்படித்திருந்து—(பின்பு)பரந்தது-ஆகாயத்தில்பரவியதோற்றமானது—நம்பன்-சிவனுடைய—மாதுலன்-மாமனாகிய மலையரையன்—பானுவால்-சூரியனால்—வெம்மையை - வெப்பத்தை—நண்ணினன்-பொருந்தினன்— (ஆதலால்) அம்பின்-சலத்தினால் ஆற்றுதுமென்று—அவ்வெப்பத்தை-நாம்தணிக்கக் கடவோமென்று—அகல்-விசாலமுள்ள—குன்றின்மேல்-அவ்விமயவரையின்மேல்—இம்பர் - இவ்விடத்திருக்கும்—வாரி-சமுத்திரமானது—எழுந்தது-போன்றது எழுந்த தோற்றத்தை ஒத்தது—எ-று ஏகாரம்-ஈற்றசை. [மேகம்பரந்தது-எழுவாய். போன்றது -பயனிலை. எழுந்ததோற்றம்-செயப்படுபொருள்.] (௩)

மேகம்பரந்தது வாரியெழுந்தது போன்றதெனக்கூட்டுக

அம்பினாட்டுதுமெனப்பாடமாயின் நீரினால் ஸ்நானஞ் செய் விக்கிறோமெனப் பொருள்கொள்க. உவர்க்கடலானது முன்னிருப்பதாதலின் இம்பர்வாரியென்றார்.

புள்ளிமால்வரைபொன்னெனநோக்கிவான். *
வெள்ளிவீழிடைவீழ்வனதாரைகள்... ... *
உள்ளியுள்ளவெலாமுவந்தீயுமவ் ... ... *
வள்ளியோரின்வழங்கினமேகமே... ... ...*

(இ-ள்.) மால்-பெரிய—வரை- அவ்விமயமலை—பொன்னெனல் - பொன்னென்பதனை—நோக்கி-கருதி—வான்-வானவர்—இடை-அப்பொன்னினிடத்தில்—வெள்ளிவீழ்-வெள்ளிக்கம்பிகளை—புள்ளி - அடையாளமாக—வீழ்த்தென-வீழ்த்ததுபோல—தாரை-மழைத்தாரைகளை—உள்ளி- மறுமைப்பயனைக்கருதி—உள்ளவெலாம்-தங்களிடத்துள்ள பொருள்களையெல்லாம்—உவந்து-வெறுப்பின்றி—ஈயும் - வரையாதுகொடுக்காநின்ற—அவ்வள்ளியோரின்-அவ்வள்ளல்களைப்போல—மேகம்-மேகங்கள்—வழங்கின-பொழிந்தன-எ-று. ஏகாரம்-ஈற்றசை. [மேகம்-எழுவாய். வழங்கின- பயனிலை. தாரை-செயப்படுபொருள்.] (௪)

புள்ளி-கனம்பொருந்திய, மால்வரை- பெரிய இமயமலையை, பொன்னென-பொன்னென்று நோக்கி-கருதி, வான்-வானமானது, வெள்ளிவீழ்-வெள்ளிவிழுதினை வீழ்ந்ததெனக்கூறுவது மொன்று-வரையாதுகொடுப்போர் வள்ளியோர்கள்- வரையாதுகொடுத்தலாவது- இன்னார்க்குக்கொடுக்கலாம் இன்னார்க்குக்கொடுக்கலாகாதென வெண்ணுமற் கொடுத்தல்-வள்ளலானவர்கள் இரவலர்க்குக்கொடுக்கும்போது அவ்விரவலர் சந்தோஷிப்பதைக்கண்டுதாமுஞ்சந்தோஷிப்பாராதலின்உவந்தீயுமென்றார்,

பாடபேதம்.

புள்ளிமால்வரைபொன்னென,மாற்றுயர்ந்தபொன்மலையைநோக்கி விரைவாக ஆகாயத்திலிருந்துவிழுகிற விழுதினைப்போல எனக்கூறுதலுமொன்று.

மானம்நேர்ந்தறநோக்கிமனுநெறி ... ... *
போனதண்குடைவேந்தன்புகழென... ... *
ஞானமுன்னியநான்மறையாளர்கைத் ... .. *
தானமென்னத்தழைத்தநீத்தமே... ...... *

(இ-ள்) மானம்-மானத்தை—நேர்ந்து- பொருந்தி—அறன்- தருமத்தை—நோக்கி- கருதி—மனுமுறை - மனுவிக்கியா னேஸ்வரமென்னும் சாஸ்திர முறைமைப்படி—போன-நீதிசென்ற—தண் - உலகத்துயிர்களுக்குக்குளிர்ச்சியுண்டாக்குவதற்கேதுவான—குடை-வெள்ளைக்குடையினையுடைய—வேந்தன்-தயாதமகாராசாவின்—புகழென-புகழைப்போலவும்—ஞானம் - ஞானநெறியை—முன்னிய- கருதிய—நான்மறையாளர் - நான்குவேதங்களுமுணர்ந்த அந்தணர்களுடைய— கையில்-கையினிடத்திற்கொடுக்கும் — தானமென்ன-தானத்தைப்போலவும்—நீத்தம்-வெள்ளமானது—தழைத்து -பரந்தது—எ-று ஏகாரம்-ஈற்றசை. [நீத்தம்-எழுவாய் தழைத்தது-பயனிலை.]

மன்னுயிரைத் தன்னுயிர்போலநினைத்து இராசாங்கம்செலுத்தும் அரசனுக்குண்டாகும்புகழ் எங்கும்பரவுதல்போலமலையின்மேல் பெய்யப்பட்டமழைநீர் எங்கும் பரவுதலால் வேந்தன்புகழென்றும்,அந்தணர்கையிற்கொடுக்கும்தானம் சிறிதாயிருந்தாலும் அதனால் வரும்பலன் அதிகரிப்பதுபோல வெள்ளம் அதிகரித்தலால்நான்மறையளார்கைத்தானமென்னவுங்கூறினர்.

மாநமாவது-அரசன் தன்னுடைய வீரமுதலிய நிலைமைக்குத் தவறுவராமல் காத்துக்கொள்வது-அரசனுக்கு அறமாவது. ஓதல்-வேட்டல் ஈதல்-என்னும் பொதுத்தொழிலினும் படைக்கலம் -பயிற்றல்-பல்லுயிரோம்பல்-பகைத்திறந்தெறுதல் என்னுஞ்சிறப்புத்தொழிலினும் வழுவாதுநிற்றல்

இவ்வாறு ஆராய்ச்சிசெய்து மனுமுறைபோதலாவது மனுவிக்கியானேஸ்வரமுதலியதர்மசாஸ்திரங்களில்கூறிய முறைமைப்படி நீதிசெலுத்துதலாம்.

உயிர்களுக்குக் குளிர்ச்சிசெய்தலாவது- நன்மையைச்செய்தல்-அறம்-அறனெனப்போலியாய்நின்றது.

தலையுமாகமுந்தாளுந்தழீஇயதன்... ... .. *
நிலைநிலாதிறைநின்றதுபோலவே ... ... *
மலையினுள்ளவெலாங்கொண்டுமண்டலால் ...*
விலையின்மாதரையொத்ததவ்வெள்ளமே ... *

(இ-ள்.) தலையும்-தன்னை விரும்பிவந்த காமுகருடைய தலையினையும்—ஆகமும் - மார்பினையும்—தாளும் - பாதத்தையும்—தழீஇய - தழுவிய—

தன்னிலை- தன்றிருப்பத்தினிலைமையில்—நிலாது - நில்லாமல்—இறை-சிறி துபொழுது—நின்றதுபோலவே-நிற்றதுபோல—(வெள்ளமும்)மலையின் முடியினையும் ஆகத்தையும் அடிவாரத்தையுந்தழுவி அந்தநிலையில் நில்லாம ல்—மலையின்-அம்மலையினிடத்து— உள்ளவெலாம்- உள்ள பொருளையெல் லாம்—கொண்டு-அபகரித்துக்கொண்டு—மண்டலால் - நெருங்கிச்செல்லுத லால்—விலையின்மாதரை-விலைமாதரை—ஒத்தது-ஒப்பாயிற்று—எ-று. ஏகா ரம்-ஈற்றசை. [வெள்ளம்-எழுவாய் ஒத்தது-பயனிலை. விலையின்மாதரைசெ யப்படுபொருள்.] (௬)

தழுவின என்பது இறந்தகாலத்தைக்காட்டும். இன்னென்னு மிடைநிலை குன்றித்தழீஇ எனவிகாரப்பட்டது. ஈண்டுக குற்றெழுத்தளபெடுத்தது. காமுகன்வந்தவிடத்து அவன்றா ளைந் தலையைத்தொட்டு இனிவேறெருவரையும்விரும்பேனெனப் பரவசங்கூறியும் ஆகத்தை த்தழுவினளெனக் கூறுதற்குத் தழீஇயென ஒற்றுமையாற்கூறினர். நிற்பதுபோலவென நிகழ் காலத்தாற்கூறவேண்டியதனை நின்றதுபோலஎன இறந்தகாலத்தாற்கூறினர். காலமயக்கம்.

விலையின்மாதர் உருபும்பொருளுந்தொக்க வேற்றுமைத்தொகை-விரித்துக் கூறுமிடத் துவிலையினுக்குரிய மாதரென்றுகின்றமைகாண்க.

தழுவியநிலையாவது விருப்பம்-அவ்விருப்பம்வந்தவன் கைப்பொருளை அபகரித்துக்கொ ள்ளுமளவுநின் றுடனேநீங்கிவிடுதல் அம்மாதர்களுக்குள்ளவியல்பு.

மணியும்பொன்னுமயிற்றழைப்பீலியும்... *
அணியுமானைவெண்கோடுமகிலுந்த... .... *
ணிணையிலாரமுமின்னகொண்டெகலாய் ... *
வணிகமாக்களையொத்ததவ்வாரியே... ... *

(இ-ள்.) அவ்வாரி- அந்தவெள்ளமானது—மணியும்- நவரத்தினங்களும்—பொன்னும்-சுவர்ணமும்—மயில்-மயில்களின்—தழை- தழைவாகிய—பீலி யும்-இறகுகளும்—அணியும்-ஆபரணங்களும்—ஆனை- ஆனைகளினுடைய—வெண்-வெண்மைநிறமுள்ள—கோடும்-கொம்புகளும்—அகில்- அகிற்கட்டை களும்—தன் -தனக்கு—இணை-ஒப்பு —இல்-இல்லாத—ஆரமும்-சந்தனக்கட் டைகளுமாகிய—இன்ன-இவ்வகைப்பொருள்களை—கொண்டு-தன்னிடத்திற் கொண்டு—ஏகலால்-செல்லுதலால்—வணிகமாக்களை- வர்த்தகர்களை—ஒத்த து-நிகர்த்தது—எ-று ஏகாரம்-ஈற்றசை. [வாரி எழுவாய் ஒத்தது-பயனிலை. வணிகமாக்களை-செயப்படுபொருள்] (௭)

இங்குக்கூறப்பட்ட பொருள்களெல்லாம் குறிஞ்சிநிலத்திலிருக்கும் பொருள் அணிகள் அந்நிலத்துமாதர்கள்பூண்பவை.

பூநிரைத்துமென்றுதுபொருந்தியும்... ...*
தேன்வளாவியுஞ்செம்பொன்விராவியும்... *
ஆனைமாமதவாற்றொடளாவியும்... ... ... *
வானவில்லைநிகர்த்ததவ்வாரியே... ... ... *

(இ-ள்.) அவ்வாரி-அந்தவெள்ளமானது—பூநிரைத்து-மலர்கள் ஒழுங்குப

டப்பொருந்தியும்—மென்றாதுபொருந்தியும்- மென்மைத்தன்மையுள்ளம கரந்தப்பொடிகளைப்பொருந்தியும்—தேன்வளாவியும் - தேன்கலந்தும்— செம்பொன்விராவியும்-செம்பொன்னினைப்பொருந்தியும்—ஆனை-யானைக ளின்—மாமதம்-மிகுந்தமதநீராகிய—ஆற்றொடு- பிரவாகத்துடன்—அளா வியும்பொருந்தியும் (பலதிறங்கொண்டிருப்பதிறுலே)—வானம் - மேகத்தி னிடத்தில்தோன்றுகிற—வில்லை-இந்திரதனுவை—நிகர்த்தது-ஒத்தது-எ-று ஏகாரம்-ஈற்றசை. [வாரி-எழுவாய். நிகர்த்தது-பயனிலை. வானவில்-செயப்ப டுபொருள்.] (அ)

மலையெடுத்துமரங்கள்பறித்துமா... ... ...*
டிலைமுதற்பொருள்யாவையுமேந்தலான்... *
அலைகடற்றலையன்றணைவேண்டிய... ... .. *
நிலையுடைக்கவிநீத்தமந்நீத்தமே ... ... *

(இ-ள்.) அந்நீத்தம்- அவ்வெள்ளமானது—மலையெடுத்து - மலைகளையெடு த்தும்—மரங்கள்-விருக்ஷங்களை—முறித்தும்- ஒடித்தும்—மாடு- பக்கங்களி லிருக்கும்—இலைமுதற்பொருள் - இலைமுதலாகிய பொருள்களையும்—ஏந்த லால்-ஏந்திக்கொண்டுசெல்லுதலினுல்—அலை- அலையும்நீரையுமுடைய—கடல் தலை-சமுத்திரத்தினிடத்தில்—அன்று-அன்றைக்கு—அணைவேண்டிய -அணைக ட்டவிரும்பிய—நிலையுடை - மனநிலைமையினையுடைய—கவிநீத்தம் - வான ரவெள்ளத்தையொத்தது—எ-று. ஏகாரம்-ஈற்றசை. நீத்தம்-எழுவாய். ஒத்த து-பயனிலை.கவிநீத்தம்-செயப்படுபொருள். பயனிலை-எஞ்சிநின்றது.] (கூ)

வெள்ளம்-மலையெடுத்தலாவது-குன்றுகளைப்புரட்டுதல்-இலைமுதற்பொருள் என்றதினுல் காய்கனிகளுங்கொள்க. அந்நாளில் அறுபத்தெட்டுவானரவெள்ளம் மலையெடுத்துமரங்கள்மு றித்து அணைகட்ட மற்றையிரண்டு வெள்ளமாகிய வானரங்கள் ஆகாரத்துக்காக இலைமுதற் பொருள்களைக்கொண்டுசென்றன.

ஈக்கள்வண்டொடுமொய்ப்பவரம்பிகந்... ...*
தூக்கமேமிகுந்துட்டெளிவின்றியே ... ...*
தேக்கெறிந்துவருதலிற்றீம்புனல் ... ... *
வாக்குதேனுகர்மாக்களைமானுமே... ... *

(இ-ள்.) ஈக்கள்- ஈக்களும்—வண்டொடு- வண்டுகளும்—மொய்ப்ப- மொ ய்க்கும்படி—வரம்பு-அணையை—இகந்து- கடந்தும்—ஊக்கம்- வலி—மி குந்து-அதிகரித்தும்—உள்-உள்ளே—தெளிவுஇன்றி-தெளிவில்லாமலும்— தேக்கு- தேக்கமரங்களை—எறிந்து-இருகரையிலும் அலைகளால்எறிந்தும்— வருதலின்-வருதலினுல்—தீம்புனல்- மதுரமுள்ள வெள்ளமானது—வாக்கு- வார்க்கும்படியான—தேன்- மதுவினை—நுகர் - உண்ணுகின்ற—மாக்களை- மாந்தர்களை—மானும் - ஒப்பாகும்—எ-று. ஏ-ஈற்றசை. [புனல்-எழுவாய். மானும்-பயனிலை.மாக்கள்-செயப்படுபொருள்.இதுசெம்மொழிச்சிலேடை

மதுபானிகளைக்குறித்துச் சொல்லுமிடத்து வரம்பிகந்து தங்குலத்துக்கொழுக்கத்து க்குமுரிய வரம்பினைக்கடந்தும் ஊக்கமேமிகுந்து உச்சாகமிகுந்தும் உட்டெளிவின்றி மனந் தெளிவில்லாமல் தேக்கெறிந்து ஏப்பமிட்டுக்கொண்டும் வருதலினெனப் பொருள்கொள்க.

பணைமுகக்களியானைபன்மாக்களோ .... *
டணிவகுத்தெனவீர்த்திரைத்தார்த்தலின் ... *
மணியுடைக்கொடிதோன்றவந்தூன்றலாற் ...*
புணரிமேற்பொரப்போவதுபோன்றதே...*

(இ-ள்.) பணை-பருத்த—முகம்-முகத்தையும்—களி-மயக்கத்தையுமுடைய—யானை-யானைகளோடும்—பல்-பலவாகிய—மாக்களோடு-மிருகங்களோடும்—அணிவகுத்தென-யூகம்வகுத்ததுபோல—ஈர்த்து-பந்திபந்தியாக இழுத்துக்கொண்டு— இரைத்துஆர்த்தலின்-ஆரவாரித்தலாலும்—மணியுடை-அழகினையுடைய—கொடி-காட்டுக்கொடிகள்—தோன்ற-காணும்படி—வந்து ஊன்றலின்-வந்துபொருந்துதலினாலும்—புணரிமேல்-சமுத்திரத்தின்மேல்—பொர-யுத்தஞ்செய்ய—போவது-செல்லுந்தன்மையினை—போன்றது ஒத்தது—எ-று. ஏகாரம்-ஈற்றசை. [வெள்ளம்- எழுவாய். போன்றது -பயனிலை. போவது-செயப்படுபொருள்.] (௰௧)

போர்செய்யச்செல்லுந் தன்மையைக்குறிக்குமிடத்து- பன்மாக்கள் - பலகுதிரைகள். மணியுடைக்கொடி -மணிகளுள்ளதுவசங்கள், யானைக்கூட்டமும் மிருகக்கூட்டமும் ஒன்றோடொன்றுகலவாமல் வருகின்றமையின் அணிவகுத்தெனவென்று கூறப்பட்டது. இரைத்தார்த்தல்-ஒருமொழியாகக்கொள்க. ஊன்றுதல்-நாட்டுதல். இதுவும் சிலேடைஅணி.

இரவிதன்குலத்தெண்ணில்பல்வேந்தர்தம்....*
பரவுநல்லொழுக்கின்படிபூண்டது... ... *
சரயுவென்பதுதாய்முலையன்னதிவ்... ... ...*
வுரவுநீர்நிலத்தோங்குமுயிர்க்கெலாம்... ...*

(இ-ள்.) இரவிதன் -சூரியனுடைய—குலத்து- குலத்தில்வந்த—எண் இல்-அளவில்லாத—பல்-பலராகிய—வேந்தர்தம்- அரசர்களுடைய—பரவு-பரவிய—நல்-நன்மையான—ஒழுக்கின்படி - ஒழுக்கத்தினைப்போல—பூண்டது-ஒழுக்கத்தைப்பொருந்தியது—சரயுவென்பது-சரயுநதியென்றுபெயர்சொல்லப்படுவது—உரவுநீர்- சமுத்திரத்தினாற் சூழப்பட்ட— இந்நிலத்து-இந்தஉலகத்தில்—ஓங்கும்- மிகுந்த— உயிர்க்கெலாம்- உயிர்களுக்கெல்லாம்—தாய்முலையன்னது -ஈன்றதாயினுடைய தனபாரத்தையொத்தது—எ-று.

வெள்ளம்-எழுவாய். பூண்டது-என்பது-அன்னது-இம்மூன்றும் பயனிலை. பூண்டது-என்னும்பயனிலைக்கு ஒழுக்கஞ் செயப்படுபொருள். அன்னது - என்னும் பயனிலைக்குத்தாய்முலை செயப்படுபொருள். ரவியென்னும்வடசொல்-யரலக்கிகரமுமென்னும் சூத்திரவிதியால் முதலில் இகரம்பெற்றது. தன்-தம்- இவ்விரண்டும் இடைச்சொல் ஒழுக்கம்மீண்டும் வருவித்துரைக்கப்பட்டது.

தாய்முலைமக்களை வளர்ப்பதுபோல இது உயிர்களைவளர்க்குந்தன்மையை யுடையதாதலின் தாய்முலையன்னதென்றார்.

வேந்தரது ஒழுக்கம் ஆசாரம்-அது எந்நாளும் மாறாததன்மைபோல் இது மாறாமல்நீரோடிக்கொண்டேயிருத்தல்.

[வேறு.]

கொடிச்சியரிடித்தசுண்ணங்குங்குமங்கோட்டமேலம்.. *
நடுக்குறுசந்தஞ்சிந்தூரத்தொடுநரந்தநாகம்... .. .. *

கடுக்கையார்வேங்கைகோங்குபச்சிலைகண்டில்வெண்ணெ ✻
அடுக்கலினடுத்ததீந்தேனகிலொடுநாறுமன்றே ... .✻

(இ-ள்.) கொடிச்சியர்-குறத்தியர்கள்—இடித்த-வெறியாட்டின்பொருட்டு இடித்த-சுண்ணம்-வாசனைப்பொடியும்—குங்குமம்-குங்குமமரமும்—கோட்டம் கோஷ்டமரமும்—ஏலம்-ஏலச்செடியும்—நடுக்குஉறு-அசைகின்ற—சந்தம்-சந்தனவிருக்ஷமும்—சிந்தூரம்-வெட்சிமரமும்—அடுக்கலின்-அந்தமலையில்—அடுத்த-பொருந்திய—நரந்தம்-கஸ்தூரியும்—நாகம்-சுரபுன்னைமரமும்—கடுக்கை-கொன்றைமரமும்—ஆர்-ஆத்திமரமும்—வேங்கை-வேங்கைமரமும்—கோங்கு-கோங்குமரமும்—பச்சிலை-பச்சிலைமரமும்—கண்டில்வெண்ணெ-கண்டில்வெண்ணெ என்கிற ஒருவகைமரமும்—தீம்தேன்-மதுரமுள்ளதேனும்—அகில்-அகில்மரமுமுள்ளதாய்—நாறும்-கமழும் எ-று. அன்று-அசை. ஏ-ஈற்றசை. [வெள்ளம்-தோன்றாஎழுவாய். நாறும்-பயனிலை] (௰௩)

நரந்தம்-நாரத்தையென்றுகூறினும், நடுக்குறு சந்தம் என்பதற்கு-நடு-நடுவில் குறுக்கப்பட்ட, சந்தனம்-சந்தனக்கட்டை என்று கூறினுமமையும்.

பதார்த்தகுணசிந்தாமணி—வெண்பா.

கண்டில்வெண்ணெய்மாதேகேள்காந்திப்பிரதாபமுமா ந்
தொண்டையினுண்ணீர்க்கட்டுந்தூரிருமன்—மிண்டிவரு ம்
நீர்க்கடுப்புமூலத்துணீர்க்குத்தலும்போக்கு ம்
பார்க்குளதியப்பக ர்

எயினர்வாழ்சீறூரப்புமாரியினிரியல்போக்கி ... ...✻
வயின்வயினெயிற்றிமாதர்வயிறலைத்தோடவோடி... ...✻
அயின்முகக்கணையும்வில்லும்வாரிக்கொண்டலைக்குநீராற் ✻
செயிர்தருங்கொற்றமன்னர்சேனையைமானுமன்றே ....✻

(இ-ள்.) எயினர்-வேடர்கள்—வாழ்-வாழ்கின்ற—சீறூர்-சிற்றூர்களை—அப்புமாரியின்-அம்புவருஷத்தினால்—இரியல்போக்கி-பிரிந்தோடச்செய்து—வயின்வயின்-அங்கங்குள்ள—எயிற்றிமாதர்-வேடப்பெண்கள்—வயிறு-வயிற்றினை—அலைத்து-கைகளால்வருத்திப்பிசைந்துகொண்டு—ஓட-ஓடும்படி—ஓடி-சென்று—அயில்முகம்-கூர்மையாகியமுகமுள்ள—கணையும்-பாணங்களையும்—வில்லும்-விற்களையும்—வாரிக்கொண்டு-அடித்துக்கொண்டு—அலைக்கும்-அலையச்செய்கின்ற—நீரால்-நீரினால்—செயிர்தரும்-குற்றம்பொருந்திய—கொற்றம்-வெற்றியுள்ள—மன்னர்-கொடுங்கோல்மன்னர்களுடைய—சேனையை-படையினை—மானும்-ஒப்பாகும்—எ-று. அன்று-அசை. ஏ-ஈற்றசை. [வெள்ளம்-எழுவாய். மானும்-பயனிலை. சேனையை-செயப்படுபொருள்.] (௰௪)

சிறுமையென்னும் பண்புச்சொல் ஈறுபோதலிடையுகரமிய்யாதலாதி நீடல் என்னுஞ் சூத்திரவிதியால் இறுதியிலிருக்கும்-மை-விகுதிகுன்றி முதலெழுத்துநீண்டு சீறு என்றாய் வருமொழிமுதலிலுயிர்வந்தவிடத்து ஈற்றுக்குற்றியலுகரம் நீங்கநின்ற வல்லினமெய்யின்மேல் வருமொழிமுதலினின்ற ஊகாரமேறச் சீறூர் என்றாயிற்று.

அம்பு எனற்பாலது விகாரவகையால் அப்பு என்றாயிற்று. அம்பு என்பதுநீர்-பாணம் என்னும் பலபொருளொருசொல்லாதலின் வெள்ளத்தைக் குறிக்கும்போது நீரும் சேனையைக் குறிக்கும்போது பாணமுமாகப்பொருள்கொள்க. கணை-அலகு.

அலைக்கும் நீரால் என்பதற்குச்சேனையைக்குறிக்குமிடத்து அலைக்குந் தன்மையாலெனப்பொருள்கொள்க. நீரென்பது-பலபொருளொருசொல்.

குடிகள் அலையச்செய்கின்றமையால் கொடுங்கோல்மன்னர் சேனையை யொப்பாகுமென்பது இதற்கருத்துஇதுவும்-சிலேடை-குறிஞ்சிப்பெருக்கங்கூறியது.

செறிநறுந்தயிரும்பாலும்வெண்ணெயுஞ்சேர்ந்தநெய்யும்
உறியொடுவாரியுண்டுகுருந்தொடுமருதமுந்தி ... ... *
மறியுடையாயர்மாதர்வளைதுகில்வாருநீராற் ... ... *
பொறிவரியரவினாடும்புனிதனும்போலுமன்றே... ... *

(இ-ள்.) செறி-செறிந்த—நறும்-மணமுள்ள—தயிரும்-தயிரும்—பாலும்-க்ஷீரமும்—வெண்ணெயும்-நவநீதமும்—சேர்ந்தநெய்யும்-இணைந்தோறுஞ்சேர்ந்தநெய்யும்—உறியொடு-உறிகளுடன்—வாரியுண்டு-வாரியுண்டும்—குருந்தொடு-குருந்தமரத்துடன்—மருதம்-மருதமரத்தை—உந்தி-தள்ளியும்—மறியுடை-ஆடுகளையுடைய—ஆயர்மாதர்-இடைச்சியர்கள்—வளை-தரித்துக்கொள்ளும்—துகில்-புடைவைகளை—வாருநீரால்-வாரிக்கொண்டுசெல்லுந்தன்மையினால்—பொறி-புள்ளியும்—வரி-வரியும்பொருந்திய—அரவின்-காளிங்கனென்னும் பாம்பின்மேல்—ஆடும்-ஆடிய—புனிதனும்போன்றது-கிருஷ்ணமூர்த்தியைப்ஒத்தது—ஏ-று அன்று-அசை-ஏ-ஈற்றசை. [வெள்ளம்-எழுவாய். போன்றது-பயனிலை. புனிதன்-செயப்படுபொருள். முல்லைநிலப்பெருக்கங்கூறியது. உம்மை-உயர்வுசிறப்பும்மை-அலலது இறந்ததுதழீஇய எச்சவும்மை] (௰௫)

கதவினைமுட்டிமள்ளர்கையெடுத்தார்ப்பவெய்தி ... ... *
நுதலணிமோடைபொங்கநுகர்வரிவண்டுகிண்டத் ... ... *
தகைமணிசிந்தவுந்தித்தறியிறந்தடக்கைசாய்த்து ... ... *
மதமழையானையென்னமருதஞ்சென்றடைந்ததன்றே. *

(இ-ள்.) கதவினை-அந்தவெள்ளமானது மதகுகடோறுமுள்ளகதவுகளை—முட்டி-சென்றுமுட்டி—மள்ளர்-உழவர்கள்—கையெடுத்து-மகிழ்ச்சியால் கைகளைமேலெடுத்து—ஆர்ப்ப-ஆரவாரிக்க—எய்தி-சென்று—நுதலணி எதிரே அணிபாசவிளங்கும்—ஓடைபொங்க-ஓடைகள்பெருகவும்—நுகர்-அவற்றின்கணுள்ளமலர்களில்தேனைநுகரும்—வரிவண்டு-இசைபாடும்வண்டுகள்—கிண்ட-குடையவும்—தகை-நெருங்கிய—மணிசிந்த-முத்துமுதலியமணிகள்சிந்த—உந்தி-தள்ளியும்—தறியிற—ஆற்றிடைக்குறையிற்றறிகள் முறியவும்—தடக்கை-தடாகத்தின்கரைகளை—சாய்த்து-தள்ளியும்—மதமழை-மதமாகியமழையையுடைய—யானையென்ன-யானைபோல்—மருதஞ்சென்று-மருதநிலத்திற்சென்று—அடைந்தது-சேர்ந்தது—ஏ-று. அன்று-அசை-ஏ-ஈற்றசை. [வெள்ளம்-எழுவாய். அடைந்தது-பயனிலை.] (௰௬)

இது சிலேடை உவமையாதலால் யானையைக்குறிந்துச் சொல்லுமிடத்து-கதவு-கொட்டாரத்தின் கதவு- மள்ளர் யானைப்பாகர் நுதல் அணி ஓடைநெற்றியில் அணிந்த பொற்பட்டம் நுகர் வரிவண்டு மதநீரை யுண்ணும் வரிவண்டு தகைமணி பக்கத்துமணி -தறி-கட்டுத்தறி தடக்கை பெரியதுதிக்கை எனப்பதம்பிரித்துப்பொருள்கொள்க. இதுமருதநிலப்பெருக்கங்கூறியது.

முல்லையைக்குறிஞ்சியாக்கிமருதத்தைமுல்லையாக்கிப் ...*
புல்லியநெய்தறன்னைப்பொருவருமருதமாக்கி ... ... *
யெல்லையில்பொருள்களெல்லாமிடைதடுமாறுநீராற் ... *
செல்லுறுகதியிற்செல்லும்வினையெனச்சென்றதன்றே. *

(இ-ள்.) முல்லையை- முல்லைநிலத்தை—குறிஞ்சியாக்கி- குறிஞ்சிநிலமாக்கியும்—மருதத்தை- மருதநிலத்தை—முல்லையாக்கி - முல்லைநிலமாக்கியும்—புல்லிய- சொற்பப்பயனைத் தருவதாகிய—நெய்தல்தன்னை - நெய்தனிலத்தை பொருவரும்-ஒப்புசொல்லுதற்கரிய—மருதமாக்கி - மருதநிலமாக்கியும்—(இவ்வகையினால்) எல்லையில்-அளவில்லாத—பொருள்களெல்லாம்- திரவியங்களெல்லாம்—இடைதடுமாறுநீரால்- இடம்விட்டு இடமாறின தன்மையினால்—செல்லுறு- உயிர்கள்செல்லுதல்பொருந்திய—கதியில்- நால்வகைக்கதிகளில்—செல்லும்-செல்லுகின்ற—வினையென - நல்வினை தீவினை போல—சென்றது-போயிற்று—எ-று. அன்று - அசை. ஏ- ஈற்றசை. [வெள்ளம்- எழுவாய். சென்றது-பயனிலை.] (௰௭)

புல்லிய என்பதற்குப் பொருந்திய வென்று கூறினு மமையும், பொருவரும் என்பதனை பொருவுதல் அரும் எனப்பதம்பிரிக்க உகரச்சாரியையும், தல்விகுதியுங்குன்றிநின்றது.

குறிஞ்சிநிலப்பொருளை முல்லைநிலத்திற் கொண்டுவந்து சேர்த்தமையால் முல்லையைக்குறிஞ்சியாக்கியென்றும், முல்லைநிலப்பொருளை மருதநிலத்திற்கொண்டுவந்து சேர்த்தமையால்மருதத்தை முல்லையாக்கியென்றும், மருதநிலப்பொருளை நெய்தனிலத்திற் கொண்டுவந்து சேர்த்தமையால் நெய்தலை மருதமாக்கியென்றுங்கூறினர். நாற்கதி-தேவர் - மக்கள் - விலங்கு-நரகர்.

காத்தகான்மள்ளர்வெள்ளக்கலிப்பறைகறங்கக் கைபோய்ச்
சேர்த்தநீர்த்திவலைபொன்னுமுத்தொடுதிரையின்வீசி....*
நீத்தமாந்தலையதாகிநிமிர்ந்துபார்கிழியநீண்டு... .....*
கோத்தகாலொன்றினொன்றுகுலமெனப்பிரிந்ததன்றே...*

(இ-ள்.) கால்-நீர்க்கால்களை—காத்த - காத்துக்கொண்டிருந்த—மள்ளர்-மள்ளர்கள்—வெள்ளம்-வெள்ளம்வருகின்ற குறிப்பினைத்தெரிவிக்கும்—கலி-ஓசையினையுடைய—பறை-பறைகள்—கறங்க-முழங்குதலினாலுணர்ந்து—கைபோய்- ஒழுங்காகப்போய்—சேர்த்த-ஏரிகுளங்களிற்சேர்த்த—நீர் - நீரினிடமாக—திவலை- துளிகளையும்—பொன்னும்-பொன்னினையும்—முத்தொடு-முத்துகளுடன்—திரையின்வீசி- அலைகளால்வீசியும்—நீத்தம் - ஆற்றில் சென்றவெள்ளமானது—மாந்து- உண்ணும்படியான—அலையதாகி- அலைகளையுடையதாய்—நிமிர்ந்து- உயர்ந்தும்—பார்கிழிய- பூமிகிழியும்படி—நீண்டு-நீட்சியைப்பொருந்தியும்—ஒன்றினொன்று கோத்தகால்-ஒன்றுடனொன்றுபொருத்தமாயிருக்குங்கால்களில்—குலமென - முன்னேயொன்றேயாயிருந்துபிற்படப்பலவாறுகக்கிளைத்துள்ளகுலம்போல—பிரிந்தது-பிரிவுற்றது-எ-று. அன்று-அசை. ஏ-ஈற்றசை. [நீத்தம்-எழுவாய். பிரிந்தது-பயனிலை]

பாடபேதம்.

மான்றலையதாகி -குதிரைத்தலைபோல்வதாகி-எனப்பொருள்கூறுவதுமன்றி ஆன்றுமிகுந்து-அலையதாகி- அலையையுடையதாகியெனவுங்கூறுவர்.

மருதநிலத்தின்கண் பலகால்களாகப் பிரிந்ததன்மை இவ்வாறென்பது இதன்கருத்து.

கல்லிடைப்பிறந்துபோந்துகடலிடைக்கலந்தநீத்தம் ... *
எல்லையின்மறைகளாலுமியம்பரும்பொருளீதென்னத் . *
தொல்லையினொன்றேயாகித்துறைதொறும்பரந்தசூழ்ச்சிப்
பல்பெருஞ்சமயஞ்சொல்லும்பொருளும்போற்பரந்ததன்றே

(இ-ள்) கல்இடை-இமயமலையினிடத்தில்—பிறந்து-உத்பத்தியாகி—போந்து சென்று—கடல்இடை-சமுத்திரத்தினிடத்தில்—கலந்த-சேர்ந்த—நீத்தம்-வெள்ளமானது—எல்லையில்-அளவில்லாத—மறைகளாலும்-நான்குவேதங்களாலும்—இயம்புஅரும்-இத்தன்மைத்தெனச்சொல்லுதற்கரிய—பொருள்-பிரமம்—ஈதுஎன்ன-இதுவென்றுசொல்லும்படி—தொல்லையில்-பழமையில்—ஒன்றேயாகி-ஏகமாகியேயிருந்து-பின்பு—துறைதொறும்-இடந்தோறும்—பரந்த-வெவ்வேறுகடவுளாகப்பரவிய—சூழ்ச்சி-சூழ்ச்சியினையுடைய—பல்-பலவகைப்பட்ட—பெருஞ்சமயம்-பெரியசமயத்தாரால்—சொல்லும்-சொல்லப்படுகிற—பொருளும்போல்பரந்தது-அந்தப்பிரமம்போலவும் பரவியது—எ-று. அன்று-அசை. ஏ-ஈற்றசை. [நீத்தம்-எழுவாய். பரந்தது-பயனிலை] (௰௯)

கல்லிடைப்பிறந்தநீத்தம் -துறைதொறும் பரந்தது எனக்கூட்டுக. தொல்லையினொன்றாகியபொருள் பலவகைச்சமயத்தார் தொழும்படி வெவ்வேறு திருநாமங்கொண்டு அனுக்கிரகிக்குமாயினும் முத்திமுடிவில்சமயாதீதப்பட்டு ஏகமாயே இருப்பதுபோல-நீத்தமும்தொல்லையிலொன்றாகித் துறைதோறும்பரந்து கடலிடைச்சேரும்போதும் ஒன்றாயேநின்றது.

இயம்பரும் என்பது தல்விகுதிகுன்றிநின்றது. பொருளும்போல என்பதிலிருக்கும் உம்மை-உயர்வுசிறப்பும்மை.

தாதுகுசோலைதோறுஞ்சண்பகக்காடுதோறும்... ......*
போதவிழ்பொய்கைதோறும்புதுமணற்றடங்கடோறும் *
மாதவிவேலிப்பூகவனந்தொறும்வயல்கடோறு ... .*
மோதியவுடம்புதோறுமுயிரெனவுலாயதன்றே... ... *

(இ-ள்.) தாது-மகரந்தம்—உகு-சிந்துகின்ற—சோலைதோறும்-சோலைகள்தோறும்—சண்பகக்காடுதோறும்-சண்பகவனந்தோறும்—போது-மலர்கள்—அவிழ்-அலருகின்ற—பொய்கைதோறும்-பொய்கைகள்தோறும்—புதுமணல்-புதுமணலுள்ள—தடங்கள்தோறும்-தடாகங்கள்தோறும்—மாதவி-குருக்கத்திமரங்களாகிய—வேலி-வேலியையுடைய—பூகம்-கமுகமரங்கள்நிறைந்துள்ளவனந்தோறும் சோலைகள்தோறும்—வயல்கள்தோறும்-கழனிகள்தோறும்—ஓதிய-சொல்லிய—உடம்புதோறும்-சரீரங்கள்தோறுமிருக்கும்—உயிரென-உயிர்போல—உலாயது-சென்றுநிறைந்தது—எ-று. அன்று-அசை. ஏ-ஈற்றசை. [வெள்ளம்-எழுவாய். உலாயது-பயனிலை.] (௨௰)

சம்பகம் என்பது சண்பகமென மருவிவழங்குகின்றது.

ஆற்றுப்படலமுற்றிற்று.

ஸ்ரீராமசயம்.

நாட்டுப்படலம்.

உடற்கு உயிர்போன்ற ஆற்றினீரா லுண்டாகிய நாட்டுவளப்பத்தைக் கூறத்தொடங்கினார்.

அவ்வளமானது - அரசனாற்றலானும் கடவுள்பூசை அறங்களென்னும் இவைகளினாலும் பெருகுவது.

அவ்வளத்தின் வகைகள் சுழிகளிற்படும் பொன்னும் மணிகளும் வயலினுந் தண்டலையினும் விளையப்படும்பொருளுமாம்.

நாடாவது- குன்றாப்பயிர்செய்விப்பவர்களும் பெரியோருஞ் செல்வமுடையோரும் வாழ்வதும் பொருளுடைமையால் பிறதேயத்தாராலும் விரும்பத்தக்கதும் நீங்காநோயும் புறத்துநின்று அழிவுசெய்யும்பகையுமின்றியிருப்பதும் சங்கேதவசத்தால்மாறுபட்டுக்கூடும்பலகூட்டமும் - உடன்கூடியிருந்து பாழாகச்செய்யும் உட்பகையும் வேந்தனை அலைக்குங்கொல் விளைக்குறும்பு மில்லாமையுமாகிய இவைநாட்டினியல்பு.

மழைவறப்பினும் வளந்தருவதற்கேதுவான - குரவு-கிணறு-ஏரி-ஆறு என்னும் இந்நான்கு ஆதாரமாகிய அவயவங்களுடையதும், நோயின்மை-செல்வம்விளைதல் - இன்பம் என்னுமிவ்வைந்து அழகினை யுடையதுமாம்.

வாங்கரும்பாதநான்கும்வகுத்தவான்மீகியென்பான் ... ... ✱
தீங்கவிசெவிகளாரத்தேவரும்பருகச்செய்தான் ... ...✱
ஆங்கவன்புகழ்ந்தநாட்டையன்பெனுநறவமாந்தி... .... ✱
மூங்கையான்பேசலுற்றானென்னயான்மொழியலுற்றேன்...✱

(இ-ள்.) வாங்கு அரும்- நீக்குதல் அருமையாகிய—பாதம்நான்கும்-நான்குபாதங்களும்—வகுத்த - சுலோகங்களுக்கேற்படுத்திய—வான்மீகியென்பான்-வான்மீகியென்று சொல்லப்படுகிற முனிவர்—தீம்-மதுரமுள்ள—கவி-கவிகளாகிய அமுதத்தை—தேவரும்-தேவர்களும்—செவிகள்-காதுகளாகியவாய்களில்—ஆர-நிறைய—பருக-உண்ணும்படி—செய்தான்- இயற்றினான்—ஆங்கவன்-அம்முனிவரால்—புகழ்ந்த-புகழப்பட்ட—நாட்டை- கோசலநாட்டை—மூங்கையான-ஊமையானவன்—மொழியல்-சொல்லுதலை—உற்றானென்ன-பொருந்தினான்போல—அன்புஎனும்- ஆசையென்கிற—நறவம்-மதுவை—மாந்தி-உண்டு—யான்-நான்—மொழியல்-சொல்லுதலை—உற்றேன்-பொருந்தினேன்—எ-று. [யான்-எழுவாய். மொழியலுற்றேன் பயனிலை. நாடு-செயப்படுபொருள்.] (க)

தேவரும் என்னும் உம்மை உயர்வுசிறப்பும்மை முற்றுமுணர்ந்த தபோநிதியாகிய வான்மீகரால் புகழப்பட்ட நாட்டின்சிறப்பினைக்கற்றுணராச் சிற்றறிவினேன்புகழ ஆசைகொள்வது ஊமன்பேச ஆசைகொள்வது போலுமாமென்பார். ஊமன் பேசலுற்றானென்றும், அம்முனிவராற் புகழப்பட்டதென்பது தெரிந்துஞ் சொல்லலுற்றது அறியாமையென்பார். அன்பெனுநறவமாந்தியென்றுங்கூறினார். தீங்கவியென்றதனால் அமுதமென்றும், பருகவென்றதனால் செவிவாயென்றும் சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன.

ஆங்கு அசைநிலை. வாங்கு-தல் விகுதிகுன்றிநின்றது.

நானிலத்துள்ளுஞ்சிறந்தது மருதநிலமாதலால் அதன்சிறப்பினை முதற்கட் பதினான்குவிருத்தங்களாற்கூறுகின்றார்.

வரம்பெலாமுத்தந்தத்துமடையெலாம்பணிலமாநீர்க் ... ...*
குரம்பெலாஞ்செம்பொன்மேதிக்குழியெலாங்கழுநீர்க்கொள்ளை
பரம்பெலாம்பவளஞ்சாலிப்பரப்பெலாமன்னம்பாங்கர்க்... *
கரம்பெலாஞ்செந்தேன்சந்தக்காவெலாங்களிவண்டீட்டம் ..*

(இ-ள்.) வரம்பெலாம்- வரம்புகளெங்கும்—முத்தம் - முத்துகளும்—தத்தும்-தடுத்திருக்கும்--மடையெலாம்-மடைகளெங்கும்—பணிலம்- சங்குகளும்—மா-மிகுந்த—நீர்-நீரினது—குரம்பெலாம் - ஓரமெங்கும்—செம்பொன்-மாற்றுயர்ந்தபொன்னும்—மேதி - எருமைகள்படியும்—குழியெலாம்- பள்ளங்களெங்கும்—கழுநீர்க்கொள்ளை - செங்கழுநீர்மிகுதியும்— பரம்பெலாம்-பரம்படித்தவிடமெங்கும்—பவளம்-பவளங்களும்—சாலி-நெற்பயிர்களையுடைய—பரப்பெலாம்-வயல்களெங்கும்—அன்னம் - அன்னப்பட்சிகளும்--பாங்கர்-அவைகளினருகிலிருக்கும்—கரம்பெலாம்-கரம்புநிலமெங்கும்--செந்தேன்-செவ்விதானநறவமும்—சந்தம்- அழகுள்ள—காவெலாம்-சோலையெங்கும்—களி-களிப்புள்ள—வண்டு - வண்டுகளின்—ஈட்டம்- கூட்டமும் இருக்கின்றன—எ-று. (உ)

மேற்கூறப்பட்ட முத்துகள்முதல் வண்டீட்டம் இறுதியாகின்ற பொருள்களெல்லாந் தனித்தனி எழுவாய்-இருக்குமென்பது எச்சப்பயனிலை. எல்லாமென்னுஞ்சொல்பின்னும்பன் முறைவருதலாற்சொற்பின்வருநிலை.

ஆறுபாயரவமள்ளராலைபாயமலையாலைச் ... ...*
சாறுபாயோசைவேலைச்சங்குவாய்பொங்குமோதை ... ... *
ஏறுபாய்தமரநீரிலெருமைபாய்துழனியின்ன ... ... *
மாறுமாறாகித்தம்மின்மயங்குமாமருதவேலி ... ... *

(இ-ள்.) ஆறுபாய்-நதிகள்பாய்கின்ற—அரவம்-ஓசையும்—மள்ளர்-பள்ளர்கள்—ஆலைபாய்-ஆலையாடுகிற—அமலை-ஓசையும்—ஆலை - அவ்வாலையினின்றும்—சாறுபாய்- கருப்பஞ்சாறுபாய்கின்ற—ஓசை - சப்தமும்—வேலை- நீர்க்கரைகளில்—சங்கு-சங்குகளின்—வாய்-வாயினின்றும்—பொங்கும்-அதிரிக்கும்—ஓசை-சப்தமும்—ஏறு- எருதுகள்—பாய்- ஒன்றையொன்று முட்டுகிற—தமரம்- சப்தமும்—நீரின் - சலத்தினிடத்தில்—எருமைபாய்- எருமைகள்விழுகின்ற—துழனி - ஓசையுமாகிய—இன்ன- இவ்வோசைகள்—மாறுமாறாகி - ஒன்றுடனொன்றுமாறுபடுகின்றவைகளாய்—மருதவேலி-மருதநிலத்தில்—மயங்கும் - விளங்கிக்கொண்டிருக்கும்— எ - று. [ஓசைகள்- எழுவாய். மயங்கும்-பயனிலை. ஆம்-அசைமொழி] (௩)

வேலைச்சங்கு என்பதற்குச் சமுத்திரத்திலுண்டாகுஞ் சங்கெனினுமமையும்.

தண்டலைமயில்களாடத்தாமரைவிளக்கந்தாங்கக் ... ... *
கொண்டல்கண்முழவினேங்கக்குவளைகண்விழித்துநோக்கத்...*

தெண்டிரையெழினிகாட்டத்தேம்பிழிமகரயாழின் ... . *
வண்டுகளினிதுபாடமருதம்வீற்றிருக்குமாதோ ... ... *

(இ-ள்.) தண்டலை- சோலையினிடத்தில்—மயில்கள் ஆட - மயில்களானவை கூத்தாடவும்—தாமரை-செந்தாமரை—விளக்கந்தாங்க-மலர்களாகியதீபங்களேந்தவும்—கொண்டல்கள்-மேகங்கள்—முழவின் - மத்தளங்களைப்போல—ஏங்க-ஒலிக்கவும்—குவளைகண் - நீலோற்பலமலர்களாகியகண்கள்—விழித்து- இமைகூட்டாமல்—நோக்க- பார்க்கவும்—தெண்திரை - தெளிவான அலைகளாகிய—எழினி-திரையை—காட்ட - வாவிகள்காட்டவும்—தேம்பிழி-மதுரமுள்ளதேனொழுக்காகிய—மகரயாழின்-மகரவீணையிற்சேர்ந்து—வண்டு- வண்டுகளானவை—இனிது-இனிமையாக— பாட- இசைபாடவும்—மருதம்-மருதநிலமானது—வீற்றிருக்கும்- ஓலக்கமாயிருக்கும்—எ-று. [மருதம்- எழுவாய். வீற்றிருக்கும் - பயனிலை.] (௪)

சோலையாகிய அரங்கினிடத்துத்திரைகாட்டவும்,தீபமேந்தவும்,இசைபாடவும்,முழவுகளொலிக்கவும்,மயில்களாடுகின்றதை மருதநிலமாகிய அரசுபார்த்துக்கொண்டிருக்குமென்க

தாமரைப்படுவவண்டுந்தகைவருந்திருவுந்தண்டார்க் ... ... *
காமுகர்ப்படுவமாதர்கண்களுங்காமனம்பு ... ... *
மாமுகிற்படுவவாரிப்பவளமும்வயங்குமுத்து ... ... *
நாமுதற்படுவமெய்யுநாமநூற்பொருளுமன்றே ... ... *

(இ-ள்) வண்டும்-வண்டுகளும்—தகைவரும்- அழகுபொருந்திய—திருவும்-இலக்குமியும்—தாமரை-தாமரைமலர்களில்—படுவ-படுவன— மாதர்-மடவார்களுடைய—கண்களும்-பார்வைகளும்—காமன்-மன்மதன் ஏவுகின்ற—அம்பும்-பாணங்களும்—தண்- குளிர்ச்சிபொருந்திய—தார்- பூமாலையணிந்திருக்கும்—காமுகர்ப்படுவ- காமுகர்களிடத்துப்படுவன—வாரி-சமுத்திரத்தினிடத்திலுண்டாகும்—பவளமும்-பவளங்களும்—வயங்கும்- விளங்குகின்ற—முத்தும்-முத்துகளும்—மா- பெருமையுள்ள—முகில்-மேகத்தினிடத்தில்—படுவ- படுவன—மெய்யும் - உண்மையும்—நாமம்- பிரசித்தமாகிய—நூற்பொருளும்-சாஸ்திரத்திற்சொல்லப்படுகிறபொருள்களும்—நாமுதல் -அந்நாட்டினுள் இருப்பவர்கள் நாவினிடத்தில்—படுவ-படுவன எ-று. மன்-ஓ-ஈற்றசை. [வண்டுகளும்- இலக்குமியும்- எழுவாய். படுவ-பயனிலை. கண்களும்- அம்பும்- எழுவாய். படுவ-பயனிலை. பவளமும் - முத்தும்- எழுவாய். படுவ- பயனிலை. மெய்யும்-பொருளும்- எழுவாய். படுவ - பயனிலை.] (ரு)

படும் என்னுஞ்சொல் ஈண்டுக்காட்டிய பொருள்களிடத்துள்ளவைகளேயன்றிமற்றஎல்லாப்பொருள்களினிடத்துமில்லையென ஒழித்துக்கூறினமையின்-இது ஒழித்துக்காட்டணி-படுவ என்னுஞ்சொற்களுக்கு-தங்குவன-உள்ளன-தோன்றுவன-இருப்பன எனப்பொருள்கொள்க.

நீரிடையுறங்குஞ்சங்கநிழலிடையுறங்குமேதி .. .. *
தாரிடையுறங்கும்வண்டுதாமரையுறங்குஞ்செய்யா ... ... *
சேரிடையுறங்குமாமைதுறையிடையுறங்குமிப்பி ... ... *
போரிடையுறங்குமன்னம்பொழிலிடையுறங்குந்தோகை ... *

(இ-ள்.) சங்கம்-சங்குகள்—நீர்இடை-நீரினிடத்தில்—உறங்கும்-உறங்குவன—மேதி-எருமைகள்—நிழல் இடை-மரநிழலினிடத்து—உறங்கும்-உறங்குவன—வண்டு-வண்டுகளானவை—தார் இடை-பூமாலையினிடத்தில்—உறங்கும்-உறங்குவன—செய்யாள்-திருமகள்—தாமரை-தாமரைமலரினிடத்து—உறங்கும்-உறங்குவள்—ஆமை-ஆமைகள்—தூர்இடை-தாமரைவேர்களிடத்து—உறங்கும்-உறங்குவன—இப்பி-சிப்பிகள்—துறையிடை-நீர்த்துறையிடத்து—உறங்கும்-உறங்குவன—அன்னம்-அன்னப்பட்சி—போர்இடை-நெற்போர்களிடத்தில்—உறங்கும்-உறங்குவன—தோகை-மயில்களானவை—பொழில்இடை-சோலைகளிடத்தில்—உறங்கும்-உறங்குவன-எ-று. (சு)

இதுவும் ஒழித்துக்காட்டணி-உறங்குமென்பதற்குத் தங்குமெனப்பொருள்கொள்க.

படையுழவெழுந்தபொன்னும்பணிலங்களுயிர்த்தமுத்தும்... *
இடறியபரம்பிற்காந்துமினமணித்தொகையுநெல்லு. ... ... *
[illegible]கரும்பும்வண்டும் ... ... *
கடை[illegible]யர்முகமும்போதுங்கண்மலர்ந்தொளிருமாதோ... ... *

(இ-ள்.)படையுழ-கலப்பைகளுழுதலால்—எழுந்த-மேலெழுந்த—பொன்னும்-சுவர்ணமும்—பணிலங்கள்-சங்குகள்—உயிர்த்த-ஈன்ற—முத்தும்-தரளங்களும்—இடறியபரம்பில்-பரம்படித்தஇடங்களில்—காந்தும்-பிரகாசியாநின்ற—இனமணித்தொகையும்-இனமாகிய மணிக்கூட்டமும்—நெல்லுமிடை-நெற்கள்நெருங்கிய—பசுங்கதிரும்-பசியகதிர்களும்—மீனும்-மச்சங்களும்—மென்தழை-மெல்லியதழைகளுள்ள—கரும்பும்-கரும்புகளும்—வண்டும்-வண்டுகளும்—கடைசியர்-உழத்தியருடைய—முகமும்-வதனங்களும்—போதும்-மலர்களும்—கண்மலர்ந்தொளிரும்-கண்மலர்ந்தொளிரும்—எ-று. மாது-அசை-ஓ ஈற்றசை. பொன்முதல் போதுவரையிலுமாகிய ஒன்பதும்-எழுவாய்.மலர்ந்தொளிரும்-பயனிலை] (எ)

பொன்னும் முத்தும் மணித்தொகையும் கண்மலர்ந்தொளிருமென்றால் அவைதோன்றிய இடங்களிலேயே விளங்கிக்கொண்டிருக்குமென்றும், நெல்லும்-மீனும்-கரும்பும் கண்மலர்ந்தொளிருமென்றால், நெல்-போர்க்களத்திலும், மீன்-விலைக்களத்திலும், கரும்பு-ஆலைக்களத்தும் விளங்குமென்றும், வண்டு-மாதர்கண்போலவிளங்குமென்றும். முகத்தினிடத்து கரவடம்விளங்குமென்றும்,போதினிடத்தில் தேன்விளங்குமென்றும்,மும்மூன்றாகப் பிரித்துப்பொருளுரைத்துக்கொள்க.

அந்நாட்டிலுள்ளார் தங்கள் செல்வ மிகுதியால் படையுழ எழுந்த பொன்முத்து-மணி இவைகளைவிரும்பி யெடுக்காமையினால் தோன்றினவிடத்தே மலருமென்றார். கோவையற்று திர்ந்தன கொள்ளுநீரரின்மையின் என்னுஞ் சிந்தாமணிச்செய்யுளானுமுணர்க.

முதலிற்கூறிய முப்பொருளுக்கும் கண்இடம். இரண்டாவதுகூறிய முப்பொருளுக்கும் கள்-எனப்பதம்பிரிக்குக, களமென்பது- விகாரவகையால்- கள்-என நின்றது. மூன்றாவதுகூறியமுப்பொருளுக்கும்-கண்-விழி-கள்-கரவடம்-கள் - தேன்-எனப்பதம்பிரித்துச் சிலேடையாகக்கொள்க. கள்ளம்-என்பது-கள்-என விகாரமாயிற்று.

தெள்ளிவிளிசிறியாழ்ப்பாணர்தேம்பிழிநறவமாந்தி ... ... *
வள்விசிகருவிபம்பவயின்வயின்விழுங்குபாடல் ... ... *
வெள்ளிவெண்மாடத்தும்பர்வெயில்விரிபசும்பொற்பள்ளி .. *
எள்ளருங்கருங்கட்டோகையின்றுயிலெழுப்புமன்றே ... ... *

(இ-ள்) தெள்விளி-இசைபாடுதற்குரிய—சிறியாழ்ப்பாணர்-சிறியயாழ்ப் பாணர்கள்—தேம்-மதுரமுள்ள—பிழிநறவம்- மதுவை—மாந்தி-உண்டு—வள்விசி- வாரிகட்டிய—கருவி- மத்தளம்வாசையான து—பம்ப - யாழினோ சைக்கு ஒத்தொலிக்கும்படி—வயின்வயின்- இடந்தோறும்—வழங்கு- பாடு கின்ற—பாடல்-இசைப்பாட்டானது—வெள்ளி- வெள்ளியாலாகிய—வெண் மாடத்து- வெண்மைநிறமுள்ளமாடத்து—உம்பர்-மாளிகையின்மேலிடங்க ளிலிருக்கும்—வெயில்விரி- ஒளிபரந்த—பசும்பொன் - பசும்பொன்னாற் செய்யப்பட்ட—பள்ளி- மஞ்சத்திற்சயனித்துக்கொண்டிருக்கும்—எள்ளரும் - இகழவொண்ணாத—கருங்கண்தோகை - கருமணியுள்ள நேத்திரங்களை யுடையமாதர்களை—இன்துயில் - இனியநித்திரையினின்றும்—எழுப்புப- எழுப்பிவிடும்-எ-று. அ ம் று-அசை. ஏ-ஈற்றசை. [பாடல்-எழுவாய் எழுப் புப - பயனிலை. மாதர்களை - செயப்படுபொருள்] (அ)

பாட்டோசையினால் மாதர்கள் நித்திரைநீங்கி எழுந்திருக்கிறார்களென்பது கருத்து. சிறிய என்பதின் ஈற்றிலுள்ள அகரம் பெயரெச்சவீறு-குன்றி சிறியெனநின்றது. பிழிநறவம் ஒரு பொருட்பன்மொழி. கருங்கட்டோகை- உவமைத்தொகை யிடத்துப்பிறந்த அன்மொழித் தொகை. இவைவிரிக்குமிடத்துக்கருங்கண்ணையுடைய மயில்போன்ற சாயலையுடைய மாதரென்றுதல்காண்க.

ஆலைவாய்க்கரும்பின் றேனுமரிதலைப்பாளைத்தேனுஞ் ... ...*
சோலைவாய்க்கனியின்றேனுந்தொடையிழியிறாலின்றேனு....*
மாலைவாயுகுத்ததேனும்வரம்பிகந்தோடிவங்க... ... ... *
வேலைவாய்மடுப்பவுண்டுமீனெலாங்களிக்குமாதோ ... ... *

(இ-ள்,) ஆலைவாய்- ஆலைகளினின்றும் கூனைகளிற்பாய்கின்ற—கரும்பின் தேனும்- கருப்பஞ்சாறும்— அரிதலை - சீவுகின்றதலையையுடைய—பாளைத் தேனும்-பாளைகளிலிருந்துவிழுகின்றமதுவும்—சோலை- பொழில்களில்— வீழ்-வீழ்கின்ற—கனியின்-முப்பழங்களின்—தேனும்-ரசமும்—தொடை ஒழுங்காக—இழி-ஒழுகாநின்ற—இறாலின் தேனும்-இறால்களின் தேனும்— மாலைவாய்-பூமாலைகளினிடத்திருந்து—உகுத்த-சிந்திய—தேனும்-தேனும் —வரம்பஇகந்து-அளவுநீங்கி—ஓடி-சென்று—வங்கம்-கப்பல்கள்செல்லும் படியான—வேலைவாய்-சமுத்திரத்தினிடத்து—மடுப்ப-பொருந்த—உண்டு அவைகளை அருந்தி—மீனெலாம்- மீன்களெல்லாம்—களிக்கும்-களிப்படை யும்-எ-று மாது-அசை. ஓ-ஈற்றசை. [மீன்-எழுவாய். களிக்கும்-பயனிலை]()

முப்பழம்-வாழை பலா-மா-இறால்-தேன்கூடு-எனவறிக.

பண்கள்வாய்மிழற்றுமின்சொற்கடைசியர்பரந்துநீண்ட... ..*
கண்கைகான்முகம்வாயொக்குங்களையலாற்களையிலாமை ... *
உண்கள்வார்கடைவாய்மள்ளர்களைகலாதுலாவிநிற்பார் ... ...*
பெண்கள்பால்வைத்தநேயம்பிழைப்பரோசிறியோர்பெற்றால்*

(இ-ள்.) பண்கள்- இராகங்கள்போல—வாய்மிழற்றும் - வாயினால்வசனிக் கும்—இன்சொல்- இனியசொற்களையுடைய—கடைசியர்-உழத்திகளுடைய —பரந்துநீண்ட-அகன்றுநீண்ட—கண் - நேத்திரங்களையும்—கை- உள்ளங்

கைகளையும்—கால்- பாதங்களையும்—முகம்-முகங்களையும்—வாய்- வாய்களையும்—ஒக்கும் ஒப்பாகிய—களையலால்-களைகளையல்லாமல்—களையிலாமை-புல்முதலியகளைகளில்லாமையினால்—உண்- அருந்துகின்ற—கள்வார் - மதுஒழுகும்படியான—கடைவாய்- கடைவாயினையுடைய—மள்ளர்- பள்ளர்கள்—களைகலாது - களைகளைப்பறிக்காமல்—உலாவிநிற்பார்- உலாவிக்கொண்டிருக்கிறார்கள்—சிறியோர் - அறிவாற்சிறியோராயினவர்—பெற்றால்- பெரியபயனையடைவதாயிருந்தாலும்—பெண்கள்பால் -மாதர்களிடத்தில்—வைத்தநேயம் - தாங்கள் வைத்த ஆசையினின்றும்—பிழைப்பரோ - நீங்குவார்களோ—எ-று. [மள்ளர்-எழுவாய். உலாவிநிற்பார்- பயனிலை.] (௰)

பிழைப்பரோ என்னும் ஒகாரம்-பிழையாரென்னும்பொருள்தந்துநிற்றலின் எதிர்மறைக்கண்வந்தது. சிறியோர் பெற்றால் எனப்பாடமோதி வேறொரு ஊதியம் பெற்றாலும் பிழையாரெனப்பொருளுரைப்பினுமமையும். கண்முதலியனபோன்ற களைகளென்றமையால்நீலோற்பலம்-செந்தாமரை-செவ்வல்லி-இவற்றின்மலர்களைக்கொள்க. பெரியபயனெனஒருசொல்வருவித்துரைக்கப்பட்டது.

புதுப்புனல்குடையுமாதர்பூவொடுநாவிபூத்த... ... ... *
கதுப்புறுவெறியேநாறுங்கருங்கடற்றரங்கமென்றால்... ... *
மதுப்பொதிமழலைச்செவ்வாய்வாட்கடைக்கண்ணின்மைந்தர் . *
விதுப்புறநோக்குமன்னார்மிகுதியையளப்பலாமோ .... *

(இ-ள்) புது-புதிதாகவந்த—புனல்- நீரினிடத்து—குடையும்- ஆடுகின்ற—மாதர்- மடவாருடைய—பூ- மலர்களும்—நாவி - கஸ்தூரியும்—பூத்த-பொருந்திய—கதுப்பு- அளகபாரத்தில—உறு - பொருந்திய—வெறியே-வாசனையே—கருங்கடல்- கருமையாகியசமுத்திர நீர்—நாறும் என்றால்- கமழுமென்றால்—மது-தேன்போல்—பொதி - மதுரம்பொருந்திய—மழலை-மழலைச்சொல்லினையும்—செவ்வாய்- செய்யவாயினையுமுடையவர்களாய்—வாள்-வாளாயுதம்போன்ற—கடைக்கண்ணின்- கடைக்கண்களால்—மைந்தர்-ஆடவர்—விதுப்பு-நடுக்கத்தை—உற-பொருந்த—நோக்கும்- பார்க்கானின்ற—அன்னார்- அந்தமடவார்களுடைய—மிகுதியை- கூட்டத்தை—மொழியல்ஆமோ- அளவிட்டுச்சொல்லுதல் கூடுமோ—எ-று. [சொல்லுதல்-எழுவாய். கூடுமோ-பயனிலை.] (௰க)

பூ ஒடு.- இதிலிருக்கும் ஒடுவென்னு மிடைச்சொல் எண்ணின்கண் வந்தது. பூத்தல்-என்பதற்குச்சரியானபொருள் உண்டாதல் அங்ஙனமிருக்க ஈண்டுப்பொருந்தியவெனப்பொருள்கூறியது. தாற்பரியார்த்தம்-வெறியே இதிலிருக்கும் ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது.

மாதர்கள் ஸ்நானஞ்செய்யும் புனலானது அவர்கள் அளகபாரத்துண்டாயிருக்கும் வாசனையைக்கலந்து சமுத்திரத்தில் பாய்தலினால் அந்தச்சமுத்திரத்தினது புலால்நாற்றம் நீங்கிப்பரிமளித்துக்கொண்டிருக்குமாயின் மாதர்கூட்டமிவ்வளவென்று அளவிட்டுக்கூறுதலரிதென்பது இதன்கருத்து.

வெண்டளக்கலவைச்சேறுங்குங்குமவிரைமென்சாந்தும்... ... *
குண்டலக்கோலமைந்தர்குடைந்தநீர்க்கொள்ளைச்சாற்றிற் ... *
றண்டலைப்பரப்புஞ்சாலிவேலியுந்தழீஇப்பவைப்பும் ... ... *
வண்டலிட்டோடுமண்ணுமதுகரமொய்க்குமாதோ. ... ... *

(இ-ள்) தளம்-அழுத்தமாகிய—வெண்கலவைச்சேறும்- பச்சைக்கருப்பூரஞ்சேர்ந்த சந்தனக்குழம்பும்—குங்குமம்விரை - குங்குமப்பூசேர்த்தவாசனையுள்ள—மென்-மென்மையாகிய—சாந்தும்-சந்தனக்குழம்பும்பூசிக்கொண்டிராநின்ற—குண்டலம்- காதணிபூண்ட—மைந்தர்- ஆடவர்—குடைந்த-ஸ்நானஞ்செய்த—நீர்க்கொள்ளைச்சாற்றில் - மிகுந்த நீர்க்குழம்பினுல்—தண்டலைப்பரப்பும்- சோலையிடங்களிலும்—சாலிவேலியும் - நெற்பயிருள்ள நிலங்களிலும்—தழீஇயவைப்பும்- இவைசார்ந்தகரம்புநிலங்களிலும்—வண்டல் இட்டுஒடும்-அந்நீர்வண்டலிட்டுக்கொண்டு ஓடும்படியான—மண்ணும்-மண்ணினிடத்தும்—மதுகரம்- வண்டுகள்—மொய்க்கும்- மொய்த்துக்கொண்டிருக்கும்-எ-று. மா அ-அசை ஓ-ஈற்றசை. [மதுகரம்-எழுவாய். மொய்க்கும்-பயனிலை] (௰௨)

மைந்தர்குடைந்த கலவைச்சேறும் சாந்துங் கலந்த நீர்க்கொள்ளைச் சாற்றினுல் எனப்பொருள்கூறினு மமையும்.

தழுவிய என்னுங்குறில் விகாரவகையால் தழீஇயவென நீண்டு அளபெடுத்தது.

மண்ணும் இதனிற்றிவிருக்கும் உம்மை இழிவு சிறப்பும்மை. இதனுல் ஆடவர் பூசிக்கொண்டிருந்த மெய்ப்பூச்சினது சிறப்புகூறப்பட்டது.

சேலுண்டவொண்கணாரிற்றிரிகின்ற செங்காலன்ன... ... *
மாலுண்டநளினப்பள்ளிவளர்த்தியமழலைப்பிள்ளை ... ... *
காலுண்டசேற்றுமேதிகன்றுள்ளிக்கனைப்பச்சோர்ந்த ... ...*
பாலுண்டுதுயிலப்பச்சைத்தேரைதாராட்டும்பண்ணை ... ... *

(இ-ள்) சேல்- சேல்மீன்போன்ற—உண்ட- மையுண்ட—ஒண் - விளக்கமாகிய—கணாரில்- கண்களையுடைய மாதர்கள்போல—திரிகின்ற- சஞ்சரிக்கும்—செங்கால்- செம்மைநிறம்பொருந்திய கால்களையுடைய—அன்னம்-அன்னப்பட்சிகள்— மால்உண்ட-பெருமைபொருந்திய—நளினம் - தாமரைமலர்களாகிய—பள்ளி - சேக்கையில்—வளர்த்திய - வளர்த்தியிருக்கும்—மழலைப்பிள்ளை - இளம்பார்ப்புகள்—கால்உண்ட - காலினிடத்துப்பொருந்திய—சேற்றின் - சேற்றினையுடைய—மேதி- எருமைகள்—கன்று - கன்றுகளை—உள்ளி-நினைத்துக்கொண்டு—கனைப்ப - கனைக்க—சோர்ந்த- சொரிந்த—பால்-பாலினை—உண்டு- நீரிற்பிரித்துண்டு—துயில - நித்திரைசெய்யும்படி—பண்ணை- வயல்களினிடத்து—பச்சைத்தேரை - பச்சைத்தவளைகள்—தாராட்டும்- தாலாட்டும்-எ-று. [தேரை-எழுவாய். தாராட்டும்-பயனிலை] (௰௩)

புதுநீர்ப்பெருக்கத்தால் தவளைகள் இரைச்சலிடுவது இயல்பாதலின் எருமைக்குழாங்கன்றுகளைக்கருதிக் கனைப்பதால் சோர்ந்தபாலின் பெருக்கம் நீர்ப்பெருக்கம்போல ஓடுதலால்களித்துத்தாராட்டுமென்றூர்.

அன்னங்களுக்குக் கால்களும் மூக்கும் செம்மைநிறமுள்ளவை- உடல் வெண்மைநிறமுள்ளது- அன்றியுங் காலானது தோலடியாயிருப்பது - மாதர்போல திரியுமென்றது நடையொன்றனைப்பற்றியே-சேறு என்னுங்குற்றுகரவீறு தன்னொற்றிரட்டித்துச்சேற்று எனநின்றது. முல்லைநிலத்துக்குப் பசுவானது உரியதாயிருப்பதுபோல் மருதநிலத்துக்குஎருமையுரியது.

குயிலினம்வதுவைசெய்யக்கொம்பிடைக்குனிக்குமஞ்ஞை ...*
அயில்விழிமகளிராடுமரங்கினுக்கழகுசெய்யப்... ... ... *

பயில்சிறையரசவன்னம்பன்மலர்ப்பள்ளிநின்றுந் ... ...*
துயில்லெழத்தும்பிகாலைச்செவ்வழிமுரல்வசோலை ... ... *

(இ-ள்) சோலை-சோலையினொருபுறத்தில்—குயில்இனம் - குயிற்கூட்டம்—கொம்புஇடை - மரக்கிளைகளினிடத்தில்—வதுவைசெய்ய - மணஞ்செய்யவும்—குனிக்கும்-தோகையைவிரித்துக்கொண்டாடுகின்ற—மஞ்ஞை-மயில்கள்—அயில் வேல்போன்ற—விழி-கண்களையுடைய—மகளிர்-மாதர்கள்—ஆடும்-நடிக்கின்ற—அரங்கினுக்கு-நாடகசாலைக்கு—அழகுசெய்ய-அழகினையுண்டாக்கவும்—பயில்-நெருங்கிய—சிறை-சிறையினையுடைய—அரசஅன்னம்-அரசவன்னங்கள்—பன்மலர்-பலதாமரைமலர்களாகிய—பள்ளிநின்றும்-சேக்கையினின்றும்—துயில்எழ- நித்திரைநீங்கவும்—தும்பி-வண்டுகள்—காலைச்செவ்வழிமுரல்வ-உதயராகத்தைப்பாடுவன-எ-று. [தும்பி - எழுவாய். முரல்வ-பயனிலை. காலைச்செவ்வழி- செயப்படுபொருள். காலை-காலைப்பொழுதில்-செவ்வழிமுரல்வ எனப்பொருள்கூறினுமமையும்.] (௰௪)

அரங்கினுக் கழகுசெய்தலாவது-மயிலாடுவதைநோக்கினபேர் மகளிர் நடிப்பதேஅழகாயிருக்கின்றதென்று சொல்லுவதற் கேதுவாயிருப்பது-மலர்ப்பள்ளிசோலையினிடத்துள்ள தடாகத்துமலரெனக்கொள்க.

பொருந்தியமகளிரோடுவதுவையிற்பொருந்துவாரும் ... ...*
பருந்தொடுநிழல்சென்றன்னவியலிசைப்பயன்றுய்ப்பாரு... *
மருந்தினுமினியகேள்விசெவியுறமாந்துவாரும்... ... ...*
விருந்தினர்முகங்கண்டன்னவிழாவணிவிரும்புவாரும்... ... *

(இ-ள்.) பொருந்தியமகளிரோடு- வதுவையில்- விவாகச்சடங்கில்—பொருந்துவாரும்-பொருந்தியிருப்பவர்களும்—பருந்தொடுநிழல்- பருந்தும் அதனிழலும்—சென்றுஅன்ன - செல்வதுபோன்ற— இயல் - கிரமத்தையுடைய—இசைப்பயன்-இராகமாகியபயனை—துய்ப்பாரும்-உண்பவர்களும்—மருந்தினும்-அமுதத்தைப்பார்க்கிலும்—இனிய- இனிமையுள்ளவைகளாகிய—கேள்வி-நூற்கேள்விகளை—செவியுற - காதாகியவாயினிடத்துப்பொருந்த—மாந்துவாரும்- உண்பவர்களும்—விருந்தினர்-புதியவர்களுடைய—முகங்கண்டு-வதனங்களைநோக்கி—அன்னம்-சோறுமுதலாகிய—விழாஅணி-விழாச்சிறப்பினை— விரும்புவாரும்- இச்சிக்கின்றவர்களும்-எ-று. குளகம்.

சென்றூ அன்ன என்பது விகாரவகையால் சென்று என நின்றது. சிந்தாமணியில்பருந்தும் அதனிழலும் பாட்டும் என்னுஞ்செய்யுளுக்கு நச்சினார்க்கினியார் பருந்து பறக்கின்றவிடத்து முறையே உயர்ந்து தன்னிலத்தின்க ணின்றுயர்ந்து பின்னு மம்முறையே மேன்மேலுயர்கின்றாற்போலப் பாடவேண்டுதலி னஃதுவமையாயிற்று என்றனர்.

கறுப்புறுமனமுங்கண்ணிற்சிவப்புறுசூட்டுங்காட்டி ... ... *
உறுப்புறுபடையிற்குறுக்கியுறுபகையின்றிச்சீறி ... ... *
வெறுப்பிலகளிப்பின்வெம்போர்மதுகையவீரவாழ்க்கை. ...*
மறுப்படவாவிபேணுவாரணம்பொருத்துவாரும்... ... *

(இ-ள்.) கறுப்புறு-வயிரம்பொருந்திய—மனமும்- மனத்தினையும்—கண்ணில்-கண்களைப்போல—சிவப்பு-செம்மைநிறமானது—உறு- பொருந்திய

—சூட்டும் - சூட்டினையும்—காட்டி - தெரிவித்து—உறுப்பு - அவயவமாகியகாலினிடத்து—உறு - பொருந்திய—படையின் - சிறுகத்தியினால்—தாக்கி-ஒன்றினைமற்றொன்றுமோதி—உறு - முன்பொருந்திய—பகையின்றி-பகையில்லாமல்—சீறி-கோபித்து--வெறுப்பு இல் - பொருதற்கண் எக்காலத்தும்வெறுப்பிலவாகி—களிப்பின் - செருக்கினால்—வெம் - வெவ்விதாகிய—போர்-போர்செய்தற்கண்—வெற்றி - வெற்றியையுடையனவாய்—வீரவாழ்க்கை-வீரவாழ்க்கைக்கு—மறுப்பட- ஒருகுற்றம்பொருந்துமானால்—ஆவிபேணு-உயிரைவிரும்பாத--வாரணம்-சேவற்கோழிகளை—பொருத்துவாரும்- போர்செய்யவிடுகின்றவர்களும்-எ-று. (௰௬)

எருமைநாகீன்றசெங்கணேற்றையோடேற்றைசீற்றத் ... *
துருமிவையென்னத்தாக்கியூழுறநெருக்கியொன்றாய் ... ...*
விரியிருளிரண்டுகூறாய்வெகுண்டனவனையநோக்கி... ... ...*
அரியினங்குஞ்சியார்ப்பமஞ்சுறவார்க்கின்றாரும்... ... ...*

(இ-ள்.) எருமை-நாகு—ஈன்ற-முதலீற்றுஎருமைகள்பெற்ற—செங்கண் -செம்மைநிறமுள்ள கண்களையுடைய — ஏற்றொடு ஏறு - கடாக்கள் ஒன்றொடொன்று—உரும்இவைஎன்ன-இரண்டிடிகள் என்று சொல்லும்படி—தாக்கி-முட்டி—ஊழ்உற-முறைமையாகப்பொருந்த—நெருக்கி - தலைகளைநெருக்கி—ஒன்றாய்- எங்கும்ஒன்றாய்—விரியிருள் - பரந்தஇருள்—இரண்டுகூறாய்-இரண்டுவடிவாகி—வெகுண்டுஅன- கோபித்ததையொத்த—அனைய-அத்தன்மையானசண்டைகளை—நோக்கி-பார்த்து—அரியினம்-வண்டினங்கள்---குஞ்சியார்ப்ப - தங்கள் கொண்டையாலையில் ஒலிக்கும்படி—மஞ்சுஉற-மேகமண்டலவரைக்கும்பொருந்தும்படி---ஆர்க்கின்றாரும்-முழங்குகின்றாரும்-எ-று. (௰௭)

வன்மையும் வீரமுமுள்ளவாகலின் எருமை நாகீன்றசெங்கண் ஏறென்றார். ஏறு என்னுஞ்சொல் ஐகாரச்சாரியைபெற்று ஏற்றையெனநின்றது. மஞ்சுஉற-என்பதற்குமேகத்தின் முழக்கத்தோடு பொருந்தவெனினுமமையும்.

முள்ளரைமுளரிவெள்ளிமுளையிறமுத்தும்பொன்னும்... ...*
தள்ளுறமணிகள்சிந்தச்சலஞ்சலம்புலம்பச்சாலிற்...... ......*
றுள்ளிமீன்றுடிப்பவாமைதலைபுடைசுரிப்பத்தூம்பி... ... *
னுள்வராலொளிப்பமள்ளருழுபகடுரப்புவாரும்... ... ...*

(இ-ள்.) முள்அரை-முட்கள்பொருந்திய கொடிகளையுடைய—முளரி-தாமரைகளின்—வெள்ளி-வெண்மைநிறமுள்ள—முளைஇற-முளைகளொடியவும்—முத்தும்பொன்னும்-இவ்விரண்டும்—தள்உற - தள்ளுதலைப்பொருந்தவும்—மணிகள்-மற்றைமணிகள்—சிந்த- எறிபடவும்—சலஞ்சலம்-சலஞ்சலமென்னும்சங்குகள்—புலம்ப- அலறவும்—சாலில் - படைச்சால்களில்—துள்ளிமீன் துடிப்ப- மீன்களானவை துள்ளித்துடிக்கவும்--ஆமை-ஆமைகள்--தலைபுடைசுரிப்ப-தலையையுள்ளேசுரித்துக்கொள்ளவும்—தூம்பில் உள்-மதகுகளுக்குள்—வரால்-வரால்மீன்கள்—ஒளிப்ப - ஒளித்துக்கொள்ளவும்—மள்ளர்-பள்ளர்கள்—உழு-உழுகின்ற—பகடு-கடாக்களை—உரப்புவாரும்- அதட்டுகின்றவர்களும் (ஆயினர்)-எ-று. (௰௮)

சொழுமுகத்தினால் முளையிறுமெனவும் முத்தும்பொன்னுந்தள்ளுறுமெனவும் மணிகள் சிந்துமெனவும் கொண்டு-மற்றவற்றின்செய்கையெல்லாம்அச்சத்தினாலெனவுங்கொள்க.
சலஞ்சலம்-வலம்புரிச்சங்கினுஞ்சிறந்தது.

முந்துமுக்கனியினானாமுதிரையின் முழுத்தநெய்யிற் ... .*
செந்தயிர்க்கண்டங்கண்டமிடையிடைசெறிந்தசோற்றிற் ... *
றந்தமிலிருந்துதாமும்விருந்தொடுந்தமரினோடும்... ... ..*
அந்தணரமுதவுண்டியயில்வுறுமமலைத்தெங்கும் ... ...*

(இ-ள்) முந்து-முதன்மையாகிய—முக்கனியின்- மூன்றுவகைப்பழங்களினாலும்—நானா-பலவிதமான—முதிரையின்-காய்த்தானியங்களினாலும்—முழுத்த (பருப்பை)-முழுத்தவிடுகின்ற—நெய்யில்-நெய்யினாலும்—செந்தயிர்க்கண்டம்-செந்தயிர்க்கட்டியினாலும்—கண்டம்-வெல்லக்கட்டியினாலும்— இடை இடை-இடந்தோறும்—செறிந்த - பொருந்தப்பட்ட—சோற்றின்-அன்னத்தினை—தந்தம்-தங்கள்தங்களுடைய—இல்- வீட்டில்—இருந்து-இருந்துகொண்டு—விருந்தொடும்-புதியவர்களுடனும்— தமரினோடும்- சுற்றத்தாருடனும்—தாமும்-தாங்களும்—அந்தணர்-பிராமணர்கள்—அமரர்-தேவர்களுடைய—உண்டி-உணவாகிய அமிர்தம்போலினிமைத்தாக— அயில்வு-உண்ணுகை—உறும்-பொருந்திய—அமலைத்து- ஓசையையுடையது—எங்கும்-எவ்விடமும்-எ-று. [எவ்விடமும்-எழுவாய். உடையது - பயனிலை. ஓசையை- செயப்படுபொருள்.] (௰௯)

முறையறிந்தவாவைநீக்கிமுனிவுழிமுனிந்துவெஃகு ... .*
மிறையறிந்துயிர்க்குநல்குமிசைகெழுவேந்தன்காக்கப்... ...*
பொறைதவிர்ந்துயிர்க்குந்தெய்வப்பூதலந்தன்னிற் பொன்னி.*
னிறைபரஞ்சொரிந்துவங்கநெடுமுதுகாற்றுநெய்தல் ... ...*

(இ-ள்.) முறை-மனுநீதியினை—அறிந்து- உணர்ந்து—அவாவை - ஆசையை—நீக்கி - தவிர்ந்து—முனிவுழி - கோபிக்குமிடத்தில்—முனிந்து-கோபித்து—வெஃகும்-விரும்பத்தக்க—இறை-வரியை—அறிந்து - இவ்வளவென்றுஅறிந்து—உயிர்க்கு- உயிர்களுக்கு—நல்கும்- கொடுக்கும்படியான—இசை-புகழ்—கெழு-பொருந்திய—வேந்தன்- அரசன்—காக்க-காக்கப்படுவதினால்—பொறை-(பாபமாகிய பாரத்தை—தவிர்ந்துஉயிர்க்கும்- நீங்கியிளைப்பாறுகின்ற—தெய்வம்- தெய்வத்தன்மையுடைய—பூதலந்தன்னில் - பூமியைப்போல்—வங்கம்- கப்பல்கள்—பொன்னின்-பொன்னினால்—நிறை-நிறையப்பட்ட—பரம் - பாரத்தை—நெய்தல்- நெய்தனிலத்தில்—சொரிந்து-சொரிந்துவிட்டு—நெடுமுதுகு-நெடுமையானமுதுகினை — ஆற்றும்-ஆற்றிக்கொள்ளும்-எ-று. [வங்கம்-எழுவாய். ஆற்றும்-பயனிலை. முதுகு-செயப்படுபொருள்.] (௨௰)

தசரதனால் காக்கப்படுகிற நாட்டில் எனப் பொருள்கூறுவாருமுளர்,ஈண்டுஉயிரென்றது குடிகளை,

எறிதருமரியின்சும்மையெடுத்துவானிட்டபோரிற் ... ... *
குறிகளும்போற்றிக்கொள்வார்கொன்றநெற்குவைகள்செய்வார்.
வறியவர்க்குதவிமிக்கவிருந்துணமனையினுய்ப்பா ... ... *
னெறிகளும்புதையப்பண்டிநிறைத்துமண்ணெளியவூர்வார் ... *

(இ-ள்.) எறிதரும்-அரியப்பட்ட—அரியின்சும்மை-நெல்அரிகளாலாகிய சுமைகளை—எடுத்து-எடுத்துக்கொண்டுபோய்—வான்இட்ட-ஆகாயத்தை அளாவும்படி இட்ட—போரில்-போர்களில்—குறிகளும்-அடையாளங்களும்—போற்றிக்கொள்வார்-வைத்துக்கொள்வார்கள்—கொன்ற-(அப்போர்களைச்சரித்துக் கடாக்களால்) மிதிப்பித்த—நெல்-நெற்களை—குவைகள்செய்வார்-அம்பாரஞ்செய்வார்கள்—வறியவர்க்கு உதவி-(அந்தநெற்களை) ஏழைகளுக்குக்கொடுக்குங் கிரமப்படி கொடுத்து—மிக்க-மிகுந்தநெற்களை—விருந்து-விருந்தினர்முதலாயினோர்—உண-உண்பதற்காக—மனையின்-தங்கள் வீடுகளில்—உய்ப்பான்-சேர்க்க—நெறிகளும்-மார்க்கங்களும்—புதைய-புதையும்படி—பண்டி-பண்டிகளில்—நிறைத்து-நிரப்பி—மண்-பூமியானது—நெளிய-முதுகுநெளியும்படி—ஊர்வார்-செலுத்துவார்கள்-எ-று. [அந்நாட்டிலுள்ளோர்-தோன்றா எழுவாய். உய்ப்பான்-பயனிலை. பண்டி-செயப்படுபொருள்.] (௨௪)

கொன்ற-இசையெச்சம்-சுற்றத்தார். பிறரல்லாமையின் விருந்து சிறப்புடைத்தென்பார் விருந்துண என்றார்,

தென்புலத்தார்முதலியனவைந்தனுண் முன்னையவிரண்டுங்கட்புலனாகாதாரை நினைந்து செய்வனவாகலானும் பின்னையவிரண்டும் பிறர்க்கீதலன்மையானும் இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தா யில்லறங்கட்கு முதலாயிற்று என்னும் பரிமேலழகருரையானு முணர்க. விருந்தினராவார்-ஞானவொழுக்கங்களா னுயர்ந்தோரென அறிக.

கதிர்படுவயலினுள்ளகடிகமழ்பொழிலினுள்ள ... ... *
முதிர்பலமரத்தினுள்ளமுதிரைகள்புறவினுள்ள ... ... *
பதிபடுகொடியினுள்ளபடிவளர்குழியினுள்ள ... ... *
மதுவனமலரிற்கொள்ளும்வண்டெனமள்ளர்கொள்வார். ... *

(இ-ள்.) கதிர்படு-கதிர்களையுடைய (நெற்பயிருள்ள)—வயலின்-கழனிகளிடத்து—உள்ள-உள்ளபொருள்களையும்—கடி-வாசனையானது—கமழ்-பரிமளிக்காநின்ற—பொழிலின்-சோலைகளினிடத்தில்—உள்ள-உள்ளனவாகிய—முதிர்-முதிர்ந்த—பல-பலவாகிய—மரத்தின்-விருட்சங்களினிடத்து—உள்ள-உள்ளபொருள்களையும்—முதிரைகள்-காய்த்தானியங்களையும்—புறவின்-முல்லைநிலத்தில்—உள்ள-உள்ளபொருள்களாகிய—பதிபடு-பதிகள்பதிக்கப்பட்ட—கொடியின்-கொடிகளினிடத்து—உள்ள-உள்ளபொருள்களையும்—படிவளர்-பூமியிற்பொருந்திய—குழியின்-குழிகளிடத்து—உள்ள-உள்ளனவாகியபொருள்களையும்—வனம்-வனங்களிலுள்ள—மலரில்-மலர்களினிடத்து—மதுகொள்ளும்-தேனைக்கொள்ளுகிற—வண்டென-வண்டுகள்போல—மள்ளர்-உழவர்கள்—கொள்வார்-காலமறிந்துபெற்றுக்கொள்வார்கள்-எ-று. [உழவர்-எழுவாய். கொள்வார்-பயனிலை. பொருள்கள்-செயப்படுபொருள்.] (௨௫)

கதிர் சினையாகுபெயர் வண்டுகள் மலர்களில்தேனை அந்தந்தக்காலங்களிற் கொள்வது போல மேற்கூறியபொருள்களை மள்ளர்கள் கொள்வார்களெனக்கூறுக. கழனிப்பொருள்நெற்கள் மரப்பொருள் கனிவகை குழிப்பொருள் பூசனிமுதலியவை. பிஞ்சின்மேல் பூ உண்டாயிருக்கும் காரணத்தினால் பூசனியெனப் பெயர்பெற்றது-சனிக்குதல்-உண்டாகுதல்.

[வேறு.]

பருவமங்கையர்பங்கயவாண்முகத் ... ...*
துருவவுண்கணையொண்பெடையாமெனக்... ... *
கருதியன்பொடுகாமுற்றுவைகலு ... ... *
மருதவேலியின்வைகினவண்டரோ... ... ... *

(இ-ள்.) பருவம்-மங்கைப்பருவமுள்ள—மங்கையர்-மாதர்களுடைய—பங்கயம்- தாமரைமலர்போன்ற—வாள்- ஒளியுள்ள—முகத்து- முகத்தினிடத்திலிருக்கும்—உருவம்-நிறமுள்ள—உண்-மைபொருந்திய—கணை- நேத்திரங்களை—ஒண்-அழகுபொருந்திய—பெடையாமென- பெண்வண்டாமென்று—கருதி-நினைத்து—அன்பொடு-அன்புடன்—காமுற்று-காமங்கொண்டு—வைகலும்-நாள்தோறும்—வண்டு-ஆண்வண்டுகள்—மருதவேலியின்-மருதநிலத்தினிடத்தில்—வைகின- வாசமாயிருந்தன-எ-று. அரோ-ஈற்றசை. [வண்டு-எழுவாய் வைகின-பயனிலை] (உக)

பருவங்களேழினும் மங்கைப்பருவஞ் சிறந்ததாதலின் அஃது எடுத்துக் கூறப்பட்டது-கண்ணா-யெனற்பாலது-கணையென நின்றது. காமம் என்பது - விகாரவகையால் காம் என நின்றது.

வேளைவென்றமுகத்தியர்வெம்முலை ... ... *
ஆளைநின்றுமுனிந்திடுமங்கோர்பால் ... ... *
பாளைதந்தமதுப்பருகிப்பரு... ... ...*
வாளைநின்றுமதர்க்குமருங்கெலாம்... ... ...*

(இ-ள்) வேளை- மன்மதனை—வென்ற-செயித்த—முகத்தியர் முகமுள்ள மாதர்களுடைய—வெம்முலை - விரும்பப்படும்தனங்கள்—ஆளை - ஆடவர்களை—நின்று-ஒழியாமல்—முனிந்திடும்- கோபிக்கும்—அங்கொர்பால்-அங்கொருபக்கத்தில்—பாளைதந்த- தென்னம்பாளைகள்சொரிந்த—மது கள்ளை—பருகி-உண்டு—பருவாளை-பெரியவாளைமீன்கள்—மருங்குஎலாம்-ஒருபுறமெங்கும்—மதர்க்கும்-களிப்புற்றிருக்கும்-எ-று [முலை-எழுவாய். முனிந்திடும்-பயனிலை. ஆளை-செயப்படுபொருள். வாளை-எழுவாய். மதர்க்கும்-பயனிலை]

மங்கையர் தங்கள் பார்வையினால் மன்மதனை மோகங்கொள்ளச் செய்கின்றவர்களென்பதுதோன்ற வேளைவென்ற முகத்தியரென்றார்,

ஈண்டுமுலைமுனிதல் மோகத்தையுண்டாக்குதல்- காமுகர் ஐயுணர்வுடையவர்களே யன்றிப் பகுத்துணர்வில்லாதவர்களாதலால் ஆளையென இலேசுபடக்கூறினர்- இச்செய்யுள்கைக்கிளைப்பொருள்படக்கிடந்தது.

ஈரநீர்படிந்திந்நிலத்தேசில... ... ... *
கார்களென்னவருங்கருமேதிகள்... ... ... *
ஊரினின்றகன்றுள்ளிடவுண்முலை ... ... *
தாராகொள்ளத்தழைப்பனசாலியே ... ...*

(இ-ள்) ஈரம்-குளிர்ச்சிபொருந்திய—நீர்-சலத்தில்—படிந்து-விழுந்திருந்து—இந்நிலத்து-இந்தவிடத்தில்—சிலகார்களென்ன-சிலமேகங்கள்வருதல்போல—வரும்-வருகின்ற—கருமேதிகள்-கருமைநிறமுள்ள எருமைகள் ஊரில்-ஊரினிடத்து—நின்ற-இருக்கின்ற—கன்று-கன்றுகளை—உள்ளிட-நினைப்பதினால்—உண்-அவைகளுண்ணத்தக்கமுலைகள்—தாரைகொள்ள-பால்தாரைபொழிதலைப்பொருந்த (அந்தத்தாரைகளால்)—சாலி-சம்பாப்பயிர்கள்—தழைப்பன-தழையாநின்றன-எ-று. ஏ-ஈற்றசை. [சாலி-எழுவாய். தழைப்பன-பயனிலை] (௨௫)

உள்ளிடவென்னும் செய்வனெச்சம் கொள்ளஎன்னும் செய்வனெச்சத்திற்கேதுவாகவும் இவ்வெச்சம் தழைப்பனஎனனும் முற்றிற்கு எதுவாகவும் நின்றமைகாண்க-உள்ளிடஎன்பதனையொருமொழியாகக்கொள்க-நின்ற என்பதுகாலமயக்கு-தாரை மீட்டும் வருவித்துச்சொல்லப்பட்டது.

முட்டிலட்டின்முழங்குறவாக்கிய... ... ... *
நெட்டுலைக்கழுநீர்நெடுநீத்தந்தான்... ... ... *
பட்டமென்கமுகோங்குபடப்பைபோய்... ...*
நட்டசெந்நெலினாறுவளர்க்குமே ... ... *

(இ-ள்) முட்டுஇல்-குறைவுஇல்லாத—அட்டில்-சமையல்வீட்டில்—முழங்கு-ஒலித்தல்—உற-பொருந்த—ஆக்கிய-உண்டாக்கிய—நெட்டுஉலை-நெடியஉலைப்பாண்டங்களை—கழு-கழுவப்படுகிற—நீர்நெடுநீத்தம்-நீராகியநெடியவெள்ளமானது—பட்ட-உண்டாகிய—மென்-மிருதுவாகிய—கமுகு-கமுகமரங்கள்—ஓங்கு-உயர்ந்திருக்கும்—படப்பை-சோலைகளில—போய்-சென்று—நட்ட-நட்டிராநின்ற—செந்நெலின்-சம்பாப்பயிர்களின்—நாறு-நாறுகளை—வளர்க்கும்-வளரச்செய்யும்-எ-று. ஏ-ஈற்றசை. [நீத்தம்-எழுவாய். வளர்க்கும்பயனிலை. நாறு-செயப்படுபொருள்] (௨௬)

அடு-இல், என்னும்பதம் அட்டில் என நின்றது. நெட்டுலை-எ-து-நெடுமை-உலை எனப்பதம்பிரிக்கப்படும். உலை-ஆகுபெயர் உலைப்பாண்டங்களைக்கழுவு நீரானது வளர்க்குமென்க. முழங்குதல் எனற்பாலது முழங்கு என முதனிலைமாத்திரையாய்நின்றது. தான் இடைச்சொல் இது அன்னச்சாலையின் மிகுதிகூறியது,

சூட்டுடைத்துணைத்தூநிறவாரணந்... ... .. *
தாட்டுணைக்குடையுந்தகைசான்மணி... ... ...*
மேட்டிமைப்பனமின்மினியாமெனக்... ... ...*
கூட்டினுய்க்குங்குருவிக்குழாமரோ... ... ... *

(இ-ள்) சூட்டுஉடை-சூட்டினையுடைய—துணை-பெட்டையுடன்கூடிய—தூநிறம்-பரிசுத்தமானநிறத்தையுடைய—வாரணம்-சேவற்கோழிகளின்—தாள்துணை-இரண்டுகால்களினாலும்—குடையும்-சீய்க்கப்படுகிற—தகைசால்-பெருமைமிகுந்த—மணி-மாணிக்கங்கள்—மேடு-மேட்டினிடத்தில்—இமைப்பன-பிரகாசிப்பன—(அம்மணிகளை) மின்மினியாமென-மின்மினிப்பூச்சியாகுமென்றுகருதி—குருவிக்குழாம்-தூக்கணங்குருவிக்கூட்டங்கள்—கூட்டின்-கூட்டினிடத்தில்—உய்க்கும்-கொண்டுபோய்வைத்துக்கொள்

ளும்-எ-று.அரோ-ஈற்றசை. [குருவிக்குழாம்-எழுவாய். உய்க்கும்-பயனிலை. யணி- செயப்படுபொருள்.] (௨௭)

உடைய என்றபாலது உடையெனப் பெயரெச்ச அகரவீறு குறைந்துநின்றது. தூநிறம்-வெள்ளைநிறம். மணியீட்டும் வருவிக்கப்பட்டது.

தோயும்வெண்டயிர்மத்தொலி துள்ளவும்... ... ✻
ஆயவெள்வளைவாய்விட்டரற்றவுந் .. .. ✻
தேயுநுண்ணிடைசென்றுவணங்கவும்.. ... ... ✻
ஆயமங்கையரங்கைவருந்துவார்... ... ... ✻

(இ-ள்.) தோயும்-தோய்ந்த—வெண்-வெண்மைநிறமுள்ள—தயிர்- தயிரினைக்கடையப்படுகிற—மத்து- மத்துகளின்—ஒலி- ஓசையானது—துள்ளவும்-ஒலிக்கவும்—ஆய-அழகுள்ளவையாகிய—வெள்- வெண்மைநிறமுள்ள—வளை-சங்குவளையல்கள்—வாய்விட்டு அரற்றவும்- வாய்திறந்து ஒலிக்கவும்—தேயும்-மெலிந்த—நுண்- நுண்ணிய—இடை- தங்களிடையானது—சென்றுவணங்கவும்-ஒசிந்துவளையவும்—ஆயமங்கையர்-இடையர்மாதர்கள்—அங்கைவருந்துவார்-அழகியகைகள்வருந்துவார்கள்-எ-று. [மங்கையர்-எழுவாய் வருந்துவார்-பயனிலை.] (௨௮)

தோயும்வெண்டயிர் மத்தொடுதுள்ளவும் எனப்பாடங்கூறி- தயிர் -மத்தொடு துள்ளவுமெனப்பொருள்கூறுவாருமுளர்; வாய்திறந்து என்பதனைக் கேட்குநபோலவும் என்னுஞ்சூத்திரவிதியால்கொள்க. இருபுறமும் ஒசிதலினால் இடைசென்று வணங்கவும் என்றார். அங்கை- உள்ளங்கையெனினு மமையும். இது முல்லைநிலவண்மையைக்குறித்தது.

குற்றபாகுகொழிப்பவர்கோணெறி... ... ... ✻
கற்றிலாதகருங்கணுளைச்சியர் .. .. ✻
முற்றிலாரமுகந்துதம்முன்றிலிற்... ... ... ✻
சிற்றில்கோலிச்சிதறியமுத்தமே... ... ...✻

(இ-ள்.) குற்ற-பறித்த—பாகு-பாக்குகளை—கொழிப்பவர்-கொழிப்பவர்களால் கொழிக்கப்படுகின்றவை—கோள்- குற்றமாகிய—நெறி -முறைமையை—கற்றுஇலாத- அறிந்திலாத—கருங்கண் - கருமைநிறமுள்ளகண்களையுடைய—நுளைச்சியர்- நெய்தனிலப்பெண்கள்—முற்றில் -முச்சிலில்—ஆரநிறைய—முகந்து - வாரி—தம்முன்றிலில்- தங்கள்முற்றத்தில்—சிற்றில்கோலி-சிறுவீடுகட்டி—சிதறிய-சிதறிவிடப்பட்ட—முத்தம் - முத்துகளேயாம்-எ-று ஏ-ஈற்றசை. [முத்தம்-எழுவாய். கொழிக்கப்படுவன-பயனிலை.] (௨௯)

கொழிக்கப்படுவன என்னுஞ்சொல் வருவித்துரைக்கப்பட்டது. இல்-முன்- என்பது விதியின்றி முன்றிலெனநின்றது.

சிறுமையில்-மை விகுதிகெட்டுத் தன்னொற்றிரட்டித்துநின்றது. குற்றபாகுக் கொழிப்பவரெனப் பாடமோதி பாக்குக்கு ஒழிப்பவரெனப் பதம்பிரித்துப் பாக்குக்காக மாறுகின்றவர்கள் முத்துகளை மாறுகின்றார்களெனக் கூறுவாருமுளர். முத்து அம்சாரியைபெற்றுநின்றது. இது மருதமும் நெய்தலும் அணித்தென்பது கூறப்பட்டது.

துருவைமென்பிணையீன்றதுளக்கிலா... ... ... ✻
வரிமருப்பினவன்றலையேற்றைவான்... ... ... ✻

உருமிடித்தெனத்தாக்குறுமொல்லொலி .. ..*
வெருவிமால்வரைச்சூன்மழைமின்னுமே... ... *

(இ-ள்.) துருவை- செம்மறியென்னு மொருசாதியாடுகளின் — மென்பிணை-மெல்லியபெண்ணாடுகள்—ஈன்ற- பெற்ற—துளக்கு- அசைவு—இலா- இல்லாத—வரி-வரிகள்பொருந்திய—மருப்பின- கொம்புகளையுடையனவாகிய—வன்-வலிய— தலை-தலைகளுள்ள—ஏறு-ஆட்டுக்கடாக்கள்—வான்-மேகத்தின்—உருமு-இடியானது—இடித்தென- இடித்ததுபோல—தாக்குறும்- ஒன்றைமற்றொன்று இடித்தலால் உண்டாகும்—ஒல்லொலி-ஒல்லென்கிற ஓசைக்கு—வெருவி-பயந்து—மால்-பெரிய--வரை-மலையினிடத்துப்படிந்திருக்கின்ற—சூல்-கருப்பங்கொண்ட—மழை-மேகங்கள்—மின்னும்-மின்னலைச்செய்யாநிற்கும்-எ-று. ஏ-ஈற்றசை [மழை-எழுவாய் மின்னும்-பயனிலை]

துளக்கம் என்பது அம்மீறுகெட்டுத் துளக்கென்றும் இலாத என்பது பெயரெச்சவீறு திரிந்தும்நின்றன, வன்மை என்னும் பண்புச்சொல் மை விகுதிகுன்றி வன் எனநின்றது. ஏறு என்னுமொழி ஐகாரச்சாரியைபெற்று ஏற்றையெனநின்றது.

இடித்தது எனற்பாலது இடித்து என விகாரமாயிற்று. தாக்குறும் என்றதனை தாக்குதலால் உறும் பொருந்தும் எனப் பதம்பிரித்துரைத்துக்கொள்க. தாக்கு முதனிலைத்தொழிற்பெயராய்நின்றது. ஒல் என்பது ஓசைக்குறி-ஒலி-வெருவி-என்பதனை ஒலியால் வெருவியெனக்கூறினுமமையும்.

நீருண்டுவருமேகம் சூல் முதிருகிறவரையில் மலையின்மேற்படிந்திருந்துமுதிர்ந்தபின் வானிலேறிமழைபெய்தலைநோக்கி மால்வரைச்சூன் மழையென்றார். ஒலியினால்மழை வெருவுமென்றதனால் அவ்வொலியினது மிகுதிகூறியதாயிற்று. இது மருதமுங் குறிஞ்சியும் அணித்தெனக் கூறியதுமன்றி அவ்விருநிலத்தின் வண்மையுங் குறிப்பாற்கூறியது.

திணைச்சிலம்புவதீஞ்சொலிளங்கிளி... ... ... *
நணைச்சிலம்புவநாகிளவண்டுபூம்... ... ... *
புனற்சிலம்புவபுள்ளினம்வள்ளியோர்... ... .. *
மனைச்சிலம்புவமங்கலவள்ளையே... ... ... *

(இ-ள்.) திணை-திணைப்புனங்களில்—தீம்-மதுரமான—சொல - சொல்லையுடைய—இளங்கிளி-இளங்கிளிகள்— சிலம்புவ-ஒலிப்பன—நணை-அரும்புகளிடத்து—நாகு இளம்-இளமையாகிய—வண்டு- வண்டுகள்—சிலம்புவ-ஒலிப்பன—பூம்புனல்-மலர்களையுடையநீருள்ள தடாகத்தினிடத்து—புள்ளினம்-அன்னங்கள்முதலிய பறவைக்கூட்டங்கள்— சிலம்புவ - ஒலிப்பன—வள்ளியோர்- வள்ளற்றன்மையையுடையவர்கள்—மனை- வீடுகளினிடத்து—மங்கலம்-நன்மையான—வள்ளை-உலக்கைப்பாட்டுகள்—சிலம்புவ - ஒலிப்பன— எ-று. ஏ-ஈற்றசை. (௬௧)

கிளி வண்டு புள்ளினம் வள்ளை இவைகளைத் தனித்தனி எழுவாயாகக் கொண்டு சிலம்புவ என்பவற்றை ஆங்காங்குப் பயனிலையாக ஒட்டிக்கொள்க.

நாகு இளம் என்பது ஒருபொருட் பன்மொழி உலக்கைப்பாட்டு நெற்குற்றும்போது பாடும்பாடல். (மனையளகுவள்ளைக்குறங்குமவளநாட.) என்பதனானுமறிக.

இக்காலத்து அச்சிட்டவர் புனல் என்பது புனையென்றுனதாகக்கூறிப் புனைச்சிலம்புவ எனமாற்றினர் அது பாடமன்றென்க இன்னுஞ் சில இடங்களில்மாற்றியிருக்கின்றனர் அவைகளை யாங்காங்குக் காட்டுதும்.

கன்றுடைப்பிடிநீக்கிக்களிற்றினம் ... ... *
வன்றொடர்ப்படுக்கும்வனவாரிசூழ் ... ... *
குன்றுடைக்குலமள்ளர்குழூஉக்குரல் ... ... *
இன்றுணைக்களியன்னமிரிக்குமே ... ... *

(இ-ள்) கன்று-கன்றுகளை—உடை-உடைய—பிடி-பெண்யானைகளை—நீக்கி-நீக்கிவிட்டு—களிறுஇனம்-ஆண்யானைக்கூட்டங்களை—வன்-வன்மையுள்ள—தொடர்-சங்கிலிகளால்—படுக்கும்-கட்டுகின்ற—வனம்-காடுகளிலோடுகின்ற—வாரி-வெள்ளமானது—சூழ்-சூழ்ந்த—குன்று-மலைகளை—உடை-ஆகியாக்வுடைய—குலம்-நற்குலத்திற்பிறந்த—மள்ளர்குழூஉ-குறவர்கூட்டத்தின்—குரல்-குரலோசையானது—இன்-இனிய—துணை-பெட்டைக்குடன் களி-களித்துக்கொண்டிருக்கும்—அன்னம்-அன்னப்பட்சிகளை—இரிக்கும்-பிரித்துவிடும்-எ-று. ஏ ஈற்றசை [குரல்-எழுவாய். இரிக்கும்-பயனிலை. அன்னம்-செயப்படுபொருள்.] (௩௨)

உடை என்னுமிரண்டும் பெயரெச்ச அகரவீறுகெட்டுநின்றன. இன்-என்பது-இனிமை என்பதின் விகாரமாகவும், அல்லது-இன்பு-என்பதின் விகாரமாகவும் சொல்வோர்கருத்தின்படி அமையும்- துணையாக இருப்பதனைத் துணை என்றார்.

வள்ளிகொள்பவர்கொள்வனமாமணி ... ... *
துள்ளிகொள்வனதூங்கியமாங்கனி ... ... *
புள்ளிகொள்வனபொன்விரிபுன்னைகள் ... ... *
பள்ளிகொள்வனபங்கயத்தன்னமே ... ... *

(இ-ள்.) வள்ளிகொள்பவர்-கிழங்குகள்கொள்ளப்படுகின்றவர்களால்—மாமணி-மாணிக்கங்கள்—கொள்வன-கொள்ளப்படுவன—பொன்-பொன்போல—விரி-மலர்த்த—புன்னைகள்-புன்னைமலர்கள்—புள்ளி-புள்ளிகளை—கொள்வன - இடையிற்கொண்டிருப்பன—தூங்கிய- தொங்குகின்ற—மாங்கனி-மாம்பழங்கள்—துள்ளி-ரசத்துளிகளை—கொள்வன-கொண்டிருப்பன—அன்னம்- அன்னப்பட்சிகள்—பங்கயத்து- தாமரைமலர்களில்—பள்ளிகொள்வன் -சயனித்துக்கொண்டிருப்பன-எ-று. [மாமணி-எழுவாய்.கொள்ளப்படுவன -பயனிலை இவ்வாறு மற்றவைகளை ஆங்காங்கு எழுவாயும் பயனிலையுமாகக் கூட்டியுரைத்துக்கொள்க.] (௩௩)

வள்ளி ஒருவிதக்கொடி இது ஆகுபெயராய்த் தன்சினையாகிய கிழங்குகளைக்காட்டிநின்றது. துள்ளி-விரித்தல் விகாரம் மா-கனி-இவற்றினிடையில் மெல்லெழுத்துமிக்கது-புன்னை-பங்கயம்-இவை ஆகுபெயர்.

கொன்றைவேய்ங்குழற்கோவலர்முன்றிலிற் ... *
கன்றறக்குங்குரவைக்கடைசியர் ... ... *
புன்றலைப்புணங்காப்புடைபோதரச் ... ... *
சென்றிசைக்குநுளைச்சியர்செவ்வழி ... ... *

(இ-ள்.) கடைசியர்- உழத்திகள்பாடும்—குரவை- குரவைப்பாட்டுகள்—கொன்றை-கொன்றைமரங்களையும்—வேய்ங்குழல்-வேய்ங்குழலையுமுடைய

கோவலர்-இடையர்களுடைய—முன்றிலில்-முற்றத்திலிருக்கும்—கன்று-பசுவின்கன்றுகளை—உறக்கும்-நித்திரைசெய்விக்கும்—நுளைச்சியர் - நெய்தனிலமாதர்கள்பாடும்—செவ்வழி-செவ்வழியென்னுமிராகம்—புன்றலைப்புனம்-சிறியகதிர்களையுடைய தினைப்புனங்களி லிருக்கும்—காப்பு- காவலான து—உடைபோதர- நீங்கிப்போம்படி—சென்றுஇசைக்கும்- போயொலிக்கும்—எ-று [குரவை-எழுவாய் உறக்கும்-பயனிலை. கன்று-செயப்படுபொருள். செவ்வழி-எழுவாய். இசைக்கும்-பயனிலை] (௩௪)

கொன்றை ஆகுபெயுராய் நிலத்தைக்காட்டிற்று. கொன்றைமரங்களையுடையகோவலரெனினும் அவ்வாறே பொருட்படும்.

சேம்புகால்பொரச்செங்கழுநீர்க்குளத் ... ... *
தூம்புகாலச்சுரிவளைமேய்வன ... ... *
காம்புகால்பொரக்கண்ணகன்மால்வரைப்... ... *
பாம்புநான்றெனப்பாய்பசுந்தேறலே... ... *

(இ-ள்.) காம்பு-மூங்கில்கள்—கால்-காற்றினால்—பொர - மோதுதலினால்—கண் அகன்-இடமகன்ற—மால்-பெரிய—வரை-மலைகளிலிருக்கும்—(இருல்கிழிந்து) பாம்பு- பாம்பானது—நான்றுஎன-தொங்குவதுபோல—பாய்-பாய்கின்ற—பசுந்தேறல்-பசியதேனை—செங்கழுநீர் - செங்கழுநீர்மலர்களுள்ள—குளம்-ஏரிகளின்—தூம்பு-மதகுகள்—கால-கக்குவதினால்—சுரிவளை-சுரிசங்கங்கள்—சேம்புகால்- சேப்பமட்டைகள்—பொர-தம்மேல்மோதும்படி—மெய்வன-சென்றுஉண்பன-எ-று. ஏ-ஈற்றசை. வளை-எழுவாய். மேய்வன-பயனிலை. தேன்செயப்படுபொருள்.] (௩௫)

நான்றது எனற்பாலது ஈறுகேட்டு நான்று என நின்றது.நாலல்முதனிலை.

பெருந்தடங்கட்பிறைநுதலார்க்கெலாம் ... ... *
பொருந்துசெல்வமுங்கல்வியும்பூத்தலால் ......*
வருந்திவந்தவர்க்கீதலும்வைகலும் ... ...*
விருந்துமன்றிவிளைவனயாவையே ... ...*

(இ-ள்.) பெருந்தடம்-விசாலமான—கண் - நேத்திரங்களையும்—பிறை-இளந்திங்கள்போலவளைவாகிய—நுதலார்க்குஎலாம்- நெற்றியினையுமுடையமங்கையர்களெல்லாருக்கும்—பொருந்து-நிலையாகிய—செல்வமும்-ஐசுவரியமும்—கல்வியும்-கல்வியுணர்ச்சியும்—பூத்தலால் - உண்டாயிருப்பதினால்—வருந்தி-வறுமையினால்வருத்தமுற்று—வந்தவர்க்கு - தம்மிடத்தில்வந்தவர்களுக்கு—ஈதலும்-பொருள்கொடுத்தலும்—வைகலும்-நாள்தோறும்—விருந்தும்-விருந்தினராகவந்துஉண்பவர்களுக்கூட்டுதலாலுண்டாகும் பயனும்—அன்றி-அல்லது—விளைவன- விளைகின்றவை—யாவையே-எவையோ-எ-று. [விளைவன-எழுவாய். யாவை-பயனிலை.] (௩௬)

ஓகாரம்-எதிர்மறை இது இல்லையென இன்மையைக் காட்டிநின்றது. பெருந்தடம்ஒருபொருட்பன்மொழி. இது அந்நாட்டு மாதர்களுடையநன்னடத்தையைக்காட்டுகின்றது.

பிறைமுகத்தலைப்பெட்பினிரும்புபோழ் ... ... *
குறைதறிகதிர்குப்பைப்பருப்பொடு...... ... *
நிறைவெண்முத்தநிறத்தரிசிக்குவை .. .. *
உறைவகோட்டினவூட்டிடந்தோறெலாம் ... ... *

(இ-ள் பெட்பின் விருப்பத்துடன் — பிறைமுகம் - பிறைமுகம்போன்ற — தலை தலையினையுடைய — இரும்பு - அரிவாட்மணையில் — போழ் பிளக்கப்பட்ட — குறை - துண்டங்களாயிராநின்ற — கதிர்த்திரள் - கதிர்க்கூட்டங்களோடும் — குப்பை பருப்பு - பருப்புக்குவைகளோடும் — வெள் - வெண்மையாகிய — முத்தின் நிறத்து - முத்தின் நிறத்தினையுடையதாய் — நிறை - நிறைந்த — அரிசிக்குவை அரிசிக்குப்பைகளும் — ஊட்டு இடந்தோறு எலாம் - அன்னச்சாலையினிடங்களெங்கும் — கோட்டின - நிறைந்தவைகளாய் — உறைவ - பொருந்தியிருப்பன - எ-று. [கதிர்த்திரள்-பருப்பு-அரிசி-இம்மூன்றும்-எழுவாய். உறைவ-பயனிலை] கஎ)

ஊட்டு-உண்பிக்கும் இடந்தோறுமெனப் பதம்பிரித்துக்கொள்க. இப்பண்டங்கள்மாறாமலிருக்குமென்பதுகருத்து.

கலஞ்சுரக்குநிதியங்கணக்கிலா .. .. *
நிலஞ்சுரக்குநிறைவளநன்மணி ... ... *
பிலஞ்சுரக்கும்பெறுதற்கரியதங் ... ... *
குலஞ்சுரக்குமொழுக்கங்குடிக்கெலாம் ... . *

(இ-ள்.) குடிக்கு எலாம் - அந்நாட்டிலிருக்கும் குடிகளுக்கெல்லாம் — கலம் - கப்பல்களினிடமாக — கணக்கு - அளவு — இலா நிதியம் - இல்லாதபொருள்கள் — சுரக்கும் - உண்டாகும் — நிலம் - நிலங்களினிடமாக — நிறைவளம் - நிறைந்தவளப்பங்கள் — சுரக்கும் - உண்டாகும் — பிலம் - குழிகளினிடமாக — நன்மணி - நல்லமணிகள் — சுரக்கும் - உண்டாகும் — பெறுதற்கு - பெறுதற்கு — அரிய - அரியதாகிய — தம் குலம் - அவர்கள் குலத்தினிடமாக — ஒழுக்கம் - ஒழுக்கமானது — சுரக்கும் - உண்டாகும் - எ-று. [நிதி-வளம்-மணி-ஒழுக்கம்-இவை எழுவாய். சுரக்கும் என்பன பயனிலை.] கஅ)

கலம் - நிதியங்களைக் கொடுக்கும், நிலம் நிறைவளத்தைக் கொடுக்கும், பிலம் - மணிகளைக் கொடுக்கும், குலம் - ஒழுக்கத்தைக் கொடுக்கும் - என வுரைப்பினுமமையும். இவ்வாறுரைக்குங்கால் கலம் நிலம் பிலம் குலம் என்பவை எழுவாய். சுரக்குமென்பவைபயனிலை. நிதியமுதலியவை செயப்படுபொருள். நிதியம் என்பதிலிருக்கும் அம்சாரியை. ஒழுக்கமாவது ஆசாரம். குலந்தனவேயாகுங்குணம் என்பதனையுமறிக. கணக்கிலா என்பதனை ஆண்டாணுங்கூட்டிக்கொள்க. கணக்கிலாத என்னும்பெயரெச்சவீறு குன்றிநின்றது.

கூற்றமில்லையோர்குற்றமில்லாமையாற் .. ... *
சீற்றமில்லைதஞ்சிந்தையிற்செய்கையா ... ... *
லாற்றனல்லறமல்லதிலாமையா ... ... *
லேற்றமல்லதிழிதகவில்லையே ... ... *

(இ-ள்) ஓர்குற்றமில்லாமையால் - குற்றமென்பதுசிறிது மில்லாமையினால் — கூற்றம் இல்லை - யமன் அங்குவருவதில்லை — தம் - அவர்களுடைய — சிந்தை

யின்-மனதின்—செய்கையால்-நற்செய்கையால்—சீற்றம்- கோபமானது—இல்லை சிறிதுமில்லை—ஆற்றல்- பலம்பொருந்திய—நல் அறம் அல்லது இல்லாமையால-நல்ல அறமல்லாததாகிய பாவமானது இல்லாமையால்—எற்றம் அல்லது-மேன்மையுண்டாயிருப்பதேயன்றி—இழி- இழிவான—தகவு இல்லை-தகுதியில்லை-என்று ஏ-ஈற்றசை. [கூற்றம்-எழுவாய் இல்லை- பயனிலை சீற்றம்-எழுவாய இல்லை-பயனிலை. இழிதகவு-எழுவாய். இல்லை-பயனிலை.] (௫௧)

கூற்றமில்லை என்றதனால் அந்நாட்டிலுள்ளார் யாவரும் பரமபதம் அடைவார்களென்றுவிற்று கூற்றம்வருதற்கேதுவான குற்றம்-காமக் குரோத மோக மத மாச்சரிய அசூயை டம்பமுதலியன்களும் கொலை களவுகள் பொய் சூது வஞ்சனை பொறாமை புறங்கூறல் பிறர்மனைநயத்தல் முதலியவுமாம். இல் என்பது ஐச்சாரியைபெற்று இல்லை என நின்றது. குற்றமுதலியனவின்றி நாடுயர்வுடையதாகச் சொல்லுதலால் இது இன்மை நவிற்சியணி இதனை வடநூலார் விரோக்தி அலங்காரமென்பர்.

நெறிகடந்துபரந்தனநீர்த்தமே ... ... *
குறியழிந்தன குங்குமத்தோள்களே ... ... *
சிறியமங்கையர்தேயுமருங்குலே ... ... *
வெறியவும்மவர்மென்மலர்க்கூந்தலே ... ... *

(இ-ள்) நெறிகடந்து- நெறியைக்கடந்து—பரந்தன- பரந்தவை—நீத்தமே- வெள்ளங்களே—குறியழிந்தன-குறியழிந்தவை—குங்குமம்- குங்குமப்பூக்குழம்பணிந்த—புயங்களே-தோள்களே—சிறிய- சிறியவைகளாயிருப்பவை—மங்கையர்-மாதர்களுடைய—தேயும்-மெலிந்த—மருங்குலே- இடைகளே—வெறியவும்- வெறியுள்ளவைகளும்—அவர் - அம்மாதர்களுடைய—மென் மலர்-மென்மைத்தன்மையுள்ளபூமாலையணிந்த—கூந்தலே-அளகபாரங்களே என்று [பரந்தவை-எழுவாய் நீத்தம்-பயனிலை. அழிந்தவை-எழுவாய் தோள்கள்- பயனிலை சிறியவை- எழுவாய். மருங்குல்கள்- பயனிலை. வெறியவை-எழுவாய். கூந்தல்-பயனிலை] (௫௨)

இங்ஙனமன்றி நீத்தம் பரந்தனவெனவும், தோள்கள் குறியழிந்தனவெனவும், மருங்குல் சிறியனவென்றும். கூந்தல் வெறியனவென்றும், பொருளுரைக்கின் நீத்தம் முதலியநான்கையுமெழுவாயாக்கிப்பரந்தன்முதலியதெரிநிலைவினைமுற்றுநான்கையும்பயனிலையாகக்கொள்க ஏகாரங்கள் தேற்றத்தின்கண் வந்தன.

வெறியவும் என்பதிலிருக்கும் உம்மை எச்சவும்மை, இதின் முக்கியதாற்பரியம் வெள்ளம்நெறிகடந்து பரவுவதேயன்றி அந்நாட்டிலுள்ளார் நெறிகடந்து நடப்பதில்லை யென்பதும்தோள்குறியழிவதேயன்றி மற்றைப்பொருளில்வைக்குங்குறி யழிவதில்லையென்பதும், இடைசிறியதன்றி வேறே சிறுமையில்லை யென்பதும், வெறிகொண்டிருப்பது கூந்தலேயன்றி அந்நாட்டிலுள்ளார் வெறிகொள்ளுவதில்லையென்பதுமாம். இது ஒன்றையொழித்து மற்றொன்றனைக்காட்டினமையால் ஒழித்துக்காட்டணியெனக்கொள்க. இதற்கு வடநூலார் பரிசங்கியாலங்காரமென்பர். வெறியென்பது செம்மொழிச் சிலேடையாகப் பொருள்படுதல் காண்க. வெறி - என்பது - வாசனை. கள்வெறி - ஈண்டுக் கூந்தலுக்கு வாசனையாம். பரக்கின்றவை- அழிகின்றவை-என நிகழ்காலத்தாற் கூறப்படுவனவற்றை யிறந்தகாலத்தாற்கூறினமை காலவழுவமைதியெனக்கொள்க.

அகிலிடும்புகையட்டிலிடும்புகை .. .. *
முகிலினூலநறும்புகைநான்மறை ... ... *

புகலும்வேள்வியிற்பூம்புகையோடளாய் ... *
முகிலின்விம்மிமுழங்கினவெங்கணும் ... ... *

(இ-ள்) அகிலிடும்-அகிற்கட்டையாலுண்டாகும்—புகை-புகையும்—அட்டிலிடும்-சமையல்வீட்டிலுண்டாகும்—புகை-புகையும்—நகலின்-பிரகாசித்தலுடன்—ஆலை-கருப்பஞ்சாறு காய்ச்சுமிடத்தில் உண்டாகும்—நறும்புகை-வாசனையுள்ளபுகையும்—நான்மறை நான்கு வேதங்களால்—புகலும்-சொல்லப்படுகின்ற—வேள்வியில் ஓமகுண்டத்திலுண்டாகும்—பூ-பொலிவாகிய—புகையோடு-புகையுடன்—அளாய் கலந்து—முகிலின்-மேகம்போல—விம்மி-அதிகரித்து—எங்கணும்-எவ்விடத்தும்—முழங்கின-ஒலிக்கப்பட்டன-எ-று. [புகைகள்-எழுவாய் முழங்கின-பயனிலை] (௬௧)

அகிலிடும்புகை அகிற்கட்டைகளைத்தீயிலிடுதலாலுண்டாகும்புகையெனினும் அட்டிலிடும்புகை-சோறாக்குமிடத்தில் விறகுகளிடுதலாலுண்டாகும் புகையெனினும்அமையும். அகிலிடும்புகை-மாதர்கள்கூந்தலுலர்த்தவிடும்புகை. ஆலை-ஆகுபெயர். ஒலிக்கப்படுதல்-கண்டோர் புகையின் மிகுதியைப்பெயரெடுத்துக் கூறுதலாலுண்டாகுமொலியென்க. பூ—புகை - என்பதில் மெல்லொற்றுத்தோன்றிற்று.

(வேறு)

இயல்புடைபெயர்வனமயின்மணிபிறழ்பின் ... *
வெயில்புடைபெயர்வனமுலைபவர்குழல்போற் ...*
புயல்புடைபெயர்வனபொழிலவர்விழிபோற் ... *
கயல்புடைபெயர்வனகடிகமழ்கழனி ... ... *

(இ-ள்.) முலைபவர்-தனங்களையுடையமாதர்களின்—இயல்-சாயலைப்போல—மயில்-மயில்கள்—பொழிற்புடை-சோலையினிடத்து—பெயர்வன-சஞ்சரிப்பன—மணிபிறழ்பின்-அவர்களணிந்திருக்கும் ரத்தினாபரணங்களின்ஒளிபோல—வெயில்-வெயிலானது—புடைபெயர்வன-அப்பொழிலினிடத்துவிளங்குவன—குழல்போல்-அவர்கள் அளகம்போல—புயல்-மேகங்கள்—புடை-அச்சோலையினிடத்து—பெயர்வன-தவழ்வன—அவர்-அவர்களுடைய—விழிபோல்-கண்கள்போல—கடிகமழ்-வாசனைபரிமளிக்கும்—கழனிப்புடை-வயல்களினிடத்து—கயல்-சேல்மீன்கள்—பெயர்வன-சஞ்சரிப்பன-எ-று. [மயில் முதலிய எழுவாய். பெயர்வன-பயனிலை] (௬௨)

இடையிறமகளிர்களெறிபுனன்மறுகக் ... ... *
குடைபவர்துவரிதழலர்வனகுமுதம் ... ... *
மடைபெயரனமெனமடநடையளகக் ... ...*
கடைசிபர்முகமெனமலர்வனகமலம். ... ... *

(இ-ள் இடை-இடையானது—இற-ஒடியவும்—எறி அலையைவீசுகின்ற—புனல்-நீரானது—மறுக-கலங்கவும்—குடைபவர்-முழுகுகின்றவர்களாகிய—மகளிர்கள்-மாதர்களுடைய—துவர்-சிவப்புநிறமுள்ள—இதழ்-[illegible] புடையவாய்கள்போல—குமுதம்-செவ்வல்லிமலர்கள்—அலர்வன-மல[illegible] கின்றன—மடைபெயர்-மடைகளில்சஞ்சரிக்காநின்ற—அனமென-அ[illegible]

[illegible]

டைபோன்ற—மடநடை-மடநடையும்—அளகம்-அளகபாரமுமுடைய—கடைசியர் உழத்தியர்களுடைய—முகமென-முகம்போல—கமலம்-செந்தாமரைமலர்கள்—அலர்வன-மலருகின்றன எ-று [குமுதம்-எழுவாய். அலர்வன-பயனிலை. கமலம்-எழுவாய். அலர்வன-பயனிலை] (௪௩)

இதழ்-ஆகுபெயர். மடநடை-மிருதுவானநடை. குமுதம்-வாய்போ லலர்வதென்றும், தாமரை-முகம்போ லலர்வதென்றுங் கூறினமையின் இதுவும் இதுபோலவருஞ் செய்யுட்களும், பிரதீபாலங்காரம்.

விதியினை நகுவனவயில்விழி பிடியின் ... ... *
கதியினை நகுவனவவர் நடைகமலப் ... ... *
பொதியினை நகுவனபுணர்முலைகலைவாழ் .. .. *
மதியினை நகுவனவனிதையர்வதனம் .. .. *

(இ-ள்.) வனிதையர்-அந்நாட்டிலுள்ள மாதர்களுடைய—அயில்-வேல்போன்ற—விழி-கண்கள்—விதியினை-முனிவர்கள் செய்யுநியதிகளை—நகுவன-பழிப்பன—அவர்நடை-அவர்கள் நடைகள்—பிடியின்-பெண்யானைகளினுடைய—கதியினை நடையினை—நகுவன-பழிப்பன—புணர்முலை-தம்முளொத்த அவர்களுடைய தனங்கள்—கமலம்-செந்தாமரையின—பொதியினை-அரும்புகளை—நகுவன-பழிப்பன—வதனம்-அவர்களுடைய முகங்கள்—கலைவாழ்-கலைகள்நிறைந்த—மதியினை-சந்திரனை—நகுவன-பழிப்பன—எ-று [விழி நடை-முலை-வதனம் இவைகள் எழுவாய். நகுவன-என்பவைகள் பயனிலை] (௪௪)

விதி-கதி-பொதி-மதி-இவற்றை முறையே செயப்படுபொருளாகக்கொள்க.

விதியினை நகுதல் முனிவர்கள் தங்கள் நியமங்களினின்று மாறுபடமயக்குதல். விதியினை நகுவன என்பதற்கு பிரமனை நகுமெனப் பொருளுரைப்பின் சிறந்ததன்மைகாண்க. புணர்முலையென்பதனை-நெருங்கிய முலையெனினுமமையும்.

பகலினொடிகலுவபடர்மணிமடவார் ... ... *
நகிலினொடிகலுவநளிர்வளரிளநீர் ... ... *
துகிலினொடிகலுவசுதைபுரைநுரைகள் ... ... *
முகிலினொடிகலுவகடிமணமுரசம் ... ... *

(இ-ள்.) மடவார்-அந்நாட்டு மாதர்களுடைய ஆபரணங்களின்—படர்மணி-பரந்தமணிகள்—பகலினொடு-பகலுடன்—இகலுவ-பகைப்பன—நகில்-அவர்களுடைய தனங்கள்—நளிர்வளர்-குளிர்ச்சிபொருந்திய—இளநீரொடு-இளநீர்களுடன்—இகலுவ-பகைப்பன—துகில்-அவர்களுடையவஸ்திரங்கள்—சுதைபுரை-அமுதம்போற்றூய்மையுள்ள—நுரையினொடு-நுரைகளுடனே—இகலுவ-பகைப்பன—கடி-விளக்கம்பொருந்திய—மணமுரசம்-கலியாணம்பேரிகைகள்—கார்-கருமைநிறமுள்ள—முகிலினொடு-மேகங்களுடனே—இகலுவ-பகைப்பன-எ-று. (௪௫)

படர்மணி-நகில்-துகில்-முரசம்-இவைகளைத்தனித்தனி எழுவாயாகக்கொண்டு இகலுவ என்பவைகளை ஆங்காங்குப் பயனிலை ஆக்குக. இளநீரோடு நகிலிகலுவ என்றும், நுரையோடு துகிலிகலுவவென்று மொழிமாற்றுக.

காரொடுநிகர்வனகடிபொழிற்கழனிப் ... ... *
போரொடுநிகர்வனபுணர்முலையணைகுநர் .. ... *
நீரொடுநிகர்வனநிறைகடனிதிசால .. .. *
ஊரொடுநிகர்வனவிமையவருலகம்... ... ... *

(இ-ள்) கார்-மேகங்கள் — கடிபொழிலொடு- வாசனைபொருந்திய சோலை களை — நிகர்வன- ஒப்பாவன — கழனி- வயல்களிற்பொருந்தின — போர் - நெற் போர்கள் — புணர்- பொருந்திய — முலையொடு- மாதர்களுடைய தனங்களை — நிகர்வன- ஒப்பாவன — அணைகுநர்- கணவர்களால் சூழப்பட்ட — நீரொடு நீரினை — நிறைகடல்- நிறைந்தசமுத்திரங்கள் — நிகர்வன- ஒப்பாவன — இமையவர் உலகம்- தேவர்களுடையவுலகங்கள் — நிதிசால் நிதிமிகுந்த — ஊரொடு- அந் நாட்டிலிருக்கிற ஊர்களை — நிகர்வன- ஒப்பாவன எ-று. (௪௧)

எழுவாய்ப்பயனிலைகளை முன்னு மாத்தாக் கொள்க. ஒடு-வேற்றுமைமயக்கம் ஈண்டும் மொழிமாற்றி யுரைக்கக் கிடந்தமைகாண்க.

நென்மலையல்லனநிரைவருதரளம்... ... ... *
சொன்மலையல்லனதொடுகடலமிர்தம்... ... ...*
நன்மலையல்லனநதிதருநிதியம் .. ..*
பொன்மலையல்லனமணிபடுபுளினம் ... ... *

(இ-ள்) நிரைவரு-நிறைந்த — தரளமல்லன- முத்துக்குவைகளல்லன — நென் மலை நெற்போர்களாம் — தொடு- வெட்டப்பட்ட — கடல- பாற்கடலிலுண்டாகி ய — அமுதமல்லன அமுதங்களல்லன — சொன்மலை உழத்தியர் சொன்மிகுதி யேயாம் — நன்மலையல்லன நல்லமலைகளல்ல — நதிதரு- நதிகளாற்றரப்பட்ட — நிதியம்- திரவியமலைகளேயாம் — பொன்மலையல்லன- பொற்குவைகளல்ல — மணிபடு- மணிகள் பொருந்திய — புளினம்- மணற்குன்றுகளேயாம்-எ-று.

நென்மலை- சொன்மலை- நிதியம்- புளினம்- இவைகள் எழுவாய்; ஆம் என்று ஒருசொல் ஆக்கம்வருவித்துப் பயனிலையாகக்கொள்க. இதன்தாற்பரியம்- முதலிற்காணப்படும்போது முத்துக்குவைபோல ஐயமுண்டாகிப் பின்பு நெல்லெனவே நிச்சயிக்கப்படுதல். மற்றவைகளுக்குமிவ்வாறுகண்டுகொள்க.

இதனைக் கரும்பல்லநெல்லென்னக் கமுகல்ல கரும்பென்ன என்னும்பெரியபுராணச்செய்யுளாலுங் கண்டுகொள்க. — நென்மலையல்லன நெற்போர்களில்லாத விடங்களில் திரைவருதரளம்-நிறைந்தமுத்துக்குவைகளிருக்கின்றன சொன்மலையல்லன சொல்லுகின்ற அந்த நெற்குவைகளில்லாதவிடங்களில்- தொடுகடலமுதம்- கடலினிடத்திலுண்டாகும் உப்புக்குவைகளிருக்கின்றன, நன்மலையல்லன- நல்ல அந்த உப்புக்குவைகளில்லாதவிடங்களில்- நதிதருநிதியம்- நதிகளாலேதரப்பட்டநிதியக்குவைகளிருக்கின்றன. பொன்மலை அல்லன- அந்தப்பொற்குவைகளில்லாதவிடங்களில் மணிபடுபுளினம்- மணிகள்பொருந்திய மணற்குன்றுகளிருக்கின்றன எனவும், நெற்போர்களல்ல முத்துக்குவைகளாமெனவும், மாதர்சொன்மிகுதியல்ல அமுதமாமெனவும் நல்லமலைகளல்ல நதிகளாலேதரப்பட்ட நிதியமாமெனவும், மணற்குன்றுகளல்ல பொன்மலைகளாமெனவும், பொருள்கூறினும் அமையும். நிதியம் என்பதன்கணிருக்கும் அம்- சாரியை.

பந்தினையிளையவர்பயில்விடமயிலூர் ... ... *
கந்தனையனையவர்கலைதெரிகழகம்... ... ... *

சந்தனவனமலசண்பகவனமா ... ... *
நந்தனவனமலநறைவிரிபுறவம் ... ... *

(இ-ள்) இளையவர்-அந்நாட்டிலிருக்கும்மங்கையர்கள் — பந்தினை-பந்துகளை — பயிலிடம்-ஆடும்படியானவிடங்கள் — சந்தனவனமல- சந்தனச்சோலைகளல்ல — சண்பகவனமாம்- சண்பகச்சோலைகளாம் — மயில- மயிலவாகனத்தை — ஊர்-ஏறிச்செலுத்துகின்ற — கந்தனை - சுப்பிரமணியக்கடவுளை — அனையவர்-ஒத்தவாலிபர்கள் — கலை சாஸ்திரங்களை — தெரி- ஆராய்ச்சிசெய்கின்ற — கழகம்- கல்விச்சாலைகள் — நந்தனவனமல- நந்தனவனங்களல்ல — நறைவிரி-தேன்பரந்த — புறவம்-முல்லைவனமாம் — எ-று. (௬௮)

மங்கையர்களாடுமிடம் சந்தனவனமே ஆயினும் அவர்கள் மேனிநிறத்தினாலும், சுவாசவாசனையினாலும், பந்துகள்வீசுதலினால் வண்டுகள் மொய்க்காமையினாலும், சண்பகவனமெனக்கூறப்பட்டது.

வாலிபர்கள் கலைபயிலிடம் நந்தனவனமே ஆயினும் அவர்கள் கலைபயிலும்போது பற்கள்முல்லையரும்புபோலப் பிரகாசிப்பதினாலேயும், வேதமோதுங் குரலிசை வண்டுகள் பாடும் இசைபோலிருப்பதினாலும் முல்லைவனமெனக்கூறப்பட்டது.

இடம்-எழுவாய். சண்பகவனமாம்-பயனிலை. கழகம்-எழுவாய். புறவமாம்-பயனிலை. கலைதெரிகழகமென்பதைக் குறித்து வேறுமொருரைகூறப்படும்.

அதாவது கலைதெரிகழகம்-தனுர்வேதசாஸ்திரம்பயிலுமிடம், நந்தனவனமல காடுபோலாகும். ஏனெனில் படை பயிற்றுமிடமாகையால் அவ்விடத்திற் போவதற்கு யாவருக்கும்பயமுண்டாகுமெனக்கொள்க.

இளையவர் சந்தனவனத்துப்பந்து பயில்வதுமன்றிச்சண்பகவனத்தும் பயில்வார்கள் எனவும், கந்தனையனையவர் கலைதெரிகழகங்கள்நந்தனவனத்திருப்பதுமன்றிமுல்லைவனத்துமிருக்குமெனவும் ஒருவாறுகூறப்படும்.

மங்கையர்மேனி செண்பகமலர்போலாமென்பதனை செண்பகமலரொனச் சிவந்தமேனியாள் என்பதனானுமுணர்க. கலைபயில்பவர்கள் பிரமசாரிகளாதலால் அவர்கள் பற்கள்முல்லையரும்புபோ லிருக்குமெனக் கூறப்பட்டது.

கோகிலநவில்வனவிளையவர்குதலைப் ... ... *
பாகியல்கிளவிகளவர்பயினடமே ... ... *
கேகயநவில்வனகிளரிளவளையின் ... ... *
நாகுகளுமிழ்வனநகைபுரைதரளம் ... ... *

(இ-ள்) இளையவர்-மங்கையர்களுடைய — குதலை- குதலைச்சொல்லாகிய — பாகு-வெல்லப்பாகினை — இயல் ஒத்த — கிளவிகள் -வசனங்களை — கோகிலம் - குயில்கள் — நவில்வன- கற்றுக்கொள்வன — அவர் - அவர்கள் — பயில- ஆடுகின்ற — நடமே-நடனத்தையே — கேகயம்- மயில்கள் — நவில்வன-கற்றுக்கொள்வன — கிளர்-பிரகாசியாநின்ற — இளம் இளமையாகிய — வளையின் நாகுகள் -சங்கநாகுகள் — அவர்-அவர்களுடைய — நகைபுரை- தந்தங்களையொத்த — தரளம்-முத்துக்களை — உமிழ்வன சொரிவன-எ-று [கோகிலம்- எழுவாய். நவில்வன பயனிலை கிளவிகள்-செயப்படுபொருள். சங்குகள்-எழுவாய். உமிழ்வன- பயனிலை முத்துகள்-செயப்படுபொருள்] (௬௯)

மாதர்கள் மொழிபோலக் குயில்கள் வசனிக்கும். அவர்கள் நடிக்கும் நடனம்போல மயில்கள் கூத்தாடுமெனப் பொருள்கூறலுமொன்று.

பழையர்தமனையனபழநறைநுகரும் ... ... *
உழவர்தமனையனவுழுதொழில்புரியு ... ...*
மழவர்தமனையனமணவொலியிசையின் ... ... *
கிழவர்தமனையனகிளைபயில்வளையாழ்... ... ... *

(இ-ள்) பழநறை- பழமையான கள்ளுக்கள்—பழையர்தம் - கள்விலைஞர்களுடைய—மனையன வீட்டின்கண்ணுளவாயிருப்பன—உழுதொழில்-உழுகின்றதொழிற்கள்—நுகரும்-அம்மதுவையுண்ணுகின்ற—உழவர்தம்-உழவர்களுடைய—மனையன வீட்டின்கண்ணுளவாயிருப்பன—மணவொலி-கல்யாணவாத்தியவோசைகள்—புரியும்- அவ்வுழுதொழிலைச் செய்கின்ற—மழவர்தம்-இளமையோர்களுடைய—மனையன வீட்டின்கண்ணுளவாயிருப்பன—கிளைபயில்-கிளையென்னும் நரம்புமுதல் எழுநரம்புகள் பொருந்திய—வளை வளைந்த—யாழ்-வீணைகள்—இசையின் கிழவர்தம்- அந்தக்கல்யாணத்திற்பாடுகின்ற பாடகர்களுடைய—மனையன-வீட்டின்கண்ணுளவாயிருப்பன-எ-று.

பழநறை-உழுதொழில்-மணவொலி-யாழ்-இவைகளைத்தனித்தனி எழுவாயாகக்கொண்டு உள-வென்பதைப் பயனிலையாகக்கொள்க.

இப்பகுதியிலிரண்டிற்காராலும் ஒருசாதித்தொழில் மற்றொருசாதியால் செய்யப்படாமைவிளங்குகின்றது.

கள்விலைஞர்களுடைய மனை-வீட்டின்கண்-அனபழநறை- அந்தமதுக்கள்-நுகரும்-உண்ணப்படும் உழவர்களுடைய- மனை-வீட்டின்கண்- அனவுழுதொழில் அவ்வுழவுக்குக்கருவியாகிய தொழில்கள்- புரியும் -செய்யப்படுவன -இளைஞர்களுடைய -மனை-வீட்டின்கண்- அனமணவொலி- வருத்தப்பட்டிருக்கிற அந்தன்மையுள்ள கல்யாணவாத்திய வோசைகள் நிகழும் பாடகர்களுடைய- மனை-வீட்டின்கண்-அனகிளை பயில்வளையாழ்வாசிக்கப்படும் எனப்பொருள்கூறுவாருமுளர் தம்-இடைச்சொல்- இன்-சாரியை. இசைக்கிழவர் -இசைக்கு உரியவர்.

கோதைகள்சொரிவனகுளிரிளநறவம்... ... ...*
பாதைகள்சொரிவனபருமணிகனக ... ... *
ஊதைகள்சொரிவனவுறையுறுமமுதம் ... ... *
காதைகள்சொரிவனசெவிநுகர்கவிகள் ... ...*

(இ-ள்) குளிர்-குளிர்ச்சியுள்ள—இளம்-இளமையாகிய—நறவம்-தேனை—கோதைகள் பூமாலைகள்—சொரிவன பொழிவன—பரு மணி - பெரியமணிகளையும்—கனகம்- பொன்களையும்—பாதைகள் - மரக்கலங்கள்—சொரிவன-சொரிவனதொகுதியன—அமுதம்- நீரினை—உறை-துளிகளாக—உறும்-பொருந்திய—ஊதைகள்-காற்றுகள்—சொரிவன- தருவன—செவி - காதுகளால்—நுகர்-உண்ணப்பட்ட—கவிகள் - பாடல்கள்—காதை - சரித்திரங்களை—சொரிவன-தருவன எ-று. [கோதைகள்-பாதைகள்-ஊதைகள்-கவிகள்-என்னும் இவை எழுவாய். சொரிவன-பயனிலை. நறவம்- பருமணி கனகம்-துளிகள்-காதைகள்-இந்நான்கும் அவற்றிற்குச்செயப்படுபொருளாதல்காண்க.

(பாதைகள் சொரிவன பருமணிகனகமென்பதை-அரிப்பர்கையகப்படுவ வாயிரத்திரட்டியென்னுஞ் சிந்தாமணிச்செய்யுளானு முணர்க.)

நறு-என்பது-நற-என விகாரவகையாற்குறுகி அம்சாரியைபெற்றது. சூட்டிக்கொள்ளப்பட்டபோது அரும்புகள் மலர்ந்து பொழியுந் தேனென்பதுதோன்ற இளநறவமென்றார்.

[வேறு]

இடங்கொள்சாயல்கண்டிளைஞர்சிந்தைபோல் ... *
நடங்கொள்சோலைவாய்மலர்பெய்தாழ்குழல ... *
வடங்கொள்பூண்முலைமடந்தைமாரெனத் ... ... *
தொடர்ந்துபோவனதோகைமஞ்ஞைகள் ... ... *

(இ-ள்.) இடங்கொள்-அவர்களிடத்துப் பொருந்திய—சாயல்கண்டு-சாயலைப்பார்த்து—இளைஞர் வாலிபர்களுடைய—சிந்தைபோல-மனந்தொடர்வதுபோல—நடங்கொள்-விசாலமாகிய—சோலைவாய்-சோலைகளினிடத்து மலர்பெய்-பூமாலைபணிந்த—தாழ்-தாழ்ந்த—குழல-அளகபாரத்தையும்—வடங்கொள்-மணிவடம்பொருந்திய—பூண்முலை-தனங்களையுமுடைய—மடந்தைமாரென-மாதர்களைப்போல்—தோகை மஞ்ஞைகள்-கலாபத்தையுடைய மயில்கள்—தொடர்ந்துபோவன-தொடர்ந்துசெல்வன எ-று [மஞ்ஞைகள்-எழுவாய்- செல்வன-பயனிலை] (௫௨)

பூண்முலை-என்றது அந்தனத்தினியல்பைக் குறித்ததாகையால் பூணென்பதற்குத்தனித்துப்பொருள்கூறவேண்டுவதின்று. நடங்கொள்சோலை யென்பதற்கு வாவிகள் சேர்ந்த எனினுமமையும்.

வண்மையில்லையோர்வறுமையின்மையாற் ... ... *
திண்மையில்லைநேர்செறுநரின்மையா ... ... *
லுண்மையில்லைபொய்யுரையிலாமையால் ... ... *
வெண்மையில்லைபல்கேள்விமேவலால் ... ... *

(இ-ள்) ஓர்வறுமையின்மையால்- தரித்திரமென்பதுசிறிதுமில்லாமையினாலே—வண்மையில்லை-ஈகையில்லை—நேர் எதிர்ந்து—செறுநர்-போர்செய்கின்றவர்கள்—இன்மையால்- இல்லாமையினாலே—திண்மையில்லை- பராக்கிரமமென்பதில்லை—பொய்யுரையிலாமையால்- பொய்சொல்லுதலில்லாமையினாலே—உண்மையில்லை- மெய்யென்பதொன்றுதெரியவுமில்லை—பல்கேள்வி மேவலால்-பலகேள்விபொருந்தியிருப்பதினாலே—வெண்மையில்லை-அறிவில்லாமையில்லை எ-று [வண்மை-திண்மை உண்மை- வெண்மை-இவைகள் எழுவாய். இல்லை-பயனிலை.] (௫௩)

அந்நாட்டின்கணுள்ள பதிகளில் வாழ்வோர்கள் யாவரும் வள்ளல்களாயுள்ளவர்களாயிருந்தும் இரப்பவர்களில்லாமையால் அவ்வள்ளல்தன்மை விளங்காதிருக்கின்றதென்க. இதுபோலவே மற்ற மூன்றுக்கும் பொருள்கூறி யுணர்ந்துகொள்க.

எள்ளுமேனலுமிறுங்குஞ்சாமையுங் ... ... *
கொள்ளுங்கொள்ளையிற்கொணருமபண்டியு ... *
மள்ளரங்களத்தழுவின்பண்டியுந் ... ... *
தள்ளுநீர்மையிற்றலைமயங்குமே... ... ... *

(இ-ள்.) எள்ளும்-எள்ளுகளும்—ஏனலும்- தினைகளும்—இறுங்கும்- சோளங்களும்—சாமையும்-சாமைகளும்—கொள்ளும்- கொள்ளும்—கொள்ளையில்-மிகுதியாக—கொணரும்பண்டியும்- கொண்டுவருகின்ற பண்டியும்—

அள்ளல்-குழைசேறானது—ஓங்கு-மிகுந்த—அளத்து-அளத்திலுண்டாகிய—அமுதின்பண்டியும்-உப்புப்பண்டியும்—தள்ளும்நீர்மையில் - கொண்டுபோய்த்தள்ளுகின்றதன்மையினாலே—தலைமயங்கும்-இடமயங்கும்—எ-று. ஏகாரம்-ஈற்றசை. [பண்டிகள்-எழுவாய். மயங்கும்-பயனிலை] (௫௪)

இடமயங்குதலாவது- ஒருதிணைப்பொருள்மற்றொருதிணையிற் சேர்தலால் திணைமயக்கங்காட்டுமென்க.

உயருஞ்சார்விலாவுயிர்கள்செய்வினைப் ... ... ✻
பெயரும்பல்கதிபிறக்குமாறுபோ ... ...✻
லயிருந்தேனுமின்பாகுமாயருர்த். ... ... ✻
தயிரும்வேரியுந்தலைமயங்குமே ... ...✻

(இ-ள்.) உயரும்-உயருகின்ற—சார்விலா-சார்பில்லாத—உயிர்கள்-ஜீவன்கள்—செய்வினை-செய்யும்வினையினால்—பெயரும்-மாறிச்செல்கின்ற—பல்கதி-நாற்கதிகளில்—பிறக்கும்ஆறுபோல்-உற்பவிக்குமுறைமைபோல—அயிரும்-சருக்கரையும்—தேனும்-நறையும்—இன்பாகும்-இனியவெல்லப்பாகும்—ஆயருர்-இடையருராகிய பாடியில் உண்டாகும்—தயிரும்-தயிரும்—வேரியும்-மதுவும்—தலைமயங்கும்-பண்டமாற்றப்படுதலால்இடமாறும்—எ-று. ஏ-ஈற்றசை. [அயிரும்-தேனும்-பாகும்-தயிரும்-வேரியும்-எழுவாய்.தலைமயங்கும் என்பதனை மேற்கூறிய எழுவாய்களுடன் தனித்தனி சேர்த்துப் பயனிலையாகக்கொள்க.] (௫௫)

தயிர்க்கு நிலம் வகுத்துக் கூறினமையால் மற்றைப்பொருட்கும் நிலம்வகுத்துக் கூறல்வேண்டும். எங்ஙனமெனில், மருதநிலத்துண்டாகிய அயிரும்-தேனும் குறிஞ்சிநிலத்துண்டாகியதேனுமெனக்கொள்க.— அவ்வவ் நிலத்துப்பொருட்களில் ஈண்டுசிலகூறினும் ஒன்றொழிபொதுச்சொல் என்னுஞ்சூத்திரவிதியால் எல்லாப்பொருள்களையும் எடுத்துக்கூறிக்கொள்க.

திணைப்பொருள்மாறுபடக்கூறப்பட்டிருப்பதென்னையெனின், செய்யுளாதலின் என்க. உயருஞ்சார்பு ஆவது அஞ்ஞானம் நீங்கிய மெய்யுணர்வு. அதுவே உயிர்களது பிறப்பினைநீக்கி மோக்ஷந்தருவது. நாற்கதியாவது-நரகர்-மக்கள்-தேவர்-விலங்கு என்பவை.

கூறுபாடலுங்குழலின்பாடலும் ... ...✻
வேறுவேறுநின்றிசைக்கும்வீதிவாய்... ... ...✻
ஆறுமாறும்வந்தெதிர்ந்தவாமெனச் ... ... ✻
சாறும்வேள்வியுந்தலைமயங்குமே... ... ...✻

(இ-ள்.) கூறுபாடலும் - பாடுகின்ற இசைப்பாடலும்—குழலின்பாடலும்- வேய்ங்குழற்பாடலும்—வேறுவேறுநின்று - வேறுவேறாகவிருந்துகொண்டு—இசைக்கும்- சத்திக்கும்படியான—வீதிவாய் -வீதியினிடத்து—ஆறும்ஆறும்வந்து-ஒருநதிவெள்ளம் வரும்போது—அதற்குஎதிராக-மற்றொருநதிவந்து எதிர்த்ததுபோல—சாறும்வேள்வியும்-திருவிழாக்கோலக்கூட்டமும் மணக்கோலமும் எதிரெதிராகவந்து—தலைமயங்கும் - இடமயங்கும்—எ-று. [சாறும்வேள்வியும்-எழுவாய். தலைமயங்கும்-பயனிலை.] (௫௬)

சாறும்வேள்வியும் எதிரெதிராகவரும்போது ஒன்றிலிருக்கும்பரிசனமுதலியவைமற்றொன்றினிடமாகக் கலக்கப்படுதலால் தலைமயங்குமென்றார்,

மூக்கிற்றாக்குறுமூரிநந்துநேர்.... ... ...*
தாக்கிற்றாக்குறும்பறையுந்தண்ணுமை ... ... *
வீக்கிற்றாக்குறும்விளியுமள்ளர்தம்... ... ... *
வாக்கிற்றாக்குறுமொலியின்மாயுமே ... ... *

(இ-ள்) மூக்கின்-மூக்குதலால்—தாக்குறும்-ஒலித்தலைப்பொருந்துகின்ற—மூரி - பலமுள்ள—நந்துவிளியும்- சங்கின் ஓசையும்—நேர்தாக்கின்-நேராக அடித்தால்— தாக்குறும் - ஒலிக்காநின்ற—பறைவிளியும் -பறைகளின் ஓசையும்—வீக்கின் - வார்விசிப்பினால்—தாக்குறும்- ஒலிக்காநின்ற—தண்ணுமைவிளியும்-மூழவினோசையும்—மள்ளர்தம்-பள்ளர்களுடைய—வாக்கின்-வாக்கினால்—தாக்குறும்-ஒலிக்காநின்ற-ஒலியின் ஆரவாரத்தினால்--மாயும் ஒடுங்கும்-எ-று. [நந்து- பறை-தண்ணுமை-எழுவாய். மாயும்-பயனிலை]()

தாலியைம்படைதழுவுமார்பிடை ... ... *
மாலைவாயமுதொழுகுமக்களைப்... ... ...*
பாலினூட்டுவார்செங்கைபங்கயம் ... ... *
வானிலாவுறக்குவிவமானுமே... ... ... *

(இ-ள்.) தாலி-தாலியாகிய—ஐம்படை-பொன்னாற்செய்யப்பட்டிருக்கிற பஞ்சாயுதங்களும்—தழுவும்- பொருந்திய—மார்பு இடை-மார்பினிடத்தில்—மாலை-ஒழுங்காக—வாயமுது- வாயமுதானது—ஒழுகுமக்களை - ஒழுகிக்கொண்டிருக்குங்குழந்தைகளுக்கு—பாலின்-பாலுடன் அன்னத்தை—ஊட்டுவார்- ஊட்டுகின்றவர்களுடைய—செங்கை- சிவந்தகையானதுகள்—பங்கயம்- தாமரைமலர்கள்—வான்-ஆகாயத்தினிடத்தில்—நிலாஉற-சந்திரஉதயம் பொருந்தினவளவில்—குவிவ-குவிதலை—மானும் -ஒப்பாகும்-எ-று. [செங்கை- எழுவாய். மானும்-பயனிலை] (௫௮)

தாலி [illegible]

பொற்பினின்றனபொலிவுபொய்யிலா... ...... *
நிற்பினின்றனநீதிமாதரார்... ... ... *
அற்பினின்றனவறங்களன்னவர்... ... ...*
கற்பினின்றனகாலமாரியே... ... . *

(இ-ள்.) பொற்பின்-ஆடவருடையகுணநலத்தினால்—பொலிவு- பிரகாசமானது—நின்றன- நிலைபெற்றிருந்தன—பொய்யிலா -பொய்மையில்லாத—நிற்பின் - நிலைமையினால்—நீதி - நீதிகள்— நின்றன - நிலையாயிருந்தன—மாதரார் - மகளிர்களுடைய—அற்பின்- அன்பினால்—அறங்கள்-தருமங்கள்— நின்றன-நிலையாயிருந்தன—அன்னவர்-அந்தமகளிர்களுடைய—கற்பின் -பதிவிரதாதருமத்தினால்—காலமாரி- காலவருஷங்கள்—நின்றன- மாறாமல் பெய்கின்றன-எ-று [பொலிவு-எழுவாய் நின்றன-பயனிலை. அறங்கள் எழுவாய் நின்றன-பயனிலை. காலமாரி-எழுவாய். நின்றன-பயனிலை.] (௫௯)

இல்லறத்தில் வழுவாது நிற்றலேபொற்பு. வழுவாது நிற்றலால்வருங்கீர்த்தியேபொலிவு.

சோலைமாநிலந்துருவியாவரே ... ... *
வேலைகண்டுதாமீளவல்லவர் ... ...*
சாலும்வார்புனற்சரயுவும்பல ... ...*
காலினோடியுங்கண்டதில்லையே ... ... *

(இ-ள்.) சோலை-பொழில்களாற்சூழப்பட்ட—மா - பெருமைபொருந்திய—நிலம்-அக்கோசலைநாட்டின்—வேலை-எல்லையை—துருவி - தேடி—வேலைகண்டு-எல்லையை அறிந்து—மீளவல்லவர்- திரும்பிவரத்தக்கவல்லவர்கள்—யாவர் எவர்கள்—சாலும்-மிகுந்த—வார்- நீட்சியுள்ள—புனல்-நீரினையுடைய—சரயுவும்- சரயுநதியும்—பலகாலின்-பலகால்களால்—ஓடியும்-சென்றும்—கண்டதில்லை-அறிந்ததில்லை-எ-று. (௬௰)

யாவரோ என்னும் ஏகாரம் எதிர்மறைப் பொருட்கண்வந்தது. உம்மை- யிரண்டில் -ஒன்று- சிறப்பு-ஒன்று-எச்சம்.

வீடுசேரநீர்வேலைகான்மடுத் ... ...*
தூடுபெறினுமுலைவிலாநலங் ... ... *
கூடுகோசலமென்னுங்கோதிலா ... ... *
நாடுகூறினநகரங்கூறுவாம் ....*

(இ-ள்.) வீடுசேர-யாவும்வீடுதலைப்பொருந்த—நீர்வேலை - நீருள்ளசமுத்திரங்கள்—கால்மடுத்து- பிரசண்டமாருதத்தைப் பொருந்தி—ஊடுபெறினும்-பூமிக்குள்ளேபெயர்ந்துவந்து கவிந்துகொண்டாலும்—உலைவு இலா - கெடுதலில்லாத—நலம்கூடு-நன்மைபொருந்திய—கோசலமென்னும்-கோசலமென்றுபெயருள்ள—கோதிலா-குற்றமில்லாத—நாடு-நாட்டின்சிறப்பினை—கூறினம்-சொன்னோம்—நகரங்கூறுவாம்- இனிநகரத்தின்சிறப்பைச்சொல்லுகின்றோம்—எ-று. (௬௧)

கூ-வது-நாட்டுப்படலம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பாலகாண்டம்.

௪-வது-நகரப்படலம்.

செவ்வியமதுரஞ்சேர்ந்தநற்பொருளிற்சீரியகூரியதீஞ்சொல் ... *
வவ்வியகவிஞரனைவரும்வடநூன்முனிவரும்புகழ்ந்ததுவரம்பில்... ... *
எவ்வுலகத்தோர்யாவருந்தவஞ்செய்தேறுவானாதரிக்கின்ற... ... ... *
அவ்வுலகத்தோரிழிவதற்கருத்திபுரிகின்றதயோத்திமாநகரம்... ... *

(இ-ள்) செவ்விய - செவ்விதானவைகளும்— மதுரஞ்சேர்ந்த - மதுரம் பொருந்தியவைகளும்—நல் - நன்மையாகிய—பொருளின் - பொருள்களினுள்—கூரிய - நுட்பமாகிய—சீரிய-வளப்பத்தையுடையவைகளுமாகிய—தீம் இனிய—சொல்-பதினெட்டுவகைச்சொற்களையும்—வவ்விய-(அறிவினால்) கவர்ந்த—கவிஞர் அனைவரும் எல்லாப்புலவர்களாலும்—வடநூல்-வடநூல் வல்ல—முனிவரும்-வான்மீகிமுதலாகியமுனிவராலும்—புகழ்ந்தது-புகழப்படுகின்றதாய்—வரம்பு இல்-எல்லை இல்லாத—எவ்வுலகத்தோர் - எவ்வுலகத்தினுமுள்ளவர்களாகிய—யாவரும்-எல்லோரும்—தவஞ்செய்து-தவங்களைச்செய்து—ஏறுவான்-செல்ல—ஆதரிக்கின்ற - விரும்புகின்ற—அவ்வுலகத்தோர்-வைகுண்டத்திருப்பவர்க்கு—இழிவதற்கு-இழிந்துவருவதற்கு—அருத்தி-விருப்பத்தை—புரிகின்றது-செய்யத்தக்கது—அயோத்திமாநகரம்-அயோத்தியென்னும் பெரியநகரம்-எ-று. [அயோத்திமாநகரம் - எழுவாய். அருத்திபுரிகின்றது-பயனிலை] (௧)

எவ்வுலகத்தோர் என்பதற்கு வைகுண்டமொழிந்த எல்லாவுலகத்தோரும் எனக்கொள்க. அவ்வுலகத்தோரும் இழிய அருத்திபுரிகின்றதற்குக்காரணம் நாராயணக்கடவுள்பூரணகலையுடன் திருவவதாரஞ்செய்தமையேயெனக்கண்டுகொள்க.

அவ்வுலகத்தோரும் என்னுஞ்சிறப்பும்மை விகாரத்தால்தொக்கது -அயோத்தியின்பெருமை இவ்வாறென்பதிதன்கருத்து.

நிலமகண்முகமோதிலகமோகண்ணோநிறைநெடுமங்கலநாணோ... ... ...*
இலகுபூண்முலைமேலாரமோவுயிரினிருக்கையோதிருமகட்கினிய... [மோ
மலர்கொலோமாயோன் மார்பினன்மணிகள் வைத்தபொற்பெட்டியோவா
உலகின்மேலுலகோவூழியினிறுதியுறையுளோயாதெனவுரைப்பாம்... ...*

(இ-ள்) (அவ்வயோத்திமாநகரமானது) நிலமகள்- பூமிதேவியினுடைய—முகமோ - வதனமோ—திலகமோ-திலகமோ—கண்ணோ- நேத்திரமோ—நிறை-அழகுநிறைந்த—நெடு-நெடியதாகிய—மங்கலநாணோ-மாங்கலியசூத்திரமோ—இலகு - விளங்காநின்ற —பூண் - ஆபரணங்களையுடைய—முலைமேல் - முலையின்மேற்றுலங்கும்—ஆரமோ- முத்துமாலையோ—உயிரினிருக்கையோ - உயிரினிடமோ—திருமகட்கு - இலக்குமிக்கு—இனிய -

இனிதாகிய—மலர்கொலோ - தாமரைப்பூவோ—மாயோன் - நாராயணக்க டவுளுடைய—மார்பின் - மார்பினில்விளங்கும்— மணிகள் - கவுத்துவமணி களை—வைத்த-வைக்கும்படியாகிய—பொற்பெட்டியோ- பொன்னாற்செய் தபெட்டியோ—வானோருலகின்- தேவருலகினுக்கு—மேல்-மேலாகிய—உ லகோ-வைகுந்தவுலகமோ—ஊழியினிறுதி-கற்பமுடிவின்—உறையுமோ- இடமாகிய நாராயணக்கடவுளுடைய திருவயிறோ—யாதென-யாதென்று— உரைப்பாம்- சொல்லுவோம்—எ-று [யாம் - ம்தான்மூன்றாவாய் உரைப்பாம் —பயனி லை. நகரத்தைச்செயப்படுபொருள்.] (௨)

நிலம்-தெய்வப்பெண்ணாதலின் நிலமகளென்றும், எல்லாவுறுப்பினுஞ் சிறந்தது முக மாதலின் நிலமகண்முகமோவென்றும், முகத்திற்கு அழகுகொடுப்பது திலகமாதலால் திலகமோவென்றும்முகத்தில் திலதமிடினும் கண்ணின்றெனில் அழகின்மையால் திலகமோவென் பதனை அடுத்துக் கண்ணோவென்றும், மகளிர்முகம் திலதமிட்டுக்கண்ணொடுபொருந்தியிருப்பி னும்மங்கலநாணில்றெனில் அழகுமின்றிப் பெண்மையுமின்றாமாகலின் கண்ணோவென்பதனை அடுத்துநிறை நெடு மங்கலநாணோவென்றும்,

மங்கலநாணே மகளிர்க்குச்சிறந்ததாயினுமவ்வணி ஏனைப்பணிகளோடொன்றாகக்கழுத் தின்மறைந்துகிடக்குமாதலின் அம்மகளிரைப்பொருந்துமைந்தர்க்குமகிழ்ச்சிகொடாமையி னம்மைந்தர் கண்ணுறப்பார்த்தவுடன்றழுவி மகிழ்தற்கேதுவாகிய அணிமுலையணியாகலான் மங்கலநாணோவென்பதனை அடுத்திலகு பூண்முலைமேலாரமோவென்றும், இப்பூமகட்கு உயிர் நாராயணக்கடவுள் ஆதலால் அவனிருந்துவிளங்கு மிடம்போல இந்நகரினும் நீங்காதுவிளங் குவளாதலினுயிரினிருக்கையோவென்றும், திருமகண்மலரின்கண்ணுறைதல்போலவெக்காலத் துநீங்காதிருந்து இனிதாய்விளங்குமிடமாதலில் திருமகட்கினிய மலர்கொலோவென்றும்,

மாயோன் மார்பினின் மணிகள்வைத்தவிடம் பாற்கடலாதலின் அப்பாற்கடலைப்போல மாயோற்கு இவ்விடஞ்சிறந்த இடமாதலின்மாயோன்மார்பின் மணிகள்வைத்தபொற்பெட்டி யோவென்றும்,வானவர் உம்மையிற்செய்த நல்வினையால் தமதுலகத்தில் போகங்களைப்புசித் து அவ்வினையுலரின் நல்வினையால் வைகுந்தமடைவராதலின் வானோருலகின் மேலுலகோவெ ன்றுங்கூறினர்.

கற்பமுடிவில் எல்லாச்சராசரங்களு மாயோனது வயிற்றிலடங்கி விளங்குவதுபோல இவ்விடத்தினும் எல்லாச்சராசரமும் அழியாது அடங்கிவிளங்கலின் ஊழியினிறுதி யுறையு ளோவென்றும், இங்ஙனங்கூறிய உறுப்புகள் உருவத்திற்கு இன்றியமையாச் சிறப்பாயிருத்த லின் யாதென உரைப்பாமென்றுங்கூறினர்.

யாதென உரைப்பாமென்றமையின் முகமுதலானவைகளை ஒக்குமென்று சொல்லலா மென்பதிதன்கருத்து.

உமைக்கொருபாகத்தொருவனுமிருவர்க்கொருதனிக்கொழுநனுமலர்மேற்
கமைப்பெருந்செல்வக் கடவுளுமுதலோர் கண்டிலாநகரதுகாண்பான் ... *
அமைப்பருங்காதன்முன்பிடித்துந்தவந்தருஞ்சந்திராதித்தர் ... ... *
இமைப்பிலர்திரிவரி துவலாலிதனுக்கியம்பலாமுவமைமற்றியாதோ ... *

(இ-ள்.) உமைக்கு-மலைமகளுக்குக்கொடுத்த—ஒருபாகத்து- ஒருபாகத்தி னையுடைய—ஒருவனும்-ஒப்பற்றபரமசிவனும்—இருவர்க்கு-மலர்மகள் நி லமகளாகிய இருவருக்கும்—தனி-ஒப்பற்ற—ஒருகொழுநனும்- ஒருகணவ னுமாகிய திருமாலும்—மலர்மேல் - தாமரைமலரினிடத்துவிளங்கும் — கமை- பொறுமையாகிய—பெருஞ்செல்வம்-பெருஞ்செல்வத்தையுடைய—கடவு ளும்-பிரமதேவனும்—முதலோர் - இவர்கள்முதலிய தேவர்கள்—கண்டி

லா-கண்டிராத—நகரது-இவ்வயோத்திக்கு ஒப்பானநகரமொன்று—காண்பான்- தாங்கள்காண—அமைப்பு அரும்-அடக்குதற்கரிய—காதல்-ஆசையானது—பிடித்து-பிடரியைப்பற்றி—மூன் உந்த-முன்னேதள்ள—அந்தரம்-ஆகாயத்தில்—சந்திராதித்தர்-சந்திரனுஞ்சூரியனும்—இமைப்பு இலர்-கண்கள் இமைக்குதல் இல்லாதவர்களாய்—திரிவர்- நோக்கிக்கொண்டு இன்னமும் உழலுகின்றார்கள் (ஆதலால்)—இதனுக்கு-இந்நகரத்துக்கு—இது அலால்-இந்நகரம் உவமையேயல்லாமல்—இயம்பலாம்-சொல்லும்படியான—உவமை-உவமையானது—மற்றுஇயாதோ-பிறிதுயாதோ-இல்லை-எ-று [உவமை எழுவாய் யாது-பயனில்] (௬)

நகரது என்பதிலிருக்கும் அது காரகத்தின்கண்வந்தது. உயர்திணை யும்மைத்தொகை பலர்பாற் றே என்னுஞ் சூத்திரவிதியால் சந்திரனுஞ் சூரியனும் என்னும் எண்ணும்மைகள் தொக்குப் பலர்பாறுகொண்டு முடிந்தன.

சந்திர ஆதித்தர் என்னும்பதம் சந்திராதித்தர் எனப் புணர்ந்தது; வடமொழிச்சந்தி இதனை தீர்க்கசந்தி எனக்கூறுவர்.

தாற்பரியம்.

திரிமூர்த்திமுதலானவர்களே இந்நகரத்துக்கு ஒப்பானநகர் ஒன்றுங் காணாதவர்களாயிருக்க சந்திரசூரியர்கள் அவர்கள்காணாமை அறிந்தோ அல்லது அறியாமலோ தாங்கள்காண வேண்டுமென்று ஆசைகொண்டு இமைகளைமூடாமல் கண்கள்விழித்தவண்ணமாகவே இன்னமும் உழன்றுகொண்டிருக்கின்றார்கள். ஆதலால் இந்நகரமானது தனக்குத்தானே ஒப்பானதென்று சொல்லுவதன்றி வேறே ஒப்பிருக்குமென்று எவ்வாறுசொல்லக்கூடும்.

ஒப்பில்லாநகரமென்றுணராமல் காணத்தொடங்கினமையின்திரிவரென எளிதுபடக்கூறினார்.

இமைப்பிலரென்றதனால்-அதிகசாக்கிரதையாக நோக்கித்திரிகின்றாரென்றதாயிற்று

இவ்வாறுநோக்கித்திரிவது சந்திரசூரியருக்குச் சம்பந்தமில்லாமை தெரிந்திருந்தும் சம்பந்தங்கற்பித்துச்சொல்லுகையில் இது அதிசயோத்தியலங்காரம்.

அயின்முகக்குலிசத்தமரர்கோனகருமளகையுமென்றிவையயனார் ... ... *
பயிலுறவுற்றபடிபெரும்பான்மைப்பெருந்திருநகரதுபடைப்பான் ... *
மயன்முதற்றெய்வத்தச்சருந்தத்தமனத்தொழினாணினர்மறந்தார் ... .. *
புயலுறுகுடுமிநெடுநிலைமாடத்திந்நகர்புகலுமாறெவனோ... ... ... *

(இ-ள்) அயனார்- பிரமதேவன்—அயில்-கூர்மையை—முகம்-தன்னிடத்துள்ள—குலிசத்து- வச்சிராயுதத்தையுடைய—அமரர்கோன்- தேவேந்திரனது—நகரும்-நகரமாகிய அமராவதியும்—அளகையும்-குபேரனுடைய நகரமாகிய அளகாபுரியும்—என்றிவை-என்றஇவைகளை—பயிலுறல் உற்றபடி-பயிற்சிசெய்ததுபோல—பெரும்பான்மை-மேம்பாடுள்ள—பெருந்திரு-மிகுந்தசெல்வமுடைய—நகர்- வேறொருநகரத்தை—படைப்பான்- சிருட்டிக்க எண்ணங்கொண்டு—(தங்களாலொண்ணாமையால்) மயன்முதல்- மயன்முதலாகிய—தெய்வத்தச்சரும்- தேவதச்சர்களும்—நாணினர்-நாணமுடையவர்களாய்—தத்தம்-தங்கள்தங்கள்—மனத்தொழில்- மனதினால்நிருமிக்குந்தொழில்களை—மறந்தார் - மறந்துவிட்டார்கள் (என்றால்) —புயலதொடு-மேகமண்டலத்தை அளாவுகின்ற—குடுமி- சிகரங்கள்பொருந்திய—நெடுநிலை- நெடியநிலைகளையுடைய—மாடத்து - வீடுகள்நிறைந்துள்ள—இந்நகர்-

ிரமதேவன் பழகித்தேர்ந்தபின் படைத்ததாகிய இந்நகரத்தை—புகலுமா று-சொல்லுமுறைமை என்னிருக்கின்றது-எ-று. [புகலுமாறு-எழுவாய். யா து-பயனிலை] (௪)

என்ற என்பதிலிருக்கும் பெயரெச்ச இறுதிநிலைவிகாரத்தால் குன்றியது.

நாணினர் என்னுந் தெரிநிலைமுற்றினை நாணிஎனும் வினையெச்சமாகக்கொள்க.

அமராவதியையும் அளகையையும்படைத்துப்பழகி ஏனை அயோத்தியைப் படைத்தான் ன்பதைஅறிந்த தேவதச்சர்கள் அதுபோல வேறொருநகரைப்படைக்கமுயன்று தங்களால் ஒன்றாமைபால்முன்னுணர்ந்திநக்குந்தொழிலையுமறந்தார்களென்றால் இந்நகரத்தின் பெரு மை என்றால் எவ்வாறுசொல்லப்படுமென்பதுஇதன்தாற்பரியம்.

அமராவதி அளகை என்னும் இரண்டினும் சிறப்புடையதா யிருக்கின்றதென்பதிதன்க ருத்து. அயோத்தியைப்படைக்க கைபழகின அமராவதி அளகையென்னும் இவைகளைப்போ லப்படைக்க எண்ணி நாணினார்கள் எனினும் அமையும்.

புண்ணியம்புரிந்தோர்புகுவது துறக்கமென்னுமீதருமறைப்பொருளே.. ※
மண்ணிடையாவரிராகவனன்றிமாதவமறத்தொடும்வளர்த்தார்... ... ※
எண்ணருங்குணத்தினவனினிதிருந்திவ்வேழுலகாளிடமென்றால்... ... ※
ஒன்றுமோவிதனின்வேறொருபோகமுறைவிடமுண்டெனவுரைத்தல்... ※

(இ-ள்.) புண்ணியம்-நல்வினைகளை—புரிந்தோர்-இம்மைக்கட்செய்தோ ர்—புகுவது-அவ்வினைப்பயன்களைத்துய்க்கும்பொருட்டுச்செல்லலாவது— துறக்கம் என்னும் ஈது-துறக்கமென்றுசொல்லும் இவ்வாக்கியம்—அரும்- அரிதாகிய—மறைப்பொருளே-வேதப்பொருளாதலால்—மாதவம்-பெரி யதவத்தை—அறத்தொடும்-தருமங்களுடன்—மண்ணிடை-இப்பூமியின்கண் —வளர்த்தோர்-வளர்த்தவர்கள்—இராகவனன்றி-இராகவனையல்லது— யாவர்-பிறர்யாவர்ஒருவருமில்லையே—எண்-எண்ணுதற்கு—அரும்-அரிதா கிய—குணத்தினவன்-குணத்தினையுடைய அவ்விராகவன்—இனிது-இனிதாக —இருந்து-வீற்றிருந்து—இவ்வேழுலகு-இவ்வேழுலகங்களையும்—ஆளி டம்-ஆளுமிடமிவ்வயோத்திநகரமென்றால்—இதனின்-இதனைப்பார்க்கிலும் ஒரு-ஒப்பற்ற—போகம்-போகங்கள்—உறைவிடம்-பொருந்துவதானஇ டம்—உண்டென உரைத்தல்-வேறுமுண்டென்று சொல்லுதல்—ஒன்று மோ-கூடுமோகூடாது-எ-று [உரைத்தல்-எழுவாய். ஒன்றுமோ-பயனிலை.

மறைப்பொருள் மறையிலுண்மை. மாதவம் அறத்தொடும் வளர்த்தானெனவே தான் செய்தும் பிறராற்செய்வித்தும் வளர்த்தானெனக்கொள்க. இதுவுமது.

தங்குமாபொருளுந்தருமமுந்துணையாத்தம்பகைப்புலன்களைத்தவிர்க்கும் ※
பொங்குமாதவமுஞானமும்புணர்ந்தோர்யாவர்க்கும்புகலிடமான... ...※
செங்கண்மால்பிறந்தாண்டளப்பருங்காலந் திருவின்வீற்றிருந்தமைதெரிந் தால், அங்கண்மாஞாலத்தந்நகரொக்கும்பொன்னகரமரர்நாட்டியாதோ... ※

(இ-ள்.) மாதங்கும்-பெருமைபொருந்திய—பொருளும்-திரவியமும்— தருமமும்-தருமமும்—துணையா-சார்பாக—தம்-தம்முடைய—பகை-ப கையாகிய—புலன்களை-ஐம்புலன்களையும்—தவிர்க்கும்-நீக்கும்—பொங்கு ம்-அழகாய்ப்பொங்கிய—மா-பெரிய—தவமும்-தவங்களையும்—ஞானமும்-

ஞானத்தையும்—புணர்ந்தோர்-பொருந்தினோர்—இயாவர்க்கும்- எல்லோர்க்கும்—புகல்இடமான்-சென்றடையும்இடமாகிய—செங்கண்-செம்மைநிறமுள்ளகண்களையுடைய—மால்-நாராயணக்கடவுள்—பிறந்து-திருவவதாரஞ்செய்து—ஆண்டு- அவ்விடத்து— அளப்பு-அளத்தற்கு—அரும்- அரிதாகிய—காலம்-காலம்—திருவின்-திருமகளோடு—வீற்றிருந்தமை -வீற்றிருந்தானென்பது—தெரிந்தால்-தெரிந்தால்— அம்- அழகிய—கண் - இடத்தையுடைய—மா-பெரிய—ஞாலத்து- பூமிக்கண்விளங்கும்—அந்நகர்ஒக்கும் - அவ்வயோத்திநகரையொத்த—பொன்நகர்-அழகுள்ளநகரம்—அமரர்நாட்டு- தேவருலகத்திலும்-யாதோ-இல்லை-எ-று. [பொன்நகர்-எழுவாய் யாது-பயனிலை

பொருளுந்தரு மமும் துணையாயினல்லது பகைப்புலன்களைவதின்றாகலின், தங்குமா பொருளுந் தருமமுந்துணையாத் தம்புலப்பகைக ளைந்தென்றும், புலப்பகை களையில் தவங்கூடும் அத்தவத்தால் ஞானமுண்டாகும் அந்தஞானத்தையுடையோ ரெல்லோர்க்குஞ்சென்றடைதற்கு இடம் செங்கண்மாலாதலின் அழகாய்ப்பொங்குமாதவமுஞானமும் புணர்ந்தோரியாவர்க்கும் புகலிடமான செங்கண்மாலென்றுங்கூறினார்.புலம்-பஞ்சேந்திரியம்.

அரைசெலாமவணவணிபெலாமவணவரும்பெறன்மணியெலாமவண ... *
புரசைமால்களிறும்புரவியுந்தேரும்பூதலத்தியாவையுமவண ... ... *
விரசுவார்முனிவர்விண்ணவரியக்கர்விஞ்சையர்முதலினோரெவரும் .. ... *
உரைசெய்வாரானபோததனுக்குவமைதானரிதரோவுளதோ ... ... *

(இ-ள்.) அரைசெலாம்- பூதலத்திலுள்ள அரசர்களெல்லாம்— அவண-அவ்விடத்தின்கணுள்ளன—அணியெலாம்- ஆபரணங்களெல்லாம்— அவண-அவ்விடத்திலுள்ளன—அரும்பெறல் - பெறுதற்கரிய—மணியெலாம் - மணிகளெல்லாம்—அவண- அவ்விடத்திலுள்ளன—புரசை - கழுத்துக்கயிற்றையுடைய—மால்களிறும்-பெரியயானைகளும்—புரவியும் -குதிரைகளும்—தேரும்-தேர்களும்—பூதலத்தியாவையும்-பூமியின்கணுள்ள மற்றெல்லாப்பொருள்களும்--அவண-அவ்விடத்திலுள்ளன--(இவைகளுமன்றி)முனிவர்-முனிவர்களும்—விண்ணவர்- தேவர்களும்—இயக்கர்-யக்ஷர்களும்—விஞ்சையர்-வித்தியாதரரும்—முதலினோரெவரும்-இவர்கள்முதலிய எல்லாரும்—விரசுவார்-அந்நகரத்தின்கண்ணே வாசமாயிருப்பவர்களாயினோரென—உரைசெய்வாரானார்- முன்னோர்கள் சொல்லுகின்றவர்களானார்கள்— ஆனபோது-அவ்வாறு சொல்லலாயினபோது—அதனுக்கு- அந்நகரத்துக்கு—உவமை-உவமை—அரிது-அருமை—உளதோ-அருமையிற்றேடிச் சொல்லலாமென்று கருதினது வேறுண்டோ இல்லை-எ-று. [உவமை-எழுவாய். அரிது-பயனிலை] ()

பூதலத்தியாவையும் அவணவென்று அங்குவந்திருக்கு முநிவர் முதலாயினோர் உரைசெய்வாரானாரெனப் பொருள்கூறுவதுமொன்று.

அரசெலாமவணவென்றது கோசலைநீங்கியமற்றையதேசத்தரசர்யாவர்களும் அவ்விடத்தில்வந்திருக்கின்றார்களென்னுங்குறிப்பு இவ்வாறு கூறுங்கால் அரசு ஆகுபெயர். வேந்தர்கள் அரசுத்தன்மை தசரதமகாராசன்கொடுக்கப் பெற்றுக் கொள்ளுகையினால் அரசெலாமவண என்றுரைனினுமமையும். தான்-இடைச்சொல்.

புரசை-யானைக்கழுத்திடுகயிறுயாவையுமென்பதனோடு சேனையென்பதனைக்கூட்டியுரைக்க ஆனபோது ஆகையால் அரிதுஇல்லை இதுவுமது.

நால்வகைச்சதுரம்விதிமுறைநாட்டிநனிதவவுயர்ந்தனபனிதோய் ... ...*
மால்வரைக்குலத்தின்யாவையுமில்லையாதலாலுவமைமற்றில்லை ... ... *
நூல்வரைத்தொடர்ந்துபயத்தொடும்பழகிநுணங்கியநுவலருமுணர்வே *
போல்வகைத்தல்லாலுயர்வினேடுயர்ந்ததென்னலாம்பொன்மதினிலையே.*

(இ-ள்.) உயர்வினேடு-இவ்வுயர்ச்சியோடொப்ப — உயர்ந்ததென்னலாமல்லால்-உயர்ந்துநின்றனவென்று சொல்லலாமன்றி—நால்வகைச்சதுரம்-நான்குவகைப்பட்டசதுரமாக—விதிமுறை - சிற்பநூல்விதிமுறைப்படி—நாட்டி-வகுத்து—நனிதவ-மிகவும்—உயர்ந்தன-உயர்ந்தனவாகி—பனிதோய்-குளிர்ச்சிபொருந்திய—மால்வரைக்குலத்தின் - பெரியமலைக்குலங்களில்—யாவையுமில்லை-எவையுமில்லை—ஆதலால்-ஆகையால்—உவமைமற்றில்லை-இதனோடுவமைசொல்லவேறொருமலையுமில்லை—(ஆயினும்) நூல்வரை-நூலினளவெவ்வளவோ அதுவரையில்—தொடர்ந்து-கருத்தைச்செலுத்தியாராய்ந்துணர்ந்து—பயத்தொடும்பழகி-அவைகளிற்கூறும்பயனாகிய அறமுதலியவற்றிலும்பழகி—நுணங்கிய-கூர்மைபெற்ற—நுவலரும்-சொல்லுதற்கரிய—உணர்வேபோல் வகைத்து—ஞானமேபோலும் - தன்மையினையுடைத்து—பொன்-பொன்னாற்செய்த—மதில்-மதிலினது—நிலை - நிலைமை-எ-று.
[மதினிலை-எழுவாய். போல்வகைத்து-பயனிலை.] (அ)

உயர்வினேடுயர்ந்ததென்னலாமல்லால் எனமாறுக-உயர்வினேடுயர்ந்த-என்பதனிடை ஒப்ப என ஒருசொல்கூட்டப்பட்டது. இது சிலேடைஉவமை.

நனி-தவ-ஒருபொருளிருசொல் பிரிவில்லாதது.

மதிலைக்குறிக்குமிடத்து நூல்-கயிறு-பயம் நீர்-கற்றுணர்ந்தோர் உணர்ச்சியானது தேவர்களும் எட்டுதற்கரிய பரப்பிரமத்தையும் எட்டத்தக்கதாதலால் மதில் அவ்வுணர்ச்சியை யொக்குமென்று குறிப்பித்தார். மதிற்சிறப்பிவ்வாறென்பதிதன்கருத்து.

மேவருமுணர்வுமுடிவிலாமையினால்வேதமுமொக்கும்விண்புகலாற் .....*
தேவருமொக்குமுனிவருமொக்குந்திண்பொறியடக்கியசெயலாற் ... ...*
காவலிற்கலையூர்கன்னியையொக்குஞ்சூலத்தாற்காளியையொக்கும் ... ..*
யாவையுமொக்கும்பெருமையாலெய்தற்கருமையாலீசனையொக்கும் ... *

(இ-ள்.) மேவரும்உணர்வு-பொருந்தியவுணர்வுக்கும்—முடிவுஇலாமையினால்-முடிவுகாணுதற்குஇல்லாமையாயிருப்பதினால்—வேதமும்-வேதங்களையும்—ஒக்கும்-நிகர்க்கும்—விண்-ஆகாயத்தின்கண்—புகலால்-செல்லுதலால்—தேவரும்-தேவரையும்—ஒக்கும்-நிகர்க்கும்—திண்- வன்மையுள்ள—பொறி-பொறிகளை—அடக்கிய- அடக்கிய—செயலால்-தன்மையால்—முனிவரும்-முனிவரையும்—ஒக்கும்-நிகர்க்கும்—காவலின்-காக்குந்தன்மையால்—கலை-கலைமானினை—ஊர்-ஏறிச்செலுத்துகின்ற—கன்னியை - துர்க்கையை—ஒக்கும்- நிகர்க்கும்—சூலத்தால்- சூலமாகிய யந்திரத்தைப்பொருந்தியிருப்பதினால்—காளியை - காளியையும்—ஒக்கும் - நிகர்க்கும்—பெருமையால்-பெருமையினால்—யாவையும் - எல்லாவற்றையும்—ஒக்கும்-நிகர்க்கும்—எய்தற்கு- தன்னை அடைதற்கு—அருமையால் - அரியதன்மையினால்—ஈசனை-ப

ரப்பிரமத்தையும்—ஒக்கும்-நிகர்க்கும்-எ-று [மதில்-எழுவாய். ஒக்கும்-பயனிலை. வேதம்-தேவர் - முனிவர்- கன்னி- காளி- இவைகள் தனித்தனி செயப்படுபொருள்.] (௯)

பொறி-முனிவரைக்குறிக்குமிடத்து ஐம்பொறி.

பஞ்சிவான்மதியையூட்டிய வனையபடருகிர்ப்பங்கயச்செங்கால், வஞ்சிபோன்மருங்குல்குரும்பைபோற்கொங்கை வாங்குவேய்வைத்தமென்பணைத்தோள், அஞ்சொலார்பயிலுமயோத்திமாநகரினழகுடைத்தன்றெனவறிவான் *

இஞ்சிவானோங்கியிமையவருலகங்காணியவெழுந்ததொத்துளதே ... ...*

(இ-ள்.) பஞ்சி-செம்பஞ்சிக்குழம்பில்—வால்- வெண்மைநிறமுள்ள—மதியை-சந்திரனை—ஊட்டிய அனைய-சேர்த்ததைஒத்த—படர்- செம்மைநிறம்படரும்—உகிர்-நகங்களையுடைய—பங்கயம்- செந்தாமரைமலர்போன்ற செங்கால்-செம்மைநிறமுள்ளபாதங்களையும்--வஞ்சிபோல்-பூங்கொடிபோலும்—மருங்குல்-இடையினையும்—குரும்பைபோல்-குரும்பைபோலும்—கொங்கை-தனங்களையும்—வாங்கு- வளைந்த—வேய்வைத்த- மூங்கிலைவைத்ததுபோலும்—மென்-மெல்லிய—பணை-திரட்சியாகிய—தோள்-தோள்களையும்—அம்-அழகிய—சொலார்- சொல்லையுமுடைய மடவார்—பயிலும்-வாசஞ்செய்கின்ற—அயோத்தி-அயோத்தியென்னும்—மாநகரின்-பெரியநகரம்போல—அழகு உடைத்து அன்று எனை-அழகினையுடையதோவன்றோவென—அறிவான்-அறியும்பொருட்டு—இமையவருலகம் - தேவருலகினை—காணிய-காணுதற்காக—இஞ்சி-அந்நகரைச்சூழ்மதிலானது—வான்- ஆகாயத்தின்மேலாக—ஓங்கி-உயர்ந்து—எழுந்தது ஒத்துளது- எழுந்தாற்போன்றுளது-எ-று. [இஞ்சி-எழுவாய். எழுந்ததொத்துளது-பயனிலை.] (௰)

உடைத்து-அன்று- என்பவற்றின்கண் ஓகாரங்களைக்கூட்டுக.

அஞ்சொலார்பயிலும்-அயோத்திமாநகரமென்று நகர்க்கஞ்சொலாரையடைகொடுத்துச்சொல்லியது. தேவருலகமும் அஞ்சொலாரால் அழகுபெற்றுவிளங்குமென எல்லாருஞ்சொல்லுவாராதலின் இவ்வஞ்சொலாரையுடைய நகர்போல அழகுடைத்தோ அன்றோவென்றுகாண எழுந்ததொக்குமென்பது இததன்கருத்து.

கோலிடையுலகமளத்தலிற்பகைஞர்முடித்தலைகோடலின்மனுவி ... ...*

னூனெறிநடக்குஞ்செவ்வையின்யார்க்குநோக்கருங்காவலின்வலியின் ...*

வேலொடுவாள்விற்பயிற்றலின்வெய்யசூழ்ச்சியின்வெலற்கரும்வலத்தில் .*

சால்புடையுயர்விற்சக்கரநடத்துந்தன்மையிற்றலைவரொத்துளதே. ... *

(இ-ள்.) கோல்இடை-அளவுகோலால்—உலகம்- உலகத்தவரால்—அளத்தலில்-அளக்கப்படுதலாலும்—பகைஞர் - அதன்கட்பகைஞருடைய—முடி-முடிகளையுடைய—தலை- தலைகளை—கோடலின்- யந்திரங்களாற் கொள்ளப்படுதலாலும்—மனுவின் நூல்நெறி - சிற்பநூலின்வழியே—நடக்கும்- செய்விக்கும்—செவ்வையில் - அழகாலும்— இயார்க்கும் - எல்லோருக்கும்—நோக்கு-அரும் - கண்ணாலும்நோக்குதற்கரிய—காவலின் - காவலினாலும்—வலியின் - பலத்தினாலும்—வேலொடு தாமேதொடர்ந்துகொல்லும்வேலும்—வாள்- வாளும்—வில்- வில்லும்—பயிற்றலின்- பயின்றதினாலும்—வெ

யின்சூழ்ச்சியின் - விரும்பத்தக்க உபாயங்களையுடைமையானும்—வெலற்கு-பகைவரால்வெல்லுதற்கு—அரும் - அரிதாகிய—வலத்தின் - வெற்றியினையுடைமையானும்—சால்புடை - பெருமையுடைய—உயர்வில் - உயர்ச்சியினானும்—சக்கரம் - சக்கரங்கள்—நடத்துந்தன்மையில் - சுழலப்பட்டிருக்குந்தன்மையானும்—தலைவர் ஒத்து உளது - மதில்அரசனையொத்திருக்கின்றது—எ-று. [மதில்-எழுவாய். ஒத்துளது-பயனிலை. அரசர்-செயப்படுபொருள்]()

இது-சிலேடை உவமையாதலால் அரசனைக்குறிக்குமிடத்து கோவிடையுலகமளத்தல்-செங்கோலால் உலகத்தையளத்தல். பகைஞர் முடித்தலைக்கோடலின் - பகைவர் தலைகளையறுத்தஞ்செய்கை. மநுவினானெறி - மநுவாற்செய்தநூல்நெறி வேலொடுவாள் விற்பயிற்றல். தொழிற்பயிற்றல். சூட்சி-விசாரித்தல். வலம் வெற்றிஉயர்வு மேம்பாடு சக்கரம்-ஆணைச்சக்கரம்.

மதிலினிடத்துச்சூழ்ச்சியாவது-புறத்தோரறியாமற் புகுதல் போக்குற்குச்செய்தசுருங்கைவழிமுதலானவை.

சினத்தயில்கொலைவாள்சிலைமழுத்தண்டுசக்கரந்தோமரமுலக்கை... ... ✻
கனத்திடையுருமின்வெருவருங்கவண்கலென்றிவைகணிப்பிலகொதுகின் ✻
இனத்தையுமுவணத்திறையையுமியங்குங்காலையுமிதமலநினைவார் ... ... ✻
மனத்தையுமெறியும்பொறியுளவென்றான்மற்றினியுணர்த்துவதெவனோ...✻

(இ-ள்.) சினத்து - போர்முகத்திற் கோபமுள்ள—அயில் - வேலும்—கொலை - கொலைசெய்யும்—வாள் - வாளும்—சிலை - வில்லும்—மழு - மழுவும்—தண்டு - தடியும்—சக்கரம் - சக்கரமும்—தோமரம் - கைவேலும்—உலக்கை - உலக்கையும்—கனத்து இடை - மேகத்தின்கண்விளங்கும்—உருமின் - இடியைப்போல—வெருவரும் - அச்சத்தைக்கொடுக்கும்—கவண்கல்என்றிவை - கவண்கல்லுமென்று சொல்லப்பட்ட இவை—கணிப்பு இல - எண்ணில்லாதன—கொதுகின் இனத்தையும் - கொசுகின் இனங்களையும்—உவணத்து இறையையும் - கருடனையும்—இயங்கும்காலையும் - செல்லுங்காற்றினையும்—இதம் அலம் - இதமல்லாதவைகளை—நினைவார் - நினைப்பவர்களுடைய—மனத்தையும் - மனத்தையும்—எறியும் - வெட்டத்தக்க—பொறியுளவென்றால் - இயந்திரங்களும்மதிலின்கணுளவென்றால்—இனி உணர்த்துவது எவனோ - அம்மதிற்காவலிவ்வாறென்று சொல்லுவதெவ்வாறு—எ-று. [உணர்த்துவது - எழுவாய். எவன் - வினைப்பயனிலை. அயிலுக்குச்சினமாவது-தீப்போத.] (௫௨)

கொதுகினினத்தையும் உவணத்திறையையும் இயங்குங்காலையும் இதமல நினைவார் மனத்தையும் என்றது சிறுமை பெருமை. நுட்பம் அதிநுட்பத்தையும் உணர்த்திற்று. இதுவுமது காற்று-பரிசமுள்ளது. மனம்-பரிசமில்லாதது. இப்பொறிகள் சிற்பர்கள் இரும்புகளாற்செய்தமைத்தவை.

பூணினும்புகழேயமையுமென்றினையபொற்பினின்றுயிர்நனிபுரக்கும்... ✻
யாணரொண்டிசைக்குமிருளறவிமைக்குமிரவிதன்குலமுதலிருபர் ... ...✻
சேணையுங்கடந்துதிசையையுங்கடந்துதிகிரியுஞ்செந்தனிக்கோலும் ... ✻
மாணையுங்கடக்குமாயினுநகருக்கணியெனவியற்றியதன்றே... ... ...✻

(இ-ள்.) பூணினும்-ரத்தினாபரணங்களினும்—புகழே-கீர்த்தியே—அமையுமென்று-ஆபரணமாகப் பொருந்துவதென்றாகருதும்—இனைய-இத்தன்மையுள்ள—பொற்பின்நின்று-பொலிவோடுநின்று—உயிர்-உயிர்களை—நனி மிகுதியும்—புரக்கும்-இரட்சியாநின்ற—யாணர்-நன்மையையுடைய—எண்திசைக்கும்-அட்டதிக்குகளினிடத்துமுள்ள—இருள் அற-இருளகல—இமைக்கும்-ஒளிரும்—இரவிதன்குலம்-சூரியகுலத்திலுண்டாகிய—முதனிருபர்-தலைமைபொருந்திய அரசருடைய—திகிரியும்-ஆக்கினைச்சக்கரமும்—தனி-ஒப்பற்ற—செங்கோலும்-நீதியும்—ஆணையும்-ஆக்கினையும்—சேணையுங்கடந்து-ஆகாயத்தையுங்கடந்து—திசையையுங்கடந்து-திக்குகளையுங்கடந்து—கடக்குமாயினும்-இவ்வுலகத்தையுங்கடக்குமேயானாலும்—நகருக்கு-நகருக்கு—அணியென-அழகாக—இயற்றியது-இம்மதில்செய்யப்பட்டிருக்கின்றது-எ-று. [மதில்-தோன்றாஎழுவாய். இயற்றியது-பயனிலை.] (௰௫)

பூண்-உடலொன்றற்கே அழகுசெய்யும். புகழ்-அணிந்தவர்க்கு உலகமுழுவதும் விளங்கும் அழகைச்செய்யுமாதலின் அதனையணிவதே அமையுமென்று உட்கொண்ட பொலிவோடுநிற்றலின் பூணினும் புகழே அமையுமென்றார்.

புகழானது-கல்வி-வீரம்-ஈகை-என்னு மிம்மூன்று காரணங்களாலுண்டாவது. இதனை "ஈந்தேகடந்தான் காய்ந்தேகடந்தான் நன்னூலாய்ந்தேகடந்தான்" என்னுஞ்செய்யுளானுமுணர்க. புகழ் என்பதற்கு புகழுக்கு ஏதுவாகிய குணமெனப் பொருள்கூறினுமமையும். அவ்வாறுகூறுங்கால் புகழ் ஆகுபெயர் இதனைத் தோன்றிற்புகழொடு தோன்றுக என்னுங்குறளுரையானுமுணர்க.

அன்னமாமதிலுக்காழிமால்வரையையலைகடல்சூழ்ந்தனவகழி ... ... *
பொன்விலைமகளிர்மனமெனக்கீழ்போய்ப்புன்கவியெனத்தெளிவின்றிக் .. *
கன்னியரல்குற்றடமெனயார்க்கும்படிவருங்காப்பினதாகி ... ... *
நன்னெறிவிலக்கும்பொறியெனவெறியுங்கராத்ததுநவிலலுற்றதுநாம் ... *

(இ-ள்.) அன்ன-அத்தன்மையாகிய—மாமதிலுக்கு-பெரியமதிலை—மால் ஆழிவரையை-பெரியசக்கிரவாளகிரியை—அலைகடல்-அலைபுதிரையுடைய பெரும்புறக்கடல்—சூழ்ந்தன-சூழ்ந்ததையொத்ததாய்ச் சூழ்ந்திருக்கும்—அகழி-அகழியானது—பொன்விலைமகளிர்-பொன்விலைகூறித்தம் அல்குல்நலம்விற்கும் பரத்தைமாதர்—மனம்என-மனம்போல—கீழ்போய்-ஆழ்ந்ததும்—புன்கவியென-முற்றக்கல்லாதோருடைய புன்மையாகிய கவியென—தெளிவுஇன்றி-தெளிவில்லாததும்—கன்னியர்-குலமகளிராகிய கன்னியர்களுடைய—அல்குல்தடமென-அல்குற்றடம்போல—யார்க்கும்-யாவர்க்கும்—படிவுஅரும்-தோய்தற்கரிய—காப்பினதாகி-காவலானதுமாய்—நல்நெறி-நல்லொழுக்கத்திற்செல்லவொட்டாது—விலக்கும்-விலக்குகின்ற—பொறிஎன-ஐம்பொறிகள்போல—எறியும்-எறிகின்ற—கராத்தது-முதலைத்திரள்களையுடையது—நாம்நவிலல்உற்றது-இவ்வகழியின்பெருமை இனிநம்மாற்சொல்லப்பொருந்திற்று-எ-று. [அகழி-எழுவாய். உடையது-பயனிலை. ஈராம்-செயப்படுபொருள்] (௰௬)

அகழியானது ஆழ்ந்து தெளிவின்றிக் காவலானதுமாய் நம்மாற்சொல்லலுற்றதெனமுடிக்க. சக்கிரவாளகிரி ஏழுகடற்கும் அப்புறமிருப்பது. பெரும்புறக்கடல் அம்மலையைச் சூ

ழ்ந்திருப்பது.—விலைமாதர் மனத்தினுண்மை தெரியப்படாததாயிருப்பதினாலே மனமெனக் கீழ்போயென்றும், குலமாதராகியகன்னியர் பருவமுற்றிருப்பினும் விவாகஞ்செய்தாலன்றி ஒருவருஞ்சேரக்கூடாதமுறையைப்பற்றிக் கன்னியரல்குற்றடமென்றுங்கூறினார்,

கன்னியரென்பது-இளைஞர்களென்னும்பொருள்கொண்டு விவாகஞ்செய்யாத பெண்களைக்குறித்துநிற்பது.—சூழ்ந்தது-அன்ன என்றபாலது விகாரவகையால் சூழ்ந்தனவென நின்றது. மதிலுக்கு உருபு மயக்கம். அல்குற்றடம் ஒருசொற்றன்மையது. கராம் என்பது அத்துச்சாரியைபுணர்ந்து கராத்தது என நின்றது. கரா- கராம்- இவ்விரண்டு முதலையைக் குறித்தது.

வேறு

ஏகுகின்றதங்கணங்களோடுமெல்லைகாண்கிலா... ... ... *
நாகமொன்றகன்கிடங்கைநாமவேலைபாமென ... ...*
மேகமொண்டுகொண்டெழுந்துவிண்டொடர்ந்தகுன்றமென் *
றாகநொந்துநின்றுதாரையம்மதிற்கண்வீசுமே... ... ... *

(இ-ள்.) மேகம்- மேகமானவை—ஏகுகின்ற- நீளமாகச் செல்லாநின்ற—தங்கணங்கள் - தங்கள்கூட்டங்கள்— ஓடும்எல்லை - ஓடுகின்றவழியை—காண்கிலா-நாடாமல்—நாகம்- நாகலோகம்வரைக்கும்—ஒன்று-பொருந்திய—அகல்-அகன்ற—கிடங்கை-அகழியினையே—நாமம்-அச்சத்தைத்தரும்—வேலைபாமென- கடலாமென்றெண்ணி—மொண்டுகொண்டு - அதன்கணுள்ள நீரைமொண்டுகொண்டு—எழுந்து- மேலெழுந்து—விண்தொடர்ந்த-ஆகாயத்தையளாவிய—குன்றமென்று- மலையென்றெண்ணி.—அம்மதிற்கண்- அம்மதிலினிடத்து—ஆகம்நொந்து- உடல்வருந்தியேறி— நின்று-குலமுதிருகிறவனாகும் படிந்திருந்து பின்பு மேலுயர்ந்து—தாரை-மழையை—வீசும்-பொழியும்-எ-று [மேகம்-எழுவாய். வீசும்-பயனிலை. தாரை-செயப்படுபொருள். ஏற்றமை.] (௰௫)

காணிலா என்பது -இடையில் குச்சாரியைபெற்று அக்குற்றிய உகரங்கெட்டு மேல் வந்த மொழிமுதலுயிரோடிக் காண்கிலாவெனநின்றது.

இதனால் மதிலினுயரமும் அகழியின் அகலமும் ஆழமுங்கூறினார். மேகம் அகழியைக்கண்டளவில் அதனைசமுத்திரமாகக்கருதி அந்தப்பிராந்தியினால் தங்கணம் ஓடும்வழியையும்நாடாமல் நீரையுண்டு அவ்வாறே மதிலினை மலையாகக்கருதிப் பொழியுமெனக்கூறுக.

அந்தமாமதிற்புறத்தகத்தெழுந்தலர்ந்தநீள்... ... ... *
கந்தநாறுபங்கயத்தகானமானமாதரார் ... ... *
முந்துவாண்முகங்களுக்குடைந்துபோனமொய்ம்பெலாம் ...*
வந்துபோர்மலைக்குமாமதில்வளைத்தல்மானுமே ... ...*

(இ-ள்.) அந்தமாமதில்- அந்தப்பெரியமதிலின்—புறத்து- வெளிப்புறத்துவிளங்கும்—அகத்து- அகழியினகத்து—எழுந்துஅலர்ந்த-எழுந்துமலர்ந்த—நீள் - மிகுந்த—கந்தம்நாறும் - மணங்கமழும்—பங்கயத்த - தாமரையாகிய—கானம்-வனமானது—மானம்-மானமுள்ள—மாதரார்- அந்நகர்மகளிர்களுடைய—வாள்-ஒளிபொருந்திய—முகங்களுக்கு-முகங்களுக்கு—முந்து-முன்னாளில்—உடைந்துபோன-தோற்றுப்போன—மொய்ம்பு எலாம்-வலியெல்லாவற்றையும்—வந்து-பின்வந்து—போர்மலைக்க - நீட்டுப்போர்

செய்ய—மாமதில்- அப்பெரியமதிலை—வளைத்தல்- சூழ்ந்ததை—மானும்-ஒப்பாகும்-எ-று. [கானம் எழுவாய். ஒத்தது-பயனிலை. வளைந்தது- செயப்படுபொருள்.] (௰௬)

செந்தாமரைமலர்கள் மாதர்கள் முகங்களுடன் போர்செய்ய மதிலைச்சூழ்ந்துகொண்டதை ஒத்தது என்பதிதன்கருத்து.

மதில்வெளிப்புற மென்றதனால்-அகழி யெனப்பொருள் கூறப்பட்டது.

சூழ்ந்தநாஞ்சில்சூழ்ந்தவாரைசுற்றுமுற்றுபாரெலாம் ... ... *
போழ்ந்தமாகிடங்கிடைக்கிடந்துபொங்கிடங்கர்மா... ... ... *
தாழ்ந்தவங்கவாரியிற்றடுப்பொணாமதத்தினா ... ... *
லாழ்ந்தயானைமீதெழுந்தழுந்துகின்றபோலுமே ... ... *

(இ-ள்)சூழ்ந்த-மிகுந்த—நாஞ்சில்-நாஞ்சில்களுடன்--சூழ்ந்த-சூழப்பட்ட—ஆரை-அம்மதிலை—சுற்றும்- சூழ்தலைப்பொருந்திய—முற்றுபார் எலாம்-எல்லாநிலத்தையும்—போழ்ந்த - அகழ்ந்ததுபோன்ற—மாகிடங்கிடை-பெரியஅகழியினிடத்து—கிடந்து-இருந்து—பொங்கு- பொங்குகின்ற—இடங்கர்மா- முதலைசள்உள்ளேயாழ்ந்து மீட்டுமேலெழுவது (எவ்வாறெனில்) —தாழ்ந்த- ஆழ்ந்த—வங்கம்-கப்பல்களையுடைய—வாரியில்-சமுத்திரத்தினிடத்தில்—தடுப்பொணா- தடுக்கவொண்ணாத—மதத்தினால்- மதமயக்கத்தினாலே—ஆழ்ந்த-அமிழ்ந்திய—யானை -யானைகள்—மீதெழுந்து- மேலெழுந்து—அழுந்துகின்றபோலும்- மீட்டும்அழுந்துகின்றனபோலிருக்கின்றன-எ-று. [முதலை. ஆழ்ந்தெழுதல்-எழுவாய். போலிருக்கின்றன-பயனிலை] ()

நாஞ்சில் ஆவது எப்புறத்துக்கும் நடுவாயெய்தி மறையுஞ்சூட்டு.

முதலை ஆழ்ந்தெழுவது யானையாழ்ந்தெழுவதுபோன்றிருக்கின்றதென்பது இதன் கருத்து.

ஈரும்வாளின்வால்விதிர்த்தெயிற்றிளம்பிறைக்குலம் ... ... *
பேரமின்னிவாய்விரித்தெதிர்ந்தகட்பிறங்குதீ ... ... *
சோரவொன்றையொன்றுமுன்றொடர்ந்துசீறிடங்கர்மா ...*
போரில்வந்துசீறுகின்றபோரரக்கர்போலுமே ... ...*

(வ-ள்.) ஈரும்வாளில்- ஈர்கின்றவாள்போல்—வால்விதிர்த்து- வாலைவிதிர்த்து—எயிறு - பற்களாகிய—இளம்- இளமைபொருந்திய—பிறைக்குலம்-பிறைக்கூட்டங்கள்—மின்னிப்பேர-ஒளிவிட்டுவிளங்க—வாய்விரித்து-வாயைத்திறந்துகொண்டு—எதிர்ந்த-எதிர்த்த—கண்-கண்களினின்றும்—பிறங்குதீ-விளங்குந்தீப்பொறிகள்—சோர-சொரிய—ஒன்றையொன்று-ஒன்றைமற்றொன்று—முன்றொடர்ந்து- எதிரிட்டுத்தொடர்ந்து—சீறு-சீறுகின்ற—இடங்கர்மா-முதலைகள் (விளங்குவதெவ்வாறெனில்)—போரில்வந்து-போர்க்களத்தின்கண்வந்து—சீறுகின்ற - ஒருவரையொருவர்பார்த்துச்சீறுகின்ற—போரரக்கர்-போர்செய்கின்றஅரக்கர்போலும் -எ-று. [முதலை - எழுவாய். போலும்-பயனிலை. அரக்கர் -செயப்படுபொருள்.] (௰௮)

பற்களது பன்மையைநோக்கி அதனுக்குவமையாகிய பிறையையும் பன்மையாகப்பிறைக்குலமென்றார்.

ஆருமன்னம்வெண்குடைக்குலங்களாவருங்கரா... ... ...*
கோளெலாமுலாவுகின்றகுன்றமன்னயானையாத்... ... . *
தாருலாவுபங்கயத்தரங்கமுந்துரங்கமா ... ... *
வாளும்வேலுமீனமாகமன்னர்சேனைமானுமே ... ...*

(இ-ள்.) ஆரும்-அவ்வகழியிற்பயின்றுகொண்டிருக்கும்—அன்னம்-அன்னப்பட்சிகள்—வெண்குடைக்குலங்களா-வெண்குடைக்குலங்களாகவும்—வருங்கரா-அதிர்சஞ்சரிக்கும் முதலைகளெல்லாம்—கோளெலாம்-சூரியன்முதலியநவகோள்களும்—உலாவுகின்ற- ஊரும்படியான உயர்வுள்ள—குன்றம் அன்ன-மலையொத்த—யானையா- யானைகளாகவும் — தாருலாவு - கொடிகள் பொருந்திய—பங்கயம்- தாமரைகளையுடைய—தரங்கமும்-அலைகளும்—துரங்கமா- குதிரைகளாகவும்—வாளும்- வாள்களும்—வேலும்-வேல்களும்—மீனமாக-மீனங்களாகவும்—மன்னர்சேனைமானும்- பொருந்தியமன்னர்சேனையைப்போல்மொத்துவிளங்கும் எ-று. [அகழி - எழுவாய். மானும்-பயனிலை சேனை-செயப்படுபொருள்] (௰௧)

தரங்கத்திற்குத் தாருலாவு பங்கயமென அடைகொடுத்தது துரங்கமுங்கலனை கடிவாளமுதலியன்வற்றுற் புனையப்பட்டு நின்றதென்று அறிதற்கென்க.

விளிம்புதெற்றிமுற்றுவித்துவெள்ளிகட்டியுள்ளுறப் ... ... *
பளிங்குபொற்றலத்தகட்டடுத்துறப்படுத்தலில்... ... ... *
தளிர்ந்தகற்றலத்தொடச்சலத்தினைத்தனித்துறத்... ... ... *
தெளிந்துணர்த்துகிற்றுமென்றதேவராலுமாவதே ... ... *

(இ-ள்.) விளிம்பு-அவ்வகழியினருகே—தெற்றி-திண்ணைகள்—வெள்ளிகட்டி-வெள்ளியாற்கட்டி—முற்றுவித்து-முடிப்பித்து—உள்உற-உள்ளெலாம்பொருந்த—பொன்தலம்-பொன்தலமாகிய—தகடு-தகட்டினிடத்து—பளிங்கு- படிகம்—அடுத்துஉற- அடுத்தடுத்துப்பொருந்த—படுத்தலின்-படுத்திருத்தலினால்—தளிர்ந்த-விளங்கிய—கல்தலத்தொடு-அப்படிக்கல்லுடன்—அச்சலத்தினை-அவ்வகழியிலுள்ள நீரை—தனித்துஉற-தனித்துப்பொருந்த—தெளிந்து - இதுபடிககல் இதுநீரெனப் பகுத்தறிந்து—உணர்த்துகிற்றுமென்றல்-சொல்லுவோமென்பது—தேவராலுமாவதே - தேவர்களாலுமாகாது-எ-று. [உணர்த்துகிற்றுமென்றல் எழுவாய். ஆவதோ-பயனிலை] (௰௨)

தேவர்களாலுமாகாதென்றுசொல்லவே ஏனையோர் தெரிந்துணர்த்தமாட்டாரென்பது தானேபோதரும்-இதுவுமது,

அன்னநீரகன்கிடங்குசூழ்கிடந்தவாழியைத்... ... . *
துன்னிவேறுசூழ்கிடந்ததூங்குவீங்கிருட்பிழம் ... ... *
பென்னலாமிறும்புசூழ்கிடந்தசோலையென்னிலப் ... ...*
பொன்னின்மாமதிற்குடுத்தநீலவாடைபோலுமே... ... *

(இ-ள்) அன்ன - அத்தன்மையாகிய—நீர் - நீரையுடைய—அகல்-அகன்ற—கிடங்கு-அகழியை—சூழ்கிடந்த-சூழ்ந்துகிடக்கின்றனவாகிய—இறும்பு-மலைகள்— சூழ்கிடந்த - சூழ்ந்துகிடக்கும்—சோலை - வனமானது—ஆழி

யை-பெரும்புறக்கடலை—துன்னி - நெருங்கி—வேறு சூழ்கிடந்த- வேறாகச் சூழ்ந்துகிடக்கும்—தூங்கு-பொருந்திய—வீங்கு- மிகுந்த—இருள்- இருளினது—பிழம்பு - கூட்டம்—என்னலாம்-என்றுசொல்லும்படி ஆகும்—எவ்வணில்-என்னுமிடத்தில்—பொன்னின் - பொன்னாலாகிய— அம்மாமதிட்கு- அப்பெரியமதிலுக்கு—உடுத்த - சுற்றிய—நீலஆடைபோலும் - நீலத்திரைச்சீலையைப்போலும்-எ-று [சோலை-எழுவாய். போலும்-பயனிலை ஆடை-செயப்படுபொருள்.] (உக)

அகழியின்புறத்துச் சூழ்ந்திருக்குஞ்சோலைகள்பெரும்புறக்கடலைச் சூழ்ந்திருக்கும். இருள்போலிருக்கின்றதுமன்றிப் பொன்மதிலுக்காகச்சூழக்கட்டிய கறுப்புத்திரைச்சீலைபோ லிருக்குமென்றுங்கூறுக.

அகழியைச்சூழ்ந்த மலைகளுஞ் சோலைகளும் விளங்கியதன்மை இவ்வாறென்பது இதன்கருத்து.

எல்லைநின்றவென்றியானையென்னநின்றுமுன்னமால் ... ...*
ஒல்லையும்பர்நாடளந்ததாளின்மீதுயர்ந்தவால்... ... ... *
மல்லன்ஞாலம்யாவுநீதிமாறுறாவழக்கினூ... ... ...*
னல்லவாறுசொல்லும்வேதநான்குமன்னவாயிலே... ... *

(இ-ள்.) வாயில்-வாயில்கள்—எல்லைநின்ற-நான்குதிக்குகளினிடத்திருக்கும்—வென்றி-வெற்றிபொருந்திய—யானை என்ன-யானைகள்போல—நின்ற-நிலைபெற்றுநின்றன அன்றியும்—முன்னம்- முற்காலத்தில்—மால்-திருமால்—ஒல்லை - விரைவாக—உம்பர்நாடு-மேலுலகத்தை—அளந்த - அளந்த—தாளின்-காலைப்போல—மீது உயர்ந்த - மேலாகவுயர்ந்தன (இவ்வாறுயர்ந்ததுமன்றி)—மல்லல் - வளப்பத்தையுடைய— ஞாலம்யாவும் - உலகங்களெல்லாம்—நீதிமாறுறா-நீதிமாறுறாத—வழக்கினால்- முறைமையினாலும்— நல்லவாறு - நன்னெறிகளை—சொல்லும்- சொல்லுகின்ற—நான்குவேதம்- நான்குவேதங்களையும்—அன்ன - ஒத்திருக்கின்றன—எ - று. [வாயில்-எழுவாய். அன்ன-பயனிலை. வேதம்-செயப்படுபொருள்] (உஉ)

பகைவரால் அழிக்கப்படாத திண்மையும் நிலைமையுமுடைய தென்பதுதோன்ற எல்லைநின்றவென்றியானை யென்னநின்றவென்றும், நல்லமுறைமைகளை உலகத்தோர் அறிந்துகொண்டு ஒழுக்கத்தினின்று மாறுபடாம னடப்பதற்கு வேதங்கள்வழியாயிருப்பதுபோல உலகத்தோர் அறிந்து நடப்பதற்கு நன்னெறி இதன்வழியாகச் செல்லுவதினாலும் வேதமன்னவென்றுங் கூறினார்.

தாவில்பொற்றலத்திலீற்றவத்திலோர்கடங்குநாட் ... ...*
பூவுயிர்த்தகற்பகப்பொதும்பர்புக்கொதுங்குமால்... ... ...*
ஆவியொத்தவன்புசேவல்கூவவந்தணைந்திடா...... ... ... *
ஓவியப்புறாவின்மாடிருக்கவூடுபேடையே... ... ... *

(இ-ள்.) ஆவியொத்த-தன்னுயிரொத்த—அன்பு-அன்பினையுடைய—சேவல்-ஆண்புறாவானது—கூவ-தான்கூவவும்—வந்துஅணைந்திடா - வந்துசேராமல்—ஓவியம்-அக்கோபுரசிகரங்களில்சித்திரமாகச்செய்யப்பட்ட—புறாவின்மாடு- பெட்டைப்புறாவினிடத்தில்—இருக்க - இருக்கக்கண்டு—ஊடு-ஊடிய—பேடை-பெட்டைப்புறாவானது—நல்-நல்ல—தவத்தினோர்கள்-தவமுள்ளவர்கள்—தங்கும்-வாசமாயிருக்கும்—தாஇல்- குற்றமில்லாத—பொ

ன்தலத்து-பொன்னுலகத்தி லிருக்கும்—தாள்-தாள்களையுடைய—பூ-மலர் மாலைகளை—உயிர்த்த-ஈன்ற—கற்பகம்-கற்பகமென்னும் பஞ்சதருக்கள் நிறைந்துள்ள—பொதும்பர்-சோலையில்—புக்கு-ஒதுங்கும்—சென்று-சேரும்-எ-று. ஏ-ஈற்றசை. ஆல்-அசை. [பேடை-எழுவாய். ஒதுங்கும்-பயனிலை]

பெட்டைப்புறு கூவவும், சேவற்புறுவராமல் சித்திரப்புறப் பேடையினிடத் திருக்கக்கண்டூடித்தெய்வலோகத்திலிருக்குங்கற்பகச்சோலையிற்போயிருக்குமெனக்கூட்டியுரைக்க

புகு-என்னு முதனிலை திரிந்து புக்கு என்க்காலங்காட்டிநின்றது. அணைந்திடாது-என்னும் வினையெச்சவிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது.

பஞ்சதருக்களாவன-அரிச்சந்தனம்-கற்பகம்-சந்தானம்-பாரிசாதம்-மந்தாரம்-என்பவை.

கல்லடித்தமுக்கிவாய்பளிங்கரிந்துகட்டிமீ... ... ...*
எல்லிடப்பசும்பொன்வைத்திலங்குபன்மணிக்குலம்...*
வில்லிடக்குயிற்றிவாள்விரிக்கும்வெள்ளிமாமரம் ... .. *
புல்லிடக்கிடத்திவச்சிரத்தகால்பொருத்தியே... ..... *

(இ-ள்.) கல்-அடித்து-கற்களையடித்து—அமுக்கி-அதைத்தலத்திலமுக்கி—பளிங்கு-பளிங்குகளை—அரிந்து-சீவி—வாய்-வாயிலே—கட்டி-கட்டி—மீது-மேலே—எல்லிட-ஒளிவிட—பசும்பொன்-பசும்பொற்றுகள்—வைத்து-சுவர்வைத்து—இலங்கு-விளங்கிய—பல்-பலவாகிய—மணிக்குலம்-மணித்திரள்களை—வில்லிட-ஒளிவிட—குயிற்றி-அச்சுவரின்கண் பதித்து—வாள்விரிக்கும்-ஒளியைவீசும்—வெள்ளிமாமரம்-வெள்ளியாலாகிய பெரிய மரங்கள்போலமைத்த வெள்ளிப்பலகைகள்—புல்லிட-பொருந்த—கிடத்தி-சேர்த்து—வச்சிரத்த-வச்சிரங்களாலாகிய—கால்-திருநிலைக்கால்கள்—பொருத்தி-நாட்டி-எ-று. (உ௪)

இதுகுளகம்-இதுவுமது.

மரகதத்திலங்குபோதிகைத்தலத்துவச்சிரம்... ... ... *
புனைதபுத்தடுக்கிமீதுபொன்குயிற்றிமின்குலா... ... ...*
நிரைமணிக்குலத்தினாளிநீள்வகுத்தவொளிமேல் ... ... *
விரவுகைத்தலத்திலுய்த்தமேதகத்தின்மீதரோ ... ... *

(இ-ள்.) மரகதத்து-அத்திருநிலைக்கால்களின்மேல் மரகதங்களாற்செய்யப்பட்டு—இலங்கு-விளங்குகின்ற—போதிகை-போதிகைகளைவைத்து—தலத்து-அத்தலத்தின்மேல்—வச்சிரம்-வச்சிரங்களை—புனைதபுத்து-பழுதுநீக்கி—அடுக்கி-உத்திரப்பாக்களாகச்சேர்த்தடுக்கி—மீது-அதன்மீது—பொன்குயிற்றி-பொன்னாற்செய்த தகடுகளமைத்து—மின்குலாம்-ஒளிவிளங்கும்—நிரை-வரிசையாக—மணிக்குலத்தின்-பலமணிகளாலும்—ஆளி-ஆளிவடிவாகச்செய்த—நீள்வகுத்த-பெருந்தூண்வைத்த—ஒளிமேல்-நீண்ட நிலமாகச்செய்த—ஒழுங்குள்ள-ஆதாரவுத்தரத்தின்மேல்—மேதகத்தின்மீது-கோமேதகத்தாற்செய்த—விரவுகைத்தலத்தில்-பரந்தகொடுங்கைகளை—உய்த்து-வைத்ததன்மேல்-எ-று. (உ௫)

எழ்பொழிற்குமேழ்நிலத்தலஞ்சமைத்ததென்னநூ ...*
லூழுறக்குவித்தமைத்தவும்பர்செம்பொன்மேய்ந்துமீச் *
சூழ்சுடர்ச்சிரத்துநன்மணித்தசும்புதோன்றலால் ... *
வாழ்நிலக்குலக்கொழுந்தைமௌலிசூட்டியன்னவே... *

(இ-ள்.) எழ்பொழிற்கும்-எழுலகத்திற்கும்—எழ்நிலத்தலம்-எழுநிலத்தலத்தை—சமைத்ததென்ன- உண்டாக்கியதுபோல—நூல்- சிற்பநூலிற்சொல்லும்—ஊழ்உற- விதிக்குச்சரியாகப்பொருந்த—குவித்து அமைத்த- குவித்துக்கட்டிய—உம்பர்- அதன்மேல்—செம்பொன் - செம்பொன்னால்—மேய்ந்து-மூகடுமேய்ந்து—மீசூழ்சுடர் - அதன்மேலொளிசூழ்ந்த—சிரத்து-சிகரத்தில்—நல்-நல்ல—மணி- மாணிக்கங்களால்செய்யப்பட்ட—தசும்பு-குடங்கள்—தோன்றலால்-தோன்றவைத்தலால் (அக்கோபுரமானது) வாழ்-வாழும்—நிலக்குலக்கொழுந்தை- பூமிபிராட்டிக்கு—மௌலிசூட்டியன்ன- முடிசூட்டினாற்போன்றன-எ-று. [கோபுரம்-எழுவாய். அன்ன- பயனிலை. மௌலி-செயப்படுபொருள்] (உசு)

இந்நகரத்தை முன்னம் நிலமகள் முகமோ என்றதற்கேற்பக் கோபுரத்தை மகுடமாகக்கூறினார்.

வேறு.

திங்களுங்கரிதெனவெண்மைதிற்றிய...... ... ...*
சங்கவெண்சுதைபுடைத்தவளமாளிகை ... ...*
வெங்கடுங்கால்பொரமேக்குநோக்கிய .. .. *
பொங்கிரும்பாற்கடற்றரங்கம்போலுமே ... .*

(இ-ள்.) திங்களும்- சந்திரனும்—கரிதென -கரிதென்றுசொல்லும்படி—வெண்மைதிற்றிய- வெளுமைநிறம்பொருந்தப்பூசிய—வெண்சங்கம்சுதை- வெண்சங்குச்சாந்தத்தைபுடைய—தவளம் - தவளநிறமுடைய—மாளிகை- மாளிகைகள்(விளங்குதலெவ்வாறெனில்)—வெம்-வெவ்விதாகிய—கடுங்கால்பொர-கடுங்காற்றடித்தலால்—மேக்குநோக்கிய- மேனோக்கியெழுந்த—பொங்கு-பொங்கிவரும்—இரும்- பெருமையையுடைய—பாற்கடல்-திருப்பாற்கடலின்—தரங்கம்போலும் - அலைபோலுமிருக்கின்றது-எ-று [மாளிகை-எழுவாய். போலும்-பயனிலை. தரங்கம்-செயப்படுபொருள்.] (உஎ)

உம்மை சிறப்பும்மை கரியது எனற்பாலது விகாரவகையால் கரிதென்நின்றது.உடைய என்னும் பெயரெச்சவிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. கரிது என்றற்கு முதனிலை கருமை. பொர-எச்சத்திரிபு.

புள்ளியம்புறவிறைபொருந்துமாளிகை ... *
தள்ளருந்தமணியத்தகடுமேய்ந்தன ... ... *
எள்ளருங்கதிரவனிளவெயிற்குழாம்... ... ... *
வெள்ளியங்கிரியிசைவிரிந்தபோலுமே ... ... *

(இ-ள்.) புள்ளி-புள்ளிநிறம்பொருந்திய—புறவு- புறாக்கள்வாசஞ்செய்யும்—இறை-இறப்புகளை—பொருந்தும்- பொருந்திய—மாளிகை-மாளிகை

ளின்மேல்—தள்ளரும்-நீக்குதற்கரிய—தமனியம்தகடுமேய்ந்தன-பதிக்கப்பட்டிருக்கும்பொற்றகடுகள்—வெள்ளியங்கிரியிசை-வெள்ளிமலைமேல்—விரிந்த-பரந்த—என்அரும்-இகழ்ச்சியில்லாத—கதிரவன்-சூரியனுடைய—இளவெயிற்குழாம்போலும்-இளங்கதிர்க்கூட்டத்தை யொக்கும்—எ-று. எ-ற்றசை [தகடுகள்-எழுவாய். போலும்-பயனிலை. வெயிற்குழாம்-செயப்படுபொருள்] (உஅ)

புள்ளிஅம்-வெள்ளிஅம்-இவற்றிலிருக்கும் அம் என்பவைசாரியை. புரு என்பது புற என நின்று உச்சாரியைபெற்றுப்புறவுஎனநின்றது.

அம்-என்பதை அழகெனக்கொண்டால் என்னையெனின் சான்றோராற்பெரும்பாலுமாட்சியின்மையின் சிறந்ததன்றென்க.

வயிரநற்கான்மிசைமரகதத்துலாஞ் ... ... *
செயிரறப்போதிகைகிடத்திச்சித்திர ... ... *
மூயிர்பெறக்குயிற்றியவும்பர்நாட்டவர் ... ...*
அயிருறவிமைப்பனவளவில்கோடியே ... ... *

(இ-ள்.) வயிரம்-வயிரமணிபாலாகிய—நல்-நல்ல—கால்மிசை-தூண்களின்மேல்—மரகதத்துலாம்-மரகதத்துலாக்கட்டைகளும்—செயிர்அற-குற்றமற—போதிகைகிடத்தி-மரகதப்போதிகைகளுங்கிடத்தி—உயிர்பெற-உயிரைப்பெற்றிருப்பதுபோற் றோன்றும்—சித்திரம்-சித்திரங்களை—குயிற்றிய-எழுதப்பட்டனவாகி—உம்பர்நாட்டவர்-தேவர்களும்—அயிர்உற-ஐயப்படும்படி—அளவுஇல்கோடி-அநேகங்கோடிமாளிகைகள்—இமைப்பன விளங்குவன-எ-று எ-ற்றசை. [மாளிகை-எழுவாய். இமைப்பன-பயனிலை.

சந்திரகாந்தத்தின்றலத்தசந்தனப் ... ...*
பந்திசெய்தூணின்மேற்பவளப்போதிகை ... *
செந்தனிமணித்துலாஞ்செறிந்ததிண்சுவர் ... *
இந்திரநீலத்தவெண்ணில்கோடியே ... ... *

(இ-ள்.) சந்திரகாந்தத்தின்-சந்திரகாந்தக்கற்கள்பதித்த—தலத்த-நிலத்தையுடையனவாகியும்—பந்தி-வரிசையாக—செய்-நிறுத்திய—சந்தனத்தூணின்மேல்-சந்தனத்தூண்களின்மேல்—பவளப்போதிகை-பவளப்போதிகைகளையும்—செந்தனிமணித்துலாம்-சிவந்த ஒப்பற்றமாணிக்கத்துலாக்கட்டைகளையும்—செறிந்த-நெருக்கமாகவுடையன வாகியும்—திண்-வலிதாகிய—சுவர்-சுவர்கள்—இந்திரநீலத்த-இந்திரநீலரத்தினங்களால்செய்யப்பட்டனவாகியும் விளங்குமாளிகைகள்—எண்ணில்கோடி-பலகோடியாம்—எ-று. [மாளிகைகள்-எழுவாய். எண்ணில்கோடியாம்-பயனிலை.] (கூய)

உம்மைகள் விகாரத்தாற்றொக்கன நீலரத்தினங்களுக்குள் இந்திரநீலரத்தினம் சிறந்தது. இதன்குணம் ஒருகுடப் பசுவின்பாலில் இம்மணியைப்போட்டால் அப்பால்முழுவதும் நீலநிறமாயிருக்குமெனச் சான்றோர் நூற்களிற்கூறியிருக்கின்றனர்.

பாடகக்காலடிபதுமத்தொப்பன ... ... *
சேடளாத்தந்தியனசெய்பவாயின... ... ... *

நாடகத்தொழிலனநடுவுதுய்யன... ... ... *
வாடகத்தோற்றத்தவளவிலாதன ... ...*

(இ-ள்) பாடகம்- பாடகம்அணிந்த—கால்அடி-காலடிகளாகிய பாதங்கள் —பதுமத்துஒப்பன-செந்தாமரைமலர்களையொப்பனவாகியும்—சேடரை- இளைஞர்களை—தழீஇயன - தழுவிக்கொண்டிருப்பனவாகியும்—செய்யவாயின- செம்மைநிறம்பொருந்திய வாயிலையுடையனவாகியும்— நாடகத்தொழிலன-பரதத்தொழிலுள்ளனவாகியும்—நடுவுதுய்யன-வெளிபோன்றஇடையினையுடையனவாகியும்— ஆடகத்தோற்றத்த-பொன்போலியன்றகாட்சியையுடையினவாயுமிராநின்ற சித்திரமுள்ளமாளிகைகள்—அளவிலாதன-அளவில்லாதவைகளாயிருக்கின்றன—எ-று. அடி-கீழ்ப்புறமானது—பதுமத்துஒப்பன-தாமரைமலரைஒப்பனவாகி—பாடகம்-விசித்திரமானதொழிலுள்ளவைகளாகிய—கால் - தூண்களையுடையவைகளும்— சேடரைத்தழீஇயன - அஸ்திவாரத்தினால் ஆதிசேஷின்முடியைப் பொருந்தியவைகளும்—செய்யவாயின-ஒழுங்குபடச்செய் தமைத்தவைகளும்— நாடு- யாவரும் வியப்புடன் பார்க்கும்படியான—அகத்தொழிலன - உட்புறத்தொழிலுள்ளவைகளும்— நடுவு நடுப்புறம்— துய்யன-இலைநூற்கும்பஞ்சுபோன்ற தொழில்நாணயமுள்ளவைகளும்—ஆடகம் - பொன்மயமாகிய—தோற்றத்த - காட்சியையுடையனவாகியும் விளங்காநின்ற மாளிகைகள்—அளவு இலாதன - அளவில்லாதவைகளிருக்கின்றனஎனப்பொருள்கூறுவதுமொன்று-எ-று. [மாளிகைகள்-எழுவாய். அளவிலாதன-பயனிலை] (௬௧)

ஒப்பனமுதலிய முற்றுகள் எச்சமுற்றுகள். தழுவிய எனற்பாலது விகாரவகையால் தழீஇயன எனநின்றது.

புக்கவர்கண்ணிணைபொருந்துறுவிலாவி ... ...*
தொக்குடன்றயங்கிவிண்ணவரிற்றோன்றலால் ... *
திக்குறநினைப்பினிற்செல்லுந்தெய்வவீ ... ...*
டொக்கநின்றிமைப்பனவும்பர்நாட்டினும் ... *

(இ-ள்.) புக்கவர்- அம்மாளிகைகளைப் பார்க்கப்புகுந்தவர்கள்—கண்இணை -இரண்டுகண்களும்—பொருந்துஉறு-இமைகள்பொருந்தாமல்—தொக்கு-அவர்கள்மேனி—ஒளியுடன்- இம்மாளிகையொளியோடுகலந்தொன்றாக—தயங்கி-விளங்கி—விண்ணவரில் - தேவரைப்போல— தோன்றலால்- தோற்றுவித்தலால்—நினைப்பினில் - நினைத்தவளவில்—திக்குஉற - எட்டுத்திசைகளின்கண்ணும்—செல்லும்-செல்லுகின்ற—தெய்வவீடு-தெய்வவிமானத்தை—ஒக்கநின்று - ஒப்பாகத்தோன்றி—உம்பர்நாட்டினும் - மேலுலகமாவும்— இமைப்பன-ஒளிவீசுகின்றன-எ-று. [மாளிகைகள்-எழுவாய். இமைப்பன-பயனிலை.] (௬௨)

அணியிழைமகளிருமலங்கல்வீரருந் ... ...*
தணிவனவறநெறிதணிவிலாதன ... ... *
மணியினும்பொன்னினும்வனைந்தவல்லது ... *
பணிபிறிதியன்றனபாங்குமில்லையே ... ... *

(இ-ள்.) (அம்மாளிகைகள்) அணியின-ஆபரணங்களணிந்துள்ள—மகளிரும் - மாதர்களாலும்—அலங்கல்-மாலைகள்சூடிய—வீரரும்-ஆடவர்களாலும்—தணிவன - நெருங்கப்பட்டுள்ளவைகளும்— அறநெறி தணிவு இலாதன-குறைவில்லாததருமநெறிகளை உடையவைகளுமாகி—மணியினும் - மணிகளாலும்—பொன்னினும்-பொன்னினாலும்—வனைந்தவல்லது- செய்யப்பட்டவைகளேயல்லாமல்—பிறிது - வேறுநபொருளால்—பணி இயன்றன-தொழில்செய்யப்பட்ட மாளிகைகள்—யாங்கும் இல்லை - எவ்விடத்துமில்லை -எ-று. ஏ- ஈற்றசை. [மாளிகை-எழுவாய். இல்லை-பயனிலை] (௩௫)

வானுறநிமிர்ந்தனவரம்பில்செல்வத்த ... ... *
தானுயர்புகழனதயங்குசோதிய... ... ... *
ஊனமிலறநெறியுற்றவெண்ணிலாக் ... ... *
கோனிகர்குடைகடங்கொள்கைசான்றன ... ... *

(இ-ள்.) (அம்மாளிகைகள்) வான்உற- ஆகாயமளவும்பொருந்த—நிமிர்ந்தன உயர்ந்தவைகளும்—வரம்பு இல- அளவில்லாத—செல்வத்த-செல்வத்தையுடையன்வைகளும்—உயர்புகழன- உயர்ந்தபுகழையுடையனவைகளும்—தயங்கும்-விளங்குகின்ற—சோதிய ஒளியையுடையனவைகளும்—ஊனம் இல்-பழுதில்லாத— அறநெறியுற்ற - அறநெறியைப்பொருந்தியவைகளுமாய்—கோன்-செல்வங்களால் அரசனை—நிகர்- ஒத்த—எண்ணிலா-அளவில்லாத—குடிகள் தங்கொள்ளை-மிகுந்தகுடிகளால்—சான்றன-நிறைவுபெற்றன-எ-று [மாடங்கள்-எழுவாய் சான்றன-பயனிலை.] தான் இடைச்சொல். (௩௬)

அருவியிற்றாழ்ந்தலங்குதாமத்த ... ... *
விரிமுகிற்குலமெனக்கொடிவிராயின ... ... *
பருமணிக்குவையனபசும்பொற்கோடிய ... *
பொருமயிற்கணத்தனமலையும்போன்றன ... *

(இ-ள்) (அம்மாளிகைகள்) அருவியிற்றாழ்ந்து-அருவிகளைப்போலத்தாழ்ந்து—அலங்கும்- அசையும்—தாமத்த-முத்துமாலைகளையுடையனவாகியும்—விரிமுகில்குலமென- பரந்தமேகக்கூட்டம்போல—கொடி-நீலத்துகிற்கொடிகளால்—விராயின- கலக்கப்பட்டுள்ளவைகளாயும்—பருமணிக்குவையின- பருத்தமணிக்குவைகளையுடையனவாகியும்—பசும்பொன்கோடிய- பசும்பொன்சிகரங்களையுடையனவாகியும்—பொரும்-பொருந்திய—மயில்கணத்தன- மயிலகூட்டம்போன்ற மாதர்களையுடையனவாயும்—மலையும்போன்றன-மலையினையும்ஒப்பனவாம்-எ-று. [மாளிகைகள்-எழுவாய். போன்றன-பயனிலை மலை-செயப்படுபொருள்.] (௩௭)

பசும்பொன்-மாற்றுயர்ந்தபொன்.

அகிலிடுகொழும்புகையளாய்மயங்கின ... ... *
முகிலெலாம்வேற்றுமைதெரிகலாமுழுத் ... ... *
துகிலெலாநெடுங்கொடிக்குலமின்னுவ ... ... *
பகலிற்பின்னணிப்பரப்புபோன்றவே ... ... *

(இ-ள்.) அகிலிடு- அகிற்கட்டையினால் இடப்பட்ட—கொழும்புகை- செழுமையாகியபுகையுடனே—அளாய்மயங்கின- கலந்தவைகளாய்—முகிலொடு-நீருண்டமேகத்துடன்—வேற்றுமை-வேறுபாடு—தெரிகலா- தெரியாத—முழுத்துகிலொடு-பெரியதுகிற்கொடியுடன்— நெடுங்கொடிச்சூலமின்னுவ-நெடியகொடிச்சூலங்கள் மின்னுகின்றவை—பகலிடு- பகற்போதிலிடுகின்ற—மின்- மின்னலினுடைய—அணி- அழகிய—பரப்புபோன்றன-விரிவைப்போன்றிருக்கின்றன—எ-று [சூலமின்னுவ- எழுவாய். போன்றன-பயனிலை. மின்பரப்பு-செயப்படுபொருள்.] (௧௬)

அகிற்புகையுடன்கலந்த கொடியாடை மேகம்போன்றிருப்பதினால் அதைச்சேர்ந்தசூலம்பகலில்விளங்கு மின்னல்போன் றிருக்கின்றனவென்பது இதன்கருத்து.

துடியிடைப்பணைமுலைத்தோகையன்னவர்... ...*
அடியிணைச்சிலம்புபூண்டரற்றுமாளிகைக் ... *
கொடியிடைத்தரளவெண்கோவைசூழ்வன... ...*
கடியுடைக்கற்பகங்கான்றமாலையே ... ... *

(இ-ள்) துடியிடை-துடிபோலுமிடையும்—பணைமுலை - பருத்தமுலைகளையும்—தோகையன்னவர் - மயில்போலுஞ்சாயலினையுமுடையமகளிர்கள்—அடியிணை-பாதங்களில்—சிலம்பு பூண்டு- சிலம்புகள்பூணப்பட்டு—அரற்றும்-ஒலித்துக்கொண்டிராநின்ற—மாளிகை-மாளிகைகளின்மேல்கட்டிய—கொடியுடை- கொடிகளினிடத்து—வெண் - வெண்மையாகிய—தரளக்கோவைசூழ்வன - முத்துமாலைகள் சூழ்வனவெல்லாம்—கடியுடை - மணம்பொருந்திய—கற்பகம் - கற்பகம்விருக்ஷம்—கான்ற - கக்கிய—மாலையே மாலையினையொத்தன-எ-று. [கோவை-எழுவாய். ஒத்தன- பயனிலை எச்சம்-மாலை-செயப்படுபொருள்] (௧௭)

காண்வருநெடுவரைக்கதலிக்கானம்போற் ... *
கோணிமிர்பதாகையின்குழாந்தழைத்தன .. ... *
வாணனிமழுங்கிடமடங்கிவைகலும் ... ... *
சேண்மதிதேய்வதக்கொடிகடேய்க்கவே ... ...*

(இ-ள்.) நெடுவரை- பெரியமலையினிடத்து—காண்வரு - காணப்படுகின்ற—கதலிக்கானம்போல்- வாழைக்காடுபோல்—கோள்நிமிர் - நவக்கிரகமண்டலவரைக்கும்உயர்ந்த—பதாகையின்குழாம்-பதாகைத்திரள்—தழைத்தன-தழைந்திருக்கின்றவை—வாள் - ஒளி—நனி-மிகவும்—மழுங்கிட- மழுங்கும்படி—மடங்கி-வளைந்து—வைகலும்- நாடோறும்—சேண்-ஆகாயத்திற்செல்லுகின்ற—மதி-சந்திரன்—தேய்வது-தேய்கின்றதாயிருக்கின்றது (அவ்வாறுதேய்வது —அக்கொடிகள்- அந்தக்கொடிகள்—தேய்க்கவே -தேய்ப்பதினாலோயாங்கண்டிலம்-எ-று. (௧௮)

கொடிகளையுஞ் சந்திரன்தேய்கின்றதையுங்கண்டதன்றி அக்கொடிகள்தேய்க்கும்போதுயாங்கண்டிலமென்பதுகருத்து.

பொன்றிணிமண்டபமல்லபூத்தொடர் ... ... *
மன்றுகளல்லனமாடமாளிகைக் ... ... *
குன்றுகளல்லனமணிசெய்குட்டிம... ... ... *
மூன்றிகளல்லனமுத்தின்பந்தரோ ... ...*

(இ-ள்.) பொன்றிணி-பொன்றிணிந்த—மண்டபம்-மண்டபங்களும்—அல்ல-அவையன்றி—பூத்தொடர்-பொலிவுபொருந்திய—மன்றுகள்-மன்றங்களும்—அல்லன-அவையன்றி--மாடமாளிகை-மாடமாளிகைகளாகிய—குன்றுகள்-குன்றுகளும்—அல்லன-அவையன்றி—மணிசெய்-நவமணிகள்பதித்த—குட்டிமம்மூன்றில்கள்-சமதளங்களாகியமூன்றில்களும்—அல்லன-அவையன்றி—முத்தினபந்தர்-முத்தினபந்தரும்அந்நகரத்துளவுள-எ-று. (௬௬)

மண்டபமுதலியவைகளை எழுவாயாகக்கொண்டு-உள-என்னுமொருசொல்கூட்டி-அதனைப்பயனிலையாகக்கொள்க;

மண்டபங்களல்ல-முத்தின்பந்தராம் மன்றுகளல்லன-முத்தின்பந்தராம். மாளிகைக்குன்றுகளல்லன-முத்தின்பந்தராம். முன்றில்களல்லன-முத்தின்பந்தராம். இவ்வாறு பொருள்கூறுவதுமொன்று. இவ்வாறு கூறுங்கால் மண்டபமுதலியவை எழுவாயும், முத்தின்பந்தராமென்பது-பயனிலையுமாகக்கொள்க.

மண்டபமுதலியவைகள் முத்துக்கோவைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றமையால் முத்துப்பந்தல்போ லிருக்கின்றனவென்பது இதன்கருத்து.

மின்னெனவிளக்கெனவெயிற்பிழம்பெனத் ... *
துன்னியதமனியத்தொழிறழைத்தவக் ... ... *
கன்னிநன்னகர்நிழல்கதுவலாலரோ ... ... *
பொன்னுலகாயதப்புலவர்வானமே ... ... *

(இ-ள்.) மின்என-மின்னைப்போலவும்—விளக்குஎன-விளக்கைப்போலவும்—வெயிற்பிழம்புஎன-வெயிற்பிழம்பைப்போலவும்—துன்னிய-ஒளிபொருந்திய—தமனியம்-பொன்னாற்செய்யப்பட்ட—தொழில்தழைத்த-தொழில்நிறைந்த—கன்னி-அழிவில்லாத—நல்நகர்-இந்தநல்லநகரினுடைய—நிழல்-நிழலானது—கதுவலால்-சென்றுதாக்குதலால்—புலவர்-தேவர்களுறையும்—வானம்-ஆகாயத்தின்கணுள்ள (உலகம்)—பொன்உலகுஆயது-பொன்உலகம்ஆயிற்று-எ-று. அரோ-அசை. ஏ-ஈற்றசை. [வானம்-எழுவாய். ஆயது-பயனிலை] (௬௭)

எழுமிடத்தகன்றிடையொன்றியெற்பிற் ... *
பொழுதிடைபோதலிற்புரிசைப்பொன்மதி ... *
லழன்மணிதிருத்தியவயோத்தியாளுடை ... *
நிழலெனப்பொலியுமாநேமிவான்சுடர். ... ...*

(இ-ள்.) எழுமிடத்து-சூரியன்உதயமாகும்போது—அகன்று-இந்நகரத்தின்ஒளிசென்று—இடையொன்றி-அந்தச்சூரியனிடத்துப்பொருந்தி—எற்படுபொழுது-பகற்காலம்நீங்கும்போது—இடைபோதலின்-இந்நகரத்தினிடத்துமீண்டுவிழுதலினால்—அழல்மணி-மாணிக்கமணிகள்—திருத்திய-

பதித்த—புரிசைப்பொன்மதில்-பொன்னலாகியமதில்சூழ்ந்த—வயோத்தியாருடை - அயோத்தியாநகரத்தை யாட்சியாகவுடைய—நிழலெனு - ஒளிபோல—பொலியும்- விளங்குகின்றது—கதிவான்சுடர் - வட்டமாகியசூரியன்-எ-று. ஆம்-சாரியை [சுடர்-எழுவாய். பொலியும்-பயனிலை.] (௬௧)

எழுமிடத்து-சூரியன் உதயமாகும்போது அகன்றவொளியை நீங்கி இடையொன்றிஅயோத்தியை யடுத்துவரும்போது ஒளியைப்பொருந்தி எற்படுபொழுதிடை பகற்காலம்நீங்கும்போது போதலின் ஒளியைநீங்கிவிடுதலின் அயோத்தியினொளியென்றுசொலவும்படிபொலியும் என்றுரைப்பதுமொன்று. சூரியனிடத்து இயல்பாக ஒளியிருக்குமானால் உதயமாகும்போதே யொளியிருக்கவேண்டும் அவ்வாறின்மையால் அயோத்திநகரத்து ஒளியைக்கொண்டே சூரியன்விளங்குமென்பதுகருத்து. புரிசைப்பொன்மதில் ஒருபொருட்பன்மொழி.

ஆய்ந்தமேகலைவரம்பொன்மாளிகை ... ... *
வேய்ந்தகாரகிற்புகையுண்டமேகம்போய்த் ... *
தோய்ந்தமாகடனறுந்தூயநாறுமேற் ... ... *
பாய்ந்ததாரையினிலைபகரல்வேண்டுமோ .... *

(இ-ள்) ஆய்ந்த- திருத்தமாகச்செய்யப்பட்ட—மேகலையவர்- மேகலையினையணிந்தமாதர்வாசஞ்செய்யும்—அம்-அழகிய—பொன்-பொன்னாற்செய்த—மாளிகை-மாளிகைகளிடத்து—வேய்ந்த- அளகத்திற்கு ஊட்டவும் பூசிக்கொண்டகளபம் புலரவும் அமைத்த—கார்- கருமையாகிய—அகிற்புகை-அகிற்புகையை—உண்ட-பொருந்திய—மேகம் - மேகங்கள்—போய்-நீருண்ணச்சென்று—தோய்ந்த-படிந்த—மாகடல்-பெரியகடலானது—நறும் -மணத்தையுடைய—தூயம் - அப்புகைவாசனையே—நாறுமேல் - மணக்குமானால்—பாய்ந்த - அம்மேகங்கள்பொழிந்த—தாரையினிலை- மழையினுடையதன்மையை—பகரல்வேண்டுமோ- சொல்லவேண்டுமோ-எ-று. வேண்டுவதில்லையென்பது குறிப்பெச்சம். [யாம்-தோன்றா-எழுவாய். பகரல்வேண்டுமோ-பயனிலை.] (௬௨)

பொழிந்த வெனற்பால தொடைநோக்கிப்பாய்ந்தவென நின்றது. அம்மேகங்கள்பொழிந்தநீரும் மணக்குமென்பதிதன்கருத்து.

குழலிசைமடந்தையர்குதலைக்கோதையர் ... *
மழலையங்குழலிசைமகரயாழிசை ... ... *
எழிலிசைமடந்தையரின்சொலின்னிசை ... ... *
பழையர்தஞ்சேரியிற்பொருநர்பாட்டிசை ... *

(இ-ள்) குழலிசை- கடையொத்துவருகின்ற அளகத்தையுடைய—மடந்தையர்-பெண்களின்—குதலை - குதலைச்சொற்கள்—அம்-அழகிய—குழலிசை- வேய்ங்குழலினிசைபோலாம்—கோதையர் - கடைகூடிய அளகத்தையுடையபெண்களின்—மழலை- மழலைச்சொற்கள்—மகரயாழிசை- மகரயாழிசைபோலாம்—எழிலிசை-அழகுள்ளபருவமிசைந்த—மடந்தையர்-மாதர்களுடைய—இன்-இனிய—சொல்இன்இசை- சொல்லாகிய இனிய இசையானது—பழையர்தம் - கள்விலைஞருடைய—சேரியில்- சேரியிலிருக்கும்—பொருநர்-கூத்தருடைய—பாட்டிசை-பாட்டிசைபோலாம்-எ-று. [குதலை-

எழுவாய். போலாம்-பயனிலை. வேய்ங்குழலிசை-செயப்படுபொருள் மழலை-எழுவாய் போலாம்-பயனிலை மகரயாழிசை-செயப்படுபொருள் இன்சொலின்னிசை-எழுவாய். போலாம்-பயனிலை. பாட்டிசை-செயப்படுபொருள்]

போலாமெ.்னுஞ்சொல் வருவித்துரைக்கப்பட்டது. மழலையாவது-எழுத்துவடிவு பெற்றுத்தோற்று மிளையவர் வார்த்தை ஆயினு மிம்மழலை பேரிளம்பெண்வரையிலுங்கூறத்தகும்

குதலை எழுத்துவடிவங்கூடாதபுன்சொல்-குழலிசைமடந்தையர் வேய்ங்குழலிசையானது எழிலின்சமடந்தையரின்சொல் லின்னிசையை யொக்குமென்றும்-குதலைச்கோதையர்மகரயாழிசைபொருநர்பாட்டிசையை யொக்குமென்றும் பொருள்கூறினும். அன்றியுமவேய்ங்குழலிசையும் மகரயாழிசையும் இன்சொலின்னிசையும் பாட்டிசையும் அந்நகரத்தின்கண்விளங்குமெனப் பொருள்கூறினும்அமையும்.

கண்ணிடைக்கனல்சொரிகளிறுகால்கொடு ... *
மண்ணிடைவெட்டுவவேட்டுமைந்தர்கள் ... *
பண்ணைகள்பயிலிடங்குழிபடைப்பன ... ... *
சுண்ணமக்குழிகளைத்தொடர்ந்துதூர்ப்பன ... *

(இ-ள்.) கண்ணிடை- கண்களினிடமாக—கனல் - தீப்பொறிகளை—சொரி-சொரிகின்ற—களிறு- யானைகள்—கால்கொடு - கால்களால்—மண்ணிடை-பூமியினிடத்து—வெட்டுவ - வெட்டுவன (அதனால்)—வேட்டுமைந்தர்கள்-விளையாட்டுகளைவிரும்புமைந்தர்கள்—பண்ணைகள்-கூட்டங்கள்—பயில்இடம் - விளையாடுமிடங்களில்—குழிபடைப்பன - குழிகளுண்டாகின்றன—சுண்ணம் - அவர்களணிந்துகொண்டிருக்கும் நறும்பொடிகளே—தொடர்ந்து - தொடர்ந்து வீழ்ந்து—அக்குழிகளைத்தூர்ப்பன - அந்தக்குழிகளைத் தூர்ப்பனவாம்—எ-று. [சுண்ணம்-எழுவாய். தூர்ப்பன-பயனிலை. குழிகள்-செயப்படுபொருள்.] (௪௪)

பந்துகண்மடந்தையர்பயிற்றுவாரிடை ... ... *
சிந்துவமுத்தினமவைதிரட்டுவார் .. .. *
சந்தமில்சிலதியராற்றுகுப்பைகள் ... ... *
சந்திரனொளிகெடத்தழைப்பதண்ணிலா ... *

(இ-ள்.) பந்துகள்-பந்துகளை—பயிற்றுவார்-ஆடுகின்றவர்களாகிய—மடந்தையர்இடை-மாதர்களிடத்தினின்றும்—முத்து இனம்-முத்தினங்கள்—சிந்துவ-சிந்துவன—அவை-அம்முத்தினங்களை—அந்தம்இல்-அளவில்லாத—சிலதியர்-தாதிகள்—திரட்டுவார்- ஓரிடத்தில்சேர்ப்பார்கள்—ஆற்று- அவ்வாறு சேர்க்கப்பட்டனவாகிய—குப்பைகள் - குப்பைகள்—சந்திரன் - சந்திரனுடைய—ஒளி-பிரகாசமானது—கெட-மழுங்கும்படி—தண்- குளிர்ச்சிபொருந்திய—நிலா-ஒளியினால்—தழைப்ப- தழைக்கப்பட்டிருப்பன-எ-று. [குப்பை-எழுவாய். தழைப்ப-பயனிலை.] (௪௫)

அரங்கிடைமடந்தையராடுவாரவர் ... ... *
கருங்கடைக்கண்ணயில்காமர்நெஞ்சினை ... ... *

உருங்குவமற்றவருயிர்களன்னவர் ... ... *
மருங்குல்போற்றேய்வனவளர்வதாசையே ... *

(இ-ள்.) மடந்தையர் - மடந்தையர்கள்—அரங்குஇடை - நாடகசாலையினிடத்தில்—ஆடுவார் - ஆடுகின்றார்கள்—அவர் - அவர்களுடைய—கரும் - கருமைபொருந்திய—கடைக்கண் - கடைக்கண்களாகிய—அயில் - வேல்கள்—காமர் - காமுகருடைய—நெஞ்சினை - மனதை—உருங்குவ - வருத்துவன—(அதனால்) மற்றவர் - அக்காமுகருடைய—உயிர்கள் - உயிர்களானவை—அன்னவர் - அம்மாதர்களுடைய—மருங்குல் போல் - இடைகள் போல—தேய்வன - மெலிகின்றன—ஆசை - அக்காமுகருக்குண்டாகு மாசையோ வெனில—வளர்வது - மெலிவின்றிமேலுமேலும்விர்த்தியாகின்றது - எ-று. எ-சுற்றசை [ஆசை - எழுவாய். வளர்வது - பயனிலை.] (சகா)

உருக்குவ எனற்பாலது - உருங்குவ என மெலித்தல்விகாரமாயிற்று. மருங்குல்போற் றேய்வன என்றமையின் அம்மாதர் தனம்போல் ஆசைவளர்வன எனக்கூறினும்அமையும். கடைக்கண் - கண்ணினது கடையென ஆறும்வேற்றுமைத்தொகையாகக்கொள்க.

பொழிவனசோலைகள்புதியதேன்சில ... ...*
விழைவனதென்றலுமிஞிறுமெல்லென ... ...*
நுழைவனவன்னவநுழையதோவெவாடு ... ... *
குழைவனபிரிந்தவர்கொதிக்குங்கொங்கையே ... *

(இ-ள்) சோலைகள் - சோலைகளானவை—பொழிவன - பொழிவனவாகிய—புதிய - புதுமையாகிய—தேன் - தேனை—விழைவன - விரும்புகின்றவைகளாகிய—சிலமிஞிறு - சிலவண்டுகளினிசையும்—தென்றலும் - தென்றற்காற்றும்—மெல்லென - மந்தகதியாக—நுழைவன - சாளரவழியால்நுழைகின்றன—அன்னவை - அவ்விரண்டும்—நுழைய - அவ்வாறுநுழைவதினால்—பிரிந்தவர் - பிரிந்திருக்குமடவாருடைய—கொதிக்கும் - வெதும்புகின்ற—கொங்கை - தனங்கள்—தோவொடு - வருத்தத்தோடு—குழைவன - மெலிகின்றன—எ-று. எ-சுற்றசை [கொங்கை - எழுவாய். குழைவன - பயனிலை.] (சஎ)

மிஞிறு - ஆகுபெயர். நுழைய - எச்சத்திரிபு.

இறங்குவமகரயாழெடுத்தவின்னிசை... ... *
நிறங்கிளர்பாடலானிமிர்வவவ்வழி... ... ... *
கறங்குவவள்விசிகருவிகண்முகிழ்த்... ... ... *
துறங்குவமகளிரோடோதுங்கிள்ளையே... ... ...*

(இ-ள்.) இறங்குவ - விளைந்தனவாகிய—மகரயாழ் - மகரயாழினிடத்து—எடுத்த - விரலாலேகவர்ந்தெழுந்த—இன்னிசை - இனியஇசையானவை—நிறங்கிளர் - வண்ணம்விளங்குகின்ற—பாடலால் - மிடற்றோசையினதுபாட்டொடு—நிமிர்வ - ஒத்திருப்பன—அவ்வழி - அம்முறைக்குச்சரியாக—வள்விசி - வார்கட்டிய—கருவி - முழவங்கள் — கறங்குவ - ஒலிப்பன—(அவ்விசையைக்கேட்டு) மகளிரோடு - மடவாரோடு—ஓதும் - பேசும்—கிள்ளை - கிள்ளைகள்—கண்முகிழ்த்து - கண்களைமூடிக்கொண்டு—உறங்குவ - துயில்வனவாம் எ-று. [கிள்ளைகள் - எழுவாய். உறங்குவ - பயனிலை] (சஅ)

இறங்குவமகரயாழ்-அவரோகண ஆரோகண கிரமமுள்ள யாழெனப் பொருள்கூறினும் அமையும். இதுவுமன்றி-இறங்குவ மகரயாழென்பதற்கு உலகத்தவர் தலையிறங்கிவணங்கச்செய்வனவாகிய மகரயாழெனக்கூறினும் அமையும். இவ்வாறு கூறுங்கால் இறங்குவ எனற்பாலது இறங்குவ என மெலித்தல்விகாரமாயிற்றெனக்கொள்க.— இதனை நரம்பின் யாழ்கொண்டு கடலகம் வணக்கலுற்றுனென்னும் சிந்தாமணிக்காந்திருவதத்தையாரிலம்பகத்தில்-உகம்வது-செய்யுளிற்காணக. எடுத்த இன்னிசை-விரல் கவர்ந்தெடுத்த கீதம் என்பதனையும்-காந்திருவதத்தையா ரிலம்பகத்தில்காண்க. பாடலால்-வேற்றுமைமயக்கம்.

மகரயாழ்-கஉ-நரம்புகளையுடையது-இள்ளையே யிவ்வாறுபின் கின்னரமிதுனம்- அசுணம்-என்னும் பட்சிகளின் தன்மையும் ஏனையோர்தன்மையும் எடுத்துக்கூறவேண்டுவதில்லை.

குழைவரிச்சிலைநுதற்கொவ்வைவாய்ச்சியர் ... ... *
பதயுகத்தொழில்கொடுபழிப்பிலாதன... ... ... *
ததைமலர்த்தாமரையன்னதாளினு ... ... *
லுதைபடச்சிவப்பனவுரவுத்தோள்களே... ... *

(இ-ள்) குழை-குழைபொருந்தியதாய்—வரி-கட்டினையுடைய—சிலை-வில்லைத்தவில்போன்ற—நுதல் - நெற்றியினையும்—கொவ்வை- கோவைக்கனிபோலும்—வாய்ச்சியர்-வாயினையுமுடையமடவார்களுடைய—பதயுகம்-சாந்திகக்கூத்து விநோதக்கூத்து என்னுமிருவகையாகிய—தொழில்கொடு -பாதத்தொழிலபயின்று—பழிப்புஇலாதன- பழிப்பில்லாதனவாகிய— ததை-இதழ்கள் நெருங்கிய—மலர்த்தாமரையன்ன - செந்தாமரைமலரையொத்த—தாளினால் - பாதங்களால்—உதைபட- உதைபடுதலினாலே— உரவுத்தோள்கள்-ஆடவர்களுடையவலியதோள்கள்—சிவப்பன- செம்மைநிறமடைப்பன-எ-று. ஏகாரம் [தோள்கள்- எழுவாய். சிவப்பன-பயனிலை] (௪௯)

இது மனைவியினுடைய ஊடலைநீக்கத் தொடங்கியகாலத்தில்நிகழ்ந்தசெய்கை. அக்காலத்து உதைத்தலால் மகளிர்க்குக் குற்றமில்லையென்பது அறநூற்றுணிபு. தலைமகனுந்தலைமகளுமோரமளிக்கட் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலந்ததற்காரண மில்லையாகவும் காதல்கைமிகுதலாலுண்ணியதோர் காரணமுளதாக வுட்கொண்டதனை யவன்மேலேற்றி யவள் ஊடுதல்-கூத்திருவகை யென்பதனைச்சாந்திகக்கூத்தே விநோதக்கூத்தென்றாய்ந்துறவகுத்தனன் அகத்தியன்றனே-என்னுஞ் சூத்திரத்தானுணர்க. இதனை விரித்துரைப்பிற்பெருகும்-காந்திருவதத்தையாரிலம்பகம் -ராஅய-வது-செய்யுளுரையில் கண்டுகொள்க-பாதம்-என்பது-விகாரவகையால் பதமெனநின்றது.

பொழுதுணர்வரியவப்பொருவின்மாநகர்த் ... *
தொழுதகைமடந்தையர்சுடர்விளக்கெனப்... ...*
பழுதறுமேனியைப்பார்க்குமாசைகொல்... ... *
எழுதுசித்திரங்களுமிமைப்பிலாதவே... ... *

(இ-ள்) பொழுதுஉணர்வுஅரிய -பொன்மணியொளிகளின் மிகுதியால்பகற்பொழுதும் இராப்பொழுதும் அறிதற்கரிய—பொருவில் - ஒப்பில்லாத—அம்மாநகர் - பெரிய அந்நகரிடத்திராநின்ற—தொழுதகை - கற்பினால் தொழத்தக்க தன்மையினையுடைய—மடந்தையர்-மாதருடைய—சுடர் ஒளிபொருந்திய—விளக்கென-விளக்கைப்போல—பழுது அறு-குற்றமற்ற—மேனியை- சரீரத்தை—பார்க்கும்- பார்க்கவேண்டுமென்கிற—ஆசைகொல்- ஆசையினாலோ—எழுது-மாளிகைகளிலெழுதிய—சித்திரங்களும்- ஓவியங்

களும்—இமைப்புஇலாத - இமைப்பில்லாத தன்மையையுடையன—எ-று. ஏ-ஈற்றசை. [சித்திரம்-எழுவாய். இமைப்பிலாத- பயனிலை.] சொல்-ஐபத்தின்கண்வந்தது. (௫௰)

மணியொளி-நிலவொளியையு மழுக்குவதினால் பொழுதுணர்வரியவென்றார், நல்லாரணி கலம்பகலைச்செய்ய என்னுஞ் சிந்தாமணிச்செய்யுளானுமுணர்க.

துணிமலர்த்திருமகடயங்குமாளிகை... ... ...*
யிணரொளிபரப்பிநின்றிருடீரப்பன ... ... *
திணிசுடர்நெய்யுடைத்தீவிளக்கமோ ... ...*
மணிவிளக்கல்லனமகளிர்மேனியே ... ...*

(இ-ள்.) துணி - செழுமையாகிய—மலர் - மலரின்கண்வாழும்—திருமகள் - திருமகளானவள்—தயங்கும் - விளங்காநிற்கும்—மாளிகை - மாளிகைகளானவை—இணர்-கற்றையாகிய—ஒளி- ஒளிகளை—பரப்பிநின்று-விரித்துநின்று—இருள்-இருளை—துரப்பன- நீக்குகின்றன—திணி- நெருங்கிய—சுடர்-சுடர்பொருந்திய—நெய்யுடை- நெய்யையுடைய—தீவிளக்கமோ- தீவிளக்கங்களினாலோ—மணிவிளக்கோ - மாணிக்கத்தீபங்களின் ஒளியினாலோ—அல்லன-இவ்விரண்டினாலுமல்ல—மகளிர்மேனியே - மாதர்களுடையஇயல்பான மேனியின் ஒளியினாலேயேபோட்டுவன - எ-று. ஏ-ஈற்றசை. [மாளிகை-எழுவாய். ஓட்டுவன-பயனிலை. இருள் செயப்படுபொருள்] (௫௧)

மாளிகையினின்றும் ஒளிபரந்து இருளைத்துரக்காநின்றன. அவ்வொளி தீவிளக்கொளியோ-மணிவிளக்கொளியோ- அல்ல,மாதர்மேனியொளியேயெனக்கூறுவதுமொன்று. மாதர்கள்மேனியொளி இருவகையொளியினுஞ்சிறந்ததென்பதுஇதன்கருத்து.

பதங்களிற்றன்னுமைபாணியண்ணுற... ... ...*
விதங்களின்விதிமுறைசதிமிதிப்பவர் ... ... *
மதங்கியரச்சதிவகுத்துக்காட்டுவ... ... ... *
சதங்கைகளல்லனபுரவித்தார்களே... ... ... *

(இ-ள்.) பதங்களில்-கிரமங்களில்—தன்னுமை-முழவமும்—பாணி-தோரியமடந்தையர்பாடும் இசைப்பாட்டும்—பண் - யாழ்நரம்பினிசையும்—உற-ஒத்துஒலிக்க—விதங்களில்-அபிநயவிதங்களுடன்—விதிமுறை-பரதசாஸ்திரமுறைமைப்படி—சதிமிதிப்பவர்-ஜதிமிதிப்பவர்கள்—மதங்கியர்-பதினாறுவயதுள்ளபெண்களாம்—அச்சதி- அவர்களாடும்அந்தஜதியை—வகுத்துக்காட்டுவ-வகைப்படுத்திக்காட்டுமவை—சதங்கைகள் அல்லன- அவர்கள்கால்களில் அணிந்திருக்குஞ் சதங்கைகளேயல்ல—புரவித்தார்கள் -மேற்சொல்லியமுறைமைப்படி ஆடுங்குதிரைகளின்கழுத்துகளில் அணியப்பட்டிருக்குங் கிங்கிணிமாலைகளேவகுத்துக்காட்டும்-எ-று. [புரவித்தார்-எழுவாய்.காட்டும்-பயனிலை. சதியை-செயப்படுபொருள்] (௫௨)

கூத்தினைச் சதியென்றது ஆகுபெயர்- வலத்தாள் முன்மிதித்து அரங்கிலேறிக் கைத்தலங்காட்டி ஆடுதல் மரபாதலால் சதிமிதிப்பவரென்றார்,

இதற்குக்கமலவர்த்தனையென்றுபெயர். மிதித்தலென்னுங் காரணம் கூத்தாகிய காரியத்தைக்காட்டிநின்றது. தோரியமடந்தையர் ஒத்துப்பாடுகின்றவர்கள். அபிநயமாவது-கதை

தழுவாது பாட்டுகளின்பொருள்தோன்றக் கைகாட்டி அபிநயப்பது-இது அந்நகரத்திலிகழும்பரதத்தின்சிறப்புகூறியது.

முளைப்பன முறுவலம்முறுவல்வெந்துயர் ... ...*
விளைப்பன வன்றியுமெலிந்துநாடொறு ... ... *
மிளைப்பன நுண்ணிடையிளைப்ப மென்முலை... ...*
திளைப்பன முத்தொடுசெம்பொனாரமே ... ...*

(இ-ள்) முறுவல்-அம்மதங்கியர் முகத்தினிடத்து புன்னகைகள்—முளைப்பன உண்டாகுவன—அம்முறுவல் - அப்புன்னகைகள் (காமுகர்க்கு)—வெந்துயர்-வெந்துயரத்தை—விளைப்பன - உண்டாக்குவன—அன்றியும்-அதுவன்றியும்— நுண்இடை - அம்மதங்கியருடைய நுண்ணிய இடைகள்—நாள்தொறும்- நாளுக்குநாள் சிறியவாக—மெலிந்து-வருந்தி—இளைப்பன-சுருங்குவன—இளைப்ப-அவைகள் சுருங்கும்படி—மென்முலை-அம்மடவாருடைய மெத்தென் றதனங்களினிடத்து—முத்தொடு-முத்துவடமும்—செம்பொன்-செம்பொன்னாலாகிய—ஆரமும்- பதக்கங்களும்—திளைப்பன-பொருந்துவனவாம்- எ-று [முத்தும் பொன்னும்-பயனிலை. திளைப்பன-பயனிலை.] ()

மாதர்கள் முறுவலைக்கண்டு ஆளைப்பதுமன்றி அவர்கள் இடையினைக்கண்டும் மெலிவமெலிகின்றார்களென்பது இதன்கருத்து.இதனைக்கோம்பிக்கொதுங்கிமெயாமஞ்ஞையென்னுந்திருக்கோவையாரானும் உணர்க.

இடையிடையெங்கணுங்களியறாதன ... ... *
நடையிளவன்னங்கணளினநீர்க்கயல்... ... ...*
பெடையிளவண்டுகள்பிரசமாந்திடுங் ... ... *
கடகரியல்லனமகளிர்கண்களே ... ... *

(இ-ள்) இடைஇடையெங்கணும்- இடந்தோறும் இடந்தோறும்—களியறாதன-களிப்புநீங்காதனவாயிருப்பவை—நடை - அழகான நடையினையுடைய—இள அன்னங்கள்- மடவன்னங்களும்—நளினநீர்க்கயல்-தாமரைகள் பொருந்திய நீர்த்தடாகத்தில்வாழும் சேல்மீன்களும்—பெடை - பெட்டைவண்டுகளும்—இளவண்டுகள்- இளமையாகிய ஆண்வண்டுகளும்—பிரசம்- தேனினை—மாந்திடும்-உண்ணுகின்ற—கடகரி- மதச்சுவட்டினையுடைய யானைகளும்—அல்லன- இவைகளுமேயன்றி—மகளிர்-மாதர்களுடைய—கண்கள்- பார்வைகளுமாம்—எ-று. ஏ-ஈற்றசை. [அன்னங்கள்-கயல்-வண்டுகள்-கடகரி-கண்கள்-இவை எழுவாய். களியறாதன-பயனிலை.] (௫௪)

மேற்கூறியவைகளெல்லாம் வயல்களினிடத்தும், வாவிகளினிடத்தும், பொழில்களினிடத்தும், களிப்புடன் சஞ்சரிக்குமென்பது இதன்கருத்து.

நளினம் இடையெங்கணும் தாமரைமலர்களிடத்தெங்கும் களிப்புநீங்காமலிருக்கின்றவை. நடையிளஅன்னங்கள்- நீர்இடையெங்கணுங்களிப்புநீங்காமலிருக்கின்றவை. சேல்மீன்கள்-பெடையிளவண்டுகள் அந்தத்தாமரை மலர்களில் பிரசமாந்திடும். கடகரி-நீர் மாந்திடும் மாதர்கண்களோவென்றால் களியறாமலிருக்கும் என்றுரைப்பினும் அமையும்.

தழல்விழியாளியுந்துணையுந்தாழ்வரை... ... ... *
மூலமுலிகைமுகிறிதிகர்களிற்றின்மும்மத ... ... *

மழைவிழும்விழுந்தொறுமண்ணுங்கீழுறக் ... ... *
குழைவிழுமதில்விழுங்கொடித்திண்டேர்களே ... *

(இ-ள்.) தழல்-தீப்பொறியைக்கக்குகின்ற—விழி விழியையுடைய—ஆளியும்- சிங்கமும்—துணையும்- அதன்பேடையும்—முழைவிழை-விரும்புகின்றகுகைகள்பொருந்திய—தாழ்வரை - தாழ்வரையினையுடைய—கிரிநிகர்-மலையொத்த—களிற்றின்-யானையினுடைய—மும்மதம்-மும்மதநீரும்—மழைவிழும் - மழைபோலவிழும்— விழுந்தொறும் - அம்மதம்விழுந்தோறும்—மண்ணும்-பூமியும்—கீழ்உற - ஆழமுற—குழைவிழும் - சேறுவிழும்—அதில்- அச்சேற்றில்—கொடி-கொடிகளையுடைய—திண்தேர்-வலியதேர்கள்—விழும்-விழாநிற்கும்-எ-று. [தேர்-எழுவாய். விழும்-பயனிலை.] (ருரு)

மழையுங் குழையுந் தேர்விழுதற்குக் காரணமாகநின்றன.

ஆடுவார்புரவியின்குரத்தையார்ப்பன... ... ...*
சூடுவாரிகழ்ந்தவத்தொங்கன்மாலைக... ... ... *
ஓடுவாரிழுக்குவவூடலூடுறக்... ... ... *
கூடுவார்வனமுலைகொழித்தசாந்தமே... ... ... *

(இ-ள்) சூடுவார்- வேறுமாலைதரித்துக்கொள்ளுகின்றவர்களால்— இகழ்ந்து-நீக்கிவிடப்பட்ட—அத்தொங்கல்மாலைகள்-அத்தொங்கலாகியமாலைகள்—ஆடு - ஆடுகின்ற—வார் - வார்கட்டிய—புரவியின் - குதிரைகளின்—குரத்தை-குளம்புகளை—ஆர்ப்பன-கட்டுவன—ஊடல்- ஊடலானது—ஊடுஉற-தங்கள்மனதினுட்பொருந்த—கூடுவார்-கின்கூடுகின்றவர்களாகியமாதர்களுடைய—வனம்-அழகிய—முலை-தனங்களினின்றும்—கொழித்த- நீக்கிவிடப்பட்ட—சாந்தம்-சந்தனங்கள்—ஓடுவார்- வீதியில்ஓடுகின்றவர்களை—இழுக்குவ -ஓடவொட்டாமல்வழுக்குவன எ-று. [மாலை- எழுவாய். ஆர்ப்பன-பயனிலை. குரம்- செயப்படுபொருள். சாந்தம்- எழுவாய். இழுக்குவ-பயனிலை. ஓடுவார் - செயப்படுபொருள்.] (ருசு)

தொங்கல்_மாலை-இருபெயரொட்டுப்பண்புத்தொகை.

இளைப்பருங்குரங்களாலிவுளிபாரினைக்...... ......*
கிளைப்பனவவ்வழிகிளர்ந்ததூளியின் ... ... *
ஒளிப்பனமணியவையொளிரமீதுதேன் ... ...*
துளிப்பனகுமரர்தந்தோளின்மாலையே ... ... *

(இ-ள்.) இளைப்பு அரும் - இளைப்பில்லாத—குரங்களால் - குளம்புகளினாலே—இவுளி-குதிரைகளானவை—பாரினை-பூமியை—கிளைப்பன-கிளைக்கின்றன—அவ்வழி- அவ்விடத்து—கிளர்ந்த- மேலெழுந்த—தூளியின் - தூளியினாலே—குமரர்தம் - அக்குதிரைக்கன்ளேறிவரு மைந்தர்கள் அணிந்துகொண்டிருக்கும்—மணி-மணிகள்—ஒளிப்பன- மறையப்படுவனவாம்—அவை-அம்மணிகள்—ஒளிர் - விளங்கும்படி—தோளின்மாலை - அக்குமரர்கள் தோளிலணிந்திராநின்ற பூமாலைகள்—மீது - அம்மணிவடங்கள்மேல்—தேன்-தேனை—துளிப்பன-சிந்துவனவாம்-எ-று. [மாலை-எழுவாய். துளிப்பன-பயனிலை. தேனை-செயப்படுபொருள்.] (ருஎ)

விலக்கருங்கரிமதம்வேங்கைநாறுவ... ... ... *
குலக்கொடிமாதர்வாய்குமுதநாறுவ ... ...*
கலக்கடைகணிப்பருங்கதிர்களுறுவ ... ... *
மலர்க்கடிநாறுவமகளிர்கூந்தலே ... ... *

(இ-ள்.) விலக்கு அரும்- விலக்குதற்கரிய—கரி-யானைகளினுடைய—மதம்-மதநீர்கள்—வேங்கை - வேங்கைப்பூப்போல— நாறுவ - நாறுவனவாம்—கொடி - பூங்கொடிபோன்ற—குலமாதர்- குலமகளிருடைய—வாய்-வாய்கள்—குமுதம்- செவ்வல்லிமலர்போல—நாறுவ - தோன்றுவனவாம்—கலக்கடை-அவர்களணிந்திருக்கும் ஆபரணங்களினிடத்து—கணிப்பு அரும்-அளவிடுதற்கு அரிய—கதிர்கள்-ஒளிகள்—நாறுவ - தோன்றுவனவாம்—மலர்க்கடி-மலர்மணம்—நாறுவ-கமழ்வன— மகளிர்கூந்தல்- அம்மகளிர்கூந்தல்களினிடத்து—எ-று. [மதம்-வாய்-கதிர்-கடி-எழுவாய். நாறுவ-பயனிலை.] (ருஅ)

குமுதம்நாறுவ என்பது மணப்பனவென்றுங் கூறப்படும்.

கோவையிந்நகரொடெண் குறிக்கலாதவத் ... ...*
தேவர்தந்நகரியைச்செப்புகின்றதென்... ... *
யாவையும்வழங்கிடத்திகலியிந்நகர்... ... ... *
ஆவணங்கண்டபினளகைதோற்றதே... ... ...*

(இ-ள்.) இக்கோநகர்-இவ்விராசநகரத்தோடு ஒப்பாமென்று—எண்-எண்ணத்திலும்—குறிக்கலாத-குறிக்கவொண்ணாத— அத்தேவர்தம்நகரியை- தேவர்களுடைய நகரமாகிய அந்த அமராவதியை—செப்புகின்றதென்-ஒப்பெடுத்துச்சொல்லுவதெவ்வாறு—இந்நகர்ஆவணம்- இவ்வயோத்தியின்கடைவீதியானது—யாவையும்-எல்லாப்பொருள்களையும்—வழங்கிடத்து- வழங்கும்போது—இகலி - அதனோடுஉள்ளேபகைத்து—கண்டபின் - அதன் தன்மையைக்கண்டபின்பு—அளகை- அளகையானது—தோற்றது -தோல்வியடைந்தது—எ-று [அளகை-எழுவாய். தோற்றது-பயனிலை.] (ருகூ)

இந்நகரத்தின் ஆவணத்தைக்கண்டு அளகைதோற்றதென்றால் இந்நகரத்துக்கும் ஒப்பாகாத தேவருலகத்தை இந்த ஆவணத்துக்கு ஒப்பென்று எவ்வாறுசொல்லலாம் எனமுடிக்க—ஆவணவீதியில் எல்லாப்பொருளும் நிறைந்திருப்பதினால் இந்நகர் வீதிகளுள் ஆவணவீதி சிறந்ததாயிற்று. கோவை யென்பதிலிருக்கும் ஐகாரத்தைச் சாரியையாக்கி இக்கோநகரெனப்பதமாறுக.

அதிர்கழலொலிப்பனவயிலிமைப்பன... ... *
கதிர்மணியணிவெயில்கால்வமான்மத ... ... *
முதிர்வுறக்கமழ்வனமுத்தமின்னுவ... ... ... *
மதுகரமிசைப்பனமைந்தரீட்டமே... ... ...*

(இ-ள்.) மைந்தரீட்டம்- அந்நகரின்கண்வாழும் மைந்தர்கூட்டத்தில்—அதிர்கழல்-அதிருங்கழல்கள்—ஒலிப்பன-சத்திப்பன—அயில்-வேலாயுதங்கள்—இமைப்பன-பிரகாசிப்பன—கதிர்- கிரணங்கள்விடுகின்ற—மணி - மணிகளாலியன்ற—அணி- ஆபரணங்கள்—வெயில்- ஒளியை—கால்வ- கக்குவன—முதிர்வு-மிகுதிபொருந்த—மான்மதம்- கஸ்தூரிகள்—கமழ்வ- மணப்ப

ந்துகூடவும்—உயிரின் - உயிர்போன்ற—இன்இசை- இனியஇராகங்களை—பாடவும் - தாம்பாடவும்—விறலியர் - விறலிபருடைய—பாடல் - இசைப்பாடல்களை—கேட்கவும் - கேட்கவும்—அகல் - அகன்ற—புனல் - புனலையுடையதடத்தின்கண்—ஆடவும் - குடைந்துவிளையாடவும்—ஆடி- அவ்வாறுவிளையாடி—அம்-அழகிய—மலர்- மலர்களை—சூடவும்-எடுத்துச்சூடவுமாக—பொழுதுபோம் - பொழுதுபோகும்—எ-று. [பொழுது- எழுவாய். போம்-பயனிலை] (சுசு)

போகும் என்பது-போமெனநின்றது. ஊடிக்கூடுதல் காமத்துக்கின்பமாதலால் ஊடவுங்கூடவுமென்றார்.

53 முழங்குதிண்கடகரிமுன்பினூரவு ... ... *
மெழுங்குரத்திவுளியோடிரதமேறவும்... ... ... *
பழங்கணோடிரந்தவர்ப்பரிவுதீர்தர... ... ... *
வழங்கவும்பொழுதுபோஞ்சிலர்க்கம்மாநகர் ... *

(இ-ள்.) அம்மாநகர்- அப்பெரியநகரினிடத்து—சிலர்க்கு - சில ஆடவர்க்கு—முழங்கு- சத்திக்கும்—திண்-வலியையும்—கடம்-மதத்தையுமுடைய—கரி-யானைகளை—முன்பின் - முன்னும்பின்னுமாக—ஊரவும்- ஏறிநடத்தவும்—எழுங்குரத்து-மேலெழுகின்ற குளம்பினையுடைய—இவுளியோடு- குதிரைகளிலும்—இரதம்-இரதங்களிலும்—ஏறவும்-ஏறவும்—பழங்கணோடு-மெலிவுடன்வந்து—இரந்தவர்-இரந்தவருடைய—பரிவுதீர்தர- வருத்தந்தீர—வழங்கவும்-கொடுக்கவுமாகப்—பொழுதுபோம்-பொழுதுபோகும்-எ-று.

54 கரியொடுகரியெதிர்பொருத்திக்கைப்படை... ... *
வரிசிலைமுதலியவழங்கிவாலுளைப்... ... ... *
புரவியிற்பொருவில்செண்டாடிப்போர்க்கலை... *
தெரிதலிற்பொழுதுபோஞ்சிலர்க்கச்சேணகர் ... *

(இ-ள்.) அச்சேண்நகர்-விசாலமாகியஅந்நகரினிடத்து—சிலர்க்கு-சிலவீரர்க்கு—கரியொடுகரி - யானைகளோடுயானைகளை—எதிர் - எதிரெதிராக—பொருத்தி - போர்செய்வித்தும்—வரிசிலைமுதலிய - நீண்டவில்முதலான—கைப்படை- கைப்படைகளை—வழங்கி-வழங்கியும்—வால்-வெண்மையாகிய—உளை- கழுத்துமயிர்களையுடைய—புரவியில்- குதிரையின்மேலேறிக்கொண்டு—பொருஇல்- ஒப்பற்ற—செண்டாடி-வையாளிவீதியில்விளையாடியும்—போர்க்கலை- தனுர்வேதங்களை—தெரிதலில்- ஆராய்ச்சிசெய்தலால்—பொழுதுபோம் - பொழுதுபோகும்—எ-று. (சுஅ)

நந்தனவனத்தலர்கொய்துநங்கைபோல்... ... ... *
வந்திளையவரொடுவாவியாடிவாய்ச்... ... ... *
செந்துவரழிதரத்தேறன்மாந்திச்சூ... ... ... *
தந்தலிற்பொழுதுபோஞ்சிலர்க்கவ்வொண்ணகர் *

(இ-ள்.) அவ்வொண்நகர்- ஒளிபொருந்திய அந்நகரினிடத்து—சிலர்க்கு- சிலமகளிர்க்கு—நந்தனவனத்து - நந்தனவனத்தினிடத்துச்சென்று—அலர் கொய்து - மலர்களைக்கொய்தும்— நவ்விபோல்வந்து - மான்கள்போல்வந்து—இளையவரொடு - தத்தங்கணவரோடு—வாவியாடி - தடாகங்களில்விளையாடியும்—வாய் - இதழினிடத்துப்பொருந்திய—செந்துவர் - செம்மைநிறமானது—அழிதர-அழியும்படி—தேறல் - மதுவை—மாந்தி- அருந்தியும்—சூதுஉந்தலில்- சூதுவிளையாடலால்—பொழுதுபோம் - பொழுதுபோகும்—எ-று. (௬௯)

[வேறு.]

நானாவிதமாநளிமாதிரவீதியோடி ... ... *
மீனாறுவேலைப்புனல்வெண்முகிலுண்ணுமாபோ . ... *
லானாதமாடத்திடையாடுகொடிக்கண்மீப்போய்... ...*
வானாறுநண்ணிப்புனல்வற்றிடநக்குமன்றே... ... ...*

(இ-ள்.) நானாவிதமா- பலபலவிதமாக—நளி - செறிந்த—மாதிரம்-ஆகாயத்தின்—வீதியோடி-வழியிற்சென்று—மீனாறு-மீன்புலவுநாறுகின்ற—வேலைப்புனல்- கடற்புனலை—வெண்- வெண்மையாகிய—முகில்-மேகங்கள்—உண்ணுமாபோல்- பருகுமாறுபோல—ஆனாத- நீங்காத—மாடத்திடையாடு- மாடங்களின்மேலாடுகின்ற—கொடிக்கள் - கொடிகளானவை—மீப்போய்- மேமேலசென்று—வான்ஆறு- ஆகாயகங்கையை—நண்ணி- பொருந்தி—புனல்- அதன்நீரானது—வற்றிட-வற்றும்படியாக—நக்கும்- உண்ணும்—எ-று. [கொடி-எழுவாய். நக்கும்- பயனிலை. புனல்-செயப்படுபொருள்.] (௭௰)

வன்றோரணங்கள்புணர்வாயிலும்வானினும்பர் ... ... *
சென்றோங்கிமேலோரிடமில்லெனச்செம்பொனிஞ்சி ..*
குன்றோங்குதோளான்குணங்கூட்டிசைக்குப்பையென்ன*
வொன்றொடிரண்டுமுயர்ந்தோங்கினவும்பர்நாண ... *

(இ-ள்.) வன்-வலிய—தோரணங்கள் - தோரணங்களானவை—புணர் - சேர்ந்த—வாயிலும் - கோபுரவாயில்களும் — செம்பொன் - செம்பொன்னாற்செய்த—இஞ்சிஒன்றொடிரண்டும்- முன்கூறிய புடைநகர் மதிலொன்றுடன் இடைநகர் உள்நகர் என்னும் இரண்டு நகரங்களைச் சூழ்ந்தமதிலிரண்டும்—மேல்ஓர்இடம்இல்லென- இதற்குமேல் சிறிதுமிடமில்லையென்னும்படி—வானின்உம்பர்- தேவருலகின்மேலும்—சென்றுஓங்கி - சென்றுயர்ந்து—குன்றுஓங்கு - மலையைப்போலுமோங்கிய—தோளான்- தோளையுடைய தசரதனுடைய—குணம் - நற்குணங்களால்—கூட்டு - சேர்க்கப்பட்ட—இசைக்குப்பையென்ன- புகழின்மிகுதிபோல—உயர்ந்துஓங்கின -உயர்ந்தோங்கின—எ-று. [மதில்கள்- எழுவாய். ஓங்கின- பயனிலை.] (௭௧)

காடும்புனமுங்கடலன்னகிடங்குமாத ... ...*
நாடுங்குளனும்மருவிச்சுனைக்குன்றுமும்பர் ... ... *

வீடும்விரவும்மணிப்பந்தரும்வீணைவண்டு ... ... *
பாடும்பொழிலும்மலர்ப்பல்லவப்பள்ளிமன்றே ... *

(இ-ள்) காடும்-அந்நகர்சூழ்ந்தகாவற்காடும்—புனமும்- விளைபுனங்களும்—கடல்அன்ன - கடல்போன்ற—கிடக்கும் - அகழும்—மாதர்- மடவார்—ஆடுங்குளனும்- நீராடுங்குளங்களும்— அருவி - அருவிகளையும்—சுனை-சுனைகளையுமுடைய—குன்றும் - குன்றுகளும்—உம்பர்வீடும்- தேவருலகத்தினை ஒவ்வும்—விரவும்-பொருந்திய—மணிப்பந்தரும் - ரத்தினப்பந்தல்களும்—வீணை வீணைபோலும்—வண்டு- வண்டுகள்—பாடும்பொழிலும்- இசைபாடும்சோலைகளும்—மலர்ப்பல்லவப்பள்ளி- மலர்களாலும் தளிர்களாலும் சயனம்பாலனவாம்-எ-று [காடு-முதலியவற்றை எழுவாயாக்கி-ஆம்- என்னும் ஒருசொல் வருவித்துப் பயனிலையாகக்கொள்க] (எஉ)

தெள்வார்மழையுந்திரையாழியுமுட்கநாளும்... ... ...*
வள்வார்முரசமதிர்மாநகர்வாழுமாக்கள்... ... ... *
கள்வாரிலாமைப்பொருள்காவலுமில்லையாதுங் ... ... *
கொள்வாரிலாமைக்கொடுப்பார்களுமில்லைமாதோ... *

(இ-ள்.) தெள்-தெளிவாகிய—வார்- நீரையுடைய—மழையும்-மேகங்களும்—அலை- அலைகளையுடைய—ஆழியும்-கடல்களும்—உட்க - அஞ்ச—நாளும்-நாள்தோறும்—வள்வார்-வாராற்கட்டிய—முரசம்- பேரிகைகள்—அதிர்-முழங்குகின்ற—மாநகர்வாழும்- பெரியஅவ்வயோத்திமாநகரின்கண்வாழும் மாக்கள்-மனிதர்களில்—கள்வார்இலாமை-களவுசெய்வாரின்மையால்—பொருள்-ஈட்டியபொருட்கு—காவலும்இல்லை- காவல்செய்வாருமில்லை—யாதும்-யாதொருபொருளையும்—கொள்வார்இலாமை- வறுமையாலிரப்பாரின்மையால்—கொடுப்பார்களுமில்லை- கொடுப்பவர்களுமில்லை—எ-று. [காவலும்-கொடுப்பவர்களும்-எழுவாய். இல்லை-பயனிலை.] (எங)

கல்லாதுநிற்பார்பிறரின்மையிற்கல்விமுற்ற ... ...*
வல்லாருமில்லையவைவல்லரல்லாருமில்லை... ... ... *
எல்லாருமெல்லாப்பெருஞ்செல்வமுமெய்தலாலே ... *
யில்லாருமில்லையுடையார்களுமில்லைமாதோ... ... ...*

(இ-ள்.) கல்லாது - கல்விகள்கற்காமல்—நிற்பார் - வீணாகநிற்பவர்கள்—பிறர்இன்மையில்- ஒருவருமின்மையால்—கல்வி - அக்கல்விகளில்—முற்ற-முழுவதும்—வல்லாரும்இல்லை - கற்றுவல்லவர்களுமில்லை—அவை - அக்கல்விகளில்—வல்லரல்லாருமில்லை - வல்லவரல்லாதவர்களுமில்லை—எல்லாரும்-அந்நகரத்திலிருப்பவர்களெல்லாரும்—எல்லாச்செல்வமும்- எவ்வகைச்செல்வமும்—எய்தலாலே-பொருந்தியிருத்தலாலே—இல்லாரும் இல்லை-வறியவர்களுமில்லை—உடையார்களும்இல்லை-செல்வமுடையவர்களுமில்லை—எ-று.

வல்லார்- வல்லரல்லார்- இல்லார்- உடையார்- என்னுமிவைகளைத் தனித்தனி எழுவாயாகக்கொண்டு இல்லை என்பவைகளையும் அவ்வாறே பயனிலையாகக்கொள்க.

ஏகம்முதற்கல்விமுளைத்தெழுந்தெண்ணில்கேள்வி ... *
யாகம்முரட்டிணபணைபோக்கியருந்தவத்தின் .. ... *
சாகந்தழைத்தன்பரும்பித்தருமம்மலர்ந்து... ... ...*
போகங்கனியொன்றுபழுத்ததுபோலுமன்றே .. ... *

(இ-ள்) (அயோத்தியானது) கல்வி - கல்வியென்னும்—ஏகம்முதல் -ஒருமுதலானது—முளைத்துஎழுந்து -முளைத்துமேலெழுந்து—எண் இல்- அதனையெண்ணிலாத—கேள்வியாகு - கேள்விகளாகிய—முரண்திண் - பலம்பொருந்திய—அப்பணை-அக்கொம்புகளை—போக்கி-மேலோங்கவிடுத்து—அரும்-அரிய—தவத்தின் - தவமாகிய—சாகம்தழைத்து - இலைகள்தழைத்து—அன்பு- தயையாகிய அரும்புகள்—அரும்பி- முகைத்து—தருமம்- தருமமாகியமலர்கள்—மலர்ந்து-மலர்ந்து—போகம்-போகமாகிய—கனியொன்றுபழுத்ததுபோலும்- ஒருபழமானது பழுத்ததுபோலுமிருக்கின்றது—எ-று [அயோத்தி-எழுவாய்.போலும்-பயனிலை.பழம்-செயப்படுபொருள்]

முரண்திண் ஒருபொருட்பன்மொழி.

௪-வது-நகரப்படலமுற்றிற்று.

ஸ்ரீராமசெயம்.

பாலகாண்டம்.

௫-வது-அரசியற்படலம்.

அம்மாணகருக்கரசன்னரசர்க்கரசன் ... ... *
செம்மாண்டனிக்கோலுலகேழினுஞ்செல்லநின்றான் ...*
இம்மாண்கதைக்கோரிறையாயவிராமனென்னு ... ...*
மொய்ம்மாண்கழலோற்றருநல்லறமூர்த்தியன்னான்... *

(இ-பு.) மாட்சிமைபொருந்திய அந்தநகருக்கு அரசனாவான் யாவனெனில்,மன்னவர்மன்னவனும் செவ்விதானமாட்சிமையுள்ளஒப்பற்றசெங்கோலானது ஏழுலகத்திலுஞ்செல்லும்படியிருந்தவனும் மாட்சிமையுள்ள இந்தச்சரிதத்துக்குத் தலைவனாகிய இராமமூர்த்தி யென்னும் பெயருள்ள பெருமைசெறிந்த வீரகண்டையணிந்தவனைப்பெற்ற நல்லதருமமூர்த்தியையொத்தவனுமாம்-எ-று. (௧)

இராமமூர்த்தியைப்பெற்றவன் இந்த நகரத்துக்கு அரசனென முடித்துக்கொள்க. இம்மாண்டனிக்கோ லுலகேழினுஞ்செல்லநின்றான் என்பதனுக்குச்செவ்விதானபெருமையினால் ஒப்பற்ற தன்செங்கோலானது ஏழுலகத்துஞ் செல்லநின்றானெனப்பொருள்கூறினுமமையும் இதனை ஏமாங்கதமென்னும் -இசையாற்றிசைபோயதன்றே-என்னுஞ் சிந்தாமணிச்செய்யு

வானுமுணர்க. செங்கோலாவது-நீதி. அது ஒருபாற்கோடாது செவ்விய கோல்போல்வதா லால்செங்கோலெனக்கூறப்பட்டது.

ஆதிம்மதியுமருளுமறனுமமைவு ... ... *
மேதின்மிடல்வீரமுமீகையுமெண்ணில்யாவு... ... *
நீதிநிலையுமிவைநேமியினோர்க்குநின்ற... ... *
பாதிம்முழுதுமிவற்கேபணிகேட்பமன்னோ... ... *

(இ-பு.) மூதன்மையாகிய மதியும் கிருபையுந் தருமமும் சாந்தகுணமும் குற்றமில்லாத பலம்பொருந்திய வீரமுங்கொடையும் எண்ணுமிடத்தில் மற்றுமுள்ள செய்கையாவும் (இவைகளேயன்றி) நீதியும் நிலையுமாகிய இவைகளும் மற்றைய அரசர்களிடத்தில் பாதிநின்றன அவ்வாறன்றி அவை முழுவதும் இவ்வரசனுக்கு ஏவல்கேட்பனவாம்-எ-று. (உ)

மேற்கூறிய செய்கைகளில் மற்ற அரசர்களிடத்தில் சில இருக்கும் இவ்வரசனிடத்தில் முழுவதும் உண்டென்பது இதன்கருத்து.

மொய்யார்கலிசூழ்முதுபாரின்முகந்துதானக் ... ... *
கையார்புனலானனையாதனகையுமில்லை... ... ... *
மெய்யாயவேதத்துறைவேந்தருக்கேய்ந்தயாருஞ்... ...*
செய்யாதயாகமிவன்செய்துமறந்தமாதோ... ... ...*

(இ-பு.) அலைகள்நெருங்கிய சமுத்திரத்தினாற் சூழப்பட்ட பழமையாகிய பூலோகத்தில் இவ்வரசன் தானங்கொடுக்கும்போது முகந்துவிடுங் கையில் பொருந்திய நீரினால் நனையாதவைகளாகிய கைகளுமில்லை - உண்மையாகிய வேதங்களினிடத்தில் அரசர்களுக்கு இன்னவை புரியவெனப் பொருந்திய யாகங்களில் எவ்வரசர்களுஞ்செய்யாதுவிட்ட யாகங்கள் இவ்வரசனாற்செய்து மறக்கப் பட்டன-எ-று. (ங)

இவ்வுலகத்திலிருக்கும் பிராமணர்களுடைய கைகள் இவ்வரசன்கொடுக்குந் தானநீரினால்நிறையாதவை யில்லையெனக்கூட்டுக. தானங்கொடுக்கும்போது தத்தஞ்செய்வதற்கு நீர்விடுதல்முறைமை. தானப்பொருளின்னதெனக்குறிக்காமையாற் பலதானமுங்கொள்க. அரசர்கள் செய்யக்கூடாமையாகவிட்ட அரிய யாகங்களையு மிவ்வரசன்செய்தனன் என்பதும், இவனிடத்தில் தானம்வாங்காத பிராமணர்களில்லையென்பதும் யாகங்களெல்லாஞ் செய்தானென்பதும் இதன்தாற்பரியம்.

தாயொக்குமன்பிற்றவமொக்குநலம்பயப்பிற்... ...... *
சேயொக்குமுன்னின்றொருசெல்கதியுய்க்குநீரா... .... *
ஞயொக்குமென்னின்மருந்தொக்குநுணங்குகேள்வி.. *
யாயப்புகுங்காலறிவொக்குமெவர்க்குமன்னான்... ... ...*

(இ-பு.) அத்தன்மையுள்ள தசரதமகாராசன் அன்பினால் யாவர்க்குந்தாயை யொப்பாவன்- யாவர்க்கும் நன்மையைக்கொடுக்குந் தன்மையினால் அவரவர்கள்செய்யுந்தவத்தையு மொப்பாவன்- தான்முன்னிலையாயிருந்து அவரவர்களை யொப்பற்ற நற்கதிகளிற் செலுத்துகின்றமையால் அவரவர்கள் புத்திரனை யொப்பாவன்- வியாதிகள் பொருந்துமாயின் (அவைகளுக்குத்தக்க அவுஷதங்கள் கொடுப்பித்துத் தீர்க்குந்தன்மையினால்) அவுஷதத்தையொப்

பாவல்- துன்னியகேள்விகளை யாராய்ச்சிசெய்யச்சென்றால் அவரவர்கள்கருத்துகளுக்கிசையச் சந்தேகமுதலியவையில்லாமல் தெளிவிக்குந் தன்மையினால் அவர்களறிவையொப்பாவன்-எ-று. (௪)

ஈந்தேகடந்தானிரப்போர்கடலெண்ணினுண்ணா ... *
லாய்ந்தேகடந்தானறிவென்னுமளக்கர்வாளாற் ... *
காய்ந்தேகடந்தான்பகைவேலைகருத்துமுற்றத் ... ... *
தோய்ந்தேகடந்தான்றிருவிற்றொடர்போகவெள்ளம் ... *

(இ-பு) அவ்வரசன்-இரப்பவர்களாகிய சமுத்திரத்தைப் பொருள்கொடுத்துக்கடந்தான்-அளவில்லாத நுண்ணியசாஸ்திரங்களாகிய சமுத்திரத்தை அறிவினாலாராய்ச்சிசெய்துகடந்தான்- வாள்முதலாகிய படைகளால் கடிந்து பகைவராகியசமுத்திரத்தைக்கடந்தான்- கருத்துப்பூர்த்தியாக அநுபவித்துச்செல்வத்தினால்பொருந்தியபோகமாகிய சமுத்திரத்தைக் கடந்தான்-எ-று.

இரப்போர் கடலைக்கடத்தல் அவர்கள்மீட்டுமோர்காலொருவரிடத்துச்செல்லாவண்ணங்கொடுத்தல் என வுணர்க. இதனை- இலனென்னுமெவ்வ முரையாமையீதல்-என்னுந் திருக்குறளானுமுணர்க.

[வேறு.]

வெள்ளமும்பறவையும்விலங்கும்வேசைய ... ... *
ருள்ளமுமொருவழிபோடநின்றவன் ... ... *
றள்ளரும்பெரும்புகழ்த்தயரதப்பெயர் ... *
வள்ளல்வள்ளுறைபயின்மன்னர்மன்னனே ... ... *

(இ-பு.) ஆற்றுவெள்ளமும் பக்ஷிகளும் மிருகங்களும் விலைமாதருடையமனமும் ஒரேவழியிற்செல்லும்படி அரசுசெய்தவன்- நீக்குதற்கரிய பெரும்புகழைப்படைத்த தசரதனென்னும் பெயருளாயுடைய வள்ளலாகிய உறைபூட்டும் வேலாயுதத்தையுடைய அரசர்க்கரசன்-எ-று. (௫)

தயரதன்-மேற்கூறிய மூன்றும் ஒருவழியோட நின்றவனெனக்கூட்டுக.

வெள்ளமொருவழியோடல் -அம்மன்னவனாட்டில் மாதமும்மாரிபெய்வதினால்விளைவுக்கு இவ்வெள்ளம் வேண்டுவதின்றி நேரேசென்று கடலிற்சேருமெனவும், பறவைகளும் விலங்குகளும் வேடர்கள் முதலானபேருக்கஞ்சி யலைந்துதிரியாம லொருவழியே செல்லுமெனவும்,

புலி-பசு-மான்-முதலியவை யொன்றற்கொன்று விரோதமின்றி யொருவழியிற்செல்லுமெனவும், கருடன் பாம்பு முதலியவையும் அவ்வாறே விரோதமின்றி யொருவழியிற்செல்லுமெனவுங் கண்டுகொள்க. இதனை பொருதுறைசேர்வேலினாய் புலிப்போத்தும்புல்வாயும்-ஒருதுறையினீருண்ண வுலகாண்டான். என்னுஞ்செய்யுளானுமுணர்க.

வேசையருள்ளம் முன்வந்தவனிடத்தில் பணம் வாங்கிக்கொண்டு பின்வருகிறவரிடத்திற்பணயம்வாங்காமல் முதல்வந்தவனிடத்தே மனஞ்செல்லுமெனவுங்கண்டுகொள்க.

நேமிமால்வரைமதிலாகநீள்புறப் ... ... *
பாமமாகடல்கிடங்காகப்பன்மணி ... ... *
வாமமாளிகைமலையாகமன்னற்குப் ... ... *
பூமியுமயோத்திமாநகரம்போலுமே ... ... *

(இ-பு.) பெரியசக்கரவாளகிரியானது மதிலாகவும் நீண்டபேர்க்க பெரும் புறக்கடலானது அகழியாகவும், இடையிலுள்ள மலைகள் பலமணிகள் பதித்து அழகுள்ள மாளிகைகளாகவும் தசரதமகாராசனுக்கு இந்தப்பூமியும் அயோத்தியென்னும் பெரியநகரம்போலாம்-எ-று. (எ)

உலகமெல்லாம் அவ்வரசன் சொல்வழி நிற்குமென்பது இதன்கருத்து.

யாவரும்வன்மைநேரறிந்துநீட்டலான் ... ... *
மேவருங்கையடைவேலுந்தேயுமாற்... ... ... *
கோவுடைநெடுமணிமகுடகோடியாற் ... ... *
சேவடியடைந்தபொற்கழலுந்தேயுமால் ... ...*

(இ-பு.) ஆயுதச்சாலையிலே சென்றவர்கள் அதன் வலியையறியத் தொட்டுப்பார்ப்பதினால்அம்மன்னவனதுபொருந்திய கைவேல்தேயும்-வந்துபணிகின்றமறுதேயத்தரசர்களுடையரத்தினகிரீடங்களின்மிகுதியால்அவ்வரசனுடையகால்களிற்றரித்திருக்கும்பொன்னாலாகியவீரகண்டைகள்தேயும்-எ-று.

அறிந்து-எச்சத்திரிவு-நீட்டல் வலித்தல்விகாரம். அரசர்கள் தசரதமகாராசாவின்வேலாயுதந்தையெடுக்கும் வல்லமையில்லாததினால் தீண்டிப்பார்க்கின்றார்களெனக்கொள்க. வேலும் கழலுந் தேய்வதன்றிப் புகழ் செல்வ முதலியவை தேய்வதில்லையென்பதுகுறிப்பெச்சம்

மண்ணிடையுயிர்தொறும்வளர்ந்துதேய்வின்றித்...*
தண்ணிழல்பரப்பவுமிருளைத்தள்ளவும் ... .*
அண்ணறன்குடைமதியமையுமாதலான் ... ...*
விண்ணிடைமதியிணைமிகையிதென்பவே. ... ... *

(இ-பு.) தசரதமகாராசாவினுடைய வெண்குடையாகிய சந்திரன்இவ்வுலகத்தினிடத்திருக்கும் உயிர்கள்தோறும்பரந்து குறைவில்லாமல் குளிர்ந்தநிழலைவிரிக்கவும், பாபமாகிய இருளை நீக்கவும், பொருந்தியிருக்கு மாதலால் ஆகாயத்தினிடத்துவருஞ்சந்திரன் வேண்டுவதில்லை யிது அதிகமென்றுபெரியோர்கள்கூறுவார்கள்-எ-று. [இது-உருவக அணியில் அம்பத ரூபகாலங்காரம்.] (கூ)

விண்மதியுயிர்தோறும் வளருமேயானாலுந் தேயுந்தன்மையுடன் களங்கமுமுள்ளது.அன்றியும் பூதவிருளை நீக்குமேயல்லது பாபவிருளைநீக்காது ஆதலா லம்மதி விசேஷமான பயனில்லாதிருக்கின்றதென்பதுகருத்து.

வயிரவான்பூணணிமடங்கன்மொய்ம்பினு ... ...*
னுயிரெலாந்தன்னுயிரொப்பவோம்பலாற் ... ...*
செயிரிலாவுலகினிற்சென்றுநின்றுவா ... ... *
ழுயிரெலா முறைவதோருடம்புமாயினான் ... ... *

(இ-பு.) வயிரமணிமுதலிய மணிகளாற்செய்யப்பட்டுச் சிறந்த ஆபரணங்கள் அணிந்து சிங்கம்போன்ற பராக்கிரமமுள்ள தசரதமகாராசன் தன்னாட்டிலுள்ள உயிர்களையெல்லாந் தன்னுயிர்போலப்பாதுகாத்தலினால் குற்றமில்லாத இவ்வுலகத்தில் சஞ்சரித்தும், நிலையாயிருந்தும் வாழ்கின்ற உயிர்களெல்லாம்பொருந்துவதாகியவொருடம்புபோலவுமாயினான்-எ-று. இது-அவ்வரசன் அன்பினைவிளக்கியது. (ம)

குன்றெனவுயரியகுவவுத்தோளினான்... ... ... *
வென்றியந்திகிரிவெம்பரிதியாமென ... ... *
வொன்றெனவுலகிடையுலாவிமீமிசை... ....*
நின்றுநின்றுயிர்தொறுநெடிதுகாக்குமே... ... *

(இ-பு.) மலைபோல வுயர்ந்த திரட்சியுள்ள புசங்களையுடைய தசரதமகாராசனது வெற்றியுள்ள ஆக்கினைச்சக்கரமானது வெவ்விய சூரியனைப்போல ஒன்றாக உலகத்தில் உலாவி உயிர்கள்தோறுந் தனித்தனி நின்று அந்தச் சூரியனைப்பார்க்கிலும் அதிகமாகப் பாதுகாக்கின்றது. (௰௧)

இவ்விறைவ னுயிர்களுக்கோ ரிடையூறுமின்றிக்காக்கின்றானென்பதுகருத்து.

எய்யெனவெழுபகையெங்குமின்மையான் ... ... *
மொய்பொருதினவுறுமுழவுத்தோளினான்... ...*
வையகமுழுவதும்வறிஞனோம்புமோர்... ... ...*
செய்யெனக்காத்தினிதரசுசெய்கின்றான் ... ... *

(இ-பு.) எய்யென்னும் ஓசையுடன் எதிர்த்துவருகின்ற பகை யெங்குமில்லாமையால் வலியாற் பொருதற்குண்டாகுந்தினவு பொருந்தியமுழவம்போன்ற தோள்களையுடைய அவ்வரசன் இவ்வுலகமுழுவதையுந் தரித்திரனுக்கொருவயலிருந்தா லதனை யவன் காத்துக்கொள்வதுபோலகாத்து அரசாட்சிசெய்கின்றான்-எ-று. (௰௨)

வறிஞனானவன் தன்பயிரைப்பட்டிமாடு முதலியவைமேயாவண்ணங்காப்பதுபோல இவ்வரசன்-தன்னானுந் தன்பரிசனத்தாரானுமேயன்றிக் கள்வர்- பகைவர் -யானை- புலி-மான்-பன்றி-இவைகளாலும் வருத்தம் நேரிடாவண்ணம் உயிர்களைக் காக்கின்றானென்பதுகருத்து.

அரசியற்படலம்-முற்றியது.

பாயிரம்... ... ...௰௧
ஆற்றுப்படலம்... ... ...௨௰
நாட்டுப்படலம்... ... ...௬௧
நகரப்படலம் ௭௫
அரசியற்படலம்... ... ... ௰௨

ஆகத்திருவிருத்தம்-௱௭௯.

ஸ்ரீராமசெயம்.

பாலகாண்டம்.

௩-வது-திருவவதாரப்படலம்.

ஆயவனொருபகலயனையேநிகர் ... ...*
தூயமாமுனிவரற்றொழுதுதொல்குலத் ... ... *
தாயருந்தந்தையுந்தவமுமன்பினான் ... ...*
மேயவான்கடவுளும்பிறவும்வேறுநீ ... ... *

(இ-பு.) அத்தன்மையுள்ளவனாகிய தசரதமகாராசன் ஒருநாள் பிரமதேவனையேயொத்த பரிசுத்தமும் பெருமையுமுடைய வசிட்டமுநிவரனைத்தொழுது பழமையாகிய என்குலத்தாய்மாரும், பிதாக்களும், தவமும் அன்பினாற்பொருந்தியதெய்வமும், பிறவாகியமற்றுமுள்ளவைகளும்நீயேயாம்-எ-று

எங்குலத்தலைவர்களிரவிதன்னினுந் ... ... *
தங்குலம்விளங்குறத்தரணிதாங்கினார் ... ...*
மங்குநரில்லெனவரம்பில்வையக ... ...*
நின்னருளினினிதோம்பினேன்... ... *

(இ-பு.) எங்கள் முன்னோர்களாகிய அரசர்கள்-சூரியனைப்பார்க்கிலும் விசேஷமாகத் தங்கள்குலம் விளங்குதலைப் பொருந்தும்படி இவ்வுலகத்தைத் தாங்கினார்களேயன்றி- இடையில் ஒருவருங் குறைந்தவர்கள் இல்லையென்று அடியேனுந்தேவரீருடைய அருளினாலிக்காலத்திலும் எல்லையில்லாத பூமியை இனிதாகப்பாதுகாத்தேன்—எ-று. (௨)

அறுபதினாயிரமாண்டுமாண்டுற ... ... *
வுறுபகையொடுக்கியிவ்வுலகையோம்பினேன் ... *
பிறிதொருகுறையிலையெம்பின்வையக ... ... *
மறுகுறுமென்பதோர்மறுக்கமுண்டரோ... ...*

(இ-பு.) அறுபதினாயிர வருஷமும்நீங்க மிகுந்த பகைவரையெல்லாம் ஒடுக்கி இந்த வுலகத்தைப் பாதுகாத்தேன்-வேறொரு குறைவுமில்லை இனியெனக்குப்பின்பு இவ்வுலகமானது கலங்குதலைப்பொருந்துமென்பதாகிய ஒரு கலக்கம் எனக்குள்ளுண்டாயிருக்கின்றது—எ-று. (௩)

அருந்தவமுனிவருமந்தணாளரும் ... ... *
வருந்துதலின்றியேவாழ்வின்வைகினா ... ... *
இருந்துயருழக்குநரெற்றினென்பதோ ... ... *
பெருந்துயர்வருத்துமென்னகத்தையென்றனன் ....*

(இ-பு.) யாவருஞ் செய்தற் கருமையாகிய தவத்தையுடைய முநிவரும், பிராமணர்களும், வருந்துதலில்லாமல் வாழ்வுடன் பொருந்தியிருந்தார்கள்—எனக்குப்பின்பு மிகுந்த துயரத்தை அநுபவிப்பார்களோ என்பதாகிய ஓரரிய துயரமானது என்மனதை வருத்துகின்றது என்று சொன்னான்.—எ-று.

முரசறைசெழுங்கடைமுத்தமாமுடி... ... . *
மரைசர்தங்கோமகனுரையகூறலும்... ... ... *
விரைசெறிகமலமென்பொகுட்டுமேவிய... ... ...*
வரசரோருகன்மகன்மனத்திலெண்ணினான்... ...*

(இ-பு.) பேரிகை யொலித்துக்கொண் டிராநின்ற செழுமையுள்ள முற்றத்தையுடைய முத்துமுதலாகிய மணிகள்பதித்த பெரியமகுடமணிந்த அரசர்களரசனாகிய தசரதமகாராசன் அத்தன்மையான வார்த்தைகளைச்சொன்னவளவில்வாசனைபொருந்திய மென்மைத் தன்மையுள்ள தாமரைமலர்ப்பொகுட்டில் வீற்றிருக்கும் சிரேஷ்டம் பொருந்திய பிரமதேவனுடைய புத்திரராகிய வசிஷ்டமுனிவர் தன்மனதில்நினைத்தார்—எ-று. (௫)

அலைகடனடுவணோரனந்தன்மீமிசை... ... ... *
மலையெனவிழிதுயில்வளருமாமுகில் ... ... *
கொலைதொழிலரக்கர்தங்கொடுமைதீர்ப்பனென் ...*
றுலைவுறுமமரருக்குரைத்தவாய்மையை... ... ... *

(இ-பு) அலைகின்ற நீரையுடைய சமுத்திரத்தின் மத்தியில் ஒப்பற்ற ஆதிசேஷன்மேல் நீலமலைபோல் கண்துயிலமருந் திருமாலானவர் உயிர்க்கொலைசெய்வதாகிய செய்கையுள்ள ராக்ஷதர்களுடையதீமையைத்தீர்க்கிறேனென்று வருந்துதலைப்பொருந்திய தேவர்களுக்கு உரைத்தவார்த்தையை எ-று

அதுநோக்கிக் கொலைதொழிலென நின்றது-தம்-இடைச்சொல் உலைவு உறும் எனப்பதம்பிரிக்க. உலைவு என்னும் மொழியீற்றுகரம் முற்றுகரமாயினும் மூற்றுமற்றோரவழியென்னுஞ்சூத்திரவிதிபெற்றுநின்றது. மாமுகில் என்பது பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை இதனைவிரிக்குமிடத்து மேகநிறம்போல நிறமுள்ளவராகியதிருமாலெனவிரியும். மீமிசை ஒருபொருட்பன்மொழி.

கடுதொழிலரக்கராற்றொலைந்துவானுளோர்... ...*
கடிபமர்களனடிகலந்துகூறலும்... ... ... *
படுபொருளுணர்ந்தவப்பரமன்யாமினி... ... ...*
யடுவதில்லெனமறுத்தவரொடேகினான்.... ... ...*

(இ-பு.) கொடுமையான தொழிலையுடைய ராவணன்முதலாகிய ராக்ஷதர்கள்செய்யும் வருத்தத்தினால் இந்திரன் முதலாகிய தேவர்கள் தங்கள் சுவர்க்கலோகத்தை விட்டுநீங்கி விஷந்தங்கிய கண்டத்தையுடைய சிவனதுதிருவடியிலடைந்து (பணிந்துதங்கள் துயரத்தை) சொன்னவளவில் முன்னுண்டாயிருக்கும் பொருளையுணர்ந்த அந்தப்பரமசிவன் இனிநாம் அவர்களைக்கொல்லுவதில்லையென்று மறுத்துச்சொல்லி அவர்களுடன் சென்றார்—எ-று. (எ)

படுபொருளுணர்ந்த என்றது இராவணன் முதலானவர்களுற்பத்தியான காரணமும் அவர்களினுரா விறக்கவேண்டுமென்பதையு முணர்ந்தவனென்பது கருத்து. ஆதியில் தாமவர்களுக்குவரங்கொடுத்தருளினவராதலால் இனியாம் அவ்விதில்லென்றுணர்க்கொள்க.

வடவரைக்குடுமியினடுவண்மாசறு ... ... *
சுடர்மணிமண்டபத்துன்னிநான்முகக் ... ... *
கடவுளையடிதொழூதமரர்கண்டக ... ... *
ரிடிநிகர்வினையமதியம்பினாரரோ ... .*

(இ-ள்) தேவர்கள் மகமேருவினுடைய சிகரத்தினடுவிலிருக்கும் குற்றமற்ற ஒளியினையுடைய ரத்தினங்கள்பதித்த மண்டபத்திற்சேர்ந்து நான்கு முகங்களுள்ளபிரமதேவனுடையபாதத்தைவணங்கி ராக்ஷதர்களுடைய இடியையொத்த செய்கையைச் சொல்லினார்கள்-எ-று (௫)

மகமேரு வடதிசையிலிருப்பதாதலால் வடவரையென்னப்பட்டது. அமரகண்டரி டிநிகர்வினையம தியம்பினான் எனப் பாடமோதி தேவகண்டகராகிய இராக்கதர்செய்யுங் கொடியசெய்கையைச் சிவன்கூறினானெனப் பொருள்கூறுநருமுண்டு.

பாகசாதனன்றனைப்பாசத்தார்த்தடன் ... ...*
மேகநாதன்புகுந்திலங்கைமேயநாள் ... ... *
போகமாமலருறைபுனிதன்மீட்டமை ... ...*
தோகைபாகற்குறச்சொல்லினனரோ ... ... *

(இ-ள்) தேவர்களிவ்வாறு சொன்னவளவில் தேவேந்திரனை வெற்றிபொருந்திய மேகநாதனானவன் பாசத்தாற் கட்டிக்கொண்டுசென்று இலங்கையிலிருந்தநாளில் தான்போய் மீட்டுக்கொண்டு வந்ததைப் பார்வதிபாகனாகிய சிவனுக்குப்போகமுள்ள பெரியதாமரைப்பூவிலிருக்கும் பிரமதேவன்சொல்லினான்—எ-று. (௬)

மேகநாதனெனப்படுகின்றவன் இந்திரசித்தன். இவன்பிறந்தகாலத்தில்மேகவோசைபோலொலித்தமையால் மேகநாதனெனப் பெயர்கூறப்பட்டது. தேவேந்திரனுடன் போர்செய்து அவனைக் கட்டிக்கொண்டு வந்தபின்பு இந்திரசித்தனென்னும் பெயருண்டாயிற்று. மேயவென்பதனை முன்னுரைத்தாங்குரைத்துக்கொள்க.

இருபதுகரந்தலையீரைந்தென்னுமத் ... ...*
திருவிலிவலிக்கொருசெயலின்றெங்களாற் ... ... *
கருமுகிலெனவளர்கருணையங்கடல் ... ...*
பொருதிடர்தணிக்கினுண்டெனும்புணர்ப்பினார் ...*

(இ-ள்) இருபதுகைகளும் பத்துத்தலைகளுமுடையவனென்றுசொல்லத்தக்க அந்த இராவணனுடைய பலத்துக்கு எங்களாலாகுஞ் செய்கை யொன்றுமில்லை-நீலமேகம்போலக் கண்வளருந் திருபாற்சமுத்திரமாகிய திருமாலானவர் அவ்விராவணனுடன் போர்செய்துவென்று அவனால் உங்களுக்கு நேரிட்டிருக்குந் துன்பத்தைத் தணிக்கத்தொடங்குவாரானால் நன்மையுண்டென்று சொல்லிய புணர்ப்பினையுடையவர்கள்-எ-று. (௭)

இது குளகச்செய்யுள் திருவிலியென்னுஞ்சொல் பாவியென்னுங்குறிப்புணர்த்தி நின்றது.

இனைகெழுபயோததி துயிலுந்தெய்வவான் ... ... *
மரகதமலையினையுள்ளிநெஞ்சினுற் ... ... *

கரகமலங்குவித்திருந்தகாலையிற் ... ... *
பரகதியுணர்ந்தவர்க்குதவுபண்ணவன் ... ... *

(இ-பு.) அலைகள்பொருந்திய திருப்பாற்கடலில் அறிதுயிலமருந் தெய்வத்தன்மையுஞ் சிறப்புமுள்ள மரகதமலைபோன்ற நாராயணமூர்த்தியைமனதிற்றியானித்துத்தங்கள் கைக்கமல மலர்களைக்குவித்தஞ்சலிசெய்துகொண்டிருந்தபோது உண்மையுணர்ந்தவர்களுக்குப் பரமபதம் அருளிச்செய்யும் அத்திருமாலானவர்—எ-று. (௰௧)

இதுவுங் குளகம்- குளகம் பலபாடல் ஒருபயனிலைகொண்டு முடிவது. சூத்திரம்-குளகம்பலபாட் டொருவினைகொள்ளும்-வழுத்துதல் ஈண்டுத் தியானித்த லென்னும் பொருண்பட நின்றது.

மலர்மிசையேகினான்மாணடிசேர்ந்தார் என்னுந் திருக்குறளுக்கு அடியைத் தியானிப்பவர்களென்னும் பரிமேலழகருரையானுமுணர்க.

கருமுகிற்றாமரைக்காடுபூத்து நீ ... ... *
டிருசுடரிருபுறத்தேந்தியேடவிழ் ... ... *
திருவொடும்பொலியவோர்செம்பொற்குன்றின்மேல்.
வருவபோற்கலுழன்மேல்வந்துதோன்றினான் ... *

(இ-பு.) இவர்களிவ்வாறிருக்கும்போது நீருண்டு கருமைநிறங்கொண்ட மேகமானது செந்தாமரை மலர்க்காடு பூத்துக்கொண்டும் நீடியசந்திர சூரியர்களாகிய இருசுடரை இரண்டுபுறத்திலு மேந்திக்கொண்டும், இதழ்கள்விரிந்ததாமரைப்பூவில் வீற்றிருக்கும் இலக்குமியுடன்விளங்க ஒரு செம்பொன்மலையின்மேல் வருதல்போலக்கருடன்மேல்வந்துதோன்றினார்-எ-று (௰௨)

திருமாலானவர் நீலநிறமுள்ளவரும் திருமுகந் திருவாய் திருநேத்திரங்கள் திருக்கரங்கள் திருவடிகள் செம்மைநிறமுள்ளவருமாதலால்-கருமுகில்தாமரைக்காடுபூத்தென்றும் - கருடன்செம்மைநிறமுடையனாதலால் செம்பொன்மலைபோலென்றும்,மிகுதியற்றிந்தாமரைக்காடென்றுங்கூறினார்-சங்கு-சந்திரனும்,சக்கரம்-சூரியனுமாகக்கொள்க. இதழ தாமரைக்காதலாம் சினையாகுபெயர். வருவது ‥ எனற்பாலது விகாரவகையாற் றுவ்விகுதி குன்றிநின்றது.

எழுந்தனர்கறைமிடற்றிறையுந்தாமரைச் ... ... *
செழுந்தவிசுவந்தவத்தேவுஞ்சென்றெதிர் .. ... *
விழுந்தனரடிமிசைவிண்ணுளோரொடுந் ... ... *
தொழுந்தொறுந்தொழுந்தொறுங்களித்துலங்குவார்.

(இ-பு) (திருமால்வந்தவளவில்) காளகண்டத்தையுடைய சிவனும்,தாமரைப்பூவாகிய செழுமையுள்ள ஆசனத்தில் மகிழ்ந்து வீற்றிருக்கும் பிரமதேவனும்தேவர்களுமெழுந்தவர்களாய்எதிர்சென்று அவர்பாதத்தினிடத்தில்விழுந்துபணியுந்தோறும்பணியுந்தோறும்களிப்பினால்விளங்குகின்றார்கள்-எ-று

எழுந்தனர் கறைமிடற்றிறையுமென்பதற்கு கறைமிடற்றிறை யெழுந்தன மற்றையவர்கள் பணிந்தார்களெனப்பொருள்கூறுவாருமுளர்.

துளங்குவார் எனப்பாடமாயின் களிப்பினாலுடல் விதிர்ப்புறுகின்றார்களென்க-கறை-விஷம்-மிடறு-கழுத்து-எழுந்தனர் விழுந்தனர் என்னும் வினைமுற்றுக்க ளெச்சவினையெச்சமாய்த் துளங்குவாரென்னும் வினைமுற்றுக்கொண்டு முடிந்தன.

ஆடினர்பாடினரங்குமிங்குமா... ... ...*
வோடினருவகையாநறவுண்டோர்கிலார்... ... *
வீடினாரக்கரென்றுவக்கும்விம்மலாற் ... ... *
சூடினர்முறைமுறைதுளவத்தாண்மலர் ... ... *

(இ-பு.) ஸ்ரீமன்நாராயண மூர்த்தியைக் கண்டவளவில் அரக்கர்களிறந்து விட்டார்களென்று சந்தோஷிக்கும் பூரிப்பினால் சந்தோஷமாகிய மதுவினையுண்டு யாதொன்றும் தெரியாதவர்களாய் ஆடினவர்களாயும், பாடினவர்களாயும், அங்குமிங்குமாகவோடினார்கள் - இதுவுமன்றி முறைமுறையாகச் சென்று ஆராவணிப்பட்ட அவர்திருவடித்தாமரையைத்தங்கள் சிரசில் அணிந்துகொண்டார்கள்—எ-று. (யச)

வீடினரென எதிர்காலந்தாற் கூறப்படுவது. வாராக்காலத்து நிகழுங்காலத்து மோராங்குவருஉம், வினைச்சொற்கிளவி யிறந்தகாலத்துக் குறிப்பொடுகிளத்தல் - விரைந்தபொருளவென்மனார்புலவர்-என்னுஞ் சூத்திரவிதிபற்றி வீடினரென விறந்தகாலத்தாற் கூறினர்.— கிரசு இசையெச்சம்.

பொன்வரையிழிவதோர்புயலின்பொற்புற... ... *
வென்னையாளுடையவன்றேணின்றெம்பிரான் ... *
சென்னிவான்றடவுமண்டபத்துச்சேர்ந்தரி ... ...*
துன்னுபொற்பீடமேற்பொலிந்துதோன்றினன். *

(இ-பு.) இவர்கள் செய்கை யிவ்வாறிருக்க,— நம்முடைய பெருமானாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியானவர் பொன்மலையினின்றும் இழிவதாகிய ஒப்பற்றமேகத்தின் அழகுபொருந்த என்னையாளாக உடையவராகிய பெரிய திருவடிகள்தோளினின்றுமிழிந்து சிரசத்தினால் ஆகாயத்தையளாவு மண்டபத்திற்சென்று சேர்ந்து சிங்கங்களின் பிடரியின்மேல்பொருந்திய பொற்பீடமேற் பொலிவுற்று வீற்றிருந்தார்—எ-று. (யரு)

பெரியதிருவடியென்பது-கருடன்- அனுமான்- சிறியதிருவடி இது வைஷ்ணவ சம்பிரதாயம். சென்னிவான்றடவுமண்டபம் என்பதனை வான்றடவுஞ் சென்னியையுடைய மண்டபமெனப் பதமாறிக்கூறினு மமையும்.

பிடரி இசையெச்சமாகக் கொள்ளப்பட்டது, பொற்பீடம்- பொன்னாலாகிய ஆசனமெனப்பதம்பிரிக்க.

விதியொடுமுனிவரும்விண்ணுளோர்களு ... ...*
மதிவளர்சடைமுடிமழுவலாளனு ... ...*
மதிசயமுடனுவந்தயலிருந்துழிக்... ... ... *
கொதிகொள்வேலரக்கர்தங்கொடுமைகூறினர் ... *

(இ-பு.) பிரமதேவனும், முனிவர்களும், தேவர்களும், இளந்திங்கள்பொருந்திய சடைமுடியையுடையசிவனும் அதிசயமுடன் சந்தோஷித்துப் பக்கத்திலிருந்தபோது கொதித்தலைக்கொண்டவேலேந்திய இராக்கதர்களுடைய கொடுமையைச் சொல்லினார்கள்—எ-று. (யசு)

ஒலிஇசை-நிறைத்து நின்றது.

ஐயிருதலையினோனனுசராதியா ... ... *
மெய்வலியரக்கரால்விண்ணுமண்ணுமே ... ...*
செய்தவமிழந்தனதிருவினாயக ... ... *
வுய்திறமில்லையென்றுயிர்ப்புவீங்கினார் ... ... *

(இ-பு,) திருமகள் நாயகனே பத்துத்தலைகளையுடைய இராவணனும் அவன் தம்பிமார்முதலான தேகவலியுள்ள ராக்ஷதர்களால்சுவர்க்கலோகமும்பூலோகமுஞ்செய்யுந்தவங்களையுந்தருமங்களையு மிழந்துவிட்டன, இனிநாங்கள்பிழைக்கிற தன்மையில்லையென்று சொல்லிப்பெருமூச்சு விட்டார்கள்-எ-று.

இராவணனுக்கு முதற்பெயர் தசக்கிரீவன் கைலயங்கிரியையெடுத்தபோது தன்கீழகப்பட்டுக்கொண்டு ரோதனஞ்செய்தகாரணத்தால் இராவணனெனப் பெயருண்டாயது. விபூஷணனைநீக்கி அனுசராதியா மெய்வலியரக்கராலெனப்பாடமோதுதலுமுண்டு,ஏ-ஒழியிசை.

எங்கணீர்வரங்களாலரக்கரொன்றுளார் ... .. *
பொங்கழுவுலகையும்புடைத்தழித்தனர் ... ...*
செங்கணாயகவினித்தீர்த்தலில்லையே ... ... *
உண்குவருலகையோர்நொடியினென்றனர் ... *

(இ-பு) செங்கணாயகனே எங்களுடைய பெரியவரங்களால் அரக்கரென்றுசொல்லப்பட்டிருப்பவர்கள் - பொங்கமுள்ள திரிலோகங்களையும் அடித்தழித்தார்கள் இனி அவர்களை யொழித்தலில்லாவிட்டால் இவ்வுலகங்களை ஒருநொடிப்பொழுதி லுண்டுவிடுவார்கள்—எ-று. (௰௮)

என்றனரிடருழந்திறைஞ்சியேத்தலு... ... ...*
மன்றலர்துளவினான்வருந்தல்வஞ்சகர் ... ... *
தந்தலையறுத்திடர்தணிப்பன்பூமிக் ... ... *
கொன்றுநீர்கேண்மெனவுரைத்தன்மேயினான்.... *

(இ-பு.) இவ்வாறு சொன்னவர்களாய்த் துன்பங்கொண்டு வணங்கித் துதிசெய்தவளவில் (அவர்களைநோக்கி) நீங்களினி வருந்தாதிருங்கள் - இராக்கதர்களுடைய தலைகளையறுத்துப் பூலோகமுதலாகிய மூன்றுலோகங்களுக்கும் துயரத்தைத் தணிக்கிறோம் ஆனால் நீங்களொருவார்த்தை கேளுங்களென்று வாசனைபரந்த துளசிமாலை யணிந்திருக்கும் திருமாலானவர் சொல்லுதலைப் பொருந்தினார்—எ-று. (௰௯)

உழந்தல் -அனுபவித்தல்-வருந்தல்-ஒருமைப்பன்மை மயக்கம்— பெரும்பாலும்வஞ்சகமுள்ளவர்களாதலால் அரக்கரை வஞ்சகரென்றார். ஒருமொழியொழி தன்னினங்கொளற்குரித்தென்றதனால் மூவுலகுங்கொள்ளப்பட்டது. திரிலோகமாவது சுவர்க்கலோகம்- பூலோகம்- பாதாளலோகம்- கேண்மினென் றுரைக்கற்பாலது மின் என்னும் முன்னிலைப் பன்மையேவல் முற்றுச்சொல்குன்றிக் கேண்மெனநின்றது. மேவினான் எனற்பாலது மெயினனென விகாரமாயிற்று..

வானுளோரனைவரும்வானரங்களாய்க் ... ... *
கானினும்வரையினுங்கடிகடற்றினுஞ் ... ... *
சேனையோடவதரித்திடுமின்சென்றெனா... ... *
வானனமலர்த்தனனருளினாழியான் ... ...*

(இ-பு.) வானத்தை யுள்ளவர்களாகிய நீங்கள் யாவருஞ்சென்று வானரங்களாகிக் காட்டினிடத்தும், மலைகளினிடத்தும், வாசனைதங்கிய சோலைகளினிடத்தும், அவதரியுங்களென்று இருமைக்கடலாகிய திருமாலானவர் திருவாய் மலர்ந்தருளினார்—எ-று. (உ௰)

ஆனனம்-முகம்-அது-ஈண்டு ஆகுபெயராய் வாயினையுணர்த்திற்று. அருளின் ஆழியான் என்றும் அருளினால்சமுத்திரத்தை யொத்தவனென்றும் பொருள்படுமாறறிக.

மசரதமனையவர்வரமும்வாழ்வுமோர்... ....*
நிசரதகணைகளாணீறுசெய்யயாம் .. .. *
கசரதுரகமாக்கடல்கொள்காவலன்... ... ...*
றசரதன்மதலையாவருதுந்தாரணி... ... ... *

(இ-பு:) அத்தன்மையுள்ள அரக்கர்களுடைய பேய்த்தேரினையொத்த வரங்களையும், வாழ்வுகளையும், ஒப்பற்ற உண்மையாகிய ரத்தக்கணைகளால் அழிக்கும்படி -யானைகள்- தேர்கள்- குதிரைகள்- பதாதிகளாகிய பெரியசேனைசமுத்திரத்தையுடைய அரசனாகிய தசரதனுடைய புத்திரனாகப்பூலோகத்தில் யாஞ் செல்கின்றோம்—எ-று. (உக)

வளையொடுதிகிரியும்வடவைதீதர ... ... *
விளைதருகடுவுடைவிரிகொள்பாயனு ... .*
மிளைஞர்களெனவடிபரவவேகிநாம்... ... ...*
வளைமதிலயோத்தியில்வருதுமென்றனன்...... ...*

(இ-பு) சங்கமுஞ் சக்கராயுதமும், வடவாமுகாக்கினி தீயும்படி உண்டாகின்ற விஷத்தையுடைய விரித்தலைக்கொள்ளும்பாயலாகிய சேஷனும் தம்பியர்களாக அடியைப்பரவும்படி நாஞ்சென்று மதில்சூழ்ந்த அயோத்தியில் வருகிறோமென்றனர்—எ-று. (உஉ)

என்றவனுரைத்தபோதெழுந்துதுள்ளினார் ... ...*
நன்றிகொண்மங்கலநாதம்பாடினார் ... ... *
மன்றலர்செழுந்துளவணியுமாயனு ... ...*
ரின்றெமையளித்தனனென்னுமேம்பலால்... ....*

(இ-பு.) ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளினபோது தேவர்கள் எல்லாரும் வாசனைபரந்த செழுந்துளவமாலை யணிந்த சுவாமியானவர் இப்போது நம்மை ரக்ஷித்தனரென்னுஞ் சந்தோஷத்தினால் எழுந்து துள்ளி நன்மைகொண்ட மங்கலகீதம்பாடினார்கள்—எ-று. (உங)

[வேறு.]

போயதெம்பொருமலென்றுவிந்திரனுவகைபூத்தான் ... ...*
றாயமாமலருமோனுஞ்சுடர்மதிசூடிதேனுஞ் ... ...*
சேயுயர்விசும்புளோருந்தீர்ந்ததெஞ்சிறுமையென்றார்... ...*
மாயிருஞாலமுண்டோன்கலுழன்மேற்சரணம்வைத்தான் ... *

(இ-பு.) எங்கள் துன்பம் நீங்கிவிட்டதென்று கொண்டாடி -தேவேந்திரன் சந்தோஷமுடையவனானான்- பரிசுத்தமாகிய பெருமைபொருந்திய தா

மரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும், பிரகாசமுள்ள சந்திரனைத்தரித்திருக்கும் சிவனும், மிகவும் உயர்ந்த சுவர்க்கத்திலிருக்கும் தேவர்களும் எங்கள் சிறுமைதீர்ந்ததென்றுட்கொண்டார்கள் மிகவும்பெரிய உலகமுண்ட திருமாலானவர் கருடன்மேல் திருவடிகளைவைத்தருளினார்—எ-று. (௨௪)

சரணம்வைத்தானென்றது ஆரோகணித்துக்கொண்டானென்னும்பொருள்படநின்றது.

என்னையாளுடையவையன்கலுழன்மீதெழுந்துபோய ... *
பின்னர்வானவரைநோக்கிப்பிதாமகன்பேசுகின்றான்... ... ...*
முன்னமேயெண்கின்வேந்தன்யானெனமொழிகின்றான்மற் ...*
றன்னவாறெவருநீர்போயவதரித்திடுமினென்றான் ... ... *

(இ-பு) என்னை யடிமையாகவுடைய நாராயணமூர்த்தியானவர் கருடவாகனத்தின்மேல் எழுந்தருளிப்போனபின்பு தேவர்களைநோக்கிச்சொல்லுகின்றபிரமதேவன்-முன்னமே நான்கரடிப்படைகளுக்கெல்லாம் அரசனாகிய சாம்பவானாக அவதரித்திருக்கிறேனென்றுசொல்லி அவ்வாறு நீங்களெல்லாரும்போய் அவதரித்திடுங்களென்றான்—எ-று. (௨௫)

தருவுடைக்கடவுள்வேந்தன்சாற்றுவாலெனதுகூறு ... ... *
மருவலர்க்கசனியன்னவாலியுமகனுமென்ன... ... ... *
இரவிமற்றெனதுகூறங்கவற்கிளையவனென்றேத ... ... *
அரியுமற்றெனதுகூறுநீலனென்றறைந்திட்டானல்..... ... *

(இ-பு.) கற்பகவிருக்ஷங்களையுடையதேவேந்திரன் என்னுடையபாகைவர்களாகிய இடியையொத்த வாலியும், அவன்புத்திரனாகிய அங்கதனுமென்று சொல்ல,பின்புசூரியன் என்னுடையகூறு-வாலிக்கிளையவனாகியசுக்கிரீவனென்றுசொல்ல,அக்கினிதேவனும் என்கூறு- நீலனென்றுசொல்லினன்-எ-று.

மேற்கூறிய இரண்டுவினையெச்சங்களும் அடைந்திட்டான் என்னும் பிறவினைகொண்டு முடிந்தன, நீலனும் என்ற உம்மை குறைந்துநின்றன.

வாயுமற்றெனதுகூறுயாருமியெனனுமற்றோர்... ... ... *
காயுமற்கடங்களாகிக்காசினியதனின்மீது ... ... *
போயிடத்துணிந்தோமென்றார்புராரிமற்றியானேவாத ...*
சேயெனப்புகன்றான்மற்றைத்திசையுளோர்க்கவதியுண்டோ....*

(இ-பு.) வாயுதேவன் என்னுடையகூறு அனுமானென்று சொல்லியவளவில் மற்றைத்தேவர்கள் கோபிக்காநின்ற வானரங்களாகிப் பூமியினிடத்திற் செல்ல நிச்சயித்துக்கொண்டோமென்றார்கள். (அதற்குமேல்) திரிபுரதகனஞ்செய்தவராகிய சிவன் நானே அந்த வாயுபுத்திரனென்று சொன்னார். மற்றத்திசையிலிருப்பவர்களை வகுத்துச்சொல்லஅளவுண்டோ—எ-று. (௨௭)

அருடருகமலக்கண்ணனெருண்முறையலருளோனு ... ... *
மிருடருமிடத்திறேனுமமரருமினையராகி... ... ... *
மருடருவனத்தின்மண்ணின்வானரராகிவந்தார் ... ...*
பொருடருமிறைவர்தத்தமுறைவிடஞ்சென்றுபுக்கார்... ...*

(இ-பு.) பாகவதர்களுக்குக் கிருபையைத் தருகின்ற தாமரை மலர்போன்
ற திருநேத்திரங்களுள்ள நாராயணமூர்த்தியானவர் அருளிச்செய்த முறை
மைப்படி தாமரைப்பூவில் வீற்றிருக்கும்பிரமதேவனும், கருமைநிறம்பொ
ருந்திய கண்டத்தையுடைய சிவனும், தேவர்களும், இத்தன்மையாகிய எற்
பாடுகள் செய்துகொண்டு மயக்கத்தைத்தருகின்ற ஆரணியங்களிலு மற்றப்
பூமியிலும் வானரர்களாய் வந்தார்கள்- புருஷார்த்தங்களை நினைத்துத்தொழு
கின்றவர்களுக்குத் தருகின்றவர்களாகிய பிரமதேவனுஞ் சிவனும் தங்கள்தங்
கள் வாசஸ்தானங்களிற்போய்ச் சேர்ந்தார்கள்—எ-று. (உ௮)

ஈதுமுன்னிகழ்ந்தவண்ணமெனமுனிபிதயத்தெண்ணி .. ... *
மாதிரம்பொருததிண்டோண்மன்னநீவருந்தலேழ் ... *
பூதலமுழுதுங்காக்கும்புதல்வரையளிக்கும்வேள்வி .. ... *
தீதறமுயலினையசிந்தைநோய்தீருமென்றான் .. ..*

(இ-பு) இதுமுன்னம் நடந்த முறைமை யல்லவாவென்று வசிஷ்டமுனி
வர் தம்முடைய மனதில்நினைத்துத் திக்குகளையும் பொருதத்தக்க திண்ணிய
புஜங்களையுடைய அரசனே நீ வருந்துதலை நீங்கு - பதினாலுலோகங்களையுங்
காக்கும்படியான புத்திரரைத்தரத்தக்கதான புத்திரகாமேஷ்டி குற்றமறச்
செய்வையாகில் ஐயனே யுன்சிந்தையிலிருக்கும்வருத்தந்தீருமென்றார்-எ-று

என்னமாமுனிவன்கூறவெழுந்தபேருவகைபொங்க ... *
மன்னவர்மன்னனந்தமாமுனிசரணஞ்சூடி... ... ...*
யுன்னையேபுகல்புக்கேனுக்குறுகண்வந்தடைவதுண்டோ ... *
வன்னதற்கடியேன்செய்யும்பணியினிதளித்தியென்றான்... ...*

(இ-பு.) புத்திரகாமேஷ்டி செய்யென்று பெருமை பொருந்திய வசிஷ்
டமுனிவர் சொல்லியவளவில் உண்டாகிய பெரிய சந்தோஷமானது மேலி
ட, அரசர்க்கரசனாகிய தசரதமகாராசன் அந்த வசிஷ்டருடைய திருவடிக
ளைத் தன்முடியில் சூட்டிக்கொண்டு தேவரீரையே அடைக்கலமாகச் சேர்
ந்தவெனக்குத் துன்பம்வந்து சேர்வதுமுண்டோ-அத்தன்மையுள்ள இஷ்டி
யைக்குறித்து அடியேன் செய்யவேண்டிய ஏவல்யாதோ அதனையும் இனிதா
கக்கட்டளையிட்டருளவேண்டுமென்றான்—எ-று. (௩௰)

ஏ-தேற்றம்-அடைவதுண்டோ என்னும் ஓகாரம் அடையாதென்னும்எதிர்மறைப்பொ
ருளில்வந்தது.

மாசறுசுரர்களோடுமற்றுளோர்தமையுமீன்ற ... ...*
காசிபனருளுமைந்தன்விபாண்டகன்கங்கைசூடு ... ... *
மீசனும்புகழ்தற்கொத்தோனிருங்கலைபிறவுமெண்ணித் ... ...*
றேசுடைத்தந்தையொப்பான்றிருவருள்புனைந்தமைந்தன் ... *

(இ-பு.) குற்றமற்றதேவர்களையு மற்றுமுள்ளவர்களையு மீன்ற காசியபரிஷி
பெற்ற புத்திரனாகிய விபாண்டகனென்னும் பெயரையுடையவருங் கங்காநதி
யைத் திருமுடியில் அணிந்திருக்குஞ்சிவனும் புகழ்தற்கொத்தவரும் பெரு
மைபொருந்திய வேதமுதலிய சாஸ்திரங்களிலு மற்றவைகளிலும் எண்ணு

மிடத்து ஒளியையுடைய தமதுபிதாவாகிய காசிபருக்கொப்பானவருமாகிய முனிவருடைய திருவருளைப்பெற்றபுத்திரன்—எ-று. (௧௧)

வருகலைபிறவுநீதிமனுநெறிவரம்பில்வாய்மை ... ...*
தருகலைமறையுமெண்ணிற்சதுமுகற்குவமைசான்றோன் ... *
திருகலையுடையவிந்தச்செகத்துளோர்தன்மைதேரா... ... *
வொருகலைமுகச்சிருங்கவுயர்தவன்வருதல்வேண்டும் ... ...*

(இ-பு.) வழங்குகின்ற கலைஞானங்களிலும் பிறவற்றிலும் நீதியிலும் மனுவினால்சொல்லப்பட்ட ஒழுக்கத்திலும் அளவில்லாததா யுண்மைநெறிகளைச் சொல்லுகின்றவேதசாஸ்திரங்களிலும்யோசிக்குமிடத்தில் நான்குதிருமுகங்களையுடைய பிரமதேவனுக்கொப்பானவராய்த் திருகிவருகின்ற அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த விந்தவுலகத்தி லிருப்பவர்களுடைய தன்மையை உணராதஒருகொம்புள்ள கலைமான்முகமுடைய உயர்ந்த தவசியாகிய கலைக்கோட்டுமுனிவர் அந்த இஷ்டிசெய்வதற்காக வருதல்வேண்டும்-எ-று (௧௨)

பாந்தளின்மகுடகோடிபரித்தபாரதனில்வைகு ... ... *
மாந்தர்கள்விலங்கென்றுன்னுமனத்தன்மாதவத்தினெண்ணிற் *
பூந்தவிசுவந்துளோனும்புராரியும்புகழ்தற்கொத்த ... ... *
சாந்தனால்வேள்விமுற்றிற்றநயர்களுளாரென்றான் ... *

(இ-பு.) சர்ப்பரூபமாகிய ஆதிசேஷின் ஆயிரம்பணமுடிகளாலும் தாங்கப்பட்ட பூலோகத்தில் பொருந்திய மனிதர்களை மிருகங்களென்று நினைக்குமனமுள்ளவராகிய பெருமைபொருந்திய தவத்தில் எண்ணுமிடத்துத்தாமரைப்பூவாகியஆசனத்தைச்சந்தோஷித்ததிலிருப்பவராகியபிரமதேவனும் பரமசிவனும் புகழ்தற்கொத்த சாந்தகுணமுள்ள அந்த முனிவரால் யாகம் நிறைவேற்றினால் புத்திரர்களுள்ளவர்களாவார்களென்றுசொன்னார்-எ-று. ()

ஆங்குலாயினையகூறுமருந்தவர்க்கரசன்செய்ய ... ... *
பூங்கழற்றொழுதுவாழ்த்திப்பூதலமன்னர்மன்னன் ... ...*
நீங்கறுகுணத்தான்மிக்கசெழுந்தவன்யாண்டையுள்ளா ... *
னீங்கியான்புரியுந்தன்மையருளுதியிறைவவென்றான்... ... *

(இ-பு.) இத்தன்மையனவாகிய வார்த்தைகளைச்சொல்லிய அருமையாகிய தவமுனிவர்களுக்கெல்லாஞ் சிறந்தவராகிய வசிஷ்டருடைய செந்தாமரைமலர்போன்றபாதங்களைத்தொழுதுவாழ்த்திப்பூலோகத்திலிருக்கும் அரசர்க்கரசனாகியதசரதமகாராசனானவன்குற்றம்நீங்கியகுணங்களாற்சிறந்தசெழுமையுள்ளவராகிய அந்தக்கலைக்கோட்டுமுனிவரெவ்விடத்திருக்கின்றனர் இங்குநான்செய்யுந் தன்மையை யிறைவனே அருள்செய்யுமென்றான்—எ-று. (௧௪)

[வேறு]

புத்தானகொடுவினையோடருந்துயரம்போயொளிப்பப்புவனந்தாங்கும்.*
சத்தானகுணமுடையோன்றனையிறைஞ்சித்தன்னையிற்சாலைபோதல்வா....*

னைத்தானும்வெலற்கரியான்மனுகுலத்தேவந்துதித்தோனிலங்குமௌலி *
யுத்தானபாதனருளுரோமபதனென்றுளனிவ்வுலகையாள்வான் ... ... *

(இ-பு.) தவமாகிய கொடிய வினைகளுடன் அரிய துயரமானதுபோயொ ழிப்பதற்குக் காரணமான சத்துவ குணமுடையவனுந் தயை-தாக்ஷணியம்- கிருபை- இவைகளினிடம்போல்பவனும் எதனாலும்வெல்லுதற்கரியவனும் மனுகுலத்தில்வந்து பிறந்தவனுமாகிய பிரகாசிக்காநின்ற கிரீடமணிந்துள்ள உத்தானபாதனென்னும் அரசன்பெற்ற உரோமபதன் என்றுசொல்லப்பட் டு இந்த உலகத்தை யாளுகின்ற ஒரு அரசனிருக்கின்றான் — எ-று. (௫௫)

அன்னவன்றன்புரந்தளிக்குந்திருநாட்டினெடுங்காலமளவதாக... ... *
மின்னியெழுமுகிலின்றிவெந்துயரம்பெருகுதலும்வேதநன்னூன் ... ...*
மன்னுமுனிவரையழைத்துமாதானங்கொடுக்கினும்வான்வழங்காதாகப் ...*
பின்னுமுனிவரர்க்கேட்பக்கலைக்கோட்டுமுனிவரின்வான்பிலிற்றுமென்றார்.

(இ-பு) அவ்வரசன் ரட்சிக்காநின்ற திருநாட்டினிடத்தில் நெடுங்காலவள வாக மின்னிக்கொண்டுவருகின்ற மேகம்பொழிதலின்றி வெவ்விய துயரமதி கரித்ததினால வேதமுதலிய நல்லசாஸ்திரங்களில் உணர்ச்சி பொருந்திய மு னிசிரேஷ்டர்களைவரவழைத்துப்பெரியதானங்கொடுக்கவும்அம்மேகம்பொ ழியாததாகவே பின்னும் அம்முனிவரை நோக்கித்தானங்கொடுத்தும் மழை பெய்யவில்லையேயென்று வினாவினான் அவர்கள் கலைக்கோட்டு முனிவர்வந் தால் மழைபெய்யுமென்றார்கள் — எ-று. (௫௬)

ஓதநெடுங்கடலாடையுலகினில்வாழ்மனிதர்விலங்கெனவேயுன்னுங் ... ...*
கோதின்குணத்தருந்தவனைக்கொணரும்வகையாவதெனக்குனிக்கும்வேலை..*
சோதிநுதற்கருநெடுங்கட்டுவரிதழ்வாய்த்தரளநகைத்துணைமென்கொங்கை..
மாதரெழுந்தியாமேகியருந்தவனைக்கொணர்துமெனவணக்கஞ்செய்தார்...*

(இ-பு.) முனிவர்க ளிவ்வாறு சொல்லியபோது அலைகளையுடைய நெடிய சமுத்திரமாகிய புடைவையாற் சூழப்பட்ட உலகத்தில்வாழும் மனிதர்களை மிருகங்களெனவே மதித்துக்கொண்டிருக்கும் குற்றமில்லாத குணத்தையு டைய கலைக்கோட்டுமுனிவரை இவ்விடத்துக்குக் கொண்டுவரும்வகை எப்ப டியென்று அரசன் ஆலோசிக்கும்போது ஒளிபொருந்திய நெற்றியினையு ம், கருமைதங்கிய நெடுங்கண்களையும், பவளம்போன்ற அதரத்தையுடையவா யினையும், முத்துகளொத்தபற்களையும், தமக்குத்தாமே யொப்பாகிய தனங் களையுமுடைய மாதர்கள் எழுந்து நாங்கள்சென்று அந்தமுனிவரை அழைத் துக்கொண்டுவருகிறோமென்று வணக்கஞ்செய்தார்கள் — எ-று. (௫௭)

தமக்குத்தாமொப்பாகிய என்பதனை நச்சினார்க்கினியா ருரையிற்காண்க. இரண்டு கொங்கையெனப் பொருள்கொள்வாருமுளர்.

ஆங்கவரம்மொழிபுரைப்பவரசன்மகிழ்ந்தவர்க்கணிதூசாதியாய .... [தோ
பாங்குளமற்றவையருளிப் பனிப்பிறையைப் பழித்தநுதற் பணைத்த வேய்த்
ளென்குமிடைதடித்தமுலையிருண்டகுழன்மருண்டவிழிப்பிலவச்செவ்வாய்ப்*
பூங்கொடியீரேகுமெனத்தொழுதிறைஞ்சியிரதமிசைப்போயினரே ... *

(இ-பு) அந்தக்கணிகைமாதர் அவ்வார்த்தை சொன்னவளவில் உரோமபதராசன் மகிழ்ச்சியடைந்து அவர்களுக்குஆபரணங்கள் வஸ்திரங்கள் முதலாகிய நன்மையுள்ள மற்றவைகளுங்கொடுத்துக் குளிர்ச்சிபொருந்திய பிறையினைப்பழித்த நெற்றியினையும், பருத்தமூங்கிலையொத்ததோள்களையும், மெலிந்த இடையினையும், பருத்ததனங்களையும், கறுத்த அளகத்தையும், மருட்சிதங்கியகண்களையும், இலவம்பூவொத்த செவ்வாயினையு முடைய மாதர்களை செல்லுங்களென்றுசொல்ல, அஞ்சலிசெய்து வணங்கி ரதத்தின்மே லேறிக்கொண்டுசென்றார்கள்—எ-று. (௩௮)

மற்றவை-என்பதில் முற்றும்மை எஞ்சிநின்றது.

[வேறு.]

ஓசனைபலகடந்தினிபொரோசனை... ... ... *
யேசறுதவனுறையிடமிதென்றுழிப் ... ... *
பாசிழைமடந்தையர்பன்னசாலைசெய் ... ... *
தாசறுமருந்தவத்தவரின்வைகினார்... ... ... *

(இ-பு.) பலயோசனைதூரவழி கடந்துசென்று இனிபொருயோசனைதூரத்தில் குற்றமற்றதவமுள்ள கலைக்கோட்டுமுனிவர் வாசஞ்செய்யும் ஆச்சிரமமிருக்கின்றதென்றவிடத்தில் பசும்பொன்னாற் செய்யப்பட்ட ஆபரணங்கள் அணிந்துகொண்டிருக்கும் அந்தக்கணிகைமாதர் பன்னசாலையைத்தடுத்துக்கொண்டு குற்றமற்ற அருந்தவமுனிவர்கள்போல மரவுரி சடைமுடிமுதலியவைதாங்கிகொண்டு பொருந்தியிருந்தார்கள்—எ-று. (௩௯)

என்றவுழி-எனற்பாலது என்றுழியென எச்சத்திரிபாய்நின்றது. பன்னம்-எ-து-இலை. தவம்-தவர் எனப்பிரிந்துப்பொருள்கொள்ளினுமமையும்.வழிஇசையெச்சமாகக்கொண்டது.

அருந்தவன்றந்தையைபற்றநோக்கியே... ... *
கருந்தடங்கண்ணியர்கலைவலாளனிற் ... ...*
பொருந்தினர்பொருந்துபுவிலங்கெருப்புரிந் ... *
திருந்தவரிவரனவினையசெய்தனன் ... ...*

(இ-பு.) பன்னசாலை செய்துகொண்டிருந்த கருமையுள்ள பெரிய கண்களையுடைய அம்மாதர்கள் கலைக்கோட்டுமுனிவருடைய பிதாவாகிய -விபாண்டகரில்லாத காலமறிந்துகொண்டு வேதசாஸ்திரங்களில்வல்லவராகிய அக்கலைக்கோட்டுமுனிவருடைய ஆசிரமத்திற் சேர்ந்தார்கள். அம்முனிவரிவர்களைநோக்கி மிருகமாகவிருந்துசெய்த பெரியதவமுடையவர்களெனக்கருதி இன்னவைசெய்தார்—எ-று. (௪௰)

இல்-என்பது-ஈண்டு ஆசிரமம் தந்தையை வேற்றுமைமயக்கம். புரிந்து இருந்தவனென்றது எச்சத்திரிவு.

அருக்கியமுதலினோடாசனங்கொடுத் ... ... *
திருக்கெனவிருந்தபினினியகூறலும்... ... .. *
முருக்கிதழ்மடந்தையர்முனிவனைத்தொழாப்... *
பொருக்கெனவெழுந்துபோய்ப்புனையுப்புக்கனர்.*

(இ-பு.) (அம்முனிவர்) அருக்கிய முதலானவைகளோடு ஆசனங்கொடுத்து இருக்கக்கடவீரென்று சொல்ல, அவர்களிருந்தபின்பு இனியவார்த்தைகளைச்சொன்னவளவில் முருக்கம்பூவையொத்த அதரத்தையுடைய அம்மாதர்கள் முனிவனைவணங்கி விடைபெற்றுக்கொண்டு விரைவினிலெழுந்துபோய்த் தங்கள் ஆசிரமத்திற்சேர்ந்தார்கள்—எ-று. (௬௧)

அருக்கியம் பாத்தியம் ஆசமனம் இம்மூன்றும் பெரியோர்களுக்குச்செய்யு முபசாரம். அருக்கியம் நீர் சிரசில் புரோக்ஷித்தல் பாத்தியம்-பாதங்களைக் கழுவுதல் ஆசமனம்-ஆபோசனஞ்செய்யக்கொடுத்தல்- இருக்க என்னும் வியங்கோள் இருக்கெனவிகாரமாயிற்று.

திருந்திழைபவர்சிலதினங்கடூர்ந்துழி ... ...*
மருந்தினுமினியனவருக்கைவாழைமாத் ... ... *
தருந்தருங்கனியொடுதாழையின்பல ....*
மருந்தவருந்தெனவருளினாரரோ... ... . *

(இ-பு.) திருத்தமாகச் செய்யப்பட்ட ஆபரணங்களணிந்துகொண்டிருக்கும் அக்கன்னிகைமாதர்கள் சிலநாள் சென்றபோது அரியதவமுள்ள முனிவனோ அமிர்தத்தினு மினியவைகளாகிய-பலா-வாழை-மா-என்னு மிவ்விருட்சங்கள்தந்தபழவர்க்கங்களுந் தேங்காய்களும் உண்ணுமென்று கொடுத்தார்கள்.

தருத்தரு எனற்பாலது தருந்தரு என மெலித்தல் விகாரமாயிற்று. தாழை-தெங்கு-பலம்-பழம்-நாளுக்குநாள் சிறிதுசிறிதாகக்கொடுத்துத்தின்னப்பழக்கினார்களெனக்கொள்க. ஊழி-என்பது-ஈண்டு காலத்தின்கண்வந்தது.

இன்னனபலபகலிறந்தபின்றிரு... ... ... *
நன்னுதன்மடந்தையர்நவையின்மாதவன் ... *
றன்னையெம்மிடத்தினுஞ்சார்தல்வேண்டுமென்... *
றன்னவர்தொழுதலுமவரொடேகினன் ... ...*

(இ-பு.) இத்தன்மை யுடையவைகளாகிய பலநாள் சென்றபின்பு அழகிய நல்லநெற்றியையுடைய அம்மாதர்கள் குற்றமில்லாத கலைக்கோட்டு முனிவனைநோக்கி எங்களிடத்துக்கும் தேவர்வருதல்வேண்டுமென்று அவர்கள் வணங்கினவளவில் அவர்களுடன் சென்றார்—எ-று. (௬௨)

இடத்தினும் என்பதினின்றிருக்கும் உம்மை எச்சவும்மை.

விம்முறுமுவகையர்வியந்தநெஞ்சின ... ... *
ரம்மவிதியென்னவகலுநீணெறி ... ... *
செம்மையின்முனிவரன்றொடரச்சென்றனர் ...*
தம்மனைமனமருட்டையலார்களே... ... ... *

(இ-பு.) (கலைக்கோட்டு முனிவர் தடைசொல்லாமல் வருதலினால்) மயக்குதலைச்செய்கின்ற அம்மாதர்கள் அதிகரிக்கும் சந்தோஷமுடையவர்களும், அதிசயமுற்ற மனமுடையவர்களுமாய் அம்முனிவனைநோக்கி எங்கள்பன்னசாலை யிதோ விருக்கின்றது இதோ விருக்கின்றதெனச் சொல்லிக்கொண்டு போகின்ற நெடியமார்க்கத்தில் செவ்விதாக அக்கலைக்கோட்டுமுனிவர் தங்கள்மனம்போலப்பின்றொடர்ந்துவரச்சென்றார்கள்—எ-று. (௬௩)

அம்ம முன்னிலையசை செம்மையின் முனிவரன் என்பது ஒழுக்கத்தினையுடைய முனிவரைக்கொள்ளினுமமையும். செவ்விதாக வென்றவிட்டது. இன் - அவ்வழிக்கண்வந்த சாரியையாகக்கொள்க. முனிவரன் - முனிசிரேஷ்டன்.

ஊனகர்முனிவரன்வருமுன்வானவன்... ... ...*
கானமர்கடுவெனக்கருகிவான்மிசை... ... ... *
சளசளவெனமழைத்தாரைகான்றன ... ...*
குளனொடுநதிகடங்குறைகடீரவே... ... ... *

(இ-ள்.) இவ்வாறு கலைக்கோட்டுமுனிவர் உரோமபதராசனுடைய வளப்பம்பொருந்திய நகரத்துக்கு வருமுன் மேகங்கள் பரமசிவனது கண்டத்திற் பொருந்திய விஷம்போலக் கருநிறங்கொண்டு ஆகாயத்தின்மேனின்று சளசளவென்று மழைத்தாரைகளைக் குளங்களும், நதிகளும், தங்கள் குறைதீரும்படிபொழிந்தன—எ-று. (௪௫)

சளசளவென்பது-இரட்டைக்கிளவி குளன்மொழியிறுதிப்போலி.

பெரும்புனனதிகளுங்குளனும்பெட்பறக் ... ...*
கரும்பொடுசெந்நெலுங்கவின்கொண்டோங்கிட .*
விரும்பயல்ககனமீதிடைவிடாதெழுந்... ... *
தரும்புனல்சொரிந்தபோதரசுணர்ந்தனன்... ...*

(இ-ள்.) ஆறுகளுங் குளங்களும் மிகுந்த நீரினிடத்துக் கொண்டிருக்கிற ஆசை நீங்கவும், கரும்புஞ் செந்நெற்களும் அழகுகொண்டு ஓங்கிவளரவும், பெரியமேகம் ஆகாயத்தின்மேலெழுந்துநின்று இடைவிடாமல் அரியநீரைச்சொரிந்தபோது உரோமபதராசன் எண்ணுகின்றான்—எ-று. (௪௬)

உணர்கின்றனன் என நிகழ்காலத்தாற் கூறப்பட்டது.

காமமும்வெகுளியுங்களிப்புங்கைத்தெழு ... ...*
கோமுனியிவணடைந்தனன்கொல்கொவ்வைவாய்த்*
தாமரைமலர்முகத்தரளவாணகைத்... ... ... *
தூமமென்குழலியர்புணர்த்தசூழ்ச்சியால்... ... *

(இ-ள்.) காமத்தையுங் கோபத்தையு மயக்கத்தையும்வெறுத்துணர்ந்தமுனிசிரேஷ்டராகிய கலைக்கோட்டுமுனிவர் கோவைப்பழம்போன்ற வாயினையும்; செந்தாமரைமலர்போன்ற முகத்தினையும், முத்துக்களொத்த ஒளிபொருந்திய பற்களையும், புகையூட்டிய மிருதுவாகிய அளகபாரத்தையு முடையகணிகைமாதர்செய்த வுபாயத்தினால் இவ்விடத்தில் வந்தாரோ-எ-று. (௪௭)

என்றெழுந்தருமறைமுனிவர்யாரொடுஞ்... ... *
சென்றிரண்டியோசனைசேணைசூழ்தர... ... ...*
மன்றலங்குழலியர்நடுவண்மாதவத்... ... ... *
குன்றினையெதிர்ந்தனன்குவவுத்தோளினான்... ... *

(இ-ள்.) திரட்சியாகியதோளையுடைய அவ்வரசன் இவ்வாறு ஆலோசித்துக்கொண்டு சிங்காசனம் விட்டெழுந்து சேனைசூழ்ந்துவர அரியவேதங்களுட—

ணர்ந்த முனிவர்கள் யாவருடனும் இரண்டுயோசனை தூரவழிசென்று வாசு னைதங்கிய அளகபாரத்தையுடைய அம்மாதர்கண்மத்தியில் பெருமைபொரு ந்திய தவத்தில் மலைபோல் சலனப்படாத தன்மையுள்ள கலைக்கோட்டுமுனி வரை எதிர்கொண்டான்—எ-று. (௬அ)

சிறப்பினல் தவக்குன்றென உயர்திணை அஃறிணையாயிற்று. மன்றல் அம் இதிலிருக்கும் அம்சாரியை- அழகெனவுமாம்.

வீழ்ந்தனனடிமிசைவிழிகணீர்தர ... ... *
வாழ்ந்தனமினியெனமகிழுஞ்சிந்தையான் ... *
சூழ்ந்தெழுமாதரார்தம்மைநோக்கிநீர் .. ... *
போழ்ந்தனிரெனதிடர்புணர்ப்பினாலென்றான்... *

(இ-பு.) அம்முனிவரைக் கண்டவளவி லினி வாழ்ந்தோமென்று மகிழுஞ் சிந்தையையுடைய அவ்வரசன் கண்கள் ஆனந்த பாஷ்பம் பொழிய அம்மு னிவருடைய பாதத்தினிடத்தில் தாழ்ந்து வணங்கினபோது தன்னை வணங்கி எழுந்த அம்மாதர்களை நோக்கி நீங்கள் உபாயத்தினால் என்னுடைய துன்ப த்தை நீக்கினீர்களென்று சொன்னான்—எ-று. (௬௧)

அரசருமுனிவருமடைந்தவாயிடை ... ...*
வரமுனிவஞ்சமென்றுணர்ந்தமாலைவாய்... ... *
வெருவினர்விண்ணவர்வேந்தன்வேண்டலாற் ... *
கரையெறியாதலைகடலும்போன்றனன்... ... *

(இ-பு) அரசர்களும் முனிவர்களும் வந்தபொழுது சிரேஷ்டமுள்ள கலைக் கோட்டுமுனிவர் இது வஞ்சகம் என்று அறிந்துகொண்ட காலத்தில் தேவர் களும்பயந்தார்கள். உடனே அவ்வரசன் வேண்டிக்கொண்டமையால் (அம் முனிவர்) கோபங்கொள்ளாமல் கரையுடைத்துப் புரண்டுவராமலிருக்கும் அ லைநீரையுடைய சமுத்திரம்போலிருந்தார்—எ-று (௬௨)

அவ்வென்னுஞ் சுட்டெழுத்து-ஆ- வெனநீண்டு யகரவுடன்படு மெய்பெற்று - ஆயிடை என நின்றது. கரையெறியாத அலைகடலெனற்பாலது கரையெறியாது அலைகடலென்றது எச்சத்திரிவு- புகழ் புரிந்தில்லிலோரென்றதுபோல.

வள்ளுறுவயிரவான்மன்னன்பன்முறை... ... ...*
வெள்ளருமுனிவனையிறைஞ்சிபாரினுந் ... *
தள்ளருந்துயரமுஞ்சமைவுஞ்சாற்றலு ... ... *
முள்ளுறுவெகுளிபோயொளித்ததாமரோ ... ...*

(இ-பு) உறைபொருந்திய பலமுள்ள வாளாயுதத்தையுடைய அவ்வரசன் இகழ்ச்சிசெய்தற்கரிய கலைக்கோட்டுமுனிவரைவணங்கி அருவரையில் மழை யின்றி யாவராலும் நீக்குதற்கரிதாயிருந்த தன்னுடைய துயரத்தையும் தற் காலமழைபொழிந்த அமைவினையுஞ் சொல்லியவளவில்அம்முனிவருள்ளத் திற்பொருந்திய கோபமானது ஒளித்துப்போயிற்று—எ-று. (௬௩)

அருள்கரந்தரசனுக்காசியுங்கொடுத்... ... ...*
தருடருநேரின்மீதொல்லையேறினன்... ... *

பொருடருமுனிவருந்தொடரப்போயினன்......*
மருளொழியுணர்வுடைவரதமாதவன்... ... ...*

(இ-பு.) மயக்கம் நீங்கிய ஞானத்தையுடைய சிரேஷ்டம்பொருந்திய கலைக்கோட்டுமுனிவர் மனதில் கிருபையிருந்து அவ்வரசனுக்கு ஆசீர்வசனமுங் கொடுத்து உருளைபூண்ட தேரின்மேல் விரைவாக ஏறினவராய் வரத்தருமுனிவர்களுந்தொடர்ந்துவர வழிக்கொண்டு சென்றார்---எ-று. (௫௨)

ஏறினன்-என்னும் வினைமுற்றினை ஏறியென்னும் வினையெச்சமாகக்கொள்க.

அடைந்தனன்வளநகரலங்கரித்தெதிர்... ... ...*
மிடைந்திடமுனியொடும்வந்தன்கோயில்புக் .... *
கொடுங்கவில்பொற்குழாத்துறையுளெய்தியோர்...*
மடங்கலாதனத்திடைமுனியைவைத்தனன்... ... *

(இ-பு.) உரோமபதராசன் வளப்பம்பொருந்திய நகரத்தைச்சேர்ந்து அங்கிருப்பவர்கள் நகரத்தை யலங்கரித்து எதிர்கொண்டுவர, அம்முனிவருடன் தன்னரண்மனையிற்போய்க் குறைதலில்லாத பொன்கூட்டத்தினாற்செய்யப்பட்டிருக்கிற சபாமண்டபத்திற் சேர்ந்து ஒப்பற்ற சிங்காசனத்தில் அம்முனிவனாவீற்றிருக்கச்செய்தான்—எ-று. (௫௩)

அருக்கியமுதலியகடன்களாற்றிவே... ... ...*
றுரைக்குவதிலதெனவுவந்துதானருண் ... ... *
முருக்கிதழிளமுலைமுகநலாடனை ... ...*
யிருக்கொடுவிதிமுறையினிதினீந்தனன் ... *

(இ-பு.) செய்யாமல்விட்டது வேறுண்டென்றுசொல்லாதவண்ணம் அருக்கியமுதலாகிய உபசாரமுறைமைகளைச்செய்து சந்தோஷித்துத் தான்பெற்ற முருக்கம்பூவையொத்த அதரத்தையும், இளமையாகிய தனங்களையுமுடைய முகநலாளென்கின்ற கன்னிகையை விதிமுறைமைப்படி வேதமந்திரஞ்சொல்லி இனிதாகக்கொடுத்தான்—எ-று. (௫௪)

வறுமைநோய்தணிதரவான்வழங்கவே... ... ...*
யுறுதுயர்தணிந்ததவ்வுலகம்வெந்தருள் ... ... *
செறிகுழல்போற்றிடத்திருந்துமாதவந் ... ... *
தறிஞனன்ணடிருக்குநனரசவெவன்றனன் ... ... *

(இ-பு.) தசாதராசனே நெடுங்கால மழையில்லாமையால் சம்பவித்திருந்த வறுமைநோய் தீரும்படி மேகமழைபொழிந்த வளவில் அந்த நாட்டிற் பொருந்திய துயரம்நீங்கிற்று -உரோமபதன்பெற்ற முகநலாள் உபசாரஞ் செய்யத்திருந்திய மாதவத்தையுடையமுனிவர் அந்நகரத்திலிருக்கின்றனென்று வசிஷ்டமுனிவர்சொன்னார்—எ-று. (௫௫)

செறிகுழல்அன்மொழித்தொகை.பதம்பிரிக்குமிடத்துநெருங்கிய அளகபாரத்தையுடையாள்

[வேறு.]

என்றலுங்கோமுனிவரன்றனடியிறைஞ்சியின்னேகொணர்வனென்றுத்தி...*
குன்றுறழ்தொழுவேந்தரடிபோற்றச்சுமந்திரனெனுமுதல்வராய ... ... *
வன்றிறலமைச்சரொடுமாமணித்தேரேறுதலும்வானோர்வாழ்த்தி. ...*
யின்றெங்குறைமுடிந்ததெனச்சொரிந்தார்மலர்மாரியிடைவிடாமல்...*

(இ-பு) இவ்வாறு சொல்லியவளவில் தசரதமகாராசன் அந்த வசிஷ்டமுனிவருடைய பாதங்களைவணங்கி அடியேன் இப்போதேசென்று அம்முனிவரை அழைத்துக்கொண்டு வருகிறேனென்றுசொல்லி வீரகண்டையினையும், மகுடத்தினையுமுடைய மற்றதேசத்தரசர்கள் தன்னடியைப் போற்றவும், சுமந்திரன்முதலாகிய சிறந்த பலருள்ள மந்திரிகளுடன் பெரியமணிகள்பதித்ததேரின்மேலேறினவளவில் தேவர்கள்வாழ்த்தி எங்கள்குறையின்றுமுடிந்ததென்று கொண்டாடிக்கற்பகப்பூமாரியை யிடைவிடாமற்சொரிந்தார்கள்-எ-று.

காளமும்பல்லியமுங்கடலின்மேன்முழங்கக்கானம்பாட ... ...*
மாதவர்களருமறைநூல்வேதியர்கள்வாழ்த்தெடுப்பமதுரச்செவ்வாய்த் ..*
கோதையர்பல்லாண்டிசைப்பக்கடற்றானைபுடைசூழக்கடவோனென்ன ...*
லேகியருநெறிநீங்கிரோமபதன்றிருநாட்டையெதிர்ந்தானன்றே ... ... *

(இ-பு.) எக்காளமு மற்றுமுள்ள பலவாத்தியங்களும் ஒலிக்கின்ற சமுத்திரத்தினும் அதிகமாக முழங்கவும், பாடகர்கீதம்பாடவும், அருமையான வேதசாஸ்திரங்களுணர்ந்த பிராமணர்கள்வாழ்த்தொலி எடுப்பவும், மதுரம் பொருந்திய செவ்வாயினையுடைய மாதர்கள் பல்லாண்டு கூறவும், சமுத்திரம்போன்றசேனை புடைசூழ்ந்துவரவும், சூரியன் போலச்சென்று அரிய மார்க்கத்தைக்கடந்து உரோமபதராசன் திருநாட்டைக் கண்டான்-எ-று. ()

கொழுந்தொடிப்படர்கீர்த்திக்கோவேந்த னடைந்தமைசென்றொற்றர்கூற
கழுந்தொடைவரிசிலைக்கைக்கடற்றானைபுடைசூழக்கழற்கால்வேந்தன் ... [க்
செழுந்தோட்டுப்பல்கலனுமொளிவீசமாகதர்கடிரண்டுபாட... ... ... *
வெழுந்தாருயிர்த்துணையுடன்யோசனைசென்றரசையெதிர்கோளெண்ணி*

(இ-பு.) கொழுந்துவிட்டுப் படர்கின்ற கீர்த்தியினையுடைய தசரதராசன் வந்ததைத் தூதர்கள்போய்ச் சொன்னவளவில் வீரகண்டையணிந்த காலையுடைய உரோமபதன் முற்றிலும் வயிரமேறிய நீண்டவில்லேந்திய கையினையுடைய சமுத்திரம்போல அதிகமாகிய சேனை வீரர்கள்சூழ்ந்துவரவும், செழுமையானகாதணிகளும், மற்றுமுள்ளபலஆபரணங்களும் ஒளியைவீசவும், பாடகர் கூட்டமாய்ச் சேர்ந்து இசைபாடவும், எழுந்து தனக்குமுந்திச்செல்லுதற்குரிய தோழருடன் தசரதராசனை எதிர்கொள்ள எண்ணி ஒருயோசனைதூரஞ்சென்றான்—எ-று. (௫அ)

கொழுந்தோடிப் படர்கின்றகீர்த்தி என்றது மேன்மேலும் விர்த்தியாகின்றகீர்த்தியென்னுங்குறிப்பு. கோவேந்தன் அரசர்க்கரசன் செழுமை-மணிகளின் விசேஷத்தைக்குறித்தது. கொளல் என்பது அல்விகுதிகுன்றிக் கொள் என முதனிலைமாத்திரையாய்நின்றது. அரசன் என்னும் உயர்திணை-சிறப்புப்பற்றி அரசு என அஃறிணையாய் நின்றது.

எதிர்கொள்வான்வருகின்றவயவேந்தன்றனைக்கண்ணுற்றிறழிவிநாண... *
வதிர்கின்றபொலந்தேர்நின்றரசர்பிரானிழிந்தழிச்சென்றடியின்வீழ . *
முதிர்கின்றபெருங்காதறலைத்தோங்கவெடுத்திறுகமுயங்கலாய்ந் ... *
கதிர்கொண்டசுடர்வேலான்றனைநோக்கிவையுறைத்தான்களிப்பின்மிக்கான்.

(இ-பு.) எதிர்கொள்ளவருகின்ற வெற்றியுள்ள உரோமபதராசனைக்கண்டு-அரசர்க்கரசனாகிய தசரதமகாராசனவன் மேகங்களும் நாணும்படி பொலிக்காநின்ற பொன்னாலாகியதேரினின்றுமிழிந்தபோது உரோமபதராசன் சென்றுபாதத்தில் வணங்கினவளவில் அதிகரிக்காநின்ற பெரிய ஆசையான து தலைத்தோங்க,அவ்வரசனையெடுத்து இறுகத்தழுவிக்கொண்டவளவில் ஒளிபொருந்திய சூரியனையொத்த வேலாயுதத்தையுடைய தசரதமகாராசனை நோக்கிக்களிப்பில்மிகுந்தவனாய் இவ்வார்த்தைசொல்லுகின்றான்-எ-று. (௬௯)

உலக இருளைச்சூரியன் ஒழிப்பதுபோலப் பகைவரை யொழிப்பதினால் சுடர்வேல் என்றார். இது தொழி லுவமைத்தொகை-உவமத்தொகையாவது-போலமுதலிய உவம உருபுகள் தொக்குநிற்பது.

யான்செய்தமாதவமோவிவ்வுலகஞ்செய்தவமோயாதோவிங்கன் ... ...*
வான்செய்தசுடர்வேலோயடைந்ததெனமனமகிழமணித்தேரேற்றித் . [வ
தேன்செய்ததார்மௌலித்தேர்வேந்தைச்செழுநகரிற் கொணர்ந்தான்தெவ்
ரூன்செய்தசுடர்வடிவேல்ரோமபதனெனும்நாமத் தூரவுத்தோளான் ... *

(இ-பு) பகைவருடைய சரீரத்தில் புண்ணுண்டாகச் செய்வதற் கேதுவான வேலாயுதத்தையுடைய உரோமபதனென்று சொல்லப்படுகின்ற பலம்பொருந்திய தோள்களையுடைய அரசனானவன் தெய்வலோகம் நிலைபெறச் செய்த ஒளியுள்ளவேலாயுதத்தையுடைய தசரதமகாராசனே நீயிவ்விடத்தில் வந்தது நான்செய்த பெரிய தவப்பயனோ இவ்வுலகஞ்செய்ததவப்பயனோ மற்றெதுசெய்ததவப்பயனோவென்று அவ்வரசன் மனமகிழும்படி சொல்லித்தேன்பொழிகின்ற மாலையணிந்தமகுடஞ்சூடிய தசரதமகாராசனை மணிகள்பதித்த தேர்மேலேற்றிக்கொண்டு தன்னுடைய வளப்பம்பொருந்திய நகரத்திற்கொண்டுவந்தான்—எ-று. (௬௰)

வானிலைக்கச்செய்தது-சம்பராசுரனைவென்று இந்திரனுக்குப்பொன்றுதெற்றது. சுடர்வேல்- சூரியனையொத்த வேலெனினுமாம்.—சுடர்வடிவேல் வடித்த ஒளியுள்ளவேல்-வேந்தன் என்னும் உயர்திணை-வேந்து என அஃறிணையாய்நின்றது.

ஆடகப்பொற்சுடரிமைக்குமணிமாடத்திடைபொருமண்டபத்தையண்மிப்,
பாடகச்செம்பதுமமலர்ப்பாவையர்பல்லாண்டிசைப்பப்பைம்பொற்பீடத்
தேடுற்றவடிவேலான்றனையிருத்திக்கடன்முறைகள்யாவுமீந்து .. ...*
தோடுற்றமலர்த்தாராக்விருந்தளிப்பவினிதுவந்தான்சார்நாடுற்றான் .*

(இ-பு.) ஆடகமென்னும் பொன்னினது ஒளியானது பிரகாசித்துக்கொண்டு இருக்கும்படியான அழகுபொருந்திய அரண்மனையிடத்தி லிருக்கும் ஒருமண்டபத்திற்சேர்ந்து பாடகமணிந்த செந்தாமரைமலர்போன்ற பாதங்களையுடையமாதர்கள் பல்லாண்டுகூறப் பைம்பொன்னாலிட்ட சிங்காசனத்தில் தகட்டுவடிவாகப்பொருந்திய வடித்தவேலையுடைய தசரத மகாராசனை

யிருக்கச்செய்து அருக்கியபாத்தியாசமனங்கள் கொடுத்து இதழ்கள் நெரு
ங்கிய பூமாலையணிந்துள்ள உரோமபதராசனானவன் விருந்திடவுண்டு தேவ
ருலகத்தை இந்திரனுக்குக் கொடுத்தவனாகிய தசரதமகாராசன் இனிதாகச்ச
ந்தோஷமடைந்தான்—எ-று. (௯௧)

ஆடகம் கிளிச்சிறை சாம்பூநதம் சாதரூபம் எனப் பொன்வகை நாலு. ஆடகப்பொன் என்பதனை இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக்கி ஆடகமாகிய பொன்னால் செய்யப்பட்டு என் றுரைப்பினு மமையும்.

செவ்விதருஞ்சாந்தளித்துத்தேர்வேந்தன்றனைநோக்கிஇவணீசேர்ந்த... *
கவ்வையுறாத்தருள்கவெனநிகழ்ந்தபரிசரசர்பிரான்கழறலோடு ... ... *
மவ்வியநீத்துயர்ந்தமனத்தருந்தவனைக்கொணர்ந்தாங்கண்விடுப்பனென்ற...*
செவ்விருமடிபோயெனவுந்தேரேறிச்சேனையொடயோத்திசேர்ந்தான்..*

(இ-பு.) அழகும் வாசனையுமுள்ள சந்தனமும் கொடுத்தபின்பு தசரதமகாராசனை நோக்கி இவ்விடத்துக்கு நீர்வந்தகாரியத்தைச் சொல்லியருள வேண்டுமென்று உரோமபதராசன்சொல்ல, முன்னடந்த சங்கதிகளைத் தசரதமகாராசன்சொன்னவளவில் (அதைக்கேட்டு) அழகுநிறைந்த மகுடமுள்ள தசரதமகாராசனை அழுக்காறுமுதலியவைகளை நீக்கி மேன்மைபொருந்தியமனத்தையுடைய கலைக்கோட்டுமுனிவரையழைத்துக்கொண்டுவந்து அவ்விடத்தில் விடுக்கிறேனென்று சொன்னவளவில்தசரதமகாராசன் தேரிலேறிக் கொண்டு சேனையுடன் அயோத்தியாநகரத்தைச்சேர்ந்தான்—எ-று. (௯௨)

மன்னர்பிரானகன்றதற்பின்வயவேந்தனருமறைநூல்வடிவங்கொண்ட ... *
தன்னைமுனிவரனுறையுடனையணுகியிணையடித்தாமரைகளம்பொன் ... ...*
மன்னுமணிமுடியணிந்துவரன்முறைசெய்திடவிவணீவருதற்கொத்த ...*
தென்னையெனவடியேற்கோர்வரமருளுமடிகளெனயாவதென்றான்......*

(இ-பு.) அரசர்க்கரசனாகிய தசரதமகாராசன் சென்றபின்பு வெற்றிபொருந்திய உரோமபதமகாராசனானவன் அரியவேதசாஸ்திரங்கள் வடிவங்கொண்டதையொத்த கலைக்கோட்டுமுனிவருடைய இடத்திற்சேர்ந்து அவருடைய இரண்டு பாததாமரைமலர்களையும் அழகுள்ள பொன்னாற் செய்யப்பட்டு மணிகள் பதித்த தன்மகுடத்தில் அணிந்துகொண்டு வரன்முறையாகிய வந்தனை வழிபாடுசெய்ய அவர் (அவ்வரசனைநோக்கி) இங்கு நீ வருதற்குப்பொருந்தியகாரியம் யாதென்றுசொல்ல, சுவாமிகள் அடியேனுக்கு ஒருவரம் அருளிச்செய்யவேண்டுமென்று உரோமபதராசன்சொல்ல, அம்முனிவர் நீகேட்கும்வரம் யாவதென்றார்—எ-று. (௯௩)

தன்முடியிலணிதலாவது-பணிதல்,

புறவொன்றின்பொருட்டாகத்துலைபுக்கபெருந்தகைதன்புகழ்பூத்த... *
வறனொன்றுதிருமனத்தானமரர்களுக்கிடரிழைக்குமவுணராயோர்.... ...*
திறலுண்டவடிவேலான்றசரதனென்றுயர்கீர்த்திச்செங்கோல்வேந்தன்....*
விறல்கொண்டமணிமாடயோத்திநகரடைந்திவணீடலென்றான்... ... *

(இ-பு.) ஒருபுறாவின்பொருட்டாகத் தராசுத்தட்டிலேறிய சிபிச்சக்கரவர்த்தியின்புகழுள்ள சூரியகுலத்திலுண்டான தருமமே குடிகொண்டிருக்கும் நல்லமனமுள்ளவனும், தேவர்களுக்குத் துன்பத்தைச்செய்த அசுரராவர்களுடைய வெற்றியை அபகரித்துக்கொண்ட வடிவேலாயுதத்தை யுடையவனுமாய்த்தசரதனென்று சொல்லப்பட்டுயர்ந்தகீர்த்தியினையுடைய செங்கோல்செலுத்தும்ராசனது மணிமாடங்களுள்ள வெற்றிபொருந்திய அயோத்திநகரத்திற்சேர்ந்து மறுபடி இங்குவருவது யான்கேட்கும் வரம் என்றுசொன்னான்—எ-று. (ளக)

துலைபுக்க சரித்திரமீண்டெழுதிற்பெருகும். புகு என்னும் முதனிலை புக்கு எனத்திரிந்து இறந்தகால இடைநிலைகாட்டாதுநின்றது. புகழிற்பூத்த என்பதற்குப் புகழைப்போலப்புகழுண்டாகிய எனப்பொருள்கொள்ளினு மமையும்.

புறு என்பது புறவெனநின்றது-புலா-புறு-என்பவையுமிவ்வாறேயாம்.

அவ்வரந்தந்தனமினித்தேர்கொணர்கெனவருந்தவத்தோனறைதலோடும்
வெவ்வரந்தின்றயில்படைக்குஞ்சுடர்வேலோனடியிறைஞ்சி வேந்தர்வேந்தன்,
கவ்வைமொழிந்துயர்ந்தனனென்றதிர்குரற்றேர்கொணர்ந்ததனிற் கலைவலாளன்,
செவ்வி நுதற்றிருவினொடும்போந்தேறவெனவேறிச்சிறந்தான்மன்னோ

(இ-பு) அந்தவரந் தந்தோமினித் தேர்கொண்டு வாவென்று கலைக்கோட்டுமுனிவர் சொன்னவளவில் வெவ்விய அரத்தைத்தின்று கூர்மைபெறுகின்ற ஒளியுள்ள வேலாயுதத்தையுடைய உரோமபதராசன் அம்முனிவருடைய பாதங்களைவணங்கி அரசர்க்கரசனாகிய தசரதமகாராசன் துயரம்நீங்கி மேன்மையடைந்தவனானென்று தனக்குள் மதித்துக்கொண்டு அதிர்கின்ற ஓசையினையுடைய தேர்கொண்டுவந்து அந்தத்தேரில் கலைக்கோட்டுமுனிவரை நோக்கி அழகுள்ள நெற்றியினையுடைய திருமகள் போல்பவளாகிய சாந்தையாளுடன்வந்து சுவாமிகள் ஆரோகணித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தவளவில் (அவ்வாறே) ஆரோகணித்துச்சிறந்திருந்தார்—எ-று. ()

சேர்ந்தானென்பதனைச் சிறப்புடனேறினனெனக்கொள்க. சிறப்பாவது - வேதவாக்கியங்கள் கோஷித்தலாம். இவ்வரசன் கைவேல் அரத்தினையு மழுங்கச்செய்யத்தக்க வன்மையுடையதென்பதுதோன்ற வெவ்வரந்தின்று றயில்படைக்கும்வேலென்றார். ஏறுகவென எனற்பாலது விகாரவகையால் ஏறுகெனநின்றது.

கலைவலாளன் என்பது-வேதசாஸ்திரங்கள்கற்று வல்லமுனிவனெனப் பதம்பிரிக்கப்படும்.

[வேறு.]

குனிசிலைவயவனுங்கரங்கள்கூப்பிடத்... ... ...*
துனிபறுமுனிவரர்தொடர்ந்துசூழ்வர ... ... *
வனிதையுமருமறைவடிவுபோன்றெளிர் ... ...*
முனிவனும்பொதிவிசைநெறியமுன்னினார் ... *

(இ-பு.) போர்முகத்தில் வளைக்கும்படியாகிய வில்லினையுடைய உரோமபதராசன் கைகுவித்து அஞ்சலிவந்தனத்துடன் தொடர்ந்துவரவும், பிறவித்துன்பம்நீங்கிய முனிசிரேஷ்டர்கள் சூழ்ந்து தொடரவும், சாந்தையாளென்

னும் பத்தினியும், அருமையாகிய வேதசொரூபம் போன்று விளங்கும்மு னிவரும், தீரின்மேலேறிக்கொண்டு மார்க்கத்தினைக் கருதினர்கள்-எ-று. ( )

நெறியை முன்னினர் என்பதற்கு வழிநடந்தார்களென்று தாற்பரியமாம்.

வயவனும் என்பதினீற்றிலிருந்தும் உம்மையினைந் தொடர் என்னுமொழியையீண்டும் வருவித்து அதன்மேலேற்றித்தொடரவும். எப்பொருள்கூறப்பட்டதுவயவள் வெற்றியையு டையவவன்_வனிதை-மாது-வேதம் நான்கென்ற தொகைப்பட்டிருப்பினும் ஒவ்வொருவேத மும் அனந்தமாதலால் முழுவதுமோதியுணர்தலெளியதன்றுகையால் அரியவேதமெனக்கூற ப்படுகின்றது. ஏறிக்கொண்டு சொல்லெச்சம்.

அந்தரதுந்துமிமுழக்கியாய்மலர்... ... ... *
சிந்தினர்களித்தனரமரர்தேவரும் .. .. *
வெந்தெழுவிதாடுவினைவீழ்க்குமெய்ம்முதல்... ...*
வந்தெழவருடருவாமெனமறைமுனிவே .. ... *

(இ-பு.) அம்முனிவர் தேரேறிச்செல்வதைக் கண்டவளவில் அமரரும், தரு மக்கடவுளும், தேவர்களும், கொதித்து மேலிட்டிருக்கிற பாவங்களைக் கீழ் ப்படுத்தும் பரவாசுதேவர் திருவவதாரமாகும்படி செய்தருள்வாரென்று நற் குறி அந்தச்சந்தோஷமிகுதியால் ஆகாயத்தில் வாத்தியங்களைமுழக்கி நல்ல மலர்களைப்பொழிந்து களிப்படைந்தார்கள்—எ-று. ௯௭)

சிந்தினர் என்னும் வினைமுற்றினை வினையெச்சமாகக்கொள்க. முதல்-யாவர்க்கும்யாவை க்கும்காரணம். மெய்-நித்தியத்துவத்தைக்காட்டிநின்றது. களிப்பு சந்தோஷமிகுதி- அதுப ரவசப்படுத்தும். வந்தெழஎன்பதனையொருமொழியாகக்கொள்க.

ஆதுவரவ்வழியயோத்தியன்னினர்... ... ...*
மாதிரம்பொருந்தோண்மன்னர்மன்னனிடம்... *
போதினர்முனிவரவோதவேந்தனும்... ... ...*
காதலென்றளவறுகடலுளாழ்ந்தனன்... ....*

(இ-பு) அப்போது தூதர்கள் அயோத்தியிற்சேர்ந்து கலைக்கோட்டுமு னிவர்வருகின்றதைத் திக்குவிசயஞ்செய்தபிறர்களையுடைய அரசர்க்கரசனா கிய தசரதமகாராசன்முன்புசொல்லினர். அவ்வாறு சொன்னவளவில் அவ்வ ரசனும் ஆசையென்றுசொல்லப்பட்டு அளவற்றசமுத்திரத்தில் மூழ்கினன்

எழுந்தனன்பொருக்கெனவிரதமேறினன் ... *
பொழிந்தனமலர்மழையாசிபூத்தன... ... ...*
மொழிந்தனபல்லியமுரசமார்த்தன ... ...*
விழுந்தனதீவினைவெருவேடுமே ... ... *

(இ-பு.) இவ்வாறு சந்தோஷமடைந்த அரசன் விரைவாக எழுந்து தேரி லேறினன் அப்போது தேவர்களால் கற்பகமலர்கள் மழைபோலப் பொ ழியப்பட்டன, முனிவர்களால் ஆசீர்வாதங்களுண்டாயின, பல்வாகிய வாத்தி யங்கள் ஒலித்தன, பேரிகைகள் ஆரவாரித்தன, தீவினைகள் வெருடன் வீழ்ந் துவிட்டன—எ-று. (௯௯)

எழுந்தனன் என்பதனை வினையெச்சமாகக் கொள்க. வாத்தியங்கள் ஊதப்படுவதும் அ டிக்கப்படுவதுமாகிய பலவேறுவகைப் பட்டவைகளாதலால் மொழிந்தனவெனப் பொதுவி

னையாற்கூறினார். தீவினைக்குக் காரணமாயுள்ளதும் வீழ்ந்ததெல்பார் வேறுடனென்றார் வீழ்ந்தனவென்றதனால் இதுவரையில் நிலையெடுத்து நின்றனவெல்க. விடுமென என எதிர்கால த்தாற்கூறப்படுவேது தெளிவுபற்றி இறந்தகாலத்தாற்கூறப்பட்டது.

பிதிர்ந்ததெம்பனத்துயர்ப்பிறங்கலென்றுகொண் *
டதிர்ந்தெழுமுரசுடையரசர்கோமகன்... ... ...*
முதிர்ந்தமாதவமுடைமுனியைக்கண்களா ... ...*
லெதிர்ந்தனன்யோசனையிரண்டொடொன்றினே ..*

(இ-பு.) அவ்வாறு தேரிலேறி ஓசையெங்கும் வியாபிக்கும்படி ஒலிக்காநின்ற பேரிகையினையுடைய அரசர்க்கரசனென்னுந் தசரதமகாராசன்-இனி நம்முடைய மனத்துயரமாகிய குன்று பொடிப்பட்டதென்று உள்ளத்திற் கொண்டு மூன்றுயோசனை தூரஞ்சென்றுமுற்றும்பெற்றபெரியதவமுடைய கலைக்கோட்டுமுனிவரைத் தன்கண்களாற்கண்டான்—எ-று. (எ௰)

துயரமலைபோலச் சலனமின்றி யிருந்தமையின் பிறங்கலென்றும், அதற்கேற்பப்பிதிர்ந்ததென்றுங்கூறினார்அதிர்ந்தெழுமென்பதனையொருமொழியாகக்கொண்டு அதிர்கின்றவெனப் பொருள்கொள்வதுமொன்றுஎதிர்ந்தனனென்பதற்குக்கண்டனனென்றதுதாற்பரியார்த்தம்

நற்றவமனைத்துமோர்நவையிலாவுருப் ... ... *
பெற்றிவணடைந்தெனப்பிறங்குவான்றனைச்... ...*
சுற்றியசடையுமுழையின்றோற்றமு ... ... *
முற்றுறப்பொலிதருமூர்த்தியான்றனை ... ...*

(இ-பு.) நல்ல தவங்கள் எல்லாம் குற்றம் இல்லாத வடிவத்தைப் பெற்றுக் கொண்டு இவ்விடத்தில் வந்ததுபோலப் பிரகாசிப்பவனை அரையிற் சூழப்பட்ட மரவுரியும் மான்முகக் காட்சியும் நிறைவுறப் பிரகாசியாநின்ற மூர்த்தியை—எ-று. (௭௧)

தவம் பலவகையாற் செயயப்படுவதாதலின் தவம் அனைத்துமென்றார் இவன் அடைந்ததென்றதற்கு வனம்விட்டுவந்ததென்று ஒருசொல்வருவித்துக்கூறுக. நவையிலாத என்பதில் பெயரெச்சவீறுகெட்டு நவையிலாவுருவெனநின்றது.ஒருவனையேகுறித்துஇத்தன்மையுடையவரித்தன்மையுடையவனென அடுக்காகவந்தது.

இதனை யொன்றுபலவடுக்கவென்னும் விதியாற்கொள்க.'உழை-ஆகுபெயர்.

அண்டர்கடுயராமுமரக்கராற்றலும் ... ...*
விண்டிடப்பொலிதரும்வினைவலாளனைக் ... ... *
குண்டிகைகுடையொடுகுலவுநூன்முறைத் ... .. *
தண்டொடுபொலிதருதடக்கையான்றனை ... ... *

(இ-பு.) தேவர்கள் துயரமும், ராக்ஷதர்களுடைய வலியும், நீங்குதற்கேதுவாகவிளங்காநின்ற வேள்வித்தொழிலில்வல்லவனை-கமண்டலமும், குடையும், மார்பில் பிரகாசித்துக்கொண்டிருக்கிற சாஸ்திரமுறைமைப்படியிருக்கும் திரிதண்டமும் விளங்கிக்கொண்டிருக்கும் பெரியகைகளையுடையவனை.

இழிந்துபோயிரதமாண்டிணைகொடாண்மலர் ... *
வீழ்ந்தனன்வேந்தர்தம்வேந்தன்மெய்ம்மையான்....*

மொழிந்தனன்குசிகன்முதியநான்மறைக் ... ... *
கொழுந்துமேற்படர்தரக்கொள்கொம்பாயினான் *

(இ-பு) (மூன்றுபேர்களுஞ்சென்றுகண்டவிடத்தில்) இரதத்தைவிட்டிழிந்துசென்று இத்தன்மையுள்ளவராகிய அந்தக்கலைக்கோட்டு முனிவருடைய இரண்டாகப்பொருந்திய திருவடித்தாமரை மலர்களில்விழுந்துபணிந்தான் (அரசன்அவ்வாறுபணிந்தவளவில்) பழமையாகிய நான்குவேதங்களின்கொழுந்துமேலேபடரும்படி கொள்கொம்புபோலிருக்கும் அம்முனிவர் உண்மையினால் ஆசீர்வசனங்களைக்கூறினார்—எ-று. (௭௩)

கொள்கொம்பிருந்தால் கொடி அதனைப்பற்றிக்கொண்டு வளர்ந்தோங்கி மிகுதியாகப் பரந்து பயனைத்தரும். அதுபோலவேதம் இவரைப்பற்றியோங்கி யாவர்க்கும் பயன்படுமென்பதுகருத்து.

அயல்வருமுனிவருமாசிகூறிடப் ... ...*
புயல்பொழிதடக்கையாற்றொழுதுபொங்குநீர்க்,-*
கயல்பொருவிழியொடுகலைவலாளனை ... ...*
யியல்பொடுகொணர்ந்தனனிரதமேற்றியே ... *

(இ-பு.) கலைக்கோட்டுமுனிவருக்கு அயலில்வருகின்ற மற்ற முனிவர்களும்ஆசீர்வசனஞ்சொல்ல (அவர்களையும்) மேகம் வருஷிப்பதுபோலத்தானங்கொடுக்கும் பெரியகைகளால் நமஸ்கரித்துக்கலைக்கோட்டுமுனிவரை அவருடையபத்தினியுடன்இரதத்திலேற்றிக்கொண்டு முறைமைப்படி தன்னகரத்திற்கொண்டுவந்தான்—எ-று. (௭௪)

கயல் பொருவிழி இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை பதம்பிரிக்குமிடத்துப் பொங்குநீரிலிருக்கிற சேல்மீன்போன்ற கண்களையுடையவளென்றுதல்காண்க கலைவலாளன் சாஸ்திரங்களைக்கற்றுவல்லவன்.

அடிகுரன்முரசதிரயோத்திமாநகர் ... ...*
முடியுடைவேந்தனம்முனிவனோடுமோர்.... ... *
கடிகையினடைந்தனன்கமலவாண்முக .. ..*
வடிவுடைமடந்தையர்வாழ்த்தெடுப்பவே... ......*

(இ-பு.) மகுடத்தையுடைய தசரதமகாராசனானவன் - செந்தாமரைமலர் போன்ற ஒளியுள்ள முகவழகுடைய மாதர்கள் வாழ்த்துகூறும்படி அடிக்கப்படுகின்ற ஓசையினையுடைய பேரிகை மாறாது முழங்கிக்கொண்டிருக்கும்படியாகிய அயோத்திமாநகரத்தில் அந்தக்கலைக்கோட்டு முனிவருடன் ஒருநாழிகைக்குள்போய்ச்சேர்ந்தான்—எ-று. (௭௫)

கசட்டுறுவினைத்தொழிற்கள்வராயுழ ... ... *
லசட்டர்களவரையறுவராக்கிய... ... ...*
வசிட்டனுமருமறைவடிவுபோன்றொளிர் ... ... *
விசிட்டனும்வேந்தனைப்பொலியமேவினார்... ... *

(இ-பு.) அயோத்தியிலடைந்தவேந்தன் குற்றத்தினைப்பொருந்திய செய்கையினையுடைய திருடர்போல உழலுகின்ற கீழ்மைத்தனமுள்ளவர்களாகி

ய பஞ்சேந்திரியங்களை அறுக்கின்றவர்களாகச்செய்த வசிஷ்டமுனிவரும், அருமையாகிய வேதசொரூபம்போன்று விளங்குகின்ற கலைக்கோட்டுமுனிவரும் ராசசபையில் பிரகாசிக்கும்படி சேர்ந்தார்கள் —எ-று. (௬௬)

ஞானத்தை யபகரிப்பதினால் கள்வரென்றார். வினைத்தொழில் ஒருபொருட்பன்மொழி. அசட்டர்களைவெனப்பது இழிப்பின்கண் அஃறிணை உயர்திணையாகக்கூறப்பட்டது. பஞ்சேந்திரியமாவன-சத்தம்-பரிசம்-ரூபம்-ரசம்-கந்தம்-என்பவைகளாம். இவை சனன மரண துக்கங்களுக்கேதுவாயிருப்பதுபற்றிக் கேழமைத்தனமுள்ள பஞ்சேந்திரியமென்றார். விசிட்டம்-நல்லொழுக்கம்,

மாமணிமண்டபமன்னிமாசறு ... ...*
தூமணித்தவிசிடைச்சுருதிவேதிகர் ... .*
கோமுனிக்கரசனையிருத்திக்கொள்கட... ... ...*
மேனமுறத்திருத்திவேதியையசெப்பினான் ... ...*

(இ-பு.) சபையிற்சேர்ந்த தசரதமகாராசன் மாணிக்கம் பதிக்கப்பட்டிருக்கிற மண்டபத்திற்பொருந்திக் குற்றமற்றபரிசுத்தமாகிய ரத்தினங்கள் பதிக்கப்பட்ட ஆசனத்தினிடத்தில் வேதங்களையொப்பசகியசிரேஷ்டம்பொருந்திய முனிவர்களுக்கிறையாகியகலைக்கோட்டு முனிவருக்குச்செய்யத்தக்க உபசாரங்களைச் சந்தோஷம் பொருந்தச்செய்துபின்புகேவ்வேஷனநன்மையாகிய இந்தவார்த்தைகளைச்சொல்லினான்—எ-று. (௬௭)

எம்ம என்னுமொழி இடைகுறைந்து எம் என நின்றது,

சான்றவர்சான்றவதருமமாதவம் .... *
போன்றருளிர்புனிதநின்னருளிற்பூத்தவெ .. ...*
ஞான்றதொல்குலமினியரசின்வைகுமா ... ... *
லியான்றவமுடைமையுமிழப்பின்றுமரோ... ...*

(இ-பு) பெரியோர்களுக்கும்பெரியோரே தருமத்தையும் பெரிய தவத்தையும் ஒத்துவிளங்கும்புனிதரே தேவருடைய அருளினால் உண்டாகிய என்னுடைய பெருமையுள்ளகுலமானது இனி அரசுடன்பொருந்தும் நான்தவமுடைமையும் இழத்தலில்லாததாகும்—எ-று. (௬௮)

எனக்கு இதுவரையில் புத்திரசம்பத் தில்லாமையால் இனி அரசாட்சி என் குலத்துக்கில்லையென்றும், நான்செய்ததவமெல்லாம் வீணாய்விட்டதென்றும், துயரப்பட்டுக்கொண்டிருந்தேன். இப்போது சுவாமிகள் எழுந்தருளியபடியினாலே புத்திரசம்பத்துண்டாகி என்குலம் அரசுடன்வாழுமென்பது தாற்பரியம்.

சான்று-என்பது-பலநற்குணங்களாலும் நிறைந்திருத்தல்-அக்குணங்கள்-அன்பு-நாணம்-ஒப்புரவு கண்ணோட்டம்-வாய்மைபிறர்குற்றத்தைச்சொல்லாமை-பணிவு-முதலியவை.

என்னனுமுனிவரனினிதுநோக்குறு ... ... *
மன்னவர்மன்னகேள்வசிட்டனென்னுமோர்... ...*
நன்னெடுந்தவன்றுணைநவையில்செய்கைநீ... ...*
பின்னையிவ்வுலகினினிருபர்நேர்வரோ... ... ... *

(இ-பு.) தசரதமகாராசன் இவ்வாறுசொன்ன வளவில்-கலைக்கோட்டுமுனிவர் அவ்வரசனை இனிதாகப்பார்த்து அரசர்க்கரசனே கேட்பாயாக-உசிட்டரென்றுசொல்லப்படுகிற குறைவில்லாதநல்லதவமுள்ளவரே உனக்குத்துணை குற்றமில்லாத செய்கையையுடையாய் நீ யாதலால் இவ்வுலகிலிருக்கும் அரசர்கள் உன்னை ஒப்பாவார்களோ—எ-று. (எகூ)

எதிர்மறை ஓகாரம் ஒப்பாகார்களென்னும் பொருடந்துநின்றது.

என்றனபற்பலவினிமைகூறிநத்... ....*
குன்றுறழ்வரிசிலைக்குவவுத்தோளினுய்... ... ... *
நன்றிகொளரிமகநடத்தவெண்ணியோ... ... ...*
வின்றெனையழைத்ததிங்கியம்புவாயென்றான்... ...*

(இ-பு.) இவ்வாறுசொல்லுகின்றவைகளாகிய பலபல இனியவார்த்தைகளைச்சொல்லிப்பொன்மலையைப்பொத்த நீண்டவில்லேந்துந் திரட்சியாகியதோட்களையுடைய தசரதமகாராசனே இப்போது என்னை இவ்விடத்திற்கு அழைப்பித்தது நன்மைபொருந்திய அசுவமேதயாகஞ்செய்யக்கருதியோ சொல்லுவாயென்றான்—எ-று. (அ௰)

நல்ல குன்றென்றமையால் பொன்மலையெனக் கூறப்பட்டது.

உலப்பில்பல்லாண்டெலாமுறுகணின்றியே... ...*
தலைப்பொறையாற்றினேன்றநயர்வந்தில ... ... *
நலப்புநீருடுத்தபாரளிக்குமைந்தனை.... ... ...*
நலப்புகழ்பெறவினிநல்கல்வேண்டுமால்... ... *

(இ-பு.) தொலைவில்லாத பலவருஷங்களெல்லாம் துன்பமில்லாமல் பூமிபாரந்தாங்கினேன் (இதுவரையில்) புத்திரர்கள் உற்பத்தியாயிருக்கிலர் (ஆதலால்) அலைம்புகின்ற நீருள்ள சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைக் காக்கும்படியாகிய புத்திரர்களை நல்லபுகழ்பெறத்தக்கதாகக்கொடுத்தல்வேண்டும்—எ-று.

அலம்புநீர் எனற்பாலது விகாரவகையால் அலப்புநீரொனநின்றது.

என்றலுமாசநீயிரங்கலிவ்வுல ... ...*
சொன்றுமோவுலகமீரேழுமோம்பிடும்... ... *
வன்றிறன்மைந்தரையளிக்குமாமக ... ...*
மின்றுநீயியற்றுதற்கெழுகவென்றென்றான்... ...*

(இ-பு.) தசரதமகாராசன் இவ்வாறுசொன்னவளவில்-ராசனே-நீ துயரப்படாதே இந்த ஒரு உலகத்தைமாத்திரமோ பதினான்குலோகங்களையுங்காக்கும்படியாகிய மிகுந்தவல்லமையுடைய புத்திரர்களைக்கொடுக்கத்தக்கபெரியயாகத்தை இன்றுசெய்வதற்கு இப்போது நீ எழுந்திருவென்று சொல்லினான்—எ-று. (அஉ)

பதினாலு உலகம் அவனகீழேழுலகம்-மேலேழுலகம்.

ஆயதற்குரியனகலப்பையாவையு ... ...*
மேயெனக்கொணர்ந்தனர்திருபர்க்கேற்தலும்... *

தூயநற்புனல்படிஇச்சுருதிநூன்முறை... ... *
சாய்வறத்திருத்தியசாலைபுக்கனன்... ... ...*

(இ-பு.) அந்தயாகத்துக் குரியவைகளாகிய உபகரணங்களெல்லாம் (ஏவலாளிகள்) விரைவாகக் கொண்டுவந்தார்கள் அரசர்க்கரசனாகிய தசரதமகாராசனும் பரிசுத்தமாகிய சரயுநதிநீரில் ஸ்நானஞ்செய்தருளி வேதசாஸ்திர முறைமைப்படி பழுதறச்செய்திராநின்ற யாகசாலையிற் சேர்ந்தான்-எ-று.

ஆய அதற்கென்பதி னீற்றுப் பெயரெச்ச அகரம் குன்றிநின்றது.

முழங்கழன்மும்மையுமுறையினாகுதி... ... ... *
வழங்கியேயீராறுதிங்கள்வாய்த்தபின் ... ... *
தழங்கினவாத்தியந்தாவில்வானகம் ... ...*
விழுங்கினர்விண்ணவர்வெளியின்றெனவே... *

(இ-பு.) ஒலித்தெழுகின்ற மூத்தீயும்வளர்த்து அதனிடத்து ஆகுதியுங் கொடுத்துப் பன்னிரண்டுமாதஞ்சென்றபின் பேரிகைமுதலியவாத்தியங்கள் ஒலித்தன-தேவர்கள்யாவரும் கெடுதலில்லாத ஆகாயத்தில் வெளியிடமில்லையென்று சொல்லும்படி மறைத்தார்கள்—எ-று. (௮௪)

முத்தீயாவன- காருகபத்தியம்- ஆகவனீயம்- தட்சணாக்கினி-வேள்விசெய்து ஆகுதிகொடுக்கும்போது அதை ஏற்றுக்கொள்ளும்பொருட்டுத் தேவர்கள் வந்தார்களென்பதுகருத்து.

முகடலரொளிதரமொய்த்துலாவுமோ ... ... *
ரகவினாதநறுமலர்தூவியார்த்தெழத்... ... ... *
தகவுடைமுனியுமத்தழலினுய்ப்பமே .. ..*
மகவருளாகுதிவழங்கினனரோ ... ... *

(இ-பு.) சுவர்க்கலோகத்திருப்பவர்களாகியதேவர்கள்(சந்தோஷித்தினால்) நட்சத்திரங்கள் பிரகாசிக்கும்படி நெருங்கி உள்வாசனையையுடைய நல்லகற்பகமலர்களைத்தூவி ஆரவாரிக்கும்படி தகைமைப்பாட்டினையுடைய -கலைக்கோட்டுமுனிவரும் அந்த ஓமாக்கினிமத்தியில்புத்திரனையருளும்படியான ஆகுதியைக்கொடுத்தார்—எ-று. (௮௫)

ஆயிடைக்கனலினின்றம்பொற்றட்டின்மீத்... ...*
தூயதற்சுதைநிகர்பிண்டமொன்றுசூழ்... ... *
தீயெரிப்படங்கியுஞ்சிவந்தகண்ணுமா .. .. *
யேயெனப்பூதமொன்றெழுந்ததேந்தியே... ... *

(இ-பு.) அப்போது ஓமாக்கினியினின்றும் அழகிய பொற்றட்டின்மேல் பரிசுத்தமாகிய நல்ல அமிர்தத்தையொத்த பிண்டமொன்று ஏந்திக்கொண்டு தீயையொத்த கேசமும் சிவந்தகண்களுமுடையதாய் ஒருபூதமானது எழுந்தது—எ-று. தீயெரி-ஒருபொருட்பன்மொழி. (௮௬)

ஒருதட்டில் அமுதத்தை ஏந்திக்கொண்டு ஒருபூதமானது அவ்வோமாக்கினியினின்றும் புறப்பட்டது என்பது தாற்பரியம். இடை என்பது ஈண்டுக்காலங்காட்டிநின்றது.

வைத்ததுதனாடியைமதித்துமவ்வழித் ... ... *
தைத்ததுபூசமத்தவனும்வேந்தனை ... ...*

யத்தநல்லமிர்தினையுரியமாதர்கட் ... ...*
கத்தகுமரபினலளித்தியாலென்றான் ... ... *

(இ-பு.) அந்தப்பூதமானது தான்கொண்டுவந்த அமுதத்தைத்தட்டுடன்பூமியில்வைத்து மறுபடியும் அந்த ஓமாக்கினி வழியிற்போய்விட்டது - அம்முனிவனும் தசரதராசன்முகத்தைநோக்கிப்பூதங்கொண்டுவந்த இந்த அமுதத்தை உனக்குரிய மனைவிகளுக்குத் தகுதியுள்ள அந்த முறைப்படி கொடுவென்றுசொன்னார் — எ-று. (அஎ)

அதைவைத்தது என்னுமுற்றினை வினையெச்சமாகக்கொள்க. மரபா லளித்தி யென்றது மூத்தாள் இளையாள் என்னுமுறைப்படியளித்தல்.

மாமுனியருள்வழி மன்னர்மன்னவன் .. ..*
றாமமென்சுரிகுழ லெற்றுண்கடத்தாயவாய்க... ...*
காமரொண்கௌசலைகரத்திலேர்பகிர்... ... *
தாமுறவளித்தனன்சங்கமார்த்தெழ .. .. *

(இ-பு.) பெருமைபொருந்திய அம்முனிவர் கட்டளையிட்டமுறைமைப்படி தசரதமகாராசனானவன் அகிற்புகையூட்டப்பட்டு மென்மையுடையதாய்ச் சுழித்துமுடித்த அளகத்தையும், கோவைப்பழம்போன்ற பரிசுத்தமான வாயினையுமுடைய அழகுபொருந்திய மேனியொளியுள்ள கௌசலைக்கும் பொருந்த சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலிக்கும்படி ஒருபங்கு கொடுத்தனன் — எ-று. தாம்-இடைச்சொல். (அஅ)

கைகயன்றநயதன்கரத்துமம்முறை ... ...*
செய்கையினளித்தனன்றேவராரத்தெழப்... ... *
பொய்கையுநதிகளும்பொழிலுமோதிமம்... ... *
வைகுறுகோசலமன்னர்மன்னனே... .. ..*

(இ-பு) இவ்வாறுகொடுத்தபின்பு பொய்கையினிடத்தும், நதிகளிடத்தும், சோலைகளினிடத்தும்; அன்னப்பட்சிகள் வாசமாயிருக்கும்படியானகோசலநாட்டு மன்னவனாகிய தசரதமகாராசன் முன்கொடுத்த முறைமைச்செய்கையின்படி தேவர்கள் ஆரவாரிக்கத்தக்கதாகக் கைகேசியின்கரத்தினிடத்துங்கொடுத்தனன் — எ-று. (அகூ)

நமித்திரர்நடுக்குறுதலங்கொண்மொய்ம்புடை .....*
நிமித்திநமரபுளான்முன்னர்நீர்மையிற் .. ... *
சுமித்திரைக்களித்தனன்சுரர்க்குவேந்தினிச் ... .. *
சமித்ததென்பகையெனத்தமரொடார்ப்பவே .. *

(இ-பு.) பகைவர்நடுங்கும்படி நன்மைபொருந்திய புசங்களுள்ள நிமி என்னும் அரசனுடைய சிறந்த மரபியையுள்ளவனாகிய- தசரதமகாராசன்-தேவேந்திரனானவன் என்பகைவர்கள் அழிந்தார்களென்று தேவர்களுடன் ஆரவாரிக்கும்படி முன்கொடுத்தமுறைமைப்படி சுமித்திரைக்குங்கொடுத்தான் — எ-று (கூ0)

நடுக்குறும்என்பது வலித்தல்விகாரம் அல்லதுநடுக்கம் என்னும்பதம் ஈறுகெட்டுநின்றதெனினுமமையும்

பின்னுமப்பெருந்தகைபிதிர்ந்துவீழ்ந்தவை ... *
தம்மையுஞ்சுமித்திரைதனக்குநல்கின ... ... *
ளென்னலர்க்கிடமும்வேறுலகினோங்கிய ... ...*
மன்னுயிர்தமக்குநீள்வலமுந்துள்ளவே ... .. *

(இ-பு) பகைவர்க்குஇடப்புறமும்வேறுபுலகில்மிகுந்திராநின்றநிலையான உயிர்கட்கு நல்லவலப்புறமுந் துள்ளமறுபடியும் அந்தத் தசரதமகாராசன் பொற்றட்டில் சிதறிவீழ்ந்திருக்குமவற்றைப்பிண்டமாகத்திரட்டிச்சுமித்திரைக்குக்கொடுத்தான்—எ-று. (கூஎ)

உலன்கிமன்னுயிரென்றது- ஈண்டு மக்களுயிரை-தம்மை இன எதுகை.

வாம்பரிவேள்வியுமகவைநல்குவ... ... ... *
தாம்புரையாகுதிபிறவுமந்தண... ... ...*
ளோம்பிடமுடிந்தபினுலகுகாவல... ... ... *
னேம்பலோடெழுந்தனனியாருமேத்தவே... ...*

(இ-பு.) அஸ்வமேதயாகமும் புத்திரரைத்தருவதாகிய மேன்மைபொருந்திய புத்திரகாமேஷ்டி முதலியபிறவும்- கலைக்கோட்டுமுனிவர் பழுதுபடாதுசெய்ய நிறைவேறினபின் பூமிக்குக் காவலனாகிய தசரதமகாராசன் சந்தோஷித்துடனெழுந்தனன்—எ-று. (கூஉ)

வாம்பரியென்பதற்குப்பதப்பொருள் தாவுகின்றகுதிரையெனக்கொள்க-வாவும்-என்பது-விகாரவகையால் வாம் எனநின்றது-ஓம்பல்- பாதுகாத்தல்.

முருடருபல்லியமுழங்கியார்த்தன ... ...*
விருடருமுலகமுமிடருநீங்கின ... ... *
தெருடருவேள்வியின்கடன்கழிந்துழி ... ...*
யருடருமவையின்வந்தரசணைந்தனன் ... ...*

(இ-பு.) திருபேரிகைமுதலிய பலவாத்தியங்கள்முழங்கியாரவாரித்தன, இருளினாற் சூழப்பட்டிருக்கிற எல்லாவுலகங்களும் துன்பம்நீங்கின, வேதங்களால் ஆராய்ச்சிசெய்யத்தக்க மகத்தின்முறைமைகளைச்செய்து தீர்ந்தபோது அருளைத்தரத்தக்க சபாமண்டபத்தில் அரசன்வந்துசேர்ந்தான்-எ-று.()

இருள்- ராக்ஷதர் செய்கையால் தானதவங்கள் மாறுபட உண்டானபாவம்- அருடருமவையென்றது சபையின்றன்மை யெனக்கொள்க அது இடவிசேடம் தானங்கொடுக்கு மண்டபமெனினுமமையும்.

• செய்ம்முறைகடன்முறைதிறம்பலின்றியே ... *
மெய்ம்முறைகடவுளுக்கிரந்துவிண்ணுளோர்க் .. *
கம்முறையளித்துநீட்டந்தணாளர்க்குங் ... .. *
கைம்முறையளித்தனன்கனகமாரியே ... ... *

(இ-பு) இவ்வாறுஅரசன்சபையில்வந்துசேர்ந்தபின் அவ்விடத்திலிருந்துகொண்டு செய்யத்தக்க கடன்முறைகள் தவறுதலில்லாமல் மெய்யாகியபத்தியுடனரங்கநாதருக்குக்கொடுத்துமற்றைத்தேவர்களுக்கும்அவ்வாறேகொ

டுத்து நீடியபிராமணர்களுக்குங் கொடுக்கு முறைமைப்படி பொன்மழை பொழிந்தான்—எ-று. (கூச)

கடவுளுக்கு கடன்முறைகொடுத்தலாவது- முன்கொடுத்திருப்பதிலும் நித்திய நைமித்தியங்களை விசேஷித்து நடப்பித்தலாம்,

வேந்தர்கட்கரசொடு வெறுக்கைதேர்பரி ... ... *
வாய்ந்தநற்றுகிலொடுவரிசைக்கேற்பன ... ...*
வீந்தனன்பல்லியந்துவைப்பவேகிநீர் ... .*
தோய்ந்தனன்சரயுநற்றுறைக்கணெய்தியே .. *

(இ-பு.) இவ்வாறு கடவுள் முதலாக எவர்களுக்குங் கொடுத்தபின்பு அரசர்களுக்கு ராச்சியமும், திரவியமும், தேர்களும், குதிரைகளும், பொருந்திய நல்ல ஆடைகளும், அவரவர்கள் வரிசைக்குத் தகுதியானவைகளாகக் கொடுத்துப்பலவாத்தியங்கள் ஒலிக்கும்படி அவ்விடம்விட்டுப்புறப்பட்டுப்போய்ச் சரயுநதித்துறைக்கண் சேர்ந்து தீர்த்தஸ்நானஞ்செய்தான்—எ-று. (கூரு)

ஒலி-ஓரண்டும் ஓசைநிறைக்கவந்தன, ஈந்தனன்-என்னும் வினைமுற்று வினையெச்சத்தின்கண்வந்தது. எண்ணும்மைதொக்குநின்றன.

முரசினங்கறங்கிடமுத்தின்வெண்குடை... ... ...*
விரசிநீழலராவேந்தர்சூழ்தர... ... ... *
வரசவையடைந்துழியருநாணுற ... ... *
வுரைசெறிமுனிவர்தாள்வணங்கியோங்கினான் ... *

(இ-பு.) சரயுநதியில் ஸ்நானஞ்செய்து புறப்பட்டுப் பேரிகைகள் ஒலிக்கவும், முத்துகளால் புனையப்பட்ட வெள்ளைக்குடை பொருந்திய நிழலைக் கொடுக்கவும், அரசர்கள் சூழ்ந்துவரவும், ராசசபையில் சேர்ந்தபோது பிரமதேவனும் நாணமடைய வேதமொழி நன்றிறைந்த முனிவர்களுடைய பாதங்களை வணங்கியோங்கினான்—எ-று. (கூசா)

எச்சவும்மைகள் தொக்குநின்றன- உரைசெறி யென்பதற்குச் சாபானுக்கிரகமாகிய சொற்களெனப்பொருள் கொள்ளினுமமையும்.- இடப்பொருளுணர்த்தும் உழியென்னுஞ் சொல் ஈண்டுக் காலத்தின்மேனின்றது. ஓங்கினான் என்பது ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டானென்னுந் தாற்பரியங்காட்டுகின்றது. அடைந்துழி யென்பதனை அடைந்து ராசசபையில் சேர்ந்து உழி அவ்விடத்திலிருக்கிற முனிவர்களெனப் பொருள்கூறுதலுமொன்று.

அரியநற்றவமுடைவசிட்டனேவபா ... ... *
விரலைநற்சிருங்கமாவிறைவன்றொழா ... ... *
யுரியபற்பலவுபாயபிற்றிபுய்த்தனன் ... ... *
பெரியநற்றவவினிப்பெறுவதியாதென்றான் ... *

(இ-பு.) செய்தற்கரிய நல்லதவமுள்ள வசிஷ்டமுனிவருடைய கட்டளையினால் நல்ல கலைமான்கொம்பு பொருந்திய பெருமையுடைய கலைக்கோட்டுமுனிவர் பாதங்களை வணங்கிப்பலபல உரியவசனமாகிய உபசாரவார்த்தைகள் சொல்லிப் பெரியமுனிவரே அடியேன்பெறவேண்டியபேற்றினைப் பெற்று இன்று உயர்ந்தவனானேன் இனி யடையவேண்டியபேறு யாதிருக்கின்றதென்று சொன்னான்—எ-று. (கூஎ)

எந்தைநின்னருளினாலிடருநீங்கியே ... ... *
யுய்ந்தனனடியனென்னவொண்டவன் ... .. *
சிந்தையுண்மகிழ்ச்சியால்வாழ்த்தித்தேர்மிசை... *
வந்தமாதவரொடுமெழுக்கொண்டேகினான் ... .. *

(இ-பு.) எம்மையனே தேவரீருடைய கிருபையினாலே துன்பத்தினின்றும்நீங்கி அடியேன் பிழைத்தவனானேனென்று தசரதமகாராசன் சொல்லவளவில்- விளக்கமுடைய கலைக்கோட்டுமுனிவர் மனதிலுண்டான மகிழ்ச்சியால் ஆசீர்வதித்துத் தேர்மேலேறிக்கொண்டு முன்னந்தம்மோடு வந்திருக்கின்ற முனிவர்களுடன் எழுந்துகொண்டுசென்றார்—எ-று. (௯௮)

வாங்கியதுயருடைமன்னன்பின்னரும் ... ... *
பாங்குடைமுனிவர்தாள்பழிச்சியேத்தல்கொண்... *
டோங்கியவுவகையராகியோடெழா... ... ... *
நீங்கினரிருந்தனனேமிவேந்தனே ... ... *

(இ-பு) அவர்சென்றபின்பு அங்கிருந்த நன்மையுள்ள முனிவர்கள் நீங்கிய துயரத்தையுடைய தசரதமகாராசன் வாழ்த்தித்துதிசெய்ததினால் பின்னு மிகுந்தசந்தோஷமுள்ளவர்களாய் ஆசீர்வதித்துக்கொண்டே எழுந்து சபையைவிட்டுநீங்கினார்கள் அவர்களுடைய ஆசீர்வாதம்பெற்றுக்கொண்டுநின்ற தசரதமகாராசன் அவ்விடத்தில்தானேயிருந்தான்—எ-று. (௯௯)

வாங்கிய துயருடைய என்பதனை அருங்கேடனென்பதுபோலக்கொள்க. துயரந்தீர்ந்தவனென்பது கருத்து.

தெரிவையர்மூவருஞ்சிறிதுநாட்செலீஇ ... ... *
மருவியவயாவொடுவருத்தந்துய்த்தலாற்... ... *
பொருவருதிருமுகமன்றிப்பொற்புநீ... ... *
ருருவமுமதியமோடொப்பத்தோன்றினார்... ... *

(இ-பு.) தசரதமகாராசனுடைய பட்டத்து ஸ்திரீகள் மூன்றுபேருஞ் சிறிதுநாட்சென்று கருப்பங் கொண்ட காலத்திலுண்டாகும் சிலநோவினையும் வருத்தத்தையும் பொருந்தினமையால் ஒப்பிடுதற்கரியதிருமுகச் சந்திரனோடொப்பத் தோன்றலேயன்றி அழகுமிகுந்தமேனியுஞ்சந்திரனோடொப்பாகும்படி காணப்பட்டார்கள்—எ-று. (௱)

வயா கருப்பங்கொண்டகாலத்தில் சிலபண்டங்களைத் தின்னவேண்டுமென்று உண்டாகும் ஆசையெனினுமமையும்.

செலல் என்னும் குறில்நீண்டு செலீஇ என விகாரமாயிறந்தகாலங்காட்டிநின்றது— மேனி சந்திரனோடொப்பத்தோன்றலாவது பசலைநிறமுண்டாதல்.

ஆயிடைப்பருவம்வந்தடைந்தவெல்லையின்... ... *
மாயிரும்புவிமகண்மகிழ்வினோங்கிட ... ... *
வேய்புனர்பூசமும்விண்ணுளோர்களுந்... ... *
தூயநற்கடகமுமெழுந்துதுள்ளவே... ... ... *

(இ-பு.) அவ்வாறிருக்கையில் பிரசவகாலம் சமீபித்தபோது பெருமை பொருந்திய பூமிதேவியானவள் மகிழ்ச்சியினாலோங்கவும், அலங்கரிக்கத்தக்க புநர்பூசநக்ஷத்திரமும், தேவர்களும் பரிசுத்தமாகிய கர்க்கடராசியும் சந்தோஷித்ததினால் எழுந்துள்ளவும்—எ-று. (௱௧)

வெய்புநர்பூசமும் என்பதற்கு-கழையென்றும் ஒருபெயருள்ள புநர்பூசமெனினுமமையும்.

சித்தருமியக்கருந்தெரிவைமார்களும் ... ... *
வித்தகமுனிவரும்விண்ணுளோர்களு ... ...*
நித்தருமுறைமுறைநெருங்கியார்ப்புறத் .. ... *
தத்துறலொழிந்துநீடருமமோங்கவே... ... ... *

(இ-பு) சித்தர்களும், யக்ஷர்களும், அவர்களுடைய மாதர்களும், ஞானமுனிவர்களும், தேவர்களும், நித்தியர்களு முறைமுறைநெருங்கி யாரவாரிக்கவும், இடையூறுநீங்கி நீடியதருமமோங்கவும்—எ-று. (௱௨)

ஒருபகலுலகெலாமுதரத்துட்பொதிந் ... ... *
தருமறைக்குணர்வருமவனையஞ்சனக்... ... ..*
கருமுகிற்கொழுந்தெழிற்காட்டுஞ்சோதியைத்....*
திருவுறப்பயந்தனடிறங்கொள்கோசலை ... ...*

(இ-பு.) ஒருகாலத்தில் உலகங்களையெல்லாம் தன்திருவயிற்றில் சேரவைத்துக்கொண்டிருந்து அரியவேதங்களுக்கும் உணர்தற்கரியவரும் கரியமேகக்கொழுந்துபோல அழகுகாட்டுஞ்சோதிச்சொரூபமுள்ளவருமாகிய நாராயணமூர்த்தியைக் கற்புள்ளகௌசல்யம்மை செல்வம்பொருந்தப் பெற்றாள்—எ-று. (௱௩)

ஆசையும்விசும்புநின்றமரரார்த்தெழ ... ... *
வாசவன்முதலினர்வணங்கிவாழ்த்துறப் ... ...*
பூசமுமீனமும்பொலியநல்கினள்... ... ... *
மாசறுகேகயன்மாதுமைந்தனை .. ..*

(இ-பு) திக்குகளிலும், ஆகாயத்திலுமிருந்து தேவர்களாரவாரிக்கவும், தேவேந்திரன்முதலானவர்கள் வணங்கிவாழ்த்தவும், பூசநக்ஷத்திரமும், மீனராசியும், கூடியதினத்தில் குற்றமற்றகேகயராசன்புத்திரியாகிய கைகேசியம்மையானவள் ஒருபுத்திரனை ஈன்றாள்—எ-று. (௱௪)

தளையவிழ்தருவுடைச்சைலகோபனுங் ... ...*
கிளையுமந்தரமிசைகெழுமியார்ப்புற... ... ...*
வளைபுகுமரவின்பேருடையவன்வாழ்வுற ... .*
விளையவற்பயந்தனளிளையமென்கொடி ... ...*

(இ-பு.) முறுக்குகள்விரிந்த மலர்கள்பொருந்திய கற்பகவிருக்ஷத்தினையுடைய தேவேந்திரனும், அவன் சுற்றமாகிய தேவர்களும், ஆகாயத்தின்மேல் பொருந்தி யாரவாரிக்கவும், புற்றில்செல்லுகின்ற சர்ப்பத்தின் பெயர்கொண்ட ஆயிலியநக்ஷத்திரமும், கர்க்கடகராசியும், வாழ்வுபெறவு மிளையவராக

...லட்சுமணனைப் பெருமானைச் சுமித்திராதேவி பெற்றாள்—எ-று. (௱௫)

ஆயிலியநக்ஷத்திரத்துக்கு அரவநாளென ஒருபெயர்—மலைகளைக்கோபித்தவனாதலால் இந்திரனுக்குச் சயிலகோபனென்றும்பெயர்.

படங்கிளர்பஃறலைப்பாந்தளேந்துபார் ... ... *
நடங்கிளர்தரமறைநவிலநாடக... ... ... *
மடங்கலுமகமுமேவாழ்விலோங்கிட .... *
விடங்கிளர்விழியிளம்பிடியீன்றனள் ... ... *

(இ-ள்.) படங்களைப் பிரகாசிப்பிக்கிற பலதலைகளையுடைய சர்ப்பமாகிய ஆதிசேஷனால் ஏந்தப்பட்டிருக்கும் புவிமகள் கூத்தாடவும், வேதங்கள் நடனமிடவும், சிங்கராசியும், மகநக்ஷத்திரமும் வாழ்விலோங்கவும், விஷத்தைப்போலக் கருமைநிறமும் விளங்குகிற கண்களையுடைய சுமித்திராதேவியானவள் மறுபடியும் ஒருபுத்திரனைப் பெற்றாள்—எ-று. (௱௬)

பலதலையென்பது—பஃறலையெனப் புணர்ச்சிவகையால் விகாரமாய்நம்பெற்றுநின்றது.

ஆடினரரம்பையரமுதவேழிசை ... ... *
பாடினர்கின்னரர்துவைத்தபல்லியம் .. .. *
வீடினரரக்கரென்றுவக்கும்விம்மலா ... ... *
லோடினருலவினரும்பர்முற்றுமே... ... ... *

(இ-ள்.) ரம்பாஸ்திரீகள் நாட்டியமாடினார்கள்—கின்னரர்கள் அமுதம்போன்ற யாழ்வாசித்தார்கள்—பலவாத்தியங்கள் முழங்கின—அரக்கர்கள் இறந்துவிட்டார்களென்கிற சந்தோஷத்தினால் தேவர்களெல்லாரும் விண்ணுலகமுழுவதிலுமோடி யுலாவினார்கள்—எ-று. (௱௭)

ஓடினரரசன்மாட்டுவகைகூர்தலின் ... ... *
றூடினர்செவிலியர்த்தருளார்கள் .. .. *
கூடினர்நாளொடுகோளுநின்றமை ... ... *
நாடினருலகினிநவையின்றென்றனர்... ... ... *

(இ-ள்.) தோழிகள் அரசனிடத்திலோடிச் சந்தோஷமிகுதியால் தாங்கள்வந்தசேதியைச்சொல்லாமல் நின்றுவிட்டார்கள் சோதிடர்கள்வந்துசேர்ந்து நக்ஷத்திரமும் கிரகங்களும் நின்றநிலைமையை ஆராய்ந்துபார்த்து இனி யுலகினில் தீமையில்லாமையாயிடுமென்றார்கள்—எ-று. (௱௮)

மேடமாமதிதிதிநவமிமீன்கனூ ... ... *
நீடுறுமாலைகர்க்கடகநீதிசே ... ... *
ரோடைமாகளிறனுதயராசிகோ ... ... *
ளாடினைகாதசநால்வருச்சமே. ... ... *

(இ-ள்.) நெற்றிப்பட்டங் கட்டியிருக்கிற யானையைப்போன்ற இராமமூர்த்தியின் திருவவதாரகாலம் என்னவெனில்; சித்திரைமாதமும், நவமிதிதியும், புனர்பூசநக்ஷத்திரமும், நீடியமாலைப்பொழுதுமாம்—அந்தக்காலராசிநிலையோ

வெனில்,கர்க்கடகமாம் நவக்கிரகங்களை நாடுமிடத்தில் பதினொன்றாமிடத்தில் நால்வராம் மற்ற ஐவரும் உச்சர்களாம்—எ-று. (௱௯)

ஆம்-என்பதனை அங்கங்கும்கூட்டுக மேஷராசியில் சூரியன்பிரவேசிக்கின்ற மாதமாதலால்சித்திரைமாதம்மேடமதியென்னப்பட்டது. மீன்-என்பது நக்ஷத்திரம்.கழையெனப்படுவது புநர்பூசத்துக்கும்பெயர். நால்வரொன்றமையின்ஐவரொன்றுமொழிவருவித்துரைக்கப்பட்டது

என்றனர்சாதகமீசற்கெனையர் ... ... *
தன்றனக்குந்தருமுறையிற்றன்னெறிந் ... ... *
தொன்றியதமனியத்தெழுதியோதினார் ... ... *
வன்றிறற்சார்குருவாழ்த்தெடுப்பவே. ... ... *

(இ-பு) மிகுந்தவல்லமையுள்ள பிரகஸ்பதிபகவான் தங்களை வாழ்த்தும்படி இராமமூர்த்திக்கு இவ்வாறுசாதகமெழுதிக்கூறி (இதுவுமன்றி மற்றத்தலைவர்களுக்கும் தக்கமுறைமையா லாராய்ந்து பொருந்திய பொன்தகட்டிலெழுதிச்சொன்னார்கள்—எ-று. (௱௰)

என்றனர் - என்பதனை யெச்சமாகக்கொள்க. எனையர் தன்றனக்கும், என்பது ஒருமைபன்மைமயக்கம் தந்தமக்கு எனப்பாடமாயின் இனவெதுகை என்க.

மாமுனிதன்னொடுமன்னர்மன்னவ ... ... *
னேமுறப்புனல்படிஇவித்தொடின்பொரு ... ... *
டாமுறவழங்கிவெண்சங்கமார்ப்புறக் ... ... *
கோமகர்திருமுகங்குறுகிநோக்கினான். ... ... *

(இ-பு) இவ்வாறுசாதகமெழுதிக் கூறியதைக்கேட்டுச் சந்தோஷமுண்டானதினால் தசரதமகாராசன்-பெருமைபொருந்திய வசிஷ்டமுனிவருடன்சென்று சரயுநதியில்ஸ்நாநஞ்செய்து நெல்லும்ஒள்ளியபொருளுமிகுதியாகப்பிராமணர்களுக்குத்தானங்கொடுத்துத்தவளச்சங்கமுழங்கும்படிவந்து சிரேஷ்டம்பொருந்திய தன்புத்திரர்களுடைய திருமுகங்களைப்பார்த்தான்.எ-று

எம்ம- என்பது- எம்- என இடைக்குறையாய் நின்றது படியென்னுங் குறில் விகாரவகையால் நீண்டு இடைநிலையின்றிக்காலங்காட்டி நின்றது புனல் ஆகுபெயர் தாம்- இடைசொல்-ஆர்ப்பு-ஆரவாரித்தலை-உற-பொருந்த எனப்பதம்பிரிக்க-திருமுகம் அழகுள்ளமுகம்.

இறைதவிர்ந்திடுகபாரியாண்டொரேழ்நிதி ... ... *
நிறைதருசாலைதாணீக்கியாவையு ... ... *
முறைகெடவழியவர்முகந்துகொள்கெனு ... ... *
வறைபறையென்றனனரசர்கோமகன் ... ... *

(இ-பு.) எழுவருஷிவரைக்கும் நம்முடையதேசத்தில்வரிநீங்கக்கடவதென்றும்,நிதி நிறைந்திருக்கும் பொக்கிஷச் சாலையின் பூட்டினைத் திறந்துவிட்டு அவைகளிலுள்ள பொருட்களையெல்லாம் முறைகேடாக ஏழைகள் வேண்டியமட்டில் எடுத்துக்கொள்ளக் கடவர்களென்றும் பறை அறையென்று தசரதமகாராசன் கட்டளையிட்டான்—எ-று. (௱௰௨)

தாழ்-தாழ்ப்பாள்-அது ஈண்டுப் பூட்டென்றுசொல்லப்பட்டது.முகந்துகொள்கவெனு எனற்பாலது விகாரவகையால் முகந்துகொள்கெனுவென நின்றது.

படைபொழிந்திருகெதம்பதிகளேயினி … … … *
விடைபெறுகுகருமுடிவேந்தர்வேதியர்…………*
நடையுறுநியமமுநவையின்றுகுக .. … … *
கடவுளர்விழவொடுகளிக்கவெங்கணும்… … … *

(இ-பு.) சேனையோர் தங்கள் சேவகத்தை விட்டிருக்கக்கடவர்கள் - மகுடவர்த்தனர்களாகிய அரசர்கள் சிறைநீங்கித் தங்கள் தங்கள் தேசத்திற்சேரும்படி உத்தரவுபெறக்கடவர்கள் - பிராமணர்களுடைய ஒழுக்கம்பொருந்திய செய்கடன்களும்பழுதின்றி நடக்கக்கடவனவாக - தேவர்களுக்கு நடத்துந் திருவிழாவுடன் எவ்விடத்தும்யாவரும் களிப்படையக்கடவர்கள் — எ-று ()

நியமம்-செபதப ஓமங்கள்.

ஆலயம்புதுக்குகவந்தணாளர்தஞ் … … ……*
சாலையுஞ்சதுக்கமுஞ்சமைக்கசந்தியுங்… … …*
காலையுமாலையுங்கடவுளர்க்கணி .. … … … *
மாலையுந்தீபமும்வழங்குகென்றனன் … … *

(இ-பு.) தேவாலயங்கள் புதுமைபெறச் செய்வனவாக-பிராமணர்களுக்கு அக்கிராகாரங்களும், சதுக்கத்திடங்களும், சமைக்கப்படுவனவாக - காலைப்பொழுதிலும், உச்சிப்பொழுதிலும், அந்திப்பொழுதிலும், கடவுளர்களுக்கு அணிகின்ற பூமாலைகளும், தீபமுதலியவைகளும், வழங்கப்படுவனவாக.

சமைக்குக என்னுமொழி-குச்சாரியைகெட்டுச் சமைக்கவெனநின்றது. வழங்குக என்றனன் என்பது வழங்குகென்றனன் என விகாரமாயிற்று. சதுக்கம்-நான்குதெருகூடுமிடம்.

என்பழிவள்ளுவரியானைமீமிசை … … … *
நன்பறைபறைந்தனர்நகரமாந்தரு … … *
மின்பிறழ்நுசுப்பினார்தாமும்விம்மலா … …*
வின்பமென்றளக்கருமளக்கர்மொய்த்தினர். … … *

(இ-பு) இவ்வாறு அரசன் கட்டளையிட்டபோது வள்ளுவர்கள் யானைமேல் பறைபறைந்தார்கள் அந்நகரத்திலிருக்கும் ஆடவர்களும், மின்னலையொத்த இடையினையுடைய மாதர்களும், பூரிப்பினால் இன்பமாகிய அளப்பதற்கரிய சமுத்திரத்தில் மூழ்கினார்கள் — எ-று. (௱௰௫)

என்றவழி எனற்பாலது என்புழி என நின்றது-இதனைப்பிரித்துச் சொல்லுமிடத்து என்று சொல்லுகையினிடத்து என்றுதல்காண்க. இன்பமென்று அளக்கருமெனற்பாலது இன்பமென்றளக் கருமென விகாரமாயிற்று.

ஆர்த்தனர்முறைமுறையன்பினாலுடல் … … *
போர்த்தனபுளகம்வேர்பொடித்தநீணிதி … …*
தூர்த்தனரெதிரெதிர்சொல்லினர்க்கெலாந் … …*
தீர்த்தனென்றறிந்தநோவவர்தஞ்சிந்தையே ……*

(இ-பு.) இவ்வாறு இன்பம் அடைந்தவர்கள் முறைமுறையாகநின்று ஆரவாரித்தார்கள் அன்பினால் அவர்களுடல் புளகங்கொண்டு மறைந்தன-அன்றி

யும் வெயர்வையுமுண்டாயின, இந்தச் சந்தோஷச்செய்தியைச் சொல்லினோர்க் கெல்லாம் எதிரெதிராக மிகுந்தநிதி கொடுத்தார்கள்- அவர்களிப்படிக் கொடுப்பதற்குக்காரணம் இப்போது உற்பத்தியான குழந்தை நாராயணமூர்த்தி யாகுமென்று அவர்கள் சிந்தையறிந்து கொண்டமை—எ-று. (௱௰௬)

எதிரெதிர்கொடுத்தல் ஒருவர்க்கொருவர்கொடுத்தல் - மிகுதிதோன்றத் தூர்த்தனமென்றார்

பண்ணையுமாயமுந்திரளும்பாங்கரும் ... ... *
கண்ணகன்றிருநகர்களிப்புக்கைமிகுத் ... ... *
தெண்ணெயுங்களபமுமிழுதுநானமுஞ் ... ... *
சுண்ணமுந்தூவினர்வீதிதோறுமே... ... ... *

(இ-பு.) மாதர்கூட்டமும், தோழியர்கூட்டமும், ஆடவர்கூட்டமும், சேவகர்கூட்டமும், சந்தோஷமிகுந்து இடமகன்ற சிறந்த அந்நகரத்தின் வீதி யெங்கும் எண்ணெயும், சந்தனக்குழம்பும், நெய்யும், கஸ்தூரியும், வாசனைப்பொடியும், தூவினார்கள்—எ-று. (௱௰௭)

திருநகரத்திருக்கு மாதர்கூட்ட முதலாயினோர் தூவினரெனப் பொருள்கூறி முடிக்கவும், தூவினரென்பது- முன்னிதி கொடுத்ததுபோல வீதிகள்தோறும் கொடுத்தார்களென்று பொருள்கொள்க, எண்ணெய்யுமெனற்பாலது எண்ணெயுமெனவிகாரமாயிற்று.

வேறு.

இத்தகைமாநகரீராறுநாளுஞ் ... ... *
சித்தமுவக்களியோடுசிறந்தே... ... ... *
ஒத்தமைவொன்றுமுணர்ந்திலர்தாவா ... ... *
மெய்த்தவனும்மவ்விதிப்படிசெய்தான் ... ... *

(இ-பு.) இத்தன்மைப்பாட்டினையுடைய பெருமைபொருந்திய அந்நகரத்திலிருப்பவர்கள் திருவவதாரநாள்முதல் பன்னிரண்டுநாளும் தங்கள் தங்கள் மனதிற்பொருந்தியகளிப்புடன் சிறந்து தம்மைச் சிறிதும் அறியாதவர்களானார்கள் இவர்களிப்படியிருக்கக் கெடாதமெய்த்தவமுள்ள வசிஷ்டமுனிவர் (அந்தப்புத்திரர்களுக்கு) நாமகரணஞ்செய்ய எண்ணங்கொண்டார்.

கராமலையத்தளர்கைக்கிரியெய்த்தே ... ... *
யராவணையிற்றுயில்வோயெனவந்நாள்... ... *
விராவியளித்தருண்மெய்ப்பொருளுக்கே... ... *
யிராமனெனப்பெயரீந்தனனன்றே... ... ... *

(இ-பு.) முதலையானது போர்செய்ததினால் தளர்கின்ற துதிக்கையையுடைய மலையொத்த யானையானது இளைத்துச் சர்ப்பசயனத்தில் அறிதுயிலமர் இருந்த கடவுளே யென்றுகூவ, அந்நாளில் அவ்விடத்தில்வந்து அந்தயானையை ரக்ஷித்தருளிய உண்மைப்பொருளாகிய நாராயணமூர்த்திக்கு இராமனென் னுந்திருநாமங்கொடுத்தார்—எ-று. (௱௰௯)

ரமு-என்கிறதாதுவின்மேல் ராமனென்று பெயர்கூறப்பட்டதென்றும், ரமு என்பதற்குப்பொருள் அடியார்களிருதயங்கள்தோறும் நிறைந்து இன்பத்தைக்கொடுப்பவனென்றும் பெரியோர்களால்கூறப்படுகின்றது அந்தக்கருத்துவிளங்க ஆனையினைரக்ஷித்தவனெனக்கூறினார்

கரதலமுற்றெருளிர்நெல்லிகடுப்ப ... ...*
விரதமறைப்பொருண்மெய்ந்நெறிகண்ட... ... *
வரதனுதித்திடமற்றையவொளியைப்... ... *
பரதனெனப்பெயர்பன்னினனன்றே ....*

(இ-பு.) கையினிடத்துப் பொருந்தி விளங்குகின்ற நெல்லிப் பழத்தைப் போலப்பாக விரதங்களையும், வேதப்பொருளாகிய உண்மைநெறியையு முணர்ந்த வசிஷ்டமுனிவரானவர் பின்புதிருவவதாரஞ்செய்த அந்தமற்றொருசோதியாகிய குழந்தைக்குப் பாதனென்று திருநாமங்கூறினர்-எ-று. (௱௨௰)

பரதனென்பது- சிரேஷ்டன் - உதித்திட மற்றைய என்பதனை உதித்திடு அம்மற்றைய வெனப் பதம்பிரித்துப்பொருள்கொள்க. விகாரவகையால் அகரச்சுட்டியல்பாய்நின்றது.

உலக்குநர்வஞ்சகரும்பருமெய்ந்தார் ... ... *
திலக்கொடியுந்துயர்நீத்தனளிந்த... ... ... *
இலக்குருவெய்ப்பின்விளங்கொளிநாம ... ... *
யிலக்குவனென்னவிசைத்தனனன்றே... ... *

(இ-ப) வஞ்சகராகிய ராக்ஷதர்களிறந்தார்கள் தேவர்களும் பிழைத்தவர்களானார்கள் பூமிதேவியும் துயரம்நீங்கினவளானாள் (ஆதலால்) யாவராலும் இலக்குதற்கரியபலத்தினையுடையதாய்விளங்குகின்ற இந்தச்சோதியாகிய குழந்தைக்கு இலக்குவனென்னத் திருநாமங்கூறினர்---எ-று. (௱௨௧)

தெளிவுபற்றி உலக்குநர் உய்ந்தனர்-நீங்கினள் என இறந்தகாலத்தாற்கூறினர். உலத்தல் என்னு முதனிலை கு என்னுஞ் சாரியைபெற்று உலக்குநர் என்றுயிற்று.

மூத்துருக்கொண்டுசெழுமளரியலர்ந்தா ... ... *
லொத்திருக்கும்மெழிலுடையவிம்மொளியா... *
வெத்திறத்தும்செறிமென்பதையலனுச... ... *
சத்துருக்கனெனச்சாற்றினனுமம்... ... ...*

(இ-பு) மூத்தைகள் ஒருவடிவங்கொண்டு செந்தாமரைமலர்களை மலர்ந்து கொண்டிருந்தாலொத்திருக்கும் அழகுடைய இந்தச்சோதியாகிய குழந்தையாக வஞ்சிதனை குற்றங்களும் கெடுமென்பதற்கருதிச் சத்துருக்கனெனப்பெயர்கூறினர்---எ-று. (௱௨௨)

சத்துருக்கன் வெண்மைநிற முள்ளவனாதலால் முத்துருக்கொண்டு என்றும் முகம்-கண்-கை-கால்-செந்தாமரைபோன்றிருத்தலால் முளரியலர்ந்தாலென்றுங் கூறினர்.

சத்துருக்கன் பாஞ்சசன்னியமென்னுஞ் சங்காவதாரம்-இலக்குமணன் சேஷாவதாரம் பரதன் சுதரிசனமென்னுஞ் சக்கராவதாரம்.

பொற்பழியின்முனிபுகறருமறையா ... ... *
லெவ்வழிப்பெயர்களிசைத்தமுழியிலாமல்... ... *
கைவழிநதிபொடுநிதிகலமறையோர் ... ... *
மெய்வழியுவரிநிறைத்தனன்மேன்மேல்... ... *

(இ-பு.) உண்மைநெறியினையுடைய வசிஷ்டமுனிவர் சொல்லுகின்ற வேதமுறைப்படி யிந்தக்கிரமத்தில் திருநாமங்கள் சொல்லியானபோது தசரத

தமகாராசன் கைவழிபாகப் பெருகாநின்ற நிதிகளாகிய நதிகளால் மெய்யொழுக்கமுள்ளபிராமணர்களாகிய சமுத்திரத்தை அதிகமாக நிறைத்தான்-எ-று.

கைவழியாகப் பொழியப்படுகிறதான நீருடன் நிதிகளைச்சமுத்திரம்போலமிகுதியாகவுத்திருக்கிற பிராமணர்களுக்குத் தானங்கொடுத்தான் எனப்பொருள்கூறுவதுமொன்று.

காவியுமொளிர்தருகமலமுமெனவே... ... ... *
யோவியவெழிலுடையொருவனையலதோ..... *
ராவியுமுடலமுமிலதெனவருளின்... ... ... *
மேவினனுலகுடைவேந்தர்தம்வேந்தன் ... ... *

(இ-பு) நீலோற்பலமலர்களும் அதனிடையிடையில் விளங்குகின்றசெந்தாமரைமலரும் கலந்திருக்கத்தீட்டிய சித்திரம்போன்றசௌந்தரியமுடையஇராமமூர்த்தியையல்லது தனக்கு ஒப்பற்றஉயிருமுடலமுமேவேறில்லாததாக எண்ணி உலகத்தையுடைய தசரதமகாராசனானவன் இராமமூர்த்தியினிடத்தில் அருளுடையனாயிருந்தான்—எ-று. (௱௨௪)

அமிர்துகுகுதலையொடணிநடைபயிலாத்.. ... *
திமிரமதறவருதினகரனெனவுந்... ... ...*
தமரமதுடன்வளர்சதுமறையெனவுங்... ... ...*
குமரர்கணிலமகள்குறைவறவளர்நாள் ... ... *

(இ-பு.) இந்தப்புத்திரர்கள் நால்வரும் அமிர்தம் சிந்துவதுபோன்றகுதலைச்சொல்லுடன் அழகியநடைபயின்று இருளானதுநீங்கும்படி உதயமாயிவருகின்ற சூரியனைப்போலவும், ஓசையுடன்வளர்கின்ற நான்குவேதம்போலவும் பூமிதேவியினுடைய குறைவுநீங்கும்படி வளருகின்றநாளில்-எ-று.()

சவுளமொடுபநயம்விதிமுறைதருகுற் ... ... *
றவாவதெனவொருகரைபிறிதிலவா .. ..*
லுவடருமறையொடொழிவறுகலையுந்... ... *
தவன்மதிபுனைபரனிகர்முனிதரவே... ... ...*

(இ-பு) சவுளச்சடங்கும், உபநயனச்சடங்கும், வேதவிதிப்படி செய்வித்துவெண்மைநிறமுள்ள இளந்திங்களணிந்த பரமசிவனையொத்த வசிஷ்டமுனிவரானவர் விளங்குகின்ற வேதங்களுடன் ஒழிவில்லாத எனைய சாஸ்திரங்களையுங்கற்பித்தலால் அவைகள் இவ்வளவையுடையனவென ஓரளவை கூறுவதற்கில்லாதனவைகளாய் நிறைந்தன—எ-று. (௱௨௬)

சவுளம்-மயிர்களைதல் உபநயனம் எனற்பாலது விகாரவகையால் உபநயமென நின்றது-தரு-தருதல்-உற்று-என்பது இடையில் குச்சாரியைபெற்றது-ஆல்-சாரியை தவளம் என்பது ஈறுகெட்டு தவள் என நின்றது.

யானையுமிரதமும்புரவியுமுதலா ... ... *
வேனையபிறவுமவ்வியல்பினினடையுந் ... ... *
றானுறுபடையலகிலவொடுபயிலா... ... ...*
வானவர்தனிமுதல்கிளையொடுவளர ... ... *

(இ-பு.) தேவர்களுக்கெல்லாம் ஒப்பற்றமுதல்வராகிய இராமமூர்த்தியானவர் தம்முடைய தம்பிமார்களுடன் யானையேற்றமும், தேரேற்றமும், குதிரையேற்றமுமாகிய இவைமுதலாக ஒழிந்த மற்றவைகளையும் அவற்றின் முறைப்படி பயின்றும் பலகலைகளுடல் மாமிசம்பொருந்தத்தக்கதானடல அஸ்திரமுதலான ஆயுதங்களையேவுமுறைமைகள் விஷமேலந்துக்கிரமத்துடன் பயின்றும் வளருகையில் — எ-று. (௱௨௭)

கிளை-என்பது-சுற்றம்-அது ஈண்டுத் தம்பிமார்களைக்காட்டி நின்றது,

அருமறைமுனிவருமமருமவனித் .... *
திருவுமநகருறைசெனமுமிடரே ... ... *
டிருவினை துணிதருமவர்களினிவணின் ... ... *
ஒருபொழுதகலகில்முறைபடவுறவார் ... ... *

(இ-பு.) முற்றுப்பெற உணர்தற்கரிய வேதங்களுணர்ந்த முனிவர்களும், தேவர்களும், பூமிதேவியும், அந்தநகரத்தில் வாசமாயிராநின்ற செனங்களும் இந்தப்புத்திரர்களால் நம்முடையஇடரும் அதற்கேதுவாகிய திருவினைகளும் நீங்கும் (ஆதலால்) இவ்விடப்விட்டொருதினமும் நீங்காதவர்களாய் இதுவேநமக்குறைவிடமாவதென்று இனிதாகப்பொருந்தியிருப்பார்கள்-எ-று

ஐயனுமிளவலுமணிநிலமகடன் ... ... *
செய்தவமுடைமைகடெரிதரநதியு ... ... *
மைதவழ்பொழில்களும்வாவியுமருவி .. .. *
நெய்குழலுறுமிழைபெனநிலைதிரிவார் ... ... *

(இ-பு.) ஸ்ரீராமமூர்த்தியும், பரதனும், அழகுபொருந்திய பூமிதேவியினுடைய செவ்விதான தவமுடைமைகள் யாவருக்கும் விளங்கும்படி நதியினிடத்தும் மேகங்கள் தவழும்படியான பொழில்களினிடத்தும் தடாகங்களினிடத்தும் போய்ப் பொருந்தித் திரிநெய்யுங் குழலுடன் நூலிழைபோலவும்போல ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் சஞ்சரிப்பார்கள் — எ-று.()

நிலமகடன்செய் தவமுடைமைகள்தெரிதர என்பது பூமிதேவி நல்லதவஞ்செய்தமையால் இந்தப்புத்திரர்கள் உற்பத்தியாயினர்களினியிவர்களாற் பாவமாகியபாரம்நீங்கி யிருப்பாளென்னுங்கருத்து. குழலென்பதற்கு நாடாவென்றுமொருபெயர்.

பரதனுமிளவலுமொருநொடிபகிரா ... ... *
திரதமுமிவுளியுமிவரினுமன்றநா ... ... *
லுரைதருபொழுதினுமொழிசிலரிணையாள் ... ... *
வரதனுமிளவலுமெனமருவினரே ... . *

(இ-பு.) பரதனுஞ் சத்துருக்கனும் ஒருநொடிப்பொழுதாகினும் ஒருவனைவிட்டொருவர்பிரியாமல் தேருங் குதிரையும் யானைகளும் ஏறினாலும் வேதசாஸ்திரங்களையோதும்போதும் நீங்காதவர்களாயென்னையாட்கொள்ளும் ஸ்ரீராமனும் இலக்குமணப்பெருமாளும் பிரியாமலிருப்பதுபோலிருந்தார்கள் — எ-று. (௱௩௰)

வீரருமிளைஞரும்வெயில்பொழில்களின்வா ... *
யீரமாதிரைதருமுனிவரிடைபோய்ச் ... . *
சோர்பொழுதணிநகர்துறுகுவதெதிர்வார் ....*
கார்வரவலர்பயிர்பொருவுவர்களியால் ... ... *

(இ-பு.) ஸ்ரீராமமூர்த்தியும், பரதாழ்வாரும், இளையபெருமாளும், சத்துருக்கனப்பெருமாளும், வாசனைவீசுகின்ற சோலைகளினிடத்தில குளிர்ச்சியுடன்வசிக்கும் முனிவர்களிடத்துக்குப் போய்க்கண்டு அஸ்தமிக்கும்போது அலங்கரித்திருக்கும் நகரத்துக்குத்திரும்பிவருவார்கள் அவ்வாறு வரும்போது எதிர்பார்க்கிறவர்கள களிப்பினால் மேகம்வந்தால் தழைக்கும் பயிரை யொப்பாவார்கள்—எ-று. (௱௬௧)

ஏழையராவருமிவர்கடமூலமே தாய் ... ... *
கேழிளர்மதலைகளிவைகளுமனையார் ... ... *
வாழியவிவணவர் மனனுறுகடவுட் ... ... *
டாழ்குவர்கௌசலைதயரதனெனவே .. .. *

(இ-பு.) அந்நகரத்திலிருக்கும் மாதர்கள்யாவரும் இவர்களுடையபெரிய தனங்களிற்பொலிகின்ற அழகுடன்விளங்கும் ஆடவர்களும், இவர்கள் சுற்றத்தினர்களும், கௌசலையும் தசரதமகாராசனும் கடவுளை வணங்குதல்போல ஸ்ரீராமமூர்த்திமுதலாகிய இந்தப்புத்திரர்கள்வாழக்கடவார்களென்று அவரவர்மனதிற்பொருந்திய கடவுளர்களைவணங்குவார்கள்-எ-று. (௱௬௨)

கடல்கருமுகிலொளிர்கமலமதலரா ... ... *
வடவரையுடன்வருசெயலெனமறையுந் ... ... *
தடவுதலறிவருதனிமுதலவனும் ... ...*
புடைவருமிளவலுமெனநிகர்புகல்வார் ... ...*

(இ-பு.) வேதங்களுந்தேடித்து அரிய ஒப்பற்ற ஸ்ரீராமமூர்த்தியும் அவருடன் இளையபெருமாளுமாக வருகின்றது சமுத்திரம் அல்லது கரியமேகமானது பிரகாசியாநின்ற செந்தாமரைமலர்களைமலர்ந்துகொண்டு பொன்மலையுடன் வருகின்ற தன்மைபோலாமென்று ஒப்புச்சொல்வார்கள்-எ-று

எதிர்வருமவர்களையெமையுடையிறைவன் ... *
முதிர்தருகருணையின்முகமலரொளிரா ... ... *
வெதுவினையிடரிலையினிதினுமனையு ... ...*
மதிதருகுமரருமவியர்கொலெனவே .. ... *

(இ-பு.) எதிரில்வருகின்றவர்களைநோக்கி எம்மையடிமையாகவுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் மிகுந்தகருணையுடன் முகமலர்விளங்கி யாதுகாரியம் உங்களுக்கு ஆகவேண்டியது துயரில்லை உங்களுடைய மனைவியர்களும், அறிவுள்ளபுத்திரர்களும் இனிதுடன் சுகமாயிருக்கிறார்களாவென்றுவினவ.)

அம்மொழியதனையமுதவெனவுடையே ... ...*
யிம்மைதருபொருளலமெதுவிருடனேழ் ... ...*

மகிதலமுழுதையுமுறுகவிமலரோ ... ...*
அருபகலளவெனவுரைநவிபுரிவார்... ... ... *

(இ-பு.) ஐயனே அதனைக்குறித்துக் கேட்பாயாகில் உன்னை யெங்கள்அரசனாகப்பெற்றிருக்கிறோம் (ஆதலால்) நாங்கள் குடும்பத்துடன் சுகமாயிருப்பது ஒருபெரியதல்ல நீஎங்களுயிருடன் கீழுமேலுமென்கிறபதினான்குலோகங்களையும் பிரமதேவனிறக்குங் காலவரைக்குங்கைக்கொண்டு அரசாட்சிசெய்யக்கடவையென்று மிகுந்த உபசாரவார்த்தைகள் சொல்வார்கள்.()

[வேறு.]

இப்பரிசணிநகருறையும்யாவரு ... ... *
மெய்ப்புகழ்புனைதரவிளையவீரர்க ... ... *
டப்பறவடிநிழறழுவியேத்துற... ... ... *
முப்பரம்பொருளுக்குமுதல்வன்வைகுறும்... ...*

(இ-பு.) இத்தன்மையாக அழகுள்ள நகரத்தில் வாழ்கின்றவர்களெல்லாரும் உண்மையான புகழாலலங்கரிக்கவும், இளையவீரர்கள்பழுதறத் திருவடிநிழலைத்தழுவித் துதிசெய்யவும், திரிமூர்த்திகளுக்கு முதல்வராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்-எ-று. (௱கசு)

அரசர்தம்பெருமகனகிலம்யாவையும்... ... ... *
விரசுறுதனிக்குடைவிளங்கவென்றிசேர்... ... *
முரசொலிகறங்கிடமுனிவரோத்துறக் ... ... *
கரைசெயலரியதோர்களிப்பின்வைகுநாள் ... ...*

(இ-பு) அரசர்க்கரசனாகிய தசரதமகாராசன் இவ்வுலகமெங்கும்பொருந்திய ஒற்றைக்குடையானதுவிளங்கவும், வெற்றிபொருந்தியபேரிகையின்ஒலிமுழங்கவும், முனிவர்கள்வாழ்த்தவும், அளவிடுதற்கரியதான ஒப்பற்றகளிப்புடன் அரசாட்சிசெய்துகொண்டிருக்கும்நாளில் ஒருநாள்—எ-று. (௱கஎ)

௩-வது-திருவவதாரப்படலம்-முற்றியது.

ஆ-வது திருவிருத்தம்- ௱௱௰௩.

[௪௪]

ஸ்ரீராமஜெயம்.

பாலகாண்டம்.

௭-வது கையடைப்படலம்.

நனைவருகற்பகநாட்டுநன்னக... ... ...*
ரனைவருமணைதரவயிர்க்குஞ்சிந்தையா... ... *
னினையவுமரியதுவிசும்பினீண்டதோர் ... ...*
புனைமணிமண்டபம்பொலியவெய்தினான் ... *

(இ-பு.) அரும்புகள்பொருந்திய கற்பகவிருக்ஷங்களையுடையதெய்வலோகத்திலிருக்கும் அமராவதியென்னும் நல்லநகரத்தில்வாழும் தேவர்கள் யாவரும்வரும்படி சந்தேகிக்கும் சிந்தையினால் நினையவும் அரியதாய் ஆகாயவெளியில் நீண்ட ஒப்பற்றமணிகள்பதித்த ஒருமண்டபமானது விளங்கத்தக்கதாக அதில்சென்றுசேர்ந்தான்—எ-று. சேர்ந்து. (௧)

அணைதர அயிர்த்தல்-இந்தமண்டபத்தைநோக்கினபோது தேவர்கள்- இந்திரன்சபை
யென்று இங்குவர நினைத்தஉடனே யிதுஆமோ வல்லவோவென்று சந்தேகந்தோன்றி.
அவர்கள் சிந்தையால் நிச்சயித்தற்கரிதான அலங்காரமுடைய தென்பது தாற்பரியம்

தூயமெல்லரியணைபொலிந்துதோன்றினான் ... *
சேயிருவிசும்பிடைத்திரியுஞ்சாரணர் ... ... *
நாயகனிவன்கொலென்றயிர்த்துநாட்டமோ ... *
ராயிரமில்லையென்றையநீங்கினார் ... ... *

(இ-பு.) பரிசுத்தமாகிய மென்மைத்தன்மையுள்ள சிங்காதனத்தில்விளங்கி வீற்றிருந்தான் (அவ்வாறுவீற்றிருக்கும் அரசனை மிகவுமுயர்ந்த ஆகாயவீதியில் சஞ்சரிக்கும் தேவதூதர்கள்நோக்கி இவன் நம்முடைய அரசனோவென்று சந்தேகித்து நன்றாகப்பார்த்து ஆயிரங்கண்களில்லையாதலாலிந்திரனல்லவென்று அந்தச்சந்தேகம் நீங்கினார்கள்—எ-று. (௨)

மடங்கல்போல்மொய்ம்பினான்முன்னர்மன்னுயிர் *
ரடங்கலுமுலகும்வேறமைத்துத்தேவரோ ... *
டிடங்கொளுமுதலையும்படைப்பலென்றெழுந் *
தொடங்கியதனியருமுனிவன்றோன்றினான் ... *

(இ-பு) சிங்கம்போலப் பராக்கிரமமுள்ள தசரதமகாராசன் வீற்றிருக்கும்போது அவ்வரசனெதிரில் நிலைபெற்ற உயிர்கள் முதலானவையும் உலகங்களையும் வேறேசிருஷ்டித்து நான்முகங்களுள்ள பிரமதேவனையும் இப்பொழுதே சிருஷ்டிக்கிறேனென்று தொடங்கிய பிரசித்தமுந்தவம் நிறைந்த விசுவாமித்திரமுனிவர்தோன்றினார்—எ-று. (௩)

[வேறு.]

வந்துமுனியெய்துதலுமலர்மிசையவனியார ... *
மந்தரமாதிரவிபஞ்சவொளிமிகுத்து ... *
கந்தமலர்த்தடவுடையான்வரவுகாணு ... *
மிந்திரனைக்கடிதெழுந்தடிபணிந்தான் ... *

(இ-ப.) விசுவாமித்திரமுனிவர் தன்னெதிரில்வந்து சேர்ந்தவளவில் மணிச்சிலணிந்த மகாராஜபதமான ஆகாயத்தின்கண் சஞ்சரிக்கும் சூரியனும் அஞ்சும்படி ஒளி அதிகரிக்க எழுந்து வாசனை தங்கிய தாமரைப்பூவிலிருக்கும் பிரமதேவனுடையவருகையைக்கண்ட தேவேந்திரன்போல விரைவாக எழுந்து எதிர்சென்று அம்முனிவர்பாதத்தை வணங்கினான்-எ-று.

பணித்துமணிசெறிந்துபுகுமித்தியவிர்பைம்பொ ... *
னணித்தவிசிட்டதிலிருத்தியொடிருத்தி ... *
பிணைந்தகமலச்சரணருச்சனைசெய்தின்றே ... *
துணிந்ததென்வினைத்தொடர்பெனத்தொழுதுசொன்னான் ... *

(இ-ப.) தசரதமகாராசனிவ்வாறுபணித்து மணிகளைநெருக்கிப் பதிக்கப்பட்டுப்பிரகாசியாநின்ற பைம்பொனால் அலங்கரித்த ஆசனமிட்டு அதில் அப்படியிருக்கச்செய்து அவருடைய இரண்டு திருவடித்தாமரை மலர்களையும் ஆராதித்துத்தொழுது இப்போதே யென்வினைத் தொடர்ச்சி நீங்கிற்றென்று சொன்னான்—எ-று. (௭)

நிலஞ்செய்தவமென்றனையினன்றுநெடியோயெ ... *
னலஞ்செய்வினையுண்டெனினுமன்றுநகர்நீயான் ... *
வலஞ்செய்துவணங்கவெளிவந்ததிதுமுத்தேன் ... *
குலஞ்செய்தவமென்றினிதுகூறமுனிகூறும் ... *

(இ-பு.) தவத்தாற்பெரியவரே நீர் அடியேன் வலம்வந்து வணங்கும்படி எளிதாக எழுந்தருளியதற்குக்காரணம் இந்தத் தேசத்தார்செய்த தவமென்றாலோவின் அதுவன்று - என்னுடைய நல்வினை காரணமாய் நின்றதென்று ஆலோசித்தால் அதுவுமன்று - ஆதலால் முன்னம் என்குலத்தரசர்கள்செய்த தவப்பலனென்று தசரதமகாராசனினிதாகச் சொல்ல, அதற்குமேல் விசுவாமித்திரமுனிவர் சொல்லுகின்றார்—எ-று. (௮)

[வேறு.]

என்னையருமுனிவருமிமையவருமிடையூறொன்றுடையரானால் ... *
* பன்னகமுநகுவெள்ளிப்பனிவரையும்பாற்கடலும்பதுமபீடத் ... *
தன்னகருங்கற்பகநாட்டணிநகருமணிமாடவயோத்தியென்னும் ... *
பொன்னகருமல்லாதுபுகலுண்டோவிகல்கடந்தபுலவுவேலோய் ... *

(இ-பு.) என்னையொத்தமுனிவர்களும், தேவர்களும், யாதாகிலுமொருதுன்பத்தையுடையவர்களானால் பலமங்கலங்களைப்புகழத்தக்க குளிர்ச்சிபொருந்திய வெள்ளிமலையும் திருப்பாற்கடலும் தாமரைமலராசனத்தையுடையபிர

மதேவன் உலகமும், கற்பகச்சோலைசூழ்ந்த தேவலோகத்திலிருக்கும் அழகி யநகரும், அயோத்தியென்னும் பொன்மயமான இந்தநகரமுமல்லாது வேறே அடைக்கலமான விடமுண்டோ பகைவரைக்காய்ந்த உதிரக்கறைதங்கும் வேலாயுதத்தையுடைய அரசனே சொல்லுவாயாக—எ-று. (எ)

பன்னகம்-என்பதற்குச் சுப்பிரமணியக்கடவுள் வீற்றிருக்கும் பலமலைகளைப்பெரு ரூர்கூறினும் அமையும். அக்கடவுளுக்குரிய ஆறுபடைவீட்டில் குன்றுதோறாடல் ஒன்று.

முனிவர்களுக்கும் தேவர்களுக்கு மிடையூறுநேரிட்டால் மேற்சொல்லிய இடங்களிலும் இவ்வயோத்தியிலும் குறைசொல்லவருவார்களென்பதுகருத்து.

இன்றளிர்க்கற்பகநறுந்தேனிடைதுளிக்குநிழலிருக்கையிழந்துபோந்து *
நின்றளிக்குந்தனிக்குடைக்கீழ்ஒதுங்கிக்குறையிரந்துநிற்பநோக்கிக் *
குன்றளிக்குங்குலமணித்தோட்சம்பரனைக்குலத்தோடுந்தொலைத்துநீகொண்
டன்றளித்தவரசன்றோபுரந்தரனின்றாள்கின்றதரசவெல்வாய் ... ... *

(இ-ள்) தேவேந்திரன் இனியதளிர்களையுடைய கற்பகவிருக்ஷங்கள் நல்ல தேனையிடையில் துளிக்கும்படியாகிய நிழலில் அரசுவீற்றிருப்பதை யிழந்துவந்து உன்னுடைய தனிச்சிறந்த ஒற்றைக்குடைநிழலில்சேர்ந்து தன்குறையைச்சொல்லி எனதரசினையெனக்கு வாங்கித்தரவேண்டுமென்றிரந்துநிற்கப்பார்த்து மலையினையொத்த மணிக்குலங்களாற்செய்யப்பட்டஅணியணிந்த தோளையுடைய சம்பரனைக் குலத்துடனழித்து அவன் அபகரித்துக்கொண்ட அரசினை நீபெற்றுக்கொண்டு அந்நாளில் கொடுத்த அரசல்லவா அந்தத்தேவேந்திரனாள்கின்றதென்று முனிவர்சொன்னார்—எ-று. (அ)

சம்பராசுரனென்பவன் இந்திரனுடன் போர்செய்து வெற்றிகொண்டு பொன்னுலகத்தை யபகரித்துக்கொள்ள அவ்விந்திரன் நேரில்வந்துகுறைசொல்ல, நீசென்று அவ்வசுரனைவென்று அந்தப்பொன்னுலகத்தை உன்னுடையதாக்கிக்கொண்டு பின்பு நீகொடுத்த அரசல்லவா இந்திரனிப்போது ஆள்கின்றானென்பது தாற்பரியம்.

உரைசெய்யுமளவிலவன்முகநோக்கிப்புளகத்தினொருவராலும் ... ... *
கரைசெய்யவரியதொருபெருவுவகைக்கடல்பெருகக்கரங்கள்கூப்பி... ...*
யாசெய்திருந்தபயன்பெற்றேன்மற்றினிச்செய்வதருளுகென்று ... *
முரைசெய்துகடைத்தலையான்முன்மொழியப்பின்மொழிபுகன்றனன்முனிவனங்கே...*

(இ-ள்) முனிவரிவ்வாறு சொல்லுமளவில் அவர்முகத்தைநோக்கித் தன்மனதில் ஒருவராலும் கரைபிடிக்கவரிய பெரிதானசந்தோஷமென்னும் கடலானதுபெருகக்கொண்டு தன்கைகளைக்குவித்து அடியேனிதுவரையில் அரசுபெற்றிருந்ததால் அடையவேண்டிய பிரயோசனத்தைத் தேவரீர் தரிசனத்தால் இப்போது அடைந்தேன் இனி அடியேன் செய்யவேண்டியகாரியம்யாதோ அதனை யருளிச்செய்யவேண்டுமென்று பேரிகைமுழக்கம் நீங்காத முற்றத்தையுடைய தசரதமகாராசன் முன்சொல்ல, அம்முனிவர் அப்போதே பின்சொல்லுகின்றார்—எ-று. (௯)

திருவனத்துன்பாணியற்றுந்தவவேள்விக்கிடையூறாத்தவஞ்செய்வோர்கள்..*
வெருவரச்செல்றிடைகாமவெகுளியெனநிருதரிடைவிலக்காவண்ணம் ...*

செருமுகத்துக்காத்தியெனநின்சிறுவர்நால்வரினுங்கரியசெம்மல் ... ... *
ஒருவனைத்தந்திடுதியெனவுயிரிரக்குங்கொடுங்கூற்றினுளையச்சொன்னான்.

(இ-ள்.) விருட்சங்கள் நெருங்கிய ஆரணியத்திலிடத்தில் நான் செய்கின்ற வேள்விக்கு இடையூறாகத் (தவஞ்செய்வோர்கள் அஞ்சும்படி மேன்மேலும் பொருந்துகின்ற காமவெகுளிமயக்கம்போல) நிருதர்கள் மத்தியில் விலக்காதவண்ணமாகப் போர்முகத்தில் வேள்வியைக்காத்தியென்றுசொல்லி உன் புத்திரர்கள் நால்வரிலும் நீலநிறமுள்ள ஒருவனாகிய இராமமூர்த்தியைத் தரக்கடவையென்று உயிரையிரக்கின்ற கொடிய கூற்றுவனைப்போல அம்மன்னவன் வருந்தும்படிசொன்னான்—எ-று. (௰)

இராமமூர்த்தியைத் தாவென்றது தசரதமகாராசனுக்குத் தன்னுயிரைக்கூற்றுவன் வந்து தாவென்றதுபோலிருந்ததென்பது கருத்து.-நிருதர்கள்வந்து யான்செய்யும்வேள்வியைத் தடுக்காவண்ணமெனக்கூட்டுக.

எண்ணிலாவருந்தவத்தோனியம்பியசொன்மருமத்திலெறிவேல்பாய்ந்த.. *
புண்ணிலாம்பெரும்புழையிற்கனல்நுழைந்தாலெனச்செவியிற்புகுதலோடும் *
உண்ணிலாவியதுயரம்பிடித்துந்தவாருயிர்நின்றூசலாட,... ... ...*
கண்ணிலான்பெற்றிழந்தானெனவுழந்தான்கடுந்துயரங்காலவேலான்......*

(இ-ள்.) அளவில்லாத அரிய தவத்தையுடைய விசுவாமித்திரர் சொல்லிய வார்த்தையானது எறிகின்ற வேல்பாய்ந்து மார்பிலுண்டாகிய புண்ணினிடத்துப் பொருந்திய பெரிய துவாரத்தில் நெருப்பு நுழைந்ததுபோலத் தன் செவிகளில் நுழைந்தவுடன் உள்ளத்திலுண்டாகிய துயரமானது பிடித்துத்தள்ள (அதனால்) கிடைத்தற்கரிய உயிரானது போவதும்வருவதுமாக ஊசலாடப்பிறவிக்குருடன் கண்ணில்லாதவொருவன் தவத்தினாற்பெற்று மீட்டுமக்கண்களையிழந்த அவ்வளவில் துயரப்படுவதுபோலப் பகைவருக்கு எமனையொத்த வேலாயுதத்தையுடைய தசரதமகாராசன் கொடியதுயரத்தை யநுபவிக்கின்றவனானான்—எ-று. (௰௧)

தொடையூற்றத்தேன்துளிக்குநறுந்தாராநொருவண்ணந்துயர்நீங்கிப்... *
படையூற்றமிலன்சிறியனிவன்பெரியோய்பணியிதுவேற்பணிதீர்க்கின்றேன் *
புடையூற்றுஞ்சடையானும்புரந்தரனுநான்முகனும்புகுந்துசெய்யு ... *
இடையூற்றுக்கிடையூறுயான்காப்பன்பெருவேள்விக்கெழுகவென்றான்..*

(இ-ள்.) ஒழுங்காக ஊற்றுகின்ற தேனைப்பொழியும் நல்லபூமாலையணிந்த அவ்வரசன் ஒருவாறு துயரம்நீங்கி (முனிவரைநோக்கி) இராமன் படையாற்றலில்லாதவன் அன்றியும்- சிறுவன் ஆதலால் தேவரீர்கட்டளையிடுமேவலிதுவேயானால் குளிர்ச்சிபொருந்திய கங்காநதிநீரை யொருபுறமாகப்பொழிந்த சடாமகுடமுள்ள ருத்திரமூர்த்தியும் பிரமதேவனும் தேவேந்திரனும் வந்து செய்கின்ற இடையூறுக்கு இடையூறுண்டாகத்தக்கதாக யான் காக்கின்றேன் பெரிய வேள்விக்கு எழுந்திருமென்றுசொன்னான்—எ-று. (௰௨)

என்றனனென்றலுமுனிவோனெழுந்தனன்மண்படைத்தமுனிவிறுதிக்கால.
மின்றெரிவாமெனவிமையோரயிர்த்தனர்மேல்வெயிற்காந்தத்தோன்றி..*

நின்றனவுந்திரித்தனமீநிவந்தகொழுங்கடைப்புருவநெற்றிமுற்றச், செங்க
னைவந்தனநகையுஞ்சிவந்தனகண்ணிருண்டனபோய்த்திசைகளெல்லாம்... *

(இ-பு) தசரதமகாராச னிவ்வாறுசொன்னான் அப்படி சொன்னவளவில் விசுவாமித்திர முனிவர் கோபத்துடனெழுந்தார் (அவ்வாறெழுந்திருக்கவே) உலகத்தைச் சிருஷ்டித்த முனியாகிய பிரமதேவனுடைய இறுதிக்காலமாகிய அந்நாள்போல இப்போதுநேரிடுமோவென்று தேவர்கள் சந்தேகித்தார்கள் ஆகாயத்திலிருக்கும் சூரியன் ஒளித்துவிட்டான் அவ்வுலகத்துக்கீழ் வுலகத்துநின்ற உயிர்களுஞ்சுழன்றன அம்முனிவருடைய செழுமையுள்ள புருவக்கடையானது நெற்றிமுற்றும் உயர்ந்தன,நகையும்வந்தன,கண்களுஞ் சிவந்தன,இவ்வாறாகவே திசைகளெல்லாம் இருண்டுபோயினஎ-று. (௰௩)

கோபாக்கினியிலுண்டானபுகையாலிருண்டனவெனக்கொள்க.

[வேறு.]

கறுத்தமாமுனிகருத்தையுன்னிநீ... ... ... *
பொறுத்தியென்றவற்புகன்றுநின்மகற் ... ... *
குறுத்தலாகலாவுறுதியெய்துநாள் ... ... *
மறுத்தியோவெனாவசிட்டன்கூறினான் ... ... *

(இ-பு.) இவ்வாறு கோபங்கொண்ட பெருமைபொருந்திய விசுவாமித்திரமுனிவரது கருத்தை வசிஷ்டமுனிவர் அறிந்து (விசுவாமித்திரனைநோக்கி) நீர்சற்று க்ஷமித்துக்கொள்ளுமென்று அவருக்குச்சொல்லி (அரசனைநோக்கி) யுன்புத்திரனுக்கு தடுக்கக்கூடாத வுறுதிவருகின்றநாளை நீ தடுக்கின்றனையோவென்றுசொல்லினர்-எ-று. (௰௪)

பெய்யுமாரியாற்பெருகுவெள்ளம்போய் ... ...*
மொய்கொள்வேலைவாய்முடுகுமாறுபோ ... *
லையநின்மகற்களவில்விஞ்சைவந் ... ... *
தெய்துகாலமின்றுநேர்ந்ததென்னவே ... ...*

(இ-பு) மேகம்பொழியு மழையினால் பெருகாநின்ற வெள்ளமானதுசென்று அலைகள்நெருங்கிய சமுத்திரத்தில் வேகமாகச் சேருதல்போல ஐயனே நின்புத்திரனுக்கு அளவில்லாத வித்தைகள்வந்து சேருங்காலமின்று நேரிட்டதென்று சொல்லவாயினன்-எ-று. (௰௫)

குருவின்வாசகங்கொண்டுகொற்றவன் ... ... *
திருவின்கேள்வனைக்கொணர்திரீண்டென ... *
வருகவென்றனனென்றுமேவிவந் ... ... *
தருகுசார்ந்தனனயோத்தியையன் ... ...*

(இ-பு.) குருவாகிய வசிஷ்டமுனிவருடைய வார்த்தையைப்பெற்றுக்கொண்ட தசரதமகாராசன் (அருகிலோரைநோக்கி) நீங்கள்சென்று திருமகளாகிய ஸ்ரீ [illegible] பிராட்டியின் கணவனை யிங்கு அழைத்துக்கொண்டுவாருங்களென்று கட்டளைசெய்ய அவர்கள்போய் இராமனுக்குத்தெரிவித்தார்கள் [illegible]

தீதுக்கொண்டுவரச்சொன்றுசென்று சொன்னவளவி லதிலர்முயர்ந்த ஸ்ரீராமமூர்த்தியானவர்வந்து தம்முடையபிதாவினருகில்சார்ந்தனர்.—எ-று. ()

வந்தநம்பியைத்தம்பிதன்னொடு ... ... *
முந்தைநான்மறைமுனிக்குக்காட்டிநற் ... ... *
றந்தைநீதனித்தாயுநீயிவர்க் ... ... *
கெந்தைதந்தனனியைந்தசெய்கென்றான் ... ... *

(இ-பு.) இளையபெருமாளாகிய இலக்குமணனுடன்வந்த ஸ்ரீராமமூர்த்தியைப்பழமையாகிய நான்குவேதங்களையுமுணர்ந்த விசுவாமித்திரமுனிவருக்குக்காட்டி ஐயனே யிவர்களுக்கு நல்ல பிதாவும் நீயே யொப்பற்றதாயும் நீயே யும்முடைய அடைக்கலமாகக் கொடுத்தேன் இனி யிவர்களாலுமக்கு இசைந்த காரியங்களைச் செய்துகொள்ளலாமென்றான்—எ-று. (௰௭)

கொடுத்தமைந்தரைக்கொண்டுசிந்தைமுந் ... ... *
கெடுத்தசீற்றம்விட்டினிதுவாழ்த்திமே ... ... *
லடுத்தவேள்விபோய்முடித்துநாமெனு ... ... *
நடந்தன்மேயினானவைகணீங்கினான் ... ... *

(இ-பு.) முக்குற்றங்களுநீங்கின விசுவாமித்திரமுனிவர் தசரதமகாராசன் கொடுத்த புத்திரர்களைப் பெற்றுக்கொண்டு முன்னமனத்திலுண்டாகிய கோபநீக்கி யினிதாகஆசீர்வசனஞ்சொல்லி இனிநாம்போய் அடுத்த வேள்வியை நிறைவேற்றுவோமென்றுசெல்லலுற்றனர்—எ-று. (௰௮)

வென்றிவாள்புடைவிசித்துமெய்ம்மைபோ ... *
லென்றுந்தேய்வுறாத்தூணிபார்த்திரு ... ... *
குன்றம்போன்றுயர்தோளிற்கொற்றவி ... ... *
லொன்றுந்தாங்கினானுலகந்தாங்கினான் ... ... *

(இ-பு.) உலகங்களை யெல்லாங்காக்கநின்றகடவுளாகியஸ்ரீராமமூர்த்தியானவர் வெற்றிபொருந்திய உடைவாளை யிடப்புறத்தில்கட்டிப் பெரியமலைபோலுயர்ந்த இரண்டு தோள்களுக்குள் ஒரு தோளினிடத்தில் மெய்ம்மையைப்போல் எப்போதுங் குறைவுபடாத தூணியுங்கட்டி மற்றொருதோளில்வெற்றியுள்ளவொருவில்லுந்தாங்கினான்—எ-று. (௰௯)

அன்னதம்பியுந்தானுமையனு ... ... *
மன்னனின்னுயிர்வழிக்கொண்டாலெனச் ... *
சொன்னமாதவற்றொடர்ந்தசாயைபோற் ... ... *
பொன்னின்மாநகர்ப்புரிசைநீங்கினான் ... .. *

(இ-பு) அவ்வாறுவில்முதலியவை தாங்கிக்கொண்டதம்பியுடன்தானுந்தன் பிதாவாகிய தசரதமகாராசாவின் இனிய உயிரானது வழிபற்றிச்செல்வதுபோல, இவர்பின்செல்லெனத் தந்தையாற்சொல்லப்பட்டவிசுவாமித்திரமுனிவரைத்தொடருஞ் அவர் சாயைபோல அவரைவிட்டு நீங்காமல் தொடர்ந்து பொன்னாற் சமைக்கப்பட்டதாகிய அந்தப்பெரிய அயோத்தி நகரின் மதில் வாயிலைக்கடந்தான்—எ-று. (௨௰)

வரங்கண்மாசறுத்தவஞ்செய்தோர்கள்வாழ் ... ... *
புரங்களையிலாநகரநீங்கிப்போ ... ... *
யரங்கிலாடுவார்சிலம்பினன்னதின் ... ... *
திரங்குவார்புனற்சரயுவெய்தினார் ... ... *

(இ-பு.) வரங்கள் பெற்றுக்கொள்ளுவதற்காகக் குற்றமற்ற தவஞ்செய்தவர்கள் வாழ்கின்ற பதவிகளும் ஒப்பாகாத அவ்வயோத்திநகரை நீங்கிப்போய் நாடகசாலையில் நடிக்கின்ற மாதர்களுடைய சிலம்பொலிபோல் அன்னங்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றதின் நீட்சியாகிய நீரினையுடைய சரயுவென்று சொல்லப்பட்ட நதியினிடத்துச் சேர்ந்தார்கள்—எ-று (௨௧)

கரும்புகால்பொரக்கமுகில்வார்ந்ததேன் ... *
வரம்புமீதிழிமருதவேலிவா ... ... *
யரும்புகொங்கையாரம்மேலதிபோற் ... *
சுரும்புவாழ்வதோர்சோலைநண்ணினார் ... ... *

(இ-பு.) கரும்புகள் காற்றினால் மோதுதலால் கமுகவிருக்ஷங்களினின்றும் இழிந்து பெருகாநின்ற தேனானது வரப்பின்மேல்வழிந்து பாயும்படியாகிய மருதநிலத்தினிடத்தில்வளர்கின்ற தனங்களுள்ள மாதர்களின் அழகிய மேற்றிகழ்கிற ஆரத்தைப்போல் வண்டுகள் வாழ்கின்றதாகிய சோலையைச் சேர்ந்தார்கள்—எ-று. (௨௨)

மருதத்திலிருக்குஞ் சோலையெனக்கூட்டுக.

தாழுமாமழைதழுவுநெற்றியாற் ... ... *
குழியானைபோற்றோன்றுமால்வரைப் ... ... *
பாழிமாமுகட்டுச்சிபச்சைமா ... ... *
வேழுமேறப்போயாறுமேவினார் ... ... *

(இ-பு.) பெரிய செம்மேகம்பொருந்திய நெற்றியினால் யானையைப்போலக்காணப்படுகிற அஸ்தமனகிரியின் பலம்பொருந்திய பெரியசிகரத்துச்சியில் பச்சைக்குதிரைகளேழு மேறுங்காலத்திலிவர்களுஞ்சென்று ஆற்றினக்கரையிலேறினார்கள் எ-று. ஏழென்னும்பெயருள்ளபச்சைக்குதிரையென்பது மொன்று. (௨௩)

தேவுமாதவற்றொழுதுதேவர்த ... ... *
நாவுணாகுதிநயக்கும்வேள்விவாய்த் ... ... *
தாவுமாபுகைதழுவுசோலைகண் ... ... *
டியாவதீதென்றவர்க்குமேனின்றான் ... *

(இ-பு.) அக்கரையேதினவுடன் தேவர்கள் நாவாகிய அக்கினியினிடத்தில் ஆகுதியைவிரும்பிக் கொடுக்கும்படியான வேள்விக்குண்டங்களினின்றும் மேலெழுகின்றமிகுத்தபுகையானது சூழ்ந்த ஒருசோலையைத்தேவர்களெல்லாருக்கு மேலாயிருக்கும் ஸ்ரீராமமூர்த்திகள் தெய்வத்தன்மையுள்ள பெருமைபொருந்திய விசுவாமித்திரமுனிவனை வணங்கியிந்தச்சோலையாதென்று வினவினார்—எ-று. (௨௪)

கையடைப்படலமுற்றியது.

ஆக திருவிருத்தம்-௩௱௪௰.

ஸ்ரீராமஜெயம்.

பாலகாண்டம்.

௮-வது-தாடகைப்படலம்.

திங்கண்மேவுஞ்சடைத்தேவன்மேன்மாரவேள் ... ... ❋
இங்குநின்றெய்யவும்பெரிதரும்நுதல்விழிப் .. ... ❋
பொங்குகோபஞ்சுடப்பூளைவீயன்னதன் ... ... ❋
அங்கம்வெந்தன்றுதொட்டனங்கனேயாகினான் .... ❋

(இ-பு) (முனிவர்சொல்லுகின்றார்) இளம்பிறைதங்கிய சடையினையுடைய பரமசிவன்மேல் மன்மதனானவனிங்கிருந்துமலர்க்கணைகளையேவியவளவில் அக்கடவுளது எரிகின்ற நெற்றிக்கண்ணினின்று மூண்டாகிய கோபாக்கினியெ ரித்ததினா லம்மன்மதன் பூளைப்பூவைப்போலத் தன்னுடல்வெந்து அன்று முதல் அனங்கனாயினன்—எ-று. (௧)

வாரணத்துரிவையான்மதனனைச்சினவுநாள் ... ... ❋
ஈரமற்றங்கமிங்குகுதலாலிவணெலாம் ... ... ❋
ஆரணத்துறையுளாயங்கநாடிதுவுமக் ... ... ❋
காரணக்குறியுடைக்காமனாச்சிரமமே ... ... ❋

(இ-பு.) வேதத்துறையி லிருப்பவனே யானைத்தோற் போர்வையினையுடைய பரமசிவன் மன்மதனைக் கோபித்தநாளில் அவனங்கமானது பசையற்று இங்குச்சிந்தின காரணத்தினு லிவ்விடமெல்லாம் அங்கநாடென்னும் பெயராயுடையது - அதுவுமன்றி இவ்விடமானது அந்தக்காரணக்குறிப்பினால் காமனாச்சிரமம் என்னும்பெயரையுமுடையது—எ-று. (௨)

பற்றவாவேரொடும்பசையறப்பிறவிபோய் ... ... ❋
முற்றவாலுணர்வுமேன்முடுகினாரறிவுசென் ... ... ❋
றுற்றவானவனிருந்தியோகுசெய்தனனெனிற் ... ... ❋
சொற்றவாமளவதோமற்றிதன்றூய்மையே ... ... ❋

(இ-பு.) இருவகைப்பற்று மாசையு மிவைகட்குக் காரணமாகிய அஞ்ஞானத்துடன் பசையறவும் பிறவிநீங்கவும் மெய்ஞ்ஞானநிலை மேலிட்டிருப்பவர்கள் அறிவுதோறுஞ் சென்றிருக்கும் அப்பரமசிவன் வீற்றிருந்து யோகஞ்செய்தனனென்றால் இந்தஆசிரமத்தின்பரிசுத்தம் ஒருவரால்சொல்லலாகும் அளவுள்ளதோ அல்ல—எ-று. (௩)

என்றவந்தணனியம்பலும்வியந்தவ்வயிற் ... ... ❋
சென்றுவந்தெதிரொழுஞ்செந்நெறிச்செல்வரோ ... ❋
டன்றுறைந்தலர்கதிர்ப்பரிதிமண்டிலமகன் ... ... ❋
குன்றினின்றிவரவோர்சுரங்குறுகினார் ... ... ❋

(இ-பு.) இவ்வாறு அம்முனிவர் சொல்லியவளவில் சந்தோஷித்து அவ்விடத்திற்சென்று அந்த ஆசிரமத்தினின்றும் எதிர்வந்த நல்லொழுக்கமாகிய செல்வமுள்ள முனிவர்களுடனன்று அவ்விடத்திலிருந்து பரந்த கதிர்களையுடைய சூரியமண்டலமானது விசாலமுள்ள உதயகிரியினின்றும் எழும்போது அவ்விடம் நீங்கிச்சென்று வெதும்புகின்றதாகிய ஒரு பாலைநிலத்தினையடுத்தார்கள்—எ-று. (௪)

பரிதிவானவனிலம்பசையறப்பருகுவான் ... ... *
விருதுமேற்கொண்டுலாம்வெளியேயல்லதோர் ... ...*
இருதுவேறின்மையாலெரிசுடர்க்கடவுளுங் ... ... *
கருதின்வேமுள்ளமுங்காணில்வேநயனமும் ... ... *

(இ-பு.) சூரியதேவன் அப்பூமியினீரமும் ஒழியும்படி யுண்ணுமாறு விருதினைமேற்கொண்டுலாவும்படியான கோடைகாலமாகிய பருவமேயன்றி வேறொருபருவமும் அவ்விடத்திலில்லாமையால் அந்நிலத்தினை யெரிகின்ற அக்கினிதேவனும் நினைப்பானாயின் அவனுள்ளமும் வெந்துபோம் - கண்களாற் பார்த்தாலோ அக்கண்களும் வெந்துபோம்—எ-று. (௫)

படியின்மேல்வெம்மையைப்பகரினுப்பகருநா ... ...*
முடியவேமுடியமூடிருளும்வான்முகடும்வேம் ... ... *
விடியுமேல்வெயிலும்வேமழையும்வேமின்னுமே . ...*
கடியும்வேமென்னில்வேறியாவைவேவாதவே ... ... *

(இ-பு.) அப்பாலைநிலத்திருக்கும் வெப்பத்தைக்குறித்துச்சொன்னாலும் அவ்வாறுசொல்லும் நாவானது முழுவதும்வேகும்-உலகத்தை மூடுகின்றவிருளும்வேகும்-அண்டமுகடும்வேகும்- விடியற்காலமானாற்சூரியனும் வேகும்- மின்னலிடியென்னு மிவைகளுடன் மேகங்களும்வேகும் என்றால்மற்றனவைவேகாமலிருப்பனவை—எ-று. (௬)

விஞ்சுவான்மழையின்மேலம்பும்வேலும்படச் ... ...*
செஞ்செவேசெருமுகத்தன்றியேதிறனிலா ... ... *
வஞ்சர்தீவினைகளான்மானமாமணியிழந் ... ... *
தஞ்சினார்நெஞ்சுபோலென்றுமாறுதரோ ... ...*

(இ-பு.) மேகம் பெய்கின்ற மிகுந்த மழையினு மதிகமாக அம்புகளும் வேல்முதலியமற்றப்படைகளும்படும்படி வெல்லுவதும் இறத்தலுமாகிய செய்கைகளிரண்டில் ஒருசெய்கையுமில்லாமல் பலனில்லாதவஞ்சகத்தையுடையமன்னரது கொடியசெய்கையால் அவர்களிடத்தி லகப்பட்டுக்கொண்டு அபிமானமாகிய ஒருமணியையிழந்து அச்சமுற்றிருப்பவர்கள் மனமாறாமல் எவ்வாறு கொதித்துக்கொண்டிருக்குமோ அவ்வாறு அந்நிலமானது எந்நாளும் ஆறாமலிருக்கின்றது—எ-று. (௭)

பெரும்போர்செய்யத்தக்க சுத்தவீரர்கள் யுத்தஞ்செய்துவெல்லுதல் அல்லது எதிரியினிடத்திலகப்பட்டுக்கொள்ளுத லிவ்விரண்டுமின்றி வஞ்சகருடையமோசத்தினால்மானமிழக்கும்படி நேரிடுமாகில் அந்தச்சுத்தவீரர்கள்மனம்வெதும்புவதுபோலவெதும்புகின்றதென்பது தாற்பரியம்.

பேய்பிளந்தொக்கநின்றுலர்பெருங்கள்ளியின் ... ...*
தாய்பிளந்துக்ககாரகில்களுந்தலைபூயிலா... ... ... *
வேய்பிளந்துக்கவெண்டரளமும்விடவரா... ... ...*
வாய்பிளந்துக்கசெம்மணியுமேவனமெலாம்... ... *

(இ-பு.) பேய்கள் பிளந்ததை ஒப்பாகநின்று உலர்ந்த சதுரக்கள்ளிகளின் வேர்பிளந்துசிந்தியிருக்கிற கரிய அகிற்கட்டைகளும் தலைபூயில்றியுலர்ந்த மூங்கில்வெடித்துச்சிந்திய வெண்முத்துகளும் விஷமுள்ள பாம்புகளின்வாய்கள்வெடித்துச்சிந்தியமாணிக்கங்களும் அந்நிலமெங்கும் நிறைந்திருக்கும்.

பாருமோடாதுநீடாதெனும்பாலதே ... ... *
சூருமோடாதுகூடாதமேரோசூரியன் ... ...*
தேருமோடாதுமாமாகஙீதேரினேர்... ... ...*
காருமோடாதுநீர்காலுமோடாதரோ... ... ... *

(இ-பு.) நிலத்தினுக்குக்கடினத்தன்மையேயன்றி நிகழுந்தன்மை யில்லாமையால் அந்நிலமுமிருந்தவண்ணமாகவேயிருந்து வெதும்புகின்றதேயன்றி அப்புறப் ஓடாது. அந்நிலத்துக் கதிதேவதையாகிய காளியும் ஓடிக்கொண்டேயிருக்கவேண்டுமல்லாமல் நின்றநிலையில்நிற்கக்கூடாது ஆகாயத்தின்மேல் அந்நிலத்துக்குநேராகச்சூரியன்தேருஞ்செல்லாது யோசிச்சுமிடத்தி லந்நிலத்துக்குநேராகமேகமுஞ்செல்லாது- நீருகின்றகாற்றுஞ்செல்லாது ()

நீடாதெனும்பாலது பூமி சரிக்காதென்னும்பகுதியினையுடையதாதலால்பாருமோடாது அந்நிலமும் அவ்விடம்விட்டு நீங்காமலிருக்கின்றதென்று பதம்பிரித்துரைத்துக்கொள்க...சூருமு-மற்றநான்குநிலத்துப்பொருள்களும் ஓடாது அந்நிலத்திற்சேரா்வாம் ஏனெனில்-நீடாதெனும்பாலது அந்நிலத்திற்சென்றால் விர்த்தியாகும் நன்மையில்லையேல் னுட்டகுதியாலெனப்பொருள்கூறுவதுமொன்று. இவ்வாறுகூறுங்கால் பார் ஆகுபெயர்.

கண்கிழித்துமிழ்விடக்கனலராவரசுகார் ... ... *
விண்கிழித்தொளிருமின்னனையபன்மணிவெயின் ... *
மண்கிழித்திடவெழுஞ்சுடர்கண்மண்மகளுடற் ... ...*
புண்கிழித்திடவெழுங்குருதியேபோலுமே... ... ...*

(இ-ள்.) கண்-கண்களை—கிழித்து திறந்துகொண்டு—உமிழ்-கக்குகின்ற—விடம்-விஷமாகிய—கனல்- தீயினையுடைய—அராவரசு-நாகராசனுடைய—கார்-கருமைநிறமுள்ள—விண்-மேகத்தை—கிழித்து-கிழித்துக்கொண்டு—ஒளிரும்-பிரகாசியாநின்ற—மின் அனைய- மின்னலையொத்த—மண்கிழித்திட-அந்நிலம்வெடிக்க—(அவ்வெடிப்பினின்று) எழும்-எழுகின்ற—மணிவெயில்-மாணிக்கங்களின்செஞ்சுடர்கள்—(எவ்வாறிருக்குமெனில்)மண்மகள் பூமிதேவியினுடைய—உடற்புண்-உடலிலிருக்கும்புண்ணைத—கிழித்திட-வெடிக்க-எழும்—அதினின்றும் எழுகின்ற- குருதிபோலும்- உதிரம்போலவேயிருக்கின்றதென்க எ-று. கண்கிழித்துகண்பிதுங்கியெனினும்அமையும்.

மாணிக்கங்களின் செஞ்சுடர் நிலப்பிளப்பின்வழியாக மேலெழுவதுபூமிதேவியினுடற்புண்ணிலிருந்தெழுகின்ற உதிரம்போ லிருக்கின்றதென்பதுகருத்து. நிலவெடிப்பின்வழியாக எழும் நாகராசன் சூடாமணிவெயிலென்றும், அதுமின்னலையொத்த மணிவெயிலெனுன்றும் கூறிக்கொள்க.

[வேறு.]

புழுங்குவெம்பசியொடுபுரளும்போரரா... ... *
விழுங்கவந்தெதிரெதிர்விரித்தவாயின்வாய் ... ...*
முழுங்குறின்கரிபுகுமுடுகிமீமிசை ... ... *
வழங்குவெங்கதிர்சுடமறைவுதேடியே... ... *

(இ-ள்) வழங்கு-வழங்குகின்ற—வெங்கதிர்-வெவ்வியசூரியகிரணங்கள்—சுட-சுடுவதினாலே அந்தவெப்பத்துக் காற்றாமல் மறைவுதேடி—முழங்கு-இளைத்துக்கொண்டிருக்கிற—வெங்கரி-கொடியயானைகள்—புழுங்கு-வெம்புகின்ற—வெம்பசியொடு-மிகுந்தபசியுடன்—புரளும்-புரண்டுகொண்டிருக்கிற—போரரா-பெரும்பாம்புகள்—விழுங்கவந்து-அவ்விடத்துயிர்களை விழுங்கக்கருதிவந்து—எதிரெதிர்-எதிரெதிராக—விரித்த-விரித்துக்கொண்டிருக்கும்—வாயின்வாய்-வாயினிடத்தில்—முடுகிப்புகும்-விரைந்துசெல்லும்—எ-று. (௰௧)

அந்நிலவெப்பத்துக்காற்றாமல் யானைகள் பாம்புகளின்வாயில்புகுமென்பதுகருத்து.

ஏகவெங்கனலரசிருந்தகாட்டினிற்... ... ன் *
காகமுங்கரிகளுங்கரிந்துசாம்பின ... ...*
மாகவெங்கனலெனும்வடவைத்தீச்சுட... ... *
மேகமுங்கரிந்திடைவீழ்ந்தபோலுமே... ..... *

(இ-ள் ஏகம்-ஒப்புவேறில்லாத—வெங்கனல்-வெம்மையுள்ள அக்கினிதேவன்—அரசிருந்த-அரசுவீற்றிருக்கும்—காட்டினுள்-அக்காட்டினுள்ளே—எரிகிற்ற-வெப்பத்தினால்—காகமும்-காக்கைகளும்—கரிகளும்-யானைகளும்—கரிந்து-வெந்துகரிந்து—சாம்பின-ஒடுங்கிக்கிடக்கின்றனவை—மாகம்-மேன்மையுள்ள—வெங்கனலெனும்-வெவ்விதானஅக்கினியென்றுசொல்லப்பட்ட—வடவைத்தீ-வடவாமுகாக்கினியானது—சுட-தகிப்பதினால்—மேகமும்-மேகங்களும்—கரிந்து-கருகி—இடை-அந்நிலத்தினிடத்தில்—வீழ்ந்தபோலும்-வீழ்ந்ததுபோலாகும்—எ-று. (௰௨)

கானகத்தியங்கியகழுதின்றேர்க்குலந் ... ... *
தானகத்தெழுதலாற்றலைக்கொண்டோடிப்போய்..*
மேனிமிர்ந்தெழுந்திடில்விசும்பும்வேமென ... *
வானவர்க்கிரங்கிநீர்வளைந்ததொத்ததே ... ... *

(இ-ள்.) கானகத்து-அவ்வனத்தினிடத்தில்—இயங்கிய-விளங்குகின்ற—கழுதின்தேர்க்குலம்-பேய்த்தேர்க்கூட்டமானது—அகத்து-அந்நிலத்து—எழுதலால்-தீயுண்டாவதினால்—தலைக்கொண்டு-அதுஅவ்விடமெங்கும்பரந்து—ஓடிப்போய்-ஓடிச்சென்று—மெல்நிமிர்ந்தெழுந்திடின்-மேலேயோங்கியெழுமானால்—விசும்பும்-தேவலோகமும்—வேமென-வெந்துபோமென்றுகருதி—வானவர்க்கு-தேவர்களுக்காக—இரங்கி-இரக்கமுற்று—நீர்-நீரானது—வளைந்தது-சூழ்ந்திருப்பதை—ஒத்தது-ஒத்திருக்கின்றது—எ-று-தீ-வருவித்துரைக்கப்பட்டது. (௰௩)

எய்ந்தவக்கனலிடையெழுந்தகானத்தேர் ... ...*
காய்ந்தவக்கடுவனங்காக்கும்வேலியின் ... ... *
வேந்தனுக்கரசுவீற்றிருக்கச்செய்ததோர் ... ...*
பாய்ந்தபொற்காலுடைப்பளிக்குப்பீடமே ... *

(இ-ள்) எய்ந்த-பொருந்திய—அக்கனலிடை-அந்தத்தீயினிடத்து—எழுந்த-உண்டாகிய—கானல்தேர்-கானலாகியபேய்த்தேரானது—காய்ந்த-வெந்த—அக்கடுவனம்-அந்தக்கொடியவனத்தை—காக்கும்-காக்கா நின்ற—வேலியின்-கோட்டையாகிய—வேந்தனுக்கு-மன்னவனுக்கு—அரசு வீற்றிருக்க-அரசுவீற்றிருப்பதற்காக—செய்தது ஓர்-செய்ததாகியஒரு—பாய்ந்தபொற்கால்உடை-பொருந்திய பொற்காலினையுடைய—பளிக்குப்பீடம்-பளிங்காசனம்போலிருக்கின்றதென்க—எ-று. (௰௫)

அக்கினிக்கொழுந்தின்மேலெழுகின்ற கானத்தேரானது பொற்காலுள்ளபளிங்குப்பீடம்போலிருக்கின்றதென்பதுகருத்து.

தாவருமிருவினைசெற்றுத்தள்ளரு ... ... *
மூவகைப்பகையரண்கடந்துமுத்தியிற் ... ... *
போவதுபுரிபவர்மனமும்பொன்வில்லைப் ... ... *
பாவையர்மனமும்போற்பசையுமற்றதே ... ... *

(இ-ள்.) (அந்நில) தாவரும்-கெடுதற்கரிய—இருவினை-நல்வினை தீவினையென்னுமிருவினைகளையும்—செற்று-கெடுத்து—தள்ளரும்-நீக்குதற்கரிய—மூவகை-மூன்றுவகையாகிய—பகையரண்-பகையரணை—கடந்து-தொலைத்து—முத்தியில்-மோக்ஷவீட்டில்—போவது-செல்வதற்கு—புரிபவர்-விரும்புகின்றவர்களுடைய—மனமும்-மனம்போலவும்—பொன்வில்லைப்பாவையர்மனமும்போல்-வேசையர்மனம்போலவும்—பசையும்அற்றது-ஈரமுமற்றது—எ-று. (௰௬)

மூவகைப்பகையாவது-காமம்-வெகுளி-மயக்கம்.

பொரிபரற்படர்நிலம்பொடிந்துகீழுற ... ... *
விரிதலிற்பெருவழிவிளங்கித்தோன்றலால் ... ... *
அரிமணிப்பணத்தராவரசர்நாட்டினும் ... ...*
எரிகதிர்க்கினிதுபுக்கியங்கலாயதே ... ... *

(இ-ள்.) பொரி-பொரிகின்ற—பரல்-பருக்கைக்கற்கள்—படர்-பரந்த—நிலம்-அப்பூமியானது—பொடிந்து-வெடித்து—கீழுறவிரிதலில்-கீழுலகவரைக்கும்விரித்து—(வழியாதலினால்) அரிமணி-செம்மைநிறமுள்ள மாணிக்கங்கள்பொருந்திய—பணத்து-படத்தையுடைய—அராவரசர்நாட்டினும்-நாகராசாக்களுடைய பாதாளலோகத்திலும்—எரிகதிர்க்கு-விளங்குஞ்சூரியகிரணங்களுக்கு—இனிது-இனிதாக—புக்கு-சென்று—இயங்கலானது-பிரகாசிக்கும்படியாயிற்று. (௰௭)

எரிந்தெழுகொடுஞ்சுரமினையதெய்தலும் ... ...*
அருந்தவனிவர்பெரிதளவிலாற்றலைப் ... ... *

பொருந்தினராயினும்பூவின்மெல்லியர்... ... *
வருந்துவர்சிறிதெனமனத்தினோக்கினன் .. ... *

(இ-பு.) வெந்துபொறியெழுகின்ற இத்தன்மையுள்ளதான கொடியபாலைநிலம்நேரிட்டவளவி லிவர்கள் அளவில்லாதபலத்தைப்பொருந்தினவர்களேயானாலும் மலரினுமெல்லியர் ஆதலால் சற்றுவருந்துவார்கள்என்று விசுவாமித்திரமுனிவர் தம்முடையமனதிற் கருதினார்—எ-று. (௰௭)

நோக்கினனவர்முகநோக்கநோக்குடைக் ... *
கோக்குமாருமடிகுறுகநான்முகன்... ... ... *
ஆக்கிய * விஞ்சைகளிரண்டுமவ்வழி ... ... *
ஊக்கினனவையவருள்ளத்துள்ளினார் ... ... *

(இ-பு.) அவ்வாறு கருதியமுனிவர் அவர்கள் முகத்தைப் பார்த்தவளவில் அழகுள்ள அவ்விரண்டு ராசகுமாரர்களும் சமீபத்தில்வர,பிரமதேவன் தனக்குபதேசித்த இரண்டுமந்திரங்களையும் அவர்செவிகளி லுபதேசித்தவுடன் அவைகளை அவர்கள் தங்கள் மனதில் சிந்தித்துக்கொண்டார்கள்—எ-று. ( )

உள்ளியகாலையினூழித்தீயினை... ... ...*
எள்ளுறுகொழுங்கனலெஞ்சும்வெஞ்சுரந் ... *
தெள்ளுதண்புனலிடைச்சேறலொத்தது ... .. *
வள்ளலுமுனிவனைவணங்கிக்கூறுவான்... ... *

(இ-பு) அம்மந்திரங்களை யவர்கள்சிந்தித்தபோது வடவாமுகாக்கினியையிகழ்ச்சிசெய்யத்தக்க செழுமையுள்ள தீயானது குறைந்த வெவ்விய பாலைநிலத்தில் செல்லும்போது அவர்களுக்குத் தெளிந்தகுளிர்ச்சியுள்ள நீரினிடத்தில் செல்வதையொத்திருந்தது (அவ்வாறிருக்க) ஸ்ரீராமமூர்த்தியானவர் விசுவாமித்திரமுனிவரைவணங்கிச் சொல்லுகின்றார்—எ-று (௰௯)

சுழிபடுகங்கையந்தொங்கன்மௌலியான் ... .. *
விழிபடவெந்ததோவேறுதானுண்டோ... ... *
பழிபடர்மன்னவன்படைத்தநாட்டினூஉங்... ...*
கழிவதென்காரணமறிஞகூறென்றான்... ... .*

(இ-பு.) சுழிகள்பொருந்திய கங்கைநீராகிய மாலையணிந்த சடாமகுடமுள்ள பரமசிவனது நெற்றிக்கண் பார்வைபட்டு அதினாலிவ்வாறு வெந்ததோ அல்லது வேறுகாரணமுண்டோ பழிப்படைந்த ஒருராசன்படைத்த நாடு அழிவதிலும் அதிகமாக இந்நாட்டிலிவ்வாறு பூமியழிவதற் கென்னகாரணம் சுவாமிகளே சொல்லவேண்டுமென்றார்-எ-று-அம்சாரியை. (௨௰)

என்றலுமிராமனைநோக்கியின்னுயிர்... ... ...*
கொன்றுழல்வாழ்க்கையள்கூற்றின்றேற்றத்தள்... *

---

* விஞ்சைகளிரண்டாவன பலம் அதிபலம் என்று சமஸ்கிருதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

அன்றியுமையிருநூறுமையன்மார்... ... . *
ஒன்றியவலியினளுறுதிகேளெனு... ... ... *

(இ-பு.) இவ்வாறு வினவினவளவில் ஸ்ரீராமமூர்த்தியை நோக்கி இனியவுயிர்களைக்கொன்று திரிகின்ற வாழ்க்கையினையுடையவளும் கூற்றுவனையொத்த தோற்றத்தையுடையவளும் இதுவுமல்லாமல்மயக்கமுள்ள ஆயிரம்யானைகளுக்கு அமைந்த பலமுடையவளுமாகிய ஒருஅரக்கியிருக்கிறாளவளுடைய பராக்கிரமத்தைக்கேளென்று மேலேசொல்லுகின்றார்—எ-று. (உக)

மண்ணுருத்தெடுப்பினுங்கடலைவாரினும் ... ... *
விண்ணுருத்திடிப்பினும்வேண்டிற்செய்கிற்பாள்.. *
எண்ணுருத்தெரிவருும்பாவமீண்டியோர் .. .. *
பெண்ணுருக்கொண்டெனத்திரியும்பெற்றியாள்.. *

(இ-பு) பூமியைக்கோபித்துஎடுக்கவேண்டுமானாலும், கடல்நீரையெல்லாம்வாரியுண்ணவேண்டுமானாலும், ஆகாயத்தைக்கோபித்திடிக்கவேண்டுமானாலும், செய்வாள்-எண்ணுமிடத்துஉருவங்காணுதற்கரியபாவமெல்லாந்திரண்டு ஒருபெண்ணுருவங்கொண்டதுபோலத் திரியுந்தன்மையினையுடையவள்—எ-று. (உஉ)

எடுப்பவேண்டினும் வாரவேண்டினும் இடிப்பவேண்டினும் செய்கிற்பாளெனப் பதங்கூட்டிக்கூறுக.

பெருவரையிரண்டொடும்பிறந்தநஞ்சொடும் ... *
உருமுறழ்முழக்கொடுமூழித்தீயொடும் ... ...*
இருபிறைசெறிந்தெழுகடலுண்டாமெனின் ... *
வெருவருதோற்றத்தண்மேனிமாறுமே ... ...*

(இ-பு.) பெரியவிரண்டு மலைகளுடனும் தன்னிடத்திலுண்டான விஷத்தோடும் இடியினையொத்த ஆரவாரத்தோடும் ஊழித்தீயோடு மிரண்டு பிறைகளையும் பொருந்தியெழுகின்ற ஒருகடலுண்டாயிருக்குமானால் யாவரும்பயப்படும்படியான தோற்றத்தையுடைய அவ்வரக்கியையொப்பாகும்.()

வரை-தனங்கள்-விஷம்-கொடுமை-ஊழித்தீ-கண்ணிடத்துண்டாகுந்தீ-பிறை-கோரதந்தங்கள்.

சூடகவரவுறழ்சூலக்கையினள்... ... ... *
காடுறைவாழ்க்கையள்கண்ணிற்காண்பரேல் ... *
ஆடவர்பெண்மையையவாவுந்தோளினாய்... ...*
தாடகையென்பதச்சழக்கிநாமமே ... ... *

(இ-பு) சங்கணமணிந்தபெரும்பாம்பினையொத்ததாய்ச்சூலமேந்தியகையினையுடையவள்-காட்டில்வாழ்கின்ற வாழ்க்கையையுடையவள்- ஆடவர்கள் தங்கள் கண்களாற்காண்பார்களானால் தங்களுக்குப் பெண்பிறவியை விரும்பத்தக்க அழகுள்ள புசங்களையுடைய ராமனே இப்படிக்கொத்த அந்தத்தீயவளுடையபெயரென்னவெனில் தாடகையென்று சொல்லப்படுவது-எ-று

பெரும்பாம்புகள் கங்கணமாகப்பொருந்திய கையினள் எனக்கூறுவாருமுளர்.

கன்னவிறோளினாய்கடலைத்தோளருஞ் ... ... *
மன்னுயிரனைத்தையும்வாரிவாய்ப்படுத் ... ... *
இன்னுயிர்வளர்க்குமோரெரிகொள்கூற்றமே ... *
அன்னவள்யாவளென்றறையக்கேட்டியால் ... *

(இ-பு.) மலையினையொப்பாகச்சொல்லத்தக்க புசங்களையுடையராமனே- இன்னுமவளத்தன்மை யுடையவளெனில், பிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நிலையாகிய உயிருள்ள பொருள்களையெல்லாம்வாரித் தன்வாயிற்போட்டுக்கொண்டு இனியவுயிரைவளர்க்காநின்ற கோபாக்கினியைக்கொண்ட யமனையொத்தவள் அந்தத்தாடகையாவளென்றால் சொல்லக்கேட்பாயாக-எ-று

இயக்கர்தங்குலத்துள்ளானுலகமெங்கணும் ... ...*
வியக்குறுமொய்ம்பினனெரியின்வெம்மையான். *
மயக்கில்சற்சரனெனும்வலத்திறனரு ... ... *
துயக்கிலன்சுகேதுவென்றுளனோர்தூய்மையான்... *

(இ-பு.) இயக்கர்குலத்திலுள்ளவனும் உலகங்களெங்கும் அதிசயிக்கத்தக்கதாகப் பலமுள்ளவனும் அக்கினிபோல வெப்பமுண்டாயவனுமாகிய மயக்கமில்லாத சற்சரனென்கிற வல்லமையுள்ளவன் பெற்ற தளர்ச்சியில்லாதவனாகிய சுகேது என்றுசொல்லப்பட்டபரிசுத்தன் ஒருவன் இருந்தான்-எ-று.

அன்னவன்மகவிலாதயருஞ்சிந்தையான்,... ... ...*
மன்னெடுந்தாமரைமலரின்வைகிய ... ...*
நன்னெடுமுதல்வனைவழுத்திநற்றவம் ... ... *
பன்னெடும்பகலெலாம்பயின்றபான்மையான் ... *

(இ-பு.) அந்தச் சுகேதுவென்பவன் புத்திரர்களில்லாமல் அயர்ச்சிகொண்டசிந்தையுள்ளவனாகி நிலையாகிய பெரியதாமரைமலரில் வீற்றிருக்கும் நல்லபெரியமுதல்வனாகிய பிரமதேவனைத்துதிசெய்து பலகாலம் நல்லதவஞ்செய்தமுறைமையினையுடையவன்—எ-று. (உஎ)

முந்தினனருமறைக்கிழவன்முந்துறுநின்... ... *
சிந்தனையென்னெனச்சிறுவரின்மையா... ... *
ஞெந்தனனருளெனநுணங்குகேள்வியாய்... ... *
மைந்தர்களிலையொருமகளுண்டாமென்றான்......*

(இ-பு.) இவ்வாறு இவன் தவஞ்செய்கையில் திருவுளமிரங்கிப் பிரமதேவன் பிரத்திபக்ஷமாகி (அவனைநோக்கி) உன்சிந்தனை நிறைவேறும் ஆயினும் அந்தச்சிந்தனையாது கருதியென வினவினவளவில் சுவாமீ புத்திரர்களில்லாமையினால்வருந்தினேன் அடியேனுக்குக்கிருபைசெய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தவளவில் நுண்ணியகேள்வியையுடையவனே உனக்குப்புத்திரர்களுற்பத்தியாவதில்லை ஆயினும் ஒருபுத்திரியுற்பத்தியாவளென்று அருளிச்செய்தார்—எ-று. (உஅ)

பூடமயிலினைப்பொருவும்பொற்பொடும் ... ... *
ஏழுறுமதமலையீராஞ்ஞூறுடைத் ... ... *
தாமிகுவலியொடுந்தநயடோன்றுதீ ... ... *
போவெனமலரயன்புகன்றுபோயினன் ... *

(இ-பு.) அந்தப்புத்திரி யெவ்வாறுதோன்றுவ ளென்னில் - இலக்குமியை யொத்த சௌந்தரியத்துடனும், களிப்புள்ள ஆயிரம்யானைகளுக் குடைய தான மிகுந்தபலத்துடனும், தோன்றுவாள் நீ போவென்று பிரமதேவன் சொல்லிப்போயினன்—எ-று. (௨௯)

ஆயவனருள்வழியலர்ந்ததாமரைச் ... ... *
சேயவளெனவளர்செவ்விகண்டிவட் ... ... *
காயவரியாவனென்றாய்ந்துதன்கிளை ... ... *
நாயகன்சுந்தனென்பவற்குநல்கினன் ... ...*

(இ-பு.) பிரமதேவன் அருளிச்செய்தபடியே மலர்ந்ததாமரைப்பூவில்வீற்றிருக்கும் திருமகள்போலப் பெண்பிறந்து வளருகின்றபருவம் அறிந்து இவளுக்குத் தகுதியான கணவன் யாவனென்று யோசித்துத்தங்கள்சுற்றத்தவர்தலைவனாகியசுந்தனென்பவனுக்குமணஞ்செய்வித்துக்கொடுத்தான்-எ-று

காமனுமிரதியுங்கலந்தகாட்சியி ... ... *
தாமெனவியக்கனுமணங்களுமவே ... ... *
றியாமமும்பகலுமோரிற்றென்னலாய்த் ...... *
தாமுறுபெருங்களிச்சலதிமூழ்கினர் ... ...*

(இ-பு.) இவ்வாறு மணஞ்செய்வித்துக் கொடுத்தபின் மன்மதனும் ரதியும்கலந்த காட்சியிதுவாமென்னும்படி அவ்விருவர்களும் வேறே யிரவுக்கும்பகலுக்கும் ஓர்முடிவில்லை யென்னத்தக்கதாகத்தாங்கள்பொருந்தியவின்பமாகிய பெரியசமுத்திரத்தில் மூழ்கினார்கள்—எ-று. (௩௧)

பற்பலநாட்செலீஇப்பதுமைபோலியா ... ... *
பொற்பினள்வயிற்றிடைப்புவனமேங்கிட ... ... *
வெற்பணிபுயத்துமாரீசனும்விறன் ... ...*
மற்பொருசுவாகுவும்வந்துதோன்றினர் ... ... *

(இ-பு.) இவ்வாறு இவர்களின்பம் அனுபவித்துக்கொண்டிருக்கையில் பலநாள்சென்று திருமகளையொத்த அழகுள்ளவள்வயிற்றினிடமாகப்புவனங்களெல்லாம் ஏங்கும்படி மலையொத்த புசங்களுள்ள மாரீசனும் மிகுந்தவெற்றியும்பலமுமுள்ளசுவாகுவும்வந்து பிறந்தார்கள்—எ-று. (௩௨)

மாயமும்வஞ்சமும்வரம்பிலாற்றலுந் ... ...*
தாயினும்பழகினர்தமக்குத்தேர்வொரு ... ... *
தாயவர்வளர்வுழியவராயீன்றவக் .. .. *
காய்சினத்தியக்கனுங்களிப்பின்மேன்மையால் ...*

(இ-பு.) மாயமும், வஞ்சமும், அளவில்லாதபலமும், தங்களுக்குந் தெரியவொண்ணாததாயிந்தாணைப்பார்க்கிலும் அதிகமாகப்பயின்று அவர்கள் வளரும்போது அவர்களைப்பெற்ற வெப்புகின்ற கோபமுள்ள இயக்கனானவன் களிப்பின் மிகுதியால்—எ-று. (௫௫)

தீதுறுமவுணர்கடூமைதீர்தர... ... ...*
மோதுறுகடலெலாமொருகைமொண்டுண்... ...*
மாதவனுறைவிடமதனின்வந்துநீள் ... ...*
பாதவமனைத்தையும்பறித்துவீசினான் .. ... *

(இ-பு.) தீமைபொருந்திய அவுணர்கள்செய்யுங் கொடுமை யொழியும்படி அலைகள்மோதுகின்ற கடலையெல்லாம் ஒருகையினால் மொண்டு உண்ட முனிவர்வாசஞ்செய்யும் ஆச்சிரமத்திற் சேர்ந்து அங்கிருக்கு மரங்களையெல்லாம் பறித்தெறிந்தான்—எ-று. (௫௬)

விழைவுறுமாதவம்வெஃகினோர்விரும் ... ... *
புழைகலையிரலையுயிருண்டோங்கிய ... ... *
வழையொடுமரனெலாமடிப்பமாதவன் ... ... *
றழலெழவிழித்தனன்சாம்பராயினான்... ... *

(இ-பு.) தவத்தைவிரும்பிய முனிவர்களா லாதரிக்கப்பட்ட ஆண்மான்களையும், பெண்மான்களையும், கலைமான்களையுங்கொன்று ஓங்கிய சுரபுன்னை முதலாகிய மரங்களையெல்லா மடிக்கக்கண்டு அகஸ்தியர் கோபங் கொண்டு அக்கினிப்பொறியுண்டாகப்பார்த்தவளவில் அவன்சாம்பலாயினான்-எ-று. ()

மற்றவன்விளிந்தமைமைந்தர்தம்மொடும்... ... *
பொற்றொடிகேட்டுவெங்கனலிற்பொங்குறு ... *
முற்றுறமுடிக்குவன்முனியையென்றெழா... ... *
நற்றவனுறைவிடமதனைநண்ணினாள் ... ... *

(இ-பு) அந்தவியக்கனிறந்ததைப் புத்திரர்களுடன் அவன்மனைவிகேள்விப்பட்டு வெவ்வியதீயைப்போலப்பொங்கி இந்தமுனிவனைமற்றமுனிவர்களுடன் முடித்துப்போடுகிறேனென்று அவ்வகஸ்திய ராச்சிரமத்தைச் சேர்ந்தாள்—எ-று. (௫௯)

இடியொடுமடங்கலும்வளியுமேங்கிடக் ... ... *
கடிகெடவமரர்கள்கதிருமுட்குறத்... ....*
தடியுடைமுகிற்குலஞ்சலிப்பவண்டமும் ... ... *
வெடிபடவதிர்த்தெதிர்விளித்துமண்டவே... ...*

(இ-பு) இடியும் சிங்கங்களும் சண்டமாருதமும் ஏக்கங்கொள்ளவும் தேவர்கள் தங்கள் காவல் கெட்டோடவும் சந்திர சூரியர்களும் அஞ்சவும் மின்னல் பொருந்திய மேகங்கள்சலிக்கவும் அண்டங்கள் வெடிபடவும் ஆரவாரித்து எதிரில்கூவிக்கொண்டுவரவே—எ-று. (௫௭)

தமிழெனுமளப்பருஞ்சலதிதந்தவன்... ... ...*
உமிழ்கனல்விழிவழியொழுகவுங்கரித்... ... ... *
தழிவனசெய்தலாலரக்கராகியே ... ...*
இழிகெனவுரைத்தனனனிவெஞ்சவே... ... ... *

(இ-பு.) தமிழாகிய அளவற்ற சமுத்திரத்தைத்தந்தஅகஸ்தியமுனிவர்வெப்பத்தைவீசுகின்ற நெருப்பானது தம்முடைய கண்வழியாக ஒழுகும்படியவர்களை நோக்கி உங்காரஞ்செய்து அழிம்பான காரியங்கள் செய்தமையால் நீங்கள் அரக்கர்களாகி இழிவையடையக்கடவீர்களென்று இடியுங்குறையும்படியானவொலியுடன் சொன்னார்—எ-று. (௧அ)

வெருக்கொளவுலகையும்விண்ணுளோரையு ... *
முருக்கிவெவ்வுயிருமுண்டுழலுமூர்க்கராம் .. ... *
அரக்கர்களாயினரக்கணத்தினில்... ... ... *
உருக்கியசெம்பெனவுமிழ்கட்டீயினர் ... ... *

(இ-பு.) அகஸ்தியர் சாபங்கொடுத்த அந்தக்ஷணமே யுருக்கிய செம்பைப்போல உமிழுகின்ற கண்தீயையுடையவர்களாய் அச்சங்கொள்ள உலகத்தாரையும் தேவர்களையுங்கொன்று எல்லாவுயிர்களையும் உண்டுழலுகின்ற மூர்க்கராம் அரக்கர்களாயினார்கள்—எ-று, (௧௯)

ஆங்கவன்வெகுளியுமறைந்தசாபமுந் ... ...*
தாங்கினரெதிர்செயுந்தருக்கிலாமையி... ... ...*
னீங்கினர்சுமாலியைநேர்ந்துநிற்கியாம்... ... ...*
ஓங்கியபுதல்வரென்றுறவுகூறினார்... ... .*

(இ-பு.) அந்த அகஸ்தியமுனிவருடைய கோபத்தையும் அவர் கூறியசாபத்தையுந்தாங்கின அம்மூவரும் எதிர்செய்யும் வல்லமையில்லாமையினால் அவ்விடம்விட்டுநீங்கிச் சுமாலியென்னும் அரக்கனிடத்திற்சேர்ந்து உனக்கு நாங்கள் பெரியபுத்திரர்களென்று உறவுகொண்டார்கள்—எ-று. (௨௰)

அவனொடும்பாதலத்தனேகநாட்செலீஇத்.........*
தவனுறுதசமுகன்றனக்குமாதுலர்... ... ... *
இவரெனப்புடைத்தழித்துலகமெங்கணும்........*
பவனனிற்றிரிகுநர்பதகிமைந்தர்கள் ... ... *

(இ-பு) அந்தச்சுமாலியுடன் பாதாளலோகத்தில் அனேக நாள்கள் கழித்து (அந்தநேமல்) தவபலமுள்ள இராவணனுக்கு இவர்கள்மாமன்மாரென்று சொல்லப்பட்டு அந்தப்பாதகிமைந்தர்கள் உலகங்களையெல்லாம் அடித்தழித்துச் சண்டமாருதம்போலத் திரிகின்றார்கள்—எ-று. (௨௧)

மிகுந்திறன்மைந்தனாவேறுநின்றுறுத் ... ...*
தகுந்தொழின்முனிவரன்சலத்தையுன்னியே... ...*
வகுத்துவிலவடவெரிவதிந்ததிவ்வனம் ... ... *
பகுந்தனளழலெனப்புழுங்குநெஞ்சினாள் ... ... *

(இ-பு) அந்தத்தாடகையானவள் தீப்போலகொதிக்காநின்ற மனத்தையுடையவளாய் மிகுந்தவல்லமையுள்ள தன்புத்திரர்களை வேறாகவிட்டு நீங்கித்தகுதியுள்ளதான தவத்தொழிலையுடைய அகஸ்தியமுனிவரன் கோபத்தைக்கந்திக் கொண்டு வழியில் வடவாமுகாக்கினி பொருந்தியதுபோல இவ்வனத்தில் வந்திருக்கிறாள் —எ-று.
(௪௨)

உளப்பரும்பிணிப்புறுவுலோபமொன்றுமே ... *
அளப்பருங்குணங்களையழிக்குமாறுபோற் ... *
கிளப்பருங்கொடுமையவரக்கிகேடிலா... ... ...*
வளப்பருமருதவைப்பழித்துமாற்றினாள் ... ...*

(இ-பு) மனதில் மிகுந்த பந்தமாகப் பொருந்தத்தகாத உலோபகுணமானது சிலவேளைதான்றுமாகில் அளவிடற்கரிய நற்குணங்களை யழித்துவிடுமென்றமைபோலவாக்கினால்சொல்லவுங்கூடாதகொடுமையினையுடைய அந்த அரக்கியானவள் கேடில்லாதமிகுந்தவளப்பத்தையுடையமருதநிலமாயிருந்த விந்நிலத்தையழித்து இவ்வாறுமாற்றிவிட்டாள்-எ-று.
(௪௩)

உலோபமென்கிற ஒருகுணமானது கருதுகின்ற பெரியதொந்தப்பட்டு மற்ற எல்லா நற்குணங்களையும் அழிக்குமாறுபோலெனப் பொருள்கூறினும் அமையும். உள்ள-எனக்கூறற்பாலது உளவென நின்றது- உலோபந்தோன்றுமேலெனவும்பாடமுண்டு.

[வேறு.]

இலங்கையரசன்பணியமைந் தொரிடையூறாய் ... *
விலங்கல்வலிகொண் டெனதுவேள்வி நலிகின்றாள் . *
அலங்கன்முகிலையவளிவ்வங்கநிலமெங்குங் ... *
குலங்களொடடங்கநனி கொன்றுதிரிகின்றாள் ... *

(இ-பு.) இராவணனுடைய ஏவலிலமைந்து யாவர்க்கும் ஒரிடையூறாய் ஆயிரம்யானைபலங்கொண்டு என்னுடைய வேள்வியைக்கெடுக்கின்றாள் அன்றியும் பூமாலையணிந்த மேகம்போன்ற அழகுள்ளராமனேயவளிந்த அங்கநாடெங்குமிராநின்ற உயிர்களையெல்லாம் குலங்களுடன் அதிகமாகக்கொன்று திரிகின்றாள் —எ-று.
(௪௪)

மூன்றுலகளித்துமுறைநின்றவுயிரெல்லாந் ... *
தன்னுயிரெனக்கருது தன்மையினன்மைந்த ... *
என்னினியுரைத்துவதினிச்சிறிதுநாளின்... ...... *
மன்னுயிரனைத்தையும்வயிற்றினிடுமென்றான் ... *

(இ-பு.) முறைப்படி கருதுகின்ற நாட்டைக்காத்து அந்நாட்டிலிருக்கும் உயிரையெல்லாம் தன்னுயிர்போல நினைக்காநின்ற தன்மையினையுடைய தசரதமகாராசன்புத்திரனேயின்னமும்நான்சொல்லத்தக்கதென்னிருக்கின்றது இனிச்சிறிதுநாளில் நிலைபெற்ற உயிர்களையெல்லாம் தன்வாயில் போட்டுக்கொள்வாள் —எ-று.
(௪௫)

தன்னுணவெனக்கருதுந் தன்மையினள் என்னும் பாடங்கொண்டு அதற்கியையப்பொருள்கூறுதலுமுண்டு.

அங்கிறைவனப்பரிசுரைப்பவதுகேளாக் ... ... *
கொங்குறைநறைக்குலமலர்ச்செனிதுளுக்கா... ...*
எங்குறைவதித்தொழிலியற்றுபவளென்றான்.... ,*
சங்குறைகரத்தொருதனிச்சிலைதரித்தான்...... .. *

(இ-பு.) அவ்விடத்து விசுவாமித்திர முனிவர் அவ்வாறு சொல்லக்கேட்டு சங்கம்பொருந்தியகையில் ஒப்பற்றவில்லையேந்திய ஸ்ரீராமமூர்த்தியானவர் தேன்பொருந்தியவாசனையுள்ள நல்ல பூமாலையணிந்த திருமுடியை யசைத்து இக்கொடியசெய்கைசெய்கின்றவள் எங்குவாசஞ்செய்கின்றாளென்றார்()

சென்னி - செனியென நின்றது.

கைவரையெனத்தகையகாளையுரைசேரா ... ... *
ஐவரையகத்திடையடைத்தமுனிஐய... ... ... *
இவ்வரையிருப்பதவளென்பதனின்முன்போர் ...*
மைவரைநெருப்பெரியவந்ததெனவந்தாள் ... ...*

(இ-பு.) யானையொத்தவரென்று சொல்லத்தக்க பெருமைப் பாட்டினையுடைய ஸ்ரீராமமூர்த்தியினுடையவார்த்தையைப் பஞ்சேந்திரியங்களையுள்ளடக்கியமுனிவர்கேட்டு ஐயனே இம்மலையில் அவளிருப்பதென்று சொல்வதற்குமுன்பு ஒருநீலமலையானது நெருப்பெரியவந்தாற்போல்வந்தாள்-எ-று.

சிலம்புகள்சிலம்பிடைசெறித்தகழலோடு... .....*
நிலம்புகமிதித்தனணெளித்தகுழிவேலைச் ... ... *
சலம்புகவனற்றறுகணந்தகனுமஞ்சிப்.... ... *
பிலம்புகநிலக்கிரிகள்பின்றொடரவந்தாள்... ... *

(இ-பு) மலைகள் பரற்கற்களாகப்பொருந்தச்சிலம்பணிந்தகால்களுடனிலம் அழுந்தும்படி மிதித்தனள் - அவ்வாறு மிதிக்கப்பட்ட குழியில் சமுத்திரநீர்செல்லவும், தீயினையொத்ததறுகண்மையுடைய யமனும் அஞ்சிப் பிலத்துள்செல்லவும், பூமியிலிருக்கின்றமலைகளெல்லாம்பின்தொடரவும்,வந்தாள்

இறைக்கடைதுடித்தபுருவத்தவெயிறென்னும் ...*
பிறைக்கடைபிறக்கிடமடித்தபிலவாயள்... ... ...*
மறக்கடையரக்கிவடவைக்கனலிரண்டாய் ... *
நிறைக்கடன்முளைத்தெனநெருப்பெழவிழித்தாள்*

(இ-பு.) சிறிது துடிக்கின்ற புருவக் கடையினையுடையவளும் பிறையினை யொத்த கோரதந்தங்கள் கடைவாயிலிடத்தில் பிரகாசிக்கும்படி மடித்தபிலம்போன்ற வாயையுடையவளுமாய்க்கோபமுள்ளகடைப்பட்ட அரக்கியானவள் வடவைத்தீயானது இரண்டுருவமாய் நிறைவினையுடைய கடலில்முளைத்ததுபோலத் தீப்பொறியுண்டாகக் கண்களையுருட்டிப் பார்த்தாள் — எ-று.

கடங்கலுழ்தடங்களிறுகையொடுகைதெற்று.... ...*
வடங்கொளநுடங்குமிடையாண்மனுகுலமேலோர் ...*

இடந்தருநெறித்திசையுமேழுலகுமெங்கும் ... *
அடங்கலுநடுங்கவுருமஞ்சநனியார்த்தாள்... ... *

(இ-பு) மதநீரைப் பொழிகின்ற பெரியயானைகளின் துதிக்கைகளை முடிந்து வடம்போல அணிந்து கொண்டிருப்பதினால் ஒசியாநின்ற இடையையுடையவளாகிய தாடகையானவள் தேவலோகமும் நெடியதிசைகளும் ஏழுலகுமாகிய எல்லாவுலகங்களிலுமிருக்குமுயிர்களெல்லாம் நடுங்கவும் இடியஞ்சவுமிகுதியாய் ஆரவாரித்தாள் —எ-று. (௫௰)

ஆர்த்தவரைநோக்கிநகைசெய்தெவருமஞ்சக் ... *
கூர்த்தநுதிமுத்தலையயிற்கொடியகூற்றைப்... ...*
பார்த்தெயிறதின்றுபகுவாய்முழைதிறந்தோர்....*
வார்த்தையுரைசெய்தனளிடிக்குமழையன்னாள்... .*

(இ-பு) இவ்வாறு ஆரவாரித்து அவர்களை நோக்கி நகைசெய்து யாவரும் பயங்கொள்ளும்படி கூர்மைபொருந்திய தீமையுடைய சூலாயுதமாகிய கொடியதனையும் பார்த்துப் பற்களைக்கடித்துப் பிளப்பாகிய வாயைத்திறந்து இடிக்காநின்ற மேகம்போன்றவள் ஒருவார்த்தை சொல்லுகிறாள் —எ-று.()

கடக்கரும்வலத்தெனதுகாவலினில்யாவும்..........*
கெடக்கருவறுத்தனனினிச்சுவைகிடைக்கும் ... ... *
விடக்கரிதெனக்கருதியோவிதிகொடுத்தோ.........*
படக்கருதியோபகர்மின்வந்தபரிசென்றே........*

(இ-பு.) செல்லுதற்கரிய பலமாகிய என்காவல் பொருந்திய இந்நிலத்தில் எல்லாவுயிர்களும் அழியும்படி கருவறுத்தேன் ஆகலானினிச்சுவையுள்ள மாமிசமெனக்குக் கிடைத்தலரிதென்றெண்ணியோ அல்லது விதியானது தள்ளிக்கொண்டுவர இறந்துபோவதைக் கருதியோ நீங்கள் வந்ததன்மையென்று சொல்லி —எ-று. (௫௨)

மேகமழைவிற்றுகவிழித்தனள்புழுங்கா....... ...*
மாகவரையற்றுகவுதைத்தனள்மறுத்தின் ... .*
பாகமெனுமுற்றெயிறதுக்கியயில்பற்றா ... .*
ஆகமுறவுய்த்தெறிவெனென்றெதிரழன்றாள் ... ... *

(இ-பு.) மேகங்கள் தொடக்கற்று விழும்படி நோக்கி மனம் வெதும்பிப் பெரியமலைகள் அடிபெயரும்படி பூமியையுதைத்தும் சந்திரபாகமென்று சொல்லும்படியான பெரிய கோரதந்தங்களை அதுக்கிச் சூலத்தைப் பற்றிக்கொண்டு ஸ்ரீராமமூர்த்தி மார்பில்பொருந்த எறிகிறேனென்று எதிரிற்கோபங்கொண்டாள் —எ-று. (௫௩)

அண்ணன்முனிவற்கதுகருத்தெனினுமாவி ... .*
உண்ணெனவடிக்கணைதொடுக்கிலனுயிர்க்கே ......*
துண்ணெனவினைத்தொழிறொடங்கியுளளேனும் .*
பெண்ணெனமனத்திடைபெருந்தகைநினைந்தான்..*

(இ-ள்) பெருமைபொருந்திய விசுவாமித்திரமுனிவருக்கு அவளைக்கொல்வது எண்ணமாயிருந்தாலும் ஸ்ரீராமமூர்த்தியானவர் அவளுயிரையுண்ணென்று பாணங்களையேவகிலர் - ஏனெனில், அவர்பெருந்தலைமைப்பாட்டினையுடையவராதலால் உயிர்களுக்கெல்லாம் நடுக்கமுண்டாகும்படியான தீயதொழில செய்திருப்பவளேயானாலும் இவள் பெண்ணென்று மனதில் நினைந்தார்—எ-று. (௫௪)

[வேறு.]

வெறிந்தசெம்மயிர்வெள்ளெயிற்றாளையில் ... ... *
எறிந்துகொல்வனென்றெண்ணவும்பார்க்கிலாச் ... ... *
செறிந்ததாரவன்சிந்தைக்கருத்தெலாம் ... ... *
அறிந்துநான்மறையந்தணன்கூறுவான் ... ... *

(இ-ள்) வெறித்திருக்கும் செம்மயிரினையும் வெள்ளியபற்களையுமுடைய அவ்வரக்கியானவள் சூலத்தையெறிந்து கொல்லுகிறேனென்று கையிலெடுக்கவும் நோக்காத இதழ்கள்நெருங்கிய பூமாலையணிந்திருக்கும் ஸ்ரீராமமூர்த்தியினுடைய மனக்கருத்தையெல்லாமறிந்து நான்குவேதங்களையுமுணர்ந்த அந்தணராகிய விசுவாமித்திரர்சொல்லுகின்றார்—எ-று. (௫௫)

அந்தணன் - அழகியதட்பத்தை யுடையவன்.

தீதென்றுள்ளவையாவையுஞ்செய்தெமைக் ... ... *
கோதென்றுண்டிலளித்தனையேகுறை ... ... *
யாதென்றெண்ணுவதிக்கொடியாளையு ... ... *
மாதென்றெண்ணுவதோமணிப்பூணினாய் ... ... *

(இ-ள்) பொல்லாங்கென்றுள்ளவைகளையெல்லாஞ்செய்து எங்களைக் கோதென்றுகருதி யுண்ணாது விட்டனள் இவ்வளவேகுறை யிந்தச்செய்கை என்னென்று நினைப்பது மணிகள் பதிக்கப்பட்ட ஆபரணங்களணிந்த ராமனே இக்கொடியவளையும்பெண்ணென்று நினைப்பதோ—எ-று. (௫௬)

முனிவர்கள் தவத்தினால் தசையொடுங்கி எலும்புகள்தோன்றும்படியிளைத்த உடலினவர்களாதலால் கோதென்றார்.

நாண்மையேயுடையார்பிழைத்தார்நனி ... ... *
வாண்மையேபெற்றவன்றிறலாடவர் ... ... *
தோண்மையேயிவள்பேர்சொலத்தோற்பரேல் ... *
ஆண்மையென்னுமதாரிடைவைகுமே ... ... *

(இ-ள்) இவளுடன் யுத்தஞ்செய்ய நாணமுடையவர்களாயினபேர்களே யுயிர்பிழைத்தவர்கள் அதுநிற்கப்பிரகாசியாநின்றவாளாயுதத்திறமுள்ள வெற்றிபொருந்தியசுத்தவீரர்களேயானாலும் இவள்பெயரைக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் தங்கள் புசபலத்தை யிழந்துவிடுவார்களானால் ஆண்மைத்தன்மையாரிடத்திலிருக்கின்றது நீயோசித்துப்பார்—எ-று. (௫௭)

இந்திரன்னிடைந்தானுடைந்தோடினர் ... ... *
தந்திரம்படத்தானவர்வானவர் ... ... *

மந்தரம்மிவடோளெனின்மைந்தரோ ... ... *
டந்தரம்மினியாதுகொலாண்மையே ... ... *

(இ-பு.) முன்னொருகாலம் தேவேந்திரனிவளுடன் எதிர்த்துத்தோற்றுப் போனான் தானவர்களும் தேவர்களும் தங்கள் சேனைகளெல்லா மிவளாலிறந் தும்போகக்கண்டு தோற்றோடிப்போனார்க ளிவள் தோள்கள் மந்திரகிரி யையொப்பாகுமென்றால் ஆடவர்களுடைய ஆண்மைத்தன்மைக்கும் இவளு டைய பெண்தன்மைக்கும் தாரதம்மியம் நோக்குமிடத்து இனி ஆண்மைத் தன்மையென்பது யாவரிடத்திலிருக்கின்றது சொல்வாயாக—எ-று. (௫௮)

மன்னர்மன்னவன்காதலமற்றுமோன் ... ... *
பின்னமியானுரைக்கின்றதியாதெனின் ... ... *
முன்னோர்காலநிகழ்ந்தமுறைமையீ ... ... *
தென்னவோதலுற்றான்றவத்திறிலான் ... ... *

(இ-பு.) அரசர்க்கரசனாகிய தசரதமகாராசாவின் புத்திரனே பின்னரும் நான் ஒரு சங்கதி சொல்லுகிறேன் அது என்னவெனில், இதுவு முன்னமொ ருகாலத்தில் நடந்தமுறைமையென்று முடிவுபெறாததவமுள்ள விசுவாமித் திரமுனிவர் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௫௯)

பிருகுவென்னும்பெருந்தவன்றன்மனை ... ... *
வருகயற்கட்கியாதிவல்லாசுரர்க் ... ... *
குருகுகாதலுறவுறவாதலாற் ... ... *
கருதியாழிகவர்ந்தனனேமியான் ... ... *

(இ-பு.) பிருகுவென்னும் பெயரையுடைய பெரிய தவமுனிவருடைய ப த்தினியாகிய சேல்மீன்போன்ற பார்வையையுடைய-கியாதி யென்பவள்-வ லிய அசுரர்களுக்கு மனமிளகும்படியான அன்புண்டாகத்தக்கதாக உறவுபூ ண்டமையைக்கருதிச்சக்கிராயுதபாணியானவர் அவளுயிரைவாங்கிவிட்டார்-எ-று

அசுரர் என்பது விகாரவகையால் ஆசுரவெனநீண்டது இயவரிடத்துறவுகொண்டமை யால் பெண்ணென்று கருதவேண்டுவதில்லையென்று கொன்றானென்பதுகருத்து.

வானகந்தனின்மண்ணினின்மன்னுயிர் ... ... *
போனகந்தனக்கென்றெணும்புந்திய ... ... *
தானவள்குமதிப்பெயராடனை ... ... *
ஊனொழித்தனன்வச்சிரத்தும்பர்கோன் ... ... *

(இ-பு.) விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலுமாகப் பொருந்திய உயிர் களெல்லாம் தனக்கு ஆகாரமாகநினைக்கும் புத்தியையுடையதானவளாகிய-கு மதியென்னும்பெயரையுடையவளுடைய உடலை தேவேந்திரன் வச்சிராயுத த்தினாலொழித்துவிட்டான்—எ-று. (௬௧)

ஆதலாலரிக்காகண்டலன்றனக் ... ... *
கோதுகீர்த்தியுடையவல்லாதிடை ... ... *
ஏதமென்பனவெய்தியவோசொலாய் ... ... *
சாதுடர்ந்துதயங்கியதாரினாய் ... ... *

(இ-பு.) இவ்வாறு செய்ததினால் திருமாலுக்கும், இந்திரனுக்கும், யாவரும் சொல்லும்படியான கீர்த்தியுண்டாயினமையால் தீக்குற்றமென்பவைகள் சம்பவித்தனவோ மகாரத்தங்களைப்பொருத்தி விளங்கும் பூமாலையணிந்துள்ள ராமனே நீசொல்வாயாக—எ-று. (௯௨)

கறங்கிட்டதிகிரிப்படிகாத்தவர்... ... ...*
பிறங்கடைப்பெரியாய்பெரியோரொடு... ... *
மறங்கொடித்தாடன்னுயிர்மாய்த்தநின் ... ...*
அறங்கெடுத்தவட்காண்மையும்வேண்டுமோ... ...*

(இ-பு.) ஆக்கினைச்சக்கரம் எங்குஞ் செல்லத்தக்கதாக இந்தப்பூமியைக்காத்த சூரியகுலமன்னவருடைய புத்திரனாகிய பெரியோனே பெரியோர்களுடன்பகைகொண்டு இவ்வுலகத்திலிருக்கும் உயிர்களையுங்கொன்று நீடியதருமத்தையுங்கெடுத்தவளுக்கு ஆண்மையும் வேண்டுமோ—எ-று (௯௩)

சாற்றுநாளற்றதெண்ணித்தருமப்பார்த்... ... *
தேற்றும்வினையென்பதன்றியிவளைப்போ ... *
ஊற்றங்கேட்டலுந்தின்னநயப்பதோர் ... ...*
கூற்றுண்டோசொலாய்கூற்றுறழ்வேலினாய்... ...*

(இ-பு) பிரமனால் விதிக்கப்பட்டிருக்கும் ஆயுள்பிரமாண முடிந்ததையெண்ணி அவ்வுயிர்செய்தபுண்ணியங்களைநோக்கி விண்ணில்கொண்டுபோவதேயன்றி இவளைப்போல உயிர்களென்னும் நாற்றத்தை யறிந்தவளவில் அவைகளையுண்ணவிரும்புகின்ற கூற்றுவனுமுண்டோ கொலைசெய்வதால் கூற்றுவனையொத்தவேலாயுதமுடையவனே சொல்வாயாக—எ-று. (௯௪)

மன்னும்பல்லுயிர்வாரித்தன்வாய்ப்பெய்து ... ...*
தின்னும்புன்மையிற்றீமையதேயைய ... ...*
பின்னுந்தாழ்குழற்பேதைமைப்பெண்ணிவள் ...*
என்னுந்தன்மையெளிமையின்பாலதே ... ...*

(இ-பு.) உலகத்திற்பொருந்திய பலவுயிர்களையும்வாரித் தன்வாயிற்போட்டுக்கொண்டு தின்னுகின்ற கீழ்மைத்தனத்தைப் பார்க்கிலும் தீமை வேறுயாதோ ஐயனே பின்னுகின்றதாழ்ந்த அளகத்தையுடைய பேதைமைப்பெண்ணிவள் என்றெண்ணுந்தன்மை அறியாமையின்பாலதாம்-எ-று. (௯௫)

ஈதீனல்லறம்பார்த்திசைத்தேனிவள் ... ... *
தீதுநின்றதுசெப்புகின்றேனலேன் ... ... *
ஆதிநின்றதறனென்றாக்கினைக் ... ...*
கோதியென்றெதிரந்தணன்கூறினன்... ... ...*

(இ-பு.) முடிவில்லாத தருமத்தைநோக்கிச் சொன்னேனேயல்லது -இப்போது இவள் தீதுநின்றதைநோக்கிச் சொல்லுகிறேனல்லேன்-ஆதலாலினி நீ பொறுமைகொண்டிருப்பது தருமமல்ல, இவ்வாக்கினைக்கொல்லென்றுஸ்ரீ ராமமூர்த்தியெதிரில் விசுவாமித்திரமுனிவர் சொன்னார்—எ-று. (௯௬)

ஐயனங்கது கேட்டறனல்லவும் ... ... *
எய்தினாலது செய்கவென்றேவினான் ... ... *
மெய்யதின்னுரை வேதமெனக்கொடு ... ... *
செய்கையன்றோவறஞ்செய்யுமாறென்றான்... ...*

(இ-பு.) ஸ்ரீராமமூர்த்தியானவர் அந்தவார்த்தையைக்கேட்டுப்பாவமானது நேரிடுவதேயானாலும் மெய்யனே அதனைச்செய்யென்று நீயேவினால் தேவரீருடைய வாக்கியத்தை வேதவாக்கியமாக ஏற்றுக்கொண்டு அவ்வண்ணமே செய்தலல்லவோ தருமஞ்செய்யுமுறைமையென்றார்—எ-று. (௬௭)

கங்கைத்தீம்புனலுடன்கருத்தையு ... ...*
மங்கைத்தீயனையாளுமனக்கொளாச் ... ... *
செங்கைச்சூலவெந்தீயினைத்தீயதன் .. ..*
வெங்கட்டீயொடுமேற்செலவீசினாள் ... ...*

(இ-பு.) மதுரமுள்ள கங்காநதிநீர்சூழ்ந்த கோசலைநாட்டையுடையஸ்ரீராமமூர்த்தியின் கருத்தையும் தீயானது பெண்ணுருவங்கொண்டதன்ன தாடகை அறிந்துகொண்டு தன்செங்கையி லிருக்கும் சூலமாகிய வெவ்வியதீயை வெப்பம்பொருந்தியதான கொடியகண்களி லிருந்துண்டாகுந்தீயுடன் ஸ்ரீராமமூர்த்தியின்மேல்செல்லும்படி வீசினாள்— எ-று. (௬௮)

புதியகூற்றனையாள்புகைந்தேவிய ... ... *
கதிர்கொண்மூவிலைக்காலவெந்தீமுனி .. ..*
விதியைமேற்கொண்டுநின்றவன்மேலுவா ... *
மதியின்மேல்வருங்கோளெனவந்ததே... ... ...*

(இ-பு.) புதிய எமனையொத்த தாடகையானவள் மனம்வெம்பி யேவியவொளிபொருந்திய மூவிலைச்சூலமாகிய காலாக்கினியானது விசுவாமித்திரமுனிவர் கட்டளையிட்டதொழிலைச்செய்யாநின்ற இராகவன்மேல் பூரணச்சந்திரன்மேல் வருகின்ற பாம்பாகிய இராகுவைப்போலவந்தது—எ-று. (௬௯)

மாலுமக்கணம்வாளியைத்தொட்டதுங் ... ...*
கோலவிற்கால்குனித்ததுங்கண்டிலர்... ... ... *
காலனைப்பறித்தக்கடியாள்விட்ட ... ... *
சூலமற்றறுதுண்டங்கள்கண்டனர் ... ...*

(இ-பு) அவள்சூலத்தைவிட்ட அப்பொழுதே திருமாலவதாரமாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் பாணத்தைத்தொட்டதையும் அம்புவைத் தேவுதற்கரியவிற்குதையைவளைத்ததையும் யாருங்கண்டிலர்மற்ற எதனைக்கண்டார்களென்றால் சூலம் அறுந்துவீழ்ந்ததைக்கண்டார்கள்—எ-று. (௭௰)

அல்லின்மாரியனையநிறத்தவள் ... ... *
சொல்லின்மாத்திரையிற்கடல்தூர்ப்பன ... ...*
கல்லின்மாரியைக்கைவகுத்தாளது... ... ... *
வில்லின்மாரியின்வீரன்விலக்கினான்... ... ...*

(இ-ள்) மேகநிறமுள்ள அந்தத்தாடகையானவள் ஒருசொல்லினளவுக்குள் மலைகளைப்பெயர்த்துமழைபொழிவதுபோலஎறிந்தாள் அதனை ஸ்ரீராமமூர்த்தியானவர்வில்லிலிருந்தேவுகின்றபாணவருஷத்தினால் விலக்கிவிட்டார்-எ-று.

வேறு.

சொல்லொக்குங்கடியவேகச்சுடுசரங்கரியசெம்மல் ... ... *
அல்லொக்குநிறத்தினாண்மேல்விடுதலும்வயிரக்குன்றக் ... *
கல்லொக்குநெஞ்சிற்றங்காதப்புறங்கழன்றுகல்லாப். ... ...*
புல்லர்க்குநல்லோர்சொன்னபொருளெனப்போயிற்றன்றே. *

(இ-ள்.) அவள் எறிந்தமலைகளையெல்லா மழித்துப் பின்னும் ஸ்ரீராமமூர்த்தியானவர் முனிவர்கள்சாபத்தையொக்கும்கடியவேகத்தையுடைய சுடும்படியானபாணத்தையிருளையொத்தநிறமுள்ளதாடகையின்மேல்விட்டவளவில் அது அவளுடைய வயிரமலைபோன்ற மார்பிலேதங்கிவிடாமல்முதுகின்புறமாகக்கழன்று கற்றறிவில்லாத மூடர்களுக்குநல்லோர்சொன்ன பொருள்போலப்போயது—எ-று. (எ௨)

பொன்னெடுங்குன்றமன்னான்புகர்முகப்பகழியென்னும் ....*
அந்நெடுங்காலவெங்காற்றடித்தலுமிடித்துவானிற்..... ... *
கன்னெடுமாரிபெய்யக்கடையுகத்தெழுந்தமேக ... ... *
மின்னொடுமசனியோடும்வீழ்வதேபோலவீழ்ந்தாள் ... ... *

(இ-ள்.) நெடிய பொன்மலையையொத்த ஸ்ரீராமமூர்த்தியேவிய புகர்முகமுள்ளபாணமாகிய அச்சண்டமாருதமானது வீசிமோதினவளவில் கல்மழைபெய்வதற்காக இடித்துக்கடையுகத்தி லெழுந்தமேகமானது மின்னலுடனும் இடியுடனும் வீழ்வதுபோல் வீழ்ந்தாள்—எ-று. (எ௩)

பொடியுடைக்கானமெங்குங்குருதிநீர்பொங்கவீழ்ந்த ... *
தடியுடையெயிற்றுப்பேழ்வாய்த்தாடகைதலைகடோறு ... ...*
முடியுடையரக்கற்கந்நாண்முந்தியுற்பாதமாகப் ... ... *
படியிடையற்றுவீழ்ந்தவெற்றியம்பதாகையொத்தாள் ... ...*

(இ-ள்.) புழுதியையுடைய அந்தவனமெல்லாம்உதிரவெள்ளமானதுபொங்கும்படிவிழுந்த- மாமிசம்பொருந்திய பற்களையுடைய தாடகையானவள் தலைகள்தோறு மகுடத்தையுடைய ராவணனுக்கு மரணகாலம்வருவதற்குமுந்தியுற்பதமாகப் பூமியில் அறுந்துவிழுந்த அவனுடைய வெற்றிக்கொடியையொத்தாள்—எ-று. (எ௪)

காஃறிரிந்தாழியாகத்தாடகைகடினமார்பத் ... ... *
தூன்றியபகழிவாயூடொழுகியகுருதிவெள்ளம் ... ...*
ஆன்றவக்கானமெல்லாமாயினதந்திமாலைத் ... ... *
தோன்றியசெக்கர்வானந்தொடக்கற்றுவீழ்ந்ததொத்தே .. *

(இ-ள்.) வனமென்னுந் தோற்றமாறிச் சமுத்திரம்போ லாகும்படி தாடகையினுடைய உறுதியுள்ளமார்பினிடத்தில் ஊன்றிய பாணத்தின் வழியே

புறப்பட்டு ஒழுகிய உதிரப்பெருக்கானது அந்திபாகிய மாலைப்பொழுதில் தோன்றிய செவ்வானமானது பற்றத்தப்பூமியில்வீழ்ந்ததுபோலவ்விசாலமாகிய பெரியபூமியெங்குமாயிற்று—எ-று. (௭௫)

வாசநாண்மலரோனன்னமாமுனிபணிமறாத ... ... *
காசிலாங்கனகப்பைம்பூட்காகுத்தன்கன்னிப்போரில் ... *
கூசிவாளரக்கர்தங்கள்குலத்துயிர்குடிக்கலஞ்சி ... .*
ஆசையாலுழலுங்கூற்றுஞ்சுவைசிறிதறிந்ததன்றே ... ... *

(இ-பு.) வாசனைதங்கிய புதிய தாமரைமலர்மேல் வீற்றிருக்கும் பிரமதேவனையொத்த பெருமைபொருந்திய விசுவாமித்திர முனிவருடைய கட்டளையைமறாக்காதமணிகள்பதிக்கப்பட்டுப்பொன்னாலியன்ற ஆபரணங்களணிந்துள்ள ஸ்ரீராமமூர்த்தியின் முதற்போரில் வாளரக்கர் குலத்தாருயிரை யுண்ணக்கூசிப் பயந்திருந்த எமனும் கொஞ்சம் ருசியறிந்தான்—எ-று. (௭௬)

காகுத்தன்குலத்தில்வந்த ஸ்ரீராமனென்க-கன்னி இளமை.

யாமுமெய்த்திருக்கைபெற்றேமுனக்கிடையூறுமில்லை ... ...*
கோமகற்கினியதெய்வப்படைக்கலங்கொடுத்தியென்று ... *
மாமுனிக்குரைத்துப்பின்னர்விற்கொண்டமழையனான்மேற். *
பூமழைபொழிந்துவாழ்த்திவிண்ணவர்போயினாரே ... *

(இ-பு.) தேவர்கள் விசுவாமித்திரனைநோக்கி முனிவனே நாங்களும் எங்களிருப்பிடம்பெற்றோம் இனியுனக்கு இடையூறில்லை இந்தராசகுமாரனுக்கு இனியதேவதாஸ்திரங்கள்கொடுவென்று அம்முனிவருக்குச்சொல்லிப்பின்பு வில்பொருந்தியமேகமொத்தஸ்ரீராமமூர்த்தியின்மேல் புஷ்பவருஷம்வருஷித்துவாழ்த்தித்தங்களிடத்துக்குப்போய்விட்டார்கள்—எ-று. (௭௭)

௮-வது- தாடகைப்படலம்-முற்றிற்று.

ஆக- திருவிருத்தம் - ௩௱௩.

ஸ்ரீராமசெயம்.

பாலகாண்டம்.

௮-வது - வேள்விப்படலம்.

விண்ணவர்போயபின்னர்விரிந்தபூமழையினாலே ... ... *
தண்ணெனுங்கானநீங்கித்தாங்கருந்தவத்தின்மிக்கோன் ... ... *
மண்ணவர்வறுமைநோய்க்குமருந்தனசடையன்வெண்ணெய்.*
அண்ணறன்சொல்லேயன்னபடைக்கலமருளினானே ... ... *

(இ-பு.) தேவர்கள்போனபின்பு அவ்விடமெங்கும்பரந்தபூமழையினாலே குளிர்ச்சியுடையதென்கிற அவ்வனம்விட்டுநீங்கிப்பிறர்தாங்குதற்கரியதவத்தினால் மேலாகிய விசுவாமித்திர முனிவரானவர் இவ்வுலகத்திலிருப்பவர்களுடைய வறுமையாகியபிணிக்கு அவுஷதம்போன்ற திருவெண்ணெய்நல்லூரிலிருக்கும்பெருமையிற்சிறந்த சடையப்பமுதலியார்வாக்குப்போல்வதாய்த் தவறுதலில்லாத படைக்கலங்களை ஸ்ரீராமமூர்த்திக்குக்கொடுத்தார்-எ-று.(க)

ஆதியவதிருங்கூறியளித்தவம்மண்ணறன்பால் ... ... *
ஊறியவுவகையோடுமும்பர்தம்படைகளெல்லாந் ... ... *
தேறியமனத்தான்செய்தநல்வினைப்பயன்களெல்லா ... ... *
மாறியபிறப்பிற்றேடிவருவபோல்வந்தவன்றே ... ... *

(இ-பு.)சாந்தமுள்ளவிசுவாமித்திரமுனிவர் உபதேசஞ்சொல்லிக்கொடுத்தவளவில் மிகுந்த சந்தோஷத்துடன் தேவாஸ்திரங்களெல்லாம் தேறியமனமுள்ள ஒருவன் முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயன்களெல்லாம் மறுபிறப்பில் அவனைத்தொடர வருதல்போல ஸ்ரீராமமூர்த்தியினிடத்தில்வந்தன()

மேவினம்பிரிதலாற்றேம்வீரநீவிதியினெம்மை ... ... *
ஏவினசெய்துநிற்றுமிளையவன்போலவென்று ... ... *
தேவர்தம்படைகள்செப்பச்செவ்விதென்றவனுநேரப் ... ... *
பூவைபோனிறத்தினாற்குப்புறத்தொழில்புரிந்தவன்றே ... ... *

(இ-பு.) அவ்வாறுவந்த தேவாஸ்திரங்கள் ஸ்ரீராமனைநோக்கி நாங்களுன்னிடத்தில்வந்தோம் இனியுன்னை விட்டுப்பிரியோம் வீரனே முறைமைப்படி நீயேவிய தொழில்களை இலக்குமணன்போலச் செய்துகொண்டிருக்கிறோமென்று சொல்ல, அதைக்கேட்ட ஸ்ரீராமமூர்த்தியும் இது செவ்விதானதேயென்று சம்மதிக்க அன்றுமுதல் அப்படைகள் காசாம்பூப்போலநிறமுள்ள ஸ்ரீராமமூர்த்திக்குப் புறத்தொழில் செய்துகொண்டிருந்தன—எ-று. ()

இனையனநிகழ்ந்தபின்னர்க்காவதமிரண்டுசென்றார் ... ... *
அனையவர்காணவாண்டோரரவம்வந்தணுகித்தோன்ற ... ... *

முனிவவீதியாவதென்றுமுன்னவன்வினவப்பின்னர் ... ...*
வினையறநோற்றுநின்றமேலவன்விளம்பலுற்றான்... ... *

(இ-பு.) இத்தன்மையான காரியங்கள் நடந்தபின்பு அவ்விடம்விட்டு இரண்டுகாதவழிதூரஞ்சென்றார்கள்- அவ்வாறு செல்லும்போது அவர்களுக்குத்தெரியும்படி அங்குஒருஓசை சமீபமாகவந்துதோன்ற ஸ்ரீராமமூர்த்தியானவர் முனிசிரேஷ்டரே இவ்வொலி யாதோவென்றுவினவ, நல்வினைதீவினைகளெல்லாம் ஒழியும்படி தவஞ்செய்திருப்பவராகிய விசுவாமித்திர முனிவர்சொல்லுகின்றார்—எ-று. (௪)

மானசமடுவிற்றோன்றிவருதலாற்சரயுவென்றே... ... ...*
மேன்முறையமரர்போற்றும்விழுநதியதனினோடும் ... *
ஆனகோமதிவந்தெய்துமரவமதென்னவப்பால் ... ... *
போனபின்பவங்கடீர்க்கும்புனிதமாநதியையுற்றார் ... ...*

(இ-பு.) மாநசதடாகத்தினுற்பத்தியாகி வருதலால் சரயுவென்று மேம்பட்ட முறைமையினையுடைய தேவர்களெல்லாம்போற்றும் நன்மைபொருந்திய நதியுடன் முன்னொருகாரணத்தால் உண்டாகிய கோமதியென்னும் நதி வந்துசேர்தலாலுண்டாகுமோசை (இங்குக்கேட்கின்றவோசை) யென்று சொல்ல, அவ்விடங்கடந்துபோனபின் தன்னிடத்தில் ஸ்நானஞ்செய்கின்றவர்களுடைய பிறவியை நீக்கத்தக்க பரிசுத்தமுள்ளபெருமையினையுடைய அந்தநதியைக் கண்டார்கள்—எ-று. (௫)

விழுமம்-எனற்பாலது விழும் என விகாரமாயிற்று.

சுரர்தொழுதிறைஞ்சற்கொத்ததுநதியாவதென்று ... ... *
வாமுனிதன்னையண்ணல்வினவுறமலருள்வைகும்... ... *
பிரமனன்றளித்தவென்றிப்பெருந்தகைக்குசனென்றோதும் ..*
அரசர்கோன்மனைவிதன்பாலளித்தவர்நால்வராகும்... ... ...*

(இ-பு.) இவ்வாறு அந்நதியினருகுசென்றவுடன் ஸ்ரீராமமூர்த்தியானவர் தேவர்களும் நமஸ்கரித்து வணங்குதற்குத்தக்க பரிசுத்தமுள்ள விந்நதிக்குள்ள காரணமியாதென்று விசுவாமித்திரமுனிவரைவினவ தாமரைமலரினிடத்துவீற்றிருக்கும் பிரமதேவன் முற்காலத்திலீன்ற வெற்றியினையும் பெருந்தகைமைப்பாட்டினையுமுடைய குசனென்று சொல்லப்படுகின்றராசன்மனைவியினிடமாகப்பெற்ற புத்திரர்கள் நால்வராகும்—எ-று. (௬)

குசன்குசநாபன்கோதில்குணத்தினாதூர்த்தன்கொற்றத்... ...*
திசைகெழுவசுவென்றோதுமிவர்பெயரிவர்கடம்மிற் .. ... *
குசன்கவுசாம்பிநாபன்கொள்மகோதயமாதூர்த்தன் .. ... *
வசந்தமாரணியமற்றைவசுகிரிவிரசம்வாழ்ந்தார் ... ... *

(இ-ப.) குசன்-குசநாபன்-குற்றமில்லாதகுணத்தையுடைய ஆதூர்த்தன்- வெற்றியினால் புகழ்பெற்ற-வசு என்றுசொல்லப்பட்ட பெயர்களுள்ள இவர்களுக்குள் கவுசாம்பியென்னும்நகரத்தில் குசனும், மகோதயமென்னு நக

ரத்தில் குசநாபனும்,வசந்தமாரணியமென்னும்நகரத்தில் ஆதூர்த்தனும்,கிரிவிரசமென்னும்நகரத்தில் வசு என்பவனுமிருந்துவாழ்ந்தார்கள்-எ-று. ()

அவர்களிற்குசநாபற்கேயையிருபதின்மரஞ்சொற் ... ... *
றுவரிதழ்த்தெரிவைநல்லார்தோன்றினர்வளருநாளில் ... ... *
இவர்பொழிற்றலைக்கணுயத்தெய்துழிவாயுவெய்தி ... ...*
கவர்மனத்தினனாயந்தக்கன்னியர்தம்மைநோக்கி ... ...*

(இ-பு.) அவர்களுக்குள் குசநாபனென்பவனுக்கு அழகியசொல்லையும் பவளம்போன்ற அதரத்தையுமுடைய நூறுபுத்திரிகள்பிறந்து வளருநாளில் ஒருநாள் உயர்ந்தஒருசோலையில் தோழியருடன்சென்றுவிளையாடிக்கொண்டிருக்கும்போது அவ்விடத்தில் வாயுதேவன்வந்து அவர்களை அபகரித்துக்கொள்ளவேண்டுமென்னுமனமுள்ளவனாய் அந்தக்கன்னியர்களைப்பார்த்து

கொடித்தனிமகரங்கொண்டான்குனிசிலைச்சரத்தாலுழந்தேன் *
வடித்தடங்கண்ணீரென்னைமணத்திரென்றுரைப்பவெந்தை ... *
அடித்தலத்துரைத்துநீரோடளித்திடினணைதுமென்ன ... *
ஒடித்தனன்வெரிநைவீழ்ந்தாரொளிவளைமகளிரெல்லாம் ...*

(இ-பு.) ஒப்பற்ற மீன்கொடிபெற்றுள்ள மன்மதன்கருப்புவில்லை வளைத்து ஏவும் பஞ்சபாணங்களால் வருந்தினேன் - மாம்பிஞ்சின் பிளப்பினையொத்த கண்களையுடைய கன்னியர்களே யென்னைப்புணருங்களென்ன அவர்கள் எங்கள் பிதாவினுடைய திருவடியில் விண்ணப்பஞ்செய்துகொண்டு அவர் நீருடன்கன்னிகாதானஞ் செய்துகொடுத்தால் சேருகிறோமென்ன அந்தவார்த்தையைக்கேட்ட வாயுதேவன் கோபங்கொண்டு அவர்கள் முதுகுகளையொடித்தான் ஒடித்தவளவில் ஒளியுள்ள மணிவளையல் பூணப்பட்டிருக்கும் கைகளையுடைய அக்கன்னியர்களெல்லாரும் முதுகொடிந்து வீழ்ந்தார்கள்—எ-று. (௯)

சமிரணனகன்றபின்னர்த்தையலார்தவழ்ந்துசென்றே ... *
அமிர்துகுகுதலைமாழ்கியரசன்மாட்டுரைப்பவன்று .. ... *
னிமிர்குழன்மடவார்த்தேற்றிநிறைதவன்சூளிநல்குந் ... ... *
திமிரறுபிரமதத்தற்களித்தனன்திருவனாரை ... ...*

(இ-பு.) இவ்வாறுசெய்த வாயுதேவன் போய்விட்டபின் அந்தக்கன்னியர்கள் தவழ்ந்துசென்று குசநாபனென்னும் அரசனிடத்திற்சொல்ல, அவ்வரசன்-வளர்ந்த அளகத்தையுடைய தன்பெண்களைத்தேற்றித் திருமகளையொத்த அந்தக்கன்னியரை நிறைந்ததவமுள்ள சூளியென்னுமுனிவர்பெற்ற அஞ்ஞானவிருள்நீங்கியபிரமதத்தனென்னுமுனிவருக்குக்கொடுத்தான்—எ-று. (௰)

சமிரணன்-விகாரம்-திமிரம்-எனற்பாலது-திமிரெனநின்றது.

அவன்மலர்க்கைகளுண்டகூனிமிர்ந்தழகுவாய்த்தார் ... ...*
புவனமுற்றுடையகோவுப்புகல்வரிதில்லாமைகேள்வி ... .. *
தவர்களிற்புரிசலோடுந்தனைகறத்தழலிறுப்பட்ண ... ... *
கவலைவேகத்துரங்கக்காதிவந்துதயஞ்செய்தான். ... ... *

(இ-ள்) அந்தப்பிரமதத்தமுனிவர் தாமரைமலர்போன்றகைகளால் தீண்டினவளவில் அந்தக்கன்னியர்கள் கூனிமிர்ந்து அழகுபொருந்தினார்கள் இவ்வுலகமுழுவதையும்தன்னதாகவுடைய குசநாபனென்னும்அரசன்புத்திரப்பேறிலாமையால் முனிவர்களைக்கொண்டு புத்திரகாமேஷ்டி செய்தவளவில் பெருமைபொருந்திய அவ்வேள்விக்குண்டத்தின்மத்தியிலிருந்து வேகமுள்ள குதிரைப்படையினையுடைய காதியென்பவன்வந்து பிறந்தான்—எ-று. (௰௧)

கவனம்-வேகம்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

அன்னவன்றனக்குவேந்தரசொடுமுடியுமீந்து ... ...*
பொன்னகரடைந்தபின்னர்ப்புகன்மகோதயத்தில்வாழு ... *
மன்னவன்காதிக்கியாங்கவுசிகியென்றுமாது ... ... *
முன்னர்வந்துதிப்பவந்தமுடியுடைவேந்தர்வேந்தன் ... ... *

(இ-ள்) குசநாபனென்னும் அரசன் அந்தக்காதியென்பவனுக்கு மகுடஞ்சூட்டித் தன் அரசாட்சியினையுங்கொடுத்துச் சுவர்க்கபதஞ்சேர்ந்தபின்பு மகோதயநகரத்தில் வாழ்கின்ற காதிமகாராசனுக்குக் கவுசிகையென்னும் பெண்முன்னும் பின்பு நானும்வந்து பிறந்தோம்—எ-று. (௰௨)

பிருகுவின்மதலையாயபெருந்தகைப்பிதாவுமொவ்வா ... ...*
இரிசிகன்றனக்குமாதையீந்தனனவளுமற்ற ... ... *
அருமறையவனுஞ்சின்னாளறம்பொருளின்பமுற்றி ... ... *
விரிமலர்த்தவிசோன்றன்பால்விழுத்தவம்புரிந்துமீண்டான் .*

(இ-ள்) நாங்கள்பிறந்து வளருநாளில் எங்கள்பிதாவாகிய காதிமகாராசன் பிருகுமகாரிஷியின் புத்திரராகிய பெருந்தகைமையினையுடைய தன்பிதாவும் ஒப்பாகாவென்னத்தக்க தவவொழுக்கத்தையுடைய இரிசிகமகாரிஷிக்குக் கவுசிகியைக்கொடுத்தான் அம்முனிவர்சிலநாள் அறம்பொருளின்பமென்னுமொழுக்கத்தில்நின்று பின்பு அதனைவிட்டுத்துறந்து நல்லதவஞ்செய்து பிரமனிடத்திற்சென்றார்—எ-று. (௰௩)

காதலன்சேணினீங்கக்கவுசிகிதரிக்கலாற்றாள் ... ... *
மீதுறப்படரானுற்றாள்விழுநதிவடிவமாகி ... ... *
மாதவர்க்கரசனோக்கிமாநிலத்துறுகணீக்கப் ... ... *
போதுகநதியாவென்றப்பூமகனுலகுபுக்கான் ... ... *

(இ-ள்) தன்கணவன் விண்ணுலகத்திற்செல்லவே கவுசிகியானவள் இவ்வுலகத்திலிருக்க மனம்பொறாதவளாய் மேன்மைபொருந்திய ஒருநதிவடிவங்கொண்டு கணவனுடன்விண்ணிற்செல்லலுற்றாள் அதைக்கண்ட இரிசிகமகாரிஷியானவர்நோக்கிப் பூலோகத்திலிருப்பவர்களதுதுன்பத்தைநீக்கும்பொருட்டு இந்த நதிவடிவமாகவேசெல்லென்றுசொல்லி அம்முனிவர்பிரமதேவனுலகத்தைச்சேர்ந்தார்—எ-று. (௰௪)

எம்முனாணங்கையிந்தவிருநதியாயினளென் ....*
றம்முனிபுகலக்கேளாவதிசயமிகவுந்தோன்றச் ... ... *

செம்மலுமிளையகோவுஞ்சிறிதிடந்தீர்ந்தபின்னர் ... ...*
மைம்மலிபொழிலியாதென்னமாதவன் கூறலுற்றான் .. ...*

(இ-பு) எமக்குமூத்தவளாகிய கவுசிகையென்பவள் பெருமைபொருந்திய இந்தநதிவடிவமாயினளென்று விசுவாமித்திரமுனிவர் சொல்லக்கேட்டு அதிசயங்கொண்டு ஸ்ரீராமமூர்த்தியும் இளையபெருமாளும சற்றிடஞ்சென்று தீர்ந்தபின்பு மேகங்கள் படிந்திருக்கும் ஒருசோலையைக்கண்டு இச்சோலையாதென்றுவினவ, விசுவாமித்திரமுனிவர் சொல்லுகின்றார்—எ-று. (௰௫)

தங்களுயகரிற்றெய்வந்தவம்பிறிதிலவென்றெண்ணு ... ... *
மங்கைமார்சிந்தைபோலத்தூயதுமற்றுங்கேளா ... ...*
யெங்களுன்மறைக்குந்தேவரறிவிற்கும்பிறர்க்குமெட்டாச் .. *
செங்கண்மாலிருந்துமேனாட்செய்தவஞ்செய்ததன்றே... ... *

(இ-பு) இந்தச்சோலை தங்கள்கணவனையன்றித்தங்களுக்குத்தெய்வம் வேறேயில்லையென்று கருதுகிற கற்புள்ளமாதர்களுடைய மனம்போலப் பரிசுத்தமாயிருப்பது இதன்பெருமையை யின்னுஞ்சொல்லுகின்றேன் கேட்பாயாக நான்குவேதங்களுக்கும்தேவர்கள் அறிவுக்கும்மற்றையாவர்க்குமெட்டாத எங்கள் ஸ்ரீமன்நாராயணமூர்த்தியானவர் ஆதிகாலத்தில் செவ்வியதாகிய தவஞ்செய்துகொண்டிருந்தது எ-று. (௰௬)

பாரின்பால்விசும்பின்பாலும்பற்றறப்படிப்பதன்றான் ....[ர்
பேரொன்பானவன்செய்மாயப் பெரும்பிணக்கொருங்குதேர்வா
ஆரொன்பானமலமூர்த்திகருதியதறிதறேற்றும் ... ... *
ஈராம்பானூழிகாலமிருந்தவமியற்றியிட்டான் .... .. *

(இ-பு) இவ்வுலகத்தினிடத்தி லிருப்பவர்களும், விண்ணுலகத்தி லிருப்பவர்களும், இருவகைப்பற்றுமற்று மோக்ஷமடையவிரும்பி யோதுவதற்குரியவருடையபெயரொன்று சொல்லும்படி யிருப்பவர் இத்தன்மையுள்ளவர் தவஞ்செய்யவேண்டுவதென்னையெனின், அவராற்செய்யப்படுகின்றபெரியமாயையின்மாறுபாட்டையெல்லாம் தெரிகின்றவர்கள் யாவருமிலரென்று சொல்லும்படியிருப்பவர் (அவரென்ன பயன்பெறக்கருதித்தவஞ்செய்தாரோவெனின்) அவர்கருதியதை யாமறியோம் இவ்வாறு நூறுஊழிகாலமிருந்து அரிதானதவஞ்செய்தார்—எ-று. (௰௭)

என்பான் என்னுமிரண்டினையும் அசையாகக் கூறுதலுமொன்று. இதனைப் புறனடையாற்கொள்க.

வேறு

ஆனவனிங்குறைகின்றவந்நாள்வாய் ... ...*
ஊனமின்ஞாலமொடுங்குமெயிற்றின் ... ... *
ஏனமெனுந்திறன்மாவலியென்பான் .. .. *
வானமும்வையமும்வவ்வுதல்செய்தான் ... ... *

(இ-பு) அத்தன்மையுள்ள திருமாலானவர் இவ்விடத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கிறகாலத்தி லிவ்வுலகமடங்கியபழுதில்லாத பல்லினையுடையதா

ன ஆதிவராகமேயென்றுசொல்லத்தக்கவல்லமையுள்ள மாவலியென்றுசொல்லப்படுகின்ற வொருதானவன் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் தன்வசப்படுத்திக்கொண்டான்—எ-று. (௰௮)

செய்தவர்வானவருஞ்செயலாற்று... ... ... *
நெய்தவழ்வேள்வியைமுற்றிடநின்றான் ... ...*
ஐயமிலசிந்தையனந்தணர்தம்பால்... ... ... *
வையமும்யாவும்வழங்கவலித்தான் ... ...*

(இ-பு.) செவ்விதான தவஞ்செய்துள்ள முனிவர்களும் தேவர்களும் செய்தற்கொண்ணுததாய் நெய் சொரிபத்தக்க ஒருயாகஞ்செய்து முடிக்கச்சந்தேகமில்லாதமனமுள்ளவனு யெத்தனித்துப்பிராமணர்களுக்குப் பூதானமுதலியதானங்களெல்லாங்கொடுக்க உடன்பட்டான்—எ-று. (௰௯)

ஆயதறிந்தனர்வானவர நந்நாண் ... ...*
மாயனைவந்துவணங்கியிரந்தார்... ... ...*
தீயவன்வெந்தொழிறீரனநின்றார் ... ...*
நாயகனும்மதுசெய்யநயந்தான் ... ...*

(இ-பு.) மாவலியுடன்பட்டிருப்பதைத்தேவர்களறிந்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தவஞ்செய்துகொண்டிருக்கும் அந்நாளிலிங்குவந்து அக்கடவுளை வணங்கி ஐயனே கொடியனுகிய மாவலிசெய்யும் தீமையைத் தீர்த்தருளுமென்று துதிசெய்துநின்றார்கள் யாவர்க்குமுதல்வனுகிய திருமாலும் அது செய்யத் திருவுளத்தில் விருப்பமுற்றார்—எ-று. (௨௰)

காலநுணித்துணர்காசிபனென்னும் ... ...*
வாலறிவற்கதிதிக்கொருமகவாய் ... .*
நீலநிறத்துநெடுந்தகைவந்தோர் ... ...*
ஆலமர்வித்தினருங்குறளானுன் ... ... *

(இ-பு.) அவ்வாறு விருப்பமுற்ற நீலநிறமுள்ள ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் முக்காலங்களையுங் கூர்ந்தறியத்தக்க காசிபனென்கிற பரிசுத்தமான ஞானமுள்ளமுனிவருக்கும் அவர்பத்தினியாகிய அதிதியென்பவளுக்கும் ஒப்பற்ற புத்திரனுகிவந்து ஆலமரமடங்கிய விதையைப்போல அரிய வாமனரூபமானுர்—எ-று. (௨௧)

முப்புரிநூலினன்முஞ்சியன்விஞ்சை... ... ...*
கற்பதோர்நாவனனற்பவிகையன் ... ...*
அற்புதனற்புதரேயறியுந்தன்... ... ... *
சிற்பதமொப்பதோர்மெய்க்கொடுசென்றான் ...*

(இ-பு.) மூன்றுபுரியாயிருக்கிற பூணூல்தரித்திருப்பவரும் முஞ்சிப்புற்கயிறுஅரையினிடத்தில் தரித்திருப்பவரும் வேதமோதுகின்றநாவையுடையவரும்பவித்திரம்தரித்த பொருந்திய கையையுடையவரும் அற்புதமானவருமா

இயவர்ஞானவான்கள் அறியும்படியான தன்னுடைய ஞானபதத்தை யொத்த தாகிய திருவுருவங்கொண்டுசென்றார்—எ-று. (௨௨)

அன்றவன்வந்ததறிந்துலகெல்லாம் ... ... *
வென்றவன்முந்திவியந்தெதிர்கொண்டா ... ... *
னின்றனினந்தணரில்லைநிறைந்தோய் ... ...*
என்றனினுயர்ந்தவரியாரினியென்றான் ... ... *

(இ-பு) அந்நாளில் அந்தவாமனமூர்த்திவந்ததைத்திரிலோகங்களையும்வெ ன்றவனாகிய மாவலியானவன் அறிந்து சந்தோஷித்து அவர்வருவதற்குமுன் எதிர்கொண்டுவணங்கித் தவம்நிறைந்தவரே யும்மைப்பார்க்கிலும் உயர்ந்தபி ராமணர்களில்லை இத்தன்மையுள்ளதேவரீரைத்தரிசிக்கப்பெற்றேனாகையால் என்போலுயர்ந்தவர்களினி யாரிருக்கின்றார்களென்றான்—எ-று. (௨௩)

ஆண்டகையவ்வகைகூறவறிந்தோன் ... ...*
வேண்டினர்வேட்கையின்மேற்படவீசி .. ... *
நீண்டகையாயினிநின்னுழைவந்தோர் ... ...*
மாண்டவரல்லவர்மாண்பிலரென்றான் ... ... *

(இ-பு.) மாவலியவ்வாறு சொல்லியவளவில் வாமன மூர்த்தியானவர் விரு ம்பிவந்தவர்கள் ஆசையினு மதிகமாகக்கொடுத்துப் புகழால் நீண்ட கையை யுடையவனே யினிமேலும் உன்னிடத்தில்வந்தவர்களே மாட்சிமையடைந்த வர்களாவார்கள் வாராதவர்கள்மாட்சிமையில்லாதவர்களென்றார்-எ-று. (௨௪)

சிந்தையுவந்தெதிரொன்செய்கவென்றான் ... ... *
அந்தணன்மூவடிமண்ணருளுண்டேல் ... ... *
வெந்திறலாயதுவேண்டுமெனுமுன் ... ...*
றந்தனனென்றனன்வெள்ளிதடுத்தான் ... .*

(இ-பு) வாமனமூர்த்தியானவ ரிவ்வாறுசொல்ல மாவலிமனமகிழ்ந்து எதி ருத்தரவு நான்செய்யவேண்டியதென்னவென்றான் பிராமணனாகிய வாமன மூர்த்தியானவர் என்காலடியால் மூன்றடிநிலங்கொடுக்கிறதாயிருந்தால் அது வேநமக்கு வேண்டுமென்று சொல்வதற்குமுன் மாவலியவ்வாறே கொடுத்தே னென்றான்-அதைக்கேட்டுக்கொண்டிருந்த சுக்கிரனானவன் மாவலியைநோ க்கிக்கொடாதேயென்றுதடுத்தான்—எ-று (௨௫)

கண்டதிறத்திதுகைதவமைய .... *
கொண்டனிறக்குறளென்பதுகொள்ளேல் ... ...*
அண்டமுமுற்றுமகண்டமுமேனுள் ... ... *
உண்டவனாயிதுணர்ந்துகொளென்றான் ... . *

(இ-பு.) இறைவனே கண்டதன்மையுடைய இதுவஞ்சனை மேகநிறமுள்ள வாமனமென்று எண்ணாதே அண்டங்களையு மற்ற எல்லா உலகங்களையுமுண் ணுளினுண்ட ஸ்ரீமந்நாராயணமூர்த்தியென்று அறிந்துகொள்வாயாக-எ-று.

நினைக்கிலையென்னைநிமிர்ந்திடவந்து... ... ...*
தனக்கியலாவகைதாழ்வதுதாழ்வில் ... ...*
கனக்கரியானதுகைத்தலமென்னின் ... ...*
எனக்கிதன்மேனலமியாதுகொலென்றான்... ... *

(இ-பு) சுக்கிரன் சொன்னவார்த்தையை மாவலிகேட்டு ஐயா என்னைமேலாகுவண்ணம் தம்முடையதகுதிக்கு ஏற்காதவகையையேற்றுக்கொண்டு மேகம்போலக்கருநிறமுள்ள ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினுடையகைதாழுமென்றால் எனக்கு இதனின்மேலான நன்மையென்னிருக்கின்றது நீயிதனை நினைக்கிலையென்றான்—எ-று. (உஎ)

துன்னினர்துன்னலென்பதுசொல்லார்... ... ... *
முன்னியநன்னெறிநூலவர்முன்வந்து ... ...*
துன்னியதானமுயர்ந்தவர்கொள்க ... ... *
என்னினிவன்றுணையாவருயர்ந்தார் ... ... *

(இ-பு.) நன்மார்க்கத்தைக்கருதியபெரியோர்கள்தங்களிடத்தில்வந்துகருதியதானங்களையுயர்ந்தவர்கள் கொள்ளக்கடவர்களென்று கொடுப்பார்களேயல்லது தானங்கொள்ளவந்தவர்களைநோக்கி இவர்கள் சிநேகரென்றும் இவர்கள் பகைவர்களென்றும் சொல்லித் தடுத்துவிடார்களென்று சொல்லுவார்களானால் இவருக்கொப்பாக மற்றயாவர் உயர்ந்தவர்கள்—எ-று. (உஅ)

வெள்ளியையாதல்விளம்பினைமேலோர்... ... ...*
வள்ளியராகவழங்குவதல்லால் ... ... *
எள்ளுவவென்சிலவின்னுயிரேனுங் ... ...*
கொள்ளுதறீதுகொடுப்பதுநன்றால் ... ...*

(இ-பு.) குருவே நீ வெள்ளியென்னும் பெயருடையையாதலால் இவ்வாறு எளியவார்த்தையைச்சொல்லினை மேலோர்கள் வள்ளியராகும்பொருட்டு இரப்பவர்களுக்குக் கொடுப்பதேயல்லாமல் சிலவற்றையிகழ்ச்சிசெய்வதென்ன ஒருவன் தன் இனிய உயிரினையேயானாலுமிரந்து பெற்றுக்கொள்ளுதல் தீது அவ்வாறன்றித் தன்னுயிரை யாயினுங்கேட்டால் கொடுப்பதே நன்று

மாய்ந்தவர்மாய்ந்தவரல்லர்கண்மாயா... ... ... *
ஏந்தியகைகொடிரந்தவரெந்தாய்... ... ...*
வீந்தவரென்பவர்வீந்தவரேனும் ... ... *
ஈந்தவரல்லதிருந்தவர்யாரே ... ... *

(இ-பு) உலகத்திலிறந்தவர்களென்றுசொல்லப்படுகின்றவர்கள் இறந்தவர்களல்லர் எங்களய்யனே மற்றயாவரென்னின் இறவாமலிருந்து கையேந்திக்கொண்டு இரப்பவர்களே. யிறந்தவர்களென்று சொல்லப்படுகின்றவர்கள் இறந்தவர்களேயானாலும் இரந்தவர்களுக்குக்கொடுத்தவர்களல்லதிருப்பவர்கள்யார் யாருமில்லை—எ-று. (ஙய)

கையேந்திக்கொண்டு ஒருவனிடத்திற்சென்றுஇரப்பவர்கள் உயிரோடிருப்பவர்களே யானாலும் அவர்கள் இறந்தவர்களே இரப்பவர்களுக்குக் கொடுத்துக்கொண் டிருந்தவர்கள்

இறந்துவிட்டாலும் அவர்கள்புகழுடம்பு பெற்றவர்களாதலால் எந்நாளுமிருப்பவர்களே-என்பதுதாற்பரியம்.

ஒன்றாவுலகத்துயர்ந்தபுகழல்லால், பொன்றாதுநிற்பதொன்றில், வசையொழியவாழ்வாரே வாழ்வாரிசையொழிய,வாழ்வாரேவாழாதவர் என்னுந் திருக்குறள்களாலுமுணர்க.

அழிப்பவருமேபழிசெய்குநருமல்லர் ... ...*
கொடுப்பவர்முன்புகொடேலெனநின்று... ... .*
தடுப்பவரேபகைதம்மையுமன்னர் ... ... *
கெடுப்பவரன்னதோர்கேடிலையென்றான் .. ...*

(இ-பு.) அழிக்கும்படி யரியபழியை யொருவனுக்குச்செய்கின்றவர்களும் அவனுக்குப்பகையாளிகளல்லர் இரப்பவர்களுக்குக்கொடுப்பவர்களெதிரிலிருந்து கொடுக்கவேண்டாவென்று தடுப்பவர்களே பகைவர்கள்-அவர்கள்தங்களையுங் கெடுத்துக்கொள்கிறவர்களாம் அதற்கொப்பாகியகேடுவேறில்லையென்றான்—எ-று (௧௧)

ஒருவருக்கொருவர் கொடுப்பதைத் தடுப்பவர்கள் பாவத்தை அடைவார்கள் ஆதலால் - தம்மையுமன்னர்கெடுப்பவரென்றார்.

கட்டுரையிற்றமைகைத்துளபோதே... ... ...*
இட்டிசைகொண்டறனெய்தமுயன்றோர் ... ... *
உட்டெறுவெம்பகையாவதுலோபம்... ... ...*
விட்டிடலென்றுவிலக்கினர்தாமே... ... ...*

(இ-பு) வேதவாக்கியத்தின்படி தங்கள் பொருளுள்ளபோதே யிரப்பவர்களுக்குக்கொடுத்துப் புகழ்கொண்டு தருமம்பொருந்த முயலுகின்றவர்கள் உள்ளத்தைக்கெடுக்கும்பகையாவது உலோபகுணம் ஆதலா லந்தக்குணமானது விட்டுவிடத்தக்கதென்று விலக்கினார்கள்—எ-று. (௧௨)

வேறு.

எடுத்தொருவருக்கொருவரீவதனின்முன்னே ... *
தடுப்பதுநினக்கிதழகோதகைவில்வெள்ளி... ...*
கொடுப்பதுவிலக்குகொடியோயுனதுசுற்றம் ... *
உடுப்பதுவுமுண்பதுவுமின்றிவிடுகின்றாய்.... ...*

(இ-பு.) ஒருவருக்கொருவர் எடுத்துக்கொடுப்பதன் முன்னே தடுப்பது உனக்கழகோ தகுதியில்லாதவெள்ளியே கொடுப்பதை விலக்குகின்ற கொடியவனே உன்னுடையசுற்றத்தாரும்நீயும் உடுக்கப்படுபொருளும் உண்ணப்படுபொருளும் இல்லாது விடுகின்றாய்—எ-று. (௧௩)

கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றமுடுப்பதூஉ,முண்பதூஉமின்றிக்கெடும், என்னுந் திருக்குறளாலுமுணர்க.

வேறு.

முடியவிம்மொழியெலாமொழிந்துமந்திரி ......*
கொடியனென்றுணர்த்தசொல்லொன்றுங்கொண்டிலன்
அடியொருமூன்றுநீயளந்துகொள்கென... ... *
நெடியவன்குறியகைநீரினீட்டினான்... ... ...*

(இ-பு.) மாவலியானவன் இந்தச்சொற்கள்முழுவதுஞ்சொல்லிச் சுக்கிரன் கொடியவனென்று அவன்சொற்களொன்று மேற்றுக்கொள்ளாமல் உம்முடையகாலளவையால் மூன்றடிநிலம் அளந்துகொள்ளுமென்று வாமனமூர்த்தியின்குறியகையில் நீரையிட்டுக்கொடுத்தான்—எ-று. (௬௪)

கயந்தருநறும்புனல்கையிற்றீண்டலும்... ... *
பயந்தவர்களுமிகழ்ந்தவர்களும்பார்த்தெதிர் ... *
வியந்தவர்வெருக்கொளவிசும்பினோங்கினான்... ...*
உயர்ந்தவர்க்குதவியவுதவிபோற்பவ்வ... ... *

(இ-பு) வாவியிலுண்டாகிய புனலானது தம்முடையகையிற்றீண்டினவளவில் ஈன்றவர்களும்பழிக்கத்தக்கவாமனமூர்த்தியானவர்தம்மைப்பார்த்தெதிரில் அதிசயித்தவர்களும் அச்சங்கொள்ளும்படி பெரியோர்களுக்குதவிய உதவிபோல ஆகாயமளவும் வளர்ந்தோங்கினார்—எ-று. (௬௫)

நின்றகான்மண்ணெலாநிரப்பியப்புறஞ் ... ... *
சென்றுபாவிற்றிலசிறிதுபாரெலாம் ... ... *
ஒன்றுவானகமெலாமொடுக்கியும்பரை... ... ... *
வென்றதாண்மீண்டதுவெளிபெறாமையே... ... *

(இ-ப.) பூமியில்நின்றதிருவடியானது பூமிமுழுவதும்பரந்து பூமிசிறிதென்று அப்புறஞ்சென்றுபரந்ததில்லை வானத்திற்சென்றமற்றொருதிருவடியானது பொருந்திய அவ்வானத்தையெல்லாம் தனக்குள்ளடக்கிக்கொண்டு விண்ணுலகைவென்று மேலேசெல்லுதற்கு வெளியிலாமையால் திரும்பிவிட்டது—எ-று. (௬௬)

உலகெலாமுள்ளடியடக்கிமேபோடிக் ... ... *
கலகிலாதவ்வடிக்கன்பன்மெய்யதாம்... ... ... *
இலகுலாந்துழாய்முடியேகநாயகன் ... .*
சிலகுலாந்தோளிணைச்சிறியன்சாலவே... ... ... *

(இ-பு) கோதண்டத்துடன் விளங்கிக்கொண்டிருக்கும் புசங்களையுடையஸ்ரீராமனே யிலைகள்பொருந்திய துளசிமாலையைச்சூடியதிருமுடியையுடையவொப்பற்ற ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் பூமியெங்கும்பரவவைத்த திருவடியால் உயிர்களுக்குப் பழுதுநேரிடாவண்ணம் அவ்வுயிர்களையெல்லாம் உள்ளடியிலடக்கிக்கொண்டு மற்றொருதிருவடிக்கு அளவில்லாமையால் அன்புள்ளவனாகிய மாவலியின்சிரமே யவ்வடிக்களவாயிற்று - அக்கடவுளை மிகுதியுஞ்சிறியன்—எ-று. (௬௭)

தாங்கேட்ட மூன்றடியி லிரண்டுநிக்கிருந்தது மற்றோரடிக களவில்லையே யென்ன அய்யனே யவ்வடிக்களவு அடியேன் முடிதானென்ன அம்முடியில் பாதத்தைவைத்து அவனைப்பாதாளலோகத்திலிருக்கும்படியழுத்திவிட்டாரென்பதுநிகழ்ந்தசரிதம்.

உரியதிந்திரற்கிதென்றுலகமீந்துபோய்...... ...*
விரிதிரைப்பாற்கடற்பள்ளிமேவினான் ... ...*

கரியவனுலகெலாங்கடந்ததாளிணை... ... ... *
திருமகள்கரந்தொடச்சிவந்துகாட்டவே... ... *

(இ-பு.) தேவேந்திரனுக்குரியதென்று இவ்வுலகத்தைக்கொடுத்தருளிவிட்டுப்போய் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் உலகங்களையெல்லாங்கடந்ததம்முடைய இரண்டு திருவடிகளையும் பெரியபிராட்டியார் கருமைகதிருனல்சிவந்துகாட்டும்படி பரந்த அலைகளையுடைய திருப்பாற்கடலி லறிதுயி லமர்ந்தருளினூர்—எ-று. (௩௮)

ஆதலாலருவினையறுக்குமாரிய... ... ... *
காதலாற்கண்டவர்பிறவிகாண்குறூர்... ... ... *
வேதநான்முறையால்வேள்விமுற்றுவேற்... *
சீதலாதிலைவேறிருக்கற்பாலதே .... *

(இ-பு.) தீர்த்தற்கரியதாகிய வினையையறுக்கும் ஸ்ரீராமனே இச்சோலை இத்தன்மையுடையதாதலால் விதனையிச்சையுடன்கண்டவர்கள் மறுபடிபிறப்பென்பதைக்காணூர்கள் வேதசாஸ்திரமுறைமைப்படி யாகஞ்செய்கின்றவனக்கு இருக்கும் பான்மையுடையதாகிய இடம் இதுவேயல்லாமல் வேறில்லையென்றறிவாயாக—எ-று. (௩௯)

ஈண்டிருந்தியற்றுவனியாகமியானெனு... ... *
நீண்டபூம்படமுவத்துநெறியினெய்திட்பின் ... *
வேண்டுவகொண்டுதன்வேள்விமேவினான்... ...*
காண்டகுகுமரரைக்காவலேவியே... ... ... *

(இ-பு.) அவ்வாறுசொல்லிமுனிவர் ஸ்ரீராமனைநோக்கிநானிவ்விடத்திலிருந்து வேள்விசெய்கின்றேனென்றுசொல்லி நீண்டதாகியமலர்முதலியவைகளையுடைய அவ்வனத்துநெறியிலெய்தி யாகத்துக்குவேண்டிய பொருள்களைச்சேகரித்துக்கொண்டுவந்து யாவருங்கண்டுமகிழத்தக்க சௌந்தரியமுள்ள அவ்விரண்டு இராசகுமாரர்களையுங் காவலாகவைத்துத்தான்செய்யும்யாகத்துக்குத்தொடங்கினர்—எ-று. (௪௰)

என்னுதற்காக்கரிதிரண்டுமூன்றுநாள்... ... *
விண்ணவர்க்காக்கியமுனிவன்வேள்வியை ... ...*
பண்ணினைக்காக்கின்றமன்னன்மைந்தர்கள் ... .. *
கண்ணிணைக்காக்கின்றவிமையிற்காத்தனர் ... *

(இ-பு.) அவ்வாறுமுனிவராலேவப்பட்ட தசரதமகாராசன்புத்திரர்கள் நினைப்பதற்குஞ்செய்வதற்குமரிய தேவர்கள்பொருட்டுச்செய்கின்றவிசுவாமித்திரமுனிவருடையயாகத்தை ஆறுநாளுங்கண்களைக்காக்கும்இமைகள்போலக்காத்தார்கள்—எ-று. (௪௧)

காத்தனர்திரிகின்றகாளைவீரரின்... ... ... *
மூத்தவன்முழுதுணர்முனியைமுன்னிநீ... ... *

தீத்தொழிலியற்றுவரொன்றதீயவர் ... ... *
எத்தகுங்குணத்தினர்வருவதென்றென்றான் ... *

(இ-பு.) இவ்வாறு அந்தயாகத்தைக் காத்துக்கொண்டுலாவிவருகின்றகாளை ப்பருவமுள்ளவீரர்களிருவரில் மூத்தவராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் முற் றுமுணர்ந்த விசுவாமித்திரமுனிவரைநோக்கி யாவராலும்புகழ்ந்துகூறுதற் கரியநற்குணமுள்ள சுவாமீ தேவரீர் கொடியதொழில் செய்வார்களென்ற தீயவர்வருவது என்றைக்கோவென்று வினவினார்—எ-று. (சஉ)

வார்த்தைமாறுரைத்திலன்முனிவன்மௌனியாய்ப் *
போர்த்தொழிற்குமரனுந்தொழுதுபோந்தபின் *
பார்த்தனன்விசும்பினைப்பருவமேகம்போல்......*
ஆர்த்தனரிடித்தனரசனியஞ்சவே ... ...*

(இ-பு.) இவ்வாறு வினவியதற்கு விசுவாமித்திரர் பிரதியுத்தரஞ்சொல்லா மல் மௌனியாயிருந்தார் ஸ்ரீராமமூர்த்தியதைநோக்கி யவரைவணங்கியாகசா லையைவிட்டுப்புறத்தில்வந்தபின்பு ஆகாயத்தைப்பார்த்தார் (அவ்வாறு பார் த்தபோது) அரக்கர்கள் கார்கால மேகம்போல்வந்து இடியும் அஞ்சும்படி ஆரவாரித்து அதட்டினார்கள்—எ-று. (சங)

எய்தனரெறிந்தனரெரியுநீருமாய் ... ... *
பெய்தனர்பெருவரைபிடுங்கிவீசினர் ... ... *
வைதனர்தெழித்தனர்மழுக்கொண்டோச்சினர் ...*
செய்தனரொன்றலதீயமாயமே... ... ... *

(இ-பு) பாணங்களேவினார்கள் வேல்முதலிய ஆயுதங்களையெறிந்தார்கள் பெரியமலைகளைப்பிடுங்கி வீசினார்கள்-மழுவாயுதங்களையெடுத்துவீசினார் கள்-வைதார்கள்-அதட்டினார்கள்- தீயும்நீருமாகப் பொழிந்தார்கள்-இவ்வா றுவிதமேயன்றிப் பலபலதீயமாயங்கள் செய்தார்கள்-(அன்றியும்)—எ-று.

ஊனுகுபடைக்கலமுருத்துவீசினர் ... .*
கானகமறைத்தனகாலமாரிபோன் ... ... *
மீனுகுதிரைக்கடல்விசும்புபோர்த்தென ... ... *
வானகமறைத்தனவளைந்தசேனையே... ... ... *

(இ-பு.) பகைவர் நிணங்களுடன் விளங்கிக்கொண்டிருக்கும் ஆயுதங்களை ப்பின்னும் அதிகமாகக் கோபித்துவீசினார்கள்-அவைகாலத்திற் பெய்யவரு கின்றமேகம்போல அவ்வனத்தைமறைத்தன,மீன்கள் விளங்கிக்கொண்டிரா நின்ற சமுத்திரமானது ஆகாயத்தைமறைத்தாற்போல அவ்வரக்கருடன்வந் துவளைந்தசேனையானது ஆகாயத்தைமறைத்தன—எ-று. (சச)

வில்லொடுபகழிவாண்மிடைந்துலாவிடப் ... ...*
பல்லியங்கடுப்பினிடிக்கும்பல்படை... ... *
ஒல்லெனவுரறியவூழிப்பேர்ச்சியுள் .. .. *
வல்லைவந்தெழுந்தகார்மழையும்போன்றவே .. *

(இ-பு.) வில்லும் பாணங்களும் வாளாயுதமும் நெருங்கிப்பிரகாசிக்கவும் பேரிமுசலிய பலவாத்தியங்கள் கோஷிக்கவும் வந்த பலசேனையானது ஒல்லெனஒலித்தும் ஊழிமுடிவில் விரைவாகவந்தெழுந்த மேகமும்போன்றது மேகம் மின்னலுடனும்,இடியுடனும்,வருவதுபோல சேனையும்வாள்முதலியபடைகளுடனும் வந்தது என்பது தாற்பரியம்.

கவருடையெயிற்றினர்கடித்தவாயினர் ... ... *
துவர்நிறப்பங்கியர்சுழல்கட்டீயினர்... ... ... *
பவர்சடையந்தணன்பணித்ததீயவர்... ... ... *
இவரெனவிலக்குவற்கிராமன்காட்டினான்... ... *

(இ-பு.) பிரிவாகப்பொருந்திய பற்களையுடையவர்களும் உதட்டினைக்கடித்துக்கொண்டிருப்பவர்களும் சிவந்தநிறமுள்ளதலைமயிரினையுடையவர்களும் சுழலுகின்ற கண்களாற் தீயைச்சொரியப் பட்டவர்களுமாகிய விவர்கள் நெருங்கிய சடையையுடைய விசுவாமித்திரர்சொல்லிய கொடியவர்களென்று இளையபெருமாளுக்கு ஸ்ரீராமர்காட்டினார்—எ-று. (சஎ)

கண்டவக்குமரனுங்கடைக்கண்டீயுக... ... ... *
விண்டனைநோக்கித்தன்வில்லைநோக்கினான் ... ... *
அண்டர்நாயகவினிக்காண்டியீண்டவர் ... ... *
துண்டம்வீழ்வனவெனத்தொழுதுசொல்லினான் ... *

(இ-பு.) அரக்கரைக்கண்ட இலக்குமணப்பெருமாள் கடைக்கண்ணினின்றும் தீப்பொறிசிதறும்படி ஆகாயத்தைநோக்கித் தன்வில்லையும் பார்த்துத் தேவர்கள்நாதனே யிப்பொழுது இவ்விடத்தில் அவர்கள் துண்டம்விழுவனவற்றைப்பாரென்று வணங்கிச்சொல்லினான்—எ-று. (சஅ)

தாம்வேலரக்கர்தநிணமுஞ்சொரியும்...... ... *
ஓமவெங்கனலிடையுகுமென்றுன்னியத்... ... *
தாமரைக்கண்ணனுஞ்சரங்களைகொடு... ... *
கோமுனியிருக்கைசெய்யார்கூடமாக்கினான் ... ... *

(இ-பு.) டைகின்ற வேலேந்திய அரக்கர்களுடைய நிணமும் உதிரமும் ஓமாக்கினியில் சிந்துமென்றுகருதித் தாமரைமலர்போன்ற கண்களையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் அம்புகளால் முனிசிரேஷ்டராகிய விசுவாமித்திரரிருக்குமிடத்தையொருகூடமாகச்செய்தார்—எ-று. (சகூ)

நஞ்சடவெழுதலுநடுங்கிநாண்மதிச் ... ... *
செஞ்சடைக்கடவுளையடையுந்தேவர்போல்... ... *
வஞ்சனையரக்கரைவெருவிமாதவர்... ... ... *
அஞ்சனவண்ணநின்னபயமியாமென்றார்... ... *

(இ-பு) ஆலகாலவிஷமானது கொல்லும்படி கடலில் எழுந்தபோது நடுங்கிப்பிறையணிந்த செஞ்சடையையுடைய பரமசிவனையடைக்கலமாக அ

டைந்த தேவர்கள்போல அவ்வனத்திருக்கு முனிவர்களெல்லாரும் வஞ்சனை செய்கின்ற அரக்கருக்குப்பயந்து நீலநிறமுள்ள ஸ்ரீராமனை நாங்கள் உன்னையடைக்கலமென்றார்கள்—எ-று. (௫௰)

கவித்தனன்கரதலங்கலங்கணிதொனச் ... ... *
செவித்தலநிறுத்தினன்சிலையின்தெய்வநாண்... ... *
புவித்தலங்குருதியின்புணரியாக்கினன் ... ... *
குவித்தனனரக்கர்தஞ்சிரத்தின்குன்றமே... ... *

(இ-பு.) ஸ்ரீராமமூர்த்தியானவர் அம்முனிவர்களைநோக்கி நீங்கள் மனங்கலங்கவேண்டுவதில்லையென்று கையமைத்துக் கோதண்டத்திலேற்றிய தெய்வத்தன்மையுள்ள நாணினைவலித்துத் தன்னுடைய காதளவுநிறுத்தி (அம்புகளையேவி) அரக்கர்கள் தலைகளையறுத்து மலைபோற்குவித்துப்பூமியை யுதிரக்கடலாக்கினார்—எ-று. (௫௧)

திருமகணாயகன்றெய்வவாளிதான் ... ... *
வெருவருதாடகையயந்தவீரர்கள்... ... ... *
இருவரிலொருவனைக்கடலினிட்டதங் ... ... *
கொருவனையந்தகபுரத்தினுய்த்ததே...... ... *

(இ-பு.) இலக்குமிநாயகனாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் ஏவிய தேவாஸ்திரமானது யாவரும் அஞ்சும்படியான செய்கையையுடைய தாடகைபெற்ற வீரர்களிருவரில் ஒருவனாகிய மாரீசனென்பவனைக்கடலிலொளிக்கச்செய்து மற்றொருவனாகிய சுவாகு என்பவனையமபுரத்திற்செலுத்திவிட்டது—எ-று.

மாரீசன்மேலேவிய அஸ்திரம்- காந்தாருவாஸ்திரம். சுவாகுவின்மேலேவிய அஸ்திரம் ஆக்கிநேயாஸ்திரம். மற்ற அரக்கர்மேலேவிய அஸ்திரம்- வாயுவியாஸ்திரம்.

துணர்த்தபூந்தொடையலான்பகழிதூவினான்... *
கணத்திடைவிசும்பினைக்கவித்துததூர்த்தலாற் ... *
பிணத்திடைநடந்திவர்பிடிப்பரின்றென்று ... ... *
உணர்த்தினரொருவர்முன்னொருவரோடினார் ... *

(இ-பு.) கொத்துவிட்டபூமாலைசூடிய ஸ்ரீராமன் பாணங்களையேவினான் அவைகள் கணப்பொழுதில் அரக்கர்களைக்கொன்று ஆகாயத்தை மறைத்து நிறைத்தமையால் இனி இவர்களிப்பிணத்தின்மேல் நடந்துவந்து நம்மைப்பிடித்துக்கொள்ளுவார்களென்று சொல்லிக்கொண்டு ஒருவர்முன் ஒருவராக ஓடினார்கள்—எ-று. (௫௩)

ஓடினவரக்கரையுருமின்வெங்கணை ... ... *
கூடினகுறைத்தலைகுதித்துக்கூத்துநின் ... ... *
றாடினவலகையுமையல்கீர்த்தியைப்... ... ... *
பாடினபாந்தனபறவைப்பந்தரே ... ... *

(இ-பு.) இவ்வாறு ஓடின அரக்கர்களை யிடிபோல வெவ்விய அம்புகள்விடாது தொடர்ந்தன, கவந்தங்கள் குதித்து நின்று கூத்தாடின, பேய்கள் ஸ்ரீராமமூர்த்தியின்புகழினைப்பாடின, கழுகுமுதலிய பக்ஷிகள் பந்தல்போலப் பாந்தன—எ-று. (௫௪)

பந்தரைக்கிழித்தனபரந்தபூமழை ... ... *
அந்தரதுந்துமிமுழங்கினார்த்தன ... ... *
இந்திரன்முதலியவமரரீண்டினார் .. .. *
சுந்தரவில்லியைத்தொழுதுவாழ்த்தியே ... ...*

(இ-பு.) தேவர்களால் பொழியப்பட்டுப்பரந்த பூமழையானது பறவைப்பந்தலைக்கிழித்தன, தேவதுந்துமி மேகம்போல முழங்கின, தேவேந்திரன்முதலாகிய தேவர்கள் ஆகாயத்தில்நெருங்கி யழகுள்ளஸ்ரீராமமூர்த்தியை வணங்கிவாழ்த்தினார்கள்—எ-று. (௫௫)

வேறு.

புனிதமாதவராசியின்பூமழைபொழிந்தார் ... ... ●
அனையகானத்துமரங்களுமலர்மழைசொரிந்த ... ... *
முனியுமவ்வழிவேள்வியைமுறைமையின்முற்றி ... ... *
இனியசிந்தையனிராமனுக்கினையனவிசைத்தான் ,. ... *

(இ-பு.) பவித்திரமுள்ள முனிவர்கள் ஆசீர்வாதமாகிய மழைபொழிந்தார்கள்- அத்தன்மையுள்ள வனத்துவிருக்ஷங்களும் மலர்மழைபொழிந்தன, அவ்விடத்தில் விசுவாமித்திரமுனிவரும் யாகத்தை முறைமையாகநிறைவேற்றி இனியசிந்தையையுடையவராய் இராமமூர்த்திக்குஇவ்வித வுபசாரவார்த்தைகள்சொல்லினார்—எ-று. (௫௬)

பாக்கியம்மெனக்குளதெனநினைவுறும்பான்மை ... ... *
போக்கிநிற்கிதுபொருளெனவுணர்கிலன்புவனம் ... . *
ஆக்கிமற்றவையகிலமுமணிவயிற்றடக்கிக் ... ...*
காக்குநீயொருவேள்விகாத்தனையெனுங்கருத்தே ... ... *

(இ-பு.) ஸ்ரீராமனே நீ இந்தக்காரியஞ்செய்ததைக் குறிக்குமிடத்து எனக்குப்பாக்கியமுள்ளதாயிருக்கின்றதென்று நினைக்கின்றேனேயல்லாமல் அந்நினைவைவிட்டு உலகங்களையுண்டாக்கி யவைகளையெல்லா முன்னழகிய வயிற்றுக்குள்ளடக்கிக் காக்கும் நீயிந்தயாகத்தைக்காத்ததை யுனக்குப்பெரிதாக நினைக்கின்றிலேன் — எ-று. (௫௭)

என்றுகூறியபின்னரவ்வெழின்மலர்க்கானத் ... ... *
தன்றுதானுறைந்தருந்தவமுனிவரோடிருந்த ... ...*
குன்றுபோற்குணத்தானெதிர்கோசலக்குரிசில் .. .. *
இன்றியான்செயும்பணியென்கொல்பணியெனவிசைத்தான்...*

(இ-பு.) இவ்வாறு முனிவர்கூறியபின்பு அழகுள்ளமலர்கள் நிறைந்த அவ்வனத்திலன்றுதங்கி யங்குள்ள அரியமுனிவருடனிருந்து மலைபோன்ற நற்குணங்களுள்ள விசுவாமித்திரமுனிவனை நோக்கி - தசரதமகாராசன் புத்திரராகிய ஸ்ரீராமர்இன்றுநான்செய்யும்பணியென்னவென்றார்-எ-று. (௫௮)

நற்குணங்களாவன- அறவுமெய்யுணர்வு அவாவின்மை முதலியனவாம். சலியாமையும் பெருமையும்பற்றிக் குணங்களைக் குன்றாகவுருவகஞ் செய்தார். குணஞ்சாதியொருமை-இதனைக்குணமென்னுங் குன்றேறிநின்றார் என்னுந் திருக்குறளானுங்காண்க.

அரியபான்சொலினையநிற்கரியதொன்றில்லை ... ... *
பெரியகாரியமுளவவைமுடிப்பதுபின்னர் ... ... *
விரியும்வார்புனன்மருதஞ்சூழ்மிதிலையர்கோமான் ... ... *
புரியும்வேள்வியுங்காண்டுநாமெழுகென்றுபோனான் ... .. *

(இ-பு) அருமையான காரியங்களாக நான்சொன்னாலும் அய்யனே யுனக்கு அரியதானகாரியமொன்றுமில்லை. ஆனால் பெரியகாரியமிருக்கின்றன, அவைகளைமுடிப்பதுபின்பேயன்றிஇப்போதல்லஆதலால்பரந்துநீண்டநீர்வளமுள்ளவயல்சூழ்ந்த மிதிலைநகரிலுள்ளார்க்கரசனாகிய சனகமகாராசனுடையவேள்வியைக்காணவேண்டும்புறப்படுவாயாகவென்று சொல்லிச்சென்றார்.

௯-வது-வேள்விப்படலமுற்றிற்று.

ஆ-திருவிருத்தம்-௪௨௨.

ஸ்ரீராமஜெயம்.

பாலகாண்டம்.

௰-வது-அகலிகைப்படலம்.

அலம்புமாமணியாரத்தோடகிலளைபுளின... ... ...*
நலம்பெய்பூண்முலைநாகிளவஞ்சியாமருங்குற் ... ... *
புலம்புமேகலைப்புதுமலர்ப்புனையறற்கூந்தற்... ... ...*
சிலம்புசூழுங்காற்சோணமாந்தெரிவையைச்சேர்ந்தார் ... ...*

(இ-பு.) அலைகின்ற பெரியமணிகளுடனும், சந்தனத்துடனும், அகில்கட்டைபொருந்திய மணற்குன்றாகிய இன்பத்தைத்தருகின்ற பூண்முலையினையு மிளமைபொருந்திய பூங்கொடியாகிய இடையினையும், புதுமலராகியவொலிக்குமேகலாபரணத்தினையும்,கருமணலாகிய அலங்கரிக்குங்கூந்தலையும்,சிலம்புசூழுங்காலையுமுடைய சோணையாறென்னு மாதினிடத்திற்சேர்ந்தார்கள்

யாற்றினைக்குறிக்குமிடத்துச் சிலம்புசூழுங்காலென்றதனை மலையைச்சூழும் கால் என்னும், மாதரைக்குறிக்குமிடத்துச் சிலம்பாகிய அணிபொருந்திய காலென்றும், பொருள்கொள்க.—தனத்தில் மணிகளுடன் கலவையும் பூசுதல் பற்றியீண்டு மணிக்கலவைதோன்றக்கூறினர்.

நதிக்குவத்தவொப்தனுமாநணன்றனையனக் ... ...*
கதித்தமூந்துறுகலினமான்றேரொங்கதிரோன் ... ...*
உதிக்குங்காலைபிற்றன்மைசெய்வான்றனதுருவில் ... ...*
கொதிக்கும்வெம்மையையாற்றுவான்போற்கடல்குளித்தான்...*

(இ-பு.) அவர்கள் அந்நதியைக்கண்டு சந்தோஷித்து அப்புறம் செல்லும்போது அருணனென்னும் சாரதியினுடைய நயனகோசரத்துக்கு முன்னதாகச்செல்லுகின்ற குதிரைகட்டியதேருடன் சூரியன் உதயமாகுங் காலத்தி லிவர்களுக்குக் குளிர்ச்சிசெய்யத் தன்னுருவத்தில் கொதிக்கும் வெப்பத்தையாற்றுகின்றவன்போல மேற்கடலில்மூழ்கினான்—எ-று. (௨)

கறங்குதண்புனற்கடிநெடுந்தாளுடைக்கமலத் ... ... *
தறங்கொளுண்மலர்க்கோயில்களிதழ்க்கதவடைப்பப்... ...*
பிறங்குதாமரைவனம்விட்டுப்பெடையொடுகளிவண் ... ...*
டுறங்குகின்றதோர்நறுமலர்ச்சோலைபுக்குறைந்தார் ... ...*

(இ-பு.) ஒலிக்காநின்ற அலைகளையுடைய நீர்நிறைந்த தடாகத்திலுண்டாகிவாசனைநீடிக் கொடிகளையுடையதாய்க் காலத்தில்மலரும் தாமரைப்பூவாகிய நல்லகோயில்களின் இதழாகியகதவுகள் மூடப்பட்டதினால் அத்தாமரைவனத்தைவிட்டுப்பெட்டைவண்டுகளுடன் களிப்புள்ள ஆண்வண்டுகளுறங்குகின்ற சோலையிற்சென்று தங்கினார்கள்—எ-று. (௩)

இனையசோலைமற்றியாதெனவிராகவன்வினவ... ... ...*
வினையெலாமறதோற்றவன்விளம்புவான்மேனாட்... ... *
டநயரானவர்க்கிரங்கியேகாசிபன்றனது... ... ...*
மனையுளாடவம்புரிந்தனளிவணெனவிளத்தான்... ... ... *

(இ-பு.) இந்தச்சோலை யெத்தன்மையுள்ளதென்று இராகவமூர்த்தி வினவினவளவில் வினைகளெல்லாமொழியும்படி தவஞ்செய்த விசுவாமித்திரமுனிவர் சொல்லுகின்றார் முன்னாளில் புத்திரர்களுக்காகத் துயரங்கொண்டுகாசிபரிஷியின் பத்தினியாகிய திதியென்பவள் இவ்விடத்தில் தவஞ்செய்தாளென்று சொல்லினர்—எ-று. (௪)

அண்டகோளகைக்கப்புறத்தென்னையாளுடைய... ... ... *
கொண்டனீள்பதத்தெய்தியோர்விஞ்சையர்கோதை... ... ...*
புண்டரிகமென்பதத்திணைப்புகழ்ந்தனள்புகழ ... ... *
வண்டறுமதுமாலைகைக்கொடுத்தனண்மகிழ்ந்து ... ...*

(இ-பு.) அண்டகோளகைக்கு அப்புறத்திலிராநின்ற என்னை யாட்கொள்ளும் மேகவண்ணக்கடவுளுடைய நீடியவைகுந்தத்தில் ஒரு வித்தியாதரஸ்திரியானவள்சென்று செந்தாமரைபோன்ற திருவடிகளையுடைய பெரியபிராட்டியாரைப்புகழ்ந்தனள் அவ்வாறு புகழ்ந்தவளவில் அத்திருமகள் வண்டுநீங்காத தேனிறைந்த தன்பூமாலையை அவள்கையில்கொடுத்தாள்-எ-று. ()

அன்னமாலையையாழிடைப்பிணித்தயனுலகங்... ... ... *
கன்னிமீடலுங்கசடறுமுனியெதிர்காண... ... ... *
என்னையாளுடைநாயகிக்கிசையெடுப்பவளென் ... ... *
றன்னடாளிணைவணங்கிநின்றேத்தலுமனையாள்... ... ... *

(இ-பு) அந்தமாலையை வித்தியாதரஸ்திரீபானவள் தன் யாழினிடத்திற்கட்டி மீண்டுவரும்போது முக்குற்றம்நீங்கிய தூர்வாசமுனிவரொருவர்கண்டு என்னையடிமைகொள்ளும் பெரியபிராட்டியாருக்குத்தகும்பாடு இறைவளென்று கருதியவளுடைய பாதங்களைவணங்கிநின்று துதிசெய்தவளவில்-எ-று.()

உலகமீபாவையும்படைத்தளித்துண்டுமிழொருவன்... ......*
இலகுமார்பகத்திருந்துயிர்பாவையுமீன்ற .. .. *
திலகவாணுதல்சென்னியிற்சூடியதெரியல். ... ... *
அலகின்மாதவபெறுகெனவளித்தனளன்பால் .. ..*

(இ-பு) உலகங்களையெல்லாம் படைத்துக்காத்து உண்டுமீட்டு முடிக்கின்ற ஸ்ரீமன்நாராயணமூர்த்தியின் விளங்குகின்ற மார்பினிடத்திருந்து உலகங்களையெல்லாமீன்றருளிய பெரியபிராட்டியார் அளகபாரத்திற்சூடியமாலையாகிய இதனை அளவில்லாத தவமுடையமுனிவரே நீர்பெற்றுக்கொள்ளுமென்று இருகையுடன்கொடுத்தாள்.—எ-று. (எ)

திலகவாணுதல் அன்மொழித்தொகை. பதம்பிரிக்குமிடத்து திலகமணிந்த ஒளிபொருந்திய நெற்றியையுடையாளென்றுதல் கண்டுகொள்க.

தெய்வநாயகிசென்னியிற்சூடியதெரியல் ... ...*
ஐயயான்பெறப்புரிந்ததெத்தவமெனவாடி... ... .*
வெய்யமாமுனிசென்னியிற்சூடியேவினைபோய்...... ... *
உய்யுமாறிதென்றுவந்துவந்தும்பர்நாடடைந்தான் ... ... *

(இ-பு.) அம்மாலையைப்பெற்றுக்கொண்ட தூர்வாசமுனிவர் தெய்வநாயகியாகிய பெரியபிராட்டியார் திருமுடியிற்சூடியமாலையை நான்பெற எத்தவஞ்செய்தேனெனக்கூத்தாடித் தம்முடையசிரசிற்சூடிக்கொண்டு வினைகளெல்லாம்நீங்கி நாம் உய்யுமுறைமையீதென்று சந்தோஷித்துவந்து தேவர்நாட்டிற்சேர்ந்தார்.—எ-று. (அ)

ஐய-என்பது-வியப்பு-தூர்வாசர் தேவருலகிற்சேர்ந்தபோது இந்திரன் பவனிவருகிற சிறப்பினை இனி நான்குசெய்யுளாற் கூறுகின்றனர்.

பெய்யுமாமுகில்வெள்ளியம்பிறங்கன்மீப்பிறழுஞ் ... ...*
செய்யதாமரையாயிரமலர்ந்துசெங்கதிரோன் ... ... *
மொய்கொள்சோதியையிலச்சியமுறைமைபோன்றொளிரு...*
மெய்யினோடயிராவதக்களிற்றின்மேல்விளங்க ... ... *

(இ-பு.) மழைபெய்யு மேகமானது வெள்ளிமலையின்மேல் பிரகாசியாநின்ற ஆயிரஞ்செந்தாமரை மலர்களை யலர்ந்துகொண்டும் சூரியனுடையநெருங்கிய கதிர்களையணிந்துகொண்டும் தோன்றுமுறைமைபோல விளங்குகின்ற உருவத்துடன் அயிராவதமேல்விளங்கவும்—எ-று. (௯)

நீலமேகம் அலர்ந்துகொண்டும், அணிந்துகொண்டும் வெள்ளிமலைமேல் தோன்றுதல் போலெனக்கூட்டுக. இந்திரனுடையநிறத்துக்கு மேகமும், ஆயிரங்கண்களுக்குச் செந்தாமரைமலரும், ஆபரணங்களுக்குச் சூரியகிரணங்களும், வெள்ளையானைக்கு வெள்ளிமலையும்உவமையாகக்கூறினமைகாண்க.

அரம்பைமேனகைதிலோத்தமையுருப்பசியணங்கன் ... .*
சுரம்பெய்தூணியிற்றளிரடிநூபுரத்தழைப்பக்... ... ...*

கருப்பையுஞ்சுவைகசப்பித்தகுதலையர்விரைரி... ... ... *
நிரப்புபாடலோடாடினர்வீதிகணெருங் .. .. *

(இ-பு) அரம்பை-மேநகை-திலோத்தமை-உருப்பசியென்னு மிம்மாதர்கள் மன்மதனுடைய பஞ்சபாணங்கள் வைத்திருக்கும் அம்பறாத்தூணிபோன்ற கணைக்காலும், செந்தளிர்போன்ற பாதமுமுள்ளகாலில் நூபுரத்தணிந்திருக்கவும், மதுரத்தினால் கரும்பையுங் கசப்பித்த சொல்லுடையவர்களாய் இசைநிரம்பிய பாடலுடன் நிர்த்தனஞ்செய்துகொண்டுவீதிகளில்நெருங்கிவரவும்—எ-று. (௰)

நீலமால்வரைதவழ்தருகதிர்நிலாக்கற்றை... ... ...*
போலவேயிருபுடையினுஞ்சாமரைபுரளக்..... ... .*
கோலமாமதிகுறைவறநிறைந்தொளிகுலவ... ... ... *
மேலிவர்ந்தெனவெள்ளியந்தணிக்குடைவிளங்க ... ... *

(இ-பு.) பெரியநீலமலையி னிருபுறத்திலும் பூரணசந்திரனுடைய கதிர்க்கற்றை தவழ்தல்போலத் தன்னிருபக்கத்திலும் வெண்சாமரை புரளவும், அழகுள்ளபெரியசந்திரன் குறைவறநிறைந்து ஒளிவிளங்கும்படியம்மலைமேலோங்கியிருப்பதுபோலஒப்பற்றஅழகுள்ளவெண்குடைவிளங்கவும்-எ-று.

தழங்குபேரியுங்குறட்டொடுபொண்டிலுஞ்சதியும்... ... ... *
வழங்குகம்பலைமங்கலகீதத்தைமறைப்ப... ... ... *
முழங்குநான்மறைமுரிநீர்முழக்கெனவுலகை... ... ... *
விழுங்குமாவரும்விழாவணிகண்டுளம்வியந்தான் ... ... *

(இ-பு) ஒலிக்கா நின்றபேரிகையும், குறடு என்கிறவாத்தியமும், தாளமும், சங்கமும், வழங்குகின்ற ஒசையானது மங்கலகீதங்களை மறைக்கவும், கோஷிக்கும் நான்குவேதங்களினோசையானது சமுத்திரத்தின் சத்தம்போல உலகத்தைவிழுங்குமாறுபோலவும் வருகின்ற இந்திரனுடைய பவனியைக்கண்டு (தூர்வாசமுனிவர்) மனதிற்சந்தோஷித்தார்—எ-று. (௰௨)

தனையொவாதவன்மகிழ்ச்சியால்வாசவன்றன்கை ... . *
வனையுமாலையைநீட்டலுந்தோட்டியால்வாங்கித்... ... ...*
துணைவலத்தயிராவதத்தெருத்திடைத்தொடுத்தான்,... ... ...*
பணைசெய்கையினாற்பறித்தடிப்படுத்ததப்பகடு... ... .*

(இ-பு.) தமக்கு நிகரில்லாதவராகிய தூர்வாசமுனிவர் மகிழ்ச்சியினால் தேவேந்திரன்கையில் தாஞ் சூடிக்கொண்டிருந்தமாலையைக்கொடுத்தார் இந்திரன் அந்தமாலையை அங்குசத்தினால்வாங்கி வேகமும் பலமுமுள்ள அயிராவதயானையின்பிடரியில் சூட்டினவளவில் அந்தயானை அம்மாலையைப் பனைமரம்போன்ற துதிக்கையினால்வாங்கி முன்காலின்கீழ்ப்போட்டுக்கொண்டது

கண்டமாமுனிவிழிவழியொழுகுவெங்கனலால்... ... . *
அண்டகூடமுஞ்சாம்பராயொழியுமென்றழியா... ... ... *
விண்டுநீங்கினர்விண்ணவரிருசுடர்மீண்ட...... ... ... *
எண்டிசாமுகமிருண்டதுசுழன்றதெவ்வுலகும்... ... ... *

(இ-பு) அதனைக்கண்ட பெருமைபொருந்திய துர்வாசமுனிவருடைய கண்களின்வழியால் ஒழுகாநின்ற வெவ்வியதீப்பொறிகளால்அண்டகூடமுஞ்சாம்பலாயொழிந்துபோமென்று சோர்ந்து தேவர்கள் தங்கள்தங்கள்பதவிகளைவிட்டுப் போய்விட்டார்கள் சூரியசந்திரர்கள் திசைமாறினர் அஷ்டதிக்குகளிடமுமிருண்டது எவ்வுலகமுஞ் சுழன்றது—எ-று. (௰௪)

புகையெழுந்தனவுயிர்தொறுமெயில்பொடித்தவனி ... ... *
நகையெழுந்தனநிவந்தனபுருவநன்னுதலிற் ... ... *
சிகையெழுஞ்சுடர்விழியினசனியுந்திகைப்ப .. ..*
மிகையெழுந்திரசதமககேளென்வெகுண்டான் ... ... *

(இ-பு) அம்முனிவர் சுவாசம்விடுந்தோறும் புகைகளெழுந்தன, திரிபுரதகனஞ்செய்த சாம்பமூர்த்திக்கு அக்காலத்தில் நகையெழுந்ததுபோல நகைகளெழுந்தன, நல்லநெற்றிமுழுதுமாகப் புருவங்களேறிட்டன, இவ்வாறிகழ்ந்ததுடன் சிகைவிட்டெழுந் தீப்பொறிகளைச் சொரிகின்ற நேத்திரங்களையுடையவராய் இடியுந்திகைக்கும்படி அதிகஆடம்பரத்துடன் வருகின்ற இந்திரனேகேளென்று கோபித்தார்—எ-று. (௰௫)

பூதநாயகன்புவிமகணாயகன்பொருவில்... ... ... *
வேதநாயகன்மார்பகத்தினிதுவீற்றிருக்கும் ... ... *
ஆதிநாயகிவிருப்புறுதெரியல்கொண்டணைந்த .. ..*
மாதராள்வயிற்பெற்றனன்முயன்றமாதவத்தால்... ... ...*

(இ-பு.) ஆத்துமகோடிகளுக்கெல்லாந்தலைவனும், பூமாதேவிகணவனும் ஒப்பில்லாத வேதமுதல்வனுமாகிய நாராயணமூர்த்தியினுடைய மார்பினிடத்தி லினிதாகவீற்றிருக்கும் பெரியபிராட்டியார் விருப்பம்பொருந்திய பூமாலை இதனைப்பெற்றுக்கொண்டுவந்த ஒருவித்தியாதர ஸ்திரீயினிடத்தில் நான்முன்செய்ததவத்தினால் பெற்றுக்கொண்டேன்—எ-று. (௰௬)

இன்றுநின்பெருஞ்செவ்விகண்டுவகையினீந்த... ... ...*
மன்றலந்தொடையிகழ்ந்தனைநினதுமாநிதியும்... ... ...*
ஒன்றலாதபல்வளங்களுமுவரிபுக்கொளிப்பக்... ... . *
குன்றிநீதுயருறுகெனவுரைத்தனன்கொடியோன்... ... *

(இ-பு.) இப்போது உன்னுடைய பவனிக்கோலத்தைக்கண்டு கொடுத்தவாசனையுள்ள அந்தமாலையை (உன்முடியில் சூட்டிக்கொள்ளாமல்) இகழ்ந்து விட்டாய் ஆதலாலுன்னுடைய பெரியநிதியும் வெவ்வேறாகிய பலசெல்வங்களும் சமுத்திரத்தில்போயொளிக்கும்படி நீ குன்றித் துயரம் அடையக்கடவையென்று துர்வாசர்சபித்தார்—எ-று. (௰௭)

அரமடந்தையர்கற்பகநவநிதியமிர்தஞ்... ... ... *
சுரபிவாம்பரிமதமலைமுதலியதொடக்கத் ... ... *
தொருபெரும்பொருளின்றியேயுவரிபுக்கொளிப்ப ... ...*
வெருவியோடினர்விண்ணவர்கண்ணன்மேவாரின் ... ...*

(இ-ள்) அரமடந்தையர் கற்பகவிருக்ஷங்களும் நவநிதிகளும் அமிர்தமுங் காமதேனுவும் தாவுகின்ற வெள்ளைக்குதிரையும் அயிராபதமும் இவை முதலிய தொடர்ச்சிகளாகிய பெரிய பொருள்களில் ஒருபொருளுமில்லாமல் சமுத்திரத்தில் புகுந்து ஒளித்தமாத்திரத்தில் தேவர்களெல்லாரும் பயந்து திருவெண்ணெய் நல்லூர்ச்சடையப்பமுதலியாருடைய பகைவர்போல ஓடினார்கள்---எ-று. (௰௮)

வெய்யமாமுனி வெகுளியால் விண்ணகமுதலாம்... ...*
வையமியாவையும் வறுமைநோய் நலிதரவானோர் ... ...
தையல்பாகனுஞ் சதுமுகக்கடவுளுங் கூடிச் ... ...*
செய்யதாமரைத் திருமறுமார்பனைச் சேர்ந்தார் ... ... *

(இ-ள்) கொடிய துர்வாசமுனிவர் சாபத்தால் தேவலோகமுதலாகிய உலகமெல்லாம் வறுமைநோயால் மெலிவதனால் விண்ணவரும் பார்வதிபாகனும் பிரமதேவனுங்கூடிச் செந்தாமரைமலரில் வீற்றிருக்குந் திருவுமறுவும் பொருந்தியமார்பையுடைய நாராயணமூர்த்தியினிடத்தில் அடைந்தார்கள்

வெஞ்சொன்மாமுனி வெகுளியால் விளைந்தமை விளம்பிக்.
கஞ்சநாண்மலர்க்கிழவனுங் கடவுளர்பிறரும்... ... ...*
தஞ்சமில்லை நின் சரணமே சரணெனச் சலியா... ... *
அஞ்சலஞ்சலென் றுரைத்தன னுலகெலா மளந்தோன் ...*

(இ-ள்.) வெவ்விதான சொல்லையுடைய துர்வாசமுனிவர் கோபத்தால் விளைந்த காரியத்தைச் சொல்லிப் பிரமதேவனும் மற்றதேவர்களும் நாராயணமூர்த்தியை நோக்கி யெங்களுக்கு வேறே ஆதரவில்லை தேவரீர் திருவடிகளே அடைக்கலமாகச் சேர்ந்தோமென்று விண்ணப்பஞ்செய்ய, அவர்களைத் தனித்தனியே நோக்கி அஞ்சவேண்டாம் அஞ்சவேண்டாமென்று உலகமெல்லாமளந்த ஸ்ரீமந்நாராயணமூர்த்தி திருவாய்மலர்ந்தருளினார்-எ-று. (௨௰)

மத்துமந்தரம் வாசுகி கடைகயிறடைதாண் ... ... *
மெய்த்துசந்திரன் சுராசுரர் வேறுவேறுள்ள ... ... *
கொத்திரண்டுபால் வலிப்பவரோடதி கொடுத்து... ... *
சத்துவாரிதி மறுகுறவமிர்தெழக் கடையின்... ... ... *

(இ-ள்.) ஸ்ரீநாராயணமூர்த்தி சொல்லுகிறார், மந்தரகிரி மத்தாகவும், வாசுகி கடைகின்றகயிறாகவும், மென்மைபொருந்திய சந்திரன் அடைதாணாகவும், அமைத்துத் தேவர்கள் அசுரர்களென்ன வேறுவேறாகிய கூட்டம் இருபக்கத்திலுமிருந்து வலிப்பவர்களாய் ஒஷதிகொடுத்து ஒலிக்குஞ் சமுத்திரங் கலங்கவும் அமிர்தமுண்டாகவும் கடையுங்கள். எ-று. (௨௧)

ஒஷதி, அமிர்தவல்லியாகிய காட்டுக்கொடிகள். அவை தானின்றபலனைத்தனக்கே முடிவாகவுடைய கொடிகளென்று கூறுவாருமுளர்.

யாமுமவ்வயின் வருதுநீர் கதுமென வெழுந்தி ... ...*
போமினென்றருள் புரிதலுமிறைஞ்சினர் புகழ்ந்தார் ...*

நாமயின்றெனக்குனித்தனர்நல்குரவொழிந்த... ... *
தாமெனும்பெருங்களி துளக்குறுதலாலமரர் .. ..*

(இ-ள்.) யாமுமவ்விடத்தில் வருவோம் நீங்கள்விரைவாக எழுந்துசெல்லுங்களென்று அருள்செய்தவளவில் தேவர்கள் வணங்கிப்புகழ்ந்து இனிநம்முடைய வறுமையொழிந்தது பயமுமில்லையென்று பெருங்களிப்பு ஆட்டுவித்தலால் கூத்தாடினார்கள். எ-று. (௨௨)

வருதும் என்பதில் விகுதி எதிர்காலங்காட்டிநின்றது.

மலைபிடுங்கினர்வாசுகிபிணித்தனர்மதியை ... ...*
நிலைபெறும்படிநட்டனரோடதிநிரைத்தார்... .... *
அலைபெறும்படிபயோததிகடைந்தனரவனி... ... *
நிலைதளர்ந்திடவனந்தனுங்கீழுறநெளித்தான் ... ... *

(இ-ள்.) ஸ்ரீநாராயணமூர்த்திஅருளியபடி மந்தரகிரியைப்பெயர்த்து அதில்வாசுகியைக்கட்டிச் சந்திரனைத்தூணாக நிலைபெறும்படிநிறுத்தி ஓஷதிகளையும்பரப்பி அலைதனுண்டாகத்திருப்பாற்கடலைக்கடைந்தார்கள் அப்போது பூமிநிலைதளரும்படி ஆதிசேஷனும் பாதலத்தில்மிகவும் நெளித்தனன்.

திறல்கொளாமையாய்முதுகினின்மந்தரந்திரிய ...*
விறல்கொளாயிரந்தடக்கைகள்பரப்பிமீவலிப்ப... ... *
மறனிலாமுனிவெகுளியின்மடிந்தனவரவே... ... *
அறனிலாமனத்தடையலாநெடுந்தகையமைத்தான் ... *

(இ-ள்) அவர்களிவ்வாறு கடையும்போது தருமநெறியில்லாதமனத்திற்சேராத ஸ்ரீநாராயணமூர்த்தி பலம்பொருந்திய கூர்மாவதாரமாகிய முதுகினிடத்தில் மந்தரகிரியானது சுழலத்தக்கதாக வெற்றிகொண்ட ஆயிரம் பெரியகைகளைப்பரப்பி மேலேவலிக்கவும், பாபமில்லாதமுனிவரால் ஒழிந்தபொருள்களெல்லாமீட்டும்வர அமைத்தார். எ-று. (௨௪)

பாடபேதம்.

அறனிலாமனத்தடையலர்நெடுந்தகையமைந்தான் எனப்பாடமுண்டேல் தருமமற்றமனத்தையுடையமாற்றார்க்குநெடுந்தகையாகிய நாராயணமூர்த்தி ஆமையாகிக்கைகள்பரப்பிமந்தரந்திரியவும் மெய்வலிக்கவும்,மடிந்தனவரவும் அமைந்தனனெனப்பொருளுரைத்துக்கொள்க.

இறந்துநீங்கினயாவையுமெம்பிரானருளாற் ... ... *
பிறந்தவவ்வயிற்சுராசுரர்தங்களிற்பிணங்கச்... .. ...*
சிறந்தமோகினிமடந்தையாலவுணர்தஞ்செய்கை ... *
துறந்துமாண்டனராரமிர்தமரர்கடுய்த்தார்... ......*

(இ-ள்.) முன்கடலில் சென்றிறந்த பொருள்களெல்லாம் நம்பெருமான் திருவருளாலுண்டாயின,அப்போது தேவர்களும்,அசுரர்களும், (அதிலுண்டான அமிர்தத்தைக்குறித்துத்தம்மில்மாறுகொண்டனர்) அதைக்கண்டதிருமால் மோகினிவடிவங்கொள்ள அந்தஅழகுள்ளமோகினிமாதால் அசுரர்கள்

தங்கள் செய்கையொழிந்துமாண்டனர் அரிய அமிர்தத்தைத் தேவர்களுண்டனர்—எ-று. (உரு)

வெருவுமாலமும்பிறையும்வெவ்விடையவற்கீந்து ... *
தருவும்வேறுளதகைமையுஞ்சதமகற்கருளி... ... ...*
மருவுதொல்பெருவளங்களும்வேறுறவழங்கித்... ...*
திருவுமாரமுமணிந்தனன்சீதரமூர்த்தி ... ... *

(இ-ள்.) தேவர்கள் அஞ்சும்படி அக்கடலிலுண்டாகிய விஷத்தையும் பிறைமதியையும் விரும்புகின்ற விருஷபவாகனமுள்ள சிவனுக்குக்கொடுத்து கற்பகத்தருவையும் மற்றப்பொருள்களையும் இந்திரனுக்களித்துப்பொருந்திய தொன்மையுள்ள மிக்கநிதிமுதலியவற்றைக் குபேரன்முதலிய பிறருக்கீந்து திருமகளையும் கவுஸ்துபாபரணத்தையும் ஸ்ரீநாராயணமூர்த்தி தரித்துக்கொண்டனர்—எ-று. (உசு)

அந்தவேலையிற்றிதிபெருந்துயருழந்தழிவாள்... ... *
வந்துகாசிபன்மலரடிவணங்கியென்மைந்தர் ... ... *
இந்திராதியர்புணர்ப்பினுலிறந்தனரெனக்கோர்... ...*
மைந்தனீயருளவர்தமைமடித்தலுக்கென்றாள்... ... *

(இ-ள்.) அப்போது (அசுரர்கள்தாயாகிய) திதியென்பவள் தன்புத்திரர்களைக்குறித்து மிகுந்ததுயரத்தைஅநுபவித்து வருந்துகின்றவளாய்ச்சென்று காசிபரிஷியின் பாதமலரைவணங்கி என்மைந்தர்கள் இந்திரன்முதலிய தேவர்கள் செய்தவுபாயத்தினால் இறந்தார்கள் ஆகையால் அத்தேவர்களைக் கொல்லும்பொருட்டு எனக்கொருபுத்திரனை நீர் அருள்செய்ய வேண்டுமென்றாள்—எ-று. (உஎ)

இவள்காசிபர்பத்தினி அசுரர்களிவள்வயிற்றிற் பிறந்தமையால் தைத்தியரென்னும் பெயர்பெற்றனர்.

என்றுகூறலுமகவுனக்களித்தனமினிநீ... ... ... *
சென்றுபாரிடைப்பருவமோராயிரந்தீர ... ... *
நின்றுமாதவம்புரிதியேனினைவுமுற்றுதியென்... ... .*
றன்றுகூறிடப்புரிந்தனளருந்தவமனையாள் ... .*

(இ-ள்.) திதி இவ்வாறுசொன்னவளவில் காசியர் அவளைநோக்கியுனக்குப் புத்திரனை அநுக்கிரகித்தோம் ஆயினும்பூமியினிடத்திற் போயிருந்து ஆயிரமாண்டு பெருந்தவஞ்செய்வையாகில் உன்னெண்ணத்தை முடிக்குவை யென்றுசொல்ல அவளவ்வாறே இவ்விடத்தில் அருந்தவஞ்செய்தனள். ()

கேட்டவாசவனன்னவட்கடிமையிற்கிடைப்ப... ... .. *
வாட்டமாதவத்துணர்ந்தவள்வயிற்றுறுமகவை ... ... *
வீட்டியேயெழுகூறுசெய்திடுதலும்விம்மி ....*
நாட்டநீர்தரமருத்தெனுநாமமுநவின்றான் .. .. *

(இ-ள்.) அதனைக்கேள்வியுற்ற இந்திரன்மாறுருவங்கொண்டு அவளுக்கடி

மைத்தொழில்செய்கின்றவனாயிருந்து அவள்செய்யுந்தவத்தில் சோர்வுநே ரிட்டகாலமறிந்து அவள்வயிற்றில்பொருந்திய சிசுவைக் கீழேவிழச்செய் து ஏழுகூறாக்கினவளவில் அக்கூறுகள் அழுதகண்களில் நீர்சொரியநோக்கி அவைகட்கு மருத்தென்னும்பெயர்கொடுத்தனள்—எ-று. (௨௯)

ஆயதிவ்விடமவ்விடமவிர்மதியணிந்த ... ...*
தூயவன்றனக்குமையிற்றோன்றியதொல்லை .. ..*
வாயுவும்புனற்கங்கையும்பொறுக்கலாவலத்த... ... ..*
சேய்வளர்ந்தருள்சரவணமென்பதுந்தெரித்தான் ... *

(இ-ள்.) அத்தன்மையுள்ளதாகியதிவ்விடம் அந்தஇடம்பிரகாசிக்கும்பிறை மதிபணிந்தசிவனுக்கு உமையவளிடமாகத்தோன்றிய - பழமையாகியவாயு வும் நீருள்ளகங்கையும் தாங்கவொண்ணாத பலத்தையுடைய சுப்பிரமணியர் வளர்ந்தருளிய சரவணப்பொய்கை யென்பதனையும் தெரிவித்தார்—எ-று.

காலன்மேனியிற்கருகிருள்கடிந்துலகளிப்ப ... ... *
நீலவார்கவிதத்தேரொடுநிறைகதிர்க்கடவுள் ... ... *
மாலின்மாமணியுந்தியினயனொடுவந்த .. .. *
மூலதாமரைமுழுமலர்முளைத்தெனமுளைத்தான் ... *

(இ-ள்.) இயமனுடைய நிறம்போலக்கறுத்த விருளைத்துரத்தி இவ்வுலக த்தைக்களிக்க நீலநிறமாகியகடலில் தேருடன் நிறைந்தகதிர்களுள்ள சூரிய ன் திருமாலுடையபெரிய அழகுள்ள நாபியினிடத்தில் பிரமதேவனுடன் ஆ திதாமரையின் முழுமலர் முளைத்ததும்போலமுளைத்தான்—எ-று. (௩௧)

அங்குநின்றெழுந்தயன்முதன்மூவருமனையார் ... ... *
செங்கணேற்றவன்செறிசடைப்பழுவத்தினிறைதேன் ..... *
பொங்குகொன்றையீர்த்தொழுகலாற்பொன்னியைப்பொருவுங்
கங்கையென்னுமக்கரைபொருதிருநதிகண்டார். ... ... *

(இ-ள்.) அவ்விடத்திலிருந்து புறப்பட்டு அரி அரன் அயன் என்னுந் தி ரிமூர்த்திகளையும் ஒத்தவர்களாகிய இம்மூவர்களும் செங்கண்ணுள்ள விருஷ ப வாகனக்கடவுளாகிய சிவனுடையநெருங்கிய சடைக்காட்டிலிருக்கும் நி றைந்ததேன்பொழிகின்ற கொன்றைமாலையையிழுத்துக்கொண்டுசெல்லு தலாற் காவிரிநதியை ஒப்பாகிய கங்கையென்னும் அக்கரையைமோதுகின் றசிறந்த அந்தநதியைக்கண்டார்கள்—எ-று. (௩௨)

இந்தமாநதிக்குற்றுளதகைமையதியாவும் ... ... *
எந்தைகூறுகென்றிராகவன்வினவுறவெனையாண் ... *
மைந்தநின்றிருமரபுளானயோத்திமாநகர்வாழ் ... ... *
விந்தைசேர்புயன்சகரனிம்மேதினிபுரந்தோன்... ...*

(இ-ள்.) இந்தப்பெரிய நதிக்குப்பொருந்தியிருக்கின்ற பெருமையெல் லாம் எனதுதந்தையே சொல்லவேண்டுமென்று ஸ்ரீராமமூர்த்திவினவ, என் னைப்பாதுகாத்தமைந்தனே சிறந்த உன்மரபில்வந்தவனும் அயோத்திமாந

காத்தில் வாழ்ந்தவனும் செயலட்சுமிபொருந்திய புஜமுள்ளவனுமாகிய சகராசன் இவ்வுலகத்தை யாண்டுகொண்டிருந்தான்—எ-று. (கங)

விறல்கொள்வேந்தனுக்குரியவரிருவரில்விதர்ப்பை ...*
பொறையினல்கியபோசனனென்றொருபுதல்வன் ... *
பறவைவேந்தனுக்கிளையமென்சுமதிமூற்பயந்த... ... *
அறனிலமைந்தரறுபதாயிரர்மற்றஞ்சுமானவன்சேய்... ...*

(இ-ள்.) வெற்றிபொருந்திய அவ்வரசனுக்குரிய மனைவியரிருவருளர்-அவருள் விதர்ப்பையென்பவள் கருப்பங்கொண்டு பெற்றபோசனனென்றொருபுத்திரனிருந்தான் கருடனுக்கிளையவளாகிய சுமதியென்னுமிளையமனைவி முன்பெற்றதருமவழியில் செல்லுதலில்லாத அறுபதினாயிரம்புத்திரர்களுமுளர் போசனனென்பவனது புத்திரன் அஞ்சுமானென்பவன்-எ-று.

திண்டிறற்புனைசகரனுந்தலைபர்சேவகத்தான் ... ... *
கண்டுமூற்றியவயமகம்புரிதலுங்கனன்று... ... ... *
வண்டுதுற்றதார்வாசவற்குணர்த்தினர்வானோர்... ... *
ஒண்டிறற்பரிகபிலனதிடையினிலொளித்தான்... ... ...*

(இ-ள்.) மிக்கவெற்றிபுனைந்த சகராசன் தன்புத்திரர்களுடைய சௌரியத்தைக்கண்டு நிறைவேற்றிய அசுவமேதயாகம் செய்யவும் தேவர்கள்கோபங்கொண்டு வண்டுகள்நெருங்கிய மாலையணிந்த தேவேந்திரனுக்குச் சொல்லினார்கள் அவ்விந்திரன் சகரன்விட்ட மிக்கவலிமையுள்ள குதிரையைக்கபிலமுனிவரிடத்தில் கொண்டுபோயொளித்தான்—எ-று. (கரு)

வாவுவாசியின்சென்றவனஞ்சுமான்மறுகிப்... ...*
பூவினோரிடமின்றியேதாடினன்புகுந்து ... ...*
தேவர்கோமகன்கரந்தமையறிந்திலன்றிகைத்து...*
மேவுதாதைதன்றாதையாலுணர்த்தினன்மீண்டு...*

(இ-ள்) தாவிச்செல்லும் அந்தக்குதிரையின் பின்சென்றவனாகிய அஞ்சுமான், குதிரையைக்காணாமையால் மனங்கலங்கி பூமியில்தேடாதவிடமில்லையென்னும்படி தேடினான் இந்திரன்வந்து ஒளித்துவைத்ததை அறியாதவனாய்த்திகைத்துமீண்டு தனக்குரியபாட்டனாகிய சகராசனிடத்திற் சொன்னான்—எ-று. (கசு)

கேட்டவேந்தனுமதலையர்க்கம்மொழிகிளத்த ... *
வாட்டமீக்கொளச்சகரர்கள்வடவையின்மறுகி...*
நாட்டம்வெங்கனல்பொழிதரநானிலந்தடவித்... *
தோட்டுநங்கினர்புவியினைப்பாதலந்தோன்ற...*

(இ-ள்) (அஞ்சுமான்வந்துசொல்லியவார்த்தையைக்) கேட்டசகராசன் தன்புத்திரர்களாகிய சகரர்களுக்குச்சொல்ல, அவர்கள் மிகவும் சோர்வுற்று வடவாமுகாக்கினிபோலச் சினந்து கண்கள்வெப்பமுள்ள தீப்பொறிகளைச்

க்க பூமியெங்குந்தேடிக் காணாமையால் பூமியைப்பாதாள லோகந்தெரியும்படி அம்மண்ணினை யெல்லாந்தோண்டி யுண்டுவிட்டார்கள்—எ-று. ()

நூறியோசனையகலமுமாழமுநடங்கக்... ... *
கூறுசெய்தனரன்பரால்வடகுணதிசையின் ... *
ஏறுமாதவக்கபிலன்பரிவுளிகண்டெரியிற் ... ...*
சீறினவதனர்செருக்கினர்நெருக்கினர்செறுத்தார்..*

(இ-ள்) நூறுயோசனை அகலமும் ஆழமுமாகப் பூமிமெலியும்படி தோண்டினார்களென்று சொல்லப்படுமவர் வடகீழ்த்திசையில் மிகுந்த பெரியதவமுள்ள கபிலமுனிவனிடத்தில் குதிரையைக்கண்டு அக்கினியைப்போலச் சீறி நிந்தித்தார்கள் இறுமாப்புள்ளவர்களாயடர்ந்து கோபித்தார்கள்-எ-று

மூளும்வெஞ்சினத்தருந்தவன்முனிந்தெரிவிழிப்பப்...*
பூளைசூடிதன்னகையினிலெயில்பொடிந்தனபோல் ... *
ஆறுமைந்தராறயுதருஞ்சாம்பராயவிந்தார் ... ... *
வேள்விகண்டநல்வேந்தனுக்குரைத்தனர்வேகர்... ... *

(இ-ள்.) மூளுகின்ற கொடியகோபத்தையுடைய கபிலமுனிவர் முனிந்து அக்கினிப்பார்வையாக நோக்கினவளவில் பூளைமலரைச்சூடிய ருத்திரமூர்த்தியினுடைய நகையினால் திரிபுரம்சாம்பலாய்ப் போய்விட்டதுபோல உலகாளும்படியான அறுபதினாயிரம்புத்திரர்களும் சாம்பலாயிறந்தார்கள் அதைக்கண்ட தூதர்களோடி யாகஞ்செய்யும் சகரராசனுக்குச்சொன்னார்கள்—எ-று. (௧௧)

சாம்பல் சாம்பரென இறுதிப்போலியாய்நின்றது.

உழைத்துவெந்துயர்க்கூறுகாண்கிலனுணர்வொழியா...*
தழைத்துமைந்தனன்மைந்தனையவர்கழிந்தனரேல் ... *
இழைத்தவேள்வியின்பிழைப்பதோவெனவவனெழுந்து.*
தழைத்தமாதவக்கபிலன்வாழ்பாதலஞ்சார்ந்தான் ... ...*

(இ-ள்) அதைக்கேள்விப்பட்ட சகரராசன் வருந்திநேரிட்ட துயரத்துக்கு ஒருமுடிவுகாணாதவனாய் அறிவயர்ந்து தனது பௌத்திரனாகிய அஞ்சுமானை அழைப்பித்து அவர்கள் இறந்தாராயினும் இப்போது தொடங்கிய யாகத்தைவிட்டுவிடலாமோவென்றுசொல்ல அஞ்சுமானெழுந்து மிகுந்த தவமுள்ள கபிலமுனிவரிருக்கின்ற பாதாளலோகத்துக்குப்போனான்-எ-று

ஓகாரம்-எதிர்மறைப்பொருள்தந்து நின்றது.

விண்டுநீங்கினருடலுகுபிறங்கல்வெண்ணீறு... ... *
கண்டுதுண்ணெனுமனத்தினன்கபிலமாமுனிதன் ... *
புண்டரீகமென்றாடொழுதெழுந்தனன்புகலக்... ... *
கொண்டுபோகநின்னிவுளியென்றுற்றதுங்குறித்தான்...*

(இ-ள்.) இறந்துபோனவர்களுடல் சிந்தியிருக்கிறசாம்பல்மலையைக்கண்டு நடுங்கியமனமுள்ளவனாய்க் கபிலமுனிவருடையமென்மையாகிய பாததா

மனையைத் தொழுதெழுந்து சொல்ல உன் குதிரையைக்கொண்டு செல்கவெ
ன்றுசொல்லி நடந்தசெய்தியையும் தெரிவித்தான்—எ-று. (௬௧)

பழுதிலாதவனுரைத்தசொற்கேட்டலும்பரிவாற்... ...*
றொழுதுவாம்பரிகொணர்ந்தவிசுரர்களுக்கேயா... ...*
முழுதும்வேள்வியைமுற்றுவித்தாசனுமுடிந்தான் ... *
எழுதுகீர்த்தியாய்மைந்தனுக்கரசியலீந்து .. .. *

(இ-ள்) குற்றமில்லாத அந்தமுனிவர் சொல்லியவார்த்தையை அஞ்சுமா
ன்கேட்டவளவில் பரிவுடன் அவரைத்தொழுது தாவுகின்றகுதிரையைக்கொ
ண்டுவந்து தேவர்களுக்கு அவிகொடுத்து நிலைபெற்றகீர்த்தியையுடைய ரா
மமூர்த்தியே வேள்வியைப்பூர்த்திசெய்து தன்மைந்தனுக்கு அரசாட்சி
யைக்கொடுத்துச் சகாராசனுஞ் சுவர்க்கஞ்சேர்ந்தான்—எ-று. (௬௨)

சகரர்தொட்டலாற்சாகரமெனப்பெயர்தழைப்ப ... *
மகரவாரிதிசிறந்ததுமகிதலமுழுது... ... ...*
நிகரின்மைந்தனேபுரந்தனனிவனெடுமரபில் ... ...*
பகிரதன்னெனும்பார்த்திவன்வந்தனன்பரிவால்... ...*

(இ-ள்.) சகரர் தோண்டினமையால் சாகரமென்னும்பெயர்தழைக்க ம
கரமீனுள்ள சமுத்திரம்சிறப்படைந்தது அதற்குமே லிவ்வுலகமுழுவதை
யும் ஒப்பில்லாத போசணனென்னுமைந்தனே யாண்டனன் இவனுடைய
பெரியமரபில் பகிரதனென்கிற ஒருஅரசன்பிறந்தான்—எ-று. (௬௩)

உலகமியாவையும்பொதுவறத்திகிரியையுருட்டி... ...*
இலகுமன்னவனிருந்துழியிறந்தமைசினவ ... ... *
அலகின்றான்முனியுரைத்திடக்கேட்டனனரசன் ... ... *
திலகமன்னுறவணங்கிநின்றொருமொழிசெப்பும்... *

(இ-ள்.) விளங்குகின்ற அந்தப்பகீரதமகாராசன் உலகமெல்லாம் பொது
வென்பதின்றித் தன்னுடையதே யாகும்வண்ணம் ஆக்கினைச்சக்கிரஞ்செ
லுத்தி அரசாட்சிசெய்துகொண்டிருக்கும்போது அவ்வரசன் சகரர்களிற
ந்த முறைமையைக்குறித்துக்கேட்க அளவில்லாத பழமையாகிய வசிட்ட
முனிவர் சொல்லக்கேட்டுத் தன்னெற்றித்திலகம் பூமியிற்படியும்படி வண
ங்கிநின் றொருமொழி சொல்லுகின்றான்—எ-று. (௬௪)

கொடியமாமுனிவெகுளியின்மடிந்தவென்குரவர் ...*
முடியநீணிரயத்தினிலழுந்திடுமுறைமை... ... ... *
கடியுமாறெனக்கருந்தவமதற்குறுகருமம்... ... ... *
அடிகள்சொற்றுகவென்றலுமந்தணனறைவான் ... ...*

(இ-ள்) பெரியகபிலமுனிவருடைய கொடியகோபத்தினாலிறந்த எமது
முன்னோர்கள்முற்றவும் பெரியநரகத்தில் மூழ்கியிருக்கு முறைமையை
நீக்கும்வழியும் அதற்கு அருந்தவஞ்செய்யுங் கருமத்தையும் தேவரீர் அரு
ளவேண்டுமென்றளவில் அம்முனிவர்சொல்லுகின்றார்—எ-று. (௬௫)

வையமாளுடைமன்னவர்மன்னவமடிந்தோர் ... ... *
உய்யநீடவமொழிவறுபகலெலாமொருங்கே... ... ... *
செய்யநாண்மலர்க்கிழவனைநோக்கிநீசெய்தி... .. ... *
நையலென்றினிதுரைத்தனனவையறுமுனிவன் ... ... *

(இ-ள்.) இவ்வுலகத்தையாளுதலுடைய அரசர்க்கரசனே இறந்தவர்கள்பி ழைக்கும்படி நெடுந்தவத்தை அநேககாலங்களெல்லாம் புதியசெந்தாம ரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவனைநோக்கி ஒருமிக்கச்செய்வாயாக அ வர்களைக்குறித்து நீவருந்தவேண்டுவதில்லையென்றுகுற்றமற்றவசிட்டமுனி வர் இனிமையாகச்சொல்லினர்—எ-று. (சகூ)

ஞாலமியாவையுஞ்சுமந்திரன்றன்வயினல்கிக் ... . *
கோலுமாதவத்திமகிரிமருங்கினிற்குறுகிக் ... ... *
காலமோர்பதினாயிரமருந்தவங்கழிப்ப... ... .. *
மூலதாமரைமுழுமுதற்கிழவன்முந்தினனே ... ... *

(இ-ள்.) (அவ்வாறுவசிட்டமுனிவர்சொல்லியவளவில்) பகீரதமகாராசன் உலகமுழுதும் சுமந்திரனிடத்தில் ஒப்புவித்துத் தவக்கோலங்கொண்டு இ மயமலைச்சாரலிற்போய்ப் பதினாயிரம்வருஷம் அருந்தவமுடிக்க ஆதிதா மரைமலரிலிருக்கின்ற பிரமதேவர் முன்னின்றார்—எ-று. (சஎ)

நின்பெருந்தவம்வியந்தனனினைநீள்குரவர்... ... ... *
முன்பிறந்தனரருந்வன்முனிவினுதலினுல்... ... ... *
மன்பெரும்புவியதனில்வானதிகடிதணுகி .. .. *
என்புதோயுமேலிருங்கதிபெறுவரென்றிசைத்தான் ... *

(இ-ள்.) உன்னுடையபெரியதவத்துக்கு நாம் சந்தோஷமுற்றனம் உன் பெரியோர்கள் கபிலமுனிவர் சாபத்தினுல் முன்னமிறந்தபடியால் ஆகாய கங்கையானது நிலைபெற்றபூமியில் விரைவாகவந்து அவர்கள் எலும்பிற்ப டியுமானுல் பெருமைபொருந்தியமோட்சத்தையடைவார்கள்-எ-று(சஅ)

மாகநன்னதிபுவியிடைவருகின்மற்றவடன் ... ... *
வேகமாற்றுதல்கண்ணுதற்கன்றிவேறரிதாற்... ... *
மேருகைபாகனைநோக்கிநீயருந்தவத்தொடங்கென் ... *
றேகினனுலகனைத்துமெவ்வுயிர்களுமீந்தான் ... ... *

(இ-ள்) எல்லாவுலகங்களையுமெல்லாவுயிர்களையும்படைத்தபிரமதேவனே (இவ்வாறுசொல்லியதுமன்றி) ஆகாயகங்கை லோகத்தில்வந்தால் அவளு டையவேகத்தைஆற்றுதல் சிவனுக்கன்றி மற்றவர்களுக்கரியதாம் ஆதலால பார்வதிபாகனைநோக்கித் தவஞ்செய்யத் தொடங்கென்றேகினன்- எ-று ()

மங்கைபாகனைநோக்கிமுன்மொழிந்தனவருடற் .. *
தங்குமாதவம்புரிதலுந்தழனிறக்கடவுள்... .... *
அங்குவந்துநின்கருத்தினைமுடித்துமென்றகன்றன் ... *
கங்கையைத்தொழக்காலமையாயிரங்கழித்தான் ... ... *

(இ-ள்) பார்வதிபாகனாகிய சிவனை நோக்கி முன்சொல்லிய பதினாயிரம்வருஷந்தங்கிய அரியதவஞ்செய்தவளவில் நீநிறமுள்ள அக்கடவுள் அவ்வரசனுக்குப் பிரத்தியட்சமாகி உன்கருத்தின்படி நிறைவேற்றுகிறேமென்று சொல்லிப்போயினான் அதன்பின்னர் கங்கையைத்தொழ ஐயாயிரம்வருஷம் கழித்தான்—எ-று. (௫௰)

ஒருமடக்கொடியாகிவந்தனன்றுமாதவமென் ... ... *
பெருகுபுனற்கொடிவரினவள்வேகமார்பொறுப்பார் ... *
அரனுரைத்தசொல்விநோதமற்றின்றுநீயறிந்து ... *
பெருகுநற்றவம்புரியெனவரநதிபெயர்ந்தாள் ... ... *

(இ-ள்.) கங்கையானவள் ஒருபெண்வடிவமாகவந்து அரசனே நீசெய்யுந்தவமியாது (கங்கையைக்குறித்தென்றால்) அலைமோதும் நீருருவமாகிய கங்கை வருவாளாயின் அக்கங்கையின் வேகத்தையார் பொறுப்பவர்கள் சிவன்பொறுத்துக்கொள்வதாகச்சொன்னானென்றால் அவர்சொன்னவார்த்தை விநோதம் ஆதலால் இன்னமும் அவனைச்சிந்தித்துப் பெரிய நல்லதவஞ்செய்யென்றுசொல்லிக் கங்கைசென்றாள்—எ-று. (௫௧)

கரந்தைமத்தமொடெருக்கலர்கூவிளைகமிக்கை ... *
நிரந்தபொற்சடைநின்மலக்கொழுந்தினைநினையா ... *
அரந்தையுற்றவனிரண்டாயிரமாண்டு ... ... *
புரிந்துநற்றவம்பொலிதரமலைமகள்புனிதன் ... ... *

(இ-ள்.) தன்மூதாதையரைக்குறித்து வருத்தம்பொருந்திய பகீரதன் கரந்தைப்பத்திரமும், பொன்னூமத்தம்பூவும், எருக்கம்பூவும், வில்வமும், கொன்றைமாலையும், நிறைந்தபொன்னிறமுள்ள சடாமகுடத்தையுடைய நின்மலக்கொழுந்தாகிய பரமசிவனைத்தியானித்து வருந்தி இரண்டாயிரத்தைந்நூறுவருஷம் நல்லதவம் பொலிவுபெறச்செய்யும்போது பார்வதிபாகனாகிய பரமசிவன்—எ-று. (௫௨)

எதிர்ந்துநின்னினைவென்னெனவிறைஞ்சியெம்பெரும *
அதிர்ந்துகங்கையிதனைநந்தனளென்றலுமஞ்சேல் ... *
பிதிர்ந்திடாவகைகாத்துமென்றேகியபின்னை ... ... *
முதிர்ந்தமாதவமிரண்டாயிரமுடித்தான் ... ... *

(இ-ள்.) அவ்வரசனுக்குத் தரிசனமாகி யுன்வேண்டுகல்யாதென்ன, வணங்கி எம்பெருமானே? கங்காதேவியானவள் அதிர்ந்துவந்து இவ்வார்த்தைசொல்லினளென்று விண்ணப்பஞ்செய்தவளவில் நீ யஞ்சாதே (கங்கைநீர்ஒருதுளியுஞ்) சிந்தாவகைகாக்கிறோமென்று சொல்லிப்போயினபின்பு இரண்டாயிரத்தைந்நூறுவருஷம் கங்கையைக்குறித்து அரியதவஞ்செய்தான்.()

பெருகுதீரொடுபூதியும்வாயுவும்பிறங்கு ... ... *
சருகும்வெங்கதிரொளியையுந்துய்த்துமற்றதையும் ... *

பருகலின்றியுமப்பதினாயிரம்பருவ ... ... *
முருகுகாதலின்மன்னவனருந்தவமுயன்றான் ... ... *

(இ-ள்.) (இந்தத்தவங்கள் எவ்வாறுசெய்தானென்னில்) பெருகுகின்றசலத்தையும், விபூதியையும், வாயுவையும், உலர்ந்தசருகையும், வெவ்வியசூரியகிரணத்தையும், அருந்தியும் இதுகளையும் அருந்துதலில்லாமலும், முப்பதினாயிரம்வருஷம் (நெஞ்சம்) உருகி அன்புடன் அரியதவஞ்செய்தான்—எ-று.

உந்தியம்புயத்துதித்தவனுறைதருமுலகும் ... ... *
இந்திராதியருலகமுநடுக்குறவிரைத்து ... ... *
வந்துதோன்றினள்வரநதிமலைமகள்கொழுநன் ... . *
சிந்திடாதொருசடையினிற்கரந்தனன்சேர ... ... *

(இ-ள்.) பகிரதனிவ்வாறுதவஞ்செய்யும்போது கங்கையானவள் (திருமாலுடைய) நாபிக்கமலத்திலுற்பவமாகிய பிரமதேவன்வாசஞ்செய்யும் சத்தியலோகம் இந்திரன்முதலாகிய தேவர்களுடைய உலகங்களும் நடுங்கும்படி ஆரவாரித்துக்கொண்டுவந்துதோன்றினள் (அவ்வண்ணம்வந்தகங்கையை) மலைமகள்கணவனாகிய சிவன்சிந்தாமல் அந்நீரையெல்லாம் ஒரு சடையில் மறைத்தார்—எ-று. (௫௫)

புன்றுனித்தருபனியெனவரநதிபுனிதன் ... ... *
சென்னியிற்கரந்தொளிதரவணங்கினன்றிகைத்து ... *
மன்னனிற்றலும்வருந்தலெஞ்சடையள்வானதியின் ... *
றென்னவிட்டனனொருசிறிதவனிபோந்திழிந்தாள் ... *

(இ-ள்.) புல்லின்றுனியிற்பொருந்திய பனித்துளிபோலக் கங்கை சிவனதுசடையில் மறைந்தொளித்தவளவில் பகிரதன்திகைத்து வணங்கிநிற்கவும், சிவன் அவ்வரசனைநோக்கி நீவருந்தவேண்டாம்கங்கைநம்முடையசடையிலிருக்கின்றனளென்று சொல்லி ஒருதுளிவிட்டான் அவள்பூமியில் வந்திழிந்தனள்—எ-று. (௫௬)

இழிந்தகங்கைமுன்மன்னவன்விரைவொடுமேகக் ... *
கழிந்தமன்னவர்கதிபெறமுடுகியகதியால் ... ... *
அழுந்துமாதவச்சன்னுவின்வேள்வியையழிப்பக் ... *
கொழுந்துவிட்டெரிவெகுளியன்குடங்கையிற்கொள்ளா.

(இ-ள்.) இவ்வாறிழிந்த கங்கைமுன் அரசன் விரைவாகச்செல்லுகையில் முன்னிறந்தசகரராசர்கள் கதிபெறும்பொருட்டு விரைந்துசெல்லும் வேகத்தினால்முதிர்ந்த மாதவத்தையுடைய சன்னுமுனிவர்யாகத்தை அழிக்கவே அவர் கொழுந்துவிட்டெரிகின்ற கோபங்கொண்டவராய் அந்நீரையுள்ளங்கையில் ஏற்றுக்கொண்டு—எ-று. (௫௭)

உண்டுவந்தனன்மறைமுனிக்கணங்கள்கண்டுவப்பக் ... *
கண்டுவேந்தனும்வணங்கிமுன்னிகழ்ந்தனகூறக் ... ...*
கொண்டுபோவெனச்செவிவழிகொடுத்தனன்குதித்து ...*
விண்டுநீங்கினளுடனங்குபொடியின்மேவினளே... ... *

(இ-ள்.) வேதமுணர்ந்த முநிவர்கூட்டங்கண்டு சந்தோஷிக்கும்படியுண்டுகளித்தனன் அவ்வரசன் அதைக்கண்டு வணங்கி முன்னடந்தவைகளைச்சொல்ல ; அதைக்கேட்ட முநிவரிரங்கி) நீகொண்டுபோவென்று தன்காதின்வழியேவிட்டார் (விட்டவளவில்) கங்கையானவள்குதித்து இறந்துபோனவர்களுடல் உதிர்ந்தசாம்பலிற்படிந்தாள்—எ-று. (௫௮)

நிரையமுற்றியசகரர்களெடுங்கதிசெல்ல ... ... *
விரைமலர்ப்பொழிந்தார்த்தனர்விண்ணவர்குழாங்கண். *
முரசமுற்றியபல்லியமுறைமுறைமுழங்க ... ... *
அரசனப்பொழுதணிமதிலயோத்திமீண்டடைந்தான். *

(இ-ள்.) (கங்காநதி இவ்வாறு அந்தச்சாம்பலிற்படிந்தவுடன்) முன்நரகத்தில் வீழ்ந்திருந்தசகரர்கள் அழியாதபதவியிற்சேர்ந்தார்கள் அப்போது தேவர்கூட்டங்கள் வாசனையுள்ள பூமழைபொழிந்து ஆரவாரிக்கவும் பேரிகையும்நிறைந்துள மற்றவாத்தியங்களும் முறைமுறையே கோஷிக்கவும் பகீரதன் அழகியமதில்சூழ்ந்த அயோத்தியிற்சென்று சேர்ந்தான்-எ-று. ()

சொரிந்தன-எ-து- வினையெச்சமுற்று.

அண்டகோளகைப்புறத்ததாயகிலமன்றளந்த ... ... *
புண்டரீகமென்பதத்திடைப்பிறந்துபூமகனார் ... ... *
கொண்டதீர்த்தமாய்ப்பகீரதன்றவத்தினாற்கொணர ... *
மண்டலத்துவந்தடைந்ததிம்மாநதிமைந்த ... ... *

(இ-ள்.) ஸ்ரீராமமூர்த்தியே இந்தமாட்சிமைபொருந்திய நதியானது பூர்வம் அண்டகோளகைக்குப்புறத்திலிருந்ததாய் ஸ்ரீநாராயணமூர்த்தி உலகத்தைஅளந்தபோதுமென்மையாகிய அவர்திருவடித்தாமரையினிடமாகப்பிறந்து பின்புபிரமதேவன் கமண்டலத்திற்கொண்ட தீர்த்தமாகிப் பகீரதன் தவத்தினாற்கொண்டுவந்தமையால் பூலோகத்தில்வந்து சேர்ந்தது—எ-று.

சகரர்தம்பொருட்டருந்தவம்பெரும்பகலுள்ளிப் ... ... *
பகீரதன்கொணர்ந்திடுதலாற்பகீரதியாகி ... ... *
மகிதலத்திடைச்சன்னுவின்செவிவழிவரலா ... ... *
ஜகதிற்சானவியெனப்பெயர்படைத்ததிந்நதி ... ... *

(இ-ள்.) சகரர்கள்நிமித்தமாகப் பகீரதன்நெடுநாள் அரியதவஞ்செய்து கழித்து இவ்விடத்திற்கொண்டு வந்தகாரணத்தினால் பகீரதியென்னும்பெயருடையதாகிப் பின்பு சன்னுமுனிவருடைய காதின்வழியாகப் பூமியினிடத்தில் வந்தகாரணத்தினால் ஒப்பில்லாத ஜானவியென்னும் பெயரும்பெற்றது இந்தக்கங்காநதி—எ-று. (௬௧)

என்றுகூறலும்வியப்பினோடுவந்தனரிறைஞ்சி ... ... *
சென்றுதீர்ந்தனர்கங்கையைவிசாலைமாநகரத் ... ... *
குன்றுபோற்புயத்தரசன்வந்தடியிணைகுறுக ... ... *
நின்றநல்லுணாவிளம்பிமற்றவ்வயினீங்கா ... ... *

(இ-ள்.) இவ்வாறுவிசுவாமித்திரர் சொன்னவளவில் அதிசயத்துடன் சந்தோஷித்து அவ்விராமலட்சுமணர்கள்வணங்க அதற்குமேல் மூவருங் கங்கையைநீங்கிச் சென்றார்கள் (அப்படிசெல்லும்போது) விசாலையென்னும் நகரத்தில்வாழ்கின்ற மலையொத்தபுசமுள்ள ஒருஅரசன் எதிரில்வந்து பணிய அங்குநின்று அம்மன்னவனுக்கு நல்லஉபசாரவார்த்தைகளைச்சொல்லிய பின்பு அவ்விடம்நீங்கி—எ-று. (௬௨)

பள்ளிநீங்கியபங்கயப்பழனநன்னரா ... ... *
வெள்ளவான்களைகளைவுறுகடைசியர்மிளிர்ந்த ... ... *
கள்ளவாணெடுங்கண்ணிடல்கயலெனக்கருதா ... ... *
அள்ளிநாணுறுமகன்பணைமிதிலைநாடடைந்தார் ... ... *

(இ-ள்) சேக்கைவிட்டெழுந்த நல்லநாரைகள் தாமரைகள்பொருந்திய வயல்களில் சிறப்புற்ற மிகுந்தகளைகளைப்பறிக்கும் கடைசியருடைய பிரகாசியாநின்றகரவடம்பொருந்திய விளக்கமாகிய நீண்டகண்களின் நிழல்களைச்சேல்மீனென்றுகருதிப்போய்க்கொத்தி (அவையல்லாமையால் நாணங்கொள்ளும்படியிராநின்ற விசாலமாகிய மருதநிலஞ்சூழ்ந்தமிதிலைநாட்டைச்சேர்ந்தார்கள்—எ-று. (௬௩)

வான்களையென்றதனால் அவை குவளைமுதலியவென்க.

வரம்பில்வான்சிறைமதகுகண்மூழ்வொலிவழங்க... ... *
அரும்புநாண்மலரசோகங்களலர்விளக்கெடுப்ப ... ... *
நரம்பினுன்றதென்றுளைகொணறுமலரியாழின் ... *
சுரும்புபாண்செயத்தோகைநின்றாடுவசோலை... ... *

(இ-ள்) அளவில்லாதபெரியகுளங்களின் மதகுகள் மூழவுபோல ஒலிக்கவும் அரும்புகின்றபுதிய மலர்களையுடைய அசோகமரங்கள் பூவாகிய விளக்குகளேந்தவும் நரம்பைப்போ லொழுகாநின்ற தேன்துளிகளைக்கொண்டிருக்கின்ற நறியமலரினிடத்து யாழைப்போல்வண்டுகளிசையாடவும் சோலையினிடத்து மயில்கள்நடனமாடும்—எ-று. (௬௪)

பட்டவாணுதன்மடந்தையர்பார்ப்பெனுந்தூதால்... *
எட்டவாதரித்துழல்பவரிதயங்கள்வெறுப்ப ... ... *
வட்டநாண்மரைமலரின்மேல்வயலிடைமள்ளர் ... ... *
கட்டகாவியங்கட்கடைகழிப்பனகழனி. ... ... *

(இ-ள்.) பொற்பட்டமணிந்த ஒளிபொருந்திய நெற்றியினையுடைய மாதர்களின் பார்வையாகியதூதினால் அவர்களைச்சேர விருப்பங்கொண்டு அந்தசஞ்சரித்துக்கொண்டிருக்கும் ஆடவர்களுடைய இருதயங்களை வெறுக்கும்படிவயலில் மள்ளர்கள் களைபறித்தெழுந்த குவளைமலர்கள் வட்டமாகியகாலத்தில் மலர்ந்ததாமரைமலர்மேற் படிந்திருந்து அம்மாதர்களுடைய கண்களைப்பழிக்காநின்றன—எ-று. (௬௫)

பார்ப்பு-எ-து-பார்வை-இங்கு-குவளைகள்- மாதர்கண்களினும் அழகுள்ளனவாயிருப்பதினால் அம்மங்கையர்களினிடத்துண்டாகும் விருப்பம்நீங்கி ஆடவர்மனம்வெறுக்கின்றதெனக்கொள்க.

இதயங்கள் கொதிப்பவென்றும் களிப்பனகழனியென்றும் யாடமாயின் செந்தாமரை மலர்மேலிருக்கும் குவளைமலரைநோக்கும்போது அம்மாதர்கண்கள் ஞாபகமுண்டாகி அதனுல் மனங்கொதிக்கும்படி கழனியிற்களிப்புற்றிருக்குமெனப் பொருள்கொள்க.

கட்கடை என்பது-ஒருமொழி-கண்ணினது கடையெனப்பதம்பிரிக்கப்படும். செய்யுளில் அலங்காரம் உட்பமோட்சைப்பொருள் குறிப்பறிதல்காண்க.

தூவியன்னந்தமினமென்றுநடைகண்டுதொடரக் ... *
கூவுமென்குயிற்குதலையர்குடைந்ததண்புனல்வா ... *
யோவில்குங்குமச்சுவடுறவொன்றொடொன்றாடிப் ... *
பூவுறங்கினும்புள்ளுறங்காதனபொய்கை.. ... ... *

(இ-ள்.) பொய்கைகளில் கூவுகின்ற மெல்லியகுயில்போன்ற மொழியையுடைய மாதர்கள் சிறகுள்ள அன்னங்கள் தங்களினமென்று நடையைக்கண்டு பின்தொடரும்படிசென்று ஆடுகின்ற குளிர்ச்சிபொருந்திய நீரினிடத்தில் நீங்குதலில்லாத குங்குமப்பூச்சேர்ந்த கலவைக்குழம்பின்சுவடுஉடனெல்த்தும்படிதலால் அந்நீரினிடத்திலிருக்கும் பறவைகள் (சேவலும்பேடையும்) பிணைந்து மலர்கள்உறங்கினுலும்உறங்காமலிருக்கின்றன-எ-று. (௬௬)

மாதர்கள்பூசிய குங்குமக்கலவைபடிதலால் அந்நீர்குங்குமச்சேறாக அதிற்பொருந்திய பறவைமெய்யில குங்குமச்சுவடுபட்ட அதனைக்கண்டு தம்மினமல்லவென்று ஒன்றனை மற்றொன்றாகருதி ஊடுகின்றது என்பது கருத்து.

பூவுறங்கல்-குவிதல்-ஒருவுதல்-என்னும்பதம்விகாரவகையால் ஒவுஎனநின்றது.

முறையினன்றுழுதுமேதியின்மூலைவழிபாலுந் ... ... *
துறையினின்றுயர்மாங்கனிதூங்கியசாறும் ... ... *
அறையுமென்கரும்பாடியவமிர்தமுமழிதே ... ... *
னுறையுமல்லதுநளிர்புனல்பெருகலாநதிகள்... ... *

(இ-ள்.) நதிகளில் முறைமையாக நல்லுழுதிய எருமைமுலைகளினின்றும் ஒழுகாநின்றபாலும் பொழிலினிடத்தினின்றும் உயர்ந்தமரங்களில் கனிகளிலிருந்து ஒழுகுகின்றசாறும் சொல்லுகின்ற மெல்லிய கரும்புகளை ஆலையிலாட்டதலால உண்டாகுஞ்சாறும் இறாலுடைந்தொழுகாநின்றதேனும்பெருகுவனவன்றி குளிர்ச்சிபொருந்திய நீர்பெருகாவாம்---எ-று. (௬௭)

தேன்-நறை-பண்புத்தொகை-சாறுகளின் மிகுதிகூறியது. துறை என்பது-அத்துறையின்கண்ணவாகிய பொழிலுக்காதலால் இடவாகுபெயர்.

இழைக்குநுண்ணிடையிடைதளருகவேர்கொங்கை ... *
மழைக்கண்மங்கையராங்கினில்வயினியர்முழவ ... ... *
முழக்குமின்னிசைவெருவியமேட்டிளமேதி ... ... *
உழக்கவாளைகள்பாளையிற்குதிப்பனவோடை ... ... *

(இ-ள்.) நூற்கப்படுகின்ற நூலிழையைப்பார்க்கினும் நுண்ணிய இடையானது மெலியும்படி மேலோங்குகின்ற தனங்களையும் குளிர்ச்சியாகிய பார்வையினையுமுடைய மாதர்கள்நடிக்கும் நாடகசாலையில் கூத்தர்கள்முழக்காநின்ற முழவத்தினினிய ஒலிக்குப்பயந்து உயர்ந்த இளமையாகிய எருமைகள் ஓடைகளிற்குதித்துக்கலக்க அதிலிருக்கும் வாளைகள் தெங்கம்பாளைகளில்பாயவன—எ-று. (௬௮)

முழவு-மத்தளமென்னும் ஓர்வாத்தியம்.

படைநெடுங்கண்வாளுறைபுகப்படர்புனன்மூழ்கிக்... *
கடையமுன்கடற்செழுந்திருவெழும்படிகாட்டி ... ...*
மிடையும்வெள்வளைபுள்ளொடுமொலிப்பமெல்லியலார் *
குடையவண்டினங்கடிமலர்குடைவனகுளங்கள் ... ... *

(இ-ள்) அந்நாட்டுமாதர்களின் நெடுங்கண்களாகிய போர்க்குரியவாள்கள் இமைகளாகிய உறைக்குட்புகும்படி பரந்தநீருண்மூழ்கி முன்னங்கடைந்தபோது பாற்கடலில் செழுமைதங்கிய திருமகள் எழுந்ததன்மையைக்காட்டி நெருங்கியவெண்மையுள்ள சங்குகளும் பறவைகளும் ஒலிக்கும்படி நீரில்விளையாடும்போது தடாகங்களிலுள்ள வண்டினங்கள் வாசனையுள்ளமலர்களிற் குடையாநிற்கும்—எ-று. (௬௯)

கண்வாளுறை புகவென்றது நீரில்மூழ்கும்போது கண்களைமூடிக்கொள்ளும் முறைமையைக்காட்டிற்று.

இவ்வாறுமூழ்கி யெழுந்திருப்பது திருப்பாற்கடல் கடையும்போது திருமகள் அதிலிருந்தெழுந்திருந்தது போன்றதென்பதினு விறங்கிமூழ்கி யெழுந்தார்களென்று பொருள்படுமென்றறிக.

இனையநாட்டினையினிதுசென்றிஞ்சிசூழ்மிதிலை... ... *
புனையுநீள்கொடிப்புரிசையின்புறத்துவந்திறுத்தார்... *
மனையின்மாட்சியையழித்திழிமாதவப்பன்னி ... ... *
கனையுமேட்டியர்கருங்கலோர்வெள்ளிடைக்கண்டார்... *

(இ-ள்) இத்தன்மையுள்ள நாட்டினிடத்து இவர்கள் இனிதாகச்சேர்ந்து உறுப்புகளால் சூழப்பட்ட மிதிலாபுரியின் அலங்கரிக்கும் நீண்டகொடிகளையுடையமதிலின்புறத்தில்வந்துசேர்ந்தவர்கள் ரிஷிபத்தினியாகிய அகலியையென்பவள் இல்வாழ்க்கைக்குரியமாட்சிமையாகிய (கற்பினைக்)கெடுத்துக்கிடக்குங்கருங்கல்லை வெளிப்புறத்தில் பரந்திருக்கு மொருபெரிய மேட்டினிடத்துக் கண்டார்கள்—எ-று. (௭௰)

மதிலுறுப்பு-எ-து-நாஞ்சில் அவ்வுறுப்பாவது பொறி சுருங்கைவழி முதலாயின அகலியைகௌதமரிஷிசாபத்தால்கருங்கல்லாயிருப்பதைக் கண்டார்களென்பதுகருத்து.

கண்டகன்மிசைக்காகுத்தன்கழற்றுகள்கதுவ ... ... *
வுண்டபேதைமைமயக்கறவேறுபட்டுருவங் ... ... *
கொண்டுமெய்புணர்பவன்கழல்கூடியதொப்பப் ... ...*
பண்டைவண்ணமாய்நின்றனன்மாமுனிபணிப்பான்... *

(இ-ள்) இவ்வாறு காணப்பட்ட கல்லின்மேல் ஸ்ரீராமமூர்த்தியினுடைய பாததூளிசென்று பட்டவளவில் தொன்றுதொட்டு விடாமற்பொருந்திய அஞ்ஞானமாகிய மயக்கம் நீங்கிவேறுபட்ட உருவங்கொண்டு மெய்ஞ்ஞானத்தாலஅறியத்தக்க ஸ்ரீநாராயணமூர்த்தியின்திருவடியில் கூடுவதையொப்பாகஅகலிகையும் சாபத்தினால்பெற்றிருந்தகல்லுருவம்நீங்கிமுன்னுருவங்கொண்டுநின்றாள் அப்போது விசுவாமித்திரமுநிவர்சொல்லுகின்றார்-எ-று. ()

வேறுபட்ட உருவங்கொள்ளுதல் ஸ்ரீநாராயணமூர்த்தியைப்போல வடிவங்கொள்ளுதல் அவர்கள் நித்தியசூரிகள்,

வேறு.

மாயிருவிசும்பிற்கங்கைமண்மிசையிழித்தோன்மைந்த... ...*
மேயினவுவகையோடுமின்னெனவொதுங்கிநின்றா ... ...*
டீவினைநயந்துசெய்ததேவர்கோன்றனக்குச்செங்க ... *
ணாயிரமளித்தோன்பன்னியகலிகையாகுமென்றான் ... ...*

(இ-ள்) மிகுந்தபெருமைவாய்ந்த ஆகாயகங்கையைப் பூமியில்கொண்டுவந்த பகீரதன்குலத்தில அவதரித்தமைந்தனே பொருந்திய சந்தோஷத்துடன் மின்னலைப்போல ஒதுங்கிநின்றவள் (யாரென்னில்) தீவினையைவிரும்பிச்செய்த தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்களைக்கொடுத்த கௌதமரிஷியினுடைய பத்தினியாகிய அகலிகையென்னும் பெயரையுடையவளென்று அறிந்துகொள்ளென்று சொன்னார்—எ-று. (௭௨)

பொன்னையேய்சடையான்கூறக்கேட்டலும்பூமிகேள்வன்... *
என்னையேயென்னையேயிவ்வுலகியலிருந்தவண்ணம் ... ...*
முன்னையூழ்வினையினாலோநடுவொன்றுமுடிந்ததுண்டோ ...*
வன்னையேயனையாட்கிவ்வாறடுத்தவாறருளுகென்றான் ... *

(இ-ள்) பொன்னையொத்த சடையினையுடைய விசுவாமித்திர முனிவரிவ்வண்ணஞ்சொன்னபோது பூதேவிநாயகனாகிய ஸ்ரீராமமூர்த்தி கேள்வியுற்றவளவில் இவ்வுலக இயற்கையிருந்தவண்ணம் எத்தன்மையது எத்தன்மையதென்று அதிசயித்து(இந்தக்காரியம்)பழையஊழ்வினையால் நடந்ததோ அல்லது இடையேயொருகாரணத்தால் நடந்ததோ தாயையொத்தவட்கிது நேரிட்டவகையை அநுக்கிரகிக்கவேண்டுமென்றார்—எ-று. (௭௩)

அவ்வுரையிராமன்கூறவறிஞனுமவனைநோக்கிச் ... ... *
செவ்வியோய்கேட்டிமேனாள்செறிசுடர்க்குலிசத்தண்ணல்...*
அவ்வியமவித்தசிந்தைமுனிவனையற்றநோக்கி... ... ...*
நவ்விபோல்விழியினாடன்வனமுலைநணுகலுற்றான் ... ... *

(இ-ள்) அத்தவார்த்தை இராமமூர்த்திசொன்னபோது விசுவாமித்திரமுனிவர் அவனைநோக்கி நல்லொழுக்கமுள்ளமைந்தனே அதனைக்கேட்பாயாக, முன்னாள்நெருங்கிய ஒளியினையுடைய வச்சிராயுதமேந்திய இந்திரன் காமக்குரோதாதிகளை நீக்கிய சிந்தையினையுடைய கௌதமரிஷிநீங்கிய சமயம் அறிந்து மான்போன்றவிழியையுடைய இந்தஅகலிகையின் அழகியதனங்களைப்பொருந்த விருப்பமுற்றனன்—எ-று. (௭௪)

தையலாணயனவேலுமன்மதன்சரமும்பாய ... ...*
வுய்யலாமுறுதிநாடியுழல்பவனொருநாளுற்ற ... ...*
மையலாலறிவுநீங்கிமாமுனிக்குற்றஞ்செய்து ... ... *
பொய்யிலாவுள்ளத்தான்றனுருவமேகொண்டுபுக்கான்... ...*

(இ-ள்) அகலிகையினுடைய கண்ணாகியவேலும் மன்மதன்பாணமுந் தன்மீதில் பாய்வதினால்(உண்டாகும்வருத்தத்தினின்றும் நீங்கி)உய்யும்படியான உறுதியைக்குறித்து உழலுகின்ற இந்திரன், பொருந்திய மயக்கத்தினால்

அறிவுநீங்கி ஒருநாள் கௌதமரிஷிக்குப் பிரிவையுண்டாக்கி பொய்யில்லாத உள்ளத்தையுடைய அந்தக்கௌதமரிஷிவடிவங்கொண்டு அகலிகையினிடத்திற் சென்றான்—எ-று. (எ௫)

இந்திரன் சேவற்கோழியுருவங்கொண்டு கூவினதாகவும் அதைக்கேட்டு விடியற்காலமென நினைத்து முநிவர் ஸ்நாநத்திற்காகப் போய்விட்டதாகவும் வழங்குகின்றது.

புக்கவனோடுங்காமப்புதுமணமதுவின்றேறல் ... ... *
ஒக்கவுண்டிருத்தலோடுமுணர்ந்தனளுணர்ந்தபின்னுந் ... ... *
தக்கதன்றென்னவோராடாழ்ந்தனளிருப்பத்தாழா ... ... *
முக்கணானனையவாற்றன்முனிவனுமுடுகிவந்தான் ... ... *

(இ-ள்) இவ்வாறுசென்று அவளுடன் நவமானபுணர்ச்சியின்பமானதேனைப்பொருந்த அநுபவித்துக்கொண்டிருக்கும்போது தன்கணவனல்லவென்றறிந்துகொண்டாள் அறிந்தபின்னும் இதுதகுதியல்லவென்றுணராதவளாயிசைந்திருக்கும்போது தாழ்வுபடாது திரிநேத்திரங்களுள்ள ருத்திரமூர்த்தியையொத்த கௌதமரும் விரைவில்வந்தார்—எ-று. (எ௬)

சரந்தருசாபமல்லாற்றடுப்பருஞ்சாபம்வல்ல ... ... *
வரந்தருமுனிவனெய்தவருதலும்வெருவிமாயா ... ... *
திரந்தருமுலகினிற்குநெடும்பழிபூண்டாணின்றாள் ... ... *
புரந்தரனடுங்கியாங்கோர்பூசையாய்ப்போகலுற்றான் ... ... *

(இ-ள்.) பாணம் எவுதற்கிசைவாகிய சாபம்போலல்லாமல் ஒருவராலுந் தடுப்பதற்கரியசாபத்தில் வல்லவராகி வரமுந்தரத்தக்க அம்முநிவர் சமீபத்தில்வந்தவளவில் பயந்து அழியாமல் எப்போதும் உலகினிலிருக்கத்தக்க பெரியபழியைப்பூண்ட அகலிகைநின்றாள் இந்திரனடுங்கி அவ்விடத்தில் ஒருபூனையாயோடிப்போகத் தொடங்கினான்—எ-று. (எ௭)

தீவிழிசிந்தநோக்கிச்செய்ததையுணர்ந்துசெய்ய ... ... *
தூயவனவனைநின்கைச்சுடுசரமனையசொல்லால் ... ... *
ஆயிரமாதர்க்குள்ளவறிகுறியுனக்குண்டாகென் ... ... *
றேயினனவையெலாம்வந்தியைந்தனவிமைப்பின்முன்னம் ... *

(இ-ள்) இந்திரன்செய்யத்தகாதகாரியத்தைக்கௌதமர்அறிந்து கண்களில்தீப்பொறிசிந்தும்படி அவனைநோக்கி உன்கையிலிருக்கும் தீக்கணையையொத்த தம்முடையவாக்கினால் (இந்திரனே) மாதர்களுக்குள்ள அறிகுறி உன்னுடலில் ஆயிரமுண்டாகக் கடவதென்றேவினார் ஏவினமாத்திரத்தில் அவையெல்லாம் இமைப்பொழுதுக்கு முன்வந்து அவனுடலிற் பொருந்தின—எ-று. (எ௮)

எல்லையினாணமெய்தியாவர்க்குநகைவந்தெய்தப் ... ... *
புல்லியபழியினோடும்புரந்தரன்போயபின்றை ... ... *
மெல்லியலாளைநோக்கிவிலைமகளனையநீயுங் ... ... *
கல்லியலாதியென்றான்கருங்கலாய்மருங்குவீழ்வாள் ... *

(இ-ள்) அளவில்லாத வெட்கத்தை அடைந்துகண்டவர்களெல்லாம்நகைக்கும்படி சம்பவித்தபழிப்புடன் இந்திரன்போனபின்பு அகலிகையைநோக்கி வேசையையொத்தநீயும்கல்லினுருவமாகக்கடவையென்றுசபித்தார் அவ்வாறுசபித்தவளவில்) கருங்கல்லா யவ்விடத்து விழுகின்றவள்—எ-று. (௭௯)

பிழைத்தனபொறுத்தலென்றும்பெரியவர்கடனேயென்பர் .*
அழற்றருங்கடவுளன்னாய்முடிவிதற்கருளுகென்னத் ... *
தழைத்துவண்டிமிருந்தண்டார்த்தசரதராமனெய்பாள் ... *
கழற்றுகள்கதுவவிந்தக்கல்லுருத்தவிர்தியென்றான் ... ... *

(இ-ள்) தீநிறமுள்ள பரமசிவனையொத்தவரே சிறியோர்செய்த பிழைபொறுத்தலென்றும் பெரியவர்கள் கடமையென்பார் ஆதலால் இந்தச்சாபத்துக்கொருமுடிவு அருளிச்செய்யுமென்று வேண்டிக்கொள்ள தழைத்துவண்டுகளிசைபாடும் குளிர்ந்தமாலையணிந்த தசரதராமனென்பவனுடையபாததூள்கள்பட இக்கல்லுருவம் நீங்குவையென்றார்—எ-று. (௮௰)

பெரியவர்கடனென்றதனால்-சிறியோர்பிழையெனவருவிக்கப்பட்டது.

அந்தவிந்திரனைக்கண்டவமரர்கள்பிரமன்முன்னு ... ... *
வந்துகோதமனைவேண்டமற்றவைதவிர்த்துமாறாச் ... ... *
சிந்தையின்முனிவுதீர்ந்துசிறந்தவாயிரங்கண்ணாக்கத் ... ...*
தந்தமதுலகுபுக்கார்தையலுங்கிடந்தாள்கல்லாய் ... ... *

(இ-ள்) அந்த இந்திரனைக்கண்டதேவர்கள் பிரமதேவன் முன்னிலையிற்சென்று கௌதமரிஷியைவேண்டிக்கொள்ள அப்பெண்குறிகளாயிருந்தவற்றைநீக்கி அவர்தம்முடையமனதிலே நீங்காதகோபந்தவிர்ந்து சிறந்த ஆயிரங்கண்ணாகும்படி அநுக்கிரகஞ்செய்தார் தேவர்கள் தங்கள்தங்களிடமபோய்ச் சேர்ந்தார்கள் அகலிகையானவள் கல்லுருவமாயிருந்தாள்-எ-று.

இவ்வண்ணநிகழ்ந்தவண்ணமினியிந்தவுலகுக்கெல்லாம் ... *
உய்வண்ணமன்றிமற்றோர்துயர்வண்ணமுறுவதுண்டோ ...*
மைவண்ணத்தரக்கிபோரின்மழைவண்ணத்தண்ணலேயுன் ..*
கைவண்ணமங்குக்கண்டேன்கால்வண்ணமிங்குக்கண்டேன் ... ...*

(இ-ள்.) இவ்வாறு முன்னடந்தமுறைமையினி இந்த உலகங்களுக்கெல்லாம் பிழைக்குந்தன்மையுண்டாவதேயன்றி மற்றோர் துயரமென்னுந்தன்மையுண்டாகுமோ (உண்டாவதில்லை) மேகநிறமுள்ள ஸ்ரீராமமூர்த்தியே! கருமையுள்ள அரக்கியினுடைய யுத்தத்திலுன் கைவல்லமையைக்கண்டேன் (அதுவுமன்றி) உனதுபாதத்தின்பெருமையை இவ்விடத்தில் கண்டேன்.

அண்ணல்- பெருமையிற்சிறந்தோன்.

தீதிலாவுதவிசெய்தசேவடிக்கரியசெம்மல் ... ... *
கோதிலாக்குணத்தான்சொன்னபொருளெலாமனத்திற்கொண்
மாதவனருளுண்டாகில்வழிபடர்படருறுதே ... ... [டு
போதுநீயன்னையென்றுபொன்னடிவணங்கிப்போனார் ... *

(இ-ள்.) பாவமில்லாத உதவிசெய்த சேவடியையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் குற்றமற்ற குணத்தையுடைய விசுவாமித்திரமுநிவர்சொல்லியபொருளையெல்லாமனதிற்கொண்டு அகலிகையைநோக்கி தாயே! கௌதமருடைய கிருபையுண்டாயிருக்குமாகில் இனிதுன்பம் உண்டாவதில்லை நீனங்களுடன்வாவென்றுசொல்லி அவளுடைய பொலிவுள்ளபாதத்தை வணங்கிச்சென்றார்—எ-று. (௮௪)

அருந்தவனுறையுளையணையவண்ணலோடும் ... ... *
விருந்தினர்தம்மைக்காணுமெய்ம்முனிவியந்தநெஞ்சன் ... *
பரிந்தெதிர்கொண்டுபுக்குக்கடன்முறைபழுதறுமற் ... *
புரிந்தபின்காதிசெம்மல்புனிதமாதவனைநோக்கி ... ... *

(இ-ள்.) அரியதவமுள்ள கௌதமரிஷியின் ஆச்சிரமத்தில் அவர்கள்நெருங்கிப் போனபோது விருந்தினரைக்கண்டு மெய்ஞ்ஞானமுள்ள கௌதமரிஷி சந்தோஷ சித்தமுடையவராய்ப் பரிந்து எதிர்சென்று அழைத்துக்கொண்டுபோய்ச் செய்யவேண்டிய உபசாரங்கள் பழுது நீங்கச்செய்த பின்னர் விசுவாமித்திரர் புனிதராகிய கௌதமரிஷியைப்பார்த்து.—எ-று.

காதிசெம்மல்-காதிராசன்புத்திரன் விசுவாமித்திரன்.

அஞ்சனவண்ணத்தான்றனடித்துகள்கதுவாமுன்னம்... ... *
வஞ்சிபோலிடையாண்முன்னைவண்ணத்தளாகிநின்றாள் ... *
நெஞ்சினாற்பிழைப்பிலாளைநீயழைத்திடுகவென்ன ... *
கஞ்சமாமுனிவனன்னமுனிவனுங்கருத்துட்கொண்டான் ... *

(இ-ள்.) கௌதமமுநிவரே! அஞ்சனம்போலுநிறமுள்ள இவ்விராமமூர்த்தியினுடைய பாததுள்சென்று படுவதற்குமுன் கொடிபோன்ற இடையையுடையவளாகிய உம்முடைய பத்தினி முன்னைவடிவினளாகிநின்றாள் இவளோதன்மனதறிந்து குற்றஞ்செய்யாதவளாதலால் நீர் அழைத்துக்கொள்ளுமென்று (விசுவாமித்திரமுநிவர்) சொல்ல, பிரமதேவனையொத்த கௌதமரிஷியும்சம்மதித்தார்—எ-று. (௮௫)

குணங்களாலுயர்ந்தவள்ளல்கோதமன்கமலத்தாள்கள் ... ... *
வணங்கினன்வலங்கொண்டேத்திமாசறுகற்பின்மிக்க ... *
வணங்கினையவன்கையீந்தாண்டருந்தவனேகும்வாச ... *
மணங்கிளர்சோலைநீங்கிமணிமதிற்கிடங்கைக்கண்டார்... ...*

(இ-ள்.) நற்குணங்களால் மேன்மைபெற்ற ஸ்ரீராமமூர்த்தியானவர்கௌதமரிஷியினுடைய பாததாமரைகளை வணங்கி வலம்வந்து துதித்து குற்றமற்ற கற்பினாலுயர்ந்த அகலிகையை அம்முநிவர்கையில் ஒப்புவித்து அவ்விடம்விட்டு ஸ்ரீராமலட்சுமணரும், விசுவாமித்திரமுநிவரும், அப்புறஞ்சென்று வாசனைவீசுகின்ற சோலைகளைக்கடந்துபோய் அழகிய மதிலைசூழ்ந்த அகழியைக்கண்டார்கள்—எ-று. (௮௬)

அணங்கு-மாதர்பொதுப்பெயர்.

௯-வது-அகலிகைப்படலமுற்றிற்று.

ஸ்ரீராமசெயம்.

௰௪-வது-மிதிலைகாட்சிப்படலம்.

மையறுமலரினீங்கியான்செய்மாதவத்தின்வந்து ... ... *
செய்யவளிருந்தாளென்றுசெழுமணிக்கொடிகளென்னுங் ... *
கைகளைநீட்டியந்தக்கடிநகர்கமலச்செங்க ... ...*
ணையனையொல்லைவாவென்றழைப்பதுபோன்றதம்மா... ... *

(இ-ள்) குற்றமற்றதாமரைமலரினின்று நீங்கி நான்செய்த அரியதவத்தினுல்வந்து பெரியபிராட்டியார் என்னிடத்திலிருக்கின்றனர். (ஆதலால்) காவலுள்ள அம்மிதிலைநகரமாகிய மாதானவள், செந்தாமரைமலர்போன்ற கண்களுள்ள ஸ்ரீராமமூர்த்தியை செழுமைபொருந்திய மணிகளையுடையகொடிகளாகியகரங்களைநீட்டி விரைவாகவாருமென்று அழைத்தலை யொத்தது.

அக்கொடிகளாடுந்தோற்றமென்னுமிது-சொல்லெச்சம்.

நிரம்பியமாடத்தும்பர்நிரைமணிக்கொடிகளெல்லாந் ... *
தரம்பிறரின்மையுன்னித்தருமமேதூதுசெல்ல ... ... *
வரம்பில்பேரழகினாளைமணஞ்செய்வான்வருகின்றானென்... *
றரம்பையர்விசும்பினாடுமாடலினாடக்கண்டார் ... ... *

(இ-ள்) தகுதியானவர்கள் வேறொருவருமில்லாமையைக்கருதி தருமதேவதையே தூதுபோயழைக்க, அளவில்லாத மிகுந்த சௌந்தரியமுள்ள ஸீதாபிராட்டியை விவாகஞ்செய்துகொள்ள ஸ்ரீராமமூர்த்தி வருகின்றானென்று அரம்பாஸ்திரீகள் நடனஞ்செய்யும் நடனத்தைப்போல நிறைந்தமாளிகைகளின்மேலே வரிசையாயிராநின்ற மணிக்கொடிகள்யாவும் ஆடப்பார்த்தார்கள்—எ-று. (உ)

தயிருறுமத்திற்காமசரம்படத்தலைப்பட்டூடே ... ...*
ருயிருறுகாதலாரினொன்றையொன்றொருவுகில்லா ... ...*
செயிருறுமனத்தவாகித்தீத்திரள்செங்கண்சிந்த ... ... *
வயிரவான்மருப்பியானைமலையொடுமலையக்கண்டார் ... ... *

(இ-ள்) தயிரினிடத்தில் பொருந்திய மத்தைப்போல மன்மதபாணங்களைவந்துபடுவதினால் அகப்பட்டு ஊடுகின்ற பொருந்திய ஆசையையுடைய ஸ்திரீபுருஷர்களைப்போல ஒன்றினை மற்றொன்று நீங்குதலின்றி கோபந்தங்கிய மனமுள்ளவைகளாய்த் தீப்பொறிகள் செங்கண்களிலிருந்து உதிரும்படி சேகேறிய வெண்மையான தந்தங்களையுடைய யானைகள் மலையைப்போலப்போர்செய்யக்கண்டார்கள்—எ-று. (௩)

வைரவான்மருப்பென்பது-வைரத்தாற்செய்த பூண்கட்டிய மருப்பெனினுமமையும்,

பகற்கதிர்மறையவானம்பாற்கடல்கடுப்பநீண்ட ... ... *
துகிற்கொடிமிதிலைமாடத்தும்பரிற்றுவன்றிநின்ற ... ...*
முகிற்குலந்தடவுந்தோறுநனைவனமுகிலிற்சூழ்ந்த ... ...*
அகிற்புகைகதுவுந்தோறும்புலர்வனவாடக்கண்டார் ... *

(இ-ள்.) சூரியகிரணங்கள்மறையவும், ஆகாயமானது பாற்சமுத்திரத்தை ஒப்பாகவும், மிதிலைநகரத்து மாளிகைகளின்மேல் பெரிய வஸ்திரக்கொடிகள்நெருங்கி நிலைபெற்ற மேகக்கூட்டத்தைத் தடவுந்தோறும் நனைந்து அம்மேகத்தைப்போலச்சூழ்ந்த அகிற்புகைகள் படியுந்தோறும் உலர்ந்து ஆடப்பார்த்தார்கள் —எ-று. (௩)

நனைவன புலர்வன எ-து-முற்றுவினையெச்சம்.

ஆதரித்தமுதிற்கோதோய்த்தவயவமமைக்குந்தன்மை ... *
யாதெனத்திகைக்குமல்லான்மதனற்குமெழுதவொண்ணாச் ... *
சீதையைத்தருதலாலேதிருமகளிருந்தசெய்ய ... ... *
போதெனப்பொலிந்துதோன்றும்பொன்மதின்மிதிலைபுக்கார்.

(இ-ள்.) விரும்பி அமிர்தத்தில்தூரியக்கோலைத்தோய்த்து அவயவங்களை எவ்வாறு சித்திரிக்கலாமென்று மயங்குவனேயன்றி மன்மதனாலும் எழுதவொண்ணாத சீதாபிராட்டியைத்தந்ததினாலே திருமகள் வீற்றிராநின்ற செந்தாமரைமலர்போல அழகுற்றுத்தோன்றும் பொன்மதில்சூழ்ந்த மிதிலைநகரத்திற்பிரவேசித்தனர்—எ-று. (௫)

திகைக்குமென்பது, படர்க்கை ஆண்பாலில்வந்த செய்யுமென்னுமுற்று. மதனுக்குமெழுதவொண்ணாவென்பது, உருபுமயக்கம்.

சொற்கலைமுனிவனுண்டசுடர்மணிக்கடலுந்துன்னி ... *
யற்கலந்திலங்குபன்மீனரும்பியவானும்போல ... ... *
விற்கலைநுதலினாருமைந்தரும்வெறுத்துநீத்த ... ... *
பொற்கலன்கிடந்தமாடநெடுந்தெருவதனிற்போனார் ... *

(இ-ள்.) தமிழ்க்கலைகளையுடைய அகஸ்தியமுநிவரால் உண்ணப்பட்ட ஒளியுள்ள மணிகள்பொருந்திய சமுத்திரம்போலவும்நெருங்கி இரவிற்சேர்ந்து பிரகாசியாநின்ற பலவாகிய நட்சத்திரங்கள் உண்டாயிருக்கின்ற ஆகாயம்போலவும், ஒளிபொருந்திய மதிக்கலையையொத்த நெற்றியையுடைய மாதரும் ஆடவரும் மனம்வெறுத்து நீக்கிவிட்ட பொன்னாபரணங்கள்(கொள்வாரின்மையினால்) விழுந்தவண்ணமாகவே கிடக்காநின்ற மாளிகைகளையுடைய நெடியவீதியிற்போனார்கள்—எ-று. (௬)

கலை ஆகுபெயர். நீர்வற்றினகாலத்தில் மணிகள்விளங்கினமையால் முநிவனுண்ட கடலென உவமித்தது, இது-செல்வப்பெருக்கங்கூறியது.

தாறுபாய்தறுகட்குன்றத்தடமதவருவிதாழ்ப்ப ... ... *
வாறுமாய்க்கலினமாவிலாழியாலழிந்தோராறாய்ச் ... ... *
சேறுமாய்த்தேர்களோடத்துகளுமாயொன்றொடொன்று ... *
மாறுமாறாகிவாளாக்கிடக்கிலாமறுகிற்சென்றார் ... ... *

(இ-ள்.) அங்குசத்தாற் குத்தப்பட்ட அஞ்சாமையையுடைய மலையொத்த யானைகள் மிகுந்தமதநீராகிய அருவியைப்பொழிவதனால் கடிவாளம்பூட்டிய குதிரைகளின்வாயினின்றும் ஒழுகாநின்ற நுரையினால் அந்தஆற்றின்தன்மைமாறி வேறு ஓராறுபோலாகவுடனே சேறாகியும் தேர்களோடு வதி

னுல் தூளாகியும் இவ்வாறு ஒன்றுடனொன்று மாறுபடுவதாகிய வீதியிராஜ வீதியிற்போனார்கள் — எ-று. (௭)

தண்டுதலின்றியொன்றித்தலைத்தலைச்சிறந்தகாத ... ... *
லுண்டபின்கலவிப்போரினுடைந்தமென்மகளிரேபோற் ... *
பண்டருங்கிளவியார்தம்புலவியிற்பரிந்தகோதை ... ... *
வண்டொடுங்கிடந்துதேன்சோர்மணிநெடுந்தெருவிற்சென்றார்.

(இ-ள்) நீக்கமின்றிப்பொருந்தி இருவரிடத்தும் அதிகரித்தகாமவின்பத்தை அநுபவித்தபின்பு அக்கலவிப்போரினால் இளைத்தமென்மைத்தன்மையுள்ள மாதர்களைப்போல இராகத்தையொத்த வசனத்தையுடைய மங்கையர்கள் ஊடலில் நீக்கிவிட்டபூமாலைகள் வண்டுடனிருந்து தேன்துளிக்கும்படியாகிய அழகுள்ள நெடியவீதியிற்சென்றார்கள் — எ-று (௮)

கலவியினலிளைத்தமாதரை எடுத்துக்காட்டினமையால் நீக்கப்பட்டமாலைகள் வாடியிருக்கின்றனவென்பதாயிற்று.

நெய்திரணரம்பிற்றந்தமழலையின்வழியன்றபாடற் ... ... *
றைவருமகரவீணைதண்ணுமைதழுவித்தூங்கக் ... ... *
கைவழிநயனஞ்செல்லக்கண்வழிமனமுஞ்செல்ல ... ... *
வையநுண்ணிடையாராடுமாடகவரங்குகண்டார் ... ... *

(இ-ள்.) நெய்திரளும், நரம்புடன் தந்த மழலைச்சொல்லால் இயலுகின்ற இசைப்பாடலைத்தழுவிய மகரவீணையானது மழவநாதத்தைத் தழுவி ஒத்திருக்கவும், அபிநயங்காட்டும் கையின்வழியே பார்வைசெல்லவும், கண்வழியே மனஞ்செல்லவும், (உண்டோவில்லையோவென்று) சந்தேகிக்கத்தக்க நுட்பமாகிய இடையினையுடையமாதர்கள் நடனஞ்செய்கின்றபொன்னாலாகிய நிருத்தசாலையைப்பார்த்தார்கள் — எ-று. (௯)

பூசலினெழுந்தவண்டுமருங்கினுக்கிரங்கிப்பொங்க ... ... *
மாசுறுபிறவிபோலவருவதும்போவதாகி ... ... *
காசறுபவளச்செங்காய்மரகதக்கமுகுபூண்ட ... ... *
ஊசலின்மகளிர்மைந்தர்சிந்தையோடுலவக்கண்டார் ... ... *

(இ-ள்.) போருடன் மேலெழுந்தவண்டுகள் இடைக்காக இரக்கமுற்றுஒலிக்கவும், குற்றத்தைப்பொருந்திய பிறவியைப்போல வருகின்றதும் போவதுமாகிய குற்றம்நீங்கிய பவளம்போலச் செம்மை நிறமுள்ள காய்களையுடைய மரகதமணிபோன்ற கமுகமரங்களில் பிணிக்கப்பட்ட ஊசலினிடத்து மாதர்கள் தந்தங்கணவர்களுடைய மனத்துடன் ஆடிக்கொண்டிருப்பதைப்பார்த்தார்கள் — எ-று. (௰)

ஆடவர்மனம் தந்தமனைவியரிடத்துத் தங்கியிருத்தலின் சிந்தையோடுலவக் கண்டார் என்றது.

வரப்பறுமணியும்பொன்னுமாரமுங்கவரிவாலுஞ் ... ... *
சுரத்திடையகிலுமஞ்ஞைத்தோகையுந்தும்பிக்கொம்பும் ... *
குரப்பணைநிரப்புமள்ளர்குவிப்புறக்கரைகடோறும் ... *
பரப்பியபொன்னியன்னவாவணப்பலவுங்கண்டார் .. ... *

(இ-ள்.) அளவுநீங்கிய மணிகளும், பொன்னும், முத்துகளும், கவரிமிருகத்தின்வாலும், பாலைநிலத்தில் உண்டாகும் அகிற்கட்டைகளும், மயில்களின்கலாபங்களும், யானைத்தந்தங்களும், (ஆகிய இவற்றை) வரம்புகளை அணையாகதிரப்பிய மள்ளர்கள் குவிக்கும்படி கரைமேலெங்கும் பரப்புகின்ற காவிரியையொத்த பல ஆவணங்களைப்பார்த்தார்கள்—எ-று. (௰௧)

குரம்பு-குரப்பு-என விகாரமாயிற்று.

வள்ளுகிர்த்தளிர்க்கைநோவமாடகம்பற்றிவார்ந்த ... ... *
கள்ளெனநரம்புவீக்கிக்கண்ணொடுமனமுங்கூட்டி ... .. *
வெள்ளியமுறுவறோன்றவிருந்தெனமகளிரீந்த ... ... *
தெள்விளிப்பாணித்தீந்தேன்செவிமடுத்தினிதுசென்றார் ... *

(இ-ள்.) கூர்மையாகிய நகங்களுள்ள தளிர்போன்ற கையானது நோரும்படி முறுக்காணிகளைப்பற்றி ஒழுகாநின்ற மதுவைப்போல நரம்புகளை வலியுறுத்தி கண்களுடன் மனதையுஞ்சேர்த்து வெண்மைநிறமுள்ள தந்தங்கள் சிறிதுதோன்றும்படிவிருந்தாக மாதர்கள்தருகின்ற தெளிந்த இசையாகிய மதுரமுள்ள தேனைக்காதுகளினாலுண்டு இனிதாகப் போனார்கள்-எ-று.

விளிப்பாணி-எ-து,இருபெயரொட்டுப்பண்பு.

கொட்புறுகலினப்பாய்மாகுலான்மகன்முடுக்கிவிட்ட ... ... *
மட்கலத்திகிரிபோலவயின்வயின்வருவமேலோர் ... ... *
நட்பினினிடையறுதல்ஞானிகளுணர்வினென்றாய்க் ... .. *
கட்புலத்தினையவென்றுதெரிவிலதெரியக்கண்டார் ... .. *

(இ-ள்.) சுழலுதலைப்பொருந்திய கடிவாளம்பூட்டிய தாவிச்செல்லுங்குதிரைகள் குயவன் விரைவாகச்சுழற்றிவிட்ட மண்பாண்டஞ்செய்யுங் கருவியாகிய சக்கரம்போல இடங்கள்தோறும் வட்டமாகச்சுழலுகின்றவை பெரியோர்களுடைய நண்பைப்போல இடையில் நீங்காதவைகளாயும் ஞானவான்களுடைய அறிவைப்போல ஒன்றாகியும்,கண்பார்வைக்கு இத்தன்மையானவைகளென்று தெளிவில்லனவாய்த்தோன்றும்படிப்பார்த்தார்கள். ()

வட்டமாகச்சுழலுங் குதிரைகளைக்கண்டார்கள்-எ-து- மேலோர்நட்பு மத்தியில்விட்டுநீங்காமலிருப்பதுபோல வட்டமாகவருகின்றது, ஒருகுதிரையேயானாலும் சுழன்றுவருகின்றவேகத்தினால் இடைவெளிதோன்றமல் கொள்ளிவட்டம்போல மெய்ஞ்ஞானிகளுணர்வு ஐம்புலன்வழிகளிற்சென்று கலங்காமல் பிரமத்தைப்பற்றிய தன்மையைப்போலஒரேஒழுங்காகவருதலால் ஞானிகள் உணர்வினென்றாயெனவும்,விரைவாகவருதலாலின்னது வருகின்றதென்றுதெரியவொண்ணாமையால் தெரிவில தெரியக்கண்டாரெனவுங் கூறினார்.

வாளரம்பொருதவேலுமன்மதன்சிலையும்வண்டின் .. ...*
கேளொடுகிடந்தநீலச்சுருளுஞ்செங்கிடையுங்கொண்டு......*
நீளிருங்களங்கநீக்கிநிரைமணிமாடநெற்றிச்... ... ... *
சாளரந்தோறுந்தோன்றுஞ்சந்திரவுதயங்கண்டார் ... ...*

(இ-ள்.) ஒளிபொருந்திய அரத்தினால் அராவப்பட்ட வேலாயுதமும் காமன்வில்லும் வண்டின்கூட்டங்களோடு பொருந்திய நீலமலர்ச்சுருளும்

செஞ்சடையும் தன்னிடத்திலேவைத்துக்கொண்டு அறியாத பெரியகளங்கத்தை விலக்கி வரிசையாயிராநின்ற மணிகள்பதித்த மாளிகைகளின் மேலேயிராநின்ற பல்கணிவாயில்கள்தோறும் காணப்படுகின்ற சந்திரோதயத்தைப்பார்த்தார்கள்—எ-று. (௰௪)

வேல்போன்றகண்களையும் வில்லொத்தநெற்றியினையும் நீலச்சுருளையொத்தஅளகத்தையும் செஞ்சடையையொத்த அதரத்தையும்கொண்டு பூரணச்சந்திரனையொத்த மாதர்முகங்களைக்கண்டார்கள் எனக்கொள்க.

பளிக்குவள்ளத்துவார்த்தபசுநறுந்தேறன்மாந்தி ... ... *
வெளிப்படுநகையவாகிவெறியனமிழற்றுகின்ற ... ... *
ஒளிப்பினுமொளிக்கவொட்டாவூடலையுணர்த்துமாபோற்... *
களிப்பினையுணர்த்துஞ்செவ்விக்கமலங்கள்பலவுங்கண்டார்...*

(இ-ள்.) பளிங்கினாலாயகிண்ணத்தில் வார்க்கப்படுகின்ற பசியநறியமதுவையுண்டு தோன்றுகின்ற நகைப்புடையனவாகி வெறிகொண்டவார்த்தைகளை வசனிக்காநின்ற மறைத்தாலும்மறைக்கவொட்டாத ஊடலைப்பிறருக்கு அறிவிக்குமுறைமைபோல மயக்கத்தைத்தெரிவிக்காநின்றசெவ்வியபலதாமரைமலர்போன்ற முகங்களையும் பார்த்தார்கள்—எ-று. (௰௫)

மெய்வருபோகமொக்கவுடனுண்டுவிலையுங்கொள்ளும் ... *
பையரவல்குலார்தமுள்ளமும்பளிக்கும்போல ... ... *
மையரிநெடுங்கணோக்கம்படுதலுங்கருகிவந்து ... ... *
கைபுகிற்சிவந்துகாட்டுங்கந்துகம்பலவுங்கண்டார்... ... *

(இ-ள்) சரீரத்தைப்பற்றினதாகிய போகத்தை தாங்களும் ஆடவர்களுடன் அநுபவித்து விலையும்வாங்கிக்கொள்ளுகின்ற பாம்பின்படத்தையொத்த அல்குலையுடைய விலைமாதர்களின் மனம்போலவும், பளிங்கினைப்போலவும், மை தீட்டிய செவ்வரிபரந்த நெடியகண்பார்வை பொருந்தினவளவில் கறுத்துவந்து கையிற்பொருந்தும்போது செம்மைநிறமுள்ளனவாய்க்காட்டுகின்ற பலபந்துகளைப்பார்த்தார்கள்—எ-று. (௰௬)

பந்துகள்கண்ணொளிபடும்போது கறுத்தும் கையில்வந்தவிடத்தில் சிவந்துங்காட்டுமெனக்கொள்க.

தங்களைவிரும்பிவந்த ஆடவர்கள்மனம்போல நடத்தலின்விலைமாதருள்ளம்போல்வதென்றும் பளிங்கு அடுத்தநிறத்தைக் காட்டுவதாதலால் பளிங்குபோலெனவுங் கூறினர்.

கடகமுங்குழையும்பூணுமாரமுங்கலிங்கநுண்ணூல்... ... *
வடகமுமகரயாழும்வட்டிணிகொடுத்துவாசத் ... ... *
தொடையலங்கோதைசோரப்பளிக்குநாய்சிவப்பத்தொட்டுப்*
படைநெடுங்கண்ணார்வட்டாட்டாடிடம்பலவுங்கண்டார் ... *

(இ-ள்.) கைவளையல்களும், காதணிகளும், அணிந்துகொண்டிருக்கின்ற மணிவடங்களும் நுட்பமாகிய பருத்திநூலாற்செய்த வஸ்திரமாகிய வடகமும் மகரவீணைகளும் பந்தயமாகக்கொடுத்து மணமுள்ள பூமாலைசூடிய அழகிய அளகமானது அவிழும்படி பளிங்காலாகியபாச்சிகையானது

இலைக்கப்பற்றியுருட்டி வேற்படைபோன்ற நெடியகண்களையுடைய மாதர்கள் ஆட்டம்ஆடும்பலஇடங்களையும் நோக்கினார்கள்-எ-று. (௰௭)

பங்கயங்குவளையாம்பல்படர்கொடிவள்ளைநீலஞ் ... ... *
செங்கிடைதரங்கங்கெண்டைகிளைவராலிணையதேம்பத் ... ...*
தங்கள்வேறுவமையில்லாவவயவந்தழுவிச்சாலு ... ... *
மங்கையர்விரும்பியாடும்வாவிகள்பலவுங்கண்டார்... ... *

(இ-ள்) தாமரைமலர்களும் செங்கழுநீர்மலர்களும் செவ்வல்லிமலரும்படர்ந்தகொடிகளும் வள்ளைச்செடிகளும் நீலோற்பலமலர்களும் செங்கிடையும் அலைகளும் சேல்மீன்களும் கிளைகொண்ட வரால்மீன்களுமாகிய இவைகள் நிறைய வேறுவமையில்லாத தங்கள் அவயவங்களுடன் தழுவிக்கொண்டு மிகுந்தமாதர்கள் விருப்பத்துடன் ஆடுகின்ற பலதடாகங்களையும் கண்டார்கள்—எ-று. (௰௮)

முகம்-கண்-வாய்-இடை காது-வயிற்றுமடிப்பு-அதரம்-கணைக்கால்- இவைகள்மேற்கூறிய உவமானப்பொருள்களுக்குஉவமேயப்பொருளாகக்கொள்க.

இயங்குறுபுலன்களங்குமிகுங்கொண்டேகவேகி ... ...*
மயங்குபரிந்துநின்றுமறுகுறுமுணர்வினென்னப்... ... *
புயங்களிற்கலவைச்சாந்தும்புணர்முலைச்சுவடுநீங்கா ... *
வயங்கெழுகுமரர்வாளாட்டாடிடம்பலவுங்கண்டார் ... ... *

(இ-ள்) பயிலுகின்ற ஐம்புலன்கள் பலவிஷயங்களிற்கொண்டு செல்லுகையால் அவைகளுடன் சென்றுமயங்கிச்சஞ்சரித்துநின்றுகலங்குதலைப்பொருந்துகின்ற அறிவைப்போலத் தோள்களில் கூட்டுவேர்க்கங்கள்சேர்ந்த சந்தனக்குழம்பும் (தம்மு)ளொத்த கொங்கைக்குறிப்பும் நீங்காத வெற்றிபொருந்தியவாலிபர்கள் வாள்விளையாட்டு ஆடும்பலஇடங்களையும்பார்த்தார்கள்

வெஞ்சினமுருவிற்றென்னுமேனியர்வேண்டிநற்றீயு ... *
நெஞ்சினரீசன்கண்ணினெருப்புறுவனங்கனன்னார் ... *
செஞ்சிலைக்கரத்தர்மாதர்புலவிகடிருத்திச்சேந்த ... ... *
குஞ்சியர்சூழநின்றமைந்தர்தங்குழாங்கள்கண்டார் ... ...*

(இ-ள்) கொடியதானகோபத்தில் உருவிற்றென்றுசொல்லத்தக்க சரீரத்தையுடையவர்களும், இரப்பவர்களுக்குப்பொருளைக்கொடுக்காநின்றமனமுள்ளவர்களும், சிவனது நெற்றிக்கண்ணினால் உண்டாகுந்தீயினைப்பொருந்திவேகாதமன்மதனையொத்த அழகுள்ளவர்களும், செவ்வையாகியகருப்புச்சிலையேந்திய கையையுடையதத்தமனைவியரின் ஊடல்களை நீக்கிச்சிவந்தசிகையையுடையவர்களுமாய்ச்சூழ்ந்துநிற்கும், வாலிபர்களின்கூட்டத்தைப் பார்த்தார்கள்—எ-று. (௨௰)

வேறு.

பாகொக்குஞ்சொற்பைங்கிளியோடும்பலபேசி ... ... *
மாகத்தும்பர்மங்கையர்நாணமலர்கொய்யுந் ... ...*

தோகைக்கொம்பினன்னவர்க்கன்னநடைதோற்றுப் ... ...*
போகக்கண்டுவண்டினமார்க்கும்பொழில்கண்டார் ... ... *

(இ-ள்.) (கருப்பஞ்சாறுகாய்ச்சும்) பாகினையொத்தமொழியினையுடைய பசியகிளிகளோடு பலவார்த்தைகள்பேசி சுவர்க்கலோகத்திலிருக்கும் அரம்பைமாதர்கள்வெட்கும்படி பூக்கொய்யாநின்றமயிற்சாயலையொத்தகொம்பனாராகியமாதர்க்கு அன்னப்பட்சிகள் நடையினால் தோல்வியடைந்து போகப்பார்த்து வண்டுகளின்கூட்டம் ஆரவாரிக்கும்படியான சோலையைப்பார்த்தார்கள்—எ-று. (உக)

உம்பர்க்கேயுமாளிகையோளிநிழல்பாய ... ... *
இம்பர்த்தோன்றுநாகர்தநாட்டினெழில்காட்டிப் ... ... *
பம்பிப்பொங்குங்கங்கையினாழ்ந்தபடைமன்னன் ... ... *
அம்பொற்கோயிற்பொன்மதில்சுற்றுமகழ்கண்டார்... ...*

(இ-ள்.) தேவர்களிருப்பதற்குத் தகுதியாகப்பொருந்திய மாளிகைகளின் ஒழுங்காகியசாயைபாய்வதினால் இவ்வுலகத்தில்தெரிகின்றதேவர்களுடைய நாட்டின் அழகைக்காண்பித்து அலைநெருங்கிப்பொங்குகின்றகங்கையைப்போல ஆழ்ந்திராநின்ற நால்வகைச் சேனையையுடைய சனகமகாராசாவின் அழகிய பொன்னாகிய கோயிலையுள்ள மதிலைச்சூழ்ந்த அகழியைப்பார்த்தார்கள்—எ-று. (உஉ)

பொன்மாளிகையின் சாயல்நீரில் தோன்றுவதினால் பொன்னுலக மிவ்வுலகத்தில்தோன்றுவதுபோற்காட்டி அரண்மனை மதிலைச்சூழ்ந்த அகழியைக்கண்டார்களெனக்கூட்டுக.

பொன்னின்சோதிபோதினினாற்றம்பொலிவேபோற் ... *
றென்னுண்டேனிற்றீஞ்சுவைசெஞ்சொற்கவியின்பங் ... *
கன்னிம்மாடத்தும்பரின்மாடேகழிபேடோ ... ... *
டன்னம்மாடுமுன்றுறைகண்டங்கயனின்றார்...... ... ...*

(இ-ள்.) பொன்னினிடத்துள்ள பிரகாசத்தின் விளக்கம்போலவும், மலர்களிலிருக்கும் வாசனைப்பொலிவைப்போலவும், அழகும் நுட்பமும்பொருந்திய தேனிலிருக்கும் மதுரிக்கும் சுவையுள்ள செவ்வியசொல்லையுடைய செய்யுளின்பம்போலவும்,கன்னிகாமாடத்தின் மேலிடத்தில் யிருந்த(அன்புள்ள) பெட்டையன்னத்துடன் ஆணன்னங்கள் கூடிக்கொண்டிராநின்றமுன்றுறையைநோக்கி அவ்விடத்தில ஒருபக்கலில் நின்றார்கள்—எ-று. (உங)

இனிச்சீதாபிராட்டி அங்குவந்ததையும் ஸ்ரீராமமூர்த்திகண்டதையுஞ்சொல்லுகின்றார்.

செப்பங்காலைச்செங்கமலத்தோன்முதலியாரும்... ... *
எப்பெண்பாலுங்கொண்டுவமிப்போருவமிக்கும் ... ... *
அப்பெண்டானேயாயினபோதிங்கயல்வேறோர் ... ... *
ஒப்பெங்கேகொண்டெவ்வகைநாடியுவமைசெய்வேம்... ... *

(இ-ள்.) சொல்லுமிடத்தில் பிரமதேவன்முதலெல்லோரும் எந்தப்பெண்பாலையு மனதில்நாட்டிக்கொண்டு உவமிப்பவர்கள் உவமிக்கும்படியான

அந்தத்திருமகளே இங்கிருக்குஞ் சீதாபிராட்டியாயினபோது வேறே அவ விலை ஒப்பு எவ்விடத்தில்கொண்டு எவ்வண்ணங்கருதிச்சொல்வோம்-எ-று ()

உமையாளொக்கும்மங்கையருச்சிக்கரம்வைக்கும் ... ... *
கமையாண்மேனிகண்டவர்காட்சிக்கரைகாணா... .. ... *
இமையாநாட்டம்பெற்றிலமென்றாரிருகண்ணால் ... ... *
அமையாதென்றாரந்தரவானத்தவரெல்லாம்... ... ... *

(இ-ள்.) பார்வதியையொத்த (அழகுள்ள) மாதர்களெல்லாரும் உச்சியின் கைகுவித்து வைத்துக்கொண்டு தொழத்தக்க குணநலமுள்ள சீதாபிராட்டியினுடையமேனியைக்கண்டவர்கள்பார்வை அம்மேனி அழகின் கரைகாணாமல் இமையாதகண்களைப் பெற்றிலமேயென்றார்கள், (இமையாநாட்டமுள்ள) அந்தரத்திலிருக்கும் தேவர்களெல்லாரும் இருகண்களால்அளவுபொருந்தாதென்றார்கள்—எ-று. (உ௫)

வென்றம்மானைத்தாரயில்வேலுங்கொலைவாளும்... ... ... *
பின்றம்மானப்பேர்கயலஞ்சப்பிறழ்கண்ணாள்... ... ... *
குன்றம்மாடக்கோவினளிக்குங்கடலன்றி... ... ... *
அன்றம்மாடத்தும்பரளிக்குமமுதன்னாள்... ... ... *

(இ-ள்.) அழகியமானைவென்று வெற்றிமாலைபூண்ட கூர்மைபொருந்திய வேலும், கொலைசெய்வதற்கேதுவானவாளும், பின்னிட்டோடவும், பெரிய சேல்மீன்பயப்படவும், ஒளிவிடுகின்ற கண்களையுடைய சீதாபிராட்டி-மந்தரகிரியானது சூழ்கின்றதினால் கூவிக்கொண்டு முன்கொடுத்த திருப்பாற்கடல்போலல்லாமல் அன்று அந்தமாளிகையின் மேலிடம்அளித்தஅமுதத்தையொத்தவள்—எ-று. (உ௬)

பெருந்தேரல்குற்பெண்ணிவளொப்பாளொருபெண்ணைத்... *
தருந்தானென்றானான்முகனின்னுந்தரலாமே ... ...*
அருந்தாவந்தத்தேவரிரந்தாலமிர்தென்னு ... ... *
மருந்தேயல்லாதென்னினிநல்குமணியாழி... ... ... *

(இ-ள்.) பெரியதேர்த்தட்டினையொத்த அல்குலையுடைய இந்தச்சீதாபிராட்டியை யொப்பவளாகிய ஒருபெண்ணை பிரமதேவன் சிருட்டிக்க எண்ணினால்அவனாலும் இன்னமுந்தரலாகுமோ (முன்னந்திருமகளாகிய இவளைத் தந்த) திருப்பாற்கடல் கொடுக்குமென்றால் தங்களிடத்திருக்கும் அமுதத்தை அருந்திவிட்டுவந்து இன்னமும்வேண்டுமென்று தேவர்கள் இரப்பார்களாகில் அமுதத்தைக்கொடுக்குமேயன்றி வேறேயென்னகொடுக்கும்-எ-று

திருமகள் தன்னிடத்திருந்தமையால் எல்லாச்செல்வமுந்தந்தது அத்திருமகள் இங்குவந்துவிட்டமையால் அமுதமொன்றுமே தருமென்பதுதுணிவு.

அலையாவாமேனிகண்டபினல்லடத்தரசாளும் ... ... *
விலையோர்மேவும்மேனைகையாதிமிளிர்வேற்கண் ... ... *
இளையோருள்ளத்தின்னலினோர்தம்முகமென்னும் ... ... *
பனிதோய்வானின்வெண்மதிக்கென்றும்பகலன்றே ... ... *

(இ-ள்.) வானத்திலிருக்கும் இந்திரனும், அவனாலாளப்பட்ட செய்கையையுடைய தேவர்களும், விரும்புகின்ற மேனகைமுதலானவர்களாகிய விளங்குகின்ற வேலொத்தகண்களுடைய இம்மாதர்கள் சீதாபிராட்டியின் மேனியானது கண்டபின்பு உள்ளத்தில் துன்பமுடைய அவர்கள் முகமென்கிற குளிர்ச்சிபொருந்திய ஆகாயத்தினின்ற சந்திரனுக்கு எப்போதும் பகற்காலமாம்—எ-று. (உஅ)

அரம்பாஸ்திரிகள் முகமாகிய சந்திரனுக்கு சீதாபிராட்டியின்மேனி பகற்காலமாயிற்று என்றதனால் சீதாபிராட்டியின் முகத்தைக்கண்டபின்பு அரம்பாஸ்திரிகளின் முகம் ஒளி மழுங்கிற்று என்பதுகருத்து.

மலர்மே னின்றிம் மங்கையிவ் வையத் திடைவைகப் ... ...*
பலகா லுந்தம் மெய்ந்நனி வாடும்படி நோற்றார் ... ... *
அலகோ வில்லா வந்தணரோ நல்லறமேயோ ... ... *
உலகோ வானோ ரும்பர் கொலோவீ துணரோமால் ... ... *

(இ-ள்) தாமரைமலரினிடத்தை விட்டுநீங்கி இந்தப்பெரியபிராட்டியார் இவ்வுலகத்திற் பொருந்தியிருப்பதற்கு அநேகநாள் தங்கள் சரீரங்கள் மிகவு மெலியும்படி தவஞ்செய்தவர்கள் அளவில்லாத முநிவர்களோ! நல்லதருமதேவதையோ! இவ்வுலகமோ! தேவருலகமோ! (அல்லது) தேவர்களோ இதன் வகையையாமறியோம்—எ-று. (உகூ)

தந்நேரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே .. ... *
அன்னே தேனே யாரமிர்தே யென்றடி போற்ற ... ... *
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசால ... ... *
பொன்னே சூழும் பூமியி னொதுங்கிப் பொலிகின்றாள் ... ...*

(இ-ள்.) தங்களுக்கொப்பில்லாத மாதர்கள் செந்தளிர்போன்ற கையையுடையமானே! அன்னையே! தேனே! கிடைத்தற்கரிய அமுதமேயென்றுபுகழ்ந்துகூறி அடிபோற்றவும், பாதத்தைப்பெயர்த்து வைக்குந்தோறும் எதிரில் அடிக்கடி நெருங்கிய மலர்களைச்சிந்தி முறையாகப்பொலிவுசூழ்ந்த மலர்கள்மேல் நடந்து பொலிகின்றாள்—எ-று. (௩௰)

பொன்சேர் மென்காற் கிண்கிணி யாரம் புனையாரந் ... ...*
கொன்சேரல்குன் மேகலை தாங்குங் கொடியன்னார் ... ... *
தன்சேர் கோலத் தின்னெழில் காணச் சதகோடி ... ...*
மின்சேவிக்க மின்னர சென்னும்படி நின்றாள் ... ... *

(இ-ள்.) அழகுவாய்ந்த மென்மைத்தன்மையுள்ள பாதங்களில் கிண்கிணிகளும், முத்துவடமும், அலங்கரிக்கும் பதக்கமும், மேன்மைபொருந்திய அல்குலினிடத்து மேகலாபரணமுந்தாங்கிய பூங்கொடியையொத்த மாதர்கள் தன்னைச்சேர்ந்த அலங்காரத்தின் இனிய அழகைவியந்து நோக்கும்படி நூறுகோடி மின்னல்சேவிக்க மின் அரசுநிற்றதுபோல நின்றாள்-எ-று.

சொல்லும் வேலுங் கூற்றமு மென்னு மிவையெல்லாம் ... ... *
வெல்லும் வெல்லு மென்ன மதர்க்கும் விழிகொண்டாள் ... *

சொல்லுந்தன்மைத்தன்றது குன்றுஞ்சுவருந்திண் ... ... *
கல்லும்புல்லுங்கண்டுருகப்பெண்கனிநின்றாள் ... ... *

(இ-ள்.) சொல்லுதற்கேதுவான வேலாயுதமும், கூற்றுவனுமாகிய இவைகளையெல்லாம் வெல்லும்வெல்லுமென்றுசொல்லும்படி களிக்கும்பார்வையைக்கொண்டவள் தன்மையானது சொல்லுந்தன்மையையுடையதல்ல, என்னெனில், மலைகளும் சுவர்களும் திண்ணியகற்களும் புற்களுமாகிய அசேதனவஸ்துக்களுங்கண்டு உருகும்படி மாதர்களுக்குள் கனிபோல்பவளாய்நின்றாள்—எ-று. (௬௨)

வேறு.

வெங்களிவிழிக்கொருவிழவுமாயவர் ... ... *
கண்களிற்காணவேகளிப்புநல்கலான் ... ... *
மங்கையர்க்கினியதோர்மருந்துமாயவள் ... ... *
எங்களையற்கினியாவதாங்கொலோ ... ... *

(இ-ள்.) விரும்புகின்ற மதர்ச்சியுற்ற மாதர்கள் கண்களுக்கு ஒப்பற்றசிறப்புத்தருவதாயும் கண்கள்பார்த்தவளவில் களிப்பினைத்தருகின்றமையாலும், மாதருக்கு இனியதான அமுதம்போலானவள் இனி எங்கள் நாயகனாகிய ஸ்ரீராமமூர்த்திக்கு எந்தச்சிறப்புள்ள பொருளாவளோ—எ-று. (௬௩)

வெங்களிவிழி என்றது கண்களினியல்பைக்குறித்தது பார்க்கும்போது ஒருதிருவிழாப்போல்வதாயுள்ளத்துக்குக் களிப்பினைத்தருதலால் நோக்குமாதர்களுக்கு அமுதம்போலுமாளென்றால், அவ்வமுதத்தினுமிக்க சிறந்தபொருளொன்றிருக்குமாயின் எங்கள் நாயகனுக்கு அம்மிக்கபொருள் போன்றுளென்னலாம் அவ்வாறு மிக்கபொருளில்லாமையால் எப்பொருள்போல்பவளாவளோவென ஐயப்பட்டதாகக்கூறினர்.

சீதாபிராட்டியின் அழகைக்கண்டு மாதரும்விரும்புகின்றார்களென்பதுகருத்து.

இழைகளுங்குழைகளுமின்னமுன்னமே ... *
மழைபொருகண்ணிணைமடந்தைமாரொடும் ... *
பழகியதெனினுமிப்பாவைதோன்றலால் .... *
அழகெனுமழகுமோரழகுபெற்றதே ... ... *

(இ-ள்.) (அழகானது) ஆபரணங்களும், காதணிகளும் இவைபோல்வனவாக உருவங்கொண்டு முற்காலத்தில்மேகத்தையொத்த குளிர்ச்சியுள்ள இரண்டு கண்களையுடைய மாதர்களுடன்பழகியிருந்தாலும் இப்போது இந்தசீதாபிராட்டி உற்பவமானதினால் அழகென்று சொல்லப்படுகின்ற அழகுந்தனக்கோரழகுபெற்றுக்கொண்டது—எ-று. (௬௪)

அழகானது தனக்கழகுபெற்றுக்கொள்ளக்கருதி ஆபரணவடிவமாக மாதர்களுடன் பழகினபோது அம்மாதர்களுக்கு அழகுகொடுத்ததேயன்றி அவர்களால் அது அழகுபெற்றுக்கொள்ளவில்லை இப்போது சீதாபிராட்டியினிடத்திற் சேர்ந்ததால்தனக்கு அழகுபெற்றுக்கொண்டதென்பது தாற்பரியம்.

எண்ணருநலத்தினாளிணையநின்றுழி ... ... *
கண்ணொடுகண்ணிணைகவ்வியொன்றையொன் ...*

றுண்ணவுநிலைபெறாதுணர்வுமொன்றிட ... *
அண்ணலுநோக்கினனவளுநோக்கினள் ... ... *

(இ-ள்.) இத்தன்மைத்தென்று சொல்லுதற்கன்றி எண்ணுதற்குமரிய அழகுவாய்ந்த சீதாபிராட்டியார் இவ்வாறான அலங்காரத்துடனிற்கும்போது ஸ்ரீராமமூர்த்தியினுடையபார்வையும், சீதாபிராட்டியாருடையகண்ணும் ஒன்றைமற்றொன்றுபற்றிக் கிரகித்துக்கொள்ளும்படி ஸ்ரீராமமூர்த்தியும்நோக்கினார் சீதாபிராட்டியாரும்நோக்கினார்—எ-று. (௧௫)

நோக்கியநோக்கெனுநுதிகொள்வேலிணை ... *
ஆக்கியமதுகையாற்றோளினாழ்ந்தன ... ... *
வீக்கியகனைகழல்வீரன்செங்கணுந் ... ... *
தாக்கணங்கனையவடனத்திற்றைத்தவே ... ... *

(இ-ள்.) அவ்வாறுநோக்கிய சீதாபிராட்டியாருடைய கண்களாகிய கூர்மைகொண்டவேலிரண்டும், வெற்றிகொண்ட ஸ்ரீராமமூர்த்தியின் புசங்களில் அழுந்தின, ஒலிக்கும்வீரகண்டைகட்டியதிருவடியையுடையஸ்ரீராமமூர்த்தியின் செம்மைநிறமுள்ளகண்களும், திருமகளாகிய அந்தச்சீதாபிராட்டியின் தனங்களில் அழுந்தின—எ-று. (௧௬)

இருவர்க்கும் புணர்ச்சிவிருப்ப முண்டாயிருந்ததென்பதுகருத்து.

பருகியநோக்கெனும்பாசத்தாற்பிணித் ... ... *
தொருவரையொருவர்தமுள்ளமீர்த்தலால் ... ... *
வரிசிலையண்ணலும்வாட்கணங்கையும் ... ... *
இருவருமாறிப்புக்கிதயமெய்தினார் ... ... *

(இ-ள்.) கவர்ந்துகொண்ட பார்வையாகிய கயிற்றினாற்கட்டி வரிபொருந்திய சிலையினையுடைய ஸ்ரீராமமூர்த்தியினுள்ளம் வாள்போன்ற கண்களையுடைய சீதாபிராட்டியாரையும் அவ்வாறே இவருள்ளம் அவரையும் இழுத்ததினால் அவருள்ளத்திலிவரும் இவருள்ளத்திலவருமாகச்சென்றுபொருந்தினார்கள்—எ-று. (௧௭)

மருங்கிலாநங்கையும்வசையிலையனும் ... ... *
ஒருங்கியவிரண்டுடற்குயிரொன்றாயினார் ... *
கருங்கடற்பள்ளியிற்கலவிநீங்கிப்போய்ப் ... ... *
பிரிந்தவர்கூடினாற்பேசல்வேண்டுமோ ... ... *

(இ-ள்) இடையில்லாத சீதாபிராட்டியாரும், குற்றமற்ற ஸ்ரீராமமூர்த்தியும், ஒன்றுபட்ட இரண்டுடலுக்கும் உயிரொன்றேயாகினார்கள். பெரியதிருப்பாற்கடலில் சேர்ந்திருந்ததைவிட்டுப்போய் நீங்கினவர்கள் மீட்டுங்கூடுவார்களாயின் அவர்களுக் குண்டா யிருக்கும் இன்பத்தை நாமெடுத்துச் சொல்லவேண்டுமோ வேண்டுவதில்லை—எ-று. (௧௮)

அந்தமிலழகனையணைகிலாமையாற் ... ... *
பைந்தொடியோவியப்பாவைபோன்றனள் ... ... *

சிந்தையுநிறையுமெய்ந்நலனும்பின்செல... ...*
மைந்தனுமுனியொடுமறையப்போயினான் ... *

(இ-ள்.) சொல்லிமுடிவுபெறாத சௌந்தரியமுள்ள ஸ்ரீராமமூர்த்தியை அணைதற்கில்லாமையால் சீதாபிராட்டியார் சித்திரித்த பாவைபோல அசைவற்றிருந்தார் ஸ்ரீராமமூர்த்தியோவெனில், பிராட்டியாருடையமனமும் நிறையு மெய்ந்நலனுந் தன்பின்றொடர்ந்துவரும்படி விசுவாமித்திரமுனிவருடன்மறையச்சென்றார்—எ-று. (கூக)

நிறையாவது-அடக்கத்தக்கதுகளைத் தனக்குள்ளடக்கிக்கொண்டிருத்தல்-மெய்ந்நலமாவது-கண்ணுந் தோளும் நுதலுமுதலாயின அவயவங்களின் அழகு கண்டுச்சிந்தையும்மெய்ந்நலனும் பின்சென்றதனால் நாணமுதலியவையும் அழகின்பொலிவு மிழந்தனவென்பது தாற்பரியம்.—ஓவியப்பாவைபோன்றாளெனத்தொகுத்துக்கூறியவதனை கண்டுவகுத்திக்கூறினார். சிந்தையுநிறையுமே யண்ணல் பின்செல என்றும்பாடங்கூறுவாருமுளர்.

பிறையெனுநுதலவள் பெண்மையென்படு ... ...*
நறைகமழலங்கலானயனகோசர... ... ... *
மறைதலு மனமெனுமத்தயானையி ... ...*
னிறையெனுமங்குசநிமிர்ந்துபோயதே... ...*

(இ-ள்.) வாசனையானது பரிமளித்துக்கொண்டிராநின்ற மாலைசூடிய ஸ்ரீராமமூர்த்தியானவர் ஜானகியம்மையினுடைய கண்பார்வைக்குத் தெரியாமல் மறைந்தவளவில் அச்சானகியம்மையின் மனமாகிய மயக்கமுள்ள யானையினால் நிறையென்கின்ற அங்குசநிமிர்ந்துவிட்டது (ஆகலால்) பிறையினையொத்ததென்று மொழியத்தக்க நெற்றியினையுடைய ஜானகியம்மையின் பெண்தன்மையாதுபடுமோ—எ-று? (சாய)

மதத்தயானை நெறிகடந்து செல்லாதவண்ணம் பாகன் அங்குசத்தைக் காதில்மாட்டி இழுக்கும்போது அதற்கும் அடங்காமல் அவ்வியானைசெல்லுமாயின் அங்குசமாகிய இரும்பின்வளைவு நிமிர்ந்துவிடுதல்போல ஸ்ரீராமமூர்த்தியின் பின்றொடர்ந்தமனதை நிறையென்பது அடக்கவும் அடங்காமற்சென்றமையால் அந்நிறை அழிந்ததென்பதுதாற்பரியம்.

நிறையழியவே பெண்தன்மையாகிய-நாணம்-மடம்-அச்சம்-பயிர்ப்பு-என்பவையும் நிலைமாறினவென்பார், பெண்மையென்படுமென்றார்,

மாலுறவருதலுமனமுமெய்புந்த... ... ... *
னூலுறமருங்குல்போலுடங்குவாணெடு... ...*
காலுறுகண்வழிபுகுந்தகாதனோய் ... ...*
பாலுறுபிரையெனப்பரந்ததெங்குமே...... ..*

(இ-ள்.) ஆசையானது பொருந்தும்படி வந்தவளவில் தன்னுடைய நூலிழையையொத்த இடைமெலிவதும்போல மனமும், சரீரமும், மெலிகின்ற ஜானகியம்மையினுடைய நெடிய நீர்க்காலொத்த கண்வழியாக உள்ளே நுழைந்து காமநோயானது பாலிற்பொருந்திய பிரையைப்போல உள்ளெங்கும்பரவிற்று—எ-று. (௬௭)

நோமுறுநோய்நிலைநுவலகிற்றிலள் ... ... *
[illegible]மயின்மனத்திடையுன்னிவிம்முவாள் ... ... *

காமனுமொருசரங்கருத்திலெய்தனன்... ... *
வேமெரியதனிடைவிறகிட்டெனவே... ... *

(இ-ள்) (இவ்வாறு காமநோய்மிகுந்தவளவில்)வருந்துவாள்தனக்குப்பொருந்தியநோய்நிலைமையை ஒருவருடனுஞ்சொல்லாதவளாய்உண்மைகள்போலத்தம்மனத்தில்நினைத்துக்கொண்டுவிசனப்படுகின்றாள் இப்படியிருக்க,வேகாநின்றதீயினிடத்தில் விறகிட்டதுபோல மன்மதனுந்தன் பஞ்சபாணங்களிலொன்றாகிய தாமரைமலர்ப்பாணத்தை அவள்கருத்தில் அழுந்தும்படி எயினன்—எ-று. (௬௨)

இந்தப்பாணம் காமச்சிந்தையையுண்டாக்குந் தன்மையுடைய்து இதனால் சீதாபிராட்டிக்கு ஆசை அதிகரித்ததென்பதுகருத்து.

நிழலிடுகுண்டலமதனிலெய்யிடா... ... ... *
அழலிடாமிளிர்ந்திடுமயிலகொள்கண்ணினள் .... *
சுழலிடுகூந்தலுந்துகிலுஞ்சோர்தரத் ... ... *
தழலிடுவல்லியம்போலச்சாம்பினள்... ... ... *

(இ-ள்) நெய்பூசாமலும், நெருப்பிற்காய்ச்சாமலும்,கூர்மைபெற்றுவிளங்காநிற்பதொருவேலுண்டாகுமாயின் அதனையொப்பதாய் ஒளிவிடுகின்ற குண்டலத்தின்வரையில் சென்றுலாவும்படியான கண்களையுடைய சீதாபிராட்டிசுழித்துமுடித்திராநின்ற அளகமும்,வஸ்திரமும், நெகிழும்படிநெருப்பிலிட்ட பூங்கொடிபோலவாடினள்—எ-று. (௬௩)

தழங்கியகலைகளுநிறையுஞ்சங்கமும்... ... ... *
மழுங்கியவுள்ளமுமறிவுமாமையும்... ... ... *
இழந்தவளிமையவர்கடையயாவையும் ... ... *
வழங்கியகடலெனவறியளாயினள்... ... ... *

(இ-ள்) ஒலிக்காநின்றமேகலாபரணமும்,நிறையுஞ்சங்குவளையல்களும்,மழுங்கியமனமும், அறிவும், அழகும், இழந்தசீதாபிராட்டிதேவர்கள்கடைந்தநாளிற்றன்னிடத்திலிருந்த பொருள்களையெல்லாம், அந்தத்தேவர்களுக்குக்கொடுத்துவிட்ட திருப்பாற்கடல்போல வறியவளாயினள்-எ-று. (௬௪)

கலங்குழைந்துகநெடுநாணுங்கண்ணற ... ... *
நலங்குழைதரநகின்முகத்தினைவண்டு ... ... *
மலங்குழையெனவுயிர்வருந்திச்சோர்தரப்... ...*
பொலங்குழைமயிலைக்கொண்டரிதிற்போயினர்.. *

(இ-ள்) ஆபரணங்கள்குழைந்துசிந்தவும், நெடியநாணமுதலானவைகளும்,மனத்தினிடத்தைவிட்டுநீங்கவும் நன்மையானது கெடவும் தனத்தினிடத்தில்மன்மதபாணத்தைப்பொருத்தி வேடன்கைபாணத்தினால்)வருந்துகின்றமானைப்போல உயிர்வருந்திச்சோரவும், இருப்பக்கண்டு பொன்னாலாகிய குழைபணிந்த மயில்போன்றசாயலையுடைய சீதாபிராட்டியை அருமையாக உள்ளேகொண்டுபோனார்கள்—எ-று. (௬௫)

காதொடுகுழைபொருகயற்கணங்கைதன் ... *
பாதமுங்கரங்களுமனையபல்லவத் ... ... *
தாதொடுங்குழையொடுமடுத்ததண்பனிச் ... ... *
சீதநுண்டுளிமலரமளிசேர்த்தினார் ... . *

(இ-ள்.) (இவ்வாறு அருமையாகக்கொண்டுபோனவர்கள்) காதுடனும்குழையுடனும் போர்செய்யும்படியான சேல்மீன்போன்ற கண்களையுடைய சீதாபிராட்டியைத்தன் பாதங்களையும், கைகளையும் ஒத்த மலர்த்தாதுகளுந் துளிர்களும் பொருந்திய குளிர்ச்சியுள்ள நுண்ணியபனிநீர்த்துளிகள் மலித்தபுட்பசயனத்தில் சேர்த்தார்கள்—எ-று. (சசு)

நாளறுநறுமலரமளிநண்ணினள் ... ... *
பூளைவீபுரைபனிப்புயற்குத்தேம்பிய ... ... *
தாளதாமரைமலர்தழைந்தபொய்கையும் .... *
வாளராநுங்கியமதியும்போலவே ... ... *

(இ-ள்.) பூளைப்பூவையொத்த பனிமேகத்தினால்வாடியகொடிகளையுடைய தாமரைமலர்நெருங்கிய தடாகம்போலவும், கொலைசெய்யத்தக்க பாம்பினால்விழுங்கப்பட்ட சந்திரனைப்போலவும், புதியமணமுள்ள புஷ்பசயனத்தில்படுத்திருந்தாள்—எ-று. (சஎ)

நாளறுமலரென்பது மலர்ந்தநாளைநீங்காத பூவெனப்பொருள்கொள்க.

கொள்ளுங்கால் அத்தினத்துப்பூவென்பதாம் பனியினால் தாமரைமலர்வாடுதலியல்பு.

மலைமிசைத்தடத்துகுமழைக்கலுழிபோல் ... .*
முலைமுகட்டுதிர்ந்தனநெடுங்கண்முத்தினம். ... *
சிலைநுதற்கடையுறச்செறிந்தவேர்வுதன் ... ... *
உலைமுகப்புகைநிமிருயிர்ப்பின்மாய்ந்ததே ... .. *

(இ-ள்.) மலையின்மேலிடத்தில்பொழியப்படுகின்ற மேகத்தினீர்த்துளிபோலச் சீதாபிராட்டியினுடைய தனங்களினிடத்துமுத்துகளையொத்த நீண்டகண்ணீர்த்துளிகள் சிந்தின, வில்லையொத்தபுருவத்தினது கடையில்செறிந்தவியர்வைத்துளிகள் தன்னுடைய, கொல்லன் உலைக்களத்திலுண்டாகாநின்ற புகைபோலவருகின்ற சுவாசத்தினால் வறண்டன—எ-று. (சஅ)

கப்பமில்கொடுமனக்காமவேடன்கை ... ... *
அப்பொடுசோர்வதோர்மயிலையன்னவள் ... ... *
வெப்புறுமனத்தனல்வெதுப்பமென்மலர்க் ... *
கொம்பெனவமளியிற்குழைந்துசாய்ந்தனள் ... *

(இ-ள்.) சலனமில்லாத கொடியமனத்தையுடைய காமவேடன்கையம்பினால் சோர்கின்றமயிலையொத்த சீதாபிராட்டி வெதும்புகின்றமனதினுண்டாகிய காமாக்கினியானது சுடுவதினால் மெல்லிய மலர்க்கொம்புபோலப் புட்பசயனத்தில் சாய்ந்தாள்— எ-று (சகூ)

காமவேடன்-எ-து காமனாகியவேடனென்றும், காமவேள்தன்னென்றுங்கொள்க.

சொரிந்தனநறுமலர்சுருக்கொண்டேறின ... *
பொரிந்தனகலவைகள்பொறியிற்சிந்தின ... *
கரிந்தவெங்கனல்சுடவிழையிற்கோத்தநூல்... ...*
பரிந்தனகரிந்தனபல்லவங்களே ... ... *

(இ-ள்.) சயனத்திற்பரப்பிய வாசனையுள்ளமலர்கள் சுருக்கொண்டு உடலிற் கைத்தன, கலவைச்சாந்தனக்குழம்புகள் பொரிந்தனவாய்ப்பொறிகள்போல உதிர்ந்தன, (உடலிற் காய்ந்தெழுகின்ற காமாக்கினிசம்பந்தத்தால் ஆபரணங்களிற் கோத்திராநின்ற நூல்கள் அற்றன, மஞ்சத்திற்பரப்பிய துளிர்கள் கரிந்தன—எ-று. (கூ௰)

தாதியர்செவிலியர்தாயர்தவ்வையர் ... ...*
மாதுயருழந்தனர்விழுந்துமாழ்கினர் ... *
யாதுகொலிதுவெனவெண்ணறேற்றலர் ... ...*
போதுடனயினிநீர்சுழற்றிப்போக்கினர் ... ...*

(இ-ள்.) தாதிமார்களும், செவிலித்தாயர்களும் தாய்மார்களும் தமக்கைகளும்மிகுந்த துயரங்கொண்டவர்களாய்விழுந்து அழுதார்கள் இது என்ன காரணமென்று கருத்தைத்தெளியாதவர்களாய் மலர்களுஞ் சாதமுங்கலந்த ஆலாத்தி நீரைச்சுற்றி திருஷ்டிதோஷங்கழித்தார்கள்—எ-று. (கூக)

அருகினின்றசைக்கின்றவாலவட்டக்கால் ... ...*
எரியினைமிகுத்திடவிழையுமாலையுங் ... ... *
கரிகுவதீகுவனவெனக்காட்டலால் ... ... *
உருகுபொற்பாவையுமொத்துத்தோன்றினாள் ... *

(இ-ள்.) தோழிமார் அருகிலேநின்று அசைத்தலாலுண்டாகிய ஆலவட்டக்காற்றானது விரகாக்கினியை அதிகரிக்கப்படுத்துவதினால் ஆபரணங்களும், பூமாலைகளும், கரிகின்றவைகளும், தீகின்றவைகளும், அழலுகின்றவைகளுமாகத்தோன்றுதலால், சீதாபிராட்டி உருகாநின்றபொற்பிரதமையை யொத்துத்தோன்றினாள்—எ-று. (கூஉ)

அல்லினைவகுத்ததோரலங்கற்காடெனும்... ...*
வல்லெக்குழுவல்லவோர்மரகதப்பெருங்... ... ...*
கல்லெனுமிருபுயங்கமலங்கண்ணெனும்... ... *
வில்லொடுமிழிந்ததோர்மேகமென்னுமால் ... *

(இ-ள்.) ஒப்பற்றபூமாலையணிந்திராநின்றகாடென்னும்அவருடையகேசமானது இருளைக்கொண்டுவகுத்ததென்றுசொல்லுவள், அன்றியும் அவருடைய இரண்டுபுஜங்களும், வலியபழுவாகிய தூணல்ல, பெரியமரகதமலை போல்வனவென்று சொல்லுவள் கண்களானவை தாமரைமலர்கள்போன்றனவென்றுசொல்லுவள் - வில்லுடனே பூமியில்வந்த மேகமேயென்றுஞ் சொல்லுவள்—எ-று. (கூங)

நெருக்கியுட்புகுந்தருநிறையும்பெண்மையும்... *
உருக்கியென்னுயிரொடுங்கொண்டுபோனவன் ... *
பொருப்புறழ்தோள்புணர்புண்ணியத்தது ... *
கருப்புவில்லன்றவன்காமனல்லனே... ... ... *

(இ-ள்.) நெருங்கி என்னுள்ளத்தில் நுழைந்து அருமையாகிய நிறையினையும் பெண்தன்மையினையும், என்னுயிரையும் உருக்கி இரகித்துக்கொண்டு போனவருடைய மலையையொத்த புயத்தைப்புணரும்படியான புண்ணியத்தையுடையது கரும்புவில்லல்ல, ஆகையால்மன்மதனல்ல—எ-று. (௫௪)

சௌந்தரியத்தினால் மன்மதனேவென்றெண்ணி அவர்தோளிற்பொருந்திய வில்லானது மூங்கில்வில்லானதினால் மன்மதன்அல்லவென்று தெளிந்தாள் அவன்தோள்புணர் புண்ணியத்தது என்பதினால் தனக்கந்தப்புண்ணியமில்லையேயென்றெண்ணங்கொண்டா ளென்பதுகுறிப்பெச்சம்.

பெண்வழிநலனொடும்பிறந்தநாணொடும் ... ... *
எண்வழியுணர்வுநானெங்குங்காண்கிலன் ... ... *
மண்வழிநடந்தடிவருந்தப்போனவன் ... ... *
கண்வழிநுழையுமோர்கள்வனேகொலாம் ... *

(இ-ள்.) பெண்பிறப்புக்குரியநலமும் நான் உண்டானகாலத்தே தோன்றியநாணத்தையும் என்னுறுதியையுடைய அறிவினையும், நான் எவ்விடத்துங்காணாதவளாயிருக்கின்றேன் ஆதலால்மண்ணினிடத்தில் நடந்து அருமையாகிய தன்னுடைய பாதங்கள் வருந்தும்படிசென்ற அந்த ராஜகுமாரன் கண்ணின்வழியாக நுழையத்தக்க ஒப்பற்றகள்ளனோ—எ-று (௫௫)

இதுவரையில் தன்னைவிட்டுப்பிரியாத நாண்முதலானவை இப்போது இல்லாமையினாலே அவர்இரகித்துக்கொண்டுபோய் விட்டாரோவென்று எண்ணுகின்றாளென்பது தாற்பரியம்.

இந்திரநீலமொத்திருண்டகுஞ்சியுஞ் ... ... *
சந்திரவதனமுந்தாழ்ந்தகைகளுஞ் ... ...*
சுந்தரமணிவரைத்தோளுமேயல ... ... *
முந்தியென்னுயிரையம்முறுவலுண்டதே... ...*

(இ-ள்.) இந்திரநீலரத்தினத்தையொத்து கறுத்தஅவருடையகேசமும் பூரணச்சந்திரனையொத்த முகமும் (முழங்கால்வரையில்) தாழ்ந்தகரங்களும் சௌந்தரியமுள்ள நீலமலையையொத்தபுயங்களும்அல்ல, இவைகளுண்ணுதற்கு முன்னதாகஅழகிய புன்னகையானது என்னுயிரை இரகித்துக்கொண்டது—எ-று. (௫௬)

படர்ந்தொளிபரந்துயிர்பருகுமாகமுந் ... *
தடந்தருதாமரைத்தாளுமேயல ... ...*
கடந்தருமதங்கலுழ்களிநல்யானைபோ ... ...*
னடந்ததுகிடந்ததென்னுள்ளநண்ணியே ... ... *

(இ-ள்,) (எனதுள்ளத்திற் பொருந்தியிருக்கின்றதுயாதெனில்) பரந்து

ஒளி விரிந்து என்னுயிரையுண்ணுகின்ற அவருடையமார்பும் தடாகத்திலு ண்டாகாநின்றசெந்தாமரைமலர்போன்ற பாதங்களுமல்ல, கவுள்சுருகின்ற மதநீர்ஒழுகிக்கொண்டிருக்கத்தக்க மயக்கமுள்ள நல்ல யானைபோல அவர் நடந்தது என்னுள்ளத்திலிருக்கின்றது. (௫௭)

உரைசெயிற்றேவர்தமுலகுளானலன் ... ... *
விரைசெறிதாமரையிமைக்குமெய்ம்மையான் ... *
வரிசிலைத்தடக்கையன்மார்பினூலினன் ... ...*
அரசிளங்குமரனேயாகவேண்டுமால் ... ... *

(இ-ள்.) வாசனைபொருந்திய தாமரைமலர்போன்ற கண்கள் இமைக்காநின்ற உண்மையினாலும் பெரியவில்லேந்துகின்றநீண்ட கையினையுடையவனாயிருப்பதினால் இளமைப்பருவமுள்ள இராஜகுமாரனாகவேண்டுமேயன்றி சொல்லுமிடத்தில் தேவலோகத்திராநின்ற ஒருதேவனல்லன். எ-று.

இவ்வாறுநினைக்கின்றவள் தேவனோவென்று ஐயமுற்று கண்ணிமைத்தல் முதலிய குறிகளால் மனிதனென்று நிச்சயித்துக்கொண்டாளென்பது கருத்து.

பிறந்துடைநலநிறைபிணித்தவெற்றிரங் ... ...*
கறங்குபுதிரிபுமென்கன்னிமாமதில் ... ...*
எறிந்தவக்குமரனையின்னுங்கண்ணிற்கண் ......*
டறிந்துயிரிழக்கவுமாகும்போலாம் ... ... *

(இ-ள்) என்னுடன்உண்டாயிருக்கின்ற நலனும் நிறையுமாகியபிணிக்கப்பட்ட சக்கரமானது சுழன்றுகொண்டு திரிகின்றதானகன்னித்தன்மையாகிய பெரியமதிலையழித்தஅந்தஇராசகுமாரனை இன்னமும் ஒருதரம்கண்ணினாற்கண்டறிந்துபின்பு என்னுயிர்போகவுமாகுமா — எ-று. (௫௯)

என்றிவையினையனவிளம்புவந்தெதிர் ... ...*
நின்றனனவனெனுநீங்கினானெனும் ... ...*
கன்றியமனத்துறுகாமவேட்கையால் ... ... *
ஒன்றலபலநினைந்துருகுங்காலையே ... ...*

(இ-ள்.) என்றிந்தவார்த்தைகளை இத்தன்மையனவாகச்சொல்லுவாள் அவ்விராசகுமாரன்வந்து எதிரில் நின்றனனென்றுசொல்லுவாள் மீட்டும்நீங்கிவிட்டானென்பாள் வெதும்பிய மனத்திற்பொருந்திய காமவிருப்பத்தினால் ஒருவகையலல் பலவகையாகநினைத்து மனமுருகுங்காலத்தில் — எ-று.

அன்னமென்னடையவட்கமைந்தகாமத்தீ ... *
தன்னையுஞ்சுடுவதுதரிக்கிலானென ... ...*
நன்னெடுங்கரங்களைநடுக்கியோடிப்போய் .. ... *
முன்னைவெங்கதிரவன்கடலின்மூழ்கினான் ... *

(இ-ள்.) அன்னநடைபோன்ற மெல்லிய நடையினையுடைய ஜானகியம்மைக்குப் பொருந்தியகாமத்தீயானது தன்னையுஞ்சுடுவதைச் சகிக்காதவன்போலநல்லநெடியகைகளை நடுக்கிக்கொண்டு ஓடிப்போய் பழமையாகிய வெப்பத்தையுடையசூரியன் சமுத்திரத்தில்மூழ்கினான் — எ-று. (௬௧)

சூரியன்அஸ்தமனமானவுடனே மாலைக்காலம் வந்தமைமேற்கூறுகின்றது என்பது கருத்து.

விரிமலர்த்தென்றலாம்வீசுபாசமும் ... ... *
எரிநிறச்செக்கருமிருளுங்காட்டலால் ... ... *
அரியவட்கனைவருமந்திமாலையாங் ... ... *
கருநிறச்செம்மயிர்க்காலன்றோன்றினான் ... *

(இ-ள்.) மலர்ந்தபூவின் மணத்திற்படிந்து வருகின்ற தென்றற்காற்றாகி யவீசுகின்ற பாசக்கயிறும் தீநிறமாகிய செம்மேகத்தையும் இருளையுங்கா ட்டுதலினால் அரியவளாகிய ஜானகியம்மைக்கு அப்போது வெப்பத்தைத்த ருகின்ற அந்திமாலையாகிய கருநிறமுஞ் செம்மயிருமுள்ள எமன்றோன்றி னான் — எ-று. (௬௨)

தென்றல்வீசுதலாலும் மாலைப்பொழுதுவந்தமையாலும்மிகுந்தவருத்தமுண்டாவதுணர்க

மீதறைபறவையாப்பறையக்கீழ்விளி ... ... *
ஓதமென்சிலம்பொடுமுதிரச்செக்கரும் .. *
பாதகவிருள்செய்கஞ்சுகமும்பற்றலாற் ... ...*
சாதகமென்னவுந்தழைத்தமாலையே ... ... *

(இ-ள்) மேலேயொலிக்கா நின்ற பட்சிகளாகிய பறையும், கீழே ஒலிக் காநின்ற சமுத்திரமாகிய சிலம்பும், செவ்வானமாகிய இரத்தமும், பாதகம் போன்ற இருளாகியசட்டையும் பொருந்தியிருப்பதினால்அம்மாலைப்பொ ழுதானது பூதம்போலவுமிருந்தது — எ-று. (௬௩)

மாலைக்காலம் காலிற்சிலம்பணிந்து கருஞ்சட்டை தரித்துக்கொண்டு பறைசாற்றும் பூதம்போன்றது.

வேறு.

கயங்களென்னுங்கனல்தோய்ந்துகடிநாண்மலரின்விடம்பூசி... ... ...*
இயங்குதென்றன்மன்மதவேளெய்தபுண்ணினிடை நுழைய ... ...*
உயங்குமுணர்வுநன்னலமுமுருகிச்சோர்வாளுயிருண்ண ... . *
வயங்குமாலைவானோக்கியிதுவோகூற்றின்வடிவென்றாள் ... ... *

(இ-ள்) குளங்களாகிய அக்கினியில்முழுகியும், மலர்களின் வாசனையாகி ய விஷத்தைப்பூசிக்கொண்டும் உலாவுகின்ற தென்றற்காற்றானது மன்மத வேளேவிய பாணத்தினாலுண்டாகிய புண்ணில்நுழைவதினால் வருந்துகின் ற உணர்வும் நல்லநலமும் அழிந்துசோர்கின்ற ஜானகியம்மை தன்னுயிரை க்கவரும்படி விளங்குகின்ற மாலைப்பொழுதுநிறைந்த ஆகாயத்தை நோக் கியிதுதானோஇயமன்வடிவமென்றுகூறினாள் — எ-று. (௬௪)

கடலோமழையோமுழுநீலக்கல்லோகாயாநறும்போதோ... ... ...*
படர்பூங்குவளைநாண்மலரோநீலோத்பலமோமாயானலமோ...... ... ...*
இடர்சேர்மடவாருயிருண்பதியாதோவென்றுதளர்வாண்முன் ... .. *
மடல்சேர்தாரானிறம்போலுமந்திமாலைவந்ததுவே ... ... *

(இ-ள்) சமுத்திரமோ மேகமோ பெரிய நீலமலையோ நறிய காசாம்பூ வோ பரந்தடர்ந்தபொலிவுள்ளகுவளைமலரோ நீலோத்பலமலரோ கருநெ ய்தற்பூவோ இவைகளில் ஐயம்பொருந்திய மாதர்களுடைய உயிரைக்கி

ரகிப்பது எதுவோவென்று தளர்கின்ற சீதாபிராட்டியினெதிரில் பூமடல் சேர்ந்த மாலையிணையணிந்த ஸ்ரீராமமூர்த்தியின் நிறம்போலும் அந்திப் பொழுதுவந்தது—எ-று. (௯௫)

கடல்முதலாக இங்கு எடுத்துக்கூறிய பொருள்களெல்லாம் ஸ்ரீராமமூர்த்தியி னிறம் போன்றிருக்கின்றவைகளாயினும் அவைகளில்சிறந்தபொருள் எதுவோவென்று வினவுவாள் போன்று ஸ்ரீராமமூர்த்தியின் மேனியைப்புகழ்ந்தாளென்பது கருத்து.

மைவானிறத்துமீனெயிற்றுவாடையுயிர்ப்பின்வளர்செக்கர்ப் ... ...*
பைவாயந்திப்படவரவேயென்னைவளைத்துப்பகைத்தியால்... ... ... *
எய்வானொருவன்கையோயானுயிருமொன்றேயினியில்லை... ... .. *
உய்வானுறவிப்பழிபூணவுனக்கென்னுடனோபகையுண்டோ... ... ...*

(இ-ள்.) ஆகாசமாகிய கருமைநிறத்தையும், நட்சத்திரங்களாகிய பற்களை யும், வாடைக்காற்றாகிய சுவாஸத்தையும் மிகுந்தசெவ்வானமாகிய படத்தை யும், பொருந்தியமாலைப்பொழுதாகிய சர்ப்பமே நீயென்ன காரணத்தினா லே சூழ்ந்துவந்து பாய்கின்றாய் புட்பபாணங்களை ஏவுகின்ற மன்மதனே கையோயாகின்றானிலன் எனக்கு உயிரொன்றேயன்றி இனிவேறோருயிரும் இல்லை நான் எவ்விதத்திலாவது பிழைக்கும்படியிருக்க நீ யிந்தப்பழிபூணு தற்கு உனக்கும் எனக்கும் பகையுண்டோ இல்லையே—எ-று. (௯௬)

எனக்குள்ள ஒருயிரைவாங்க மன்மதன்பிரவேசித்திருக்கிறான்.

நீயெந்த உயிரை வாங்குதற்குப்பிரவேசித்தாயென்று கூறினாளென்பது கருத்துவிளங் க, உயிருமொன்றே இனியில்லையென்று கூறினாளென்பது தாத்பரியம்.

நீலநிறமாகத்தோன்றுகின்ற எல்லைவரையில் ஆகாயமென்று பெரியோர்களால்நிரூபி க்கப்பட்டிருக்கின்றது.

மாலைக்காலமாவது பகற்காலமும் இராக்காலமுமல்லாதகாலம்.

மருள்மாலையென்பதற்குப் பகலும் இரவுந்தம்முள்விரவுதல் என்னும்பரிமேலழகி யாருரையாலுணர்க.

இனிஇருளைக்குறித்துச் சொல்லுகின்றது.

ஆலமுலகிற்பரந்ததோவாழிகிளர்ந்ததோவவர்த ... ... *
நீலநிறத்தையெல்லோருநினைக்கவுலவாநிரம்பியதோ ... ...*
காலனிறத்தையஞ்சனத்திற்கலந்துகுழைத்துக்காயத்தின்... ... ... *
மேலுநிலத்துமெழுகியதோவிளைக்குமிருளாய்விளைந்ததுவே ... ...*

(இ-ள். ஆலகாலவிஷமானது உலகிற்பரவினதோ? சமுத்திரமானதுஎங் குமாகவியாபித்ததோ! அவருடைய நீலநிறத்தையெல்லாருநினைப்பதினாலே அது இவ்வண்ணமாய் நிரப்பியதோ! யமனுடைய நிறத்தை மையினிடத்தி க்கலந்து குழைத்து ஆகாசத்தின்மேலும், பூமியினிடத்தும், பூசப்பட்ட தோ? துன்பத்தையுண்டாக்காநின்ற இருளாய்விளைந்தது—எ-று. (௯௭)

இவ்விருளும் துன்பம்விளைத்தலால் ஆலமுதலியபொருள்களை எடுத்துக்கூறினாள்.

வெளிநின்றவரோபோய்மறைந்தார்விலக்கவொருவர்தமைக்காணேன்... *
எளியள்பெண்ணென்றிரங்காதேயெல்லியாமத்திருளேடே... ... .. *
ஒளியப்பெய்யுமன்மதனுனக்கிம்மாயமுரைத்தாரோ ... ...*
அளியன்செய்தீவினையேயன்நிலாகிலைத்தாயோ... ... ... *

(இ-ள்.) வெளியில்நின்றவரோ சென்றுமறைந்தார் அவ்வாறு செல்லவொட்டாமல் விலக்குதற்கு ஒருவரையுங்காணாமல் வருந்துகின்றேன் - இந்தப் பெண் எளியவளென்று இரக்கமுறாமல் இராப்பொழுதில் ஒளித்துநின்று பாணங்களை எவுகின்ற மன்மதன் இந்தமாயத்தையுனக்குப்போதித்தானோ ஒருவராலளிக்கப்படுந் தன்மையையுடையநான்செய்த தீவினையே நீயிந்த அன்றில்பட்சியுருவமாகவந்தாயோ—எ-று. (௬௮)

ஆண்டங்களையாளினையதினைந்தழுங்குப்வேலையகல்வானந் ... ... *
நீண்டநிமிர்ந்தபெருங்கோயிற்சிதமணியின்வேதிகைவாய் ... ... *
நீண்டசோதிநெய்விளக்கம்வெய்யவென்றங்கவைநீக்கித் .. .. *
தூண்டல்செய்யாமணிவிளக்கின்சுடராலிருளைப்பகல்செய்தார் ... ...*

(இ-ள்.) அந்தவிடத்தில் சீதாபிராட்டியார் இவ்வாறு பலவாக எண்ணிவருந்துகின்றபோது அகன்ற ஆகாயத்தை யளாவும்படி உயர்ந்தபெரியமாளிகையில் சந்திரகாந்தத்தினால் செய்யப்பட்ட மேலடையினிடத்திராநின்ற மிகுந்தபிரகாசமுள்ள நெய்த்தீபங்கள் வெப்பமுள்ளவைகளென்று அவைகளை நீக்கிவிட்டுத் தூண்டுதல் செய்யவேண்டாத மாணிக்கதீபங்களால் இருள் நீங்கிப் பகல்போல விளங்கும்படிசெய்தார்கள்—எ-று. (௬௯)

மேல் சந்திரோதயங்கூறுகின்றார். உதயகிரியில் சிந்தூரஅருவிவிழுந்த சிந்தூரக்காற்றிற்பிறந்து பதினாறுசதுர்யுகம்சிவப்பேறின முழுமாணிக்கம் இருளைக்கெடுக்கும இதனைஆருதே இருள்பருகும் அருமணியென்னுஞ் சிந்தாமணியாலும் நச்சினார்க்கினியார் எழுதியிருக்கிறஉரையினாலுங்கண்டுகொள்க. இது அரசியல்.

பெருந்திண்ணெடுமால்வரைதிரிவிப்பிணித்தபாம்பின்பணித்தாம்பின் .. *
விரிந்ததிவலையுதிர்த்தமணிவிசும்பின்மீனின்மேல்விளங்க ... ... *
அருந்தவமரர்கலக்கியநாளமுதநிறைந்தபொற்கலசம் ... ... *
இருந்ததிடைவந்தெழுந்ததெனவெழுந்ததாழிவெண்டிங்கள் ... ...*

(இ-ள்.) மிகுந்த பலத்துடன் உயர்ந்ததாகிய பெரியமந்தரகிரியைமத்தாகநாட்டி அதிற்கட்டியவாசுகியென்னும் பாம்பாகியமணிகள் பொருந்தியகயிற்றினால் பரந்தநீர்த்துளிகளுடன் சிந்தியமணிகள் ஆகாயத்தில்பிரகாசிக்காநின்ற நட்சத்திரங்களினும்அதிகமாய்விளக்கும்படி தேவர்கள்உண்ணுதற்காகத் திருப்பாற்கடலைக்கலக்கியநாளில் அதனிடத்திலிருந்த அமுதம்நிறைந்த பொற்கலசமானது மேலேவந்தெழுந்ததுபோல சமுத்திரத்தினிடத்தில் வெண்மையாகியசந்திரன் உதயமாயிற்று—எ-று. (௭௰)

மணித்தாம்பிற் கட்டியதெனக் கூட்டுக.

வண்டாயபனுன்மறைபாடமலர்ந்ததொருதாமரைப்போது ... ... *
பண்டாலிலையின்மிசைக்கிடந்துபாருநீரும்பசித்தான்போல் ... ...*
உண்டானுந்திக்கடல்பூத்தவோதக்கடலுந்தான்வேறோர் ... . *
வெண்டாமரையின்மலர்பூத்ததொத்ததாழிவெண்டிங்கள் ... ...*

(இ-ள்.) சமுத்திரத்தினிடத்து உதயமாகிய சந்திரன் பின்னு மெதனையொத்ததென்னில், பழைய ஆலிலையினிடத்துப் பள்ளிகொண்டு பசியுள்ள

வண்போலப்பாரினையும், நீரினையும்,உண்ட நாராயணமூர்த்தியினுடையநா பியாகிய கடலானது பிரமதேவன் வண்டுபோலாய் வேதமாகிய இசையைப் பாடிக்கொண் டிருக்கத்தக்கதாக ஒருசெந்தாமரைமலரை முன்னாளிற் பூத்தது (அதைக்கண்டு அலைபடலுண்டாகிய அந்தஉப்புநீர்க்கடலானது) நாராயணமூர்த்திபோலக் கருமை நிறமுள்ளதாயிருப்பதினால், தானும் ஒருவெண்டாமரைமலரைப் பூத்ததை யொத்தது—எ-று. (௭௧)

இந்தத் தாமரைக்குக் களங்கத்தை வண்டாகக்கொள்க. இது அதிசயோக்தி அலங்காரம்.

புள்ளிக்குறிபிட் டெனவொண்மீன் பூக்கவானம் பொலிகங்கு ... ... *
லெள்ளிற்சிறந்தவிருட்பிழம்பைநக்கிநிமிருநிலாக்கற்றை ... ... *
கிள்ளைக்கிளவிக் கென்னாங்கொலோ கீழ்பாற்றிசையின் மிசைவைத்த ... ... *
வெள்ளிக்கும்பத் திளங்கமுகின் பாளைபோன்று விரிந்துளதால் ... ... *

(இ-ள்.) புள்ளிக்குறியிட்டதுபோல ஒளிதங்கிய நட்சத்திரங்களுண்டாயிருக்கின்ற ஆகாயத்தில்விளங்குகின்ற அர்த்தராத்திரியில்சிறந்திருந்த இருட்கூட்டத்தைஉண்டு மிகுந்தநிலாக்கற்றையானது சீதாபிராட்டியாருக்கு யாதாகுமோ கீழ்த்திசையினிடத்தில்வைத்த வெள்ளிக்கும்பத்தில்இளமையான கமுகமரத்தின் பாளை விரிந்ததுபோன்றுயர்ந்திருக்கின்றது—எ-று. (௭௨)

நிலாக்கற்றையானது பாளைபோன்றுவிரிந்துளது சீதாபிராட்டிக்கு யாதுபோலிருக்குமோ எனவே துன்பத்தைத்தருவதாயிருக்குமென்பது கருத்து.

கிள்ளைக்கிளவி அன்மொழித்தொகை இருட்பிழம்பைநக்குதல் இருட்கூட்டத்தைகெடுத்தலெனப்பொருள் கொள்க.

இருள்பருகு மருமணியென்னுஞ் சிந்தாமணிச்செய்யுட்கு இருளைக்கெடுத்தலினிருளைப் பருகும் அருமணியென்றார் என்னுநச்சினார்க்கினியாருரையானுணர்க.

வெள்ளிக்கும்பம்-சந்திரனுக்கும். கமுகம்பாளை-நிலாகற்றைக்கும் உவமானம்.

இந்நிலாக்கற்றை சந்திரனிடத்திலிருந்ததாகையால் வெள்ளிக்கும்பத் திளங்கமுகின் பாளையென்றார்.

விரைசெய்கமலப்பெரும்போது விரும்பிப்புகுந்ததிருவினொடுங் ... *
குரைசெய்வண்டின் குழாமிரியக்கூம்பிச்சாம்பிச் சவிந்துளதா ... ... *
லுரைசெய்திகிரிதனையுருட்டி யொருகோலோச்சியுலகாண்ட ... ... *
வரசனொதுங்கத்தலையெடுத்த குறும்புபோன்றதரக்காம்பல் .. .. *

(இ-ள்.) இவ்வாறு சந்திரோதயமானவளவில் வாசனையைச்செய்கின்றபெரியதாமரைமலரானது விருப்பங்கொண்டு தன்னிடத்தில்வந்திராநின்ற திருமகளும் ஒலிக்காநின்ற வண்டின்கூட்டமும் இரிந்துபோகும்படி ஒடுங்கிப்பொலிவிழந்து குவிந்தது, செவ்வல்லிமலர்கள் சொல்லுகின்ற ஆக்கினைச்சக்கரத்தை உருட்டியும், ஒப்பற்றசெங்கோல்செலுத்தியும், உலகத்தையாண்டுகொண்டிருந்த அரசனானவன் அவ்விடம்விட்டு நீங்கினவளவில்முன்னடங்கியிருந்து தலையெடுத்த குறுநிலமன்னரையொத்தன—எ-று. (௭௩)

கமலப்பெரும்போது குவிந்ததெனக்கூட்டுக. தாமரைமலர் மற்ற மலர்களுக்குச் சிறந்ததாகையால் அதனை அரசாகக்கூறினார்.

வண்ணமாலைகைபரப்பியுலகைவளைந்தவிருளெல்லா ... ... *
முண்ணவெண்ணிறத்தண்மதியத்துதயத்தெழுந்தநிலாக்கற்றை ... *
விண்ணுமண்ணுந்திசைகளுந்தம் விழுங்கிக்கொண்டவிரிநீர்ப் .. *
பண்ணைவெண்ணெய்ச்சடையன்றன்புகழ்போலெங்கும்பரந்துளதால் ...*

(இ-ள்.) அழகுள்ளமாலைப்பொழுதாகிய கையைப்பரப்பி உலகத்தை வளைந்துகொண்ட இருளையெல்லாம் கெடுக்கும்படி குளிர்ச்சிபொருந்திய சந்திரவுதயத்தில் உண்டாகிய நிலாக்கற்றையானது பரந்தநல்லநீர்வளமுள்ளவயல்கள்சூழ்ந்த திருவெண்ணெய்நல்லூர்ச்சடையப்பமுதலியாருடைய புகழானது விண்ணுலகம் மண்ணுலகம் திக்குகள் என்னும் இவைகளையெல்லாம் தன்னுளடக்கிக்கொண்டு எங்கும் பரந்திருப்பதுபோல பரவியிருக்கின்றது—எ-று. (௭௪)

நிலாக்கற்றை யெங்குப்பரந்ததெனக்கூட்டுக.

நீத்தமதனின்முளைத்தெழுந்தநெடுவெண்டிங்களெனுந்தச்சன் ... ... *
மீத்தன்கரங்களவைபரப்பிவெண்ணிலவாம்வெண்சுதைபாற் ... *
காத்தகண்ணன்மணியுந்திக்கமலநாளத்திடைப்பண்டு ... ... *
பூத்தவண்டம்பழையதென்றுபுதுக்குவானும்போன்றுளதால் ... ...*

(இ-ள்.) (இவ்வாறுசந்திரகிரணம் எங்கும்பரந்தது எத்தன்மைத்தெனில்) நீருள்ளதாகிய சமுத்திரத்தினிடத்தில் உதயமாயெழுந்திருந்தவெண்மைநிறமுள்ள சந்திரனெனுந்தச்சன்-மேலே தன்கைகளைப்பரப்பியிருந்தவெண்ணிலாவாகிய வெண்சுதையினாலே உலகங்களை ரட்சியாநின்ற ஸ்ரீநாராயணமூர்த்தியினுடைய அழகியநாபியிலிராநின்ற தாமரைநாளத்திடமாக முன்னுண்டாகிய அண்டமானது பழமையாயிருக்கின்றதென்றுகருதி அதுபுதிதாகும்படி செய்கின்றவனையுமொத்திருக்கின்றது—எ-று (௭௫)

கரம்-கிரணம்-கை.

நீங்காமாயையவர்தமக்குநிறமொவ்வாமற்புறமேபோய் ... ...*
ஏங்காநின்றவெறிகடற்குமெனக்குங்கொடியையானாயே ... ... *
ஓங்காநின்றவிருளாய்வந்துலகைவிழுங்கிமேன்மேலும் ... ...*
வீங்காநின்றகருநெருப்பினிடையேயெழுந்தவெண்ணெருப்பே ... *

(இ-ள்) ஓங்குகின்ற இருளுருவமாய்வந்து உலகமனைத்தையுமறைத்துமேன்மேலும் அதிகரிக்காநின்றகருநெருப்பினிடத்திலெழுந்த வெண்ணெருப்பே நீங்காதமாயையுடைய அவருக்குநிறத்தினால் ஒப்பாகாமையினால் உலகத்துக்குப் புறப்பாகப்போய் ஏங்கிக்கொண்டிராநின்ற அலைவீசுங்கடலுக்கும் எனக்கும் கொடியையாயினை—எ-று. (௭௬)

சந்திரோதயகாலத்தில் சமுத்திரமானது அதிகவோசையினையும் உடையதாதலினால் கடலுக்குங்கொடியையாயினை யென்றுங்கூறினார்.

வேறு.

கொடியையல்லைநீயாவையுங்கொல்கிலாய் ... ... *
மடிவிலின்னமுதத்தொடும்வந்தனை ... ... *

பிடியின்மென்னடைப்பெண்ணொடென்றலைச் *
சுடுதியோகடற்றோன்றியதிங்களே.... ... ...*

(இ-ள்.) கடலினிடத்துத்தோன்றிய சந்திரனே கெடுதலில்லாத இனியஅமுதத்தோடும் பிடிநடையையொத்த மெல்லியநடையினையுடைய திருமகளுடனும் பாற்கடலினிடத்துத்தோன்றினை ஆகலால் நீகொடியையல்லை அன்றியும் யாரையும்வருத்த மாட்டாயென் றெண்ணியிருந்தேன் இப்போது நோக்கில் விஷத்துடன் வந்ததுபோலத் தோன்றுகின்றது இவ்வாறன்றிமுன்கூறினதுபோல வந்தனையெனறால் என்னைச்சுடுவாயோ—எ-று. (௭௭)

மீதுமொய்த்தெழுவெண்ணிலவின்கதிர் ... ...*
மோதுமத்திகைமென்முலைமேற்பட ... . *
ஓதிமப்பெடைவெங்கனலுற்றெனப் ... ... *
போதுமொய்த்தமளிப்புரண்டாளரோ. ... ... *

(இ-ள்.) மேலேநெருங்கியெழுகின்ற வெண்ணிலாக்கதிராகிய மோதுகின்றசம்மட்டியானது மெல்லிய தன்தனங்களின்மேல்படுதலினால் பெட்டையன்னமானது வெவ்விய தீயினிடத்துப் பொருந்தியதுபோல் புட்பங்கள் நெருங்கிய அமளியினிடத்துப்புரண்டாள்—எ-று. (௭௮)

மொய்த்தமளி-பெயரெச்சவிகுதி தொகுத்தல்விகாரம்.

நீக்கமின்றிநிமிர்ந்தநிலாக்கதிர் .. .. *
தாக்கவெந்துதளர்ந்துசரிந்தனள் ... ... *
சேக்கையாகிமலர்ந்தசெந்தாமரைப் ... ...*
பூக்கள்பட்டதப்பூவையும்பட்டனள் ... . *

(இ-ள்.) ஒழிந்த இடமில்லாது எங்கும்பரந்திராநின்றசந்திரகிரணமானது தனத்தின்மேல் தாக்குதலினால்உடல்வெதும்பித்தளர்ந்து சாய்ந்தவளாய்த்தனக்கு ஆசனமாய் மலர்ந்த செந்தாமரைமலர்கள் அடைந்ததன்மையை அந்தச்சானகியம்மையும் அடைந்தாள்—எ-று. (௭௯)

தாமரைமலர் பட்டதன்மையாவது-கூம்பிச்சாம்பிக்குவிந்துளதென்றதினால் அறிந்துகொள்க.

வாசமென்கலவைக்களிவாரிமேற் ... ... *
பூசப்பூசப்புலர்ந்துபுழுங்கினள் ... ... *
வீசவீசவெதும்பினண்மென்முலை ... ...*
ஆசைநோய்க்குமருந்துமுண்டாங்கொலோ ...*

(இ-ள்.) வாசனைபொருந்திய மென்மையாகிய கூட்டுவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்பைவாரி தோழிகள் தன்திருமேனியில் பூசுந்தோறும் வாடி வெதும்பினாள் ஆலவட்டக்கால்வீசுந்தோறும் மெல்லியதனங்கள் புழுங்கினாள் காமநோய்க்கு அவுஷதமும் உண்டாயிருக்குமோ—எ-று. (௮௰)

தோழிகள் சையோத்திய உபசாரஞ்செய்தும் ஏன்வருந்துகின்றாளென்னில் இப்பொருள்களெல்லாம் காமத்தைப்பெருக்கலினால்.

தாயரிற்பரிசேடியர்தாதுகு... ... ...*
வீயரிந்தளிர்மெல்லணைமேனியிற் ... . *
காயெரிக்கரியக்கரியக்கொணர்ந் ... ...*
தாயிரத்திரட்டியடுக்கினர் ... ... *

(இ-ள்.) தாய்மார் பரிவதுபோற் பரிகின்ற தோழிமார்கள் தாதுகள் சிந்துகின்றமலர்களையும், செம்மைநிறமுள்ள தளிர்களையும், மெல்லியசயனத்தில சீதாபிராட்டியின் மேனியிலுண்டாகியவெதுப்புகின்றவிரகாக்கினியால்கருகுந்தோறும் கருகுந்தோறும் கொண்டுவந்து இரண்டாயிரந்தரமடுக்கினார்கள்-எ-று. (௮௫)

கன்னிநன்னகரிற்கமழ்சேக்கையுள் ... ...*
அன்னமின்னனையாயினளாயவண்... .. .. *
மின்னின்மின்னியமேனிகண்டானெனச்... ... *
சொன்னவண்ணலுக்குற்றதுசொல்லுவாம்... ...*

(இ-ள்.) கன்னிகாமாடத்தி லிருக்கும் பரிமளிக்கின்ற பஞ்சசத்தின்மேல், சீதாபிராட்டி இவ்வண்ணம் இருந்தனள் அவ்விருந்தவளது மின்னலைப் போலவிளங்கிய மேனியைக் கண்டானென்று சொல்லப்பட்ட சக்கிரவர்த்தித்திருமகனுக்குப்பொருந்திய செய்கையை இனி உரைக்கின்றோம்-எ-று.

கமழ்சேக்கை என்பது- வெள்ளொக்கலர். செஞ்செவியர் என்பனபோல மலர்ச்சேக்கையென்பதைக் குறிப்பானுணர்த்திற்று.

எதிமன்னனைக்கண்டெதிர்கொண்டவன்... ... *
ஓகையோடுமினிதுகொண்டுய்த்திடப் .. ... *
போகபூமியிற்பொன்னகரன்னதோர் ... ... *
மாகமாடத்தனையவர்வைகினார்... ... ... *

(இ-ள்) (அவ்விடம்விட்டுச்)சென்று சனகமகாராசனைக்கண்டு அவ்வரசன் சந்தோஷித்துடன் எதிர்கொண்டு இனிமையாய் அழைத்துப்போய்ச் செல்லவிடச்சென்று போகபூமியிலிருக்கும் பொன்னகரை யொத்ததாகிய உயர்ந்த ஒருமாளிகையில் அவர்கள்தங்கினார்கள்—எ-று. (௮௬)

வையமவ்வுழிமாதவமியாவுமோர்... .. ...*
செய்கைகொண்டுநடந்தெனத்தீதறு... ... ... *
மொய்கொள்வீரன்முளரியந்தாளினான்... ... *
மெய்கொண்மங்கையருண்முனிமேவினான்... .. *

(இ-ள்.) அங்கிருக்கும்போது பெருமைபொருந்திய தவமெல்லாம் ஓருவடிவங்கொண்டு நடந்ததுபோலக் குற்றமற்ற பராக்கிரமங்கொண்ட ஸ்ரீராமமூர்த்தியின் தாமரைமலர்போன்ற பாதத்தினால் சாபம்நீங்கிச் சரீரம்பெற்ற அகலிகையின் மைந்தராகிய சதாநந்தமுநிவர்வந்தார்—எ-று. ()

வந்தெதிர்ந்தமுனிவனைவள்ளலுஞ் ... ... *
சிந்தையாரவணங்கலுஞ்சென்றெதிர் ... ...*
அந்தமில்குணத்தானெடிதாசிக... ... ... *
டந்துகோசிகன்றன்மருங்கெய்தலும் ... ... *

(இ-ள்.) இவ்வாறுவந்த சதாநந்தமுநிவரை ஸ்ரீராமர் மனமொத்துத்தொழுதும் சென்றெதிர்ந்த அளவில்லாத நற்குணங்களுள்ள அந்தச் சதாநந்தமுநிவர் மிகுதியாக ஆசீர்வசனங்கூறி விசுவாமித்திரமுநிவர் அருகிற்போயினபோது—எ-று. (௮௫)

விசுவாமித்திரமுநிவருக்குக் கோசிகர் என்றும், கௌசிகர் என்றும்பெயர்.

வணங்கலும், எய்தலும், விரைவுப்பொருட்டாகவந்த வினையெச்சம்.

கோதமன்றருகோமுனிகோசிக ... ... *
மாதவன்றனைமாமுகநோக்கியிப்... ... ... *
போதுநீயிவட்போதவிப்பூதலம் ... ...*
ஏதுசெய்ததவமென்றியம்பினான்... ... ... *

(இ-ள்) கௌதமரிஷியால் அருளிய முநிசிரேஷ்டராகிய சதானந்தமுநிவர் கௌசிகமுநிவருடைய திருமுகத்தைப்பார்த்து நீரிப்போது இங்குவர இப்பூமியானது எத்தன்மைத்தாகிய தவஞ்செய்ததோவென்று உபசாரவார்த்தைச்சொல்லினர்—எ-று. (௮௬)

பூந்தண்சேக்கைப்புனிதனையேபொரு... ... *
மேய்ந்தகேண்மைச்சதாநந்தனென்னுமா... ... *
வாய்ந்தமாதவன்மாமுகநோக்கிநா ... ...*
றேய்ந்தசிந்தைக்கௌசிகன்சொல்லுவான் ...*

(இ-ள்.) தாமரைமலர்ப்பூ வாகிய) குளிர்ந்தஆசனத்திடை (வீற்றிருக்கும்) பிரமன் றன்னையேசமானம்பொருந்திய உருமையினையுடையசதாநந்தனென்னுங்கீர்த்திபெற்ற மகாமுநிவரது திருமுகத்தினைப்பார்த்து சாஸ்திரங்களுட்படிந்த உள்ளத்தால் (விளங்கும்) கௌசிகனென்னும்பெயரிய விசுவாமித்திரர் சொல்லுகின்றார்—எ-று. (௮௭)

வடித்தமாதவகேட்டியிவ்வள்ளறான் ... . *
இடித்தவெங்குரற்றாடகையாக்கையும் ... ... *
அடுத்தென்வேள்வியுநின்னன்னைசாபமு ... *
முடித்தெனெஞ்சத்திடர்முடித்தானென்றான் ...*

(இ-ள்.) நீங்கினீங்கிய மகத்தாகிய தவமுடையோய் கேளாய், இந்தப்பெரியோன்றான் இடிபோன்றவெவ்வியகுரலையுடைய தாடகையின் சரீரத்தையும் சேர்ந்துளனதியாகத்தையும், உன்னுடைய தாய்க்குற்ற சாபத்தையும் முடித்துவிட்டு (இதனால்) என் உள்ளத்திற்பீடித்த துயரத்தை நீக்கினான் என்றார்—எ-று. (௮௮)

என்றுகோசிகன்கூறிடவீறிலா... ... ... *
வன்றபோதனன்மாதவநின்னருள் ... ... *
இன்றுதானுளதேலரிதியாதிந்த... ... ...*
வென்றிவீரர்க்கெனவும்விளம்பிமேல்... ... *

(இ-ள்.) இவ்வாறு விசுவாமித்திரர் சொல்ல, முடிவில்லாத வலியதவவலையையுடையராகிய சதானந்தர் தவத்தாற் சிரேஷ்டரோ உமதநுக்கிரகம் இப்போதிருக்குமேயாயின் அரியபொருள்யாதாமிந்த வெற்றிவீரர்களாகிய ஸ்ரீராமலட்சுமணர்களுக்கு என்றுஞ்சொல்லி மேலும்—எ-று. (அக)

எள்ளிற்பூவையுமிந்திரநீலமும்...... ... ... *
அள்ளல்வேலையுமம்புதசாலமும் ... ... *
விள்ளுநீயுடைப்பானலுமேவுமெய் ... ... *
வள்ளறன்னைமதிமுகநோக்கியே... ... ... *

(இ-ள்.) எள்ளுதலில்லாத காயாமலருங், இந்திரநீலரத்தினமும், சேறு (நுரை முதலியவை கலங்கும்) கடலும் மேகபடலமும் பலரும் புகழினையுடைய கருங்குவளையும் (தாமேசாதிருசியத்தை) அவாவும் திருமேனியையுடையபெரியோனாகிய அவ்விராமபிரானை (அவரது) மதிமுகத்தினை நோக்கி.

நறுமலர்த்தொடைநாயகநானுனக் ... ... *
கறிவுறுத்துவென் கேளிவ்வருந்தவன் ... ... *
இறைபெயரட்புவிக்கிற்பல்லாண்டெலா ... ... *
முறையினிற்புரந்தேயருண்முற்றினன் ... ... *

(இ-ள்.) நறுவியமலரானமைந்த மாலையணிந்த நாதனே; யான் நினக்குத்தெரிவிப்பேன் கேளாய், இந்த அரியதவத்தினராகிய விசுவாமித்திரரானவர் இராசாவாகப்பூமியின்கண் அநேககாலமாய்த் தருமமுறைப்படி அரசாண்டு அருணிறைந்தவராகி—எ-று. (கக)

ஈறில் பல்லாண்டெலா மென்பது அநேககாலமாய் என வினையுரியாக் கொள்ளப்பட்டது, ஏகதேசமொத்துளது, பெரும்பான்மைவரும், பரிச்சேதம் கிடையாது இலவலேசமும் இல்லை. அவசியந்தருவேன் என்கின்ற உலகியல் வழக்குக்கண்டென் றுணர்க.

அருண்முற்றினன் என்பது-முற்றுவினையை மேலைப்பாட்டினுள்சென்றனனென்பதொடு முடித்து வினையெச்சமாக்குக.

ஆகின்வைகியறனினமைந்துழி... ... ... *
விரசுகானிடைச்சென்றனன்வேட்டைமேல் ... *
உரைசெய்மாதவத்தோங்குவசிட்டனும் ... ... *
பரசுவானவன்பாலணைந்தானரோ... ... ... *

இ-ள்.) இராச்சியத்திலிருந்து தருமபரிபாலனத்தின்கண் நின்றபோது வேட்டையின்பொருட்டு நெருங்கியகாட்டிலே சென்றனர் (அங்கே பிரமரிஷியென்றெல்லாராலும்) கீர்த்திபண்ணப்படுகின்ற மகத்தான தவங்களில் உயர்ந்துள்ள வசிஷ்டராகிய பரமசிவனிடத்துக்கிட்டினார்—எ-று. (கஉ)

அரோ-அசைச்சொல். உரைசெய்மாதவத்து என்னுமிடத்தே பிரமரிஷிகட்கென்றெடுத்துக்கூறப்பட்ட தபோவிசேஷங்களி லென்றுமாம்.

வேறு.

அருந்ததிகணவன்வேந்தற்கருங்கடன்முறையினாற்றி ... ... *
இருந்தருடருதியென்னவிருந்துழியினிதுமிற்கே... ...... *

விருந்தினியமைப்பெனென்னுஞ்சுரபியைவிளித்துநீயே ...*
சாந்தருளமுதமென்னவருண்முறைசுரந்ததன்றே ... ...*

(இ-ள்) அருந்ததிப்பெயரிய அவளுக்கு நாயகராம் வசிட்டமாமுனியானவர் வேந்தராகிய விசுவாமித்திரருக்கு அருங்கடன்களைக் கிரமமாய்ச்செய்து (அப்பால்) இருந்து அருளைத்தாரீரென்றுகேட்க,அதன்மேல் இருந்தபொழுது இனிதாக நினக்குவிருந்தினை இப்போதேசமைக்கவேண்டுமென்று தெய்வப்பசுவைக்கூப்பிட்டு நீயேசாந்தும் அமிர்தத்தையென்றுரைக்க, அஃதவ்வாறே அருளிய முறையின்படிசாந்திட்டது-எ-று. (கூங)

அருள் தருதியென்றது -தைவரல் -அலர்தரல்- மேவரல்- போதரல்- இத்தொடக்கத்தன ஒருசொன்னீர்மைத்தாய்வருஉமென்றுணர்க.

அறுசுவைத்தாயவுண்டியரசநின்னணிகத்தோடும் ... ... *
பெறுகெனவளித்துவேந்தோடியாவருந்துய்த்தபின்னர் .. *
நறுமலர்த்தாருமவாசக்கலவையுநல்கலோடும் ... ... *
உறுதுயர்தணிந்துமன்னனுய்த்துணர்ந்துரைக்கலுற்றான் ...*

(இ-ள்.) ஆறுவேறுவகையான நாச்சுவையவாகிய வுணவுகளை யரசனே, நீ நின்சேனைகளுடனே பெற்றனுபவியென்றருளிச்செய்து,விசுவாமித்திரரோடு (வேந்தோடுவந்த யாவருமுண்டபிற்பாடு நன்மலர்மாலைகளும், மணமுடைக்கலப்புச்சந்தனமுங் கொடுத்தலும் (நடைநோய் பசிநோய்முதலா) யுற்றவருத்தங்கடணிந்து மன்னன் யோசித்துப்பார்த்துச் சொல்லத்தொடங்கினான்—எ-று. (கூச)

மாதவவெழுந்திலாய்நீவயப்புடைப்படைகட்கெல்லாந் ... *
கோதறுமமுதமிக்கோவுதவியகொள்கைதன்றே ... ... *
நீதறுகுணத்தான்மிக்கசெழுமறைதெரிந்தநூலோர் ... ... *
மேதகுபொருள்களியாவும்வேந்தருக்கென்கைதன்றால் ......*

(இ-ள்.) மாதவனே!நீ எழுந்திராமலே வெற்றியுடைய சேனைகளுக்கெல்லாம் குற்றமற்ற அமிர்தத்தை இந்தப்பசுவுதவிய காரியத்தினாலே தீதறு குணத்தாலுயர்ந்த விழுமிய வேதங்களையுணர்ந்த வேதியர் மேன்மையான வெல்லாப்பொருள்களும்வேந்தருக்கேயுரியனவென்று சொல்லுதலால்-எ-று

நிற்கிதுதகுவதன்றுநீடருஞ்சுரபிதன்னை... ... ... *
எற்கருளென்றலோடுமியம்பலனியாதும்பின்னர் ... *
வற்கலையுடையென்யானேவழங்கலென்வருவதாகிற்... ... *
கொற்கொள்வேலுழவநீயேகொண்டகலென்றுகூற .. ... *

(இ-ள்.) நினக்கு இது (இந்தப்பசு) தகுதியல்ல நீடுகின்ற அருமையான சுரபியை எனக்குக்கொடுத்திடு என்றுகேட்டமாத்திரத்தில ஒன்றும்பேசாதிருந்தவராய் மேலும்,மரவுரியையுடையாக வுடையேன் யானே இதனைக் கொடுக்கமாட்டேன் அதுதானே வருமேயானால் கொலைத்தொழில்கொள்ளும் வேலாயுதங்கொண்ட நீயே கொண்டுபோவென்று சொல்ல—எ-று. ()

பணித்தது புரிவெனென்றுப் பார்த்திவனெழுந்து பொங்கிப் *
பிணித்தனன் சுரபிதன்னைப் பெயர்வுழிப் பிணியைவீட்டி...... *
மணித்தடந்தோளினாற்குக் கொடுத்துப் போமறைகளியாவும்... *
கணித்தவெம் பெருமவென்னக் கலைமறை முனிவன் சொல்வான் *

(இ-ள்.) சொன்னதைச் செய்வேனென்று அரசன் எழும்பிக்களித்து அச்சுரபியைப் பிடித்துக்கட்டிக்கொண்டு புறப்படும்போழ்து அக்கட்டியகட்டினையறுத்துக்கொண்டு வேதம் யாவற்றையுமோதி நிலையறிந்த எம்பெருமானே அழகியவிசாலமாகிய தோளையுடைய விசுவாமித்திரற்கு (என்னைக்) கொடுத்துவிடுகின்றாயோவென்றுகேட்க, கலைஞானங்களையும் வேதநூல்களையு முணர்ந்தமுனிவர் (வசிஷ்டர்) சொல்லுவார்—எ-று. (௧௭)

கொடுத்திலெனியானேமற்றைக் குடைகெழுவேந்தன்றானே... *
பிடித்தகல்வுற்றான்றன்னைப் பெருஞ்சினங்கதுவநெஞ்சா ....*
டிடித்தெழுமுரசம்வேந்தன் சேனையையாமையின்று··· ... *
முடிக்குவென்காண்டியென்றுமொழிம்மயிர்சிலிர்த்ததன்றே *

(இ-ள்.) நானேகொடுக்கின்றேனில்லை அந்தவெற்றிக்குடையுடையரசன் தானேயென்னைப்பிடித்துப்புறப்பட்டதெனச்சொல்ல, கடுங்கோபங்கதித்த ஆத்திரத்துடனேஇடிபிடித்தாலென்ன,இடித்தெழும்புமயத்தபேரியுடைய இராசனது சேனையை நானே இப்போழ்து ஈறுகாண்பேன்பார் என்று (இந்தச்சுரபிக்கு) உடம்பின்மயிர்சிலிர்த்தது—எ-று. (௧௮)

பப்பரரெயினர்சீனர் சோனகர்முதல்பல்லோர்... .... *
கைப்படையதனிற்றுங்கபிலைமாட்டுதித்துவேந்தன் ... *
றுப்புடைச்சேனையாவுந்தொலைவுறத்துணித்தலோடும் ... *
வெப்புடைக்கொடியமன்னன்றனயர்கள்வெகுண்டுமிக்கார்....*

(இ-ள்.) சிலிர்த்தமாத்திரத்தில் அந்தக்கபிலையினிடத்துநின்றும் பப்பரர் மறவர் சீனர் சோனகர் முதலிய பல (வலியமிலேச்ச) கணங்கள் தத்தங் கையகத்துக்கொண்ட ஆயுதங்களுடனே பிறந்துவந்து வேந்தனுடைய வல்லமைபொருந்திய சேனைகள்யாவற்றையும் முழுதுமற மடித்துவிட்டதன் மேல் கோபங்கொண்ட கொடிய விசுவாமித்திரருடையகுமாரர்கள் ஆக்கிரமித்து(மிகுந்தார்) மேல்விழுந்தார்—எ-று. (௧௯)

பப்பரர் - பப்பரதேசத்தவர், இமயத்துவடக்கின்கணுள்ளார், தத்தாரியருளொருசாரார், இப்பொழுதுகலந்தொரு குழுஉவாயினர், சீனர் இக்காலத்தே படைவல்லுநரல்லரேனும் அக்காலத்தாண்மையிற் சிறந்திருந்தனர், இப்பொழுது பப்பரராசனுக்கடங்கிய அரசியலுடையோர், சோநகர் யவனருளொருசாரார், இவரை மகமதியரா யுணர்கின்றமை இந்நாட்டுவழக்கம்பற்றி, இம்மிலேச்ச சனங்கட்கு வரலாறு புராணத்தால் வேறுகாட்டிக்கொள்வாருமுளர், இன்னனையவிசேஷங்களை இராமாயண சம்பிரதாயத்துள் விரித்துரைக்குதும்.

சுரபிதன்வலியிதன்றுச்சுருதிநாலுணரவல்ல... ... ... *
வரமுனிவஞ்சமென்றுமற்றவன்சிரத்தையின்னே ... . *

அரிகுருமென்னப்பொங்கிப்படர்த்தனரடரவன்றான் ... ... *
எரியெழவிழித்தலோடுமிறந்தனர்குமரரெல்லாம்... ....*

(இ-ள்.) இஃது காமதேனுவின் வல்லமையல்ல, வேதநூலறியச் சத்தியுள்ள அந்தச் சிரேஷ்டமுனிவருடைய கடமையென்று அவருடைய தம்பியினை இப்போதே அழித்துவிடுவோம் என்னக்கோபமிகுந்து எதிர்த்தனர் எதிர்க்கவே அவ்வசிஷ்டமுனி நெருப்புப்பறப்பவிழித்துப்பார்த்தவுடனே அவ்விசுவாமித்திரருடைய புத்திரர்எல்லோரும் பட்டழிந்தனர்—எ-று. (௩)

ஐயிருபதின்மர்மைந்தரவிந்தபடியரசன்காணு... ... *
நெய்பொழிகனலிற்பொங்கிநெடுங்கொடிதம்தேர்கடாவி ... *
கைதொடர்கணையிற்றுங்கார்முகம்வளையவாங்கி .... *
எய்தனன்முனியுந்தன்கைத்தண்டினையெதிர்தியென்றான்... *

(இ-ள்.) ஐந்து இருபதின்மராகிய நமது நூறுகுமாரரும் அழிந்துபோனதை விசுவாமித்திரர்கண்டு நெய்யினைப்பெய்த நெருப்பினும்அதிகமாய்ச்சினந்து, நெடியகொடிகளுடைய தேரைச்செலுத்திக்கையினின்றுமிடையறாது தொடரும் அம்பினும் தமது வில்லை வளையவளைத்து எய்தார், வசிஷ்டரும் தமது கையிலிருந்த தண்டத்தை நீ எதிர்த்தியென்றார் (என்றேவினார்)—எ-று. (௩௧)

ஒடுருபுகருவிப்பொருட்டு, ஐயொடு குவ்வென்றேதியவழி ஆறுருபுந்தழுவப்பட்டமையின் ணடு மவவாறே கொள்ளப்படும், படவே மூன்றுவதாதலும் வினைமுதல்கருவிப்பொருட்டாதலும் ஆறுருபிற்கு மெய்துமென்றார், சேனாவரையராதலின் அவர்காலத்தாருட்சியின் சிறுபான்மைக்குத் தொல்காப்பியர்காலத் தவ்வாட்சியின்மையும் பிற்காலத்தொடுவிறுட்சிச்சிறுபான்மைக்கு, நன்னூலுட், பெயரோ ஐயாற்குத்திரத் தவ்வாட்சிகாறுமையும் இருமையும் பொருள்வேறுபிரிந்து கண்டமைக்குமூன்றுவதனுருபாலாறேபோமச்சூத்திரத்துடனிகழ்வுப்பொருள் கூறினமையுஞ்சான்றுமென்றுணர்க.

கடவுளர்படைகளீறாகக்கற்றனபடைகளியாவும் .. ..*
விடவிடமுனிவன்றண்டம்விழுங்கிமேல்விளங்கல்காறு ... *
வடவரைவில்லிதன்னைவணங்கியேத்தலோடும்... ... *
அடலுறுபடையொன்றீயாவன்னவனகன்றனன்றே... *

(இ-ள்.) தெய்வப்படை பலவுமீறாகத் தாம்தேர்ந்த படைகளெல்லாவற்றையும் விடவிட அத்தனையையு முனிவனுடைய கைத்தண்டமானது விழுங்கிவிட்டு மேலாகவிளங்குதலைக்கண்டு வடவரையென்கின்ற மேருவினை வில்லாகவளைத்த பரமேச்சுவரனை வணங்கி வாழ்த்தினார் (அதுகொண்டு) அவரும் அதிபலம்பொருந்திய ஒருபடையைக் கொடுத்துப்போயினார்—எ-று.

விட்டனன்படையையேந்தல்விண்ணுளோருலகையெல்லாஞ்.
சுட்டனனென்னவஞ்சித்துளங்கினர்முனியுந்தோன்றிக் ... *
கிட்டியபடையையுண்டுகிளர்ந்தனன்கிளருமேனி ... ...*
முட்டவெம்பொறிகள்சிந்தப்பொருபடைமுரணுந்திற்றே ...*

(இ-ள்.) அப்படையினை விசுவாமித்திரர் விட்டார் விடவே உலகத்தையெல்லாஞ்சுட்டுத்தீய்த்தனன்-என்று தேவர்கள்பயந்து நடுங்கினர் - முனி...

றும் எதிரேவந்து தன்னருகேகிட்டிய அவ்வத்திரத்தை விழுங்கிப்பொலிந்திருந்தனர்- அவரது பொலிவுள்ள திருமேனியெங்கும் பேரப்படையானது வெளிகெட்டுத் தீப்பொறிகள்சிதற—எ-று. (௱௬)

கண்டனனரசன்யாருக்கலைமறைமுனிவர்க்கல்லாற்... ... *
திண்டிறல்வலியத்தேசுமுளவெனல்சீரிதம்மா... ... *
மண்டலமுழுதுங்காக்குமொய்ம்பொருவலியன்றென்று ... *
ஒண்டவப்பரியவெண்ணியம்பர்கோன்றிசையையுற்றான் ... *

(இ-ள்.) அதனை விசுவாமித்திரர்கண்டார் அவ்வாறுகண்டு அந்தக்கலைகளைக்கொண்ட வேதமுனிவர்களுக்கல்லாமல் திண்ணிய திறல்கொண்ட வலிமையும் பிரமதேஜசும்உளவென்றதே இதுசிறந்தது;உலகமுழுமையுங்காப்பாற்றுகின்ற வல்லமை ஒருவல்லமையல்லவென்று ஒள்ளியதவத்தைப்போய்ச்செய்யவெண்ணி இந்திரன்றிசையைச்சேர்ந்தார்—எ-று. (௱௭)

திக்பலம் க்ஷத்திரியபலம்- பிரம்மதேஜோபலம் - என்கிற வால்மீகி ப்ரோக்தத்தை இவ்விஷயத்தில் பழமொழிபோல் வழக்கினிடத்துக்கூறுவாருமுளர்.

மாண்டமாதவத்தோன்செய்தவலனையேமனத்தினெண்ணிப்... *
பூண்டமாதவத்தனாகியரசர்கோன்பொலியநீர்மை ... . *
காண்டலுமமரர்வேந்தன்றனுக்குறுகருத்தினோடுந் ... ... *
தூண்டினனரம்பைமாருட்டிலோத்தமையெனுஞ்சொன்மானை

(இ-ள்) இராசாதிராசனாகிய விசுவாமித்திரர் மாட்சிமைமிகுந்ததவத்தைவசிஷ்டமுநிவர்செய்து காட்டிய வல்லமைச்செயலையே தம்முடையமனதிலெண்ணி மகத்தாய தபசுகளைப்பண்ணும்படி மேற்கொண்ட சங்கற்பத்தினராகி இருந்தகாரியத்தைக் கண்டவுடனே இந்திரன் உள்ளுள்ளஞ்சியகருத்துக்கொண்டு (அரம்பைமாதரென்னப்படும்) தெய்வஸ்திரீகளுக்குள்ளே திலோத்தமையென்கிற புகழ்மிகுந்த மான்போன்றவளை தூண்டிவிட்டான்—எ-று. (௱௮)

அன்னவண்மேனிகாணுவனங்கவேள்சரங்கள்பாயத் ... .*
தன்னுணர்வழிந்துகாதற்சலதியினழுந்திவேந்தன் ... ... *
பன்னரும்பகதீர்வுற்றுப்பருணிதர்தெரிந்தநூலி ... ... *
னன்னயமுணர்ந்தோனாகிநஞ்செனக்கனன்றுநக்கான் ... *

(இ-ள்) அவளுடைய உடம்பின் மேனியைக் கண்டதனால் மன்மதனுடைய பாணங்கள்பாய அதனால் தம்முடைய அறிவுகெட்டுக் காமக்கடலினுள்ளே அமிழ்ந்திப்போய் விசுவாமித்திரர் சொல்லரிய பகலநந்தந் தொலைத்துத்தெளிவுடையோர் ஆய்ந்தோதிய சாஸ்திரத்தின் நல்லபொருளைத்தெரிந்தவராகி ஆலாலத்தைப்போல அழன்றுநகைசெய்தார்—எ-று. (௱௯)

விண்முழுதாளிசெய்தவினையெனவெகுண்டுநீபோய் ... *
மண்மகளாதியென்றுமடவரலனையேவிக் ... ...*
கண்மலாசிவப்பவுள்ளங்கறுப்புறக்கடிதினேகி ... ... *
எண்மரின்வலியனாயமன்றிசைதன்னையுற்றான் ... ... *

(இ-ள்.) விண்ணுலகமுழுமையும் ஆள்பவனாகிய இந்திரன்செய்ததொழிலென்றறிந்துகண்களாகியமலர்கள் சிவக்கவும், இதயங்கன்றவும், கோபித்து நீபோய் பூலோகத்துப்பெண் ஆவாயென்று அப்பெண்ணைவி விரைந்து சென்று திசைக்காவலர்களில் திண்ணியனாகிய யமனது திசையைச் சேர்ந்தான்—எ-று. (ளஎ)

தென்றிசையதனை நண்ணிச்செய்தவஞ்செய்யுஞ்செவ்வி......*
வன்றிறலயோத்திவாழுமன்னவன்றிரிசங்கென்பான்... ......*
றன்றுணைக்குருவை நண்ணித்தனுவொடுந்துறக்கமெய்த......*
இன்றெனக்கருளென்னவாண்டிறந்தெய்துகென்றான்......*

(இ-ள்.) தென்றிசையைச்சேர்ந்து செய்தற்குரிய தவத்தைச்செய்கின்ற காலத்தில், வன்மையாகிய வெற்றியையுடைய அயோத்திநகரத்தில்வாழும் மன்னவனாகிய திரிசங்கென்பவன் தனது இருமைக்குந் துணையாயுள்ள ஆசாரியராகிய வசிட்டரை அடைந்து தேகத்தோடு சுவர்க்கத்தைச்சேர இன்று எனக்கு அருள்செய்கவென்றுகேட்க, அம்முனிவர் எல்லைநாளாகிய ஆயுளினின்றுநீங்கி அடைகவென்றுசொன்னார்—எ-று. (ளஅ)

ஆண்டு என்பதனை எழுவாயாகக்கொள்ளின் இறந்தென்னும் செய்தெனெச்சத்தைச் செயவெனெச்சத்திரிபெனக்கொள்க எய்துகவென்னும்வியங்கோள் உயிர்மெய்விகுதி அகரந்தொகுத்தல் விகாரமாயிற்று.

நினக்கொலாதாகினைய நீணிலத்தியாவரேனும்... ... ... *
மனக்கினியா[illegible]நாடிவகுப்பலியான்வேள்வியென்னச் ... *
சினக்கொடி[illegible]ய்முன்னர்த்தேசிகற்பிழைத்துவேறோர்.. *
நினக்கிக[illegible]நீசனாய்விடுதியென்றான் ... ...*

(இ-ள் [illegible]கு இயையாதாகின் நீண்ட உலகத்தில் எவர்களாயினு[illegible]ங்கினவரைத்தேடி (அதைக்குறித்து) யாகத்தை யான் செ[illegible]சால்ல, சினத்தையுங்கொடுமையாகியவலியையுமுடைய அரச[illegible]னைய குருவைத்தவறிவிட்டு உனக்கு வேறொரு நலஞ்செய்வோனைக்கு[illegible]துநின்றாய (ஆகலின்) புலையனாகிவிடு என்றுசொன்னார். ()

மனக்கு அத்துச்சாரியைதொகுத்தல் விகாரம்,

மலருளோன்மைந்தன்மைந்தர்வழங்கியசாபந்தன்னால்... ... *
அலரியோன்றானுநாணும்வடிவிழந்தரசர்கோமான் ... ...*
புலரியங்கமலம்போலும்பொலிவொரீஇவதனம்பூவில் ... *
பலருமாங்கிகழ்தற்கொத்தபடிவம்வந்துற்றதன்றே ... ...*

(இ-ள்) (புருஷோத்தமனாகிய ஸ்ரீராமபிரானே) தாமரைமலரில்வசிப்பவனாகிய பிரமபுத்திரர் இட்டசாபத்தினால் அவ்வரசர்பெருமானுக்கு சூரியனும்நாணுகின்ற உடலொளிஇழக்கவும்விடியற்காலத்துத்தாமரைமலர்போன்றபொலிவை முகம்நீங்கவும் உலகத்தில்கண்ணுற்ற பலரும் இகழ்தற்குத் தகுந்த உருவம்வந்து அவ்விடத்து அடைந்தது—எ-று. (ளக)

காசொடுமுடியும்பூணுங்கரியதாங்கனகம்போன்று ... : *
தூசொடுமணியுமுந்நூறோற்றருந்தோற்றம்போன்று... ...*
மாசொடுசருகிமேனிவனப்பழிந்திடவூர்வந்தான் ... *
சீசியென்றியாருமெள்ளத்திசைப்பொடும்பழுவஞ்சேர்ந்தான். *

(இ-ள்) இரத்தின மிழைத்த கிரீடமும், அணிகளும், கரும்பொன்னாகிய இரும்பையொக்கவும், வத்திரமும் அணிகின்ற முப்புரிநூலும் சருமமானது காணுகின்றகாட்சியையொக்கவும், அழுக்கொடு உடல்கறுத்து மாமை நிறம் அழியவும், ஊரில்வந்து சீசியென்று யாவரும் இகழ மணத்திசைப் போடுகாட்டைச்சேர்ந்தான்—எ-று. (௩௰௧)

போதொடு பொதுளவெனல்போல காசொடுவென்பது இசைநிறைத்தற் பொருட்டு.

கானிடைச்சிறிதுவைகல்கழித்தொர்நாட்கௌசிகப்பேர்க் ...*
கோனினிதுறையுஞ்சோலைகுறுகினன்குறுகவன்னான் ... ... *
ஞானியாவனென்னைநேர்ந்ததிவ்விடையிலென்ன ... ... *
மேனிகழ்பொருள்களெல்லாம்விளம்பினன்வணங்கிவேந்தன். *

(இ-ள்.) காட்டினிடத்தில் சிறிது நாட்கழித்து ஒர்நாள் கௌசிகனென்னும்பெயரையுடைய அரசன் இனிதுவசிக்கின்றசோலையை நெருங்கினான், அங்குநெருங்க அக்கௌசிகர் நீசனாகிய நீ யார் இவ்விடத்தில்யாது நிகழ்ந்தது, என்றுகேட்க முன்னர்நடந்த செய்திகளெல்லாவற்றையும், வணங்கிச் சொல்லினன் அரசன்—எ-று. (௩௰௨)

இற்றதோவெனநக்கனன்யானிருவேள்விமுற்றி...... ...*
மற்றுலகளிப்பெனென்றுமாதவர்தம்மைக்கூவச் ... .*
சுற்றுறுமுனிவரியாருந்தொக்கனர்வசிட்டன்மைந்தர்......*
கற்றிலமரசன்வேள்விகனற்றுறைபுலையற்கீவான் ... ... *

(இ-ள்.) (இக்கௌசிகர்) இவ்வளவினதோ என்று சிரித்து நான்பெருமையாகிய யாகத்தைமுடித்துமறுமை உலகத்தைக்கொடுப்பேன் என்றுசொல்லி (அவ்வேள்விப்பொருட்டு) முநிவர்களை அழையாநிற்க, சுற்றுமுள்ள முனிவர்கள் யாவரும்வந்துகூடினர் வசிட்டமுநிவருடைய புத்திரர்கள் (அதற்கிணங்காமல்) அரசனானவன் சண்டாளனுக்கு வேள்வியையும் அத்தீயின் விதிவகைகளையும் கொடுக்கநாங்களறிந்திலம்—எ-று. (௩௰௩)

அரசன்யாகத்தின் யசமானனாதலும் புலையன்வேள்வி கனற்றுறைக்குரியனாதலுந்தகுதியன்மை நோக்கிக்கற்றிலம் என்றார். உபசாரவழக்குப்பற்றிக்காரிய அறிவுகற்றிலமென காரணத்தின் மேலேற்றப் பட்டது. வேள்விகனற்றுறை இரண்டுமென்னுஞ் செவ்வெண்ணின் றொகையோடு முற்றும்மைவிகாரத்தாற்றொக்கது.

என்றுரைத்தியாங்களொல்லோமென்றனரென்னப்பொங்கிப். *
புன்றொழிற்கிராதராகிப்போகெனப்புகறலோடும் ... ...*
அன்றவரெயினராகியடவிகடோறுஞ்சென்றார் ... ... *
நின்றுவேள்வியைமுற்றிநிராசனர்வருகவென்றான்......*

(இ-ள்.) என்றுசொல்லி நாங்களியையோம் என்றனர் இவ்வாறு சொல்லக் கோபித்துப்புல்லியதொழிலைச்செய்யும் வனசரராகிப்போகக் கடவீரெ

ன்று சொன்னமாத்திரையில் அவ்வசிட்டபுத்திரர் சோதரராகிக் காடுகள்தோறும் உலாவினூர் தானின்று யாகத்தைமுடித்து வானவர்களே வருகவென்று அழைத்தான்—எ-று. (௱௰௪)

செய்மைத்தாகிய வானத்தி லுள்ளோரை விளித்த நீராசனமென்னும் அண்மைவிளி இம்முநிவர் தாம்பெற்றதவச்செருக்கை யுணர்த்தாநின்றது.

யாகவிதிகூறுமிடத் தவ்விருக்குக்கூறும் பிரகிருதங்களில் படர்க்கைப்பெயர்க்கு முன்னிலைப்பிரயோகமே யன்றியும் வேதத்திலேற்றபெற்றி அண்மைவிளியே அதிகமென்றுமுணர்க ஆகலின் கம்பநாட்டாழ்வாருக்கு மகாகவியென்கின்ற மாகாத்மியமேயன்றிவேதவேதியர்கள்முன்னிலையில் ஸ்ரீமத்ராமாயணத்தை ஆரிஷசம்பிரதாயத்தோடு முரணுதருளிச்செய்த தெய்வப்புலவரென்கின்ற மாகாத்மியமும்சம்பிரதாயவிளக்கத்திற்கூறுதாஉம்.

அரைசனுட்புலையற்கென்னேயனற்றுறைமுற்றியம்மை....*
விரசுகவல்லையென்பான்விழுமிதென்றிகழ்ந்துநக்கார் ... *
புரசைமாகளிற்றுவேந்தைப்போகநீதுறக்கமியானே... *
உரைசெய்தென்றவத்தினென்னவோங்கினன்விமானத்தும்பர் *

(இ-ள்.) (இவராதவவல்லமையால் அடைந்தவானவர்கள்) அரசனுனவன் என்ன இந்தச்சண்டாளனுக்குக்கனற்றுறைமுடித்து எங்களைவிரைந்து வருகவென்று அழைக்கின்றான் இதுசிறந்ததுஎன்றுஇகழ்ந்து நகைத்தனர் (அதைக்கண்டமுநிவன்) புரசையணிந்த பெரிய யானைச்சேனையையுடைய அரசனுகிய திரிசங்குவைநோக்கி யானேதவவல்லமையால்சொன்னேன் நீசுவர்க்கத்துக்குச்செல்லுகவென்று சொல்லஅத்திரிசங்கு விமானத்தின்மேலவ்வுயர்ந்தனன்—எ-று. (௱௰௫)

புரசை யானைக்கழுத்திடுகயிறு படைநான்கனுள்தேரும் களிறும் சிறந்தனவாகலின் வேந்துமுதலிய மொழிகளுக்குக் களிற்றுவேந்துநேர்வேந்து என இக்கவிசக்கிரவர்த்தி அடைகொடுத்துக்கூறுவர் ஆங்காங்குணர்க யானேயென்பதின் ஏகாரம் பிரிநிலை.

ஆங்கவன்றுறக்கமெய்தவமரர்கள்வெகுண்டுநீசன் ... ... *
ஈங்குவந்திடிவதென்னேயிருநிலத்திழிகவென்னத்.... ... ...*
தாங்கலில்கவிழ்வான்மற்றுத்தாபதசரணமென்ன ... ... *
ஓங்கினனின்னில்லென்னவுரைத்துநமொக்கநக்கான் ... ...*

(இ-ள்.) அவன் துறக்க நாட்டைஅடையாநிற்கத் தேவர்கள் கோபித்துப் புலையன் இங்கேவருதல் என்ன! பெரியபூமியில்இறங்குகவென்றுதள்ளத் தாங்குதலில்லாமல் குப்புறவீழ்பவன் தாபதனே அடைக்கலமென்றுசொல்ல (அதைக்கேட்டு இவர்) உயர்ந்துநின்று நில்நில்லென்றுசொல்லி இடிபோக்க நகைத்து—எ-று. (௱௰௬)

இல்லென்னும்பண்படி வினையெச்சக்குறிப்புப் பொருள்தந்துநின்றது நில்நில்லென்பது விரைவுபற்றிய அடுக்கு சரணென்பது இடவாகுபெயர்.

பேணலாதிகழ்ந்தவின்னோர்பெரும்பதமுதலாமற்றைச் ...*
சேண்முழுதமைப்பவென்றுச்செழுங்கதிர்கோளுடுங்களை...*
மாணொளிகெடாதுதெற்குவடக்கவாய்வருகவென்று ... ...*
தானுமேவநேர்வவெல்லாஞ்சமைக்குவெனென்னுமவேலை... *

(இ-ள்) எம்முடையசொல்லைப் பாதுகாவாமல் இகழ்ந்த தேவர்களுடையபெருமையாகிய பதவிகள்முதலாக மற்றவிண்ணுலகமுழுமையுஞ் சிருட்டிப்பேனென்று செழுமையுள்ள சூரியன், சந்திரன், மற்றக்கிரகங்கள் நட்சத்திரங்கள் மாட்சிமைதங்கிய ஒளிகெடாமல் தெற்கு வடதிசையனவாய் வருகவென்றும் உருத்திரனோடு ஊர்வனவாகிய எல்லாவுயிர்களையும் உண்டாக்குவேனென்றுங் கருதுங்காலத்தில்—எ-று. (௱௰௭)

கோள்களொன்பதனுள் சூரியனும் சந்திரனும் சிறந்தனராகலின் வேறெடுத்துக் கூறினார்.

நறைத்தருவுடையகோனு நான்முகக்கடவுடானுங் ... ... *
கறைத்தருகளனுமற்றைக்கடவுளர்பிறருந்தொக்குப்... ... *
பொறுத்தருண்முனிவநின்னைப்புகல்புகுந்தவனைப்போற்றும் *
அறத்திறனன்றுதாராகணத்தொடுமமைகவென்றான்... ... *

(இ-ள்.) தேன்பொருந்திய கற்பகத்தருவையுடைய அரசனும் நான்குமுகமுள்ளகடவுளும், கறைதோன்றுகின்றகண்டத்தானும், மற்றவானவருமுனிவர்களும், கூடி முனிவனே பொறுத்தருள் உன்பால் அடைக்கலம்புகுந்தவனைக்காக்கும் அறத்திறன் நன்மையுள்ளது அவன்விண்மீன் கூட்டத்தோடு சேர்க—எ-று. (௱௰௮)

புகல்-தொழிலாகுபெயர் தாராகணம் வடமொழிச்சந்திபெற்றது.

அரசமாதவனீயாதியைந்துநாட்டென்பால்வந்துன் ... ... *
புரைவிளக்கிடுகவென்றுக்கடவுளர்போயபின்னர் ... ... *
நிரைதவன்விரைவினேகி நெடுங்கடற்கிறைவன்வைகும்... ... *
உரவிடமதனைநண்ணியுறுதவமுஞற்றுங்காலை ... ... *

(இ-ள்.) (இந்திரன்முதலியஇறைவர்கள் இவ்விசுவாமித்திரனைநோக்கி) இன்றுதொட்டு அரசமுநிவன் நீ ஆவாய் உன்னால்படைக்கப்பட்ட ஐந்து நான் மீன்களும் தென்றிசைக்கண்வந்து உன்னிருப்பிடத்துக்கு ஒளியிடுகவென்றுசொல்லிப்போனபின் முறையாயுள்ள தவத்தையுடையோன் கடுகிச்சென்று நெடிய கடற்றலைவன்தங்கும் உறுதியாகிய இடத்தைச் சேர்ந்துமிக்கதவத்தை முயலுங்காலத்தில்—எ-று. (௱௰௯)

குடைதவரிசிலைவாட்டானைக்கோமகனம்பரீடன் ... . *
சுதைதருமொழியன்வையத்துயிர்க்குயிராயதோன்றல் ... *
வதைபுரிபுருடமேதம்வகுப்பவோர்மைந்தற்கொள்வான் ...*
சிதைவிலன்கனகத்தேர்கொண்டடவிகடுருவிச்சென்றான்... *

(இ-ள்) குடையையுடைய கட்டியவில்லும், வாளும், தாங்கியசேனையையுடைய அரசனும், அமுதத்தைப்போல நன்மைபயக்குமொழியையுடையவனும், உலகத்து உயிர்களுக்கு உயிராகிய தோன்றலுமாகிய அம்பரீஷன் கொலைசெய்கின்ற புருஷமேதத்தைச் செய்வதன்பொருட்டு ஓர் சிறுவனைக் கொள்ள ஊக்கமுடையவனாகிப் பொன்னைத்தேர்மேற்கொண்டு காடுகளைத் தேடிச்சென்றான்—எ-று. (௱௨௰)

குதை-வில்லம்புகளின் அடிக்கட்டு. தோன்றல். தன்புகழால் எங்குங்காணப்படுகின்ற அரசனுக்காதலில்-தொழிலாகுபெயர்,

நற்றவரிசிகன்வைகுந்நனைவரும்பபூவநண்ணிக் ... ... *
கொற்றவன்வினவலோடுமிசைந்தனர்குமரர்தம்முட்... ... *
பெற்றவனிளவலெற்கேயென்றனள்பிதாமுன்னென்றான் ... *
மற்றையமைந்தனக்குமல்னவன்றலேனநோக்கி... ... ... *

(இ-ள்) அரசனுனவன் நல்லதவத்தையுடைய இருசிகன் வாசஞ்செய்யும் அரும்புகள்மலர்கின்ற காட்டைச்சேர்ந்துகேட்டலோடும் இசைந்தவர்களாகித், தம்புத்திரர்களில் இளையவனைத்தா யெனக்கென்றாள், பிதாமூத்தவனை எனக்கென்றான், மற்றைப்புத்திரன் அவர்களைநோக்கி நகைத்து அரசனைப் பார்த்து—எ-று, (௬௨௧)

தவரிசிகனென வடமொழித்தொடர்பாய்நின்றது. அன்றிச் சிறுபான்மை ரகரமொழிக்குமுதலாதல் ரவிகுலதிலகனெனுஞ் சிந்தாமணிச் செய்யுளிலுங்காண்க.

கொடுத்தருள்வெறுக்கைவேண்டிற் றொற்கமாம்வீழுமங்குன்ற
எடுத்தெனைவளர்த்ததாதைக்கென்றவற்மொழுதுவேந்தன் ... *
தடுப்பருந்தேரினேறித்தடையிலாப்படர்தலோடுஞ்... ... *
சுடர்க்கதிர்க்கடவுள்வானத்துச்சியஞ்சூழல்புக்கான் ... ... *

(இ-ள்.) எந்தி என்னைவளர்த்ததந்தைக்கு வறுமையாகியதுன்பம் குறையவேண்டியதாகிய பொன்னைக் கொடுத்தருளென்றுசொல்லித் தந்தையை வணங்கி அரசனுடைய தடுத்தல்கூடாத தேரின்மேலறித் தடையில்லாமல் செல்லாநிற்க, ஒளியையுடைய சூரியன் ஆகாயத்தினுச்சியாகிய இடத்தில் பிரவேசித்தான்—எ-று. (௬௨௨)

அவ்வயினிழிந்துவேந்தனருங்கடன்முறையினூற்றச்... ... *
செவ்வியசூரிசிறுவனுஞ்சென்றனனியமஞ்செய்வான் ... ... *
அவ்வியமவித்தசிந்தைமுனிவனையாண்டுக்காணுக் ... ... *
கவ்வையிறேடும்பாதகமலமதுச்சிசேர்த்தான் ... ... *

(இ-ள்) அரசன் அவ்விடத்திறிந்து (அக்காலத்திற்செய்யவேண்டிய) அருமையாகிய நியமங்களை நான்முறைப்படிசெய்ய அழகியஅச்சிறுவனும் நியமத்தைச்செய்யச் சென்றனன்-அவ்விடத்தில் பொறாமைத்தீயை அவித்தசிந்தையையுடைய இக்கௌசிகமுநிவனைக்கண்டு கவலையோடு அவருடைய பாதகமலங்களைச் சென்னியில்சேர்த்துக்கொண்டான்-எ-று. (௬௨௩)

சூரிசில் தானுமென்பது இறந்தது தழீஇய எச்சவும்மை.

விறப்பொடுவணக்கஞ்செய்தவிடலையையினிதுநோக்கி ... *
சிறப்புடைமுனிவனென்னேதெருமரல்செப்புகென்ன ... *
அறப்பொருளுணர்ந்தோயென்றனன்னை நம்முன்னையென்னை
உறப்பொருள்கொண்டுவேந்தற்குதவினனென்றுனற்றேன். *

(இ-ள்,) தவச்சிறப்பையுடைய இக்கௌசிகமுநிவர் தம்மைத் தான்பணிந்து தொழுவணங்கிய அச்சிறுவனை இனிமையாகப்பார்த்து கலக்கமுறாது செச

ல்லுகவென்றுகேட்க, அங்குசேர்ந்தசிறுவன் அறநூலின்பொருள்களை அறி
ந்தவரோ, என்தாயாகிய உமக்குமூத்தாள் மிகப்பொருளைப் பெற்றுக்கொ
ண்டு அம்பரீடனுக்கு என்னைக்கொடுத்தனளென்று சொன்னான்—எ-று.()

மைத்துனனொடுமுன்னாள்வழங்கியமுறைமைகேளாத் ... ... *
தத்துறவொழிநீயானேதடுப்பனின்னுயிரையென்னாப் ... *
புத்திரர்தம்மைநோக்கிப்போகவேந்தொடுமென்ன... ... *
அத்தகுமுனிவன்கூறவவர்மறுத்தகறல்காணா ... ...*

(இ-ள்.) அந்தத்தகுதியையுடையமுநிவர் மைத்துனனிடத்தில் மூத்தாள்
செய்தமுறைமையைக்கேட்டு நீகலக்கத்தையொழி நானேஉன்னுயிரைப்போ
காமல் தடுப்பேன் என்றுசொல்லித்தம்புத்திரரைப்பார்த்துஅரசனோடுசெ
ல்லுவீராக என்றுகூற, அவர்களப்பணியைமறுத்து நீங்குதலைக்கண்டு.எ-று.

ஒடு-உருபு-இடப்பொருளின்கண்வந்தது.

எழுங்கதிரவனுநாணச்சிவந்தனனிருகணெஞ்சம் ... ... *
புழுங்கினன்வடவைதீயமயிர்ப்புறம்பொதியிற்றுள்ள... ... *
அழுங்கலில்சிந்தையீர்நீரடவிகடோறுஞ்சென்றே ... ... *
ஒழுங்கறுபுளிஞராகியுறுதுயருறுகவென்றான்... ... ...*

(இ-ள்) உதயமாகின்றசூரியனும் வெட்க, இரண்டுகண்களுஞ்சிவந்து நெ
ஞ்சம்புழுங்கி வடவையுந் தீய்ந்துபோக மயிர்நிறைந்த உடலின்மேற்புற
ந்தீப்பொறிகளால் துள்ள வருந்துதலில்லாத சிந்தையையுடையவர்களே நீ
ங்கள் நேர்மையில்லாத எயினர்களாகிக் காடுகள்தோறும்போய் மிக்கதுன்
பத்தை அடையக்கடவீர்களென்றான்—எ-று. (௱௨௬)

ஒழுங்கு- முதனிலைதிரிந்த தொழிற்பெயர். வடவையுமென உயர்வுசிறப்பும்மை விகார
த்தாற்றொக்கது.

மாமுனிவெகுளிதன்னான்மடிகலாமைந்தர்நால்வர்... ... ...*
தாமுறுசவரராகச்சபித்தெதிர்சலித்தசிந்தை ... ... *
ஏமுறவொழிகவின்னேபெறுகெனவிரண்டுவிஞ்சை ... *
கோமகனுக்குநல்கிப்பின்னருங்குணிக்கலுற்றான். ... *

(இ-ள்) பெருமைபொருந்தியவசிட்டமுநிவரது சினத்தால்இறக்காத த
ம்புத்திரர் நால்வரும், மிக்கவெயினர்களாகச்சபித்துவிட்டு எதிரிலுள்ள (சிறு
வனைநோக்கி) நடுங்கியமனம் துன்புறுதலைநீங்குக இப்போதே இரண்டும
ந்திரங்களைப்பெற்றுக்கொள்களென்று சிறந்த அம்மைத்துனனுக்குஓதி மே
லுந்நிருணயித்து—எ-று. (௱௨௭)

நால்வரென்னும் இனைத்தென்று அறிபொருளின்கண் வரற்பாலமுற்றும்மைவிகாரத்
தாற்றொக்கது ஏமுறலஏமமுறலெனற்பாலதுகாமுறலென்பதுபோலக்கடைக்குறையாயது.

அரசனொடேகியூபத்தணைக்குமிம்மறையையயர்தி ... ...*
விரசுவர்விண்ணுளோருமவிரிஞ்சனும்விடைவலோனும் ... *
உரைசெறிவேள்விமுற்றுமுன்னதுயிர்க்கிறண்டாகாப் ... [ன்
பிரசமென்றுரோயென்னப்பழிச்சொடும்பெயர்த்துபோனா

(இ-ள்.) தேன்பொருந்திய மென்மையாகிய மலராற்சமைத்த மாலையையுடையானே, நீ அரசனோடுஞ்சென்று வேள்வித்தறியைச்சேர்ந்து இம்மந்திரங்களை ஆராய்(அப்பொழுது)தேவர்களும் பிரமனுஞ்சிவனும்வந்துசேர்வர் கீர்த்தியிருந்தவேள்வியும் முற்றுப்பெறும் உனதுஉயிர்க்குமிடியுண்டாகாதென்றுசொல்ல அச்சிறுவன் துதித்துக்கொண்டே நீங்கிப்போனான்- ()

வேள்வியும் என்னும் இறந்தது தழீஇயஎச்சவும்மை விகாரத்தாற்றொக்கது, ஒடுஉருபு பயிற்சு என்னும் முதனிலைத்தொழிற்பெயர்ப் பொருளைப்பெயர்ந்தென்னும் வினைக்கு அடைமொழிப்பொருளாக வேற்றுமைசெய்தது,

மறைமுனியுரைத்தவண்மகத்துறைமைந்தனைச் ... ... *
சிறையுறுகலுழனன்னஞ்சேமுதற்பிறவுமூரும் ... ...*
இறைவர்தொக்கமரர்சூழவிளவலன்னுயிரும்வேந்தன் ... ...*
முறைதருமகமுங்காத்தார்வடதிசைமுனியுஞ்சென்றான்.....*

(இ-ள்) அச்சிறுவன் கௌசிகமுநிவர் கூறியவாறே வேள்வித்துறையின் மந்திரத்தை ஆராய, சிறைவள்ப்பத்தையுடைய கருடனும், அன்னமும், இடபமுமுதலிய பிறவற்றையும், ஊருகின்ற இறைவர்கள், தேவர்கள் சூழும்படி சேர்ந்து அச்சிறுவனுடைய உயிரையும், அரசன் வேதமுறைப்படி செய்த யாகத்தையும் காத்தார்கள்- வடதிசைக்கண் கௌசிகமுநிவருஞ் சென்றார்.()

வடாதிசைமுனியநண்ணிமலர்க்கரநாபிவைத்தாங் ... ... *
கிடாவுபிங்கலையாலையவிதயத்தோரெழுத்தொன்றெண்ணி . .*
விடாதுபல்பருவநிற்பமூலமாமுகடுவிண்டு ... ...*
தடாதிருட்படலமுட்கவித்ததெத்தலமுந்தாவி... ... ..*

(இ-ள்.) இக்கௌசிகமுநிவரும் வடதிசையைச்சேர்ந்து தாமரைமலர்போன்றகரத்தை நாபியின்மீதுவைத்து இடதுகலை பிங்கலையினால் அடக்க இதயத்தில்மூலமாகிய ஒற்றைஎழுத்தைத் தியானித்து அந்நிலையைவிடாமல் பலநாள்நிற்கப் பெருமைதங்கிய மூலமுகடுவிரிந்து தடுக்கப்படாமல் இருட்பிழம்பு தாவிப்போர்த்தலினால், புவனங்கள்யாவுந்நடுங்கியன-எ-று.()

வடாதிசை என்பது-எதுகைநோக்கி நீட்டியது. அன்றிவடாது என்னும் வினைக்குறிப்புப்பெயரின்முன்தொக்கதெனினுமமையும். வடாதிசைமுநியும் நண்ணி என அநுவதித்தார், இத்திசையொன்றுமே தாங்கருதியதவப்பேறு பெறுதற்கிடனாய்நிற்றலின்.

இடாவென்னும் வடமொழி சந்திக்கலாவெண்மதி தயாவினொடு தண்ணளி யென்பனபோல ஐகாரமாகத்திரியாது வந்தது உ-சாரியை.

வேறு.

எயிலெரித்தவன்யானையுரித்தநாள் ... ... *
பயிலுறுத்துரிபோர்த்தநன்பண்பெனப் ... *
புயல்விரித்தெழுந்தாலெனப்பூதலந் ... ... *
குயிலுறுத்திக்கொழும்புகைவிம்மவே ... ... *

(இ-ள்) திரிபுரத்தைஎரித்தவன் யானையையுரித்தநாளில் பழுதலைப்பொருந்துவித்து அச்சருமத்தைப்போர்த்த நல்லதன்மையைப்போலவும், மேகங்கள்விரிந்து எழுந்தாற்போலவும், அத்தமிகுந்தபுகை, உலகத்திலழுந்

தி அதிகரிக்க—எ-று. (௱௯௧)

விரிந்தென்பது விரித்தெனவலித்தது.குயிலல்-தொளைத்தல்.

தமந்திரண்டுலகியாவையுந்தாவுற ... ... *
நிமிர்ந்துவெங்கதிர்க்கற்றையநீங்குறக்... ... ...*
சுமந்தமாதிரக்காவலர்கண்ணொடுஞ் ... ... *
சுமந்தநாகமுங்கண்கட்புளித்தவே... ... ... *

(இ-ள்.) இவ்வாறுபுகையானதுதிரண்டு உலகங்களெல்லாவற்றிலும்தாவுத லினாலே,உயர்ந்தவெம்மையாகிய வெயிற்றொகுதியுந்நீங்க, நிறைந்ததிக்கு ப்பாலகருடைய கண்களோடு அத்திக்குகளைச்சுமந்தயானைகளின்கண்களும் பார்வையருகியன—எ-று. (௱௯௨)

திரிவதிற்படுசெகதலத்தியாவையும் ... ...*
வெருவலுற்றனவெங்கதிர்மீண்டன... ... ... *
கருவியுற்றககனமெலாம்புகை... ... ... *
உருவியுற்றிடவும்பர்துளங்கினர்... ... ... *

(இ-ள்.) துணைக்காரணமாகிய மேகம்நிறைந்த ஆகாயமுழுமையும் உருவிச்செல்லுதலினால் உலகத்திலுள்ள,சராசரங்களெல்லாமும்பயந்தன, வெங்கதிர்கள்மீண்டன,தேவர்கள் நடுங்கினார்கள்—எ-று (௱௯௩)

கருவி-என்பது-ஈண்டுமேகத்தையுணர்த்திற்று உலகத்துக்குத்துணைக்காரணமாதலின்

புண்டரீகனும்புட்டிருப்பாகனுங் ... ...*
குண்டையூர்திகுலிசியுமற்றுள... ... ... *
அண்டர்தாமும்வந்தவ்வயினெய்திவே ... ... *
றெண்டபோதனன்றன்னையெதிர்ந்தனர்... ... *

(இ-ள்.) பிரமனும், கருடனுக்குச்சிறந்தபாகனும், ரிஷபத்தைஏறுவோனும்,வச்சிராயுதத்தையுடையோனும்,மற்றவானவர்களும், அவ்விடத்தில்வந்துசேர்ந்து முநிவர்தொகுதியில் விசேடமாக எண்ணுகின்றமுநிவனைச்சந்தித்தார்கள்-எ-று. (௱௯௪)

பாதிமாமதிசூடியும்பைந்துழாய்ச் ... ... *
சோதியோனுமத்தூய்மலராளியும் ... ... *
வேதபாரகர்வேறிலர்நீயலான்... ... ... *
மாதபோதனவென்னவழங்கினர் ... ... *

(இ-ள்.) பெருமையாகிய பாதிமதியைச்சூடினவனும்பசியதுளபத்தை அணிந்த பரஞ்சுடரவனும் அந்தப்பரிசுத்தமுள்ள தாமரைமலரை உறைவிடமாக ஆளுவோனும் மகத்தாகிய தபோதனனே நீயல்லாமல் முநிவர்வேறே இலர் என்று இப்பெருமையைவழங்கினார்கள்—எ-று. (௱௯௫)

அன்னவாசகங்கேட்டுணரந்தணன்... ... ...*
சென்னிதாழ்த்திருசெங்கைமலர்குவித்... ... ...*
துன்னுநல்வினையிற்றதென்றேங்கினன்... ... *
றுன்னுதேவர்தஞ்சூழலுட்போயினர் ... ... *

(இ-ள்.) அந்தச்சொற்களைக் கேட்டபிந்தமுநிவர் தலையைவணங்கி இரண்டுகரங்களையுங்குவித்துத் தாங்கருதிய நல்வினைப்பயன் கிடைத்ததென்றுகளிப்பிலுயர்ந்தார் பின் அங்குவந்ததேவர்கள் தத்தம் இடத்துக்குச்சென்றனர்-எ-று. (௱௬௪)

ஈதுமுன்னர்நிகழ்ந்ததிவன்றனை ... ...*
மாதவத்துயர்மாண்புடையாரிலை ... ... *
நீதிவித்தகன்றன்னருணேர்ந்தனீர் ... ... *
யாதுமக்கரிதென்றனனீறிலான் ... ...*

(இ-ள்.) இச்செய்திமுன்னடந்தது இவர்மட்டிலே பெருமையாகியதவத்தினாலே உயர்ந்த பெருங்குணத்தையுடையாரில்லை, நீதியுள்ள மெய்ஞ்ஞானத்தையுடைய இவரது அருளைப்பெற்றீர்கள் எதுஉமக்கு அருமையையுடையதுஎன்றான், முடிவில்லாத ஆநந்தத்தையுடைய சதாநந்தன்-எ-று. ()

நீதிவித்தகன்-சுட்டுப்பொருட்கண்வந்தது.

என்றுகோதமன்காதலன்கூறிட ... ...*
வென்றிவீரர்வியப்பொடுவந்தெழா ... ... *
ஒன்றுமாதவன்றொழுதோங்கிய ... ...*
பின்றையேத்திப்பெயர்ந்தனன்றன்னிடம் ... *

(இ-ள்.) கௌதமருடையபுத்திரன், என்று இவ்வாறுசொல்லவெற்றியையுடைய சக்கரவர்த்தித்திருமகனும், இளையபெருமாளும், அதிசயத்தோடுகளித்தெழுந்துபெருந்தவத்தைப்பொருந்தினோனுடையபாதங்களைவணங்கி, நின்றபின், சதாநந்தமுநிவன் இவர்களைத்துதித்துத் தன்னிடஞ்சேர்ந்தனன்.

அருங்கேடன், கொடிச்சேவலோய், என்பனபோல அன்விகுதியை ஒன்றென்பதனோடு புணர்க்க.

முனியுந்தம்பியுமொய்ம்முறையாற்றமக் ... ...*
இனியபள்ளிகளெய்தியபின்னிருட் ... ... *
கனியும்போல்பவன்கங்குலுந்திங்களுந் ... ... *
தனியுந்தானுமத்தையலுமாயினான்... ... ...*

(இ-ள்.) விசுவாமித்திரரும், தம்பியும், முறைமையால் தமக்குநெருங்கிய இனியபள்ளிஅறைகளைச்சேர்ந்தபின் இருட்பழத்தையும் ஒப்பவனாகியஸ்ரீராமபிரான் இராவும்சந்திரனும் தன்தனிமையும் அச்சானகிபிராட்டியும் ஆனான்-எ-று. (௱௬௫)

கனியும் போல்பவனென்னும் உம்மை கடல் -மழை -இன்னவற்றையும் போல்வானெனப் பொருடரவின் ஆக்கவும்மை. தானுந்தேரும் பாகனும்வந்தென் னலனுண்டான் என்பதுபோலத் திணைவிரவித் தலைமைபற்றி ஒருமைமுடிபெற்றது. இவ்வாறு கூறலால்தான்பிராட்டிபக்கல் அடைந்தவிரகத்தால் வேறுதுணையின்றி இராவாலும், திங்களாலும் சானகியினுருவெளித் தோற்றத்தாலும்-வருந்தினனென்பது கருத்து.

விண்ணிலீங்கியபின்னுருவிம்முறை ... ...*
பெண்ணினன்னலம்பெற்றதன்மேனியோ ...*
எண்ணினீதலென்றறியேனினி ... ... *
கண்ணினூன் [illegible] ... *

(இ-ள்.) (தன்னிருக்கையாகிய) மேகத்தினின்றும் நீங்கிய மின்னலுருவமானது இவ்வாறு பெண்ணினது நல்லஇலக்கணங்களை அடைந்ததுண்டோ. ஆராயுமிடத்து இத்தன்மையதல்லதென்று அறியேன் (அவ்வுருவத்தைப்புறத்தில்) இரண்டுகண்களிலும் அகத்தில் எண்ணத்திலுள்ளுங்காணு நின்றேன்-எ-று. (௯சய)

காண்பெனென்பதில் எதிர்காலவிடைநிலை விண்மீதிருப்பாய் மண்மீதுழல்வாய் விரகுவார்முநிவர் விண்ணவரியக்கர் விஞ்சையர்முதலினோருரைசெய்வார் என்பனபோலத் தொழிலிடையறுத் தன்மையையுணர்த்திற்று.

கொல்-ஓ-என்பன அசைநிலை இதனைவடநூலார் வாக்கியாலங்காரமென்பர்,

வள்ளற்சேக்கைக்கரியவன்வைகுறும் ... ... *
வெள்ளப்பாற்கடல்போன்மிளிர்கண்ணினாள்......*
அள்ளற்பூமகளாகுங்கொலோவென ... ... *
துள்ளத்தாமரையுள்ளுறைகின்றதே ... ...*

(இ-ள்.) வெள்ளரவப்பள்ளியில் கரிய திருமேனியையுடைய இறைவன் தங்கும்வெள்ளமாகிய பாற்கடலைப்போலப் பிரகாசியாநின்றகண்ணையுடையாள்என்னுடைய உள்ளமென்னுந் தாமரைமலரில்வந்திருத்தலால் சேற்றில்விளைகின்ற தாமரைமலரில் எழுந்தருளிய திருமகளோ-எ-று. (௯சக)

வள்ளலென்பது பண்பையுணர்த்திநின்றது. வள்ளற்பெரும்பசுக்கள் என்னும்பாசுரத்தின்வியாக்கியானத்தாலுமுணர்க கொல் என்பது ஐயப்பொருட்டு ஓ ஈற்றசை.

அருளிலாளெனினும்மனத்தாசையால் ... ...*
வெருளுநோய்விடக்கண்ணின்விழுங்கலாற் ... *
றெருளிலாவுலகிற்சென்றுநின்றுவாழ் ... ... *
பொருளெலாமவள்பொன்னுருவாயவே... ...*

(இ-ள்.) என்பால் கருணையில்லாளாயினும் நான் அவள்பாற்கொண்டமனத்தாசையினாலும் அஞ்சுகின்ற நோயைத்தரும் விடம்போன்ற நேத்திரங்களினால் என்னைஅவள் விழுங்கலாலும் உண்மையறிவில்லாத உலகத்திற்றிரிந்தும் நின்றும் வாழ்கின்ற எல்லாப்பொருள்களும் அவளுடைய அழகிய உருவாயின-எ-று. (௯சஉ)

அஞ்ஞானத்தையே பெருக்குதலின் தெருளிலாவுலகென்றார் இவ்வாறு சடகோபரும் இருடருமா ஞாலமென்றருளிச்செய்தனர்.

பூணுலாவியபொற்கலசங்களென் ... ...*
ஏணிலாகத்தெழுதலவெனினும் ... ...*
வாணிலாமுறுவற்கனிவாய்மதி... ... ...*
காணலாவதோர்காலமுண்டாங்கொலோ ... ... *

(இ-ள்.) பூண்கள்அமைந்த பொன்னுலியற்றிய கலசங்கள்போன்ற கொங்கைகள் என்னுடைய பெருமையில்லாத மார்பின்கண் தடவுதலில்லனவாயினும் (ஆகுக) ஒளிநிலாவிய முறுவலமைந்தகனிபோன்ற வாயையுடைய முகமாகிய மதியைக்காணக்கூடியதாகிய ஓர்காலமும் இனிஉண்டாகுமோ.

காலமென்பதன்கண் உம்மைதொக்கது,

வண்ணமேகலைத்தேரொன்றுவாணெடுங்... ...*
கண்ணிரண்டுகதிர்முலைதாமிரண் ... ... *
டுண்ணிவர்தறலையமுண்டாமெனின்... ... *
எண்ணுறுங்கூற்றினுக்கித்தனைவேண்டுமோ... ...*

(இ-ள்.) (யான்கண்டவிவ்வுருவமாகியமதிக்கின்றகூற்றுக்கு) அழகியபலமணிகள்கோத்த எட்டுவடமாகியமேகலையணிந்ததேரொன்றும்(மாறிவைத்த) வாளையொத்த நெடுமையாகிய கண்களிரண்டும், கதித்தகொங்கைகளிரண்டும், இவற்றுக்குள்ளே உயர்ந்தமுறுவலும் உண்டாயிருக்குமாயின் (என்னொருவனைக்கொல்ல) இத்தனையும்வேண்டுமோ-எ-று. (ாசச)

எனவே ஒவ்வொன்றே உயிர்கோறற்கு அமையுமென்பதுகருத்து. துகிலின்மேலணியுமேகலைமுதலியவற்றின்வகைவருமாறு.

(நேரிசைவெண்பா.)

எண்கோவைமேகலை காஞ்சியிருகோவை
பண்கொள்கலாபமிருபத்தொன்று - கண்கொள்
பருமம்பதினாறு முப்பத்திரண்டு
விரிசிகையென்றுணரற்பாற்று.

இதுநச்சினார்க்கினியார் எடுத்துக்காட்டியசெய்யுள்
எழுகோவைகளாற்சூழ்ந்த வெழின்மணிமேகலையென்றுவேறுகூறுவாருமுளர்.

கன்னலின்கருப்புச்சிலையான்விரை ... ... *
பொன்னைமுன்னியபூங்கணைமாரியால் ... ... *
என்னையெய்துதொலைக்குமென்றாலினி ... ...*
வன்மையென்னுமதாரிடைவைகுமே ... ...*

(இ-ள்.) பொன்போன்ற கன்னியையான்கருத அதுகாரணமாகக்கன்னலாகிய கரும்புவில்லையுடைய மதன் மலரம்புமழையால் (யாவருக்குந்தோலாவலியையுடைய) என்னை எய்துவலியைத் தொலைப்பானாயின் இனித்திண்மையென்று சொல்லுவது (இருவருள்) யாரிடத்திலிருக்கின்றது-எ-று. ()

விரை-என்னும் வினையடிமாண்புனை வரிப்புனைபந்து என்றாற்போலவினையெச்சப்பொருடந்தது முன்னியவென்னும் வினையெச்சம் காரணப் பொருட்டாநின்றது. யாவருக்குந்தோலாவலியையுடையேன் என்பதுஎன்னை யெய்து என்னுஞ் சொல்லாற்றலாற் போந்தபொருள்.

கொள்ளைகொள்ளக்கொதித்தெழும்பாற்கடல்... *
பள்ளவெள்ளமெனப்படருந்நிலா ... ...*
உள்ளவுள்ளவுயிரைத்துருவிட... ... ... *
வெள்ளைவண்ணவிடமுமுண்டாங்கொலோ... *

(இ-ள்)(என்னுயிரைக்)கொள்ளைகொள்ளும்படிகோபித்துஎழுகின்றபாற்கடலாகிய பள்ளத்தின்பெருக்கைப்போலப்பரவுகின்றநிலாவானது (அக்கன்னியை)நானினைக்குந்தோறும் என்னுயிரைக்கொள்ளத் தேடுகின்றதால்வெள்ளைநிறத்தையுடைய விஷமும் (அக்கடலினிடத்தே)உண்டோ. ()

எழும்-படரும்-என்னும் பெயரெஞ்சுகிளவிகள் நிலாவென்னுந்தம்மெச்சங்கொண்டன கொள்ளைஎன்பதின் ஐகாரவிகுதி செயப்படுபொருட்டு உள்ளஉள்ள வென்னும்அடுக்குமிகுதிப்பொருளின்கண்வந்தது.

ஏகுநல்வழியல்வழியென்மனம் ... ... *
ஆகுமோவதற்காகியகாரணம்... ... ... *
பாகுபோன்மொழிப்பைந்தொடிகன்னியே ... *
ஆகும்வேறிதற்கையுறவில்லையே ... ... *

(இ-ள்.) (நல்லொழுக்கத்தையுடைய) என்மனமானது நன்னெறியில் செல்லாநிற்கும் தீயவழியில் இசையுமோ இசையாது (அங்ஙனமாக) அம்மாதினிடத்தில்செல்லுதற்கு உளதாகியகாரணஞ்சருக்கரைப்பாகுபோன்றமொழியையும் பசும்பொன்னாற்செய்த கைவளையையுமுடையாள் கன்னியே ஆகும் இதற்குவேறே ஐயப்பாட்டில்லை-எ-று. (௱௪௭)

கழிந்தகங்குலரசன்கதிர்க்குடை ... ... *
விழுந்ததென்னவுமேற்றிசையாள்சுடர்க்... ... *
கொழுந்துசேர்நுதற்கோதறுசுட்டிபோய் ... *
அழிந்ததென்னவுமாழ்ந்ததுதிங்களே ... ... *

(இ-ள்-) நாள்முடிந்த இராவாகிய அரசனது கிரணங்களையுடைய வெற்றிக்குடை விழுந்தாற்போலவும்(தன்னாயகனாகியசெங்கதிரோன் கீழ்த்திசையாளை மணக்கின்றானென்னுங்காரணத்தால்வெறுத்த) மேற்றிசைப்பெண்ணினது ஒளிக்கொழுந்து சேர்ந்தநுதலில் அணிந்த சுட்டியானது போயழிந்தாற்போலவும், சந்திரன் மேற்றிசைக்கடலில் அழுந்தியது-எ-று. ()

கங்குலரசன்-மேற்றிசையாள் வருஞ்செய்யுளில் ஈசனாமதிஆசைமாதர் என அஃறிணைப்பொருளைப்பெயர்களாலும் விகுதியாலும் உயர்திணையாக்கினர் இவ்வாறே திருவிருத்தத்தில் வேனிலஞ்செல்வன் சுவைத்துமிழ்பாலை எனவும் சிலப்பதிகாரத்தில் திங்களஞ் செல்வன் யாண்டுளன்கொல்லோ இன்னிளவெனில் வந்தனனாகப்பால்பிறைப்பிள்ளை யொக்கலைக்கொண்டுமேல்பாற்றிசைப்பெண் புலம்புறுமாலை எனப்பெயராலும் வினையாலுமுயர்திணையாக்கக் கூறுதலுங்காண்க.

வீசுகின்றநிலாச்சுடர்வீழ்ந்ததால் ... ... *
ஈசனாமதியேகலுஞ்சோகத்தால்... ... ... *
பூசும்வெண்கலவைப்புனைசாந்தினை ... ... *
ஆசைமாதரழித்தனரொன்னவே... ... ... *

(இ-ள்.) கணவனாகியசந்திரன் பிரிந்துபோகலும்(அப்பிரிவின்) சோகத்தால திசைகளாகிய மனைவியர்கள் தமதுநாயகன்முன்னர்ப்பூசிய அலங்காரத்திற்குரியவெண்மையாகிய சந்தனத்தை அழித்தனர்போல எங்கும்வீசுகின்ற நிலாக்கிரணங்கள் அழிந்தன-எ-று. (௱௪௯)

வேறு.

ததையுமலர்த்தாரண்ணலிவ்வண்ணமயலுழந்துதளருமெல்லைச் ... *
சிதையுமனத்திடருடைய செங்கமலமுகமலரச்செய்ய வெய்யோன் ... *
புதையிருளினெழுகின்றபுகர்முகயானையினுரிவைப்போர்வைபோர்த்த *
உதயகிரியெனுங்கடவுணுதல்கிழித்தவிழியேபோலுதயஞ்செய்தான் ... *

(இ-ள்.) நெருங்கிய மலர்மாலையையணிந்த உயர்ந்தோன் இவ்வாறு விரகத்தால்மறுகி தளர்கின்றசமயத்தில் (பிரிவினால்) சிதைந்தமனத்தில் துன்பத்

லைதயுடைய செந்தாமரைகள் மலராகிய முகங்கள்மலர, சிவந்தசூரியன் அழுந்திய இருளாகிய உலாவுகின்ற புள்ளிஅமைந்தமுகத்தையுடைய யானையினது சருமமாகிய போர்வையைப்போர்த்த உதயகிரியென்கின்ற சிவனது நெற்றியைக் கிழித்தநேத்திரம்போல உதித்தான்-எ-று. (௱௫௰)

விசையாடற்பசும்புரவிக்குரமிதிப்பவுதயகிரிவிரிந்ததூளி ... . *
பசைபாகமறையவர்கைநறைமலருநிறைபுனலும்பாந்தபாய ... ...*
அசையாதநெடுவரையின் முகடுதொறுமிளங்கதிர்சென்றணைந்துவேய்ம்போ
திசையாளுமதகிரியைச்சிந்தூரமப்பியபோற்சிவந்தமாதோ ... ... [ன்

(இ-ள்.) வேகத்தையும்வெற்றியையுமுடையபச்சைநிறமுள்ள குதிரைகள் குளம்புகளினால் மிதித்தலினாலே உதயகிரியில் (உண்டாகி)பரந்ததூள்கள் நனையும்படி அந்தணர்களதுகையால் தூவுகின்ற தேன்பொருந்திய மலரும்,நிறைந்தநீரும்,பரவிப்பாயாநிற்க அசைதலில்லாதநெடியமலைகளின் சிகரங்கள்தோறும் இளங்கதிர்கள்போய்ப்படிய,(அம்முகடுகள்) சூரியன்திக்குகளை ஆளுகின்ற மதயானைகளுக்கு சிந்தூரத்தை அப்பியன போலச்சிவந்தன-எ-று. (௱௫௧)

பண்டுவருங்குறிபகர்ந்துபாசறையிற்பொருள்வயினீற்பரிந்துபோன ...*
வண்டுதொடர்தறுந்தெரியலுயிரனையகொழுநர்வரமணித்தேரோடும் ...*
கண்டுமனங்களிசிறப்பவொளிசிறந்துமெலிவகலுங்கற்பினார்போற் .... *
புண்டரிகமுகமலரவகமலர்ந்துபொலிந்தனபூம்பொய்கையெல்லாம் ...*

(இ-ள்.) பிரிதற்குமுன்னமே குறித்தகாலத்தைச்சொல்லிப் பாசறையினிடத்தும்பொருளினிடத்தும்விரும்பிச்சென்றவண்டுகள் தேனுண்ணத்தொடர்கின்ற நலமாகிய மாலையணிந்த தம்முயிரையொத்த நாயகர் தேர்க்கண்ணேவர,அதைக்கண்டு மனங்களிப்புமிக, அழிந்த மாமைநிறமிகுந்து வருத்தநீங்கிய கற்புடையமாதர்போலப் பொலிவுள்ள தடாகங்களெல்லாம்தாமரைமலராகிய முகங்கள் மலர உள்ளேகளித்து விளங்கின-எ-று. (௱௫௨)

ஒடுவுருபு-ஏழாவதன்கண்வந்தது.

எண்ணரியமறையினொடுகின்னரர்களிசைபாடவுலகமேத்த... ... ... *
விண்ணவருமுனிவர்களும்வேதியருங்கரங்குவிப்பவேலையென்னு ... *
மண்ணுமணிமுழவதிரவானரங்கினடம்புரிவாளிரவியான ... ... *
கண்ணுதல்வானவன்கனகச்சடைவிரிந்தாலென விரிந்தகதிர்களெல்லாம் ..*

(இ-ள்.) அளவிடலரிய வேதங்களினால்கின்னரர்கள் இசைபாடவும்,உயர்ந்தோர்துதிக்கவும்,தேவர்களும் முநிவர்களும் கைகூப்பவும், சமுத்திரமென்னு மார்ச்சனையமைந்த அழகியமுழவம் ஒலிக்கவும் ஆகாயமாகிய சபையில் நர்த்தனஞ்செய்கின்ற ஒளிபொருந்திய சூரியனாகிய நெற்றிக்கண்ணையுடைய கடவுளினது பொன்னிறமாகிய சடைகள் விரிந்தாற்போல விரிந்தன கிரணங்களெல்லாம்-எ-று. (௱௫௩)

ஒடு உருபு கருவிப்பொருட்டு.

கொல்லாழிநீத்தங்கோர்குனிவயிரச்சிலைதடக்கைகொண்டல்... *
எல்லாழித்தேரிரவியிளங்கரத்தாலடிவருடியனந்தநீர்ப்ப ... ...*
அல்லாழிக்கரைகண்டானுயிரவாய்மணிவிளக்கமழலுஞ்சேக்கைத் ... ...*
தொல்லாழித்துயிலாதே துயராழிநெடுங்கடலுட்டுயில்கின்றானே... ....*

(இ-ள்.) (தன்னடியார்பக்கலில் தவறுசெய்வோர்களைக்) கொல்லுகின்ற சுதரிசனத்தைநீக்கி அவ்வயோத்தியில் ஒப்பற்ற வளைகின்ற திண்ணியகோதண்டத்தைப் பெருமையாகிய கையில்தாங்கிய மேகம்போன்றவனும் ஆயிரம்வாய்களையுடைய மாணிக்கத்தீபங்கள் எரிகின்ற அரவணையின்மேல் பழமையாகிய பாற்கடலில் துயிலாமல் துன்பமென்னும் ஆழ்ந்ததாகிய நெடியகடலில் உறங்குகின்றவனுமாகிய சக்கிரவர்த்தித்திருமகன் ஒளிபொருந்திய ஒற்றைவண்டிலையுடையதேரின்மேல் வருகின்றசூரியன் இளங்கிரணங்களினால் திருவடிகளைத்தடவி நித்திரையைநீக்க இராவாகிய சமுத்திரத்திற்குக்கரையைக்கண்டான்-எ-று. (ஈ௫௪)

துயிலாநின்ற உயர்ந்தோரை ஏனையோர் எழுப்பவேண்டின் பாதங்களை வருடவேண்டுமென்பது அறநூற்றுணிவாதலின் இரவிகரத்தால்அடிவருடி அனந்தநீர்ப்பவென்றார்.

ஊழிபெயர்ந்தெனக்கங்குலொருவண்ணம்புடைபெயரவுறக்கநீத்த ... *
சூழியானையினெழுந்துதொன்னியமத்துறைமுடித்துச்சுருதியன்ன... *
வாழிமாதவற்பணிந்துமனக்கினியதம்பியொடும்வம்பின்மாலை ... ...*
தாழுமாமணிமௌலித்தார்ச்சனகன்பெருவேள்விச்சாலைசார்ந்தான் *

(இ-ள்.) சீராமபிரான் ஊழிகாலஞ்சென்றாற்போல இராவானது ஒருவாறு தன்னிலையினின்றும் செல்லுதலால் நித்திரைநீங்கிய பட்டமணிந்த யானையைப்போல எழுந்து பழமையாகிய அநுட்டானவகைகளைமுடித்து வேதத்தையொத்த விசுவாமித்திர முநிவனைவணங்கி மனத்துக்கு இசைந்த தம்பியுடனே வாசனைபொருந்திய மாலைகள்தொங்குகின்ற பெரியமணிகளழுத்திய முடியையும், மாலையையும் அணிந்த சனகமகாராசனுடைய பெரியயாகசாலையை அடைந்தான்-எ-று. (ஈ௫௫)

வாழி- அசைச்சொல்.

முடிச்சனகர்பெருமானுமுறையாலேமறைவேள்விமுற்றிச்சுற்று ... *
மிடிக்குரலின்முரசியம்பவிந்திரன்போற்சந்திரன்றோய்கோயிலெய்தி..*
யெடுத்தமணிமண்டபத்துளெண்டவத்துமுனிவரொடுமிருந்தான்மைந்தா
வடித்தகுனிவரிசிலைக்கைமைந்தனுந்தம்பியுமருங்கிருப்பமாதோ ... [ர்

(இ-ள்.) முடியை அணிந்த சனகமரபினருக்கு அரசனும் விதியின்படி வேதத்திற்சொல்லிய யாகத்தைமுடித்துசுற்றிலும்இடியோசையையுடைய பேரிகள்ஒலிக்கச்சந்திரன்தவழ்கின்றதன்னிருப்பிடத்தில்இந்திரனைப்போலச்சேர்ந்து உயரக்கட்டிய இரத்தினமண்டபத்துப்பசுமையாகிய மாலையணிந்த குற்றமறச்செய்த வளைகின்ற கட்டமைந்த வில்லைத்தாங்கிய கரத்தையுடையசீராமபிரானும் இளையபெருமாளும் தன்பக்கலிலிருக்க மதிக்கின்ற தவத்தையுடைய முநிவர்களோடு இருந்தான்-எ-று. (ஈ௫௬)

முநிவரொடு மிருந்தானென்னும் ஒருவினைக்கிளவி யுருபுஉயர்பொருட்கண்வந்தது.

இருந்தகுலக்குமரர்தமையிருகண்ணின்முகத்தழகுபருகநோக்கி ... *
அருந்தவனையடிவணங்கியாரிவரையுரைத்திடுமினடிகளென்ன ... ...*
விருந்தினர்களின்னுடையவேள்விகாணியவந்தார்வில்லுங்காண்பார் ... *
பெருந்தகைமைத்தசரதன்றன்புதல்வரெனவவர்தகைமைபேசலுற்றான் *

(இ-ள்,) தன்பக்கலில்வீற்றிருந்த சிறந்தகாளையர்களை இரண்டுகண்களினா ல் முகத்தினழகை உண்ணும்படி நோக்கிப் பின்னர் அரிய தவத்தையுடைய கௌசிகமுநிவரது பாதங்களை வணங்கி எம்மடிகளே யாவர் இவர்களைச் சொல்லுமென்று கேட்க உனக்குவிருந்தினர்கள், உன்னுடையயாகத்தைக் காணும்பொருட்டுவந்தனர், திரியம்பகமென்னும் வில்வலியையுங்காண்பார், பெருங்குணத்தையுடைய தயரதனுக்குப்புத்திரர்களென்று அவ்விராமலட்சுமணருடைய பெருமையைப் பேசத்தொடங்கினான்-எ-று. (எஎ)

௰க-வது-மிதிலைகாட்சிப்படலம்-முற்றிற்று.

௰உ-வது- குலமுறைகிளத்துப்படலம்.

ஆதித்தன்குலமுதல்வன்மநுவினையாரறியாதார் ... ... *
பேதித்தவுயிரனைத்தும்பெரும்பசியால்வருந்தாமற்... ... *
சோதித்தன்வரிசிலையானிலமடந்தைமுலைசுரப்பச்... ... *
சாதித்தபெருந்தகையுமிவர்குலத்தோரதிகாண் ... ... *

(இ-ள்.) சூரியகுலத்து முதல்வனாகிய மநுச்சக்கிரவர்த்தியை அறியாதவர்கள்யாருளர் வகைப்பட்ட உயிர்கள்யாவும்மிக்கபசியால் வருந்தாமல்ஒளியையுடைய தனதுவரிந்த சிலைவலியால் பூமியாகிய பெண்ணணவள் முலை சுரக்கும்படி முயன்றபெருங்குணத்தையுடையானும் இவருடைய குலத்தரசன் -எ-று. பிருதுசக்கரவர்த்தி. (க)

பெருந்தகை-அன்மொழித்தொகை. காண்-முன்னிலைஅசைச்சொல்.

பிணியரங்கவினையகலப்பெருங்காலந்தவம்பேணி... ... *
மணியரங்கநெடுமுடியாய்மலரயனைவழிபட்டுப் ... ... *
பணியரங்கப்பெரும்பாயற்பரஞ்சுடரையாங்காண... ... *
அணியரங்கந்தந்தானையறியாதாரறியாதார்.... ... ...*

(இ-ள்.) நவமணிகளுக்கு இடமாகிய நெடியமுடியையணிந்த ஜனகமகாராசனே, நோய்கள் சிதையவும் அவற்றிற்குக்காரணமாகியவினைகள் ஒழியவும், பன்னாள்தவமுயன்று தாமரைமலரில் வதியும்பிரமனுக்கு வழிபாடுசெய்து (அவன்பாற்பெற்று) ஆதிசேடனாகிய பெரிய பாயலிடத்தையுடைய பரஞ்சோதியை யாம் கண்டுதரிசிக்க அழகியதிருவரங்கத்தை அளித்தவனை அறியாதவர்கள் அறியாதவர்களே-எ-று. இட்சுவாகுசக்கரவர்த்தி (உ)

தான்றனக்குவெலற்கரியதானவரைத்தலைதுமித்தென் ... ... *
வான்றசக்கிற்றிதிகொலென்றுகுறையிரப்பவரங்கொடுத்தாங்..*

கேன்றெடுத்தசிலையினனாயிகல்புரிந்தவிவர்குலத்தோர் ... *
தோன்றலைப்பண்டிந்திரன்காண்விடையேறாய்ச்சுமந்தானும்.

(இ-ள்) இந்திரன், தனக்கு வெல்லுதற்கரிய அசுரர்களது தலைகளைத்துணித்து எனது கற்பகநாட்டைத் தரக்கூடுமோவென்று குறையிரப்ப அவனுக்குவரங்கொடுத்து அதற்கிசைந்து தாங்கியசிலையையுடையவனாய் அவ்வசுரரோடு போர்புரிந்த இவர்களுடையமரபின் ஓரரசனை முன்னர் இந்திரனும் ரிஷபமாய்ச்சுமந்தான் அதை ஆராய்ந்துபார்-ககுத்தசக்கரவர்த்தி ()

தானும், என்பதின் உம்மையை இந்திரனென்னும்பெயரோடுகூட்டுக.

அரசனவன்பின்னோரையென்றனுமளப்பரிதால்... ... ...*
உரைகுறுகநிமிர்கீர்த்தியிவர்குலத்தோனொருவன்காண்... .*
நரைதிரைமூப்பிவைமாற்றியிந்திரனுநந்தாமல்... ... ... *
குரைகடலைநெடுவரையாற்கடைந்தமுதுகொடுத்தானும். ... *

(இ-ள்.) அவ்வரசனுக்குப் பின்வந்தவர்களை என்றனும் அளவிடுதல் அரிது, இந்திரனும் நரைதிரைமூப்புமாகிய இவைகளை ஒழித்துச் சாவாதவாறு ஒலிக்கின்ற பாற்கடலை நெடியமலையினால் கடைந்து அமுதுகொடுத்தவனும் சொல்சுருங்க மேற்செல்லுகின்ற கீர்த்தியையுடைய இவர்கள் குலத்தானாகிய ஓரரசன்காண்-எ-று. (௪)

கருதலரும்பெருங்குணத்தோரிவர்முதலோர்கணக்கிறந்தோர்.
திரிபுவனமுழுதாண்டுசுடர்நேமிசெலநின்றோர்...... ... *
பொருதுறைசேர்வேலினாய்புலிப்போத்தும்புல்வாயும் ... *
ஒருதுறையினீருண்ணவுலகாண்டோனுளனொருவன் ... .. *

(இ-ள்.) போர்செய்கின்ற வகையைச்சேர்ந்த வேலையுடைய -சனகமகாராசனே மூன்றுலகங்களையும் முழுமையும் ஆண்டு ஒளியையுடைய சக்கரம்செல்லும்படி நின்ற அரசர்கள் முதலாயினோர் உயர்ந்த குணத்தையுடையோராகிய இவ்வரசர் அளவிலார் (அவர்நிற்க) ஆண்புலியுமானும் நீர்நிலைகளினொருதுறையிலே நீரையுண்ண உலகத்தை ஆண்டவன் ஒருவனுண்டு.

புல்வாய்-அன்மொழித்தொகை.

மறைமன்னுமணிமுடியுமாரமும்வாளொடுமின்னப் ... ... *
பொறைமன்னும்வானவருந்தானவரும்பொருமொருநாள்...*
விறன்மன்னர்தொழுகழலாயிவர்குலத்தோன்விற்பிடித்த ...*
அறமென்னவொருதனியேதிரிந்தமராபதிகாத்தோன் ... *

(இ-ள்.) வெற்றியரசர்தொழுகின்ற பாதங்களையுடையவனே, சிற்பநூலிற்சொல்லிய இலக்கணமமைந்த இரத்தினமுடிகளும், மணிமாலைகளும், வாளாயுதங்களும், ஒளிசெய்யப் பொறுமையமைந்தசுரர்களும், அசுரர்களும், போர்செய்கின்ற ஒருநாள் இவர்குலத்து ஓரரசன் வில்லைத்தாங்கிய தருமக்கடவுளைப்போலத் தனியேதிரிந்து (அவ்வசுரர்களை ஒடுக்கி) விண்ணுலகத்தைக்காத்தான்-எ-று. (௫)

மறைஎன்பது-தபதியரல்லார்க்கு மறைக்கப்பட்டமையிற் சிற்பநூற்குக் காரணப்பெயர்ப் பகுபதமாயஃதுணர்த்திய இலக்கணத்துக் கீண்டாயினமையின் ஆகுபெயர்.

இன்னுயிர்க்கு மின்னுயிரா யிந்நிலங்காத்தாரென்றால் ... *
பொன்னுயிர்க் குழலவரையாம்போலும் புகழ்கிற்பாம் ... *
மின்னுயிர்க்கு நெடுவேலாயிவர்குலத்தோன் மென்புறவின் .. *
மன்னுயிர்க்குத் தன்னுயிரைமாறாக ஈந்தனனால் ... .. *

(இ-ள்) ஒளியைப்பெறுகின்ற நெடியவேலையுடையானே, அழகைத்தருகின்ற வீரக்கழலணிந்த சூரியகுலத்தாரை இனிய உயிர்களுக்கெல்லாம் இனிய உயிராகிப் பெரிய உலகத்தைக்காத்தாரென்று யாம்போய்ப்புகழ ஆற்றலுடையோம் இவர்குலத்திற்பிறந்த ஓரரசன் முன்னாள் புறாவினது நிலைபெற்ற உயிர்க்குத்தன்னுடைய உயிரைப்பிரதியாக ஈந்தான் -எ-று. சிபிச்சக்கரவர்த்தி.

ஆல்-அசைச்சொல்-போலுமென்னும் இடைச்சொல் இழிவுசிறப்பின்கண்வந்தது.

இடறோட்டவினைநெடியவரையுருட்டியிவ்வுலகத் ... ... *
திடறோட்டமெனக்கிடக்கும்வகையிரங்கித் தெவ்வேந்தர் ... *
உடறோட்டநெடுவேலாயிவர்குலத்தோருவரிநீர்க் .. .. *
கடறோட்டாரெனின்வேறோர்கட்டுரையும்வேண்டுமோ ... *

(இ-ள்.) பகையரசர்களுடைய உடலைத்தொலைத்தநெடியவேலையுடையானே இவர்கள்குலத்திற்பிறந்தோர் குதிரையின்பொருட்டு) மண்ணைப்பிளக்கி யிடறுகின்ற ஓட்டத்தின்தன்மையைப்போல நெடியமலைகளை உருட்டி இப்பூமியானது மேடாகியவோட்டமாகக் கிடக்கும்படி உப்புடையதாகிய நீரையுடைய கடலைத்தோண்டினார்கள் என்றால் வேறொருதுதிமொழியும் சொல்லவேண்டுமோ — எ-று. சகரர். (௫)

முதலடியிறோட்டம் தெங்கங்காயிறோடு அடுத்தவடியிறோட்டம் குளமுதலியவற்றைத் தோண்டுழியவ்வளவு தோன்றவைப்பதோர் மேட்டுக்குறி முதலடியொழிய வேனைமூன்றடியினுமுறையேயோட்டமுதலிய சொற்களின்முதலோகாரங்கணீட்டல்விகாரம்,

தூநிறசுடர்வேலோயனந்தனேசொல்லானேல் ... ... *
யானின்றுபுகழ்ந்தேத்தற்கெளிதேயோடவிழ்கொன்றைப் ... *
பூநின்றமவுலியையும்புக்களைந்தபுனற்கங்கை ... ... *
வானின்றுகொணர்ந்தானுமிவர்குலத்தோர்மன்னவன்காண் ... *

(இ-ள்.) பகைவரைக்கொன்றுதங்கிய வொளிபொருந்திய வேலையுடையானே (இவர்குலத்தோருடையபுகழை) சேடனேசொல்லிமுடியானாயின் (ஒருநாவையுடைய யான் (சொல்லுவேனென) நின்றுபுகழ்ந்தேத்துதற்கெளியதோ இதழ்கள்விரிகின்றகொன்றையினது மலர்மாலைதங்கிய சடைமுடியிடத்தும் புகுந்துகலந்த நீர்வளப்பத்தையுடைய கங்கையை அண்டகோளகைக்கப்புறத்தினின்று கொண்டுவந்தவனு மிவர்களுடைய குலத்திற் பிறந்தவோரரசன் -எ-று. பகீரதசக்கரவர்த்தி. (௬)

புகழ்ந்தேத்தல் ஒருபொருட்பன்மொழி-ஏகாரம் எதிர்மறைப்பொருட்டு.

சயற்கடல்சூழுலகெல்லாங்கைநெல்லிக்கனியாக்கி ... ... *
இயற்கைநெறிமுறையாலேயிற்றிறத்துமிடரியற்றி... ... [ஸ்

முயற்கறையின்மதிக்குடையா யிவர்குலத்தோன் முன்னொருவ
செயற்கரியபெருவேள்வியொருநூறுஞ்செய்தமைத்தான் [ன்

(இ-ள்.) முயலாகியகளங்கமில்லாத சந்திரனையொத்த குடையையுடையானே இவர்குலத்தோனாகிய வோரரசன் முன்னே கயல்மச்சங்களையுடைய கடல்சூழ்ந்தவுலகெல்லாமு முள்ளங்கை நெல்லிக்கனியைப்போலத் தன்னாணைக்குள்ளடக்கி வேதத்திற்சொல்லிய தருமத்தினெறியினது முறைமையினா லிந்திரனுக்கு மிடமாகச்செய்யப்பிறராலியற்றற்கரிய அச்சுவமேதம் நூறுஞ்செய்துமுடித்தான்—எ-று ககுடச்சக்கரவர்த்தி. (௰)

வேதம்-அபௌருடேயமாதலின் அதுசொல்லியநெறியை இயற்கைநெறியென்றார். இயற்றியென்வினைக்குறை காரியப்பொருட்டு.

சந்திரனைவென்றானுமுருத்திரனைச்சாய்த்தானுந் ... ... *
துந்துவெனுந்தானவனைச்சுடுசரத்தாற்றுணித்தானும் ... *
அந்தகுலத்திடைவந்தரகுவென்பானரிசிலையால் ... ... *
இந்திரனைவென்றுதிசையிருநான்குஞ்செருவென்றான் ... ...*

(இ-ள்.) சந்திரனைவென்றவனு முருத்திரனைப்போரிலேடச்செய்தவனுந் துந்துவென்கிற அசுரனை பலககாட்டைச் சுடுகின்றபாணத்தீயினாற்றுணடித்தவனும் பிறந்த விவர்கள்குலத்திற்றோன்றிய ரகுவென்பவன் ரிந்த சிலையினாலிந்திரனைவென்று எட்டுத்திக்கிலுள்ளவர்களையும் யுத்தத்திற்செயித்தான்—எ-று. (௰௧)

ரகுவென்ன வடமொழியிற் பிறந்தவாறே கூறினர். இவ்வாறு ராசமாபுரி ரவிகுலதிலகனைச் சிந்தாமணியாருங் கூறுதல்காண்க.

வில்லென்னுநெடுவரையால்வேந்தென்னுங்கடல்கலக்கி ... *
எல்லென்னுமணிமுறுவலிந்துமதியென்னுந்திருவை ... ... *
அல்லென்னுந்திருநிறத்தவரியென்னவயனென்பான் ... ... *
மல்லென்னுந்திரள்புயத்துக்கணியென்னவைத்தானே ... *

(இ-ள்) இவர்குலத்தயச்சக்கரவர்த்தியென்பவன் வில்லென்கின்றநெடிய மந்தரகிரியாற்பகைவேந்தரென்னுங்கடலைக்கடைந்தொளியென்னு முறுவலநகையையுடைய இந்துமதியென்னுந் திருமகளையிராவென்னுந்திருநிறத்தையுடைய திருமாலைப்போல மல்லயுத்தத்தி னுருவமென்னுந்திரண்ட புயத்தினிடத் தாபரணத்தைப்போலவைத்தான்—எ-று. (௰௨)

எல்-ஆகுபெயர்,

அயன்புதல்வன்றயாதனையறியாதாரில்லையவன் ... . *
பயந்தகுலக்குமாரிவர்தமக்குள்ளபரிசெல்லா .. .. *
நயந்துரைத்துக்கரையேறநான்முகற்குமரிதாம்ப .. ... *
வியந்துரைத்தகடைத்தலையாயானறிந்தபடிகேளாய் .. ... *

(இ-ள்.) பலவாத்தியங்களைமுழக்குகின்ற தலைவாயலையுடையானே அயச்சக்கரவர்த்தியினுடைய புத்திரனாகியதசரதசக்கரவர்த்தியையறியாதவர்கள் (ஒருவரு மில்லையவன்பெற்றசிறந்தகுமாரர்களாகிய விவர்கள்பாலுள்ள(அருந்தகலியாண,குணங்களாகியசலதியைவிரும்பிப் புகழ்ந்துகலாவேறப் பி

ரமனுக்குமருமையுடையதாகும் யானறிந்தபடிசொல்லக்கேள்-எ-று. (௰௩)

தமையுள்ளவெல்பது உருபுமயக்கம் துவைத்தவென்பது இயல்பிறந்தகாலம்பிறழ்ந்தது

துனிபின்றியுயிர்செலச்சுடராழிப்படைவெய்யோன் ... *
பனிவென்றபடியென்னப்பகைவென்றுபடிகாத்தோன் ... *
தனுவன்றித்துணையிலலான்றருமத்தின்கவசத்தான் ... ... *
மனுவென்றநீதியான்மகவின்றிவருந்துவான் .. .. *

(இ-ள்.) துன்பமில்லாமல் உயிர்கள்யாவும் இன்புற்றுவாழாநிற்கவொளியை யுடைய சக்கராயுதம்போன்ற சூரியன்பனியைவென்ற தன்மையைப் போல்பகைவர்களது படைகளையெல்லாம்வென்று பூமியைக்காப்பவனும் வில்லையல்லாமல் வேறுதுணைவேண்டாதவனும் அறமாகிய கவசத்தைப்பூண்டவனும் மனுவென்னுநீதியையுடையானுமாகிய அத்தசரதன் புத்திரரில்லாமல் வருந்துகின்றவனாகி-எ-று. (௰௪)

சிலைக்கோட்டுநுதற்குதலைச்செங்கனிவாய்க்கருநெடுங்கண் ... *
விலைக்கோட்டுப்பேரல்குன்மின்னுடங்குமிடையாரை ... *
முலைக்கோட்டுவிலங்கென்றுகுடனாகிமுன்னின்ற ... ... *
கலைக்கோட்டுப்பெயர்முனியாற்றுயர்நீங்கக்கருதினான் ... *

(இ-ள்.) வில்லினதுவளைவுபோல வளைந்த நெற்றியையும் குதலைச்சொல்லையுடைய சிவந்த கொவ்வைக்கனியையொத்தவாயையும் கருமையாகிய நெடியகண்களையும், விலையின்பொருட்டுச்செலுத்துகின்ற பெரியவல்குலையும் மின்னலைப்போலத்துவளுகின்ற இடையையுமுடைய வேசியர்களைத் தனங்களாகிய கொம்புகளையுடைய விலங்குகளென்று அத்தேயத்திலிட்டத் தேயவர்கொணர்ந்து (உரோமபதமகாராசனுக்கு) முன்னேநின்றகலைக் கோட்டையுடைய கீர்த்தியமைந்த முநிவரால் துன்பத்தைநீக்க நினைத்து()

சிலைக்கோட்டென்பது-விரித்தல்விகாரம்,

தார்காத்தநறுங்குஞ்சித்தனயர்களென்றவமின்மை ... ... *
வார்காத்தவனமுலையார்மணிவயிறுவாய்த்திலரால் ... ... *
நீர்காத்தகடல்காத்தநிலங்காத்தேனென்னிற்பின் ... ... *
பார்காத்தற்குரியார்கட்பணிநீயென்றடிபணிந்தான் ... ... *

(இ-ள்.) மலர்மாலைகளாலணியப்பட்ட நல்ல சிகையையுடைய புத்திரர்களை எனது தவமில்லாமையினால் கச்சினால்மறைக்கப்பட்ட மாமைநிறமமைந்த தனங்களையுடைய வென்மனைவியர்கள் தமது அழகிய வயிற்றிலடையப்பெற்றிலர் நீர்நிறைந்தகடலாற்சூழப்பட்ட பூமியைக்காத்துக்கொண்டுவந்தேன் எனக்குப்பின் பூமியைக்காப்பதற்குரியசிறுவர்களை நீ அருள்செய்க வென்று பாதங்களில்வீழ்ந்தான்-எ-று (௰௫)

என்னினென்னும் ஐந்தாவது நீக்கப்பொருடந்தது.

அவ்வுரைகேட்டமுனியுமருள்சுரந்தவுவகையனாய் .. ... *
இவ்வுலகமன்றியேயவ்வுலகுமினிதளிக்குஞ் ... ... *
செவ்வியிளஞ்சிறுவர்களைத்தருகின்றேனினிதேவர் ... *
வவ்விநுகர்பெருவேள்விக்குரியவெலாம்வருகென்றான் ... *

(இ-ள்.) அச்சொல்லைக்கேட்டு அந்தமுனிவருங் கருணைசுரக்கின்ற சனிப்பையுடையவனாகி இந்தவுலகமல்லாமலே யெந்தவுலகங்களையு மினிமையாகக்காக்கின்ற வழகமைந்த இளமையாகிய சிறுவர்களைக் கொடாநிற்பேன் இனிதேவர்கள் கலந்துண்ணுகின்ற பெரியயாகத்துக்கு வேண்டியவை யெல்லாம் வரக்கடவனவென்று கட்டளையிட்டார்—எ-று. (௰௭)

தருகின்றேன்-எது-விளைவுபற்றியகாலப் பிறழ்ச்சி;

காதலைத்தரும்வேள்விக்குரியவெலாங்கடிதமைப்ப... ... *
மாதவரிற்பெரியோனுமற்றவனைமுற்றுவித்தான் ... ... *
சோதிமணிப்பொற்கலசத்துச்சுவையமையவெண்சோறு ... *
பூதகணத்தரசேந்தியனலினின்றும்புறப்பட்ட ... ... *

(இ-ள்.) (அவ்வாறே) தசரதசக்கரவர்த்தியும் புத்திரர்களைத்தருகின்ற யாகத்துக்குரியனவாகிய வெல்லாவற்றையும் விரைவாகவமைத்துக்கொடுக்க முனிவர்களிற் பெரியோராகிய வம்முனிவருமத் தவேள்வியை முற்றுவித்தார் அச்சமயத்தில் பிரகாசத்தையுடைய இரத்தினமிழைத்த பொற்கலசத்தில் அமுதத்தைப்போன்ற வெண்மையாகிய சோற்றைப் பூதக்கூட்டத்துக்கரசனேந்திக்கொண்டந்தவேள்வித்தீயினின்றும் வெளிப்பட்டான்-எ-று.

புறப்பட்டதென்பதின் ஈறு-தொகுத்தல்விகாரம்.

பொன்னின்மணிப்படிகலத்திற்பற்றப்பட்டவின்னமுதை ... *
பன்னுமறைப்பொருளுணர்ந்தபெரியோன்றன்பணியினால் *
றன்னையநிகர்குணத்துத்தசரதனும்வரன்முறையால் ... ... *
னன்னுதலார்மூவருக்குநாலுகூறிட்டளித்தான் ... ... *

(இ-ள்.) (யாகத்தினின்றும்) புறப்பட்ட பொன்னாலமைந்த மணியழுத்திய பாத்திரத்திலுள்ள வினிமையாகிய வெண்சோற்றன்னத்தினை யாவருஞ் சொல்லுகின்ற மறையினது பொருளை யறிந்த வப்பெரியோருடைய கட்டளையினாற் றன்னைத்தானே யொத்த நிறைந்தகுணத்தையுடைய தசரதனும் பரம்பரையாக வந்த முறைமையினால் நல்லநெற்றியையுடையவராகிய தன் மூன்று மனைவியருக்கு நாலுபங்குசெய்து கொடுத்தான்—எ-று. (௰௯)

விரித்திட்டதீவினைசெய்தவெவ்விடத்தீவினையாலும் ... ... *
அருந்தடையின்மறையறைந்தவறஞ்செய்தவறத்தாலும் ... *
இருங்கடகக்கரதலத்திவ்வெருவுதரியதிருமேனிக்... .... *
கருங்கடலைச்செங்கனிவாய்க்கவுசலையென்பாளீன்றாள் ... *

(இ-ள்) பெருகுகின்ற பாவங்கள் செய்த கொடிய பாபகருமத்தாலும் முடிவில்லாமையையுடைய வேதங்களாற் சொல்லப்பட்ட அறங்கள் செய்த புண்ணியகருமத்தாலும் பெருமையாகிய கடகம் அணிந்த கையையுடைய எவரும் வெருவுதற்கு மருளையாகிய திருமேனியையுடைய இக்கருங்கடலையொத்தவனைச் சிவந்தகனிபோல் வாயையுடைய கௌசலையென்பவள் பெற்றாள்-எ-று. ( )

தள்ளரியபெருநீதித்தனியாறுபுகமண்டும்... ... ... *
பள்ளமெனுந்தகையானைப்பரதனெனும்பெயரானை ... ... *

எள்ளரியகுணத்தாலுமெழிலாலுமிவ்விருந்த ... ... *
வள்ளலையேயனையானைக்கேகயர்கோன்மகள்பயந்தாள் ... ... *

(இ-ள்.) (உயர்ந்தோரால்) நீக்குதலில்லாத பெருமையையுமைந்தநீதியுமாகி ஒப்பற்ற ஆறுசேரநெருங்குகின்ற பள்ளமென்கிற தன்மையையுடை யானைப்பட்டிப்பில்லாத குணங்களாலும் வடிவத்தாலும் வீற்றிருக்கின்ற இந்தச்சிராமபிரானையே ஒத்தவனைப் பரதனென்னும் பெயரையுடையவனைக் கேகயநாட்டிலுள்ளார்க்கு அரசனுடைய மகள் பெற்றாள்—எ-று. (உ0)

தாடகை முதலியஅரக்கரால் இடைந்த துயரத்தைப்போக்கி இன்பத்தைத் தருதலின் வள்ளல்—என்றார். தள்—எள் என்பன முதனிலைத் தொழிற்பெயர். தகையானை, பெரியானை அனையானை என்னும் ஒருபொருண்மேல் வந்தபெயர்கள் பயந்தாள் என்னும் பயனிலைகொண்டன.

அருவலியதிறலினராயறங்கெடுக்கும்விறலரக்கர் ... ... *
வெருவருதிண்டிறலார்கள் வில்லேந்துமணித்தசெம்பொற் ... *
பருவரையுநெடுவெள்ளிப்பருப்பதமும்போல்வார்கள் ... *
இருவரையுமிவ்விருவர்க்கிளையாளுமீன்றெடுத்தாள் ... ... *

(இ-ள்.) பிறரால் வெல்லுதற்கரிய மிக்கவலிமையையுடையவர்களாய் அறத்தைக் கெடுக்கின்ற வெற்றியையுடைய அரக்கர்கள் அஞ்சுகின்ற மிக்கதிறலுடையவர்களும் பருத்தசெம்பொன்மலையும் நெடியவெள்ளிமலையும் வில்லை எடுத்திருந்தாலென்ன அவற்றை ஒப்பவர்களுமாகிய மற்றையிருவர்களையும் இந்தவிராமபிரானுக்குந் தம்பிமார்களுக்கும் இளைய தேவியாகிய சுமித்திரைபெற்றெடுத்தாள்—எ-று. (உக)

இளையாளுமென்பதனும்மையை இவ்விருவர்க்குமெனக்கூட்டுக.

தலையாயபேருணர்விற்கலைமகட்குத்தலைவராய்ச் ... ... *
சிலைபயிலுநூன்முதலவெஃகமுமேற்பணிசெய்யக் ... *
கலையாழிக்கதிர்த்திங்களுதயத்திற்கலித்தோங்கும் ... ... *
அலையாழியெனவளர்ந்தார்மறைநான்குமனையார்கள் ... *

(இ-ள்.) நான்குவேதங்களையும் ஓத்தவர்கள் நூல்களினது உயர்வாகிய உண்மைப்பொருள்களைத் தெளிந்து உணர்வதில்லை நாமகளுக்கு இறைவர்களாகி, வில்முதலியபடைகளின் பயிற்சியை ஆராய்கின்ற தனுர்வேதம் தாமே வெற்றிகொண்டபலஅரசர்களைப்போலத், தம்மறிவினுக்கடங்கிநிற்க (அத்தனுர்வேதத்தையுணர்ந்து) பதினாறுகலைகளையுடைய வட்டமாகிய கிரணங்கள் அமைந்த சந்திரனது உதயத்தில் ஒலித்துப்பொங்குகின்ற அலைகளையுடைய சமுத்திரத்தைப்போல அறிவில் உயர்ந்தார்கள்—எ-று. (உஉ)

இதன்கண் நூலாசிரியர் குறித்து வந்தவுவமை. தனுர்வேதமென்பதற்கிலையைச் சிலையென்றாராயினும் அம்மொழி தன்னினத்தைத் தழுவிநின்றது.

[illegible]ற்றசரதனும் ... *
பொன்மறை[illegible] புதல்வரொடும் பெயரோகர
உறை[illegible]நடித்து ... ... [ன்ன
மறைபோற்றிவைவளர்த்தாளும்வசிட்டனென்பான் ... *

(இ-ள்.) உறையினிடத்தில்தங்கியநெடியவேலையுடையானே, கப்பத்தோடுவந்து அரசர்கள்வணங்குகின்ற திணிந்தகழலையணிந்த பாதங்களையுடைய தசரதனாகிய பொறுமைக்குணத்தால் தொடரப்பட்டமனத்தையுடையவனுக்குப் புத்திரர்களென்னும் பெயரோடாய் உபநயனவிதிமுடித்து வேதமுதலிய நூல்களில்தேர்வித்து இவர்களை அறிவில்வளர்த்தவரும்வசிட்டமுனிவர்காண்—எ-று (௨௪)

காண்-முன்னிலையசை-உம்மைஉயர்வுசிறப்பு,

ஈங்கவராலென்வேள்விக்கிடையூறுகடிதியற்றுந் ... ...*
தீங்குடையகொடியோரைக்கொல்விக்குஞ்சிந்தையனாய்ப் ... *
பூங்கழலார்க்கொண்டுபோய்வனம்புக்கேன்புகாமுன்னர் ... *
தாங்கரியபேராற்றற்றாடகையேதலைப்பட்டாள் ... ... *

(இ-ள்) இங்கே என்னுடையயாகத்துக்கு இடையூற்றை விரைந்துசெய்யுந்தீச்செயலையுடைய கொடியஅரக்கரை இவர்களாலேகொல்விக்கின்றகருத்தையுடையேனாகிப் பொலிவுள்ள கழலையணிந்த இவ்விராமலட்சுமணர்களை அழைத்துப்போய் வனம்புகுந்தேன், புகாதமுன்னே, பிறரால்பொறுத்தலரியமிக்கவாற்றலையுடைய தாடகையென்பவளே முதலெதிர்த்தாள்-எ-று

ஈங்கென்பது தவவனத்தைச்சுட்டிநின்றது.

அலையுருவக்கடலுருவத்தாண்டகைதன்னீண்டுயர்ந்த... ... *
நிலையுருவப்புயவலியைநீயுருவநோக்கையா ... ... *
உலையுருவக்கனலுமிழ்கட்டாடகைதன்னுரமுருவி ... ... *
மலையுருவிமரமுருவிமண்ணுருவிற்றொருவாளி ... ... *

(இ-ள்.) அலைகள் உருவிப்பாய்கின்ற அந்தக்கருங்கடலினிறமமைந்தவுருவத்தையுடைய ஆணிலக்கணத்திற்சிறந்தோனது நீண்டுயர்ந்த நிலைமையையும் அழகையுமுடைய தோள்வலிமையை நீ ஆழ்ந்தாராய் இத்தோளினால்விடப்பட்ட) ஓரம்பு கொல்லனுலையில் செம்மைநிறம்வாய்ந்த தீயையொத்த தீயையுமிழ்கின்ற கண்களையுடைய தாடகையினது மார்பையுருவி (அங்கெதிர்நின்ற) மலையையுருவி மரத்தையுருவிப் பூமியையுருவினது-எ-று. ()

மண்ணுருவிற்றென்பது பூமிப்பரப்புக்கும் அப்புறத்தேசென்றதென்பது கருத்து.

செக்கர்நிறத்தெரிகுஞ்சிசிரக்குவைகள்பொருப்பென்ன .. *
உக்கனவாமுடிவில்லையோசம்பினொருமரக்கி ... ... *
மக்களிலங்கொருவன்போய்வான்புக்கான்மற்றையவன் .. *
புக்கவிடமறிந்திலன்போந்தனெனென்வினைமுடித்தே ...*

(இ-ள்) செவ்வானத்தினிறம்போன்ற நிறத்தையுடையதாய்த் தீயெரிவதுபோல மேல்நோக்கிய சிகையமைந்த அரக்கர்களுடைய தலைக்கூட்டங்கள் (அம்புகளாலறுந்து) மலையைப்போல உதிர்ந்த குவியலோ முடிவில்லை, ஒருபாணத்தினால் தாடகையினுடைய புத்திரர்களில் சுவாகுவென்பவன் உடனீங்கி வீரசுவர்க்கத்தை அடைந்தான் மாரீசன் ஒளித்தவிடத்தையறிந்திலனில்லை-என்னுடையயாககருமத்தைமுடித்துக்கொண்டிவ்விடம்புகுந்தேன் ()

ஆய்ந்தேறவுணரய்யவபற்கேயுமறிவரிய ... ...*
காய்ந்தேவிளுலகனைத்துங்கடலோடுமலையோடுந் ... ... *
தீய்ந்தேறச்சுடுகிற்கும்படைக்கலங்கள்செய்தவத்தால் ... *
ஈந்தேனுமனமூட்கவிவற்கேவல்செய்குநவால் ... ... *

(இ-ள்) ஐயனே இந்தச்சிரீராமபிரானுடையபுகழ்கள் பிரமனுக்காயினும் அறிதற் கருமையையுடையன (ஆதலால்) தீர ஆராய்ந்து உணர்ந்து கொள். காய்ச்சலவினல் எல்லாஉலகங்களும் கடலோடும் மலையோடும் பி கவுந்தகரிந்து போகச்சுடுகின்ற ஆற்றலமைந்த ஆயுதங்கள் செய்த தவத்தினுல்கொடுத்தயானும் மனம்வெட்க இவனிடத்தில் ஏவல்செய்கின்றன-எ-று.()

கோதமன்றன்பன்னிக்குமுன்னையுருக்கொடுத்ததிவன் ... ... *
போதுநின்றதெனப்பொலிந்த பொலன்கழற்காற்பொடியன்
காதலென்றனுயிர்மேலுமிக்கரியோன்பாலுண்டால் ... [டாய்
ஈதிவன்றன்வரலாறும்புயவலியுமெனவுரைத்தான் ... ...*

(இ-ள்.) கௌதமமுநிவருடைய பத்தினிக்குக் கல்லுருவத்தைநீக்கிப் பழைய உருவத்தைக்கொடுத்தது தாமரைமலர்கள் கவிழ்ந்து நின்றாற்போல விளங்குகின்ற பொன்னொளிபற்றிய கழலையணிந்த திருவடியின் துகளாகும் ஆசையானது என்னுயிரின் மேலுண்டாயிருப்பதினும் இந்தக்கரிய திருமேனியையுடையானிடத்துண்டு இவனுடையவரலாறுந் தோள்வலியுமிவையாகுமென்று சொலவினன்—எ-று. (உஅ)

பொலமென்பது பொன்னெனுஞ் சொல்லின்றிரிபு-இதனைப் பொன்னென்கிளவி யீறுகெட முறையின் முன்னர்த்தோன்றும் லகாரமகாரஞ் செய்யுண்மருங்கிற் றொடரியலான வென்பதனானுணர்க னகரம்போலி.

ஈதென்னும் வினைக்குறிப்புமுற்று தொகுதியொருமை.

௰உ-வது-குலமுறைகிளத்துப்படலமுற்றிற்று.

௰ங-வது-கார்முகப்படலம்.

மாற்றம்யாதுரைப்பதுமாயவிற்குநான் ... ... *
தோற்றவாறெணமனந்துளங்குகின்றதால் ... ... *
நோற்றனணங்கையுநொய்தினையன்வில் ... ...*
ஏற்றுமேலிடர்க்கடலேற்றுமென்றனன் ... ... *

(இ-ள்.) (சனகமகாராசன் கௌசிகனைப்பார்த்து) மாயையுடைய திரியம்பகமென்னும், வில்லுக்கு(அரசர்கள்) தமதுவலிமைத்தோற்ற விதத்தைக் குறித்து நான் யாதுசொல்வதென்று மனநடுங்குகின்றது. இவ்வையன்வருத்தமின்றி அவ்வில்லை நாணேற்றுவானாயின் பெண்ணிற்சிறந்த சீதையும் (இவனுக்குமாலைசூட) நல்லநோன்புசெய்தவளாவாள் (அச்சீதைக்குவிவாகமில்லாமையைப்பற்றித் துக்கிக்கின்ற எம்மைத்) துன்பக்கடலினின்றும் கரையேற்றுவானென்று சொன்னான்—எ-று. (க)

நோற்றனணங்கையுமென்பது யாமுநோற்றோமாவோமெனப் பொருடரலின் ஆக்கு ஆண்மை குணங்களாலுயர்ந்த எழுதரியதிருமேனியையுடைய ஸ்ரீராமபிரானை மணவாளனாகப்பெறுதல் தகுதியெனக்கருதி நோற்றனளென்றும் இடர்க்கடலேற்றுமென்றுங்கூறினன்

என்றனனென்றலுந் தனெதிர்நின்றாரையக் ... ... *
குன்றுறழ்நெடுஞ்சிலை கொணர்மினீண்டென... ... *
நன்றெனவணங்கினர்நால்வரோடினர் ... ...*
பொன்றிணிகார்முகச்சாலைபுக்கனர் .. .. *

(இ-ள்.) என்றுசொன்னவளவில் (தனதுபணியை) ஏற்கத்தக்க தன்னெதிர்நின்றார்க்கு அம்மேருவோடு மாறுபட்ட வரிந்தசிலையை இங்கேபோய்க்கொண்டு வாருங்களென்றுசொல்ல (அதுகேட்டு) நால்கு ஏவலாளர் அவ்வாறே செய்வோமென ஓடினவர்களாகப் பொன்னாற்றிணிந்த வில்லின்சாலையிற் புகுந்தார்—எ-று, (உ)

நன்றென்பது ஈண்டு தன்பொருள்குறித்துநில்லாது பணித்தவாறேசெய்வோமெனும் பொருள்குறித்துநின்ற குறிப்புச்சொல்.

உறுவலியானையையொத்தமேனியர் ... ... *
செறிமயிர்க்கல்லெனத்திரண்டதோளினர்... .. *
அறுபதினாயிரரளவிலாற்றலர்... ... ...*
தறிமடுத்திடையிடைதண்டிற்றாங்கினர் ... ... *

(இ-ள்.) மிக்கவலிமையையுடைய யானையினுடலைப்போன்ற பருத்த உடலையுடையவர்களும் அடர்ந்தமயிரையுடைய திரண்டகல்லைப்போலத்திரட்சியுள்ள தோள்களையுடையாரும் அளவில்லாத தேகபலத்தையுடையவர்களுமாகிய அறுபதினாயிரம்பேர் தூண்களை ஊடேசேர்த்துத் தண்டுகளினாலே இடையிடையே சுமந்தார்—எ-று. (௩)

நெடுநிலமகண்முதுகாற்றநின்றயர்...... ... *
கடநிமிர்வடவரைகாணுநாணுற ... ... *
இடமிலையுலகெனவந்ததெங்கணும் ... ... *
கடல்புரைதிருநகரிரைத்துக்காணவே ... ... *

(இ-ள்) நெடியபூமியாகிய மாது முதுகின்வருத்தத்தை யாற்றிக்கொள்ளவும் நின்று உயர்ந்த பெருமைமிகுந்த மேருவும் வெட்கமுறவுங் கடலையொத்த செல்வமமைந்த நகரத்திலுள்ளோர் உலகத்தில் இடமில்லையென்று எங்கும் இரைத்துக்காணவும் அவ்வில்லானது (அவர்கள் சுமந்துவர) வந்தது—எ-று. (௪)

நகர்-ஆகுபெயர்.

சங்கொடுசக்கரந்தரித்ததாளைய... ... ... *
[illegible]கவேறல்லனெனவிதனைத்தீண்டுவான்... ... ... *
[illegible]ஒருவனின்றேற்றினிச்சிலை... ... ... *
[illegible]மங்கைதன்றிருமணம்வாழுமாலென்பார் ... *

(இ-ள்.) [illegible]நகரத்தாருட்சிலர் பாஞ்சசன்னியத்தோடு சுதரிசனத்தைக் கையிற்றரித்த படையையுடைய ஆண்சிங்கத்தையொத்ததிருமால் அல்லா

றாயின் இவ்வில்லை நிமிர்த்தியோனாகிய ஒருவன் எவ்வுலகத்தில் இருக்கின்றானோ இற்றைத்தினத்தில் இவ்வில்லானது நாணேற்றப் படுமாயின் சீதையானவள் தனதுசிறந்தகலியாணத்தில் வாழ்வையடைவாளென்பார்—எ-று. (௫)

கைதவந்தனுவெனல்கைக்குன்றென்பார். ... *
எய்தவன்யாவனோவேற்றிப்பண்ணென்பார்...... *
செய்தவத்திசைமுகன்றீண்டியன்றுதன் ... ... *
மொய்தவப்பெருமையின்முயற்சியாலென்பார்.. *

(இ-ள்.) சிலர்) இதனைவில்லென்றுசொல்லுதல் வஞ்சனை (உண்மையாய்ச்) சொல்லின்) மேருவென்பார், (சிலர்) பூர்வத்தில் நாணேற்றி எய்தவலியோன் யாவனோவென்பார் சிலர் (அந்நான்முகத்தையுடையோன் இதனைச் சிருட்டித்தது தன்கைகளால்) தீண்டியன்று தன்னுடைய சிறந்த தவப் பெருமையினது முயற்சியினாலென்பார்—எ-று. (௬)

செய்ததென்பது செய்தவென ஈறுதொக்கது.

திண்ணெடுமேருவைத்திரட்டிற்றோவென்பார்...*
வண்ணவான்கடல்பண்டுகடைந்தமத்தென்பார் .. *
அண்ணல்வாளரவினுக்கரசனோவென்பார்... ...*
விண்ணினெடுமவில்வீழ்ந்ததோவென்பார் ... *

(இ-ள்,) சிலர்இவ்வில் திண்மையாகிய நெடியமேருவைத்திரட்டிச் செய்யப்பட்டதோவென்பார். சிலர் இது அழகிய உயர்ந்தபாற்கடலைக்கடைந்த மத்தென்பார். சிலர் உயர்வாகிய ஒளியையுடைய பாம்புகளுக்கு அரசனோ வென்பார். சிலர், மேகத்தினின்றுந்தோன்றுகின்றநீண்ட இந்திரதனுவானது பூமி யில்வீழ்ந்ததோவென்பார்—எ-று. (௭)

திரட்டிற்றோவென்பது-வினைமுதல்வினை செயப்படுபொருண்மேலேற்றப்பட்டது.

என்னிதுகொணர்கெனவியம்பினனென்பார் ... *
மன்னவருளர்கொலோமதிகெட்டாரென்பார்... *
முன்னையூழ்வினையினான்முடிக்கலாமென்பார்...*
கன்னியுமிச்சிலைகாணுமோவென்பார் ... ... *

(இ-ள்.) (சிலர் அரசன்) யாதுகாரணம் இவ்வில்லைக்கொணர்கவென்றுசொன்னானென்பார்கள் (சிலர்) அரசர்களிலே பேதையர்களுண்டோவென்பார்கள் சிலர் பழையஊழ்வினையுண்டாயின் (இக்காரியத்தை) முடிக்கலாமென்பார்கள் (சிலர் வளைத்தோனை மணம்புரிய இருக்கும்) கன்னியும் இவ்வில்லைக்காண்பாளோ வென்பார்கள்-எ-று. (௮)

இச்சிலையுதைத்தற்கிலக்கம்யாதென்பார் ... *
நச்சிலைநங்கைமேனாட்டும்வேதென்பார் ... *
நிச்சயமெடுக்குங்கொலோவியாவனென்பார் ... *
சிற்சிலர்விதிசெய்ததீமைதானென்பார்... ... *

(இ-ள்.) (சிலர்) இவ்வில்லுதைத்த அம்புக்கு இலட்சியம்யாதென்பார்கள் (சிலர்) அரசன் சிறந்தவில்லைவளைத்தற்பயனைப் பெண்ணிற்சிறந்தாள் மேல் குறிப்பானென்பார்கள் (சிலர்) சக்கரத்தையுடைய திருமால் உண்மையா பெடுப்பானென்பார்கள் சிலர்சிலர் (இது) ஊழ்செய்ததீயகாரியமென்பார்கள்-எ-று. விதி ஆகுபெயர். (கூ)

மொய்த்தனரின்னணமொழிபமன்னன்முன் ...... *
உய்த்தனர்நிலமுதுகுளுக்கிக்கூற .. .. *
வைத்தனர்வாங்குநர்யாவரோவெனக் ... ... *
கைத்தலம்விதிர்த்தனர்கண்டவேந்தரே ... ... *

(இ-ள்.) (அந்நகரமாக்கள்) நெருங்கினவர்களாகி இவ்வாறுசொல்லாநிற்க அரசனுக்கெதிரே (அவ்வறுபதினாயிரவர்) கொண்டுவந்தவர்களாய்ப் பூமி மேற்புறநெளிந்து பள்ளமுறும்படிவைத்தனர் பார்த்தஅரசர்கள் வளைப்பவர்யாவரென்று கைநடுங்கினர்-எ-று. (கூ)

வேந்த கைத்தலம் விதிர்த்தனரென்னுமுடிபு கண்ணுந்தோளுமென்னுஞ் சூத்திரத்தில் தன்வினைமுடிந்ததென்பதனால்வந்தது. இன்னவண்ணம்-இன்னணமென மரீஇயது'வில்லையுளைத்தல் - கைத்தொழிலாதலின், கைத்தலம் விதிர்த்தனர் என்றார்.

போதகமனையவன்பொலிவுநோக்கியவ் ... ... *
வேதனைதருகின்றவில்லைநோக்கித்தன் ... ... *
மாதினைநோக்குவான்மனத்தைநோக்கிய... ... *
கோதமன்காதலன்கூறன்மேயினான்... ... ...*

(இ-ள்.) மதயானையையொத்த சக்கரவர்த்தித்திருமகனுடைய குணமுதலியவற்றின் பொலிவைத்(தனக்குள்ளே)எண்ணி மனத்துக்கு வருத்தத்தைத்தருகின்ற அந்தவில்லைநோக்கித் தன்னுடைய புத்திரியின் நலத்தைக்கருதுவோனாகிய சனகமகாராசனதுகருத்தைக் (குறிப்பினால்) அறிந்த சதானந்தமுனிவர்சொல்லத்தொடங்கினார்-எ-று. (௰௧)

இமையவில்வாங்கியவீசன்பங்குறை ... ... *
உமையிவளிகழ்ந்தனனென்னவோங்கிய ... *
கமையறுசினத்தனிக்கார்முகங்கொளாச்... ... *
சமையுறுதக்கனார்வேள்விசாரவே ... ...*

(இ-ள்.) மேருவில்லைவளைத்த(ஆற்றலமைந்த)சிவனுடைய ஒருபாதியில் தங்கிய உமாதேவியைத் தக்கன் அவமதித்தானென்று பொறுமையற்றிருந்தகோபத்தையுடைய வீரபத்திரன் இவ்வில்லைக் கையிற்கொண்டு அத்தக்கனுடைய சமைக்கப்பட்டயாகசாலையில்சேர-எ-று. (௰௨)

உக்கனபல்லொடுகரங்களோடினர் ... ... *
புக்கனர்வானவர்புகாதசூழல்கள் ... ...*
தக்கனல்வேள்வியிற்றழலுமாறின ... ... *
முக்கணனன்றோனவன்முனிவுமாறினான்... ... *

(இ-ள்.) (அவ்வீரன் அங்குவந்திருந்தாரோடு போர்செய்தலினால் (பற்க

ளர்,களுகளும், உகிர்ந்தன (அவ்வாறுஉதிரப்பெற்ற) தேவர்கள் ஓடினவர் ாகி முன்புகுந்தறியாதஇடங்களிலும்புகுந்தனர் தக்கனுடைய நல்லயாகத் தீயும் அவிந்தன, மூன்றுகண்களையும் எட்டுத்தோள்களையும் உடையான் கோபநீக்கினான்-எ-று. (௰௩)

குழல்களுமென்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. ஓடுவென்பதுவெண்ணு ப்பொருட்டுதழுவமாறின முனிவுமாறினான் என உம்மையெச்சத்திற்கு ஒருவினை முடிபாய து- சென்றுமிலர் திரிந்துமிலரெனவருவதுமிது- என்னை-கு- உம்மையெச்ச மிருவீற்றுமுந் தன்வினையொன்றியமுடிபாகும்மே என்பதோத்தாதலின்.

தாளுடைவரிசிலைசம்புவும்பர்தம் ... ... *
நாளுடையினவர்நடுக்கநோக்கியிக் ... ... *
கோளுடைவிடையதுன்குலத்துட்டோன்றிய... *
வாளுடையுழவனோர்மன்னன்பால்வைத்தான் ... *

(இ-ள்) சம்புவானவர் தேவர்கள் ஆயுள்நாளுடைத்தாயிருப்பதினால் அ வர்களுடையநடுக்கத்தைக்கண்டு வலியையுடைய விடையையொத்த இந்தச் னக மகாராசனுடைய மரபிலே முன்பிறந்தவாளையுடைய வீரனாகிய ஒரு மன்னவனிடத்தில் குதையையுடைய வரிந்த சிலையைவைத்தார்—எ-று. ஓர் மன்னன்-தேவராதமகாராசன். (௰௪)

கார்முகவலியையான்கழறல்வேண்டுமோ ... ...*
வார்சடையரனிகர்வாதநீயலால்... ... ...*
யாருளரறிபவரிதற்குத்தோன்றிய ... ... *
தேர்முகவல்குலாள்செவ்விகேளென்று ... ... *

(இ-ள்,) நீண்டசடைகளையுடைய சிவனையொத்தவரதனே, இவ்வில்லின துவலியை நான்சொல்லல்வேண்டுமோ வேண்டுவதில்லை நீ ரறிவீரல்லாம ல் அறிகின்றவர்கள் யாரிருக்கின்றார்கள் இதன்பொருட்டு அவதரித்த தேர் முகத்தையொத்த அல்குலையுடைய சானகியினது இயல்பைச் சொல்லக்கே ளும்-எ-று. (௰௫)

வேறு.

இரும்பனையகருநெடுங்கோட்டிணையேற்றின்டணையேற்ற...*
பெரும்பியவிற்பளிக்குறாகம்பிணைத்ததம்முடணைந்திர்க்கும் *
வரம்பின்மணிப்பொற்கலப்பைவயிரத்தின்கொழுமடுத்திட்..*
டரம்பொருவினிலம்வேள்விக்கலகில்பலசாலுழுதேம் ... *

(இ-ள்.)வேள்வியின்பொருட்டு இரும்பின்வலியையொத்த வலியமைந்த பெருமையாகியநீண்டகொம்புகளையுடையஇரண்டிடபங்களினது பருமை தங்கிய பெருமையாகியபிடரிலே பளிங்கினாற்செய்த நுகத்தடியைச்சேரி த்து அதனோடும்பொருந்துவித்து இழுக்கி றஅளவில்லாதபணிகளழுத்திய பொற்கலப்பையில் வைரமாகியகாலைச்சேர்த்து (அதனால்) வலியில் ஒப்பி ல்லாதபூமியை அளவற்றபலசாலுழுதோம்—எ-று. (௰௬)

உழுகின்றகொழுமுகத்தினுதிக்கின்றகதிரொளிபோல் ... *
பொழிகின்றபுவிமடந்தைதிருவெளிப்பட்டெனப்புணரி... *

எழுகின்ற தெள்ளமுதோ டெழுந்தவளு மிழிந்தொதுங்கத் .. *
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள் ... *

(இ-ள்.) உதயஞ்செய்கின்ற ஒளியையுடைய சூரியனைப்போலவும் வளர்ந்தொளிர்கின்ற பூமிமாதாகிய திருவானவள் வெளிப்பட்டதுபோலவும் பாற்கடலில் உண்டாகின்ற தெளிவாகிய அமுதத்துடனே அவதரித்த திருமகளும் அழகுகுறைவுபெற்றால்) இழிவையடைந்து ஒருபுறஞ்செல்ல (பெண்கள்) யாவரும் வணங்குகின்ற நல்ல இலக்கணமமைந்த பெண்ணரசியானவள் உதிக்கின்றகொழுவினது முகத்திலே தோன்றினாள் -எ-று. (௰௭)

குணங்களை யெங்கூறுவதுங் கொம்பினைச் சேர்ந்தனவுய்யப் .. *
பிணங்குவன வழகிவளைத் தவஞ்செய்து பெற்றதுகாண் ... ... *
கணங்குழையா ளெழுந்ததற்பின் கதிர்வாணிற் கங்கையெனும் .. *
அணங்கிழியப் பொலிவிழந்த வாறொத்தார் வேறுற்றார் ... ... *

(இ-ள்.) பெண்ணரசியினுடைய குணங்களை யாமெடுத்துச் சொல்லுதலினால் யாதுபயன் பூங்கொம்பினை யொத்தவளைச் சேர்ந்து அக்குணங்கள் உய்யும்படி (தம்முள் ஒன்றுக்கொன்று மாறுபடுவன அழகோடு தவஞ்செய்து (அத்தவப்பயனால்) இவளைப்பெற்றது பலவாகத்திரண்ட குழையையுடைய இச்சானகியானவள் அவதரித்தபின் மற்றைப்பெண்யாவர் ஒளியுடைந்த விண்ணினின் கங்கையென்னும்பெயருடைய தெய்வப்பெண் பூமியிலிறங்கினதினால் சிறப்பையிழந்த மற்றைநதிகளையொத்தனர்கள் -எ-று.)

சிறப்புச்சொல்லோடு கூட்டிக்கூறாது பொன்னென்றமாத்திரையில் ஒள்ளிய ... யமெனப் பொருள்படுதல்போலக் குணங்களென்றதுணையானே உயர்குணங்களெனப் பொருள்படநின்றது

கொம்பினைச்சேர்ந்து அவையுய்யப் பிணங்குவனவென்றதனால் உயர்குணங்களால் இப்பிராட்டிக்குச் சிறப்பின்றி இவளைச்சேர்தலால் அவைசிறந்தனவென்றும் அக்குணங்கள்யாவும் செயற்கையாலன்றி இயற்கையாயே இவள்பால் அமைந்தனவென்றுமுணர்க,

சித்திரமிங் கிதுபோல வெங்குண்டு செய்வினையால் ... ... *
வித்தகரும் விதிவசமும் வெவ்வேறே படர்ந்திடப்ப ... ... *
அத்திருவை யமரர்குல மாதரித்தா லெனவதிரு ... ... *
இத்திருவைத் தொல்வேந்த ரெல்லாருங் காதலித்தார்... ... ... *

(இ-ள்) இங்கேயுள்ள (சானகியினுடைய) இவ்வுருவத்தை யொத்ததாகிய சித்திரமானது எவ்வுலகத்திலுண்டு, அவரவர்செய்த முன்வினைப்பயனால் (இன்றுநடக்கின்ற நூலளவைகளானும்) உணர்ச்சியும் ஆக்கமும் ஒன்றையொன்றொவ்வாமல் புறத்திலிருக்க அதையுணராமல் அந்தத்திருமகளைத் தேவர்கூட்டம் ஆதரித்தாற்போல இத்திருமகளைப் பூலோகத்தரசர்களெல்லாரும் விரும்பினார்கள் -எ-று. (௰௮)

கலித்தானைத் தடமேலோடுங் கைத்தானக் களிற்றரசர் ... ... *
ஒலித்தானை யெனலைந்துடனை மொழிந்தார்க் கெதிருடுத்த ... *
புலித்தானைக் களித்தமிலவைப் போர்வையான் போர்வில்லை ... *
வலித்தாரோ மங்கைதிருமணத்தா னென்றியாம் வலிதந்தோம் ... *

(இ-ள்.) புகழையுடைய படைக்கடலோடு ஆரவாரித்து மதத்தயானையைப்போலவந்து கலியாணத்தைக்குறித்துப்பேசினவர்களாகிய நீண்ட துதிக்கையும் மதமும் அமைந்தயானைச்சேனையையுடைய அரசர்களுக்கு யாங்கள்மறுமொழியாகப் புலித்தோலாகிய வத்திரத்தையும், யானையினது கருமையாகிய மேற்போர்வையையுமுடைய சிவனது போர்க்குரிய வில்லைவளைத்தவனே இப்பெண்ணையினது திருமணத்துக்குரியனென்று நிச்சயித்தோமென்றோம்—எ-று. (௨௰)

என்றோம் என்பது அவாய் நிலையான்வந்தது.

வல்வில்லுக்காற்றார்கண் மாரவேள்வளைகருப்பின் ... ... *
மெல்வில்லுக்காற்றாராய்த்தாமெய்ம்மைவிளிக்குற்றார் ... *
கல்விபோலாகிருந்தகணங்குழைமழையைக்காதலித்துச் ... *
சொல்வில்லாலுலகளிப்பாய்ப்போர்செய்யத்தொடங்கினார் ... *

(இ-ள்.) சொல்லாகிய வில்லினால் உலகைக்காப்பவராகிய விசுவாமித்திர முனிவனே! அதுகேட்டுப் பூமியானது பெற்றகணங்குழைமழையையுடைய பெண்ணை விரும்பி இந்த வலியவில்லைவளைப்பதற்கு ஆற்றலில்லாதஅரசர்கள் மன்மதனது வளைந்தகரும்பாகிய மெல்லிய வில்லுக்கு ஆற்றாமல் தாமே எம்மை அழைத்தவர்களாகியவொத்த வில்லோடுவந்துபோர்செய்யத்தொடங்கினார்கள்—எ-று. (௨௧)

இம்மன்னர்பெருஞ்சேனையிகறனைமேற்கொண்ட ... ... *
செம்மன்னர்பொருளேபோற்புகழ்வாய்ப்படச்சிறந்ததால் .. *
பொம்மென்னவண்டலம்பும்புரிகுழலைக்காதலித்த ... ... *
அம்மன்னர்சேனைதமதாசைபோலாயிற்றால் ... ... *

(இ-ள்.) இந்தச்சனகமகாராசனுடைய பெருஞ்சேனையானது பகையை மேற்கொண்ட செம்மைக்குணத்தையுடைய மன்னர்களது பொருளைப் பேசச்சிறந்து புகழ்நிரம்ப வெற்றியடைந்தது வண்டுகள் பொம்மென்று ஒலிக்கின்ற புரியாகிய கூந்தலையுடையசானகிபிராட்டியை விரும்பினஅவ்வேந்தர்களுடைய சேனைகள் தமது ஆசையைப்போலப்பெருகிப் பயன்படாமல் வெற்றியை அடையவில்லை—எ-று. (௨௨)

மற்காக்குமணிப்புயத்துமன்னனிவண்மழவிடையோன் ... *
விற்காக்குமவாளமருண்மெலிகின்றனெனவிரங்கி ... ... *
எற்காகமுடியின்றோர்படையீந்தானெனவேந்தர் ... ... *
அற்காலக்கூகையைக்கண்டஞ்சினவாமெனகன்றார் ... ... *

(இ-ள்.) [illegible] ஒளியையுடைய விடாது வீசுகின்ற முடியையணிந்த வானநாட்டு [illegible] காக்கின்ற அழகிய புயத்தையுடைய இச்சனகமகாராச [illegible] இடபத்தையுடையவனது வில்லைக்காக்கின்றவன் யுத் [illegible] மெலிகின்றனனென மனமிரங்கி ஆயுதங்களைக்கொடுத்தாரென்ன [illegible] அவ்வேந்தர்கள் இராவில் காக்கைகள் கூகையைக்கண்டு [illegible] அஞ்சி நீங்கினார்கள்—எ-று. ஆம்-அசைச்சொல். (௨௩)

அன்றுமுதலின்றளவுமாருமிந்தச்சிலையருகு ... ... *
சென்றுமிலர்போயொளித்தார்தேர்வேந்தர்திரிந்துமிலர்...*
என்றுமினிமணமுமிலையென்றிருந்தேமிவனேற்றின் ... ...*
நன்றுமலர்க்குழற்சீதைநலம்பழுதாகாதென்றான் ... ...*

(இ-ள்.) அன்றுதொடங்கி இந்நாள்வரையும் தலைமையுடைய வேந்தர்களில்யாரும் இந்தவில்லினருகே போயுமிலர் (இந்நகரத்தின்கண்) திரிந்துமிலர், ஓடிஒளித்தார்கள். இனி எப்போதும் திருமணமுமில்லையென்று எண்ணியிருந்தோம், இச்சீராமபிரான் இவ்வில்லை, நாணேற்றுவானாயின் எனக்குநன்மையைத்தருவதாகும் மலரையணிந்த சீதாபிராட்டியினது பெண்ணலமும் பழுதுபடாதென்று சதாநந்தர்சொன்னார்—எ-று. (௨௪)

நன்று-எ-து-குறிப்புவினைமுற்று. நலமென்பதன்கணெச்சவும்மைதொக்கது,

நினைந்தமுனிபகர்ந்தவெலாநெறியுன்னியறிவுணர்ந்தன் ... *
புனைந்தசடைமுடிதுளக்கிப்போரேற்றின்முகம்பார்த்தான். *
வனைந்தனையதிருமேனிவள்ளலுமம்மாதவத்தோன்... ... *
நினைந்தவெல்லாம்நினைந்தந்தநெடுஞ்சிலையைநோக்கினான்...*

(இ-ள்) சதானந்தமுனிவர் நினைந்தயாவற்றையும் சொன்னயாவற்றையும்முறையே எண்ணிக்கௌசிகமுனிவருந் தம்முடைய கட்டியசடைமுடியை (அதிசயத்தால்) அசைத்து யுத்தத்தில் ஆண்சிங்கத்தையொத்த சீராமபிரானுடைய திருமுகத்தைத் (தங்கருத்துத்தோன்ற) நோக்கினார், ஒப்பனைசெய்தாற்போன்ற திருமேனியையுடைய அந்தவள்ளலும் முனிவர் எண்ணியவற்றையெல்லாங்கருதி அந்த நீண்டசிலையை நோக்கினான்—எ-று. வள்ளல்- குணவாகுபெயர். (௨௫)

வேறு.

பொழிந்தநெய்யாகுதிவாய்வழிபொங்கி... ... *
எழுந்தகொழுங்கனலென்னவெழுந்தான் ... ...*
அழிந்ததுவில்லெனவிண்ணவரார்த்தார் ... ... *
மொழிந்தனராசிகண்முப்பகைவென்றார் ... ...*

(இ-ள்.) (வேள்வித்தீயில்) நெய்யாகிய ஆகுதியைப் பொழிந்த இடத்தின்வழியே மேலேபொங்கியெழுந்த செழுமையாகிய தீச்சிகையைப்போலச்சக்கரவர்த்தித்திருமகன் தனது இருக்கையினின்று மெழுந்தான் (அது நோக்கிய) தேவர்கள் வில்லழிந்ததென்று ஆரவாரித்தனர் முப்பகையை வென்ற முனிவர்கள் ஆசிவசனத்தைக்கூறினார்கள் எ-று. (௨௬)

ஆயதவங்கடொடங்கியதொல்லோன் .. ... *
ஏயவன்வல்விலிறுப்பதன்முன்னம் ... ... *
சேயிழைமங்கையர்சிந்தைதொடெய்யா ... ... *
ஆயிரம்வில்லையனங்கனிறுத்தான் ... ... *

(இ-ள்.) பரிசுத்தமாகிய தவங்களைத் தொடங்கிச்செய்த தொல்லோனால் ஏவப்பட்ட சீராமபிரான், இந்தவன்மையையுடையவில்லை ஒடிப்பதற்குமுன்

னே மன்மதன் ! அந்தச்சக்கரவர்த்தித் திருமகனுடைய வடிவழகைக்கண்டிருந்த செம்பொன்னாபரணத்தைத அணிந்த மங்கைமார்களுடைய சிந்தைகள்தோறு மலரம்புகளைப் பூட்டு மெல்லிய ஆயிரங்கருப்புவில்லை ஒடித்தான்.

வல்வில்லென்றதனால் மெல்வில்லென்பது பெற்றாம். எனவே மங்கையர்கள் அவனுடை வழகைக்கண்டு வேட்கைமிகுந்தனரென்பது குறிப்பெச்சம்.

காணுநெறிக்குச்சிலைகால்வலிதென்பார் ... ... *
நாணுடைநங்கைநலங்கிளர்செங்கேழ் ... . *
பாணியிவன்படர்செங்கைபடாதேல் ... ... *
வாணுதல்சீதையும்வாழ்விலளென்பார் ... ... *

(இ-ள்.) சிலர் நீண்டவில்லானது கால்வன்மையையுடையது யாருமென்பார்கள் சிலர் நாணத்தையுடைய நங்கையினது நன்மைமிகுந்த செந்நிறம் வாய்ந்தகையில் இப்புருடோத்தமனுடைய அகன்றசெங்கை பொருந்தாதாயின் ஒளிபொருந்திய நெற்றியையுடையசீதையும் இனிவாழ்வில்லாளென்பார்கள்—எ-று. (௨௮)

சிலைகால்வலிதென்பது- கண்ணுந்தோளு முலையும்பிறவும், பன்மைசுட்டிய சினைநிலைக்கிளவி, பன்மைகூறுங் கடப்பாடிலவே, தம்வினைக்கியலு மெழுத்தலங்கடையே, என்னுஞ்சூத்திரத்தில்-ஒன்றினமுடித்தலென்பதனாற் போந்தமுடிபு. வாணுதல் சீதையென்பது. அல்வழியெல்லா முறழெனமொழிப வென்னுஞ்சூத்திரத்தில் எல்லாமென்பதனால் இயல்பாயிற்று

கரங்கள்குவித்திருகண்கள்பனிப்ப ... ... *
இருங்களிறிச்சிலையேற்றிலனாயின் ... ... *
நரந்தைநறைக்குழனங்கையுநாமும் ... ... *
முருங்கெரியிற்புகமூழ்குதுமென்பார் ... ... *

(இ-ள்.) சிலர் (தத்தங்குலதெய்வங்களைச்சிந்தித்துக்) கைகளைக்குவித்து இரண்டுகண்களிலும் நீர்துளிக்கப் பெருமையாகிய மதத்த யானையையொத்த இப்புருடோத்தமன் இவ்வில்லை நாணேற்றாவிடில் கத்தூரியணிந்தமணமமைந்த கூந்தலையுடைய பெண்ணிற்சிறந்த சீதையும்நாமும் (சேர்ந்தாரைக்) கொல்லுகின்ற எரியில் உடல்புக மூழ்குவோமென்பார்கள்-எ-று. (௨௯)

வள்ளன்மணத்தைமகிழ்ந்தனனென்றால் ... ... *
கொள்ளெனமுன்புகொடுப்பதையல்லால் ... ... *
வெள்ளமணைத்தவன்வில்லையெடுத்திப் ... ... *
பிள்ளைமுனிட்டதுபேதைமையென்பார் ... *

(இ-ள்.) சிலர்நம்முடையவள்ளலாகிய சனகமகாராசன் (சீதையினது) திருக்கலியாணத்தை விரும்பினவனானால் நீகொள்ளென்று எதிரே (இப்புருடோத்தமனுக்கு) கொடுப்பதையல்லாமல் கங்கையைச்சடையில் அடக்கிய சிவனதுவில்லையெடுத்து இப்பிள்ளைமுன் வளையாயென்று வைத்தது அறிவிலாமையென்பார்—எ-று. (௩௰)

ஞானமுனிக்கொருநாணிலையென்பார் ... ... *
கோனிவனிற்கொடியாரிலையென்பார் ... ... *

மானவனிச்சிலைகால்வளையானேல் ... ... *
ஈனமெனத்தவர்பேறிலெனென்பார் ... ... *

(இ-ள்.) சிலர், (வில்லின் பொருட்டு இப்பிள்ளையை அழைத்துவந்த) மெய்த்ஞானமுனிவனுக்குச் சிறிதுநாணமுமில்லையென்பார்கள், சிலர் அரசர்களில் இச்சனகனைப்பார்க்கிலும் கொடுமையுடையோரில்லையென்பார்கள், பெருமையையுடைய இராமபிரான் இவ்வில்லை இரண்டுகோடிகளுஞ் வளைக்கானாயின் பருத்த கொங்கையையுடைய பெண்ணரசியாகிய சீதைக்குப் பயனில்லையென்பார்கள் — எ-று. (௬௧)

கோன்-என்பதில் னகரம்பால்காட்டும் விகுதியன்றுசாரியை சிலைகால்- என்பது- முறையேமுதலுஞ் சினையுந்தொக்கதொகையாகலின் முதற்கண் இரண்டாவதும் சினைக்கண் ஏழாவதும் விரிக்க. எனவே இரண்டாம்வேற்றுமைத் தொகையாதலின்வலி இயல்பாயிற்று. கு-முதன்முன்னைவரிற்கண்ணென்வேற்றுமைசினைமுன்வருதறெள்ளிதென்ப.

தோகையரின்னனசொல்லிட நல்லோர் ... ... *
ஓகைவிளம்பிடவும்பருவப்ப ... ... *
மாகமடங்கலுமால்விடையுப்போன் ... ... *
நாகமுநாகமுநாணநடந்தான் ... ... *

(இ-ள்.) மயிற்சாயலைப்போலும் சாயலையுடையராகிய அங்குள்ள சிலதியர்கள் இவ்வண்ணமானசொற்களைச்சொல்லாநிற்க (செய்கைகுணங்களில்) நல்லோர்கள் சந்தோடவசனங்களைச்சொல்லத் தேவர்கள் களிக்க உயர்ந்தசிங்கமும்பெருமையாகிய இடபமும்பொன்மலையும் மத்தயானையுங்கண்டு நாணவில்லினருகே நடந்தான் — எ-று. (௬௨)

ஆடகமால்வரையன்னதனைத் ... ... *
தேடருமாமணிசீதையெனும்பொற் ... ... *
சூடகவால்வளைசூட்டிடநீட்டும் ... ... *
ஏடவிழ்மாலையிதென்னவெடுத்தான் ... ... *

(இ-ள்.) உயர்ந்தமேருமலையையொத்த வில்லைத் தேடக்கிடையாத சிறந்தமணியையொத்த சீதையென்னும் பொன்னாலாகிய கடகத்தையும் வெண்மையுள்ள வளையையும் அணிந்தகரத்தையுடையாளுக்குத் தரிக்கக்கொடுக்கும் இதழ்கள்விரிந்த பூமாலை இதென்று கண்டோர்சொல்ல (இராமபிரான்) அநாயாசமாகத் தனது இடதுகரத்தால் எடுத்தான் — எ-று. (௬௩)

மாமணிசீதை, வடமொழிச்சந்தி.

தடுத்திமையாமலிருந்தவர்தாளின் ... ... *
மடுத்ததுநாணுநிறைத்ததுநோக்கார் ... ... *
கடுப்பினின்யாருமறிந்திலர்கையால் ... ... *
எடுத்ததுகண்டனரிற்றதுகேட்டார் ... ... *

(இ-ள்.) (காட்சியைத்) தடுக்கு இமைத்தலில்லாதவர்களாய் அங்கிருந்தவர்கள்யாவரும் (சக்கரவர்த்தித்திருமகன்) தனதுதிருவடிப் பெருவிரலால் (அவ்வில்லின்குதையை) மிதித்ததையும் நாணைநுனியில் பூட்டினதையும்

செவியின்வேகத்தால் கண்ணுற்காணாதவர்களாகிஅறிவாலும் அறிந்திலர்; கையாலெடுத்ததைக்கண்டார்கள்- வில்முறிந்த ஓசையைக்கேட்டார்களில்லை-எ-று.

இற்றதெனக்காரியத்தைக் காரணமாக வுபசரித்தார்.

வேறு.

ஆரிடைப்புகுதுநாமென்றமரர்கள்கமலத்தோன்றன் ... ... *
பேருடையண்டகோளம்பிளந்ததென்றேங்கிநின்றார் ... *
பாரிடையுற்றதன்மைபகர்வதென்பாலாத்தாங்கி ... ...*
வேரிடைக்கிடந்தநாகவிடியெனவெருவிற்றன்றே... ... ... *

(இ-ள்.) (திரியம்பகமென்னும் வில்முறிந்த ஓசையைக்கேட்ட) தேவர்கள் பிரமனுடைய கீர்த்தியமைந்த அண்டகோளமானது பிளந்ததினாலுண்டாகிய ஓசையென்றுநினைத்து இனியாரிடம் நாமடைக்கலம் புகுவோமென்று ஏக்கமுற்று மனம்வருந்தினார்கள் மண்ணுலகத்தில் உண்டாகிய தன்மையைக்குறித்து யாம்பேசுவதுயாது பூமியை வேரினிடத்தில் தாங்கியிருந்த அராவரசு இடியோசையென்று பயந்தது—எ-று. (௬௫)

மேலேழுலகங்களின் கண்கலக்கத்தைக்கூறவே பாரிடையுற்றதன்மைஅவற்றினுமிகுதியுடைத்தெனப்பொருளாதலின் கூறவேண்டாதாயிற்று.

பூமழைசொரிந்தார்விண்ணோர்பொன்மழைபொழிந்தமேகம்.
பாமமாகடல்களெல்லாம்பன்மணிதூவியார்த்த ... ... *
கோமுனிக்கணங்களெல்லாங்கூறினவாசிகொற்ற ... ...*
நாமவேற்சனகற்கின்றுநல்வினைபயந்ததென்று ... ... *

(இ-ள்.) பகைவருக்கு அச்சத்தைத்தருகின்ற வெற்றியமைந்த வேலேந்தினனாகிய சனகமகாராசனுக்கு இன்று அவன்செய்தநல்வினைபயன்பட்டதென்று விண்ணோர்கள் கற்பகப்பூமழையைச்சொரிந்தார்கள் மேகங்கள்பொன் மழையைப்பொழிந்தன; பரப்பாகியபெரியகடல்களெல்லாம் பன்மணிதூவி ஆரவாரித்தன, சிறந்தமுனிக்கூட்டங்களெல்லாம் ஆசிகளைக்கூறின-எ-று;

மாலையுமிழையுஞ்சாந்துஞ்சுண்ணமும்வாசநெய்யும் ... ... *
வேலைவெண்முத்தும்பொன்னுங்காசுநுண்டுகிலும்வீசிப் ... *
பால்வளையமுதளாயபல்லியந்துவைப்பமுந்நீர் ... ... *
ஓல்கிளர்ந்துவாவுற்றென்னவொலிநகர்கிளர்ந்ததன்றே... ...*

(இ-ள்.) கீர்த்தியையுடையநகரமாந்தர் பூமலர்மாலைகளையும் ஆபரணங்களையும், சந்தனத்தையும், பரிமளப்பொடிகளையும், வாசனைபொருந்திய நெய்யையும், சமுத்திரத்திலுண்டாகிய வெண்ணிறமுள்ளமுத்தையும், பொன்னையும், மணிகளையும், நுண்ணிழைவாய்ந்த கலையையும் (எதிர்சொல்லினோர்க்கெல்லாம்) ஈந்து வெண்மையாகிய சங்கமும் அமுதத்தின் இனிமைகலந்த பலவாத்தியங்களுமுழக்க முழுமதிஉதிக்கக்கடல்பொங்கி ஒலிமிகுந்தாற்போலக் குதூகலித்தது-எ-று. (௬௭)

நல்லியன்மகரவீணைத்தேறுகநகையுந்தோடும் ... ... *
வில்லிடவாளுங்வீசவேல்கிடந்தனையநாட்டத் ... ... *

தெல்வியன்மதியன்மன்னமுகத்தியரெழுதிவீக்கொன்றத் ... *
சொல்லியபருவநோக்குந்தோகையினாடினாரே ... ... *

(இ-ள்.) வேல்கிடந்தலைத்தெயாத்த கண்களையுடைய பகற்காலத்தும் தன்றன்மை திரியா துலவுகின்ற மதிபோன்ற முகத்தியர்கள் அறிஞர் கூறிய கார்தோன்றுகின்ற காலத்தை நோக்குகின்ற அம்மயில்களைப்போலக் களிப்பாற்றோன்றுகின்ற நூபுரவல் விட்டுவிட்டொளிசெய்யக் காதணிகள் இடைவிடா தொளியைப் வீச (வீதிகளில்) ஆடினார்கள்-எ-று. (௯௮)

உண்ணறவருந்தினர்போற்சிவந்தொளிர்கருங்கண்மாதர் ... ... *
புண்ணுறுபுலவிநீங்கக்கொழுநரைப்புல்லிக்கொண்டார் ... *
வெண்ணிறமேகமென்மேல்விரிகடல்பருகுமாபோல் ... *
மண்ணுறுவேந்தன்செல்வம்வறியவர்முகந்துகொண்டார் ... *

(இ-ள்.) உண்ணுகின்றமதுவை உண்டவருடைய கண்களைப்போலச் சிவந்து ஒளிர்கின்ற கருங்கண்களையுடைய மாதர்கள்மனவருத்தம்பொருந்திய புலவியானது (களிப்பின்மிகுதியால்) நீங்க நாயகரைத்தழுவிக்கொண்டார்கள் வெள்ளைநிறமாகியமேகங்கள் மேலுமேலும் விரிந்தகடல்நீரை உண்ணும்விதம்போல வறியவர்கள் அப்பூமிக்குத்தகுந்த சனகமகாராசனுடைய பொருள்களைமொண்டுகொண்டார்கள்-எ-று. (௯௯)

வயிரியர்மதுரகீதமங்கையரமுதகீதம் ... ... *
செயிரியர்மகரயாழின்தேம்பிழிதெய்வகீதம் ... ... *
பயிரியர்வேயிற்கீதமென்றிவைபருகிவிண்ணோர் ... ... *
உயிருடையுடம்புமெல்லாமோவியமொப்பநின்றார் ... ... *

(இ-ள்.) வயிரியரென்போர் பாடுகின்ற இனிமையாகிய இசையும் மங்கைப்பருவத்தையுடைய வேசையர்கள் பாடுகின்ற அமுதத்தினினிமைபோலும் இனிமையாகிய இசையும் செயிரியரென்போர்வாசிக்கின்ற மகரயாழினின்று இனியதேனிலிரு இனிமைபோலும் இனிமையாகியதெய்வத்தன்மையமைந்த இசையும் பயிரியரென்போர் ஊதுகின்றவேய்ங்குழலின் இசையும் ஆகிய இவற்றைச் (செவியாகியவாயால்) உண்டு தேவர்கள் உயிருடைய உடம்புமுழுமையும் (அந்நகரத்துக்குச்) சித்திரத்தையொக்க அசைவற்று நின்றார்-எ-று. (௱)

ஐயன்வில்லிறுத்தவாற்றல்காணியவமரர்நாட்டுத் ... ... *
தையலாரிழிந்துபாரின்மகளிரைத்தழுவிக்கொண்டார் ... *
செய்கையின்வடிவினாடல்பாடலிற்றெளிதறேற்றார் ... ... *
மையரிநெடுங்கட்கேற்கவிமைத்தலுமயங்கிநின்றார் ... ... *

(இ-ள்.) இராமபிரான் வில்லைமுறித்த தோளின்வலிமையைக் காணும்பொருட்டுத் தேவருலகத்துத்தையலார்கள் இழிந்துசெய்கையினாலும்வடிவினாலும் ஆடல்பாடல்களினாலும் பூலோகத்துப்பெண்களைத் தெரியாதவர்களாய்த் தழுவிக்கொண்டார்கள் மைபெழுதிய செவ்வரிபடர்ந்த நீண்டநோக்க மாதர்கள் இமைகொட்டலும் மயங்கிநின்றார்கள்-எ-று. (௱௧)

செய்கைகளுதவியவற்றாற் றம்மோடொத்துமையுடையராய் இமைத்தலொன்றால் வேற்றுமையுடையராய் நின்றமையின் மயங்கினரென்றார்.

தயரதன் புதல்வனென்பார் தாமரைக் கண்ணனென்பார் ... *
புயலிவன் மேனியென்பார் பூவையும் பொருவுமென்பார் ... *
மயலுடைத் துலகமென்பார் மானிட னல்லனென்பார் .. ... *
கயல்பொரு கடலுள் வைகுங் கடவுளே காணுமென்பார்... ... *

(இ-ள்) (அந்நகர மாக்களிற் சிலர் ஸ்ரீராமபிரானை) தயரதனுடைய புத்திரனென்பார்கள் (சிலர்) தாமரைமலர் போன்ற கண்களையுடையனென்பார்கள் (சிலர்) இவனுடைய திருமேனி மேகநிறமென்பார்கள் சிலர் காயாம் பூவையும் ஒக்குமென்பார்கள் (சிலர்) உலகம் இவன்பாற் காதலையுடையதென்பார்கள் (ஆகலாற் சிலர் மானிடன் அல்லன் என்பார்கள் (சிலர் கயல்மச்சங்கள் பொருகின்ற பாற்கடலிற் றங்குகின்ற இறைவனே ஆமென்பார்கள்-எ-று.

நம்பியைக் காண நங்கைக் காயிர நயனம் வேண்டும் ... ... *
கொம்பினைக் காணுந் தோறுங் குரிசிற்கு மன்னதேயாம்... ... *
தம்பியைக் காண்மி னென்பார் தவமுடைத் துலகமென்பார் ... *
இம்பரிந் நகரிற் றந்த முனிவனை யிறைஞ்சுமென்பார் ... ... *

(இ-ள்.) (சிலர்) ஆணிற் சிறந்தோனுடைய வடிவழகைக் காணப் பெண்ணிற் சிறந்தவளுக்கு ஆயிரங்கண்கள் வேண்டும் என்பார்கள் (சிலர்) பூங்கொம்பை யொத்தவளது வடிவழகைப் பார்க்குந்தோறும் இவ்வரசனுக்கும் ஆயிரம் நயனம் வேண்டும் என்பார்கள் (சிலர் தம்பியினுடைய வடிவழகைப் பாருமென்பார்கள் (சிலர் இவர்களிருக்கப் பெறலால் உலகமானது தவத்தையுடையது என்பார்கள் (சிலர்) இவ்வுலகத்திலுள்ள இந்நகரத்தில் (இவர்களை யாங்காண) அழைத்துவந்த கௌசிகமுனிவனை வணங்குமென்பார்கள் எ-று.

என்பாரென்னும் பல்லோர்படர்க்கை வினைமுற்றை வேண்டும் அன்னதேயாம் என்பவற்றோடும் ஒட்டுக.

இற்றிவணின்னகாக நீதியொடு செல்வி ரீதகப் ... . *
பெற்றுயிர் பின்னுங் காணு மாசையாற் சிறிது பெற்ற ... ... *
சிற்றிடைப் பெரிய கொங்கைச் சேயரிக் கரிய கட்கட் ... ... *
பொற்றொடி மடந்தைக் கப்பா லுற்றது புகலலுற்றாம்... ... *

(இ-ள்.) இவ்விடத்து இவ்வாறு நடவாநின்றது இவ்வாறு நடவா நிற்கச் சக்கிரவர்த்தி திருமகன் இராமன் நீங்கப்பெற்றும் மேலும் (சக்கரவர்த்தித் திருமகனைக்) காண இச்சையினால் உயிராசைசிறிது பெற்ற சிறிதாகிய இடையையும் பெரிய கொங்கைகளையுஞ் செவ்வரிபடர்ந்த கருமையாகிய வாள்போன்ற கண்களையும் பொன்னாலாகிய வளையலையுமுடைய சீதாபிராட்டிக்கு அப்பால் நிகழ்ந்ததைச் சொல்லத்தொடங்கினேம்-எ-று. (௬௪)

அப்பாலென்பது சேஷயர்கள் மலராலுந் தளிர்களாலுஞ் சமைத்த அணையான துன்மேல் இருந்ததாகிய ஆசைத்தீயாற் கரியாநிற்க ஆயிரத்தினிரட்டி யமுத்திற செயலையைதைச் சுட்டிநின்றது.

உலாவியிரினேடு முருகுசூழ் பள்ளி நீந்திப் ... ... *
பாவிமழமகளிர் குழாம் பொருபடவிக்குழடம் ... ... *

காசிறுபுணரியின்பொய்கைச்சந்திரகாந்தமீன்ற... ... ... *
சேதநீர்தெளித்தமென்பூஞ்சேக்கையையரிதிற்சேர்ந்தாள் ... *

(இ-ள்.) சீதாபிராட்டியானவள் உடலினின்றும் போவதும் வருவதுமா யி உற்றுநிலைப்போலாடுகின்ற உயிரினோடும் தீயிற்சேர்ந்தாற்போலத்தன்னு டல் ஒடுங்குகின்ற மலராலமைத்த சயனத்தினின்று நீங்கிப் பசும்பொன்னாற்செ ய்த அணிகளணிந்த இலக்கியர்கள் தன்னைச்சூழ்ந்துவரப்போய்க்குற்றமில்லா த தாமரைகளையுடைய பொய்கையின்கணுள்ள படிகத்தாற்கட்டிய ஒருமா ளிகையில் சந்திரகாந்தக்கல் சிந்தியகுளிர்ந்த நீரைத்தெளித்த மெல்லிய பூ ம்பள்ளியை அருமையோடுசேர்ந்தாள்-எ-று. படிக்கு-வலித்தது. (௬௫)

பெண்ணிவணுற்றதென்னும்பெருமையாலருமையான .....*
வண்ணமும்மலைகளாலேகாட்டலால்வாட்டந்தீர்ந்தேன் ... *
தண்ணறுங்கமலங்காளென்றளிர்நிறமுண்டகண்ணின்... .. *
உண்ணிறங்காட்டிநீரொன்னுயிர்தரவுலோவினீரே ... . *

(இ-ள்.) தண்மையாகிய நறியதாமரைகளே இங்குவந்தவள் ஆண்மகனல் லள்பெண்மகளென்றுகருதும்உம்முடையபெருந்தன்மையால்(காணாத) அருமையான திருமேனிநிறத்தையும் இலைகளாலேகாட்டலால் சோர்வுநீங்கி னேன் மாந்தளிர் நிறத்தைப்போன்ற என்னுடலினிறத்தைப் பார்வையாலு ண்ட இருகண்களிலமைந்த நிறத்தையுமலர்களால்காட்டி நீவிர் என்னுயி ர்போலச்சிறந்த நம்பியைக் (கொண்டுவந்து)தர உலோபஞ்செய்தீர்கள்இ துயாதோவறியேன்-எ-று. (௬௬)

சீராமபிரான் தன்னைநோக்கியகாலையில் தான் அவன்பாற்கொண்ட காதலால் வனப் பழிந்து தன்னுடல்முழுவதும் பசலைபோர்த்தலால் என்தளிர்நிறமுண்ட கண்ணென்றாள் உ யிர்போலச்சிறந்தோனை யுயிரென்றது சிறப்புப்பற்றி. உயர்திணைப்பொருண்மேனின்ற ஈறு கெட்டபெண்ணென்னுஞ்சொல் (சூ) குடிமையாண்மை யிளமைமூப்பே,யடிமைவன்மைவி ருந்தேகுழுவே, பெண்மையரசே மகவேகுழவி, தன்மைதிரிபெய ருறுப்பின்கிளவி, காத ல்சிறப்பே செறற்சொல்விறற் சொலென்றுவருஉமுன்றுமுளப்படத்தொகைஇ யன்னபிறவும வற்றொடுசிவணி முன்னத்தினுணருங் கிளவியெல்லாமுயர்திணைமருங்கி னிலையினவாயினு மஃறி ணைமருங்கிற் கிளந்தாங்கியலு மென்பதனாலுற்றதென அஃறிணைமுடிபுகொண்டது. என்னெ ன்பது அறியாப்பொருட்கண்வந்தது. (சூ) யாதெவனென்னுமாயிருகிளவியு மறியாப்பொரு ள்வயிற் செறியத்தோன்று மென்பவாகலின்.

வேறு.

நாணுலாவுமேருவோடுநாணுலாவுயாணியும் ... ... *
தூணுலாவுதோளுநம்வாளியூறலாவுதூணியும் ... ... *
வாணிலாவினூலுலாவுமாலைமார்புமீளவும் ... ... *
காணலாகுமாகினுவிகாணலாகுமேகொலாம்... ... ... *

(இ-ள்) (தோளினழகைக்கண்டு) நாணமமைந்த மேருவையொத்த வில் லோடு (அதன்) நாணி தங்கியதிருக்கரத்தையும் எழுத்தூண்போலமைந்த பருத்துநீண்டதோள்களையும் அம்புகள் உள்ளேநிறைந்தபுட்டிலும்ஒளியா கிய சந்திரிகையைப்போல வெண்மையும் ஒளியுமுடைய முப்புரிநூல் அ சைகின்ற மாலையணிந்தமார்பையும் மறுபடியுங்காணக்கூடுமாயின் என்னு

யின (மூன்னிலைமையுடையதாகச்)சாணக்கூடும் (இல்லாவிடின் இழப்பேன்) எ-று. எ கொல்ஆம்-அசை. (சஎ)

விண்டலங்கலந்திலங்குதிங்களோடுமீதுசூழ் ... ... *
வண்டலம்பலங்கறங்குபங்கியோடுவார்சிலைக் ... ... *
கொண்டலொன்றிரண்டுகண்ணின்மொண்டுகொண்டவென்றுயிரை... ... *
உண்டதுண்டெனெஞ்சினின்றதுண்டதென்றதுண்டரோ ... ... *

(இ-ள்.) ஆகாயத்தினிடத்திலே சேர்ந்து விளங்குகின்ற சந்திரனோடும் (தேனுண்ண அதன்மேல்சூழ்ந்து வண்டுகளொலிக்கின்ற மலர்மாலைதங்கிய சிகையோடும் வந்து) நீண்டசிலையைத்தாங்கிய ஒருமேகமானது தன்னிரண்டுகண்களினாலே என்னுயிராகியநீரை மொண்டுகொண்டுஉண்டதுண்டு அதுஎன்னுடையநெஞ்சில் இன்றும் நிலைத்திருக்கிறது என்றும்நீங்காது)

பஞ்சரங்குதீயினூடுபற்றநீறுகொற்றவில் ... ... *
வெஞ்சரங்களஞ்சரங்கவெய்யகாமனெய்யவே... ... ... *
சஞ்சலங்கலந்தபோதுதையலாரையுய்யவந் ... ... *
தஞ்சலஞ்சலென்கிலாதவாண்மையென்னவாண்மையே ... ... *

(இ-ள்.) கொடியகாமன் வெற்றியமைந்த நீண்டவில்லினின்றும் வெவ்விய சரங்களைப் பஞ்சுசையழிக்கின்ற தீயைப்போல(என்னுடைய) உயிரைப்பற்றவும் நெஞ்சுஅழியவும் எய்வதினால்சஞ்சலத்தையடைந்தபோது தையலாரிடத்தில் பிழைக்கும்படிவந்து அஞ்சாதே அஞ்சாதே என்று சொல்லாத ஆண்மை என்னஆண்மை-எ-று. (சகூ)

தையலார்-சாதிப்பன்மை. அடுக்கு-விரைவு. ஆண்மை-பெருமையுமாம்.

இளைக்கலாதகொங்கைகாளெழுந்துவிம்மியென்செய்தீர்... ... ... *
முளைக்கலாமதிக்கொழுந்துபோலும்வாண்முகத்தினான்... ... ... *
வளைக்கலாதவிற்கையாளிவள்ளன்மார்பினுள்ளுறத் ... ... *
திளைக்கலாகுமாகிலானசெய்தவங்கள்செய்மினே... ... ... *

(இ-ள்.) (நினைக்குந்தோறும்) இளைக்காமல் பூரிக்கின்ற கொங்கைகளே உயர்ந்துபருத்து (அதற்குத்தகுதியாக) யாதுசெய்தீர்கள் உதித்தலையுடைய கலைகள்நிறைந்த மென்மையாகியசந்திரனைப்போல்கின்ற தண்ணொளிவாய்ந்த முகத்தையுடையானாகிய வளைக்காதவில்லைக்கையிற்பிடித்த(நடையாற்)சிங்கத்தையொத்த அவ்வள்ளலுடையமார்பிற்பொருந்த அநுபவித்தல் தக்கதாயின் அதற்குத்தக்க செய்தற்குரிய தவங்களைச்செய்யுங்கோள்-எ-று. (ரு௰)

எந்துநின்றெழுந்ததிங்களிந்துவந்ததென்கொலா ... ... *
அந்தியந்தனந்தனைத்தவம்பின்வந்தசிந்தைநோய்... ... ... *
பொந்துகின்றகொங்கைமேல்விடம்பொழிந்ததென்னினும் ... ... *
சந்துசந்தனங்களன்றுதங்களங்கமில்லையே ... ... *

(இ-ள். இந்தச்சந்திரன் (இந்நாள்வரையும்) எவ்வுலகத்திலே தங்கியிருந்து (இவ்வுலகத்தில் இந்நேரப்பகலிலே) உதித்தது அவ்வாறுவந்து, உருவிலி

யாகிய பன்மதன் என்னெஞ்சிலேநடையாடி அங்கேதங்கியிருந்து எய்த அம்பினாலே உண்டாகிய பலமாத்திரைக் கணிகழுகின்ற காமநோய் பொங்கி வருகின்ற கொங்கைகளின்மேல் நிலவாகிய) விடத்தைச் சொரிந்ததாயினும் தன்னிடத்தீதுகளைக் கொள்ளாதில்லாமையால் நேற்றையிரவிலே வந்த சந்திரன் அன்று.

எழுந்து இருந்து இனிப்பொழியா தொழிபாதெனத் தெளிந்தமையின் எதிர்காலம் இறந்தகாலத்தாற் கூறப்பட்டது-ஈ- வாராக்காலத்து வினைச்சொற்கிளவி யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத்தோன்று மியற்கையுந்தெளிவுங் கிளக்குங்காலை, என்பவாகலின். தாங்கிடப்பது தாமரையின் பொய்கைப்பளிக் நமாட்டந்துச் சந்திரகாந்தமென்ற சீதநீர்தெளிந்த மென்பூஞ் சேக்கைபாலலானும் சேடியர்கள் செய்யாநின்ற கைத்தியோபசாரத்தானும் வெங்கதிர்தண்கதிராய்த்தோன்றலி னிவ்வாறுகூறினான்.

அடர்ந்துவந்தணங்கனென் றசழல் துமிந்தாய்பெனும் ... ... *
இடந்துடைந்தமெய்யினின் றுவெந்திடாதெழுந்துவெங் ... ... *
கடந்துதைந்தகாரியானையன்னகாளைவாலடைந் ... ... *
துடன்றொடர்ந்துபோனவாவிவந்தவாவெனுள்ளமே... ... ... *

(இ-ள்.) உள்ளமே உருவிலியானவன் நெஞ்சுகொதித்து (என்னை) நெருங்கிவந்து சாவுகின்ற அம்பெனும் பிடத்தியிற்றுழ்ந்தேபத்தகத்திலே வெளமத்தில் தொடுத்து நடையால் வெம்மையாகிய மதப் நிறைந்தகரியபாகியயானையைப்போர்க்க கட்டிளமையுடையோனைக் காலின்வழியடைந்து அக்காளையொடுதொடர்ந்து சென்ற உயிரானது (அக்குறிநின்றொழியாமல்) மீண்டுவந்தவாறு யாதுகாரணம்-எ-று. (௯உ)

மின்றுளைபெழுந்தமேகமார்பிறாவிசும்பினிற்றெடும் ... ... *
மன்றுளைபிறந்தநெறுதன்னைவந்துப்பானடைந்தனர் .. .. *
என்றுமேயிருந்தபோதும்யாவரொன்றுநேரிலேன் ... ... *
என்றுமேயிருந்தபோதுமென்கொல்காண்கிலாதவே ... ... *

(இ-ள்.) ஆகாயத்திலே யெழுந்த மேகம் தன்பார்பிற்றங்கிய மின்னலாகிய ரூப்புநிறாலோடு இம்மண்ணுலகத்திலே யிழிந்தாற்போலக் (உலகமிட்டத்தருமே) வந்தெதிரேயடுத்தானவர் என்னுள்ளத்திலேயிருந்தபோதும் யாவரென்று அறிந்திலேன் (அதுநிற்க,) கண்ணுக்கெதிரேயிருந்தபோதும் (எத்தன்மையுடையாரென்று) காணுதொழிந்தது என்னஅதிசயம்-எ-று. ()

பெய்கடற்பிறந்தபல்பிறக்கொணாமருந்துபெற் ... ... *
றையபொற்கலத்தொடு மங்கைவிட்டிருந்தவாதர்போல் ... ... *
மொய்யிடைக்குமன்னைநீரும்முயங்கிடாதுமுன்னமே... ... ... *
கைகடக்கவிட்டிருந்துகட்டுரைப்பதென்கொலோ ... ... *

(இ-ள்.) (வாசிப்பின்கண்) பிறர்கொண்டுதருகின்ற பாற்கடலிலேபிறந்து மற்றையிடத்திற்பிறக்கமுடியாத அமுதத்தை (முயற்சியின்றிப்) பெற்று உடனே அதனைப் புசியாமல்) அழகிய பொன்வட்டிலோடு அவ்வமுதத்தை அகங்கையினின்றும் விட்டிருந்தவரைப்போல வருந்தவிய அத்தன்மையோனை உடம்புசேர்க்கவும் (நெருங்கிப்போதே) தழுவாமல் நமதுவசத்தினி

ன்றம்பறத்திற்செல்லவிட்டிருந்து உறுதிமொழிகளைச்சொல்லியிருந்த பா ங்கியாகு-எ-று. (௩௪)

என்றுகொண்டிணைந்துறைந்திரங்கிவிம்மிவிம்மியே ... ... *
பொன்றிணித்தகொங்கைமங்கையிடரிலுழந்துபோந்தினிவாய்த்... ... *
குன்றமன்னசிலைமுரித்தகொள்கைகொண்டு குளிர்மனத் ... ... *
தொன்றுமைக்கண்மதிமுகத்தொருத்திசெய்ததுரைசெய்வாம்... ... *

(இ-ள்) பொற்கச்சிறுவிறுக்கிய கொங்கைகளையுடைய சீதாபிராட்டி,எ ன்றுநினைந்து உள்ளம்பலகாலும் நைந்துஇரங்கி அவ்வாறுவிம்மித்துன்பக் கடலில்முழுகுகின்ற காலத்தில் மலையையொத்த உருவும் ஆற்றலுமமைந்த வில்லொடிந்தசெய்தியைக்கொண்டு மனத்தில் களிப்பைப்பொருந்திய மை யுண்டகண்ணையுடைய மதிபோன்ற முகத்தையுடைய ஒருசேடி செய்ததை ச்சொல்லுவாம்—எ-று. (௩௫)

அடுக்கிரண்டும் ஒருதொழில் பலகாலிகழ்தற்பொருள். தன்னிறைவிக்கு மணமின்மை யைப்பற்றித் துன்பத்தால் வெதும்பிக்கொண்டிருந்த மனத்தளாகலின் இப்போது குளிர் மனத்தொன்றுமொருத்தியென்றார்.

வேறு.

வடங்களுந்துகில்களும்வானவில்விடத் ... ... *
தொடங்குபகலைகளுங்குழலுஞ்சோர்தர ... *
நுடங்கியமின்னெனநொய்தினெய்தினாள்... ... *
நெடுந்தடங்கிடந்தகண்ணீலமாலையே ... ... *

(இ-ள்) விசாலந்தங்கிய நீண்டகண்களையுடைய நீலமாலையென்பவள் (ப லவகைமணிகளாலமைந்த) வடங்களும் துகில்களும் இந்திரதநுவைப்போ லொளிவீச அவிழத்தொடங்கி ஆடையும் உத்தராசங்கமும் கூந்தலுஞ் சரி யத்துவளுகின்ற மின்னலைப்போல (உடல்துவளப்) பிராட்டியின்பக்கல் வி ரைவில்வந்தாள்—எ-று. (௩௬)

வந்தடிவணங்கிலள்வழங்குமோதையள் ... ... *
அந்தமிலுவகையளாடிப்பாடினள் ... ... *
சிந்தையுண்மகிழ்ச்சியும்புகுந்தசெய்கையும் ... *
சுந்தரிசொல்லெனத்தொழுதுசொல்லுவாள் ... *

(இ-ள்) (நீலமாலையாமவள் பிராட்டிபக்கல்) வந்து முடிவில்லாதகளிப் பையுடையவளாய்ப் பாதங்களைவணங்காமல் ஆரவாரித்துத் (தன்தலைவிக்கு ச்சோபனம்) பாடிநடித்தனள் (அதுகண்டு) சுந்தரத்தையுடையாளாகிய பி ராட்டியாமவள் நின்னெஞ்சிலமைந்த உவகையையும் (அதற்குக்காரணமா யப்) போந்தசெய்தியையும் சொல்லென்று கட்டளையிடப் பின்தொழுது சொல்லுவள்—எ-று. (௩௭)

கயாதனுராகமாக்கடலின்கல்வியன் ... ... *
தயரதனெனும்பெயர்த்தனிச்செங்கோலியான் *
புயல்பொழிதடக்கையான்புதல்வன்பூங்கணை ... *
மயல்விளைமதனற்கும்வடிவுமேன்மையான் ... ... *

(இ-ள்.) யானைதேர்குதிரை (காலாள்க) ளாகிய அளவிடப்படாத சேனைச் சமுத்திரத்தையுடையானும் நிறைந்த கல்வியாளனும் மேகத்தைப்போலக் (கைம்மாறுகருதாது) வரையாதுகொடுக்குங்கையையுடையானுமாகிய (பொதுவறத் தனிமையாய்) நிலமுழுதுஞ் செல்லுகின்ற சக்கரத்தையுடையதயரதனென்னும் பெயரானுக்குப் புதல்வன் மலரம்பினால் (எல்லாவுயிர்களுக்கும்) காமத்தைஉண்டாக்குகின்றமன்மதனைப்பார்க்கினும் அழகுசிறந்தோன்

தயரதனென்பது - தவசிகனென்றாற்போல்வது. காலாளென்பது - இனமாதலினுடன் கூறப்பட்டது. கைந்தலம் விதிர்த்தனனென்பதில் சினைப்பெயர்போல வடிவுமேன்மையான் னென்பதில் பண்புநின் முயர்திணைகொண்ட வழுவமைதி.

மராமரமிவையெனவலியதோளினான் ... ...*
அராவணையமலனென்றயிர்க்குமாற்றலான் ... *
இராமனென்பதுபெயரிளையகோவொடும்... ...*
பராவருமுனியொடும்பதிவந்தெய்தினான் ... ...*

(இ-ள்.) (கண்டோர்) இவைமராமரங்களென்றுசொல்லவலிமையமைந்த தோள்களையுடையான் அராவணையில் (துயில்கின்ற) மலரகிதனாகிய திருமால் இவனெனச்சந்தேகிக்கும் வலியையுடையான் (அவனுக்கு) இராமனென்பதுபெயராகும் தன்தம்பியோடும் (யாவரும்) துதிக்கின்ற ஒருமுனிவனோடும் நமதுநகரத்தில்வந்துசேர்ந்தான்—எ-று. (நிக)

பூணியன்மொய்ம்பினன்புனிதனெய்தவில்... ...*
காணியவந்தனனென்னக்காவலன்... ... ... *
ஆணையினடைந்தவில்லதனையாண்டகை ... ... *
நாணினியேற்றினனடுங்கிற்றும்பரே ... ...*

(இ-ள்.) வலயமாகிய பூணணிந்த தோள்களையுடையானாகிய அச்சிராமபிரான் பரிசுத்தனாகிய சிவனெய்தவில்லைத் (தன்தாமரைக்கண்களினால்) காணவந்தானென்று முனிவன்கூற, நம்மரசனுடையகட்டளையினாலடைந்தவில்லை அப்பருமோத்தமன்வருத்தமின்றி நாணேற்றினான் மேலுலகமும் நடுக்கியது—எ-று. (சுய)

உயர்வுசிறப்போ டிறந்தததுதழீஇயதன்கண்வந்த வும்மைதொக்கது.

மாத்திரையளவினாண்மடுத்துமுன்பயில்... ... *
சூத்திரமிதுவெனதோளின்வாங்கினான்... ... *
ஏத்தினரிமையவரிழிந்தபூமழை ... ...*
வேத்தவைநடுக்குறமுறிந்துவீழ்ந்ததே... ... *

(இ-ள்) முன்தான்கைபாடியசூத்திரம் இதுவென்னும்படி ஒருமாத்திரையளவிலே தாளரல்மிதித்து தோளினால்வளைத்தான் தேவர்கள் (தோள்வலியைப்) புகழ்ந்தார்கள் (அவர்கள்சொரிந்த) கற்பகப்பூமழைவீழ்ந்தன வேத்தவையிலுள்ளார்கள் நடுங்க (அவ்வில்) முறிந்துவீழ்ந்தது—எ-று. அவை ஆகுபெயர். (சுக)

கோமுனியுடன்வருகொண்டலென்றபின்... ...*
தாமரைக்கண்ணினனென்றதன்மையால் ... ...*

ஆமவனேகொலென்றையநீங்கினாள் ... ... *
வாமமேகலையினுள்வளர்ந்ததல்குலே ... ... *

(இ-ள்) சிறந்தமுனிவனோடுவந்த மேகம்போல்வானென்று சொன்னபின் தாமரைக்கண்ணினனென்றதன்மையினால் இவன் அன்னமாடுமுன்றுறைக்கண்நின்ற) அந்தம்பியேயாமென்றுதேறினாள் (உடனே)அழகியமேகலையினுள் அல்குல்வளர்ந்தது—எ-று. (௬௨)

வளர்ந்ததல்குலென்றது வேட்கையின்பெருக்கக்குறிப்பு.

இல்லையேநுசுப்பென்பாருமுண்டென்னவு ... *
மெல்லியன்முலைகளும்விம்மவிம்முவாள் ... *
சொல்லியகுறியினத்தோன்றலேயவன் ... ... *
அல்லனேலிறப்பெனென்றகத்துளுன்னினாள் ... *

(இ-ள்.) இடையேயில்லையென்று முன்னேசொல்பவர்களும் (இப்போது) உண்டுஉண்டென்று துணிய மற்றை உறுப்புகளையன்றி மெல்லிய தன்மையையுடைய கொங்கைகளும்பூரிக்க விம்முகின்ற பிராட்டியானவள் (நீலமாலையென்னுஞ்சேடி) சொல்லியகுறிகளால் அவ்வரசிளங் குமரனேயாகும் அவனல்லானாயின் இறப்பேனென்றுநெஞ்சில் எண்ணித்துணிந்தாள்-எ-று. (௬௩)

ஏகாரமிரண்டனுள் முன்னையதுதேற்றமும் பின்னையதுபிரிநிலையுமாம். அடுக்குதுணிவுப்பொருட்டு.

ஆசையுற்றயர்பவளன்னளாயினள் ... ... *
பாசடைக்கமலத்தோன்படைத்தவில்லிறும் ... *
ஓசையிற்பெரியதோருவகையெய்தியக் ... ... *
கோசிகற்கொருமொழிசனகன்கூறுவான் ... ... *

(இ-ள்.) (ஸ்ரீராமபிரான்மேல்) ஆசையுற்றுச்சோர்கின்ற பிராட்டியானவள் அத்தன்மையளாயினாள் சனகமகாராசன் பசுமையாகிய இலைகளையுடைய தாமரைமலரில் வசிப்பவனாகிய பிரமன்படைத்த வில்முறிந்த ஓசையினால் ஒப்பற்றமிகுதியாகிய களிப்பையடைந்து அவ்விசுவாமித்திரமுனிவருக்கு ஒருமொழிகூறுவான்—எ-று. (௬௪)

தாளின்மடுத்ததும் நாணுதிவைத்ததும் கடுப்பினின்நோக்கிலனாதலின் ஓசையிற்பெரியதோருவகையெய்தியென்றும், உவகையெய்தற்குக் காரணனாகலி னக்கோசிகனென்றுங்கூறினார்.

உரைசெயெம்பெருமவுன்புதல்வன்வேள்விதான் . *
விரைவினின்றொருபகன்முடித்தல்வேட்கையோ. *
முரைசெறிந்ததிர்கழன்முழங்குதானையவ் ... ... *
வரைசையுமிவ்வழியழைத்தல்வேட்கையோ ... ... *

(இ-ள்.) எம்முடையபெருமானே நின்புத்திரனாகிய இந்நம்பியினது திருக்கலியாணம் விரைவிலே இன்றொருநாளில் முடித்தல்விருப்பமோ(எங்கும்) மணப்பறைசாற்றுவித்து,ஒலிக்கின்ற வீரக்கழலணிந்தமுழங்குகின்ற சேனையையுடைய அத்தசரதசக்கரவர்த்தியையுமிவ்விடமழைத்துமுடித்தல் விருப்பமோ சொல்லியருள்—எ-று. (௬௫)

விஞ்சைகளிரண்டும் தெய்வப்படைக்கலங்களு மளித்த ஆசிரியராகலின் நின்புதல்வ னொன்று மிவனைப்பெற்ற பெரும்பாக்கியத்தனாகலி னவ்வரசையுமென் றுங்கூறினான்.

மல்வலானவ்வுரையகாமாதவன் ... ...*
ஒல்லையிலவனும்வந்துறுகவென்றென ... ... *
எல்லையிலுவகையானிறைந்தவன்னெலாஞ் ... ... *
சொல்லுகென்றோலையுந்தூதும்போக்கினான் ... *

(இ-ள்.) மற்போரில்வல்லோனாகிய சனகமகாராசன் அச்சொற்களைச்சொல்லக் (கேட்ட) கௌசிகமுநிவர், அச்சக்கரவர்த்தியும் (இங்கு) விரைவில்வந்துசேர்தல் நல்லதென்றுகூற எல்லையில்லாத மகிழ்ச்சியுடையவன், நடந்தவிதமெல்லாவற்றையும் சொல்லுகவென்று தூதுவரையும் திருமுகத்தையு மனுப்பினான்—எ-று. (௬௬)

௰௩-வது-கார்முகப்படலம் முற்றிற்று.

௰௪-வது-எழுச்சிப்படலம்.

கடுகியதூதருங்காலிற்காலிற்சென் ... ... *
றிடிகுரன்முரசதிரயோத்தியெய்தினார் ... ... *
அடியிணைதொழுமிடமன்றிமன்னர்த ... ... *
முடியொடுமுடியொருவாயின்முன்னினார் ... ...*

(இ-ள்.) விரைந்ததூதர்களும் காற்றுச்செல்வதுபோலக் கால்களினாற்சென்று இடியோசைபோல முரசொலிக்கின்ற அயோத்தியைச் சேர்ந்தவர்களாகிச் (சக்கரவர்த்தியினுடைய) பாதங்களைத்தொழுகின்ற இடத்திலல்லாமல் (ஒழிந்தவிடமெங்கும் குறையிரப்பவந்த) அரசர்களுடைய முடியோடு முடி மோதுகின்றவாயலின்முன் சென்றார்கள்-எ-று. (௧)

அரசனது கட்டளையானன்றிப் பிராட்டிக்குத் திருமணமுடிதல் வேண்டுமென்னுங் கருத்தாற் றூதேவிரைகின்றனராதலி னவ்விரைவுபற்றிக் கடுகியதூதரென நிகழ்காலமிறந்தகாலமாயிற்று, வாராக்காலத்து நிகழுங்காலத்து மோராங்குவரூஉம் வினைச்சொற்கிளவி யிறந்தகாலத்துக்குறிப்பொடுகிளத்தல் விரைந்தபொருள வென்மனார்புலவர் என்பது சூத்திரமாகலின். இடிகுரலென்ப தில்ககரந்தொக்கது.

முகந்தனர்திருவருண்முறையினெய்தினார் ... *
இகந்தொளிர்கழலிணைதொழுதுசெல்வனைப் ...*
புகழ்ந்தனரரசநின்புதல்வர்போயபின் ... ... *
நிகழ்ந்ததையிதுவெனநெடிதுகூறினார் ... ...*

(இ-ள்.) (சக்கரவர்த்தியினுடைய) சிறந்த அருளுப்பாட்டை முற்ற அடைந்து (தமக்குத்தக்க) முறைமையோடுசேர்ந்து (வீரக்கழல் முதலியவணிகளால் மிகவும் ஒளிர்கின்ற இரண்டுபாதங்களையுந் தொழுது செல்வமிகுதியுடைய தயரதனைப்புகழ்ந்து அரசனே நின்புத்திரர்கள் (அயோத்தியினின்றும்) போனபின் இன்னதென்று நடந்தவரலாற்றைப்பலவாக்கூறினார்கள்.

கூறியதூதருங்கொணர்ந்தவோலையை... ... *
ஈறில்வண்புகழினாயிதுவதென்றனர் .. ..*
வேறொருபுலமகன்விரும்பிவாங்கினான்... ... *
மாறதிர்கழலினான்வாசியென்றனன்... ... .. *

(இ-ள்.) அவ்வாறுசொன்னதூதர்கள் தாங்கொண்டுவந்த திருமுகத்தைக் காட்டி முடிவில்லாத வளமையான புகழையுடையாய் இதுவும் அவ்வரலாற்றையெழுதியதென்றனர் (அரசனுக்கயலிலநின்ற) வேறொருகல்வியறிவாளன் ஆதரத்தோடுவாங்கிநின்றான் (ஒன்றற்கொன்று) மாறுகவொலிக்கின்றவீரக்கழல்களையுடைய தசரதசக்கரவர்த்தி வாசியாயென்றுகட்டளையிட்டான்-எ-று.

வேறொருபுலமகனென்பதை அரசனின்வேறாகிய ஒருபுலமகனெனக்கொள்க.

இலைமுகப்படைத்தவனெழுதிக்காட்டிய ... ... *
தலைமகன்சிலைத்தொழில்செவியிற்சார்தலும்... ... *
நிலைமுகவலயங்கணிமிர்ந்துநீங்கிட... ... ... *
மலையெனவளர்ந்தனவயிரத்தோள்களே ... *

(இ-ள்.) சனகமகாராசனும், கௌசிகமுனிவரும் ஓலையாகியபட்டத்தின்கண் எழுதித்தெரிவித்த தன்முதற்புத்திரனுடைய விற்றொழிற்செய்தி தனது செவியிற்சார்ந்தமாத்திரத்தில் (தம்பால்) நிலைத்த இடம்பெற்ற தோளணிகள் வளைவுநிமிர்ந்து கழலமலையினதுருவத்தைப்போலப் பூரித்தன உறுதியாகியதோள்கள்-எ-று. (௪)

வளர்ந்தன வயிரத்தோள்களென்பது-வளர்ந்ததல்குலென்பதுபோலவந்தது.

வெற்றிவேன்மன்னவன்றக்கன்வேள்வியிற்... ... *
கற்றைவார்சடைமுடிக்கணிச்சிவானவன்... ... *
முற்றவேழுலகையும்வென்றமூரிவில் ... ... *
இற்றபேரொலிகொலன்றிடித்ததின்றென்றான் ...*

(இ-ள்.) வெற்றிவேலையுடைய சக்கரவர்த்தி (தன்பக்கத்தாரைநோக்கித்) தொகுதியாகிய நீண்டசடைமுடியையும் மழுப்படையையுமுடைய சிவன் தக்கனுடையவேள்வியில் (வந்திருந்த) எழுலகத்தாரையுமுழுமையும் வென்ற வலியமைந்த வில்லானதுமுறிந்த பேரோசையோ அற்றைத்தினம் இங்க இடிபோலொலித்ததென்று சொன்னான்-எ-று. (௫)

கணிச்சிவானவன்வென்ற மூரிவில்லென்பது இயற்றினான்றொழில் தலைமைபற்றி ஏவுவித்தோன்மேனின்றது.

என்றுரைத்தெதிரெதிரிடைவிடாதுநேர்... ... *
துன்றியகனைகழற்றூதர்சொல்லெனப் ... ...*
பொன்றிணிகலன்களுந்தூசும்போக்கினான் ... *
குன்றெனவுயரியகுவவுத்தோளினான் .. ..*

(இ-ள்.) மலையினதுயர்வைப்போல உயர்ந்த குவிவாகிய தோள்களையுடைய சக்கரவர்த்தி வசிட்டர்முதலியோரைநோக்கி இவ்வாறுபலகாற்கூறித் தன்முன்னெநெருங்கிய ஒலிக்கின்ற கழலையணிந்ததூதுவர்கள் சொல்லிவ

ன்ற பொன்னாற்றிணிர்த அணிகலன்களையும் உயர்ந்தவத்திரங்களையும் இடைவிடாமற் கொடுப்பித்தான்-எ-று. (௬)

என்றென்பது மேலைச்செய்யுளைத் தொடர்ந்துநின்றமையின் இவ்வாறென்றும் எதிரொன்றமையின் வசிட்டர்முதலியோரைநோக்கி யென்றும் அசைசொல் உரைத்தென்பதற்கு விசேடணமாய்ப் பன்மைப்பொருட்டா யடுக்கிநிற்றலிற் பலகாற்கூறியென்றமை அரசர்க்கரசனாயினோன் இழிந்தோர்க்குத் தன்கரத்தாலீதல் மரபன்றென்றுபோக்கினானென்றமையிற் கொடுப்பித்தானென்றும் பொருள்கூறலாயிற்று.

வானவன்குலத்தெமர்வரத்தினால்வரும் ... ...*
வேனில்வேளிருந்தவம்மிதிலைநோக்கிநஞ் ... ...*
சேனையுமரசருஞ்செல்கமுந்தெனு ... ...*
ஆனைமேன்மணமுரசறைகென்றேவினான் ... ...*

(இ-ள்) சூரியனுடையகுலத்தில்வந்த எம்முன்னோர்செய்த தவப்பேற்றால் அவதரித்த வசந்தகாலத்திற்குரிய மதனென்னும் சீராமபிரான் இருக்கின்ற அழகிய மிதிலையைநோக்கி நம்முடையசேனையும் அரசர்களும் முன்னே செல்கவென்று யானையின்மேல் மணமுரசு கொட்டுகவென்று கட்டளையிட்டான்-எ-று. (௭)

வானவனென்பது சூரியனுக்கு வானத்தின்கணியங்குங்காரணத்தால்தலைமைபற்றியபெயர், வேளென்பது-காதல்பற்றிவந்தது. சீராமபிரானிருத்தலினால் மிதிலை அழகுவாய்த்ததென்பான் அம்மிதிலையென்றான்-இருந்த எ-து-காரணப்பொருட்டு,

வாம்பரிவிரிதிரைக்கடலைவள்ளுவன் ... ...*
தேம்பொழிதுழாய்முடிச்செங்கண்மாலவன் ... *
ஆம்பரிசுலகெலாமளந்துகொண்டநாள் ... *
சாம்புவன்றிரிந்தெனத்திரிந்துசாற்றினான் ... ...*

(இ-ள்.) தேனைச்சொரிகின்ற துளவமலர்மாலையணிந்த முடியையுடைய செங்கண்மால் தக்கவண்ணமா யுலகெலாமளந்து தன்வயப்படுத்திய நாளில் சாம்புவன் திரிந்துசாற்றினாற்போல வள்ளுவன் தாவுகின்றகுதிரையாகியவிரிந்த அலைகளையுடைய படைக்கடலைச்சூழ்ந்து (அக்கட்டளையைமணமுரசு) சாற்றித்தெரிவித்தான்-எ-று. (௮)

சாற்றியமுரசொலிசெவியிற்சாருமுன் ... ... *
கோற்றொடிமகளிருங்கோலமைந்தரும் ... ... *
வேற்றருகுமரரும்வென்றிவேந்தருங் ... ... *
காற்றெறிகடலெனக்களிப்பினோங்கினார் ... ...*

(இ-ள்.) சாற்றிய முரசினதொலியானது (தம்முடைய) செவியிற்படுமுன்னே (அந்நகரத்திலுள்ள) அழகியதொடியையணிந்த மகளிர்களும் (அவர்களுடைய அழகியநாயகர்களும் பகைவருடைய மார்பின்கண் வேலையழுந்துகின்ற இராசகுமாரர்களும் வெற்றியையுடைய அரசர்களும் காற்றினாலெறியப்பட்ட கடல்பொங்கினாற்போலக் களிப்பிற்பொங்கினார்கள்-எ-று.

மகளிருமைந்தருமென்றது அரசரொழிந்த ஏனையோரை. மகளிரென்பது வேந்தரென்பதனோடுங்கூட்டி அரசமகளிருமெனப் பொருளுரைத்துக்கொள்க. மைந்தரென்பது கண்

டுக்கண வரையுணர்த்திற்று. இறைவனைத் திருமகன் மைந்தனெனச் சடகோபர் கூறியதனு லுமுணர்க.

விடைபொருநடையினான்சேனைவெள்ளமோர்... *
இடையிலையுலகினிலென்னவீண்டிய ... ... *
கடையுகமுடிவினிலெவையுஞ்சாற்படப் ... ... *
புடைபெயர்கடலெனவெழுந்துபோயதே .. *

(இ-ள்.) இடபத்தினது நடையையொத்த நடையையுடைய சக்கரவர்த்தியினது சேனைவெள்ளம் கடையாகியயுகமுடிவினில் எப்பொருள்களுங் காற்றினால் (பசையற்றுச்) சாயப் (பின்) உலகத்திலே சிறிதிடமுமில்லையென்னும்படி ஒருசோர்நிலையினின்றும் பெயர்கின்றகடலென வெழுந்துபோனது என்றவாறு. (௰)

சில்லிடமுலகெனச்செறிந்தசேர்கடாம் ... ... *
டல்விற்சுடரெனப்பொலிந்தவேந்தரால் ... ... *
எல்லிகதிர்மணியெறிக்குமோடையால்... ... *
வில்லிடுமுகிலெனப்பொலிந்தவேழமே... ... *

(இ-ள்.) பூமியானது சிறிதிடத்தையுடையதென்னும்படி நெருங்கிய தேர்கள் தம்மேல் வீற்றிருக்கின்ற அரசர்களால் உதயமாகின்றசூரியனைப்போலவிளங்கின. ஒளிர்கின்ற கிரணங்களையுடைய மணிகள் ஒளிவீசுகின்ற முகத்திலணிந்த) பட்டத்தினால் இந்திரதனுவிட்டமேகம்போல யானைகள் விளங்கின-எ-று. (௰௧)

விளங்குதற்கண்வந்த எல்லென்னுஞ்சொல்லை ஆசிரியர் தொல்காப்பியனார் இடைச்சொலென்பர். சிறிதிடமுலகென்னாது சில்லிடமுலகென்றது வழக்காறுபற்றிவந்த மரபுவழுவமைதி.

கால்விரிந்தெழுகுடைக்கணக்கிலோதிமம் ... ...*
பால்விரிந்ததுவெனப்பறப்பபோன்றன... ...*
மேல்விரிந்தெழுகொடிப்படலைவிண்ணெலாந் ..*
தோலுரித்துறுவனபோன்றதோன்றுமால் ... *

(இ-ள்.) காம்பினின்றும் எழுந்துவிரிகின்ற வெண்குடைகள் பால்பரந்ததுபோலப் பறப்பனவாகிய எண்ணில்லாத அன்னங்களைப்போன்றன, ஆகாயத்தில் விரிந்தெழுந்தகொடிக்கூட்டங்கள், விண்முழுமையும் (அவற்றின் சூலங்களால் கீறுண்ண) உரிந்து சிந்துவனவாகிய தோல்களை ஒத்துத்தோன்றும்-எ-று. (௰௨)

நுடங்கியதுகிற்கொடிநுழைக்கைக்கம்மலை... ... *
கடங்கலுழ்சேனையைக்கடலிதாமென .. .. *
இடம்படவெங்கணுமெழுந்தவெண்முகில் ... ... *
தடம்புனல்பருகிடத்தாழ்வபோன்றவே... ... *

(இ-ள்.) ஆடுகின்ற சீலைக்கொடிகள் நுட்பமாகிய கையையுடைய மலையுருவை ஒத்த உருவத்தையுடைய யானைகளினது மதமொழுகுகின்ற சேனையைக்(கண்டு) இதுகடலென்று பாய்பாக (ஆகாய) மெங்கும் எழுந்தனவாகிப் பெருநீரை உண்ணுதற்குத் தாழ்வனவாகிய வெண்மேகங்களை ஒத்தன.)

இழையிடையிளவெயிலெறிக்குமவ்வெயி … … *
லிழையிடைநிழல்கெடத்தவழுமத்தழை … … *
மழையிடையெழில்கெடமலருமம்மழை … *
குழைவுறமுழங்குகின்றுழாங்கொள்பேரியே … *

(இ-ள்.) அணிகளிடத்துண்டாகிய இளவெயில் பிரகாசிக்கு மந்தவெயிலில் ஒளிக்குடையினிடத்துண்டாகிய நிழல்கெடவுலாவு மப்பீலிக்குடைநீருண்டமேகத்தினிடத்துண்டாகிய அழகுகெடப்பரவும் அம்மேகங்கள் சிதையும்படி கூட்டங்கொண்ட பேரிகள் முழங்கும்-எ-று. (௰௪)

மன்னணிப்புரவிகண்மகளிரூர்வன … … … *
அன்னமுந்தியதிரையாறுபோன்றன … … … *
பொன்னணிப்புணர்முலைப்புரிமென்கூந்தலார் … *
பின்னெனமடப்பிடிமேகம்போன்றவே … … *

(இ-ள்.) மாதர்கள் ஏறுவனவாகிய நீங்காத (கிண்கிணி) அணிகளையணிந்த குதிரைகள் (தன்மேற்றங்கிய) அன்னங்களைத் தள்ளிக்கொண்டுவருகிற அலையையுடைய வாற்றையொத்தன, பொன்னணிகளையணிந்தநெருங்கிய கொங்கைகளையும் புரிவாகிய மெல்லியகூந்தலையுமுடையமாதர்கள் பின்னலே யேறியிருக்க, இளமையாகிய பெண்யானைகள் மேகங்களைப் போன்றன-எ-று.)

இவர்கள் கணிகையர்கள். மகளிர்க்கு அன்னமும், புரவிக்குத் திரையும், அப்புரவித்தொகுதிக்கு யாறும் உவமமாய்வந்தன, ஏனைய விளங்கிக்கிடந்தன,

இலைபெறுத்திடையிடைநெருக்கவேழையர் … *
துணைமுலைக்குங்குமச்சுவடுமாடவர் … … … *
மணிவரைப்புயத்துமென்சாந்துமாழ்கிமேல் … *
லணையெனப்பொலிந்ததக்கடல்செலாறரோ …… *

(இ-ள்.) (பதாதி செல்லுகின்ற இடங்களிலெல்லாம் இரண்டாகவேற்றி நெருக்குதலினால் பேதைமைக்குணத்தையுடையமாதர்களது இரண்டுகொங்கைகளிலும் (எழுதிய) குங்குமத்தினலாகிய கோலமும், குமரர்களுடைய மணிமலையையொத்த ஒளியுமுருவும்வாய்ந்த புயத்திலெழுதிய மென்மையாகிய சந்தனக்கோலமும் (உதிர்ந்து) மயங்கி (அந்நால்வகைச்சேனையாகிய) கடல்செல்லுகின்ற வழியில் மெல்லிய அணையைப்போல விளங்கின-எ-று. (௰௫)

முத்தினுமுழுநிலவெறிக்குமொய்ம்மணிப் … *
பத்தியாலிளவெயில்பரப்புமாகினும் … … *
தித்தியாநின்றசொற்சிவந்தவாய்ச்சியர் … … *
உத்தராசங்கமிட்டொளிக்குங்கூற்றமே … … *

(இ-ள்.) (தம்பால் விருப்பினராகிய நாயகருக்கு) சருக்கரைப்பாகின் சுவையினும் தித்திக்கின்ற சொல்லைப்பேசுகின்ற சிவந்தவாயையுடையமாதர்கள் உத்தரீயத்தையிட (அவர்களுயிரைவருத்த) அதனுளொளித்திருக்குங்கூ

ற்றம் தாமணிந்த முத்தணியால் மூழ்நிலவைவீசாநிற்கும் (அணிகளில்) நெருங்கியமணிவரிசைகளால் இளவெயிலைப்பரப்பாநிற்கும்-எ-று. (௧எ)

கண்ணுற்ற இளைஞர்சிந்தையைத் தன்பாற்கொண்ட வேட்கையால் கலவிக்கின்ற மையிற்கூற்றமென்றார்.

வில்லினர்வாளினர்வெறித்தகுஞ்சியர்... ... ... *
கல்லிணையழித்துயர்கனகத்தோளினர் .. .. *
வல்லியின்மருங்கினர்மருங்குமாட்பிடி... ... ... *
புல்லியகளிறனையர்போயினார் ... ... *

(இ-ள்.) வில்லைத்தாங்கினவரும் வாளையேந்தினவரும் (பூமாலைமுதலியவற்றால்) மணத்த சிகையையுடையவரும் மலையினது திண்மையையழித்துஉயர்ந்த பொன்னணியணிந்த தோள்களையுடையவருப் ஆகியஆடவர்கள் கொடியையொத்த இடையையுடைய தம்மனைவியர்பக்கல் பெருமையயாகிய பெண்யானையைத்தழுவிய ஆண் யானையைப்போலநடந்தனர்-எ-று. (௧அ)

மன்றலப்பதுமலர்மழைமூயிர்சூழ்ந்தெனத்... ... *
துன்றிருங்கூந்தலார்முகங்கட்டோன்றலால்... ... *
ஒன்றலாமூழ்மதியூருமானம்போற்... ... ... *
சென்றனவாலவர்சிவிகையீட்டமே... ... ... *

(இ-ள்.) மணத்தையுடைய பதியமலர்கள் மேகத்தினாற் சூழப்பட்டாற்போல நெருங்கிய பெருமையாகிய கூந்தலையுடைய மாதர்களுடையமுகங்கள்மாத்திரம் தோன்றுவதினால் பலவாகியமுழுமதிகள் ஏறியவிமானங்களைப்போல அவர்கள் ஏறிய சிவிகைக்கூட்டஞ் சென்றன-எ-று. (௧௯)

இவர்கள் அரசமகளிர்.

மொய்திரைக்கடலெனமுழங்குமுழக்குடைக்... ... *
கைகளிற்றிசைநிலைக்களிற்றைநயப்பன... ... *
மையலுற்றிழிமதமழைமுழையுடையாற் ... ... *
செய்யலைக்கடந்திலகுழியானையே ... ... *

(இ-ள்.) பட்டமணிந்தயானைகள் மதமயக்கத்தையடைந்து இழிகின்ற மதமழை ஒழியாதொழுகலால் (உண்டாகிய) சேற்றைக் கடக்காதனவாகி மொய்த்த அலைகளையுடைய கடலொலியைப்போல முழங்குகின்ற முழக்கையுடைய கைகளைத்தூக்கி அசைப்பதினால் திக்குகளில் நிலைத்தலையுடைய யானைகளைப்(போர்க்குத்)தேடுவனபோலும்-எ-று. (உ௰)

சூருடைநிலையெனத்தோய்ந்துந்தோய்கிலா .. ... *
வாருடைவனமுலைமகளிர்சிந்தைபோற் ... ... *
தேரொடுஞ்சதியொடுந்தாவுமாயினும் ... ... *
பாரிடைமிதிக்கிலபரியின்பந்தியே... ... ... *

(இ-ள்.) குதிரைப்பந்தி கிண்கிணிமாலையோடும் தாளவொத்தோடும் தாவுமாயினும் தெய்வத்தினுடைய தன்மையைப்போலவும் புறத்திற்சேர்ந்தும் அகத்திற்சேராத கச்சையுடைய தொய்யிலெழுதிய கொங்கைகளையு

டைய கணிகையரது சிந்தையைப்போலவும் பூமியின்கண் மிதித்தலில்லன.

ஞருடைநிலை பூமியிற்கால்தோயாதுசெல்லல் ஞருடைநிலை மகளிர்சிந்தை இரண்டுந் தொழிலுவமம்.

ஊடியமனத்தினருறுதநோக்கினர் ... ... *
நீடியவுயிர்ப்பினர் நெரிந்தநெற்றியர் .. .. *
தோடவிழ்கோதையுந்துறந்தகூந்தலர் ... ... *
ஆடவருயிரெனவருகுபோயினார்... ... ... *

(இ-ள்.) (சிலர்) மனத்தில்ஊடினவரும் அதுபுறத்தேதோன்ற பொருந்தாத பார்வையுடையாரும் பெருமூச்சு எறிகின்றாரும் நெரிந்தநெற்றியையுடையாரும் இதழ்கள்விரிந்த மலர்மாலையையும் நீக்கியகூந்தலையுடையாருமாகித்தம்நாயகருக்கு உயிரைப்போல அவர்களருகே நடந்துசென்றனர்.

உறுதநோக்கு-அன்போடுநோக்காதநோக்கு- உம்மை-உயர்வுசிறப்பு.

மாறெனத்தடங்களைப்பொருதுமாமரம் ... *
ஊறுபட்டிடவிடையொடித்துச்சாய்த்துராய் .. *
ஆறெனச்சென்றனவருவியாட்கவுங் ... ... *
டாறெனக்கனலுமிழ்தறுகண்யானையே ... ...*

(இ-ள்.) அருவியைப்போல மதம்பாய்கின்ற கன்னத்தின் தொளையில் ஞெத்துகின்றவிருப்புமுள்ளைப்போலவனலையுமிழ்கின்றகண்ணையுடைய(போர்க்கு) அஞ்சாமையாகிய யானைகள்பகையென்றுகருதிமலைகளைமோதிப்பெருமரங்களைக்குறைவுபட இடையிலே யொடித்துச்சாய்த்து உராவிச்சரயுநதியைப்போலச் சென்றன—எ-று. (உரு)

உழுந்திடவிடமிலையுலகமெங்கணும் ... ... *
அழுந்தியவுயிர்க்கெலாமருட்கொம்பாயினான்... *
எழுந்திலனெழுந்திடைப்படருஞ்சேனையின் ... *
கொழுந்துபோய்க்கொடிமதின்மிதிலைகூடிற்றே. *

(இ-ள்.) (துன்பத்தி)லாழ்ந்த வெல்லாவுயிர்களுக்கும் அருளாகிய ஞான்றுகோலான சக்கரவர்த்தி (தனதிருக்கையின்) நின்றும் எழுந்திலன் (அவன் கட்டளையால்) எழுந்து உலகமெங்கும் உழுந்துவிட இடமுமில்லையெனஅடர்ந்து (அயோத்திக் கும்மிதிலைக்கும்)இடையிலேசெல்லுகின்றசேனைகளின்முதலணியானது போய்க் கொடிகளையுடைய மதில்சூழ்ந்த மிதிலாபுரியில்கூடிற்று-எ-று. (உசு)

கண்டவர்மனங்கள்கைகோப்பக்காதலின் ... *
வண்டமர்கோதையர்வதனராசியால் ... ... *
பண்டிகள்பண்டிகள்பரிசிற்செல்வன ... ... *
புண்டரிகத்தடம்போவபோன்றவே ... ... *

(இ-ள்.) அலங்காரம் கிடக்கின்றபண்டிகள் பரிசைபோலவசையாறுசெல்லுவன் கண்டோர்களுடைய மனங்கள் ஆசையினால் நட்புக்கொள்ளும்ப

று (கொண்டிருகின்ற) தேனுண்ண, வண்டுகள் மர்ந்த கூந்தலையுடையமா தர்களது முகக்கூட்டத்தினால் தாமரைமலர்த்தடாகம் போலவுமாயிற்றென.

கைகோப்ப எனக் காரணத்தைக் காரியமாகவுபசரித்தார். இவர்களும் அரசமகளிர்; திகள் போலி. தன்மேலிவர்ந்தோரை மெய்யசையாது கொண்டுய்ந்தலாற் பரிசைதொழி லுவமம். அது சுறுதொக்கது.

பாண்டிலின்வைத்தவோர்பாவைதன்னொடும் ... *
ஈண்டியவன்பினனேகுவானிடை ... ... *
காண்டலுநோக்கியகடைக்கணஞ்சனம் ... *
ஆண்டகைக்கினியதோரமுதமாயதே ... ... *

(இ-ள்.) பண்டிலின்வைத்த பிரதிமையை ஒத்த ஒருபெண்ணோடு ஓரிளைஞன் அன்புடையானாகிச்செல்லுவான் இடைவழியில் (அப்பாவை நோக்கலும்) நோக்கியகடைக்கண்ணில் கருமை ஆண்டன்மையுடையானாகிய அவ்விளைஞனுக்கு இனிமையுடையதாகிய ஒப்பற்றஅமுதம்போலாயது — எ-று. ()

கடைக்கணஞ்சனம் நினைவிநடந்த அயர்வுமுதலியவற்றைப் போக்கவின்முதமாயதென்றார். பாவை உவமவாகுபெயர்.

பிள்ளையாரோக்கினைப்பிரிந்துபோகின்றான் ... *
அள்ளனீர்மருதவைப்பகனின்னமாம் ... ... *
புள்ளுமென்றுமரைப்பூவுநோக்கினன் ... ... *
உள்ளமுந்தானுநின்றூசலாடுவான் ... ... *

(இ-ள்.) மான்கன்றினோக்கம்போலு மருண்டநோக்கையுடையாளைவிட்டுப்பிரிந்துபோகின்றானாகிய ஓராண்டகை சேற்றையுடைய நீருடைய மருதநிலத்தில் அன்னமாகிய புள்ளையும் (அதுஎறிப) தாமரையினது மென்மையாகியபூவையும்நோக்கி உள்ளமுந்தானுமே இருந்து அவளைநடுத்தபோதலும் வருவதுமாய் ஊசலாடுவான் — எ-று. (௨௭)

அன்னத்தையும் தாமரைப்பூவையும் நோக்கவுமுறையே அவள்நடையையும் காலின் மென்மையையும்பற்றிய எண்ணம தன்கருத்துட்டோன்றி, அவள்நடந்து கால்வருந்தின் ஆற்றுவார் யாரெனத் தன்கருத்து அதன்பாற்சேறலும் அங்குசெல்லுஞ்சேனையையும் அச்சேனையின்கோலாகலங்களையும் உணர்ந்திலனாகலின், உள்ளமுந்தானு நின்றென்றும் பின்னருணர்வுதோன்றி அங்குமிங்குமாய்த் தேடுகின்றானாகலின், ஊசலாடுவானென்றுங் கூறினார். உள்ளமுந்தானுநின் றூசலாடுவானென்பது தலைமைப்பொருளுந் தலைமையில்பொருளும் விராயெண்ணித் தலைமைப்பொருள்வினையோடு தலைமையில்பொருள்முடிந்தது. தொழில்வினையருந்தன்மைப்பொருளில் நிகழ்காலம் ஊசலாடுவானென எதிர்காலமாயிற்று,

வேறு

அங்கணாலத்தரசுமிடைந்தவர் ... ... *
பொங்குவெண்குடைசாமரைபோர்த்தலால் ... *
கங்கையாறுகடுத்ததுகாரெனச் ... ... *
சங்குபேரிமுழங்கியதானையே ... ... *

(இ-ள்.) ஈது அழகிய விடத்தையுடைய வுலகத்திலுள்ளவரசர்கள் நெருங்கியவிதமாகும் மேகத்தின்முழக்கத்தைப்போல சங்கங்களும் பேரியும் மு

மூன்றுநின்றசேனை பிறந்தவெண்பட்டுக் குடைகளுஞ் சாமரைகளுங் கவித்தால் அங்கைபோற்றறையொத்தது—எ-று. (உஅ)

சதென்பது முன்னெஞ்சிநின்ற சொல்லெச்சம். அரசுசாதியொருமை. வெண்குடை பொதுச்சொலின்றிவந்த அஃறிணைக்கட் பன்மைபற்றியவழக்கு.

அமரரஞ்சவ்வணங்கனையாருயிர் ... ... *
கவருங்கூர்நுதிக்கண்ணெனுங்காலவேல் ... ... *
குமரர்நெஞ்சுருளிப்பவழுங்களாற் ... ... *
சமரபூமியுமொத்ததுதானையே ... ... *

(இ-ள்) தேவர்கள் அஞ்சுகின்ற அத்தெய்வத்தையொத்தவர்கள் (தம்முடைய கண்ணென்றுசொல்லும் உயிரைக்கவர்கின்றகூர்மையாகியமுனையையுடைய யமன்கைவேல்களை ஆடவருடையமார்பிலழுந்தியவழக்குவதனால் உயுத்தபூமியையும் அச்சேனை ஒத்தது-எ-று. (உகூ)

உருவுமுதலியவற்றாலும் கண்டோர்க்கு இவர்மேனி நம்மாற் றீண்டக்கூடுமோவெனத் தோன்றுமச்சத்தாலும் அமரரஞ்சவ்வணங்கனையாரென்றார். இவ்வாறு வானத்தணங்கருந் தடவுரன்றேளெனப் பிறர்கூறுதலுங்காண்க.

தோண்மிடைந்தன தூண்மிடைந்தென ... ... *
வாண்மிடைந்தன வான்மின்மிடைந்தென ... ... *
தாண்மிடைந்தன தம்மின்மிடைந்தென ... ... *
ஆண்மிடைந்தனவாளிமிடைந்தென .. .. *

(இ-ள்.) தூண்கள் நெருங்கினாற்போலப்புயங்கள் நெருங்கின, மேகத்தின் மின்னல்கள் நெருங்கினாற்போல வாள்கள் நெருங்கின, தங்களில் நெருங்கினாற்போலக் கால்கள் நெருங்கின, சிங்கங்கள் நெருங்கினாற்போல ஆண்மக்கள் நெருங்கினார்கள்—எ-று. (௩௰)

வார்குலாமுலைவைத்தகண்வாங்கிடப் ... ... *
பேர்கிலாதுபிறங்குமுகத்தினன் ... ... *
நேர்கிலாநெறியந்தரிற்சென்றுரு ... ... *
மூரிமாமதயானையைமுட்டினான் ... ... *

(இ-ள்.) வார்தங்கிய கொங்கைகளில்வைத்த பார்வைவாங்கப்போராமல் பிரகாசிக்கின்ற முகத்தையுடையோன் வழியை அறியாதவனுக்குக் குருடனாய்ப் போலச்சென்றவலியையுடையபெரியஒருமதயானையைமுட்டினான்-எ-று.

கழிகொள்வாம்பரிதுள்ளவோர்தோகையாள் .. *
வழுவிவீழலுற்றாளைப்போர்வள்ளறான் ... ... *
எழுவினீள்புயத்தாலெடுத்தேந்தினான் ... ... *
தழுவினின்றொழியான்றனதாண்மையால் ... ... *

(இ-ள்.) கச்சுகழியைக்கொண்ட தாவுகின்றகுதிரையானது துள்ள,வதில் நின்றும் தவறிவிழத் தொடங்கினாளாகிய (சாயலால் மயிலையொத்தவ)ளை கண்ட ஒருவள்ளலானவன் எழுத்தூணின் நீட்சியைப்போலநீண்டபுயங்களினால் எடுத்து ஏந்தினான் அவ்வாறு தழுவிநின்றும் ஒழியாதவனுமாகித் தனதாயிலவையுமான்—எ-று. தழுவு-முதனிலைத்தொழிற்பெயர். (௩௧)

துணைத்ததாமரைநோவத்தொடர்ந்தடர் ... ... *
கணைக்கருங்கணிருளனையார்காலைதான் ... ... *
பணைத்தவெம்முலைப்பாய்மதயானையை... ... *
அணைக்கநங்கைக்ககலிடமில்லென்றான் ... ... *

(இ-ள்) இரண்டாகிய தாமரைமலர்போன்ற கால்கள்நோவத் தொடர்ந்து பொருகின்ற அம்பினது வடிவையுடைய கருமையாகிய கண்ணையுடையாளை நடையால் இடபத்தையொத்த ஒருவன் விருப்பத்தைத்தருகின்ற பருத்த கொங்கைகளாகியபாய்கின்ற மதயானைகளைக்கட்ட இப்பெண்ணின்று மார்பின்பரப்பு இல்லையென்றான் —எ-று. (௫௫)

எனவே மார்பிடத்தைக்கவர்ந்து புடைத்த பெரியகொங்கைக ளென்பது. நங்கைக்ககலிடமில் என்பதற்குத் தன்பாங்கனைநோக்கி நமதுகைக்கு அகன்றவிடமில்லையெனப்பொருள்கொளினுமமையும். காளைகாதல்பற்றிவந்ததன்று உவமவாகுபெயர்.

சுழிபுனற்குஞ்சிமிசைச்சுரும்பார்த்திடப் ... ... *
பொழிபுமாமதயானையிற்போகின்றான் ... ... *
கழியகூரியவென்றொருகாரிகை ... ... *
விழியைநோக்கித்தன்வேலையுநோக்கினான் ... *

(இ-ள்.) சுழித்துமுடிந்த மயிர்முடியில் வண்டுகள் ஆரவாரிக்கப்பொழிகின்ற மதத்தையுடைய பெரியயானைமேலேறிச்செல்கின்ற ஒருவன் (தன்னை நோக்கிய ஒருமாதினுடையகண்களைநோக்கி(இவை மிகக்கூர்மையுடையனவென்று மதித்துத் தன்கையிலுள்ளவேலையும் நோக்கினான்-எ-று. (௫௬)

விழியைநோக்கிக் கழியகூரியவென்று நன்குமதித்துத் தன்வேலை நோக்கினானெனவே அவைபோலக் கழியகூரியதென மதித்திலனென்ப திசையெச்சமாய்வந்தது.

தரங்கவார்குழற்றாமரைச்சீறடிக் ... ... *
கருங்கண்வாளுடையாளையோர்காளைதா... ... *
னெருங்குபூண்முலைநீள்வளைத்தோளினீர் ... .. *
மருங்குலெங்குமறந்ததுநீரென்றான்... ... ... *

(இ-ள்.) அலையினது சுருளை ஒக்கச்சுருண்டு நீண்ட கூந்தலையும் தாமரைபோன்ற சிறியபாதங்களையும் கரியகண்ணாகிய வாள்களையுமுடைய வொருமங்கையை ஓர்காளையானவன் நெருங்கிய பூணணிந்த கொங்கைகளையும் வளையலையணிந்த நீண்டதோள்களையுமுடையாரே நீர் மற்றையுறுப்பெல்லாம் உம்மிடத்திலிருக்க) இடையை எங்கேமறந்துவைத்தீரென்றுகேட்டான்- எ-று.

எனவே இடைமிகமெல்லியதென்பது. தோளினீர் நீர் என்பன வழக்கினாகியவுயர்சொற்கிளவிகள். மேல்வருஞ்செய்யுளில் உமை என்பது மிது.

கூற்றம்போலுங்கொலைக்கண்ணினாலன்றி ... *
மாற்றம்பேசுகிலாளையோர்வள்ளறான் ... ... *
ஆற்றுநீரிடையங்கைகளாலெடுத் ... ... *
தேற்றுவாருமையாவர்கொலோவென்றான் .. *

(இ-ள்.) ஓர்வள்ளலானவன் யமனதுகொலைபோன்ற கொலையையுடையக

ண்ணினாலல்லாமல் வாயால் ஓர் சொல்லையும்பேசாத ஓர்மாதை ஆற்றுநீரில் அழுகிப்பகைக்களிறு தூய்மையெடுத்தது (அக்கரையில்) எற்றுவார்யாவரோவெ ன்றுவினவினன்—எ-று. (௫௬)

அர்சந்நாலே கண்ணினலன்றி வாயால்மாற்றம் பேசுகில்லாளாயினும் அது இயல்பா தலின் யாவமொ.்பது அறியாவிறு. உம்மையெடுக்கப்பெறலால் அங்கையெனவும் உரையா டல் வேட்டாளாகலாற் கண்ணலன்றி யாவரொனவும் எற்றப்பெறலால் யாவர்கொலோவெ னப்புக்கூறினன். ஓ உயர்வுசிறப்பு.

தமனி நப பாந்தாங்கிய வொட்டகந் ... ... *
தெள்ளுதேன் கரும்பியாவையுந்தின்கில ... ... *
உள்ளமென்னத்தம்வாயுமுலர்ந்தன ... ... *
கள்ளுமாந்தரிற்கைப்பனதேடியே ... ... *

(இ-ள்) (மற்றெப்பவற்றால்) கொண்டுசெல்லுதல் கூடாத பாரமான பொருள்களைச் சுமந்துசெல்லுகின்ற வொட்டகைகள் இதயம் உலர்ந்தாற்போல தம்வாய்களும் உலர்ந்தனவாகிக்கள்ளுண்கின்றமாக்களைப்போலக் கைப்ப னவாகிய வேம்புமுதலியவற்றைத்தேடித் தெளிந்ததேனிறால் கரும்பு எவ ற்றைப்பற்றியில்லை—எ-று. (௫௭)

எனவே படைநான்குள் அமைந்தனவாயினும் யானை ஒட்டை வந்தனவென்னும் வழக் குண்மையானும் ஆசிரியர் இனிவருஞ்செய்யுளில் மால்களிறென்ன என வுவமையுகத்தாற் கூறுதலானும் (இனமெனக்கொண்டு -எடுத்தமொழியினஞ் செப்பலுமுரித்தே) என்பதனு ல் களிறுகள் கைப்பனதேடாமல் தெள்ளுதேன் கரும்பியாவையுந் தின்றனவெனப்பொரு ள்கொள்க. பரம் தேன் ஆகுபெயர்.

ஆரத்தநோக்கினராற்றிரண்டமேனியர் ... ... *
பரித்தகாவினர்பப்பரரோகினர் ... ... *
திருத்துகூடத்திற்றிண்கணையத்தொடும் ... ... *
எருத்திளேறியமால்களிறென்னவே ... ... *

(இ-ள்.) சிவந்தகண்களையுடையாரும் இருளின் திரட்சியையொத்த கறுத்த மேனியையுடையாருமாகிய பப்பரர்கள் (இரும்பினைத்) திருத்துகின்ற சம் மட்டியைத் திண்மையாகிய கணையத்தொடு பிடரியிலேந்திச்செல்லுகின்ற மயக்கத்தையுடைய யானைகளைப்போல (தோள்களில்) சுமந்தகாவடிகளையு டையாராகிச் சென்றனர்—எ-று. (௫௮)

நோக்கு-அல்-ஆகுபெயர். கணையம்-யானையைத்தடுக்குமரம்.

பித்தயானைபிணங்கிப்பிடியிற்கை ... ... *
வைத்தமேலிருந்தஞ்சியமங்கைமார் ... ... *
எய்த்திடுக்கணுற்றார்புதைத்தார்க்கிரு ... ... *
கைத்தலங்களிற்கண்ணடங்காமையே ... ... *

(இ-ள்.) மயக்கத்தையுடைய ஒருயானை (பாகரோடு) மாறுபட்டுச் சென் று பெண்யானையின்மேல் தன்கரத்தைவைத்தது (அதனாற்பிடியின்) மே லிருந்து பயந்தமங்கைமார்கள் ஓடிய தமக்கு இருகைத்தலங்களினும் தங் கண்களடங்காமையால் சோர்ந்து துன்பப்பட்டார்கள்—எ-று. (௫௯)

எனவே கண்கள் பெரியவென்பது தாற்பரியம் வேற்றுமை புகைப்பொருட்டு,

வாமமேகலைமாரிடைவாலதி ... ...*
பூமிதோய்பிடிச்சித்தரும்போயினார் ... ...*
காமர்தாமரைநாண்மலர்க்கானத்துள் ... ... *
ஆமைமேல்வருந்தேரையினையரோ ... ...*

(இ-ள்) அழகியமேகலையணிந்த மாதர்கள்கூட்டத்தில் சித்தர்களும் அழ கியதாமரையினது பதியமலர்க்காட்டில் ஆமையின்மேல்வரும் தேரையை ப்போல வால்பூமியில்படிகின்ற பெண்யானையின்மேல் ஏறிச்சென்றார்கள்,

சித்தர்-குறுகியவுருப்பினர்.

இம்பர்நாட்டின்றாமல்லளிங்கிவள் ... ...*
உம்பர்கோமகற்கென்கின்றதொக்குமால் ... ... *
கம்பமாவரக்கால்கள்வளைத்தொரு ... ... *
கொம்பனைக்கொண்டோடுங்குதிரையே... ... *

(இ-ள்.) கம்பத்திற் கட்டுதற்குரிய யானைவர (மருண்டு) முன்னங்கால்க ளைவளைத்து, ஒருபூங்கொம்பை யொத்தவளைச்சுமந்து ஒருகுதிரையோடா நிற்கும் (அவ்வோடுதல்)இப்பூமிநாட்டிலிருக்குந் தகுதியுடையாளல்லள் வா னநாட்டரசனுக்குத் தகுதியுடையாளென் றுணர்த்துவதையொத்திருக்கும்.

உரையாசிரியர் முதலியோர் -செலவினும் வரவினுமென்னுஞ் சூத்திரத்தில் ஈங்குமுத லாயின தன்மைக்கண்ணும் ஆங்குமுதலாயின படர்க்கைக்கண்ணு மமைத்தாராகலின் ஈங் கென்பதற்கு என்பாலெனப் பொருள்கூறலாயிற்று.இம்பரும்பரென்வும் முறையே தன்மை படர்க்கைகட் குரியனவென்பதுய்த்துணர்க.

சந்தவார்குழல்சோர்பவைதாங்கலார் ... ... *
சிந்துமேகலைசிந்தையுஞ்செய்கலார் ... ... *
எந்தைவில்லிறுத்தானெனுமின்சொலை ... ... *
மைந்தர்பேசமனங்களித்தோடுவார் ... . *

(இ-ள்.) எந்தையாகிய ஸ்ரீராமபிரான் வில்லைமுறித்தானென்னுமினியசரி தையை ஆடவர்கள்பேசாநிற்க (அதைக்கேட்க) அவிழ்ந்துவிழுவனவாகிய மயிர்ச்சாந்துபூசியகூந்தல்களை ஏந்தாமல்(சிக்குண்டறுந்து)மணிகள்சிந்து கின்ற மேகலையையும் எண்ணாமல் மனங்களித்தோடுவார்கள்—எ-று. (கூஉ)

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உளவாகியசம்பந்தம் ஒன்பதனுள் பிதாபுத்திர சம்ப ந்தமொன்றாகலினதுபற்றித் தம்போலு மெய்த்தொண்டர்களையு முளப்படுத்தி யெந்தை யென்றும் கேட்டார்க்கும் கேளார்க்கு மாதரம்பெருக்கலின் சொலென்றுங் கூறினார். அ ன்றி உயிர்கட்கு இனியவீட்டின்பயனைத் தருதலின் இன்சொலென்றொனினு மமையும்.

குடையர்குன்றுகைதூக்கினர்சுந்திய ... ... *
நடையர்நாசிபுதைத்தகைநாற்றலர் ... ... *
கடைகளிற்றையுங்காரிகையாரையும் ... ... *
அடையவஞ்சியவந்தணர்முந்தினார் ... ... *

(இ-ள்.) (அரசனுடைய) தலைவாயலில்கட்டுதற்குரிய யானையையும் மங் கையர்களையும் முழுமையும்பயந்தமுனிவர்கள் குடையையுடையார்களும்

கயலனடலம் சிக்கத்தின்கணுடையாரும் குந்தியநடையையுடையாரும் நாசி யையுழுபடைக்கையைத் தொங்கவிடாதவருமாகி முன்னேசென்றனர்—எ-று.)

எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டவராகலிற் குந்திய நடையரென்றும் சிராமபி ரான் றிருவுருவத்தைப் பாவனையால் தமதுள்ளத்திலிருத்தி இரேசக பூரககும்பகங்களைச்செ ய்துகொண்டே செல்கின்றவராகலி னாசிபுதைத்தகை நாற்றலொன்றுமஅருந்தவர்க்கருவிநீ ர்கொணர்ந்து குண்டிகைசொரிதன் முதலிய பணிசெய்வன,கிரிவனநதிகளிற் சரிக்கின்றகவி றுகள். அவையல்லவாகலிற் கடைக்களிறென்றும் இவை போர்த்தொழின்முதலிய பயிற்றிய ற்மேற்றப்பட்டவாகலானும் இவர்கள் குந்திய நடையராகலானும் காரிகையார்துவனைப்ப முதலியவற்றைக் காணினுங் கருதினுந் தவவொழுக்கஞ் சிதைபடுமாகலானு மஞ்சியவந்தண ர்முந்தினரென் றுங்கூறினர். அடையவஞ்சுதல் அகத்தும்புறத்து மஞ்சுதல். அந்தண ரென்ப தற்குப்பொருள் பரிமேலழகர் அழகியதட்பத்தையுடையார்-எ-து-அருளுடையாரென்னும் நச்சினார்க்கினியார் அந்தத்தை யணவுவர் -எ-து- வேதாந்தத்தை நோக்குவாரென்றும் கூ றுதலாலுணர்க.

நாறுபூங்குழனங்கையோர்கண்கணீர் ... ... *
ஊறுநர்வந்துருவுவெளிப்பட ... ... *
மாறுகொண்டனவந்தனையாகில்வந் ... ... *
தேறுதேரெனக்கைகளிழிச்சுவார் ... ... *

(இ-ள்,) மணக்கின்ற மலர்மாலையணிந்த கூந்தலையுடையநங்கையர்கள் (த ம்நாயகர்கள் தம்மைப்பிரிந்த துன்பத்தாலுளதாகும்) கண்களினீரூற்றுக்கு நேரே அந்நாயகர்களது உருவந்துதோன்றுநிற்க (அதைநோக்கி)பகைகொ ண்டுபோயினை (இப்போதுநீயே) வந்தாய் ஆகில்நெருங்கவந்துதேர்மேல் ஏறென்று கைகளைத்தாழ்த்துவார்கள்— எ-று. (சசு)

மாறுகொண்டனை முதலிய மூன்றும் பன்மையி லொருமைவந்த வழுவமைதியல்ல நங் கையோர்கள் தோன்றுநிற்கும் உருவைநோக்கித் தனித்தனிக் கூறுங்கூற்றாக வந்தனவாகலி ன்வழாநிலையே யாமென்க.

குரைத்ததேருங்களிறுங்குதிரையு ... ... *
நிரைத்தவார்முரசந்நெளிந்தெங்கணும் ... ... *
இரைத்தபேரொலியாலிடையாவரும் ... ... *
உரைத்துணர்ந்திலருமரினேகினார் ... ... *

(இ-ள்.) ஒலித்ததேர்களும் யானைகளும் குதிரைகளும் வரிசையாகச்செ ல்லுகின்ற வராலிறுக்கிய முரசங்களும் (நெருக்கத்தினால்) மெல்லச்சென் று எங்கும் ஒலித்தபெரியவோசையினால் அவ்விடத்திற்செல்லுகின்ற யாவ ரும் (ஒருவரோடொருவர்) பேச அதையறிந்திலர் (அதனால்) ஊமர்களைப் போலச்சென்றார்— எ-று. (சஎ)

நட்சிலம்பிபலர்ந்தனறுக்குகில் ... ... *
கட்சிலம்புகருங்குழலார்குழு ... ... *
வுட்சிலம்புசிலம்பவொலிங்கலாத் ... ... *
புட்சிலம்பிபொய்கையும்போன்றதே ... ... *

(இ-ள்.) பரந்தவடிவினதாகிய நுண்ணியசிலம்பிப்பூச்சிகளது கூடுகளை ஒத்த மெல்லியதுகிலையும்மலர்த்தேன்நிரம்பிய கருமையாகியகூந்தலையு

ளுடைய மாதர்கூட்டம் தனக்குள்ளே கால்சிலம்புகள் ஒலிக்க நடத்தலாற்ப
லவகைப்பறவைகள் இரைக்கின்றபொய்கையையும் ஒத்தது எ-று. (௫௯)

தெண்டிரைப்பரவைத்திருவன்னவர் ... ... *
நுண்டிரைப்புரைநோக்கியநோக்கினைக் ... ... *
கண்டிரைப்பனவாடவர்கண்களி ... ... *
வண்டிரைப்பனவாரணமதங்களே ... ... *

(இ-ள்.) தெளிந்ததிரையையுடைய பாற்கடலிலவதரித்ததிருமகளைக்கற்பினாலும் அழகினாலும்ஒத்தமாதர்கள் (தாம்ஊருகின்ற ஊர்திகளின் இருபுறத்திலுங்கட்டிய) நுண்ணியதிரைச்சீலையின்தொளையின்வழியாய்நோக்கியகண்களை ஆடவர்களுடைய கண்கள்கண்டு குதுகலிப்பன யானைகளுடைய மதங்களில் களித்து வண்டுகளிரைத்து மொய்ப்பன—எ-று. (௬௰)

வாராமரபினவென்னுஞ் சூத்திரத்தில் அன்னவையெல்லாமென்றதனுன்வந்த இரைப்பனவென்னுங்காரியங் காரணத்தின்மேனின்றது. கைகோப்பவென்பதற்கு இஃதுமொக்கும்.

உழைகளித்தனவென்னவுயிர்த்துணை ... ... *
நுழைகளிக்கருங்கண்ணியர்நூபுர ... ... *
இழைகளித்தனவின்னியமாவெழு ... ... *
மழைகளித்தெனவாசிகளித்தவே ... ... *

(இ-ள்.) எழுமேகங்கள் ஒலித்தாற்போல குதிரைகள் ஒலித்தன அவ்வொலியினிமையாகிய வாத்தியமாக உயிர்மட்டும் உருவுகின்ற பார்வையமைந்த புகழையுடைய கருமையாகிய கண்களையுடைய மங்கையர்களது (கால்களிலணிந்த)சிலம்பணிகள்உழையென்னும்இசைகள்ஒலித்தனபோலஒலித்தன.

உழை-ஏழிசைக்குள் சிரத்திற் பிறக்குமிசை.

மண்களிப்பநடப்பவர்வாணுதல் ... ... *
உண்களிக்கமலங்களினுள்ளுறை ... ... *
திண்களிச்சிறுதும்பியெனச்சிலர் ... ... *
கண்களித்தனகாமன்களிக்கவே ... ... *

(இ-ள்.) தரையானதுகளிக்க மெல்லநடக்கின்ற வனிதையர்களது ஒளிபுமைந்தநெற்றியையுடைய மதுவுண்டகளிப்பையுணர்த்தும் முகமாகியகமலங்களிற்றங்கிய (கண்களாகிய) திண்ணியசெருக்கையுடைய சிறியவண்டுகளைப்போல மன்மதன் (போர்வாய்த்ததென்று) மகிழும்படி,கண்ட சில ஆடவர்களுடையகண்கள் களித்தன—எ-று. (௬௧)

விதியினைநருவன அயில்விழியென்னவாறே முனிவர்களது தவவொழுக்கங்களையுங்கலங்கச்செய்து தாம்கலங்காது திற்றலின் மணக்களிப்ப நடப்பவருடைய கண்களைத்திண்களிச்சிறுதும்பியென்றார்.

எண்ணமாத்திரமும்மரிதாமிடை ... ... *
வண்ணமாத்துவர்வாய்க்கனிவாய்ச்சியர் ... ... *
திண்ணமாத்தொளிர்செவ்விளநீரிழி ... ... *
சுண்ணமாத்தனதூளியுமாத்தவே ... ... *

(இ-ள்.) கருதுதலளவுக்கு மரிதாகிய இடையையும் நன்னிறமமைந்த

ருமையாகிய பவளநிறம்போன்ற நிறந்தங்கியவாயையும் முக்கனியின்மதுரம்போன்ற மதுரமுள்ளசொல்லையுமுடைய மங்கையர்களது உறுதியாக (வாரினால்) கட்டப்பட்டு ஒளிர்கின்ற செவ்விளநீரின்நின்றும் உதிர்ந்தசுண்ணப்பொடிகள் (அவ்வெளியெங்கும்) அடர்ந்தன துகளும் அடர்ந்தன. எ-று

யாத்தல் - ஆத்தலென மரீஇயது.

சித்திரத்தடந்தேர்மைந்தர்மங்கையர் ... ...*
உய்த்துரைப்பநினைப்பவுலப்பிலர் ... ... *
இத்திறத்தினரொத்தனரேயாபலர் ... ... *
மொய்த்திரைத்துவழிக்கொண்டுமுன்னினார் ... *

(இ-ள்) சித்திரமமைந்த விசாலமாகிய தேர்மீதுசெல்லுகின்ற ஆடவர்களும் மங்கையர்களும் (அறிவையொருவழியிற்) செலுத்திச்சொல்லவும் நினைக்கவும் அளவில்லார் எவ்வளவோ பலபேர்மேற்கூறிய இத்தன்மையையுடையாராகி நெருங்கிக்களித்துவழிக்கொண்டு முன்னடந்தனர்-எ-று. (௫௧)

சக்கரவர்த்தித்திருமகனுடைய மணத்தைநோக்கி விரைகின்றனராதலின்முன்னினாரென்றார்.

வேறு.

குசையுறுபரியுந்தேரும்வீரருங்குழுமியெங்கும் ... *
விசையொடுகடுகப்பொங்கிவீங்கியதூளிவிம்மிப் ... ...*
பசையுறுதுளியின்றாரைப்பசுந்தொளையடைத்தமேகந் ...*
திசைதொறுநின்றயானைமதத்தொளைசெம்மிற்றன்றே ... *

(இ-ள்) மிக்கவிரைவமைந்த குதிரைகளும் தேர்களும் வீரர்களும் அவ்விடமெங்குங்கூடி காலவிசைத்தலோடுவிரைந்துசெல்ல மிகவதிகரித்த தூளிபெருகி மேகத்தினது ஈரமமைந்த துளியாகிய தாரைகள்வருகின்றவுலராத்தொளைகளை அடைத்ததாகிஎல்லாத்திக்குகளிலும்நின்றயானைகளினுடைய மதத்தொளைகளை உண்மையாய்த் தூர்த்தது—எ-று. (௫௨)

அன்றேகுறிப்போசையால் தெளிவுப்பொருட்டாகலின் அதற்கு உண்மையாயெனப்பொருள்கூறலாயிற்று.

கேடகத்தடக்கையாலேகிளரொளிவாளும்பற்றிச் ... ... *
சூடகத்தளிர்க்கைமற்றைச்சுடர்மணித்தடக்கைபற்றி ... *
ஆடகத்தோடையானையழிமதத்திழுக்கலாற்றில் ... ... *
பாடகக்காலினாரைப்பயப்பயக்கொண்டுபோனார் ... ... *

(இ-ள்.) (ஆடவர்கள்) கேடகத்தைப்பிடித்த பெருமையாகிய கையினாலே விளங்குகின்ற ஒளியையுடைய வாளையும்பிடித்து வளையணிந்த பந்தளிர்போன்றநிறத்தையும் மென்மையையுமுடையகைகளை ஒளியமைந்த மணியணிஅணிந்த பெருமையாகிய மற்றைக்கையினால் பிடித்துக்கொண்டு பொன்னாற்செய்த பட்டத்தையுடைய யானைகளினது அழிகின்ற மதநீரினாலுண்டாகிய சேற்றுவழியில் பாடகமணிந்த கால்களையுடைய நாயகிமாரை மெல்லமெல்லக்கொண்டுபோனார்கள்-எ-று. (௫௩)

யம்முன் அகரம்போலி. அடுக்கு அச்சப்பொருட்டு.

செய்களின்மடுவினன்னீர்ச்சிறைகளினிறையப்பூத்த ... ... *
நெய்தலுங்குமுதப்பூவுநெகிழ்ந்தசெங்கமலப்போதுங் ... *
கைகளுமுகமும்வாயுங்கண்களுங்காட்டக்கண்டு ... ... *
கொய்தவைதாருமென்றுகொழுநரைத்தொழுகின்றாரும் ... *

(இ-ள்.) வயல்களிலும் நீர்நிலைகளிலும் நல்லநீரைக்கட்டியவிடங்களிலும் நிறையப்பூத்த நெய்தல்மலரும் குமுதமலரும் மலர்ந்த சிவந்ததாமரைமலரும் (தம்முடைய) கைகளினழகையும் முகத்தினழகையும் வாயினழகையும் கண்களினழகையும் காட்டக்கண்டு பறித்து அவற்றைத்தாருமென்று கணவரைத் தொழுகின்ற மங்கையர்களும் அக்குழுவில் உளர்—எ-று. (௫௧)

உருவுந்திருவும் பருவமுங்குலனுங் குணனுமன்பு முதலியவற்றாற் றம்மு ளொப்புடையராதலி னொப்பான்கூற்றாகிய தன்மையிடத்துச் சொல்லாற் றருதியொன்றெனவும் இத்திறத்தினர் பலராகலிற் பயனிலைகொடுத்துக் கூறுதவாய் நிலையானே தொழுகின்றாருமெனவுங் கூறினர்,

பந்தியம்புரவிநின்றும்பாரிடையிழிந்தோர்வாசக் ... ... *
கொந்தளபாரந்தோரத்துலமணிக்கலன்கள்சிந்தச் ... . *
சந்தநுண்டுகிலும்வீழத்தளிர்க்கையாலணைத்துச்சார ... *
வந்ததுவேழமென்னமயிலெனவிரியப்போவார் ... ... *

(இ-ள்) (நடத்தலைவிரும்பி) வரிசையாய்ச் (செல்லுகின்ற) வழிகளைக் குதிரைகளினின்றும் தரையிலிழிந்தமாதர்கள் நெருங்கவந்தது யானையென்று (கண்டோர்) சொல்லக் (கேட்டு) மணமமைந்த பூங்கொத்தணிந்த கூந்தலபாரஞ்சரியவும் சிறந்தமணிகளாலாகிய வாபரணங்கள் சிதறவும் அழகிய நுண்ணிழைபாலமைத்த வாடையும் அவிழ்ந்து விழவும் அவ்வுடையைத் தளிரின் மென்மைபோன்ற மென்மையாகிய கைகளாலணைத்துக்கொண்டு மயிற் கூட்டங்கள் ஓடுதல்போலச் சிதறிப்போடுவார்கள்—எ-று. (௫௨)

சிறப்பாகக்கொண்ட தம்மலங்காரத்திலும் அணிகளிலும் நாணஞ்சிறந்ததெனக்கொண்டனராகலிற் றுகிலும்வீழ வணைந்திரியல் போவாராயினர், துகிலுமென்றது இறந்ததுதழீஇயதனோடு உயர்வுசிறப்பின்கண்வந்த உம்மை.

குடையொடுகவிருந்தொங்கற்குழாங்களுங்கொடியின்காடும் *
இடையிடைமயங்கிவெங்கும்வெளியறத்திருளைச்செய்யப் ... *
படைகளுமுடியும்பூணும்படர்வெயில்பரப்பிச்செல்ல ... *
இடையொருகணத்தினுள்ளேயிரவுண்டுபகலுமுண்டே ... *

(இ-ள்.) குடைகளோடுயானைகளும் மிகுதியான்கூட்டங்களுங் கொடிக்காடுகளும் இடையிடையேகலந்து அவ்விடமெல்லாம் ஆகாயந்தெரியாமல் இருளையுண்டாக்க ஆயுதங்களும் முடிகளும் பூண்களும் படர்ந்தவெயிலைப்பரப்பிச்செல்ல (இவற்றால்) அவ்விடத்தில் ஒருகணப்பொழுதில் இரவுமுண்டு பகலுமுண்டு—எ-று. (௫௩)

யானைகள் கரியபெரிய வுடலனவாயிருந்தமையாலுங் குடையோடுஞ் செல்கின்றனவாகலின் வெளிகரந்திருளைச் செய்வதற் கினமாயெண்ணப்பட்டன, அடுக்குமல் வைப்பொருட்டு.

முருக்கிதழ்முத்தமூரன் முறுவலார்முகங்களென்னுந் ... *
திருக்கிளர்கமலப்போதிற்றீட்டின கிடந்தகூர்வா ... ... *
ளொருங்கிடையறுக்குநீர்கணீங்குமினீங்குமென்றென் ... *
றருக்கனிலொளிருமேனியாடவரகலப்போவார் ... ... *

(இ-ள் சூரியனைப்போல ஒளிசெய்கின்ற மேனியையுடைய ஆடவர்கள் முருக்குமலர்போன்ற இதழையும் முத்துப்போன்ற பற்களையும் நகையையுமுடைய பெண்களது முகங்களென்னும் (தலையிலணிந்த) தெய்வவுத்தியென்னுமணியானது பிரகாசிக்கின்ற தாமரைமலர்களில் தீட்டப்பட்டனவாகிக்கிடந்த கூர்மையாகியவாள்கள் கூட்டத்தைத் இடையிலேயறக்கும் நீவிர் நீங்குங்கோள் நீங்குங்கோளென்றுசொல்லிச் செய்யையிற்போவார்கள்.

நீர்களென்பதனுள் நீரென்னுஞ்சொல்லே பன்மையையுணர்த்தலின் கள்ளென்பது இசைநிறைத்தற்கண்வந்தது. இது கள்ளொடு சிவணுமென்னுஞ் சூத்திரத்தில் நச்சினார்க்கினியாருரையானுமுணர்க. இச்சொல்மேவித் தொழுதுய்மினீர்கள் வேதப்புனித விருக்கையென்னுஞ் சடகோபரருளிச்செயலிலுங்காண்க. அடுக்கிரண்டனுள் முன்னையது அச்சப்பொருட்டு பின்னையது ஒருதொழில் பலகானிகழ்தலென்னும்பொருட்டு மின்-உம்- இரண்டுமொருபொருணலிவரும் விகுதிகளாதலின் நீங்குமினீங்குமென்றது ஒருசொல்லடுக்கேயாம்.

நீந்தருநெறியினுற்றநெருக்கினாற்சுருக்குண்டற்றுக் ... *
காந்தினமணியுமுத்துஞ்சிந்தினகலாபஞ்சூழ்ந்த ... ... *
பாந்தளினல்குலார்தம்பரிபுரம்புலம்பப்பைம்பொற் ... *
பூந்தளிருறைப்பமாழ்கிப்போக்கரிதென்னநிற்பார் .. *

(இ-ள்.) கடத்தலருமையாகிய நெடுவழியில் நெருங்கிய நெருக்கத்தினால் தமதணிகள்சுருங்கி அறுந்து சிந்தினவாகிய பிரகாசிக்கின்ற கூட்டமாகிய மணிகளும் முத்துகளும் இருபத்தொருவடமாகிய கலாபஞ்சூழவணிந்த பாம்பின்படத்தையொத்த அல்குலையுடையார்தம்முடைய சிலம்புகள் ஒலிக்கப் பசுமையாகிய பொன்னணியணிந்த பொலிவையுடைய தளிர்போலும் பாதங்களில் உறுத்தமயங்கிப்போதல்அருமையென்று நிற்பார்கள்-எ-று (௫௮)

மணியுமுத்தும் பூந்தளிருறைப்ப என்பதனால் வரம்பில் செல்வத்தினரென்பது குறிப்பாற்போந்தபொருள்.

கொற்றப்பல்லியங்களெங்குங்கொண்டலிற்றுவைப்பப்பண்டிப்
பெற்றவேறன்னப்புள்ளிற்பேதையர்வெருவிநீங்க ... ... *
முற்றுறுபாரங்களெல்லாமுறைமுறையாசத்தோடும் ... *
பற்றறவீசியேகியோகியிற்பரிவுதீர்ந்த ... ... *

(இ-ள்.) வெற்றியமைந்த பலவாத்தியங்கள்மேகத்தைப்போல எங்கும் முழங்குவதினால் பண்டியிற்கட்டிய பெற்றமாகிய இடபங்கள் அன்னப்பறவைகள்போலமாதர்கள்பயந்து நீங்கக்குறைவில்லாதபாரமானபொருள்களெல்லாவற்றையும்(தம்மைக்கட்டிய) கயிற்றோடு சம்பந்தமொழியமுறைமுறையாக நீக்கிச்சென்று, இல்வாழ்க்கையின் முயற்சிகளாகிய பாரங்களையெல்லாம் அவற்றினிடத்தே வைத்தவாசையோடுஇருவகைப்பற்றும் ஒழியமுறைமுறையாகவிட்டு வருத்தம்நீங்கியயோகியைப்போல வருத்தந்தீர்ந்தன-எ-று.

முடித்தலருமைநோக்கி முயற்சியைப்பாரமென்றார்.

காற்செறிவேகப்பாகர்கார்முகவுண்டைபாரா ... ... *
வார்ச்சிறைக்கொங்கையன்னகும்பமுமருப்புங்காணப் ... *
பாற்செறிகடலிற்றோன்றும்பனைக்கைக்மாவியானையென்ன *
நீர்ச்சிறைபற்றியேறுநின்றகுன்றனையவேழம் ... ... *

(இ-ள். மலையையொத்தயானைகள் பாகர்களுடைய வில்லினது, காற்றைப்போல மிக்கவேகத்தையுடைய உண்டையை மதியாமலும் நீரணையைப் பற்றியேறுமலும் வாரணிந்தசிறையிலமைந்த கொங்கைகளையொத்தமத்தகமும் தந்தங்களும் மேற்புறத்தில் தோன்றும்படி பாலாகிய நீர்நிறைந்தகடலிற்றோன்றிய பனையையொத்த கையையுடைய பெரிய ஐராவதத்தைப்போல நீரில்நின்றன-எ-று. (௯௰)

அறலியற்கூந்தற்கண்வாளமுதுகுகுமுதச்செவ்வாய் ... *
விறலியரோடுநல்யாழ்ச்செயிரியர்டாவிமேலார் ... ... *
நறைசெவிப்பெய்வதென்னநளைவளர்மேகப்பாடல் ... *
முறைமுறைநணுகப்போனார்கின்னரமிதுனமொப்பார் ... *

(இ-ள்) கருமணலினதியற்கையமைந்த கூந்தலையும், கண்களாகியவாள்களையும், சொல்லாகிய தேன்சிந்துகின்ற குமுதமலர்போன்றசிவந்தவாயையுமுடைய பாடுவிச்சிகளோடு நல்லயாழ்வாசிக்கின்றசெயிரியர்கள் குதிரையூர்ந்தவர்களாகிக் கின்னரமிதுனப்பறவைகளையொத்துத் தேனைப்பெய்வதுபோலப்பாடுகின்ற குளிர்ச்சிவளர்கின்றமேகராகக்குறிஞ்சிப்பாடல் கேட்கின்றவர்களுடைய செவிகளிலபொருந்தமுறைமுறையாகச்சென்றனர்.

தங்குரலிசைபரவுமிடமெங்கும் வெம்மையைத்தணித்துத் தண்மையைப்பெருக்கலின் நளைவளர் மேகப்பாடலென்றார்.

அருவிபெய்வரையிற்பொங்கியங்குசதிமிரவெங்கும் ... *
இரியலிற்சனங்கள்சிந்தவிளங்களிசெங்கண்யானை ... ...*
விரிசிறைத்தும்பிவேறோர்வீழ்மதந்தோய்ந்துடாதர் ... *
கரிகுழற்படியவேற்றிற்பிடியொடுந்தொடர்ந்துசெல்ப ... *

(இ-ள்.) இளமையாகிய மதமயக்கமமைந்தசிவந்தகண்களையுடையயானைகள் அருவியைப்பெய்கின்ற மலையைப்போல மதநீரை ஒழுகவிட்டு (தம்மைக்குத்துகின்ற) அங்குசம் வளைவுதிமிரச்சென்று சனங்கள் சிதறியோடும்படி பெருகுமோடுவதினால் (தம்மதநீரில்மொய்த்திருந்த) விரிந்தசிறகையுடைய தும்பிகள்வேறொருயானையினுடைய ஒழுகுகின்றமதத்திற்படிந்துண்டுமாதர்களுடையகரிந்தகூந்தலில்மொய்க்கும்வரைபிடிகளோடுதொடர்ந்துசெல்வன-எ-று. (௯௨)

வரை-இருமடியாகுபெயர்.

நிறைமதிதோற்றங்கண்டநீணெடுங்கடலிற்றுகி ... ... *
அறைபறைதுவைப்பத்தேருமானையுமாடன்மாவும் ... *
கறைசெழுவேற்களுநமைந்தருங்கவினிபொல்லி ... ... *
நெறியிடைப்படரவந்தனையமங்கையர்தாஞ்செல்வார் ... *

(இ - ள்.) கலைகள் நிறைந்த சந்திரனது உதயத்தைக்கண்ட நீலநிறமாகிய நெடியகடலைப்போலொலியாத்தனவாகிக் கொட்டுகின்ற பேரிமுதலியதோற்கருவிகள் முழங்கத் தேர்களும், யானைகளும், வெற்றியமைந்த குதிரைகளும், பகைவரது உதிரம்பொருந்திய வேல்போன்ற கண்களையுடைய மங்கையர்களும், ஆடவர்களும், அழகுறக்கூடி விரைவாக வழியிற்செல்லச் சக்கரவர்த்தியினுடைய மனைவியர்கள் செல்வார்கள் - எ - று. (௯௩)

இற்று உவமவுருபிடை யடியாகப்பிறந்த வினைக்குறிப்புமுற்று. பறைசாதியொருமையா கவின்றிற்றெனவொருமைவினைகொண்டது. தோற்கருவியாகிய பறையைக்கூறவே இலயாதி ய எனைக்கருவிகளுந் துவைப்பவெனக்கொள்க. தாமென்பது - கட்டுரைச்சுவைபட நின்றது.

பொய்கையங்கமலக்கானிற் பொலிவதோரன்னமென்னக் ... *
கைகயர்வேந்தன்பாவை கணிகையரீட்டம்பொங்கி ... ...*
ஐயிருநூறுசூழ்ந்தவாய்மணிச்சிவிகைதன்மேற் ... ... *
தெய்வமங்கையருநாணத் தேனிசைமுரலப்போனாள் ... *

(இ-ள்.) தடாகத்தில் மலர்ந்த தாமரைமலர்க்காட்டில் விளங்குவதாகிய ஒப்பற்ற அன்னப்புள்ளைப்போலக் கேகயநாட்டாருக்கு அரசனாகிய உசாசித் தன்பவனுடைய புத்திரியென்னும் கைகேசியானவள் ஆயிரம்பரத்தையர்களது கூட்டம் களிப்புமிகுந்து சூழ்ந்த குற்றமில்லாத மணிகளாலியற்றிய சிவிகையின்மேல் தெய்வமங்கையர்களும்நாணத் தேன்போலும் இசையையுடைய கருவிகள் ஒலிக்கப்போனாள் - எ - று. (௯௪)

பாவை காதல்பற்றிவந்தது இசைபண்பாகுபெயர்.

காரணமின்றியுங்கனலெழவிழிக்குங்கண்ணார் ... ... *
வீரவேத்திரத்தார்சூழ்ந்துவிரிந்தகஞ்சுகத்துமெய்யார் ... *
தாரணிபரவிமேலார்தலத்துளார்தழுத்தசொல்லார் ... *
ஆரணங்கனையமாதர்முறைகாத்துப்போனார் ... ... *

(இ-ள்.) காரணமென்பதொன்று இல்லாமலும் தீப்பொறி உண்டாகவிழித்துப்பார்க்கின்ற கண்களையுடையார் வீரமமைந்த பிரப்பந்தடியையுடையார் தாழ்ந்து விரிந்த சட்டையணிந்த மெய்யையுடையார் (சிலர் கிங்கிணிமாலையணிந்த குதிரையின்மேலிருப்பவர் (சிலர் பூமியில்நடப்பவர் உரத்த ஓசையாகிய சொல்லையுடையார் ஆகிய அரியதெய்வத்தை யொத்தமாதர்கள் (கைகேசியினுடைய) பாதங்களைத் தந்தமக்குத்தக்குற்ற முறைமைப்படி காத்துப்போனார்கள் - எ - று. (௯௫)

விரிமணித்தார்கள்பூண்டவேசரிவெரிநிற்றோன்றும் ... .*
அரிமலர்த்தடங்கணல்லாராயிரத்திரட்டிசூழக் ... ... *
குருமணிச்சிவிகைதன்மேற்கொண்டல்மின்மின்னிதென்ன ...*
திருவனாப்பயந்தநங்கையாழிசைமுரலப்போனாள்... ... *

(இ-ள்.) ஒளிவிரிகின்ற கிண்கிணிமாலைகள்பூண்ட கோவேறு கழுதைகளின் முதுகில் ஏறிவிளங்குகின்ற செவ்வரிபடர்ந்த குவளைமலர்போலும் விசாலமாகிய கண்களையுடைய இரண்டாயிரமாதர்கள் சூழ்ந்துவர நன்னிறத்தையுடைய நீலமணிகளாலமைந்த சிவிகையின்மேல் மேகத்திலமின்னலவிவ்வுரு

வமென்றுசொல்ல இருவரைப்பெற்ற சுமித்திரையானவள் யாழிசை ஒலிக்கப் போனாள்-எ-று. (கூசு)

மணியென்னும் பலபொருளொருசொல் ஈண்டுநீலமணியையுணர்த்திற்று.

செங்கையின்மஞ்ஞையன்னஞ்சிறுகிளிபூவைபாவை ... ... *
சங்குறைகழித்தவெள்ளைச்சாமரைமுதலதாங்கி .. .. *
இங்கலதெண்ணுங்காலிவ்வெழுதிரைவளாகத்தில்லின் ... ... *
மங்கையரில்லையென்னமடந்தையர்மருங்குபோனார்... ... *

(இ-ள்.) இங்கல்லாமல் எழுகடல்சூழ்ந்த பூமியில் இனிமங்கையர்க ளில்லையென்னும்படி செங்கைகளில் -மயில்களும், அன்னங்களும், சிறுகிளிகளும், நாகணவாய்ப்புட்களும், பிரதிமைகளும், உறையினின்றும் சங்கையெடுத்தாற்போன்ற சாமரங்களும் முதலியவற்றை ஏந்திக்கொண்டு கணிகைமாதர்கள் (அச்சுமித்திரைக்கு) அருகிற்சென்றார்கள்-எ-று. (கூஎ)

வளாகம் பண்பாகுபெயர்.

வெள்ளெயிற்றிலவச்செவ்வாய்முகத்தைவெண்மதியமென்று *
கொள்ளையிற்சுற்றுமீன்கள்குழீஇயனையவூர்தி ... ... *
தெள்ளரிப்பாண்டிபாணிச்செயிரியரிசைத்தேன்சிந்த ... ... *
வள்ளலைப்பயந்தநங்கைவானவர்வணங்கப்போனாள்... ... *

(இ-ள்.) ஆகாயத்தில் உலாவுகின்ற விண்மீன்கள் வெண்மையாகிய பற்களையுடைய இலவமலர்போன்ற செவ்விய வாயையுடைய முகத்தை வெண்மையாகிய மதியென்றுகருதி மிகுதியாக மொய்த்ததையொத்த பலபணிகளாலமைந்த சிவிகையிலேறி, தெளிவாகிய வண்டொலியிசையையொத்த பாண்டியென்னும் பண்ணையும் இசைப்பாட்டையும் பாடுகின்ற செயிரியர்கள் இசையாகிய தேனைத் துளிக்க, கேட்டுக்கொண்டு, ஸ்ரீராமபிரானைப்பெற்ற கௌசலையானவள் தேவர்கள் வணங்கச்சென்றாள்-எ-று. (கூஅ)

இறைவனைப்பெறலால் நங்கையென்றும் வானவர்வணங்கப் போனாளென்றுங் கூறினார்.

கூனொடுகுறளுஞ்சிந்துஞ்சிலதியர்குழாமுங்கொண்ட ... ... *
பானிறப்பரவியன்னப்புள்ளெனப்பாரிற்செல்லத் .. ... *
தேனொடுமிஞிறும்வண்டுந்தும்பியுந்தொடர்ந்துசெல்லப் ... *
பூநிறைகூந்தன்மாதர்புடைபிடிநடையிற்போனார்... ... *

(இ-ள்.) கூனர்களோடு குறளர்களும் சித்தர்களும் தோழியர்களுங் கூட்டமாக ஏறிய வெண்மையாகிய நிறமமைந்த குதிரைகள் அன்னப் புள்ளைப்போலப் பூமியில் மெல்லநடந்துசெல்ல, பெண்வண்டுகளுடனே மிஞிறுகளும், வண்டுகளும், தும்பிகளும், தொடர்ந்துசெல்லும்படி மலர்மாலைகள் நிறைந்த கூந்தலையுடைய மாதர்கள் (கௌசலையின்) இருபுறத்திலும் பெண்யானையைப்போல நடந்துசென்றார்கள்-எ-று. (கூகூ)

கூன்முதலியமூன்று மாகுபெயர். மிஞிறும், தும்பியும், வண்டு விசேடம்.

சூட்டுயில்கூடமணியிற்பொன்னிற்சுடர்மரகதத்தின்முத்தின் ... *
ஒட்டறவமைத்தபைம்பூணுருவியம்புகழுவேறு ... ... *

முப்பதிற்றிரட்டிகொண்ட வாயிரமுகிழ்மென்கொங்கைச் ... *
செப்பருந்திருவினல்லார்தேர்மிசைசூழப்போனார் ... *

(இ-ள்.) குவிந்தமென்மையாகிய கொங்கைகளையுடைய புகழமைந்த திருமகளைப்போலும் அழகும் கற்புமமைந்த அறுபதினாயிரமாதர்கள் படைத்திரளும் நீலமணியினாலும் பொன்னினாலும் சுடர்கின்ற பரகசதத்தினாலும் முத்தினாலும் ஒப்பில்லாமற்செய்த பசும்பொன்னணிகளையணிந்த பிரதிமைகள் தம்பெருமிலக்கணம்) புகழும்படியாகத் தேரின்மேலேறி நெருங்கப்போனார்கள் எ-று. (எய)

துப்புமுதலியவற்றாலமைத்த வோவியம் புகழவென்றதனால் நானிறத்தினவொன்பது.

செவிவயினமுதகேள்விதெவிட்டினார்தேவர்நாவின் ... *
அவிகையினளிக்குநீராவாயிருகோடிசூழக் ... *
கவிகையினிழற்கற்பினருந்ததிகணவன்வெள்ளைச் ... *
சிவிகையினன்னமூருந்திசைமுகனென்னச்சென்றான் ... *

(இ-ள்.) செவியினிடத்தில் அமுதத்தையொத்த ஞானக்கேள்விகளை (பலநூலறக்கேட்டு) தெவிட்டினவர்களும், தேவருடையநாவில் ஆகுதியைத் தங்கையினால்கொடுக்கின்ற தவத்தன்மையையுடையாரும் ஆகிய பஃதுக்கோடி முனிவர் ள்சூழக்குடையினுடையநிழலில் வசிட்டமுனிவன் வெள்ளைச்சிவிகையேறி, அன்னத்தின்மேலேறிவரும் நான்முகனைப்போலச் சென்றான் எ-று.()

பொருகளிறிவுளிபொற்றேர்பொலங்கழற்குமரர்முந்நீர் ... *
அருவரைசூழ்ந்ததென்னவருகுபின்முன்னாஞ்செலத் ... *
திருவளர்மார்பர்தெய்வச்சிலையினர்தேரர்வீரர் ... *
இருவருமுனிபின்போனவிருவருமென்னப்போனார் ... *

(இ-ள்.) போர்செய்தற்குரிய யானைகளும், குதிரைகளும், பொன்னாலியன்ற தேர்களும், பொன்னாற்செய்த கழலணிந்த காலாள்களும், கடல் அளவு காணாத மலையைச் சூழ்ந்ததுபோல இருபக்கங்களிலும்பின்னுமுன்னுஞ் செல்ல, திருமகள்வளர்கின்றமார்பர் தெய்வத்தன்மையமைந்த விலினர் தேர்மீதுள்ளார் வீரர் ஆகிய பரதசத்துருக்கனர்கள் கௌசிகமுனிவர்பின்சென்ற இராமலட்சுமணர்களைப்போலப் பிரியாமற்போனார்கள் எ-று (எஉ)

திருவளர்மார்பரென்பது விளக்கமுதலியபற்றி யரசர்களுக்குப்புனைந்துரைவகையாற் கூறுவதோர் மரபுபற்றிவந்தது.

நித்தியநியமமுற்றிநமியான்பாதஞ்சென்னி ... *
வைத்தபின்மறைவலோர்க்குவரம்பறுமணியும்பொன்னும் ... *
பத்தியானிரையும்பாரும்பரிவுடனல்கிப்போனான் ... *
முத்தணிவயிரப்பூணான்மங்கலமுகுத்தநன்னாள் ... *

(இ-ள் முத்துமாலைபணிந்த வயிரப்பூணைப்பூண்ட சக்கரவர்த்தி நாடோறுஞ்செய்கின்ற அனுட்டானத்தைமுடித்துச் சகரகுலதலைவனுடைய இறைவனது திருவடிகளைச் சென்னியில்வைத்தபின் அந்தணர்களுக்கு வரம்பிலாத மணிகளையும் பொன்னையும் வரிசையாகிய பசுக்கூட்டத்தையும் நிலங்களையு

மரபோடுதானஞ்செய்து சுபமுகூர்த்தமாகிய நல்லவேளையில் புறப்ப
ட்டுப்போனான்-எ-று. (எக)

நாளென்பது முதலாகுபெயர்.

இருபிறப்பாளரெண்ணாயிரர்மணிக்கலசமேந்தி ... ... *
அருமறைவருக்கமோதியறுகுநீரளித்துச்சூழ .. .. *
வரன்முறைவந்தார்கோடிமங்கலமழலைச்செவ்வாய்ப் ... *
பருமணிக்கலாபத்தார்பல்லாண்டிசைபரவப்போனான் ... ... *

(இ-ள்) பூசுரர்கள் எண்ணாயிரம்பேர் மணிகளாலமைத்த கலசங்களையே ந்தி அருமையாகிய வேதவாக்கியங்களை உச்சரித்து அறுகம்புல்லால் நீரைத் தூவிக்கொண்டு வரலாற்றின் முறைமைப்படி (எதிரேவந்தார்கள்) மழலைச் சொல்லையுடைய சிவந்தவாயையும் பருத்தமணிகள் கோத்த கலாபத்தையுமுடைய ஒருகோடி சுமங்கலிமாதர்கள் பாடுகின்ற பல்லாண்டென்னுமிசை எங்கும்வியாபிக்கப்போனான்-எ-று. (எஉ)

இருபிறப்பாளரென்றது சன்ம கன்மங்களைநோக்கி.

கண்டிலனென்னையென்பார்கண்டனனென்னையென்பார் ... *
குண்டலம்வீழ்ந்ததென்பார்குறுகரிதினிச்சென்றென்பார் *
உண்டுகொலெழுச்சியென்பாரொலித்ததுசங்கமென்பார் ... *
மண்டலவேந்தர்வந்துநெருங்கினர்மயங்கவென்பார் ... ... *

(இ-ள்) (அரசர்களிற்சிலர் சக்கரவர்த்தி) என்னைக்கண்டிலனென்பார்கள் (அதுகேட்ட சிலர்) என்னைக்கண்டனனென்பார்கள் (சிலர் காதிலணிந்த) குண்டலம் வீழ்ந்ததென்பார்கள். (சிலர்) இனி அரசனருகேசென்று நெருங்குதலரிதென்பார் (சிலர்) புறப்பாடுண்டோவென்பார்கள். (அதுகேட்டசிலர்) சங்கம் ஒலித்ததென்பார்கள் (சிலர்) பூமியிலுள்ள அரசர்கள்வந்து (கண்டோர்) மயங்க நெருங்கினார்களென்பார்கள்-எ-று (எ௩)

இச்செய்யுள் சக்கரவர்த்தியினுடைய பெருமிதத்தை யுணர்த்திற்று. கண்டிலனென்னையென்பார் கண்டனனென்னையென்பார் என்பனவற்றிற்கு முறையே பார்த்திலன் என்னவென்பார் பார்த்தனன் என்ன என்பார் எனப் பொருள்கூறினுமொக்கும். குண்டலம் வீழ்ந்ததெனவே சிறிதிடமுமின்றி நெருங்கினரென்பது குறிப்பெச்சம். கொல்-ஐயம்,

பொற்றொடிமகளிருந்தம்பொலன்கொடார்ப்புரவிவெள்ளத் *
சுற்றுறுகமலப்பூத்ததொடுகடற்றிரையிற்செல்லக் ... ... *
கொற்றவேன்மன்னர்செங்கைப்பங்கயக்குழாங்கள்கூப்ப ... *
மற்றொருகதிரோனென்னமணிநெடுந்தேரிற்போனான் ... *

(இ-ள்) பொற்றொடியணிந்த மகளிர்கள் ஏறுகின்ற பொன்னாலமைத்த தாரணிந்த குதிரைக்கூட்டம் சுற்றிலுமிகுதியாகத் தாமரைமலர்கள்பூத்ததோண்டிய கடலினது அலைகளைப்போல இருபுறத்திலுஞ்செல்லாநிற்க, வெற்றியமைந்த வேலையுடைய வரசர்கள் சிவந்த கைகளாகிய தாமரைமலர்க்கூட்டங்களைக்குவியாநிற்க வேறொரு சூரியனைப்போல மணிகளாற்செய்த நெடியதேரிலே போனான்-எ-று. (எச)

கைப்பங்கயங்கள் குவிதலின் மற்றொரு கதிரோனென்றார்.

ஆர்த்தது விசும்பைமுட்டி மீண்டகன் றிசைகளெங்கும் ... ... *
போர்த்தது ஒருவர்தம்மை யொருவர்கட்புலங்கொளாமை *
சீர்த்தது செறிந்துதோடித்திரை நெடுங்கடலையெல்லாந் ... *
தூர்த்தது சகரரோடுபகைத்தெனத் தூளிவெள்ளம் ... ... *

(இ-ள்) (தன்பரிவாரங்கள் செல்வதினால் எழுந்த) தூளிக்கூட்டம் நிறைந்தது போகவழியெழாமல் மேலுலகமுட்டி மீண்டு அகன்ற திசைகளெங்கும் போர்த்தது அத்திசைகாப்பாளர் ஒருவரையொருவர் பார்க்கக்கூடாமற் கனத்தது அடர்ந்தது தோண்டிய சகரர்களோடு பகைத்தாற்போல ஒலி அலைகளையுடைய நெடியகடலையெல்லாம் தூர்த்தது-எ-று. (எஎ)

ஆர்த்ததுமுதலிய வினைமுற்றுச்சொற்கள் பலவடுக்கித் தூளிவெள்ளமென்னும் பெயரோடுமுடிந்தது.

சங்கமும்பணையுங்கொம்புந் தாளமுங்காளத்தோடு ... ... *
மங்கலபேரிசெய்த பேரொலிமழையையோட்டத் ... ... *
தொங்கலுங்குடையுந்தோகைப் பிச்சமுஞ்சுடரையோட்டத் *
திங்கள்வெண்குடைகண்டோடத் தேவருமருளச்சென்றான் ... *

(இ-ள்) சங்கங்களும் பேய்க்குழல்களும் ஊதுகொம்புகளும் சிறுசின்னத்தோடு மங்கலத்திற்குரிய பேரிகளும் செய்த பேரோசையானது மேகத்தைப்பயந்தோடச்செய்யவும் பீலிக்குஞ்சங்களும் குடைகளும் மயில்வாலினலையத்தகுடைகளும் சூரியகிரணத்தைநீக்கச்செய்யவும் சந்திரன் தன்முடிமேல் நிழல்செய்யுங் குடையழகைக்கண்டு ஓடவும் தன்வைபவத்தைக்கண்டு இவனிந்திரனோவென வானவரும் மயங்கவுஞ்சென்றான்-எ-று. (எஅ)

மந்திரகீதவோதை வலம்புரிமுழக்கமோதை ... ... *
அந்தணராசியோதை யார்த்தெழுமுரசினோதை ... ... *
கந்துகொல்களிற்றினோதை கடிகையர்கவிதையோதை ... *
இந்திரதிருவன்செல்லவெழுந்தன திசைகளெல்லாம் ... ... *

(இ-ள்) இந்திரனது செல்வம்போன்றசெல்வத்தையுடைய சக்கரவர்த்தி செல்லுகின்ற வேதமந்திரங்களின் ஓசையும் வலம்புரிச்சங்கங்களின் ஓசையும் அந்தணர்கள்கூறும் ஆசியினது ஓசையும் ஆரவாரித்தெழுகின்ற முரசுகளினது ஓசையும் தறிபெயர்க்கின்றயானைகளின் ஓசையும் பாடகர்கள்பாடுகின்ற மங்கலப்பாட்டின் ஓசையும் எல்லாப்பக்கங்களிலுமுண்டாயின. ()

நோக்கியதிசைகளெல்லாந் தன்னையேநோக்கிச்செல்ல ... ... *
வீக்கியகழற்கால்வேந்தர் விரிந்தகைம்மலர்கள்கூப்பத் ... ... *
தாக்கியகளிறுந்தேரும் புரவியும்படைஞர்தாளும் ... ... *
[illegible]க்கியதூளியின்னும் மண்ணுலகாக்கப்போனான் ... ... *

(இ-ள்) தான்பார்த்த திக்குகளிலுள்ளோர்களெல்லாம் தன்னையே நோக்கிச்செல்லவும் கழல்கட்டிய கால்களையுடைய வேந்தர்கள் பரந்த கைகளாகிய மலர்களைக்குவிக்கவும் ஒன்றோடொன்று தாக்குகின்ற யானைகளின் கால்களும் தேர்களின் சக்கரங்களும், குதிரைகளின் குளம்புகளும், காலாள்க

ளின் கால்களும் சென்றுண்டாக்கிய தூளிமேலெழுந்து போர்த்தலால் விண்ணுலகத்தையும் மண்ணுலகாகச் செய்யப்போமுன்-எ-று. (௮௰)

தாளென்பதனைக் களிறுமுதலியவற்றோடுங் கூட்டுக.

வீரருங்களிறுந்தேரும்புரவியுமிடைந்தசேனை ... ...*
பேர்விடமில்லைமற்றோருலகில்லைபெயர்க்கலாகா ... ... *
நீருடையாடையாளுநெளித்தனண்முதுகையென்றால் ... ...*
பார்பொறைநீக்கினானென்றுரைத்ததெப்பரிசுமன்னோ ... *

(இ-ள்.) காலாள்களும் களிறும் தேரும் புரவியும் நெருங்கிய சேனைகள் இருந்த இடம்விட்டுப்பெயர்தற்குப்பூமியிலிடமில்லை பெயர்ந்தால் வேறொரு உலகமுமில்லை (அதனால்) அடியெடுத்தல்முடியாது நீராகிய ஆடையையுடையபூமிமாதும் முதுகைநெளித்தாளென்றால் இவன் பூமிக்குப்பாரத்தைச்சுமந்து நீக்கினானென்று (அறிவுடையோர்) கூறினது எவ்வண்ணம்-எ-று.()

எனவே அளவில் சேனையானென்பது.

இன்னணமேகிமன்னன்யோசனையிரண்டுசென்றான் ... ...*
பொன்வரைபோலுமிந்துசைலத்தின்சாரல்புக்கான் ... ... *
மன்மதக்களிறுமாதர்கொங்கையுமாரனம்புந் ... ... *
தென்வரைச்சார்ந்துநாறுஞ்சேனையுமிறுத்ததன்றே... ... ...*

(இ-ள்.) இவ்விதமாக ஏகித் தசரதசக்கரவர்த்தி இரண்டு யோசனைதூரஞ்சென்றவனாகிப் பொன்மலைபோல்கின்ற இந்துசைலத்தினதுசாரலைச்சேர்ந்தான் மாதர்களுடைய கூந்தலாகியஇருள் மலரும் கொங்கைகள் தென்மலையிலுண்டாகின்ற சந்தனத்தேய்வையும் நாறுகின்றசேனையும் இறங்கியது.()

மன்மதக்களிறு மாரனம்புநாறும்கொங்கைசாந்து நாறுமென் நிரனிறையாகப்பொருள்கொள்க. மன்னன் புக்கான் சேனையுமிறுத்தது என எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயவழியுந் தன்வினைகோடல், உம்மையெச்சமிருவீற்றுமென்னுஞ் சூத்திரத்தில் தன்னின்முடித்தலாற்கொள்க.

எழுச்சிப்படலமுற்றிற்று.

௰௫-வது-வரைக்காட்சிப்படலம்.

கோவையார்வடக்கொழுங்கவடொடுதாநிவந்த ... ... *
ஆலிவெட்டணவரிசிலையனேகங்மேற்கொண்ட ... ...*
பூவைவாய்ச்சியர்முலைசிலர்புயத்தொடும்பூட்டத் ... ... *
தேவதாரத்துஞ்சந்தினும்பூட்டினைசிலா... ... ...*

(இ-ள்.) கோவை- ஆகாயத்தை—ஆர்- பொருந்துகின்ற—கொழு- செழுமையாகிய—வடக்கவடு- வடக்கின்கணுள்ளமேருமலை—ஒடுதா- ஒப்பா

காதுபின்னிட—நிவந்த-உயர்ந்தன—ஆவி-(தம்மேலெழுதியசந்தனத்தொய்யிலுலரும்படி) அகிற்புகையை—வேட்டன-வேண்டின—வரி-கட்டமைந்த—சிலை-கரும்புவில்லையுடைய—அனங்கன் - மன்மதனுருவத்தை—மேற்கொண்ட-மேற்புறத்திற்கொண்டன—(ஆகிய) பூவை-நாகணவாய்ப்புள்ளின்சொல்போன்ற—வாய்ச்சியர்- சொல்லையுடையமாதர்கள்—மூலை- கொங்கைகளை—சிலர்புயத்தொடும்- சிலஆடவர்களது புயங்களோடும்—பூட்ட - அணைக்க—* கோவை - தொடர்ச்சியை—ஆர் - பொருந்திய—வடம் -ஆலமரத்தினது—கொழுங்கவடு-செழுமையாகியபணைகள்—ஒடிதர - ஒடிய—நிவந்த-உயர்ந்தன—ஆவி-தடாகத்தை—வேட்டன-விரும்பின—வரிசிலையனங்கன்-வரிசிலையையுடைய அனங்கனையொத்தஆடவனை—மேற்கொண்ட-(தத்தம்) முதுகிற்கொண்டன—(ஆகிய) சிலமா-சிலயானைகள்—தேவதாரத்தும்-தேவதாருவினிடத்தும்—சந்தினும்-சந்தனமரத்தினிடத்தும்—பூட்டின-கட்டப்பட்டன—எ-று. (க)

முலைசிலர்புயத்தொடும் பூட்டவென்றது யானைகளின்மேலிருக்கிற மாதர்களை ஆடவர்கள் தங்கைகளைநீட்டி யிறக்குங்கால் தம்புயங்களில் அம்மாதர்களது கொங்கைகள் தாக்குதலை. அனங்கன் ஆகுபெயர்.

நேரொழுங்கலில்பகையினைநீதியால்வெல்லுஞ் ... ... *
சோர்விடம்பெறாவுணர்வினன் சூழ்ச்சியேபோல ... ... *
வாரொடுந்தொடர்கவட்டொடுமராமரக்குவட்டை... ... *
வேரொடுங்கொடுகிரியெனநடந்ததோர்வேழம் ... ... *

(இ-ள்.) ஒருயானை வஞ்சனையின்றி அடங்குதலில்லாதபகைவனை நீதியால்வெல்லுகின்ற,மறப்பு இடத்தைப்பெறாதஅறிவையுடையானது ஆராய்ச்சியைப்போல(தான்) வாரினாலே கட்டுண்டபணையையும்மராமரத்தினதுவளாரையும் வேருடன்கொண்டு மலைநடந்ததுபோல நடந்தது-எ-று. (உ)

மராமரத்தை வேரொடுங்கொடென்றது கவட்டொடு மராமரக்குவட்டை வேரொடுங்கொடென்றது தன்னைப்பிணித்த கவட்டையிறுத்துத் தானுணற்பொருட்டுமராமரக்குவட்டைமுறித்து அவ்வளவிலமையாது அம்மரத்தையே பறித்துச்சென்றதென்பதுணர்த்தற்கு.வெல்லுமென்னுங்காரியப்பொருட்டாய்வந்த பெயரொச்சம் தன்காரணமாகிய சூழ்ச்சியென்னும்பெயர்கொண்டது. வாரொடுமென்பதன்கண் ஒடுவுருபு கருவிப்பொருட்டு. கவட்டொடு இசைநிறை.

திரண்டதாளெனடுஞ்சினைபணைமருதிடையொடியப் ... ... *
புரண்டுபின்வரவுரலொடுபோனவன்போல ... ... *
வுருண்டுகாறொடர்பிறகிடுதறியொடுமொருங்கே ... ... *
இரண்டுமாமரமிடையிறநடந்ததோரியானை... ... ... *

(இ-ள்.) ஓர்யானை திரண்ட பராரை நெடிய அடர்ந்த பணைகளையுடைய மருதமரங்கள் முறியும்படிபுரண்டுபின்வர, உரலோடு (அம்மரங்களுக்கு) இடையேசென்ற கண்ணபிரான்போல, இரண்டுமாமரங்கள் ஒருங்காக முறியும்படி உருண்டு பின்வருகின்றகாலைத் தொடர்ந்ததறியோடு (அம்மரங்களுக்கு) இடையேநடந்தது-எ-று. (௩)

தாணெடுமேருதென்பது அளவுப்பண்புச்சொல்லுஞ் சினைச்சொல்லு முதற்சொல்லும் முறைமயங்கிவந்த மரபுவழுவமைதி.

கதங்கொள்சீற்றத்தையாற்றவாளினியனகழறிப் ... ... *
பதங்கொள்பாகனுமந்திரியொத்தனன்பன்னூல் ... ... *
விதங்களாலவன்மெல்லெனமெல்லெனவிளம்பும் ... ... *
இதங்கள்கொள்கிலாவிறைவனையொத்ததோரியானை ... ... *

(இ-ள்) கொண்ட கோபத்தையும் சீற்றத்தையும் ஆற்ற இனியவாகிய குறிப்புரைகளைச்சொல்லிப் பக்குவத்தில் (இசைந்துவரக்) கொள்ளுகின்றபாகனும் அமைச்சனையொத்தனன் ஓர்யானை (ஏற்குமாறு) நாலுவகைகளால் அவ்வமைச்சன் பலநூல்களினின்றுமெடுத்து மெல்லென மெல்லெனக்கூறும் (உறுதியயக்கும்) நற்பொருள்களை ஏற்றுக்கொள்ளாத அரசனையொத்தது-எ-று. (கூ)

சீற்றம் சிறிதுபொழுது நிகழ்வதாகியசினம் அடுக்கு-அச்சப்பொருட்டு.

மாறுகாணுமதாய்நின்றுமழையெனமுழங்குந் ... ... *
தாறுபாய்கரிவனகரிதண்டத்தைத்தடவிப் ... ... *
பாறுபின்செலக்காலெனச்செல்வதுபண்டோர் ... ... *
ஆறுபோகியவாறுபோமாறுபோன்றதுவே ... ... *

(இ-ள்.) பகைகாண்பதாகிநின்று மேகத்தைப்போல முழங்குகின்ற இருப்புமுள்பாய்கின்ற ஒருயானையானது வனக்களிற்றினது சென்றவழியைக் கரதால் பரிசித்துக்கொண்டு பருந்துகள் பின்தொடர்ந்துவரக் காற்றைப்போலச்செல்லுவது முன்னே ஓராறுசென்றவழியிற்போகின்ற ஆறுசெல்வதையொத்திருந்தது-எ-று. (௰)

பாறுபின்செலச்செல்வது எனவே போர்க்கஞ்சாது பகைவரை வெற்றிகொள்வது என்பது குறிப்பெச்சம். மணத்தால் உணர்ந்து செல்வதாகலிற் றடவியென்றார்.

பாத்தயானையிற்படங்களிற்படுமதநாறக் ... ... *
காத்தவங்குசநிமிர்ந்திடக்கால்பிடித்தோடிப் ... ... *
பூத்தவேழிலம்பாலையைப்பொடிப்பொடியாக்கிக் ... ... *
காத்திரங்களாற்றலத்தொடுந்தேய்த்ததோர்களிறு ... ... *

(இ-ள்.) ஓர்யானையானது அணியாகப்பகுத்துக்கட்டிய யானைகளினுடை வரிசைகளில் மிகுந்தமதநாற்றம் நாறத்தன்னைக்காத்திருந்தபாகன் கை அங்குசமானது நிமிர்ந்திட மணத்தைவிடாது மோந்துசென்று மலர்ந்த ஏழிலைம்பாலை என்னும் மரத்தைப் பொடிப்பொடியாக முன்னங்கால்களால் தரையோடு தேய்த்தது-எ-று. (கக)

காலாகுபெயர் அடுக்குமிகுதிப்பொருட்டு.

அலங்கலானைனைக்கடமடைவற்றொருபிணைடைந்த ... ... *
இலங்கலாறுமத்திடுகளுந்திருகோயுஞ்செறிந்த ... ... *
உலங்குவேந்தனைத்துறந்தமையொத்ததவ்வூசத் ... ... *
தலைவனையொத்துப்பொலிந்ததுசத்தாசயிலம் ... ... *

(இ-ள்) வலியளவில்லாத மதயானைகளனேகமும், அவற்றினுடனே நெருங்கிய திலகமணிந்த விளக்கமாகிய நெற்றியையுடைய பெண்யானைகளும், கன்றுகளும் அடர்ந்தன (அவ்வடர்ச்சி கொம்புகள் நீண்டவனத்தில் யானைக்கூட்டத்தையேயொத்தது சந்திரசயிலமானது அந்தயூகநாதனையேயொத்து விளங்கியது-எ-று. (எ)

உலவைநீள்வனம் எல்லைப்பெயர்கொண்டது. ஏ-இரண்டும் தேற்றம்.

தெருண்டமேலவர்சிறியவர்ச்சேரினுமவர்த ... ... *
மருண்டபுன்மையையமாற்றுவரெனுமிதுவழக்கே ... ... *
உருண்டவாய்தொறும்பொன்னுருளுரைத்துரைத்தோடி ... *
இருண்டகல்லையுந்தன்னிறமாக்கியவிரதம் ... ... *

(இ-ள்.) (அறியவேண்டியவற்றை அறிந்து) தெளிந்தமேன்மக்கள்கீழ்மக்களோடு சேர்ந்தாலும் அவர்களுடையமயங்கிய இழிதன்மையைவேறுபடுத்திப்பெருந்தன்மையாகச்செய்வர் என்கின்ற இது இயற்கையே (அதுபோல) இரதங்கள் சக்கரங்களினுருண்டுசென்றவிடமெல்லாம் பொன்னை உரைத்துரைத்தோடிக்கறுத்தகற்பாறைகளையும் தன்னிறமாகச்செய்தன எ-று (அ)

சேரினுமென்பது சேராரெனப் பொருள்தரலின் எதிர்மறை அதுபோலவென்பது இசையெச்சம் கல்லையுமென்னுமும்மை இழிவுசிறப்பு. தன்னிறம்-எ-து- ஆக்கியவென்பதினித்துப்பன்மைபற்றிப் பன்மையிலொருமைவந்த வழுவமைதி-நச்-ம்.

கொவ்வைநோக்கியவாய்களையிந்திரகோபங் ... ... *
கவ்விநோக்கினவென்றுகொல்காட்டினமயில்கள் ... ... *
வவ்விநோக்கியர்நலங்கொண்மேகலைபொலஞ்சாயற் ... ... *
செவ்விநோக்கினதிரிவனபோல்வனதிரிந்த ... ... *

(இ-ள்.) கொவ்வைக்கனியினது அழகையுடைய வாய்களை இந்திரகோபத்தைக்கவ்விய வழகையுளடயன வென்றே காட்டினுள்ள கூட்டமாகிய மயில்கள் மான்போன்றபார்வையையுடைய மாதர்களது நன்மையைக்கொண்ட மேகலாபரணத்தினழகையும் அழகியசாயலினதுவழகையும்நோக்கத்திரிகின்றனபோல்வனவாகித்திரிந்தன-எ-று. (கூ)

கவ்விநோக்கினவென்பதில் ஈறுதொக்கது. மேகலைமணிகள் கலாபத்தின்கண்களைப்போலவும் தம்மெய்யின் புள்ளிகளைப்போலவுங் காண்டலின் நோக்கினவென்பது.

உய்க்கும்வாசிகளிழிந்தனரன்னத்திறெனுங்கி ... ... *
மெய்க்கலாபமுமங்குலமுகளுமிழைகளுமவிளங்கத் ... ... *
தொக்கமென்மரநிழல்படத்துவன்றியகுழல்... ... ... *
புக்கமங்கையர்பூந்தகொம்பாமெனப்பொலிந்தார்... ... *

(இ-ள்.) நடத்துகின்ற குதிரைகளினின்று மிழிந்தவர்களாகி அன்னப்புட்களைப்போலநடந்து தழைதிரம்பிய மெல்லியமரங்கள் நிழலுண்டாகநிறைந்தவிடத்தில் புகுந்த மங்கையர்கள் தம்மெய்யில் மணிக்கோவைகளாலாகிய கலாபமும் குழைகளும் மற்றையணிகளும் பிரகாசித்தலினால் மலர்ந்த கொம்புகளைப்போல விளங்கினார்கள்-எ-று. (ய)

தளந்கொடாமரையெனத்தளிரடியினுமுகத்தும் ... ... *
வளங்கொண்மாலைவண்டலமரவழிவருந்தினராய்... ... ... *

விளங்குதம்முருப்பளிங்கிடைவெளிப்படவேறோர் ... *
துளங்குபாறையிற்றோழியரயிர்த்திடத்துயின்றார் ... ... *

(இ-ள்.) சிலமாதர் வழியில் வருத்தினவர்களாகி இதழ்களைக்கொண்ட தாமரைமலர்களென்றுகருதி தளிர்போன்ற மெல்லிய சிவந்த பாதங்களிலும் முகத்திலும் தேன்வளத்தைக்கொள்ளுகின்ற வாழ்க்கைமுறையையுடைய வண்டுகள் மொய்க்கச் சுழலவும் விளங்குகின்ற தம்முரு ஒருபளிக்குப்பாறையிற்றோன்றும்படி வேறொரு விளங்குகின்ற பளிக்குப்பாறையில (உபசாரஞ்செய்யவந்த) தந்தோழியார்கள் துணியாமல் ஐயப்படவும் துயின்றார்கள்-எ-று. (௰௧)

பிடிபுக்காவிடைமின்னொடும்பிறங்கியமேகம் ... ... *
படிபுக்காலெனப்படிதரப்பரிபுரம்புலம்பத்... ... ... *
துடிபுக்காவிடைத்திருமகடாமரைதுறந்து ... ...*
குடிபுக்காலெனக்குடிபுக்கார்கொடியன்னமடவார் ... ...*

(இ-ள்.) மின்னல்களோடு விளங்கிய மேகங்கள் பூமியில் படிந்தாற்போல அவ்விடத்தில் பிடிகள்பகுந்து பூமியிற்படியக்கொடியன்னமடவார் உடுக்கையானது உவமையாகப் புகாதசிறிய இடையையுடையதிருமகள் தாமரைமலரைத்துறந்து குடிபுகுந்தாற்போல (அப்பிடிகளின் மேலிட்ட செம்பட்டுத் தவிசைத்துறந்து) பாதங்கள் நடக்கிற் கன்றுமெனக்கிண்கிணிகள்புலம்பநடந்து குடிபுகுந்தார்-எ-று. (௰௨)

அவ்விடை-எ-து-அவிடையெனநீட்டியது. புக்காவிடை-எ-து- விரித்தது. பிடிபுக்காவிடை என்பதற்கு ஆவயின் வல்லெழுத்து மிகுதலு முரித்தேயென்பதனால் வல்லெழுத்துமிக்குமுடிந்த பூவென்னுமொருபெயர் குறுக்கியதெனக்கொண்டு பிடிகள் பூக்களையுடைய காவினிடத்திலெனப் பொருள்கூறினு மமையும். தாமரைதுறந்தென்றதினாலுவமப்பொருளிற்செம்பட்டுத்தவிசைத்துறந்தென்பதும் பரிபுரம்புலம்ப வென்றதனால் நடந்தென்பதும் பாதங்கள் கன்றுமென்பதும் வருவிக்கப்பட்டன.

உண்ணுணவூட்டியிளையோர்நகர்கொணர்ந்த ... ... *
துண்ணெனுமுழக்கினதுருக்கர்தரவந்த ... ... *
மண்மடந்தைமார்பினணிவன்னசரமென்னப்... ... ... *
பண்ணியல்வயப்பரிகள்பந்தியினிரைத்தார்... ... ...*

(இ-ள்.) உண்ணுதற்குரிய உணவுகளையுண்பித்துக் குமாரர்களால் நகரத்தினின்றுங் கொண்டுவரப்பட்டன (கேட்டோர்) அஞ்சுகின்றமுழக்கத்தையுடையன துருக்கர்கள்கொடுக்கவந்தன (ஆகிய) கல்லணையமைந்த வெற்றியையுடைய குதிரைகளைப் பூமிமாதினுடைய மார்பிலணிந்த (நானாவித நிறமான மணிசரப்பணிபோல முறைமுறையாக நிரைத்தார்கள்—எ-று. (௰௩)

நிரைத்தல்-முறைப்படவைத்தல்.

தீர்த்துறைநிரைத்தவெனநீடிலைநிரைத்தார்... ... ... *
ஆர்கலிநிரைத்தவெனவாரணநிரைத்தார் ... ... *
கார்நிரையெனக்களிறுகாவிடைநிரைத்தார் ... ... *
மாருதநிரைத்தவெனவாசிகணிரைத்தார் ... ... *

(இ-ள்.) நீரலைகள் நிரைக்கப்பட்டனபோல நீண்டதிரைச்சீலைகளை நிரைத்தார்கள் கடல்கள் நிரைக்கப்பட்டனபோல அங்காடிகள் நிரைத்தார்கள் மேகங்களினது அணியைப்போல யானைகளைச் சோலைகளிடத்தில் நிரைத்தார்கள் காற்றுகள் நிரைக்கப்பட்டனபோலக் குதிரைகளை நிரைத்தார்கள்-எ-று.

ஆர்கலி- வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்தவன் மொழித்தொகை. கொண்டல் கோடை வாடை தென்றல் எனும் பகுப்புண்மைநோக்கி மாருதமென்பதற்குக் காற்றுகளெனப் பன்மையாகப் பொருள்கூறப்பட்டது.

நடிக்குமயிலெனவருநவ்விவிழியாரும் ... ...*
வடிக்குமயில்வீரருமயங்கினர்திரிந்தார் ... ...*
இடிக்குமுரசக்குரலினங்குமுரல்சங்கின்... ... ...*
கொடிக்களினுணர்ந்தரசர்கோநகரடைந்தார் ... ... *

(இ-ள்.) நடிக்கின்றமயில்களைப்போல வருகின்ற மான்பார்வையையொத்த பார்வையையுடைய மங்கையரும் வடிக்கின்ற கைவேலையுடைய வீரர்களும் மருண்டுதிரிந்து (இடியைப்போல) ஒலிக்கின்றமுரசங்களினது ஓசையாலும் எங்கும்பரவ ஒலிக்கின்றசங்குகளினோசையாலும் கொடிகளினாலும் உணர்ந்து (தத்தம்) அரசர்களது மனைகளையடைந்தார்கள்—எ-று. (ம௫)

மிதிக்கதிமிர்தூளியின்விளக்கமறுமெய்யைச் ... ... *
சுதைக்கணுரையைப்பொருவுதூசுகொடுதூய்தா ... ... *
உதிர்த்தனரிளங்குமரரோவியரிலோவம் ... ... *
புதுக்கினரெனத்தருணமங்கையர்பொலிந்தார் ... ... *

(இ-ள்.) கால்களால்மிதித்து நடக்கமேலெழுந்த தூளியினால் பொலிவிழந்த மெய்யின்கண், அமுதத்தினிடத்துண்டாகிய நுரையையொத்த மெல்லிய வெள்ளைத்துகிலால் இளங்குமரர்கள் சுத்தமாக(அத்தூள்களை) உதிர்த்தார்கள் (அதனால்) சித்திரக்காரர்களைப்போலச் சித்திரங்களைப்புதுக்கினார்களென்றுகண்டோர்சொல்லஇளமையாகியமங்கையர்கள்மாசின்றிவிளங்கினார்கள்

தாறுயர்தடக்கிரியிழிந்துதரைசேரும் ... ...*
கோளரியெனக்களிகொள்கொற்றவரிழிந்தார் ... ... *
பாளைவிரியொத்துலவுசாமரைபடப்போய் ... ...*
வாளொழுநிரைத்தபடமாடமவைபுக்கார் ... ...*

(இ-ள்.) பெருமையாகிய மலையினின்று இழிந்து தரையில் சேரும்வலியமைந்த சிங்கத்தைப்போல முன்னங்கால்களுயர்ந்த யானைகளின்மேலிருந்து அரசர்களிழிந்தார்களாகி விரிந்தகமுகம்பாளையையொத்துலாவுகின்ற சாமரைகளது காற்று (தம்மிருபுடையிலும்) படப்போய் ஒளிவீசப்படி முறைப்படவமைத்த படத்தினாற்செய்தவீடுகளிற் புகுந்தார்கள்-எ-று. ()

தூசினொடுவெல்படமுடைக்குழல்களோடும் ... ... *
வாசநகைமங்கையர்முகங்கண்மறைவானிற் ... ... *
காசின்மதியின்கதிர்வழங்குநிழலெங்கும்... ... ... *
வீசுதிரைவெண்புனல்விழுங்கியதுபோலும் ... ...*

(இ-ள்.) ஆசினோடு வெண்மையாகிய படத்தினலமைத்த சிறுவீடுகள் தோறும் மங்கையர்களது இயற்கையமணமமைந்த சிரிப்பையுடைய முகங்கள் மேகமுலாவுகின்ற ஆகாயத்திற் பொருந்தியசந்திரனது குற்றமில்லாத கிரணங்களுக்கொப்பாக வழங்குகின்ற ஒளியினால் (அக்குடில்களுக்கு) எப்புறத்திலுங்கட்டிய திரைச்சீலைகள் வெண்மையாகியநீரால் கவர்ந்ததைத் ஒக்கும்-எ-று. (௰௮)

ஆசுபடங்களாலமைத்தனவாயினும் வேற்றுமைநயத்தால் உடைமையாக்கித் ஆசினொடு வெண்பட முடைக்குடில்களென்றார். நகைக்கியற்கைவாசம் குலக்கொடிமாதர்வாய் நறுமுதநாறுவவெனக் கூறியதனுணர்க. திரைப்புரையில் நோக்குகின்றமங்கையர்களது சந்திரனைப்போன்ற முகத்தின தொளியும் நகையொளியும் திரையைச்செறிந்துருவிப் பரத்தலின் அது அத்திரைகளை நீர்கவர்ந்ததுபோலுமென்பதுகருத்து.

மண்ணுறவிழுந்தெழுந்தே நெடுவானுறவெழுந்து ... ... *
கண்ணுதல்பொருந்தவருகண்ணனில்வருங்கார் ... ... *
உண்ணிறநறும்பொடியைவீசியொருபாகம் ... ... *
வெண்ணிறநறும்பொடிபுனைந்தமதவேழம் ... ...*

(இ-ள்.) மண்ணிற்பொருந்தவிழுந்து நெடியவானைப்பொருந்த நிமிர்ந்து தன்னுடலின் கரியநிறத்தை முழுமையுமறைத்த வெண்ணிறமாகிய நறியபொடியைஉதறிவிட்டு ஒருபாகத்தில் வெள்ளியநிறத்தையுடைய நல்ல பொடியைஉதறுமற் றரித்தமதயானை நெற்றிக்கண்ணையுடையசிவன் (தன்மேனியினொருகூற்றில்) பொருந்தவருகின்ற இறைவனைப்போலவநம்ள-று

கண்ணுதல் - இரண்டாம்வேற்றுமைத்தொகை நிலைக்களத்துப் பிறந்தவன்மொழித்தொகை. இறைவனதுமேனியில் கண்ணுதல் பொருந்துதல் கந்தபுராணத்தில், இதனை வலத்தனன் திரிபுரமெரித்தவனென்னும் பாசுரவியாக்கினத்தில் விவரமாய்க்காணலாம். ஈண்டுரைப்பிற்பெருகும்.

தீயவரொடொன்றியதிறத்தருநலத்தோர் ... ...*
ஆயவரையந்நிலையறிந்தனர்துறந்தாங் ... ... *
கேயவருநுண்பொடிபடிந்துடனெழுந்தோன் ... ... *
பாய்பரிவிரைந்துதறிநின்றனபரந்தே ... ...*

(இ-ள்.) ஒள்ளியபாய்கிற்றபரிகள், தீயவர்களோடுநட்பப்பொருந்திய திறத்தையுடைய மாறுதலரிய) நல்லறிவினோர் (குணச்செய்கைகளை) ஆய்ந்து அறிந்தவர்களாகி அப்போதே அத்தீயவர்களைத்துறந்தாற்போலப் பொருந்தவருகின்ற நுண்ணிய புழுதியிற்படிந்து புரண்டு உடனேயெழுந்து விரைந்து உதறிப்பரவிநின்றன-எ-று. (உ௰)

ஆயென்னுமுதனிலை இறந்தகாலவினை யெச்சப்பொருடந்தது.

மும்மைபுரிவன்கயிறுகொய்துசெயன்மொய்ம்பாற் ... *
நம்மையுமுணர்ந்துதைகண்விவிர்கின்ற ... ... *
அம்மையினொடிம்மையையறிந்துநெறிசெல்லுந் ... *
செம்மையவரொன்னநனிசென்றனதுரங்கம் ... ... *

(இ-ள்) செயன்மெய்ம்பால்-ஞான நூல்களைக்கற்ற அறிவின்வலியால்—மும்மைபுரி மூன்றுவிருப்பமாகிய—வன்கயிறு- வலியகயிற்றை—கொய்

து-அறுத்து—தம்மையுமுணர்ந்து - (இறைவனுக்குடைமை) யெனத்தம்மையுமறிந்து—தளைகளைந்-உலகினியற்கையையுணர்ந்து—விரைகின்ற-அதன்பற்றுவிடற்குவிரைகின்ற—அம்மையினோடு- மறுமைப்பயனோடு—இம்மையை- இம்மைப்பயனை—அறிந்து- தெரிந்து—நெறி- ஞானவொழுக்கத்தில்—செல்லும்- நடக்கின்ற—செம்மையவரொன்ன- ஞானநிலையுடையாரைப்போல—துரங்கம்- குதிரைகள்—செயன்மெய்ப்பால் - போர்த்தொழின்முதலியபயிற்றியசெயலின்வலியால்—மும்மைபுரி- (தம்மைக்கட்டிய) மூன்றுபுரியாகிய—வன்கயிறு-வலியகயிற்றை—கொய்து - அறுத்து—தம்மையுமுணர்ந்து-தம்வலியையுமறிந்து—தளைகளைந்து - தளையையும்நோக்கிக்கொண்டு—விரைகின்ற - விரைகின்றனவாகி—அம்மையினோடு-செல்லுமவ்விடத்தில் தம்வயமாயிருத்தற்சுகத்தோடு—இம்மையை- இவ்விடத்து ஒருவர்வயத்திலிருத்தற்றுக்கத்தை—அறிந்து-தெரிந்து—நெறி-வழியில—நனிசென்றன-மிகுதியுஞ்சென்றன—எ-று (உக)

செம்மைபவர்க்குச்செயல்-எ-து-ஈண்டு சிறந்தகற்றற்செயலை. செயலென்னுங்காரணம் அறிவென்னும் அதன்காரியத்தின்மேனின்றது.

விழுந்தபனியன்னதிரைவீசுபுரைதோறுங் ... ... *
கழங்குபயின்மங்கையர்கருங்கண்மிளிர்கின்ற ... ... *
தழங்குகழிசிந்தியதரம்பயிறரங்கத் ... ... *
தெழுந்திடைபிறழ்ந்தொளிர்கொழுங்கயல்களென்ன ... *

(இ-ள்.) (விண்ணினின்றும்) விழுந்தபனியையொத்த நுண்ணியதிரைச்சீலைகளை நீளக்கட்டிய குடில்கள்தோறும் அம்மனைக்கழங்குகள் விளையாடுகின்ற மங்கையர்களது கருங்கண்கள் மிகவும் (தம்மை) எறிகின்ற அணியாகப்பொருந்தியவொலிக்கின்ற கடலலைகளில் துள்ளி அவற்றினிடத்தேபிறழ்ந்து ஒளிர்கின்ற கொழுமையுள்ள கயல்மீன்களைப்போலப்பிரகாசிக்கின்றன. ()

நுண்ணிழைச்சீலையாகிய திரையாதலால் பனியுவமிக்கப்பட்டது.

வெள்ளநெறிவாரியறவீசியுளவேனுங் ... ...*
கிள்ளவெழுகின்றபுனல்கேளிரின்விரும்பித் ... ...*
தெள்ளுபுனலாறுசிறிதேயுதவுகின்ற ... ... *
உள்ளதுமறாதுதவும்வள்ளலையுமொத்த ... ...*

(இ-ள்.) தெளிந்தநீரையுடையஆறுகள் (அரசர்களுக்கும் அவர்கள்பரிவாரங்களுக்கும், வெள்ளமாகியமிகுந்த நீரைமுழுமையுங்கொடுத்தனவாயினும் தோண்டுதலினால் சுரக்கின்றபுனலையும் சிறிதேயுதவுகின்றன (அதனால் இரப்போரை) உறவினரைப்போல்விரும்பித் தம்பாலுள்ளபொருளை மறுக்காமல் உபகரிக்கின்ற வள்ளலையுமொத்தன-எ-று. (உரு)

அரசர்களும் சேனைகளும் முகந்துண்ணநீர் வற்றியனவென்பதுகருத்து.

துன்றிநெறிபக்கம்விளங்கவழையோடு ... ... *
பின்றிரியவெல்லைமணிபாயமிளிமார்பர் ... ... *
மன்றன்மணநாறுபடமாடநுழைகின்றார் ... ... *
குன்றின்முழைதேருழுவைகோளரிகளொத்தார் ... ...*

(இ-ள்.) நெருங்கிநெறித்தசிகை பின்புறத்திலசைய அழகிலோடு மின்னலி ன் திரிவதுபோலமணியாரங்களைசந்து விளங்குகின்ற மார்பர்கள் மன்றலாகி யமணம்வீசுகின்றபடத்திலாகியவீரர்களிலடலைகளினது துவாரங்களிலோன் றுறமுழங்கின்றவலிமையையுடைய சிங்கங்களை ஒத்தவர்களாகி நடந்தார்கள்.

நெருங்கயிலெயிற்றனயசெம்மயிரினெற்றிப் .. *
பொருங்குலிகமப்பியனம்பார்மணிகளார்ப்பப்... *
பெருங்களிறலைப்பனகலக்குலமெனப்பட்டுக் ... *
கருங்கடல்கலக்குமழைகடலனையபோதம... ... *

(இ-ள்.) வேல்களைநெருங்கிய தந்தங்கள் ஒத்தன செம்மயிரினையொத்த நெற் குலிகத்தால் நெற்றியிலேபூசப்பட்டனவாகிய பெரியவனின் மான்போலமையுடை யமணிகள் ஆரவாரிக்கும்படி அலையையுடைய நீளமாவிருப்பயிகளைக்குலமென (ஆதலால்) பெருமையையாகிய கடலைகலக்கிய மழையுடையவர்களை ஒத்தி ருந்தன-எ-று. (உ௫)

தம்முட்பகைத்தாற்போல மாறியொலித்தலிற் போர்மலிகளென்றார்.

ஒக்கநெறியுய்ப்பவருரைத்தகுறிகொள்ளா .. *
பக்கமினமொய்க்கயலலைக்கநனியார ... ... *
கைக்கரிமதத்தவிலைமாதர்கலையல்குல் ... ... *
புக்கவரையொத்தனபுனற்சிறைகளோரு ... *

(இ-ள்.) (தமக்கும் அவர்கட்கும்) ஒத்திருக்க நல்வழியில்செலுத்தும்பாக ர்கள் கூறிய குறிகளைக் கொள்ளாதனவாகிப் பக்கங்களில் கூட்டமாகமொய்த் தகயல்மீன்கள் வருத்தமிகவும் மலியதானவாகிமதத்தையுடையனவாகிய கை யையுடையகரிகள், உலகநடையையொத்திருக்க நன்னெறியில் நடத்தும் பெரி த்தோர்கள்சொன்ன நற்பொருள்களைக் கேளாதவர்களாகி நட்பினரும் சுற் றத்தாரும் கூட்டமாக அயலவரும் இடித்துக்கூற மிகவு மலியதனர்களாகி விலைமாதர்களுடைய கலையணிந்த அல்குலில்விரும்பிச் சேர்ந்தவர்களையொ த்தனவாகி, நீர்த்துறைகளைபேறுமல் நின்றன எ-று (உ௬)

குறி-தொழிலாகுபெயர்-மொய்க்கயலென்பதில் ஈறுதொக்கது.

துகிலிடைமடந்தையரொடாடவர்துவன்றிப் ... *
பகலிடையவட்டிலின்மடுத்தெரிபரப்பும் .. ... *
அகிலிடுகொழும்புகையமுங்கலின்முழுங்கா ... *
முகில்படிநெடுங்கடலையொத்துளதப்பூவூர் ... *

(இ-ள்.) துகிலையுடுத்த இடையையுடைய மங்கையர்களோடு ஆடவர்கள் நெருங்கி மடைப்பள்ளியில் எரிமூட்டிப்பரப்பிய அகிற்கட்டைகள் தருகி ன்ற செழுமையாகியபுகை சூரியவொளிமழுங்கச் செறிதலின்லாமல் எங்கு ந்தோன்றி பெருநிறக மேகங்கள்(திருண்ண)இறங்குகின்ற நெடியகடலை யொத்திருந்தது அந்தப்பழைய ஊர்-எ-று. (உ௭)

செய்வெனெச்சந்திரியாகிய முழுங்காவென்பது இலச்சனையானே பெருந்தோன்று தலென்னும் பொருடந்தது - இவ்வாறு புல்கனிப்புசாறுமெனப் பிறர்கூறுநூலுங்காணக்.

பொன்னணிமுதலியவணியாது மடைத்தொழில் புரிகுநராகலிற் றகிலிடைமடந்தையரோ டாடவரெனவும் தம்மூதூரில் நுகர்வதுபோல ஈண்டும் எல்லாரு மெல்லாப்பெருஞ்செல்வ முமெய்தி யின்ப நுகர்தலின் புத்தூரென்றது மூதூரெனவுங்கூறினார்.

கமருறுபொருப்பின்வாழும்விஞ்சையர்காணவந்தார்... ...*
தமரையுமறியார்நின்றுதிகைப்புறுந்தகைமைசான்ற ......*
குமரருமங்கைமாருங்குழுவலால்வழுவிவிண்ணின் ... ...*
றமரர்நாடிழிந்ததென்னப்பொலிந்ததவ்வனிகவெள்ளம் ... *

(இ-ள்.) (அங்கங்கு) பிளத்தலமைந்த மலைகளில்வாழும் வித்தியாதரர்கள் காணவந்தவர்களாகி (தம்மோடுவந்த) சுற்றத்தாரையுமறிந்திலராய்த் திகைத்துநிற்கின்ற(அழகுமுதலியவற்றின்)பெருமைநிறைந்தகுமரர்களும்மங்கைமார்களுங்கூடி யிருப்பதினால் அச்சேனைவெள்ளந்தங்கிய இடம்விண்ணினின்றும் தவறிவிழுந்ததாகியுந்தேவர்களுடைய நாட்டைப்போல விளங்கியது.

மக்களியக்க மில்லாவிடத் தியங்குவோரென்பார் கமருறுபொருப்பின் வாழும்விஞ்சையரென்றார்.

வெயினிறங்குறையச்சோதிமின்னிழல்பரப்பமூன்று ... ...*
டுயிலுணர்செவ்வியோருந்துனியுறுமுனிவிரோருந் ... *
குயிலொடுமினிதுபேசிச்சிலம்பொடுமினிதுகூவி ... ... *
மயிலினந்திரிவதென்னத்திரிந்தனர்மகளிரெல்லாம் ... ...*

(இ-ள்.) மூன்றுளில்நித்திரையுணர்ந்தெழுந்தநலத்தையுடையாருந்துனியாகிய மிக்கவெறுப்பையுடையாரும் (என்றுமிருவகையராகிய) எல்லாமங்கையர்களும் குயில்களோடு இனிமையாகப்பேசி மலைகளோடு இனிமையாகக்கூவிச் சூரியனொளியினது நிறங்குன்றும்படி (தமது அணிகள்) மின்னலையொத்த ஒளியைப்பரப்பமயிற்கூட்டங்கள்திரிவதுபோலத்திரிந்தார்கள்

துனியின்றித்தங்கணவர்பா லின்பநுகர்ந்துகளித்தனரென்பார் துயிலுணர் செவ்வியோரெனவும் அவ்வாறுநுகரப்பெற்றுத் துயின்றிலரென்பார் துனியுறுமுனிவிரோரெனவும் அம்மலையைச்சார்ந்தசோலைவளனு மம்மலைவளனுங் கண்டோர்க்குக் காணுமுன்றுளதாய வெறுப்பகற்றிப் பெருங்களிப்பு நல்குமென்பார் அவ்விருவகையாரையு மொருசேரவேண்ணிப் பேசிக் கூவித்திரிந்தனரெனவுங்கூறினார். மயிலினந்திரிவதென்னத் திரிந்தனரென்றதனால் மயிலோடெதிராடலும் பெறப்பட்டது. துனி- எ-து. ஆடவர்பாலோர்குற்றங்கண்டு வெறுப்புற்றுமகளிர் அவ்வாடவர் புறந்தேநிற்பக் கதவடைத்திருத்தல். சோதி-பண்பாகுபெயர்.

தாளிடைக்கழல்களார்ப்பத்தாரிடையளிகளார்ப்ப ... ...*
வாள்புடையிலங்கச்செங்கேழ்மணியணிவலயமின்னத் ... *
தோளெனவுயர்ந்தகுன்றின்சூழல்களினிதுநோக்கி... ... *
வாளரிதிரிவதென்னத்திரிந்தனர்மைந்தரெல்லாம் ... ... *

(இ-ள்.) ஆடவர்களெல்லாம் தம்முடையதோள்களைப்போல உயர்ந்த அம்மலையினிடங்களின் வனங்களை இனிமையாகப்பார்த்து ஒளியமைந்த சிங்கங்கள்திரிவதுபோல, இரண்டுகால்களிலும் வீரக்கழல்களாரவாரிக்கவும் அணிந்தமலர்மாலைகளில் வண்டுகளாரவாரிக்கவும் வாள் இடையின்புடையில் விளங்கவும் செந்நிறமாகியமணியணிகளும் தோளணிகளும்மின்னவுந்திரிந்தனர்கள்-எ-று. (கூ)

சுற்றியகடல்களெல்லாஞ்சுடர்மணிக்கனகக்குன்றைப் ... *
பற்றியவளைந்தவென்னப்பரந்துவந்திறுத்தசேனை .. ... *
கொற்றவர்தேவிமார்கண்மைந்தர்கள்கொம்பனார்வந் ... ...*
துற்றவர்காணவுற்றமலைநிலையுரைத்துமன்றே ... . *

(இ-ள்.) பூமியைச்சுற்றிய கடல்களெல்லாம் சுடர்மணிகளையுடைய மேருமலையைக் கவர்ந்துகொள்ள வளைந்தனபோலப் பரவிவந்து இறங்கின சேனைகளும் அங்குவந்து சேர்ந்தவர்களாகிய அரசர்களும் அவர்கள் மனைவியர்களும் இராசகுமாரர்களும் இராசகுமாரத்திகளும் வளங்களைப் பார்க்கத்தொடங்கிய மலையினது நிலைமையைச்சொல்லுவாம்-எ-று. (௯௧)

பம்புதேன்மிஞிறுதும்பிபரந்திசைபாடியாட ... ... *
உம்பர்வானகத்துநின்றவொளிவளர்தருவின்றேங்குங் ... ... [த்
கொம்புகள்பணைக்கைநீட்டிக்குழையொடுமொடித்துக்கோட்டு
தும்பிகளுயிரேயன்னதுணைமடப்பிடிக்குநல்கும் ... ... *

(இ-ள்.) மேலாகிய சுவர்க்கத்தில் நிலைபெற்ற ஒளியையுடைய வளர்கின்ற தருக்களில் ஓங்கிய கொம்புகளை நெருங்கிய பெண்வண்டுகளும் மிஞிறுகளும் தும்பிகளும்பரவி இசைகளைப் பாடியாடப் பருமையாகிய கைகளைநீட்டித் தளிரோடுமொடித்துத் தந்தங்களையுடைய யானைகள் தம்முயிரையொத்த துணையாகிய இளமையமைந்த பிடிகளுக்குக்கொடுக்கும்-எ-று. (௯௨)

பண்மலர்பவளச்செவ்வாய்ப்பனிமலர்குவளையன்ன ... *
கண்மலர்க்கொடிச்சிமார்க்குக்கணித்தொழில்புரியும்வேங்கை *
உண்மலர்வெறுத்ததும்பிபுதியதேனுதவுநாகந் ... ... *
தண்மலரென்றுவானத்தாரகைதாவுமன்றே ... ...*

(இ-ள்.) பண்போலுஞ்சொல் உண்டாகின்ற பவளம்போன்ற செவ்விய வாயையும் குளிர்ச்சிபொருந்திய குவளைமலரையொத்த கண்களாகிய மலர்களையுமுடைய குறத்தியர்க்கு வேங்கைமரங்கள் மணஞ்செய்கால மிதுவெனப் பூத்தலாகிய கணிதத்தொழிலைச்செய்யும் (தாம்தேன்) உண்டமலர்களை வெறுத்த தும்பிகள் புன்னைகளினது புதியதேனைத் தருகின்ற தண்ணியமலர்களென்று (பசியநிறமாகிய) ஆகாயத்தின்கணுள்ளதாரகைகளில்தாவும்-எ-று

மீனெனும்பிடிகளோடும்விளங்கும்வெண்மதிநல்வேழந் ...*
கூனல்வான்கோடுநீட்டிக்குத்திடக்குழிப்பாயுந் ... .. *
தேனுகுமடையைமாற்றிச்செந்தினைக்குறவர்முந்தி ... *
வானநீராறுபாய்ச்சியைவனம்வளர்ப்பர்மாதோ... ... ...*

(இ-ள்) தாரகைகளென்னும் பிடிகளோடு விளங்குகின்ற வெள்ளியசந்திரனாகிய நல்லமதயானை வளைவாகிய உயர்ந்த இருபுறத்து நுனியாகிய தந்தங்களைநீட்டி (இருளைக்) குத்துதலினால் குழிப்பாய்கின்றதேன்ஒழுகுகின்றமடையைத்தடுத்துச் செந்தினைப்புனத்தையுடைய குறவர்கள் நீர்வளப்பத்தையுடைய ஆகாயகங்கைநீரைப்பாய்ச்சி மலைநெற்பயிரைவளர்ப்பார்கள்-எ-று

குறவர்க்கு-ஐவனத்திலும் செந்தினை சிறந்ததென்பார் அதனை யடையாக்கிக்கூறினார்

குப்புறற்கருமையாலக் குலவரைச்சாரல்வைகி... ... ... *
ஒப்புறத் துளங்குகின்றவுப் பெதியாடியின்கண் ... ... *
இப்புறக் கேயங்காண்பார் குறத்தியரியைந்தகோலம் ... ... *
அப்புறத் தேயங்காண்பா ரரம்பையரழகுமாதோ ... ... *

(இ-ள்.) கடந்து போவதற்கு அருமையாயிருத்தலினால் சிரேட்டமாகிய அம்மலைச்சாரலில் தங்கி (முகத்துக்கு ஒப்பைப்பொருந்த அசைகின்ற சந்திரனுடைய கண்ணாடியில் குறத்தியர்கள் தங்கருத்துக்கு இசைந்த அலங்காரத்தை இப்பக்கத்தினுங் காண்பார்கள் அரம்பையர்கள் தம்மலங்காரத்தை அப்பக்கத்தினுங் காண்பார்கள்-எ-று. (௬௫)

ஒப்புறவென்னுஞ்செயவெனெச்சம் காரணப்பொருட்டு துளங்குதலென்னுங் காரியங் காரணத்தின்மேனின்றது. எதிரது தழீஇயது மிறந்தது தழீஇயதுமாகிய உம்மையெச்சம் ஒருவிலாகொண்டன

உதியுநல் லருந்திருந்து முழையுறுதீயும்வாயின் ... ... *
அதிகமிட நீர் நெய்ப்புறமண்ணிலாதாவியுண்ணுந் ... ... *
கொன்றுணைமேல்வற்கண்மாதர் குறத்தியர்நுதலினோடு ... ... *
மதியினைவாங்கியொப்புக்காண்குவர்குறவர்மன்னோ ... ... *

(இ-ள்.) உதியாகிய விருட்சியால் உதைப்படும் தீயும் அதிகமாக இடுதலைச் செய்யவாயினால் நீரையும் (பூசுதலைச் செய்ய) நெய்யையும்கவராமல் தம்மூழ்விளைக்கின்ற கொல்கின்ற முனையையுடைய வேல்போலுங் கண்களையுடைய மாதர்களாகிய குறத்தியரது நெற்றியோடு குறவர்கள் பாதி மதியை யெடுத்து ஒப்புப்பார்ப்பர்கள்-எ-று. (௬௬)

பேணுதற்கரிய சியக்குருளையம் பிடிகளீன்ற ... ... *
காணுதற்கினிய வேழக்கன்றுகளிக்குமுன்றிற் ... ... *
ஊணுதற்குரிய திங்கட்குழவியுங் குறவர்தங்கள் ... ... *
வாணுதற்கொடிச்சிமாதர் மகவொடுதவழுமாதோ ... ... *

(இ-ள்.) இறுதழிகளின் முன்னிடங்களில் விரும்புதற்கு அருமையாகி யானைக்குட்டிகள் அழகியபிடிகள்பெற்ற காணுதற்கு இனிமையாகிய யானைக்கன்றுகளோடும் உண்ணுதற்கு உரியபிறைச்சந்திரனும் குறவர்களுடைய ஒளியமைந்த நெற்றியையுடைய மனைவியர்பெற்ற இளம்பிள்ளைகளோடு தவழும்-எ-று. (௬௭)

களிக்குந்தவழுமென்னுமிரண்டும் வேற்றுமையின்றி விளையாட்டயருமென்னும் பொருளைக் குறித்தலின் றிரிபின்றி வினையொன்றிய முடிபேயாம் இவ்வாறு பைம்புதல்வேங்கையு மொராங்கலர்விரிந்தன நெடுவெண்டிங்களு மூர்கொண்டன்றே எனப்பிறர்கூறுதலுங்காண்க. இவ்வும்மையெச்சமிகுதியினிறுதல் தம் வினையொன்றியமுடிபாகுமே. என்னுஞ் சூத்திரத்துக்கு உரையாசிரியர் முதலிய எவருங்காட்டிய காட்டுமொன்று. எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயிற் றன்வினைகோடல் மேலைச்சூத்திரத்தில் தன்னினமுடித்தலென்பதனு லென்றுணர்க.

அஞ்சனக்கிரியினைக்கண்ணவுநீசவுளியானைகொன்ற ... ... *
வெஞ்சினத்தரியின்றிண்டாற்சுவட்டொடுவிஞ்சைவேந்தர் ... *

குஞ்சியந்தலத்து நீலக்குலமணித்தலத்து மாதர் ... ...*
பஞ்சியங்கமலப் பூத்த பசுஞ்சுவட்டுடைத்து மன்றே ... ...*

(இ-ள்.) க்ஷத்திரியாகர அரசர்களுடைய அழகிய சிகையினிடத்தும் சிறந்த நீலமணிகட்பாறையினிடத்தும், கருமையாகிய மலையையொத்த (இடையரு து மதமொழுகுகலால்) தம்மிடத்திற் கையமிழ்ந்த கன்னங்களையுடைய யானைகளைக் கொன்ற கம்பீரமுடையுடைய சிங்கங்களின் கார்சுவடுகளோடு வித்தியாதரமங்கையர்களது செம்பஞ்சூட்டிய அழகிய பாதகமலங்கள் பதிவினாலுண்டாகிய சிவந்த சுவடுகளையும் உடையது அம்மலை-எ-று. (௯அ)

அம்மலை-எ-து-சொல்லெச்சம்.

செங்கயலனைய நாட்டஞ் செவியுறா துறவதேன்று ... ... *
பொங்கிருங் கூந்தல் சோரா புருவங்க நெளியா பூவின் ... ...*
அங்கையுமிடறுங் கூட்டி நரப்பளைந்தெழூஉந் தெண்ணீர் ... ...*
மங்கையர்பாடல்கேட்டுக் கின்னரமயங்குமாதோ ... ... *

(இ-ள்.) சிவந்த கயல்மீனையொத்த கண்களின் பார்வைகள் செவியைப்பொருந்தாமலும், பற்கள் தோன்றாமலும், மிகுந்த பெருமையாகிய கூந்தலவிழ்ந்து சோராமலும், புருவங்கள் மேலெழாமலும், பூவையொத்த அகங்கையையுங், குரலோசையையும் ஒருவழிப்படுத்தி யாழ்நரம்பிசையைப் பொருந்தி மதுரஞ்சுரக்கின்ற மங்கையர்கள் பாடுதலைக்கேட்டுக் கின்னரப்பறவைகள் புத்தி மயங்கும்-எ-று. (௯௯)

மங்கையர் பாடலாலொத்தலும் உருவால் வேறுபடுதலு முடைமையின் மயங்குவனவாயின். நரம்பு-எ-து-இருமடியாகுபெயர். மிடறு-இடவாகுபெயர்.

கள்ளவிழ் கோதைமாதர் காதொடு முறவு செய்யுங் ... ... *
கொள்ளைவாட் கண்ணினார்தங் குங்குமக் குழம்பு தங்கு ... ...*
தெள்ளிய பளிக்குப் பாறைத் தெளிசுனை மணியிற் றேய்த்த ...*
வள்ளநன் றறவு மென்ன வரம்பில பொலியுமன்றே ... ... *

(இ-ள்.) காதோடு உறவுசெய்கின்ற களிப்பையுடைய வாள்போலுங் கண்களையுடையாராகிய தேன்சொரிகின்ற மாலையணிந்த மாதர்களது குங்குமச்சேறு தங்கிய பளிக்குப் பாறைகளை மேற்புறத்திலுடைய தெளிந்த நீர்நிறைந்த சுனைகள் செம்மணிகளாலிழைக்கப்பட்ட கிண்ணமும் நறவும்போல அளவில்லாதனவிளங்கும்-எ-று. (௱)

ஆடவராவி சோர வஞ்சனவாவி சோர ... ... *
ஊடலிற் சிவந்த நாட்டத் துப்பர்தம் மரம்பைமாதர் ... ... *
சூடலர்க் கோதைநின்று நறந்தமந் தாரமாலை ... ...*
வாடலநறவு தேய்வ தவயின் மயங்குமாதோ ... ...*

(இ-ள்.) நாயகர்களுடைய உயிர்நிலைதளரவும், மையோடுகலந்து கண்ணீரொழுகவும், ஊடுதலாலே சிவப்பேறிய கண்களையுடைய, தேவர்களுடைய நாயகிமார்களாகிய அரம்பைமாதர்கள் தமது கூந்தலினின்றும் நீக்கியிட்டுக் கழித்த மந்தாரமலர் மாலைகள்வாடாமல் தேனை நீங்காமல் அம்மலையினிட

மென்றும் விளங்காநிற்கும்-எ-று. (௪௧)

ஊடல்-எ-து-கூடாதவர்களாகி உரையைமறுத்திருத்தல். மந்தாரம்-எ-து- ஐந்தருக்களிலொன்று.

மாந்தளிரனையமேனிக்குறத்தியர்மாலைசூட்டிக் ... ... *
கூந்தலங்கமுகின்பாளைகுழலினோடொப்புக்காண்பார் ... ... *
ஏந்திழையரம்பைமாதரெறிமணிக்கடகம்வாங்கிக் ... ... *
காந்தளம்போதிற்பெய்துகைகளோடொப்புக்காண்பார் ... *

(இ-ள்) மாந்தளிரையொத்த மேனியையுடைய குறத்தியர்கள், மந்தார மாலையைத்தரித்துக் கூந்தற்கமுகின்பாளைகளைத் தங்கூந்தலோடு உவமைகாண்பார்கள் அணிகளைத்தாங்கிய அரம்பைமாதர்கள் (பாரமெனக் கழற்றியெறிந்த) எறியினது செவ்வொளியையொத்த ஒளியையுடைய செம்மணிக் கடகங்களையெடுத்துக் காந்தள்மலர்களிற்பூட்டித் தங்கைகளோடு ஒப்புக்காண்பார்கள்-எ-று. (௪௨)

பாரமெனக் கழற்றியெறிந்தவென்பது-எந்திழையென்பதற்கியையவந்த இசையெச்சம். ஓடு உருபு ஒப்புப்பொருட்டு.

சரம்பயில்சாபமென்னப்புருவங்கடம்மிறை... ... ... *
நரம்பினோடினிதுபாடிநாடகமயிலோடாடி... ... ... *
அரம்பையர்வெறுத்துநீத்தவவிர்மணிக்கோவையார ... ... *
மரம்பயில்கடுவன்பூணமந்திகண்டுவக்குமாதோ ... ... *

(இ-ள்) அம்புபொருந்தும் வில்லைப்போலப் புருவங்கள் தம்மிற் கூடிக் க யாழினோடு மாறுபடாமல் இனிமையாகப்பாடி மயிலோடு நாடகமாடி வெறுத்து நீக்கிய விளங்குகின்ற மணிமாலையையும் முத்துமாலையையும் மரங்களிற்பயிலுகின்ற கடுவன்பூண்டுகொள்ளப் பெண்குரங்குகண்டு களிப்படையும்-எ-று. (௪௩)

சரம்பயில்சாபம்-வடிவுதொழில்களைப்பற்றிவந்தவுவமம். நரம்பு-சினையாகுபெயர். ஓடு உருபிரண்டும் ஒருவினைக்கிளவிக்கணவந்தன.

சாந்துசாய்தடங்கடோறுந்தாதுராகத்திற்சார்ந்த ... ... *
கூந்தலம்பிடிகளெல்லாங்குங்குமமணிந்தபோலுங் ... ... *
காந்திணமணியின்சோதிகதிரொடுங்கலந்துமூசச் ... ... *
சேர்துவானகமெப்போதுஞ்செக்கராயொக்குமாதோ ... *

(இ-ள்) சந்தனமரங்கள் (தழைந்து) சாய்ந்தமலைச்சாரல்கள்தோறுமுள்ள சிவந்தகாவிக்கற்களில் சார்ந்த கூந்தலையுடைய அழகியபிடிகளெல்லாம் குங்குமச்சந்தனத்தை அணிந்தனபோலும் ஒளியைவீசுகின்ற மணித்திரளின சோதியானது சூரியகிரணத்தோடு கலந்து மொய்ப்பதினால் ஆகாயத்தினிடம் எந்நாளும் செவ்வானத்தையொத்திருக்கும்-எ-று. (௪௪)

தாதுராகம்-எ-து-தவசிகன் பரசுராமன் என்பனபோல வடமொழிச்சந்தி.

நிலமகட்கணிகளென்னநிரைகதிர்முத்தஞ்சிந்தி ... ... *
மலைமகள்கொழுநன்சென்னிவந்துவீழ்கங்கைமான ... ... *

அலகில்பொன்னலம்பொருஞ்சார்ந்துவீழருவிமாலை ... *
உலகளந்தவன்றன்மார்பினுத்தரீயத்தையொத்த... ... ... *

(இ-ள்.) பூமிதேவிக்கு அணிகளைப்போலத் தோன்றக்கிரணங்களையுடைய முத்துகளைவரிசையாகச்சிந்தி உமைக்கு நாயகனாகிய சிவனுடைய சென்னியிலவந்துசேர்ந்து அங்கு நின்றும்வீழ்கின்ற சங்கையையொத்திருக்க,வரம்பில்லாதமிகுந்தபொற்றுகளால்நிரம்பிச்சந்தனத்தைக்சார்ந்து (அம்மலையினின்றும்)வீழ்கின்ற அருவிகளினதுமாலைகள் உலகைத்திருவடியாலளந்த இறைவனதுமார்பில் விளங்குகின்ற உத்தரீயத்தையொத்தன-எ-று. (௬௫)

கோடுலாநாகப்போதோடிலவங்கமலருங்கூட்டிச்... ... *
சூடுவார்களிவண்டோச்சித்தூநறுந்தேறலுண்பார் ... ... *
கேடிலாமகரயாழிற்கின்னரமிதுனம்பாடும் ... . *
பாடலாலூடனீங்கும்பரிமுகமாக்கள்கண்டார் ... ... *

(இ-ள்.) அம்மலையில் கிளைகள் அடர்ந்த புன்னையினது மலர்களோடு இலவங்கமலரையும் சேர்த்துத்தொடுத்துச் சூடுகின்றமாதர்களும் உண்டு களித்தவண்டுகளை ஓட்டித் தூய்மையாகிய நல்லதேனைப் பருகுகின்ற மாதர்களும் இசைநூலிற்கூறு மிலக்கணத்தோடு மாறுபடும் குற்றமில்லாத மகரயாழைப்போலக் கின்னரமிதுனங்கள் பாடுகின்ற பாட்டினால் ஊடல்நீங்குகின்ற குதிரைமுகம்போலு முகத்தையுடைய மக்களைக்கண்டார்கள்-எ-று()

கின்னரங்களினாண் பெண்களொன்றை யொன்று பிரிதலில்லனவாகலிற் கின்னரமிதுனமென்றார்.

பெருங்களிறேயுமைந்தர்பேரெழிலாகத்தோடு ... ... [மீட
பொருந்துணைக்கொங்கையன்ன பொருவில்கோங்கரும்பின்மா
மருங்கெனக்குழையுங்கொம்பின்மடப்பெடைவண்டுந்தங்கள் *
கருங்குழற்களிக்கும்வண்டுங்கடிமணம்புணரக்கண்டார் ... *

(இ-ள்) பெருமையாகிய களிற்றை ஒத்த மைந்தர்களது விசாலமாகிய அழகிய மார்போடுதாக்குகின்ற இரண்டாகியகொங்கைகளை ஒத்த உவமையைப்பெறாத கோங்குமரங்களின் அரும்புகளிடத்தில் தம்மிடையைப்போலத் துவளுகின்ற பூங்கொம்பினிடத்திருந்த இளமையாகிய பெண்வண்டும் தங்களுடைய கருங்குழலில் களிக்கும்வண்டுகளும் புதுமணம் புணரக்கண்டார்கள்-எ-று. (௬௭)

படிகத்தின்றலமென்றெண்ணிப்படர்சுனைமூடுகிப்புக்க ....*
கடிகைப்பூங்கமலமன்னசுடர்மதிமுகத்தினார்தம் ... ...*
வடகத்தொடுத்த தூசைமாசினீர்நனைப்பநோக்கிக் ... ... *
கடகத்தையெறிந்துதம்மிற்கருங்கழல்வீரர்நக்கார் ... ...*

(இ-ள்) பளிக்குப்பாறையாகிய இடமென்றுகருதி பரந்தசுனையில்விரைந்து புகுந்த,அணிந்தநுதலணியானது தாமரைமலரையொத்த ஒளியமைந்த முகத்தையுடைய மங்கையர்களது மேலுத்தரீயத்தோடு இடையிலுடுத்த தூசைமாசில்லாத அச்சுனைநீர்நனைக்கப் பெருமையாகிய வீரக்கழலையணிந்த வீரர்கள் அதைப்பார்த்து (படிகத்தின்றலத்துக்கும் மாசில்நீலாயுடைய

சுனைக்கும் வேற்றுமையுணராமல்) தங்கடாகங்களையெறிந்து (அறிந்துகொண்டு) தங்களுக்குள்ளே நகைத்தார்கள்-எ-று. (௪அ)

பூவணைபலவுங்கண்டார் பொன்னரிமாலைகண்டார் ... ... *
மேவருங்கோபமன்ன வெள்ளிலைத்தம்பல்கண்டார்... ... *
ஆவியினினியகொண்கர்ப்பிரிந்தறிவழிந்தவிஞ்சைப் ... *
பாவையர்வைகத்தீந்தபல்லவசயனங்கண்டார்... ... ... *

(இ-ள்.) மலர்ச்சயனங்கள் பலவற்றையுங்கண்டார்கள் பொன்னரிமாலைகளைக்கண்டார்கள் இந்திரகோபத்தினது செந்நிறம்போன்ற (பிறர்) அடைதலரிய வெற்றிலைத் தம்பலத்தைக்கண்டார்கள் தம்முயிரினுமிக்க இனிமையாகிய நாயகரைப்பிரிந்ததினால் அறிவு அழிந்த வித்தியாதரமங்கையர்கள் படுக்கக்கருதிய தளிரால் அமைத்த சயனங்களைக்கண்டார்கள்-எ-று. (௪௯)

பூவணைமுதலியன ஓரிடத்தேகண்டிறும்பூதெய்தினர்களென்பதுதோன்றத் தனித்தனிப் பயனிலைகொடுத்துக்கூறினார்.

பானலங்கண்களாடப்பவளவாய்முறுவலாடப் .. .. *
பேணவெம்முலையினிட்டபெருவிலையாரமாடத்... ... ... *
தேன்முரன்றளகத்தாடத்திருமணிக்குழைகளாட ... ... *
வானவர்மகளிராடும்வாசநாறூசல்கண்டார் ... ... *

(இ-ள்.) நீலோற்பலம்போன்ற கண்கள்பிறழவும் பவளம்போன்ற வாயில்நகைப்புத்தோன்றவும் பெருமையாகி விருப்பத்தைத்தருகின்ற கொங்கைகளிலிட்ட மிக்கவிலையையுடைய முத்துவடங்களசையவும் வண்டுகள் ஒலித்துக் கூந்தலிற்சுழலவும் (செவிகளில்) சிறந்தமணிகளிழைத்த குண்டலங்களசையவும் தேவர்களுடைய மனைவியர்களாடும் மணம்வீசுகின்ற ஊசலைக்கண்டார்கள்-எ-று. (௫௰)

சுந்தரவாணமாதர்துவரிதழ்ப்பவளவாயும்... ... ... *
அந்தமில்சுரும்பர்தேனுமிஞிறுமுண்டல்குல்விற்கும்... *
பைந்தொடிமகளிர்கைத்தோர்பசையிலையென்னவிட்ட .. *
மைந்தரினீத்ததீந்தேன்வள்ளங்கள்பலவுங்கண்டார்... ... *

(இ-ள்.) சுவர்க்கத்திலுள்ள அழகியமங்கையர்களது சிவந்த இதழையுடைய பவளக்கிண்ணம்போன்றவாயும் பின்னர்வரம்பில்லாதசுரும்புகளும் பெண்வண்டுகளும் மிஞிறுகளும் உண்டு அல்குலைப் பொருட்கு விலைப்படுத்துகின்ற பசும்பொன்னாற்செய்த வளையணிந்த கணிகையர்கள் சிறிதுபொருட்பசையும் இல்லையென்றுவெறுத்துப் பற்றுவிட்ட ஆடவர்களைப்போல நீக்கிய தித்திப்பாகிய நறவுக்கிண்ணங்கள் பலவற்றையுங்கிடக்கக் கண்டார்கள்

பவளம்-கருகுபெயர்.

அற்பகலாக்குஞ்சோதிட்டவிக்கறைபமளிப்பாங்கர்... ... *
மற்பகமலர்ந்ததிண்டோள்வானவர்மணந்தகோலம்... ... *
விற்பகைநுதலினார்கலவியின்வெறுத்துநீத்த ... ... *
கற்பகமீன்றமாலைகலனொடுங்கிடப்பக்கண்டார்... ... ... *

(இ-ள்.) வில்லோடுபகைத்த நெற்றியையுடையதெய்வமங்கையர்கள் இராவைப்பகலாக்குகின்ற சோதியையுடையபளிக்கறைக்குளமைந்தவணையில் மற்போராகிய அரும்புகள்நெகிழ மலர்ந்ததிண்ணியதோள்களையுடையதெய்வவாடவர்களோடுமணந்த அலங்காரத்தைப்புணர்ச்சிவிருப்பால்(தடையென)வெறுத்துக்கழித்துவிட்ட கற்பகதருதந்தமாலைகள் அணிகளோடு கிடக்கக்கண்டார்கள்-எ-று. (௫௨)

கையெனமலரவேண்டியரும்பியகாந்தணோக்கிப் ... ... *
பையரவிவையென்றஞ்சிப்படைக்கண்கள்புதைக்கின்றாரு ... *
நெய்தவழ்வயிரப்பாறைநிழலிடைத்தோன்றும்போதைக் ... *
கொய்திவைதருதியென்றுகொழுநரைத்தொழுகின்றாரும் ... *

(இ-ள்.) தமதுகைகளைப்போல மலரவிரும்பி அரும்புகளரும்பிய காந்தள்களைநோக்கி இவைபடத்தையுடைய பாம்புகளென்றுபயந்து வேல்போலுங்கண்களை மூடிக்கொள்ளுகின்றாரும் நெய்த்தல்பொருந்தியவயிரமணிப்பாறையில் தோன்றுகின்ற நிழலாகியமலர்களைக்கொய் திவைதாருமென்று தம்நாயகரைத்தொழுகின்றாரும்-எ-று. (௫௩)

மலர்நிழலை மலரெனக்கருதினரென்றமையி னெய்த்தல்தவழ்கின்ற வயிரப்பாறையைத் தெளிந்தநீர் நிறைந்தசுனையெனக் கருதினரென்பதுங்கொள்க.

பின்னங்களுகிரிற்செய்துபிண்டியந்தளிர்கைக்கொண்ட ... *
சின்னங்கண்முலையினப்பித்தேமலர்கொய்கின்றாரும் ... *
வன்னங்கள்பலவுந்தோன்றமணியொளிர்மலையினில்லா ... *
அன்னங்கள்புகுந்தவென்னவகன்சுனைகுடைகின்றாரும் ... *

(இ-ள்.) அசோகினது அழகியதளிர்களை நகங்களினால்கிள்ளியிட்டு உள்ளங்கையிற்கொண்ட சின்னங்களை முலைமுகட்டில் பொருந்தச்சேர்த்துத் தேன்பொருந்திய மலர்களைப்பறிக்கின்றார்களும் நானாவிதநிறங்களுந்தோன்றும்படி நவமணிகள் ஒளிர்கின்றமலையில் வசித்தலில்லாத அன்னங்கள் புகுந்தாற்போலப்பரந்தவடிவினவாகிய சுனைகளில்முழுகுகின்றாருமாயினார்

நெய்தற்கருப்பொருளாகலின் மலையினில்லாவன்னங்களென்றார் வன்னங்கள் பலவுந்தோன்றவென்றதனால் மணியென்பதற்கு நவமணியெனப்பொருள்கூறலாயிற்று.

வேறு.

ஈனுமாமழையிளந்தளிரேயொளி ... ... *
ஈனுமாமழையிளந்தளிரேயிடை ... ... *
மானும்வேழமுநாகமுமாதர்தோண் ... ... *
மானும்வேழமுநாகமுமாடெலாம் ... ... *

(இ-ள்.) இடை-அம்மலையினிடையில்—ஈனும்-தளிர்க்கின்ற—மாமழை-மாமரத்தினது—இளந்தளிர்-இளமையாகியதளிரானது—எய்-ஒத்த—ஒளி-ஒளியை—ஈனும்-தருகின்ற—மாமழை-பொன்னினது—இளந்தளிர்-அச்சடிவினவாகியதகடுகளுள்ளன—மாடெலாம்-அம்மலையைச்சார்ந்தவிடமெல்லாம்—மானும்-மானினங்களும்—வேழமும்-யானைகளும்—நாகமும்-வானரங்க

ளும்--மாதர்தோள்-மங்கையர்களுடையதோளை—மானும்-ஒக்கும்—வேழ மூம்-மூங்கில்களும்—நாகமும்-புன்னைமரங்களுமுள்ளன. (௫௫)

திமிரமாவுடற்குங்குமச்சேதகத்... ... ... *
திமிரமாவொடுஞ்சந்தொடுந்தேய்க்குமால்... ...*
அமரமாதரையொத்தொளிரஞ்சொலார்... ... *
அமரமாதரையொத்ததவ்வானமே ... ...*

(இ-ள்.) (சேனையிலுள்ள) திமிரம்-இருள்போன்ற—மா-நிறமமைந்தயா னைகள்—உடல்-தம்முடலில்—குங்குமச்சேதகம்- குங்குமச்சேற்றாலெழுதி யகோலத்தை—திமிர - பொருந்தும்படி—மாவொடும்-மாமரங்களோடும் —சந்தொடும் - சந்தனமரங்களோடும்—தேய்க்கும் - உராயும்—அமரமாத ரை-தெய்வமங்கையர்களை—ஒத்து -உருமுதலியவற்றாலொப்பாகி—ஒளிர்- ஒளிர்கின்ற—அம்-அழகிய—சொலார்-சொல்லையுடைய அரசமங்கையர்கள் —அமர-தங்குதலினால்—மாதரை- (அம்மலையைச்சார்ந்த) பெரியநிலமான து—அவ்வானம்-அந்தச்சுவர்க்கத்தை—ஒத்தது- ஒத்திருந்தது. (௫௬)

வேள்விமுதலியவற்றாலடையு மருமையுடைத்தாகலி னவ்வானமென்றார்.

பேரவாவொடுமாசுணம்பேரவே... ... ... *
பேரவாவொடுமாசுணம்பேரவே... ... ... *
ஆரவாரத்திஞேடுமருவியே ... ...*
ஆரவாரத்திஞேடுமருவியே... ... ... *

(இ-ள்.) பேரவாவொடு-(நீருட்குளிக்க) பேராசையால்—மாசுணம்-பெ ரும்பாம்புகள்—பேர-இடம்விட்டுப்பெயரவும்—வே-மூங்கில்கள்—பேர பேரவும்—ஆவொடு - ஆச்சாமரங்களும்—மா- பெருமையாகிய—சுணம்- (குறத்தியரிடித்த) பராகமும்—பேர- பேரவும்—ஆரவாரத்திஞேடு - பே ரோசையோடு—ஆர-நிரம்ப—ஆரத்தின்-முத்துகளை—மருவி-கலந்து— ஓடும்-ஒழுகாநிற்கும்—அருவி-அம்மலையருவி—எ-று. (௫௭)

அவாவொடுவென்பது-ஏதுப்பொருட்டு. ஆவொடுவென்பது-மாசுணத்தொடுவென வரு ராமையால் எண்ணுப்பொருட்டன்று இசைநிறைப்பொருட்டு.

புகலும்வாளரிக்கண்ணியர்பொற்புயம் ... ... *
புகலும்வாளரிக்கண்ணியர்பூண்முலை... ... ...*
அகிலுமாரமுமாரவங்கோங்குமே... ... ... *
அகிலுமாரமுமாரவங்கோங்குமே ... ...*

(இ-ள்.) புகலும்- (உருஆற்றல்முதலியவற்றால்) எடுத்துக்கூறும்—வாள்- ஒளியமைந்த—அரி-பொன்னிறவண்டுகள்மொய்த்த—கண்ணியர்- மலர்மா லைபணிந்தஆடவர்களது—பொற்புயம்- பொன்னணியணிந்தபுயங்களில்— வாள்-வாளையொத்த—அரி-செவ்வரிவாய்ந்த—கண்ணியர்- கண்களையுடைய மங்கையர்களது—பூண்முலை-பூணணிந்தமுலைகள்—புகலும்- சோலும்— அகிலும்-அகிற்றேய்வையும்—ஆரமும்-முத்துவடமும்—ஆர-நிரம்ப—அ ங்கு-அப்புயமுலைகளில்—ஓங்கும்-சிறக்கும்—அகிலும்-அம்மலையினிடமெ

க்கும்—ஆரமும்-சந்தனமரங்களும்—ஆர்-ஆத்திமரங்களும்—அவம்-அந்த அழகிய—கோங்கும்-கோங்குமரங்களும்—மேவ-மேவுவன—எ-று. (௫௮)

எனையபூச்சுகளினும் மணிவடங்களினும் சிறந்தனவென்பார் அகிலுமாரமுமென்றும் புய மலைகளிரண்டனு ளொன்றற்கணிந்தவை தழுவுங்கால் மற்றொன்றற்கும் பொருந்துதலால் அக்கோங்குமென்றுங் கூறினர். சந்தனத்தினும் அகில்தேய்வைபுகையாற்பெரும்பான்மையும் பயன்படுதலானும் ஆரம்நிலவெறித்தலேயன்றிப் பரிசத்தாற்றண்மை செய்தலானும் எனையவற்றினுஞ் சிறந்தனவாயின. அகிலமென்பது அகிலெனக் கடைக்குறையாயிடத்தின்மேனின்றது பொன்னுமகிலுமாரமுமுறையே அவற்றினாகிய அணிக்குந்தேய்வைக்கும் உடத்திற்கு மாகலாற்கருவியாகுபெயர்கள்-மே-என்னுமுதனிலைத் தனிவினைகொள்வாருங்கள்வருநேர் என்றாற்போல வினைமுற்றுப்பொருட்டந்தது.

துன்னரம்பைநிரம்பியதொல்வரை... ... ... *
துன்னரம்பையருருவிற்றோன்றுமால்... ... *
கின்னரம்பயில்கீதங்களென்னவாங்... ... .. *
இன்னரம்பயில்கின்றனரேழைமார் ... ...*

(இ-ள்) துன்-இலைகளடர்ந்த—அரம்பை-வாழைமரங்கள்—நிரம்பிய-வளநிறைந்த—தொல்-பழமையாகிய—வரை-அம்மலையினிடத்து—துன்-வந்த—அரம்பையர்-தெய்வமங்கையர்களுடைய—உருவின்-தொடைகளைப்போல—தோன்றும்-விளங்காநிற்கும்—கின்னரம்-கின்னரப்பறவைகள்—பயில்-இயற்கையாய்ப்பாடுகின்ற—கீதங்களென்ன-இசைகளைக்கேட்பதுபோல—ஆங்கு-அம்மலையினிடத்து—இன்-இனிய—நரம்பு-யாழிசையை—அயில்கின்றனர்-செவியாலுண்கின்றனர்—ஏழைமார்-அரசமங்கையர்கள்.

கீதங்களென்னலாமெனப் பாடமோதுவாருமுளர் அதனாற் பொருட்சிறப்பின்மையறிக.

உளறுமாகடமாவுறலுங்கெலாம் ... ... *
உளறுமாகடமாமதமோடுமே ... ...*
ஆறுசேர்வனமாவரையாடுமே... ... ...*
ஆறுசேர்வனமாவரையாடுமே ... ... *

(இ-ள்.) மா-பெரிய—கடம்-காட்டிலுள்ள—மா-மாமரங்கள்—உளறுற-சிதைவைப்பொருந்த—உளங்கெலாம்-அம்மலையினிடையிடங்களெல்லாம்—உளறுமா-சரக்குமாறு—கடமா-யானைகளினது—மதம்-மதப்பெருக்கு—ஓடும்-ஓடாநிற்கும்—ஆறு-வழியில்—சேர்-திரட்சியாகிய—வனம்-வனங்களில்—ஆ-ஆச்சாமரங்களும்—வரை-மூங்கில்களும்—ஆடும்-அசையாநிற்கும்—ஆறு-ஆறுகளில்—சேர்வன-நீருண்ணச்செல்வன—மா-அழகிய—வரையாடும்-மலையாடுகளும்—எ-று. (௫௯)

வரை-சினையாகுபெயர்-சேர்என்பது திரட்சியையுணர்த்திய உரிச்சொலென்றுணர்க அவர்விருப்பாகுஞ்சேரோ திரட்சிவியலென் கிளவியகலப்பொருட்டே என்பதனால். உம்மை ஆக்கம் ஏனைவிலங்குகளுமெனப்பொருடரலின்.

கல்லியங்குகருங்குறமங்கையர் ... ... *
கல்லியங்ககழ்காமர்கிழங்கெடா ... ...*
வல்லியங்கணெருங்குமருங்கெலாம்... ... ...*
வல்லியங்கணெருங்கிமயங்குமே... ... ...*

(இ-ள்.) கல் - அம்மலையில்—இயங்கு - உலவுகின்ற—கருங்குறமங்கையர்-கருமையாகியகுறப்பெண்கள்—கல்வி - கல்லியென்னுங்கருவியால்—அங்கு-அவ்விடத்தில—அகழ்-தோண்டி—காமர்- அழகிய—கிழங்கு- கிழங்குகளை—எடா-எடுப்பதற்காக—வல்லியங்கள்-புலிகள்—நெருங்கு- அடர்ந்த—மாநிலம் - மலைப்பக்கமெல்லாம்—வல் - திண்மையாகிய—இயங்கள்-தொண்டகமென்னுந்தோற்கருவிமுதலியவாச்சியவோசைகள்—நெருக்கியிருந்து—மயங்கும்-வேற்றுமையுணரப்படாமல்மயங்கும்—எ-று. (௬௪)

அகழென்னுமுதனிலைத்தனிவினை மண்மாண்புனை யென்பதுபோலச் செயவெனெச்சப்பொருடந்தது. செய்யாவென்னும்வினை யெஞ்சுகிளவியென்பதனுல்வந்த எடாவென்னுமாகாரவீற்று வினையெச்சம் செயவெனச்சத்திரிபு.

கோளியங்கயமூழ்கக்குளிர்கயம் ... ... *
கோளியங்கயமூழ்கக்குலைந்தவால் ... ... *
ஆளிபொங்குமருவரையூடிழிந் ... ... *
தாளிபொங்குமரம்பையரோதியே ... ... *

(இ-ள்.) குளிர்-குளிர்ந்த—கயம்-கயங்களில்—கோள்-வலியையுடைய—இபம்-யானைகளும்—கயம்-அவற்றின்கன்றுகளும்—மூழ்க-மூழ்குவதினால்—கோளி- (கரையிலுள்ள) பூவாக்காய்க்குமரங்களும்—பங்கயம்-தாமரைகளும்—மூழ்க- நீரில்மூழ்கும்படி—குலைந்த- தந்நிலைகுலைந்தன—ஆளி-சிங்கங்கள்—பொங்கும்- மிகவும்வாழ்கின்ற—அரு- அளவிடலரிய—வரையூடு-மலையினின்றும்—இழிந்து-நீங்கிவந்து—அரம்பையர்-தெய்வப்பெண்களுடைய—ஓதி - கூந்தலில்—ஆளி-வண்டுகள்—பொங்கும்-களிக்கும்—எ-று.

ஆளி-நீட்டல்.

ஆகமாலயமாகவுளாள்பொலி ... ... *
வாகமாலெனலாகியதம்மலை ... ...*
மேகமாலைமிடைந்தனமேலெலா ... ... *
மேகமாலைமிடைந்தனகீழெலாம் ... ...*

(இ-ள்.) மேகமாலை- மேகவரிசைகள்—மேலெலாம்- மேற்புறமெல்லாம்—மிடைந்தன-நெருங்கியனவாகி—மேக- தங்க—கீழெலாம்- அதன் கீழிடமெல்லாம்—மாலை- மாலைக்கதிரொளியால்—மிடைந்தன - செறியப்பட்டன—(ஆதலால்) அம்மலை-அந்தச்சந்திரசயிலம்—ஆகம் - திருமார்பை—ஆலயமாக-இருப்பிடமாக—உளாள்-உடைய இறைவி—பொலி- விளங்குகின்ற—வாக- அழகையுடைய—மாலெனலாகியது- இறைவனெனச்சொல்லலாயது.

அம்மலை இறைவனைப்போலவும் தன்மேல்தவழுகின்ற மேகப்பரப்பின் கீழ்ப்பக்கத்தில் மாலைச்சூரியகிரணங்கள் பாய்வதினால் பொன்னிறம்பெற்று அது திருமகளைப்போலவும் காணப்பட்டன வென்பதுகருத்து. மேக- எ-து-வேவ-வேக-சாவ-சாக-என்பனபோலவந்தது

பொங்குதேனுகர்பூமிஞிறுமென ... ... *
எங்குமாதருமைந்தருமீண்டியத் ... ...*
துங்கமால்வரைச்சூழல்களியாவையுந் ... ... *
தங்கிநீங்கலர்தாமினிதாடுவார் ... ... *

(இ-ள்.) பெருகுகின்ற தேனையுண்ணும் பூவின்மொய்த்த மிஞிறென்னும் வண்டுகளைப்போல மங்கையர்களும் ஆடவர்களும் எங்குங்கூடி அந்தவுயர்ந்தபெருமையாகிய மலையினது எல்லாவிடங்களிலுந்தங்கி நீங்காதவர்களாகி இனிதாக விளையாடுவார்—எ-று. (௯௪)

வண்டுகள்மலர்களிற்சென்று தேன்பருகுமாறுபோல அம்மலைவளங்களை ஆங்காங்குச் சென்று நுகர்ந்தனரென்பதுகருத்து.

இறக்கமென்பதையெண்ணிலொண்ணுங்கால் ... *
பிறக்குமென்பதோர்பீழையதாதலாற் ... ... *
றுறக்கமெய்தியதூயவரேயென ... ... *
மறக்ககிற்றிலரன்னதன்மாண்பெலாம் ... ... *

(இ-ள்.) இறங்குதலெனச் சொல்லப்படுவதை எண்ணினால் அதுவொப்பற்ற துன்பத்தைப்பிறப்பிக்குமென்பதாதலால் எண்ணராகி விண்ணுலகத்தில் இன்பத்தையடைந்த தவத்தூய்மையுடையார்போல (அம்மலையில் இன்பங்களை நுகர்ந்து; அதனது வளப்பங்களையெல்லாம்மறந்திலர்—எ-று. (௯௫)

மாண்பு- குணவாகுபெயர் பீழையது என்பதில் து-பகுதிப்பொருள் விகுதி.

வேறு

மஞ்சார்மலைவாரணமொத்ததுவானினேகும் ... ... *
வெஞ்சாலையுடைக்கதிரங்கதன்மீதுபாயும் ... ... *
பஞ்சானனமொத்ததுமற்றதுபாயவேறுஞ் ... ... *
செஞ்சோரியெனப்பொலிவுற்றதுசெக்கர்வானம் ... *

(இ-ள்.) மேகங்கள்நிறைந்த அத்தமயமலை யானையையொத்தது ஆகாயத்தின்கண் விரைந்துசெல்லுகின்ற வெவ்வியகிரணங்களையுடைய சூரியன் மேற்றிசையில் அவ்யானைமேல் பாய்கின்றசிங்கத்தையொத்தது செவ்வானம், அதுபாய்வதினால் மேலேசிதறிய சிவந்த இரத்தத்தைப்போல விளங்கியது—எ-று. (௯௬)

திணியார்சினைமாமரமியாவையுஞ்செக்கர்பாயத் ... *
தணியாதநறுந்தளிர்தந்தனபோன்றுதாழ ... ... *
அணியாரொளிவந்துநிரம்பலினங்கமெங்கு ... ... *
மணியாலியன்றம்மலையொத்ததம்மையில்குன்றம் ... *

(இ-ள்.) திண்மையமைந்த கிளைகளையுடையமாமரங்களெல்லாம் (தம்மேல்) செவ்வானொளிபாய்வதினாலே குறைவில்லாத நல்லதளிர்களைத் தளிர்த்தவைபோன்று தழைந்துநிற்க, அழகுநிறைந்த அவ்வொளிபாய்ந்து நிறைவதினால் குற்றமில்லாதஅம்மலை உருமுழுமையும் செம்மணிகளாலிழைத்த மலையையொத்தது—எ-று. (௯௭)

கண்ணிற்கினிதாகிவிளங்கியகாட்சியாலும் ... ... *
எண்ணற்கரிதாகியிலங்குசிரங்களாலும் ... ... *
வண்ணக்கொழுஞ்சந்தனச்சேதகமார்பணிந்த ... *
அண்ணற்கரியோன்றனையொத்ததவ்வாசில்குன்றம் ... *

(இ-ள்.) குற்றமில்லாத அம்மலைபார்வைக்கு இனிமையை யுடையதாகி விளங்கியதோற்ற முடைமையானும் கணக்கிடலுக்கு முடியாததாகிவிளங்குகின்றசிகரங்களுடைமையானும்(செவ்வானொளிதன்மேலேபாய்கின்றமையானும்) அழகியசெழுமையாகிய சந்தனக்குழம்பை மார்பிலணிந்த உயர்வாகிய கரியமேனியையுடைய இறைவனையொத்திருந்தது—எ-று. (௬௮)

சந்தனச்சேதக மார்பணிந்தவென்றதனால் மேலைச்செய்யுளிற் கூறியசெக்கரணியாரொளியென்பது ஈண்டுந்தந்துரைக்கப்பட்டது.

ஊனும்முயிரும்மனையாரொருவர்க்கொருவர் ... *
தேனும்மிஞிறுஞ்சிறுதும்பியும்பம்பியார்ப்ப ... *
ஆனையினமும்பிடியும்மிகலாளியேறும் ... ... *
மானுங்கலையும்மெனமால்வரைவந்திழிந்தார் ... ... *

(இ-ள்.) ஒருவருக்கொருவர் உடலுமுயிரும்போன்ற ஆடவர்களும் மங்கையர்களும், (தாமணிந்தமலர்களில்மொய்த்திருந்த) பெண்வண்டுகளும்மிஞிறென்னும் வண்டுகளும் சிறிய தும்பிகளென்னும் வண்டுகளும் நெருங்கி யாரவாரிக்கும்படி ஆண்யானைக்கூட்டமும் பெண்யானைக்கூட்டமும் வலியமைந்த ஆண்சிங்கக்கூட்டமும் பெண்மான்கூட்டமும் ஆண்மான்கூட்டமும்போலப் பெருமையாகிய மலையினின்றும் வந்திழிந்தார்கள்—எ-று.

இனமென்பதனைப் பிடிமுதலியவற்றோடுங்கூட்டுக. வரம்பிலாப் பெருந்திரளாகச் சூழ்இயியிழிகின்றமையின் ஒருவரையொருவர் பிரிந்தவருஞ்சிலருளரொன்பார் இகலாளியேறுமென்றார் இகலாளியேறுமெனச் சிறந்தவாடவர்களைக் கூறவே பிரிந்தபெண்பாலாருமுளரொன்பது தானேவந்தியைதலிற் கூறுராயினர். அன்றிஅச்சம் நாணம்பயிர்ப்புடையராகலிற்பெண்பாலார்க்குச் சிங்கத்தையுவமைகூறல் மரபன்மையினெனக்கோடலுமொன்று,

கால்வானகத்தேருடைவெய்யவன்காய்கடுங்கட் ... *
கோன்மாய்கதிர்ப்புல்லுளைக்கொல்சினக்கோளரிம்மா... *
மேல்பான்மலையிற்புகவீங்கிருள்வேறிருந்த ... ... *
மால்யானையீட்டமெனவந்துபரந்ததன்றே ... ... *

(இ-ள்) ஆகாயத்தின்கணுலவுகின்ற ஒற்றைசக்கரமமைந்த தேரையுடைய சூரியனாகிய கோபிக்கின்ற அஞ்சாமையையுடைய அம்புகளைச்சிதைக்கின்ற கிரணங்களாகிய மெல்லியபிடரி மயிரைவாய்ந்த கொல்லுகின்ற சினத்தையுடைய திண்ணிய ஆண்சிங்கம் மேற்றிசைக்கணுள்ள மலையிலேபிரவேசித்தலினால் தனித்திருந்த மதமயக்கத்தையுடையயானைக்கூட்டம்போல மிக்கஇருள்வந்து (உலகில்) பரவியது—எ-று. (௭௰)

கால்வாகனத்தேருடை வெய்யவன்அரிமாவென்பதற்கு-காவின்கண் வெண்மையாகிய நகங்களினது அழகையுடையசூரியனாகிய ஆண்சிங்கமெனப்பொருள்கூறினும் பொருந்தும்.

மந்தாரமுந்துமகரந்தமணங்குலாவும் ... ... *
அந்தாரசர்க்காசன்றனனீகவெள்ள ... ... *
நந்தாதொலிக்குநரலைப்பெருவேலையெல்லாஞ் ... *
செந்தாமரைபூத்தெனத்தீபமெடுத்தவன்றே ... ... *

(இ-ள்)குறையாதொலிக்கின்றபேரொலியையுடையபெரியகடல்களிலே

ல்லாம் செந்தாமரைமலர்கள் பூத்தாற்போல; மந்தாரதருவின் மலரினுமுந்படுகின்ற தேனுமணமுமமைந்த அழகியமலர் மாலையணிந்த அரசர்களுக்கரசனுடைய சேனுசமுத்திரத்தில் தீபங்கள் எடுக்கப்பட்டன—எ-று. (௭௧)

தண்ணக்கடலிற்றளிசிந்துதரங்கநீங்கி … … … *
விண்ணிற்சுடர்வெண்மதிவந்ததுமீன்கள்சூழ … … *
வண்ணக்கதிர்வெண்ணிலவின்றிரள்வாலுகத்தோ … *
டொண்ணித்திலமீன்றெளிர்வால்வளையூர்வதொத்தே… *

(இ-ள்) (கடலலையைநீங்கிவெண்மணற்பரப்பில்) ஒள்ளியமுத்துகளையீன்றுஒளிர்கின்ற வெண்மையாகியசங்கம் தவழ்வதைஒத்துக் குளிர்ச்சியாகிய கடலில் திவலைகளைத்தூவுகின்ற அலைகளினின்று நீங்கிவிண்ணினிடத்தில் சுடர்கின்றவெண்மதி தனதுஅழகிய வெண்ணிலாக்கதிராகிய வெண்மணலில் விண்மீன்கள் புடைசூழ்ந்துவரவந்தது—எ-று. (௭௨)

மீனுறுவேலையொருவெண்மதியீனும்வேலை … … *
நோனுததனைநுவலற்கருங்கோடிவெள்ளம் … … *
வானுடியரிற்பொலிமாதர்முகங்களென்னும் … .. *
ஆனுமதியங்கண்மலர்ந்தநனிகவெள்ளம் … … *

(இ-ள்.) மச்சங்கள்தோன்றுகின்ற சமுத்திரம் வெண்மையாகிய ஒருசந்திரனைப் பெறும்போது அதைப்பொறுக்காமல் சேனுசமுத்திரம்தெய்வமங்கையரைப்போலவிளங்குகின்ற அரசமகளிர்களதுமுகங்களென்னும்சொல்லுதற்கரிய கோடிவெள்ளமாகியதேய்வில்லாதசந்திரர்களைப்பெற்றது.()

மண்ணும்முழவின்றெலிமங்கையர்பாடலோதை … *
பண்ணுந்நரம்பிற்பகையாவியத்பாணியோதை … *
கண்ணும்முடைவேயிலசகண்ணுளராடறேறும் … *
விண்ணும்மருளும்படிவிம்மியெழுந்தவன்றே … *

(இ-ள்.) நாடகர்கள் ஆடுமிடமெங்கும் மார்ச்சனையமைந்த முழவினதுஓசையு மங்கையர்களது பாடுதலோசையும் பண்ணையுடைய யாழோசையினின்று மாறுதலில்லாத இயல்பைப்பெற்ற கையோசையும் கணுவையுடைய வேய்ங்குழலிசையும் விண்ணுலகத்தாரும் மயங்கும்படி அதிகரித்து எழுந்தன—எ-று. (௭௪)

மண்ணும்முழவு- பண்ணுந்நரம்பு- என்பனவற்றில் உகரச்சாரியையும் மகரநகரங்களும் விரித்தல். கண்ணும்முடை என்பதில் உம்மைலன்வென்வருஉம் புள்ளியிறுதிமுனென்னுஞ் சூத்திரத்தில் அன்னமரபினென்றதனுல் வந்தசாரியை- ஆடல்- தானியாகுபெயர்.

மணியின்னணிநீக்கியயங்கொளிமுத்தம்வாங்கி… … *
அணியும்முலையாரகிலாவிபுலர்த்துநல்லார் … … *
தணியும்மதுமல்லிகைத்தாமம்வெறுத்துவாசந் … *
திணியும்மிதழ்ப்பித்திகைக்கத்திகைசேர்த்துவாரும் … *

(இ-ள்.) மணிமாலையைநீக்கிப் பிரகாசிக்கின்றஒளியையுடைய முத்துமா

லையை (சிலதியர்கொடுக்க) வாங்கி அணிந்துகொள்ளுகின்ற கொங்கைகளையுடையாராகிய அகிற்புகையால் (சந்தனத்தொய்யில் முதலியவற்றை) உலர்த்து நல்லார்கள் குளிர்ச்சியமைந்த தேன்பொருந்திய மல்லிகைமாலையை வெறுத்துமணம்நெருங்கிய இழைப்புடைய கருமுகைமாலையை அணிகின்றார்களும் இவைபோல்வன பிறசெய்கின்றாருமாயினார்—எ-று. (எ௬)

புதுக்கொண்டவேழம்பிணிப்போர்புனைபாடலோதை. *
மதுக்கொண்டமாந்தர்மடவாரின்மிழற்றுமோதை ... *
பொதுப்பெண்டிரல்குல்புனைமேகலைப்பூசலோதை ... *
கதக்கொண்டயானைகளியாற்களிக்கின்றவோதை ... *

(இ-ள்.) (அம்மலையினிடத்தில்) புதுமையாகப் பிடித்தயானைகளைக் கட்டுவோரது புனைபாடலோசையும் மதுவுண்டமக்கள் தம்பனைவியரிடத்தில் பேசுகின்றவோசையும் வேசையர்கள் தம்மல்குலில் அணிகின்ற மேகலையினது பூசலாகியவோசையும் சினங்கொண்டயானைகள் மதவெறியாற் செருக்குகின்றவோசையும் பிறவோசைகளும் ஆங்காங்கு எழுந்தன—எ-று. ()

பிணிப்போரது பாடலென்பது ஆறுவதுவினைமுதற் பொருண்மையின்கண் வந்தகாரகம் புனைபாடலென்பது- வேழங்களைத் தளையிடுங்கால்பாடும்பாட்டு. பாடல்கருவியாகலிற் புனையென்னும் வினைத்தொகைகாரியப்பொருட்டு- இந்நான்கோதையும் பிறவோதையும் எழுந்தனவென்பார் பயனில கொடுத்துக்கூறுது அவாய்நிலையான்முடித்தார்.

உண்ணாவமுதன்னகலைப்பொருளுள்ளதுண்டும் ... *
பெண்ணாரமுதமனையார்மனத்தூடல்பேர்த்தும் ... *
பண்ணணபாடல்செவிமாந்திப்பயன்கொளாடல் ... *
கண்ணாலினிதுய்க்கவுங்கங்குல்கழிந்கதன்றே ... ... *

(இ-ள்.) உண்ணப்படாத அமுதத்தையொத்த நூல்களிலமைந்த உண்மைப்பொருள்களை ஐயம்விபரியயமின்றிச் செவியாலுண்ணவும் பெண்களில் பெறுதலரிய அமுதத்தையொத்த நாயகிமாருடையமனத்தினிகழ்ந்த ஊடலைநீக்கியும் பண்ணோடிசைந்த பாட்லாகியநறவைச் செவியாற்பருகியும் பாடலின்பொருள்கொண்ட நடனத்தைக் கண்களால் இனிமையாகநடத்தவும் இராவானதுபோயது—எ-று. (எஎ)

கலைப்பொருள்- சாதியொருமையாகலி னுள்ளதென ஒருமைவந்தது- உள்ளதுண்டென்றதினால் ஐயம்விபரியயமின்றி யென்பதுவருவிக்கப்பட்டது. பண்ணெனவேறு கூறினமையிற் பாடலென்றதொழிற்பெயர்சொற்றொடருக்காய் அதுசொற்றொடரின்பொருளுக்கானமையி னிருமடியாருபெயர். பாடலாடற்கின மாகலினும்மைகொடுத்துப் பிரிக்காதுமாந்தியென்றும்பாடலின்றியமையாதாகலிற் பயன்கொளாடலென்றுங் கூறினார். பாடலின்பொருள்கொண்ட நடனமாவது பாடற்பொருளின்படி காட்டும்பாவனையோடு கூடியநடனம்.

௰௫-வது-வரைக்காட்சிப்படலமுற்றிற்று.

௰௩-வது-பூக்கொய்படலம்.

மீனுடையெயிற்றுக்கங்குற்கனைகடல்வெருண்டுவெய்ய... ...*
கானுடைக்கதிர்களென்னுமாயிரங்கரங்களோச்சித் ... ... *
தானுடையுதயமென்னுந்தமனியத்தறியுணின்று... ... ...*
மானுடைமடங்கலென்னத்தோன்றினன்வயங்குவெய்யோன். *

(இ-ள்.) விண்மீன்களாகிய பற்களையுடைய இராவாகிய இரணியனைக்கோபித்துக் காடும்போலும் அடர்ச்சியையுடைய கதிர்களென்னும் ஆயிரங்கரங்களை நீட்டித் தானுடைத்தாகிய உதயகிரியென்னும் பொற்றாணினின்று மானுடவியல்புடைய சிங்கப்பெருமான்போல உதித்தனன் ஒளிசெய்கின்ற சூரியன்—எ-று. (க)

வெய்யோன்றோன்றினனென்பதில் வெய்யோனென்னு மெஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாய்வந்தது. தோன்றினன் போனுனென்பன தத்நிலையினின்றும் பெயர்ந்தன்றொனப் பொருடரவிற் றன்வினையேயாம்.

முறையெலாமுடித்தபின்னர்மன்னனுமூரித்தேர்மேல் ... *
இறையெலாம்வணங்கப்போனுனெழுந்துடன்சேனைவெள்ளம்,
குறையெலாஞ்சோலையாகிக்குழியெலாங்கழுநீராகித்... ... *
துறையெலாங்கமலமானசோணையாறடைந்ததன்றே... ...*

(இ-ள்.) நித்தியகடன்களையெல்லாம்முடித்தபின் சக்கரவர்த்தியும் வலியமைந்ததேர்மேல் அரசர்களெல்லாம் வணங்கப்போனான் சேனைவெள்ளம் எழுந்து அவனைப்பிரியாமல்,தான்பாயாதொழிந்தவிடங்களிலெல்லாஞ்சோலைகளையுடையதாகிப் பள்ளமானவிடங்களிலெல்லாம் செங்கழுநீர்களையுடையதாகித் துறைகளிலெல்லாம் கமலங்களையுடையதான சோணையாற்றை அடைந்தது—எ-று. (உ)

மன்னனுமென்பது இறந்ததுதழீஇய வெச்சவும்மை. சேனைவெள்ளமென்பதுவெய்யோனென்பதுபோலவந்தது.

அடைந்தவணிறுத்தபின்னரருக்கனுமும்பர்ச்சேர்ந்தான்.....*
மடந்தையர்குழாங்களோடுமன்னருமைந்தர்தாமும் .. ... *
குடைந்துவண்டுறையுமென்பூக்கொய்துநீராடமைதீர் ... *
தடங்களுமடுவுஞ்சூழ்ந்ததண்ணறுஞ்சோலைசார்ந்தார் ... *

(இ-ள்.) அவ்விடத்தடைந்து தங்கியபின் சூரியனும் ஆகாயத்திடையில் சேர்ந்தான் மனைவியர் கூட்டங்களோடு அரசர்களும்,இராசகுமாரர்களும் வண்டுகள் குடைந்து தங்குகின்றமென்மையபூக்களைக்கொய்து நீராடுதற்குமாசில்லாத குளங்களும் மடுக்களுஞ்சூழ்ந்த தண்ணிய நறுவியசோலையைச்சார்ந்தார்கள்-எ-று. (ந)

திண்சிலையுருவமாகச்சேயரிக்கருங்கணம்பாற் ... ... *
புண்டிலசெய்வவொன்றுபோலவன்போன்றமைந்தரு ... ... *
பண்சிலம்பணிவாயசர்ப்பநாணிறுற்பறந்தகிள்ளை... ... *
ஒண்சிலம்பார்ப்பமாதரொதுங்குதோருதுங்குமன்னம்... *

(இ-ள்.) (அந்ருவந்தமங்கையர்கள்) புருவங்கள் திண்ணியசிலைகளாகக் கொண்ட செவ்வரியையுடைய கருங்கண்களாகிய அம்புகளால் (தம்மை) சிலைபுண் செய்வார்களென்று அஞ்சிப்போவனபோன்றன போகாநின்ற மயில்கள் (அவர்கள் இசையொலிக்கின்ற அழகிய வாயாற்பேசக்கேட்டு நாணத்தினால் பறந்தனகிளிகள்· (காலிலணிந்த) ஒள்ளியசிலம்புகளாரவாரிக்கும்படி அம்மாதர்கள் நடக்குந்தோறு நடவாநிற்கும் அன்னங்கள்-எ-று (௪)

செம்பொன்செய் சுருளுந்தெய்வக் குழைகளுஞ்சேர்ந்துமின்
பம்புதேனலம்பவொல்கிப்பண்ணையிறைடமேருகக்கி ... [ணப்
கொம்பொடுங்கொடியனாக்குறிப்பறிந்துணர்தறேற்றார், *
வம்பவிழலங்கன்மாலைமைந்தருமயங்கிநின்றார்... ... *

(இ-ள்.) செம்பொன்னாற்செய்த ஓலைச்சுருளும், தெய்வத்தன்மையுடையகுண்டலங்களும், சேர்ந்துமின்னவும் நெருங்கியவண்டுகளொலிக்கவும், அசைந்து தோழியர்கூட்டத்தோடு விளையாடலைநோக்கி (போதுகளையும் மலர்களையுமுடையனவாகி வண்டுகளொலிக்கக் கூட்டமாகக் காற்றாலசைந்தாடுகின்ற கொம்புகளோடு பூங்கொடியையொத்த தம்மனைவியரை அடையாளமறிந்து தெளியாதவர்களாய் மணம்பரவுகின்ற அலங்கலாகிய மாலையையணிந்த ஆடவர்களும் ஐயப்பட்டுநின்றார்கள்-எ-று. (௫)

மைந்தருமென்பது-சிறப்பும்மை.

பாசிழைப்பரவையல்குற்பண்டருகிளவித்தண்டேன்... ...*
மூசியகூந்தன்மாதர்மொய்த்தபேரவைகேட்டுக்... ... *
கூசினவல்லபேசநாணினகுயில்களெல்லாம் ... ... *
வாசகம்வல்லார்முன்னின்றியாவர்வாய்திறக்கவல்லார் ... *

(இ-ள்.) பேசுதல்வல்லவர்களுக்கு முன்னின்று வாய்திறந்துபேசவல்லவர் ஒருவருமில்லை ஆதலால்பசும்பொன்னணியணிந்தபரப்பாகிய வல்குலையும் பண்ணைத்தருகின்ற சொல்லாகியதண்ணியதேனையும் அடர்ந்தகூந்தலையுமுடையமாதர்கள் கூடியபேரோசையைக்கேட்டுக் குயில்களெல்லாம்பயந்தனவல்ல பேசுதற்குநாணின-எ-று. (௬)

யாவர்வாய்திறக்கவல்லா ரென்பதுயாருலகத்தோர் சொல்வில்லாரென்றாற்போல இன்மையையுணர்த்திற்று. பின்வருவதுமது.

நஞ்சினுங்கொடியநாட்டமமுதினுநயந்துநோக்கிச்... ... *
செஞ்செவேகமலக்கையாற்றீண்டலுநீண்டகொம்பர் ... *
தஞ்சிலம்படியின்மென்பூச்சொரிந்துடன்றாழ்ந்தவென்றால் *
வஞ்சிபோன்மருங்குலார்மாட்டியாவரோவணங்கலாதார் ... *

(இ-ள்.) விடத்தினுங்கொடுமையுடைய கண்களால் அமுதத்தினும் விரும்பிநோக்கித் தாமரைமலர்கள்போன்ற கைகளால் மிகவுஞ் செவ்வையாகத் தீண்டலும், உயர்ந்துநிற்கிறபூங்கொம்புகள் உடனே தம்முடையசிலம்பணிந்த பாதங்களில் மெல்லியமலர்களைச் சொரியாநின்று வளைந்தனவென்றால் கொடிபோலும் இடையையுடையாரிடத்தில் வணங்காதவர் ஒருவருமில்லை.

அம்மாதர்களது கரப்பரிசமாத்திரையின் ஓரறிவுயிருந் தாழுமாயின் ஐயறிவுமுடையாருள் வணங்காதாரில்லையென்பதுகருத்து. சொரிந்தென்பது தாழ்தற்றொழிலோடே நிகழ்ந்தமையி னிகழ்காலம்பற்றிவந்தது.

அம்புயத்தணங்கினன்னாரம்மலர்க்கைதீண்ட... ... ... *
வம்பியலலங்கற்பங்கிவாளரிமருளுந்தோளார்... ... .*
தம்புயவரைகள்வந்துதாழ்வனதளிர்த்தமென்பூங்... ... *
கொம்புகடாழுமென்றல்கூறலாந்தகைமைத்தொன்றோ .... *

(இ-ள்.) தாமரைமலரி லெழுந்தருளிய திருமகளையொத்த மங்கையர்கள் அழகிய மலர்போன்ற கைகளால்தீண்டுதலால், மணந்தங்கிய மாலையணிந்த சிலைகளையுடைய ஒளிபொருந்திய சிங்கங்கள் தம்மினமென மயங்குகின்ற தன்மையையுடைய ஆடவர்களது புயங்களாகியமலைகள் நெருங்கித்தாழ்வன தளிர்த்தமலர்களையுடைய மெல்லியகொம்புகள் தாழுமென்று சொல்லுதல் எடுத்துக்கூறுதலாகிய தன்மையதாமொருபொருளன்று-எ-று. (அ)

வாளரிமருளுந்தோள்-எ-து-நடை-மெய்வலி போர்க்கஞ்சாத் தறுகணென்பனவற்றை. ஓ-எதிர்மறை.

நதியினுங்குளத்தும்பூவாநளினங்கள்குவளையோடு ... ... *
மதிநுதல்வல்லிபூப்பநோக்கியமாலைத்தும்பி... ... ... *
அதிசயமெய்திப்புக்குவீழ்ந்தனவலைக்கப்போகா ... ... *
புதியனகண்டபோழ்துவிடுவரோபுதுமைபார்ப்பார் ... *

(இ-ள்.) நதிகளிலுங் குளங்களிலும் பூவாத தாமரைமலர்களைக் குவளைமலர்களோடு மதியையொத்த நுதலையுடைய பூங்கொடிகள்மலர அவற்றை நோக்கிய அணியாகவருகின்ற தும்பிகள் அதிசயத்தையடைந்து புகுந்து மொய்த்தன, புதுமைபார்க்கும் விருப்பமுள்ளோர் புதியனவற்றைக் கண்டபோதுவிடார் (ஆதலால்) ஓட்டவும்போகா-எ-று. (௯)

உலந்தருவயிரத்திண்டோளொழுகிவாரொளிகொண்மேனி ... *
மலர்ந்தபூந்தொடையல்மாலைமைந்தர்பான்மயிலினன்னார் *
கலந்தவர்போலவொல்கியொசிந்தனசிலகைவாராப் ... ... *
புலந்தவர்போலநின்றவுளசிலபூத்தகொம்பர்... ... ... *

(இ-ள்.) திரண்ட கல்லினழகைத்தருகின்ற உறுதியாகிய திண்ணியதோள்கள்நேர்மையாகி நீண்ட ஒளியைக்கொண்ட மேனியையுடைய மலர்ந்தபூத்தொடுத்தலமைந்த மாலையைத்தரித்த தந்நாயகர்பால் மயிலையொத்தாராகிய இணங்கிய மங்கையர்கள்போல, பூத்தகொம்புகளிற் சிலதுவண்டுவளைந்தன கூடியுங்கூடுதலில்லாத மாதர்களைப்போலச்சில அப்பூக்கொய்கின்ற மகளிர்கைகளில்வாராமல் நிமிர்ந்தனவாகியுள்ளன-எ-று. (௰)

தொடையலென்பது விகுதிமேல் விகுதிபெற்றதொழிற்பெயர் இதனைத்தொழிலாகுபெயராக்கொண்டு தொடையல்மாலையென்பதைத்தொடையலாகிய மாலையெனப் பண்புத்தொகையாக்கினுமமையும்.

பூவெலாங்கொய்துகொள்ளப்பொலிவிலதுவளநோக்கி ... *
யாவையாங்கணவர்கண்ணுக்கழகிலவிவையென்றெண்ணிக் ...*

கோவையும்வடமுநாணுங்குழைகளுங்குழையப்பூட்டிப்... *
பாவையர்பணிமென்கொம்பைநோக்கினர்பரிந்துநிற்பார்... *

(இ-ள்.) பாவையர்கள்தாம் மலர்களையெல்லாங் கொய்து கொள்வதினால் பொலிவில்லாதனவாகித் துவளாநிற்க அதைநோக்கி இவைகள் கணவர்களுடையகண்களுக்கு எத்தன்மையனவாகத் தோன்றாநிற்கும் அலங்காரமில்லனவென்றுகருதி (தாம்பூண்டிருந்த) மணிமாலையையும் முத்துவடத்தையும் பொன்னாணையுங்குண்டலங்களையும் துவளும்படிப்பூட்டிக் குளிர்ந்தமெல்லியபூக்களையுடையகொம்புகளை நோக்கினவர்களாகிவிருப்பிநிற்பார்கள்-எ-று.

தம்மிழவுநோக்காது கணவர்களிப்பேதங்களிப்பாக்கொள்ளுதல் கற்புடையோரொழுக்காதலிற் பூப்பறித்த கொம்புகளுக்குத் தம்மணிகளைப்பூட்டிப் பரிந்துநின்றன ரென்பது கருத்து.

ஆறம்போதினிற்றேன்றவைத்துண்டுழறும்பியீட்ட . ... *
நறுங்கோதையோடுநனைசின்னமுநீத்தநல்லார் ... ... *
வெறுங்கூந்தன்மொய்க்கின்றனவேண்டலவேண்டுபோதும்.. *
உறும்போகமெல்லாநலனுள்வழியுண்பரன்றே... ... ... *

(இ-ள்.) அடையத்தக்கபோகங்களையெல்லாம்மிக்க இன்பமுண்டாயவிடத்திலேயே நுகர்வார்கள் ஆதலால் மிதித்து மலரச்செய்து அடர்ந்தபோதுகளிலுள்ளதேனை உண்டு அவற்றைப்பிரியாமலுழலுகின்ற தும்பிக்கூட்டங்கள் தாம்விரும்புதற்குரிய போதுகளையும் வேண்டாதனவாகி நறுவியமாலையோடு தண்ணியசின்னங்களையும்நீக்கிய கற்புமுதலிய நல்லியற்கையுடையமங்கையர்களது வெறுமையாகிய கூந்தல்களைமொய்க்கின்றன-எ-று. (௰௨)

அன்றீற்றே-தேற்றம்.

மெய்ப்போதினங்கைக்கணியன்னவண்மென்பளிங்கில் ... *
பொய்ப்போதுதாங்கிப்பொலிகின்றதன்மேனிநோக்கி ... *
இப்பாவையெங்கோற்குயிரன்னவளென்னவுன்னிக்... ... *
கைப்போதினோடுநெடுங்கண்பனிகாரநின்றாள்... ... ... *

(இ-ள்.) மென்மையாகிய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகளுக்கு அணியையொத்த சிறந்த அழகையுடையாள் நெய்த்தபளிங்கில் விளையாடற்குரிய போதைத்தாங்கிவிளங்குகின்ற தனதுமெய்யினிழலைநோக்கி (ஒருமங்கையெனக்கருதி) இப்பாவையானவள் எம்முடைய நாயகனுக்கு உயிரையொத்தவளாவாளென்றுகருதிக் கையிற்றாங்கிய போதுவீழ நெடியகண்ணீரொழுகநின்றாள்-எ-று. (௰௩)

இப்பாவையைத் தன்னாயகன் கண்ணுற்றானாயிற் றன்பாற்கொண்ட வேட்கை யொழியுமெனவும் அவ்வழகின்சிறப்புத்தனக்கில்லையெனவுங்கருதி யழுதனளென்பதுகருத்து. பொலிகின்றவென்னும் பெயரெச்சம் மேனியென்னும்பெயர்கொண்டது. காருதல் வினைபோதுக்கில்லையேனும் வீழ்தலுளதாகலின் ஒடுவுருபு வேறுவினையுடனிகழ்ச்சிக்கண்வந்தது. தன்னுயிர்த்தோழியையையு முளப்படுத்தி யெங்கோனென்றாள்.

கோளுண்டதிங்கண்முகத்தாளொருகொம்போர்மன்னன்... *
றோளுண்டமாலையொருதோகையைச்சுட்டிநோக்கித் ... *

தாருண்டகச்சாற்றகையுண்டமூலக்கஞ்லி ... ... *
வாருண்டகண்ணின்மழையுண்டெனவாரநின்றாள் ... . *

(இ-ள்.) இராகுக்கோளால் (ஒருபுறத்தே) கவரப்பட்ட திங்கள்போலு முகத்தையுடையாளாகிய ஒருபூங்கொம்பையொத்தவள், ஓரரசன் தன்றோளிலணிந்தமாலையைத்தன்மனையாளாகிய ஒருமயிலன்னாளுக்குச்சூட்டாநிற்க அதைக்கண்டுதாளையுடையகச்சிறுல்தடையுண்டமூலைகள்மேல்வாளையொத்தமையுண்டகண்களில்மழையுண்டென்றுசொல்ல நீர்த்துளிஒழுகநின்றாள்

இதுபோழ்துஇவ்வாறு என்கணவன் சூட்டப்பெற்றிலேனெனக் கவன்றாளென்பதுகருத்து. அன்றிஓர்மன்னன்தன்மனைவியரிருவருள் தன்னருகிருந்தாளுக்குத்தோண்மாலையைச்சூட்டச்செய்மைக்கணிருந்தவளேக்கியதுபொருளாகிக்கலுழ்ந்தனளெனினுமொக்கும்சூட்டவென்றதனால்அருகிருந்தாளென்பதும்நோக்கியென்றதனால் சேய்மைக்கணிருந்தாளென்பதும்பெறப்பட்டன. கோளென்றதுசடைக்குருவகமாகவின்ஒருபுறத்தயென்பதுவருவிக்கப்பட்டது

மயில்போல்வருவாண்மனங்காணியகாதன்மன்னன் ... ... *
செயிர்தீர்மலர்க்காவிடுனேர்மாதவிச்சூழல்சேரப் ... ...*
பயில்வாளிறைபண்டுபிறிந்தறியாள்பதைத்தாள் ... ... *
உயிர்நாடிபொல்குமுடல்போலலமந்துழன்றாள் ... ... *

(இ-ள்.) (தன்பால்) மயில்போலவருபவளது மனநிலையையறியும்படிஅவள்பாற் காதலையுடையமன்னனானவன் குற்றநீங்கியமலர்களையுடைய சோலையில் குருக்கத்திமரந்தழைந்திருக்கிற ஓரிடத்தில் ஒளிந்துகொள்ளச் சிறிதும்முன்னேபிரிந்தறியாமலுடனுறைபவளாகிய அம்மங்கைதுடித்துஉயிரைநாடித்தளருமுடல்போலச்சுழன்றுதிரிந்தாள்-எ-று. (௰௫)

மைதாழ்கருங்கண்கள்சிவப்புறவந்துதோன்ற ... ... *
நெய்தாவும்வேலானொடுநெஞ்சுபுலந்துநின்றாள் ... ... *
எய்தாதுநின்றமலர்நோக்கியெனக்கிதீண்டக் .. .. *
கொய்தீதியென்றோர்குயிலைக்கரங்கூப்புகின்றாள் ... ...*

(இ-ள்.) மைதங்கியகருமையாகியகண்களில் சிவப்புமிகுதியும்வந்துதோன்றும்படி நெய்பூசிய வேலையுடைய நாயகனிடத்தில் நெஞ்சனூடிநின்ற ஓர் மாது தனக்கெட்டாமல் நின்ற மலர்களை நோக்கி இவற்றையானடையயாதொருதுணையுமில்லாவெனக்குக்கொய்துஈயாயென்று ஒருகுயிலுக்குக்கைகூப்புகின்றாள்-எ-று. (௰௬)

தலைவனோடு புலந்துநின்ற புலவியால் தன்னையிழிந்தோளாகவைத்து அவனெஞ்சிவிரக்கந்தோன்ற எனக்கீதியெனக்கைகுவித்தனளென்பதுகருத்து. யாதொருதுணையுமில்லேனென்பது எனக்கெனுஞ்சொல்லாற்றலாற்போந்தபொருள்.

செம்மாந்தங்கிளிநீரையோர்செம்மனேக்கி ... ...*
அம்மாவிவைமங்கையர்கொங்கைகளாகுமென்ன ... ... *
எம்மாதர்கொங்கைக்கிவையொப்பனவென்றுரோஷ ... *
விம்மாவெதும்பாவெயராமுகம்வெய்துயிர்த்தாள் ... ...*

(இ-ள்.) உயர்ந்துவளர்ந்து நின்றதென்னமரத்தினது இளநீர்களையோராடவன்நோக்கிவியந்து இவைமங்கைப்பருவத்தையுடையார்களது கொங்கைகளையொப்பாகுமென்றுசொல்ல (அவன்பக்கலிருந்த) நாயகியாகிய ஒருமங்கையானவள் எந்தமாதர்களுடைய கொங்கைகளுக்கு இவையொப்பாயிருக்கின்றனவென்று கலுழ்ந்து உள்ளேகொதித்துப் புறத்தே முகம்வெயர்த்து வெம்மையாக மூச்செறிந்தாள்—எ-று. (௰௭)

தன்கொங்கையாகுமென்னாது மங்கையர் கொங்கைகளாகுமென்றானாகலிற் பிறர்பால் வேட்கையுளானெனக்கருதிக்கலுழ்ந்து அவனைவெறுத்தனளென்பதுகருத்து. அவன்மங்கையரெனக்கூறியது பிறர்பால்வேட்கையானன்று சாதிப்பன்மையானென்பார் இவளையேழையென்றார்,

மேபொன்னவிங்கும்பொருப்பன்னபொலங்கொடிஞ்சோன்.
மாரனனையான்மலர்கொய்திருந்தானைவந்தேதார் ... ... *
காரன்னகூந்தற்குயிலன்னவள்கண்புதைப்ப ... ... *
ஆரென்னமேலாம்படனலென்னவயிர்த்துயிர்த்தாள் ... ... *

(இ-ள்.) மேகம்போன்ற கூந்தலையுடைய குயிலையொத்த சொல்லாளாகிய ஓர்மங்கைவந்து, போருளதெனக்கூற கேட்டு பூரிக்கின்ற மலையையொத்த பொன்னணிகொண்ட திண்ணியதோள்களையுடைய மதனையொத்தவனாகிய மலர்பறித்திருந்த கணவனைக்கண்மூடாநிற்க, அவன் யாரென்றுவினவலும் அவன்பாலையப்பிறந்து தீப்போலச்சினந்தாள்-எ-று. (௰௮)

அவன் ஆரென்றானாகலின் நம்போல இவன்மாட்டு விளையாட்டயருமுரிமையுடையார்பலருளரெனவயிர்த்துச் சினந்தாளென்பதுகருத்து, உயிர்த்தாளெனக் காரணத்தைக் காரியமாகவுபசரித்தார்.

ஊற்றார்நறைநாண்மலர்மாதரொருங்குவாசச் ... ... *
சேற்றால்விளையாதசெந்தாமரைக்கைகணீட்டி... .. ... *
ஏற்றார்க்குதவானிடையேந்தினனின்றொழிந்தான் ... ... *
மாற்றானுதவான்கடுவச்சையன்போலோர்மன்னன் ... .. *

(இ-ள்.) மறுக்கான் கொடானாகிய கடுங்குணத்தையுடைய உலோபனைப்போல ஓரரசன் நறுமணமமைந்தசேற்றால் விளைவையடையாத செந்தாமரைபோலுங்கைகளை ஒருமிக்கநீட்டி ஏற்றவர்களாகிய தன்மாதர்களுக்கு, ஊற்றமைந்த தேனையுடைய புதியமலர்களை (இனியமுகத்தனாய்) உதவானாக அவ்விருவருக்கும் இடையே ஏந்தினவனாய்நின்றமையன்றி வேறொன்றுஞ்செய்திலன்-எ-று. (௰௯)

உவமையில் மாற்றானென்றதற்கேற்பப்பொருளில் இனியமுகத்தனென்பதுவருவிக்கப்பட்டது. பன்மாதரிடையென்னாது மாதரிடையென்றதனால் இருவரென்பது பெறப்பட்டது. தான்கொணர்ந்த நாண்மலர்களைப் பகுத்துச் சமன்செய்து ஒருங்குதருவானாயினும் என்னை மற்றவளோடொத்தாளாகக்கருதினனன்றி என்னைச்சிறந்தவளாகக்கருதிலனென இருவருந்தனித்தனி மாறுபட்டு ஊடுவாராகலானும் அதுகருதிமறுத்தானாயினும் அன்னது பெறுவானாகலானு மிங்ஙனஞ்செய்தானென்பதுகருத்து. நின்றொழிந்தானென்பதில் ஒழியென்னும்விகுதி ஒருதலையென்னும்பொருடரலின் நிற்றலேயன்றி வேறுசெய்திலனென்பது வருவிக்கப்பட்டது.

றைக்கின்றவேனோக்கினடன்னுயிரன்னமன்னன் ... ... *
மைக்கொண்டகண்ணாளெதிர்மாற்றவள்பேர்விளம்ப ... *
மெய்க்கொண்டநாணந்தலைக்கொண்டிடவிம்மிமென்பூக் ... *
கைக்கொண்டுமோந்தாளுயிர்ப்புண்டுகரிந்தவன்றே ... *

(இ-ள்.) மார்பிற்றைக்கின்ற வேல்போலும் நோக்கத்தையுடைய ஒருமாதினதுயிரையொத்த அரசன் அவ்வஞ்சனத்தைக்கொண்ட கண்ணாளுக்கெதிரே மாற்றவளுடைய பேரைக்கூறுநிற்க, (அதனால்) மெய்ம்மையாகக்கொண்ட நாணமானது தலைகொள்ள விம்மாநின்று மெல்லிய பூக்களைக் கையிற்கொண்டு மோந்தாள் அப்பூக்கள் அவ்வுயிர்ப்பின் வெம்மையுண்டுகரிந்தன-எ-று

ஓர்மன்னன் மாற்றாள்பாற்கொண்ட வேட்கையினாலோ அன்றிச் சோர்வினாலோ அன்னாள் பேர்கூறுநிற்கக்கேட்ட ஓர்மங்கையானவள் நம்முயிர்போல இவனையாங்கருதி யன்புசெய்தொழுகாநிற்க இவன் அவள்பால் மிக்கவேட்கையனெனக்கருதித் தானிதுகாறுஞ் செய்தொழுகிய அன்புமுதலியவற்றைப்பற்றி நாணித்தன்பொய்யொழுக்கத்தால்வஞ்சித்துவைத்தானெனக்கழிந்து அவன்பாலூடினளென்பதுகருத்து. மைக்கொண்டகண்ணாளென்பது சுட்டுப்பொருளதாய்நின்றது. மென்பூக்கைக்கொண்டு மோத்தல்விருப்பானன்றே யாகவினீண்டுப்பூவென்பது கருத்தில் வழிச்செயப்படுபொருள்.

திண்டோளரசனொருவன்குலத்தேவிமார்தம் ... ... *
ஒண்டாமரைவாண்முகத்துண்மிளிருண்கணெல்லாங் .. ... *
கண்டாதரிப்பத்திரிவான்மதங்கவ்வியுண்ணா ... ... *
வண்டாதரிப்பத்திரிமாமதவானையொத்தான் ... ... *

(இ-ள்) திண்ணியதோளையுடைய அரசனாகிய ஒருவன் குலத்தில்விவாகஞ்செய்த தன்தேவிமார் பலருடைய ஒள்ளியதாமரைமலர்போன்ற ஒளியமைந்தமுகங்களில் விளங்குகின்ற மையுண்ட கண்கள்யாவும் (தன்கட்டழகை) கண்டு அன்புகொள்ளத்திரிவான் அவன்மதத்தை வாய்நிரம்பக்கொண்டுண்ணும்படி வண்டுகள் ஆதரித்துத்திரிகின்றமதத்தையுடையபெரியயானையையொத்தான்-எ-று. (௨௧)

உண்கணெல்லாமென்றவிற் பலரென்பது பெறப்பட்டது.

சந்திக்கலாவெண்மதிவாணுதலாடனக்கும் ... ... *
வந்திக்கலாகுமடவாட்கும்வகுத்துநல்கி .. .. *
நிந்திக்கலாகாவுருவத்தினனின்றபோழ்துஞ் ... ... *
சிந்திக்கலாபமயிற்கண்கள்சிவந்துபோனார் ... ... *

(இ-ள்) தான்கொய்துவந்தமலர்களைச்சந்திப்பொழுதில் விளங்குகின்ற கலையையுடைய பிறைமதிபோன்ற ஒளியமைந்தநெற்றியையுடைய ஒருநாயகிக்கும் (அருந்ததியும்) வந்தனைசெய்யத்தக்க கற்புடைய மற்றொரு நாயகிக்கும் சமனாகப்பகுத்துக்கொடுத்து (வடிவிலக்கணங்கூறு நூலோரால் குற்றங்கூறவில்லாத வடிவையுடைய அரசன் மற்றொன்றுஞ்செய்யாதுநின்றபோதும் (அவ்விருவரும் அம்மலர்களையேயன்றி) பலமணிகள்கோத்த இருபத்தொரு வடமாகிய கலாபத்தையுமறுத்துச்சிந்தி வேல்போலுங் கண்கள்சிவந்து சினங்கொண்டுபோனார்கள்-எ-று. (௨௨)

வருந்தென்னும்வினைக்கு மலர்களென்னுஞ் செயப்படுபொருள் அதிகாரத்தான்வருவி க்கப்பட்டது ஒப்பவகுத்துநல்கலால் இருவருமாறுபட்டு அம்மலர்களையும் அவன்கண்டு மகிழ முன்னர்த்தாமணிந்திருந்த கலாபத்தையுமெறிந்துநீங்கினரென்பதுகருத்து. கண்ணரக்கண்டுமகிழுமுருவத்தனென்பார் சிந்திக்கலாகா வுருவத்தனென்றும் மலரைவகுத்து நல்கினதேயன்றி ஓர்குற்றமுஞ்செய்திலனென்பார் நின்றபோழ்துமென்றுந் தம்மைக்கண்டு அவன்மகிழ்தலை இருவரும் வேண்டிலரென்பார் சிந்திக்கலாபமென்று மவன்வடிவழகைக்கண்டுமகிழ்வடையாதுவறிதே நீங்கினரென்பார் போனாரென்றுங்கூறினார். சந்திமதியென்றது பிறைமதியை அக்காலம் பிறைதோன்று மேற்றிசைக்குரியதாகலின் அங்ஙனமன்றிக் கலாமதியென்பதிலலகரந்தொக்கதாக்கொண்டு கல்லாவென்பது கடிமிளகுதின்ற கல்லாமந்தி யென்றாற்போலக் குழவித்தன்மையையுணர்த்திற்றெனக் கொள்ளினுமொக்கும் இதுகுறிப்பு. சிந்திக்கலாபமெனவே அவன்கொய்துகொணர்ந்தமலர்களை யன்னார் மடியிற்பெய்தனனென்பதுகுறிப்பெச்சம் அன்றி ஈற்றடிக்கு மலர்களைச்சிந்திக்கலாபத்தையுடைய மயில்போலக் கண்ணின்சிவந்து போனாரெனினுமொக்கும்.

வேறு.

வந்தெங்குந்தம்மனுயிரோயோபிறிதொன்றோ... ... *
கந்தந்துன்றுஞ்சோர்குழல்காணார்கலைபேணார் ... *
அந்தந்தோறுமற்றுகுமுத்தமவைபாரார் ... ... *
சிந்துஞ்சந்தத்தேமலர்நாடித்திரிவாரும்... ... ... *

(இ-ள்.) தேனைச்சிந்துகின்றஅழகியமலர் தமதுநிலைபேறுடையவுயிரோ அதற்கினமாகியபொருளோ (அறியோம்) சாந்து அமையப்பூசிய சோர்கின்றகுழலைநோக்காமலும் (சோர்கின்ற) ஆடையைக்காவாமலும் வடத்தின் கடைப்பூட்டுதோறுமறுந்து சிந்துகின்றமுத்தங்களைமதியாமலும்அச்சோலையிடமெங்கும்வந்து மலர்களைத்தேடித்திரிவாரும்-எ-று. (௨௩)

ஓ-இரண்டும் ஐயப்பொருட்டு. அறியோம் என்பது- சொல்லெச்சம். விளையாட்டயர்த லாடன்முதலியவற்றைக்கூறவே மலர்கொய்தற்றொழிலொழிந்தன வென்றுகொள்ளற்க. அத்தொழிலைவிடாது முயல்வார் பலருளரென்பாரிஃதீண்டுக்கூறினார். வந்தென்பதுஇடவழுவமைதி.

யாழொக்குஞ்சொற்பொன்னனையாளோரிகன்மன்னன் ..*
தாழத்தாழாடாழ்ந்தமனத்தாடளர்கின்றாள் ... ... *
ஆழத்துள்ளுங்கள்ளநினைப்பாளவனின்ற ... ... *
சூழற்கேதன்கிள்ளையையேவித்தொடர்வாளும் ... *

(இ-ள்.) யாழினிசையையொத்த சொல்லையுடைய திருமகளைநிகர்த்த ஓர் மங்கையானவள் திண்மையையுடைய நாயகனாகிய ஓரரசன் வணங்காநிற்கத்தன்னெஞ்சினகாள் (அவனீங்கியபின்) இளகியமனத்தாளாய்த் தளராநின்று (அவனை அணையும்படி) ஆழத்தில் எண்ணுகின்றசூதை நினைப்பவளாய்அவனின்றஇடத்துக்குத் தன்கைக்கிள்ளையைப்போகவிட்டு அதன்பின்செல்பவளும்-எ-று. (௨௪)

ஆழ்த்துள்ளுங்கள்ளமாவது செய்காரியத்தினதுபயனின்னதெனப் பிறர்க்குப்புலப்படாதொழுகல். அவன்தாழ்ந்தபோது தானிணங்கினாளல்லளாகலால் தானேசேறற்குஞ்சென்று இணங்கற்கும்நாணி அவன்தன்னிடத்தவாவுமாறு கிள்ளையையேவி யதைத்தேடிச்செல்பவள்போலவன்முன்னர்ச்சென்றனளென்பதுகருத்து.

அந்தராகத்தைங்கணைநூறுயிரமாகச் ... ... *
சிந்தாநின்றசிந்தையினான்செய்குவதோரான் ... *

மந்தாரங்கொண்டீகுதியோமாதவியென்றோர் ...... *
சந்தார்கொங்கைத்தார்குழலாள்பாற்றளர்வானும் ... *

(இ-ள்.) அழகியமாலையணிந்த மார்பின்கண்ணே (மன்மதன்) ஐந்தம்புகளையும் நூறாயிரமாகத்தூவுகின்ற சிந்தையையுடைய ஓரரசன் இனித்தான் செய்வதைத்தேறானாகி (ஓர்குருக்கத்திமரத்தைநோக்கி) மாதவீ மந்தாரமலரைப்பூத்து ஈயவல்லையோ வென்று கூறிநின்று சந்தனநிறைந்தகொங்கைகளையும் மாலையணிந்தகூந்தலையுமுடையஓர்மாதினிடத்தில்தளர்வானும். ( )

மந்தாரங்கொண்டீகுதியோ மாதவியெனவே இவள் இதுகாறுமினியமுகத்தளாய் இன்பத்தைத்தராநின்ற இயற்கையுடையாளாகநின்று இதுபோது தன்னியல்புமாறித் துன்பத்தைத்தராநின்றாளென்பதுகுறிப்பெச்சம். தனக்கிணங்காளாகியும் அவளை யிழித்துக்கூறுங்கருத்தில்லானாகலின் நறுமணமின்மலரைக்கூறாதுமந்தாரங்கொண்டென்றும் அவள்பாலின்பப்பேறு பெறானாகவே யொருபேறும் பெறுவிழிந்தோனாகத் தன்னைவைத்து ஈகுதியோவென்றுங்கூறினான்.

நாடிக்கொண்டாள்குற்றநயந்தாண்மூனிவாற்றாள் ...... *
ஊடிக்காணக்காட்டுநலத்தானுடனில்லாள் ... ... *
தேடித்தேடிச்செய்தசெழும்பூநறுமாலை ... ... *
சூடிச்சூடிக்கண்ணடிநோக்கித்துவள்வாளும் ... *

(இ-ள்.) ஊடிப் (பின்னர்த்தன்னுபகல் நுகரும்படி இன்பந்தந்து நுகர்விப்பவளாய்ஓர்மாது குற்றத்தைத்தானே நாடிக்கொண்டு அதுசகிக்கவொணாது விரும்பி யூடலையாற்றாளாகி அவன்பக்கல் நில்லாமற்சென்று பலகாற்றேடிக் கொய்துதொடுத்த செழுமையாகிய நல்லபூமாலைகளைப் பலமுறைசூடிக்கண்ணாடியைநோக்கித் துயர்வாளும்—எ-று. (உகா)

அடிக்கிரண்டும் பலகாணிகழ்தலென்னும் பொருட்கண்வந்தன, அவளின்றொனைக்காரணத்தைக்காரியமாகவுபசரித்தார். நறுமலர்களாகத்தேடிக்கொய்து தொடுத்தமாலைகளிற்சிலவற்றைச்சூடிக் கண்ணாடிநோக்கி யிவைகணவன்கண்ணுக்கினிமையாகாவெனக்கருதியவைகழித்து வேறுசிலமற்றுமொருகாற்சூடி இவையுமினிமையாகாவெனக்கழித்து இவ்வாறு பலகாற்சூடித் துன்பப்படுவாளென்பதுகருத்து.

மறலிக்கூணும்வன்கதிர்வேலானிடையேவந் ...... *
துறவிக்கோலம்பெற்றிலெனென்றுடன்வாழ்விப் ... *
பிறவிக்கொல்லேனென்செய்வதிப்பாணியென்றோர் *
விறலிக்கீவாளொத்திழையெல்லாம்விடுவாளும் ... *

(இ-ள். யமனுக்கு உணவு உண்டாகிற வெற்றியையுடைய கிரணம்மைந்தவேலைத்தாங்கியகணவன் என்பால்வந்து சேரும்படி இவ்வலங்காரத்தைப் பெற்றிலேனாயின் அவனைப்பிரியாவாழ்வுஇப்பிறவியிலியையப்பெற்றிலேனாவேன் இப்பெருமையாகியஅணி யாதுபயனைச் செய்வதென்று சொல்லி ஓர்விறலிக்குத் தன்னணிகளை யெல்லாவற்றையும் ஈபவளாகி அவளைக்கணவன்பாற்செல்விடுவாளும்—எ-று. (உஎ)

தலைவனானுகப்பெருமையால் கவல்கின்ற இம்மங்கையைநோக்கி விறலியானவள் நின்னைச்சேயிடைப் பிரிவானல்லன் காவிடைச்செயற்கரியநோர் கருமவயப்பட்டான்போலுமாகலின்வருதலிதுகாறும்பாணித்தது நீகவலற்கவென்றவிறலியைநோக்கி எவ்வினையே

னுந்தன்கைப்படையேயன்றி வேறுதுணைவேண்டாது மூட்டின்றி எளிதின்முடிக்குமாற்ற லுடையானென்பாள்மறலிக்கூறும்வன்கதிர்வேலானெனவும் வருதல்பாணித்தலினால் நீயேனுமவனுழைச்சேறற் கு விழைந்திலையோவென்றாட்கு அவன்ஊடனிகழ்தற்குற்றம்புரிந்தானாகயானேசேறல்தகுதியன்றென்பாள் இடையேவந்தெனவும் அவனைப்பிரிந்தவழியெற்றுக்குக்கோலம்வேய்ந்தனையென்றாட்கு அவன்கண்டுமகிழ்ந்து என்னைப்புல்லுமாறன்றிவேறன்றென்பாள் உறவெனவும் தான்பலகாற்சூடித்துவண்டவருத்தமும் அதனருமையுந்தோன்ற இக்கோலமெனவும்பலபேசிப்பயனென்னையாணிதுபோழ்து அவனைமயங்கப்பெறேனாயினுயிர்வாழ்க்கைவேண்டேனென்பாள் பெற்றிலனென்றுஉடன்வாழ்விப்பிறவிக்கொல்லேனெனவும் அவன்கண்டு மகிழப்பெருமையிற் பயனிலது யிழிந்ததுமாமென்பாள் என்செய்வதிப்பேரணியெனவுங்கூறித்தன்கூற்றின்மெய்ப்பாடுதோன்றத் தானணிந்திருந்த மணியணிமுதலியவீந்துவிடுவாளாயினள்வன்மைகாரணவாகுபெயர்பேரணியென்பதுகுறிப்பு.

வம்பிற்பொங்குங் கொங்கைசுமக்கும்வலியின்றிக் ......*
கம்பிக்குந்தந் நுண்ணிடைநோவக்கசிவாரும் ... ... *
பைம்பொற்கிண்ணம்மெல்விரலூங்கிப்பயில்கின்ற ...*
கொம்பிற்பிள்ளைக்கிள்ளையொளிக்கக்குழைவாரும் ..... *

(இ-ள்.) கச்சில்நின்றும் அடங்காது புறத்தேதோன்றுகின்ற கொங்கைகளைச்சுமக்கும் வலியில்லாமல் நடுங்காநிற்கும் தம்முடைய நுண்ணிடையானது (நடக்குந்தோறும்) நோவாநிற்பதினால் துயர்வாரும் தம்மொடுபிரியாதுறைகின்ற கிளிப்பிள்ளைகள் பூங்கொம்புகளி லொளித்துக்கொள்வதினால் (உணவமைந்த) பசும்பொன்னாற்செய்த கிண்ணங்களை மெல்லியவிரல்களிலேதாங்கி மனங்கரைவாரும்—எ-று. (உஅ)

தன்னைக்கண்டாண் மென்னடைகண்டாடமர்போலத் ... *
துன்னக்கண்டாடோழமைகண்டாடுணையென்றாள் ... *
உன்னைக்கண்டாரெள்ளுவர்பொல்லாதுடுநீயென் ... *
றன்னக்கன்னிக்காடையளிப்பானமைவாரும் ... ... *

(இ-ள்.) தன்னைக்கண்டு மென்மையாகிய நடையைக்கண்டுசிலதியர்போலப்பிரியாதுதொடரக்கண்டு (அதனால்) நட்பின்தன்மையைக்கண்டு உயிர்த்தோழியென்றுகூறி உன்னைக்கண்டவர்கள் இகழ்வார்கள் அதுபொல்லாது நீஉடுத்துக்கொள்ளென்று அன்னமாகியகன்னிக்கு ஆடைஈய ஒருப்படுவார்களும்—எ-று. (உகூ)

குலமங்கையர்களாதலிற் றமரென்பது பெயரிற்பிரிந்த வானொழிமிகுசொல். அன்னமென்பதுசாதியொருமை. கன்னியென்பதுதிணைவழுவமைதி. முற்படக்கிளத்தல் செய்யுளுள்ளித்தேயென்பவாகலிற் சுட்டுப்பொருளதாய்நின்றதன்னென்பது முற்படக்கிளக்கப்பட்டது. கண்டாள் என்றாளென்பன பன்மையிலொருமைவந்தவழுவமைதி. என்னை - அமைவார்யாவரும் தன்னைக்கண்டு மென்னடைகண்டு துன்னக்கண்டு தோழமைகண்டு துணையென்றாராகலின் கண்டாரென்றாரென்னுமொருமை யமைவாரொன்னும்பன்மையோடு தனித்தனிசென்று கூடுதலின் வழுவின்றேனுமீற்றுப்பன்மைபற்றிவழுவமைதியாயிற்று. நச்-ம்- மெல்வருமிரண்டு செய்யுண்முடிபுகளுமன்ன,

பாகொக்குஞ்சொன்னுண்கலையாடன்படரல்குல் .. *
ஆகக்கண்டோராடரவாமென்றயனண்ணுந் ... ... *

தோகைக்கஞ்சிக்கொம்பினொதுங்கித்துணரீன்ற ... *
சாகைத்தங்கைக்கண்கள்புதைத்தேதளர்வாரும் ... *

(இ-ள்.) பாகையொத்த துண்ணியசலையையுடையாள் தன்னுடைய பரந்த அல்குலை நோகக்கண்டு ஆடுகின்ற ஓர் பாம்பெனக்கருதி, அருகேசேர்கின்றமயிலுக்கஞ்சிப் பூங்கொம்புபோலநடந்து மலர்கள்மலர்ந்தபூங்கொம்புகளில் (மறைந்து) தங்கைகளால் கண்களைமூடித்துன்புறுவாரும்-எ-று.

பொன்னேதேனேபூமகளேகாணெனையென்னாத் ... *
தன்னேரில்லாளங்கொருகொய்யற்றழைமூழ்கி ... ...*
இன்னேயென்னைக்காணுதிநீயென்றிகலித்தந் ... ... *
நன்னீலக்கண்கையின்மறைத்துநகுவாரும் ... ... *

(இ-ள்.) அச்சோலையினிடத்தில் தனக்கொப்பில்லாள் பொன்னையொத்தவளே தேனையொத்தவளேபூமகளையொத்தவளேயென்னைப்பாரென்று சொல்லிக் கொய்யன்மரத்தின் மிக்க தழைகளில் நுழைந்து இப்போதே நீயென்னைக்காணுயென்று பகைத்துத்தம்முடைய மிகுதியுங்கருமையாகிய கண்களைக்கைகளினால்மூடி நகைப்பாரும்—எ-று. (௬௧)

பகைத்தலாவது-விளையாட்டயர்வதிற்றம்மாற்றலை வியந்துகூறிமுரணிநிற்றல். பொன் தேன் பூமகள் என்பன வுவமவாகுபெயர்கள். காண்காணுதிநீயென்பனவுமவவழுவமைதி.

வில்லிற்கோதைநாணுறமிக்கோரிலவங்கம்... ... ...*
புல்லிக்கொண்டதாமரைமென்பூமலர்தாங்கி ... ... *
அல்லிற்கோதைமாதர்முகப்பேரவிந்தச் ... ... *
செல்வக்காணிற்செங்கதிரொன்னத்திரிவாரும்... ... ...*

(இ-ள்) (இடக்கையிற்றாங்கிய) வில்லில் நேர்மையாகிய நாண்பொருந்த இலவங்கமலர்களை (சுற்றிலும்) சேர்ந்துகொண்டமெல்லிய தாமரையினது ஒருபூவாகிய மலரை(வலக்கையில்)தாங்கிஇருள்போலுங்கூந்தலில்மாலையணிந்த தம்மாதர்களது முகங்களாகிய பொலிவமைந்த பெரிய தாமரைமலர்க்காட்டில் செங்கதிர்போலத்திரிவாரும்—எ-று. (௬௨)

தாமரைமலர்தாங்கியென்றதனால் தந்தேவிமாரகத்தேகாமவேட்கைதோன்றவும்முகப்பேரரவிந்தக் காணிற்செங்கதிரொன்னவென்றதனால் அதுபுறத்தேதோன்றவும் ஆடவர்கள் திரிந்தார்களென்பதுகருத்து. அல்லென்பது இருளுக்காகுபெயராயதுகுழலுக்குருவகமாயது

செய்யிற்கொய்யுஞ்செங்குமுதஞ்செஞ்சிலையொன்றுங் *
கையிற்பெய்யுங்காமனுநாணுங்கவினூர்ந்து ... ... *
மையற்பேதைமாதர்மிழற்றுமழலைச்சொற்... ... ...*
றெய்வப்பாடல்சொற்கலையென்னத்தெரிவாரும் ... *

(இ-ள்.)வயல்களிற் கொய்த செங்குமுதமும் செம்மையாகிய வில்லொன்றும் கைகளில்வைத்த காமனும்நாணுகின்ற அழகையுடைய ஆடவர்கள்பேதைத்தன்மையுடைய தம்மாதர்கள்மையலால் (குறிப்பாகச) சொல்லுகின்ற குதலைச்சொற்களை வேதங்களையும் சொல்லுதற்குரியகலைகளையுமாராய்வதுபோல ஆராய்வாரும்—எ-று. (௬௩)

பெய்யுமென்னும்பெயரெச்சம் கவினுமொன்னும்பெயர்கொண்டது. குமுதமென்றதற் கேற்பமையலென்றார். தெய்வப்பாடலென்பது அடையடுத்த தொழிலாகுபெயர்- தெரிவா ரெனக்காரியத்தைக்காரணமாகவுபசரித்தார்.

சோலைத்தும்பிமென்குழலாகத்தொடைமேவுங் ... .. *
கோலைக்கொண்டமன்மதவாயன்குறியுய்ப்ப ... *
நீலத்துண்கண்மங்கையர்குழநிரையாவின் ... ... *
மாலைப்போதின்மால்விடையென்னவருவாரும் ... ... *

(இ-ள்) அச்சோலையின்கண் வண்டுகளினுடைய மெல்லிய குழலோசையாகத் தொடைமேவிய கோலைக்கொண்ட மன்மதனாகியகோவலன்குறியிற் செலுத்தலினால் மாலைப்போதிலே நீலநிறமமைந்த (மை) உண்டகண்களை யுடைய மங்கையர்கள் கூட்டமாகியபசுக்களைப்போலச்சூழ்ந்துவரப்பெரு மையாகிய இடபங்கள்வருவதுபோல வருவாருமாயினர்—எ-று. (௫௪)

தும்பிகருத்தாவாகுபெயர். குழல் கருவியாகுபெயர் இது இடவாகுபெயரெனினுமொக்கும். தொடைமேவுங் கோலென்பது மன்மதனுக்கு நாணியில்மேவிய அம்பெனவும்- ஆயனுக்கு மாலைமேவிய ஆத்துரத்துங் கோலெனவும் பொருள்கொள்க. திரிவாருமென்பதுமுதல்வருவாருமென்ப திருக்கிடந்த பன்னிருவினைமுற்றுகளினுமிறப்பு தொழிற்றன்மை யுணர்த்தல்பற்றியெதிர்வாயிற்று இஃது இறப்பே யெதிர்வேயென்னுஞ் சூத்திரத்தானமைக்க இன்னும் இவைபோல்வன பிறசெய்வாரு முளரொன்பார் அவாய்நிலையான்முடித்தார்.

வேறு.

ஊக்கமுள்ளத்துடையமுனிவராற் ... ... *
காக்கலாவதுகாமன்கைவில்லெனும்... ... ... *
வாக்குமாத்திரமல்லதுவல்லியிற் ... ...*
பூக்கொய்வாள்புருவக்கடைபோதுமே ... . *

(இ-ள்.) கொடிகளில் பூக்கொய்கின்ற ஒருத்தியினது புருவத்தின்கடையே(தவவொழுக்கங்களை அழிக்க) வல்லதாகும் (ஆதலால்) உள்ளத்தில் ஊக்கமுடைய முனிவர்களால் காத்தலுக்குத்தக்கது காமனுடையகையிற்பிடித்த வில்லென்று சிறப்பித்துச்சொல்லுஞ்சொன்மாத்திரமுள்ளதன்றி (ஒழுக்கமின்றென்பதாம்)—எ-று. (௫௫)

ஊக்கம்தாம்விட்ட காமவின்ப முதலியவற்றிற்குச்சலியாதுநிற்குந்தன்மைஇது இகழ்ச்சிக்கட் கூறுதற்குக் கருத்தென்னையோவெனின் ஐம்புலவேட்கையைத்துறவா வில்லறத்தோர் அம்மங்கையர்களது உருமுதலியவற்றை வேட்டாராகவிதுகாறுங்கூறியதொருவியப்பன்று காண்பாராயின் முற்றத்துறந்த முனிவர்களும் வேட்பரொன்பதுதோன்றற்கென்க. எனவே அம்மங்கையர்கள்யாவரும் மிக்ககட்டழகுடைய ரொன்பதுகருத்து. போதுமேயென்றதிலேகாரத்தைக் கடையென்பதனோடுகூட்டுக இதுபிரிநிலை. பகைவருக்கமாறனுட்காமஞ்சிறந்த தொன்றுகவிற் காக்கலாவது காமன்கைவில்லென்றார்.

நாறுபூங்குழனன்னுதல்புன்னைமேல் ... ... *
எறினுன்மனத்தும்பர்சென்றேறினள் ... ... *
ஊறுஞானத்துயர்ந்தவராயினும் ... ... *
வீறுசேர்முலைமாதரைவெல்வரோ ... ...*

(இ-ள்.) பெருகுகின்ற ஞானத்தையுடைய முனிவர்களாயினும்பெருமை சேர்ந்தகொங்கைகளையுடையமாதர்களைப்பற்றிவருமாசையைவெல்லார்கள்

(ஆதலால்) மணக்கின்ற பூமாலையணிந்த கூந்தலையும் நல்லநெற்றியையு மு டையாள் புன்னைமரத்தின்மேல் ஏறின நாயகனுடைய மனத்தின்மேல் சென்றேறினாள்—எ-று. (௬௬)

உம்மை-சிறப்பு. மாதர்காரணவாகுபெயர். நன்னுதல் மனத்தும்பர்சென்றேறுதலாவது நாயகிபால்வைத்த வேட்கையடங்காது அவளையேகருதுதல்;

கிளையின்மேலிருந்தானுருத்தேவரால் ... ...*
வளையவும்மரியாள்வனப்பின்றலை ... ... *
நிலைவுநோக்கமு நீக்கலன்கைகளா ... ... *
லிளையநாண்முறியுங்கொய்துநல்கினான் ... ...*

(இ-ள்.) மலர்கொய்தற்காக) கிளையின்மேலிருந்த ஓராடவனென்பவன், தேவர்களாலும், எழுதவரிய உருவத்தையுடைய நாயகியினது அழகினிடத்தில் வைத்தஎண்ணத்தையும் பார்வையையும் மறுக்காதவனாகிக் கைகளால் அரும்புகளையும் புதியதளிர்களையுங்கொய்து ஈந்தான்—எ-று. (௬௭)

வளையவுமென்பதன்கட் சிறப்பும்மையைத் தேவராலுமெனக்கூட்டுக.

வண்டுவாழ்குழலாண்முகநோக்கியோர் ... ... *
தண்டுபோற்புயத்தான்றடமாதினான்... ... ...*
உண்டுகோபமென்றுள்ளத்துணர்ந்தவ ... ... *
டொண்டைவாயிற்றுடிப்பொன்றுசொல்லவே ... .. *

(இ-ள்.) கதாயுதம்போலும் புயங்களையுடைய ஓராசன் வண்டு-கள் தேனுண்டு) வாழ்கின்ற கூந்தலையுடைய மங்கையினது முகத்தைநோக்கி அவளது கொவ்வைக்கனியையொத்தவாயில் துடித்தலொன்றும் கோபமுண்டென்று சொல்லத்தெரிந்து உள்ளந்திலகுலைந்தான்—எ-று. (௬௮)

தண்டுபோற்புயத்தானெனவே வலியதோள்ளெனப் பொருள்போதரலிற் றன்றோண்மாலையை ஒருதொகைக்குச்சூட்டி வந்தானாதல்வேண்டும் ஆகவே அவளுடிஞ் னென்பதுகருத்து, முயங்கும்வேட்கையானவள்வாயுறைபெறுவானேக்கிக்கருத்ததல் வழிச் செலை நின்றனாகவின் மற்றையவூடற்குறிப்புகளையுணர்ந்திலனென்பார் துடிப்பொன்றுசொலவென்றார். இனைத்தென்றறிபொருளின்கணும்மைவிகாரத்தாற்றொக்கது.

ஏயுந்தன்மைபரிவ்வகையரெலாநீ ... ... *
தூயதண்ணிழற்சோலைத்துறும்மலர் ... ... *
வேயுஞ்செய்கைவெறுத்தனர்வெண்டிரை... ... ...*
பாயுந்தீம்புனற்பண்ணைசென்றெய்தினார் ... ... *

(இ-ள்.) (இவ்வாறு) அமைந்த இயற்கையுடையாரும் இதுபோலும் பல்வேறுதன்மையுடையாருமெல்லாம் தூய்தாகிய தண்ணியநிழலைத்தருகின்ற சோலையின்கண் அடர்ந்தமலர்களைக் (கொய்து) அணிகின்ற செய்கையை வெறுத்தவர்களாகிப்போய் வெள்ளியதிரைகள் (கரையில்) பாய்கின்ற இனியபுனல்விளையாட்டைமேவினார்கள்—எ-று. (௬௯)

௰௯-வது-பூக்கொய்படலமுற்றிற்று.

[௬௩]

௰௭-வது-நீர்விளையாட்டுப்படலம்.

புனைமலர்த்தடங்களூக்கிப்பூசல்வண்டார்த்துப்பொங்க... *
வினையறுதுறக்கநாட்டுவிண்ணவர்கணுநாண ... ... *
அனைகருமணங்களுரும்மலர்ச்சோலைநின்று ... ... *
வனகரிபிடிகளோடும்வருவனபோலவந்தார்... ... ... *

(இ-ள்.) தீவினையற்றவிண்ணுலகத்திலுள்ள தேவர்கூட்டமும் (இவர்களெ ழிலைக்கண்டு) நாணுமாறு குற்றமில்லாராகிய ஆடவர்களும் தெய்வமன்ன மங்கையர்களும் அந்தமலர்ச் சோலையினின்று வனயானைகள் பெண்யானைக ளோடு வருவனபோல அலங்கரிக்கின்ற மலர்களையுடையநீர்நிலைகளைக்கருதி (தோள்களிலுங் கூந்தலிலு மணிந்தமாலைகளில்மொய்த்த) வண்டுகள் மிகுதி யுமாரவாரிக்கும்படி வந்தார்கள்—எ-று. (௧)

வினையறுதுறக்கநாடு இடத்துநிகழ்பொருளின் றொழில் இடத்தின்மேனின்றது தீவினையற் றெய்துதற்குரியதாகலின். விண்ணவரொன்றதற்கேற்ப அனகருமணங்களுருமெனவும் சோ லையென்றதற்கேற்பவனமென்றுங்கூறினர்.

அங்கவர்பண்ணைநன்னீராடுவானமைந்ததோற்றங் ... ... *
கங்கைவார்சடையோனன்னமாமுனிகனலமேனாள்... ... *
மங்கையர்கூட்டத்தோடும்வானவர்க்கிறைவன்செல்வம் ... *
பொங்குபாற்கடலிற்செல்லுந்தோற்றமேபோன்றதன்றே...*

(இ-ள்.) அந்நீர்நிலையினிடத்து அவர்கள் நல்ல நீரினதுவிளை யாட்டைப் புரிய அமைந்தகாட்சியானது கங்கை ஒழுகாநின்ற சடையையுடைய சிவனை யொத்தமாமுனிவன் சினந்து சபித்தலினால் தெய்வமங்கையர்கூட்டத் தோ டுதேவர்களுக்கரசனது செல்வம் வளமிக்கபாற்கடலிலே செல்லாநின்றதோ ற்றத்தையேபோன்றது—எ-று. (௨)

பண்ணைமகளிர் விளையாட்டு. கனலவென்னுங் காரணங்காரியத்தின்மேனின்றது. எ-பிரிநிலை.

மையவாங்குவளையெல்லாமாதர்கண்மலர்கள்பூத்த ... ... *
கையவாமுருவத்தார்தங்கண்மலர்குவளைபூத்த ... ... *
செய்யதாமரைகளெல்லாந்தெரிவையர்முகங்கள்பூத்த ... ...*
தையலார்முகங்கள்செய்யதாமரைபூத்தவன்றே ... ... *

(இ-ள்.) கரியனவாகிய குவளைமலர்களெல்லாம் அம்மாதர்களது கண்மல ர்களைப்போலப்பூத்தன வடிவுகூறு மிலக்கணம் விரும்பநின்ற உருவத்தை யுடைய அம்மங்கையர்களதுகண்கள் விரிந்தகுவளைமலர்களைப்போலவிளங் கின சிவந்ததாமரைமலர்களெல்லாம் அம்மாதர்களது முகங்களைப்போலப் பூத்தன அம்மங்கையர்களது முகங்கள் சிவந்த தாமரைமலர்களைப்போலப் பொலிந்தன—எ-று. (௩)

கையென்பது முறைமை அது ஈண்டு இலக்கணத்திற்காயது. அது அவாவுதலாவதுதன க்கிலக்கியமாகவேண்டுதல்-எனவே வடிவுகூறுமிலக்கணத்திற்கியைந்த உருவத்தினையுடையது ஊடியமனத்தினருமுளராகலிற் கண்மலரெல்லாம் முகங்களெல்லா மென்றது அவற்றைவா ளாகூறினர் அவாமென்பதில் ஈற்றுமிசை யுகரமெய்யொடுகெட்டது. இது உவமேயோபமா னவணி தண்டியாசிரியர் இதரவிதரவணியென்பர்.

தாளையேய்கமலத்தாளின்மார்புறத்தழுவுவாருந் ... ... *
தோளையேபற்றிவெற்றித்திருவெனத்தோன்றுவாரும் ... *
பாளையேவிரிந்ததென்னப்பாந்துநீருந்துவாரும் ... ... *
வாளைமீனுகளவஞ்சிமைந்தரைத்தழுவுவாரும் ... ... *

(இ-ள்.) தம்பாதங்களை ஒத்த தாமரைமலர்களினது தண்டுகளை மார்பிற் பொருந்தத்தழுவுவாரும் (தந்நாயகர்களது) தோள்களையேபற்றி வெற்றித் திருமகளைப்போலத் தோன்றுவாரும் (கமுகினது) பாளைவிரிந்ததுபோலநீ ரைப்பரவத்தள்ளுவாரும் வாளைமீன்கள் துள்ள அஞ்சி நாயகர்களைத்தழுவு வாரும்—எ-று. (௪)

வெற்றித்திருவென்றவிற்றேளென்றது ஆடவர்தோளை.

வண்டுணக்கமழுஞ்சுண்ணம்வாசநெய்நானத்தோடுங் ... *
கொண்டெதிர்வீசுவாருங்கோதைகொண்டோச்சுவாருந் ... *
தொண்டைவாய்ப்பெய்துதூநீர்கொழுநர்மேற்றூகின்றாரும் *
புண்டரீகக்கைகூப்பிப்புனன்முகத்திறைக்கின்றாரும் ... ... *

(இ-ள். வண்டுகள் உண்ண அவாவும்படி கமழ்கின்ற பராகத்தையும் வா சமூட்டிய தைலத்தையும் கத்தூரியோடுகையிற்கொண்டு (ஒருவருக்கொரு வர்) எதிரெறிவாரும் மலர்மாலைகளைக்கையிற்கொண்டு வீசுவாரும்தொண் டைக்கனியையொத்தவாயிற்பெய்து அச்சுத்தநீராக் கணவர்மேல்கொப்பு ளிக்கின்றாரும் தாமரைமலர்போன்றகைகளைக்கூப்பி நீரை (கொழுநருடை ய) முகத்திலிறைக்கின்றாரும்—எ-று. (௫)

காதலோர்கூட்ட நிகழுங்காலத்தில் மாதர்முகந்தூய்மைய தென்ப தறநூற்றுணி பா கலின் வாய்ப்பெய்து தூநீரென்றார்.

மின்னொத்தவிடையினாரும்வேயொத்ததோளினாருஞ் .. ... *
சின்னத்தினளகபந்திதிருமுகமறைப்பநீக்கி ... ... *
அன்னத்தைவருதியென்றேயாடவென்றழைக்கின்றாரும் .. *
பொன்னொத்தமுலையின்வந்துபூவொத்தவுளைக்கின்றாரும் ... *

(இ-ள்.) மின்னையொத்த இடையாரும் இளமூங்கில்போன்றதோளினாரு ம் (சோலையிலதாம் அணிந்த) சின்னத்தையுடையதலைமயிர்ப்பந்தியானது (தா ம்நீரில்முழுகியெழும்பாது) திருமுகத்தைமறைப்ப (அதை) நீக்கி என்னொடு விளையாடவாவென்று அன்னத்தை அழைக்கின்றாரும் பொற்கிண்ணத்தை யொத்தமுலையில் நெருங்கியபூக்களொத்த நோவுகின்றாரும்—எ-று. (௬)

அம்மாதர்களதுறுப்பி னெவ்வொன்றுமே காணஅற்றுருடைய கண்மனங்களை யொரு சேரக்கவருந்வனப்பிற்றுமாகலின் அவ்வாறு தங்கண்மனங்களந்நலரார்பாற்செலலாந்நக்க ணவர்களவ்வச்சமயங்களில் அவ்வவ்வுறுப்புக்காரணமாக வவர்க்கிட்டு மின்னொத்த விடையினு ன்வேயொத்ததோளினுளெனக் கூறுங்கூற்றைத் தாம்கொண்டுகூறினாரன்றி இடையொன்று மேசிறந்தார் தோளொன்றுமேசிறந்தாரென விருவகையராகக்கூறினாரல்லர் ஒருவர் கூறுங் கூற்றை ஏனையோர் தாங்கொண்டுகூறுதல் காதன்மிக்குழிக் கற்றவுங் கைகொடாவென் னுஞ்சிந்தாமணிச்செய்யுளுள்ளுங்காண்க. பூவொத்தவுளைதல் மிக்கபயிர்ப்புடையரென்பதுணர் ர்த்திற்று.

பன்னுளபவளத்தொண்டைபங்கயம்பூத்ததென்ன ... ... *
வன்னைவாய்க்குவளைவாட்கண்மருங்கிலாக்கரும்பினன்னார் .. *

கண்ணிறைகயலைநோக்கிப்போதுநீர்த்தடங்கட்கெல்லாம் ... *
கண்ணுளவாங்கொலென்றுகணவரைவினவுவாரும் ... *

(இ-ள்.) பண்ணைப்போலுஞ்சொல்லுள்ளகொவ்வைக்கனியைய்யுடையபவ ளக்கிண்ணத்தையும் பூத்ததாகிய தாமரைமலரையுமொத்த அழகியவாயையு டைத்தவேலையும் வாளையுநிகர்த்தகண்களையுமுடைய இடையிலாதகரும் பையொத்தமாதர்கள் உள்ளேநிறைந்தகயல்களைநோக்கிஒடுகின்றநீரையுடை யதடாகங்களுக்கெல்லாம் கண்களுள்ளனவோவென்று கணவர்களைக்கேட்கி ன்றார்களும்—எ-று. (எ)

தடங்கள் சாதிப்பன்மை,பவளத்தொண்டையென்பதைத்தொண்டைப்பவளமெனக்கூட்டுக.

தேன்குதறவமாலைசெறிகுழற்றெய்வமன்னார் ... ... *
தானுடைக்கோலமேனிதடத்திடைத்தோன்றநோக்கி ... *
நானகைநகுகின்றாளிந்நன்னுதற்றோழியாமென் ... ... *
றானமில்விலையினாரமுளங்குளிர்ந்துதவுவாரும் ... ... *

(இ-ள்.) தேனென்னும்வண்டுகள் களிக்கின்ற தேனமைந்தமாலையணிந்த அ டர்ந்தகூந்தலையுடைய தெய்வத்தையொத்தமங்கையர்கள் அழகுடையமே னிநிழல்தடத்தினீரிலே தோன்றுநிற்கப்பார்த்து இந்த நல்லநெற்றியை யு டையாள் யான் நகையாநிற்கத்தானும் நகைக்கின்றாள் (ஆதலின்) தோழியா வாளென்றுகுறைவில்லாத விலையையுடைய மணிவடத்தை உளங்குளிர்ந்து உதவுவாரும்—எ-று. தான்-அசை. (அ)

குண்டலந்திருவில்வீசக்குலமணியாரமின்ன ... ... *
விண்டொடர்வரையின்வைகுமென்மயிற்கணங்கள்போல... *
வண்டுளர்கோதைமாதர்மைந்தர்தம்வயிரத்திண்டோட் ... *
டண்டுகடழுவுமாசைபுனற்கரைசார்கின்றாரும் ... ... *

(இ-ள்.) வண்டுகள் (போதுகளைமலர்த்தும்படித்) தடவுகின்றமாலையணி ந்தமாதர்கள் தந்நாயகர்களுடைய வயிரமென்னும் பூணணிந்ததிண்ணியத ண்டம்போன்ற தோள்களைத்தழுவுமாசையால் விண்ணைத்தீண்டவுயர்ந்தம லையில்தங்கிய மெல்லியதன்மையையுடைய மயிற்கூட்டங்கள்போல (காதி லணிந்த) குண்டலங்கள் சிறந்தவொளியைவீசவும் (மார்பிலணிந்த) கூட்டமா கியமணியாரங்கள்மின்னவும் நீர்க்கரையைச்சார்கின்றாரும்—எ-று. (கூ)

அங்கிடையுற்றகுற்றமியாவதென்றறிதறேற்றாஞ் ... ... *
செங்கயலனையநாட்டஞ்சிவப்புறச்சீறிப்போன ... ... *
மங்கைபோர்கமலச்சூழன்மறைந்தனண்மறையமைந்தன் ...*
பங்கயமுகமென்றோதையுற்றுப்பார்க்கின்றானால் ... *

(இ-ள்.) அவ்விளையாட்டயர்வதில் இடையே உண்டாகியகுற்றம்யாதென் றறிதலைத்தெளியோம் செங்கயலையொத்தகண்கள் சிவக்கும்படித் தன்னைச்சீ றிப்போனமங்கையானவள் தாமரைமலர்கள் அடர மலர்ந்தவிடத்தில் மறை ந்தனள் அவள்மறையாநிற்க, நாயகன் இதுதாமரைமலரென்றும் இது முக மென்றுந்தேறாது ஐயமுற்றுப்பார்க்கின்றான்—எ-று. (௰)

இது ஐயவுவமையணி.

பொற்றொடிதளிர்க்கைச்சங்கம் வண்டொடுபுலம்பியார்ப்ப *
எற்றுநீர்க்குடையந்தோறுமேற்றுமேபாய்குனின்றுங் ... *
கற்றைமேகலைமணிநீங்கிச்சிறடிகவ்வக்காலிற் ... ... *
சுற்றியநாகமென்றுதுணுக்கத்தாற்றுடிக்கின்றாரும் ... *

(இ-ள்.) வளைகள் (கூந்தலில்மொய்த்த) வண்டுகளோடுபுலம்பியாரவாரிக்கும்படி பொன்னாலாகிய தொடியணிந்த தளிர்போலுங் கைகளால்நீரை எறியாநின்று மூழ்குந்தோறும் உயர்ந்த பெரிய அலையிலிருந்து கற்றையாகிய மேகலையின் மணிவடங்கள்நீங்கிச்சிறிய அடிகளைக்கவ்விக்கொள்ளுவதினால் காலில் நாகங்கள் சுற்றியவென்றுகூறி அச்சத்தாற் றுடிக்கின்றவருமாயினார் இவைபோல்வன பிறசெய்வாருமாயினார்—எ-று. (௰௧)

செய்பூவென் வாய்பாட்டு எற்றாருறுக்கலாயிற்று எறியாநின்றுகுடைதலாவதுஒருத்தியொருத்திமேலெறியாநின்று அவள்தன்மேலெறியாமுன்னர் நீருள்மூழ்கல். இதைக்கின்றார்முதலியவற்றில்தொழிற்றன்மை புணர்த்துதல்பற்றி இறப்பு நிகழ்வாயிற்று-இதனை- எனைக்காலுமயங்குதல் வரையாரென்னுஞ் சூத்திரத்தானமைக்க. இவவாறு இறப்பு, எதிர்வுநிகழ்வுமாய்வருவதை ஒருபொருண்மை குறியாதுவருமென்பாருமுளர்.

குடைந்துநீரடுமாதர்சூழாம்புடைசூழவாழித் ... ... *
தடம்புயம்பொலிபவாண்டோர்தார்செழும்வந்தனின்றான் ... *
கடைந்தநாளமுதினோடுங்கடலிடைவந்துதோன்று .... *
மடந்தையர்சூழநின்றமந்தரம்போலமாதோ ... ... *

(இ-ள்.) கடைந்தநாளி லமுதத்தோடு பாற்கடலில்வந்துதோன்றியதெய்வமங்கையர்கள் சூழாநிற்க இடையேநின்றமந்தரமலைபோல, நீரில்மூழ்கிவிளையாடுகின்ற மாதர்களதுகூட்டம் பக்கத்தில் சூழ்ந்துநிற்க அங்கதமணிந்த பெருமையாகிய புயங்கள்விளங்கும்படி அத்தடத்தினிடத்து மாலையைக்கெழீஇய ஓரரசன்நின்றான்—எ-று. (௰௨)

ஆழி-பண்பாகுபெயர் கெழுவென்பதுவேற்றுமைகுறித்தபொருள்வயின்வந்தசாரியை

தொடியுலாங்கமலச்செங்கைத்தூநகைத்துவர்த்தசெவ்வாய்க் .. *
கொடியுலாமருங்குனல்லார்சூழாத்தொருகுரிசினின்றான் ... *
கடியுலாங்கமலவேலிக்கண்ணகன்காவியாற்றுப் ... ... *
பிடியெலாஞ்சூழ்நின்றபெய் மதயானையொத்தான் ... *

(இ-ள்) வளையணிந்ததாமரைமலர்போன்ற செங்கையையும் தூய்மையுள்ளபுன்சிரிப்பையமைந்த மிக்கசிவப்பாகிய வாயையும் பூங்கொடியைப்போலத்துவளாநின்ற இடையையுமுடையமாதர்களது கூட்டத்தில் ஓரரசனின்றான் (அவன்) மணம்பொருந்தியதாமரைவேலியமைந்த இடமகன்றகாட்டத்திற் பெண்யானைகளெல்லாம் சூழும்படி இடையேநின்ற மதம்பெய்கின்ற ஆண்யானையையொத்தான்—எ-று. (௰௩)

பல்லின்றூய்மை அதன்காரியத்தொழின்மேலேற்றப்பட்டது.

கானமாமயில்களெல்லாங்களிகெடக்களிக்குஞ்சாயற் ... *
சோனைவார்குழலினார்தங்குழாத்தொருதோன்றனின்றான் .... *

வானயாறதனை நண்ணிவாவியின் மயங்கித்தோன்று ... *
மீனெலாஞ்சூழநின்றவிரிகதிர்த்திங்களொத்தான் ... ... *

(இ-ள்.) (அங்குள்ள) சோலையில்வசிக்கும் பெருமையாகிய மயில்களெல்லாஞ் செருக்குக்கெடும்படி செருக்குகின்றசாயலையுஞ் சோனைமழைபோனநீண்ட கூந்தலையுமுடைய மங்கையர்களதுகூட்டத்திலொருமன்னனின்றான் (அவன்) ஆகாயகங்கையை நெருங்கி (விண்ணில்) பல்விடத்தே விளங்கித் தோன்றும் மீன்களெல்லாஞ் சூழும்படி (இடையே) நின்றவிரிந்தகதிர்களையுடைய சந்திரனையொத்தான்---எ-று. (௰௪)

மேவலார்தனைமதித்தல்லால்வேழவிற்றடக்கைவீரற் ... ... *
கேவெலாங்காட்டுகின்றவிணைநெடுங்கண்ணேரிழை ... ... *
பாவைமாரயர்ந்தகோலப்பண்ணையிற்பொலிவாள்வண்ணப் *
பூவெலாமலர்ந்தபொய்கைதாமரைபொலிவதொத்தாள் ... *

(இ-ள்.) செங்கரும்பாகிய வில்லைப்பிடித்தபெருமையாகியகையையுடைய மன்மதனுக்கு விரும்புதலாகிய தன்மையுடையதுமன்றி (அம்பை) எய்தொழிலெல்லாவற்றையுங்காட்டுகின்ற (தம்முள்) ஒத்த வடிவினவாகிய நெடியகண்களையுடைய ஓர்பெண்ணானவள் சிலதியர்கள் கூடியமைத்த அழகியகூட்டத்தில் விளங்குவாள் (அவள் நானாவிதமாகிய) நிறமமைந்தமலர்களெல்லாம்மலர்ந்தபொய்கையில் தாமரைமலர் பொலிவதையொத்தாள்---எ-று.

பயர்ந்தவென்பது இலக்கணை. தனைமதித்தென்பதன்கண் ணெதிரதுதழீஇய எச்சவும்மையும் ஏவெலாமென்பதன்கண் இறந்ததுதழீஇயதனோடு முற்றுப்பொருள்படநின்றவும்மையும் விகாரத்தாற்றொக்கது. தனைமதித்தென்பது பன்மையின்கணொருமைவந்த வழுவமைதி உருபுகட்குக்குறித்துவருகிளவிநோக்கிப்பொருள்கூறல்மரபாகலின், வீரற்கு மேவலார்தனைமதித்து கண்ணென்பதற்குக் காதற்பொருளும் வீரற்கேவெலாங்காட்டுகின்ற கண்ணென்பதற்குச்சிறப்புப்பொருளுங்கொள்க. அணுவாயுமனத்தையுமெய்யவல்லானுக்கேவெலாங்காட்டலிற் சிறப்பாயிற்று.

மிடலுடைக்கொடியவேலையென்னவாண்மிளிர்வவென்னச் ... *
சுடர்முகத்துலவுகண்ணாடோகையர்சூழநின்றாள் ... ... *
மடலுடைப்போதுகாட்டும்வளர்கொடிபலவுஞ்சூழக் ... *
கடலிடைத்தோன்றுமென்பூங்கற்பகவல்லியொத்தாள் ... ... *

(இ-ள்.) வலியுடைய கொடியவேல்களென்னவும் விளங்குவனவாகிய வாட்களென்னவும் ஒளியமைந்தமுகத்தில் பிறழ்கின்ற கண்களையுடைய ஓர்மாதுசிலதியர்கள்சூழநின்றாள் (அவள்) மடல்களையுடையபோதுகளைமலர்ந்து வளர்கின்றகொடிகள்பலவுஞ்சூழும்படி பாற்கடலில்தோன்றியமெல்லியபூக்களையுடைய கற்பகத்தில்வளர்கிற காமவல்லியையொத்தாள்---எ-று. (௰௫)

தேரிடைக்கொண்டவல்குறெங்கிடைக்கொண்டகொங்கை .. *
ஆரிடைச்சென்றுங்கொள்ளவொண்ணிலாவழகுகொண்டாள் ... *
வாரிடைத்தனமீதாடமூழ்கினாள்வதனமைதீர் ... ... *
நீரிடைத்தோன்றுந்திங்கணிழலெனப்பொலிந்ததன்றே ... *

(இ-ள்.) தேர்த்தட்டில் (மெய்யழகைக்) கொண்ட அல்குலையும், இளநீரி

ல் (மெய்யழகைக்) கொண்ட கொங்கைகளையும், (அழகிற்சிறந்தோராகிய) யாரிடத்துஞ்சென்று அடையக்கூடாத அழகையுங்கொண்டவள் மாரிலட்சணங்கள் மேலேதோன்றும்படி மூழ்கினள் (அவளுடைய மேலேதோன்றுகின்ற முகம் நீரிலேதோற்றுகிற குற்றநீங்கிய சந்திரனிழல்போல விளங்கியது—எ-று. (௰௭)

மலைகடந்தபுயங்கண்மடந்தைமார் ... ... *
கலைகடந்தகலல்குல்கடாம்பட ... ... *
முலைகடந்தயின்முற்றிநெருங்கலா ... ...*
னிலைகடந்துபரந்ததுநீத்தமே ... ... *

(இ-ள்.) (ஆடவர்களது) மலைகளைவென்ற புயங்களும் மாதர்களது ஆடையைக்கடந்தகன்ற அல்குல்களும் தாம் (ஒன்றோடொன்று) தாக்குப்படிகொங்கைகளும் (மற்றையவயவங்களினும்) முற்பட்டுத் தத்தமக்குள் நெருங்குவதினால் (அம்மடுவினது) நீர்தன்கரையைக்கடந்துபரவியது—எ-று. (௰௮)

ஏனையவுறுப்புகளினுமின்முன்றுமேதிரண்டு பருத்தவுருவினவாகலினத்தலைமையபற்றியவற்றினெருக்கத்தை நீத்தநிலைகடப்பதற்குக்காரணமாக்கிக்கூறினார்.

செப்பவாய்வெளுப்பக்கண்சிவப்புற ... ... *
நெய்பராகமழியத்துகிலனகத் ... ...*
தொய்யிலேந்துமுலைமங்கையர்தோய்தலாற் ... ...*
பொய்யில்காதற்கொழுநரும்போன்றதே ... *

(இ-ள்.) சிவந்தவாய் வெளுக்கவும் கண்கள்சிவக்கவும் நெய்யொடு கலந்த செம்பராகம் அழிபவும் உடுத்த ஆடை அவிழவும் தொய்யிலணிந்த பெருமையாகிய கொங்கைகளையுடைய மங்கையர்கள் மூழ்குவதினால் அத்தடமானது விருப்புள்ளநாயகர்களையும்போன்றது—எ-று. (௰௯)

கொழுநருமென்பது இறந்தது தழீஇயவெச்சவும்மை,

ஆனதூயவரோடுடனாடினர் ... ... *
ஞானநீரவராகுவர்நன்றரோ ... ...*
தேனுநாவியுந்தேக்ககிலாவியு ... ...*
மீனுநாறினவேறினிவேண்டுமோ ... ... *

(இ-ள்.) (இயற்கையினுமேயன்றிக் கல்விகேள்விகளினாலும்) அமைந்த தூய அறிவினோடு பிரியாதுபயின்றவர்கள்மிகவும் அறிவின் தன்மையையுடையவர்களாகுவர் (இதுபோலவே) அவ்வாடவரும் மங்கையரும் மூழ்கிய மடுநீரோடு பயில்கின்ற மீன்களும், தேன்மணமும் கத்தூரிமணமும் மிகுந்த அகிற்புகைமணமும் நாறின (அவர்களதுமகிமையைக்கூறுதற்கு) இனி வேறுவேண்டுவதில்லை—எ-று. (௨௰)

நன்றென்னுமுரிச்சொல் பெரிதென்னும்பொருடந்து வினையெச்சமாய்நின்றது. ஞானநீரவராகுதனன்றரோவெனப்பாடமோதுவாருமுளர்.

மிக்கவேந்தர்தமெய்யணிசாந்தொடும் ... ... *
புக்கமங்கையர்குங்குமம்போர்த்தலால்... ... *

ஒக்கநீலமுகிற்றலைபோடிய ... ... *
செக்கர்வானகமொத்ததத்தீம்புனல் ... ... *

(இ-ள்.) வேந்தர்களுடைய உடலினின்று மழிந்த மிகுந்த செஞ்சந்தனத்தோடு (நீராடப்) புகுந்தமங்கையர்களணிந்த குங்குமத்தேய்வை மேலே பரந்துதோன்றலால் அத்தீம்புனலானது நீலநிறமாகிய மேகத்தினிடத்தில் மாறுதலில்லாதுபரவிய செவ்வானையொத்தது—எ-று. (உக)

காகதுண்டநறுங்கலவைச்சளி ... ... *
ஆகமூண்டதடங்களுநீங்கலாற் ... ... *
பாகடர்ந்தபணிக்கனிவாய்ச்சியர் ... ... *
வேகடஞ்செய்மணியெனமின்னினார்... ... ... *

(இ-ள்.) தம்மெய்யணிந்தனவாகிய அகிற்சந்தனமும் நல்லமையாகிய கலவைச்சேறும் முழுமையும்நீங்குதலினால் சருக்கரைப் பாகைப்பகைத்த முக்கனியையொத்த குளிர்ச்சியாகிய சொல்லையுடையமாதர்கள் வேகடஞ்செய்தமணிகளைப்போலவிளங்கினார்கள்—எ-று. (உஉ)

பாயரித்திறலான்பகைஞ்சாந்தினாற் ... ... *
றூயபொற்புயத்துட்பொதிதூக்குறி ... ... *
மீபரித்துவெளுக்கவோர்மெல்லியல் ... ... *
சேயரிக்கருங்கண்கள்சிவந்தவே ... ... *

(இ-ள்.) பாய்கின்ற சிங்கத்தையொத்த திண்மையையுடையநாயகன் தனதுகுற்றமற்ற பொன்னணியணிந்த புயத்தில் ஈரமாகிய சந்தனத்தினால் நிரம்பவெழுதிய தூய்மையாகிய தொய்யிற்குறியை அழிச்சூத் தூய்மையாக்குதலினால் (அதனைக்கண்ட) ஓர்மெல்லியதன்மையையுடையாளது செவ்வரியையுடைய கருமையாகியகண்கள்சிவந்தன—எ-று. (உ௩)

பசுமை வெண்மையென்னும் பண்புகள் வண்ணப்பண் புணர்த்தாது முறையே ஈரத்தையும் இன்மையையுமுணர்த்திவந்தன தான் அன்பின்வரைந்த தொய்யிலை யழித்தலாற்றன்மாட்டன்பிலனென வூடினாளென்பதுகருத்து. கண்கள்சிவத்தலுக்கு உலகறிகாரணமொழித்துத் தூக்குறிவெளுத்தாலகிய வேறொருகாரணம் வெளிப்படவந்தமையின் விபாவனையென்னுமணி.

கதம்பநாள்விரைகள்ளவிழ்தாதொடுந் ... ... *
ததும்புபூந்திரைத்தண்புனல்சுட்டதால் ... *
நிதம்பபாரத்தொர்நேரிழைகாமத்தால் ... ... *
வெதும்புவாளுடல்வெப்பம்வெதுப்பவே ... *

(இ-ள்.) பெருத்த அல்குலையும் ஒத்த அணிகளையுமுடைய ஒருபெண்ணானவள் காமத்தால்வெதும்புகின்றாள் அவளுடலினுண்டாகிய வெப்பம்வெம்மையூட்டுவதினால் பரிமளப்பொடியும் புதியசாந்தும் தேனும் உதிர்ந்தபூப்பராகமுமாகிய இவற்றினால்நிறைந்த பொலிவாகிய அலைகளையுடையதண்ணியநீருஞ் சுட்டது— (எ-று)

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நேரிழைவினைத்தொகை நிலைக்களத்துப்பிறந்தவன்மொழித்தொகை.

தையலாளையோர்தாரணிதோளிரு ... ... *
ணெய்கொளோதியினீர்முகத்தெற்றினான் ... ... *
செய்யதாமரைச்செல்வியைத்தீம்புனல் ... *
கையினாட்டுங்களிற்றரசென்னவே ... ... *

(இ-ள்.) சிவப்பாகிய தாமரைமலரி லெழுந்தருளிய திருமகளைக் கையால் இனிய நீராடச்செய்கின்ற யானையரசுபோல மாலையணிந்த தோள்களையுடைய ஓரரசன் ஓர்தையலுக்கு நெய்யைத்தடவிய கூந்தலில் நீரைமொண்டு வீசினான்—எ-று. (உரு)

தையலாளை-உருபுமயக்கம்.

களியுமென்னடைதோற்கநடந்தவர் ... ... *
அளிகொள்சீறடியொத்தனவாமென ... ... *
விளிவுதோன்றமிதிப்பனபோன்றன ... ... *
நளினமேறியநாகிளவன்னமே ... ... *

(இ-ள்.) தாமரைமலரின்மேலேறிய மிக்கஇளமையாகிய அன்னங்கள் (ஏனைநாட்டுமாதர்களுடையநடையை) வெறுக்கின்ற மெல்லியநடை நாம்தோற்கநடந்த இம்மாதர்களதுமென்மையைக்கொண்டசிற்றடிகளை ஒத்தனவென்று தமதுகோபம் புறத்தேதோன்றும்படி மிதிப்பனபோன்றன—எ-று.

இது பகைத்துணையை விறல்கோடலாகவந்தமையின் விறல்கோளணி. அடியையொத்தன நளினமெனவே துணையாதல் பெறப்பட்டது. இது அணிவிளக்கம்,

எரிந்தசிந்தையொத்தனையென்கெனோ ... ... *
அரிந்தகூருகிராலழிசார்ந்துபோய்த் ... ... *
தெரிந்தகொங்கைகள்செவ்வியநூல்புடை ... *
வரிந்தவங்கலசங்களைமானவே ... ... *

(இ-ள்.) கொங்கைகள், அழகியநூல்மேற்புறத்தில்சுற்றிய அழகியகலசங்களை ஒத்திருக்க, அரிந்த கூரியநகங்களால்சந்தனமழிந்துபோகத்தோன்றின (அவற்றைக்கண்டகாமத்தால்) எரிந்தசிந்தையையுடைய ஆடவர்களளவு எவ்வளவென்றுசொல்லுவேன்—எ-று. (உஎ)

தாழநின்றததைமலர்க்கையினால் ... ... *
ஆழிமன்னொருவன்னுரைத்தானது ... ... *
வீழியின்கனிவாயொருமெல்லியல் ... ... *
தோழிகண்ணிற்கடைக்கணிற்சொல்லினாள் ... *

(இ-ள்.) (நீண்டு) தாழநின்ற இதழ்களடர்ந்த தாமரைமலர்போன்றகையினால் சக்கரத்தையுடைய ஓரரசன் தன்வேட்கையைக் குறிப்பித்தான் (அதனை) வீழிக்கனியையொத்தவாயையுடைய ஒருமெல்லிய தன்மையையுடையாள் தன்தோழியினது கண்ணிலேதன்கடைக்கண்ணினால்குறிப்பித்தாள்-எ-று.

தள்ளியோடியலைதடுமாறலாற் ... ... *
றெள்ளுநீரின்முழுகுசெந்தாமரை ... ... *

புள்ளிமானனையார் [illegible] ... ... *
[illegible] [illegible] ... ...

(இ-ள்.) [illegible] [illegible] — எ-று. (உ[illegible])

[illegible] ... ... *
[illegible] ... ... *
அனைய நீர்வறிதாகவுந் [illegible] ... ... *
[illegible] ... ... *

(இ-ள்) [illegible] மெய்களை யடைந்து பெருமையாகிய நீராடிய [illegible] பெரிய [illegible] யுடைய ஆடவர்களு மங்கையர்களும் மேற்கூறிவந்த தன்மையதாயடைந்த [illegible] [illegible] சேர்ந்து [illegible] நல்ல [illegible] ரென்பதாம் — எ-று.

தாம் [illegible] [illegible] அழகுடையா ரென்பதும் வின்மேல் [illegible].

மேனி [illegible] ... ... *
[illegible] ... ... *
[illegible] ... ... *
[illegible] ... ... *

(இ-ள்.) [illegible] [illegible] மங்கையர்களுக்கு, [illegible] [illegible] சந்திரனும் [illegible] விண்ணையும் தன்னுள்ளே நிறைந்த தாமரைமலர்களெல்லாம் [illegible] போன்றது — எ-று.

மானி [illegible] ... ... *
[illegible] நீர்விளையாடல் [illegible] ... ... *
[illegible] ... ... *
மீனம் [illegible] ... ... *

(இ-ள்.) சூரியன், மான்போலும் [illegible] யுடைய மாதர்கள் ஆடவர்களோடு [illegible] நீர்விளையாட்டை [illegible] விளையாட்டை விரும்பினான்போல மீன்களையுடைய [illegible] அடைந்தான் — எ-று.

ஆற்றலின்மையினால் [illegible] ... ... *
[illegible] மன்னர் [illegible] போல் ... *
[illegible] முகங்களோடு [illegible] ... ... *
தோற்றசந்திரன் [illegible] ... ... *

(இ-ள்.) வலிமையில்லாமையினாலே தோல்வியையே யடைந்தும் தம்மோடு பகைமையுடைய அரசர்களை [illegible] போல (மூன்) [illegible] இம்மாதர்களுடைய முகங்களோடு எதிர்நின்று எங்கும் தோற்ற சந்திரன் [illegible] — எ-று. (௬௬)

எங்கும் [illegible] நகரத்தை [illegible].

நீர்விளையாட்டுப்படலமுற்றிற்று.

[illegible]-படலம்.

[illegible]

[illegible] ... *
[illegible] ... *
[illegible] ... *
[illegible] ... *

(இ-ள்.) [illegible] யாகிய [illegible] போலவும் [illegible] எல்லாவுயிர்களினுள்ளத்தில் [illegible] போலவும் [illegible] நிறைந்த [illegible] எ-று. (க)

[illegible]

[illegible] ... *
[illegible] ... *
[illegible] ... *
[illegible] ... *

(இ-ள்.) [illegible] உண்மை [illegible] எ-று. (உ)

இருவிடத்து [illegible] மொழிந்தவர் [illegible] பல்பொருள்களைச் [illegible] மைநிற் பலபட [illegible].

ஆ[illegible] ... ... *
[illegible] ... *
[illegible] ... *
வேறுநாம்புகல்வ[illegible] ... ... *

(இ-ள்.) [illegible] வேயாகிய மற்றைச்சடங்கெல்லாம் [illegible] மற்றை [illegible] யே [illegible] எ-று. (ங)

[illegible] என்றது [illegible] உபசாரம்[illegible],

[illegible] ... *
[illegible] *

வள்ளுறைவயிரவான்மகரகேதனன் ... ... *
வெள்ளணியொத்ததுவேலைஞாலமே ... ... *

(இ-ள்.) கடல்சூழ்ந்த உலகமானது இகழ்தலில்லாத திக்குகளோடு அத்திக்கின்கணுள்ள எல்லாரும் எல்லாப்பொருள்களுமிருதியாகிய வெள்ளிய நிலாவாற் கோலங் கொள்ளுதலினால் வாரினாலாகிய உறையிலமைந்த வயிரம் போன்ற (தாழைமடலாகிய வாளையுடைய மீனக்கொடியையுடையமன்மதனது வெள்ளைக்கஞ்சுகமணிந்த படைவகுப்பையொத்தது-எ-று. (௪)

யாவருங் காமனாணைக் குள்ளடங்கியொழுகினரென்பதுகருத்து. ஞாலமென்பது-திசைகளோடென்றமையி னிடத்தையும் யாரும்யாவையு மென்றமையினிட வாகுபெயராயிடத்து நிகழ்பொருளையு முணர்த்திற்று. வெள்ளணியென்பதற்குப் பரத்தையிற்பிரிந்த தலைவன்பால் தலைவி நெய்யாடிய திருவைசாற்றற்குமுன் வெள்ளணியணிந்துவிடுத்தலைப்பொருளாகக்கூறுவாருமுளர். அங்ஙனங்கூறுதற்கு யாதோரியைபுமீண்டின்மையிற்பொருந்தாது.

தயங்குதாரகைபுரைதரளநீழலும் ... ... *
இயங்குகார்மிடைந்தகாவொழினிச்சூழலும் ... *
கயங்கள்போன்றொளிர்பளிங்கடுத்தகானமும் ... *
வயங்குபூம்பந்தருமகளிரெய்தினார் ... ... *

(இ-ள்.) பிரகாசிக்கின்ற விண்மீன்களையொத்த முத்துப்பந்தரின் நீழலிலும் (காற்றால்) அசைகின்ற மலர்மாலைகளடர்ந்த மேகத்தையொத்த (பசுந்தவடிவினவாகிய) திரைகளைக்கட்டிய இடங்களிலும் கயங்களையொத்து ஒளிர்கின்ற பளிங்குப்பாறைகளைப் பொருந்திய கானங்களிலும் விளங்குகின்ற பூம்பந்தர்களிலும் மகளிர்கள்சென்று சேர்ந்தார்கள்—எ-று. (௫)

பூக்கமழோதியர்போதுபோக்கிய ... ... *
சேக்கையின்பச்செருச்செருக்குஞ்சிந்தையார் ... *
ஆக்கியவமிழ்தெனவம்பொன்வள்ளத்து ... ... *
வாக்கியபசுநறாமாந்தன்மேயினார் ... ... *

(இ-ள்.) மலர்கள்கமழ்கின்றகூந்தலையுடையமாதர்கள் இராப்போதுபோக்குதற்காக அணையினிடத்துக்கலவிப்போரைக்களிக்குமெண்ணத்தையுடையராய் (பாற்கடலைக்) கடைந்தெடுத்த அமுதத்தைப்பருகுவதுபோல அழகியபொன்னாலியற்றிய வட்டிலில்வடித்த புதியமதுவைப்பருகுந் தொழிலில்பொருந்தினார்கள்—எ-று. (௬)

மீனுடைவானுடைவிஞ்சைநாட்டவர் ... ... *
ஊனுடையுடம்பினருருவமொப்பிலார் ... *
மானுடைநோக்கினார்வாயின்மாந்தினார் ... *
தேனுடைமலரிடைத்தேன்பெய்தென்னவே ... *

(இ-ள்.) தாரகைகளையுடைய விண்ணின்கணுள்ள வித்தியாதர நாட்டார் (சிறப்பாலுயர்ந்தவராயினும்) ஊனாலமைந்த உடம்பையுடைய இவ்வாடவர் மங்கையர்களதுவடிவை ஒத்திலார் (அச்சிறந்தஅழகையுடைய) மானி

லது நோக்கம்போலும் நோக்குடைய மங்கையர்கள் தேனையுடையமலரில் தேனைப்பெய்தாற்போல (மதுவை) வாயினால்பருகினார்கள்—எ-று. (௭)

இவர்களை ஊனுடையுடம்பினொன்றமையி னவர்பிறப்பினுயர்ந்தா ரொன்பது பெறப்பட்டது.

உக்கபால்புரைநிலாவுண்டவள்ளமுங் ... ... *
கைக்கொள்வாளொளிபடச்சிவந்துகாட்டத்தன் ... *
மைக்கணுஞ்சிவந்ததோர்மடந்தைவாய்வழி ... *
புக்கதேனமுதமாய்ப்பொலிந்தபோன்றவே ... *

(இ-ள்) ஒருமாது கையாலெடாநின்றாள் அக்கையினது செவ்வொளி பொருந்துவதினால் சிந்திப்பாந்தபாலை ஒத்த சந்திரகிரணம்பாய்ந்த வட்டிலும் சிவந்தும்தானன்றித் தனதுமைக் கண்களுஞ்சிவந்தன (ஆதலால்) வாயின்வழியாகப் புகுந்ததேன் அமுதமாய்ப்பொலிந்ததுபோலும்—எ-று. (அ)

தன்னையுண்டவருடைய வுருவை வேற்றுமைசெய்தலினமுதமுவமமாயிற்று.

தாமமுநானமுந்தகைத்ததண்ணகிற் ... ... *
றூமமுண்குழலியருண்டதூநறை ... ... *
ஓமவெங்குழியுகுநெய்யினுள்ளுறை... ... ... *
காமவெங்கனலினைக்கனற்றிக்காட்டிற்றே .. *

(இ-ள்.) மாலையும் கத்தூரியும் அடர்ந்த அகிற்புகையுண்ட தண்ணியகூந்தலையுடைய மடந்தையர்களுண்ட தூய்மையாகிய மதுவானது வெவ்விய குழியையுடைய ஓமகுண்டத்தில் சிந்தியநெய்யைப்போல உள்ளத்தில் தங்கிய காமமாகிய வெவ்வியதீயை எரித்துக்காட்டியது—எ-று. (௯)

விடநெடுக்குநெடியநோக்கினமுதொக்குமின்சொலார்த ... ... *
மடநெருக்குமடனுமுண்டோவாணுதலொருத்திகாணத் ... ... *
தடநெருக்குநிழலைப்பொன்செய்தண்ணறுந்தேறல்வள்ளத் ... ... *
துடனெருக்கவுவந்துநீயுமுண்ணுதிதோழியென்றாள் ... ... *

(இ-ள்.) ஒளிபமைந்த நெற்றியையுடைய ஒருத்தி (மதுவில் தன்முகம்) தோன்றுநிற்கப் பெருமையாகிய மாறுபடாதொத்த அந்நிழலை நோக்கித் தோழியே தண்ணியநல்லமதுவைப் பொன்னாற்செய்தவள்ளத்தில் விடாது (அகமும்புறமும்) ஒக்கமகிழ்ந்து நீயுமுண்ணென்றாள் (ஆதலால்) விடத்தையொக்கும் நெடியநோக்கையும் அமுதத்தையொக்கும் இனியசொல்லையுமுடையமாதர்களது அறியாமையையொக்கும் அறியாமையுமுண்டோ இல்லை—எ-று. ஓ-எதிர்மறை. (௰)

அச்சநுண்மருங்குலாளோராணைக்களகயந்தி... ... ... *
நச்சுவேற்கருங்கட்செவ்வாய்நளிர்முகமதுவுட்டோன்றப்... ... ... *
பிச்சிநீயென்செய்தாயிப்பெருநறவிருக்கவாளா... ... ... *
எச்சிலைநுகர்திபோவென்றெயிற்றரும்பிலங்கநக்காள் ... ... *

(இ-ள்.) மிகுதியும் நுண்ணிய இடையையுடையாளாகிய ஓர் தெய்வமன்

னவள் (தன்னுடைய) அளகபந்தியையும், விடத்தையும் வேலையுமொத்த கருமையாகிய கண்ணையும், சிவந்தவாயையுமுடைய குளிர்ந்தமுகம் கள்ளத்தின் மதுவிலே தோன்றநிற்க, அதை ஓர்பெண்ணின் முகமெனக்கருதி பேச்சியே (சாடியில்) மிகுந்த இம்மதுவிருக்க ஒருபயனுமின்றி எச்சிலாகிய மதுவை உண்ணுகின்றாயோ நீ யாதுகாரியத்தைச் செய்தாயென்றுகூறிப் பற்களாகிய முல்லையரும்புகள் விளங்கச் சிரித்தாள்—எ-று. (௰௧)

புறமெலாநகைசெய்தேசப்பொருவருமேனிவேறோர் ... ... *
மறமுலாங்கொலைவேற்கண்ணாண்மணியின்வள்ளத்துவெள்ளை ... ... *
நிறநிலாக்கற்றைபாயநிறைந்ததுபோன்றுதோன்ற ... ... *
நறவெனவதனைவாயின்வைத்தனணாணுட்கொண்டாள் ... ... *

(இ-ள்.) ஒப்பில்லாதமேனியையும் சினங்காரணமாக வருகின்ற கொலைத்தொழிலைச்செய்கின்ற வேல்போலுங்கண்ணையுமுடைய வேறொரு பெண்மணியாற்செய்தவள்ளத்தில் வெள்ளைநிறத்தையுடைய நிலாத்தொகுதி பாயாநிற்பதனால் மதுநிறைந்ததுபோன்று தோன்றுநிற்க அதைநறவென்றுதான்கருதி, புறத்திலுள்ளாரெல்லாம் நகைசெய்து ஏசும்படி உண்ணவாயில்வைத்தனள் சுவைக்கப்பெறாமையால் நாணமுள்ளேகொண்டாள்—எ-று. ()

யாழ்க்குமின்குழற்கும்பாலித்தனவிவையாமென்னக் ... ... *
கேட்குமென்மழலைச்சொல்லோரிருஞ்சுகங்கிடந்தவாயாள் ... ... *
தாட்கருங்குவளைதோய்ந்ததண்ணறைச்சாடியுட்டன் ... ... *
வாட்கணினிழலைக்கண்டாள்வண்டெனவோச்சுகின்றாள் ... ... *

(இ-ள்.) யாழுக்கும் இனிய குழலுக்கும் இன்பத்தை ஈந்தவை இவையாகுமென்றுகருதக் கேட்பதற்குரிய மிருதுவாகிய சொல்லையும் முருக்கமலரையொத்த இதழ்தங்கிய வாயையுமுடைய ஒருத்தி கருங்குவளையினது தாள்பொருந்திய தண்ணியமதுச்சாடியுள் தனது வாள்போலுங்கண்ணினது நிழலைக்கண்டாளாகி வண்டென்று ஓட்டாநின்றாள்—எ-று. (௰௩)

இதனை, தண்டியாசிரியர், கண்ணினதுவனப்பையுவந்துரைப்புழியுலகுவரம்பிறவாநிலைமைத்தாயான்றோர்வியப்ப வதனிழலை வண்டெனத் திரிபுறக்கூறினமையின் திரிபதிசயமென்பர். அணிவிளக்கநூலார், ஒப்புமையால் கண்ணை வண்டென வுணர்ந்ததாகவந்தமையின் மயக்கவணியென்பர்.

களித்தகண்மதர்ப்பவாங்கோர்கனக்குழைகள்ளினுள்ளால் ... ... *
வெளிப்படுகின்றகாட்சிவெண்மதிநிழலைநோக்கி ... ... *
அளித்தனெனபயம்வானத்தரவினையஞ்சிநீவந் ... ... *
தொளித்தனையஞ்சலென்றாங்கினியனவுணர்த்துகின்றாள் ... ... *

(இ-ள்.) அவ்விடத்துக் கனவியகுழையையுடைய ஓர்பெண், நறைச்சாடியினுள்ளிடத்தில் தோன்றுகின்ற தோற்றமாகிய வெள்ளியசந்திரனிழலை(இயல்பாகவே) களித்தகண்கள் களிக்காநிற்கநோக்கி நீ ஆகாயத்தில் இராகுக்கோளுக்குப்பயந்துவந்து ஒளித்தாய் யான் அபயமீந்தேன் அஞ்சாதேயென்று இனிய வுறுதிமொழிகளை யுணர்த்துகின்றாள்—எ-று. (௰௪)

உளையாநின்றாளென்றது உணர்த்துகின்றாளென்றமையி னினியவனென்றது உறுதிமொழிகளை ஆகவே நீ பிறர்க்கின்னாதவற்றை முற்பகலிற்செய்யிற்பிற்பகலிலவையின்று செய்தான்பாற்றாமேவருமெனவும். இன்றுசெய்யப்பட்டார் பாற்குறை யிரக்கவுமொருகாற் கூடினுங்கூடுமெனவுமுணராது, யான்கணவன்பாலூடியகாலத்தும்அவனைப்பிரிந்தகாலத்தும்வெறுநிலவெறித்து வருத்தினை யினி அது செய்யாது நலலொழுக்கி லொழுகுகவென இன்னோரன்னவற்றையுணர்த்தினு ளென்பதுகருத்து. கள்ளினுள்ளாளென்பது உருபுமயக்கம்.

அழிகின்றவறிவினாலோபேதைமையாலோவாற்றிற் ... ... *
சுழிபொன்றிநின்றதன்னவுந்தியாடுபசெந்தேன் ... ... *
பொழிகின்றபூவின்வேய்ந்தபந்தரைப்பொளைத்துக்கீழ்வந் ... ... *
திழிகின்றவொழுநிலாவைநறவெனவள்ளத்தேற்றாள் ... ... *

(இ-ள்.) ஆற்றில் பொருந்திநின்றதாகிய சுழியையொத்த உந்தியையுடையாளொருத்தி தூயசெந்தேனைப்பொழிகின்ற மலர்மாலையால் வேய்ந்த பந்தரைத்தொளைத்துக் கீழேவந்திழிகின்ற மிக்கநிலாவைத் தன்னறிவு அழியாநின்றமையாலும் (இயற்கையாகிய) பேதைமையாலும் நறவென்று வள்ளத்திலேற்றாள்—எ-று. (௬௫)

ஓவிரண்டும் எண்ணுப்பொருளை அன்றிஐயப்பொருளவாக்கிஅறிவு அழியாநின்றமையினாலோ பேதையினாலோ ஏற்றாளெனினு மமையும்.

மின்னெனநுடங்குகின்றமருங்குலாளொருத்திவெள்ளை ... ... *
இன்னமுதனையதீஞ்சொலிடைதடுமாறியென்ன ... ... *
வன்னமேகலையைநீக்கிமலர்த்தொடையல்குல்சூழ்ந்தாள் ... ... *
பொன்னரிமாலைகொண்டுபுரிகுழல்புனையலுற்றாள் ... ... *

(இ-ள்.) மின்போலத்துவளுகின்ற இடையையுடையாளாகிய ஒருத்தி (தான்பேசுகின்ற) வெண்மையாகிய இனிய அமுதத்தையொத்த மதுரச்சொற்கள் (களிமயக்கால்) இடையேதடுமாறினாற்போல நான்குதிறமமைந்த சித்திரத்தொழிலாடையைக்களைந்து மலர்மாலையை அல்குலில் சூழவிட்டாள் பொன்னரிமாலையைக் கையிற்கொண்டு புரிவாகிய குழலில் புனைந்தாள்—எ-று.

பின்னர் அல்குல் சூழ்ந்தாளென்பதனால் மேகலையென்னும் பலபொருளொருசொல்லீண்டு ஆடையென்னும் பொருளைத்தந்தது. அல்குல் சூழ்ந்தாளென்பது இடக்கரடக்கல்.

கண்மணிவள்ளத்துள்ளேகளிக்குந்தன்முகத்தைநோக்கி ... ... *
விண்மதிமதுவினாசைவீழ்ந்ததென்றொருத்தியுன்னி ... ... *
உண்மகிழ்துணைவனோடூடுநாள்வெம்மைநீக்கித் ... ... *
தண்மதியாயின்யானுந்தருவெனிந்நறவையென்றாள் ... ... *

(இ-ள்.) கள்நிறைந்தமணிவள்ளத்திலே களிக்கின்ற தன்முகத்தைநோக்கி விண்ணிலுள்ள மதியானது மதுவில்ஆசையால் வீழ்ந்ததென்றொருத்தி நினைத்து உள்ளமகிழ்கின்ற நாயகனோடு யான் ஊடுநாளில் வெப்பத்தைநீக்கித் தண்ணியமதியாவாயாயின் இந்நறவையானும்தருவேன்—எ-று. (௬௭)

எள்ளொத்தகோலமூக்கிலேந்திழையொருத்திமுன்கை ... ... *
தள்ளத்தன்னறவையல்லாற்றவிசிடையுகுத்துத்தேறாள் ... ... *

உள்ளத்தின்மயக்கந்தன்னாலுட்புறத்துண்டென்றெண்ணி ... ... *
வள்ளத்தலையறிந்துவாங்கிமணிநிறவிதழின்வைத்தாள் ... ...

(இ-ள்.) எள்மலரையொத்த அழகிய மூக்கையும் உயர்ந்த அணிகளையுமுடைய ஒருத்தி, முன்கையானது தண்ணிய நறவையெல்லாம் தள்ளாநிற்பதினால் தலைசில சிந்தியும் அறியாளாகி தன்னுள்ளத்தின் மயக்கத்தால் உட்புறத்திலுண்டென்றுகருதி கிண்ணத்தலைத்திருப்பியெடுத்து மணிநிறமமைந்த இதழில்வைத்தாள்—எ-று. (௰௮)

வான்றனைப்பிரிதலாற்றுவண்டினம்வச்சைமாக்கள் ... ... *
என்றவர்நிதியம்வேட்டவிரவலரொன்னவார்ப்ப ... ... *
மீதன்றருகமலச்செவ்வாய்திறந்தனளுகாநாணி ... ... *
ஊன்றியமூநீர்நாளத்தாளினளொருத்தியுண்டாள் ... ... *

(இ-ள்.) மதுவள்ளத்தின்மேல் ஆகாயத்தைப்பிரிதலையாற்றாதவண்டுக்கூட்டங்கள், உலோபர்களிடத்திலுள்ளவையேற்ற அவர்களுடைய நிதியத்தைவிரும்பியயாசகர்கள்போல ஆரவாரியாநிற்கத் தேன்றருகின்ற கமலம்போன்றசெவ்வாயைத்திறந்தவளாகி உண்ணக்கூசி வள்ளத்தில் ஊன்றிய செங்கழுநீரினது உட்டொளையையுடைய தண்டினால் ஒருத்தியுண்டாள்.—எ-று. ()

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது.

புள்ளுறைகமலவாவிப்பொருகயல்வெருவியோட ... ... *
வள்ளுறைகழித்தவாள்போல்வரியுறவயங்குகண்ணாள் ... ... *
கள்ளுறைமலர்மென்கூந்தற்களியிளமஞ்ஞையன்னாள் ... ... *
உள்ளுறையன்பனுண்ணென்னநறவுண்ணலென்னாள் ... ... *

(இ-ள்.) புட்கள்வசிக்கின்ற தாமரைமலர்களையுடைய வாவியின்கணுள்ள பொருதற்குரியகயல்மீன்கள் பயந்தோட வாரால்அமைத்த உறையினின்றும் உருவியெடுத்த வாளைப்போலச் செவ்வரிபொருந்தவிளங்குகின்றகண்ணாள் தேன்தங்கிய மலரையணிந்த மெல்லிய கூந்தலையுடைய களித்த இளமையாகிய மயிலையொத்தாளாகிய ஒருத்தி தனதுள்ளத்தி லுறைகின்ற தன்மாட்டன்புள்ளநாயகன் பருகாமென்று தான் நறவைப்பருகலை நினையாள்.எ-று.()

உண்ணென் உண்ணலென்பன பசிப்பிணிதீர நுகரப்படும்பொருளெல்லாமுண்ணெனட்டு மொழிதலிற் பொதுவினையாயின.

வேறு.

கூற்றுறழ்நயனங்கள்சிவப்பக்கூனுதல் ... ... *
ஏற்றிவாளெயிறுகளதுக்கியின்றளிர் ... ... *
மாற்றருங்கரதலமறிக்குமாதொரு ... ... *
சீற்றமாமபிநயந்தெரிக்கின்றாரினே ... ... *

(இ-ள்.) சினமாகிய ஓரபிநயத்தைத் தெரிவிக்கின்றாரைப்போல ஒருமாதானவள் (கள்மயக்கால்) கூற்றொடுமாறுபடுகின்ற கண்கள் சிவக்கவளைவாகிய புருவங்களை மீது செல்லநெரித்து ஒளியமைந்த பற்களால் இதழைக்க

நீத்து இனியமாந்தளிர்க்கு மயக்கைத்தருகின்ற கைத்தலங்களை (நீட்டி) மறியாநின்றாள்.—எ-று. (௨௧)

காரியத்தைக் காரணமாகவுபசரித்துச் சீற்றமாமபிநயமென்றார், சீற்றம் அபிநயத்தா லுணர்த்தப்படுவதாகலிற் காரியமாயிற்று.

துடித்தலான் றுவரிதழ்த்தொண்டைத் தூநிலாக் ... *
கடித்தவாலெயிறுகளாக்கிக்கண்களால் ... ... *
வடித்தவெங்குருதிவேல்விழிக்குமாதர்மெய் ... *
பொடித்தவேர்புறத்துநறவம்போன்றதே ... *

(இ-ள்.) துடித்தமிக்க சிவப்புடைய இதழாகியதொண்டைக்கனியை, தூயநிலாவைக்காயித்த வெள்ளியபற்களால் கடித்துக் கண்களால் கூர்மையுடைய வெவ்விய உதிரந்தோய்ந்த வேல்போலவிழிக்கின்ற மாதர்களது மெய்யிலரும்பிய வேர்வை(சுரந்து)புறத்தே சிந்துகின்ற மதுவையொத்தது.

கனித்திரளிதழ்பொழிசெம்மைகண்டுக ... ... *
நினைப்பதொன்றுரைப்பதொன்றாமோர்நேரிழை *
தனிச்சுடர்தாமரைமுகத்துச்சாபமும் ... ... *
குனித்ததுபனித்ததுநுதலித்திங்களே ... ... *

(இ-ள்.) திரண்ட இதழானது முதிர்ந்து பொழிகின்ற சிவப்பு கண்களித்து சோர நினைப்பதொன்றும் வாயாற் கூறுவதொன்றுமாகிய ஒருபெண்ணினது ஒப்பற்று ஒளிசெய்கின்ற தாமரையை யொத்த முகத்தில புருவமாகிய வில்லும் வளைந்தது நெற்றியாகியபிறைச்சந்திரனும்வியர்த்தது-எ-று.

இறந்தது தழீஇய வெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. குனிதலும் பனித்தலும் காரியத்தோடு காரணத்துக்கொற்றுமையுடைமையிற் றன்வினையேயாம் குனித்தது-வளைத்தது.

இலவிதழ்த்துவர்விடவெயிறுதேனுக ... ... *
முலையிசைக்கச்சொடுகலையுமூட்டற ... ... *
அலகுழல்சோர்தரவசதியாட்டலாற் ... ... *
கலவிசெய்கொழுநருங்கள்ளுமொத்தவே ... *

(இ-ள்.) இலவமலர்போலு மிதழானது செந்நிறத்தைவிடவும், பற்கள் (தம்மிலூறுகின்றநீராகிய) தேன்சிந்தவும், முலைமீதணிந்தகச்சுடனே இடையிலுடுத்த துகிலும் இசைத்தகட்டவிழவும் அலையையொத்தகூந்தல் சோர்ந்துவிழவும் அசதியென்னும்விளையாட்டைச்செய்வதினால் புணர்ச்சி செய்கின்ற கணவருங்கள்ளுந்தம்மிலொத்தன—எ-று. (௨௨)

கொழுநருங்கள்ளுமொத்த என்பது சிறப்பாற்றிணை விரவி யஃறிணை முடிபெற்றது. இப்படலத்தாற் கூறப்படுவன உண்டாட்டிற் கின்றியமையாத கள்ளுண்ணலும் அதனால் நிகழுங்காரிய விளையுமேயாகலாற் கள்சிறப்பாயிற்று. கொழுநருங்கள்ளு மிவ்விரண்டுமொவ்வொன்றும் ஒத்தகிழவனுங் கிழவியுங்காண்ப என்றாற்போல வொருகாற் செயப்படுவதுமொருகாற்செய்பொருளாயுநின்றது. இவ்வாறன்றிக் கொழுநரையுங் கள்ளுமொத்தனவென முன்னையதுயர்வுசிறப்பும்மையாகவும் பின்னையதிழிவு சிறப்பும்மையாகவுங்கொண்டு பொருளுரைக்கினவ்விரண்டனுளொன்றுகூற வேனையதன்பொருள் தானேவந்தியையுமாகலி னைந்தனொன்று வேண்டாகூறலாய் முடியுமாதலாற்பொருந்தாது. இது எதுவுவமையணி. த-ர்.

கனைகடற்கள்வனாற்கலக்கமுற்றதை ... ... *
அனகனுக்கறிவியென்றறியப்போக்குமோர் ...*
இனமணிக்கலையினாடோழிநீயுமென் ... ... *
மனமெனத்தாழ்தியோவருதியோவென்றாள் ... *

(இ-ள்.) ஒலிக்கின்றகடலாகியகள்வனால் யான் கலக்கமடைந்ததைக் குற்றமில்லானாகிய தலைவனுக்கு அறிய அறிவியென்று விடுக்கின்ற கூட்டமாகிய மணிவடத்தாலமைந்த கலையையுடையாளொருத்தி தோழியே நீயுமுன் விடுத்த என்மனத்தைப்போலத் தாமதஞ்செய்வாயோவிரைந்துவருவாயோ வென்றாள்—எ-று. (உரு)

கடல், தன்னோடுகேணவனுடனுறைகாலத்துச் செவிக்கினிமை பயக்குமொலியைத்தந்து அவனீங்கியவற்றமுணர்ந்து இன்னல்பயக்குமொலியைத்தந்துவருத்தும் வஞ்சம்புரிகின்றதென்பாள் கனைகடற்கள்வனென்றும் நல்லார்க்குமவரைச்சார்ந்தொழுகினார்க்குந்தீங்குதருவதும் நன்குதருவதாய் முடியுமென்பவாகலிற் பிரிந்தவழி அது என்னைவருத்துகின்றது அதனால் யான் தீயேனென்பாளெதிர்மறைமுகத்தாலவனை அனகனென்றுங்கூறினாள்.

மானமர்நோக்கியோர்மதுகைவேந்தன்பால் ...*
ஆனதன்பாங்கியராயினாரெலாம் ... ... *
போனவர்போனவர்தொடரப்போக்கினாள் ...*
தானுமங்கவர்பினேதமியளேகினாள் ... ... *

(இ-ள்.) மான்நோக்கத்தைப்போல அமர்ந்தநோக்கத்தையுடைய மாது திண்மையையுடைய ஓரரசனிடத்தில் தனக்கிணங்கிய பாங்கியராயினாரெல்லாரையும் முன்போயினாரும் பின்போயினாருந்தொடர்ந்துசெல்லப்போக்கினவளாகி(அதுமட்டிலமையாது) தானும் அவர்கள்பின்னே அந்நாயகன்பால் தனித்தவளாய்ச்சென்றாள்—எ-று. (உசு)

விரைசெய்பூஞ்சேக்கையினடுத்தபீடிசை ... *
கரைசெயாவாசையங்கடலுளாளொரு ... ... *
பிரசமென்குதலையாள்கொழுநன்பேரெலாம் ... *
உரைசெயுங்கிள்ளையையுவந்துபுல்லினாள். ... *

(இ-ள்.) மணக்கின்ற மலரணையின்கண் தானடைந்த மிகவுமேலேகரைசெய்யப்படாத ஆசையாகிய கடலில்மூழ்கினவளாகிய தேன்போன்ற மெல்லிய குதலைச்சொல்லையுடைய ஓர்மங்கையானவள் நாயகனுடையபேர்களையெல்லாம் பேசாநின்ற கிளியை மகிழ்ந்துதழுவினாள்—எ-று. (உஎ)

பேரெலாமென்றது இயற்பெயரேயன்றி எழில் குணம் ஆண்மை வெற்றிமுதலியனவற்றானாகிய காரணப்பெயர்களை.

மன்றலொன்றுசிறையிருந்தொர்வாணுத ... *
றன்றுணைக்கிள்ளையைத்தழீஇயென்னாவியை ... *
இன்றுபோய்க்கொணர்கிலையென்செய்வாயெனக். *
கன்றிலோடொத்தியென்றழுதுசீறினாள் ... ... *

(இ-ள்.) ஒளியமைந்த நெற்றியையுடைய ஓர்மாது மணம்வீசுகின்ற இடத்திலிருந்து தனக்குத் துணையாகிய கிளியைத்தழுவி என்னுயிரிற்சிறந்

தானே இத்தினம்போய் அழைத்துவந்திலை எனக்கு யாதுசெய்வாய் அன்றிற்பறவையோடு ஒத்திருக்கிறு யென்று அழுதுசீறினாள்—எ-று. (௨௮)

வளையயின்முன்கையோர்மயிலனுடனைக் ... ... *
கிளையவள்பெயரினைக்கொழுநனீதலு ... ... *
முளையெயிறிங்கிடமுறுவல்வந்தது ... ... *
களகளவுதிர்ந்ததுயற்கணுலியே ... ... *

(இ-ள்.) பொன்வளைகள் நெருங்கிய முன்கையையுடைய மயிலையொத்த ஒருத்தி இளையவளுடையபெயரை நாயகனானவன் தனக்கு இட்டழைத்தலும் அங்குரத்தையொத்த பற்கள் ஒளிசெய்யாநிற்க நகைவந்தது கயல்போலுங்கண்களில் நீர்த்துளி களகளவென வுதிர்ந்தது—எ-று. (௨௯)

சோர்வினுலிளையவள் பெயரிட்டுத்தன்னையழைத்தானுக, அவண்மாட்டுவைத்தமிக்ககாதலைக்கரந்தொழுகிய நின்கள்ளவொழுக்கம் புலப்பட்டதென நகைத்து என்பாற் காதலுடையாயல்லையென அழுதனளென்பதுகருத்து.

செற்றமுன்புரிந்ததோர்செம்மல்வெம்மையாற் ... *
பற்றலுமல்குலிற்பாந்தமேகலை ... ... *
அற்றுகுமுத்தின்முன்னவணிசேர்ந்தன ... *
பொற்றொடியொருத்திகண்பொருதமுத்தமே ... *

(இ-ள்.) குற்றத்தைமுன்செய்தானாகிய ஓரரசன் (ஊடல்நீக்கும்படி) விருப்பத்தால், அல்குலிற்பரந்துசூழ்ந்த மேகலையைப்பிடித்தலும் (தானுடனிலலாது நீங்கலினால் மணிகள்கோத்த எட்டுவடமாகிய மேகலையானது) அறுந்து சிந்தினமுத்தின்முன்னே, பொன்னாலாகிய தொடியணிந்தவொருத்தியினது பொறுக்காமையாலுண்டாகிய கண்ணீராகிய முத்தங்கள் தரையிற்சேர்ந்தன—எ-று. (௩௰)

செற்றம் எது காரியவாகுபெயர். செம்மல்-எ-து.சொல்லாணைஃறிணையாதலின தன்விசேடணமாகிய புரிந்ததென்னும் வினையாலணையும் பெயருமஃறிணையாய்நின்றது. இது,காரணமாகிய பற்றியூடறீர்ப்பதற்கு முன்னர்காரியமாகிய கண்பொருத முத்தமவணிசேர்ந்தனவாகக்கூறினமையின் மிகையதிசய நவிற்சி- அலங்.

தோடவிழ்கூந்தலாளொருத்திதோன்றலோ ... *
டூடெனுவுயிருருகுநோய்கெடக் ... ... *
கூடெனுவவன்குணங்கள்வீணையிற் ... ... *
பாடெனுவெனப்பலவும்பன்னினாள் ... ... *

(இ-ள்.) மலர்கள் மலர்ந்தகூந்தலையுடையளாகிய ஒருத்தி (வந்தால் பிரிந்தானென் னுயிர்க்குநோய்செய்ததைக்குறித்து) அவனோடு ஊடக்கடவேனோ அன்றி உயிர்வருந்துகின்ற நோய்கெடும்படி கூடக்கடவேனோ அன்றி அவனுடைய நற்குணங்களை வீணையிற்பாடக்கடவேனோ யாது செய்யக்கடவேனென்று இவைபோல்வன பலவற்றையும் ஆய்ந்துகூறினாள்-எ-று. (௩௧)

தோடு- சினையாகுபெயர்.

மாடகம்பற்றினன்மகரவீணைதன் ... ... *
றோடவிழ்மலர்க்கரஞ்சிவப்பத்தொட்டனள் ... *

பாடினளொருத்திதன்பாங்குளார்களோ ... *
டூடின துதாசெயானுள்ளத்துள்ளதே .... *

(இ-ள்) ஒருத்தி நாயகன்பால் தான் ஊடினது உள்ளத்திலுள்ளது அதைத் தன் பக்கலுள்ளவர்களோடு சொல்லாளாகி முறுக்காணியைப்பற்றிச் சுருதி கூட்டி மகரமீன்போன்ற வீணையை இதழ்கள் விரிந்த தாமரைமலர்போன்ற கைவிரலைக்கத்தொட்டுப்பாடினள்—எ-று. (௩௨)

நாயகன்புரிந்த குற்றத்தைத் தன் பாங்குளார்களோடுரைசெயினவர்கள் தன்பால்வைத்தஅன்பின்மிகுதியா லவனைக்குற்றங்கூறுவாரென அஞ்சி அதுபுறத்தோன்றுதவண்ணம்இன்வாஅயோதுபோக்கினளென்பது கருத்து.

குழைத்தபூங்கொம்பனாளொருத்திகூடலை... ...*
இழைத்தனளவ்வளிட்டபோதெலாம் ... *
பிழைத்தலுடனங்கவேள்பிழைப்பிலம்பொடும்...*
உழைத்தனளுயிர்த்தனளுயிருண்டெனவே ... *

(இ-ள்.) தளிர்த்த பூங்கொம்பையொத்தவளாகிய வொருத்தி கூடல்களைச்சுழித்தனள் அவை அவள் சுழித்தகாலமெல்லாம் தவறுதலும் அநங்கனாகிய மன்மதனது தப்புதலில்லாத அம்புடனே வருந்தினள் உயிருண்டென்னும்படி உயிர்த்தாள்—எ-று. (௩௩)

அம்புகருவியாய்நின்று, உழைத்தகாலையி லுடனிழந்தமையின் ஒடுவுருபு கருவிப்பொருண்மேல்வந்த வுடனிகழ்ச்சிப்பொருட்டு.

பந்தணிவிரலினளொருத்திவையுளாள்... ... *
சுந்தரனொருவன்பாற்றூதுபோக்கினள் .. ...*
வந்தனனெனக்கடையடைத்துமாற்றினள்... ...*
சிந்தனைதெரிந்திலஞ்சிவந்தநாட்டமே... ... *

(இ-ள்.) பந்தணிகின்ற விரலையுடையாளாகிய ஒருத்தி பிரிவினாலாகிய துன்பத்தையுடையாளாகி அழகனாகிய ஒப்பில்லாநாயகன்பால் (தோழியை) தூதுபோக்கினள் (அவள்) அவன்வந்தானென்றுகூற வாயிலையடைத்து மறுத்தனள் கண்கள்சிவந்தன அத்தலைவியினுடைய எண்ணத்தை யாம்தெளியோம்—எ-று. (௩௪)

தான்விரும்பித் தூதுபோக்கி அவன்வந்தபின் வெறுத்துக் கடையடைத்தமையிற்சிந்தனைதெரிந்திலமென்றாராயினுந் தூதானன்றி தன்விருப்பத்தால் வந்திலனெனக்கணவனோடு ஊடிக்கொண்டனளென்பதுகருத்து.

உய்த்தபூம்பள்ளியினூடனீங்குவான் ... ...*
சித்தமுண்டொருத்திக்கதன்பன்றேர்கிலான் ... *
பொய்த்ததோர்மூரியாணிமிர்ந்துபோக்குவாள் ...*
எத்தனையிறந்தனகடிகையென்றனள்... ...*

(இ-ள்.) ஒருத்திக்கு (சிலதியர்கள்) பூக்களாலமைத்த அணையினிடத்து ஊடலைநீக்கும்படி எண்ணமுண்டு அதை அவளிடத் தன்புள்ள நாயகன் தெரிந்திலன் (தெரியாதுசும்மாவிருக்கவே) பொய்மையுடையதாகய ஓர்மூரி

பால்உடல்நிமிர்ந்து காலத்தைப் போக்குவானாகி இப்போது நாழிகை எத்தனைகழிந்தனவென்று கூறினான்—எ-று. (௬௫)

இது, பூம்பள்ளியி னுடனீங்கல்வேண்டுமெனக் கருதியபொருளை அதற்குரியவகையாற் கூறாது மூரிவிட்டு எத்தனையிறந்தன கடிகையீண்டென வேறுவகையாற் கூறினமையிற் பிறிதினவிற்சியணி. அ◦ர் மூரியென்றது அனந்தலையும் எத்தனையிறந்தன கடிகையென்றது காலம்பார்த்தலையுமுணர்த்தினமையி னவ்வுடனீக்கமவிரைவினிகழவேண்டுமென்பது கருத்து.

விளைத்தமென்காதலின்வித்துமெட்டிநிறை... ...*
இதைப்புனலணைத்திட முளைத்தவேயெனப்... *
பதைத்தனனொருத்தன்மேலொருத்திபஞ்சடி... *
உதைத்தலும்பொடித்தனவுரோமராசியே... ...*

(இ-ள்.) ஒருதலைவியானவள் (ஊடலால்) பதைத்தவளாகித் தன்னாயகன்மேல் செம்பஞ்சூட்டிய பாதத்தால் உதைத்தலும், விளைத்தமெல்லிய காதலாகிய வித்துகள் அவன் உடலாகிய குறைவில்லாத புதுக்கொல்லையை (அவ்வுதையாற்கிடைத்த களிப்பாகிய) நீர்நனைக்கலால் முளைத்தனபோல மயிர்த்தொகுதிகள் சிலிர்த்தன—எ-று. (௬௬)

இவண்மாட்டுக்கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம்புலன்களுமுளவாகலி னவற்றின் கட்செல்லுங்காதல்களும் புணர்ச்சித்தொழிற்காதல்களுமடக்கிக் காதலின்வித்தென்றா ராகலின் முளைத்தவெனப் பன்மையால் உரோமராசிக்குவமையாகக்கூறினார்.

பொலிந்தவாண்முகத்தினன்பொங்கித்தன்னையே...*
மலிந்தபேருவகையான்மாற்றுவேந்தரை ... ...*
நலிந்தவாளுழவனோர்நங்கைகொங்கைபோய் ... *
மெலிந்தவா நோக்கித்தன்புயங்கள்வீங்கினான் ...*

(இ-ள்.) பகையரசர்களைப் போரில்வருத்திய வாள்வீரனானவன் (தான்தழுவியதனால்) பெண்ணிற்சிறந்த ஓர் மங்கையினது கொங்கைகள் தம்மியற்கைநீங்கி மெலிந்த விதத்தைநோக்கித் தன்னையுட்கொண்டு வியக்க களிப்பினாற் பொலிவுபெற்ற ஒளியையுடைய முகத்தையுடையானாகித் தன்புயங்கள் பூரித்தான்—எ-று. (௬௭)

எய்ர்த்தபெருழிலினொருவனெய்தினான். ...*
மொய்த்தபோலெங்கணுமனங்கன்வெங்கணை .. ...*
பாய்த்தபூம்பள்ளியிற்படுத்தபல்லவந் ... ... *
தீய்ந்தனநோக்கினன்றிகைக்குஞ்சிந்தையான் ... *

(இ-ள்.) மிக்க அழகமைந்தவனாகிய ஒருவன் (தன்னாயகியினுடைய இருப்பிடத்தைச் சேர்ந்து எங்கும் அலங்கரித்ததுபோல அனங்கனது வெங்கணைகள் பாயிற் [illegible] விரவமைந்த அணையிற்சேர்த்த, பிரிவெனும் அழலால்) கரிந்த [illegible] ங்களை நோக்கினவனாகி மயங்குகின்ற சிந்தையனாயினான்.

[illegible]டிபசாந்துவெந்துல்நம்வெம்மையா ... ...*
[illegible]டிலையளித்திநீயென்றுநல்லவர் ... ... *

ஆட்டுநீர்க்கலசமேயென்னலானவோர்... ... *
வாட்டொழின்மைந்தற்கோர்மங்கைகொங்கையே *

(இ-ள்.) (புயங்களினுமார்பினும்) அப்பியசந்தனம் வெந்து உலருகின்ற காமவெப்பத்தை யுடையாளாகிய வாளினது போர்த்தொழில்வல்ல ஓராடவனுக்கு ஓர்மங்கையினுடைய கொங்கைகள், நீ மேதைபதலைத அரசுசெய்து காவாயென்று நல்லொழுக்கமுடைய அந்தணர்கள் பட்டாபிடேகஞ்செய்கின்ற புண்ணியதீர்த்தம் நிறைந்த கலசங்களே என்னலாயின—எ-று. (௫௯)

உலருமென்னும்பெய ரெஞ்சுகிளவி காரியப்பொருட்டு,

பயிருறுகிண்கிணிபரந்தமேகலை ... ... *
வயிரவான்பூணணிவாங்கிநீக்கினாள்... ... ... *
உயிருறுதலைவன்பாற்போகவுன்னினாள் ... ... *
செயிருறுதிங்களைத்தீயநோக்கினாள் ... ... *

(இ-ள்) ஒருத்தி ஒலிசெய்தலால்)தான்பயிர்ப்பை அடைகின்ற கிண்கிணியையும் பரந்தமேகலையையும் வயிரமணியாலமைத்த உயர்ந்தபூண்களையும் மற்றைபணிகளையும் (அவ்வவ்வுறுப்புகளினின்றும்) வாங்கிநீக்கினளாகிஉயிரினுமினிக்கதலைவன்பாற்போகநினைத்து (தன்போக்குக்குத்தடைசெய்கின்ற) குற்றமமைந்தசந்திரனைத்தீயும்படிச்சினந்துநோக்கினாள்-எ-று. (௬௰)

தீயநோக்கினாளெனவே திங்களேநீயுதித்துக் காமவேட்கையைத் தூண்டித் தலைவன்பாற்சேறல் நயக்கச்செய்து பிறர்க்குப் புலப்படாவண்ணஞ் சேறலுற்றேனை நிலாவெறித்துத் தடுத்தி இஃது நிற்குத்தகுவ தன்றென்றுளென்பது குறிப்பெச்சம்.

ஏனுமிவ்வன்மையையென்னென்றுன்னுதும் ... *
ஆலைமென்கரும்பனையொருவற்காங்கொரு... ... *
சோலைமென்குயிலனாள்சுற்றிவீக்கிய ... ... *
மாலையைநிமிர்ந்திலவயிரத்தோள்களே ... ... *

(இ-ள்.) அங்கு ஆலையினுட்பட்ட மெல்லிய கரும்பையொத்தவனாகிய ஒருவனுக்குச் சோலையில்வசிக்கின்ற மெல்லிய குயிலையொத்த ஒருத்தி சுற்றிக்கட்டிய மலர்மாலையை, அவனுடைய பூணணிந்ததோள்கள் (அடங்கியிருந்தனவேயன்றி) நிமிர்ந்தில (ஆதலால்)அவனேற்றுக்கொண்ட(மாலையினது) இந்தவன்மையை யாதென்றுயாம் நினைக்கக்கடவோம்—எ-று. (௬௧)

பிரிந்து காமவெம்மையால் நொந்தானென்பார் ஆலைமென் கரும்பனானென்று மவன் பட்டகாமவிடாயை ஒருவாறுதணிக்காநின்றது இவள்சொல்லென்பார் ஒருவற்குச் சோலைமென் குயிலன்னாளென்றுங் கூறினார். ஊடனீக்கஞ்செய்யு முபகாரமுடைத்தாகலி னம்மாலையை வயிரத்தோள்கள் நிமிர்ந்திலவாயின. தன்கொங்கைகளைத் தழுவுதற்குரியன தோள்களாதலிற்பிரிவின்குற்றமவற்றின்மேற்சார்த்தியவற்றை வீக்கினாள்போலும்.

சோர்குழலொருத்திதன்வருத்தஞ்சொல்லுவான் . . *
மாரனைநோக்கியோர்மாதைநேர்கினாள்... ... *
காரிகையிவளவள்கருத்தைநோக்கியோர் ... ... *
வேரியந்தெரியலான்வீடுநோக்கினாள் ... ... *

(இ-ள்.) சோர்ந்த கூந்தலையுடைய ஒருத்தி தன்வருத்தத்தைத் தெரிவிக்கும்படி (தன்னையெய்யாநின்ற) மன்மதனைநோக்கி ஓர் மாலைதொடுக்குமவள் காரிகையாகிய இம்மாது அத்தலைவியினுடைய காதலையறிந்து பணையமைந்த அழகிய மாலையையணிந்த ஓர் மன்னனது வீட்டைநோக்கினள்-எ-று.

சோர்குழலொருத்தி ஓர்மாதின் முகத்தைநோக்கவு மவள்கருத்தை இவள் தெரிந்துகொண்டு கணவன்பாற்சென்று அவனைக்கொணர்ந்து வருவேனென்னுங் கருத்தோடுகூடியசெயலாகிய வேரியந்தெரியலான் வீடுநோக்குதல்புரிந்து விடைகொடுத்தவ்ன நுட்பவணி (தா.) (அ-ர்.)

சினங்கெழுவாட்கையோர்செம்மல்பாலொரு ... ... *
கனங்குழைமயிலனாள்கடிதுபோயினாள் ... ... *
மனங்குழைநறவமோமாலைதான்கொலோ ... ... *
அனங்கனோபார்கொலோவழைத்ததூதரே ... ... *

(இ-ள்.) சினங்கெழுமிய வாளைத்தாங்கிய கையையுடைய ஓரரசன்பால் கனவியகுழையையுடைய மயிலையொத்தவளொருத்தி தூதுபோகாமல் தானேவிரைந்துபோயினாள் கணவனிடத்தில் அழைத்த தூதர் யார் மனத்தைக் குழையச்செய்கின்ற நறவமோ மாலைப்போதோ மன்மதனோ அறியோம்.

அழைத்ததூதர் நறவமோ மாலைதான்கொலோ அனங்கனோவென்பது உயர்வினால்வந்ததிணைவழுவமைதி.

தொருதருகாதற்றுத்தோற்றசீற்றத்தோர் ... ... *
வகிர்மதிநெற்றியாண்மழைக்கணுலிவந் ... ... *
தகுதனுமூற்றதென்னென்றுகொற்றவ ... ... *
னகுதலுநக்கனளுணுநீங்கினாள் ... ... *

(இ-ள்.) பகுத்தமதியைபொத்த நெற்றியையுடைய ஒருமங்கை, நிறைந்த காதலின்பொருட்டுத் தோன்றியகோபத்தினால் குளிர்ச்சியாகிய கண்ணினின்றும் நீர்த்துளி துளித்தலும் நாயகனாகிய அரசன் அதைநோக்கி யாது நேரிட்டதென்றுகூறி நகைத்தலும்நகைசெய்தாளாகிநாணமும் நீங்கினாள்.()

ஆற்றருப்பைகள் என்றுந்போலத் தோற்ற சீற்றமென இறந்தகாலந்தாட்டு மின்னென்பது தொகுத்தது.

பொய்த்தலைமருங்குலாளொருத்திபுல்லிய ... ... *
கைத்தலநீக்கினள்கருத்தினீக்கலள் ... ... *
சித்திரம்போன்றவச்செயலோர்தோன்றற்குச் ... ... *
சித்திரமார்பிடைத்தைத்ததொத்ததே ... ... *

(இ-ள்.) பொய்யினிடத்ததாகிய மருங்குலையுடையாளொருத்தி தன்கருத்தினின்று நீக்கிலள் (புறத்தே) தழுவிய கைகளை நீக்கினள் சித்திரப்போன்ற அசைதலில்லாத அவள்செய்கையானது ஓரரசனுக்குச்சுத்திரமென்னுப்புடையானது தன்மார்பிலே தைத்ததை ஒத்தது-எ-று. (௬௫)

கணவன்கருத்தை யறியுமாறு கைத்தல நீக்கலும் இதுபோது நன்பாலுளதாகிய குற்றம் யாதெனவருந்தினனென்பதுகருத்து. சத்திரம்-எ-அ-ஆவிடாய்படை,

மெல்லியளொருத்திதான்விரும்புஞ்சேடியைப் ... *
புல்லியகையினள்போதிதூதெனச் ... ... *
சொல்லுவானுறுமுறநாணுஞ்சொல்லலள் ... ... *
எல்லையில்பொழுதெலாமிருந்துவிம்மினாள் ... ... *

(இ-ள்.) மெல்லிய தன்மையுடையாளாகிய ஒருத்தி தான்விரும்புகின்ற தோழியைத் தழுவிய கைகளையுடையாளாகித் தூதுபோவாயென்றுசொல்ல இசைவாள் (உடனே) சொல்லமிகுதியும் நாணுவாள் அதனால் சொல்லாள் அளவில்லாத காலமெல்லாம் (இவ்வாறு) செய்யாநின்று விம்மினாள்-எ-று.

ஈண்டுப்பொழுதென்றது அவள்சொல்லலுற்ற சமயங்களை. பலமுறைசெய்தசெயலின தெல்லையில்லாமையை அச்செயல்நிகழ்ந்தபொழுதின்மேலேற்றி எல்லையில்பொழுதென்றார்.

ஊறுபேரன்பினளொருத்திதன்னுயிர் ... ... *
மாறிலாக்காதலன்செலவையற்றொரு ... ... *
நாறுபூங்கோதைபாலவிலநாணுவாள் ... ... *
வேறுவேறுறச்சிலமொழிவிளம்பினாள் ... ... *

(இ-ள்.) பெருகுகின்ற மிக்க அன்பினளாகிய ஒருத்தி, தனக்கு உயிர்வேறில்லாத அன்புடையானாகிய நாயகன் பிரிந்துசென்றதை மற்றொருமணக்கின்ற மலரையணிந்த கூந்தலையுடையாளிடத்து (சொல்லவந்து) சொல்லநாணுவாளாகி வேறுவேறாகிய சிலமொழிகளை மிகுதியுஞ்சொல்லினாள்-எ-று.

உருத்தெரிதன்மையவுயிருமொன்றுதாம் ... ... *
அருத்தியுமத்துணையாயநீரினார் ... ... *
ஒருத்தியுமொருத்தனுமுடம்புமொன்றெனப் ... *
பொருத்துவாரெனப்புல்லினாரரோ ... ... *

(இ-ள்.) உருவந்தோன்றாத் தன்மையையுடைய உயிரும் ஒன்றேயாய் (ஒருவர்பாலொருவர்வைத்த) விருப்பமும் அவ்வளவென்னுந்தன்மையராகிய ஒருத்தியுமொருத்தனும் உடம்பும் ஒன்றென்னும்படி பொருந்தச்செய்வார்போல (ஒருவரை ஒருவர்) தழுவினார்கள்—எ-று. (௫௮)

வெதிர்பொருதோளினளொருத்திவேந்தன்வந் ... *
தெதிர்தலுந்தன்மனமெழுந்துமுன்செல ... ... *
மதிமுகங்கதுமெனவணங்கினாளது ... ... *
புதுமையாகலினவற்கச்சம்பூத்ததே ... ... *

(இ-ள்.) மூங்கிலையொத்த தோளினளாகிய ஒருத்தி நாயகனாகிய அரசன் தன்னிடத்தேவந்து சந்தித்தலும் (விருப்பத்தால்) தன்மனமெழுந்து முன்னே செல்லாநிற்கத் தானெழுந்துசெல்லாது [illegible] விரைவாக வளைத்தனள் அது நூதனமாதலால் அவனுக்கு அச்சமுண்[illegible]ற்று—எ-று. (௫௯)

எம்மைப்புறத்தேபிரிந்தனையாயினும் அகத்தேசிறிதும்பிரிந்தாயில்லையாகலா[illegible] றவறின்று அவ்வாறு நின்னைப்புறத்தேபிரிந்தேனாயினும் அகத்தேபிரியாதிருந்தே [illegible]

த்தவறென்பாலுண்மையினின்னைநோக்குதற்குநெஞ்சுநாணுநின்ற தெனக்கொண்டுமதிமுக ங்கதுமென வணங்கினளாயினள் இதுபுகழ்வதுபோலப் பழித்தலாக வந்தமையின் இலேச வணி. த-ர். முன்னர்த்தான் குறித்த காலவரையறைகடந்துவந்த குற்றம் தன்பாலதாக வி னவ்வணக்கத்தைக்கொண்டா னவனுக்கச்சம்பூத்தது.

துனிவருநலத்தொடுஞ்சார்கின்றாளொரு ... ... *
முனிவருநுதலிக்குக்கொழுநனின்றியே ... ... *
தனிவருதோழியுந்தாயையொத்தனள் ... ... *
இனிவருதென்றலுமிரவுமன்னவே ... ... *

(இ-ள்.) தன்னை நீங்காதுடன் வருகின்ற அழகோடு வருகின்றாளாகிய வ ளொத்தவில்லையொத்த நெற்றியையுடையா ளொருத்திக்கு, நாயகனை யுடன் கொண்டுவாராது தனித்து வந்ததோழியும், இனிவருகின்ற தென்றலும் இ ராவையும்போல(வருத்தாநின்றமையினாலே,)தாயையொத்தாள்-எ-று. (௫௰)

தன்னிறைவிவிரும்பியவற்றை அவள்விரும்பியவாறுபுரிபவளாதலிற் றோழியுமென்றதுசிற ப்பும்மை. தாயையொத்தலாவது இவ்வாறுசோர்தல் நிற்றற்குரைத்தென்றேனை அறிவுகொளு த்தி யிடித்துக்கூறல். நின்னிலைகூறித்தலைவனைக்கொணர்வலெனச்சென்றதோழியலது நேற் றமொழியா லுவகைகொண்டிருக்கையி லினியவாய் நின்றனவன்றி வருத்திலவாதலின் அது போழ்து இல்லனவாகவேயிருந்து தோழி தனித்துவந்தபின்னர்வருத்துதலுற்றமையி னினிவரு தென்றலுமிரவுமென்றார்.

ஆக்கியகாதலொருத்தியந்தியிற் ... ... *
றாக்கியதெய்வமுண்டென்றுந்தன்மைய ... ... *
னோக்கினணின்றன ளுவன்றதோரிலள் ... ... *
போக்கினதூதொடுணர்வும்போக்கினள் ... ... *

(இ-ள்.) (நாயகனுடைய குணஞ்செயல்முதலியவற்றால்) ஆக்கப்பட்ட காத லையுடையாளொருத்தி அந்திப்போதில் தன்மேலேபாய்ந்த தெய்வமுள தென்னுந் தன்மையளாய்நோக்கிநின்று தான்சொல்ல செய்தியை அறியா து தான்போகவிட்ட தூதோடு அறிவையும்போக்கினாள்—எ-று. (௫௧)

மறப்பிலன்கொழுநனைவரவுநோக்குவாள் ... ... *
பிறப்பினொடிறப்பெனப்பெயருஞ்சிந்தையாற் ... *
றுறப்பருமனையிடைத்தோன்றுமின்னெனப் ... ... *
புறப்படும்புகுமொருபூத்தகொம்பனாள் ... ... *

(இ-ள்.) பூத்த கொம்பையொத்த ஒருத்தி பிறப்போடு இறப்பென்னு ம்படி நிலைமாறுகின்றசிந்தையால் தன் நாயகனைமறவாது (காத்திருந்து) ஒட்டி தலரிய மேகத்தினிடத்தில் தோன்றுகின்ற மின்னைப்போல (படமாடத்தி னின்று) அவனதுவருகையைநோக்கிவாயிற்புறப்படுவாள் (மீண்டு) உள் ளேநுழைவாள்—எ-று. (௫௨)

வாராதொழியானெனத்துணிந்து காத்திருக்கையிற் [illegible] பிறப்பிறப்பெனவு ம் [illegible] கருமவயத்தாலே வருதலெவ்வா [illegible] வந்தணிவுற்றுக்கா ம்பலிலிறப்பெனவு மிவற்றுளொன்றல்வழிப்பட்டது [illegible] நிலைமாறுதலி [illegible] காலத்தாற்பெயருஞ்சிந்தையெனவும் [illegible] யாகலி னதனைக்கரு வியாக்கிச்சிந்தையாற்புறப்படும் புகுமெனக்கூறினார்.

எழுதருங்கொங்கைமேலனங்கனெய்தவம் ... ... *
பழுசெவ்வம்புண்களில்வளைக்கையொற்றினாள் .. ...*
அழுதனள்சிரித்தனளற்றஞ்சொல்லினள்... ... ... *
தொழுதனளொருத்தியைத்தூதுவேண்டுவாள்... ... *

(இ-ள் எழுதுதலரிய அழகமைந்த கொங்கைகள்மேல் காமனால் எய்யப்பட்ட அம்புகள்தைத்த செவ்வி புண்களில் வளையணிந்த கைகளை ஒற்றி அழுது சிரித்து ஒழிவாகிய சமயத்தைச்சொல்லி ஒருத்தியைத் தூதுவேண் டாற்றுத்து தொழுதனள்—எ-று. (௫௧)

எழுதரியகொங்கைகளினருமையையுங் கணவனதுதோள்களைத் தழுவப் பெறுமையால் எழில்மாமைமுதலியவழிவுற்றுப்படும்வருத்தப்பாட்டையுங்குறித்துவளைக்கையையொற்றியழுதுவாய்த்த அற்றத்தைக்குறித்துக் களித்துச்சிரித்தனளென்பது கருத்து.

ஆர்த்தியுமுற்றதுமறிஞர்க்கற்றந்தான்... ... ... *
வார்த்தையினுணர்த்துதலரிதன்றேமனம் ... ... *
வேர்த்தனள்வெதும்பினள்மெலிந்துசாய்ந்தனள்... ..*
பார்த்தனளொருத்திதன்பாங்கியையே... ... ...*

(இ-ள்.) அயர்வையும் அதனாலடைந்த வருத்தப்பாட்டையும் அறிந்தவர்களுக்கு ஒழிவாகிய சமயத்தை வார்த்தையால் தெரிவித்தல் அரிதன்றே அறிவாம் (ஆதலால்) ஒருத்தி உள்ளம்வேர்த்து வெதும்பி மெலிந்து (அணையில்) சாய்ந்து (தன்வருத்தத்தை வாயாற்கூறாது) தன்தோழியைப்பார்த்தாள்

தனங்களினிளையவர்தம்மின்மும்மடி... ... ... *
கனங்கனயிடையிடைகளிக்குங்கள்வராய் ... ... *
மனங்களினுழைந்தவர்மாற்றுந்தேறலை... ... . *
அனங்கனுமருந்தினனாகல்வேண்டுமால் ... ...*

(இ-ள்.) தனங்களையுடைய பருவமங்கையர்களினும் மூன்றுபங்குமிகவுமதிகமாக எல்லாவிடங்களிலும் களியாநிற்கின்றன (ஆதலால்) கள்வராகி அவர்களுடைய மனங்களி னுழைந்து அவர்கள் பருகுகின்ற மதுவை அநங்கனும் பருகினவனாகல்வேண்டும்—எ-று. (௫௨)

இடையிடையென்றது ஐந்தாவது செய்யுளிற்கூறிய தரளநீழன் முதலிய இடங்களை நீப்போர்த்தவடகமும் சரிந்துவீழ்ந்ததைக் களிமயக்காலுணர்ந்திலரென்பார் தனங்களினிளையவென்றார்.

வேறு.

நறைசெழுமலர்க்கண்மாலைநளிர்நறுங்குஞ்சிமைந்தர் ... ... *
துறையறிகலவிச்செவ்வித்தோகையர்துகில்வீசி ... ... *
நிறையகல்குல்புல்குங்கலைகழித்தலநீத்தார் .. ..*
அறைபறையனையநீராருமறைபக்கரவரேசதான்... ... ...*

(இ-ள்.) (அணிந்த) தேன்மணக்கின்ற மாலையினால் குளிர்ந்தநறிய சிகையையுடைய ஆடவர்கள் கரணவகைகளையறிந்து புணர்ச்சிக்குப் பக்குவத்தையுடைய தோகையர்களது உத்தராசங்கத்தைவாங்கியெறிந்து நிலைறந்த

அகன்ற அல்குலைச் சூழ்ந்த மேகலையாகிய அணிகலனை வாங்கி அதனுடம்படி நீக்கின்றார்கள் (ஏனெனின்) கொட்டிய பறையையொத்த வுண்மையுடையரா அருமையாகிய இரகசியத்துக்கு ஆகுலமிலா ஆகுவர்கள் ஆதலால்-எ-று. ( )

இது, அறைபறையனையநீரா ரருமறைக்காகார்க ளென்னும்பொருளைத் தலைவிச்செவ்வித் தோகையர்தாகுவிசி அல்குல்புல்குங் கலன்கழிந்தகலநீத்தாரென்னும் பனைவுளியாகிய சிறப்புப்பொருள் நிலையுறுத்தப்பட்டமையின் வேற்றுப்பொருள்வைப்பணி கூ-பொதுவினுஞ் சிறப்பினு மவைநிலையுறுத்தல் வேற்றுப்பொருள்வைப்பென வேண்டினர்புலவர். அ-ர்.

பொன்னருங்கலனுந் துகிலும் புறத்துள துறத்தல்வம்பே... ...*
நன்னுதலொருத்தி தம்பாலகத்துள ஞானநீத்தாள்... ... ... *
உன்னருந்துறவுபூண்டவுணர்வுடையொருவனேபோற் ... *
றன்னையுந்துறந்துதன்மைகாமத்தேதங்கிற்றன்றே... ... *

(இ-ள்.) புறத்திலுள்ளனவாகிய பொன்னாற்செய்த அருமையாகிய அணிகலனையும் ஆடையையும் நீக்கல் அறிவினது நிலையில்லாமையேயாம் (ஆதலால் அவற்றைநீக்காது) நல்லநெற்றியையுடையாளாகிய ஒருத்தி, நினைத்தலரிய துறவைப்பூண்ட ஞானத்தையுடைய ஒருவனைப்போலத் தன்னிடத்தே அகத்துளதாகிய ஞானத்தைநீக்கினாள். (ஆதலால்) தன்னையுந் துறக்கின்ற தன்மை காமத்தில் தங்கிற்று—எ-று. அன்று-ஓ-அசை. (ருஎ)

ஏகாரம் நான்கனுள் முன்னையது தேற்றம் பின்னையது பிரிநிலை எனையிரண்டும் அன்றும் அசை. துறத்தலாகிய காரியப்பெயரீண்டுக் காரணத்தின் மேனின்றது.

பொருவருமதனன்போல்வா னொருவனும்பூவின்மேலத் ...*
திருவினுக்குவமைசால்வா ளொருத்தியுஞ்சேக்கைப்போரில் .*
ஒருவருக்கொருவர்தோலா ரொத்தனருயிருமொன்றே... .. *
இருவரதுணர்வுமொன்றேயென்றபோதியாவர்வெல்வார் ...*

(இ-ள்.) ஒப்பில்லாதமதனனை யொத்தவனாகிய ஒருவனும் தாமரைமலரில் வீற்றிருந்தருளிய அத்திருமகளுக்கு ஒப்பனையவளாகிய ஒருத்தியும் அணையிடத்துண்டாகியபோரில் ஒருவருக்கொருவர் தோல்வியடையாராகி ஒத்தனர் அவ்விருவரது உயிரு மொன்றே உணர்வு மொருவழிப் பட்டதே என்றபோது யார் வெல்வார்கள்—எ-று. (ருஅ)

கொன்னைப்போர்வாட்கணாளங் கொருத்தியோர்குமரன்றன் *
வன்னத்தாரகலந்தன்னை மலர்க்கைகளாற்புடைத்துத் தாக்கி... .*
உன்னத்தாருயிரன்னான்மேலுதைப்பமென்றுநீநின் ...*
கன்னத்தாற்புதைத்தியென்றுமுன்னையிற்கனன்றடிக்காள்... *

(இ-ள்.) அவ்விடத்தே மிக்கபோரையுடைய வாள்போலுங் கண்களை யுடையாளாகிய ஒருத்தி, (ஊடற்சினத்தாலுதைக்க முயல்வதையறிந்து அம்மெல்லியபாதங்களில் தன்மார்புரோமங்கள் தைக்குமென்றஞ்சி முருகனை யொத்தானாகிய ஒருவன் வனமாகிய மலர்மாலையணிந்த மார்பை மலர்போலுங்கைகளால் மூடிநிற்கப்பார்த்து நின்னுள்ளத்தில் (வேற்றுப்பொருளு

க்கிடமின்றி) தங்கிய உயிரையொத்தாள்மேல் என்னுடைபடுமென்று நீ உன்னுள்ளத்தால் ஊடாநின்றாயென்றுகூறிமுன்னையினுஞ் சீறிச்சினமிகுந்தாள்

வள்ளத்தாரென்பது வளமென்னுமகரவீற்று பண்புப்பெயர்தாரென்னுங்குறித்துவருகினவிநோக்கி அவ்வழிமெல்லா மெல்லெழுத்தாகுமென்னுஞ் சூத்திரத்தில் எல்லாமென்றதனாலவழிக்கண் மகரவீறுகெட்டு வல்லெழுத்துமிக்கு வளத்தாரெனமுடிந்து ளகரம்விரித்தது இது, இவளது மெல்லிய அடிக்கு அனிச்சமுமன்னத்தின் றூவியும் நெருஞ்சிப்பழம்போலுமாகலி னமாமார்புரோமங்கள் கண்டத்தினுறுந்துமென் றிரக்கத்தாலஞ்சித் தன்மலர்க்கையாற் புதைத்தலாகிய காரியஞ் செய்யப்புக்குந் தன்விருப்பத்தையடையாது உள்ளத்தாருயிரன்னுணமே [illegible]தைபடுமென்று நின் னுள்ளத்தாற்புதைத்தியென்றுக் கனலலாகிய விருப்பமில்லா வேற்றுப்பொருளெய்தலின் வேற்றுப்பொருள்வைப்பணி. ஒருபொருள் செய்தலும் பொருந்தாப் பொருளின்புணர்ச்சியும் புக்கதில்வேற்றுப் பொருளெய்தலுமாம் பொருத்துமிலதென்ப. அ-ர்.

பாலுமானச் [illegible] யினையுமொழிநீகர்த்தமென்றோள் ... *
வேலுளநோக்கிறைவனர் [illegible] லியபல்வேலையன்ன ... ... *
மாலுளசிந்தையாக்கொர்பசைமுடிபுளவுடக்கையாரு ... .. *
மேலுளவரம்பையமாதினின்பத்தாரிருப்பையிந்தாள் ... *

(இ-ள். பால்போலு மினியசொல்லுள்ள பவளம்போன்றசிவந்தவாயையும் பருத்தமுலையையும் ஒ தவழவினவாகிய மெல்லியதோள்களையும் வேல்போலுள்ள நோக்கத்தையுமுடையாளாகிய ஓர் மெல்லிய தன்மையாள், கடலைவொத்தமேட்கையுள்ளசிறுகையையும் போல்கையுள்ள பெருமையாகிய கையையுமுடைய கணவனுக்கு விண்ணுலகத்துள்ள அரம்பையினது இல்பமென்பதாகிய ஒப்பற்ற இன்பத்தை ஈந்தாள்—எ-று. (௩௰௰)

மாதர் விருப்பமென்பன காரணவாகுபெயர்.

வேறு.

புனத்துளமயிலனள்கொழுநன் பொய்யுரை ... ... *
நினைத்தனள்சீறுவாளொருத்திநீடிய ... ... *
சினத்தொடுகாதலன்சேக்கைப்போரிடை ... ... *
மனத்துறுநாதலைவாகைகொண்டதே ... ... *

(இ-ள்.) சோலையிலுள்ள மயிலையொத்த மங்கையானவள் தன்கணவனது பொய்மொழியை நினைத்தவளாகிச் சீறுகின்றாள் அவ்வொருத்தியினதுமிகுந்தசினத்தோடு, கொழுநனது அணையின்கண் (நுண்ணிசைந்த) கலவிப்போரில் (தான்) நினைத்தமனம் நிற்றலகிய காதலே வெற்றிகொண்டது—எ-று.

சினத்தொடு காதல்வாகை கொண்டதென்றது காதலன்முன்னுட்களில் சேக்கையிற்புரிந்தபுணர்ச்சித்தொழிலில் விருப்பம் மனத்திற்றோன்றலுஞ் சினமடங்கித் தான் அவனுக்கிணங்கியதனை.

கொலைபுருவமாந்தெனக்கொடியநாட்டத்தோர் ... ...*
கலைபுருவல்நுலாள்சனைவற்புல்குவாள் ... ... *
இலைபுருவமுறாச்செறிந்தமார்பிற்றுவ ... ... *
மூலைபுருவனைவைமூழ்கநோக்கினாள் ... ... *

(இ-ள்.) கொலைபானது உருவமற்றாற்போல கொடுமையுடைய கண்க

ளையும் உடுத்தகலையையுருவித் தோன்றுகின்ற அல்குலையுமுடையாளொருத்தி கணவனைத்தழுவாநின்றாளாகிக்கல்லினது திண்மையையழியும்படி திணித்த அவனது மார்பிலே தனது முலைகளுருவினவென்று முதுகை நோக்கினாள்—எ-று. (௬௨)

இது உருவலாகிய வினையில்லாதிருப்ப முலையுருவினவென அவ்வினையுடைத்தாக் கூறலால் அதிசயநவிற்சியணி, அ-ர்.

குங்குமமுதிர்ந்தனகோதைசோர்ந்தன... ... ... *
சங்கினமார்த்தனகலையுஞ்சாறின .. ..*
பொங்கினசிலம்புகள்பூசலிட்டன ... ... *
மங்கையரிளநலமைந்தருண்ணவே .. .. *

(இ-ள்.) மங்கையர்களுடைய புதிய இன்பத்தை ஆடவர்களுண்பதினால் (தொய்யிலெழுதிய)குங்குமச்சந்தனம் உதிர்ந்தன கூந்தல்சோர்ந்தன கைவளைகள் ஆரவாரித்தன ஆடையும் நழுவின காற்சிலம்புகள் மிகுந்து ஒலிசெய்தன—எ-று. (௬௩)

பகையின்மையாலொருகாலத்துக் கூடத்தக்க உதிர்தல் முதலிய பொருள்களுக்குக் கூட்டத்தைக்கூறினமையிற் கூட்டவணி. அ-ர்.

துனியுறுபுலவியைக்காதல்சூழ்சுடர் ... . *
பனியெனத்துடைத்தலும்பதைக்குஞ்சிந்தையாள்......*
புனையிழையொருமயில்பொய்யுறங்குவாள் ... ... *
கனவெனுநலத்தினாற்கணவற்புல்லினாள் ... ...*

(இ-ள்.) காதலானது, துனியாகியபுலவியை, நிறைந்தசுடரையுடைய சூரியன் பனியைநீக்கல்போல நீக்கலும் (முன்னே ஊடல்தீர்க்கும்போது தானிணங்காமற்போனதைக்குறித்து) பதறுகின்ற சிந்தையையுடையளாய் அணிகளணிந்தமயிலையொத்த ஒருத்தி பொய்யுறக்கமுறங்குவளாகிக் கனவாகிய நல்லகுறினால் கணவனைத்தழுவினாள்—எ-று. (௬௪)

சூழ்சுடர்-அன்மொழித்தொகை.

வட்டவாண்முகத்தொருமயிலுமன்னனும்... ... ...*
கிட்டியபோதுடல்கிடக்கப்புல்லினார் ... ... *
விட்டிலர்கங்குலின்விடிவுகண்டிலர் ... ...*
ஒட்டியவுடல்பிரிப்புணர்கிலாமையால்... ... ... *

(இ-ள்.) வட்டமாகிய ஒளியமைந்த முகத்தையுடைய மயிலையொத்த ஒருத்தியும் ஓரரசனும் ஒருவருக்கொருவர் கிடைக்கப்பெற்றபோது இரண்டுடலும் நெருங்கத்தழுவினார். பொருந்தச்செய்த உடலைப்பிரித்தலை நினையாமையால் தழுவுதலைவிட்டிலர் இராவினது விடிவைப்பார்த்திலர்-எ-று.

பிரிவாலுளதாய வருத்தத்தினருமைதோன்றக் கிட்டியபோதென்றார்.

அருங்களிமால்களிறனையவீரர்க்கும்... ... ...*
கருங்குழன்மகளிர்க்குங்கலவிப்பூசலால்... ... ... *

நெருங்கியவனமுலைசுமக்கநேர்கலா ... ...*
மருங்குல்போற்றேய்ந்ததம்மாலைக்கங்குலே... ... *

(இ-ள்.) நெருங்குதலரிய மதமயக்கத்தையுடைய யானையையொத்த வீரர்க்கும் கருமையாகிய கூந்தலையுடைய மங்கையர்க்கும் அந்தமாலையாகிய இராவணனுகலவிப்போரினால், நெருங்கிய தொய்யிலெழுதிய முலைகளைச் சுமப்பதற்கு ஆற்றலில்லாத (அம்மங்கையர்களது) இடையைப்போலத்தன் வலிகுறைந்தது—எ-று. (௯௯)

மேற்கூறிய வேட்கைப்பெருக்கச் செயல்களெல்லாம் நிகழ்தற்கிடனாய் நின்றபெருமைத்தாகலினம்மாலைக்கங்குலென்றார்.

கடையுறநன்னெறிகாண்கிலாதவர்க் ... ...*
கிடையுறுதிருவெனவிந்துநந்தினான் .. ..*
படர்திரைக்கருங்கடற்பரமன்மார்பிடைச்... ... ... *
சுடர்மணிக்காசெனவிரவிதோன்றினான் ... ... *

(இ-ள்.) நல்லொழுக்கமானது முடிவுபெறச்செய்யாதவர்களுக்கு இடையேசேர்ந்தசெல்வம் அழிவதுபோலச் சந்திரன் ஒளிகெட்டான் படர்ந்த அலைகளையுடைய கருங்கடலாகிய பரமனது மார்பிலணிந்த ஒளியமைந்தமணிகளுக்கரசாகிய கௌத்துவமணியைப்போலச் சூரியன் உதயமாயினான்.)

௰௮-வது. உண்டாட்டுப்படலமுற்றிற்று.

௰௯-வது-எதிர்கோட்படலம்.

அடாநெறியறைதல்செல்லாவருமறையறைந்தநீதி... ... *
விடாநெறிப்புலமைச்செங்கோல்வெண்குடைவேந்தர்வேந்தன்.
படாமுகமுகிலிற்றோன்றும்பருவமொத்தருவிபல்கும்... ...*
கடாநிறையாறுபாயுங்கடலொடுகங்கைசேர்ந்தான் ... ... *

(இ-ள்.) (உயிர்களுக்கு) அடுக்காத ஒழுக்கங்களைச்சொல்வதிற் செல்லாத பெருமையாகிய வேதம்சொல்லியநீதிகளைவிட்டு ஒழுகாத ஒழுக்கத்தினறிவமைந்த செங்கோலையும் வெண்கொற்றக்குடையையுமுடைய அரசர்களுக்கரசனாகிய சக்கரவர்த்தியானவன், படமணிந்த முகத்தையுடைய யானைகளாகிய மேகங்களினிடத்தில் தன்னெல்லைகடவாது தோன்றுகின்றகாலத்தில் தொகுதியாய் மலையருவியைப்போலப் பெருகுகின்றமதமாகிய நிறைந்த ஆறுகள் பாய்கின்ற படைக்கடலோடு கங்கையைச்சேர்ந்தான்—எ-று. (௧)

கப்புடைநாவினாகருவசமுங்கண்ணிற்றோன்றத் ... ... *
துப்புடைமனைவிற்றுக்கங்கைநீர்சுருங்கிக்காட்ட... ... *
அப்புடையணிகவேலையகன்புனன்முகந்துமாந்த ... ... *
உப்புடைக்கடலுந்தெண்ணீருண்ணசையுற்றதன்றே... ... *

(இ-ள்.) பிளவாகிய நாவையுடைய நாகர்களது உலகமுதலியவுலகங்களுக்குத் தோன்றும்படித் தூய்மையாகிய மணலையுடையதாகிக் கங்கையானது நீர்குறைந்து காட்டும்படி அம்புமுதலிய ஆயுதங்களையுடைய படைக்கடலானது விரிவாகிய அக்கங்கையினீரைமொண்டு பருகுவதினால் உப்புடையகடலும் தெளிவாகிய நீரை உண்ணும் விருப்பத்தையடைந்தது. எ-று. (உ)

மிகுதிபற்றி அப்புடையனிகமென்றார். முகந்து மாந்தநீரொழுக்கமறவின் உப்புடைக் கடல்நீர் நசையுற்றதாயிற்று. நீர்நசைக்கு உப்புடைமை காரணமாகலின் உப்புடைக்கடலென்றது கருத்துடையடையணி-அ-ர்.

ஆண்டுநின்றெழுந்துபோகியகன்பணைமிதிலையென்னும் ... *
ஈண்டுநீர்நகரின்பாங்கரிருநிலக்கிழவனெய்தத்... ... ... *
தாண்டுமாப்புரவித்தானைத்தண்ணளிச்சனகனென்னுந்... ...*
ஆண்டருவயிரத்தோளான்செய்ததுசொல்லலுற்றாம்... ...*

(இ-ள்.) அங்கிருந்து எழுந்துசென்று மிக்கவளத்தையுடைய நாடுசூழ்ந்த மிதிலையென்றுசிறப்பித்துச்சொல்லப்படும்பெருகுகின்றநீர்வளமமைந்த நகரினருகேபெரிய பூமிக்குரியோனாகியசக்கரவர்த்திவராநிற்கத்தாவுகின்ற மாவாகிய குதிரைச்சேனைகளையுடைய (உயிர்களிடத்து) தண்ணிய அருளைவைத்த சனகனென்று எடுத்துக்கூறும் எழுத்துணைப்போல் அழகைத்தருகின்ற பூணணிந்த தோள்களையுடையான் செய்ததைச் சொல்லத்தொடங்கினோம்—எ-று. (௩)

வந்தனனரசனென்னமனத்தெழுமுவகைபொங்கக்... ... *
கந்தடுகளிறுந்தேருங்கலினமாக்கடலுஞ்சூழச் ... ...*
சந்திரனிரவிதன்னைச்சார்வதோர்தன்மைதோன்ற ... ...*
இந்திரதிருவன்றன்னையெதிர்கொள்வானெழுந்துவந்தான் ...*

(இ-ள்.) சனகராசனானவன், சக்கரவர்த்தி வந்தனனென்று (ஒற்றர்) சொல்லத்தன்மனத்தில் எழுகின்ற களிப்பானது அதிகரியாநிற்பதினால், தறியை முறிக்கின்ற யானைகளும் தேர்களும் கடிவாளம்பூண்ட குதிரைக்கடலும் சூழ்ந்துவரும்படி, சந்திரனானவன் சூரியனைச்சேர்வதாகிய ஒருதன்மைதோன்றும்வண்ணம் இந்திரனது செல்வத்தையொத்த செல்வத்தையுடைய சக்கரவர்த்தியை எதிர்கொள்ளச் (சிங்காதனத்தினின்றும்) எழுந்துவந்தான்-எ-று

கங்கைநீர்நாடன்சேனைமற்றுளகடல்களெல்லாஞ் ... ... *
சங்கினமார்ப்பவந்துசார்வனபோலச்சாரப்... ... ... *
பங்கயத்தணங்கைத்தந்தபாற்கடலெதிர்வதேபோன்... ... *
மங்கலப்பாந்தமன்னன்வளநகர்வந்ததன்றே ... ... *

(இ-ள்.) நீர்வளப்பத்தையுடைய கங்கையைச்சார்ந்த கோசலநாட்டுத்தலைவனாகிய சக்கரவர்த்தியினுடைய சேனைகள், ஒழிந்த கடல்களெல்லாம் சங்கின்கூட்டங்கள் ஆரவாரிக்கும்படிவந்துசேர்வனபோலச்சேராநிற்கத், தாமரையில்வீற்றிருக்கின்ற திருமகளைத்தந்த பாற்கடலானது எதிர்வதுபோலச் சீதாபிராட்டியைத்தந்த மன்னனது வளமிக்க நகரமாககள் எதிர்கொண்டுவந்தனர்—எ-று. (௪)

இலைகுலாவயிலின்ஞானிகமேழெனவுலா ... ... *
நிலைகுலாமகரநீர்நெடியமாகடலெலாம் .. .. *
அலகின்மாகளிறுதேர்புரவியாளெனவிராய் ... ... *
உலகெலாநிமிர்வதேபொருவுமோருவமையே ... *

(இ-ள்.) வெள்ளிலையைப்போல விளங்குகின்ற வெற்றிவேலையுடையசக்கரவர்த்தியினது சேனையின்வருகையானது, எழெனவமைந்த நிலைமையைப் பொருந்தியமகரமீன்கள்வாழ்கின்ற நீர்வளமிக்க பெரிய கடல்களெல்லாம் அளவில்லாத வலியமைந்த மாவாகிய யானைகளும் தேர்களும் குதிரைகளும் காலாள்களுமாகத் தம்முட்கலந்து உலகமெங்கும் ஓங்கிச் செல்லுவதையே ஒக்கும் ஒருவமையது—எ-று. (௬)

நிமிர்வதேபொருவுமென்றமையிற் சேனையாகிய புனைவுளிக்கு வருகையென்னுஞ் சொல் தந்துரைக்கப்பட்டது.

தொங்கல்வெண்குடைதொகைப்பிச்சமுட்படவிராய்...*
எங்கும்விண்புதைதரப்பகன்மறைந்திருளெழப் ... *
பங்கயஞ்செய்யவும்வெளியவும்பலபடத் ... ... *
தங்குதாமரையுடைத்தானமேபோலுமே ... ... *

(இ-ள்.) சேனையானது, பீலிக்குஞ்சங்களும் வெண்குடைகளும் கூட்டமாகியபீலிக்குடைகளும் உள்ளேநெருங்கக்கலந்து எங்கு மாகாயமறைவதினால் சூரியனொளிமறைபட இருளுண்டாக அதனால் செந்தாமரையலர்களும்வெண்டாமரைமலர்களும் பலமலரத்தங்கிய தடாகத்தையொத்தது-எ-று.

தாமரையுடைத்தானமென்பது அடியளந்தா னென்பதுபோல ஒருபெயராய்நின்றது.

கொடியுளாளோதனிக்குடையுளாளோகுலப் ... ...*
படியுளாளோகடற்படையுளாளோபகர் ... ... *
மடியிலாவரசினன்மார்புளாளோவளர் ... ... *
முடியுளாளோதெரிந்துணர்கிலாமுளரியாள் ... ...*

(இ-ள்.) (இத்தன்மையளென்று) நூல்களாலாய்ந்து உணரக்கூடாத தாமரையில்வசிக்காநின்ற வெற்றித்திருவானவள், அறிவுடையோர் கூறுகின்ற சோம்பலில்லாத சக்கரவர்த்தியினது வெற்றிக்கொடியிலுள்ளாளோ ஒப்பற்ற வெற்றிக்குடையிலுள்ளாளோ (அவன்செல்லுகின்ற) சிறப்பாகிய நிலத்திலுள்ளாளோ கடலையொத்த படையிலுள்ளாளோ அவனதுமார்பிலுள்ளாளோ பெருகுமுடியிலுள்ளாளோ—எ-று. (௮)

வெற்றித்திருமகளுறையு மிடங்கொடிமுதலியனவாகலின் ஒகாரங்கள்எண்ணுப்பொருளில் வந்தன. அன்றி ஐயப்பொருளவாக்கி உணர்கிலாமுளரியாளென்பதில் உணர்கிலாம் எனஉளப்பாட்டுத்தன்மைப்பன்மைமறைவினைமுற்றுச்சொல்பிரித்துப்பொருள்கூறினுமமையும்.

வார்முகஞ்செழுவுகொங்கையர்கருங்குழலின்வண் ... *
டேர்முழங்கரவமேழிசைமுழங்காவமே ... ...*
தேர்முழங்கரவம்வெண்டிரைமுழங்காவமே ... ...*
கார்முழங்கரவம்வெங்கரிமுழங்கரவமே ... ... *

(இ-ள்) அச்சேனைக்குள் யாழ்முதலிய கருவிகளில் நூல்முதலிய இழைகள் ஒலிக்கின்ற ஒலி, வாரின்கண் நிறைந்த கொங்கைகளையுடைய மங்கையர்களது கரிய குழலில் வண்டுகள் அழகிதாக ஒலிக்கின்ற ஒலியேயாம் தேர்கள் ஒலிக்கின்றவொலி, வெண்மையாகிய அலைகளையுடைய கடலொலிக்கும் ஒலியேயாம் சினவெம்மையையுடைய யானைகளொலிக்கின்றவொலி, மேகங்களொலிக்கும் ஒலியேயாம்—எ-று. (௯)

ஏகாரங்களைப்பிரித்து வண்டேர்முழங்கரவமே கார்முழங்கரவமே எனக்கூட்டுக.

சூழுமாகடல்களுந்திடர்படத்தூடவழ்ந் ... ... *
தேழுபாரகமுமுற்றளவெனற்கெளிதரோ ... ... *
ஆழியானுலகளந்தன்றுதாள்சென்றவப் ... ... *
பூழையூடேபொடித்தப்புறம்போயதே ... ... *

(இ-ள்.) உலகைச் சூழ்ந்திருக்கிற பெரியகடல்களும் தூர்ந்து மேடாகும்படி (அச்சேனையாலுண்டாகிய) பராகம், உலாவி ஏழுலோகங்களிலும் நிறைந்திருந்ததென்று சொல்லுதலுக்கு எளியதோ அன்று (சுதரிசனமென்னும்) சக்கரத்தையுடைய இறையவன் உலகமெல்லாமளந்த அன்று உவ்விடம் பரந்து வலதுதிருவடி (வானத்தொளைத்துச்சென்ற அந்தத்தொளையினிடமாகச்சென்று அப்புறத்தேபோனது—எ-று. (௰)

அரோவென்னுமசைச்சொல்லி னீற்றேகாரந் தொகுத்தலாய் எதிர்மறை ஓகாரம் புணர்ந்தது. பின்னையது மிது.

மன்னெடுங்குடைமிடைந்தடையவான்மறைதரத் ... *
துன்னிநீர்நிழல்வழங்கிருளிரிப்பெளிதரோ ... ... *
பொன்னிமைப்புவியிமைப்புனைமணிக்கலனெலா ... *
மின்னிமைப்பவில்விடுப்பவெயிலிமைப்பநிலவிடும் ... ... *

(இ-ள்.) அரசர்களுடைய நெடியகுடைகள் ஆகாயமறையும்படி தம்முள் நெருங்கிவருவதினால் நிறைந்தநிழலானது தருகின்ற இருளை (மற்றொன்றால்) நீக்குதல் எளியதோ எளியதன்று அழகைத்தருகின்ற அச்சேனைசெல்லும்) நிலத்தின்கணெல்லாம் சிந்திய புனைவதற்குரிய நானாமணியணிகளெல்லாம் மின்னலொளியைவீசும் வில்லென்னுமொளியைவீசும் வெயிலைவீசும் நிலாவைவீசும் (இவற்றாலவ்விருளொழிந்தது—எ-று. (௰௧)

வில்லென்பது-இடையிட்டு ஒளிசெய்தல் ஈங்குத்தந் துரைத்தனவெல்லாம் இசையெச்சம்.

தாவின்மன்னவர்பிரான்சுரமுரட்சனகனும் .. *
எவருஞ்சிலையினானெதிர்வருநெறியெலாந் ... *
தூவுதண்சுண்ணமுங்கனகநுண்டூளியும் ... *
பூவின்மென்றாதுகுஞ்பொடியுமேபொடியெலாம்.

(இ-ள்) வலியமைந்த அரசர்களுக்கரசனும்வல்லவரதிற்கப் (போரின்கண்) அம்புகள் வருகின்ற வில்லையுடையானுமாகிய சனகமகாராஜன் எதிர்கொண்டு வரும்வழியெல்லாம் எழுகின்றபொடிகள் யாவும் தூவிய தண்மையாகிய க

தம்பரமம் நுண்மையாகிய பொற்றுகளும் பூவினதுமெல்லிய தாதுக்களி னின்றும் சிந்தியபொடியுமேயாம்—எ-று. (௰௨)

நறுவிரைத்தேனு நானமுநறுங்குங்குமச் ... ... *
செறியகிற்றேய்வையுமான்மதத்தேக்கமும் ... *
வெறியுடைக்கலவையும்விரவுசெஞ்சாந்தமும் ... *
செறிமதக்கலுழியாய்ச்சேறுமேச்சேறெலாம். ... *

(இ-ள்.) அவன் செல்லுகின்ற வழியிலுள்ள சேறெல்லாம் (கூந்தலிலணிந் தமாலையிற்சிந்துகின்ற) நல்லமணமமைந்ததேனும் மயிர்ச்சாந்தும் நறுவி யகுங்குமத்திரளும் மிக்க அகிலினாலமைத்த சந்தனமும் கத்தூரியின் பெருக்கும் மணமுடைய கலவைச்சந்தனமும் கலத்தற்குரிய செஞ்சந்தன மும் அடர்ந்த மதவாறும் வீழ்வதினாலுண்டாகிய சேறேயாம்—எ-று. ()
சேறுமென்னுமும்மையைக் கலுழியுமெனக்கூட்டுக,

மன்றலங்கோதையார்மணியினும்பொன்னினுஞ். *
சென்றுவந்துலவுமச்சிதைவிலாநிழலினேர் ... *
வென்றியின்கொடியொடுநெடுவிதானமும்விராய்.
நின்றவெண்குடைகளினிழல்களேநிழலெலாம் ...*

(இ-ள்.) அவ்வழியிலுள்ள நிழல்களெல்லாம் இயற்கைமணம் பொருந்தி ய கூந்தலையுடைய அரசமகளிர் மணிகளாற்செய்த ஊர்திகளிலும் பொன் னாற்செய்த ஊர்திகளிலும் சென்றுவந்து உலாவுதலாலுண்டாகிய சிதைதலி லாமலடர்ந்த அந்நிழலோடு அழகியதிண்மையாகிய வெற்றிக்கொடிகளோ டு நெடியமேற்கட்டிகளும் தம்முள் கலந்து நின்றநிழல்களும் வெண்கொ ற்றக் குடைகளினிழல்களுமேயாம்—எ-று. (௰௪)

நிழல்களே என்பதை நின்றவென்பதோடுங் கூட்டுக. சென்றுவந்துலவுமென்றவின் மணிபொன்னென்பன முதற்கருவியாகுபெயர்.

மாறிலாமதுகையான்வருபெருந்தானைமேல் ... *
ஊறுபேருவகையானணிகம்வந்துற்றபோ ... *
தீறிலோதையினெடிதெறிதிரைப்பரவைமேல் ... *
ஆறுபாய்கின்றதோரமலைபோலானதே ... ... *

(இ-ள்.) (செருமுகத்தில்) மாறுதலில்லாத வலியையுடையானாகிய சக்கர வர்த்தியினது வருகின்ற பெருஞ்சேனைமேல் பெருகுகின்றமிக்க மகிழ்ச்சி யையுடையானாகிய சனகமகாராசனது சேனையானது வந்துசேர்ந்தபோது (உண்டாகிய ஓசையானது) எறிகின்ற அலைகளையுடையகடலின்மேல் இடை வீடில்லாத ஓசையோடு கங்கையாறுபாய்கின்றதினாலுண்டாகிய ஓசைபோ லானது—எ-று. (௰௫)

தந்தையேபொருகரிச்சனகனுங்காதலோ ... *
டுந்தவோதரியதோர்தன்மையோடுலகுளோர் ... *
தந்தையேயனையவத்தகைவினான்முன்புதன் ... *
சிந்தையேபொருநெடுந்தேரின்வந்தெய்தினான்...*

(இ-ள்.) புகழ்ச்சிறந்தோங்கிய ஒப்பற்ற இயற்கைநற்குண நற்செய்கையால் உலகத்தாருக்குத் தந்தையையேயொத்த அப்பெருமையையுடைய சக்கரவர்த்திக்கு முன்புதானேயே பொருகின்ற யானைச்சேனையையுடைய சனகமகாராஜனுடைய காதலாலே தள்ளுப்படலால் தன் சிந்தையையேயொத்த நெடியதேரின்மீது வந்துசேர்ந்தான்—எ-று. (௬௬)

தாம்பெற்றோள் பயின்றனவாகலிற் கந்தையேயென்றது சிறப்பேகாரம். தன்குடிகளைத் தீயொழுக்கத்தொழுகாமையொழித்து நல்லொழுக்கத்திலொழுகச்செய்தலால் சக்கரவர்த்திக்குத் தந்தையும் அவனைக்காணுமாறு விரைகின்றதாகலிற்றேர்க்குச்சிந்தையும் முறையேயுவமையும் வினையுவமையுமாயின. ஏ இரண்டும்பிரிநிலை.

எய்தவத்திருநெடுந்தேரிழிந்திணையதன். ... ... *
மொய்கொடிஞ்சேனையின்னிற்கமுன்சேறலுங் ... *
கையில்வந்தெனக்கடுகின்வந்தெதிரான் ... *
ஐயனும்முகமலர்ந்தகமுறத்தழுவினான் ... ... *

(இ-ள்.) நெருங்கிவரலும் அந்தநெடியசிறந்ததேரினின்றுமிழிந்து இப்படிப்பட்ட மொய்த்துவருகின்றதிண்ணியதன் சேனையானது பின்னே நிற்கத்தான்முன்னே நடந்துசெல்லுதலும் (இத்தேரிற்கண்) வந்தேறென்று கையாற்குறிப்பிக்க விரைவாகவந்து எதிரான் ஐயனாகியசக்கரவர்த்தியும் முகமும் அகமும் மலர்ந்துமிகவுந்தழுவினான்—எ-று. (௬௭)

தழுவிநின்றவனிருங்கிளையையுந்தமனாயும் .... *
வழுவிலசிந்தனையினான்வரிசையின்னளவளாய் ... *
எழுசமுந்துறவெனுவீனிதுவந்தெய்தினான் ... *
உழுவலமுந்தரியனுவெனவரினுமுயரினான் ... *

(இ-ள்.) புலியையொத்த வீரர்களுக்குமுன் சிங்கத்தையொத்தவனும் எல்லா அரசர்களினுமுயர்ந்தவனுமாகிய சக்கரவர்த்தி, சனகமகாராசனைத்தழுவிநின்று அவனுடையபெருமையாகிய சுற்றத்தையும் சினேகமாயும் தவறுதலில்லாத உள்ளன்பினொடு முறைபாகவிசாரித்து முன்னே செல்லக்கடவாயென்று கூறி மிதிலையைநோக்கி இனிமையாகவந்துசேர்ந்தான்.எ-று ()

இன்னவாறிருவருங்னியவாறேகவத் ... ... *
துன்னுமாநகரினின்றெதிர்ரேத்துன்னினான் ... *
றன்னையேயனையவன் றமலேயயனையவன் ... *
பொன்னின்வார்சிலையிறப்புயநிமிர்த்தருளினான் .. *

(இ-ள்) இன்னபடியாகச்சக்கரவர்த்தியும் சனகமகாராசனும் இனிய விதமாய்ச்செல்லாநிற்கையில் தீநிறத்தையொத்தநிறத்தையுடையசிவனதுவில் முறியும்படி தன்புயங்களை உயர்த்தவருமான தன்னைத்தானேயொத்தஸ்ரீராமபிரான்வளப்பங்கள்நிறைந்த அந்தப்பெரிய மிதிலாநகரத்தினின்றும் எதிர்வரத்தொடங்கினான்—எ-று. (௬௯)

தம்பியுந்தானுமத்தானைமன்னவனகர்ப் ... *
பம்புதிண்புரவியும்படைகுருப்புடைவரச் ... *

செம்பொனிற்பசுமணித்தேரின்வந்தெய்தினன்... *
உம்பரும்மிம்பரும்முரகருந்தொழவுளான் ... *

(இ-ள்.) விண்ணவர்களும் இவ்வுலகத்தவர்களும் நாகர்களும் வணங்குந் தன்மையனாகிய ஸ்ரீராமபிரான் தம்பியுந்தானும் சேனையையுடைய அந்தச் சனககாராசனது நகரினின்றும் நிறைந்ததிண்மையாகிய குதிரைப்படையுஞ் சைனியங்களும்பக்கத்திற்சூழ்ந்துவரும்படி செம்பொன்னாற்செய்த மரகதமணிபிழைத்ததேரின்மேலவந்துசேர்ந்தான்—எ-று. (௨௰)

யானையோவிரதமோவிவுளியோபிடிகளோ ... *
ஆனபேருறையிலாநிறைவையாரறிகுவார் ... ... *
தானையேர்சனகனேவலினெடுந்தாதைமுன் ... *
போனபேரிருவர்தம்புடைவரும்படையினை ... *

(இ-ள்) பெருமையாகிய தந்தைக்கு முன்னேசென்றபெருங்குணமமைந்த இராமலட்சுமணர்களுடைய பக்கத்தில் சேனைவளப்பத்தையுடைய சனககாராசனுடைய ஏவுதலினால், வரும்படைகளில் (எவைகளில்) பெரிதாகிய உறையென்னுமளவையில்லாத நிறைவையாரறிகுவார் (ஆகலால்) யானையோ இரதமோ குதிரையோ பெண்யானையோ (யாதோயறிந்திலம்) என்றவாறு.

காவியுங்குவளையுங்கடிகொள்காயாவுமொத் ... ... *
தோவியஞ்சுவைகெடப்பொலிவதோருருவொடே ... *
தேவருந்தொழுகழற்சிறுவன்முன்பிரிவதோர் ... *
ஆவிவந்தென்னவந்தரசன்மாடணுகினான் ... ... *

(இ-ள்.) காவிமலரையும் கருங்குவளைமலரையும் புதுமையாகிய காயாமலரையும் ஒத்து, சித்திரஞ்சுவைகெடும்படி விளங்குவதாகிய ஒப்பற்றதிருவுருவத்தோடு தேவர்களுந்தொழுகின்ற சீர்பாதங்களையுடைய ஸ்ரீராமபிரான் முன்பிரிந்ததாகிய ஒப்பற்ற உயிரானது வந்தாற்போலவந்து அரசனிடத்தில்சேர்ந்தான்—எ-று. (௨௨)

அவன்பக்கலிற்படாதவர்களையும் பிடிபடச்செய்யுஞ் சிறப்பிற்றுகவி ஓருருவோடேயெனத் திருவுருவத்தையெடுத்துக்கூறினார். ஒடு உருபு உருவொடணுகினானென வணுகலுக்கு அடைமொழிப்பொருளில்வந்தது.

அனிகம்வந்தடிதொழக்கடிதுசென்றாசர்கோன் ... *
இனியபைங்கழல்பணிந்தெழுதலுந்தழுவினான் ... *
மனுவெனுந்தகையன்மார்பிடைமறைந்தனமலைத் .. ...*
தனிநெடுஞ்சிலையிறத்தவழ்ந்தடங்கிரிகளே ... ... *

(இ-ள்.) (சக்கரவர்த்தியினுடைய) சேனைகள்வந்து தன் சீர்பாதங்களைத் தொழாநிற்க விரைந்துநடந்து அவனுடைய இனிய பசும்பொன்னாற்செய்த வீரகண்டையணிந்தபாதங்களைப்பணிந்து எழுதலும் தழுவினான் மேருமலையையொத்த ஒப்பற்ற நெடிய திரியம்பகமென்னும் வில்லானது முறியும்படி அசைத்தபெருமையாகிய புயமலைகள், மனு இவனென்று (அறிவு

டையோரால்) சொல்லப்படும் தன்மையையுடைய சக்கரவர்த்தியினது மார்பிலேமறைந்தன—எ-று. (உங)

மலையென்பதற்கு மேருவென்றது மலையெனச்சிறப்பித்துக் கூறப்படுவது அதுவேயாகலின்.

இளையவனைக்குரிசில்வந்தடிபணிந்தெழுதலுந் ... ...*
தளைவருந்தொடையன்மார்புறவுறத்தழுவினான் ... . *
களைவருந்துயரறக்ககனமெண்டிசையெலாம்... ... *
விளைதரும்புகழினன்னவரினும்மிகுதியான்... ... ...*

(இ-ள்.) (மற்றொன்றால்) ஒழித்தலருமையாகிய துயரம்நீங்கும்படி விண்ணுலகமுழுமையும் எண்டிக்குகள் முழுமையும் பெருகாநின்ற புகழையுடையானாகிய யாவரினும் மிக்கசெல்வமமைந்த சக்கரவர்த்தி, பசும்பொன்னிறம்வாய்ந்த இளையபெருமான்வந்து தன்பாதங்களைப்பணிந்து எழுதலும் மலராற்றொடுத்தலமைந்த மாலையணிந்தமார்பிலேபொருந்தமிகத்தழுவினான்—எ-று. (உச)

குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரன்முதலானோரைக் குலத்தோடுந்தொலைத்த வெற்றியாளனாகிய விவன்புகழைச்ககனமெண்டிக்கிலுள்ளார்கூறுநிற்கையால் இவர்களைவருத்தவருமசுரர்முதலிய தீயோர் அதுகேள்வியுற்று அஞ்சியொதுங்கலிற் றுயரற விளைதரும் புகழினனென்றார். துயரற-எ-து- காரியப்பொருட்டு.

கற்றைவார்சடையினன்கைக்கொளுந்தனுவிறக் ... *
கொற்றநீள்புயநிமிர்த்தருணம்பக்குரிசிலயின்... ... ...*
பெற்றதாயரையுமப்பெற்றியிற்றொழுதெழுந்... ... *
துற்றபோதவர்மனத்துவகையாருரைசெய்வார் ... *

(இ-ள்) நீண்டசடைத்தொகுதியையுடைய சிவன்கையிற்றாங்கிய வில்லானது முறியும்படி வெற்றிவளர்கின்ற புயத்தை நிமிர்த்தருளிய அச்சிராமபிரான் தந்தையைத்தொழுதபின் தன்னைப் புத்திரனாகப்பெற்ற தாய்மார்களையும் (முன்தந்தையைப்பணிந்த) அம்முறைமைபோல பணிந்தெழுந்து நெருங்கியபோது அவர்களுடையமனக்களிப்பை (இவ்வளவிற்றென்று) சொல்லவல்லாரியார்—எ-று. (உரு)

உன்னுபேரன்புமிக்கொழுகியொத்தொண்கணீர்... ...*
பன்னுதாரைகடாத்தொழுதெழும்பாதனைப்... ... *
பொன்னின்மார்புறவணைத்துயிருறப்புல்லினான் ... *
றன்னையத்தாதைமுன்றழுவினானென்னவே... ... ... *

(இ-ள்.) எப்போதும் நினைக்கின்ற அன்பானது உள்ளத்தே மிகுந்து புறத்தே ஒழுகியதையொத்து அழகியகண்கள் எடுத்துக்கூறப்பட்ட நீர்த்தாரைகளைத் தாரநிற்கத்தொழுது எழுகின்றபரதனை, தன்னை அத்தந்தைமுன்னேதழுவினாற்போலத் திருமகள்வசிக்கின்ற மார்பில் உயிர்பொருந்தும்படி மிகுதியும் அணைத்துத்தழுவினான்—எ-று. (உசு)

கரியவன்பின்புசென்றவனருங்காதலிற்... ... ...*
பெரியவன்றம்பியென்றினையதோர்பெருமையப்... ...*

பொருவருங்குமாரர்தம்புனைநறுங்குஞ்சியால் ... ...*
இருவர்கடபங்கழலும்வந்திருவரும்வருடினார் ... ... *

(இ-ள்.) கரியதிருமேனியையுடைய சீராமபிரானுக்குப் பின்னேசென்றவன் (பிறரால்பெறுதல்) அரியகாதலாற் பெரியவனாகிய பரதனுக்குத்திருத் தம்பியென்று கூறுமித்தன்மையதாகிய ஒப்பற்ற பெருமையையுடைய உவமையில்லாத அக்குமாரர்களாகிய இலட்சுமண சத்துருக்கர்களிருவரும்வந்து தமது மூழ்ந்த நறுமணத்தையுடைய சிகையால் சீராமபரதராகிய இருவருடைய பசும்பொன்னாற்செய்த கழலையணிந்த இரண்டுசீர்பாதங்களையும் வருடினார்கள்—எ-று. (உ௭)

குலங் கல்வி தூய்மை வாய்மை யொழுக்கம் ஆற்றல் முதலியவற்றானுளவாய பெருமைகள்யாவும் உண்மையாநோக்கின், இவன்சீராமபிரானைப்பிரியாதுடனுறைகின்றதிருத்தம்பி இவன் சீராமபிரான்பால் மிக்ககாதலையுடைய பரதபிரானைப்பிரியாதுடனுறைகின்றதிருத்தம்பியென்னும் ஒருபெருமைக்கு ஓர்சிறிதும் ஒப்பாகாவாகலிற் கரியவன் பின்பு சென்றவன் காதலிற்பெரியவன்றம்பியென்றினையதோர்பெருமையெனவும் அப்பெருமையொன்றுமேயமையுமெனவுணரும்பெருங்குணத்தினரென்பார் அப்பொருவருங்குமரரெனவுங்கூறினார்.

கோல்வருஞ்செம்மையுங்குடைவருந்தண்மையுஞ் ... *
சால்வருஞ்செல்வமென்றுணர்பெருந்தாதைதன் ... *
மேல்வருந்தன்மையால்மிகவிளங்கினர்கடா ... ... *
நால்வரும்பொருவினான்மறையெனாநடையினார் ... *

(இ-ள்) ஒப்பில்லாதநான்குவேதங்களேயென்னுமொழுக்கத்தையுடையாராகிய நால்வர்களும், தனது செங்கோல்நடாத்துவதினால்வரும் நீதியையும் (உலகெங்கும்) குடையை நிழற்றுவதினால்வரும் தண்ணளியையுங் கருத்தாக்கமையவரும் செல்வமென்றுணராநின்ற பெருங்குணத்தையுடைய தந்தையினதுமேம்பாட்டுத் தன்மையால் மிகுதியும்விளங்கினார்கள்-எ-று. (உஅ)

வான்வரும் முனிவருமொழிந்த மற்றையோர் சீராமபிரானையும் ஏனைமூவரையுமுறையே ஆதிபகவனெனவும் நித்தர்களெனவுமுண்மையுணர்ந்திலராய், முறைவழாதுயிர்களையோம்பித் தண்ணளிசெய்யாநின்றவரசர்க்கரசனுடைய குமாரர்களென்றே அந்நாளில்மதித்தனராகலிற் பெருந்தாதைதன்மேல்வருந் தன்மையால் மிகவிளங்கினரென்றார்.

சான்றெனத்தகையசெங்கோலினானுயிர்கடாம் ... ... *
ஈன்றநற்றாயெனக்கருதுபேரருளினான்... ... ... *
ஆன்றமிச்செல்வமித்தனையுமொய்த்தருகுறத் ... *
தோன்றலைக்கொண்டுமுற்செல்லெனச்சொல்லினான் .. *

(இ-ள்) (பகைநொதுமல்நட்பென்னு மூவகையாருக்கும்பொதுமையாக) சாட்சியென்று சொல்லத்தகுதியுடைய செங்கோலானும் உயிர்கள் தம்மையீன்ற நற்றாயென்றுகருதுகின்ற பெருங்கருணையானுமாகிய சக்கரவர்த்தி, மிகுதியாகிய இவ்வடைவங்கள் இவ்வளவும் நெருங்கி அருகிற்பொருந்த இச்சிறுவனைக்கொண்டு முன்னே செல்லக்கடவீரென்று (சேனைத்தலைவர்களை நோக்கிச்சொல்லினான்—எ-று. (உகூ)

காவியுமொளிர்தரு கமலமுமெனவே வோவியவெழிலுடை இவ்வொருவனையலது ஓராவியுமுடலுமிலதென்றிருப்பவனாகலினச்சிறப்புப்பற்றிவாளாத்தோன்றலென்றான்.

காதலோவறிகிலங்கரிகளைப்பொருவினார் ... ...*
தீதிலாவுவகையுஞ்சிறியதோபெரியதோ ... ... *
யோதைசூழ்குஞ்சியக்குமரர்வந்தெய்தலுந்... ... ...*
தாதையாதொத்ததத்தானையின்றன்மையே ... ... *

(இ-ள்.) அந்நால்வர்பால் யானைகளையொத்த சேனைவீரர்கள்வைத்த காதலேயோ (இவ்வளவினதென்று) அறியோம் குற்றமில்லாத உவகையும் சிறியதோ பெரியதோ (அறியோம்) அச்சேனையின் தன்மையானது மாலைசூழ்ந்த சிகையையுடைய அவ்விளங் குமாரர்கள் வந்துசேரலும் தாதையாதலை யொத்தது—எ-று. (௯௰)

ஆதலொத்தது-எ-து- ஆதொத்ததெனத்தொகுத்தது. இவ்வுவகையேனைவுவகைபோலாது உயிர்க்குறுதிபயக்குநன்மைபயத்தலிற் றீதிலாவுவகையென்றார். தானையின்றன்மை,தாதையாதலொத்தலாவது இச்செல்வமித்தனையு மொய்த்தருகுறச்சிறுவர் நால்வருமொருசேரச் செல்வதைக் கண்ணுற்றதாதை அதுபோதுகொண்ட காதலையொத்தகாதலையும் உவகையையொத்த உவகையையுமுடையதாதல். முன்னை ஓ சிறப்புபின்னை ஓ விரண்டும்-ஐயம். அரோவிரண்டுமசைநிலை. இரண்டனுருபுந்தொகுத்தன.

தொழுதிரண்டருகுமன்புடையதம்பியர்தொடர்ந் ... *
தழிவில்சிந்தையினுகந்தாடன்மாமிசைவரத் .. ... *
தழுவுசங்குடனெடும்பணைதழங்கிடவெழுந் .. ... *
தெழுதருந்தகையதோர்தேரின்மேலேகினான் ... *

(இ-ள்.) இருபக்கங்களிலும்தொழுது அன்புடைய தம்பியர்கள் தொடர்ந்து இடையீட்டழிவிலாத உள்ளத்தில் உவகைகொள்ளாநின்றுவெற்றியுடைய குதிரைகளின்மீது வாராநிற்கவும் ஒன்றை ஒன்றுதழுவி யொலிக்கின்ற சங்குடனே நெடியமுரசம் ஒலிக்கவும் எழுந்து, எழுதுதற்கரிய தன்மையதாகிய ஒப்பற்றதேரின்மேலேறிச்சென்றான்—எ-று. (௯௧)

பஞ்சிசூழ்மெல்லடிப்பாவைமார்பண்ணைசூழ் ... .*
மஞ்சுசூழ்நெடியமாளிகையின்வந்திடைநிறாய் ... *
நஞ்சுசூழ்விழிகள்பூமழையின்மேல்விழநடந் ... .*
திஞ்சிசூழ்மிதிலைமாவீதிசென்றெய்தினான்... ... ...*

(இ-ள்) செம்பஞ்சிசூழ்ந்த மெல்லியபாதங்களையுடைய மங்கையர்களது கூட்டங்கள் சூழ்ந்து, மேகங்கள்சூழ்கின்ற நெடியமாளிகையினின்றும்புறத்தேவந்து (வீதியின்) இடத்தில்நிறைய (அக்கூட்டத்தின்) விடம்நிறைந்த கண்ணின்பார்வைகள் (அந்தணர்கள் ஆசிகூறியிறைக்கும்) மலர்மாரியைப் போலத் தன்மேல்விழாநிற்கப்போய் மதில்சூழ்ந்த மிதிலாநகரத்தின் வீதியைச்சென்றுசேர்ந்தான்—எ-று. (௯௨)

பண்ணைசூழ் என்னு முதனிலைத் தனிவினை வினையெச்சமாய்நின்றது விராவ-எ-து-விராய் எனத்திரிந்தது.

சூடகந்துயல்வரக்கோதைசோர்தரமலர்ப் ... ... *
பாடகம்பாதநூல்பகரவெங்கடகரிக் ... ... *

கோடரங்கிடவெழுந்குவிதடங்கொங்கையார்... ... *
ஆடரங்கல்லவேயணியரங்கயலெலலாம் ... ... *

(இ-ள்) அலங்கரித்தமாளிகைகளின் புறமெல்லாம், அங்குநிறைந்தமங்கையர்களது கைவளைகள் அசைதலாலும் கூந்தல் அவிழ்ந்துசரிவதினாலும் பாதமாகியமலரிலணிந்த அணிகள் பாதநூல்கூறும் நடனவிதியை ஒலித்துக்காட்டலாலும், வெம்மையாகிய மதத்தையுடைய யானையினது தந்தங்கள் (இறுமாப்பு) கெடும்படி எழுந்த குவிந்தபெரியகொங்கையையுடைய வேசையர்கள் ஆடுகின்ற அரங்கல்லவோ அரங்கேயாம்—எ-று. (௬௬)

ஏகாரம்-எதிர்மறைப்பொருட்டு.

பேதைமார்முதல்கடைப்பேரிளம்பெண்கடாம் ... *
எதியார்மாரவேளேவவந்தெய்தினர் ... ... *
ஆதிவானவர்பிரானணுகலாலணிகொள்கார்... ... ... *
ஓதியார்வீதிவாயுற்றவாறுரைசெய்வாம்... ... ... *

(இ-ள்) முதன்மையாகிய கடவுளருடைய தலைவன் சேர்தலாலே, குறைவில்லாத ஆயுதங்களையுடைய மாரவேள் ஏவாநிற்பப் பேதைப்பருவ முடையார்முதல் பேரிளம்பெண்கள் கடையாகவந்து சேர்ந்தவர்களாகிய அணிகளைக்கொண்ட மேகம்போன்ற கூந்தலையுடைய அம்மாதர்கள் வீதியினிடத்தில் அடைந்தவிதத்தைச்சொல்லத்தொடங்குவோம்—எ-று. (௬௭)

பேதைமார்முதல்கடைப் பேரிளம்பெண்கள் மாரவேளேவ வந்தெய்தினரெனவே குலமங்கையர்க்கு வேற்றுநாயகனைக்கண்டு வேட்குதல் கற்பொழுக்கமன்றேயெனிற்றன்றுலிகடலலகினிலும்பர்நாகரிற்பொலிவதுதன்பொற் பெண்ணுமாறுநின்றஇறையவளும் வேட்டு அகலகில்லேனிறையுமென்றுறைமார்பத்தையுடையசகல மோகனகாரணகியஇறையவனது வடிவழகைக்கண்டு ஏனைமாதரெனப்படுவோர் வேட்காதிரா ரன்றேயன்றியு மவன்பக்கல்புரியும் வேட்கையும் பக்தியேயாமெனத்தோலாநாவின்மேலோர்கூறலானென்க.

௰௬-வது- எதிர்கோட்படலமுற்றிற்று.

௰௭-வது- உலாவியற்படலம்.

மானினம்வருவபோன்றுமயிலினந்திரிவபோன்று ... *
மீனினமிளிர்வபோன்றுமின்னினமிடைவபோன்றுந்... *
தேனினஞ்சிலம்பியார்ப்பச்சிலம்பினம்புலம்ப வெங்கும்.
பூநனைகூந்தன்மாதர்பொம்மெனப்புகுந்துமொய்த்தார் *

(இ-ள்) மான்கூட்டங்கள் வருவனபோன்றும் மயிலினங்கள் திரிவனபோன்றும் விண்மீன்கள் விளங்குவனபோன்றும் மின்னினங்கள் நெருங்குவனபோன்றும், (கூந்தலில்மொய்த்த) வண்டுக்கூட்டங்கள் மிகுதியும் ஆரவாரிக்கவும் (காலில்) சிலம்பினங்கள் ஒலிக்காநிற்பவும் வீதியினிடமெங்கும் மல

லையணிந்த தன்னிய கூந்தலையுடைய மாதர்கள்விரைந்து புகுந்துமொய்த்தார்கள் —எ-று. (௧)

பொம்மென-எ-து-விரைவுக்குறிப்புணர்த்திற்று.

விரிந்துவீழ்கூந்தல்பாரார்மேகலையற்றநோக்கார் ... *
சரிந்தபூந்துகில்தாங்காரிடைதடுமாறத்தாழார் ... *
நெருங்கினர்நெருக்கிப்புக்குநீங்குமினீங்குமின்னென் .. *
றருங்கலமனையமாதர்தேனுகரளியின்மொய்த்தார் ...... *

(இ-ள்.) பெறுதலரிய அணியையொத்த சிறந்தமாதர் விரிந்து வீழ்கின்ற கூந்தலைமதியாமலும் அற்றவாகிய மேகலையை எண்ணாமலும் சரிந்துவீழ்கின்ற பூந்தொழிலினையுடைய துகில்களைத்தாங்காமலும் மெல்லியஇடை தடுமாறுதற்கு (அதனால்) தாமதஞ்செய்யாமலும்வந்து நெருங்கினார்கள் அவ்வாறு நெருங்கிப்புகுந்து (ஒருவரையொருவர்) நீங்குங்கோள் நீங்குங்கோளென்றுகூறித் தேனை உண்ணவருகின்ற வண்டுகளைப்போல (சீராமபிரானை) மொய்த்தார்கள்—எ-று. (௨)

கண்ணினாற்காதலென்னும்பொருளையேகாண்கின்றேமிப் ... *
பெண்ணினீர்மையினாலெய்தும்பயனின்றுபெறுதுமென்பார்.
மண்ணினீருலர்ந்துவானமழைமறவறந்தகாலத் ... *
துண்ணுநீர்கண்டுவீழுமுழைக்குலம்பலவுமொத்தார் ... *

(இ-ள்) காதலையென்னும் பொருளைக் கண்களால் (புறத்தே) காணுகின்றோம் (அதனால்) நாமடைந்திருக்கும் இப்பெண்தன்மையால் அடைதற்குரியபயனை இன்று பெறுவோமெனக் கருதுபவராய்ப் பூமியிலேநீருலர மேகம்பெய்கின்றமழை சிறிதுமின்றி வறந்தகாலத்தில் உண்ணுதற்குரியநீரை (ஓரிடத்தில்) கண்டுவீழ்கின்ற மான்கூட்டம்பலவற்றையும் ஒத்து மிகவேட்கையோடுமொய்த்தார்—எ-று. (௩)

பொருளையே என்னும் பிரிநிலை ஏகாரத்தைக்காதலே எனக்கூட்டுக.

பள்ளத்துப்பாயுநன்னீரனையவர்பானல்பூத்த ... ... *
வெள்ளத்துப்பெரியகண்ணார்மென்சிலம்பலம்பமென்பூத், ... *
தள்ளத்தம்மிடைகணோவத்தமைவலித்தவன்பாற்செல்லும் ... *
உள்ளத்தைப்பிடித்துநாமென்றோடுகின்றாருமொத்தார் ... *

(இ-ள்) பள்ளமாகியநிலத்தில் பாயாநின்ற தெளிந்தநீரை ஒத்தவர்களாகிய வெள்ளத்திலும் பெரியகண்களையுடையமங்கையர்கள், மெல்லியதொழிலமைந்தசிலம்புகள் ஒலிக்கும்படி பாதமாகிய மெல்லியதாமரை மலர்கள் தள்ளாடவும் தம்மிடைகள்வருந்தவும் தம்மை வலித்துக்கொண்டு அச்சீராமபிரான்பால் செல்லுகின்ற தம்முள்ளத்தை நாம்பிடிப்போமென்று ஓடுகின்றாரும் ஒத்தார்—எ-று. (௪)

ஆரத்தமுண்டனையமேனியகலிகைகளித்ததாளும் ... ... *
விளைக்கருங்குழலிக்காகவில்லிறநிமிர்ந்துவீங்கும் ... ... *

வரைத்தடந்தோளுங்காணமாறுகினின்வீழுமாதர் ... ... *
இரைத்துவந்தமிழ்தின்மொய்க்குமீயினமென்னலானார் ... *

(இ-ள்) செந்நிறத்தையுண்டாலொத்தமேனியையுடைய, அகலிகையென்பவள் கல்லுக்களித்த சீர்பாதங்களையும் இயற்கையமைந்த கருமையாகியகுழலையுடைய சீதாபிராட்டிக்காக வில்முறிய உயர்ந்து பூரித்த மலையையொத்த பெரியதோள்களையுங் காணும்படி வீதியில் மொய்க்கின்ற மாதர்கள் இரைத்துவந்து அமுதத்தைமொய்த்துக் கொள்ளும் ஈக்கூட்டமென்னலானார்—எ-று. (௫)

வீதிவாய்ச்செல்கின்றான்போல்விழித்திமையாதுநின்ற ... *
மாதரார்கண்களூடேவாவுமான்றேரிற்செல்வான் ... ... *
யாதினுமுயர்ந்தோர்தம்மையாவர்க்குங்கண்ணனென்றே... *
ஓதியபெயர்க்குத்தானேயுறும்பொருளுணர்த்திவிட்டான் ... *

(இ-ள்) ஸ்ரீராமபிரான் வீதியிற்செல்கின்றவன்போன்று இமையாமல்விழித்துநின்ற மாதர்களுடையகண்களுக்குள், தாவுகின்ற குதிரைகள் பூண்ட தேரின்மீது செல்கின்றவனாகி (வேதமுதலிய) எந்நூலினும் உயர்ந்த புலமையுடையோர், யாவர்களுக்குங் கண்ணனென்று தன்னைக்கூறிய பெயர்க்குத்தானேதக்கபொருளை உணர்த்திவிட்டான்—எ-று. (௬)

எண்கடந்தலகிலாதின்றேகுறுமிவன்றேரொன்று ... ... *
பெண்கடந்தப்பிறைந்தும்பேதுறுகின்றகாலை... ... ...*
மண்கடந்தமரர்வைகும்வான்கடந்தானைத்தான்றன் ... ...*
கண்கடவாதுகாத்தகாரிகைபெரியள்காண் ... ... *

(இ-ள்) இவ்வரசிளங்குமாரனுடையதேர் உள்ளத்தின் வேகத்தைக்கடந்து (தன்வேகத்துக்கு) அளவில்லாமல் இன்றுசெல்லாநின்றதென்று பெண்கள் தங்கள் கண்களுக்குள் நெருங்கி உன்மத்தராகுங்காலத்திலும் மண்ணுலகத்தைத்தாவித் தேவர்கள்வாழ்கின்ற விண்ணுலகத்தையும் தாவியளந்த பெரியோனைத் தான்தனது கண்மயலைக்கடக்காமல்காத்துக்கொண்ட சீதாபிராட்டியேபெரியள்—எ-று. (௭)

ஸ்ரீராமபிரான், தனதுவடிவழகைக்கண்டு அணையப்பெறாமல் மங்கையர்கள்வருந்தாநிற்கவும் அவர்களைச்சிறிதும்நோக்காமல் பிராட்டிபக்கலிலேயே கருத்துடையனாய்ச் சென்றானென்பதுகருத்து. சிறப்பும்மையு மிறந்ததுதழீஇயவெச்சவும்மையும்விகாரத்தாற்றொக்கன

பயிரொன்றுகலையுஞ்சங்கும்பழிப்பருநலனும்பண்பும் ... *
செயிரின்றியலர்ந்தபொற்பும்சிந்தையுமுணர்வுந்தேசும் ...*
வயிரஞ்செய்பூணுநாணுமடனுந்தன்னிறையுமற்றும் ... ...*
உயிரொன்றுமொழியவெல்லாமுகுத்தொருதெரிவைநின்றாள் *

(இ-ள்.) அவர்களுள் ஒருபெண் தன்னுயிரொன்றுந்தவிரப் பயிர்ப்பையும் போலப்பிரியாதுபொருந்தியசேலையையும்கைவளையையும்பழித்தலில்லாத பெண்ணலத்தையும் இயற்கைக்குணத்தையும் குற்றமில்லாமல் உண்டாகிய அழகையும் எண்ணத்தையும் அறிவையும் மாமைநிறத்தையும் வயிரத்தாற்

செய்தபூண்களையும் நாணத்தையும்மடமைக்குணத்தையும் கல்வியறிவையு
ம் மற்றையவற்றையும் முழுவதுமிழந்துநின்றாள்—எ-று. (௮)

குழைபொருகயலினின்றுகொண்டலின்றுளிசிந்தத் ... ... *
தழைபொருகரும்பின்சாபத்தனங்கவேள்சரங்கள்பாய ... *
இழைபொருபுண்ணையுறுதவிளநூலொருத்திசோர்ந்து. ... *
மழைபொருமுகிலின்மின்னின்மருங்குல்போலுடங்கிநின்றாள். ... *

(இ-ள்) (காதிலணிந்த) குழைகளில் பாய்ந்து விளங்குகின்ற கயலாகிய
செங்கண் மேகத்தினின்று வருவதுபோல நீர்த்துளிகளைச்சிந்தும்படி தழையையி
ல்லாத கரும்பாகிய வில்லினின்று அநங்கனாகிய மன்மதனது அம்புகள்பாய்
ந்திருந்தபுண்ணை நீங்காத நூலிழையிடையே செல்லாதுபுடைத்த இளமையா
கிய அழகையுடைய ஒருத்தி சோர்ந்து மேகத்திலில்லாத மின்னையொத்த நு
ண்ணிடையைப்போலத் துவண்டுநின்றாள்—எ-று. (௯)

பஞ்சணிவிரலினார்தம்படைநெடுங்கண்களெல்லாம் ... ... *
செஞ்செவேயையன்மெய்யிற்கருமையைச்சேர்ந்தவோதான் ... *
மஞ்சனமேனியான்றன்மணிநிறமாதரார்தம் ... ... *
அஞ்சனநோக்கம்பார்க்கவிருண்டதோவறிகிலோம். ... ... *

(இ-ள்.) பஞ்சினது மென்மையையொத்த மெல்லிய அழகிய விரல்களை
யுடைய மாதர்களது வேந்தபடைபோன்ற நெடியகண்களெல்லாம் ஐயனுடை
ய திருமேனியிலுள்ள கருமையை மிகுதியுநேர்மையாகச் சேர்ந்தனவோ
(அன்றி) மேகத்தையொத்த திருமேனியையுடைய ஐயனது அழகிய நிறமா
னது அம்மாதர்கள் தம்முடைய கரியகண்களால்பார்க்கக்கருத்ததோ யாதோ
தெளியோம்—எ-று. இது ஐயவணி. (௰)

மாந்தளிர்மேனியாளோர்வாணுதன்மதனனென்னும் ... ... *
பூந்துணர்வாளிமாரிபொழிகின்றபூசனோக்கி ... ... *
வேந்தர்கோனாணைநோக்கான்வீரன்வில்லாண்மைபாரான் ... *
ஏந்திழையாரையெய்வானியாவனோவொருவனென்றாள் ... *

(இ-ள்.) மாந்தளிரையொத்தமேனியாளாகிய ஒளியமைந்த நெற்றியையு
டைய ஒருத்தி, எல்லாமங்கையர்மேலும் மன்மதன் பொழிவாகிய மலரம்பு
மழையைப்பொழியாநின்ற போரைநோக்கி, சக்கரவர்த்தியினுடைய ஆ
ணையை மதியாமலும் இவ்வீரனுடையவில்லினாற்பராக்கிரமத்தை ஆலோ
சியாமலும் உயர்ந்த அணியணிந்தமாதர்களை எய்யாநின்றான் (அவன்) எத்த
ன்மையனோ என்றாள்—எ-று. (௰௧)

வேந்தர்கோனாணையைநோக்கி யச்சமும் வீரன்வில்லாண்மையைநோக்கி நாணமுமின்
றி ஏந்திழையாரையெய்வதினால் இரக்கமுமில்லாதவனாகலின் யாவனோவென்றாள்.

சொன்னலங்கடந்தகாமச்சுவையையோருருவமாக்கி ... ... *
இன்னலந்தெரியவல்லாரெழுதியதென்னநின்றாள் ... ... *
பொன்னையும்பொருவுநீராள்புனைந்தனவெல்லாம்போகத் ... *
தன்னையுந்தாங்கலாதுகிலொன்றுந்தாங்கிநின்றாள் ... ... *

(இ-ள்.) சொல்லுக்கும் மற்றெல்லா இன்பங்களுக்கும் மேற்பட்ட காமச் சுவையை ஒருருவமாகச்செய்து இன்பநயங்களை அறியவல்லவர்கள் எழுதி யதுபோல அசைவற்றுநின்றாள் பொற்பாவையையும் ஒக்குந் தன்மையாள் (இவள்) அணிந்தனவெல்லாம் நீங்கத் தன்னையுந் தாங்கும் வலியில்லாளாகிச் சேலையொன்றையுந் தாங்கிநின்றாள்—எ-று. (௰௨)

அகத்தின்கணிகழ்ந்த காமச்சுவை பிறர்க்குப்புலப்படுமாறிற்றெனவாயாற் கூறலரிய தும் ஏனையுலகவின்பங்களிற் சிறந்ததுமாகலிற் சொன்னலங்கடந்த காமச்சுவையென்றார். சொல் ஆகுபெயர்.

விற்றங்குபுருவநெற்றிவெயர்வரப்பசலைவிம்மச் ... ...*
சுற்றெங்குமெறிப்பவுள்ளஞ்சோரவோர்தோகைநின்றாள் ...*
கொற்றஞ்செய்கொலைவேலென்னக்கூற்றெனக்கொடியகண்ணா
மற்றொன்றுங்காண்கிலாதாடமியனோவள்ளலென்றாள் ....[ண்

(இ-ள்) மயிலையொத்த ஒருத்தி வில்லின தழகுதங்கிய புருவத்திலும் நெற்றியிலும் வெயர்வை ஒழுகவும் பசலை உடல்முழுமையுமிக எறிப்பவும் மனநிலைதளரவும் நின்றாள் வெற்றியைத்தருகின்ற கொல்லுந் தொழிலையுடைய வேல்போலவும் கூற்றுவன்போலவும் கொடுமையுடையகண்ணாளாகிய அவள், (தன்மனச்சீராமபிரான்பக்கலிலேசென்று பற்றியதாசையால்)வேறொருபொருளையுங்காணாளாகி வள்ளல் தனியனோ என்றாள்—எ-று. (௰௩)

தமியனோ என்னும் ஓகாரம், நீங்கினளோவென் பூங்கண்ணளே என்றாற்போல இரக்கக் குறிப்புணர்த்திற்று. யாதொருமுயற்சியுமின்றி வாளாவிருப்பவுந் தனது தண்ணருளாற்றனே வீதிவாய்வந்துதன்வடிவழகின்பெருக்கையாவருங்கண்ணாரக்கண்டு பருகவரையாதுதவுகின்ற மையின்வள்ளலென்றும், இவ்வாறு வரையாதுதவுகின்றபெருங்குணத்தினன் யாதொருதுணை யுமின்றிச் செல்கின்றானென்னு மிரக்கத்தால் தமியனோவென்றுங் கூறினாள். பசலையென்பது விரும்பியகாதலனையணையப்பெறாத்துன்பாலுளதாவதோர் நிறவேறுபாடு.

மைக்கருங்கூந்தற்செவ்வாய்வாணுதலொருத்தியுள்ள ... ... *
நெக்கனளுருகுகின்றேனெஞ்சிடைவஞ்சன்வந்து ... ... *
புக்கனன்போகாவண்ணங்கண்ணெனும்புலன்கொள்வாயுஞ் ...*
சிக்கெனவடைத்தேன்றோழிசேருதுமமளியென்றாள் .... *

(இ-ள்) மையொத்தகருமையாகியகூந்தலையும்சிவந்தவாயையும் ஒளியமைந்தநெற்றியையுமுடைய ஒருத்திஉள்ளம்தளர்ந்துஉருகாநின்றவளாய்த்தோழியே வஞ்சனானவன் என்னெஞ்சில் வந்து புகுந்தனன் இனிப் போகாதவகை கண்ணென்னும் புலனாகிய வழியையும் விரைவாக அடைத்துவிட்டேன் சயனத்தைச்சேருவோமென்றாள்—எ-று. (௰௪)

தானே இங்குவந்து நம்மெல்லோருக்கும் வேட்கையைப்பெருக்கி அது பயன்படுமாறு தழுவலும், உள்ளத்தேவரல் மீண்டு புறத்தேசேரலாகு மிவற்றுளொரு நிலையினிற்றலு மில் லானென்னுங்கருத்தால் வஞ்சனென்றும் தன்போலவே தோழியும் வேட்கையளாகலானும் தான்கண்ணெனும் புலன்கொள்வாயைச்சிக்கெனவடைத்தலின் அவளை யுடன்கொண்டு போதவேண்டுமாகலானுமவளைத்தன்னோடுளப்படுத்திச்சேருதுமென்றுங்கூறினாள்.

நோக்கணங்கனையமேனிதைத்தவேள்சரங்கள்பாராள் ... *
நீக்கியகல்லுந்தூசும்வேறுவேறனதோராள் ... ...*

ஆக்கியபாவையன்னாளொருத்தியாண்டமலன்மேனி ... ... *
நோக்குறுவாரையெல்லாமெரியெழநோக்குகின்றாள் ... ... *

(இ-ள்) திருமகளினது மேனியையொத்த தன்மேனியில் தைத்த மன்மதபாணங்களை மதியாமலும் கட்டிய அணிகளும் சேலையும் விலகியதை அறியாமலும் அப்பொற்சித்திரப்பாவையை ஒத்தவளாகிய ஒருத்தி அவ்விடத்தில் குற்றமில்லாதாகிய சீராமபிரானது திருமேனியை நோக்குகின்றவர்களையெல்லாம் தீயெழநோக்குகின்றாள்—எ-று. (௰௫)

யாவரும் ஒருங்கே நோக்கலின் திருமேனிக்குக் கண்ணெச்சில் படுமென்னுங்கருத்தானும் தன்னை அமலனுக்குரியாளாகக்கருதி மனையோர் நோக்கப்பொறாது அவ்வுரிமை நமக்கின்றென்னுங்கருத்தாலும் நோக்குறுவாரையெல்லாம் எரியெழ நோக்குவாளாயினாள்.

களிப்பனமதர்ப்பநீண்டு கருப்பினையளப்பகள்ளம் ... ... *
ஒளிப்பனவெளிப்பட்டோடப்பார்ப்பனசிவப்புள்ளூற ... *
வெளுப்பனகறுப்பவானவேற்கணாளொருத்தியுள்ளந் ... ... *
குளிர்ப்பொடுகாணவந்தாள்வெதுப்பொடுகோயில்புக்காள்.. *

(இ-ள்.) களிப்பன செருக்குவன நீண்டு கன்னத்தை அளப்பன கள்ளம் மறைகற்கிடமாவன அப்புறப்பட்டு உருவப்பார்ப்பனசிவப்பு உள்ளேபொருந்தவெளுப்பன கறுப்பன ஆகியவேல்போலுங்கண்ணுளாகிய ஒருத்திமனங்களித்தகுளிர்ச்சியொடு காணும்படிவந்தாள் (கண்டபின்) காமவெப்பத்தோடுமனைக்குச்சென்றாள்—எ-று. (௰௬)

கருங்குழற்பாரம்வார்கொள்கனமுலைகலைசூழல்குல் ... ... *
நெருங்கினமறைப்பவாண்டோர்நீக்கிடம்பெறாதவிம்மும். *
பெருந்தடங்கண்ணிகாணும்பேரொழிலாசைதூண்ட ... ... *
மருங்குலின்வெளிகளூடேவள்ளலைநோக்குகின்றாள் ... ... *

(இ-ள்.) (அங்கு நெருங்கிய மங்கையர்களுடைய) கருமையாகிய கூந்தற்பாரமும் வாரணிந்தகனமாகிய தனபாரமும் கலைசூழ்ந்த அல்குற்பாரமும் நெருங்கினவாகி (ஐயன்திருமேனியை) மறைத்தலினால் அங்கு சிறிதுநீக்கிடத்தைப் பெறாமல்புலம்புகின்ற மிகப்பெரிய கண்ணையுடையாள் காணவிரும்புகின்ற கட்டழகி னாசையானது தன்னை ஏவுதலால் (அம்மங்கையர்களது) இடைகளின்வெளிகளிலே வள்ளலை நோக்குகின்றாள்—எ-று. (௰௭)

வரித்தவாளனங்கன்வாளிமனத்தூன்றனவுமாதர் ... ... *
எரித்தபூணிமைக்கொங்கைவெயர்த்தபோதிழிந்தசாந்துஞ் ..*
சரிந்தமேகலையுமுத்துஞ்சங்குமுந்தாழ்ந்தகூந்தல் ... ... *
விரிந்தபூந்தொடையுமன்றிவெள்ளிடையரிதவ்வீதி ... ... *

(இ-ள்.) (உடைமேல்கட்டியவாளையுடைய மன்மதனது அம்புகளில் மாதர்களது) நெஞ்சிலேதைத்துக் கழன்றனவும் (உடல்வெப்பத்தால்) எரிந்தஅணிக்கூட்டமும் கொங்கைகள் வியர்த்தகாலையில் ஒழுகியசந்தனமும் சரிந்துவீழ்ந்த மேகலையும் முத்துவடமும் கைவளையும் நீண்டகூந்தலவிழ்ந்துவிரிதலாலுதிர்ந்த பூமாலையும் அல்லாமல் அவ்வீதி வெற்றிடமரியது-எ-று (௰௮)

தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன ... *
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண்டாருமஃதே ... *
வாள்கொண்டகண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார் ... *
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண்டாரையொத்தார் ... *

(இ-ள்.) (அவ்வாறு பலரும் ஒருங்கு நோக்குகையில்) இராமனது திருத்தோள்களின் அழகைக்கண்டோர் அத்திருத்தோள்களின் அழகைமாத்திரமே கண்டார்; வீரக்கழலைக் கட்டிய தாமரை மலர் போன்ற திருவடிகளின் அழகைக்கண்டோர் அத்திருவடிகளின் அழகை மாத்திரமே கண்டார்; பெருமையையுடைய திருக்கைகளின் அழகைக்கண்டோர் அத்திருக்கைகளின் அழகையே கண்டார் - வாளின் அழகைக்கொண்ட கண்களையுடைய மங்கையர்களில் யார் அத்திருமேனியின் அழகை முற்றக்கண்டார்? ஒருவருமில்லை - முறைமையைக்கொண்ட சமயங்களில் (இறைவனுடைய) அவ்வெம்பெருமானது உருவத்தைக்கண்டவரை யொத்தார் — எ-று. (௰௯)

எல்லாச்சமயக் கடவுளர்களும் இவ்விறைவனுடைய அங்கங்களென்பவாகலி னவ்வச் சமயிகள் தத்தங்கடவுளருடைய நிலையைமுற்று முணரலாகாவாறுபோல இம்மாதர்களுந் தாங் கண்டவற்ற லவனதெல்லாவுறுப்பையுமுற் றக்கண்டிலரென்பது கருத்து. த்ருக்குறளைக் காணவற்று ராஃதொழிந் தேனையவற்றைக்காண லுற்றிலரெனப் பொருள்கொள்ளலுமொன்று - அது பொருத்திலை.

வேறு.

ஐயச்சிற்றிடையாளொருத்திமுன் ... ...*
உய்யத்தாருனைக்காணத் தெளிந்திலன் ... ...*
வையமுற்றும்வயிற்றினடக்கிய ... ... *
ஐயனிற்பெரியாரினியாவரே ... ...*

(இ-ள்.) உலகங்களை யாவற்றையும்வயிற்றில் அடக்கிய ஐயனிலும் பெரியார் இனி யாவர்? - என்றுரைத்து அவ்வயன் சிறிய இடையையுடையாளொருத்தி நீண்ட கூந்தலின் பாரம் நெருக்கிய ஒருதையல் (வருந்தாமல்) உய்யும்படி அவ்வுள்ளத்தில் அடங்கினன் — எ-று. (௨௰)

அலம்புபாரக்குழலியொருத்தியிழை ... ...*
இலம்புமேகலையுமெலியவிழ்ந்திட... ... ... *
நலம்பெய்கொம்பினைநடந்துவந்தெய்தினள் ... ...*
புலம்புசேடியர்கைபிணைப்பாயினள் ... ...*

(இ-ள்.) மாசற்றவிய அளகபாரத்தையுடையாளாகிய குற்றமில்லாத ஆபரணங்களையுடைய ஒருத்தி (ஸ்ரீராமபிரானைக்காணவேண்டுமென்று) சிலம்பும் மேகலையும் ஒலிசெய்யும்படி அலங்காரம் நிரம்பியபூங்கொம்பு போல நடந்துவந்து சேர்ந்தாள் (தன்வருத்தத்தைக்குறித்து) இரங்குகின்ற தோழியர்களுடையகைகளின் தொடர்பிற்றாள் — எ-று. (௨௧)

புலம்புசேடிய ரென்பதற்கு இச்சீராமபிரானைப்பிரியுமாறு தமக்குவாய்த்ததென் றிரங்குகின்றசேடியரொளினுமொக்கும்.

அரும்புமென்முலையாளங்கோரியிழை... ... ... *
இரும்புநெஞ்சினையேனுமெலாமுழக்காப் ... ...*

பொருப்புவிற்கைப்பொழிசெய்கடன்மீமா ... ...*
கருப்புவில்லிருந்தாட்கொண்மகோவென்றாள் ... ... *

(இ-ள்.) அங்கே, தாமரையரும்பைப்பொத்த தனித்தமெல்லிய முலையாளா கிய ஒரு மடந்தையானவள், (ஸ்ரீராமபிரானைநோக்கி எம்பெருமானே) அரும்பைப்பொத்த கரும்பைப்போன்ற சடையாயிருக்கும் ஒருவன் கையிலே மலையைப்பொத்த வில்லைப்பொழிசெய்த நல்வினைப்பயனையுடையவன் கருப்புவில்லை முறித்து அடிமைகொண்டு காவாயென்றாள்—எ-று. ()

மைதவழ்ந்தகருங்கணோர்வாணுதல் ... ...*
செய்தவன்றனித்தேர்மிசைச்சென்றவிட் ... ...*
டெய்தவந்தெதிர்நின்றமைதானிது ... ...*
கைதவங்கொல்கணவுகொலாமென்றாள் ... ...*

(இ-ள்.) மைபொருந்திய கருமையாகிய கண்களையும் ஒளியமைந்த நெற்றியையுமுடைய ஒருத்தி முன்னைச்செய்ததவப்பயனையுடையான் தனித்தேர்மீது சென்றுவிட்டு நெருங்கவந்து என்னெதிர் நின்றமையானது இது இவன்செய்யும் கபடமோ கனவோ என்றுசொன்னாள்—எ-று. ()

இச்ஸ்ரீராமபிரானுடைய வடிவழகுகண்டோர்க்கு இரும்பூதெய்துவித்தலின் இதுவேறு தவம்புரிந்து பெற்றதென்னுங்கருத்தால் செய்தவனென்றாள்.

மாதொருத்திமனத்தினையல்லதோர் ... ...*
தாதுவைத்தவளின்னுயிர்சோர்கின்றாள் ... ... *
போதுநிக்கட்பொலன்குழைப்பூண்முலைச் ... ... *
சீதைபெற்றதவஞ்செய்தனளோவென்றாள் ... ...*

(இ-ள்.) மாதாகிய ஒருத்தி, தன்மனத்தைதவிரவேறொன்றைதையும் பெறாமல் இனியவுயிர்சோராநின்று தாமரைமலர்போன்றகண்களையுடைய பொருந்தியகண்களையும் பொன்னாற்செய்த குழையையும் பூணையணிந்த முலையையுமுடைய சீதாபிராட்டியானவள் எந்தத்தவத்தைச்செய்தாளோ என்றாள். ()

இவனுடைய வடிவழகைக்கண்ணாரக்கண்டு இனியநயமொழிகளைச்செவியாரக்கேட்டு திருமேனியை மெய்யாரத்தழுவும் பெரும்பேற்றினையெய்தாள் போதுநிக்கட் பொலன்குழைப்பூண்முலைச் சீதையெனவும் தாதுமுதலிய மூயற்சியின்றி யெளிதிலடையப்பெற்றாள் தவந்தானென்னெனவும் அளவுமொருமையினன்றி பெருமையினாலும் எந்த தவஞ்செய்தனளோவெனவும் இவள்பூவிலொருத்தியோ போலுமென்ன பலபிறப்புகளில் செய்தனளோ வெனக்கேட்டு நெறிதவறாதுபுரிந்ததவத்தாலெனக்குந் தெரியும் புரிந்திலேனே யென்பது குறிப்பெச்சம்.

பழுதிலாவொருபாவையன்றொருத்தி ... ...*
தழுவிவாட்டுமித்தன்புடைத்தோழியைத் ... ...*
தொழுதுசோர்ந்துயிர்வாடிநின்றவள் ... ...*
எழுதுகைக்கொல்லியலமோதுசொல்லென்றாள் ... ... *

(இ-ள்.) குற்றமில்லாத அழகுமிக்க ஒருத்தி பாவையைப்போல ஒருத்தி பக்கத்து அழகு மெய்யாக தோழியையத் தழுவி

டைய தோழியைத்தொழுது சோர்ந்துதளர்பவளாய் இவ்வரசிளங்குமரனை இம்மன்மதனால் எழுதலாகுமோவென்றாள்—எ-று. (௨௫)

எழுதருந்தகையதோர் தேரிப்பேரழகனைக்கொண்டு வீணைதலிற்பதைத்தும் இனிக்காணவென்று கூறிக்கொலோவெனவழுதுமிவனது சுந்தரத்தோள்களைத்தழுவலாம்பெரும்பேறுடையாள் சீதைபேயன்றி யானல்லேனுயிரனைனைவர்க்கவர்ந்துவெய்துயிர்த்தும்தான் வேண்டிய வேண்டியாங்கியற்றவல்ல அன்புடைத்தோழியை நோக்கியிவனது சுந்தரத்தோள்களையான்தழுவுமாறு ஏதேனுமோர்விரகுசெய்யவல்லையோவெனத் தொழுதும் அது அவட்கு அலாகாமையுணர்ந்து சோர்ந்தும் இவனதுருவத்தை ஓர்படத்தெழுதிக்காட்டியேனுங் கண்ணாற்கண்ணுற்று வேட்கைதீர்வேமெனக்கருதி அதுமுடித்தலருமைநோக்கி அயர்ந்துந்தோழியை நோக்கி எழுதலரிய திருமேனியை யுடையானென்பாள் இந்தத்தோற்றலெனவும் இவன் முன்னர்நிற்க நாணி யொளிந்துநின்று நம்போலியர்மாட்டுத் தன்றண்மைகாட்டு மெல்லியனென்பாள் இம்மன்மதனெனவுங்கூறினாள்,

வண்ணவாயொணுதலாளுதன்மானிடற் ... ...*
கெண்ணுங்காலிவ்விலக்கணமெய்திட ... ...*
ஒண்ணுமோவிதுணர்த்துகின்றேனிவன் ... ...*
கண்ணனேயிதுகண்டிரும்பின்னென்றாள் ... ...*

(இ-ள்.) அழகியவாயையும் ஒள்ளியநெற்றியையுமுடைய ஒருத்தி (சிலரை நோக்கி) ஆராயுமிடத்து இவ்வடிவிலக்கணம் மானிடனுக்கு அமையக்கூடுமோ கூடாது இவ்விலக்கணவமைதியை (உமக்குத்) தெரிவிக்கின்றேன் இவ்விலக்கணவமைதியையுடையான் இறையவனே இனியதைக்கண்டிருமென்றாள்—எ-று. (௨௬)

கனகநூபுரங்கைவளையோடுக ... ...*
மனநெகும்படிவாடியொர்வாணுதல் ... ...*
அனகனிந்நகரெய்தியதாதியிற் ... ...*
சனகர்செய்தவப்பயனென்றாள் ... ...*

(இ-ள்.) ஓர்வாணுதலாளவள் பொன்னாற்செய்தகாற்சிலம்பு கைவளையோடு கழன்றுசிந்தவும் மனநெகிழ்ந்துவாடி வடிவுறுஞ் செய்கைகளில்குற்றமில்லான் இந்த நகரத்தில் வந்தது முதற்றொட்டுச் சனகராசர்செய்து வந்த தவப்பயனாமென்றாள்—எ-று. (௨௭)

இவனதுவருகை இந்நகரமாதர்யார்க்கும் பயன்படாது சீதையொருத்திக்கே பயன்படல்கருதி அவள்புரிந்த தவமொன்றுமேயமையாது, அவளது தாதை மூதாதை முதலியோர் புரிந்த தவத்தாலாகுமென்பாள் சனகர்செய்த தவப்பயனென்றாள். தவம்புரிதற்குரியார் பெரும்பாலுமாண்மக்களே யாதலிற்சிறப்புக்கருதித் தந்தைமரபொன்றுமே கூறினாள்

நனிவருந்திநலங்குடிபோயிடப் ... ...*
பனிவருங்கணொர்பாசிழையல்குலாள் ... ...*
முனிவருங்குலமன்னருமொய்ப்புறத் ... ...*
தனிவருங்கொல்கனவின்றலையென்றாள் ... ...*

(இ-ள்.) நீர்துளிக்கின்ற கண்களையும் பசும்பொன்னாலணிந்த அல்குலையுமுடைய ஒருத்திதன்னழகினலம் நீங்கும்படிமிகவருந்தி, இந்தம்பி மு

ளிவர்களும் சிறந்த அரசர்களும் நெருங்குதலில்லாமல் கனவிலே தனித்து வருவாரோவென்றாள்—எ-று. (௨௮)

அவ்வாறுவரின்யானே சென்றுகூடுவேனென்பது குறிப்பெச்சம். இமை-முதற்காரணவாகுபெயர்.

புனங்கொள்கார்மயில்போலிபோர்பொற்கொடி ... *
மனங்கொள்காதன்மறைத்தலைப்பெய்தினாள் ... ...*
அனங்கவேளதறிந்தனனற்றந்தான் ... ...*
மனங்கள்போலமுகமுமறைக்குமே ... ... *

(இ-ள்) புனத்தைத்தங்கு மிடமாக்கொண்ட கார்காலத்திற் களித்தற்குரிய மயிலையொத்தவளாகிய பொற்கொடிபோன்ற ஒருத்தி தன்மனத்தை நிறைத்த காதலைப் புறத்தே தோன்றாமல் ஒளித்தலைப்பெய்தினாள். ஒளிக்கக்கருதியதை மனத்தைப்போல முகமும் மறைக்குமோ மறைக்காது (ஆதலால்) அநங்கனாகியவேள் அதை அறிந்தனன்—எ-று. (௨௯)

மனங்கள் சாதிப்பன்மை.

இணைநெடுங்கணோநேர்திழைபேந்துபூ ... ... *
அணையணைந்திடியுண்டவராவெனப் ... ...*
புணர்நலங்கிளர்கொங்கைபுழுங்கிட ... ...*
உணர்வழுங்கவுயிர்த்தனளாவியே ... ...*

(இ-ள்) தம்முள் ஒத்தவுருவமைந்த நெடியகண்களையும் உயர்ந்த அணிகளையுமுடைய ஒருத்தி உயர்ந்த பூவணையைச்சேர்ந்து இடியோசையைக்கேட்ட பாம்புபோல நெருங்கிய அழகுவிளங்குகின்ற கொங்கைகள் புழுங்கவும் அறிவுகெடவும் வருந்திப் பெருமூச்சுவிட்டாள்—எ-று. (௩௰)

ஆம்பலொத்தமுதூறுசெவ்வாய்ச்சியர் ... ... *
தாம்பதைத்துயிருட்டுமாறுவார் ... ...*
தேம்புசிற்றிடைச்சீதையைப்போற்சிறி ... ...*
தேம்பல்பெற்றிலரெங்ஙனமுய்வரே ... ... *

(இ-ள்) செவ்வாம்பலையொத்துச் சொல்லாகிய அமுது உண்டாகாநின்ற சிவந்தவாயையுடைய மாதர்கள் பதைத்து உள்ளே உயிர்தடுமாறுவார்கள் தனபாரத்தால் வருந்துகின்ற சிறிய இடையையுடைய சீதாபிராட்டியைப் போலச் சிறிதுகளிப்பையும் பெற்றிலர் எவ்வாறுபிழைப்பார்-எ-று. (௩௧)

வேர்த்துமேனிதளர்ந்துயிர்விம்மலோ ... ...*
டார்த்தியுற்றமடந்தையராவாயுந் ... ...*
தீர்த்தனித்தனைசிந்தையிற்செங்கணிற் ... ...*
பார்த்திலானுட்பரிவிலனோவென்றாள் ... ...*

(இ-ள்.) உயிர்நிலைதளர்ந்து வருத்தத்தோடு விருப்பம் முற்றப்பெறுதுகலையையடைந்த மாதர்கள்யாவையும் இப்புருடோத்தமன் சிறிதும் கருத்தினாலும் செந்தாமரைமலர்போன்ற கண்களாலும் நோக்கிலான் ஆகலால் உள்ளத்தில் அன்பில்லானோ என்றாள்—எ-று. (௩௨)

இத்தனை என்பது இலக்கணையானே சிறிதுமெனப்பொருடந்தது. முற்றும்மைவிகாரத்தாற்றொக்கது, நாணித்தனையுமிலாதாய்நப்பின்னை காணினென்னும் விட்டுசித்தர் அருளிச்செயலிலும் இத்தனையுமென்பதற்குச் சிறிதுமெனப்பொருள்படல்காண்க அன்றியும் அதுவியாக்கியானத்தானுந்தெற்றெனவுணர்க.

> மையம்பற்றியமங்கையரென்னணிலர் ... ...
> ஐயன்பொற்புக்களவிலையாதலால் ... ...
> எய்யும்பொற்சிலைமாரனுமென்செய்வான் ... ...
> கையம்பற்றுடைவாளினுங்கைவைத்தான் ... ...

(இ-ள்.) மையைப்பற்றிச்செல்கின்ற மங்கையர்கள் ஒருவரும் விடவில்லார் ஐயனுடைய அழகுக்கு அளவில்லை ஆதலால் அம்மாரனும் பொற்சிலை என்னசெய்வான் தன்கையிலுள்ள அம்புகளினாலன்றி உடைவாளினுங் கைவைத்தான்—எ-று. (௫௫)

> நானவார்குழனரியரோடலால் ... ...
> வேனில்வேளொடுமேனுறைவார்களோ ... ...
> டானபூசலிற்றிலைப்புவேபாய் ... ...
> வானநாடியர்மார்பினுந்தைத்தவே ... ...

(இ-ள்.) மணமமைந்த நீண்டகூந்தலையுடைய இம்மாதர்கள்பால் நடந்துபோனையல்லாமல் வசந்தகாலத்திற்குரிய மன்மதனுக்கு, சுவர்க்கத்தில் வசிக்கின்ற தெய்வப்பெண்கள்பால் நடந்தபோரை அறிந்ததில்லை அவனுடைய அம்புகள்சென்று அவ்வான நாட்டுப் பெண்களுடைய கொங்கைகளினுந்தைத்தன—எ-று. (௫௬)

வானநாடியரென்பது சுட்டின்பொருளதாய்நின்றபெயர். சீராமபிரானுடையவடிவழகைக்கண்டு மேலுறைவார்களும் நிறையழிந்தனரொன்பதுகருத்து,

> மருண்மயங்குமடந்தையர்மாட்டொரு ... ...
> பொருணயத்திலன்போகின்றதேயிவன் ... ...
> கருணையென்பதுகண்டறியான்பெரும் ... ...
> பரிணதன்கொல்பழிபொலையாளென்றாள் ... ...

(இ-ள்.) மிகுதியுமயங்குகின்ற மங்கையர்களிடத்தில் ஒரு பொருளையும் விரும்பாதவனாய்ச் சும்மாபோகின்றதே இவனதுசெயல். ஆதலால் கருணையென்பதைக் கண்டறியான் (மங்கையர்பாலருளோபின்மையால்) பெருமையாகிய பக்குவப்பட்ட ஞானமுடையானோ இச் சீதாபிராட்டியை மனத்திற் செல்லவிடுதலால் அவனுமலலன் விக்கிரகொலைப்பழி யென்னவென்றாள்—எ-று. (௫௭)

தம்மைக்கண்ணுநோக்க அமின்றிச்சேறலின்றார் பொருணநயத்திலனென்றாள். ஒர்பொருளென்பதில் இழிவுசிறப்போடு முற்றும்பொருள்படநின்ற வும்மைவிகாரத்தாற்றொக்கது. இவனதுசெயல்-எ-து, அவாய் நிலையான்வந்தது. ஏனைய இசையெச்சம்.

> தொய்யில்வெய்யமுலைத்துடிபோலிடை ... ...
> நையுநொய்யமருங்குலொர்நங்கைதான் ... ...
> கையுமெய்யுமறிந்திலள்கண்டவள் ... ...
> உய்யுமுய்யுமெனத்தளர்ந்தோய்வுற்றாள் ... ...

(இ-ள்.) தொய்யிலெழுதிய காமவெப்பத்தையுடைய கொங்கைகளால் உடுக்கைபோன்ற இடைவருந்துகின்ற ஒரு தொய்யமருங்குலையுடைய நங்கையானவள் கையுமெய்யும் அறிந்திலள் கண்ட தோழியானவள் பிழைப்பாள் பிழைப்பாளென்று சொல்லும்படி உடல்தளர்ந்து செயலற்றாள் — எ-று. (௯௭)

பூசற்புரிபவர் போலொரு ... ... *
பாயன்மேற்கொடு புகழ்மலர்ப் பாதங்கள் ... ... *
சேக்கைசேர்தரச் சேவகன் றெரிக்கின் ... ... *
எருமீறுமிதென் செய்கவாறரோ ... ... *

(இ-ள்.) சருக்கரைப்பாகின் பதார்த்தமே போலும் மதுரமாகிய சொற்களையுடையாளொருத்தி கழுமரத்திற் பூட்டிய உருக்களிலாலினால் போலமலரினது மென்மைபோலு மென்மையாகிய பாதங்கள் காய்ப்பேறும்படி வீரனுடைய [illegible] பலகால் செல்வான் மீளுவான் இது யாது செய்தவிதம்.
தொழிற்றன்மையுணர்த்து தெரியாவிறந்தகாலம் ஏது மீளுமெனவெதிர்காலமாயிற்று

பெருந்தகாதலிற் பெருநாளதின் ... ... *
ஒருத்தி உற்றதொருத்தியை நோக்கியே ... ... *
அருந்துயவ்வழி கண்டதுண்டோவென்றாள் ... ... *
அருந்தியுற்றமின் னாளுண்டாகுமோ ... ... *

(இ-ள்.) ஆசையிருந்தமின் நாளுண்டாயிருக்குமோ இராது ஆகையால் பெருங்காதலின் மிகுதியையுடைய [illegible] மாதர்களுக்குள் ஒருத்தி, அங்கே ஒருத்தியை நோக்கி எம்மனத்தையும் அச்சிராமபிரான்போல கண்டதுண்டோ வென்றாள் — எ-று. (௯௮)

தந்தையைக்கொருபொன்னைபந்தாருயத் ... ... *
தங்களின்னுயிருங்கொடுத்தார்தமர் ... ... *
எங்களின்னுயிர் [illegible] ... ... *
வெந்தவெனக்கண்டீர் [illegible] வென்றாள் ... ... *

(இ-ள்.) அங்கே பொன்னிற்சிறந்தாளாகிய ஒருநங்கை [illegible] யுடைய சுற்றத்தார், தந்தையைவிரும்பியடைந்தோர் இடரினின்றுந் தவறும்படி தங்களுடைய இனிய உயிரையுங்கொடுத்தார் எங்களுடைய இனிய உயிர்களை எங்களுக்கு [illegible] இல்லாமை எவ்வாறு இவன்பாலுண்டாய தென்றாள்.

நாமத்தாலழிவரொருநன்னுதல் ... ... *
சேமத்தாரின் [illegible] ... ... *
[illegible] ... ... *
காமத்தாலன்று கல்வியிலென்றாள் ... ... *

(இ-ள்.) (யாவரானும் விரும்பாநிற்கத்தானென்னை விரும்பிலனெனப் பொறாதே சொல்ல) அச்சத்தால் [illegible] யழிவானாகிய நல்லநெற்றியையுடைய ஒருபெண் சீதாபிராட்டியினுடைய [illegible]) காவலாகிய வெற்றிமாலைபூண்டவில்லை இவன்முறித்ததை ஆராயுமிடத்து அகிற்புகையும் மாலையும்மமைந்த கூந்தலையும் தூயமொழியையுமுடைய சானகியிடத்தில்

வைத்தவிருப்பத்தாலன்று தனுவேதத்தில் தனக்குண்டாகிய கல்விப்புலமை யைப்பிறர்க்குக்காட்டவேண்டுமென்பதினுமில்லை என்றாள்—எ-று. (௬௰)

ஆரமுந்துகிலுங்கலனியாவையுஞ் ... ...*
சோரவின்னுயிர்சோருமெயார்சோர்குழல் ... ... *
கோரவிற்கிழுன்னேயெனைக்கொல்கின்ற ... ... *
மாரவேளின்வலியவரியாரென்றாள் ... ... *

(இ-ள். முத்துவடமுஞ்சேலையும் மற்றை அணிகள்யாவுஞ்சோர்ந்துவிழு மேபடி இனியவுயிர்சோர்கின்ற அவிழ்ந்தகூந்தலையுடைய ஒருத்தி கண்டோர்க்கு அச்சத்தைத்தருகின்ற திரியம்பகமென்னும் வில்லைவளைத்த இவனுக்கு முன்பே(அச்சமில்லாமல்) என்னைக்கொல்லாநின்ற மாரவேளினும் வலியுடையார் யாவரென்றாள்—எ-று. (௬௧)

மாதரின்னணமொய்த்திடவள்ளல்போய்ச் ... ... *
கோதுசிந்தைவசிட்டனுங்கௌசிக ... ...*
வேதபாரனுமேவியமண்டபம் ... ...*
ஏதின்மன்னர்குழாத்தொடுமெய்தினான் ... ... *

(இ-ள்.) மாதர்கள் இவ்வாறுமொய்த்துக்கொள்ளவள்ளலாகிய சீராமபிரான்சென்று விழைவுவெறுப்பு அவிச்சையென்னுங் குற்றமில்லாத சிந்தையையுடைய வசிட்டமுனிவனும் விசுவாமித்திரனென்னும் அந்தணனும் வீற்றிருக்கின்ற மண்டபத்தே குற்றமில்லாதமன்னர்கூட்டத்தோடுஞ்சேர்ந்தான்

வேதமுடிவைக் கண்டவனென்னும்பொருள்தரும் வேதபாரகனென்னும் ஆரியமொழி வேதபாரனென்றாயது.

திருவினாயகன்மின்றிரிந்தாலெனத் ... ...*
துருவின்மாமணியாரந்துயல்வரப் ... ...*
பருவமேகம்படிந்ததுபோற்படிந் ... ...*
திருவர்தாளுமுறையினிறைஞ்சினான் ... ...*

(இ-ள்.) திருமகள் நாயகனாகிய சீராமபிரான் மாசில்லாதசிறந்தமணிவடங்கள், மின்னல்கள் திரிந்தாற்போல மார்பில் அசைந்துலாவக் கார்காலத்து மேகம்நிலத்திற்படிந்ததுபோல நிலத்திற்படிந்து அவ்விருமுனிவர்களுடைய பாதங்களையுமுறைமையில்வணங்கினான்—எ-று. (௬௩)

இறைஞ்சவன்னவரேத்தினரேவவோர் ... ...*
நிறைஞ்சபூந்தவிசேறிநிழற்கள்போல் ... ...*
புறஞ்செய்தம்பியருட்பொலிந்தானரோ ... ...*
அறஞ்செய்காவற்கயோத்தியிற்றோன்றினான் ... ...*

(இ-ள்.) அறத்தை அழியாது பெருகச்செய்கின்ற காப்பின் பொருட்டுத் திருவயோத்தியில் அவதரித்த சீராமபிரான் வணங்காநிற்க அம்முனிவரிருவரும் தன்குணஞ் செயல்களைப் புகழ்ந்தவர்களாய் இருமென ஏவ அலங்காரத்தால் நிறைந்தபொலிவுடைய ஆதனத்தில் ஏறித் தன்னிழல்களைப்போலப் பிரியாதுபுறத்தேகாத்திருக்குந் தம்பியர்களுக்குள் விளங்கினான்-எ-று

ஐந்து அஞ்சு என்றாயதுபோல நிறைந்த நிறைஞ்சவென்றாயது. இது போலி.

ஆனமாமணிமண்டபமன்னது ... ... *
தானேமன்னன்றமரொடுஞ்சார்ந்தனன் ... ... *
மீனெல்லாந்தனபின்வர்வெண்மதி ... ... *
வானிலாவுறவந்ததுமானவே ... ... *

(இ-ள்.) நித்தியவின்பத்ததாகிய திருமாமணிமண்டபத்தையொத்த மண்டபத்திலே சேனைமிகுதியுடையசக்கரவர்த்தி உறவினரோடுங் கூடியபின் னிங்ஙனமில் விண்மீன்களெல்லாம்வர வெண்மையாகியசந்திரன், வானில்விளங்கும்படி வந்ததை ஒத்திருக்கச்சார்ந்தான்—எ-று. (௪௫)

தன-எ-து-குறிப்புப்பெயரெச்சம்.

வந்துமாதவர்பாதம்வணங்கிமேற் ... ... *
சிந்துதேமலர்மாரிசிறந்திட ... ... *
அந்தணாளர்களாசியொடாசனம் ... ... *
இந்திரன்முகநாணுறமேவினான் ... ... *

(இ-ள்.) அவ்வாறுவந்து மாதவர்களுடைய பாதங்களைவணங்கித் தன்மேல் தூவிய தேன்பொருந்திய மலர்மழைமிகுதியும் விழா நிற்க அந்தணர்கள் கூறும்வாழ்த்தோடு, இந்திரன்முகம் நாணும்படி ஆசனத்தில் ஏறி வீற்றிருந்தான்—எ-று. (௪௬)

கங்கர்கொங்கர்கலிங்கர்குலிங்கர்கள் ... ... *
சிங்களாதிபர்சேரலர்தென்னவர் ... ... *
அங்கர்சீனர்குலிந்தரவந்திகர் ... ... *
வங்கர்மாளவர்சோளர்மராடரே ... ... *

(இ-ள்.) கங்கரும் கொங்கரும் கலிங்கரும் குலிங்கரும் சிங்களதேயத்தரசரும் சேரரும் பாண்டியரும் அங்கரும் குலிந்தரும் அவந்திகரும் வங்கரும் மாளவரும் சோழரும் மராடரும்—எ-று. (௪௭)

மானமாகதர்மச்சர்மிலேச்சர்கள் ... ... *
ஏனைவீரவிலாடர்விராடர்கள் ... ... *
சீனர்தெங்கணர்செஞ்சகர்சோமகர் ... ... *
சோனகேசர்துருக்கர்குருக்களே ... ... *

(இ-ள்.) மிக்கமானத்தையுடைய மாகதரும் மச்சரும் மிலேச்சரும் மற்றைமிகுந்தவீரத்தையுடைய விலாடரும் விராடரும் மாசீனரும் தெங்கணரும் செஞ்சகரும் சோமகரும் சோனகதேசத் தரசர்களும் துருக்கரும் குருநாட்டாரும்—எ-று. (௪௮)

சீனரென்று ஈண்டுங்கூறியது சீனம் மாசீனமெனச் சீனமிருவகைத்தாகலின்.

ஏதியாதவரேழ்திறற்கொங்கணர் ... ... *
சேதிராசர்தெலுங்கர்கருநடர் ... ... *
ஆதிவானங்கவித்தவவனிவாழ் ... ... *
சோதிநீண்முடிமன்னருந்துன்னினார் ... ... *

(இ-ள்) ஆயுதங்களிற்சிறந்த யாதவரும் எழ்வகையையுடைய கொங்கணரும் சேரநாட்டரசரும்தெலுங்கரும் கருநாடரும் (பூதங்களைந்தனுள்)முதன்மையாகிய ஆகாயத்தால் கவியப்பட்ட பூமியில் வாழ்கின்ற ஒளியிருந்த முடியையுடைய மற்றைமன்னர்கள்யாவரும்வந்தார்கள்—எ-று. (௪௧)

அரசர்களைத் தனித்தனிக் கூறியவழி யொருமையாற்கூறுது பன்மையாற்கூறியது அவ்வவ்வரசனுந் தன்றன் னுறவினரோடுவந்தமை யுணர்த்தற்கென்க, இங்குவந்து சாராதவரசனொருவனுமில்லையென்பார் வானங்கவித்தவவனிவாழ்மன்னரென்றார்.

திங்கரும்பினுந்தித்திக்குமின்சொலார்... ... ...*
தாங்குசாமரைமாடுதயங்குவ... ... ...*
ஓங்கியோங்கிவளர்ந்துயர்கீர்த்தியின்... ... ...*
பூங்கொழுந்துபொலிவனபோன்றவே... ... ...*

(இ-ள்) மதுரமாகிய கரும்பினுந் தித்திக்குமினியசொல்லையுடைய கணிகையர் கையிற்றாங்கிய சாமரைகள் சக்கரவர்த்திக்கு இருபக்கங்களிலுமசைந்துவிளங்குவன,மிகவும் ஓங்கிவளர்ந்து (ஏனையோருடையகீர்த்தியினும்) உயர்ந்தகீர்த்தியினது பொலிவாகிய கொழுந்துகள் விளங்குவனபோன்றன.

குழலும்வண்டுமிஞிறுஞ்சுரும்புஞ்சூழ்ந் ... ... *
தழலும்வார்சந்துமலரோதியர்... ... ...*
குழலிரேனுமிறக்கூறுபல்லாண்டொலி ... ... *
மழலையாழிசையோடுமலிந்தவே.. ... ...*

(இ-ள்) மூசுவண்டும் மிஞிறென்னும்வண்டும் சுரும்பென்னும் வண்டும் சூழ்ந்து கூடுகின்ற மணம்பொருந்திய தேனையுடைய மலரையணிந்த கூந்தலாராகிய சுமங்கலமாதர்கள் தொளையுடைக்கருவியினிசையோடு மாறுபடாதுபொருந்தப் பாடும்பல்லாண்டோசைகள் (அவருடைய)மழலைச்சொல்லையொத்த யாழிசைகளோடுமிகுந்தன—எ-று. (௫௧)

வெங்கணானையினன்றனிவெண்குடை ... ...*
திங்கடங்கள்குலக்கொடிசீதையா... ... ... *
மங்கைமாமணங்காணியவந்தருள் ... ...*
பொங்கியோங்கித்தழைப்பதுபோன்றதே ... ...*

(இ-ள்) கொடுமையாகிய யானைச்சேனையுடைய சக்கரவர்த்தியினது ஒப்பற்ற வெண்கொற்றக்குடைவிளங்குதல்,சந்திரன்தமது குலத்திற்றோன்றிய கொடியையொத்தாளாகிய சீதையென்னும்மங்கையினது பெருமையாகிய திருக்கலியாணத்தைக் காணும்படிவந்து அருள்மிகுந்து ஓங்கிப் பூரிப்பது போன்றது—எ-று. (௫௨)

திங்களென்றது திங்களையுள்ளிட்டாரை. பொங்கியென்னும் சினைவினையோங்கியென்னு முதல்வினையோடுமுடிந்தது.உயிர்க்குணம்பலவற்றுள் அருளொன்றுகவினது சினையாயிற்று.

ஊடுபேர்விடமின்றியொன்றும்வகை ... ...*
நீடுமாகடற்றானைநெருங்கலால் ... ... *

ஆடன்மாமதயானைச்சனகர்கோ ... ... *
னூடொவொருநன்னகராயதே ... ... *

(இ-ள்) இருந்தநிலையினின்றுதம்மூட்செல்லு மிடமில்லாமல், ஒன்றும்ப டிபொங்குகின்ற பெருங்கடல்களையொத்த படைகள் நிறைவதினால்பாரி ல்வல்ல குதிரைச்சேனையையும்மதத்தையுடையயானைச்சேனையையுமுடைய சனகர்களுக்கு அரசனதுதேயமெல்லாம் ஒப்பற்றசிறந்தநகரமாயது-எ-று.

இன்றியென்னும் வினையெச்சக்குறிப்பு நெருங்கலென்னுந் தொழிற்பெயரோடு முடிந்தது.

ஒழிந்தவெவன்னினியொண்ணுதற்றுதைதன் ... ... *
பொழிந்தகாதலொடரப்பொருளெலாம் ... ... *
அழிந்துவந்துங்கொண்டாடலினன்புதான் ... *
இழிந்துளார்க்குமிராமற்குமொத்ததே ... *

(இ-ள்) ஒளிதங்கிய நெற்றியையுடைய சானகிபிராட்டிக்குத் தந்தையாகி யசனகமகாராசன், வரம்பில்லாத தன்காதலானது (அங்குவந்தோர்யாவரிட த்தும்) தொடர்தல் காரணமாகத்தன்பொருள்களெல்லா மழியும்படி உவந் து அவர்களைப் பெருமைபாராட்டலால் காதலானது, ஏவலாளர்களுக்கும் திருமணத்துக்குரிய சீராமபிரானுக்கும் ஒத்திருந்தது இதுவேயன்றி இனி சொல்லாதுவிட்டனயாவை—எ-று. (ருசு)

உய-வது-உலாவியற்படலமுற்றிற்று.

உக-வது-கோலங்காண்படலம்.

தேவியர்மருங்குசூழவிந்திரனிருக்கைசேர்ந்த ... ... *
ஓவியமுயிர்பெற்றென்னவுவந்தாசிருந்தகாலை ... *
தாவில்வெண்கவிகைச்செங்கோற்சனகனையினிதுநோக்கி ... *
மாவியனோக்கினாளைக்கொணர்கெனவசிட்டன்சொன்னான் ... *

(இ-ள்) சிங்காதனத்தில்சேர்ந்த பிரதிமை உயிர்பெற்றாற்போல், தன்தே வியர்சூழவரும் பக்கத்திற் சூழ்ந்திருக்கும்படி சக்கரவர்த்தி உவந்து அடங்கி வீற்றிருந்தகாலத்தில் கெடுதலில்லாத வெண்கொற்றக் குடையையும் செங் கோலையுமுடைய சனகமகாராசனை வசிட்டமுனிவன் இனிதாகநோக்கித் தி ருமகளைப்போல அழகுமுதலியன அமைந்த அழகுடைய சீதையைக்கொ ண்டுவாவெனச்சொன்னான்—எ-று. (க)

மாவியனோக்கினாளென்பதற்கு மாவடுவகிரைப்போலப் பொருந்திய கண்களையுடையா ளெனினுமொக்கும். வசிட்டன் தேசிகனாகலி னவன்முன்னர்ச் சக்கரவர்த்தி யோவியமுயிர் பெற்றென்ன விருந்தானென்றுணர்க. இந்திரனிருக்கையென்பதற்கு அரசனதிருக்கை யெ ன்பதுபொருள். இவ்வாறே வட்நூலாரும் இந்திரஸ்தானமென்ப.

உரைசெயத்தொழுதனையனுவந்தவுள்ளத்தன்பெண்ணுக் ... *
கரசியையத்தருதிரீண்டென்றுயிழையவனையேவக் ... ... *

காரிசெயற்கரியகாதல்கடாவிடக்கடிதுசென்றார் ... *
பிரசமொத்தினியசொல்லார்பேதைதாதியரிற்சொன்னார் ... *

(இ-ள்) வசிட்டமுனிவன் சொல்லாநிற்கையில் தொழுகையனும் உவந்த உள்ளத்தனுமாகிய சனகமகாராசன் இந்தப் பெண்களுக்கரசியை அழைத்துக்கொண்டு வாருமென்று தெரிந்தெடுத்த ஆபரணத்தையணிந்த மாதர்களை ஏவ அவ்வேவலைச் செய்தற்கு அரிய அன்பானது நடத்துதலால் விரைந்துசென்று பிரசத்தைப்போன்று இனிமையாயுள்ள சொல்லாராகிய அம்மாதர்கள் சீதாபிராட்டியினுடைய தாதிமார்களிடத்தில் இச்செய்தியைச் சொன்னார்கள்-எ-று.

அமிழிமைத்துணைகள்கண்ணுக்கணியெனவமைத்தாற்போல். *
உமிழ்சுடர்க்கலன்கணங்கையுருவினைமறைப்பதோரார் ... *
அமிழ்தினைச்சுவைசெய்தென்னவழகினுக்கழகுசெய்தார் ... *
இமிழ்திரைப்பரவைஞாலமேழைமையுடைத்தாமோ ... *

(இ-ள்) இமைக்கின்ற இரண்டிமைகள் கண்ணுக்கு அழகைச்செய்யப் படைத்தியல்பைப்போல ஒளியை வீசுகின்ற அணிகள், பெண்ணிற்சிறந்தாளுடைய திருவுருவத்தை மறைக்கின்றதை அறியாமல், இயற்கையாகவே மதுரமுள்ள அமுதத்துக்கு (வேறுபொருள்களால்) மதுரம் உண்டாக்கல்போல அழகாகிய பொருளுக்கு அழகுசெய்தார்கள் (ஆதலால்) ஒலிக்கின்ற அலையையுடைய கடல்சூழ்ந்த உலகம் அறியாமையையுடையது—எ-று. (௯)

கண்ணன்றனிறந்தன்னுள்ளக்கருத்தினைநிறைத்துமீதிட் ... *
டொண்ணின்றுங்கொடிகளோடியுலகெங்குப்படர்ந்தவன்ன ... *
வண்ணஞ்செய்கூந்தற்பாரவலயத்துமழையிற்றோன்றும் .. *
விண்ணின்றமதியின்மென்பூஞ்சிகழிகைக்கோதைவேய்ந்தார். *

(இ-ள் சீராமபிரானுடைய திருநிறமானது தனது உள்ளமாகிய நெஞ்சிடத்தை நிறைத்து மேலேவளர்ந்து அந்நெஞ்சினின்றும் ஓடி உலகமுழுமையும்படர்ந்தனவாகிய கொடிகளைப்போல அழகைச்செய்கின்ற கூந்தற்பாரமாகிய வட்டத்தில் பெய்யுமேகத்திற்றோன்றுகின்ற கிரணங்கள்விரியநின்ற சந்திரனைப்போலத்தோன்ற மெல்லியபூக்களால்தொடுத்த சிகழிகையாகியமாலையை அணிந்தார்கள்—எ-று. (௰)

விண்ணின்ற-என்பது-விண்ணின்றவெனத்தொகுத்தது. கருத்துதொழிலாகுபெயர்.

விதியுறுவகையால்வானமீனினம்பிறையைவந்து ... ... *
கூடுவதொத்ததென்னக்கொழுந்தொளிச்சுட்டித்தூக்கி ... *
மதியினைத்தத்தம்மருங்குறாவகைப்பதென்னப் ... ... *
பொதியிருளகற்றிப்பூட்டியபூட்டுமிட்டார் ... ... *

(இ-ள்) (கூடுதற்கு ஏதுவாகிய) ஊழினது வகையால் விண்மீன்கூட்டங்கள் பிறைச்சந்திரனிடத்துவந்து கூடுகின்றதுபோல்ச்சுட்டியென்னும் அணியைஒளிநிரம்பத்தொங்கஅணிந்துபூரணசந்திரனைப்புறத்தேசெல்லவிட்

டு மேகம் அதன் பக்கத்தில் நாவை நீட்டி விளிப்பதுபோல் மூடிருளை யொத்த அளகபந்தியில் பூட்டுதற்குரிய பூட்டெல்லாம் அணிந்து பூட்டினார்கள். கொழுந்தென்றது சுண்டுவிரலுக்காய் அது உவமையாகுபெயராய்ச் சுட்டிவிரலையுணர்த்திற்று.

வெள்ளத்தின் சடிலத்தான்றன் வெற்பிலிருக்கவீரன் ... ௬
நள்ளுத்தன்றுலி சோரத்தனிப்பெரும் பெண்மைதன்னை ... ௬
அள்ளிக்கொண்டகன்றகாலாயல்லன்கொலாற்கொலென்பாள் ௬
உள்ளத்தின் சலாநிர்க்குணமுநிழலுயிழ்விட்டார் ௬

(இ-ள்) கங்கையைத்தாங்கிய சடையையுடைய சிவனது வெள்ளிமலையை யெடுத்த வீரன், (தன்னுயிர் தங்கும்படியான உடல்) சிறிதும் குறைவில்லாத பெருமையாகிய பெண்ணாலத்தை யெடுத்துக்கொண்டு சென்ற இடத்தையொத்த தன்மையையுடைய முன்னாளில் இராவணன் நினைப்பானது உள்ளத்தைப்போல உருவில்லாத இடையினிடம் ஒளிவீசும் படிகாரில் துாக்கினார்கள்.

கோணணிசங்கம்வந்து குடியிருந்தனையகண்டத் ௬
ஏணமிக்கலமேற்பூண்மணி பூணணிதல்செய்தார் ௬
மாணனீக்கோக்கினார்தம் மங்கலக்கழுத்துக்கெல்லாந் ... ௬
தாணலம்பானபோலாறுதனக்கணியாகுமாதோ ௬

(இ-ள்.) மானினது நோக்கம்போன்ற அழகிய நோக்கத்தையுடைய மாதரெனப்படுவோ ரெல்லாருடைய சுமங்கலமாகிய கழுத்துக்கட்கும் தாலித் திருமங்கலியமென்னும் அணியாயினதுபோலு தனக்கு அணி ஏது இல்லை (அழகுடையதாகலால்) வலம்புரிச்சங்கம் ஒன்று இடம்பெயர்ந்து கையிலழுதறத் தாங்கிய பாஞ்சசன்னியமென்னும் சங்கானது குடியிருந்தாலொத்தகழுத்தில், குறைபாடின்றித் தொழில்முற்றிய அணிகளிலுரியனவற்றை அணிந்தார்கள் — எ-று. (எ)

இப்பிராட்டியாரை முன்னிட்டுக்கொண்டிறையவனுடைய அநந்தகலியாணகுணமாகிய கடலாடுமியல்பினராகிய ஆசிரியர்; உமையாளொக்கு மங்கையர் முதலியோருடைய கண்டங்கட்கு திருவெள்ளமணியாய் நின்றவளாகலின் இப்பிராட்டியின் கண்டமோ ஒப்பிகந்து தேய பாஞ்சசன்னியத்தின்மேலும் குற்றஞ்சாருமெனக்கருதி அத்திறஞ்சாராவகை கோணணிசங்கம்வந்து குடியிருந்தனையகண்டமென்றார்.

கோணிலாவரசனீன்ற கனியையன்கோத்ததென்கோ ௬
வாணிலாவயிற்றுச்செவ்விளை யிலைதழைத்ததென்கோ ௬
நாணிலாதனையினின்றநளிர்நிலாத்தவழ்ந்ததென்கோ ௬
பூணிலாமுலைமேலாரமுத்தையாம்புகல்வதென்கோ ௬

(இ-ள்) (தம்முள்) மாறுபாடில்லாமலிலாத்தணையாகியவின் பூசிக்கோத்தகோத்த விடமென்பெறு வளாகிய திலவுமிழ்கின்ற முகிலைப்போன்ற பிறையைப்பெற்றதாமெனப்பெறு நாளைம் காரணமாகத் தோற்றுகின்ற நகையையுடைய பல்லினிற்ற சின்னிலாவானது தவழ்ந்த தோற்றமெனப்பெறு பூணையாரத்தையாமென்றுமுலைகளின் மேலணிந்தமுத்துவடத்தைதான் இங்ஙனமெனக்குறித்துச்சொல்லுவது யாது — எ-று. (அ)

கோணிலா என்பதைக் கோண் இலாவெனப்பிரிக்க. இலா-எ-து, தொகுத்தது, வானமீன்கள் கோணிலாமலியையவன என்றது திரட்சியாகி ஒன்றை ஒன்று ஒத்துவுருவினவும் நிலவெறிப்பனவுமாயினவற்றை. நாணென்றது பிராட்டிதானிதுகாறுங் கன்னிமாடத் துறைந்து தாதியர் செவிலியர் தாயர் தவ்வையரெனப்படு மாதர்களோடு பயின்றவளாதலின் இதுபோது சக்கரவர்த்திமுதலிய அரசர்களும் வசிட்டர்முதலியமுனிவர்களும் தன்னை மணம்புரியுமாறு வெஞ்சிலையிறுத்தவீரனுமாகிய ஆண்மக்கள்நிறைந்த அவைக்களத்துச் சேறல் வேண்டுதலினுளதாவதோர்நாணத்தை அதுகாரணமாக நகைதோன்றன்மங்கையர்க்கியல்பு என்கோ என்பதற்குந் தன்மையொருமை யெதிர்காலவினைமுற்றுப் பொருள்கோடலேயன்றி என்கவெனவியங்கோள் வினைமுற்றீற்றகரந்தொகுத்ததெனக்கொண்டு என்றுசொல்லக்கடவேனோவெனப்பொருள்கூறினு மிழுக்காது. ஓ-ஐயம்.

மொய்கொள்சீறடியைச்சேர்ந்தமுளரிக்குஞ்செம்மையீந்த... *
தையலாளமுதமேனிதயங்கொளிதழுவிக்கொள்ள ... . *
வெய்யபூண்முலையிற்சேர்ந்தவெண்முத்தஞ்சிவந்தவென்றால் *
செய்யரைச்சேர்ந்துளாருஞ்செய்யராய்த்திகழ்வரன்றே.... *

(இ-ள்) (புலவர்கூறுமுவமைப்பொருள்களோடு ஒப்பாகீரென்று) போலக்கொள்ளுகின்ற சிறியசீர்பாதங்களை அடைந்த செந்தாமரைமலருக்குஞ் செம்மையையீந்த சீதாபிராட்டியினது அமுதத்தினினிமையையொத்த இனிமையாகிய திருமேனியில்விளங்குகின்ற ஒளியினால் தழுவப்படுதலால், (சீராமபிரானுடைய திருத்தோள்களைத்தழுவும்) விருப்பத்தையுடையபூணணிந்த கொங்கைகளிற்சேர்ந்தவெண்மையாகியமுத்துவடமுஞ் சிவந்தன எ-து; கூறின் ஞானவொழுக்க முதலியவற்றிற்சிறந்த அறிவுடையோரைச் சேர்ந்தவெள்ளறிவினரும் சிறந்த அறிவினராயே விளங்காநிற்பர்-எ-று ()

உவமைப்பொருள்களில் முளரிசிறந்ததாகலின் உம்மைசிறப்பு. வெண்முத்தமுமெனச் சிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது. சேர்ந்துளாரும் இழிவுசிறப்பு. அன்றீற்றே தேற்றம். செய்யராய்த் திகழ்வரென்றதனால் சேர்ந்துளார் வெள்ளறிவினரென்பது பெறப்பட்டது.

கொம்மைபுறவீங்குகின்றகுவிகச்செப்பனையகொங்கைச்... ...*
சும்மைபுறநுடங்குகின்றநுசுப்பினாள்பூண்செய்தோளுக் ... *
இம்மையுறவிமைக்குஞ்செங்கேழினமணிமுத்தினோடும் ... *
அமையிடையமைவுண்டாமாகிலொப்பாகுமன்றே... ... *

(இ-ள்) இங்குலிகத்தாலமைத்த இணைத்தையொத்த, வட்டமுறப் பருத்த கொங்கைகளாகியசுமையினால்மிகத்துவளுகின்ற இடையையுடைய சீதாபிராட்டியினது பூணணிந்ததோளுக்கு, பார்ப்போருடைய கண்கள் கூசும்படி ஒளிர்கின்ற செவ்வொளியையுடைய ஒருசாதியாயுள்ள பதுமராகமணிகளை முத்துக்களோடு மூக்கிலானது தன்னிடத்தில்மிகுதியும்பொருந்தலுண்டானால் தேற்றமாய் ஒப்பாகும்—எ-று. (௰)

தளையவிழ்கோதைபோதிச்சானகிதளிர்க்கையென்று .. *
முளரிவிராமன்செங்கைமுறைமையிற்றீண்டநோற்ற ... *
அளியனகங்குற்போதுங்குவியலவாகுமென்றூ... ... ...*
கிளைவெயிற்கதிரியன்னவெரிமணிக்கடகமிட்டார்... ... ...*

(இ-ள்) முறுக்கவிழ்ந்த மலர்மாலையணிந்த கூந்தலையுடைய சானகிபிராட்டியினுடைய தளிரினது மென்மையும் நிறமும் போன்ற மென்மையு நிறமு மமைந்த கைகளென்னுந் தாமரைமலர்கள் ஸ்ரீராமபிரானுடைய செங்கைகளால் வேதவிதிப்படி தீண்டப்படத்தவம்புரிந்தனயாவரும் இரங்குந்தன்மையன இராக்காலத்தும் குவியாதன ஆகுமெனக்கருதி அக்கரங்களில் இளவெயிற்சுற்றினாற்போன்ற பதுமராகமணியாலமைத்தகடகத்தையணிந்தார்.

தளையவிழ்கோதை-எ-து- சினைவினைமுதன்மேனின்றது தளையவிழ்தற்குரியமலர் கோதைக்குச்சினையாகலின்.

சில்லியலோதிகொங்கைத்திரண்மணிக்கனகச்செப்பில் ... *
வல்லியுமநங்கன்வில்லுமான்மதச்சாந்திற்றீட்டி ... ... *
பல்லியனெறியிற்பார்க்கும்பரம்பொருளென்னயார்க்கும் .. *
இல்லையுண்டென்னநின்றவிடையினுக்கிடுக்கண்செய்தார்... *

(இ-ள்.) வட்டமாகப்பொருந்திய கூந்தலையுடைய சீதாபிராட்டியினது கொங்கைகளாகிய, நீலமணியொன்றிழைத்த திரண்டபொற்கிண்ணங்களில் கத்தூரிச்சந்தனத்தினால் பூங்கொடிகளையும் மன்மதனுடைய கருப்புவில்லையும் எழுதிப்பலவாகிய இயல்பமைந்த வழிகளினால்பார்க்கும் பரவத்துவாகிய இறைவனைப்போலக்கண்டோர்யாவர்க்கும் இல்லையென்னவும் உண்டென்னவுநின்ற இடையினுக்குத் துன்பத்தைச்செய்தார்கள்—எ-று (௰௨)

பல்லியனெறி-எ-து-கருமஞானங்களைப்பற்றிப் பலவாய்விரிந்துகிடக்குந்தன்மையவாகிய சமயநெறியையுந் தனியவாதருடைய நெறியையும் அந்நெறியிலேநின்றோர், உளனலனென்பாரு மருபிவ னுருவுகளெனவும் உளனெனி னுளனவ னுருவமிவ்வுருவுகளெனவுங்கூறுதல்றவாறே இல்லையென உளனென விவைகுணமுடையவனாய்நின் றுள்ள இறைவனைப்போல உலகர்கள்கண்ணுக்குப்புலப்படாமையி னில்லையெனவும தனபாரமுதலிய வுண்மையினுண்டெனவுநின்ற இடையென்றாராகலிற்பரம்பொருள்பண்புவமம். சில்-தலையணியிலொன்றாம்

நிறஞ்செய்கோசிகநுண்டுகினீவிநீவாதவல்குற் ... ... *
பறஞ்செய்மேகலையுந்தாழத்தாரகைச்சும்மைபூட்டித் ... *
திறஞ்செய்காசின்றசோதிபேதைசேயொளியிற்றீர்ந்து ... *
கறங்குபதிரியபாருங்கண்விளக்குற்றுநின்றார் ... . *

(இ-ள் ஒளிசெய்கின்ற பட்டாடையும் நுண்ணிழைபடையாலாகிய கொய்சகமும் பிரியாத அல்குலின்புறத்தே யலங்கரித்தமேகலையும் உள்ளடங்கத் தாரகைச்சும்மையென்னுமணிவடத்தொகுதியைப்பூட்டி அவ்வணிகளில் நானாவிதமாகியமணிகள் வீசுகின்ற ஒளிகள், சீதாபிராட்டியினுடைய திருமேனியின் செய்ய ஒளியால் தமதுநிறந்நீங்கினவாகி நாற்புறத்துமுள்ள உலாவலினால் அங்குள்ளமங்கையர்யாவருங் கண்ணொளிமழுங்கினின்றார்-எ-று ( )

மேகலையுமென்பது கோசிகநுண்டுகினீவிதாழ்தலன்றியெனப் பொருள்படலின் இறந்ததழீஇய எச்சவும்மை. தாரகைச்சும்மை உவமவாகுபெயர். கண்விளக்குறல்-தகுதிபற்றிய வழக்கு.

ஐயவாமணிச்சப்போதினெகிழமுநொய்யவாடற் ... . *
மையராவல்குலுடன்சிந்திப்பமுற்றபாதத்து ... ...*

செய்யபூங்கமலமென்னச் சேர்த்தியசிலம்பசால ... ...
நொய்யவேநொய்யவென்றே நுவலப்பட்டுவல்வதம்மா ... ...

(இ-ள்.) செந்தாமரைமலர்போலச் சூழவணிந்த சிலம்புகளானவை பல வாறாக ஒலிப்பதும், அன்னியனையாரும் அனிச்சமலர்களிலும் மிகுதியும் நொய்மையுடையவை என்று, அத்தகைப்புடைய பாதங்கள் [illegible] பிராட்டியினது செம்மைக்கு ஒட்டாமல் இருந்தனவாய் இருந்தன [illegible] நிகள் உண்மையாய் மிகவும் நொய்மையுடையன எனக்கருதும்படி அதிசோபம் இதுவியத்தக்கது—எ-று. (௧௪)

ஐந்தாவதுருபு பொருவின்கண்வந்தது. அடுக்கு இரக்கப்பொருட்டு. ஏ-தேற்றம். ஓ-ஐயம். அம்மா-வியப்பு.

நஞ்சிடையமுதங்கூட்டி நாட்டங்களான்வெவ்வேறாச் ... ...
செஞ்சுடர்நீண்டுமீண்டு சேயரிசிதறிய ... ...
வஞ்சமுங்களவுமின்றி மழைப்படைமதர்த்தகண்கள் ... ...
அஞ்சனநிறமோவண்ணல் வண்ணமோவறிதற்றாம். ...

(இ-ள்) அமுதத்துக்கு இடையில் விடத்தைச்சேர்த்து (அவற்றால்) கண்களாயினவென்று சொல்ல மிகவும் நேரே சென்று மீண்டு செவ்வரி சிதறிப் பொல்லாதவஞ்சமுங் களவுமில்லாமல் மேகத்தைப்போலக் குளிர்ந்து களித்தகண்களின் கருமை (தப்பிவிட்ட) மையினது நிறமோ ஸ்ரீராமபிரானுடைய நிறமோ இதுவென அறியவேண்டுவதைத் துணியோம்—எ-று. (௧௫)

கன்னிமாடத்தில் பிராட்டியானவள் முதலில் ஸ்ரீராமபிரானைநோக்கியது தொட்டு இதுகாறும்பன்முறை அவனது உருவெளித்தோற்றத்தைக் காண்டலால் அண்ணல்வண்ணமோ வென, கண்ணுக்களியெனவணியுமையோடுசேர்த்துக் கூறினார். அக்கன்னிமாடத்தின்கண் அத்திருவுருவத்தைக்கண்டது முதலிதுகாறுங் காண்கின்றனளென்னுங் கருத்தால் அண்ணல் [illegible] அஞ்சனவண்ணமோவென்றார். யாதொருபொருளை யாதொருசொல்லாலேனுமிடத்துக்கூறி அப்பொருளை மற்றோரிடத்துக் கூறுதற்கு முன்னர்க்கூறிய [illegible] கருத்தாற் பின்னரும் [illegible] தமிழ்ப்பெருமானுகிய இவைபிறிய [illegible] வர்மாட்டேவுண்டென்றுணர்க. பிரமன்முதலிய எல்லாவுயிர்களும் இவ்விறைவிக்குப் புதல்வராகையாலும் மணமகன் இறைவனேயாகலாலும் [illegible] கண்டனென்றார்.

மொய்வளர்குவளைபூத்த முளரியின்முகிழ்த்தநாசி ... ...
மெய்வளர்மதியிறைப்பண்பி [illegible] ... ...
வையகமடந்தைமார்க்கு நாகர்மின்னார்க்கு ... ...
தெய்வமங்கையர்க்குமெல்லார்க்கும் திலகத்தைத்திலகஞ்செய்தார்.

(இ-ள்) இதழ்கள் அடர்ந்து வளர்ந்த குவளைமலர்களைத் தன்னிடத்தேதமலர்ந்த தாமரைமலரில் தோன்றிய [illegible] நாட்டினையிடையில் விளங்கும் [illegible] யாதவெல்லாருக்கும் நாகர்களுடைய மாதர்களெல்லாருக்கும் விண்ணவர்களுள்ள தெய்வமாதர்களெல்லாருக்கும் திலகத்தைப்போன்று சிறந்தபிராட்டிக்குத் திலகமணிந்தார்.

சின்னப்பூச்செருகுமென்பூச்சேகரப்போதுகோதில் ... ...*
கன்னப்பூக்குலமீதுகற்பகக்கொழுந்துமான ... ... *
மின்னப்பூஞ்சுரும்பும்வண்டுமிஞிறுந்தும்பிகளும்பம்பும் ...*
புன்னைப்பூந்தாதுமானும்பொற்பொடியப்பிவிட்டார்... ...*

(இ-ள்) இன்னியிட்டுச் செய்த) சின்னப்பூவும் செருகுதற்குரியமெல்லிய பூவும் உச்சியிலணிதற்குரியபூவும் (தொழிலில்) குற்றமில்லாத கன்னங்களி லொட்டுதற் குரியபூவும் ஆகியவைகளை அணிதற்குரியதானங்களில் நிரப்ப அணிந்து அவற்றின்மேலிடங்களில் கற்பகக்கொழுந்தைப்போல மின்னும்படி பொலிவுடைய சுரும்பும்வண்டும்மிஞிறும் தும்பிகளும் மொய்த்தலாற்றே னுண்ணும் புன்னையினது மலர்ப்பராகத்தையொக்கும் பொற்பொடியை அப்பிவிட்டார்கள்—எ-று. (௰௭)

வனையுந்தொழில் முற்றுப்பெற்றதென்பார் அப்பிவிட்டாரென்றார்.

நெய்வளர்விளக்கமாட்டி நீரொடுபூவுந்தூவித் ... ...*
தெய்வமும்பரவிவேதபாரகர்க்கீந்துசெம்பொன் ... ... *
ஐயவிநுதலிற்சேர்த்தியாய்திறவயினிசுற்றிக்... ... ...*
கைவளர்மயிலனாளைவலஞ்செய்துகாப்புமிட்டார் ... ... *

(இ-ள்.) நெய்யால் எரிகின்ற தீபத்தைச்சுற்றி நீரொடு மலர்ப்பலியுமிட்டுத் தம்மனைத்தெய்வத்தையும்வணங்கிச் செம்பொன்னை அந்தணர்களுக்குத் தானங்கொடுத்துக் கையில்வளர்கின்ற மயிலன்னாளுக்கு நெற்றியில் சிறுவெண்கடுகை அணிந்து குற்றமில்லாத செந்நிறத்தையுடைய அன்னத்திரளைய மைந்த ஆராத்திநீரை வலஞ்செய்து சுற்றிப் பின்பு அந்நீரில் தொட்டு நெற்றியில்காப்பும் இட்டார்—எ-று. (௰௮)

கஞ்சத்துக்களிக்குமின்றேன்கவர்ந்துணும்வண்டுபோல ... *
அஞ்சொற்கள்கிளிக்கெல்லாமருளினள்மழலைமாற்றித் ... *
தஞ்சொற்கள்குழறித்தத்தந்தகைதடுமாறிநின்றார்... ... ...*
மஞ்சர்க்குமாதரார்க்குமனமென்பதொன்றேயன்றே ... *

(இ-ள்.) ஆடவர்களுக்கும்மாதர்களுக்கும் மனமென்றுசொல்லப்படுவது ஒருதன்மையதே ஆம் (ஆதலால்) (வண்ணஞ்செய்மாதர்கள்) களித்தற்குரிய இனியதாமரை மலர்த்தேனை மிகவிரும்பி யுண்ணுகின்ற வண்டைப்போல், அழகிய சொற்களைக் கிளிகட்கெல்லாம் அளித்த பிராட்டியினது அழகாகிய மழலைப்பருகித்தம்முடைய சொற்கள் குழறித்தத்தமுடைய இயல்புவேறுபட்டு நின்றார்கள்—எ-று. (௰௯)

இழைகுலாம்பூவையினிளையிடையுவாமதியிற்றேக்கி... ... ... *
மழைகுலாவோதிநல்லார்களிமயக்குற்றுநின்றார் ... ... *
உழைகுலாநயனத்தார்மாட்டொன்றொன்றேனிருப்பதற்கோர்த்து.
தழைகுலாமொருங்கேகண்டால்யாவரேயாற்றவல்லார்... ... *

(இ-ள்.) மானினது கண்ணைப்போல விளங்கிய கண்களையுடைய மாதுமொனைப்பதிமேவார்பால் (குணஞ்செய்கைவடிவு நடைசாயல் முதலியவற்றில் ; ஒவ்வொன்றே விரும்புதற்குத்தக்கது அவ்வழகெல்லாம் ஓரிடத்திலே கண்டால் யாவர்தாம் ஆற்றவல்லார்கள் (ஒருவருமிலையாதலால் ; (தமக்கழகைத்தரலால்) அணிகள்களிக்கின்ற கொங்கைகளையுடைய பிராட்டியைத் தமக்கு நடுவே பூரணசந்திரனைப்போல நோக்கி மேகத்தைப்போல விளங்கிய கூந்தலையுடைய சிறந்த அழகினராகிய அம்மாதர்கள் களித்துமயக்கத்தை அடைந்து நின்றார்கள்—எ-று. (உ௰)

சங்கங்கையுடைமையானுந்தாமரைக்கோயிலானும் ... ... *
எங்கெங்கும்பரந்துவெவ்வேறுள்ளத்தினெழுதுற்றென ... *
அங்கங்கேதோன்றலானுமருந்ததியனையகற்பி ... ... *
னங்கையுநம்பிராட்டியொத்தாளினிப்புகல்வதென்னோ ... ... *

(இ-ள்.) (வளையாகிய) சங்கை அழகியகையினிடத்தே யுடைத்தாயிருத்தலானும் தாமரைமலராகிய கோயிலையுடைத்தாயிருத்தலானும் மூவாசைகளையவித்துநின்ற முனிவர்களிடத்தும் அரசர் முதலிய மற்றெல்லாரிடத்தும் பரவித்தனித்தனியாக உள்ளங்களில் எழுதியதுபோல அவரவர்களுடைய உள்ளங்களில் தோன்றுதலானும், அருந்ததியொத்த கற்புடையபெண்ணிற் சிறந்தாளாகிய சீதாபிராட்டியும், பாஞ்சசன்னியமென்னுஞ்சங்கை அங்கையில்தாங்கி அடியார்களுடைய உள்ளக்கமலங்களைக் கோயிலாகக்கொண்டு மகாபூதங்கள்முதலிய காட்சிப்பொருள்களெல்லாவற்றிலும் பரமாணுமுதலிய கருத்துப்பொருள்களெல்லாவற்றிலும் நிறைந்துதனித்தனியுள்ளங்களில் எழுதியதுபோல அவ்வவ்விடங்களிலே இருக்கின்ற புருஷோத்தமனாகிய சீராமபிரானை ஒத்திருந்தாள் இனிநாம்பிராட்டியைக்குறித்துச் சொல்வதியாது.

உடைமையென்பதைத் தாமரைக்கோயிலென்பதனோடுங்கூட்டுக. தன்னுடைய கருணையிலேசயாத்திரையின் ஞானவொழுக்கச் செல்வமுதலிய எல்லாநன்மையும் பெறுவிக்குமிறைவியைச்செங்கமலத்தோன் முதல்யாரும் எப்பெண்பாலார்க்கு முவமிப்பாரங்ஙனமாக அருந்ததியனையகற்பினங்கையென் றீண்டுக்கூறியது. உழைகுலாநயனத்தார் மாட்டொல்லொன்றே விரும்பற்கொத்ததென்றவாறே எனையோர்களிற் கற்பொன்றுஞ் சிறந்தாளாகலானும் இப்பிராட்டிக்கு மணமகனாகிய சீராமபிரானுடைய குலதேசிகனுக்குத் துணைவியாமேம்பாடுடையளாகலானுமென்க.

பாத்தமேகலையங்கோத்தபாதசாலகமுநாகச் ... ... *
சிரஞ்செறி நூபுரமும்வண்டுஞ்சிலம்பொடுசிலம்பியார்ப்பப் *
புரந்தரன்கோத்திறாதேரரம்பையர்புடைசூழ்ந்தென்ன ... *
வரம்பறுகம்மைத்திருசொல்மடந்தையர்தொடர்ந்துசூழ்ந்தார்

(இ-ள்.) இந்திரனுடைய ஆருகையின் கீழமைந்தோராகிய அரம்பையர்கள் பக்கங்களில் சூழ்ந்துவந்தாற்போல, (அல்குலின்மேற்புறத்தில்) பாத்த மேகலையும் கோத்த பாதசாலகமென்னும் அணியும் (கடைட்பூட்டு) நாகத்தினதுதலையின் வடிவினதாச்செய்த நூபுரவணியும் (கூந்தலிலணிந்தமலர் மாலையில்தேனுண்ணுநின்ற) வண்டுஞ்சிலம்பொடு மிகவும் ஆரவாரிக்கும்ப

டி, மிக்க ஓசையாக இனியசொற்களைப் பேசுகின்ற வரம்பில்லாத மாதர்கள் பின்றொடர்ந்து பிராட்டியைச்சூழ்ந்து வந்தார்கள்—எ-று. (௨௨)

நூபுரம்-சிலம்பின்பேதம்,

சிந்தொடுகுறளுங்கூனுஞ்சிலதியர்குழாமுந்தெற்றி ... ...*
வந்தடிவணங்கிச்சுற்றமணியணிவிதானநீழல் ... ... *
இந்துவின்கொழுந்துவிண்மீனினத்தொடும்வருவதென்ன ... *
நந்தலில்விளக்கமன்னநங்கைபுநடக்கலுற்றாள் ... ...*

(இ-ள்) சிந்தர்களோடு குறளர்களுங்கூனர்களுந் தோழியர்களுமுடைய கூட்டமுந் தெற்றிவாசலில்வந்து அடிவணங்கிச் சுற்றிவராநிற்க, மணிகளாலலங்கரித்த மேற்கட்டியினது நீழலில் விண்மீன் கூட்டத்தோடு பிறைசசந்திரன்வருவதுபோலக் கேடில்லாத விளக்கத்தையொத்த பிராட்டியும் நடக்கத்தொடங்கினாள்—எ-று. (௨௩)

வேறு.

வல்லிமையுயிர்த்தநிலமங்கையிவள்பாத ... ... *
மெல்லியவுறைக்குமெனவஞ்சிவெளியெங்கும் ...*
பல்லவமலர்த்தொகைபரப்பினளெனத்தன் ......*
நல்லணிமணிச்சுடர்தவழ்ந்திடநடந்தாள்...... ...*

(இ-ள்.) சீதாபிராட்டியாகிய பூங்கொடியைப்பெற்ற நிலப்பெண்ணாகிய பெண்ணானவள், இப்பிராட்டியினது சீர்பாதங்கள் மென்மையன தரையானது உறைக்குமென்று அஞ்சி அவ்வெளியிடமெங்கும் தளிர்ராசியையும் மலர்ராசியையும் பரப்பினளென்னும்படி தனது நல்ல அணிகளின் மணிச்சுடர் பூமியில்தவழாநிற்க நடந்தாள்—எ-று. (௨௪)

தொழுந்தகையமென்னடைதொலைந்துதளியன்னம் ... *
எழுந்திடைவிழுந்தயர்வதென்னவயலெங்கும் ... ...*
கொழுந்துடையசாமரைகுலாவமேவர்கலாபம் ... ... *
வழங்குநிழல்மின்னவருபஞ்ஞையெனவந்தாள் ... ...*

(இ-ள்.) செருக்குடைய அன்னங்கள் தொழுந்தகுதியுடைய மெல்லியநடைக்குத்தோற்றுத தன்பக்கலில் சோர்ந்து எழுந்து விழுதல்போல அருகெல்லாம்கொழுந்துபோலும் மென்மையுடைய சாமரைகள் அசையும்படி இப்பற்றகலாபமானது நிழலைத்தராநிற்க அந்நிழலில் விளங்கும்படி வருகின்ற மயிலைப்போல (விதானநிழலில்) வந்தாள்—எ-று. (௨௫)

மண்முதலனைத்துலகின்மங்கையருளெல்லாம் ... ... *
கண்மணியெனத்தகையகன்னியெழிற்காண ... ... *
அண்ணன்மரபிற்சுடரருந்தியொடுதானும் ... ... *
விண்ணிழிவதொப்பதொர்விதானநிழல்வந்தாள் ... ...*

(இ-ள்) பூமிமுதலிய எல்லாவுலகங்களிலுமுள்ள எல்லாமங்கையர்களுக்குள்ளும் கண்மணியைப்போல மேம்பாடுடைய கன்னியாகிய பிராட்டியின

து அழகைக்காணுதற்குச் ஸ்ரீராமபிரானுடைய குலத்தில் (தலைவனாகிய) சூரியன் ஆசையோடு தான் அந்தமண்டலத்தினின்று இழிந்துவருவதுபோலவருவதாகிய ஒப்பற்ற விதானத்தினிழலில் வந்தாள்—எ-று. (௨௬)

கற்றைவிரிபொற்கடைமயிர்த்துறுகலாபஞ் ... ... *
சுற்றுமணிபுக்கவிழுமிக்கிடைதுவன்றி.... ... ...*
விற்றவழவாணியிரமெய்ப்பணிகண்மின்னச் ... ...*
சிற்றிடைநுடங்கவொளிர்சீறடிபெயர்த்தாள் .... *

(இ-ள்.) தொகுதியாகவிரிந்த தோகையினது) பொன்னிறம்பெற்றகடைமயிர் அடர்ந்த இருபத்தெட்டுருவுடையாகிய கலாபமும் அதன்மேற்சூழவணிந்தமணிகளமைந்த தாரவைச்சுமையுமென்னுந்தணியும் இடையின்கண் மிகுந்து நிறைவதினாலவிலங்கலும் ஒளிபரவாநிற்கவும் மிகுதியாய் வெயிலெறியாநிற்கவும் திருமேனியிற்றரித்த மற்றை அணிகள் மின்னுநிற்கவும் சிறிய இடையானது துவளும்படி ஒளிர்கின்ற சிறிய சீர்பாதங்களைப்பெயர்த்து நடந்துவந்தாள்—எ-று. (௨௭)

பொன்னினொளிபூவின்வெறிசாந்துபொதிசீத... ... *
மின்னினிலைமன்னவடன்மேனியொளிமான ... ... *
அன்னமுமரம்பையருமாரமுதுநாண ... ...*
மன்னவையிருந்தமணிமண்டபமடைந்தாள் ... ... *

(இ-ள்.) அச்சீதாபிராட்டி தனதுதிருமேனியினியல்பைப் பொன்னின்கணுள்ள ஒளியும் பூவின்கணுள்ளமணமும் மின்னின்கணுள்ளகாந்தியும் சந்தனத்தின்கணுள்ள குளிர்ச்சியும் ஒத்திருக்கவும், நடையால் அன்னமும் அழகால் அரம்பையரும் சுவையால் அரிய அமுதமும்நாணவும் அரசரவைகூடியிருந்த மணிகளால் நிருமித்தமண்டபத்தைச் சேர்ந்தாள்-எ-று. (௨௮)

பொன்னினொளிமுதலிய நான்கிற்கும் பிராட்டியின் திருமேனியியல்பை யுவமித்தமையின் அந்நான்கு மிவளது திருமேனிக்கியலபாயுண்டென வுணர்க. ஒளி தொழிலாகுபெயர்.

சமைத்தவனாயின்மைபறைதானுமெனலாயச் ... .. *
சுமைத்திரள்முலைத்தெரிவைதூய்வடிவுகண்டார் ... .. *
அமைத்திரள்கொள்தோளியருமாடவருமெல்லாம் ... ...*
இமைத்திலருயிர்த்திலர்கள்சித்திரமெனத்தாம் .... *

(இ-ள்) சிருட்டித்தவனைத் தனக்கில்லாமையால் வேதமுமெனச் சொல்லாகிய இரண்டு தனபாரத்தையுடைய அப்பிராட்டியினது தூய்மையாகிய திருமேனியைக்கண்டாராகிய மூங்கிலைப்போலத்திரண்ட வடிவைக்கொண்டதோள்களையுடைய எல்லாமங்கையர்களும் எல்லா ஆடவர்களும் அம்மண்டபத்திலமைத்த சித்திரங்களைப்போல இமைகொட்டிலர் மூச்சுவிட்டிலர்.

வினைவயந்தாரைத் தோன்றுவாரைப்போலாது தன்னிச்சையாய்த் தானே திருவுருக்கொண்டனளாதலிற்சுயம்புவாய் நிகழ்கின்றவேதமெனலாமென்றார். வேதபுருடனைச் சுயம்பு என்பதைச் செய்யாமொழிக்குந் திருவள்ளுவர் மொழிக்குமென்னுஞ் சங்கத்தார்பாடலாலுமுணர்க,

அன்னவளல்லளெனாமெனவயிர்ப்பான் ... ... *
கன்னியமுதத்தையெதிர்கண்டகடல்வண்ணன் ... ...*
உன்னுயிர்நிலைப்பதொராசையொடுழைத்தான் ... *
முன்னமுதெழக்களிகொளிந்திரனையொத்தான் ... ...*

(இ-ள்.) (காணுந்தற்குமுன்னே) அத்தன்மையளாகிய சீதாபிராட்டியாய் (கன்னிமாடத்திற்றான்நோக்கியகன்னி) அல்லளெனவும் ஆமெனவும் ஐயப்படுவதாகிய, கன்னியர்களில் அமுதத்தையொத்த சீதாபிராட்டியைய நேர்கண்டகடலையொத்ததிருமேனியையுடைய சீராமபிரான் (நீங்குமோநீங்காதெனை) கருதிய உயிர்நிலைப்பதாகிய ஒப்பற்ற ஆசையோடு, அத்திருப்பாற்கடலைக் கடைகின்றவேலை வருந்தி இனிய அமுதம்பிறத்தலினால் களிப்படைகொண்ட இந்திரனைப்போலக்களித்தான்—எ-று. (௬௰)

நறைத்துறைமுதிர்ச்சியுறுநல்லமுதயில்சொற் ... ...*
அறத்தின்விளைவொத்துமுகமேந்தியருகுய்க்கு ... ... *
நிறத்துவரிதழ்க்குயினினைப்பினிடையல்லால் ... ...*
புறத்துமுளளோவெனமனத்தொடுபுகன்றான் ... ... *

(இ-ள்) சீராமபிரான், சுவையுடைப்பொருள்வகைகளில் சுவைமிகுதியைப் பொருந்திய சொல்லாகிய நல்ல அமுதத்தைச்சிந்தாநின்று அறத்தினது விளையும் பயனையொத்துக் கன்னிமாடத்தின் மேலிடத்தினின்றுநீங்கி அருகேகொண்டுவரப்பட்ட செந்நிறமாகிய பவளம்போன்ற இதழையுடைய குயிலானவள் எண்ணத்தின்கண் அல்லாமல் புறத்திலும் உள்ளாளோ என்று தன்மனத்தோடுசொன்னான்—எ-று. (௬க)

முகடென்பொதுப்படக்கூறினாலும் அம்மாடத்தும்பரளிக்கு மமுதன்றனென்றதற்கேற்ப அதற்குப்பொருளுரைக்கப்பட்டது. அன்றியார்க்குங்கிட்டலரியகாவலாகியவிடத்தை யெனினுமாம். முகடு இலக்கணை.

எங்கள்செய்தவத்தினினிராமனெனவந்தோன் ... ... *
சங்கினொடுசக்கரமுடைத்தனிமுதற்பேர் ... ... *
அங்கணரசாதலினவ்வலரிமலர்புல்லு ... ... *
மங்கையிவளாமெனவசிட்டன்மகிழ்வுற்றான் ... ...*

(இ-ள்) வசிட்டமுனிவன், எங்களுடைய செய்தற்குரிய தவத்தால் இராமனென அவதரித்தோன், சங்கோடு சக்கரமுடையதனிமுதல்வனாகிய அழகிய பேரருளையுடைய இறைவன் ஆதலினால் அகவிதழையுடைய செந்தாமரை மலரில்எழுந்தருளிய அவ்விறைவி இவளாகுமென்று மகிழ்ந்தான்-எ-று. ()

துன்றுபுரிகோதையெழில்கண்டுலகுசூழ்வந் ..... *
தொன்றுபுரிகோலொடுதனித்திகிரியுய்ப்பான் ... *
என்றுமுலகாளுமரசெய்தியுளனேனும் ... ... *
இன்றுதிருவெய்தியதுவென்னவயமென்றான் ... *

(இ-ள்) உலகத்தைச்சூழ்ந்துவந்து அது உடன்படப்புரிகின்ற செங்கோ

லோடு தனிமையாகிய சக்கரத்தைநடத்துகின்ற சக்கரவர்த்தி, நெருங்கிய புரிவாகிய கூந்தலையுடைய சீதாபிராட்டியினது அழகைக்கண்டு, என்றும் உலகேழையும் அரசுபுரிதலை அடைந்தேனாயினும் இன்ற திருவை அடைந்தது இது எதன்வலியென்றான்—எ-று. (௯௯)

இவள் மருமகளாக வாய்ப்பதற்குத் தானும் தன்தாதை மூதாதை முதலியோருஞ்செய்த தவத்தின்வலி காரணமாதற் கையாதென்னுங்கருத்தால் என்னவயமென்றான்.

நைவளநவிற்றுமொழிநண்ணவரவோடும் ... ... *
வையநுகர்கொற்றவனுமாதவருமல்லார் ... ... *
கைதலைபுக்கனகருத்துளதுமெல்லாந் ... ... *
தெய்வமெனவுற்றவுடல்சிந்தைவசமன்றே ... ... *

(இ-ள்) தேகமானது சிந்தையின் வயப்பட்டதன்றே (ஆதலால்) உலகங்களையுண்ட இறைவனாகிய சீராமபிரானும் முனிவர்களும் அல்லார்க்கு, குறிஞ்சியாழினிசையைப்போலப் பேசுகின்ற சொல்லையுடைய சீதாபிராட்டி நெருங்கிவரலும் மனமும் அஃது ஒழிந்துள்ளனவாகிய கரணங்களு மெல்லாம் தெய்வமெனப் பொருந்தியன அதுகாரணமாகக் கைகள் தத்தந்தலைகளின்மேற் சென்று அஞ்சலியசெய்தன—எ-று. (௱)

உளதென்பது பன்மையிலொருமை வந்தவழுவமைதி.

மாதவரைமுற்கொளவணங்கிநெடுமன்னன் ... ... *
பாதமலரைத்தொழுதுகண்கள்பனிசோருந் ... .. *
தாதையருகிட்டதவிசிற்றனியிருந்தாள் ... ...*
போதினைவெறுத்தரசர்பொன்மனைபுகுந்தாள் ... *

(இ-ள்) (இருக்கையாகிய) செந்தாமரைமலரைவெறுத்து அரசர்களுடைய அழகியமனையிற் குடிபுகுந்தாளாகிய பிராட்டியானவள் முனிவர்களை முன்னதாகவணங்கிச் சக்கரவர்த்தியினுடைய பாதங்களாகிய தாமரைமலர்களைத் தொழுது (திருமணங் கூடியதேயென்னுங் களிப்பால்) கண்கள் நீர்துளிக்கின்ற தந்தைக்கருகேயிட்ட ஆசனத்தில் தனித்து வீற்றிருந்தாள்—எ-று. ( )

கண்கள்பனிசோர்தற்குக் காரணம், தான் அருமையாய்வளர்த்தெடுத்த அரியமகளை இனிப்பிரியும் பிரிவைக்கருதுதலெனினுமாம், அறஞ்செய்காவற்கயோத்தியிற்றோன்றிய இறைவனுக்குவாழ்க்கைத்துணையாய்ப் போதினைவெறுத் தரசர்பொன் மனைபுகுந்தவளாகலின்மாதவர்முதலியோரைவணங்கினளென்பதுகருத்து.

அச்செனநினைத்தமுதலந்தணனிருந்தான் ... ... *
பச்சைமலையொத்தபடிவத்தடவிராமன் ... ... *
நச்சுடைவடிக்கண்மலர்நங்கையிவளென்றால் ... ...*
இச்சிலைகிடக்கமலையேழையுமிறுக்கே ... ... *

(இ-ள்.) (செயற்கரிய பெருங்காரியங்களைச்செய்து முடிக்கும்வலியுடையவனாயிருத்தலால் உலகத்துக்கு) அச்சாணியைப்போலஅறிவுடையோரால் மதிக்கப்பட்ட முனிவர்களுள் முதன்மையாகிய வசிட்டமுனிவன், (வில்வளைத்தலால்) தான்விரும்புதலையுடையபெண், இவளென்றுணர்ந்திருப்பானானு

ல், மரகதமலையையொத்தமேனியையுடைய திண்மைபெற்ற ஸ்ரீராமன், இப்போது வளைத்துமுறித்த வில்கிடக்கட்டும் எழுமலையையும் முறிக்காமென்றென்று அதிசயப்பட்டிருந்தான்—எ-று. (௫௬)

என்னவென்னுஞ்சொல் எஞ்சிநின்றது.

எய்யவில்வளைத்ததுமிறுத்ததுமுரைத்து ... ... *
மெய்விளைவிடத்துமுதலையம்விடலுற்றாள் ... ... *
ஐயனையகத்துவடிவேயலபுறத்துங் ... ... *
கைவளைதிருத்துபுகடைக்கணினுணர்ந்தாள் ... ... *

(இ-ள்.) வில்வளைத்ததையும் முறித்ததையும் (வசிட்டமுனிவன்) அமையச்சொல்வதினால் (கன்னிமாடத்தில்தன்னைக்கண்டவனே இவனென) உண்மைதோன்றியவிடத்தில் முன்கொண்டிருந்த ஐயத்தைவிட்டனளாகிச் ஸ்ரீராமபிரானைத்தன் னுள்ளத்தில் நிலைத்தஉருவத்தாலேயல்லாமல்புறத்திலும்கைவளைகளைத்திருத்தாநின்று கடைக்கண்ணினா லுணர்ந்தாள்—எ-று. (௫௭)

உரைக்க- உரைத்தெனத்திரிந்தது அமைய உரைத்தலாவது விசுவாமித்திரமுனிவனே வத்தமைமுதலியனவற்றை யுரைத்தல்.

கருங்கடைநெடுங்கணொளியாறுநிறைகண்ணப் ... *
பெருங்கடலின்மண்டவுயிர்பெற்றினிதுயிர்க்கும் ... *
அருங்கலனலங்கரியாரமிழ்தனைத்தும் ... ... *
ஒருங்குடனருந்தினரையொத்துடறழைத்தாள் ... *

(இ-ள்.) தனதுநெடுமையாகிய கருங்கண்ணினது கடையொளியாகிய ஆறு, ஸ்ரீராமபிரானுடைய அழகாகிய நிறைந்த பெருங்கடலில் (நிரம்பிப்பாய்வதினால், ஊசலாடுகின்ற உயிரை நிலைக்கப்பெற்றுக் களிப்பால்) இனிமையாகமூச்செறியும் உயர்ந்த அணிகளையணிந்த தெய்வப்பெண்களுக்கு அரசியானவள் அரிய அமிழ்துமுழுமையும் வேறொருவரின்றித்தாமே கிடைத்தமாத்திரத்தில் உண்டவரை ஒத்துத் திருமேனிபூரித்தாள்—எ-று. (௫௮)

கணங்குழைகருத்தினுறைகள்வனெனலானான் ... *
வணங்குவிலிறுத்தவனெனத்துயர்மறந்தாள் ... *
அணங்குறுமவிஞ்சைகெடவிஞ்சையினகம்பா ... *
டுணர்ந்தறிவுமுற்றபயனுற்றவரையொத்தாள் ... ... *

(இ-ள்.) கூட்டமாகிய குழைகளையணிந்தவளாகிய ஸீதாபிராட்டியானவள் தன்மனத்தில் தங்கியகள்வனெனச் சொல்லலாயினவன், வளைதற்குரியவில்லை வளைத்து முறித்தவனெனத்தேறி முன்கொண்டதுயரத்தை மறந்தாளாகிப் பிறப்பின்வருத்தம் பொருந்தற்குக் காரணமாகிய பேதைமைகெட மெய்ஞ்ஞான நூலினுட்பொருளையறிந்துஞானத்தையுமடைந்துஅதனால்பெறும்பயனையும் அடைந்தவரை ஒத்தாள்—எ-று. (௫௯)

விஞ்சை-காரியவாகுபெயர். அகம்பாடு- தொழிலாகுபெயர். இறந்ததுதழீஇய எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அப்பயன்-எ-து-அபயனெனத்தொகுத்தது.

கொல்லுயர்களிற்றரசர்கோமகனிருந்தான் ... ... *
கல்விகரையற்றமுனிகௌசிகனைமேலோய் ... ... *
வல்லிபொருசிற்றிடைமடந்தைமணநாளாம் ... ... *
எல்லையினலத்தபகலென்றுரைசெய்கென்றான் ... *

(இ-ள்.) கொல்லுந்தொழிலிற்மிக்க யானைச்சேனையையுடைய அரசர்களுக்கு அரசனாயிருந்தசக்கரவர்த்தி ஞானக்கல்வியினது முடிவைக்கண்ட விசுவாமித்திரமுனிவனை நோக்கி பெரியோனே கொடியையொத்தசிறிய இடையையுடைய பெண்ணாகிய சீதையினது திருமணத்துக்குரிய நாளாகியவரம்பில்லாதநன்மையையுடைய தினம் எந்தினம்சொல்லியருள்க என்றான்-எ-று.()

வாளையுகளக்கயல்கள்வாவுமதின்மேதி ... ... *
மூளைமுதுகுழைக்கிழியமூரியவரால்மீன் ... ... *
பாளைவிரியக்குதிகொள்பண்ணைவளநாடா .... *
நாளையெனவுற்றபகனற்றவனுரைத்தான் ... ... *

(இ-ள்.) வாளைமீன், சேல்கள் துள்ளும்படி தாவுவதினால், எருமைகள் மச்சையுள்ளமைந்த முதுகு கிழியவும் கமுகின்பாளைமலரவும் வலியுள்ளவரால்மீன் (வெருண்டு) குதிக்காநின்றவயல்வளப்பம்நிறைந்தகோசலநாட்டையுடையானே திருமணத்துக்கு அமைந்ததினம் நாளையென்று நலதவத்தையுடைய விசுவாமித்திர முனிவன் சொன்னான்-எ-று. (சுக)

முதுகை-என்பதில்-ஐ-சாரியை.

சொற்றபொழுதத்தரசர்கைதொழுதெழத்தன் ... *
ஒற்றைவயிரச்சுரிகொள்சங்கினொலிபொங்க ... ...*
பொற்றடமுடிப்புதுவெயிற்பொழிதரப்போய் ... *
நற்றபனனுச்சிதொடுநன்மனைபுகுந்தான் ... ... *

(இ-ள்.) சொன்னகாலத்தில் அரசர்கள்கைகளால் அஞ்சலிசெய்து தொழாநின்று எழுந்திருக்கத்தனது ஒப்பற்ற பூணணிந்த சுரிமுகங்கொண்டசங்கோசை மிகவும் ஒலியாநிற்கவும் பொன்னாலியற்றிய பெருமையாகியமுடியானது இளம்வெயிலைப்பொழியவும் சென்று நல்லசூரியனை உச்சிதீண்டுகின்ற நல்லமனையில் புகுந்தான்-எ-று. (சஉ)

உச்சிதொடுங்கால் தன்னியல்பு குறைவின்றியெய்திநிற்றலினற்றபனனெனவும் சுரர்நாடுந்த பெருமிதமுடையானுக்குத் தங்குமிடமாதலைப்பற்றி நன்மனையெனவுங்கூறினார்.

அன்னமரிதிற்பிரியவண்ணலுமகன்றப் ... ... *
பொன்னினெடுமாடவரைபுக்கனன்மணிப்பூண் ... *
மன்னவர்பிரிந்தனர்கண்மாதவர்கள்போனார் ... ... *
மின்னுசுடர்நாயகனும்மேருவின்மறைந்தான் ... ...*

(இ-ள்.) சீதாபிராட்டியாகிய அன்னம் அருமையாகப் பிரிந்து செல்லச் ஸ்ரீராமபிரானும் நீங்கிச்சென்று பொன்னாலாகியநெடியஅம்மேருவையொத்த மாளிகையில்புகுந்தான். மணிப்பூணணிந்த மன்னவர்கள் தனித்தனிசெ

ன்றார்கள் முனிவர்கள்சென்றார்கள் விளங்குகின்ற சுடர்களுக்கு நாயகனாகி
ய சூரியனும் மேருவில் மறைந்தான்—எ-று. ([illegible])

உ௧-வது - கோலங்காண்படலம் முற்றிற்று.

உ௨-வது-கடிமணப்படலம்.

இடம்படு பெருஞ்சனகர்கோனினிது ஏவும் ... ... *
கடம்படு களிற்றரசராதியிடை கண்டோர் ... ... *
தடம்படு புயத்த சிறு தம்பியர்களாரும் ... ... *
உடம்பொடு துறக்க நகருற்றவரை யொத்தார் ... ... *

(இ-ள்.) பொருட்செல்வமிகுந்த புகழுடைய சனகர்களுக்கு அரசனாகிய
வன் இனிமையாக உண்டி முதலியவற்றால் உபசரிப்பதனால மதம்பெருக்கும் யானை
ச்சேனையையுடைய அரசர்கள் முதல் பெருமையாகிய புயங்களையுடைய சி
றிய தம்பியர்களவரையும் இடையே தன்னால் காணப்பட்டவர் யாவரும் உட
லோடு சுவர்க்க நகரத்தைச் சேர்ந்தவரைப்போல் இன்பமுற்றனர்-எ-று. (௧)

இடைகண்டோர் - என்றது. அமைச்சர் சேனைத்தலைவர் முதலியோரை. உணச்சுவை
முதலிய வெறுத்தன ராகலின் முனிவரையொழித்து அரசராதியென்றார்.

தேடருநலத்தபுனலாசைதெறலுற்றார் ... ... *
மாடொர்தடமுற்றதனை மெய்துமவகைகாணார் ... *
கூடழிவுறத்தளர்வொடேமுறுவரன்றே ... ... *
ஆடகவளைக்குயிலுமத்தலையளானாள் ... ... *

(இ-ள்) தேட அருமையாகிய நலமுள்ள நீரின தாசையால் வருந்துதலுற்
றோராகி அருகே ஒரு தடாகத்தைச் சேர்ந்து அதனிடத்திலே நீரை அடையு
ம்வகைகாணாதவர்கள் (தம்முடலின்) வலி அழியும்படி தளர்ச்சியோடு உன்
மத்தராவர்களன்றோ பொன்வளையணிந்த குயிலாகிய பிராட்டியும் அத்தன்
மையளானாள்—எ-று. (௨)

வேறு.

உரவேதுயிலாருயிர் துமெனக் ... ... *
கரவேபரிவாருளரோ கதிரோன் ... ... *
வரவேபெறயானுடையான்வருமே ... *
இரவேகொடியாய்விடியாயெனுமால் ... *

(இ-ள்.) வலிமிகுதியில்லாதது உயிரை எவோமெனக்கூறி எமாமல் இ
லோபத்தைச் செய்பவருண்டோ இல்லை (நீ அவ்வாறு செய்யாநின்றாய்); சூரிய
ன் உதித்தலும் என்னை அடிமையாக உடையான் வருவான் இரவே கொடுமைய
யுடையாய் நீங்காய் என்பாள்—எ-று. ([illegible])

சிராமபிரான் வில்லை முறித்தநாள் முதலொவ்வொருநாளிரவிலும் கள்படைப்பெருந்
துங்குறைந்து நாளை தன்னைமணம்புணர்வனெனத் தன்னுட்டேடிக்காமப்படர்தணியாளாக
வினதிணை யிரவின்மேலேற்றியுயிர் துமெனக் கரவேபுரிவாருளரோவென்றாள்.

[[illegible]]

கருஞாயிறுபோல்பவர்காலொடுபோய் ... *
வருநாளயல்வருவாய்மணமே ... ... *
பெருநாளுடனேபிரியாதுழல்வாய் ... *
ஒருநாடனியாதொழிவாருளரோ ... *

(இ-ள்) மணமே கரியமேனியையுடைய சூரியனையொத்த திருமேனியையுடையாரது சீர்பாதங்களோடுதொடர்ந்துசென்று நாளை அருகேவருவாய் (வாராநின்றாய்) அநேகநாள் அவரைச்சேர்ந்து பிரியாமல்தங்கியிருப்பாய் (அப்படியிருக்க) ஒருநாளைச்சகிக்காமல்விட்டு நீங்குவாருமுண்டோ (நீயென் அவரிடத்திற்சென்றனை) —எ-று. (௪)

கனைமேழ்கடல்போல்கருநாழிகைதான் ... *
வினையேன்வினையால்விடியாவிடினீ ... *
தனியேபறவாய்தகவேதுயிலாய் ... ... *
பனைமேலுறைவாய்பழிபூணுதியோ ... *

(இ-ள்.) ஒலிக்கின்ற ஏழ்கடல்போல்கின்ற இராவானது தீவினையையுடையேனது தீவினையால் விடியாவிடில் பனையின்மேல் தங்கிய அன்றிலே நீ (உன் துணையைப்பிரிந்து) தனித்துப்பறவாய் (கூவிஎன்னை வருத்தலால்) நற்றிலைமை சிறிதுமில்லாயாகிப் பழியைப்பூண்கின்றாய்—எ-று. (௫)

போல்-வினைத்தொகை. கருநாழிகை சினையாகுபெயர்.

அயில்வேலனல்கால்வனவாதிழலாய் ... *
வெயிலேயெனநீவிரிவாய்நிலவே ... ... *
செயிரொன்றுமிலாருடனேய்வுறுவார் ... *
உயிர்கோளுறுவாருளரோவுரையாய் ... *

(இ-ள்) நிலவே கூர்மையாகிய வேலைப்போன்ற அழலைவீசுவனவாகியஒளிகளால், வெயிலேயென நீவிரிவாய் யாதொரு குற்றமுமில்லார்தம்முடலை மேவியவர் அவருடைய உயிரைக்கொள்ளுவாருண்டோ இல்லை உரையாயென்றால் நீ சொல்லு—எ-று. (௬)

உடல்மெலியாநின்றநான் நினக்குயாதொருகுற்றமும் புரிந்தேனல்லேன் அங்ஙனமாகவும் என்னுயிரைவருத்தாநின்று யென்றேனென்பது கருத்து. வேல்-பயனுவமம். கால்வனபால்வழுவமைதி.

மன்றற்குளிர்வாசம்வயங்கனல்வாய் ... *
மின்றோற்றுநிலாநகைவீழ்மலயக் ... *
குன்றிற்குலமாமுழையிற்குடிவாழ் ... *
தென்றற்புலியேயிரைதேர்தியோ ... *

(இ-ள்) குளிர்ந்தமன்றலாகிய மணமென்னும் விளங்குகின்ற அழலமைந்தவாயையும் ஒளித்தொகுதியாகிய நிலாவென்னுந்நகையையுமுடைய, யாவரும் விரும்புகின்ற பொதியமலையின்கட்சிறந்த பெரியகுகையில் குடியிருக்கின்ற தென்றலாகிய புலியே இரையைத்தேடுகின்றாயோ—எ-று. (௭)

ஊரிற்பெருங்கடல் தந்ததேயன்றி வானோர்க்குபகாரத்தின்பொருட் டேர்ப்பெருங்கடலட்டுச்சேருங்கொழியவுட்கொண்டபேராற்றலுடையமுனிவனுறைதலின் வீழ்மலயமெனருள்

தெருவேதிரிவாரொருசேவகனார் ... ...*
இருபோதும்விடாரிதுவென்னைகொலாம் ...*
கருமாமுகில்போல்பவர்கன்னியர்பால் ... *
வருவாருளரோகுலமன்னவரே ... .. *

(இ-ள்.) குலமன்னவர்களிலே கன்னியரிடத்தில் வருவாருண்டோ இல்லை (அப்படியிருக்க) பெருமையாகிய கரியமேகத்தை யொத்தவராகிய ஒருவீரர் தெருவே திரிவாராய் இரவிலும் பகலிலும் என்னை விட்டுப்பிரியார் இது யாது—எ-று. (அ)

தெருளாவினைதீயவர்சேரலர்தோள் ... *
அருளாநெறியோடுமவாவுதுவோ ... ...*
கருளார்கடலோகரைகாணரிதால் ... *
இருளானதுதானெனையூழிகொலாம் ... *

(இ-ள்.) (பிறரால்) அறியப்படாதசெயல் தீயராயினுந் தழுவார் அவர் அருள்செய்யாதவழியினாலே அவருடைய தோள்களைத் தழுவ விரும்புவதோ கூடாது இருள்நிறைந்த இரவாகிய கடலோ கரைகாணுதல் அரிது எவ்வளவு ஊழிக்காலம் இரவாயினதோ அறியேன்—எ-று. (௯)

அருளல் புல்லுதலைப்பயக்குமாகலி னதுநிகழ்தலின்றாகவே அருளாநெறியென்றாள். கருள்-இருளென்பன குணவாகுபெயர்.

பண்ணேயொழியாபகலோபுகுதா ... *
எண்ணேதவிராவிரவோவிடியா ... *
புண்ணேயொழியாவுயிரோவகலா ... *
கண்ணேதுயிலாவிதுவோகடனே .... *

(இ-ள்) இசைகளோ அடங்கா பகற்பொழுதோ வாராது எண்ணெண்ணங்களோ நீங்கா இராப்பொழுதோ விடியாது உள்ளத்தின் வருத்தங்களோ ஒழியா உயிரோ உடலைவிட்டுப்பிரியாது கண்களோ தூங்கா இவையோ என் கடமைகள்—எ-று. (ய)

துன்பம்பயப்பதிற் பண்முதலியன தனித்தனி யொவ்வொன்றைக்கொண்டு தோலாதுநிற்றற் சிறப்புப்பொருட்டாலின் ஓ சிறப்பு. இது-தொகுதியொருமை.

இடையேவளைசோரவெழுந்துவிழுந் ... *
தடையேய்மதனன்சரமஞ்சினையோ ... ...*
உடலோய்வுறநாளுமுறங்கலையால் ... *
கடலேயுறைநீயுமொர்கன்னிகொலாம் ... *

(இ-ள்.) போர்த்தொழிலை யுடைமைபெற்ற மன்மதனுடைய அம்புகளுக்கு அஞ்சினையோ (முன்னெல்லாமில்லாமல்) இடையானகாலத்திலே கைவளைகள் கழலும்படியிளைத்து ஓர் நிலையிலே நில்லாமல் எழுந்தும் விழுந்தும் உடல்தளர்தலினால் நாள்முழுமையும் தூங்கிலேன் (என்னைப்போலவே) கடலே போர்த்தொழிலையுடைமைபெற்ற மன்மதனுடைய அம்புகளுக்கு

அஞ்சிறையோ நின்னிடத்தினின்றும் சங்காகிய வளைகள் புறத்தே வரும்படி சோர்ந்தும் விழுந்தும் உடல் தளரும்படி நாள் முழுமையும் தூங்கிலை ஆதலால் நீயும் ஒரு கன்னியோ சொல்லாய் — எ-று. (௰௧)

துயிற்குரிய இரவில் இடையீடின்றி விழித்தலின் உறங்கலை யென்றாள்.

எனவின்னனபன்னியிருந்துழிவா ... ... *
முனியுந்திறலங்கொடி சோர்வுறுவாள் ... *
மனைதன்னின் வயங்குறும்மைகிருள்வாய் ... *
அனகன்வினையின்றனயாமறைவாம் ... *

(இ-ள்.) என்று இவைபோல்வனவற்றைப் பலவாறாக எடுத்துக்கூறி (வேறு தன்னாலாகாமையால்) செயலற்றிருந்து வருந்துவாளாகிய பிராட்டியானவள் தான்படும் துயரத்தைக்கருதாநின்று பெண்ணலத்தால் சோர்வடையுங் காலத்திலே மாளிகையின்கண் விளங்காநின்ற கழிகின்ற இருளில் அநகனாகிய ஸ்ரீராமபிரான் நினைகின்றனவற்றையாம் கூறுவாம் — எ-று. (௰௨)

முன்கண்டுமுடிப்பருவேட்கையினால் ... *
என்கண்டுணைகொண்டிதயத்தெழுதிப் ... *
பின்கண்டுமோர்பெண்கனாகண்டிலனால் ... *
மின்கண்டவரெங்கறிவார்வினையே ... ... *

(இ-ள்.) மின்னலிற் சிறந்தாளைக்கண்டவர் காட்சித்தொழிலின் கனாவை எவ்வாறு காண்பார் காணார் (ஆதலால் கன்னிமாடத்திலே) முன்னேகண்டு அளவிடுதலரிய ஆசைப்பெருக்கால் என்னுடைய இரண்டுகண்களால் இதயத்திலேதீட்டியெழுதி (அரசாவைக்கண்) பின்னேகண்டும் ஓர் பெண்ணினுடைய அழகின்கனாவைக்கண்டேனல்லேன் — எ-று. (௰௩)

திருவேயனையாண்முகமேதெரியின் ... *
கருவேகனியேவிளைகாமவிதைக் ... ... *
செருவேமதியேயிதுவென்செய்தவா .. *
ஒருவேனொடுநீயுறவாகலையோ ... ... *

(இ-ள்.) சந்திரனே ஆராயுமிடத்து விளைகின்றகாமவித்துக்குக்காரணமும் (அதன் காரியமாகிய) கனியும் துணைக்காரணமாகிய எருவும் ஆயினை (ஆதலால்) நீ திருமகளை ஒத்தவளது முகமே வேறன்று (அங்ஙனமானால்) என்னொருவனோடும் நீ உறவாகினையல்லை நீ செய்தவிதம் இத்தன்மையது என்ன காரணம் — எ-று. (௰௪)

அவள்முகமே நீயாயினையாதலால் அவள்முகத்துக்கினியானாகிய என்னோடுறவாகி நின்று தண்ணிலவெறித்து உள்ளங்குளிர்ப்பிக்காமல் உறவாகாது நின்று அழலெறித்துக் கொளுந்தல் செய்கின்றனை அது கூறஎன்வாயும் நாணுநின்றதென்னுங் கருத்தால் இதுஎன்றான். ஆயினை என்பது சொல்லெச்சம்.

கழியாவுயிருந்தியகாரிகைதன் ... ... *
விழிபோலவளர்ந்ததுவீகிலதால் ... ... *
அழிபோரிறைவன்படவஞ்சியவன் ... *
பழிபோலவளர்ந்ததுபாயிருளே ... *

(இ-ள்.) எவ்விடத்தும்பரந்த விருளானது (என்னுடலினின்றும்) நீங்கா நிலைமைத்தாகிய உயிரைத்தள்ளும்படி அப்பெண்ணினது கண்களைப்போல வளர்ந்துகுறையாமல், அழிகின்ற போரிலே தலைவன் இறக்க அஞ்சினவீரனுடைய பழியைப்போல மேலும்வளர்ந்தது—எ-று. (௬௫)

நினையாயொருகானெடிதோநெறிதான் .. *
வினவாதவர்பால்விடைகொண்டிலையோ ...*
புனமானனையாரொடுபோயினவென் ... *
மனனேயெனைநீயுமறந்தனையோ ... *

(இ-ள்.) புனத்தில்தங்கியமானையொத்தவரோடு போயின என்மனமே, ஒருகால் (என்பால்வர நினையாய் (வருதற்கு) வழிதூரமாயினதோ (நீயேன்வந்தாயென்று) கேளாதவரிடத்து விடைபெற்றிலையோ (அன்றி) (அவரைப்போல) நீயும்என்னை மறந்தாயோ—எ-று. (௬௬)

தன்னோக்கெரிகாறகைவாளரவின் ... ...*
பன்னோக்கினதென்பதுபண்டுகொலாம் ... *
என்னோக்கினுநெஞ்சினுமென்றுமுளார் ...*
மென்னோக்கினதேகடுவல்விடமே ... *

(இ-ள்.) கடுமையாகிய வலியவிடமானது, தன்கண்களில் தீயைக்கக்குகின்றதன்மையையுடைய ஒளியமைந்த அரவினதுபல்லை இடமாகக்குறித்ததென்பது முன்னம் (இப்போதெல்லாம்) என்பார்வையிலும் நெஞ்சிலும் என்றும் உள்ளராது மெல்லிய பார்வையினிடத்ததேயாம்—எ-று. (௬௭)

பல்-காளி-கராளி-காளாந்திரி-யமதூதிஎன நான்காம்.

கல்லார்மலர்சூழ்கழிவார்பொழிலோ.... ...*
டெல்லாமுளவாயினுமென்மனமோ... ... *
சொல்லாரமுதின்சுவையோடினிதாம் ... *
அல்லோதியர்தாம்விளையாடிடமே ... ... *

(இ-ள்.) மலையும்தேன் நிரம்பியமலர்கள் நிறைந்தகழிக்கரையும்நீண்டசோலையும் மற்றுமெல்லாம் உள்ளனவாயினும் சொல் அரியஅமுதின் சுவையினும் இனிதாகிய அணியொளியமைந்த கூந்தலையுடையார் விளையாடுகின்றஇடம் (இப்போது) என்மனமோ அறியேன்—எ-று. (௬௮)

கல்லார்மலர்சூழ்கழி என்பதற்குக் கல்லாரமலர்சூழ்ந்த கழியெனினுமமையும். கல்லாரமென்னு நிறுத்தசொல்மகரம் மலவொன்னுங்குறித்து வருகிளவிநோக்கி, மகரவிறுதி வேற்றுமையாயிற்றுவரக்கெட்டு வல்லெழுத்து மிகுமேயென்னுஞ் சூத்திரத்தில் துவரவென்றதனுனியல்புக்கணத்துக்கட்கெட்டு அகரந்தொகுத்ததெனக்கொள்க

வேறு.

வானவர்பெருமானும்மனநினைவினனுந்த் ... *
தேனகுகுழலாடன்றிருமணவினைநாளை .. .. *
பூநகுமணிவாசம்புனைநகரணிவீரோன்... ... ... *
றானையின்மிசையாணரணிமுரசறைகென்றான் ... *

(இ-ள்.) தேவரிறைவனாகிய ஸ்ரீராமபிரானும் மனத்தினெண்ணம் இத்தன்மையனாயிருக்கச்சனகமகாராசன், வள்ளுவனை மலர்த்தேன் விளங்குகின்ற கூந்தலையுடையாளது திருமணத்தொழில் நாளைத்தினமாகும் மலர்மாலைகளாலும் ஒளிர்கின்ற மணிவடங்களாலும், புனைதற்குரிய நகரத்தை அலங்கரியுங்கோளென்று யானையின்மேல்புதிதாகிய அழகிய மணமுரசைக்கொட்டுகவென்று சொன்னான்—எ-று. (௰௯)

பூ-மணி-வாசம்-ஆகுபெயர்கள்,

முரசறைதலுமானமுதியருமிளையோரும் ... *
விரைசெறிகுழலாரும்விரவினர்விரைகின்றார் ... *
உரைசெறிகிளையோடுமுவகையினுயர்கின்றார் ... *
கரைசெறிவரிதாகுமிரவொருகரைகண்டார் ... ... *

(இ-ள்.) முரசங்கொட்டி அவ்வாறுசொல்லுதலும் பெருமையுடைய முதியவர்களும் இளையவர்களும் மயிர்ச்சாந்துதடவிய கூந்தலையுடையமங்கையர்களும் (ஆங்காங்கு) கூடினவர்களாய் அணிவதற்கு விரைகின்றாரும் உசாவுகின்ற சுற்றத்தோடு திருமணத்தைக்குறித்துக் களிப்பில் மிகுகின்றாருமாகிக் கரையடைதலரிதாகிய இராவுக்கு ஒருகரையைக்கண்டார்கள்—எ-று. (௨௰)

நகரையணிதற்கும் திருமணத்தைக்காணற்கும் விரைகின்ற உவகையுடையார்க்கு அவ்விராப்போது எழூழிகொலாமென்னும்படி நீடியதாய்த் தோன்றினமையிற் கரைசெறிவரிதாகுமிரவென்றார்.

அஞ்சனவொளியானுமலர்மிசையுறைவாளும். ... *
எஞ்சலின்மணநாளைப்புணர்குவரெனமேலோன்... . *
செஞ்சுடரிருள்கீறித்தினகரனொருதேர்மேல் ... *
மஞ்சனையணிகோலங்காணியவெனவந்தான் ... *

(இ-ள்.) மைபோலுந்திருநிறத்தையுடைய இறைவனும் செந்தாமரைமலரிலெழுந்தருளியஇறைவியும் நாளைத்தினம் திருமணம் புணர்வார்களெனச்சொல்லலும் தன்செஞ்சுடர்களால் இருளைப்பிளந்து சூரியனானவன் ஒற்றைவண்டிலையுடைய தேரின்மேல் தன்மரபிலவதரித்த புத்திரனையணிகின்ற திருக்கோலத்தைக்காணவெனவந்தான்—எ-று. (௨௧)

தோரணநடுவாருந்தூணுறைபொதிவாரும் ... *
பூரணகுடமெங்கும்புனைதுகில்புனைவாரும் ... . *
காரணிநெடுமாடங்கதிர்மணியணிவாரும் ... *
ஆரணமறைவாணர்க்கின்னமுதடுவாரும் ... ... *

(இ-ள்.) (நகரமாக்களிற்சிலர்) தோரணங்களை நடுவாரும் தூண்களை (சித்திரித்த உறைகளாற்)பொதிவாரும் (வைத்தற்குரிய) இடமெங்கும் வைத்த பூரணகலசங்களுக்குப் புனைவதற்குரிய ஆடையை அணிவாரும்மேகத்தைச்சிகரத்திற்பொருந்திய நெடியமாளிகைகளுக்குக் கதிர்களைவீசுகின்றமணிமாலைகளை அணிவாரும் சாகைகளையுடைய வேதங்களை ஓதல் ஓதுவித்தலாகியவாழ்க்கையுடைய அந்தணர்களுக்கு இனியஉண்டிகளைச்சமைப்பாருமாயினர்...()

அன்னமென்னடையாருமழவிடையனையாருங் ... *
கன்னிதன்னகர்வாழைக்கமுகொடுநடுவாரும் ... ... *
பன்னருநிரைமுத்தம்பரியனதெரிவாரும் ... ... *
பொன்னணியணிவாருமணியணிபுனைவாரும் ... *

(இ-ள்.) அன்னத்தைபொத்த மெல்லியநடையையுடைய மங்கையர்களும் இளமையாகிய இடபத்தைபொத்த நடையையுடைய ஆடவர்களும் அழிவில்லாதநலத்தையுடையநகரத்தில் கமுகம்பாளைபோடுசேர்த்துவாழைமரங்களை நடுவாரும் விலைசொல்லலரிய ஒருசாதியாயுள்ள முத்துவடங்களில்பருத்தமுத்துவடங்களை ஆராய்ந்தெடுப்பாரும்பொன்னாற்செய்த அணிகளை அணிவாரும் மணிகளிழைத்த அணிகளை அணிவாருமாயினார்—எ-று. (௨௩)

சந்தனமகிலாறுஞ்சாந்தொடுதெருவெங்கும் ... *
சிந்தினர்திரிவாருஞ்செழுமலர்சொரிவாரும் ... *
இந்திரதனுநாணுமெரிமணிநிரைமாடத் ... ... *
தந்தமில்விலையாரக்கோவைகளணிவாரும் ... ... *

(இ-ள்.) சந்தனத்தையும் அகிலாற்சமைத்த மணக்கின்ற சாந்தையும் தெருவெங்கும்திரிந்து சிந்துவாரும் செழுமையாகியமலர்களைச்சொரிவாரும் இந்திரவில் நாணுகின்ற ஒளிசெய்யுமணிகளைமுறைமைபடப்பதித்தமாளிகைகளில் விலைவரம்பில்லாத முத்துவடங்களை அணிவாருமாயினார்—எ-று. (௨௪)

தளங்கிளர்மணிகாலத்தவழ்சுடரிமிழ்தீபம் ... ... *
இளங்குளிர்முளையார்நற்பாலிகையினபெருஞ் ... *
விளிம்புபொன்வினைநாறவெயிலொடுநிலவீனும் .. *
பளிங்குடையுயர்திண்ணைப்பத்தியின்வைப்பாரும் *

(இ-ள்.) (தம்மேல்மெழுகிய) சந்தனம் பரிமளிப்பதற்க வெயிலையும்நிலாவையும் வீசுகின்றஓரம் பொன்னாற்செய்த உயர்ந்தபளிங்குத்திண்ணைகளின்கும், கனமாகிய ஒளிர்கின்ற மணிகள் வீசுதலால் தவழ்கின்ற அச்சுடரைப்போலுஞ் சுடரைவீசுகின்ற தீபக்குடங்களையும் இளமையாகியவளர்ந்தமுளைகள் நிரம்பிய நல்லபாலிகையினங்களையும் வரிசையாகவைப்பாருமாயினார்.()

மந்தரமணிமாடமுன்றிலின்வயினெங்கும் ... *
அந்தமிலொளிர்முத்தினகனிரையொளிவீச ... ... *
இந்திரனெடுவானமீனலர்குவதென்னப் ... ... *
பந்தரினிழல்வீசப்படர்வெயில்கடிவாரும் ... *

(இ-ள்.) மந்தரமலையையொத்த அழகியமாடங்களினுடைய முற்றங்களினிடமெங்கும் இந்திரனுலகைக்குள்ளமைந்தநெடியவானம்விண்மீன்களைப் பூத்ததுபோல முடிவில்லாமலொளிர்கின்ற பரந்த வரிசையாகிய முத்துவடங்கள் ஒளியைவீசவும் பச்சைப்பந்தர் இனியநிழலைத்தரவும் படர்ந்தவெயிலைக்கடிந்துநீக்குவாருமாயினார்—எ-று. (௨௬)

நெடுவானத்தையுவமைகூறினமையிற் பந்தர் பசுமையதென்பது பெறப்பட்டது.

வயிரமிளிரொளிவீசு மரகதமணிவேதிச் ... ... *
செயிரறுமொளிதீபஞ்சிலதியர்கொணர்வாரும்... *
வெயில்விரவியபொன்னின்மிடைகொடிமதிதோயும்
எயிலினிடைவாருமகிலெரியிடுவாரும் ... ... *

(இ-ள்) (ஓரத்தில்) வயிரமணிகள் இனிய ஒளியை வீசுகின்ற மரகதமணியாலமைத்த ஓமகுண்டத்தின் பக்கலிற் குற்றமில்லாது ஒளிசெய்கின்ற தீபக்குடங்களைச் சிலதியர்கள் கொண்டுவந்துவைப்பாரும் (அவருடையகணவர்கள்) வெயில்நிரம்பிய செம்பொன்னாற்செய்த நெருங்கியகொடிகளைச்சந்திரன் பொருந்துகின்ற மதில்களின்புறத்தேநடுவாரும் (தூபக்குடங்களிற்பெய்து) அகிற்கட்டைகளில் புகையுண்டாக எரியிடுவாருமாயினர்—எ-று. (௨௭)

பண்டியினிறைவாசப்பனிமலர்கொணர்வாருந் ... *
தண்டலையிலையோடுகனிபலதருவாரும் ... ... *
குண்டலம்வெயில்வீசக்குரவைகள்புரிவாரும் ... *
உண்டைகொண்மதவேழத்தோடைகளணிவாரும்... *

(இ-ள்.) பண்டியில் நிறைத்து மணமமைந்த குளிர்ந்த மலர்களைக்கொண்டுவருவாரும் சோலையிலுள்ள (வாழைமாமரங்களின்) இலையோடு பலவகைக்கனிகளைக்கொய்துவந்து தருவாரும் காதிலணிந்தகுண்டலங்கள் வெயில்வீசும்படிகுரவைக்கூத்தாடுவாரும்விலலாலெறிகின்ற உண்டையடியைக்கொண்ட (நீராட்டிய) மதத்தையுடையயானைகளுக்குப்பட்டங்களை அணிவாருமாயினர்

உண்டைகொள் வேழமென்றமையி னீராட்டிய வேழமென்பது பெறப்பட்டது இலை வென்னிலையெனினுமொக்கும்.

கலவைகள்புனைவாருங்கலைநலதெரிவாரும் ... .. *
மலர்குழன்மிலைவாருமதிமுகமணியாடித் ... ... *
திலகமுணிடுவாருஞ்சிகழிகையணிவாரும் ... ...*
இலவிதழ்பொலிகோலமெழில்பெறவிடுவாரும்... *

(இ-ள்) கலவைச்சந்தனங்களைப்பூசுவாரும் நல்லஆடைகளைஆய்ந்தெடுப்பாரும் மலர்களைக்கூந்தலில் அணிவாரும் சந்திரன்போன்றமுகத்தில்அழகிய கண்ணாடியின்முன் திலகமிடுவாரும் மணிமாலைகளைப்புனைவாரும் இலவமலரையொத்த இதழில்பொலிகின்ற கோலத்தை அழகுபெற இடுவாருமாயினர்.()

தப்பினமணிகாசுஞ்சங்கமுமயிலன்னார் ... ... *
ஒப்பனைபுரிபோதுமுடலினுகுபோதுந் ... *
துப்புறழிளவாசச்சுண்ணமுமுதிர்தாதுங் ... ...*
குப்பைக்ளெனவாரிக்கொண்டனர்களைவாரும் ... *

(இ-ள்.) தெரியாது சிந்தியமுத்துகளையும் இரத்தினங்களையும் கைவளைகளையும் மயிலையொத்தமங்கையர்கள் அலங்காரஞ்செய்வதி லுதிர்ந்த மலர்களையும் ஊடியபோ துதிர்ந்த மலர்களையும் பவளத்தை ஒத்த செம்மையாகிய மெல்லியபரிமளப்பொடியையும் உதிர்ந்தபொற்பொடியையும் குப்பைகளென்று வாரிக்கொண்டனராகி மனையினின்று நீக்குவாருமாயினர்.எ-று. ()

மன்னவர்வருவாருமறையவர்நிறைவாரும் ... *
இன்னிசைமணியாழினிசைமதுநுகர்வாருஞ் ... *
சென்னியர்திரிவாருஞ்சிலதியர்செறிவாருங் ... ...*
கன்னலின்மணவேலைக்கடிகைகடெரிவாரும் ... *

(இ-ள்) அரசர்கள் வருவாரும் அந்தணர்கள் நிறைவாரும் இனியபாட்டிசையும் அழகிய யாழினிசையுமாகிய நறவைச்செவிவாயாலுண்பாரும் பாணர்கள் உலாவுவாரும் சிலதியர்கள்கூடுவாரும் நாழிகைவட்டிலால்திருமணத்துக்காலநாழிகைகளை ஆராய்வாருமாயினர்—எ-று. (௩௧)

கணிகையர்தொகுவாருங்கலைபலபயில்வாரும் ... *
பணிபணியினமுத்தம்பலவிதநிலமன்னர் ... *
அணிநெடுமுடியொன்றொன்றுறைதலினுகுமம்பொ
மணிமலைதொகுமன்னன்வாயிலின்மிடைவாரும் ..[ன்

(இ-ள்) நிருத்தமாதர்கள் நிறைவாரும் பரதநூல்கள் பலவற்றையும்பலகாலாராய்வாரும் வடங்களிற்கோத்த ஓரினமாகிய முத்தங்களினுதிர்ந்தவையும் தமதலங்கரித்த நெடியமுடிகள் ஒன்றோடொன்றுதாக்குதலால் உதிர்ந்தஅழகிய பொன்னும் மணிகளும் மலையைப்போலக்குவியலாக்கிடக்கின்றசக்கரவர்த்திவீற்றிருக்கும்மனைவாயிலில்பலவிதநிலமன்னவர் நெருங்குவாருமாயினர்

கேடகம்வெயில்வீசக்கிளரயினிலவீனக் ....*
கோடியர்நெடுவிஞ்சைக்குஞ்சரமதுபோல ... *
ஆடவர்திரிவாருமரிவையர்களிகூரு ... ... *
நாடகநவில்வாருநகையுயிர்கவர்வாரும் ... ... *

(இ-ள்) (இடக்கையிற்பிடித்த) கேடகமானது வெயிலெறிப்பவும் (வலக்கையிற்றுங்கிய பிரகாசிக்கின்ற வாளானது நிலவைவீசவும் தந்தங்களுயர்ந்த போர்க்கல்வியிற்றேர்ச்சியையுடைய நெடியயானையைப்போல ஆடவர்கள்திரிவாரும் கணிகைமாதர்கள், கண்டோர்மகிழ்தற்கு களிக்கின்றநாடகத்தைச் செய்வாரும் நகையால் அவ்வாடவருடைய உயிரைக்கவர்வாருமாயினர்—எ-று.)

அயிலென்றும்பலபொருளொருசொல் குணவாகுபெயராய்க்கேடகத் துக்கினமாகிய வாளின்மேனின்றது.

கதிர்மணியொளிகாலக்கவர்பொருடெரியாவா ... *
றெதிர்சுடர்தரமின்னுற்றெழுதலினிமையோரு... *
மதுவிரிகுழலாருமதிலுடைநெடுவானம் ... ... *
அதுவிதுவெனவோராதலமரலுறுவாரும்... ...*

(இ-ள்) கிரணங்களையுடையமணிகள் ஒளியெறித்தலால் விரும்புதற்குரிய பொருள்கள் இத்தன்மையனவென்று தம்மைக்காண்போர்க்குத்தோன்றாதவகை எதிரொளி வீசும்படி (அம்மணிகளினது) ஒளியைப்பெற்றுத் தம்மியற்கை மாறலினால், தேவர்களும் தேவரூழைகாநின்ற கூந்தலையுடைய தெய்வமகளிரும் மதிலையுடைய நெடியசுவர்க்கம் (தாமிருந்த) அந்நகரமென்றும் (தாம்வந்த) இந்நகரமென்றும் உணராமல் மயங்குவாருமாயினர்—எ-று.()

தேர்மிசைவருவாருஞ்சிவிகையில்வருவாரும் ... *
ஊர்தியில்வருவாருமொளிமணிநிரையோடைக் ... *
கார்மிசைவருவாருங்கரிணியில்வருவாரும் ... ... *
பார்மிசைவருவாரும்பண்டியில்வருவாரும் ... ... *

(இ-ள்.) தேரின்மேல்வருவாரும் சிவிகையின்மேல்வருவாருங்குதிரையின் மேல்வருவாரும் ஒளிர்கின்ற மணிகள்முறைமைய பதித்த பட்டமணிந்தயானையின்மேல்வருவாரும் பிடியின்மேல்வருவாரும் தரையின்மேல் நடந்துவருவாரும் பண்டியின்மேல்வருவாருமாயினர்—எ-று. (௧௬)

ஊர்தியென்பதற்குப் பரிமாவென்பது பாரிசேடத்தாற் பெறப்பட்டது. ஈண்டுக்கூறு தொழிந்ததுவேயாகலின்

முத்தணிபணிவாருமணியணிமுனிவாரும் ... ... *
பத்தியினிமிர்செம்பொற்பலகலன்மகிழ்வாருந் ... *
தொத்துறுதொழின்மாலைசுரிகுழலணிவாருஞ் ... *
சித்திரநிரைதோயுஞ்செந்துகில்புனைவாரும் .... *

(இ-ள்.) முத்தாற்சமைத்த அணிகளையணிவாரும் (முன்னணிந்திருந்த) மற்றைமணியணிகளை வெறுத்துநீக்குவாரும் உயர்ந்தசெம்பொன்னால் நிருமித்தபல அணிகளைமுறைப்படமகிழ்ந்தணிவாரும் பூங்கொத்துகள்தங்கியதொழில்குறைவின்றிமுடிந்தமாலையைச்சுழித்த கொண்டையிலணிவாருஞ்சித்திரத்தொழில்முறையாயமைந்த சிவந்த ஆடையை உடுப்பாருமாயினர்-எ-று.

விடநிகர்விழியாருமமுதெனுமொழியாருங் ... *
கிடைபுரையிதழாருங்கிளர்நகைவெளியாருந் ... *
தடமுலைபெரியாருந்தனியிடைசிறியாரும் ... ... *
பெடையெனநடையாரும்பிடியெனவருவாரும் ... *

(இ-ள்.) விடத்தைநிகர்த்த கண்களையுடையாரும் அமுதமென்னுஞ்சொற்களையுடையாரும் செங்கிடையை ஒத்த இதழையுடையாரும் விளங்குகின்ற நகைவெண்மையாரும் மலையையொத்தமுலைகள்பெரியாரும் (நுண்மைப்பொருள்களில்) ஒப்பற்றஇடைசிறியாரும்பெண்ணன்னம்போலும்நடையையுடையாரும் பெண்யானைபோல வருவாருமாயினர்—எ-று. (௧௭)

உண்ணிறைநிமிர்செல்வமொருதுறைசெலவென்றுங்..
கண்ணுறலரிதென்றுங்கருதலரிதம்மா ... ... *
எண்ணுறுசுடர்வானத்திந்திரன்முடிசூடு ... ... *
மண்ணுறுதிருநாளேயொத்ததமணநாளே ... ... *

(இ-ள்.) மிதிலாநகரத்தினுள் இவ்வாறு நிறைந்தவைபவத்தை ஒருவாறுசமூழுமையுஞ்செல்ல என்றும் பார்த்தளவிடலும் அரிது கருதியளவிடலும் அரிது இதுவிபக்கத்தக்கது யாவரும்மதிக்கின்ற ஒளியமைந்த சுவர்க்கத்தில் இந்திரனானவன் முடிசூடும் அலங்கரித்த திருநாளையே அத்திருக்கலியாணநாள் ஒத்திருந்தது—எ-று. (௧௮)

வேறு.

கலைதெரிவரியதுகனகம்வேய்ந்தது ... *
வலையெனவுயர்ந்ததுமணியிற்செய்தது ... *

நிரைவளைமணவினை நிரப்புமண்டபம் ... *
அரைசர்தமரசனுமணுகலுற்றெய்தினான் ... *

(இ-ள்.) பரப்பினது எல்லை அறிதலரியதும் பொற்றகட்டால் முகடுமூடியதும் மலையைப்போல உயர்ந்ததும் (சுவர் தூண் முதலியன) மணிகளாற் செய்ததுமாகிய முறைப்படவணிந்த வளையலை யுடையாளாகிய பிராட்டியினது திருமணத்துக்குரிய காரியங்களைக்குறைவின்றி முடித்துவைத்தமண்டபத்தில் சக்கரவர்த்தியும் சேர்தலைப்பொருந்தினான்—எ-று. (௫௯)

வெண்குடையிளநிலாவிரிக்கமின்னெனக் ... *
கண்குடையினமணிவெயிலுங்கான்றிடப் ... *
பண்குடைவண்டினம்பாடவாடல்மா ... *
மண்குடைதூளிவிண்மறைப்பமேவினான் ... *

(இ-ள்.) தனது வெண்கொற்றக்குடை புதுநிலாவெறிப்பவும் மின்னலைப்போலக் கண்களை உருவுகின்ற, கூட்டமாகிய பலமணியணிகள், நிலாவையன்றி வெயிலையும் வீசவும் (பூந்தொண்மாலையில்) மொய்க்கும் வண்டினங்கள் பண்ணைப்பாடவும் வெற்றியையுடைய குதிரையானது தரையை (காலால்) கிளைத்தலாலெழாநிற்குந்தூளி ஆகாயத்தை மறைக்கவும் சென்றான்—எ-று. (௬௰)

மங்கலமுரசினமழையினார்த்தன ... ... *
சங்குகண்முரன்றன தாரைபோரெனப் ... *
பொங்கினமறையவர்புகலு நான்மறை ... ... *
கங்குலினொலிக்குமாகடலும்போன்றவே ... *

(இ-ள்) மங்கலமுரசின்கூட்டம் மேகத்தைப்போல ஒலித்தன சங்கங்கள் ஒலித்தன தாரைகள் போரென்றுமிக்கொலித்தன அந்தணர்கள்கூறும் நான்மறையோசைகள் இராவில்மிகுதியும்ஒலிக்கும்பெரியகடலோசையையும்போன்றன—எ-று. உம்மை-சிறப்பு. (௬௧)

பரந்ததேர்களிறுபாய்புரவிபண்ணையில் ... *
நிரந்தர நடந்தன தானைவேந்தனை ... ... *
நிரந்தரந்தொழுதெழுநேமிமன்னவர் ... *
புரந்தரன்புடைவருமமரர்போன்றனர் ... *

(இ-ள்) தேர்களும், யானைகளும், பாய்கின்ற குதிரைகளும், வரிசையாகப்பரவிச்சென்றன, இனமினமாகப் பதாதிப்படைகள் நடந்தன, சக்கரவர்த்தியை நிரந்தரம்தொழுது எழுகின்ற பூமியரசர்கள் இந்திரனுக்கு அயலில்வருகின்றதேவர்களைப்போலச்சென்றனர்—எ-று. (௬௨)

அனையவன்மண்டபமணுகியம்பொனின் ... *
புனைமணிபாதனம்பொலியத்தோன்றினான் ... *
முனைவருமன்னருமுறையினேறினார் ... *
சனகனுந்தன்கிளைதழுவவேறினான் ... *

(இ-ள்.) அத்தன்மையனாய்வந்த சக்கரவர்த்திமண்டபத்தைச்சேர்ந்து அழகியபொன்னாலலங்கரித்தமணிகள்பதித்த ஆதனத்தின்மீதில் அது பொலிவை

யடையும்படி வீற்றிருந்தான் முனிவர்களும் அரசர்களும்தக்கமுறையாக ஆதனங்களின்மேலேறி யிருந்தார்கள் சனகமகாராசனும் தன்சுற்றத்தார் சூழும்படி ஆதனத்திலேறியிருந்தான்—எ-று. (௪௩)

மன்னருமுனிவரும்வானுளோர்களும் ... *
அன்னமென்னடையணங்கனையமாதருந் ... *
துன்னினர்துவன்றினர்சுடர்கள்சூழ்வரும் ... *
பொன்மலையொத்ததப்பொருவில்கூடமே ... *

(இ-ள்,) சூரியன்முதலிய சுடர்கள்சூழ்கின்ற மேருமலையை யொத்ததாகிய மற்றொப்பில்லாதமண்டபத்தில் அரசர்களும், முனிவர்களும், தேவர்களும், அன்னத்தைப்போலு மெல்லியநடையையுடைய தெய்வத்தையொத்தமங்கைமார்களும் நெருங்கிநிறைந்தனர்—எ-று. (௪௪)

புயலுளமின்னுளபொருவின்மீனுள ... *
இயன்மணியினமுளசுடரிரண்டுள ... *
மயன்முதற்றிருத்தியமணிசெய்மண்டபம் *
அயன்முதற்றிருத்தியவண்டமொத்ததே ... *

(இ-ள்.) மயனென்னுந் தெய்வத்தச்சன் ஆதியிலேற்றமுறச்செய்தமணிகளால் தொழிலமைத்த மண்டபமானது, (தன்னுள்) மேகங்களுள்ளன மின்னல்களுள்ளன ஒப்பில்லாதவிண்மீன்களுள்ளன ஒளியாகிய இயல்பைப்பொருந்திய மணிராசிகளுள்ளன இரண்டுசுடர்களுமுள்ளன (அதனால்) பிரமன்முன்னாளில் சிருட்டித்த அண்டத்தை ஒத்தது—எ-று. (௪௫)

உலகத்துக்கு மழையின்றியமையாத் துணைக்காரணமாகலிற் புயலையும் அதற்குற்பாதமாய் முன்னிகழ்வதாகலின் மின்னையுமிரவிலொளிர்ந்து அண்டத்தை யழகுபெறச்செய்தலின் மீனையும் மக்கண்முதலியோரவாக்கொள்ளும்பொருள்களிற்சிறந்தனவாகலின் மணியினத்தையும் இரகபதிசூரியனு முடுபதிசந்திரனுமாகலினத்தலைமைபற்றிச்சுடரிரண்டையுமெடுத்துக்கூறினார். இங்ஙனங்கூறவேமண்டபம்வானந்தன்னுட்படவுயர்ந்தோங்கியதென்பது கருத்து. இவ்வாறன்றிப்புயன்முதல் மணிகாறும் மண்டபத்திலுள்ளமகளிர்களுடைய கூந்தலிடைவிழியணிகலன்கண்மேலேற்றிப்பொருள்கூறுவாருமுளர்.

எண்டவமுனிவருமிறைவர்யாவரும் ... *
அண்டரும்பிறரும்புக்கடங்கிற்றுகலான் ... *
மண்டபம்வையமும்வானும்வாய்மடுத் ... *
துண்டவன்மணியணியுதரமொத்ததே ... *

(இ-ள்) வரம்பில்லாமல் முனிவர்களும் எல்லாவிறைவர்களும் தேவர்களும் மற்றவர்களும் புகுந்து அடங்கியது ஆதலால் அம்மண்டபம் பூமியையும் ஆகாயத்தையும் திருவாயாலுண்ட இறைவனது கௌத்துவமணிவடமழகைச்செய்கின்ற வயிற்றை ஒத்தது—எ-று. (௪௬)

இறைவனென்பதை மணியணியுதரத்தின்மேலேற்றிக்கூறும்போது விதிவிலாதியனெனவும் மண்டபத்தின்மேலேற்றிக்கூறும்போது அரசனெனவும்பொருள்கொள்க. அண்டங்கள்யாவும்வாய்மடுத்துண்டவனென்பார் அவற்றிற்கு முதற்காரணமாகிய பூதங்களைந்தனுள், வையமும்வானுமெனக்கடையுமுதலுமெடுத்துக்கூறினார்.

தராதலமுதலுலகினைத்துந்தன்னுற ... ... *
விராவினகுவிந்தனவின்பமேவண்டிமோ ... *
அராவணைதுறந்துபோந்தயோத்தியெய்திய .. *
இராகவன்செய்கையையியம்புவாமரோ ... *

(இ-ள்) பூமிமுதலிய உலகங்களிலுள்ளார் யாவரும் (திருமணத்தைக்காணவேண்டுமென்னும் விருப்பத்தாலே) தன்னுப்படலால் நெருங்கினவர்களாகி அங்குக்கூடினார்கள் (அதையான்) சொல்லல்வேண்டுமோவேண்டியதில்லை பாம்பணையைநீக்கிவந்து அயோத்தியிலவதரித்தசிராமபிரானுடைய செய்தியைச்சொல்லுவாம்—எ-று. (௫௭)

சங்கினந்தவழ்கடலேழிற்றந்தன ... ... *
சிங்கலிலருமறைதெரிந்ததீர்த்தங்கள் ... *
கங்கைமேமுதலியகலந்தநீரினன் ... ... *
மங்கலமஞ்சனமரபினாடியே ... ... *

(இ-ள்.) சங்கின்கூட்டங்கள் உலவுகின்ற ஏழ்கடலினின்றுங் கொண்டுவரப்பட்டவற்றையும் அழிதலில்லாத அரியவேதங்களால் அறியப்பட்ட தீர்த்தங்களாகிய கங்கைமுதலியவற்றையும் ஒருசேரக்கலந்தநீரினால் முறைமைப்படி மங்கலமாகிய திருமஞ்சனமாடி—எ-று. (௫௮)

என்றுநான்முகன்முதல்யாரும்யாவையு ... *
நின்றபேரிருளினைநீக்கிநீணெறி ... ... *
சென்றுமீளாக்குறிச்சேரச்சேர்த்திடு ... ... *
தன்றிருநாமத்தைத்தானுஞ்சாத்தியே ... *

(இ-ள்.) பிரமன்முதலிய இமையவர்கள்யாவரும் மற்றெல்லாவுயிர்களுந்தம்மைவிட்டுநீங்காது நிலைத்த பெரிய (அவித்தையென்னும்இருளைநீக்கி) பிரபத்திநிட்டையென்னும்பெருவழியில் (மேவேண்டுதல்வேண்டாமையில்லாமல்) ஒழுகிப் பரமபதத்தில் சேரும்படி (நாள்தோறும்நெற்றிமுதலியதானங்களில்) தரிக்கின்றதனது திருமட்குறியைத் தானுந்தரித்து—எ-று. (௫௯)

நின்றபேரிருளினைநீக்கி நீணெறிசென்று என்பதற்கு நீணெறிசென்று நின்றபேரிருளினைநீக்கியெனக்கொண்டுகூட்டி நெடிய அச்சராதிமார்க்கத்திற்சென்று நித்தியமாகியமூலப்பிரகிருதியைக்கடந்து எனப்பொருள்கொள்ளினுமமையும். நான்முகன் முதலிய அமரர்களுக்கு மேனையோருக்கும் வேற்றுமைதோன்ற யாரும்யாவையுமெனவும் அடைந்தோர் மீண்டும் பிறவாவியல்பிற்றாய் வேதபுருஷன்முதலியோரா லுயர்வாகக்கருதிக் கூறப்படுவதுவீடொன்றுமேயாகலி னதனைமீளாக்குறியெனவும் அக்குறியைச்சேரக் கருதுவோர்க்கின்றியமையாவங்கம்பலவற்றுள்ளு மிதுமுதன்மைத்தாகலிற்சேரச்சேர்த்திடுமெனவுந்தன்றிருவடிபாகிருதியாயிடப்படுவதாகலிற் றன்றிருநாமமெனவு மதுதான்கொண்ட அவதாரத்திற்கேற்ப இட்டானுகலிற்சிறப்பும்மைகொடுத்துத் தானுஞ்சாத்தியெனவுங்கூறினார்.

கோதறுதவத்துத்தங்குலத்துளோர்தொழும் .. *
ஆதியஞ்சோதியையடிவணங்கினன் ... *
காதியல்கயல்விழிக்கன்னிமார்களே ... *
வேதியர்க்கருமறைவிதியினல்கியே ... *

(இ-ள்.) குற்றமற்ற தவத்தையுடைய தங்குலத்திலுள்ளார் வணங்காநின்ற ஆதியஞ்சோதியாகிய ஆயிரமௌலிப்பெருமானுடைய திருவடிகளை வணங்கிஞருகி, காதளவுஉலவுகின்ற சேலையொத்த கண்களையுடையகன்னிப்பெண்களை அந்தணர்களுக்கு அரியவேதவிதிப்படி தானஞ்செய்து—எ-று. ()

அழிவருதவத்திஞேடறத்தையாக்குவான் ... *
ஒழிவருங்கருணையொருருவுகொண்டென ...*
எழுதருவடிவுகொண்டிருண்டமேகத்தைத். ..*
தழுவியநிலவெனக்கலவைசாத்தியே ... *

(இ-ள்) (காப்பாரில்லாமல்) அழிகின்றதவத்தையும் அறத்தையும்வளர்க்கும்படி கெடுதலில்லாத கருணையென்பது ஒப்பற்ற உருவத்தைக்கொண்டாற்போல எழுதலரிய திருவுருவத்தைக்கொண்டு, இருண்டமேகத்தைத்தழுவிய நிலாவைப்போலக் கலவைச்சந்தனத்தைத் திருமார்புமுதலிய விடங்களில்அப்பி—எ-று. (௫௧)

மங்கலமுழுநிலாமலர்ந்ததிங்களைப் ... ...*
பொங்கிருங்கருங்கடல்பூத்ததாமெனச் ... *
செங்கிடைச்சிகழிகைச்செம்பொன்மாலையுந் *
தொங்கலுந்துயல்வரச்சுழிபஞ்சூடியே ... *

(இ-ள்) பொலிவாகிய நிலாக்கதிர்பரந்த முழுமதியைப் பொங்குகின்ற பெருமையாகிய கருங்கடலானது பூத்ததாமென்னும்படி செவ்விய சடையாலும் செம்பொன்னாலும்சமைத்த சிகழிகையாகிய மாலையும் மலர்மாலையும் (திருமுகத்தினருகே) அசைந்து தொங்கும்படி சுழித்து முடிக்குயமிர்முடியில்தரித்து—எ-று. (௫௨)

வதமிலிருகுழையிரவுநன்பகல்... ... ...*
காதல்கண்டுணர்ந்தனகதிருந்திங்களுஞ் ... *
சீதைதன்கருத்தினைச்செவியினுள்ளுறத் ...*
தூதுசென்றுரைப்பனபோன்றுதோன்றவே.

(இ-ள்.) குற்றமில்லாத இரண்டுகுண்டலங்களும், இரவிலும் நன்பகலிலும்தன்பால்வைத்த ஆசையைக்கண்டுணர்ந்தனவாகியசூரியனுஞ்சந்திரனுஞ் சீதாபிராட்டியினுடையகருத்தை, திருச்செவிகளில் மிகுதியும் தூதுபோய்ச்சொல்வார்போன்று (காதுகளில்) விளங்க—எ-று. (௫௩)

கார்விடக்கறையுடைக்கணிச்சிவாணவன்... *
வார்சடைப்புடையின்ஞேர்மதிமிலைச்சித்தான் *
சூர்சுடர்க்குலமெலாஞ்சூடிஞுனென... ...*
வீரபட்டத்தொடுதிலகமின்னவே... ... *

(இ-ள்.) (கண்டத்தில்) கருமையாகிய விடக்கறையையுடைய சிவனுக்கு நீண்டசடையின்பக்கத்தில் ஒருபிறைச்சந்திரனை அணிந்தருளித் தான்கடவுட்டன்மையுடைய சுடர்க்கூட்டங்களையெல்லாம் சூடினுனென்னும்படி திருமுட்குறியோடு (பலவிதமணிகளிழைத்த) வீரபட்டம் மின்ன—எ-று.

சக்கரத்தயல்வருஞ்சங்கமாமென ... ... *
மிக்கணிகழுத்தணிதரளவெண்கொடி ... *
மொய்க்குமென்குழலினுண்முறுவ லுள்ளுறப்
புக்கனநிறைத்துமெய்பொடித்தபோன்றவே

(இ-ள்.) சக்கரத்துக்கு அயலில்வரும் சங்கமென்னும்படி கண்டத்தில் விளங்கிக்க செம்மணிபணிக்கு அயலிலணிந்த வெண்முத்தவடங்கள், மெல்லிய மொய்த்தகுழலையுடைய சீதாபிராட்டியினது நகைகள், உள்ளத்தை மிகப் புகுந்தனவாகி நிறைத்துமார்பில் அரும்பியனபோன்றன—எ-று. (௫௫)

கொடி-உவமவாகுபெயர். மெய்யென்பதற்குமார்பென்றது உள்ளத்துக்கிடமதுவாதலினென்க.

பந்திசெய்வயிரங்கள்பொறியிற்பாடற... *
அந்தமில்சுடர்மணியழலிற்றோன்றலாற் ...*
சுந்தரத்தோளணிவலயந்தொல்லைநாள் ... *
மந்தரஞ்சுற்றியவரவமானுமே... ... *

(இ-ள்.) முறையாகப்பதித்தவயிரங்கள் புள்ளிகளைப்போலப் பெருமையாய்ப்பொருந்தவரம்பில்லாதசுடரையுடையசெம்மணிகள் தீயைப்போலத் தோன்றலால், சுந்தரமாகியதோளிலணிந்த வலயமென்னும் அணியானது முன்னாளில் மந்தரமலையைச்சுற்றிய பாம்பையொத்தது—எ-று. (௫௬)

அழலென்றது மந்தரத்தைச்சுற்றிக்கடையாநிற்புழி வாசுகி, உடல்வருத்தத்தாற்சிறிதுகண்ணுமிழ்ந்ததீயை.

கோவையின்பெருவடமுத்தங்கோத்தன....*
காவல்செய்தடக்கையினடுவட்காந்துவ ... *
மூவகையுலகிற்குமுதல்வனுமென ... ... *
ஏவரும்பெருங்குறியிட்டபோன்றவே ... *

(இ-ள்.) பெரியமுத்துகளால் கோக்கப்பட்டனவாகிய கோவைவடங்கள் (எல்லாவுயிர்களையும்) காக்கின்ற பெருமையாகிய கையினடுவில் விளங்குவன (அவை) மூவகையாகிய உலகங்களுக்குங்காரணன் இவனுக்குமென்று யாவருமுணரும்படி நீக்குதலரியபெருங்குறியிட்டபோன்றன—எ-று. (௫௭)

மாண்டபொன்மணியணிவலயம்வந்தெதிர் *
வேண்டினர்க்குதவுவான்விரும்பிக்கற்பகம். *
ஈண்டுதன்கொம்பிடையீன்றதாமெனக். ... *
காண்டகுதடக்கையிற்கடகமின்னுமே ... ...*

(இ-ள்.) மாட்சிமைப்பட்ட பொன்னாலும் மணிகளாலுமமைத்த வாகுவலயமானது, தன்னெதிரேவந்து வேண்டினவர்க்கு (விரும்பியபொருளைக் காலவிளம்பஞ்செய்யாமல்) உதவும்படி விரும்பிக் கற்பகத்தருவானது வளர்கின்றதன்கொம்பை இடையேயீன்றாற்போல விளங்கத்தகுகின்ற பெருமையாகிய கைகளில் கடகங்கள்மின்னவலிந்து—எ-று. (௫௮)

முன்கைகளிற் கடகமணிதலை யணிந்துரைப்பாரது மறந்து கடகமின்னவென வாளா கூறித் தோள்வலயத்தையீண்டு மணிந்துரைத்தது, ஆடவர் பெண்மையை யவாவுஞ் சுந்தரத்தோள்களாகலி னவற்றின் பேரழகிற் றங்கருத்துமுற்றத் தோய்ந்ததனலென்க. இதுபற்றியன்றே உலாவியற்படலத்தில் பத்தொன்பதாவது திருவிருத்தத்தவயவங்களைக்கூறுவார் தோளைமுற்கூறியதூஉமெனவுணர்க இப்பெருங்காப்பியத்துட் பலவிடத்துமிவ்வாறே தோளைக் கூறலாங் காங்குக்காண்க.

தேனுடைமலர்மகடிளைக்குமார்பினிற் ... *
றானிடைவிளங்கியதகையினாரந்தான் ... *
மீனெடுஞ்சுடர்விடவிளங்குமேகத்து ... ... *
வானிடுவில்லெனவயங்கிக்காட்டவே ... ... *

(இ-ள்.) தேனுடைய தாமரைமலரி லெழுந்தருளிய திருமகள் வசிப்பதற்குரியமார்பினது இடையிற் விளங்கிய பெருமையுடைய நாலுமணிகள் கோத்த வடமானது விண்மீன்கள்தன்னிடத்தே ஒளிசெயலால்விளங்குமேகத்தில் இந்திரதனுவைப்போலப்பிரகாசித்துத்தோன்ற — எ-று. ஒடு-இசைநிறை.()

நணுகவுநிமிரவுநடக்குஞானத்தர் ... *
உணர்வினிலொளிதிகழுத்தரீயந்தான் ... ... *
தணிவருங்கருணைதன்கழுத்திற்சாத்திய ......*
மணியுமிழ்கதிரென்மார்பிற்றோன்றவே ... *

(இ-ள்.) தன்னிலடங்கவும் அடங்காதுவிரிந்துயாவும் நடவாநின்ற ஞானத்தையுடையாரது மாசற்ற உணர்வைப்போல ஒளிவிளங்குகின்ற வெண்பட்டுத்தரீயமானது, அடங்காது பெருகுகின்ற அருளை உருவமாயினனது கழுத்திலேபூண்ட முத்துவடம் இருபக்கங்களினுமெறிக்கின்ற நிலாவைப்போல மார்பில்தோன்ற — எ-று. (௩௰)

மேவருஞ்சுடரெனவிளங்குமார்பினால் ... *
எவருந்தெரிந்தினிதுணர்மினெனத் ...*
தேவருமுனிவருந்தெரிக்கலாமுதல் ... ... *
மூவருந்தானெனமுடிந்ததொத்ததே ... *

(இ-ள்) அடைதலரியசுடரையுடையசூரியனைப்போலவிளங்குகின்றமார்பின்கண் அணிந்த முப்புரிநூல், தேவர்களாலும், முனிவர்களாலுந், தெரிவிக்கலாகாத முதன்மையாகிய மூர்த்திகள் மூவர்களும் தானேயென்று எவர்களும் இடர்ப்படாது (கண்ணாலே நோக்கி,அறியுங்கோள் இவ்விடத்தேயென்றுமுடிந்ததை ஒத்தது — எ-று. (௩௧)

சுற்றுநீடணிமணிச்சோதிபொங்கமேல் ... *
ஒற்றைமாமணியுமிழுதரபந்தனம் ... ...*
மற்றுமோரண்டமுமயனும்வந்தெழப் ... *
பொற்றடந்தாமரைபூத்தபோன்றதே ... *

(இ-ள்) (தன்னிற்பதித்த) அழகியமணிகளினது சுற்றிலும்பெருகுகின்றஒளிமிகாநிற்ப மேலிடத்தில் ஒன்றாகியபெரியமணிஒளியையுமிழ்கின்ற உதரபந்தனமென்னும்அணி, மேலும் ஓரண்டமும் பிரமனும்வந்துதிக்கும்படி பெருமையாகிய பொற்றாமரையைப் பூத்ததைப்போன்றது — எ-று. (௩௨)

மன்னுஞ்சுடர்மணிவயங்கித்தோன்றிய ... *
கண்ணுறுகருங்கடலதனைக்கைவளர் ... ... *
தண்ணிறப்பாற்கடறழீஇயதாமென ... *
வெண்ணிறப்பட்டொளிவிளங்கச்சாத்தியே... *

(இ-ள்.) அலங்காரந்தங்கிய சுடரையுடையமணிகள் ஒளிசெய்துதோன்றிய பெருமையமைந்த கருங்கடலை அலங்காரமிக்க தண்மையாகிய வெள்ளொளியையுடைய பாற்கடலானது தழுவியதுபோல (நாலுமணியணிகள் திருமேனியில் விளங்காநிற்கத் திருவரையில்) ஒளிசெய்யுமாறு வெண்ணிறப்பட்டை அணிந்து—எ-று. (௬௧)

சலம்வருதரளமுந்தயங்குநீலமும் ... ... *
அலம்வருநிழலுமிழம்பொற்கச்சினால் ... *
குலம்வருகனகவான்குன்றைநின்றுடன் ... *
வலம்வருகதிரெனவாளும்வீக்கியே ... *

(இ-ள்) (தன்னிற்கோத்த) நீடியபகையமைந்த முத்துகளும் விளங்குகின்ற நீலமணிகளுந்திரம்பிய ஒளியைவீசாநிற்கும் அழகிய பொற்கச்சினால், தன்னினங்கள் சூழ்ந்துவருமுயர்ந்த பொன்மலையை நிலைபெற்றுச் சேரவலம்வருகின்ற சூரியனைப்போல வாளையுங்கட்டி—எ-று. (௬௨)

முறையேவெண்ணிலவும் காரொளியும்விரித்தலிற் சலம்வருதரளமுநீலமுமென்றார். சலம்வரல்-இலக்கணை.

முகைவிரிசுடரொளிமுத்தின்பத்திவான் ... *
றொகைவிரிபட்டிகைச்சுடருஞ்சுற்றிடத் ... *
தகையுடைவாளெனுந்தயங்குவெய்யவன் ... *
நகையிளவெயிலெனத்தொங்கலூற்றியே ... *

(இ-ள்) அரும்பிவிரிகின்ற சுடராகிய ஒளியையுடைய பெருமுத்துவரிசையினது தொகையாலமைத்த விரிந்தஅரைப்பட்டிகையினது சுடருஞ்சூழாநிற்க அழகையுடையவாளென்னும் விளங்குகின்ற சூரியனது ஒளியாகியஇளவெயிலைப்போல (அவ்வாளின்பக்கத்தில்) மணிமாலையைத்தொங்கஅணிந்து-எ-று.

கார்தொடுகண்ணிழல்கலுழ்க்கைவினை ... *
ஏசறுகிம்புரியெயிறுவெண்ணிலா ... ... *
வீசலின்மகரவாய்விளங்குமின்னென ... *
ஆசையையொளிகளானளந்துகாட்டவே .. *

(இ-ள்.) மணிவடங்களினொளியும் (வியந்துபார்ப்போருடைய) கண்ணொளியும் நிரம்பாநிற்க, கைத்தொழிற்பழிப்பில்லாத அவ்வாளினுடைய கிம்புரிப்பூணினது தந்தங்கள், வெண்மையாகிய நிலாவைவீசுதலையுடைய மகரமீன் வாயில் விளங்குகின்றமின்னலைப்போலத்திக்குகளைத்தம்மொளிகளாலளந்து இவ்வளவினவெனக் காட்டாநிற்க—எ-று. (௬௪)

இணிப்பரத்துலகினையளப்பதெங்கென் ... *
தனித்தனிதடுப்பனபோலுஞ்சால்பின் ... *

நுனிப்பருநுண்வினைச்சிலம்புதோன்கழல் ... *
பணிப்பருந்தாமரைப்பாதம்பற்றவே ... *

(இ-ள்) பரந்தவடிவாய் உலகங்களை அளப்பது இனி எப்படி என்று (அவ்வுலகங்கள்) தனித்தனி நின்று நடுங்குவன ஒக்கின்ற இயல்பினவாகி, நுட்பமாக அறிதலுமரிய நுண்ணிய தொழிலமைந்த சிலம்புகள், வலிய வீரக்கழல் கட்டியருளிய பெரிய தாமரை மலர்போன்ற பாதங்களைச் சூழப்பொருந்த—எ-று. ()

இன்னணமொளிர்தரவிமையவர்க்கெலாந் ... *
தன்னையேயனையதோர்கோலந்தாங்கினான் ... *
பன்னகமணிவிளக்கழலும்பாயலுள் ... *
அன்னவர்தவத்தினாலனந்தனீங்கினான் ... *

(இ-ள்) இவ்வாறு விளங்கும்படி எல்லாத்தேவர்களினும் தன்னையே பொருத்ததாகிய வேறொப்பில்லாத அலங்காரத்தைக்கொண்டான் மாணிக்கவிளக்குகள் பிரகாசிக்கின்ற ஆதிசேடனாகிய பாயலில் அத்தேவர்களுடைய தவத்தினால் யோக நித்திரை நீங்கிய இறைவனாகிய சீராமபிரான்—எ-று. (௬௮)

இமையவர்க்கெலாம் வேற்றுமைமயக்கம் ஏ-பிரிநிலை.

மூப்பரம்பொருளிற்றன்முதலைமூலத்தை ... *
இப்பரந்துடைத்தவரெய்துமின்பத்தை ... *
அப்பனையப்பினுளமுதந்தன்னையே ... *
ஒப்பனையொப்பனையுனாக்கவொண்ணுமோ ... *

(இ-ள்) மூன்று பரம்பொருள்களில் முதன்மையாகிய பொருளுக்கு அதற்கு ஆதியாயினானுக்கு இவ்வுலக இன்பத்தை முற்றத்துறந்தோர் அடைதற்குரிய இன்பமாயினானுக்கு யாவரும் எளிதில் கண்டு சேவிக்குந் திருவுருக்கொண்ட அப்பனுக்கு (எல்லாப்பொருள்களிலும் தான்பரந்த முறைமையால் நீரில் சுவையாயினானுக்கு வேறொப்பின்றித் தன்னைத்தானொத்த சீராமபிரானுக்கு அலங்காரத்தைப் புகழ்ந்துரைக்க (எம்மால்) இசையுமோ—எ-று. (௬௯)

முன்னரும்பின்னரும்விரிந்துநின்றமுறைக்கேற்ப விரிந்துநில்லாமையால்அப்பினுளமுதமென்றவிடத்து ஐயுருபுதொகுத்தது முதலைமுதலாயின,வுருபுமயக்கம். முப்பரம்பொருளென்றது சங்கருடணன் பிரத்தியுமனன் அநிருத்தன் என்னுமிவர்களை. இவர்களுள் சங்கருடணன் சிவனுக்குள்நின்று அழித்தலையும் பிரத்தியுமனன் பிரமனுக்குள் நின்று படைத்தலையும் அநிருத்தன் அவ்வாறுசேதனர்களுக்குள் நில்லாது தனித்துநின்று காத்தலையும் புரிகின்றமையின் முப்பரம்பொருளுக்குள் முதலையெனவும் இம்மூவுருவத்திற்குங் காரணமாகிய வியூகாவதார வாசுதேவனை மூலத்தையெனவும் அவ்வாசுதேவனுக்கு மூலமாகிய பரமபதநாதனை இப்பரந்துடைத்தவரெய்து மின்பத்தையெனவும் பதிகளிற்சிறந்தகோயில்திருமலைபெருமாள்கோயிலென்னு மூன்றனுள் நடுகின்றசிறப்புப்பற்றி அருச்சாவதாரவடவேங்கடமுடையானை அப்பனையெனவும் எங்குமுறையும் அந்தரியாமியை, துப்பார்க்குத் துப்பாக்கித் துப்பாயதாய் நின்ற சிறப்புப்பற்றி யைம்புலப்பேறுநன்வைந்தனுள் அப்பினுள்முதத்தையெனவும் விபவாவதாரச் சிராமபிரானைத் தன்னையேயொப்பனையெனவுங் கூறினரெனவுணர்க. பரமபதநாதனுக்கு வாசுதேவன் மனமெனவும் சங்கருடணன் அகங்காரமெனவும் பிரத்தியுமனன் சித்தமெனவும் அநிருத்தன்புத்தியெனவுங்கூறுப. இவ்வுருவைந்தின் திறமனைத்து மீண்டுரைப்பிற்பெருகுமாகலின் வைதிகாகம புராணங்களிற்காண்க. பரத்துவம் வியூகத்துவம் விபவத்துவம் அந்தரியாமித்துவம் அருச்சாவதாரத்துவம் இவைகளை முறையாகக் கூறுதுபிறழக்கூ

றிய தென்னையோவெனின் இறைவனுடைய அநந்தகலியாண குணமாக்கடலாடு மியல்பின ராகிய ஆசிரியர் பிரானுக்கு ஒப்பனை கூறுநிற்புழித் தாம் கூறியவாறே பாவனை தமக்குட் டோன்றலும் வண்ணப்பெண்கள் அஞ்சொற்கள்கிள்ளைக்கெல்லாமருளினுளமுகைமார்த்தித்த ஞ்சொற்கள்குழறி நந்தந்தகைதடுமாறி நின்றாரொன்றவாறே தந்தகைதடுமாறியதனாலென் க. திருவேங்கடத்தானை அப்பனென்றல்சடகோபர்முதலியோரருளிச்செயல்களினுங்காண்க

பல்பதினாயிரம்பசுவும்பைம்பொனும் ... *
எல்லையினிலனுமணிகளாகவையும் ... *
நல்லவர்க்குதவினனவிழுநான்மறைச் ... *
செல்வர்கள்வழுத்துறத்தேர்வந்தேறினான் ... *

(இ-ள்) பலவாகியபதினாயிரம் பசுக்களையும் பசும்பொன்னையும் வரம்பில் லாத நிலங்களையும் நவமணிகளையும் நல்லொழுக்கமுடைய அந்தணர்களுக் கு உதவினனாகிச் சிறப்பாக எடுத்துக்கூறும் நால்வேதவொழுக்கமாகியசெ ல்வத்தையுடைய முநிவர்கள் துதிசெய்யாநிற்பத் தேரில்வந்து ஏறினான்-எ-று

பொற்றிரளச்சதுவெள்ளிச்சில்லியுக் ... *
குற்றதுவயிரத்தினுற்றதட்டது ... ... *
சுற்றுறுநவமணிசுடருந்தோற்றத்த ... ... *
ஒற்றையாழிக்கதிர்த்தேரொடொத்ததே ... *

(இ-ள்) அத்தேர், பொன்னாகிய திரண்ட அச்சையுடையது வெள்ளிச்சக்கர ங்கள் புதைந்து பொருந்தியது வயிரமணியாலமைந்த தட்டையுடையது சுற் றிலும் பதிந்தநவமணிகள் ஒளிசெய்யும் தோற்றத்தையுடையது ஒற்றைச் ச க்கரத்தையுடைய சூரியனது தேரோடொத்தது—எ-று. (௭௧)

நூல்வருந்தன்மையைநுனிக்குநோன்மைய ... *
சால்பெருஞ்செவ்வியதருமமாதிய ... *
நாலையுமனையனபுரவிநான்கொரு ... ... *
பாலமையுணர்ந்தவன்பக்கம்பூண்டவே ... *

(இ-ள்.) அசுவவடிவிலக்கணநூலிலமைந்த இலக்கணங்களை (கற்றோர்) நு ட்பமாயுணரும் வலியுடையனவும் குறைவில்லாது நிறைந்த பெருமையையுடையன வும் அறமுதல்நான்கையும் ஒத்தனவுமாகிய நாலுகுதிரைகள் (யாவற்றையு ம்) ஒருதன்மையனவாயுணர்ந்த சிராமபிரானுடைய பக்கலில் தேரிற்கட்டப் பட்டன—எ-று. (௭௨)

பாலுமைஎன்பது வளமைஎன்றாற்போல இடையே அகரம்பெற்றது உயிர்கள்சாத்திய மாகிய தன்னையடைதற்குச்செய்யுஞ் சாதனத்தின்வழி நிற்பவராகலிற் றுணாநான்தேர்க் குதி ரைகளைத்தருமமாதிய நாலையுமனையனவெனவும் பிரமன்முதலெறும்புகாறு மொருங்கொப் பநோக்கிக்காப்பவனாகலின் ஒருபாலமையுணர்ந்தவனெனவுங் கூறினார், உணர்ந்தவனென்ப துவிளைவுபற்றி வந்த காலவழுவமைதி

அனையதோர்தேரினிலருணனின்றெனப் ... *
பணிவருமலர்க்கணப்பரதன்கோல்கொளக் ... *
குனிசிலைத்தம்பிபின்கூடவேனையன் ... *
இனியபொற்கவரிகாலியக்கவேகினான் ... *

(இ-ள்) அத்தன்மையதாகிய ஒப்பற்றதேரில் அருணனின்றாற்போலக்குளிர்ச்சியமைந்த தாமரைமலர்போன்ற கண்களையுடையபரதன் கோலைக் கொள்ளவும் வளைதற்குரிய வில்லைத்தாங்கிய இளையபெருமான் பின்னேகாத்து நிற்கவும் சத்துருக்கன்பொன்னாற்செய்த காம்பையுடைய சாமரையைஇனிய காற்றுண்டாக அசைக்கவும் சென்றான்—எ-று. (௭௩)

அமைவருமேனியானழகினானதோ ... ... *
கமையுறுமனத்தினாற்கருதவந்ததோ ... ... *
சமைவுறவறிந்திலந்தக்கதாகுக ... ... *
இமையவராயினாரிங்குளாருமே ... ... *

(இ-ள்.) அமைதல் அருமையாகிய திருமேனியையுடைய ஸ்ரீராமபிரானது அழகினால் ஆனதோ பொறுமைதங்கிய தம்மனத்தினால் அவ்வழகுகொண்டாடிய நினைக்கவந்ததோ ஐயப்பாடின்றித்தெளிவுற அறிந்தோமில்லை தகுதியானதுகாரணமாகக்கடவது இவ்வுலகத்தின்கணுள்ளாரும் தேவர்களைப் போலாயினார்கள்—எ-று. (௭௪)

தஞ்சிந்தையிற்செய்கையாற் சிறப்பிலராகிய கோசலைநாட்டாரை இம்மிதிலாபுரியார் போல்வாராகலிற் கமையுறுமனமென்றார்.

வரம்பறுமுலகினைவலிந்துமாய்வின்றித் ... *
திரம்பயிலரக்கர்தம்வருக்கந்தேய்வின்று ... *
நிரம்பியதெனக்கொடுநிறைந்ததேவரும் ... *
அரம்பையர்குழாத்தொடுமாடன்மேயினார் ... *

(இ-ள்-) முடிவில்லாத பெரியஉலகிலுள்ளாரைவருத்தப்படுத்தி அழியாமல் உறுதியைப்பெற்ற அரக்கர்களது கூட்டமானது நசித்தல்இன்று முடிந்ததெனக்கருதி வந்துநிரம்பிய தேவர்களும் தெய்வமகளிர் கூட்டத்தோடு ஆடுதலில் அமைந்தார்கள்—எ-று. (௭௫)

தேவருமென்னும் உம்மைஇறந்தது தழீஇயதனோடு சிறப்புப்பொருளும்படநின்றது.

சொரிந்தனர்பூமழைசுண்ணந்தூவினர் ... *
விரிந்தொளிர்காசுபொன்றூசுவீசினர் ... *
பரிந்தனரழகினைப்பருகினார்கொலாந் ... *
தெரிந்திலந்திருநகர்மகளிர்செய்கையே ... *

(இ-ள்) பூமழையைச்சொரிந்தார்கள் பரிமளப்பொடிகளைத் தூவினார்கள்கிரணங்கள் விரிந்தொளிர்கின்ற நவமணிகளையும் பொன்னையும் ஆடைகளையும் (இரப்போர்க்கு) ஈந்தார்கள் ஆதலால்விரும்பினவர்களாகி ஸ்ரீராமபிரானுடைய கட்டழகாகியமதுவை உண்டார்களோ அஃதல்லாவிடின் அத்திருநகரத்தின்கணுள்ள மகளிர்களது அச்செய்கைக்குக்காரணம்வேறு அறியோம்—எ-று.

வள்ளலைநோக்கியமகளிர்மேனியின் ... *
எள்ளருப்பூணெலாமிரியநிற்கின்றார் ... *
உள்ளனயாவையுமுதவிப்பூண்டவுங் ... *
கொள்ளையிற்கொள்கெனக்கொடுக்கின்றாரினே.

(இ-ள்.) தம்பாலுள்ளன வெல்லாவற்றையும் (இரப்போர்க்கு) உபகரித்துத் தாம்பூண்டவற்றையும் களிப்பினால் கொள்ளக்கடவீரெனக் கொடுக்கின்றதன்மையரைப்போல வள்ளலாகிய சீராமபிரானை நோக்கியமகளிர்கள் தம்முடம்பிலணிந்த பழிப்பில்லாத தொழிலமைந்த பூண்களெல்லாம் கழலும்படி நிற்கின்றார்கள்—எ-று. (எஎ)

தன்திருநாமத்தை ஒருகாற்கூறிய மாத்திரையினன்னோர்க்குவீட்டுப்பேறுமுதவியவற்றையெண்ணியாங்கு வரையாதுபயத்தலின் வள்ளலென்றார்.

வேறு.

எஞ்சலிலுலகத்துள்ளவெறிபடையரசவெள்ளங் ... ... *
குஞ்சரக்குழாத்திற்சுற்றக்கொற்றவனிருந்தகூடம் ... *
வெஞ்சினத்தனுவலானுமேருமால்வரையிற்சேருஞ் ... *
செஞ்சுடர்க்கடவுளென்னத்தேரிடைச்சென்றுசேர்ந்தான். *

(இ-ள்.) (ஆற்றலில்) குறைவில்லாத உலகத்தின்கணுள்ள (பகைவர்மேல்) எறிதற்குரிய படைக்கலத்தையுடைய அரசரதுகூட்டம் யானைத்திரள்போலச் சுற்றியிருப்ப, வெவ்வியசினமமைந்தவிற்றொழிலில்வல்லசீராமபிரானும்பெருமையாகிய மேருமலையிற்சேருகின்ற சிவந்த கிரணங்களையுடைய சூரியனைப்போலத் தேர்மீதுசென்றுசேர்ந்தான்—எ-று. (எஅ)

தேரை-ஒற்றையாழிக் கதிர்த்தேரோடொத்ததென்றதற்கேற்பத் தேர்ப்பாகனுய்த்தின்றபரதனுக்கு அருணனையும் மண்டபத்திற்கு மேருமால்வரையையும் சீராமபிரானுக்குச்செஞ்சுடர்க்கடவுளையுமுவமைகூறினார்.

இரதமாண்டிழிந்தபின்னரிருமருங்கிரண்டுகையும் ... *
பரதனுமிளையகோவும்பரிந்தனரேந்தப்பைந்தார் ... *
வரதனுமெய்த்திறைமைதீர்மாதவர்த்தொழுதுநீதி ... ... *
விரதமெய்த்தாதைபாதம்வணங்கிமாடிருந்தவேலை ... *

(இ-ள்.) அவ்விடத்தில் தேரினின்றுமிழிந்தபின்பு இருபக்கங்களிலும் இரண்டுதிருக்கரங்களைப் பரதனும் இளையபெருமாளும் அன்புடையராய்த் தம்கைகளால் ஏந்தாநிற்க, புதியமலர்மாலையணிந்த சீராமபிரானும்சென்று (விழைவுவெறுப்பு அவிச்சைகளாகிய) குற்றநீங்கிய பெருந்தவத்திற்சிறந்தமுனிவர்களைத்தொழுது நீதியையும் உண்மையையும் விரதமாகக்கொண்ட தந்தையாகிய சக்கரவர்த்தியினது பாதங்களைவணங்கி அவன்பக்கல் இருந்தகாலத்தில்—எ-று. (எகூ)

சிலைபுடைக்கயல்வாட்டிங்களேந்தியோர்செம்பொற்கொம்பர்
முலையிடைமுகிழ்ப்பத்தேர்மேன் முன்றிசைமுளைத்ததன்
அலைகடற்பிறந்துபின்னையவனியிற்றோன்றிமீள ... [ளாள்.
மலையிடையுதிக்கின்றாள்போன்மண்டபமதனில்வந்தாள் .. *

(இ-ள்.) வில்லைமேற்புறத்திலுடைய இரண்டுகயல்மீன்களை இடையேபெற்ற ஒளிநிறைந்த சந்திரனைச்சுமந்து ஒருசெம்பொற்கொம்பானது முலைகளாகிய அரும்புகள் தன்னிடையில்அரும்ப தேரின்மேல்கீழ்த்திசையின்முளைத்தலையொத்த பிராட்டியானவள் அலைகின்ற பாற்கடலில அவதரித்துப்பி

ன்பு பூமியில்தோன்றி மீளவும் மேருமலையில் உதிக்கின்றுள்போல மண்டபத்திலவந்தாள்—எ-று. (௮௰)

வேறு.

நன்றிவானவரொலாமிருந்தநம்பியைத் ... *
துன்றிருங்கருங்கடறுவைப்பத்தோன்றிய... *
மன்றலங்கோதைபாண்மாலைசூட்டிய ... *
அன்றினுமின்றுடைத்தழகென்றுரரோ ... *

(இ-ள்) செல்வநலமுடையதேவர்களெல்லாம் நிறைந்த மிகவும்பெருமையுள்ள பாற்கடலாகிய வாசியபூழங்காதிற்ப, அதனிடத்தே அவதரித்த மணமமைந்தகூந்தலையுடைய இறையவள் மாலைசூட்டிய அந்நாளினும் இந்நாளில் இங்குவீற்றிருந்த நம்பியை அழகானது உடையதென்றார்—எ-று. (௮௧)

வானவர் போகபூமிவாசிகளாதலி னுடைமையாகிய வழகை வியந்துடையதாகக்கூறினர்

ஒலிகடலுலகினி லும்பர்நாகரிற் ... ... *
பொலிவதுமற்றிவள்பொற்பென்றுலிவண்.... *
மலிதருமணம்படுதிருவைவாயினுன் ... *
மெலிதருமுணர்வினென்விளம்புகேனரோ *

(இ-ள்) ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த உலகத்தார்களிலும் தேவர்களிலும் நாகர்களிலும் விளங்குகின்ற அழகு இறையவனுடைய திருமார்பில் வசிக்கும் இவளது அழகானுல் இவளுடைய திருமணத்தில் உண்டாகிய நிறைந்த வைபவத்தை வாயினுலும் மெலிந்த அறிவினுலும் யாதுசொல்லுவேன்-எ-று. ()

எனவே வாக்கினுலுமறிவினுலு மெட்டப்படாதென்பதுகருத்து மற்றென்பது இடம்பற்றிவந்தவினைமாற்று. வாய்-கருவியாகுபெயர். உணர்வாலுணரினும் ஒருபொருளைப் பிறர்க்குப்புலப்படவுணர்த்துவது சொல்லேயாகலி னச்சிறப்புப்பற்றி யுணர்த்துகேனெனனும்வேறுவினைக்குரியவுணர்வினென்பது விளம்புகேனென்பதைக்கொண்டுமுடிந்தது.

இந்திரன்சசியொடுமெய்திறுனிளங் ... *
சந்திரமௌலியுந்தையலாளொடும் ... *
வந்தனன்மலரயன்வாக்கினுளுடன் ... *
அந்தரம்புகுந்தனனழகுகாணவே ... ...*

(இ-ள்.) பிரானுடையமணக்கோலத்தையும் பிராட்டியினுடையமணக்கோலத்தையும் தரிசிக்கும்படி ஆகாயத்தின்கண் இந்திரன் இந்திராணியோடுவந்துசேர்ந்தான். இளமையாகிய சந்திரனைத்தரித்த சடைமுடியினையுடைய சிவனும் உமைபாளோடுவந்துசேர்ந்தான். தாமரைமலரில்வசிக்கின்றபிரமன் கலைமகளோடுவந்துசேர்ந்தான்—எ-று. (௮௩)

நீந்தருங்கடலெனநிறைந்தவேதியர் ... *
தோய்ந்தநூன்மார்பினர்சுற்றத்தொன்னெறி..*
வாய்ந்தநல்வேள்விக்குவசிட்டன்மையற ... *
ஏய்ந்தநற்றருப்பையோடினிதினெய்தினுன் ..*

(இ-ள்.) நீந்துதலரிய கடலைப்போல நிறைந்தவேதம் ஓதும்தொழிலினரு

ம் முப்புரிநூல்தங்கிய மார்பையுடையாருமாகிய அந்தணர்கள் சூழ்ந்துவர (வேதத்திற்கூறிய) பழையநெறியில்வாய்ந்த நல்லதிருமண வேள்வியைச்செய்தற்பொருட்டு வசிட்டமுனிவன் குற்றமறவமைந்த நுனித்தருப்பையைகையிற்கொண்டு இனிமையாகவந்துசேர்ந்தான்—எ-று. (அச)

நற்றருப்பையென்றமையி னுனித்தருப்பையெனப்பொருள் கூறப்பட்டது.

தண்டிலம்விரித்துநற்றருப்பைசாத்தியே ... *
மண்டலம்விதிமுறைவகுத்துமென்மலர் ... *
கொண்டவைசொரிந்தெரிகுழுமமூட்டினன். *
பண்டுளமறைநெறிபரவச்செய்தனன் ... *

(இ-ள்.) அரிசியைப்பரப்பி நல்லதருப்பையைச்சாத்தி மண்டலத்தைவேதவிதியின்படி முறையாகவகுத்து மெல்லிய மலர்களை எடுத்து அவற்றின்மேல்சொரிந்து எரியைத்திரளமூட்டினவனுகித்தொன்றுதொட்டுள்ளனவாகியவேதமந்திரங்களால் முறைமையில்துதித்து அத்திருமணவேள்வியைச் செய்தான்—எ-று. (அரு)

வேறு.

மன்றலின்வந்துமணத்தவிசேறி ... *
வென்றிநெடுந்தகைவீரனுமார்வத் ... *
தின்றுணையன்னமுமெய்தியிருந்தார் ... *
ஒன்றியபோகமும்யோகமுமொத்தார். *

(இ-ள்.) திருமணம்புரியுமிடத்தில்வந்து திருமணத்தவிசிலேறிவெற்றியையும் பெருங்குணத்தையுமுடைய சீராமபிரானும் அன்புடைய இனிய துணையாகிய பிராட்டியும் நெருங்கிவீற்றிருந்தார்கள் (அவ்விருவரும்) சாத்தியமாகப்பொருந்திய பேரின்பச்சுகத்தையும் சாதனமாகிய தியானத்தையும்முறையே ஒத்திருந்தார்கள்—எ-று. (அசு)

இறைவியை முன்னிட்டுக்கொண்டு இறைவனை யடைதலின் வீரனுக்குப் போகத்தையும் சீதாபிராட்டிக்கு யோகத்தையும் உவமையாக்கினர்.

கோமகன்முன்சனகன்குளிர்நன்னீர் ... *
பூமகளும்பொருளும்மெனநீயென் ... *
மாமகடன்னொடுமன்னுதியென்னாத் ... *
தாமரையன்னதடக்கையினீந்தான் ... *

(இ-ள்.) கோமகனாகிய சீராமபிரானுக்கெதிரே நின்று சனகமகாராசன்குளிர்ந்த நல்லநீரைத் திருமகளும் செல்வப்பொருளும்போல நீ என்னுடைய பெருமைதங்கிய மகளுடன் நிலைபெறுதியென்றுகூறி தாமரைமலரையொத்த பெரியவலக்கையில வார்த்தான்—எ-று, (அஎ)

அந்தணராசியருங்கலமன்னர் ... *
தந்தபல்லாண்டிசைதார்முடிமன்னர், ... *
வந்தனைவானவர்வாழ்த்தொலிபோல ... *
முந்தியசங்கமுழங்கினமாதோ ... *

(இ-ள்) அந்தணர்களுடைய ஆசீர்வதித்தலின் ஓசையும் அருமையாகிய அணிகலத்தையொத்த அவர்கள்தேவிமார்கள் கூறிய பல்லாண்டோசையும், மாலைபணிந்த முடிமன்னர்களும், வணங்குதற்குரிய தேவர்களும் வாழ்த்திய ஓசையும்போல வாச்சியங்களுள் முதன்மையாகிய சங்கங்கள் ஒலித்தன-எ-று

வானவர்பூமழைமன்னவர்பொற்பூ ... *
ஏனையர்தூவுமிலங்கொளிமுத்தந் ... *
தானறுநாண்மலரென்றிவைதம்மால் ... *
மீனகுவானின்விளங்கியதப்பார் ... *

(இ-ள்) தேவர்கள்சொரிந்த கற்பகப்பூமழையும் அரசர்கள்சொரிந்த பொன்னாற்செய்த மலர்மழையும் மற்றையோர்சொரிந்த விளங்குகின்ற ஒளியினையுடைய முத்துமழையும் பொலிகின்ற புதியமலர்மழையும் ஆகியஇவைகளால் இத்தரையானது விண்மீனொளிசெய்கின்ற ஆகாயத்தைப்போலவிளங்கியது.

வெய்யகனற்றலைவீரனுமந்நாண் ... *
மையறுமந்திரமுற்றும்வழங்கா ... *
நெய்யமையாகுதியாவையுநேர்ந்தான் ... *
தையறளிர்க்கைதடக்கைபிடித்தான் ... *

(இ-ள்) வெவ்வியகனலையுடைய வேள்வியில் சீராமபிரானும் அந்தநாளில் குற்றம்நீங்கிய மந்திரங்களை முழுமையுங்கூறி நெய்யாலமைத்த ஆகுதிகளெல்லாவற்றையும் இசையச்செய்தானாகிப் பிராட்டியினுடைய தளிர்போலும் மெல்லியதிருக்கரத்தைத் தனதுபெருமையாகிய திருக்கரத்தால் பிடித்தான்

இடம்படுதோளவனோடியைவேள்வி ... *
தொடங்கியவெங்கனல்சூழ்வருபோதின் *
மடம்படுசிந்தையண்மாறுபிறப்பின் ..[ள்
உடம்புயிரைத்தொடர்கின்றதையொத்தா

(இ-ள்) செய்யவேண்டிய யாவுஞ்செய்துமுடிந்த வேள்வியின்கண் (சங்கற்பித்துக்கொண்டுசெய்யத்) தொடங்கிய வெவ்வியதீயை, விசாலமாயமைந்த சுந்தரத்தோள்களையுடைய சீராமபிரானோடு மடமைக்குணமமைந்த சிந்தையையுடைய சீதாபிராட்டியானவள் பின்தொடர்ந்து சூழ்ந்துவருகின்றகாலையில் உடம்பானது உயிரைப்பின்சென்றுதொடர்கின்றதை ஒத்தாள்.—எ-று.

வலங்கொடுதீயைவணங்கினர்வந்து ... *
பொலம்பொரிசெய்வனசெய்பொருண்முற்றி.
இலங்கொளியம்மிமிதித்தெதிர்நின்ற ... . *
கலங்கலில்கற்பினருந்ததிகண்டார். ... *

(இ-ள்) வேள்வித்தீயைப் பிரதக்கிணஞ்செய்து வணங்கி அருகேவந்து அழகியபொரியாற்செய்வனவற்றையும் அங்ஙனஞ்செய்யவேண்டியமற்றைப்பொருள்களையும் செய்துமுடித்து இலங்குகின்ற ஒளியையுடைய அம்மியைமிதித்து எதிர்நின்ற கலங்குதலில்லாத கற்பினையுடைய அருந்ததியைக்கண்டார்-எ-று

தாஞெழுகிய வொழுக்க முலகர்க்குச் சிறந்தவிதியாமன்றே யந்நணமாதவின் மங்கையர்கற்பழிந்தாரேன் மனையின் மாட்சியையழித்திழிமாதவப்பல் விகாரங்கலாய்ச் சமைந்தாற்போல விழிகற்பாரெராவரென்பது குறிப்பிக்க வம்மிக்கல்லே மிடிப்பித்தங்கனமல்லியுடையாரேல் நன்னுசிரியன் பன்னிபோல வுயர்தற்பால ராவரென்பது குறிப்பிக்க வருந்ததியை நோக்குவித்தான். பிரானும் பிராட்டியும் காரணதசையிற் பூவுமணமும் போல்வாராகலி னவ்வொற்றுமைநயத்தான் மிதித்துக்கண்டாரென்றூர்.

மற்றுள்செய்வனசெய்துமகிழ்ந்தார் ... *
முற்றியமாதவர்தாண்முறைசூடிக் ... *
கொற்றவனைக்கழறும்பிடமேலாரும் ... *
பொற்றொடிகைக்கொடுநன்மனைபுக்கான்

(இ-ள்.) செய்தற்குரியனவாகிய மற்றவைகளைச் செய்து முடித்துக்களிப்படையுடையராய் முடிந்தபெருந்தவத்தினராகிய பாதங்களை முறைமையாகத்தலையிற்சூடிச் சக்கரவர்த்தியினது பாதங்களைக்கும்பிட்டமாத்திரத்திற் சிராமபிரான் சீதாபிராட்டியினது கரத்தைத் தன்கரத்தாற்பற்றி நல்லுயச்சலைத்தியமாளிகையிற்புகுந்தான்—எ-று. (௯௧)

ஆர்த்தனபேரிகளார்த்தனசங்கம் ... *
ஆர்த்தனநான்மறையார்த்தனர்வானோர் *
ஆர்த்தனபல்கலையார்த்தனபல்லாண் ... *
டார்த்தனவண்டினமார்த்தனவேலை ... *

(இ-ள்.) (புகுந்தமாத்திரத்தில்) பேரிகள் ஆரவாரித்தன, சங்கங்கள் ஆரவாரித்தன, நான்குவேதங்கள் ஆரவாரித்தன, தேவர்கள் ஆரவாரித்தார்கள், பலநூல்கள் ஆரவாரித்தன, பல்லாண்டுகள் ஆரவாரித்தன, (மாலைகளில் மொய்த்த) வண்டினங்கள் மேலெழுந்து ஆரவாரித்தன, இவை சமுத்திரங்களாரவாரித்தனபோலும்—எ-று. (௯௨)

கேகயன்மாமகள்கேழ்கிளர்பாதந் .. *
தாயினுமன்பொடுதாழ்ந்துவணங்கா *
வாயதனன்னையடித்துணைசூடித் ... *
தூயசுமித்திரைதாடொழுமேலாரும் ... *

(இ-ள்.) (நன்மனைபுகுந்த சிராமபிரான்) கேகயதேயத்தரசனுடைய பெருமையாகிய மகளென்னுங் கைகேசியினது செம்மைநிறம் விளங்குகின்ற பாதங்களைத்தன் தாயின்பால்வைத்த அன்பினுமிகுந்த அன்போடு தாழ்ந்து வணங்கித்தன்னையீன்றவளாகிய கௌசலையினது இரண்டுபாதங்களையுமுடியிற்சூடி நற்குணத்தையுடைய சுமித்திரையினது பாதங்களை வணங்கினபாக்கியத்தல்—எ-று. (௯௩)

அன்னமுமன்னவரம்பொன்மலர்த்தாள்.
சென்னிபுனைந்தனள்சிந்தையுவந்தாள் .*
கன்னியருந்ததிகாரிகைகாணா ... ... *
நன்மகனுக்கிவணல்லணியென்றாள் ... *

(இ-ள்.) சானகிபிராட்டியாகிய அன்னம் அம்மூவர்களுடைய அழகிய பொலிவமைந்த தாமரைமலர்போன்ற பாதங்களைத் தன்சென்னியிற் சூடினள்- அவர்கள் மனங்களித்தவராகிக் கற்பழிவில்லாத அருந்ததியாகிய பெண் (கற்புக்கிலக்காக) பார்க்கும்படி நம்முடைய நல்லபுத்திரனுக்கு இவள் நல்ல அணியாவாளென்றுசொன்னார்கள்---எ-று. (௬௬)

சங்கவளைக்குயிலைத்தழீஇநின்றார் ... ...*
அங்கணனுக்குரியாருளராவார் ... ...*
பெண்களினிப்பிறரெங்குளரென்றார்..*
கண்கள்களிப்பமனங்கள்களிப்பார் ... *

(இ-ள்.) சங்கமாகிய வளையணிந்த குயிலையொத்த சீதாபிராட்டியைத்தணித்தணித்தழுவிநின்றவர்களாகி, அழகிய அருளுடையசீராமபிரானுக்குமனைவியாராவார் (இவளையல்லாமல்) பெண்களிலே இனிப்பிறர் எவ்வுலகத்தின்கணுள்ளாரென்றுகூறித் தம்முடையகண்கள் களிப்படையாநிற்க மனங்கள் களிப்பார்கள்---எ-று. (௬௭)

எண்ணில்கோடிபொனெல்லையில்கோடி
வண்ணவருங்கலமங்கையர்வெள்ளந்...*
கண்ணகனாடொடுகாசுயர்தூசும் ... *
பெண்ணணங்கனையாள்பெறுகென்றார்

(இ-ள்.) கணக்கில்லாதனவாகிய பலகோடி பொற்காசையும் அழகிய அணியணிந்த மங்கையர்களது எல்லையில்லாத கோடிவெள்ளத்தையும் இடமகன்ற நாடுகளையும் மணிகளையும் உயர்ந்த விலையுள்ள ஆடைகளையும் பெண்களில் தெய்வத்தையொத்த சீதையே (யுபளிக்கப்) பெறக்கடவாயென்று சொன்னார்கள்---எ-று. (௬௮)

நூற்கடலன்னவர்சொற்கடனோக்கி ... *
மாற்கடலன்னமனத்தவளோடும்... ...*
காற்கடல்போற்கருணைக்கடல்பண்டைப்
பாற்கடலன்னதொர்பாயலணைந்தான் *

(இ-ள்.) நூற்கேள்வி கடலையொத்தாராகிய முனிவர்களது சொல்லின் கடன்மையை நோக்கிக் காதலானது கடலையொத்த மனத்தையுடையபிராட்டியோடும் காற்றினால்வீசப்பட்டுப் பொங்கியகடல்போலக்(களிப்புமிகுந்து) கருணைக்கடலாகிய சீராமபிரான் தாமுன் பள்ளிகொண்ட திருப்பாற்கடலையொத்ததாகிய வெறுப்பில்லாத சயனத்திற்சேர்ந்தான்-எ-று (௭௰)

பங்குனியுத்தரமானபகற்போ ... *
தங்கணிருக்கினிலாயிரநாமச் ... ... *
சிங்கமணத்தொழிற்செய்ததிறத்தான்..*
மங்கலவங்கிவதிட்டன்வளர்த்தான் ... *

(இ-ள்) பங்குனிமாதத்திலே உத்திரநட்சத்திரமாகியநாளில் அம்மிதிலாநகரத்திற்கலை வேதங்களில் ஆயிரந்திருநாமங்களையுடைய(போர்த்தொழிலி

ல்)சித்தமாகிய ஸ்ரீராமபிரானுடைய திருமணத்தொழிலைச் செய்தவகையால் மங்கலத்திலை வசிட்டமுனிவன்வளர்த்தான்—எ-று. (எ)

வள்ளுறனக்கிளையோர்கடமைக்கும் .....*
எள்ளவில்கொற்றவன் யான்ஜீனளித்த ..*
வள்ளன்மலர்த்திருவன்னவர்தம்மைக் ...*
கொள்ளுமெனத்தமரோடுகுறித்தான்.. *

(இ-ள்.) நிந்தையில்லாத புகழையுடைய சனகமகாராசன் (சக்கரவர்த்தியைநோக்கி, நீர் சிகைக்குப் பின் யான்பெற்ற செற்றி விளங்கிற தாமரைமலரிலெழுந்தருளிய திருமகளைபொத்தமங்கையர்களை ஸ்ரீராமபிரானுக்கிளையவர்களுக்கும் கொள்ளுவீரென்று தன்சுற்றத்தாரோடு செல்லுமெய நிச்சயித்தான்—எ-று. (௱க)

தன்னிளையான் சிறுவியராயினும் அவர்க்குத்தான் பிதாவென்னு முறைநோக்கி யான்பெ ளனித்த திருவன்னவரென்றான்.

கொய்திறைதாரன்குசத்துவசப்பேர்.. *
நெய்திறைவேலவன்மங்கையர்நேர்ந்தார்
மைதிறைகண்ணியர்வானுறைநீரார்... *
மெய்திறைமூவரைமூவரும்வேட்டார் *

(இ-ள்) மையிட்டகண்களையுடையாரும் சுவர்க்கத்திலிசித்தற்குரிய அழகின்தன்மையுடையாரும் ஆகிய, கொய்து குறைவறத்தொடுத்தமலர்மாலையையுடையகுசத்துவசனென்னும்பெயரைப்பெற்றநெய்யைமூர்றத்தடவிய வேலைத்தாங்கிய அரசனது பெண்கள் இசைந்தார்கள். உண்மையொழுக்கமு நிறைக்குணமுமமைந்த அம்மூன்றுமங்கையர்களையும் பரதலட்சுமணசத்துருக்கனாகிய மூவருந் திருமணம்புரிந்தார்கள்—எ-று. (௱உ)

வேட்டவர்வேட்டபின்வேந்தனுமேனுள்
கூட்டியசீர்த்திகொடுத்திலனல்லால்... *
ஈட்டியமெய்ப்பொருளியாவுளவெல்லாம்
வேட்டவர்வேட்டவைவேண்டளவீந்தான்

(இ-ள்.) அவர்கள் (ஒருவரையொருவர்) விரும்பி மணந்தபின் சக்கரவர்த்தியும் தொன்றுதொட்டுக்கூட்டிய கீர்த்தியைக் கொடுத்திலனல்லாமல் உண்மைவழியில்தேடிய பொருள்கள் எவையுள்ளன அவை எல்லாவற்றிலும் விரும்பி இரந்தோர்விரும்பியவற்றை அவர்கள் வேண்டியமட்டும் கொடுத்தான்—எ-று. (௱௩)

சுந்தளவில்லதொரின்பநுகர்ந்தே.....*
ஆய்ந்துணர்கேள்வியருந்தவரோடும் .*
வேந்தனுமந்நகர்வைகினன்மெள்ளத் *
தேய்ந்தனநாள்சிலசெய்தனனாப்பாம் *

(இ-ள்.) சக்கரவர்த்தியும் அவ்வாறுகொடுத்து வரம்பில்லாததாகிய ஒப்பற்றசுகத்தை அனுபவியாநின்று வைதிகநூல்களை ஆராய்ந்து உணர்வுடைய

ரீர்க ஞானக்கேள்வியுடைய அருந்தவத்தினரோடு அம்மிதிலா நகரத்தில் தங்கினன் சிலநாள்மெல்லக்கழிந்தன அதன்மேல்செய்ததைச சொல்லுவாம்.

வேந்தனுஞ் சிறப்புண்மை சக்கரவர்த்திமுதலாயினோர் வேண்டியவற்றைவேண்டியாங் குசனகனால் தரப்பெற்றுநாட்கழிவுமுணராதவாறுகருத்துமுற்ற இன்பங்களைநுகர்ந்தனராதலின்மெல்லநதேய்ந்தனநாட்சிலவென்றார்.

உ௪-வது-கடிமணப்படலமுற்றிற்று.

உரு-வது-பரசுராமப்படலம்.

தாருலவுதொர்வகையேநனிசனகன்றருதையலும் ... ... *
நாலுவிதமுறுபோகமுநுகர்கின்றவந்நாள்வாய் ... *
ஆறுமறைநெறிமாதவமுனிகோசிகனருளிப்... ... ... *
போனான்வடதிசைவாயுயர்பொன்மால்வரைபுக்கான் ...*

(இ-ள்.) (பினைவயத்தாலன்றி) தானே அவதரித்தலாகிய வகையால் மிருதியம் சனகன்பெற்றபெண்ணாகியபிராட்டியும் (சக்கரவர்த்தித்திருமகன்முதலியோரும்)நாலுவிதமாகியபக்கபோகங்களையும் அநுபவிக்கின்ற அந்நாளில் நித்தியமாகியவேதநெறிகளை, மாதவத்தையுடைய கௌசிகமுனிவன் (அவர்களுக்கு உபதேசித்து வடதிசையின்கண் உயர்ந்தபெரியமலையைச் சார்ந்தான்—எ-று. (௧)

பிராட்டியொருத்தியையுமே யெடுத்துக்கூறி ஏனையோரை உம்மையாற்றழுவினார். எல்லாவின்பங்களுக்கும் அவள்கருணை காரணமாகலின். உம்மை-சிறப்பு. பெரும்பான்மையுஞ் சனகன்மகளென்றே யுலகர்க்குந்தன்மையினனி சனகன்றருதையலென்றார்.

அப்போதினின்முடிமன்னவனணிமாநகர்செலவே ... *
இப்போதுநடவிகந்தூணெயெழுகென்றினிதிசையா... *
கைப்போதகநிகர்காவலர்குழுவந்தடிகதுவ... ... ...*
ஒப்போதருதேர்மீதினிலினிதேறினனரவோன் ... ...*

(இ-ள்.) அந்நாளில் சிறந்தவலியுடையானாகிய முடியணிந்த சக்கரவர்த்தி இப்போது எம்முடைய சேனைவரையும்(யாவரும்) அழகிய மிதிலைநகரத்திற் செல்லும்படி எழக்கடவீர்களென்று இனிமையாகச்சொல்லி இரண்டுகைகளால் யானையையொத்த அரசர்கள் கூட்டம்வந்து தன்பாதங்களை நெருங்கித்தழ ஒப்புச்சொல்லுதலரிய தேர்மேல் இனிமையாகவேறினன் —எ-று()

தன்மக்களுமருமக்களுநனிதன்கழல்தழுவ ... ... *
மன்மக்களுமயன்மக்களும்வயின்மொய்த்திடமிதிலைத் ....*
தொன்மக்களுமனமுக்குயிர்பிரிவென்பதொர்துயரின்.. *
வன்மைக்கடல்புகவுய்ப்பதொர்வழிபுக்கனனரவோன் ..*

(இ-ள்) தன்புத்திரர்களும் தன்மருகியர்களும் மிருதியும் தன்பாதங்களைச்சேர்ந்துசெல்லவும் அரசர்களும் மற்றவர்களும்பக்கங்களில் நெருங்கிச்செ

ல்லவும் மிதிலாநகரத்தில் பழையபகுதியாகிய மக்களும் உயிரைப்பிரித லென்பதாகிய ஒப்பற்றதுயரமென்னும் வலியகடலின் மனம் நெகிழ்ந்து மூழ்கும்படிச் செலுத்துவதாகிய ஒப்பில்லாதவழியைச்சென்றான்—எ-று. (௫)

முன்னேநெடுமுடிமன்னவன்முறையிற்செலமிதிலை ... *
நன்மாநகருறைவார்மனநனிபின்செலநடுவே ... ... *
தன்னேர்புரைதருதம்பியர்தழுவிச்செலமழைவாழ் ... *
மின்னேபுரையிடையாளொடுமினிதேகினன்வீரன் ... *

(இ-ள்.) நெடியமுடியையுடைய சக்கரவர்த்திமுறைப்படிமுன்னே செல்லவும் நல்லமிதிலாநகரத்தில் வசிப்பவர்களது மனங்கள் தன்பின்னேமிகுதியும் செல்லவும் தமக்குத்தம்மையேஒப்புசொல்லுதற்குரியதம்பியர்கள்நெருங்கிச்செல்லவும் மேகத்தில்தங்கிய மின்னலைப்பொத்த இடையையுடையபிராட்டியோடு ஸ்ரீராமபிரான் இனிமையாகச்சென்றான்—எ-று. (௬)

தன்னென்பது பன்மையிலொருமைவந்த வழுவமைதி.

ஏகும்மளவையின்வந்தனவலமும்மயிலிடமும் ... ... *
காகம்முதலியமுந்தியதடைசெய்வனகண்டான் ... *
நாகம்மனனிடையிற்சுளதிடையூறெனநடவான் ... *
மாகம்மணிபணிதேரொடுநின்றானெறிவந்தான் ... *

(இ-ள்.) (இவ்வாறு) செல்லுமளவில் மயில்வலமும் காகம் முதலியன இடமும் வந்தனவாகிமுன்னிட்டுத் தடைசெய்வனகண்டு (உண்மை நூல்கூறும்) நெறியில்ஒழுகினனாகிய யானையையொத்த வலியையுடைய சக்கரவர்த்தி இவ்வழியில் இடையேஇடையூறுள்ளதென்றுகருதி (அப்புறத்தே)செல்லாமல் பெரியஆகாயத்தைப்பொருந்திய அழகியதேரோடு நின்றான்—எ-று (௭)

நெறிவந்தானென்பதற்கு வழியேவந்தானெனப் பொருள்கொள்ளினுமமையும்.

நின்றேநெறியுணர்வானொருநிலைவாளனைபழையா ... *
நன்றோபழுதுளதோநடுவுரைநீநமக்கென்னக் ... ... *
ஒன்றேபுரைதோளானெதிர்புள்ளின்குறிகொள்வான் ... *
இன்றேவருமிடையூறதுநன்றாய்விடுமென்றான் ... *

(இ-ள்.) (சக்கரவர்த்திஅவ்வாறு) நின்று, சகுனங்களை யறிபவனாகிய ஆராய்ச்சியுடைய ஒருவனை அழைத்து (இச்சகுனத்தினாலுண்டாகும்) விளைவு நல்லதுள்ளதோ அன்றி பழுதுள்ளதோ (சொல்லஅஞ்சாமல் நீ நடுவாகச்சொல்லா யென்று கேட்கப்பட்டநிமித்தங்களை ஆராய்பவனாகிய அவன் மலையையொத்த தோள்களையுடைய சக்கரவர்த்திக்கெதிரே; இப்பொழுதேஇடையூறுவரும்அதன் பின்னே நன்மையைத்தருவதாய் விடுமென்று சொன்னான்—எ-று. (௮)

நெறியின்பாலிகழும் புண்ணிமித்தத்தை நெறி என்றது இடவாகுபெயர்;

என்னும்மளவினில்வானகமிருள்கீறிடவொளியாய் ... *
மின்னும்படிபுடைவீசியசடையான்மழுவுடையான் ... *
பொன்னின்மலைவருகின்றதுபோல்வானனல்போல்வான் ... *
உன்னுந்தழல்விழியானுருமதிர்கின்றதொருவாயான் ... *

(இ-ள்.) என்றுசொல்லுமளவில் ஆகாயமானது தன்கணுள்ள இருள்சிதைந்து நீங்க ஒளியையுடையதாய் மின்னும்படி பக்கங்களில் வீசிய சடையையுடையானும் பரசாயுதத்தையுடையானும் பொன்னுருகியமலைவருகின்றதை ஒப்பானும் (தனது மேனிமுழுமையும் கோபவெப்பமாகிய) அனலைவீசுவானும் (கண்டோர்யாவரும்) குமிக்கின்ற அனலைஎறிகின்ற கண்களையுடையானும் இடியானது (கேட்டு) நடுங்குகின்றதாகிய ஒப்பற்ற சொல்லையுடையானும்

கார்த்தவீரியன்முதலிய சூரியகுலமன்னர்களைக் கொலைபுரிவான் சென்ற நாளினுமிந்நாளிற் சினமிகுதியுமுடையானென்பது தோன்றவுன்னுந்தழல் விழியானென்றுகூறினார். அனல்கால்வானென்றதற்கு மேனிவெப்பமென்றது தழல்விழியெனப்பின்னர்க்கூறினமையின்.

கம்பித்தலையெறிநீருறுகலமொத்துலகுலையத் ... *
தம்பித்துயர்திசையானைகடளரக்கடல்சலியா ... ... *
வெம்பித்திரிதரவானவர்வெருவுற்றிரிதரவோர் ... ... *
செம்பொற்சிலைதரியாவயின்முகவாளிச்செரிவான் ... *

(இ-ள்.) அலைகளையெறிகின்றகடலிற்பொருந்தியமரக்கலத்தையொத்துப் பூமியானது தள்ளாடி நிலைகெடவும் திக்குகளின்கணுள்ள உயர்ந்த யானைகள் (அச்சத்தால்) அசைவற்றுநின்று (மனவலி) தளரவுங்கடல்கள் நிலையாறிக்கொதித்துக்கரைபுரளவும் தேவர்கள்பயந்து ஓடவும் ஒப்பற்றசெம்பொன்னிறமமைந்த வில்லைக்கையிற்பிடித்துக்கூர்மையாகிய முகத்தையுடையஅம்புகளையெய்வதிற்றேர்ச்சியையுடையானும்—எ-று. (அ)

விண்கீழுறவென்றோபடிமேற்கீழுறவென்றோ ... *
எண்கிறியவுயிர்யாவையும்யமன்வாயிடவென்றோ ... *
புண்கிறியகுருதிப்புனல்பொழிகின்றனபுரையக் ... *
கண்கிறியகனலான்முனிவியாதென்றயல்கருதேம் ... *

(இ-ள்.) விண்ணுலகம் பூமியிற்பொருந்தவென்றுதானோ பூமி விண்ணிற்பொருந்தவென்றுதானோ அன்றிப்பாதலத்திற்பொருந்தவென்றுதானோ பிரமன், எண்ணிட்டெழுதிய உயிர்கள்யாவற்றையும்யமனுடைய வாயிலிடவென்றுதானோ கோபத்தைவேறியாதுக்கென்றுகருதேம், புண்கள் தாம்பிளந்த திறல்வருகின்ற உதிரப்புனலைப்பொழிகின்றன ஒத்திருக்கும்படி கண்ணினின்றும் புறத்தேவருகின்ற அக்கோபத்தீயையுடையானும்—எ-று. (௯)

போரின்மிசையெழுகின்றதோர்மழுவின்சிகைபுகையத். *
தேரின்மிசைமலைசூழ்வருகதிருந்திசைதிரிய ... .. *
நீரின்மிசைவடவைக்கனனெடுவானுறமுடுகிப் ... ... *
பாரின்மிசைவருகின்றதொர்படிவெஞ்சுடர்படர ... *

(இ-ள்.) யுத்தத்தின்மேல் எழாநின்றதாகிய ஒப்பற்றபரசாயுதத்தினது சிகையானது புகைவதினாலும் தேரின்மீதேறி மேருமலையைச்சூழ்ந்துவருகின்ற சூரியனுந் தான்செல்லுந்திக்குமாறிச்செல்லும்படி கடலினிடத்துவடவைத்தீயானது நெடியஆகாயத்தை யளாவவிரைந்து பூமியின்மேல்வருகின்ற தாகிய ஒப்பில்லா விதமாகத் (தன்மேனியின்) வெவ்வியசுடர்கள் பரவுதலினாலும்.

பாழிப்புயமுயர்திக்கிடையடையப்புடைபடருஞ் ... *
சூழிச்சடைமுடிவிண்டொடவயல்வெண்மதிதோற்ற ... *
ஆழிப்புனலெரிகானிலமாகாயமுமழியும் ... ... *
ஊழிக்கடைமுடிவிற்றனியுமைமேவலவனைப்பொப்ப ... *

(இ-ள். பெருமையாகியபுயங்கள் உயர்ந்து திக்குகளில் அடைவதினாலும் பக்கங்களில் படர்ந்த சூழிச்சடைமுடி ஆகாயத்தைப் பொருந்துவதினாலும் அயலிலேவெண்மையாகிய சந்திரன்தோன்றுதலாலும்கடலினீரும்எரியும்காற்றும் நிலமும் ஆகாயமும் அழிகின்ற காலத்தின்கடையாகிய ஊழிமுடிவில் நின்ற ஒப்பற்ற பார்வதிநாயகனாகிய சிவனையொத்திருக்க—எ-று. (௰௧)

சூழி-எ-து- தலைமயிரைஉச்சியிலுயரமுக்குமுடி.

அயிர்சுற்றியகடன்மாநிலமடையத்தனிபடரும் ... . *
செயிர்சுற்றியபடையாணடன்மறமன்னவர்திலகன் ... *
உயிருற்றதொர்மரமாமெனவோராயிரமுயர்தோள் .... *
வயிரப்பணைதுணியத்தொடுவடிவாய்மழுவுடையான் ... *

(இ-ள்.) நீர்நிறைந்த கடலாற்சூழப்பட்ட பெருமையாகிய நிலமுழுமையும் (எதிரில்லாமல்) தனித்துச்செல்லுகின்ற கோபமிகுந்த சேனைமிகுதியையுடையானாகிய போரில் வீரமமைந்த மன்னவர்களில்திலகம்போலச்சிறந்த கார்த்தவீரியார்ச்சுனன் உயிரைப்பொருந்தியதாகிய மரமென்னும்படி (அவனுடைய)உயர்ந்த ஓராயிரந்தோள்களாகிய உறுதிபெற்றகிளைகள் அறுபடவீசியகூர்மைவாய்ந்த மழுவாயுதத்தையுடையானும்—எ-று. (௰௨)

நிருபர்க்கொருபழிபற்றிடநிலமன்னவர்குலமுங் ... *
கருவற்றிடமழுவாள்கொடுகளைகட்டுயிர்கவரா ... *
இருபத்தொருபடிகாலெழுகடலொத்தலையெறியுங் ...*
குருதிக்குளைபுனலிற்புகமுழுகித்தனிகுடைவான் ... *

(இ-ள்.) (தன்பிதாவைக்கொன்ற) பழியானது அரசர்களுக்குப் பொருந்தலினால் இருபத்தொருமுறைவந்து பரசாயுதத்தால் உலகத்திலுள்ளஅரசர்குலமும் கருவறும்படி களைகளைந்து அவர்களுடையஉயிரைவாங்கி, காற்றால் பொங்குகின்ற கடலைப்போலத் அலையெறிகின்ற அவ்விரத்தமாகிய ஒலிக்கின்ற நீரில தன்னுடல் அமிழ மூழ்கித்தனியே நீராடினவனும்—எ-று. (௰௩)

கமைபொப்பதொர் தவமுஞ்சுடு சனலொப்பதொர்சினமு
சமையப்பெரிதுடையானெதிர்தளர்வுற்றிடைதவிருந் [ஞ்
அமையத்துயர்பறவைக்கினிதாருப்வகைசீருச் ... ... *
சிமையக்கிரியுருவத்தனிவடிவாள்கடெரிவான் ... *

(இ-ள்.) தனக்குள்ளபொறுமையையொத்ததாகியவேறொப்பற்ற தவத்தையும் சுடுகின்ற நெருப்பையொத்ததாகிய மற்றொப்பில்லாதகோபத்தையும் குறைவின்றிப்பொருந்தமிகுதியுமுடையானும்எதிரே (செல்லும்வழியை)இடையில் தவிர்த்து தளர்ச்சியடைந்தசமயத்தில்(பறவைகளில்) உயர்ந்த அன்றிற்பறவைகளுக்கு வருத்தமின்றிச் செல்லும்வழியாகும் விதம் கோபித்துச்சிகரத்தையுடை

யமலையை உருவிச்செல்லும்படி ஒப்பில்லாதகூர்மையாகிய அப்புகளை எய்யுந்தொழிலில் தேர்ந்தானும்—எ-று. (௰௪)

கையம்புகநிமிர்கடற்றழுவப்படிசமைவான் ... ... *
மையினுயர்மலைநூறியமழுவாளவன்வந்தான் ... *
ஐயன்றனையரிதிற்றருமரசன்னதுகண்டான் ... ... *
வெய்யன்வரநிபமென்னைகொலெனவெய்துறுமெல்லை ..*

(இ-ள்.) மலையானது விழுதலினால் மேலெழுந்த அக்கடலினீர் தழுவும்படி உருவமமைவானுமாகிய மேகமண்டலத்தின்மே லுயர்ந்த கிரௌஞ்சகிரியின்வலியை அழித்தபரசுராமன்வந்தான் ஸ்ரீராமபிரானை அருமையாய்ப்பெற்ற சக்கரவர்த்தி அவ்வருகைக் கண்டவனாகி இக்கொடியோன் வருதற்குக்காரணம் யாதெனப் பயமடைகின்றகாலத்தில்—எ-று. (௰௫)

மழுவைப்பலகாலெடுத்துக் கூறியது பல்பகல்தவம்புரிந்து இறைவன்பாற்பெற்றபெருமையுடையதும் அரசர்களைக்களைகட்டுவெற்றி பயந்ததுமென்பதுணர்தற்கு இதுபற்றியன்றே இவனியற்பெயர்க்கு அடையாய் வருவதுமென்க.

பொங்கும்படையிரியக்கிளர்புருவங்கடைநெரிய ... *
வெங்கண்பொறிசிதறக்கடிதுருமேறெனவிடையாச் ... *
சிங்கம்மெனவுயர்தேர்வருகுமரன்னெதிர்சென்றான் ...*
அங்கண்ணரசவனும்மிவனாரோவெனுமளவில் ... ... *

(இ-ள்.) களித்துச்செல்கின்ற படைகள்பயந்தோடும்படி விளங்குகின்றபுருவங்கள் கடையில்நெரியவும் வெம்மையாகிய கண்கள்தீப்பொறிகளைச் சிந்தவும் விரைவாக ஆணிஷபைப்போல சக்கரவர்த்திக்கு பக்கமாக ஒதுங்கி,உயர்ந்ததேரில் சிங்கம்போல வருகின்ற ஸ்ரீராமபிரானுக்கு எதிரேசென்றான் அழகிய கருணையையுடைய அச்ஸ்ரீராமபிரானும் இவன்யாரோவென நினைக்குமளவில்—எ-று. (௰௬)

அரசன்னவனிடைவந்தினிதாராதனைபுரிவான் ... *
விரைசெய்முடிபடிமேலுறவடிமேலுறவீழலும் ... *
கரைசென்றிலனனையானெடுமுடிவின்கனல்கால்வான் ...*
முரசின்குரல்படவீரனெதிர்நின்றிவைமொழிவான் ...*

(இ-ள்.) சக்கரவர்த்தி, அப்பரசுராமனிடத்தில்வந்து இனிமையாக ஆராதனைசெய்பவனாகி மணம்வீசுகின்ற (மாலைபணிந்த) முடியானது பூமியிற்பொருந்தும்படி அவன்பாதங்களில் மிகவும்வீழ்தலும் (கோபக்கடலின்) கரையைச்செல்லாதவனாகிய அவன் உளப்பிரிவினது நெடிய வடவைத்தீயைப்போலும் கோபத்தைக்காட்டுவானாகி முரசினது ஓசையைப்போல ஓசையுண்டாகும்படி ஸ்ரீராமபிரானுக்கெதிரே நின்று இம்மொழிகளைச் சொல்வான்—எ-று. (௰௭)

இற்றோடியசிலையின்றிறமறிவெனினியானுன் ... *
பொற்றோள்வலிநிலைசோதனைபுரிவானசையுடையேன் ...*
செற்றோடியதிரடோளுறுதினவுஞ்சிறிதுடையேன் ... *
மற்றோர்பொருளிலையிங்கிதன்வரவென்றனனுரவோன்*

(இ-ள்.) வலியுடையானாகிய பரசுராமன் உன்வலிக்கு முறிந்து தோற்ற வில்லினது திறத்தைநான் அறிவேன் இனிஉன்னுடைய அழகியதோளினது வலியின் நுட்பைச்சோதனைசெய்ய விருப்பமுடையேன் அரசர்களை வென்றுவிட்ட திரண்டதோளிற்பொருந்திய சிறிதுதினவு முடையேன் இங்கே எனது வரவு இதுவேயாம் வேறொருபொருளில்லையென்றான்—எ-று. (௰௮)

அவனன்னதுபகரும்மளவையின்மன்னவனயர்வான் ... *
புவனம்முழுவதும்வென்றொருமுனிவற்கருள்புரிவாய்... *
சிவனும்மயனரியும்மலர்சிறுமானிடர்பொருளோ ... *
இவனும்மெனதுயிரும்முனதபயம்மினியென்றான் ... *

(இ-ள்.) அவன் அப்பொருளைச்சொல்லுகின்ற அளவிலே சக்கரவர்த்தி, பூமிமுழுவதையும்வென்று காசிபமுனிவனுக்குத்தரவுரியாய் சிவனும்பிரமனும்இந்திரனும் அல்லாராகிய சிறியமனிதர்கள் உனக்கொருபொருளோ இனிஇச்சிறுவனும் என்னுடையஉயிரும் உன்னுடையஅபயமென்றான்—எ-று (௰௯)

இச்சீராமபிரான் தன்னுயிரினுஞ் சிறந்தானென்பான் முற்படவெண்ணி இவனுமெனவும் இவனுக்கோரிடுக்கண்வரி னுய்யேனென்பான் பிற்பட வெனதுயிருமெனவு நின்னுடைமையாய் நின்றவெம்மை நீயாதுபுரியினு மெதிர்க்குமாற்றலில்லேமென்பானுனதபயமெனவுங்கூறினான்.

விளியார்விளிவதுதீவினைவிழைவாருழையன்றே ... ... *
களியாலிவனயர்கின்றனவுளவோகனலுமிழும் ... ... *
ஒளிவாய்மழுவுடையாய்பொரவுரியாரிடையல்லால் ... *
எளியாரிடைவலியார்வலியென்னாவதென்றான் ... ... *

(இ-ள்.) கொலையுண்பார்கொலையுண்பது தீயவினைகளை விரும்பிச்செய்யுங் கொடியவரிடத்திலன்றோ நல்வினைவிழையுமுன்னிடத்தன்று செருக்காலே இச்சிறுவன் உனக்குச்செய்யும்வணக்கங்களில் மறந்தவையுண்டோ தீயையுமிழ்கின்ற ஒள்ளியவாயமைந்த மழுப்படையுடையானே வல்லவருடைய வலியானது போர்செய்தற் குரியாரிடத்தன்றி வலியில்லாரிடத்து என்னபயன் படுமென்றான்—எ-று. (௨௰)

தணிமாதவமுடையாயிதுபிடிநீயெனநல்கும் ... ... *
தனிநாயகமுலகேழையுமுடையாயிதுதவிராய் ... ... *
பனிவார்கடல்புடைசூழ்படிநரபாலரையருளா ... ... *
முனிவாறினைமுனிகின்றதுமுறையோவெனமொழிவான்... *

(இ-ள்.) மிகுதியும்பெருந்தவத்தையுடையகாசிபமுனிவனே நீஇதைத்தெக்கணையாகப்பெற்றுக்கொள்ளெனக்கொடுத்த உலகேழிற்கும் தனிமையாகிய தலைமையையுடையாய் (எப்போதும்கோபித்தலாகிய) இதைத்தவிர்ந்தருள்செய்யெனவும், குளிர்ச்சியாகிநீண்டகடல் புறத்தேசூழ்ந்த உலகத்திலுள்ள அரசர்களுக்குக்கருணைபுரிந்து (அவர்கள்குலத்தின்மேற்கொண்ட) கோபம்முன்னமே தணிந்தாய் (இப்போது) கோபிப்பது நீதியோ வெனவுஞ்சொல்வான்.

புறனின்றவரிகழும்படி நடுவின்றலைபுணராத் ... *
திறனின்றுயர்வலியென்னதொரறனின்றருசெயலோ ... *
வறனின்றதனிலைநின்றுயர்புகழ்தோன்றுவதன்றே ... *
மறனென்பதுமறவோயிதுவலியென்பதுவலியோ ... *

(இ-ள்.) அறநிலையையுடையானே, நடுநிலைமையில்நின்ற அறிவுடையோர் இகழும்படி நடுநிலைமையைப்பொருந்தாத முயற்சிவகையினின்று வெற்றியினுயர்கின்ற வலியானது யாதாகும் அது ஒப்பிலலாத அறத்துவழியால்தரப்படுமுயற்சியோ! வீரமென்பதும் அறம் தன்னிடத்தே நிற்கும்படி அதனிலையிலே நின்று பகைவரைவென்று உயர்கின்றபுகழை அடைவதன்றோ! (அங்ஙனமன்றி எம்மைவெற்றிகொள்ளும்) இது வலிமையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகிய வலிமையோ—எ-று. (௨௨)

நடுவின்றலைபுணராத்திறனெனப்பின்னர்க்கூறினமையிற்புறனென்றதற்கு நடுநிலைமையேயெனப்பொருள்கொள்ளப்பட்டது.

சலத்தோடியைவிலனென்மகனையானுயிர்தபுமேல் ... *
உலத்தோடெதிர்தோளாயெனதுறவோடுயிருகுவேன் ... *
நிலத்தோடுயர்கதிவானுறநெடியாயுனதடியேன் ... *
குலத்தோடறமுடியேயிதுகுறைகொண்டனனென்றான் *

(இ-ள்.) என்மகன் (உன்னிடத்தில் எங்குலத்தார்க்கு) தோன்றுதொட்டுவந்தபகையோடு பொருந்தினனல்லன் அத்தன்மையானுடைய உயிர்நீங்குமானால் திரண்டகல்லோடு (ஒப்பாகாவென்று) எதிர்க்கின்றதோள்களையுடையவனே என்சுற்றத்தோடும் என்னாட்டாரோடும் உயர்ந்தகதியாகியவிண்ணுலகத்தையடையும்படி உயிர்நீங்குவேன் பெரியோனே உன்னுடைய அடியேனைக்குலத்தோடுமே அற்றுப்போகமுடியாதவை இது உன்பால்யாசித்தேனென்றான்-எ-று.

என்னுவடிவிழுவானையுமிகழாவெரிவிழியாப் ... ... *
பொன்னார்கலையணிவானெதிர்புகுவானிலையுணராத் ... *
தன்னாலொருசெயலின்மையைநினையாவுயிர்தளரா ... *
மின்னாலயர்வுறும்வாளரவெனவெய்துறலுற்றான் ... *

(இ-ள்) என்றுசொல்லித் தன்பாதங்களில்விழாநின்ற சக்கரவர்த்தியையும் அவமதித்துத் தீயைப்போலவிழித்துப்பார்த்துப் பொன்னாலாகிய அரிய ஆடையை யணிந்த ஸ்ரீராமபிரானுக்கு எதிரேபோவான் (அவனுடைய கருத்தினிலையை சக்கரவர்த்தி) தெரிந்துகொண்டு இனித் தன்னாற்செய்யும் ஒருசெயலுமிலாமையைக்கருதிஉயிரோய்ந்து மின்னலால் சோர்வடையும் ஒளியையுடைய பாம்புபோல வருத்தத்தைஅடைந்தான்—எ-று. (௨௩)

மானம்முடைமுடிமன்னவன்மதிசோர்வுறன்மதியான் ...*
றானந்நிலைபுறுவானுறுவினையுண்டதுதவிரான் ... ... *
ஆனம்முடையுமையுண்ணனைபந்நாளுறுசிலைதான் ... *
ஊனம்முளதன்மேனிலைகேண்மெனவுரைப்பான் ... *

(இ-ள்) மானத்தையுடைய முடியணிந்த சக்கரவர்த்தி அறிவுசோர்தலை எண்ணிலன் தான் அவ்வரசனுடைய நிலையை அடைதற்குக் காரணமாகப்பொ

ருந்தியவினையுளது (ஆதலால்) அக்கோபந்தணிபான், இடக்கையென்னும்வாச்சிபத்தைத்தாங்கிய உமாநாயகனிடத்தில் அந்தநாளில்சேர்ந்த திரியம்பகமென்னும் வில்லானது ஊனமுடையது அதனுடைய பழையநிலைமையைக் கேளென்று (சக்கரவர்த்தித்திருமகனைநோக்கிச்) சொல்லுவான்—எ-று. ()

ஒருகால்வருகதிராமெனவொளிகால்வனவுலையா ... *
வருகார்தவழ்வடமேருவின்வலிசால்வனவையம் ... *
அருகாவினைபுரிவானுளனவனாலமைவனதாம் ... ... *
இருகார்முகமுளயாவையுமேலாதனமேனாள் ... ... *

(இ-ள்.) முன்னாளில் ஒற்றைச்சக்கரத்தையுடையதேரின்மேல் உலகத்தைச் சூழ்ந்துவருகின்றசூரியனைப்போல ஒளிவீசுவனவும் அழியாமல், நீருண்டுவருகின்றமேகங்கள்தவழாநின்ற வடக்கின்கணுள்ள மேருமலையைப்போல வலிநிறைந்தனவும், உலகம்வளங்குறையாமல் மனத்தொழில்புரியும் மயனென்பவனுளன் அவனால் செய்யப்பட்டவனவுமாகிய இரண்டுவில்லுகளுண்டு அவை தமக்கொப்பாக எவற்றையும் ஏற்காதனவாகும்—எ-று. (உசு)

வேறு

ஒன்றினையுமையாள்கேள்வனுவந்தனன்மற்றையொன்றை ... *
நின்றுலகளந்தநேமிநெடியமானெறியிற்கொண்டான் ... *
என்றிதையுணர்ந்தவிண்ணோரிரண்டினும்வன்மையெய்தும் ... *
வென்றியதியாவதென்றுவிரிஞ்சனைவினவவந்நாள் ... ... *

(இ-ள்.) (அவ்விரண்டினுள்) ஒன்றை உமாநாயகன் மகிழ்ந்துதாங்கினன் மற்றையொன்றை (வாமனவடிவாய்) நின்றுஉலகங்களைஅளந்தசக்கரத்தையுடையநெடிய இறைவன்முறைமையாகத் தாங்கினனென்று இச்செய்தியைஅறிந்த தேவர்கள் வில்லிரண்டனுள்ளும்யாதுவலியால் அடைதற்குரிய வெற்றியுள்ளதென்று பிரமனைவினவ அந்நாளில்—எ-று. (உஎ)

சீரிதுதேவர்தங்கள்சிந்தனையென்பதுன்னி ... ... *
வேரியங்கமலத்தோனுமியைவதோர்விநயந்தன்னால் ..... *
யாரினுமுயர்ந்தமூலத்தொருவராமிருவர்தம்மை ... ... *
மூரிவெஞ்சிலைமேலிட்டுமொய்யமர்மூட்டிவிட்டான் ... *

(இ-ள்.) தேவர்களுடைய கருத்து நன்மையுள்ள தென்பதை எண்ணி, தேனமைந்த தாமரைமலரில்வசிக்கும்பிரமனும் அதற்கியைந்ததாகிய தந்திரவணக்கத்தால் யாவர்களிலும் உயர்ந்த காரணதசையில் ஒருவராகிய இருவரையும்வலியமைந்தவெவ்விய வில்லின்மேல்சார்த்திவலியயுத்தத்தை மூட்டிவிட்டான்

மூலத்தொருவராமிருவரென்றதை, கடிமணப்படலத்தில். சுசு-வது திருவிருத்தத்தில்-உய்த்துணர்ந்துகொள்க.

இருவருமிரண்டுவில்லுமேற்றினருலகமேழும் ... . *
வெருவரத்திசைகள்பேரவெங்கனல்பொங்கமேன்மேல் ... *
செருமலைகின்றபோழ்திற்றிரிபுரமெரித்ததேவன் ... ... *
வரிசிலையிற்றதாகமற்றவன்முனிந்துமன்னோ ... ... *

(இ-ள்.) இவ்விருவர்களும் அவ்விரண்டு விற்களையும் நாணேற்றினவர்களாகி ஏழுலகங்களும் பயமுறவும் திசைகள் நிலைபெயரவும் மேலும்மேலும் கோபத்தியானது அதிகரியாநிற்க யுத்தஞ்செய்கின்றகாலத்தில் திரிபுரத்தை எரித்தசிவனது கட்டமைந்த வில்லானது முறிய அச்சிவன்கோபியாநின்று-எ-று.

மீட்டும்போர்தொடங் தம்வேலைவிண்ணவர்விலக்கவல்வில் ... *
நீட்டினன்றேவர்கோன்கைநெற்றியிற்கண்ணன்வெற்றி ... *
காட்டியகரியமாலுங்கார்முகந்தனைப்பாரில் ... ... *
கூட்டியதவத்தின்மிக்கவிரிசிகற்கீந்துபோனான் ... ... *

(இ-ள்.) மீண்டும்போர்தொடங்குங்காலத்தில் தேவர்கள்மறுத்துவிடநெற்றியிற்கண்ணையுடையசிவன் தந்தவலியையுடையவில்லை இந்திரன்கையில்கொடுத்தனன் வெற்றியைக்காட்டிய கரியதிருமேனியையுடைய இறைவனுந்தன் வில்லைப்பூமியில் செய்தவத்திறத்தால்உயர்ந்த இரிசிகமுநிவனுக்குக்கொடுத்துப்போனான்—எ-று. (கக)

மெல்வில்லை வில்வில்லென்றது-தகுதி.

இரிசிகனெந்தைக்கீயவெந்தையுமெனக்குத்தந்த ... ... *
வரிசிலையிதுநீநொய்தின்வாங்குதியாயின்மன்ன ... ... *
குரிசில்கணின்னோடொப்பாரிலையான்குறித்தபோரும் ... *
புரிகிலேனின்னோடின்னம்புகல்வதுகேட்டியென்றான் ... *

(இ-ள்) இரிசிகமுனிவன் என்தந்தைக்குக்கொடுக்க,என்தந்தையும் எனக்குத்தந்த வரிசிலை யிதுவாகும் நீ (இதை) எளிதாய் வளைப்பாயானால் அரசனே அரசர்களில் உன்னோடொத்தவர்களில்லை யான்கருதிவந்தபோரையும் செய்யேன் இன்னமும் உன்னிடத்தில்யான் சொல்வதைக்கேளென்றுசொன்னான்()

ஊனவில்லிறுத்தமொய்ம்பைநோக்குவதூக்கமன்றால் ... ...*
மானவமற்றுங்கேளாய்வழிப்பகையுடையதம்பால்... ... *
ஈனமிலெந்தைசீற்றநீக்கினனென்னமுன்னோர்... ... ... *
தானவனனையமன்னன்கொல்லயான்சலித்துமன்னோ.... ... *

(இ-ள்.) ஊனமாகியவில்லை முறித்தவலியைக் கருதுவது ஆண்மையன்று பெருமையையுடையானே மேலுங்கேள், உங்கள்பக்கலில் தொன்றுதொட்டுவந்தபகைமை (என்னை) உடையது வசையில்லாத என்தந்தைசாந்தமுடையானென்றுணர்ந்து முன்னாளில்அசுரனையொத்த ஓரரசன்கொன்றதனால்யான்மனநிலைதளர்ந்து—எ-று. (கஉ)

மூவெழுமுறைமைபாரின்முடியுடைவேந்தையெல்லா ... *
மேவெழுமழுவின்வாயால்வேரறக்களைகட்டன்னார் ... ...*
தூவெழுகுருதிவெள்ளத்துறையிடைமுறையினெந்தைக் ... *
காவனகடன்கணேர்ந்தேனருஞ்சினடக்கிப்போந்தேன் ... *

(இ-ள்.) இருபத்தொருமுறைவந்து உலகிலுள்ள முடியையுடைய சூட்ட அரசர்களையெல்லாம் விரும்பியெழுகின்ற பரசாயுதத்தினுடைய வாயாற்சத்

கதிஅற்றுப் போகக்களைந்து அவர்களுடைய தலையிலெழுந்த உதிரவெள்ள த்துறையில்முறைமையாக என்தந்தைக்குச் செய்யத்தக்கவனவாகிய-நீர்க்கடன் களை இசைந்து செய்தேன்அதனால் (உங்களிடத்தில்வைத்த பிறராலதடுத்தல்) அரியகோபத்தை அடக்கிவந்தேன்—எ-று (கூக)

உலகெலாமுனிவற்கீந்தேனுறுபகையொடுக்கிப்போந்தேன்... *
அலகின்மாதவங்கள்செய்தென்னருவரையிருந்தேனுன்னடைச்...*
சிலையைநீயிறுத்தவோசைசெவியுறச்சீறிவந்தேன் .... *
மலைகுவென்வல்லைப்பாகின்வாங்கிடித்தனுவையென்றான்... ...*

(இ-ள்.) யான்வென்ற இவ்வுலகமுழுமையும் ஓர் முநிவனுக்குத்தந்தேன் மிகுந்த பகைவர்களை ஒடுக்கிவந்தேன் வரம்பில்லாதபெருந்தவங்களைச்செய் கின்ற தெற்கின்கணுள்ள சகியமலையிலிருந்தேன் அவ்விடத்தில் நீமுறித்தவில் லோசையானதுசெவியிற்பொருந்தகோபித்துவந்தேன் நீவலியையுடையை யானால் போர்செய்வேன் இந்தவில்லைவளைத்திடென்றுகூறினான்-எ-று (கூச)

என்றனனென்னநின்றவிராமனுமுறுவலெய்தி ... ...*
நன்றொளிர்முகத்தனாகிநாரணன்வலியினாண்ட ... ... *
வென்றிவிற்றருகவென்னக்கொடுத்தனன்வீரன்கொண்டத் ....*
தன்திருஞ்சடைமேயானஞ்சத்தோளுறவாங்கிச்சொல்லும் ... *

(இ-ள்.) என்றுகூறினான்.என்றுகூற, நின்றசீராமபிரானும் நகைத்து நற்கு ணம் விளங்குகின்ற முகத்தையுடையனாகி இறைவன் தன்வலியினால் ஆண்ட வெற்றியையுடையவில்லைத் தரக்கடவாயென்று கேட்கக் கொடுத்தனன் வீ ரனாகிய சீராமபிரான் அதனைப்பெற்று அந்தநெருங்கிய சடையையுடைய ப ரசுராமன் அச்சமுறத்தனது திருத்தோளால் மிகுதியும்வளைத்துச் சொல்லு வான்—எ-று. (கூரு)

பூதலத்தரசையெல்லாம்பொன்றுவித்தனையென்றாலும்... ... *
வேதவித்தாயமேலோன்மைந்தனீவிரதம்பூண்டாய் ... ... *
ஆதலிற்கொல்லலாகாதப்பிதுபிழைப்பதன்றால் ... ... *
யாதிதற்கிலக்கமாவதியம்புதிவிளாவினென்றான் ... ... *

(இ-ள்.) பூமியின்கணுள்ள அரசர்களையெல்லாம்கொன்றனை ஆயினும் நீ வேதமென்னும் கனிக்கவித்தாகியமேன்மையையுடைய சமதக்கினிமுநிவனு க்குப்புத்திரன் (அன்றியும் தவவேடத்தைமேற்கொண்டாய் ஆதலால் உன்னை க்கொல்லலாகாது அம்பாகிய இது தப்புவதன்று இதற்குக்குறியாவதுயாது விரைவாகச்சொல்லுவாயென்றான்—எ-று. (கூசா)

வேறு.

நீதியாய்முனிந்திடேனீயிங்கியார்வர்க்கும்... ... *
ஆதியானிந்தனைலங்கனேயியாய் ... ... *
வேதியாவிறுவதேயன்றிவெண்மதிப்... ... ... *
பாதியான்பிடித்தவில்பற்றப்போதுமோ ... ... *

[கூச௨]

(இ-ள்.) நீதியையுடைய ஸ்ரீராமபிரானே சினங்கொள்ளாதே நீ யாவர்களுக்கும் முதன்மையானவன் அதை இங்கே அறிந்தேன் மாலையணிந்த சக்கரத்தையுடைய இறைவனே வெள்ளிய மதிப்பிள்ளைத் தரித்த சிவனது வில்வேறுபட்டு முறிவதேயல்லாமல் பிடிக்கப்போதுமோ—எ-று. (௯௭)

பொன்னுடைவனைகழற்பொலங்கொடாளினாய் ... *
மின்னுடைநேமியானாதன்மெய்ம்மையால் ... *
என்னுளதுலகினுக்கிடுக்கண்யான்றந்த ... ... *
உன்னுடைவில்லுமுன்னுரத்துக்கீடன்றால் ... *

(இ-ள்.) அழகையுடைய அலங்கரித்தற்குரிய வீரகண்டையணிந்த பாதங்களையும் பொன்னணியைக்கொண்ட தோள்களையுமுடையானே ஒளியையுடைய சக்கரத்தைத்தாங்கிய இறைவன் நீயாயிருத்தல் உண்மையாகும் ஆதலால் உலகத்திற்குத் துன்பத்தைத்தருவது யாதுளது நான் கொடுத்த உன்னுடையவில்லும் உன்வலிக்குத்தக்கதன்று—எ-று. (௯௮)

எய்தவப்பிடைபழுதெய்திடாமலென் ... ... *
செய்தவமியாவையுஞ்சிதைக்கவேயெனக் ... *
கையவணெகிழ்தலுங்கணையுஞ்சென்றவன் ... *
மையறுதவமெலாம்வாரிமீண்டதே ... ... *

(இ-ள்.) எய்த அம்பானது (இக்காறுந்தவறாமல் இடையிலே தவறிக்குற்றம்பொருந்தாமல் எனது செய்தற்குரிய தவங்களெல்லாவற்றையும் சிதைக்கக்கடவதென்று கரங்கள் குவிந்து அக்கணைக்கெதிரே விரிதலும் அப்பாணமும் சென்று அப்பரசுராமனுடைய குற்றமற்ற தவங்களையெல்லாம் வாரிக்கொண்டுமீண்டது—எ-று. (௯௯)

எண்ணியபொருளெலாமினிதுமுற்றுக ... *
மண்ணியமணிநிறவண்ணவண்டுழாய்க் ... ... *
கண்ணியயாவர்க்குங்களைகணாகிய ... ... *
புண்ணியவிடையெனத்தொழுதுபோயினான் ... *

(இ-ள்.) அலங்கரித்த நீலமணியினது நிறத்தையொத்த திருமேனியானே வளப்பமாகிய துளபமாலையானே யாவர்களுக்கும் ஆதரவாகிய புண்ணியனே நீகருதியபொருள்களெல்லாம் நினைத்தவாறே நிறைவேறக்கடவன எனக்கு விடை தாவென்று தொழுதுபோயினான்—எ-று. (௱)

இப்பரசுராமன் இறைவனுடைய ஆற்ற வாவேசாவதார மாதலின் அந்தணர் முதலிய வைதிகர்களால் ஆராதனஞ்செயற்குரியனல்லனாயினான்,

அழிந்தவன்போனபினமலனையுணர் ... ... *
வொழிந்தனனுயிருலைந்துருகுதாதையைப் ... *
பொழிந்தபேரன்பினுற்றொழுதுமுன்புபுக் ... *
கிழிந்தவான்றுயர்க்கடற்கரைநின்றேற்றினான் ... *

(இ-ள்.) அப்பரசுராமன்தன் (செருக்கும்தவமும்) அழிந்துபோனபின்கு

ற்றமில்லானாகிய ஸ்ரீராமபிரான் ஐம்புலவுணர்வும் தவிர்ந்தவனாகி உயிர்வருந்தித் தன்னைக்குறித்து உருகாநின்ற தந்தைக்குமுன்னே புகுந்து பொங்கியமிக்க அன்பினால் தொழுது அவன் இழிந்த பெரிய துன்பமாகியகடலினின்றுங்கரையேற்றினான்—எ-று. (௬௧)

வெளிப்படுமுணர்வினன்விழுமநீங்கியே ... *
தளிர்ப்புறுமதகரித்தானையானிடை ... ... *
குளிப்பருந்துயர்க்கடற்கோடுகண்டவன் ... *
களிப்பெனுங்கரையிலாக்கடலுளாழ்ந்தனன் ... *

(இ-ள்.) அழிந்தஉணர்வானது வெளிப்பட்டவனாகித் துன்பநீங்கிக் களிக்கின்ற, மதயானைச்சேனையையுடைய சக்கரவர்த்தியினிடையிலே மூழ்குதலரிய துன்பமாகிய கடலினது கரையைக்கண்டவன் மகிழ்வென்னும் கரையில்லாக் கடலிலே ஆழ்ந்தான்—எ-று. (௬௨)

பரிவறுசிந்தையப்பரசுராமன்கை ... ... *
வரிசிலைவாங்கியோர்வசையைநல்கிய ... ... *
ஒருவனைத்தழுவிநின்றுச்சிமோந்துதன் ... ... *
அருவியங்கண்ணெனுங்கலசமாட்டினான் ... ... *

(இ-ள்.) (அரசர்கள்மேல்) அன்பில்லாத சிந்தையையுடைய அந்தப்பரசுராமனது கையிற்றாங்கிய வரிந்தசிலையைவாங்கி (அவனுக்கு ஒப்பில்லாத வசையைத்தந்த உவமையில்லாச்ஸ்ரீராமபிரானைத்தழுவிநின்று உச்சியைமோந்து அருவியைப்போல நீரொழுகாநின்ற தன்கண்களென்னும் கலசங்களைக்கொண்டு நீராட்டினான்—எ-று. (௬௩)

பொய்ம்மையில்சிறுமையிற்புரிந்தவாண்டொழில்.. *
மும்மையினுலகினுன்முடிக்கலாவதோ ... *
மெய்ம்மையிச்சிறுவனேவினைசெய்தோர்களுக்... *
கிம்மையுமறுமையுமீயுமென்றனன் ... ... *

(இ-ள்) வஞ்சனையில்லாதஎளிதிற்செய்த ஆண்மைத்தொழில் மூன்றுலகத்துள்ளோராலு முடித்தலாகுமோ இவ்விராமனே இருவினையைப்புரிந்தவர்களுக்கு (அவ்வினைகட்குத்தக்கவாறே) இம்மைப்பயனையு மறுமைப்பயனையும் தருவான் இதுண்மையென்றனன்—எ-று. (௬௪)

பூமழைபொழிந்தனர்புகுந்ததேவருள் ... ... *
வாமவேல்வருணனைமானவெஞ்சிலை ... ... *
சேமியென்றுதவித்தன்சேனையார்த்தெழ ... *
நாமநீரயோத்திமாநகரநண்ணினான் ... ... *

(இ-ள்) பூமழைபொழிந்தவர்களாய் அங்குவந்ததேவர்களுள் அழகிய வேலைத்தாங்கிய வருணனுக்குப் பெருமையாகிய வெவ்விய சிலையைப்பிறர்காணுவகை வையென்று கூறித்தந்து தன்சேனைகள்களிப்பால் ஆரவாரித்து எழாநிற்கப்புகழ்மிகுந்தநீர்வளப்பத்தையுடைய அயோத்திமாநகரைச்சேர்ந்தான்.)

நண்ணினரின்பத்துறைவுறுநாளிடை ... ... *
மண்ணுறுமுரசினம்வயங்குதானையவ் ... ... *
வண்ணலைப்பரதனைநோக்கியாண்டகை ... ... *
யெண்ணருந்தகையதோர்பொருளியம்புவான் .... *

(இ-ள்.) யாவரும் நண்ணினவர்களாகி இன்பத்தில் தங்குநாளிலே மார்ச்சனையமைந்த முரசினங்கள் ஒலித்துவிளங்குகின்ற சேனைமிகுதியையுடைய அத்தசரதன் அந்தப்பரதனைநோக்கி ஆண்மக்களிற் பெருமையையுடையானாகிய அச்சக்கரவர்த்தி இதுகாறும் தானினையாத் தன்மையையுடையதாகிய ஒரு செய்தியையுரைப்பான்—எ-று. (௪௬)

ஸ்ரீராமபிரான் பெறும்பேறெல்லாம் தான்பெற்றதுபோலவே களித்து அவன்பக்கலில்வரம்பிலாக்காதலனென்பார் அப்பரதனெனவு மோவியவெழிலுடையொருவனையலதோராவியுடலொழிவிலதென மேவியிருப்பவனென்பார் அவ்வண்ணலெனவுமதான் கருதியபொருளுக்கு யாதோரிடையூறுவரினு நீக்குமாற்றலுடையானென்பார் ஆண்டகையெனவும் தன்கருத்துக்கேற்பாரெனிணங்காவென அன்றேனென்கருதியது தீர்க்கக்கூடாதென்பாரெண்ணருந்தகையதோர்பொருளெனவுங் கூறினார். தன்கருத்தாவது ஸ்ரீராமபிரானுக்கு முடிசூட்டக்கருதுதல்.

ஆணைநின்றன்முதுதாதையையநிற் ... ... *
காணியவிழைவதோர்கருத்துளதலாற் .... *
கேணியின்வளைமுரல்கேகயம்புகப் ... ... *
பூணொளிர்மார்பநீபோதியென்றனன் ... ... *

(இ-ள்.) ஐயனே தன்னாட்டார்மேற்செல்லுகின்ற ஆணையையுடைய உனதுபாட்டன் உன்னைக்காணவிரும்புவதாகிய ஓர்கருத்தினையுடையான் ஆதலால் குளங்களில் சங்குகளொலிக்கின்ற கேகயநாட்டிற் பிரவேசிக்கும்படி பூண்களொளிர்கின்ற மார்பையுடையானே நீபோவென்றுசொன்னான்—எ-று. (௪௭)

ஏவலுமிறைஞ்சிப்போயிராமன்சேவடிப் ... ...*
பூவினைச்சென்னியிற்புனைந்துபோயினான் ... *
ஆவியுமவனலதில்லையாதலான் ... ... *
ஓவலிலுயிர்பிரிந்துடல்சென்றென்னவே ... .. *

(இ-ள்.) சக்கரவர்த்திகட்டளையிடலும் வணங்கிச்சென்று ஸ்ரீராமபிரானுடைய சிவந்த சீர்பாதங்களாகிய மலர்களைத்தலையிற்புனைந்து, தன்னுயிர் அவனல்லாது வேறில்லையாதலால் ஒழிதலில்லாத உயிரைப்பிரிந்து உடல்சென்றாற்போல அங்குப்போயினான்—எ-று. (௪௮)

உளைவிரிபுரவித்தேருதாசித்தென்றெனும் ... *
வளைமுரசுறுபடையான்மருங்குபோதப்போய் ... ... *
இளையவன்றன்னொடுமேழுநாளிடை ... ...*
நளிர்புனற்கேகயநாடுநண்ணினான் ... ... *

(இ-ள்.) பிடர்மயிர்விரிந்த குதிரைபூட்டிய தேர்ச்சேனையையுடைய உதாசித்தென்று கூறப்படும், சங்கங்கள் ஒலிக்கின்றபடையையுடைய அரசன்பாற்புக,

ச்சத்துருக்கனோடு சென்று ஏழுநாளிலே குளிர்ந்த நீர்வளப்பத்தையுடைய கேகயநாட்டைச்சேர்ந்தான்—எ-று. (௪௯)

ஆனவன்போனபின்னரசர்கோமகன் ... ... *
ஊனமில்பேரரசுய்க்குநாளிடை ... ... *
வானவர்செய்தமாதவமுண்டாகலான் ... ... *
மேனனிநிகழ்ந்தனவிளம்புவாமரோ ... ... *

(இ-ள்.) அவ்வாறு சென்றவனாகிய பரதன் போயபின்னர் சக்கரவர்த்தி குற்றமில்லாத பெரிய அரசை நடாத்தும்நாளில பிரமன்முதலிய வானவர்கள் செய்த மாதவமானது உளதாகலால்மேல்மிகுதியும் நடந்தசெய்திகளைச்சொல்லுவாம்—எ-று. (௫௰)

பரசுராமப்படல

முற்றிற்று.

ஆக படலம்-௨௪-க்கு-திருவிருத்தம்-௲௪௱௬.

ஸ்ரீமத்கம்பராமாயணபாலகாண்டத்

துரைபாட முற்றிற்று.

முன்னோர்களியற்றியசெய்யுள்கள்.

அம்பராவணிசடையரனயன்முத ... ... *
லும்பரான்முனிவரால்போகராலுப ... ... *
ரிம்பராற்பணிக்கருமிராமவேழஞ்சேர் ... ... *
கம்பராம்புலவனைக்கருத்திருத்துவாம் ... ... *

சம்பநாடன்னுமைசெவிசாற்றுபூங்... ... ...*
கொம்பனாடன்கொழுநனிராமப்பேர் ... ... *
பம்பநாடனைக்குங்கதைபாச்செய்த ... ... *
கம்பநாடன்கழறலையிற்கொள்வாம்... ... ...*

வாழ்வார்திருவெண்ணெய்நல்லூர்ச்சடையப்பன்வாழ்த்துபெறத் .. *
தாழ்வாருயரப்புலவோரகவிருளாணகலப் .. .. *
போழ்வார்க்கிரிலுதித்ததெய்வப்புலமைக்கம்பநாட் ... ...*
டாழ்வாரடியைச்சிந்திப்பவர்க்கயாதுமரியதன்றே ... ... *